D
JR11,31 'N75
31N75-68;1
61170.2

## தமிழ் நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

### தமிழ் நாடு ஆளுநர்.

### மேதகு திரு. கோதர்தாஸ் காளிதாஸ் ஷா.

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுத் துறை, நிதி, திட்டம், பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள், காவல் துறை, தேர்தல்கள், மதுவிலக்கு, ஆயத்துறை.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (கல்வி சுற்றுலாத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி, ஆட்சி மொழி, சட்டமன்றம், சுற்றுலா, சுற்றுலா அபிவிருத்திக் கழகம்.

3. மாண்புமிகு திரு. க. அன்பழகன் (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுச் சுகாதாரம், மருத்துவம், நகர அமைப்பு.

4. மாண்புமிகு திரு. என். வி. நடராசன் (பின்தங்கிய வகுப்பினர் நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பின்தங்கிய வகுப்பினர் நலன், பத்திரப் பதிவு, முன்னாள் இராணுவ வீரர்கள், பூதான-கிராம தான இயக்கங்கள்.

5. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் (பொதுப் பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார். பொதுப் பணிகள், சிறு பாசனச் சிறப்புத் திட்டங்கள் உட்பட சிறு பாசனம், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்.

6. மாண்புமிகு திரு. செ. மாதவன் (உணவு, கூட்டுறவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: உணவு, கூட்டுறவு, வேளாண்மை மறுநிதி உதவி, ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள்.

7. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா (தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழில்கள், சுரங்கங்கள், கனிப் பொருள்கள், இரும்புருக்குக் கட்டுப்பாடு, கம்பெனிகள், மின்சாரம், முகமதியர் அறக்கட்டளைகள்.

8. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: வேளாண்மை, உணவு உற்பத்தி, வேளாண்மைப் பொறியியற் பகுதி, வேளாண்மை பொறியியல் சம்பந்தமான பகுதிகள், வட்டாரக் கூட்டுறவுச் சங்கங்கள், இணைப்பு அளவிலான கழகங்கள் உட்பட்ட மாவட்டச் சங்கங்கள்.

9. மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் (வருவாய்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: வருவாய், வருவாய்த் துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள், மாவட்டத் துணை ஆட்சி தலைவர்கள், இளைஞர் அணி சேரணி.

10. மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், குடிநீர் வாரியம்.

11. மாண்புமிகு திரு. க. இராசாராம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழிலாளர், வீட்டு வசதி, இட வசதிக் கட்டுப்பாடு, எடைகள், அளவைகள் குறித்த சட்டம், புள்ளிவிவரம், வேலை வாய்ப்பும் பயிற்சி அளித்தலும், குடிசை மாற்று வாரியம்.

12. மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை (சமூக நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: மகளிர்-சிறுவர் நலம் உட்பட சமூக நலம், மீனவர், இரவலர்கள் விடுதி, அனாதை இல்லங்கள், சீர்திருத்தப் பள்ளிகளும் கண்காணிப்புப் பணிகளும்.

13. மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் (வணிக வரித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: வணிக வரிகள், சிங்கோனா உட்பட காடுகள், கால் நடை வளர்ப்பு, கடன் கொடுத்தல் குறித்த சட்டம், கிராமவாசிகள் கடன்பட்டிருத்தல், சீட்டுகள் குறித்த சட்டம்.



14. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் வரி, எழுதுபொருள்-அச்சுத்துறை, அரசு அச்சகம்.

15. மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் (அற நிலையத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: அறக் கட்டளைகள், கதர்-கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம், பால் வழங்குத் துறை, பால்வள முனைப்புத் திட்டங்கள், தமிழ் நாடு பால்வள நிறுவனங்கள், விளம்பரம், பொதுத் தொடர்பு, படச் சுருள் தொழில் நுட்பவியல்.

16. மாண்புமிகு திரு. என். இராசாங்கம் (அரிசன நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: அரிசன நலம், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, பயண அனுமதிச் சீட்டுகள், திரைப்படச் சட்டம்.

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR OF TAMIL NADU

His Excellency Thiru KODARDAS KALIDAS SHAH

### Members of the Council of Ministers

1. The Hon. Dr. M. KARUNANIDHI : (Chief Minister) in-charge of Public, Finance, Planning, General Administration, matters relating to Indian Civil Service Officers and Indian Administrative Service Officers, District Revenue Officers, Police, Elections, Prohibition and Excise.

2. The Hon. Dr. V. R. NEDUNCHEZHIYAN : (Minister for Education and Tourism) in-charge of Education including Technical Education, Official Language, Legislature, Tourism and Tourist Development Corporation.

3. The Hon. Thiru K. ANBAZHAGAN : (Minister for Health) in-charge of Public Health, Medicine and Town Planning.

4. The Hon. Thiru N. V. NATARAJAN : (Minister for Backward Classes) in-charge of Backward Classes, Registration, Ex-Servicemen, Bhoodan and Gramdan.

5. The Hon. Thiru P. U. SHANMUGAM : (Minister for Public Works) in-charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Highways and Ports.

6. The Hon. Thiru S. MADHAVAN : (Minister for Food and Co-operation) in-charge of Food and Co-operation, Agricultural Refinance, Textiles, Yarn, Handlooms, Law, Courts and Prisons.

7. The Hon. Thiru S. J. SADIQ PASHA : (Minister for Industries) in-charge of Industries, Mines and Minerals, Iron and Steel Control, Companies, Electricity and Wa[illegible]

8. THE HON. THIRU Si. Pa. ADITANAR : (Minister for Agriculture) in-charge of Agriculture, Food Production, Agricultural Engineering Wing, Agro-Engineering and Services Co-operative Societies at the Block, District and apex level including the Federation.

9. THE HON. THIRU A. P. DHARMALINGAM : (Minister for Revenue) in-charge of Revenue, Board of Revenue, Districts Revenue Establishment, Deputy Collectors, Youth Service Corps and Prosperity Brigade.

10. THE HON. THIRU MANNAI P. NARAYANASWAMY : (Minister for Local Administration), in-charge of Municipal Administration, Community Development and Panchayats and Panchayat Unions and Water Board.

11. THE HON. THIRU K. RAJARAM : (Minister for Labour), in-charge of Labour, Housing, Accommodation Control, Legislation on Weights and Measures, Statistics, Employment and Training and Slum Clearance Board.

12. THE HON. THIRU C. V. M. ANNAMALAI : (Minister for Social Welfare), in-charge of Social Welfare including Women's and Children's Welfare, Fisheries, Beggars' Home, Orphanages and Approved Schools and Vigilance Service.

13. THE HON. THIRU O. P. RAMAN : (Minister for Commercial Taxes in-charge of Commercial Taxes, Forest including Cinchona, Animal Husbandry, Legislation on Money Lending, Rural Indebtedness and Legislation on Chits.

14. THE HON. THIRU S. RAMACHANDRAN (Minister for Transport), in-charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Tax, Stationery and Printing and Government Press.

15. THE HON. THIRU M. KANNAPPAN : (Minister for Religious Endowments), in-charge of Religious Endowments, Khadi and Village Industries and Rural Industries Project, Milk, Operation Flood Project, Tamil Nadu Dairy Development Corporation, Information and Public Relations and Film Technology.

16. THE HON. THIRU N. RAJANGAM : (Minister for Harijan Welfare) in-charge of Harijan Welfare, Indians Overseas and Refugees and Evacuees, Newsprint Control, Passports and Cinematograph Act.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்

### பேரவைத் தலைவர்

மாண்புமிகு புலவர் கா. கோவிந்தன், பி.ஓ.எல்., எம்.ஏ.

### பேரவைத் துணைத் தலைவர்

திரு. என். கணபதி, பி.எஸ்.ஸி., பி.எல்.

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

1. டாக்டர் க. நாகராசன்.
2. திரு. துரைமுருகன்.
3. திரு. கு. காமாட்சி.
4. திரு. கா. காளிமுத்து.
5. திரு. என். டென்னிஸ்.
6. திரு. கே. கந்தசாமி.

### சட்டமன்றப் பேரவைச் செயலாளர்

திரு. மா. சண்முகசுப்பிரமணியம், பி.ஏ., பி.எல்.

### துணைச் செயலாளர்

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

### குழு அலுவலர்

திரு. ப. சுப்பராயன், எம். ஏ.

### உதவிச் செயலாளர்கள்

திரு. த. இராதாகிருஷ்ணன்.
திரு. பெஞ்சமின் நெல்சன், பி.ஏ.
திரு. கே. பாலகுரு, பி.ஏ.

### விவாதப் பதிப்பாளர்

திரு. கே. சுந்தரராசன்.

### எஸ்டேட் அதிகாரி

திரு. வி. சீதாராமன், பி.காம்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும் (1) | தொகுதி (2) |
|---|---|
| 1 அண்ணாமலை, மாண்புமிகு திரு. சி.வி.எம். (அமைச்சர்). | காஞ்சிபுரம். |
| 2 அபுசாலி, திரு. எம். எ. .. .. .. | புவனகிரி |
| 3 அப்துல் ஜப்பார், திரு. வா. மை .. .. | அரவக்குறிச்சி. |
| 4 அரங்கண்ணல், திரு. இராம. .. .. | எழும்பூர். |
| 5 அரங்கநாயகம், திரு. செ. .. .. | கோயம்புத்தூர்-மேற்கு. |
| 6 அழகமுத்து, திரு. து. ப. .. .. (அரசாங்க தலைமைக் கொறடா). | உப்பிலியபுரம். |
| 7 அழகர்சாமி, திரு. சோ. .. .. .. | கோவில்பட்டி. |
| 8 அழகுத் தேவர், திரு. எஸ். .. .. | சாத்தூர். |
| 9 அனந்தநாயகி, திருமதி த. ந. .. .. | மயிலாப்பூர். |
| 10 அன்பழகன், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்). | புரசைவாக்கம். |
| 11 அன்புச்செழியன், திரு. நீ. .. .. | பெரியகுளம். |
| 12 ஆண்டி அம்பலம், திரு. எம். .. .. | மேலூர் வடக்கு. |
| 13 ஆண்டி என்ற குருசாமி, திரு. கு. .. | ஸ்ரீவில்லிபுத்தூர் (செ.வ |
| 14 ஆதித்தனார், மாண்புமிகு திரு. சி. பா. (அமைச்சர்). | ஸ்ரீவைகுண்டம். |
| 15 ஆலடி அருணா, திரு. வி. .. .. | ஆலங்குளம். |
| 16 ஆல்டா எம். பௌலர், திருமதி .. | நியமன உறுப்பினர் |
| 17 ஆறுமுகம், திரு. அ. .. .. .. | எடப்பாடி. |
| *18 ஆறுமுகம், திரு. எஸ். .. .. | வீரபாண்டி |
| 19 ஆறுமுகம், திரு. சி. .. .. .. | மதுராந்தகம். |
| 20 இரத்தினசபாபதி, திரு. மு. .. .. | விளாத்திக்குளம் |
| 21 இராசகோபால், திரு. க. மு. .. .. | உத்திரமேரூர். |
| 22 இராசகோபால், திரு. வீ. .. .. | வந்தவாசி |
| 23 இராசமாணிக்கம், திரு. அ. .. .. | நாகப்பட்டினம். |
| 24 இராசமாணிக்கம், திரு. கு. .. .. | ஆடுதுறை. |
| 25 இராசரத்தினம், திரு. டி. .. .. | ஸ்ரீபெரும்புதூர். |
| 26 இராசாராம், மாண்புமிகு திரு. க. .. (அமைச்சர்). | சேலம்-2. |
| 27 இராசு, திரு. ஜே. எஸ். .. .. .. | பெரம்பலூர். (செ.வ.) |
| 28 இராதாகிருட்டிணன், திரு. எம். எஸ். .. | தண்டராம்பட்டு |
| 29 இராமச்சந்திரன், திரு. எம். ஜி. .. | பரங்கிமலை. |

* 31—3—1975 அன்றிலிருந்து உறுப்பினர் பதவி விலகினர்.

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 30 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. (அமைச்சர்). | பண்ருட்டி. |
| 31 இராமநாதன், திரு. சி. .. .. | அறந்தாங்கி. |
| 32 இராமலிங்கம், திரு. இரா. .. .. | தூத்துக்குடி. |
| 33 இராமலிங்கம், திரு. செ. .. .. | கடலாடி (செ.வ.). |
| 34 இராமன், மாண்புமிகு திரு. ஓ. பி. (அமைச்சர்). | மேலூர் தெற்கு (செ.வ.). |
| 35 இராமன், திரு. மூ. .. .. .. | கண்டமங்கலம் (செ.வ.). |
| 36 இராஜாங்கம், மாண்புமிகு திரு. என். (அமைச்சர்). .. | குறிஞ்சிப்பாடி (செ.வ.). |
| 37 இராஜாப்பிள்ளை, திரு. வீ. கே. .. .. | கன்னியாகுமரி. |
| 38 இளங்கோவன், திரு. கோ. .. .. | திருவையாறு. |
| 39 இளஞ்செழியன், திரு. வீ. சா. .. .. | விராலிமலை. |
| 40 எட்டியப்பன், திரு. பூ. .. .. .. | பெரணமல்லூர். |
| 41 எட்மண்ட், திரு. க. உரொ. .. .. | திருச்செந்தூர். |
| 42 கணபதி, மாண்புமிகு திரு. என். (பேரவைத் துணைத் தலைவர்). .. | பாபநாசம். |
| 43 கணபதி, திரு. டி. .. .. .. | நாங்குனேரி. |
| 44 கணேசன், திரு. எல். .. .. | ஒரத்தநாடு. |
| 45 கணேசன், திரு. சி. .. .. .. | குற்றாலம். |
| 46 கண்ணப்பன், மாண்புமிகு திரு. மு. (அமைச்சர்). | கிணத்துக்கடவு. |
| 47 கண்ணன், திரு. எம். ஆர். .. .. | பேஸின் பிரிட்ஜ். |
| 48 கதிரவன், திரு. கா. மு. .. .. .. | தென்காசி. |
| 49 கந்தசாமி, திரு. கே. .. .. .. | உசிலம்பட்டி. |
| 50 கந்தசாமி, திரு. கே. பி. .. .. .. | சாத்தான்குளம் |
| 51 கந்தசாமி, திரு. எம். .. .. .. | குளித்தலை. |
| 52 கந்தப்பன், திரு. செ. .. .. .. | திருச்செங்கோடு. |
| 53 கரிவேங்கடம், திரு. மா. வெ. .. .. | பாலக்கோடு. |
| 54 கருணாநிதி, மாண்புமிகு டாக்டர் மு. (முதல் அமைச்சர்). | சைதாப்பேட்டை. |
| 55 கருணாநிதி, திரு. தாழை மு. .. .. | திருவாரூர் (செ.வ.) |
| 56 கருணைநாதன், திரு. சோ. .. .. | கூனூர். |
| 57 கருப்பையா, திரு. ஆ. .. .. .. | கங்கைகொண்டான் (செ.வ. |
| 58 காசிராமன், திரு. நா. .. .. .. | கும்பகோணம். |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 59 காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி, திரு. | முதுகுளத்தூர். |
| 60 காமாட்சி, திரு. கு. .. .. .. | திருவரம்பூர். |
| 61 கார்த்திசன், திரு. வீ. .. .. .. | இராதாபுரம். |
| 62 காவேரிமணியம், திரு. செர. .. .. | திருப்பரங்குன்றம். |
| 63 காளிமுத்து, திரு. கா. .. .. .. | சிவகாசி. |
| 64 கிட்டப்பா, திரு. என். .. .. .. | மாயூரம். |
| 65 கிருட்டிணன், திரு. நா. .. .. .. | பேரணம்பட்டு (செ. வ.). |
| 66 கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. .. .. | நெல்லிக்குப்பம். |
| 67 கிருஷ்ணமூர்த்தி, திரு. வ. .. .. | திருச்சிராப்பள்ளி-1. |
| 68 கிருஷ்ணன், திரு. கே. ஆர். .. .. | ஊத்தங்கரை. |
| 69 குப்பல் இராமகிருஷ்ணன், திரு. கே. எஸ். | மதுரை (கிழக்கு). |
| 70 குமாரசாமி, திரு. அ. சே. .. .. | திருக்கோயிலூர். |
| 71 குமாரசாமி, திரு. கே. என். .. .. | பல்லடம். |
| 72 குருசாமி, திரு. நா. வெ. .. .. | ஆண்டிப்பட்டி. |
| 73 கேசவலு, திரு. தே. .. .. .. | கள்ளக்குறிச்சி. |
| 74 கோதண்டராமய்யா, திரு. கே. எஸ். .. | உதனப்பள்ளி. |
| 75 கோபால், திரு. எம். .. .. .. | குன்னத்தூர் (செ. வ.). |
| 76 கோபால், திரு. கே. பி. .. .. .. | கம்பம். |
| 77 கோவிந்தசாமி, திரு. வி. செ. .. .. | காவேரிப்பட்டினம். |
| 78 கோவிந்தராசன், திரு. ஆர். .. .. | கடலூர். |
| 79 கோவிந்தராசன் துரை, திரு. .. .. | கந்தர்வகோட்டை. |
| 80 கோவிந்தன், மாண்புமிகு புலவர் கா. (பேரவைத் தலைவர்). | செய்யாறு. |
| 81 கோவை செழியன், திரு. .. .. | காங்கேயம். |
| 82 சகாதேவன், திரு. எஸ். .. .. | செஞ்சி. |
| 83 சங்குமுத்து தேவர், திரு. ச. .. .. | அம்பாசமுத்திரம். |
| 84 சதாசிவம், திரு. செ. .. .. .. | ஆண்டிமடம். |
| 85 சண்முகசுந்தரம், திரு. அ. ப. .. .. | பொள்ளாச்சி. |
| 86 சண்முகம், மாண்புமிகு திரு. ப. உ. (அமைச்சர்). | திருவண்ணாமலை. |
| 87 சண்முகம், திரு. பெரி. .. .. .. | திருவாடானை. |
| 88 சண்முகம், திரு. மு. .. .. .. | விழுப்புரம். |
| 89 சத்தியமூர்த்தி, திரு. மு. .. .. | புதுக்கோட்டை. |
| 90 சத்தியவாணிமுத்து, திருமதி .. .. | பெரம்பூர் (செ.வ.). |
| 91 சத்தியேந்திரன், திரு. எம்.எஸ். கே. .. | இராமநாதபுரம். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 92 சமபத், திரு. டி. வி. | செம்பனார்கோவில். |
| 93 சாதிக் பாட்சா, மாண்புமிகு திரு. எஸ்.ஜே. (அமைச்சர்). | உடுமலைப்பேட்டை. |
| 94 சாரதி, திரு. மா. பா. | வேலூர். |
| 95 சிதம்பரம், திரு. சித. | காரைக்குடி. |
| 96 சிவப்பிரகாசம், திரு. தி. சி. ஆ. | சேரன்மகாதேவி. |
| 97 சிவபெருமாள், திரு. கோ. | அரியலூர். |
| 98 சிறைமீட்டான், திரு. தொ. க. | பரமக்குடி (செ.வ.) |
| 99 சீனிவாசன், திரு. பெ. | விருதுநகர். |
| 100 சீனிவாசன், திரு. தொ. ப. | போளூர். |
| 101 சின்னசாமி, திரு. அ. | செயங்கொண்டம் (செ.வ.) |
| 102 சின்னசாமி, திரு. ஆர். | தர்மபுரி. |
| 103 சின்னசாமி திரு. மு. | மொடக்குறிச்சி. |
| 104 சின்னசாமி, திரு. வ. | ஏற்காடு (ஆ. வா.) |
| 105 சின்னராசு, டாக்டர் ச. அ. | ஹரூர் (செ. வ.) |
| 106 சின்னவெள்ளையன், திரு. சி. | சேந்தமங்கலம் (ஆ. வா.) |
| 107 சுந்தரம், திரு. ஒ. என். | திண்டுக்கல். |
| 108 சுப்பிரமணியம், திரு. வ. | சிங்காநல்லூர். |
| 109 சுப்பிரமணியம், திரு. எஸ். கே. | சத்யமங்கலம். |
| 110 சுப்பிரமணியம், திரு. கே. எம். | தியாகராயநகர். |
| 111 சுப்பிரமணியன், திரு. மா. | ஈரோடு. |
| 112 சுப்பிரமணியன், திரு. வீ. | உளுந்தூர்பேட்டை. |
| 113 சுப்பு, திரு. க. | ராஜபாளையம். |
| 114 சுப்பையா, திரு. ஆ. கு. | கோட்டூர் (செ. வ.) |
| 115 சுப்பையா, திரு. கே. வி. | ஆலங்குடி. |
| 116 சுப்பையா, திரு. ச. | சங்கரன்கோயில் (செ. வ.) |
| 117 சுப்பையா, திரு. ஏ. ஆர். | கடயநல்லூர். |
| 118 சுருளிவேல், திரு. மு. | போதிநாயக்கனூர். |
| 119 சுரேந்திரன், திரு. எம். | மேட்டூர். |
| 120 சுவாமிதாஸ், திரு. ஏ. | பத்மநாபபுரம். |
| 121 செபமாலை, திரு. கோ. | மங்களூர் (செ. வ.) |
| 122 ஜெயராமன், திரு. சி. | சேலம்-1. |
| 123 செல்லத்துரை, திரு. வீ. | ஓமலூர்.(செ. வ.) |
| 124 செல்லையா, திரு. குழ. | பேராவூரணி, |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 125 செல்வராஜ், திரு. எம். | விருத்தாசலம். |
| 126 சேதுராமன், திரு. சி. | சிவகங்கை. |
| 127 சோனையா, திரு. த. | மானாமதுரை. |
| 128 சோமசுந்தரம், திரு. ந. | வலங்கைமான் (செ. வ.) |
| 129 சௌடி சுந்தரபாரதி, திரு. எஸ். | அருப்புக்கோட்டை. |
| 130 சௌந்தரபாண்டியன், திரு. பெ. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 131 டென்னிஸ், திரு. என். | கிள்ளியூர். |
| 132 தங்கமணி, திரு. கே. டி. கே. | மதுரை–மேற்கு. |
| 133 தர்மலிங்கம், மாண்புமிகு திரு. அ. பெ. (அமைச்சர்). | திருச்சிராப்பள்ளி-2. |
| 134 தருமலிங்கம், திரு. ந. | ரிஷிவந்தியம் (செ.வ.) |
| 135 தவமணித்தேவர், திரு. வி. | சேடப்பட்டி. |
| 136 திம்மராயக் கவுண்டர், திரு. டி. சி. | நாட்ராம்பள்ளி |
| 137 தியாகராசன், திரு. அ. | திருமயம். |
| 138 தியாகராசன், திரு. இ. எஸ். | திருத்தணி. |
| 139 திருப்பதி, திரு. கு. | மதுரை (சென்ட்ரல்). |
| 140 துரைசாமி திரு. ஏ. க. | குடியாத்தம். |
| 141 துரைசாமி, திரு. சு. | திருப்பூர். |
| 142 துரைமுருகன், திரு. | காட்பாடி. |
| 143 துரைராஜ், திரு. சு. ம. | திருவள்ளூர் (செ.வ.) |
| 144 தூயமணி, திரு. மே. சி. | மேட்டுப்பாளையம். |
| 145 தேவராசன், திரு. எம். | உதகமண்டலம். |
| 146 தேவேந்திரன், திரு. அ. | நன்னிலம் (செ. வ.) |
| 147 தோப்பூர் திருவேங்கடம், திரு. | கணியம்பாடி. |
| 148 நடராசன், திரு. ஈ. எம். | அந்தியூர். |
| 149 நடராசன், திரு. எஸ். | தஞ்சாவூர். |
| 150 நரசிம்மன், திரு. ஏ. சி. | ஆரணி. |
| 151 நல்லசாமி, திரு. எஸ். | கரூர். |
| 152 நாகராஜன், டாக்டர் க. | வடமதுரை. |
| 153 நாகலிங்கம், திரு. பா. | பொன்னேரி (செ.வ. |
| 154 நாச்சிமுத்து, திரு. நா. | ஒட்டன்சத்திரம். |
| 155 நாச்சியப்பன், திரு. ஏ. எம். டி. | ஆத்தூர். |
| 156 நாச்சியப்பன், திரு. ந. | சங்கராபுரம். |
| 157 நாராயணசாமி, திரு. மா. வே. | திருவொற்றியூர். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 158 நெடுஞ்செழியன், மாண்புமிகு டாக்டர் இரா. (அமைச்சர்). | திருவல்லிக்கேணி. |
| 159 நைனுமலை, திரு. இரா. | ராசிபுரம். |
| 160 பத்மநாபன், திரு. பொ. | திருநெல்வேலி. |
| 161 பத்மாவதி, திருமதி. எ. கோ. | முகையூர். |
| 162 பரந்தாமன், திரு. ஆ. | கடம்பத்தூர். |
| 163 பரமசிவம், திரு. எம். | தாரமங்கலம். |
| 164 பலராமன், திரு. என். எஸ். | அரக்கோணம். |
| 165 பழனிசாமி, திரு. நா. | பொங்கலூர். |
| 166 பழனிசாமி, திரு. என். கே. | பெருந்துறை. |
| 167 பழனிசாமி, திரு. மு. | வெள்ளக்கோயில். |
| 168 பழனிச்சாமி, புலவர் சி. | பழனி (செ.வ.) |
| 169 பழனியப்பன், டாக்டர் ச. மு. | கோபிசெட்டிபாளையம். |
| 170 பழனியம்மாள், திருமதி வி. ப. | தாராபுரம். |
| 171 பழனிவேலன், திரு. க. | வரகூர். |
| 172 பழனிவேலன், திரு. மு. | நாமக்கல். |
| 173 பழனிவேலு, திரு. பி. | ஆத்தூர். |
| 174 பழனிவேல் ராஜன், திரு. | தேனி. |
| 175 பன்னீர் செல்வம், திரு. எம். | ஆம்பூர் (செ. வ.) |
| 176 பாண்டுரங்கம், திரு. சி. | செங்கம் (செ. வ.) |
| 177 பாலகிருட்டிணன், திரு. கு. | மன்னார்குடி. |
| 178 பாலசுந்தரம், திரு. வை. | அச்சரபாக்கம் (செ.வ.). |
| 179 பாலையா, திரு. எ. | கொளச்சல். |
| 180 பெரியசாமி, திரு. கு. | கொடவாசல். |
| 181 பெரியசாமி, திரு. தி. ஒ. | அவினாசி. |
| 182 பெருமாள், திரு. செ. | காட்டுமன்னார்கோயில். |
| 183 பெருமாள், திரு. எ. ஆர். | காரியப்பட்டி. |
| 184 பொம்மன், திரு. கு. அ. | கூடலூர் (செ. வ.) |
| 185 பொன் சொக்கலிங்கம், திரு. பி. | சிதம்பரம். |
| 186 பொன்னப்ப நாடார், திரு. ஆர். | விளவங்கோடு. |
| 187 பொன்னுமலை, திரு. தி. | பனைமரத்துப்பட்டி. |
| 188 பொன்னுரங்கம், திரு. எ. எம். | சோளிங்கபுரம். |
| 189 மணலி கந்தசாமி, திரு. சி. | திருத்துறைப்பூண்டி. |
| 190 மணியன், திரு. பி. எஸ். | சோழவந்தான். |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 191 மதியழகன், திரு. கே.எ. | ஆயிரம் விளக்கு. |
| 192 மருதாசலம், திரு. என். | பேரூர் (செ. வ.). |
| 193 மலைக்கண்ணன், திரு. வீ | இளையாங்குடி. |
| 194 மன்னியப்பன், திரு. சி. | கிருஷ்ணகிரி. |
| 195 மாணிக்கம், திரு. என். | பென்னகரம். |
| 196 மாணிக்கவாசகம், திரு. இரா. | தொண்டாமுத்தூர். |
| 197 மாதவன், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்). | திருப்பத்தூர். (இராமநாதபுரம் மாவட்டம்), |
| 198 மாரிமுத்து, திரு. எ. ஆர். | பட்டுக்கோட்டை. |
| 199 மாரிமுத்து, திரு. மு. | தலைவாசல் (செ.வ.) |
| 200 மீனாட்சிசுந்தரம், திரு. மா. | வேதாரண்யம். |
| 201 முகமது கோதர் முகைதீன், திரு. எஸ். | மேலப்பாளையம். |
| 202 முத்தமிழ்ச் செல்வன், திரு. வெ. ந. | லால்குடி. |
| 203 முத்து, திரு. வ. | சங்கரி (செ. வ.) |
| 204 முத்துசாமி, திரு. ப. | வேடசந்தூர். |
| 205 முத்துச்செல்வன், திரு. பு. செ. | முசிறி. |
| 206 முத்துவேல், திரு. ந. | வானூர் (செ. வ.) |
| 207 முத்தையா, திரு. கே. கே. | கடலூர். |
| 208 முத்தையா, திரு. எம். | ஒட்டப்பிடாரம் (செ. வ.) |
| 209 முருகையன், திரு. எஸ். | கலசப்பாக்கம். |
| 210 முனியாண்டி, திரு. ஆ. | நிலக்கோட்டை (செ. வ.) |
| 211 முனு ஆதி, திரு. மு. | திருப்போரூர். |
| 212 முனுசாமி, திரு. ரா. ரா. | மேல்மலையனூர். |
| 213 மொய்தீன், திரு. திருப்பூர் எ. எம். | துறைமுகம் (சென்னை நகரம்). |
| 214 மோசஸ், திரு. ம. | நாகர்கோயில். |
| 215 ரங்கநாதன், திரு. கே. | கோயம்புத்தூர் (கிழக்கு) |
| 216 ராமசாமி, திரு. இ. | வால்பாறை. |
| 217 ராமசாமி, திரு. ஜி. | திருப்பத்தூர் (வட ஆர்க்காடு மாவட்டம்). |
| 218 ராமராசன், திரு. வ. க. | பவானிசாகர் (செ. வ.) |
| 219 இராஜா, திரு. எ. எம். | பவானி. |
| 220 ராஜாராம், திரு. ஜி. | திண்டிவனம். |
| 221 ரெத்தினசாமித் தேவர், திரு. மு. சி. ஆ. | திருமங்கலம். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 222 லத்தீப், திரு. எம். எ. | வாணியம்பாடி. |
| 223 வகாப், திரு. கே. எ. | ராணிப்பேட்டை. |
| 224 வடிவேலு, திரு. சீ. க. | தொட்டியம். |
| 225 வடிவேல், திரு. எஸ். | சீர்காழி (செ. வ.) |
| 226 விசுவநாதன், திரு. செ. கோ. | செங்கற்பட்டு. |
| 227 வீராசாமி, திரு. நா. | ஆற்காடு. |
| 228 வெங்கடசாமி, திரு. பி. | ஹோசூர். |
| 229 வெள்ளத்துரை, திரு. அ. | வாசுதேவநல்லூர். |
| 230 வேதாசலம், திரு. மு. | வண்ணாரப்பேட்டை (சென்னை நகரம்). |
| 231 வேலப்பன், திரு. சி. வே. | கபிலமலை. |
| 232 வேழவேந்தன், திரு. கா. | கும்மிடிபூண்டி. |
| 233 ஜேம்ஸ், திரு. ஜே. | திருவட்டார். |
| 234 ஜோதி வெங்கடாசலம், திருமதி. | ஸ்ரீரங்கம் (செ. வ.) |
| 235 ஹாண்டே, டாக்டர் எச். வி. | பார்க் டவுன் (சென்னை நகரம்). |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்:—

1 மாண்புமிகு திரு. என். வி. நடராசன்—அமைச்சர்.

2 மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி—அமைச்சர்.

3 திரு. கோவிந்த் சாமிநாதன்—தலைமை வழக்கறிஞர்.

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

**சனிக்கிழமை, 1975 மார்ச் 29.**

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

### வேலூர் காவலர் பயிற்சி நிலையம்

*476 வினா—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் போலீஸ் பயிற்சி நிலையத்தில் 1973-74-ல் பயிற்சி பெற்றவர்கள் எத்தனை பேர்?

(இ) அவர்களில் டெப்டி சூப்பரின்டென்டென்ட்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) வேலூரிலுள்ள போலீஸ் பயிற்சி நிலையத்தில் 1973-74 ஆம் ஆண்டில் பயிற்சி பெற்றவர்கள் 2,042 பேர்.

(இ) இவர்களில் டெப்டி சூப்பரின்டென்டென்ட்கள் 6 பேர்.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, டெப்டி சூப்பரின்டென்டென்ட்கள்ஆறு பேர்தான் பயிற்சி பெற்றிருப்பதாக முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நம்முடைய நாட்டில் இந்திய அரசு ஐ.பி.எஸ்.-க்கு தேர்ந்தெடுப்பதைப் போல, நம்முடைய மாநில அரசு டி.எஸ்.பி. பதவிக்கு டைரக்ட் ரெக்ரூட்மென்ட் எண்ணிக்கையை அதிகமாக்குமா? அப்படி அதிகமாக்கினால், நம்முடைய மாநிலத்தைச் சார்ந்தவர்கள் தமிழ் மொழி மீது பற்றுள்ள இப்படிப்பட்டவர்களை நாம் வேலையில் நிர்ணயம் செய்ய முடியும் அல்லவா? ஆகவே, டி.எஸ்.பி. பதவிக்கு டைரக்ட் ரெக்ரூட்மென்டின் எண்ணிக்கையை அதிகரித்து அவர்களுக்கு பயிற்சி கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்பொழுதுள்ள நிலைமைக்கும் தேவைக்கும் ஏற்ப இப்படிப்பட்ட பதவிகளினுடைய எண்ணிக்கையை அதிகரிப்பது குறித்து மாண்புமிகு உறுப்பினருடைய யோசனை பரிசீலிக்கப்பட வேண்டிய ஒன்று.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, புதிதாக சப்-இன்ஸ்பெக்டர்கள் பயிற்சி பெறக்கூடியவர்கள் மக்களிடத்திலே நல்ல முறையில் பழக வேண்டும் என்பதற்காக ஸ்பெஷல் வகுப்புகள் ஏதாவது நடத்தப்படுகின்றனவா? இந்த வேலூரைப் பொறுத்த வரையில், அதிகாரம் இல்லாத போலீஸ், இராஜா இல்லாத கோட்டை, சாமி இல்லாத கோயில் என்றெல்லாம் சொல்லப்படுகிறது. அந்தப் பெயரை மாற்றக் கூடிய முறையில் இந்தப் பயிற்சி நிலையத்தில் இருப்பவர்களோடு அதிகாரம் உள்ள போலீசைச் சேர்த்து அமைப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஆண்டவன் இல்லாத ஆலயம், அழகில்லாத பெண்கள், அதிகாரம் இல்லாத போலீசார் என்று சொல்வதுண்டு. ஆண்டவன் இல்லாத ஆலயம் என்பது உண்மை. அழகுள்ள பெண்களும், அதிகாரம் உள்ள போலீசும் இருக்கிறார்கள்.

திரு. எம். சுரேந்திரன் : போலீஸ் பயிற்சியில் ஏற்கனவே பரம்பரையாகக் கொடுக்கும் பயிற்சியோடு அல்லாமல், ஒவ்வொரு ஸ்டேஷனிலும் புகார் செய்கின்றவர்களையும், புகாருக்கு உள்ளானவர்களையும் நடத்த வேண்டிய விதம் பற்றி தனிப் பயிற்சி கொடுத்தால் நல்லதாக இருக்கும். பழைய முறையிலேயே நடந்து கொண்டிருக்கும் சூழ்நிலை இன்னும் இருந்து கொண்டிருக்கிறது. அதை மாற்றுவதற்கு முயற்சி எடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஏற்கனவே சில பயிற்சி முறைகள் இந்த முகாமில் ஏற்றுக்கொள்ளப்பட்டு அவைகள் நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் குறிப்பிட்டதுபோல, மக்களிடத்தில் எந்த வகையில் பழகுவது போன்றவற்றிலும் அந்தப் பயிற்சி நேரத்தில் இப்பொழுது அவர்களுக்குப் பயிற்சி தரப்படுகிறது. அதைப்போல மாண்புமிகு உறுப்பினர் திரு. சுரேந்திரன் அவர்கள் கேட்ட கேள்விக்கு ஏற்ப, இன்றைக்குள்ள கால நிலைக்கேற்ப போலீசார் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்பதற்கான பயிற்சிகளும் அவர்களுக்கு அளிக்கப்பட்டுதான் வருகின்றன.

திரு. க. உரெர். எட்மண்ட் : நம்முடைய காவல் துறையைச் சார்ந்த போலீஸ் காவலாளிகளுக்கு வழக்கமாகக் கொடுக்கப்படுகிற பயிற்சிகளோடு சேர்த்து மிக நெருக்கடியான சூழ்நிலையில் தீயணைக்கும் பணியை மேற்கொள்ள பயிற்சி கொடுக்கும் முயற்சியையும் அரசு மேற்கொள்ளுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தீயணைப்பதற்கென்று தனியாக தீ அணைப்பு முறைகளில் பயிற்சி பெற்றவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் போதாத நேரத்தில் காவலர்களும் அப்படிப்பட்ட காரியங்களில் நிச்சயமாக ஈடுபடுவார்கள். அதற்கான பயிற்சிகள் இப்பொழுது அவர்களுக்கு இருக்கிறதா என்ற தகவல் என்னிடத்தில் இல்லை. இவர்களுக்கு அப்படிப்பட்ட பயிற்சி அளிக்கலாமா என்பதையும் யோசிக்கலாம்.

திரு. வை. பாலசுந்தரம் : போலீஸ்காரர்களுக்கு கராத்தே போன்ற பயிற்சி அளிக்கப்படுகிறது. அதேபோன்று தமிழ் நாட்டு வீர விளையாட்டு என்று சொல்லப்படுகிற சிலம்பம் போன்ற விளையாட்டைப் போலீசாருக்குக் கற்றுக்கொடுத்தால் நல்லதல்லவா? அதை அரசு பின்பற்றுமா?





மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : போலீசாருக்கு கராத்தே போன்ற பயிற்சி அவர்கள் நல்ல முறையில் எதிரிகளைச் சமாளிப்பதற்கும், அதே நேரத்தில் அடக்குமுறைகள் அதிகமில்லாத அளவுக்குப் பாதுகாக்கின்ற வகையில் அமைந்திருக்கிறது. சிலம்பம் போன்றவைகளெல்லாம் போலீசாருக்குத் தேவையில்லாத பயிற்சிகள். ஆனால், அப்படிப்பட்ட பயிற்சிகளை அவர்கள் தனியாகக் கற்றுக்கொள்வதைப்பற்றித் தடை இல்லை.

திரு. என். கே. பழனிசாமி : இந்தப் பயிற்சி நிலையத்தில் அசிஸ்டெண்ட் சப்-இன்ஸ்பெக்டர்களுக்கும் பயிற்சி கொடுக்கப்படுகிறதா? வேலூரில் பயிற்சி அளிப்பதை மற்ற இடங்களுக்கு மாற்றக்கூடிய செயற்குறிப்பு இந்த சர்க்காரிடம் இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்தப் பயிற்சி நிலையத்தில் அசிஸ்டெண்ட் சூபரின்டென்டென்ட்கள், டெபுடி சூபரின்டென்டென்ட்கள், நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சப்-இன்ஸ்பெக்டர்கள், பதவி உயர்வு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட சப்-இன்ஸ்பெக்டர்கள், பதவி உயர்வு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல்நிலைக் காவலர்கள், நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டாம் நிலைக் காவலர்கள் ஆகியோருக்கு மாத்திரம் இங்கே பயிற்சி அளிக்கப்படுகிறது.

திரு. ஏ. எம். இராஜா : தலைவர் அவர்களே, இப்பொழுதெல்லாம் ஐ. பி. எஸ். பதவிகள் தமிழ் நாட்டுக்குத் தகுந்த அளவுக்கு முன்போல் கிடைப்பதில்லை. ஐ.பி.எஸ். தேர்வில் ரிட்டன் டெஸ்டில் தேறிவிடுகிறார்கள். ஆனால், இன்டர்வ்யூவில் தேர்ந்தெடுக்கப்படுவதில்லை. ஆகவே, அந்தக் குறையைப் போக்குவதற்கு நம்முடைய தமிழக அரசு ஐ.பி.எஸ். கேடரைப் போன்று இங்கே ஒரு கேடரை உருவாக்கி, நம்முடைய பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலம் தேர்ந்தெடுக்க முயற்சி மேற்கொள்ளுமா? இது வரையில் டி.எஸ்.பி. கேடரில் பெண்கள் யாரும் தேர்ந்தெடுக்கப்படவில்லை. இனிமேல் பெண்களுக்கும் அதிலே இடம் கொடுத்து அவர்களைத் தேர்ந்தெடுக்கும் முயற்சியை அரசு மேற்கொள்ளுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஐ.பி.எஸ். கேடர் பற்றி மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டது ஆழ்ந்து சிந்திக்கப்படவேண்டிய ஒன்று. இப்பொழுதுதான் நம்முடைய தமிழகத்தில் பெண்கள் போலீஸ் படையொன்று ஆரம்பமாகியிருக்கிறது. இந்தப் போலீஸ் படை விரிவாக்கப்படும்பொது, டி.எஸ்.பி. போன்ற பதவிகளைப் பற்றி யோசிக்கலாம்.

திரு. த. சோணையா: போலீசுக்கு பயிற்சி கொடுக்கிற முகாம் வேலூரில் இருக்கிறது. ஆனால், மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி போன்ற மாவட்டங்களுக்குத் தனியாக மதுரையில் ஒரு பயிற்சி முகாமை ஏற்படுத்த அரசுக்கு உத்தேசம் இருக்கிறதா? இல்லையென்றால், இனியாகிலும் ஏற்படுத்த முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, பயிற்சி முகாம் வேலூரிலும், கோவையில் காவலருக்கு பயிற்சி அளிக்கிற முகாமும் இருக்கிறது. வேறு பயிற்சி முகாம் எதையும் எங்கும் ஏற்படுத்தும் உத்தேசம்—நிதி ஆதாரம் அரசுக்கு இல்லை.

## *Seizure of blue films*

*477 *Q*.— Thiru N. DENNIS : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether a large quantity of blue films were seized by the Vigilance Wing of the Commissioner of Police Office at Madras during March-April 1974 ; and

(b) if so the details thereof ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆபாசத் திரைப்படச் சுருள்கள் மூன்று கைப்பற்றப்பட்டன.

(இ) இரண்டு பேரைக் காவலர் கைது செய்தனர். ஆபாசத் திரைப்படச் சுருள்கள் மூன்றும், திரைப்படக் கருவி ஒன்றும் கைப்பற்றப்பட்டன. குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஒருவர்மீது இ.பி.கோ. 292 (A) பிரிவின் கீழ் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. அவருக்கு மாநகர IV மாஜிஸ்திரேட் ரூ. 100 அபராதம் விதித்தார். குற்றஞ்சாட்டப்பட்ட மற்றொருவர் மீது இ. பி. கோ. 292 (2) (a) (c) பிரிவின்கீழ் சைதாப்பேட்டை IX பெருநகர் மாஜிஸ்டிரேட் முன்பாகக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு விசாரணையில் உள்ளது.

திரு. என். டென்னிஸ்: தலைவர் அவர்களே, இந்தச் சம்பவங்கள் தொடர்ந்து நடக்காதபடி தீவிர நடவடிக்கைக்கான நடைமுறை ஏதாவது வகுக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: குற்றங்களே இல்லாத ஒரு உலகத்தை-ஒரு நாட்டை நாம் உருவாக்க முடியாது. நடக்கின்ற குற்றங்களைக் கண்டுபிடிக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம். எனினும், இப்படிப்பட்ட நடவடிக்கை எடுப்பதன் மூலம் இந்தக் காரியங்கள் பரவலாக நடப்பதை வேண்டுமானால் நாம் தடுக்கலாம்.

திரு. கே.என். குமாரசாமி: இப்போது வருகிற சினிமாக்களில் முழுக்க முழுக்க காபரே நடனம்—இன்னும் போடுகிற சுவரொட்டிகளில் அரையாடை —இதனால் இளம் உள்ளங்களின் உணர்ச்சி தூண்டப்படுகிற நிலையைப் போக்க அரசு இவற்றைத் தடுக்க நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, படங்களில் வருகிற ஆடைக் குறைப்பு விஷயங்களைப்பற்றித் தணிக்கை அதிகாரிகள் தான் கவனம் செலுத்த வேண்டுமேயல்லாது அரசு நடவடிக்கை எடுக்க எதுவும் இல்லை.

திரு க. உரொ. எட்மண்ட்: இப்பேர்ப்பட்ட குற்றங்கள் மேற்கொண்டு நடக்காமல் இருக்க வேண்டுமென்றால் கடுமையான தண்டனைகள் கொடுக்கப்படவேண்டும். நமது முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது,



100 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டதாகச் சொன்னார்கள். ஆபாசமான படங்களை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்து, அதன் மூலம் ஏராளமாகச் சம்பாதிக்கிறவர்களுக்கு இந்த நூறு ரூபாய் அபராதம் என்பது பெரியதொகை அல்ல. ஆகவே, இப்படிப்பட்ட குற்றங்கள் மேற்கொண்டு நடைபெறாமல் தடுப்பதற்கு இன்னும் கடுமையான தண்டனை வழங்கப்படவேண்டும் என்று நமது அரசு மத்திய அரசுக்குச் சிபாரிசு செய்யுமா? நமக்கு இருக்கிற அதிகாரத்தைக் கொண்டேயும் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: கேள்வி கேட்ட திரு. எட்மண்ட் அவர்களே வழக்கறிஞர். இந்த வழக்கே இ.பி.கோ. 292 (எ) பிரிவின் கீழ் போடப்பட்டது. இதன்படியே இரண்டாண்டு சிறை தண்டனை—அபராதம் ஆகிய இரண்டுமே அளிக்க முடியும். இரண்டாவது முறை இதே குற்றத்தைச் செய்பவர்களுக்கு 6 மாதத்தில் இருந்து அதிகபட்சம் இரண்டு ஆண்டுவரை தண்டனை வழங்க முடியும். திரு. எட்மண்ட் அவர்கள் இதுபோன்ற குற்றங்களைச் செய்தவர்களுக்குத் தண்டனை குறைவாக இருப்பதாகத் தெரிவித்தார்கள். இந்தக் குரல் நீதி மன்றங்களின் காதில் விழவேண்டும்.

திரு. கே.டி.கே. தங்கமணி: விஜிலன்ஸ் கமிஷனின் ஆன்யுவல் ரிப்போர்ட், 1971–72 ஆம் ஆண்டிற்குத்தான் கிடைத்திருக்கிறது. 1972–73-க்கும், 1973–74-க்குமான அவர்களது ஆன்யுவல் ரிப்போர்ட்ஸ் எங்களுக்குக் கிடைக்கச் செய்வார்களா?

We have received a report for 1971-72 only. For the other years, are the reports for 1973-74 and 1974-75 available? I would like to know whether steps will be taken to get the annual reports from the Commissioner about the Vigilance Wing of the Police, particularly the Commissioner of Police, Madras.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதில் இருந்து கேட்கிறீர்கள்?

திரு. கே.டி.கே. தங்கமணி: விஜிலன்ஸ் விங் ஆப் தி கமிஷனர் ஆப் போலீஸ் பற்றி இங்கே சொன்னார்கள். 1971–72 ஆன்யுவல் ரிப்போர்ட்தான் எங்களுக்குக் கிடைத்திருக்கிறது. அவர்களது கடந்த ஆண்டு, சென்ற ஆண்டு ரிப்போர்ட்டும் எங்களுக்குக் கிடைக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: காவல்துறை கமிஷனரின் கீழ் உள்ள குற்றப் புலனாய்வுத் துறைப் பிரிவு எடுத்துக்கொண்ட நடவடிக்கை பற்றி நான் பதில் அளித்திருக்கிறேன்—விஜிலன்ஸ் கமிஷன பற்றியது அல்ல. தனியாகக் கேள்வி போட்டால் அதுபற்றிய விவரங்களைத் தர முடியும்.

## பல்தொழில் நுட்பப் பயிலகங்களில் தமிழ்

*478 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பாலிடெக்னிக்குகளில் தமிழைப் போதனாமொழியாக்கும் திட்டம் சோதனை அடிப்படையில் நடத்தப்பட்டு வருகிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஆம்.

*479 *Q.*—Thiru N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether it is a fact that the Government Polytechnic at Thuvakudi near Tiruchirappalli has been selected for the introduction of Tamil medium from the current academic year ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) திருச்சிராப்பள்ளி அரசினர் பல்தொழில் நுட்பப் பயிலகத்திலும் பொள்ளாச்சி நாச்சிமுத்து பல்தொழில் நுட்பப் பயிலகத்திலும் தமிழில் பாடங்களைப் பயில்விக்கும் திட்டம் 1974–75-ம் ஆண்டு முதல் செயலுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. பௌதீகமும் (Physics) தொழில் நுட்ப ஓவியமும் ( Technical Drawing ) தமிழில் கற்றுக் கொடுக்கப் படுகின்றன.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, பாலிடெக்னிக் பள்ளிகளுக்குப் பயன்படும் வகையில் தமிழில் தொழில் நுட்பச் சொல் அகராதி ஒன்றினைத் தயாரிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பல்தொழில் நுட்பப் பயிலகங்களுக்குப் பயன்படுகிற வகையில் பாடப் புத்தகங்களைக் கொண்டு வரும் முயற்சியில் தொழில் நுட்பக் கல்வி இயக்ககம் ஈடுபட்டுள்ளது. தேவைப்படுமானால் பல்தொழில் நுட்பப் பயிலகம், பொறியியல் கல்லூரிகள்இவற்றுக்குப் பயன் படுகிற சொற்களைத் தொகுக்க தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் நடவடிக்கை மேற்கொள்வார். இப்பொழுதே கலைச் சொற்கள் அகராதி ஒன்று இருக்கிறது.

திரு. என். கே. பழனிசாமி : இந்தத்திட்டத்தை மற்றப் பள்ளிகளுக்கும் விஸ்தரிக்கக்கூடிய திட்டம் சர்க்காரிடம் இருக்கிறதா ? அது எத்தனை வருஷத்தில் அமல் செய்யப்படும் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : திருச்சியிலும், பொள்ளாச்சியிலும் இது பரீட்சார்த்தமாக வைக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு முழுவதும் பார்த்து விட்டு, இதனால் ஏற்படுகிற பலாபலன்களை அறிந்து வேறு பல துறைகளிலும், பள்ளிகளிலும் இதை விரிவுபடுத்த வேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது.



புலவர் சி. பழனிச்சாமி : தமிழகத்திலுள்ள எல்லாக் கல்லூரிகளிலும் என்றைக்காவது ஒரு நாள் தமிழையே பயிற்சி மொழியாக்கக் கூடிய சூழ்நிலை இருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அப்படிப்பட்ட ஒரு நிலையை எய்த வேண்டும் என்பதற்காகத்தான் நாம் படிப்படியாகத் திட்டமிட்டு செயலாற்றி வருகிறோம். அவசரப்பட்டு எல்லாவற்றையும் ஒரே நாளில் கொண்டு வர இயலாது. இந்த ஆண்டு தொழில் நுட்பப் பயிலகத்தில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இதன் பலாபலனைப் பார்த்து விரிவுபடுத்தவும் முயற்சி மேற்கொள்ளப்படும்.

திரு. கே. என். குமாரசாமி : தமிழைப் போதனா மொழியாக பல் தொழில் நுட்பப் பயிலகத்திலும், குறிப்பாக என்ஜினியரிங் கல்லூரிகளிலும் கொண்டு வருவதில் உள்ள சங்கடங்கள் பற்றி அரசாங்கத்திற்கு ஏதாவது பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறதா ? பொருத்தமான தமிழ்ப் பதங்களைக் கண்டு பிடித்து—இந்தத் துறையிலும் தமிழைப் போதனா மொழியாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இதுபற்றிய குறிப்புரைகள் எதுவும் வரவில்லை. இந்த ஆண்டில்தான் பல்தொழில் நுட்பப் பயிலகத்தில் புகுத்தியிருக்கிறோம். அதில் உள்ள கஷ்டங்கள் என்ன என்று அறிந்த பின்னர் மேற்கொண்டு இதனை விரிவுபடுத்த நட வடிக்கை எடுக்கப்படும். மேலும் இன்டர்நேஷனல் டேர்ம்ஸ் என்ற முறையில் ஈக்வேஷன்—சமன்பாடு, சிம்பல்ஸ்—அறிவு அடையாளங்கள்—பார்முலா—ஆகியவற்றை எல்லாம் ஆங்கிலத்திலேயே தழுவிக் கொண்டு போதனையைத் தமிழில் வழங்கலாம் என்பதாக நாம் அறிவுறுத்தி வந்திருக்கிறோம். இந்த முறைதான் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

திரு. கா. வேழவேந்தன் : தொழில் துறையில் முன்னேறியுள்ள ஜப்பான் போன்ற நாடுகளில் எல்லாம் கூட தொழில் பயிற்சிக் கல்வி தாய் மொழி மூலம் கொடுக்கப்படுகிறது. ஆகவே, தமிழில் முழுக்க சொல்லிக் கொடுக்காவிட்டாலும்—எப்படிக் கல்வி கற்றாலும்—மாணவர்கள் விடை எழுதும்போது அவர்கள் புரிந்து கொண்ட முறையில் தமிழில் விடை எழுதலாம் என்று கொண்டு வந்தால் மொழிச் சிக்கல் வராது. எந்த மொழியில் கற்றாலும் தொழில் பயிற்சி நிறுவனங்களில் தமிழிலேயே விடை எழுதலாம் என்ற முறையைக் கொண்டு வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, கல்லூரிகளைப் பொறுத்தவரையிலும் பல்கலைக் கழகம் அப்படிப்பட்ட நிலைக்கு இடம் கொடுத்திருக்கிறது. ஆனால், தொழில் நுட்பக் கல்லூரிகளிலும், தொழில் நுட்பப் பள்ளிகளிலும் இப்போதுதான் பரீட்சார்த்தமாக நாம் தொடங்கி இருக்கிறோம். ஜப்பான் போன்ற நாடுகளிலே கூட—நான் சென்றபோது பார்த்தேன்—அவர்கள் தங்கள்

மொழியை விளக்கங்கள் தருவதற்குப் பயன்படுத்தி, மற்றவைகளுக்கெல்லாம் இன்டர்நாஷனல் டேர்ம்ஸ்தான் பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். நாம் விரைவிலே தமிழைக் கொண்டு வர முடியவில்லை. தமிழை விரைவிலே கொண்டு வர முடியாததற்குக் காரணம், காலம் தாழ்த்தப்படுவதற்குக் காரணம், அதற்கெல்லாம் தமிழைக் கொண்டு வர வேண்டுமென்று முயற்சி எடுத்துக் கொண்டிருப்பதுதான். தமிழை எந்த அளவு பயன்படுத்திக் கொள்ள முடியுமோ, அந்த அளவு பயன்படுத்திக் கொண்டு, முடியாதவற்றிற்கு தற்பொழுது இன்டர்நாஷனல் டேர்ம்ஸ் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற வகையில்தான் இப்பொழுது அறிவியல் பாடங்களெல்லாம் உருவாக்கப்படுகின்றன. தொழில் நுட்பப் பள்ளியிலும் அந்த முறை கையாளப்பட்டு வருகிறது.

<u>திரு. கா. காளிமுத்து</u> : தலைவரவர்களே, ஒரு குறிப்பிட்ட காலத்தை வரையறுத்துக் கொண்டு, அதற்குள் பாலிடெக்னிக் உள்பட அனைத்துப் பயிற்சிக் கல்லூரிகளிலும் தமிழைப் பயிற்சி மொழியாகக் கொண்டு வர, இந்தத் திட்டத்தை இன்னும் விரைவுபடுத்த அரசு முயற்சி செய்யுமா ? என அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்</u> : தலைவரவர்களே, இது போன்ற காலவரையறையை நிர்ணயம் செய்ய முடியாது. அரசியல் சட்டத்திலே காலவரையறையைப் போட்டு நடைமுறைப்படுத்த முடியவில்லை. நாமும் 5 ஆண்டுகளில் கொண்டு வர வேண்டுமென்று முயற்சித்தும் முடியவில்லை. கல்வியமைச்சர்கள் மாநாட்டிலே, 5 ஆண்டுகள், 10 ஆண்டுகள் என்று நிர்ணயித்து, முயற்சி செய்தும் நடைமுறைப்படுத்த முடியவில்லை. தற்பொழுது, 7, 8 பாடங்களிலே 2 பாடங்களைத் தமிழிலே பயிற்றுவிக்கவும், மீதிப் பாடங்களை ஆங்கிலத்திலே பயிற்றுவிக்கவுமான நிலைமைகளிருக்கின்றன. மெல்ல மெல்ல விரைவுபடுத்திக் கொண்டு வர வேண்டுமென்று முடிவெடுத்திருக்கிறோம். விரைவிலே நடைமுறைப்படுத்த என்ன சாதகச் சூழ்நிலை ஏற்படுத்த வேண்டுமோ அந்த வகையிலே முயற்சி செய்வோம்.

<u>திரு. வை. பாலசுந்தரம்</u> : தலைவரவர்களே, தமிழைப் பாட மொழியாகக் கொண்டு வர மாணவர்கள் ஆர்வம் காட்டுகிறார்களா ? அப்படி ஆர்வம் காட்டவில்லை என்றால் அரசு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறதா ? அதே நேரத்தில், தொழில் நுட்பப் பள்ளிகளில் தமிழைப் பாட மொழியாக ஏற்க அச்சப்படுகின்ற மாணவர்களுக்கு இந்தத் தொழில் நுட்பப் பள்ளிகளில் தமிழில் பாடம் நடத்த மாணவர்கள் ஆர்வம் காட்டுகின்ற வகையில் அரசு முயற்சி எடுக்குமா ? என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்</u> : அந்த நிலையை ஏற்படுத்தக் கூடாது என்றுதான்—தமிழ் படிக்கக் கூடிய ஜாதி, ஆங்கிலத்திலே படிக்கக்கூடிய ஜாதி என்று இரண்டு பிரிவுகளாக இருக்கக்கூடாது என்றுதான் சில பாடங்களை ஆங்கிலத்திலே சொல்லிக்கொடுக்க வேண்டும், சில பாடங்களை எல்லோருக்குமே தமிழிலே சொல்லிக் கொடுக்க வேண்டுமென்று வைத்திருக்கிறோம். மாணவர்களை ஆங்கிலத்திலே பயில்கிறீர்களா தமிழிலே பயில்கிறீர்களா என்று கேட்கும்போதுதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற சங்கடங்கள் ஏற்படும். இரண்டு பாடங்களை எல்லோருமே தமிழிலே படிக்க வேண்டுமென்று வைத்திருக்கிறோம் மீதிப் பாடங்களை எல்லோருமே ஆங்கிலத்திலே படிக்க வேண்டுமென்றுதான் வைத்திருக்கிறோம். இரண்டு மொழிகளிலும் தங்கள் கருத்துக்களை வெளியிட வாய்ப்பாக இருக்கும் என்று கருதித்தான் இந்த முறை பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.



<u>திரு. எஸ். வடிவேல்</u> : தலைவரவர்களே, இந்தச் சட்டப் பேரவையில் அமைத்திருக்கின்ற குழுக்களில்கூட, பொதுக் கணக்காய்வுக் குழு, மதிப்பீட்டுக் குழு போன்ற குழுக்களிலே தமிழிலே செய்திகள், எழுத்து மூலமாக வருவதில்லை அங்கத்தினர்களுக்கு. அரசாங்கம் —சட்டப் பேரவை அமைத்திருக்கின்ற குழுக்களில் தமிழிலேயே எல்லாவற்றையும் நடத்த அரசு முயற்சிக்குமா என அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : இந்தக் கேள்வி இதில் எப்படி வரும் ?

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்</u> : இது பாலிடெக்னிக் பற்றிய மூலக் கேள்வி. இந்த மூலக் கேள்விக்கும் மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்விக்கும் நேரடி தொடர்பில்லை. ஆனால், அந்த நிலைமைகளைக் கவனிக்க தமிழ் வளர்ச்சித் துறை அதைத் தீவிரப் படுத்துகின்ற முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறது.

<u>திரு. என். கிட்டப்பா</u> : தலைவரவர்களே, பாலிடெக்னிக்குகளிலே தமிழ் படிக்கும் மாணவர்களுக்கு ஊக்கப் பணம் கொடுக்கும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா ?

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்</u> : தலைவரவர்களே, அப்படிப்பட்ட உத்தேசம் அரசுக்கு இல்லை.

## <u>பல்தொழில் நுட்பப் பயிலகங்களில் பெண்களுக்குத் தனிப் பிரிவு.</u>

*480 வினா—<u>திரு. என். கிட்டப்பா</u>: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெண்களுக்கென பாலிடெக்னிக்குகளில் தனிப் பிரிவு ஏற்படுத்த அரசு உத்தேசித்துள்ளதா ?

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்</u> : ஆம்.

<u>திரு. என். கிட்டப்பா</u> : தலைவரவர்களே, பாலிடெக்னிக்குகளில்படிக்கும் பெண்களுக்கு வேலைவாய்ப்புக்கு அரசு உறுதி வழங்க ஆலோசிக்குமா ?

[1975 மார்ச் 29

மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, கல்லூரிகளிலே, பள்ளிகளிலே படித்து வருகிறவர்கள் அத்தனை பேருக்கும் எந்த அரசும் எந்த நாட்டிலும் அப்படிச் செய்ய இயலாது; இங்கும் செய்ய இயலாது. எதிர்காலத்தில் அவர்கள் வேலையைத் தேடிக்கொள்ள, அல்லது வேலையை உருவாக்கிக் கொள்ளப் பயன்படுகின்ற அறிவு ஆற்றலைத் தரத்தான் பள்ளிச்சாலைகள் பயன்படும். பாலிடெக்னிக்குகளில் படித்து வருகின்றவர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுகின்ற சூழ்நிலை வளர்ந்து கொண்டிருக்கிறது. ஐ.டி.ஐ., பாலிடெக்னிக்குகளில் படித்து வருகின்றவர்களுக்கு இப்பொழுது வேலைவாய்ப்பில்லை என்கிற நிலை ஏற்படவில்லை:

## பெரியகுளம் கண்மாய் கரைச்சாலை.

*481 வினா—புலவர் சி. பழனிச்சாமி : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

பழனி வட்டம், ஆய்க்குடிப் பகுதியில் உள்ள பெரியகுளம் கண்மாய்க் கரைச்சாலையைச் சீர்திருத்தி அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இத்திட்டத்திற்கான முன்னிலை தீர்வான மதிப்பீடு ஸ்தலப் பொறியாளர்களால் தயார் செய்யப்பட்டு வருகின்றது.

புலவர் சி. பழனிச்சாமி : ஆன் எ பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன், சார். இந்தக் கேள்வியினுடைய எண் 7517. என்னுடைய பெயரில் வந்துள்ள இந்தக் கேள்வி, இன்றைக்கு..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படி ஏதாவது இருந்தால் அறையிலே வந்து கேளுங்கள். இதிலே துணைக் கேள்வி கேளுங்கள்.

புலவர் சி. பழனிச்சாமி : செயலாளர் அவர்கள்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அறையிலே வந்து கேளுங்கள்..

புலவர் சி. பழனிச்சாமி : இந்தக் கேள்விக்கு செயலாளர் அனுப்பிய பதிலில் மாறுபாடு இருக்கிறது என்று சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படி இங்கு சொல்வது சரியல்ல, அறையிலே வந்து கேளுங்கள்.

புலவர் சி. பழனிச்சாமி : நான் கேட்ட மூலக்கேள்வி வேறு.



1975 மார்ச் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை அறையிலே வந்து கேளுங்கள்.

புலவர் சி. பழனிச்சாமி : தலைவரவர்களே, இந்த வரதாப் பட்டணம் சாலை, பெரியகுளம் கண்மாய்க் கரைச்சாலை, இரண்டு சாலைகளும் அந்தப் பகுதியிலே இருக்கிற உழவர் பெருமக்களுக்கு மிகவும் அவசியமான திட்டங்கள். உழவர் பெருமக்கள் தங்கள் விளைபொருள்களை அந்தச்சாலைகளின் வழியாகத்தான் வண்டியிலே ஏற்றிவரவேண்டும். அப்படி இருக்கும்போது, அந்தச்சாலைகள் மிகவும் பழுதுண்ட நிலையிலே இருக்கின்றன. ஆகவே, இப்பொழுது நடந்து கொண்டிருக்கிற வறட்சி நிவாரணப் பணியிலே இவற்றையும் சேர்த்து, இப்பொழுதே இரண்டு சாலைகளையும் சீர்திருத்திக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, வறட்சி நிவாரண வேலைகளிலே இந்தப் பாதைகளில் ஜல்லி போடக் கூடாது என்று மத்திய அரசாங்கம் தடை விதித்திருக்கிறது. ஆகவேதான் வறட்சிப் பணிகளில் ஜெல்லி போடுகின்ற வேலையையும் தார் போடுகின்ற வேலையையும் செய்ய முடியாது. மணல் வேலை மட்டுதான் செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள். இருந்தாலும் தலப் பொறியாளர்கள் இது பற்றிப் பரிசீலனைத்து வருகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : புலவர் பழனிச்சாமி அவர்கள் பழய வட்டம் ஆயக்குடிப் பகுதியில் உள்ள வரதாப்பட்டணம் சாலை, பெரியகுளம் கண்மாய்க் கரைச்சாலை ஆகியவற்றைச் சீர்திருத்தி அமைப்பது பற்றி இரண்டு கேள்வி கேட்டிருக்கிறார்கள். அதில் வரதாப் பட்டணம் சாலை, ஆர்.டி.எல்.எ. சாலையிலே வருகிறது. அதனாலே அது அந்தத் துறைக்குப் போயிருக்கிறது, இது பொதுப் பணித் துறையைச சேர்ந்ததால், இந்த இலாகாவில் வந்திருக்கிறது.

## ஆரணி ஆற்றின் கரைகள்.

*482 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பொன்னேரி வட்டம், காரணி கிராமத்தில் ஆரணி ஆற்றின் கரைகளைப் பலப்படுத்த Revetment கட்டும் செயற்குறிப்பு எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இத்திட்டம் தல அதிகாரிகளின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, ஆரணி ஆற்றின் கரையில் ரிவெட்மெண்ட் அமைக்கிற இந்தத் திட்டத்தை இந்த ஆண்டே

வது வறட்சி நிவாரணப் பணியில் எடுத்துக் கொண்டால் வேலை வாய்ப்புக் கிடைக்கும். இது நீண்டகாலம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. ஆகவே, தனி ஆணை பிறப்பித்து, இந்த ஆண்டே இதனை எடுத்துக் கொள்ள அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இதுவும் அதேபோல்தான். ரிவெட்மெண்ட் கட்டுவது வறட்சி நிவாரண வேலையின் கீழ் வராது என்று மத்திய அரசாங்கம் தெரிவித்திருக்கிறது. என்றாலும், இதன் முக்கியத்துவத்தை அரசு உணர்ந்திருக்கிறது; அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

*Consumers' Council of Tamil Nadu*

*483 *Q.*— THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether it is a fact that a delegation of the Consumers' Council of Tamil Nadu met the State Food Minister on 19th April 1974 ; and

(*b*) if so, the details of request made by them?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) இந்திய உபயோகிப்பாளர் கூட்டமைப்பின் நிர்வாகிகள், உணவு விடுதிகளில் விற்கப்படும் தின்பண்டங்களின் விலைகளைக் குறைக்க வேண்டுமென கோரினர்.

திரு. என். கே. பழனிசாமி : சார், இதன்பேரில் சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? சர்க்கார் உணவுக் கொள்கையாக கன்ஸ்யூமர்ஸ் கோவாபரேடிவ் சொஸைட்டீஸ் ஏற்படுத்துவதாக அறிவிக்கப்பட்டதே, அதுவும் இம்மாதிரிதானா? அதற்கு எவ்வாறு ஏற்பாடு செய்யப் போகிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்வார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்பொழுதே கன்ஸ்யூமர்ஸ் கோவாபரேடிவ்ஸ் நாடு முழுவதும் அமைக்கப்பட்டிருக்கிறது. இன்னும் எங்கெங்கே தேவையென்று அமைக்க முன்வருகிறார்களோ, அங்கெல்லாம் கூட்டுறவுத் துறையிலே முயற்சி செய்யலாம். இந்தப் பிரச்னையைப் பொறுத்தவரையிலும் முன்னாலிருந்த அமைச்சரவர்கள் ஓட்டல் முதலாளிகளைக் கலந்து பேசி உணவு விலைகளைக் குறைக்க நடவடிக்கை எடுத்தார்கள்.



(முற்பகல் 9-30)

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, இந்த கன்ஸ்யூமர்ஸ் கவுன்சில் ஆப் இண்டியா என்ற அமைப்பு அகில இந்திய அளவிலே அமைக்கப்பட்டு அதற்கு நம்முடைய ப்ரெசிடெண்ட் ஆப் இந்தியா பேட்ரன் ஆகவும் மத்திய அமைச்சர் பால கோவிந்த வர்மா தலைவராகவும் இருக்கிறார்கள். தமிழ்நாட்டிலே அதனுடைய கிளை இருக்கிறது. தமிழ்நாட்டிலே உள்ள இந்தக் கிளைக்கு நான் தலைவராக இருக்கிறேன். நான் நம்முடைய மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களையும் முதலமைச்சர் அவர்களையும் சந்தித்துப் பேசி ஓட்டல் அதிபர்களையெல்லாம் விலையைக் குறைக்கும்படி அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். அந்த அளவில் 10 பைசா விலை குறைந்தது. ஆனால் இந்த அமைப்புக்கு மாசு ஏற்படுத்த வேண்டுமென்ற முறையிலே, அகில இந்திய அளவில் அமைந்திருக்கிற அமைப்பின் ஒரு அங்கமாக இருக்கிற இந்தக் கிளைக்கு கெட்ட பெயர் வர வேண்டுமென்ற முறையிலே தமிழ்நாட்டிலே வேறு சிலர் அந்தப் பெயரை வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அந்த அமைப்பை தடை செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எது அதிகாரபூர்வமான அதிகாரம் பெற்ற அமைப்பு என்று எனக்குத் தெரியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அதைப்பற்றி எழுதியனுப்பினால் விசாரிக்கலாம்.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, கன்ஸ்யூமர்ஸ் கவுன்சில் ஆப் இண்டியா என்று ஒரே அமைப்புதான் இருக்கிறது. ஆனால் இந்தக் கேள்வியிலேகூட கன்ஸ்யூமர்ஸ் கவுன்சில் ஆப் தமிழ்நாடு என்றுதான் கொடுத்திருக்கிறார்கள். தமிழ்நாட்டிலே உள்ள பிராஞ்சுக்கு நான் தலைவராக இருக்கிறேன். கன்ஸ்யூமர்ஸ் கவுன்சில் ஆப் இண்டியா அமைக்கப்பட்டிருப்பதன் அடிப்படையான நோக்கமே பொருள் தரமாகவும் கலப்படம் இல்லாமலும் மலிவாகவும் மக்களுக்குக் கிடைக்கவேண்டுமென்பதுதான். ஆனால் அந்த நோக்கத்திற்கு மாறாக ஒரு அரசாங்கத்திற்குக் கெட்ட பெயர் ஏற்படுத்த வேண்டுமென்ற முறையிலே ஒரு அமைப்பு ஏற்படுத்தி— நான் ஏற்கனவே கூறியபடி—போலிச் சங்கம் என்ற முறையிலே ஏற்படுத்தியிருக்கிறார்கள், அதை யெல்லாம் தடைசெய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாண்புமிகு உறுப்பினர் அதிகாரபூர்வமான அமைப்பின் தலைவர் என்ற முறையிலே முன்னாள் உணவு அமைச்சரைச் சந்தித்துப் பேசி பல விவரங்களைத் தந்திருக்கிறார்கள். இதிலே வேறு யாரும் இந்தப் பெயரிலே செயல்படுகிறார்களா என்பதைப் பற்றி விசாரிக்கலாம்.

THIRU K. M. SUBRAMANIAM : Are the Government aware that there is a separate organisation posing as Consumers' Productivity Council in Madras City and going to bankers and doing all sorts of things? Are the Government aware that such a thing is happening and what are the steps taken against this? The Bank interest is about 14 per cent now whereas the interest charged by pawnbrokers is 12 per cent. Are the Government aware that there is a serious agitation going on in the City of Madras?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சட்டத்திற்குப் புறம்பான நடவடிக்கைகளை யார் செய்தாலும் அதைப் பற்றி போலீசார் கண்காணித்துக் கொள்வார்கள்.

திரு. என். கே. பழனிசாமி : கனம் அமைச்சர் அவர்கள் உணவுக் கொள்கை கன்ஸ்யூமர்ஸ் கோவாப்ரேடிவ் சொஸைடிகளை ஏற்படுத்துவது தான் என்று சொன்னார்கள். அப்படியானுல் சர்க்கார் எவ்வாறு கொள் முதல் செய்யப் போகிறார்கள், எவ்வாறு விநியோகம் செய்யப் போகிறார்கள், இருக்கக்கூடிய சொஸைடிகளிலேயே விநியோகம் செய்யப்போகிறார்களா அல்லது புதிதாக சொஸைடிகள் ஏற்படுத்திச் செயல்படப் போகிறார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கன்ஸ்யூமர்ஸ் கவுன்சில் அமைச்சரைச் சந்தித்ததைப் பற்றிய கேள்வி இது. மாண்புமிகு உறுப்பினர் ப்ரொட்யூஸர்ஸ் கோவாப்ரேடிவ் சொஸைடிஸ் பற்றி கேள்வி கேட்கிறார்கள் என்று நினைக்கிறேன். உற்பத்தியாளர்களுடைய ஒத்துழைப்பு கிடைக்குமானுல் அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

*Sale of spare parts for buses through Co-operatives.*

*484 *Q*.—Thiru N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(a) whether there is any proposal under the consideration of the Government to arrange for the sale of spare parts and accessories for buses at fair prices through Co-operatives ; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) இவ்வினு எழவில்லை.

திரு. என். கே. பழனிசாமி : சார், கோயம்புத்தூர் சிந்தாமணி மார்க்கெட்டிலே இம்மாதிரி ஸ்பேர் பார்ட்ஸ் கொடுக்கிறார்கள். வெளியிலே அவற்றின் விலை அதிகமாக இருப்பதால் ஆங்காங்கு உள்ள சூப்பர் மார்க்கெட்டுகளில் இவற்றை விற்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போதே 7 இடங்களில் இப்படிப் பட்ட கூட்டுறவு அமைப்புகள் இருக்கின்றன. இதற்கென்று தனியாகவும் மோட்டார் உதிரிப் பாகங்கள் பண்டகசாலை என்ற முறையிலே திருச்சி, சேலம், திருச்செங்கோடு, வேலூர் போன்ற இடங்களிலே அமைக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் சொன்னதைப்போல் சிந்தாமணி கூட்டுறவு அங்காடியிலும் சேலம் கூட்டுறவு சிறப்பு அங்காடியிலும் தனிப் பிரிவுகள் இதை விற்பனை செய்து வருகின்றன.



திரு. என். மருதாசலம் : சூப்பர் மார்க்கெட்டிலே வெளியிலே விற்கப்படுகின்ற விலையைவிட அதிகமான விலைக்கு விற்கப்படுகிறது. அங்கே குறைந்த விலைக்கு விற்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்படிப் பொதுவான குற்றச்சாட்டைச் சொல்லக் கூடாது. சூப்பர் மார்க்கெட்டுகளிலே, சிறப்பு அங்காடிகளிலே குறைந்த விலையிலே விற்கப்படுவதால்தான் மக்கள் நம்பி அங்கே வாங்குகிறார்கள். ஏதாவது ஒரு சில பொருள்களின் விலை ஏறியிருக்குமானுல் அதைக் குறைக்க முயற்சிக்கலாம். சிறப்பு அங்காடிகள் சிறப்பாகச் செயல்படுகின்றன என்பதுதான் மக்களுடைய நம்பிக்கை.

*Key Village Scheme.*

*485 *Q*.—Thiru N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Commercial Taxes be pleased to state—

(a) whether there is any proposal under the consideration of the Government to revive the Key Village Scheme ; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ஓ.பி. இராமன் : (அ) ஆம்.

(இ) 1973-ம் ஆண்டில் மதுரை மாவட்டத்தில் பழனி வட்டத்தில் கேந்திர கிராம நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன. 1974–75 ஆம் ஆண்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் 8 கேந்திர கிராம நிலையங்களை ஏற்படுத்துவது அரசின் பரிசீலனையில் உள்ளது. 1975–76 ஆம் ஆண்டில் 8 கேந்திர கிராம நிலையங்களை ஏற்படுத்த நிதிக் குழு ஒப்புதல் அளித்துள்ளது.

திரு. என். கே. பழனிசாமி : சார், கீ வில்லேஜ் திட்டத்தில் ஏற்கனவே இருந்த திட்டப்படி அமுல் நடத்தப்படவில்லை. இப்போது அப்படிப்பட்ட திட்டம் இல்லாமல் செமிநேஷன் மட்டுந்தான் இருக்கிறது. பழையபடியும் அந்தத் திட்டத்தை கொண்டுவந்து பால் உற்பத்தியை அதிகரிக்கச் செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஓ.பி. இராமன் : ரீ-ஆர்கனைஸ் செய்யும்போது புதிதாக இந்தத் திட்டத்தை 40 இடங்களில் ஏற்படுத்த வேண்டுமென்று குறிப்பு இருக்கிறது. முதல் கட்டமாக மதுரை மாவட்டத்திலே 3 இடங்களிலே ஏற்படுத்தினோம். திருநெல்வேலி மாவட்டத்திலே 8 இடங்களில் ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு மேலும் 8 இடங்களுக்கு விஸ்தரிக்கப்படக் கூடிய நிலைமை இருக்கிறது. மீண்டும் 40 இடங்களில் இதை விஸ்தரித்து மாண்புமிகு உறுப்பினர் சொன்ன யோசனையைப் பரிசீலிக்கலாம்.

[1975 மார்ச் 29

THIRU B. VENKATASWAMY: After the closure of Key Village Scheme, most of the important things that were done under the scheme had been stopped. May I know whether the Government will seriously consider implementing the Key Village Scheme as originally envisaged?

மாண்புமிகு திரு. ஓ.பி. இராமன்: இருந்த இந்தக் கால்நடை டிஸ்பென்சரிகள் மூடப்பட்டுவிட்டனவாகச் சொல்வது சரியான கூற்றல்ல. ரீ-ஆர்கனைஸ் செய்தபோது ஒரே இடத்திலே அடர்த்தியாக நெருக்கமாக இருந்தவை யெல்லாம் மாநில அளவிலே பரவலாக நிறைந்து இருக்கவேண்டுமென்ற முறையிலேதான் செய்யப்பட்டது. அதன் காரணமாகச் சில இடங்களிலே மூடப்பட்டன. அதையொட்டிப் பல இடங்களில் புதிதாகவும் ஆரம்பிக்கப் பட்டிருக்கின்றன.

திரு. எ. ஆர். சுப்பையா: தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்திலே எட்டு இடங்கள் என்று சொன்னீர்கள். எந்த எந்த இடங்கள் என்று சொல்ல முடியுமா? இப்போது பழைய கீ வில்லேஜ் ஸ்கீமே வருமா? அல்லது—கீ வில்லேஜ் டிஸ்பென்சரியல்ல—தனியாக உற்பத்தி செய்யக்கூடிய முறையிலே ஆரம்பிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: எட்டு இடங்கள் எந்த எந்த இடங்கள் என்பதுபற்றி விரைவிலே முடிவு செய்யப்படும்.

திரு. ஆ. கு. சுப்பையா: தஞ்சை மாவட்டம் கால்நடைகள் நிறைந்த மாவட்டம் ஆகும். ஆகவே இந்தச் சிறப்பான திட்டத்தைத் தஞ்சை மாவட்டத்திற்கும் விஸ்தரிக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: ஐ.சி.டி.பி. ஸ்கீம் மூலமாகத் தீவிரக் கால்நடைத் திட்டத்தின் மூலமாகத் தஞ்சை மாவட்டத்திலே மேற்கொண்டு 100 இடங்களில் சென்டர்கள் ஏற்படுத்த 1975-76-ம் ஆண்டில் செயற் குறிப்பு உள்ளது.

தஞ்சை மாவட்டத்தில் கோழி வளர்ப்புத் திட்டம்.

*486 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தஞ்சை மாவட்டத்தில், கோழி வளர்ப்புத் திட்டத்தின்கீழ் இதுவரை எத்தனை சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன?

(இ) அவைகளின் மூலம் எத்தனை உறுப்பினர்கள் பண்ணைகள் அமைத்துள்ளனர்?

மாண்புமிகு திரு. ஓ.பி. இராமன்: (அ) தஞ்சை மாவட்டத்தில் கோழி வளர்ப்புத் திட்டத்தின்கீழ் மொத்தம் 21 சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன



1975 மார்ச் 29]

(இ) அச்சங்கங்கள் மூலம் 2,086 உறுப்பினர்கள் பண்ணைகள் அமைத்துள்ளனர்.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, இந்தக் கோழிப்பண்ணைக்குப் பண உதவி எந்த அடிப்படையில் வழங்கப்படுகிறது? உச்ச பட்சமாக எவ்வளவு பணம் வழங்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: ஒரு சங்கத்திற்குக் குறைந்தது 100 உறுப்பினர்கள் சேரவேண்டுமென்று விதியிருக்கிறது. ஒரு உறுப்பினர் குறைந்தது 100 கோழிகள் வழங்க வேண்டுமென்று இருக்கிறது. அதற்குத் தொகை 3 ஆயிரம் வழங்கவேண்டுமென்று இருக்கிறது. இப்போது கோழி வளர்ப்புத் திட்டத்திற்காக பணம் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கியின் மூலமாகப் பெற்றுத் தரப்படுகிறது.

திரு. வை. பாலசுந்தரம்: தலைவர் அவர்களே, கோழி வளர்ப்புக்காக முன்பு கட்டப்பட்ட கட்டிடங்கள் கோழி வளர்ப்புக்குத் திட்டமிடப்பட்ட முறைகள் எல்லாம் பல இடங்களில் காலி செய்யப்பட்டன. மீண்டும் அவற்றைத் தனியாருக்கோ அல்லது அரசோ ஏற்றுச் செய்கின்ற முறையில் அவற்றை கோழி வளர்ப்புத் திட்டத்திற்குப் பயன்படுத்த அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: கோழி இல்லாத காரணத்தால் தான் அவை யெல்லாம் நிறுத்தப்பட்டன. அதற்குப் பின்னாலே புதிது புதிதாக பவுல்ட்ரி டெவலப்மென்ட் கார்ப்பரேஷன் மூலமாக ஆரம்பிக்கப்பட்டு அதன் மூலம் வசதி பெற்ற அந்த அந்த இடங்களிலே ஆரம்பிக்கும் செயற்குறிப்பு இருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், பவுல்ட்ரி டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன் என்று 1972 ஆம் ஆண்டில் ஆரம்பித்து அது இரண்டாண்டுக் காலம் செயல்பட்ட பிறகு, அது செயல்படும் முறை சரியல்ல, நிதி வசதி கோளாறாகயிருக்கிறது என்று ஏதாவது ஸ்பெஷல் ஆடிட் போடப்பட்டதா? அப்படியென்றால் அந்த ரிப்போர்ட் சமர்ப்பிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவரவர்களே, அதனுடைய விவரம் இல்லை. விவரத்தைத் தெரிந்து சொல்லலாம்.

திரு. டி. வி. சம்பத்: தலைவரவர்களே, கோழி வளர்ப்புத் திட்டத்தில், முக்கியமாக சிறு சிறு கோழி வளர்ப்புத் திட்டத்தின் கீழ் சங்கங்களின் தலைவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் சொல்லுகின்ற சிபார்சுகளுக்கு அதாவது அரசாங்கத்தின் மூலம் தரும் கடன்களைத் தருவதற்கு மறுப்பதாக அரசுக்கு ஏதேனும் தகவல் தெரியுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவரவர்களே, அதுமாதிரி புகார் ஏதுவும் இல்லை. ஆனால் இப்பொழுது கூட, கோழி வளர்ப்புக் கழகத்தின் மூலம் சிபார்சு செய்யப்பட்டு, இப்பொழுது அரசின் மூலம் அல்ல நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலம்தான் தரப்படுகிறது.

திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, கோழி வளர்ப்புக்காகக் கொடுக்கப்படும் கடன்களை வைத்து கோழி வளர்ப்பு செய்ய வேண்டுமென்று சொல்லப்படுகிறது. ஆனல் கோழிக்காக தீவனம் குறைந்த விலையில் இல்லாதிருப்பதால் அந்தப் பண்ணைகளில் பல்வேறிற்கு நஷ்டம் ஏற்பட்டு, பலயிடங்களில் கடன் வாங்கி கோழி வளர்ப்புப் பண்ணைகளை வைத்தவர்கள் அவைகளை மூடிக் கொண்டிருக்கிறார்கள். குறைந்த விலைக்குக் கோழித் தீவனம் தயார் செய்வதாகக் கூறினர்கள். அந்தத் தீவனம் தயார் செய்யப்பட்டதா ? இல்லையென்றல் இந்தத் திட்டத்திற்குப் பாதகமான சூழ்நிலை ஏற்படுமே. எனவே இது சம்பந்தமாக அரசாங்கத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்வது முற்றிலும் உண்மையான கூற்றாகும். கோழி வளர்ப்புக்கான தீவனங்களின் உற்பத்திச் செலவு அதிகமாகிறது. அதுவும் தனியார் துறையிலே வாங்கப்போனல் ரொம்ப அதிகமாக இருக்கிறது. கார்ப்பரேஷன் மூலம் கொடுக்கும் அந்தக் கோழி வளர்ப்புத் தீவனத்தின் விலை சற்று அதிகமாகயிருந்தாலும் அதில் அதிகமாகச் சத்துணவு இருப்பதால் தனியாகக் கோழி வளர்ப்பவர்கள் அங்கேதான் வாங்குகிறார்கள். சமீபத்தில் பேச்சு வார்த்தை நடத்தி, சற்று அதிகமாக இருக்கிறது, அதைச் சற்றுக் குறைக்கவேண்டுமென்று சொன்னர்கள். அவர்களது பிரச்சனையை ஓரளவிற்கு ஏற்றுக்கொண்டு குறைத்திருக்கிறோம். ஆனல் இன்னும் குறைக்க வேண்டுமென்று சொல்வது நியாயமான கோரிக்கை என்பதை நான் உணர்கிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா: தலைவரவர்களே, திருத்துறைப்பூண்டி தாலுக்காவில் கோழிப்பண்ணை கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அதன் மேல் கொட்டகை போட ஆயிரம் ரூபாய் கடன் கொடுத்தார்கள். ஆனல் மேலும் கோழி வாங்குவதற்கான கடன் தேசவுடைமையாக்கப்பட்ட வங்கிகளில் மறுக்கப்படுகிறது. அதனல் அங்கே கொட்டகையோடு நிற்கிறது. அவர்களுக்குக் கடன் கொடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ஓ.பி. இராமன்: தலைவரவர்களே, திருத்துறைப்பூண்டி என்று ஒரு குறிப்பிட்ட இடத்தைப்பற்றி மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்கிறார்கள். அதற்கான விவரம் இல்லை. ஆனல் இதுபோன்ற நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலம் நாம் சிபார்சு செய்து, முறைப்படி பலயிடங்களில் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுக்கிருக்கும் சிரமம், தீவனங்களின் விலை சற்று அதிகமாக இருப்பதால் லாபகரமாக நடத்த முடியவில்லை என்பது. இதைக் கட்டுப்படுத்த அல்லது குறைந்த விலையில் உற்பத்தி செய்ய முயற்சிக்கிறோம். அப்படிச் செய்யும் பொழுது இதெல்லாம் சரியாகிவிடும் என்று நான் கருதுகிறேன்.

THIRU B. VENKATASWAMY : May I know from the Hon. Minister whether this Corporation is going to develop hi-line chicks which are bigger egg-layers so that the producers may thrive economically?



மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, புதிய முறைகளையெல்லாம் பின்பற்றுவது நல்லதுதான். பின்பற்றிக்கும்.

சென்னை–சத்தியவேடு பேருந்து வழித்தடம்

*487 வின:—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) சென்னையிலிருந்து சத்தியவேடு சென்று வரும் A. T. M. பேருந்து, கன்னங்கோட்டை கிராமம் வரை சென்று திரும்ப பெர்மிட் இருந்தும் போவதில்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அப்பேருந்து கன்னங்கோட்டை வரை சென்றுவர செய்வதற்கென எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) சென்னையிலிருந்து சத்தியவேடு சென்று வரும் ஏ. டி. எம். பேருந்து 5—7—1974 முதல் கன்னங்கோட்டை வரை செல்லாமல் அனுமதிச் சீட்டின் நிபந்தனைகளை மீறியதற்காக மோட்டார் வண்டிகள் சட்டம் 60-வது பிரிவின் கீழ் அனுமதிதாரர்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, இந்தப் பேருந்து உரிமையாளர்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டாலும், அந்தக் கிராமத்தின் மக்களுக்கு வேண்டியபரிகாரம் கிடைக்கவில்லை. ஆகவே உடனடியாக இந்தத் தனியார் பேருந்து அந்த ஊர் வரையில் சென்றுவரவோ அப்படியில்லையென்றல் பல்லவன் போக்குவரத்தின் மூலம் ஒரு பேருந்தை அந்த ஊர்வரையில் விடவோ உரிய நடவடிக்கையைத் துறை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, நடவடிக்கை எடுத்த பிறகும் அந்த வழித்தடத்தில் தனியார் பேருந்து செல்லவில்லையென்றல் மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவித்த யோசனை பரிசீலிக்கப்படும்.

*Madras—Meenambakkam bus service*

488*—Q. THIRU N. DENNIS : Will the Hon the Minister for Transport be pleased to state :—

(a) whether there are proposals under the examination of the Government to run a luxury bus service between Meenambakkam Air Port and Madras City ; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) (இ) : சென்னைக்கும் மீனம்பாக்கம் விமான நிலையத்திற்கும் இடையே ஒவ்வொன்றும் 34 இருக்கைகள் கொண்ட சீர்வசதிப் பேருந்துகள் இரண்டினைப் பல்லவன் போக்குவரத்துக் கழகம் இயக்குகிறது.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, இன்றைக்கு டாக்சி கட்டணம் உயர்ந்திருக்கிறது. இது போன்று முக்கிய இடங்களாகிய எக்மோர், சென்ட்ரல் ஸ்டேஷன்களுக்கும் லக்சுரி பஸ் சர்வீசை ஏற்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அரசு முன்வரும்.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவரவர்களே, நம்முடைய அரசு விட்டிருக்கும் இந்தப் பேருந்தில் மீனம்பாக்கம் விமான நிலையத்திலிருந்து வெளிநாட்டுப் பயணிகள் பயணம் செய்கிறார்கள். அதன்பொருட்டு அந்தப் பேருந்தில் குளுகுளு வசதி செய்யும் உத்தேசம் உண்டா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அத்தகைய உத்தேசம் இல்லை.

*Retirement age for Gurukkals.*

*489—*Q.* THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state :—

(a) whether there is any proposal under the consideration of the Government to fix retirement age for Gurukkals in temples under the Hindu Religious and Charitable Endowments Department ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) கோயில்களில் பணி செய்யும் பரம்பரை அல்லாத குருக்கள் 60 வயது பூர்த்தியானவுடன் ஓய்வு பெற வேண்டும் என்ற விதி ஏற்கனவே அமுலிலுள்ளது.

(இ) இந்த வினா எழ இடமில்லை.

திரு. என். கே. பழனிசாமி : சார், இந்தக் கோயில்களில் பணியாற்றும் அர்ச்சகர்களுக்கு, சின்ன கோயில்களில் குறைவாகவும், பெரிய கோயில்களில் அதிகமாகவும் வருமானம் வரக்கூடிய முறையிருக்கிறது. இதை மாற்றியமைத்து சர்க்கார் ஒரே சீராக அர்ச்சகர்களுக்குக் கிடைக்கும் முறையிலேயும், பின்னால் அவர்கள் வயதானதற்குப் பிறகு அவர்களுக்கு பென்ஷன் கொடுக்கும் முறையிலேயும் திட்டம் ஏற்படுத்த சர்க்கார் முன் வருமா ?





மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, மற்ற துறைகளைப்போல, ஒவ்வொரு கோயிலிலும் பணியாற்றும் ஊழியர்கள் அந்தந்தக் கோயில்களின் ஊழியர்களே தவிர ஒட்டு மொத்தமாக இந்தத் துறையின் ஊழியர்கள் அல்ல. அந்தந்தக் கோயில்களின் வருமானத்திற்கேற்றாற்போல ஒவ்வொரு கோயிலிலும் ஊழியர்களை அமர்த்திக் கொள்கிறார்கள். ஆகவே, கோயிலுக்கு வரும் வருமானத்திற்குத் தகுந்த அளவில்தான் அந்தக் கோயில்களிலிருந்து சம்பளம் கொடுக்க முடியும். ஆனால் கொடுக்கும் சம்பளம், ஓரளவுக்கு வருமானம் வரும் கோயில்களிலேயும் மிகக் குறைந்த சம்பளம் கொடுத்ததால், அரசாங்கத்திலேயே சம்பள விகிதத்தை நிர்ணயம் செய்து இரண்டாண்டுகளுக்கு முன்னால் அமல்படுத்தி, இன்னின்ன வருவாய் உள்ள கோயில்களில் இன்னின்ன ஊழியர்களுக்கு இந்தச் சம்பளத்தைக் கொடுத்தாக வேண்டுமென்ற திட்டத்தைச் செய்திருப்பதால், முறையாக அந்தக் காரியங்கள் இன்றைக்குத் தமிழ்நாட்டில் நடைபெற்று வருகின்றன.

திரு. பெ. சௌந்திரபாண்டியன் : தலைவரவர்களே, கோயில்களில் குருக்களாகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர்களுக்கு ஏதாவது சன்மானம் வழங்கப்படுகிறதா ? அப்படியில்லையென்றால் இனிமேலாவது கோயில் நிதியிலிருந்து ஒரு கணிசமான தொகையைக் கொடுக்க அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, அப்படிப்பட்ட சன்மானம் எதுவும் வழங்கப்படுவதில்லை.

புலவர் சி. பழனிச்சாமி : தலைவரவர்களே, தகுதியைப்பெற்ற எல்லா சாதியினரும் கோயில்களில் அர்ச்சகர்களாக வரவேண்டுமென்று நம்முடைய அரசு பரிந்துரை செய்து இந்திய அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்ற நம்முடைய பரிந்துரைக்கு மத்திய அரசு ஏதாவது பதில் அனுப்பியதா ? அப்படி அனுப்பாமலிருந்தால் மீண்டும் மத்திய அரசுக்கு நினைவுபடுத்த ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர்வர்களே, அரசியல் சட்டத்தைத் திருத்த விரைவிலே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்தச் சட்டமன்றத்திலேயே நாம் தீர்மானம் போட்டு மத்திய அரசுக்கு அனுப்பினோம். அதுபற்றி மேலும் சில தகவல்கள் வேண்டுமென்று இங்கே கேட்டதற்குப் பிறகு மீண்டும் அந்தத் தகவல்கள் அனுப்பப்பட்டுள்ளன. விரைவில் நடவடிக்கை எடுப்பார்கள் என்று நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. எம். சுரேந்திரன் : சார், அரசில் பணியாற்றும் அலுவலாளர்களைப்போல குருக்களின் ஓய்வுக்கால வயதை நிர்ணயிப்பது சரியானதுதானா என்று அறிய விரும்புகிறேன். ஏனென்றால் அமைச்சரவர்கள் பதில் சொல்லும்பொழுது அந்தந்தக் கோயில்களுக்கு உரியவர்கள் அந்தந்தக் குருக்கள் என்று சொன்னார்கள். ஆகவே, அந்தந்தக் கோயில்களின் தெய்வங்களுக்கு உரியவர்களாக அவர்களைக் கருதும்பொழுது, பென்ஷன் பெறும் வயதைப்போல் அவர்களுக்கும் வயதை நிர்ணயிப்பது சரியானது தானா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, குறைந்தபட்ச வயதும், அதிகபட்ச வயதும் நிர்ணயிக்கப்பட வேண்டுமென்று அந்தக் கோயில் ஊழியர்களே கேட்ட பிறகுதான் கோயில்துறையிலே பணியாற்று பவர்களுக்குக் குறைந்தபட்சமாக 25 வயதுக்கு மேலாக இருக்க வேண்டும், ஓய்வுபெறும் வயது 60 வயதை அடைந்தவுடன் ஓய்வு பெற வேண்டு மென்று, ஆலய ஊழியர்களிடமிருந்து கோரிக்கை வந்தபிறகுதான் முடிவு செய்யப்பட்டது. அங்கேயும் வேலையில்லாத் திண்டாட்டம், அவர்களுக் குள்ளேயே வேலைபெறும் பிரச்னைகள், இவ்வளவும் இருப்பதால்தான் வயது வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். இப்பர்: தலைவரவர்களே, சாதாரணமியூனி வேலைக்குக் கூட எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்ச் மூலம் வர வேண்டுமென்று சொல்லும் பொழுது புனிதமாகக் கருதப்படும் குருக்கள் வேலைக்கு, எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்ச் மூலமாக வரவழைத்து அதிலே தகுதி வாய்ந்தவர்களைத் தேர்ந்தெடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, அந்தந்தக் கோயில்களின் அறங்காவலர்கள், அல்லது நிர்வாக அதிகாரிகள் தகுதி யுள்ளவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு.........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வடிவேல், இங்கேயிருக்கின்ற செயலாளரிடம் வந்து பேசக்கூடாது, ஏதாவது பேச வேண்டுமென்றால் அறையிலே வந்து பேசுங்கள்.

THIRU K. M. SUBRAMANIAM: Except in big temples there is acute shortage of Gurukkals and all Gurukkals are preferring Govern- ment jobs and studying upto S.S.L.C. There is acute shortage and temples are finding it very difficult to get Gurukkals with 'Dheeksha'. Without 'Dheeksha' there is no use of being a Gurukkal. Will this Government relax the rule of retirement age of 60 because of acute shortage of Gurukkals in many, many temples in Tamil Nadu ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: எந்தக் கோயிலிலும் குருக்களின்றி பற்றாக்குறை என்பது கிடையாது. ஏராளமான பேர்கள் இருக்கிறார்கள். அவர்களே கேட்டுக் கொண்டதற்கிணங்கத்தான் ஓய்வு கால வயது 60 என்று ஆக்கப்பட்டதே தவிர, அது அரசாங்கமாகவே எடுத்த முடிவு அல்ல.

திரு. வை. பாலசுந்தரம்: அரிசனங்களை அர்ச்சகர்களாக நியமிக்க மத்திய சர்க்கார் அங்கீகாரம் இதுவரை கிடைக்கவில்லை என்று கூறப்படு கிறதே; அப்படி எந்த ஜாதியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்களை அர்ச்சகர்களாக நியமிக்க மத்திய சர்க்கார் அங்கீகாரம் கிடைத்த வுடன்தான் நம்முடைய சர்க்கார் பரிசீலனை செய்ய முடியுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: ஆமாம்.



மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மத்திய அரசின் அங்கீகாரம் என்பதல்ல. நாம் நிறைவேற்றிய சட்டம் உச்ச நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கே நம் சட்டத்தை நிறைவேற்ற முடியாத அளவுக்கு ஆக்கப்பட்டு விட்டது. ஆகவே, இந்தச் சட்டம் எழுந்து நடமாடக்கூடிய அளவுக்கு அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று கூறுகிறோம். அரசியல் சட்டத்தை நாடாளுமன்றத்தில் மத்திய அரசு திருத்தி நமக்கு அனுப்புமேயானால் அந்த அடிப்படையில் இந்த உரிமையை நாம் பெற இயலும்.

திரு. செ. அரங்கநாயகம்: அரிசனங்கள் அர்ச்சகர்களாக வரக்கூடிய வாய்ப்பு இப்போது இல்லையென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் இந்தத் துறையின் சார்பாக நகரங்களில் புதிய புதிய கோயில் களைக் கட்டி அரிசனங்களை அந்தக் கோயில்களிலே அர்ச்சகர்களாக நியமித்தால் என்ன தடை வரும் ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தற்போது அரிசனங்கள் அர்ச்சகர் களாக இல்லையென்று குறிப்பிட்டுச் சொல்ல முடியாது. பல கோயில் களிலே இருக்கிறார்கள். ஆனால் எல்லாக் கோயில்களிலும் வரமுடியாத அளவுக்கு விதிமுறைகளை வகுத்து குறிப்பிட்ட சாதியினர்தான் வரக்கூடிய நிலை இருப்பதால், எந்த விதமான சாதி வேறுபாடும் இல்லாமல் அர்ச்சகர் களாக வரக்கூடிய தகுதியை அவர்கள் பெற்றிருப்பார்களானால் அவர்கள் வரவேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம். அந்த அடிப்படையில் அரசியல் சட்டத்தினைத் திருத்தி மாற்ற வேண்டுமென்று நம்முடைய அரசின் சார்பில் கோரிக்கை விடுத்திருக்கிறோம்.

திரு. என். மருதாசலம்: அமைச்சர் அவர்கள் இன்னின்ன ஊழியர் களுக்கு இன்னின்ன சம்பளம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்று சொன் னார்கள். எந்தெந்த ஊழியர்களுக்கு என்னென்ன சம்பளம் ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: ஐம்பதாயிரத்துக்கு மேற்பட்ட ஊழியர்கள் இந்தத் துறையில் பணியாற்றுகிறார்கள். ஒவ்வொரு கோயிலிலும் பத்துப் பதினைந்து வகையான ஊழியர்கள் இருக்கிறார்கள். கோயில்களின் வருமானத்திற்குத் ஏழெட்டு பிரிவுகளாகப் பிரித்து கோயில்களில் ஏற்கனவே சம்பளத்தை தகுந்தாற்போல் அந்தந்தக் நிர்ணயித்திருக்கிறார்கள். ஆக, ஒவ்வொன்றையும் பிரித்துச் சொல்லுவது என்பது இயலாத காரியம்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: அரிசனங்கள் அர்ச்சகர்களாக வரத் தேவையான தகுதிகள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இன்றைக்கு அர்ச்சனை செய்கிற வர்கள் என்ன தகுதிகளைப் பெற்றிருக்கிறார்களோ, அந்தத் தகுதிகளைத்தான் பெறவேண்டும். அதிலே தேர்வு பெறவேண்டும்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: குறிப்பாகத் தேவையான தகுதிகள் யாவை என்று கேட்டதற்கு முதலமைச்சர் அவர்கள் ஒரு போக்காகப் பதில் சொல்லுகிறார்கள். குறிப்பிட்ட அந்தத் தகுதிகள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அர்ச்சகர்கள் "சுக்கலாம்பரதரம்" என்ற மந்திரங்களைச் சொல்ல வேண்டும். அவைகளிலே தேர்ச்சி பெறவேண்டும்.

திரு. எஸ். வடிவேல் : "சுக்கலாம்பரதரம்" என்ற மந்திரங்களைச் சொல்லத் தெரியாவிட்டாலும் உள்ளத்திலே நல்ல ஒளி உள்ளவர்கள், நல்ல உள்ளம் படைத்தவர்கள்தான் இதற்குத் தேவை. ஆகவே, அப்படி இருந்தால் இதிலிருந்து அவர்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : எல்லோரும் அர்ச்சகர்களாக ஆகலாம் என்ற அளவுக்கு அரசியல் சட்டம் வழி வகுத்துத் தருமானால் அதற்குப் பிறகு மந்திரங்கள் எதிலே இருப்பது என்று ஆராயலாம். இப்போதே அர்ச்சனை செய்யும்போது தமிழிலே ஆண்டவனை வழிபாடு செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். நடைமுறையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதுபோல் சில இடங்களில் அரிசனங்கள் அர்ச்சகர்களாக இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் உள்ளூர் தேவதைகள், காளிகோயில், மாரி கோயில் போன்ற அப்படிப்பட்ட கோயில்களில்தான் அர்ச்சகர்களாக இருக்கிறார்கள். நான் சொல்லுவது—மற்ற சாதிக்காரர்களேதான் அர்ச்சகர்களாக இருக்க வேண்டுமென்ற சம்பிரதாயத்தையும், சமுதாயக் கொடுமையையும் எப்படியாவது தகர்த்து யாராக இருந்தாலும் அர்ச்சனை செய்ய அனுமதிக்கப்பட வேண்டுமென்றுதான் இந்த அரசு கருதுகிறது.

### *Senthangudi Sankara Mutt*

490*—*Q.* Thiru N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state :

(*a*) whether it is a fact that idols were stolen recently from Senthangudi Sri Sankara Mutt on the northern banks of the Cauvery near Thulaghat; and

(*b*) whether the theft was reported to the Mayuram Town Police by the Trustees of the Mutt?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) ஆம்.

திரு. என். கே. பழனிசாமி : எத்தனை விக்கிரகங்கள் திருட்டுப் போயின ? மதிப்பு என்ன ? எவ்வாறு பிடிக்கப்பட்டிருக்கின்றன ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இரண்டு சிலைகள் திருட்டுப் போயின. அவற்றின் மதிப்பு சுமார் 50,000 ரூபாய் இருக்குமென்று கருதப்படுகிறது. இந்தக் கோயில் அறநிலையத் துறையின் ஆளுகையில் வராத கோயிலாகும். கோயிலின் பாரம்பரை அறங்காவலர்கள் இந்தத் தகவல் தெரிந்தவுடன் சம்பந்தப்பட்ட மாயவரம் நகரக் காவல் நிலையத்தில் புகார் ஒன்றைக் கொடுத்துள்ளார்கள். இதுவரை திருட்டுச் சம்பந்தமாக யாரையும் கண்டு பிடிக்கவில்லை.





திரு. கே.டி.கே. தங்கமணி : இது 50,000 ரூபாய் பெறுமானம் என்று சொல்கிறார்கள். ஏற்கெனவே, ஒரு கோடி ரூபாய் பெறுமானமுள்ள சிவபுரம் சிலை ஒன்று அமெரிக்காவில் இருக்கிறது என்று சொல்லுகிறார்களே, அது கிடைக்க அரசு என்ன ஏற்பாடு செய்திருக்கிறது ? இந்த 50,000 ரூபாய் பெறுமானமுள்ள சிலைகள் வெளிநாட்டுக்குப் போகாமல் இருக்கத் தடை செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : சிவபுரம் நடராஜர் சிலையை மீட்டுக்கொண்டு வர நம்முடைய அரசாங்கம் முயற்சிகளை எடுத்துக் கொண்டு மத்திய அரசாங்கத்தின் மூலமாக நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்த வழக்கு முடிந்து நிச்சயமாக அந்தச் சிலை தமிழ் நாட்டுக்கு வந்து சேரும் என்ற நம்பிக்கையோடு வாதாடிக் கொண்டிருக்கிறோம். இப்போது திருட்டுப் போன சிலையைப் பொறுத்த வரை காவல் துறையினரிடத்தில் புகார் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் ஆய்ந்து வருகிறார்கள். இதுவரை துப்புகள் கண்டு பிடிக்கப்படவில்லை.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : சிவபுரத்தில் இருந்து திருடிச் சென்ற சிலைபற்றி இப்போது லாஸ் ஏஞ்சல்சில் கோர்ட் நீதிபதி இது போன்ற வழக்கு இங்கிலாந்தில் நடப்பதாகவும்; அதன் முடிவை எதிர் பார்த்துக் கொண்டிருப்பதாகவும் கூறுகிறார்கள். அது சாதகமாக இல்லா விட்டால் அந்தச் சிலையைப் பெற நம்முடைய அரசு மத்திய அரசோடு என்ன முயற்சிகளை மேற்கொள்ளப்போகிறது ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இனிமேல் நடக்கப்போவதைப் பற்றி "சாதகமாக இல்லா விட்டால்" என்ற முறையில் கேள்வி கேட்பது சரியல்ல.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : சாதகமாக அமையும் என்று நாம் எதிர்பார்ப்போம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.

## (2) ஒத்திவைப்புத் தீர்மானம்.—

கொள்முதல் அதிகாரிகளின் அத்துமீறிய நடவடிக்கைகளை எதிர்த்து தஞ்சை மாவட்ட விவசாயிகளின் உண்ணாவிரதம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ஹாண்டே, ஜேம்ஸ் ஆகிய இருவரும்—

"the serious situation arising out of the five day fast undertaken by the farmers of Thanjavur District in protest of the coercive measures adopted by the procurement officials"

என்ற பொருள் பற்றி விவாதிக்க வேண்டுமென்று ஒத்திவைப்பு பிரேரணைகள் கொடுத்திருக்கிறார்கள். எப்படி இது பேரவையின் மற்ற நிகழ்ச்சிகளை ஒத்திவைத்து விவாதிப்பதற்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைச் சுருக்கமாக விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

Dr. H. V. HANDE: Sir, I have given notice to move that the business of the house stands adjourned to discuss a matter of urgent public importance, namely, the five day fast by the farmers, especially of Thanjavur district.

Sir, in this context I would like to bring to the kind attention of the Hon. Minister concerned that the matter is very serious one because the entire district of Thanjavur is very much upset at the manner in which indiscrim inate levy is being put by the Government there. In fact there are two things which I will bring to the attention of the House to prove that this is a matter of urgent public importance.

Firstly, the statements of the Hon. Minister and the Hon. Chief Minister while they were on tour in Thanjavur district amply prove that the matter is a very serious one. About four days ago the Hon. Chief Minister himself, while he was on a tour in Thanjavur district shared the concern that was expressed by the farmers of that area. He told the farmers. 'It is true that the matter is very serious. I will give proper attention to this and I will also instruct the officials to see that unneces sary levy or harsh levy is not put upon the farmers concerned'. That state-ment of the Hon. Chief Minister amply proves that the matter is serious.

Again, yesterday, if my information is correct, the Hon. Minister for Food also expressed a similar view that if such incidents are brought to his notice, he would take immediate steps to set it right. In this context, with the permission of the Chair, I will only read a couple of lines that had appeared in a very super paper, namely, "The Hindu" of today:

> "A levy on the producers is inescapable and is the only effective way of building up stocks by the official agencies. The question is how much of the produce of a farmer can in fairness be demanded as the levy quota. If it is true that the farmers are not allowed to retain even their reasonable requirements of their paddy for their personal consumption for payment of wages to their workers in kind and for seeds, then the levy will be tyrannical."

[முற்பகல் 10-00]

It is here that I would like to draw the attention of the Hon. Minister that the levy is almost tyrannical. A number of people have sent telegrams and letters. I have in my hand anumber of letters and telegrams.



One person, Thiru S. Srinivasan, who owns 2 acres and 69 cents of lands has written a letter—I do not want to read the contents of that letter-which is heart-breaking. He has actually written to the Collector of Thanjavur district explaining the position. Even the seeds which were kept for the next year's cultivation have been taken away. In many places they actually buy paddy in the open market and then pass it on to the levy officials. In several instances, levy officials have been very ruthless. They have actually threatened people; they have coerced people; and they have insulted people. In a number of instances, many persons have been humiliated. Small farmers owning two or two-and-a half acres have been humiliated. A very serious situation has arisen on account of the steps taken by the levy officials.

Sir, even in normal years with sufficient water for irrigation and good rainfall the Samba and Taladi yield in Thanjavur will be less than the yield in other delta districts like Tiruchirappalli and portions of Tirunelveli and South Arcot districts. The levy rates in Thanjavur this year are too high. The Mettur Reservoir water was released only in the third week of July 1974 as against June 12, the normal date. Because of the delay in the release of water the Kuruvai harvest itself was delayed and it is needless to speak of the second crop, Thaladi. More than 80 percent of the holdings are small, 2 to 5 acres.

Therefore, this is a serious matter and I would like to strike a note of warning that the small farmers in the Thanjavur ditrict will rise in revolt unless a solution is found to tackle this problem and proper steps are taken to redress their grievances. Also if the Government do not act immediately in the matter, they will not be able to control the situation. As this is a serious situation, I am trying to use the persuasive method of asking the House to discuss this matter, if it is possible, duringthe course of today itself.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் கொள் முதலில் தஞ்சை மாவட்டத்தில் மற்றப் பகுதிகளில் விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கிற சிரமங்கள்பற்றி எடுத்துக் கூறுவதற்காக ஒரு ஒத்திவைப்புப் பிரேரணையை கொண்டு வந்திருக்கிறார்கள்.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் நானும் அங்கு சென்றிருந்த போது விவசாயப் பெருங்குடி மக்கள் தங்களுடைய சிரமங்களை எல்லாம் எடுத்துக் கூறினார்கள். அவர்கள் ரொம்ப அமைதியாகக் கூறினார்கள். அரசாங்கம் கொடுத்திருக்கிற வாக்குறுதிகளை எல்லாம் அவர்கள் ரொம்ப மகிழ்ச்சியோடு கேட்டார்கள். அரசு எடுத்திருக்கிற முயற்சிகளுக்கு, அறிவித்திருக்கிற கொள்கைகளுக்கெல்லாம் அவர்கள்

நன்றி கூறினார்கள். ஒருவர் கூட நாங்கள் புரட்சி செய்யப்போகிறோம் என்று சொல்லவே இல்லை. டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னதற்குப் பிறகும் அவர்கள் புரட்சி செய்வார்கள் என்று நான் நம்பவில்லை. அவர்கள் அது குறித்து பயப்பட வேண்டாம். நிச்சயமாக இதில் கட்சி வேறுபாடு இன்றி எல்லோரும் சேர்ந்து, ஒத்துழைக்க வேண்டும்.

விவசாயிகளுக்குக் கொஞ்சம் சிரமங்கள் இருந்தாலும்; நாடு முழுவதும் நூறு ஆண்டுகளாகக் காணாத சிரமத்தைச் சந்திக்கிற காரணத்தால் அவர்கள் இதிலுள்ள சிரமங்களைப் பொருட்படுத்தாது நம்முடைய கொள் முதலுக்கு ஒத்துழைப்புத் தந்தால்தான் நாட்டு மக்களுக்கு; வாங்கிச் சாப்பிடுகிறவர்களுக்கு, நாம் அரிசி கொடுக்க முடியும். இந்த அடிப்படையில்தான் எல்லாக் கட்சிகளின ஒத்துழைப்பையும் அரசு அடிக்கடி கோரி வருகிறது.

தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்து எழுந்திருக்கிற பிரச்சனை எல்லாம் மாவட்ட ஆட்சித் தலைவர் வேளாண்மைத் துறை அலுவலர்களுடைய குறிப்புக்களைக் கேட்டு ஒரு எக்கருக்கு எவ்வளவு லெவி தர வேண்டுமென்று நிர்ணயித்தோம். மழை குறைவான காரணத்தால் விளையாத பகுதிகள் அதிகமாகியும் விளைந்த பகுதிகளில் மகசூல் குறைவாக இருக்கிற ஒரு நிலை தான் இன்று நாட்டில் உள்ள நிலை. நம் அரசைப் பொறுத்த வரையில் அரசு இவ்வளவுதான் லெவி வாங்க வேண்டுமென்று ஆணையிட்டிருந்தாலும் அதற்குப் பின்னால்: மகசூல் குறைந்திருக்கிற காரணத்தால் ஆங்காங்குள்ள அதிகாரிகள் விவசாயிகளிடம் கலந்து பேசி எந்தெந்த இடங்களில் விளையவில்லையோ அல்லது மகசூல் குறைவாக இருக்கிறதோ அவற்றை எல்லாம் பரிசீலித்துக் கொள் முதல் செய்ய வேண்டுமென்று நாம் ஆலோசனை கூறியிருக்கிறோம்.

நேற்று கூட அந்த விவசாயிகள் முன்னால் அதிகாரிகள் விளக்கம் தந்தார்கள். சில ஊர்களில் விவசாயிகள் எல்லாம் சேர்ந்து இவ்வளவு தான் எங்களால் கொடுக்கமுடியும்; அதிகமாக மகசூல் காணவில்லை என்று சொன்ன போது அதையும் அவர்களிடம் எடுத்துக் கூறினோம். அதிகாரிகள் அங்கு ஒத்துழைப்புத் தருகிறார்கள். சில இடங்களில் தவறுகள் ஏற்படுமானால் மேல் அதிகாரிகள், மாவட்ட ஆட்சித் தலைவர் தலையிட்டு தவறு செய்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கிற வாய்ப்பும் இருக்கிறது.

இதை ரொம்ப மிகைப்படுத்திக் கொள்முதலே கொடுக்க வேண்டாம் என்ற உணர்வை ஊட்டி விட்டால் கஷ்டம். இன்றுள்ள பிரச்சனை, கொள்முதலுக்குக் கொடுக்கிற விலைக்கும் பற்றாக்குறை மாவட்டங்களில் விற்கிற அதிகமான விலைக்கும் சம்பந்தமே இல்லாமல் இருக்கிற காரணத்தால் விவசாயிகளுக்கு ஒரு ஆதங்கம் ஏற்படுகிறது. ஒரு எண்ணம் ஏற்படுகிறது. நாம் ஏன் குறைத்துக் கொடுக்க வேண்டும் என்கிற ஒரு எண்ணம். அதற்கும் இடம் கொடுத்துவிடக் கூடாது.

தஞ்சை மாவட்டத்தில் நாம் எதிர்பார்த்த அளவில் கொள்முதல் வரவில்லை என்று சொன்னோம். இவ்வளவு சிரமங்கள் இருந்தும்



தஞ்சை மாவட்டத்திலிருந்து நெல் வெளியே போகிறதே. அதற்கு யாராவது பொறுப்பாக இருப்பார்களே என்றும் விளக்கிச் சொன்னோம்.

வெளியே கொடுக்க மாட்டேன் என்று சொல்கிறவர்கள் சிலயிடங்களில் இருக்கிறார்கள்; அவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் அல்லவா என்றும் அவர்களிடம் எடுத்துச் சொன்னோம். அவர்கள் அரசோடு ஒத்துழைக்க உறுதி தந்தார்கள். தஞ்சை மாவட்ட விவசாயிகளைப் பொறுத்த வரையில்—சிரமங்கள் இருக்கும் இடங்களில் நடவடிக்கைகள் எடுப்பார்கள். அவர்கள் அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு தருவார்கள். உண்ணாவிரதத்தைத் திரும்பப் பெறுவதாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒத்திவைப்புப் பிரேரணையை கொடுத்திருந்தாலும் அவர்களும் அவர்களுக்குத் தகுந்த ஆலோசனைகள் கூறுவது நாட்டுக்கு நல்லது எனக் கூறி இதில் விவாதிப்பதற்கு வேறு பொருள் இல்லை. ஏற்கெனவே விவாதித்திருக்கிறோம். எனவே அவையை ஒத்தி வைத்து இது குறித்து விவாதிக்க வேண்டிய தேவை இல்லை என்று கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு பேரவையை ஒத்திவைக்க வேண்டிய தேவை இல்லை என்று நான் கருதுவதால் இதற்கு அனுமதியை மறுக்கிறேன்.

**Dr. H. V. HANDE :** Sir, will it be possible to have a sort of Cell to go into complaints of harassment of ryots wherever they are given so that they can be disposed of then and there and the farmers also can be satisfied?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாவட்ட ஆட்சித் தலைவரிடம் அப்படிச் செய்ய வேண்டுமென்று நாம் சொல்லியிருக்கிறோம். மதுரை மாவட்டத்தில் ஒரு தவறு நடந்திருப்பதாக ஒரு பத்திரிகையில் பெரிய அளவிற்குப் போட்டவுடன் மாவட்ட ஆட்சித் தலைவர் அங்கு அது குறித்து விசாரித்து எனக்குத் தகவல் தந்தார்கள். எதுவும் நடக்கவில்லை. என்னிடம் அந்தக் கிராமத்திலுள்ளவர்கள் கூறி அவர்களோடு பேசி சமாதானம் செய்து அந்தக் கிராமத்திலுள்ளவர்கள் எவ்வளவு நெல் கொடுக்க வேண்டும் என்று ஒரு முடிவு கூட எடுக்கப்பட்டது. அவர்கள். திருப்தியாகச் சொன்னார்கள் என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆட்சித் தலைவர்கள் இப்படிப்பட்ட புகார்கள் வரும் போது ஆங்காங்குத் தலையிட்டு விசாரிக்கிறார்கள்.

### 3. நடைமுறைக் கேள்வி.

பேரவைத் துணைத் தலைவரைப் பதவி நீக்கக் கோரி ஓர் உறுப்பினர் கொடுத்த தீர்மானம் அறிக்கை கொடுத்த சில மணி நேரத்திற்குள்ளேயே திரும்பப் பெறப்பட்டது குறித்து.

(டாக்டர். எச். வி. ஹாண்டே.) 1975 மார்ச் 29]

DR. H. V. HANDE : Sir, with the permission of the Chair, I would like to raise a point of order. Whenever we give notice of No Confidence Motion against the Hon. Speaker or Deputy Speaker the normal practice is to take it up after 14 days Day before yesterday when you were not in the Chair, it was announced that a notice of No Confidence Motion was given against the Deputy Speaker. Then at about 10'clock on thatday itselfthe Chairman announced that the motion was withdrawn. Sir, whenever such a motion is given notice of, it is given in all earnestness and seriosuness and therefore there is no question of withdrawing it. Now I would like to know from the Hon. Speaker whether it is is posible for him to give protection to members whenver they bring NoConfidence Mottion against the Hon. Speaker or Deputy Speaker. My information is that the member who gave nctice of the No Confidence Motion against Deputy Speaker had withdrawn it almost on account of compuision and he was asked to withdraw it, I want to know whether the Rules of the Assembly permit it......

THIRU K. T. K. TANGAMANI : Sir, Rule 52 says—

> "A member wishing to give notive of a resolution........for the removal of the Speaker or Deputy Speaker shall do so in writing to the Secretary ......
>
> Provided that no resolution for the purpose shall be moved unless at least fourteen days' notice has been given........'

That is what the rule says. Now by convent,on/the Chair was/pleased to inform us that such a notice has been received. Where is the urgency for saying that the notice has been withdrawn ? The time -for that is when it matures after 14 days and when it comes up before the House. Then it can be said that the motion has been withdrawn. That will be the procedure. We are governed by certain procedures. In the morning, we are told that such a notice has been given. Two hours later the House is informed that the resolution has been withdrawn.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைத் தலைவருக்கு

THIRU K. T. K. TANGAMANI : I do not want to use a stronger word. It is making a mockery of the procedure. It will mature after 14 days notice, i.e., on 11th or 12th April. On 12th April when it comes up before the House, the Chaur can say that the motion has been withdrawn. That will be the procedure. But what is done here is strange. First we are told that notice has been given. Two hours later we are told that it has been withdrawn. What I say is, the House should not be treated in this lighter vein. That is what I want to say.



1975 மார்ச் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தங்கமணி அவர்கள் சொன்ஞர்கள். பேரவைத் தலைவருக்குத் தகவல் வந்தது. அது போல் தீர்மானம் கொடுக்கப்பட்டது. அதை 14 நாள் கழித்தே கூட உறுப்பினர்களுக்குச் சொல்லியிருக்கலாம். ஆனல், எவ்வளவு விரைவில் உறுப்பினர்களுக்கு அதைச் சொல்ல முடியுமோ அவ்வளவு விரைவில் சொல்லி விடுவது நல்லது என்று அந்த முறையில் சொல்லப்பட்டது. அடுத்த நிமிடமே அதை நான் திரும்பப் பெற்றுக் கொள்கிறேன் என்று பேரவை தலைவருககு நோட்டீஸ் வந்து விட்டால், அதை உடனுக்குடன் அவைக்குச் சொல்லி விடுவதுதான் நல்லது, காத்திருக்கத் தேவையில்லை என்ற அடிப்படையில் சொல்லப்பட்டது; இதிலே எந்தவிதமாண் முறைகேடும் இல்லை.

டாக்டர் ஹாண்டே அவர்கள் எங்களுக்குப் பாதுகாப்புத் தர வேண்டுமென்று சொன்ஞர்கள். அது பேரவைத் தலைவரின் வேலை இல்லை.

## 4. அரசினர் சட்ட முனவடிவு

### தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண 11/75).

மாண்புமிகு டாக்டர் மு. கருணநிதி: தலைவரவர்களே, தமிழ் நாடு, 1975-ம ஆண்டு நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/75) ஆய்வுக்கு எடுததுக்கொள்ளப்பட வேண்டுமென்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

பிரிவு 2, பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு, அட்டவணை ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு டாக்டர் மு. கருணநிதி : இச்சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

## 5. 1975-76-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு –தொடர்ச்சி.

### (அ) நிதிக் கோரிக்கை எண் 24—தொழில்கள்

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

" நிதிக் கோரிக்கை எண் 24—தொழில்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 3,94,46,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

THIRU N. K. PALANISAMY: Sir, to discuss about the stagnation of production in the industry, I move :—

"That the allotment of Rs. 3,94,46,000 under Demand No. 24—Industries be reduced by Rs. 100".

THIRU C. ARANGANAYAKAM: Sir, to discuss about the need to find out an alternative source of power during summer for the textile mills and other industries in Coimbatore to avoid lay off, I move :—

"That the allotment of Rs. 3,94,46,000 under Demand No. 24—Industries be reduced by Rs. 100".

THIRU N. DENNIS: Sir, to discuss about the necessity to start a Rubber Factory in Kanyakumari district, I move :—

"That the allotment of Rs. 3,94,46,000 under Demand No. 24—Industries be reduced by Rs. 100".

THIRU B. VENKATASWAMY: Sir, to discuss about the need to start the industrial complex early at Hosur, I move :— ..

"That the allotment of Rs. 3,94,46,000 under Demand No. 24—Industries be reduced by Rs. 100".

THIRU M. A. LATHEEF: Sir, to discuss about the need to start a Government owned major industry in Vaniyambadi constituency, I move :—

"That the allotment of Rs. 3,94,46,000 under Demand No. 24—Industries be reduced by Rs. 100".

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எம். சுரேந்திரன், உங்கள் தரப்பில் ஒன்றும் கொடுக்கப்படவில்லையா ?

திரு. எம். சுரேந்திரன்: தலைவரவர்களே, சிறு தொழில்கள் துரிதமாக துவங்குவதற்குத்தடையாக இருக்கும் சட்டம், நடைமுறை விதிகளை தளர்த்துவது குறித்து விவாதிக்க—



" நிதிக் கோரிக்கை எண் 24— தொழில்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,94,46,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

(ஆ) நிதிக் கோரிக்கை எண் 50—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

" நிதிக் கோரிக்கை எண் 50—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 3,64,73,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும் ".

THIRU N. DENNIS: Sir, to discuss policy, I move :—

"That the allotment of Rs. 3,64,73,000 under Demand No. 50—Capital Outlay on Industrial Development be reduced by Rs. 100".

THIRU M. A. LATHEEF: Sir, to discuss policy, I move :—

"That the allotment of Rs. 3,64,73,000 under Demand No. 50—Capital Outlay on Industrial Development be reduced by Rs. 100".

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மான்யக்கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும விவாதத்துக்கு அவை முன் வைக்கப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, தொழில் துறை, தொழில் மூலதனச் செலவு பற்றிய மானியக் கோரிக்கைகள் மன்றத்தின் முன்னாலே, அவை உறுப்பினர்களின் கருத்துக்கு, விவாதத்திற்கு வைக்கப்பட்டு இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தொழில் துறை சம்பந்தமாகவும், தொழில் வளர்ச்சிப் பணிகள் குறித்தும், தொழில் துறையில் இருக்கிற பல்வேறு வாரியங்கள் வேலை குறித்தும் குறிப்புகள் அழகாக அச்சிட்டுக் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுக்குக் கிடைக்கும் குறிப்புகள் காலதாமதமாக கிடைப்பதால் அதுபற்றி ஆராய்ந்து கருத்துக்களைச் சொல்வதிலே கஷ்டம் இருப்பதாகச் சொன்னதை அடிப்படையாகக் கொண்டு முன்கூட்டியே அந்தக் குறிப்புகள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. அந்தக் குறிப்புகளை மாண்புமிகு உறுப்பினர்கள் ஆழ்ந்து படித்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். அந்த அடிப்படையில் அவர்கள் கருத்துக்களைச் சொல்ல வேண்டுமென்று . கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துக்கள் தொழில் துறை முன்னேறுவதற்கு உதவியாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். இங்கே கேட்கப்பட்டு இருக்கிற மானியக்கோரிக்கைகள்கூட கிட்டத்தட்ட ரூ. 7 கோடி அளவுக்குத்தான் கேட்கப்பட்டு இருக்கிறது. 500 கோடி ரூபாய்

பட்ஜெட்டிலே, இது குறைந்த தொகை. இந்தக் குறைந்த தொகையில் காரியங்கள் செய்கிறபோது, நாட்டில் நல்ல முன்னேற்றம் ஏற்படவேண்டுமென்ற அடிப்படையில் இந்த மானியக் கோரிக்கை கேட்கப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொன்ன பிறகு, விளக்கங்கள் தேவைப்பட்டால், அந்த விளக்கங்களைச் சொல்லி, மானியங்களை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* <u>திரு. செ. அரங்கநாயகம்</u>: தலைவரவர்களே, அவை முன்னாலே இருக்கக்கூடிய இந்த மானியக் கோரிக்கைகள் மீது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில கருத்துக்களை வைக்க நான் விரும்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக இருந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் திராவிடநாடு கொள்கையைக் கைவிடுவதற்குப் பல்வேறு விதமான காரணங்களை நண்பர்கள் சொன்னாலும், அதற்கு முக்கிய காரணத்தை நான் சொல்ல விரும்புகிறேன். அகில இந்திய அடிப்படையில் இந்த நாட்டில் இருக்கிற டாட்டா, பிர்லா, டால்மியா திராவிடத்தைச் சுரண்டுகிறார்கள் என்ற அடிப்படையில் திராவிடநாடு பிரிவினையை அண்ணா அவர்கள் வலியுறுத்திப் பேசி வந்தார்கள். ஆனால், 1954–55-ம் ஆண்டில் ஆவடியில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் சோஷியலிச மாதிரித் திட்டத்தையும், அதைத்தொடர்ந்து சோஷியலிசக் கொள்கையை அமல் நடத்தும் பணி மேற்கொள்ளப்பட்டதாலும் பிரிவினைக்கான அடிப்படைக் காரணம் அடிபட்டுப் போனதும் பேரறிஞர் அண்ணா அவர்கள் பிரிவினை கொள்கையைக் கைவிட்டுவிட்டார்கள் என்று சொல்ல விரும்புகிறேன்.

ஆகவே, அகில இந்திய அடிப்படையில் இன்றைய தினம் தமிழ் நாடு எந்த விதத்தில் இருக்கிறது என்றால்- தமிழ் நாட்டைப் பொறுத்த மட்டில், தொழில் வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றை அகில இந்திய அடிப்படையில் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் இந்தத் தொழில் துறை நிறுவனங்கள் இருக்க வேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன். அந்த அடிப்படையில் பார்க்கிறபோது, நாம் போதிய ஆக்கத்தையும், ஊக்கத்தையும் தொழில் அதிபர்களுக்குத் தருகிறோமா என்றால் கிடையாது. பல தனியார் துறையைச் சேர்ந்தவர்கள், பல தொழில் அதிபர்கள், தொழில் துவங்க விண்ணப்பங்களைப் போட்டால் 10–12 அலுவலகங்களுக்குச் சென்று அவர்களுடைய அனுமதியை வாங்க வேண்டியிருக்கிறது. அதற்கு 1 வருஷம் $1\frac{1}{2}$ வருஷம் ஆகிவிடுகிறது. அவர்கள் கையில் இருந்த முதலைப் போட்டு, 1 வருஷம், $1\frac{1}{4}$ வருஷம் பல்வேறு காரியங்களை ஏற்றுச் செய்ய வேண்டியிருப்பதால், தொழில் வளர்ச்சி பாதகம் அடைகிறது, குந்தகம் அடைகிறது.

இன்றைக்கும் நம்முடைய அமைச்சர் அவர்கள் கொடுத்து இருக்கக் கூடிய பல்வேறு அறிக்கைகளில் குறிப்பிட்டு இருக்கிறார்கள். இப்போது இந்தத் தொழிற்சாலைகள் ஆரம்பிப்பதற்கான அனுமதியை ஒரே அதிகாரி





யிடத்தில் விண்ணப்பித்து பெற்றுக்கொள்ளலாம். அந்த அதிகாரியே பல்வேறு அலுவலகங்களுக்கு அனுப்பி அனுமதி பெற்றுத் தருவார் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். அதற்காக என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இருக்கின்ற அதிகாரிகளை வைத்துக் கொண்டு அந்தக் காரியங்களைச் சரிவர செய்ய முடியுமா என்றால் முடியாது. ஆகவே, போதுமான அளவுக்கு அதிக அதிகாரிகளை நியமிக்க வேண்டுமென்றும், அதே நேரத்தில் அதிகாரிகள் சரியாகப்பணியாற்றுகிறார்களா என்பதை மேற்பார்வையிடும் வகையில், மாவட்டத்திற்கு ஒரு கழகம் வைத்து, அதில் தொழில் அதிபர்கள், பல்வேறு பொதுநல ஊழியர்கள் ஆகியோரைக் கொண்டு ஒரு போர்டு அல்லது கமிட்டி அமைத்து அந்தப் பணியை மேற்பார்வை செய்வதற்கு வாய்ப்பாக ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதைச் செய்தால், அந்த அதிகாரிகள் நல்ல முறையில் செயல்படுகிறார்களா என்பதைக் கண்காணிக்கும் வாய்ப்பு இருக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய அரசு கூட்டுத் துறைக்கு நல்ல ஆதரவு தர இருப்பதாகவும், அந்தத் துறையில் பல்வேறு திட்டங்கள், தொழிற்சாலைகள் ஆரம்பிக்க இருப்பதாகவும் தொழில் அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். கூட்டுத் துறையைப் பற்றிச் சொல்கிற நேரத்தில், கூட்டுத் துறை என்பது தனியார் துறையிலிருந்து எல்லா வகையிலும் வேறுபட்டு இருக்கிறது. தனியார் துறையில் இருப்பவர்கள் அனுமதியைப் பெறுவதற்கு பல்வேறு சிரமங்களைப் பார்க்கிற நேரத்தில், கூட்டுத் துறையைச் சார்ந்தவர்கள் சீக்கிரமே பல்வேறு காரியங்களைச் செய்ய எல்லாவிதமான நல்வாய்ப்பும் பெற்று, எல்லா விதமான ஆதரவையும் அடைந்து, அந்தத் தொழிலைச் சிறந்த முறையில் நடத்துகிறார்கள்.

அப்படிப் பார்க்கிறபோது யார் எந்த அடிப்படையில் இந்தக் கூட்டுத் துறையில் தொழில்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள் என்று பார்த்தால் தமிழ் நாட்டைப் பொறுத்தமட்டில் அது சந்தேகத்திற்குரிய, ஊழலுக்கு இடமாகத் தெரிவதாக இருக்கிறது. பல்வேறு மாநிலங்களில் கூட்டுத் துறையில் தொழில்கள் எவ்வாறு ஆரம்பிக்கிறார்கள் என்று பார்த்தால் ஆரம்பத்தில் பத்திரிகையில் விளம்பரம் செய்கிறார்கள். அதாவது சர்க்கார் இந்தத் தொழிலை கூட்டுத் துறையில் ஆரம்பிக்க இருக்கிறார்கள். தொழில் அதிபர்கள், பங்குகொள்ள விரும்புபவர்களின் உங்கள் தகுதி என்ன, விருப்பங்கள் என்ன, திட்டங்கள் என்ன என்பதைக் கேட்டு அவர்களிடமிருந்து விண்ணப்பங்களை வரவழைத்து அவைகளை எல்லாம் பரிசீலித்து அதில் தகுதி உள்ளவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களோடு சேர்ந்து கூட்டுத் துறையில் தொழில் ஆரம்பிக்கிறார்கள்.

அப்படிப்பட்ட ஒரு நிலைமையை, ஒரு போக்கை தமிழ் நாடு அரசு பின்பற்றவில்லையென்று நான் குற்றம் சுமத்துகிற நேரத்தில் இந்தத் துறை கூட்டுத்துறை என்று சொல்வதற்குப் பதிலாக கூட்டுக் கொள்ளை என்ற அடிப்படையில் பல்வேறு ஊழல்களுக்கு இந்த முறை அடிப்

படையாக இருக்கிறது. இதைப் போக்குவதற்கு தொழில் அமைச்சர் அவர்கள் ஒரு மாற்றத்தை, நல்ல காரியத்தைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இதற்கு உதாரணமாக எடுத்துச் சொல்ல வேண்டுமென்றால் தூத்துக்குடியில் ஆரம்பிக்கப்பட்ட 'ஸ்பிக்' தொழிற்சாலையைத்தான் சொல்ல வேண்டும். அங்கே ரூ. 84 கோடியளவில் தொழிற்சாலையை ஆரம்பித்திருக்கிறார்கள். அடுத்து கடலூரில் ரூ. 120 கோடி அளவில் ஆரம்பிக்க உரிமம் வழங்கியிருக்கிறார்கள். ஏறத்தாழ ரூ. 220 கோடி அளவில் ஒரு மிகப்பெரிய தொழில் சாம்ராஜ்யத்தை ஒரு தனி மனிதன் நடத்தக்கூடிய ஒரு நிலைமையை இன்றைய தினம் இந்த அரசு செய்திருக்கிறது. அவர்கள் எந்தத் தகுதியின் அடிப்படையில் அவைகளை ஆரம்பிக்கத் தயாராக வந்தார்கள் ? அதிலும் குறிப்பாக திரு. சிதம்பரம் செட்டியார் என்ற நபர் எந்த அடிப்படையில் தலைசிறந்து நிற்கிறார் என்ற விளக்கத்தை தொழில் அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதுபோன்ற குற்றச்சாட்டுகளுக்கு இடமில்லாமல் கூட்டுத் துறையைப் பொறுத்த மட்டில் ஒரு தொழில் ஆரம்பிப்பதாக உரிய முறையில் பத்திரிகைகளில் விளம்பரங்கள்செய்து தொழிலதிபர்களிடமிருந்து விண்ணப்பங்களைப் பெற்று அவைகளைப் பரிசீலித்து, தகுதியின் அடிப்படையில் யோக்யதையின் அடிப்படையில் தொழிலதிபர்களுக்கு ஆதரவு தர வேண்டுமென்ற என்னுடைய கருத்தினைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, சர்க்கார் தேசியமயமாக்குகிற கொள்கையைப் பின்பற்றுகிறது. அதை நான் வரவேற்கிறேன். ஆனால், இதில் உள்ள மிகப் பெரிய குறைபாடு, ஏதாவது ஒரு துறையைச் சேர்ந்தவர் சர்க்காருக்கு ஒத்துழைப்பு தர மறுத்தால், ஆதரவு தர மறுத்தால் அல்லது சர்க்காருக்கு பணிய மறுத்தால் உடனே முதலமைச்சரோ அல்லது சம்பந்தப்பட்ட அமைச்சரோ அந்தத் தொழிலை சர்க்கார் தேசியமயமாக்கிவிடப் போகிறது என்று அறிவிக்கின்ற சுபாவத்தை நான் பார்த்து வருகிறேன்,

தேசியமயமாக்கும் கொள்கை என்றால் எந்தத் தொழிலையும் எந்த நேரத்திலும் தேசியமயமாக்கிவிடுவோம் என்று சொல்லி விட முடியாது. அதற்கென சில வரையறைகள் சட்ட திட்டங்கள் இருக்கின்றன. அந்த அடிப்படையில் பார்த்தால் அரசு ஒரு முறையை ஏற்படுத்திக் கொள்ளவில்லையென்றால், இப்படித்தான் இந்த அரசு நடக்கும் என்ற நிலைமையை ஏற்படுத்திவிட்டால் தொழில் அதிபர்கள், முதலீடு செய்பவர்களுக்கு ஒரு அவநம்பிக்கை ஏற்படும். அதன் காரணமாக தமிழகத்தைப் பொறுத்த வரையில் முதலீடு பதுங்கக்கூடிய நிலைமையும் இந்த மாநிலத்தை விட்டு வேறு மாநிலங்களுக்குப் போகக்கூடிய நிலைமையும் ஏற்படும்.

ஆகவே, அரசைப் பொறுத்த மட்டில் இனிமேற்கொண்டு ஒரு தொழில் தேசியமயமாக்கப்பட வேண்டுமென்றால் இந்த அடிப்படையில் தான் ஆக்குவோம் என்ற ஒரு திட்டவட்டமான கொள்கையை பொதுவான முறையில் தெரிவிக்க வேண்டும். உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமானால் தேசியமயமாக்குவதற்கு முதலில உரத் தொழிற்சாலையைத்தான் சொல்ல முடியும். ஸ்பிக் தொழிற்சாலையின் உரத்தை விற்க



அதற்காக ஏஜெண்டுகள் தேடவேண்டியதில்லை. மார்க்கெட்டிங் பாயிண்ட்ஸ் ஏற்படுத்த வேண்டியதில்லை. விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. பாங்குகள் இருக்கின்றன. உற்பத்தி செய்து நீங்கள் லாரியில் ஏற்றி கூட்டுறவு சங்கத்திற்கு அனுப்பி வியாபாரம் செய்யக்கூடிய நிலைமைகள் இருக்கின்றன. லாபமும் உண்டு. அதற்கான அடிப்படைத் தொழில்களும் இருக்கின்றன. மிகப் பெரிய மூலதனம் போட்டு நடத்தக்கூடிய வாய்ப்புகளும் இருக்கின்றன. இப்படித்தான் தொழில்களை தேசியமயமாக்க வேண்டுமேயன்றி நாங்கள் சினிமாக்களை, ஸ்டுடியோக்களை தேசியமயமாக்குவோம் என்று சொன்னால் ஏதோ சில நேரங்களில் அரசியலில் ஏற்படக்கூடிய சங்கடங்களைத் தீர்த்துக் கொள்வதற்காக அந்த அடிப்படையில் பேசக்கூடிய பேச்சாக கருதலாமேயொழிய தமிழ் நாட்டின் மொத்த பொருளாதார வளர்ச்சியை, தொழில் வளர்ச்சியை அடிப்படையாக வைத்து தீர்க்கதரிசனத்தோடு பேசுகிற பேச்சாக ஏற்றுக் கொள்ள முடியாது. இந்த அடிப்படையில் தேசியமயமாக்கப்படும் என்று, பொதுவான கொள்கையை உருவாக்கி நாட்டு மக்களுக்கு அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக கோ ஆப்டெக்ஸ். பற்றி அமைச்சர் அவர்கள் அறிக்கையில் குறிப்பிட்டு இருக்கிறார்கள். கோ ஆப்டெக்ஸ் சங்கத்தின் மூலம் மக்களுக்கு விருப்பத்தைத் தரக்கூடிய சரக்கை உற்பத்தி செய்து விற்கக்கூடிய நிலைமையை அமைச்சர் அவர்கள் ஏற்படுத்த வேண்டும். அது மட்டுமல்ல. கூட்டுத் துறையில் கண்காட்சி விழாக்களை நடத்துகிறார்கள். தயவுசெய்து அவ்விழாக்களை ஒரு கட்சி சார்புள்ள விழாக்களாக மாற்றாமல் எல்லாத் தரப்பினரையும் கூப்பிட்டு பங்கு கொண்டு பொதுஜன அபிப்பிராயத்தை இந்தத் தொழிலுக்கு ஆதரவாக இருக்கின்ற முறையில் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். அப்படிச் செய்தால் கூட்டுறவுத் தொழிலில் சம்பந்தப்பட்டவர்கள், நெசவாளர்களுக்கு ஒரு நல்ல நிலைமையை உருவாக்கித் தர முடியும்.

உதாரணமாக, இன்றைக்கு நெசவாளர்களுக்குச் செய்யக்கூடிய பல் வேறு சலுகைகளும் சகாயங்களும் அது ஒரு நிரந்தரமான பரிகாரமாக இல்லாமல் ஒரு தாற்காலிகமான பரிகாரமாக இருந்து வருகிறது. 10 ஆண்டுகளில் அல்லது 20 ஆண்டுகளில் தீர்க்க முடியுமா என்றால் அரசாங்கம் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளைப் பார்த்தால் நிச்சயமாக முடியாது என்றுதான் சொல்ல முடியும். இங்கிலாந்தில் இப்படிப்பட்ட ஒரு நிலைமை ஏற்படவில்லையென்றால் அதற்குக் காரணம் நெசவுத் தொழிலில் சம்பந்தப்பட்டவர்கள் பவர் லூமிற்கும் அதில் சம்பந்தப்பட்டவர்கள் ஆலைத் தொழிலுக்கும் வந்துவிட்ட படியால் இந்தப் பிரச்னை ஏற்படவில்லை. ஆனால், தமிழ் நாட்டில் நெசவாளர்கள் அப்படியே நின்றுவிட்ட காரணத்தால் இன்றைக்கு ஒரு பிரச்னையாக உருவெடுத்திருக்கிறது.

நெசவுத் துறையில் உள்ளவர்களை அதிலிருந்து வெளியே கொண்டு வந்து நவீனத் தொழில்களில் ஈடுபடுத்தக்கூடிய நிலைமையை உருவாக்கிக் காட்ட வேண்டும். கைத்தறி நெசவுத் தொழில் ஆலைத் தொழிலை எதிர்த்து போட்டிபோட முடியாது என்ற கருத்தின் அடிப்படையில் இனிமேல் துவங்கயிருக்கும் ஆலைகளை தயவுசெய்து கைத்தறி நெசவாளர்கள்

அதிகமாக உள்ள பகுதியில் ஆரம்பிக்க இருப்பவர்களுக்கு முன்னுரிமை தருகிற வகையில் அவர்களுக்கு வேலைவாய்ப்புக்களை உருவாக்கினால் நெசவாளர் பிரச்சினைக்கு நிரந்தரமான ஒரு பரிகாரம் காண முடியும்.

டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் அறிக்கையைப் பார்க்கும்போது டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் நடத்தி வருகிற ஆலைகளை மத்திய சர்க்கார் தேசிய மயமாக்கிவிட்டது என்ற குறிப்பைப் பார்க்கிறோம். அப்படிப் பார்த்தால் நாளைக்கு மத்திய சர்க்கார் பார்வையில் கார்ப்பரேஷனுக்கு வந்தால் இவ்வளவு மில்கள் நடத்தலாம், இல்லையென்றால் நடத்த முடியாது என்ற நிலைமை இருக்கிறது. அவர்கள் தந்தால் நடத்தலாம், அவர்கள் ஆதரவு இல்லையென்றால் நிச்சயமாக கார்ப்பரேஷனை மூடிவிடவேண்டும் என்ற நிலை இருக்கிறது.

புதிய மில்கள் ஆரம்பிப்பது என்றால் புதிய நெசவு ஆலைகளை ஆரம்பிக்க பயன்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த நெசவாளர்களுக்கு பஞ்சுகள் வாங்கியிருக்கிறார்கள். அதில் தமிழ் நாட்டிலிருந்து ஏறத்தாழ 539 இலட்சம், பம்பாயிலிருந்து 706 இலட்சம், வெளிநாடுகளிலிருந்து 177 இலட்சத்திற்கு வாங்கியிருக்கிறார்கள். இதில் தமிழ் நாட்டில் வாங்கிய பஞ்சினைப் பொறுத்த மட்டில், பல்வேறு வியாபாரிகள் இதில் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள்.

<u>மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா</u> : மாண்புமிகு உறுப்பினர் கைத்தறி சம்பந்தமாகவும் டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் சம்பந்தமாகவும் கருத்துக்களை வழங்குகிறார்கள். ஏற்கெனவே இந்த மானியம் விவாதிக்கப்பட்டு முடிந்து விட்டது. இப்போதுள்ள மானியத்தின் மீது கருத்துக்களைத் தெரிவிக்கவும்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : கைத்தறி கூட்டுறவு அமைச்சரிடம் வருகிறது. இரண்டு நிமிஷத்தில் முடித்துக் கொள்ளுங்கள்.

<u>திரு. செ. அரங்கநாயகம்</u> : தமிழ் நாட்டிலிருந்து 539 இலட்சத்திற்கு பஞ்சு வாங்கியதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதைக் குறிப்பிட்டேன். இங்கே தமிழ்நாட்டில் பஞ்சு வியாபாரிகள் இருக்கிறார்கள். கோயம்புத்தூரில் மார்வாரிகளும், குஜராத்திகளும், சிந்திகளும் பஞ்சு வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். பெரும் பகுதியை அவர்களிடத்தில் வாங்கியதாக குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. அமைச்சர் அவர்கள் இதுபற்றி விசாரித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : 15 உறுப்பினர்கள் பெயர் கொடுத்திருக்கிறார்கள். 10 நிமிடங்களுக்கு மேல் வராது.

<u>திரு. செ. அரங்கநாயகம்</u> : அடுத்து, சர்க்கரை ஆலை சம்பந்தமாக அறிக்கை தந்திருக்கிறார்கள். பல்வேறு ஆலைகளுக்கு அரசு கரும்பின் விலையை நிர்ணயித்திருக்கிறது. ஆனால், ஆரூரான் சர்க்கரை ஆலையில் மட்டும் சர்க்கார் சொல்லிய விலைக்கும் குறைவாக விலை தந்திருக்கிறார்கள்.

வெளியீடு—23—7—1975]
Issued—23—7—1975]

தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

# பணித்துறை வெளியீடு

## OFFICIAL REPORT

சனிக்கிழமை 1975 மார்ச் 29

Saturday 29th March 1975

தொகுதி LXVIII—எண் 1

Volume LXVIII—No. 1

©
தமிழ் நாடு அரசு
1975

GOVERNMENT OF TAMIL NADU
1975

சட்டமன்றப் பேரவைத் துறை
சென்னை-600009.

*Legislative Assembly Department
Fort St. George, Madras-600009.*

விலை 50 காசுகள்]
PRICE 50 Paise]

D
V211,31 N75
31N75.6831
61702

# Tamil Nadu Legislative Assembly Debates

*Thirteenth Session of the Fifth Legislative Assembly under the Constitution of India.*

*29th and 31st March and 1st to 3rd April 1975*

VOLUME LXVIII (Nos. 1 to 5)

*Table of contents*

PAGES

*Saturday, 29th March 1975.*

Personne of the Government of Tamil Nadu ... i—vi

Principal Officers of the Tamil Nadu Legislative Assembly ... ... vii

List of Members of the Tamil Nadu Legislative Assembly with their Constituencies ... ... ix—xvi

1. Questions and Answers ... ... ... ... ... 1—25

2. Adjournment Motion—
   Hunger-strike by farmers of Thanjavur district against the harassment of the procurement staff ... 25—29

3. Point of order— ... ... ...
   Withdrawal of No-Confidence motion against the Deputy Speaker within hours of giving notice. ... 29—31

4. Government Bill— ... ...
   The Tamil Nadu Appropriation Bill, 1975 (L.A. Bill No. 11 of 1975.) ... ... 31

5. Voting on Demands for Grants for the year 1975-76—*cont.*
   Demand No. 24—Industries
   Demand No. 50—Capital Outlay on Industrial Development ... ... ... 31—108

6. Papers laid on the Table ... ... ... ... 108—110

Pages.

*Monday, 31st March* 1975.

1. Questions and Answers ... ... ... ... 111—124

2. Announcements—

(i) Resignation of Thiru S. Arumugam, M.L.A. ... 124—125

(ii) The Tamil Nadu Appropriation Bill, 1975. (L.A. Bill No. 11 of 1975) ... ... ... 210

3. Presentation of Report—

Privileges Committee's report on privilege matter against Thiru Abdul Salam and the Editor, 'Makkal Kural' .. .. .. .. .. 125—126

4. Voting on Demands for Grants for the year 1975-76—*cont.*

Demand No. 4—General Sales Tax and Other Taxes and Duties—Administration

Demand No. 22—Animal Husbandry

Demand No. 25—Cinchona

Demand No. 45—Forest Department

Demand No. 55—Capital Outlay on Forests 126—192, 194—209

5. Point of Order—

Proposed press meet by the Health Minister regarding House Surgeons' strike before replying to the Adjournment Motion ... ... ... ... 193

6. Papers laid on the Table ... ... ... ... 210—211

*Tuesday, 1st April* 1975.

1. Questions and Answers ... ... ... ... 217—249

2. Point of Information—

Press report regarding denial by Thiru S. Arumugam about his resignation ... ... ... ... 249—258, 260

3. Point of Order—

Arrival of two Chinese ships off the Tamil Nadu shores ... ... ... ... ... 259



*Tuesday, 1st April* 1975—*cont.*

Pages

4. Adjournment Motion—

Hunger-strike by House Surgeons and the consequent hardships to patients ... ... ... ... 261—280

5. Minister's Statement—

Education Minister's statement correcting the answer given by him to a supplementary on 28th February 1975 ... ... ... ... ... ... 280—282

6. Voting on Demands for Grants for the year 1975-76—*cont.*

Demand No. 15—Police

Demand No. 16—Fire Services ... ... ... 282—347

7. Papers laid on the Table ... ... ... ... 348

*Wednesday, 2nd April* 1975.

1. Points of Order—

(i) Supply of questions list to Members in advance. 389

(ii) Necessity for leave to move a motion for the removal of Speaker and the basis for determining the number of members supporting it as 15 per cent. 421—425

(iii) Election of a Presiding Officer to conduct the deliberations of the House while the Motion for the removal of Speaker is under discussion ... ... 428—429

2. Questions and Answers ... ... ... ... 390—419

3. Announcements—

(i) Motion for the removal of Speaker ... ... 419—421

(ii) Business of the House ... ... ... ...512—513

4. Resolution for the removal of Speaker ... ... 425—427, 429—512, 513—532

5. Papers laid on the Table ... ... ... ... 532

Pages

*Thursday, 3rd April 1975.*


1. Questions and Answers ... 535—571

2. Privilege Matter—

Furnishing of wrong information by Thiru N. Veerasami about the leaders of opposition parties ... 571—572

3. Speaker's ruling regarding restoration of expunged portions in Thiru V. Krishnamoorthi's speech ... 573—574

4. Points of Order—

(i) Propriety of Speaker's ruling regarding restoration of portions expunged by the Deputy Speaker after a week ... 574—589

(ii) Propriety of Speaker changing the ruling given by the Deputy Speaker ... 601—603

5. Calling Attention—

Supply of drinking water through lorries in certain Panchayats of Ottaipidaram sub-taluk ... 589—592

6. Presentation of Report—

Report on action taken by the Government on the recommendations of the Estimates Committee contained in the Report on Employment and Training ... 592

7. Government Bill—

The Tamil Nadu Catering Establishments (Amendment) Bill, 1975 ... 593

8. Point of Information—

Consideration of motions given notice of ... 593—594

9. Voting on Demands for Grants for the year 1975-76—*cont.*

Demand No. 15—Police

Demand No. 16—Fire Services ... ... ... 594—601
604—685

10. Papers laid on the Table ... 685—686




திரு. கே. எ. வகாப்: தலைவர் அவர்களே, எல்லாப் பொருள்களுக்கும் ஒருமுனை விற்பனை வரி விதிக்க வேண்டுமென்பதைப் பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 4 — பொது விற்பனை வரிகளும் ஏனைய வரிகளும், தீர்வைகளும் — நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,98,10,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. எம். சுரேந்திரன்: தலைவர் அவர்களே, வரி வசூலிப்பு அதிகாரிகளின் சொத்துக்களை வருடத்திற்கொரு முறை பரிசீலனை செய்ய வேண்டுமென்பது குறித்து விவாதிக்க—

" நிதிக் கோரிக்கை எண் 4—பொது விற்பனை வரிகளும்—ஏனைய வரிகளும், தீர்வைகளும்— நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,98,10,000ல் ரூ 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU N. DENNIS: Sir, to discuss about the hardship faced by common people due to the imposition of sales tax on essential commodities, I move—

"That the allotment of Rs. 3,98,10,000 under Demand No. 4-General Sales tax and Other Taxes and Duties Administration be reduced by Rs. 100".

(ஆ) நிதிக் கோரிக்கை எண் 22 — கால்நடை வளர்ப்பு.

மாண்புமிகு திரு. ஒ. பி. இராமன்: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

"நிதிக் கோரிக்கை எண் 22 — கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின்கீழ் ரூ. 5,65,57,000 க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்"

திரு. கே. எ. வகாப்: தலைவர் அவர்களே, இராணிப்பேட்டையில் உள்ள ஐ.வி.பி.எம். மருந்தகத்தை மேலும் விரிவுபடுத்தவும், கட்டப்பட்டிருக்கும் புதிய கட்டிடம் விரைவில் திறக்கப்படவேண்டும் என்றும் விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 22— கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 5,65,57,000—ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU N. DENNIS: To discuss about the necessity to implement intensive cattle development project in Kanyakumari district, I move—

"That the allotment of Rs. 5,65,57,000 under Demand No. 22 Animal Husbandry be reduced by Rs. 100".

(இ) நிதிக் கோரிக்கை எண் 25 — சின்கோனு

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

"நிதிக் கோரிக்கை எண் 25 — சின்கோனு என்ற தலைப்பின் கீழ் ரூ. 73,34,000 க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

THIRU R. PONNAPPA NADAR: Sir, to discuss policy, I move—

"That the allotment of Rs. 73,34,000 under Demand No. 25-Cinchona be reduced by Rs. 100".

திரு. பெ.சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, காவிரிக் கரை ஓரங்களில் சின்கோனு பயிரிடப்படும் திட்டத்தை தீவிரப்படுத்த வேண்டிய அவசியத்தை வலியுறுத்த—

"நிதிக் கோரிக்கை எண் 25 — சின்கோனு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 73,34,000—ல் ரூ. 100 குறைக்க வேண்டும் என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

(ஈ) நிதிக் கோரிக்கை எண் 45 — காட்டு வளத்துறை

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

"நிதிக் கோரிக்கை எண் 45 — காட்டு வளத்துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 3,28,72,000 க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

THIRU J. JAMES: Sir, to discuss about the failure of the Government to pay bonus to the rubber plantation workers in Kanyakumari Government rubber plantations, I move —

"That the allotment of Rs. 3,28,72,000 under Demand No. 45—Forest Department be reduced by Rs. 100"



திரு. பெ.சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, கொல்லி மலையில் காடு வளர்க்கும் பணியை விரிவுபடுத்த வேண்டிய அவசியத்தை எடுத்துக்கூற—

"நிதிக் கோரிக்கை எண் 45—காட்டு வளத்துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,28,72,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

(உ) நிதிக் கோரிக்கை எண் 55 — காட்டு வள மூலதனச் செலவு

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் கீழ் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

"நிதிக் கோரிக்கை எண் 55—காட்டு வள மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,48,78,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

THIRU J. JAMES: Sir, to discuss about the necessity to provide housing accommodation to all labourers working in the Government Rubber Plantation in Kanyakumari district, I move—

"That the allotment of Rs. 2,48,78,000 under Demand No. 55-Capital Outlay on Forest be reduced by Rs. 100".

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியங்களும், வெட்டுத் தீர்மானங்களும் அவை முன் விவாதத்திற்கு வருகின்றன.

மாண்புமிகு திரு. ஓ பி. இராமன்: தலைவர் அவர்களே, இன்றைக்கு காட்டு வளத்துறை, வணிக வரித்துறை, கால்நடைத் துறை, சின்கோனு ஆகியவற்றின் மீதான அரசினுடைய கொள்கைக் குறிப்புகள் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஏற்கனவே கொடுக்கப் பட்டுள்ளன. இவற்றின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களையும் கொடுத்திருக்கிறார்கள். அவற்றை யொட்டி அவர்கள் எடுத்துச் சொல்கிற கருத்துக்களுக்கு நான் பின்னால் பதில் சொல்கிறேன் என்று சொல்லி இந்த அளவில் முடித்துக்கொள்கிறேன்.

*THIRU K. M. SUBRAMANIAM: Sir, I congratulate this Government for having exempted oil cakes from sales tax. As a matter of fact I moved an amendement last year for exemption of oil cakes from sales tax and I am glad that the Government after one year had thought it fit to exepmt oil cakes from sales tax.

Coming to other exemptions, I am to point out that the price of milk is going up as fodder cost is going up. I request the Government once again that they must exempt fodder for animals or animal food from sales tax as far as possible.

Secondly, in these days of national crisis and economic criseis, so far as sales tax is concerned, its incidence falls on almost everybody equally, whether he is a rich man or poor man or middle class man or lower middle-class man, while buying articles. I hope Government which is anxious to bring down prices will have to revise sales tax on some goods. I am sorry hat Government has not done anything in that line.

We have now industrial collapse in this country. One of the causes for rise in industrial cost is sales tax on components and on raw materilas. Ultimately it is reflected in the price of industrial cost. When such is the case, how can the industry be blamed for rise in industrial cost?

So far as collection is concerned, every department of Government, including Electricity Board, is buying goods from outside and they pay sales tax and prices are quoted including sales tax. Water and Drainage Board also has to pay sales tax for goods they buy. So what Government gets from buyers from one hand, they are spending through the other hand.

I think Government should seriously consider if at the present psychological moment there should be reduction in sales tax. Not only reduction in sales tax for the consumers, but also to the industries, so that there will be a better fillip in the manufacturing industries. You might have read that in America there has been a slash of taxes to activise the economy. So, unless there is reduction in tax on articles that contribute to the cost of the commodity, it will be impossible to reduce the cost of the commodities. I do not say that you should reduce income-tax which is a tax out of profit etc. But I do say that you should reduce the tax on sales. It is only sales. These points are very important so far as sales tax is concerned.

Now the Government this year has been faced with an unfortunate position of losing the betting tax on races. The matte is finished and perhaps there is no need for a discussion about it. Still, I like to point out as a member of the race Club for so many years that racing is not gambling. There is a mistaken impression. But, no, it is not. Perhaps cards playing is gambling, Rangu Attam' is gambling .But so far as racing is concerned, 90 per cent of the winners are first or second favourites. For, the people participating calculate the heridity of the horses, the running capacity of the parents of the horses, the running





capacity of the horses themselves, their breed, their trainers, their training performances Jockeys and so many things are taken into consideration and then only betting is resorted to and even there 90 per cent of the cases are on first favourites or second favourites. Therefore, I think there is no need to discuss whether it is gambling or not as racing is not a gambling at all. I am afraid the Government is throwing away good revenue.

Secondly, so far a racing is concerned, until it is abolished as an all India policy, it will be impossible to enforce it. I can give you one instance. There was a race in Calcutta recently and it was the Invitation Cup. One gentleman–I am not prepared to give out his name-made four or five lakhs on one horse. What has happened ? The Government of Tamil Nadu has lost Rs. 60,000 on taxes. So, what is going to happen ? In Madras there will be no races, no betting, But there will be people to do unholy business of betting, that is, private betting on races held at Bangalore Mysore, Hyderabad, Bombay and Calcutta. Therefore, unless racing is abolished at the all-India level, I think it is wrong to think about its abolition in Tamil Nadu alone. The purpose will no be served.

It is not a very big thing after all. It may be all right for politics, it may be all right for canvassing votes. But I am definite it is only a slogan, nothing else but a slogan that there is abolition of betting.

Another thing. How many people attend the races ? Not more than 10,000 people or 12,000 people attend. This is out of a population of 27 laksh of people. And out of this 10 or 12 thousands, more than one-third are outsiders. There is heavy rush in all hotels during races. There is quite good tourism traffic during the race period when hotels are full in Madras. People from Andhra, Mysore and Kerala and other parts attend the races here. We are going to lose not only the revenue from races, but also tourist traffic. All this traffic will be diverted to Bangalore and actually it is being diverted now and it will increase. Are we going to lose all this ?

Thirdly is racing on unsocial thing ? Thiru T. T. Krishnamachari was a steward of the Race Club, was he an unsocial man Sir P. T. Rajan was a steward of the Race Club. Was he an unsocial man Dr. Subbarayan was a steward of the Race Club. Was he an unsocial man? It is not a criminal thing to have races. If these persons were criminals they should not have found a place even as ordinary Ministers. So racing is not a criminal act. That is the most important thing we have to remember.

Funrther, how much money do we need now? At this time, we loss two crores of rupees. Race club contributed to Chief Minister's Fund Drought Relief Fund, School Fund, Hospital Fund and so many things. The race club is running the K. J. Hospital. The Race Club had been contributing to all these funds. It is a very sad thing indeed that we are throwing away Rs. 2 crores and that too in the hands of speculators and blackmarketeers. I do not want to mention any castes, a particular caste is thriving on private betting. These people are going to flourish because of stoppage of races in Madras City.

I think I have given sufficient reasons to show that it is impossible to enforce any rule relating to racing of horses so long as there are races in other parts of India.

I shall now come to Animal Husbandry. If you walk through the streets of Madras, you will come across dead calves being paraded for milking the cows. Has anybody stopped this? Is not this a crime and if calves are killed, now can cattle grow? Everywhere we find that there is cattle growth only in paper. Many diseases attack the cattle. I have experience of cows. I have to call on the Veterinary Doctor 5 or 6 times before cows become pregnent. This is the way our department is working.

Sir, this is an agricultural country. The only supplementary income to the agricultural labourers is from animals. You may do so many things for the agriculturists and the land-holders; But unless something is done for the agricultural labourers, they cannot find sufficient income. As I said the other day, their income is only Rs. 27 a month. Should not Government think of providing good breed of cattle for them?

Another question is, grazing grounds. Now the grazing fields are almost destroyed and houses have been built there. How can you expect animals to grow? Previously, we used to send the animals for grazing to Nellore and Ongole. That has been stopped now. So, in the Amimal Husbandry field, the Government have failed. I am very sorry about it.

I will take this opportunity to touch upon another revenue point. Of course, it may not be quite proper for today's discussion. Still, I will refer to it also. What is happening is this. Property values in the city have increased by 4 or 5 times and hence the tax is increased and the value goes to higher slabs; the tax not only goes up but also the percentage goes up. But there appears a statement in the press that there is no fresh taxation. Where is the need for fresh taxes? When the existing taxes are barbarously increased when the ordinary



man cannot bear the burden, what is the need for new taxes? The tax is increased when the cost of living is going up; when sales tax is not reduced, when milk prices are high and on top of all this, when there is no water even, what can the people of Madras do? This is my plain question. Untill and unless the Government feels that this is a Welfare State-they may say so in paper–I am sure the ruling party will be committing political suicide and if they do not defer the quinquinnial valuation by another two years, there will be trouble. Though this is not the subject of the Minister who has moved the Demands today, I have to say this in this context.

Coming to forests, forests are destroyed but there is no rebuilding of forests. In Travancore-Cochin in those days, there was a practice that only after four years of planting a tree, an old tree could be cut, in the forest. But now there is indiscriminate cutting of trees in our forests.

Unfortunately there are scandals about the sandalwood contracts. All these have to be looked into. I know, once the Government know these things, they will definitely look into these problems and these problems are so serious, particularly sales tax on components that go to the making of the articles, sales tax on fodder, and collection of sales tax.

As regards animal husbandry more dynamic administration is necessary.

Last but not least, the forest is the life blood of a country. If the forest is destroyed, the life blood, the heart of the country is gone. They think that these are all small portfolios. They are not small. They are very important and they are substantial because on forests depends rain and on forest the country's wealth depends. If there is not even 16 per cent forest in a State like Tamil Nadu, we have to grow forest. That is all. Grazing ground is the most important thing.

With these words, I thank the Hon. Speaker for having given me an opportunity to place before this House the immediate problems that confront Tamil Nadu, and particularly the City of Madras.

திரு. ஆ. கு. சுப்பையா : மதிப்பிற்குரிய சட்டப்பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு வணிக வரித்துறை அமைச்சரவர்கள் கொண்டுவந்திருக்கிற மானியங்களின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றைய தினம் கால்நடை இலாகாவிற்கு ரூ. 5,65,57,000 செலவு செய்ய அனுமதி கோரியிருக்கிறார்கள். உண்மையிலேயே தமிழ் நாட்டிலே கால்நடை அபிவிருத்திக்கு அதிக அக்கறை ஒருபுறம் செலுத்தினாலும் இன்றைய தினம் ஒதுக்கியிருக்கக்கூடிய தொகையானது மிகக் குறைவானது. 10 கோடி ரூபாயை ஒதுக்குவதன் மூலமாகத்தான் தமிழகத்திலே உள்ள கால்நடைச் செல்வங்களைப் பாதுகாப்பதற்குப் போதுமான அளவு நடவடிக்கை எடுக்க நிதி கிடைக்கும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

கால்நடைகள் நம்முடைய நாட்டிலே 1,07,075 வரையில் இருந்து கொண்டிருக்கிறது. இது மிகக்குறைவு. நம்முடைய நாட்டு மக்களுக்கு சராசரி 84 கிராம் பால் கிடைப்பதாக இதிலே அறிவித்து இருக்கிறார்கள். சராசரி என்று அறிவித்திருக்கிறபோது பால் பார்க்காத பால் குடிக்காத மக்கள் பெரும்பாலானவர்கள் ஏழைகளாக இருக்கிறார்கள், சகல பேர் களுக்கும் பால் கிடைக்கும்படியான நிலையை அரசு கொண்டுவர வேண்டும். ஒரு மனிதனுக்கு 280 கிராம் பால் தேவை என்று சொல்லப்படுகிறது. மிகப் பெரிய அளவிற்கு பற்றுகுறை ஏற்பட்டிருக்கிறது. இதற்கு காரணம் பால் இனத்தை விருத்தி செய்யக்கூடிய முறையிலே கலப்பு இனத்தை அதிகப்படுத்துகின்ற பெரிய முயற்சியை அரசு மேற்கொள்வதின் மூலமாக தான் அதிகமான பால் உற்பத்தியைப் பெருக்கமுடியும். கிராமங்களிலே இருக்கிற மக்களுக்கு இப்படிப்பட்ட வாய்ப்பு வசதிகளைப் பெற்றுத் தருவ தற்கு அரசாங்கம் திட்டமிட வேண்டும்.

நகரங்களிலே பால் இனப் பசுக்களை கலப்பு இனப் பசுக்களை அரசாங்கம் அவர்களுக்கு வாங்கிக் கொடுத்து உதவிச் செய்கிறது. அதைப்போல் கிராமப்புற மக்களுக்கும் அந்த வசதியைச் செய்துதரவேண்டும். கலப்பு இன உற்பத்தி என்று சொல்லுகிறபோது இரண்டொரு மாவட்டங்களிலேதான் அது நடைமுறையிலே இருந்துகொண்டிருக்கிறது. எல்லா மாவட்டங் களிலும் அதை மேற்கொள்ள வேண்டும்.

தீவிரக் கால் நடை வளர்ப்பு மும்முர திட்டம் 1975–76–ம் வருடத்திலே தஞ்சை மாவட்டத்திலே ஆரம்பிக்கலாம் என்று அமைச்சர் அவர்கள் இதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அவ்வாறு ஆரம்பிக்கிறபோது மன்னார் குடியிலே ஒரு சிறந்த கூட்டுறவு பால் பண்ணை நடத்தப்படுகிறது, ஆயிரக் கணக்கான மாடுகளை வாங்கிக் கொடுத்து அந்தப் பால் பண்ணை சிறப்பாக நடந்துகொண்டிருக்கிறது. அதன் மூலம் இன்றைய தினம் நூற்றுக் கணக்கான குடும்பங்கள் பலன் பெற்று வருகின்றன. ஆகவே மன்னார் குடியில் தீவிரக் கால்நடை வளர்ப்பு மும்முரத் திட்டத்தை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோட்டூரில் பஞ்சயத்து யூனியனிலே கால்நடை மருந்தகம் ஆரம்பிக்க வேண்டும், அங்கே ஏற்கனவே ஒரே ஒரு கால்நடை மருந்தகம் தான் இருக்கிறது.





பெருகவாழ்ந்தானில் ஒரு கால்நடை மருந்தகத்தை ஆரம்பிக்க வேண்டும். செயற்கை கரு தரிக்கின்ற முறை சில இடங்களிலேதான் இப்போது இருக்கிறது. பரவலாக எங்கெங்கு எல்லாம் கால்நடை மருந்தகங்கள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் செயற்கை கருத்தரிக்கும் முறையைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால்தான் நல்ல இன பசுக்களை கால்நடைகளை உற்பத்தி செய்வதற்கு ஏதுவாக இருக்கும்.

பசு காப்பகம் என்று செல்லப்படுவது 1973–74 ஆம் ஆண்டிலே நிறுத்தப் பட்டது, அது நிறுத்தப்பட்டது மிகப் பெரிய தவறாகும். 1975–76 ஆம் ஆண்டில் மீண்டும் கொண்டுவரப்போவதாக அமைச்சர் அவர்கள் சொல்லி யிருக்கிறார்கள். இந்த ஆண்டிலே மீண்டும் அதைக் கொண்டுவருவது மிக மிக அவசியம்.

அதேபோல் கோழி வளர்ப்பு என்று சொல்கிறபோது சாதாரண ஏழை எளியவர்கள்தான் இந்தத் தொழிலிலே ஈடுபடுகிறார்கள். அவர்களுக்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து கடன் கொடுக்கும் திட்டம் இருக்கிறது. தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் இப்போது கடன் கொடுக்க மறுக்கிறார்கள். நேற்றைய தினம்கூட நான் ஒரு கேள்வியில் கேட்டேன், திருத்துறை பூண்டியிலே ஒரு கோழி வளர்ப்புச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது, அதற்காகப் பல ஆயிரம் ரூபாய் கொடுக்கப்பட்டுக் கட்டடம் எல்லாம் கட்டப்பட்டு அதிலே மேற்கொண்டு கோழிகள் வாங்குவதற்குப் பணம் 2 ஆயிரம் என்ற முறையில் கொடுக்கப்படவில்லை, அதனால் நூற்றுக்கணக்கான பங்கு தாரர்கள் இன்றைக்கு ஒன்றும் செய்ய முடியாமல் கட்டடத்தைக் கட்டியதோடு நின்றுகொண்டிருக்கிறார்கள். அம்மாதிரி இருக்கிற சங்கங்களுக்கும் கடன் கொடுத்து கோழி வளர்க்கின்ற நிலையை அதிகப் படுத்துவதின் மூலம் கிராமப்புர மக்கள் பயன் பெறுவார்கள், ஆகவே அதையும் அரசாங்கம் செய்ய வேண்டும்.

கால்நடைக் கல்லூரியில் பி. வி. எஸ். சி. என்ற பட்டப்படிப்புக்கு 136 மாணவர்கள்தான் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள், அந்த எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும். அதன் மூலமாகக் கால்நடை செல்வங்களை வியாதிகளிலிருந்து பாதுகாப்பதற்கு வசதியாக இருக்கும். கால்நடை உதவியாளர்களையும் அதிகமாக நியமிக்க வேண்டும். அவர்களுக்கு இன்றைக்கு மாதம் ஒன்றுக்கு 65 ரூபாய்தான் ஸ்டைபண்ட் கொடுக்கப் படுகிறது, இது மிக மிகக் குறைவானதாகும். அந்தத் தொகையை இன்னும் அதிகப்படுத்த வேண்டும், இன்னும் உதவியாளர்களை அதிகமாகப் போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய அரசாங்கம் இன்றைக்குப் புதிதாக வணிகத்துறை ஆரம்பித் திருக்கிறது. அது பாராட்டுக்குரியதாகும். 50 கோடியாக இருந்த வருவாய் 180 கோடியாக உயர்ந்திருக்கின்றது. என்ன காரணமென்றால் மிகப் பெரிய உஷார் தன்மையோடு அரசாங்கம் நடந்துக்கொண்டிருக்கிறது. வரியை ஏமாற்றிக்கொண்டிருக்கிற ஆசாமிகளையெல்லாம் வணிகர்களையெல்லாம் வரியைக் கொடுக்காமல். ஏமாற்றிக்கொண்டிருந்ததால்தான் அப்படிப்பட்ட

நிலை இருந்தது—இன்றைக்கு அதையெல்லாம் கண்காணிப்பதால்தான் வருவாய் அதிகமாக வந்துகொண்டிருக்கிறது. இன்னும் திறமையானவர்களையும் இளைஞர்களையும் அதிகமானவர்களை இந்தத் துறையில் போட்டால் வரியை ஏமாற்றுகின்ற ஆசாமிகளிடம் கடுமையான நடவடிக்கை எடுப்பதன் மூலம் அதிகமாக வசூல் செய்ய முடியும், அப்படிச் செய்தால் 180 கோடியல்ல 200 கோடி ரூபாய் வருமானம் வரும். இதை அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பெரிய வணிகர்கள் தான் இன்றைக்கு ஏமாற்றுகிறார்கள். சாதாரணமானவர்கள் விதிக்கின்ற வரியைக் கொடுத்துவிடுகிறார்கள். பெரிய வணிகர்கள் தான் ஏமாற்றுவது அல்லது பெரிய அதிகாரிகளைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு இம்மாதிரி வரவேண்டிய வருவாயைக் கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

(முற்பகல் 10.00)

அம்மாதிரியானவர்களின் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதோடு மட்டுமல்லாமல் அதிகாரிகளும் தயவுதாட்சண்யம் இல்லாமல் நடவடிக்கை எடுப்பதற்கு உரியவகையில் நல்ல திறமையான அதிகாரிகளை நியமிப்பதின் மூலம் 200 கோடி ரூபாய் வருமானத்தைப் பெற்றுக்கொடுக்க முடியும். அதற்குரிய முறையிலே நம்முடைய அரசு தீவிரமான நடவடிக்கை எடுக்க வேண்டும். வரியை ஏமாற்றுபவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் எப்படிப்பட்ட செல்வாக்குப் பெற்றவர்களாகயிருந்தாலும் அவர்கள் மீது தயவுதாட்சண்யம் காட்டாமல் வரிகளையெல்லாம் வசூல் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

அதுமட்டுமல்லாமல், இம்மாதிரி வரி ஏமாற்றக்கூடியவர்கள்மீது கடுமையான முறையில் தண்டனை அளிக்ககூடிய நிலையை ஏற்படுத்த வேண்டும். அவ்வாறு ஏற்படுத்துவதின் மூலமாக அச்சம் ஏற்பட்டு அரசாங்கத்தை ஏமாற்றுகின்ற புத்தியில்லாமல் நல்லவிதமான நிலையை உருவாக்க முடியும். எனவே இதிலே அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக காடுகள் வளர்ப்பு சம்பந்தமாக எடுத்துக்கொண்டால், காடுகளை அதிகமாக வளர்ப்பதன் மூலமாக இன்றையதினம் நாட்டிலே நல்லதொரு வருவாயை ஏற்படுத்த முடியும். காடுகள் மூலம் நிறைய வருவாய் வருவதாக அமைச்சரவர்கள் கூறியிருக்கிறார்கள். எனவே வருவாய் வரும் மரங்களாக உற்பத்தி செய்தாக வேண்டும். ஆற்றுப்படுகைகளைத் தனி நபர்கள் ஆக்ரமித்துக்கொண்டு தங்கள் உபயோகத்திற்காக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்தப் படுகைகளெல்லாம் அரசாங்கத்திற்குச் சொந்தமான படுகைகள். அந்தப் படுகைகளில் கற்பூர மரங்கள், மூங்கில் மரங்கள் போன்ற இம்மாதிரி மரங்களை வளர்ப்பதன்மூலம் நிறைய காடுகளில் வருமானம் பெரும் அளவிற்கு இருக்க முடியும். எதற்குமே லாயக்கில்லாத, விவசாயத்திற்கு லாயக்கில்லாத அல்லது மக்களுக்கு நேரடியாகப் பயன்படாத நிலங்கள் தரிசுகளாக இருக்கின்றன. நமது மாகாணத்தில் இலட்சக்கணக்கான ஏக்கர்கள் தரிசு நிலங்களாக இருக்கின்றன. அந்த நிலங்களிலே



யெல்லாம் காடுகளை வளர்ப்பதற்கு விரைவான திட்டத்தைக் கொண்டுவந்து அதை நிறைவேற்றினால் அம்மாதிரி இடங்களில் காடுகளை வளர்ப்பதற்கு ஏற்பாடுகளை செய்யமுடியும்.

வேதாரண்யம் காட்டிலே அருமையான மான்களை வேட்டையாடுகிறார்கள். வேட்டையாடுகின்றவர்கள் சுடுவதற்கும், பிடித்துக்கொண்டு போவதற்கும் அதிகாரிகள் எப்படித்தான் அனுமதிக்கிறார்கள் என்று தெரியவில்லை. இது மோசமான நடவடிக்கையாக இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, வேதாரண்யம் காட்டிலே யாராக இருந்தாலும் வேட்டையாடுவதற்குத் தடை செய்ய வேண்டிய ஏற்பாடுகளை அரசாங்கம் செய்யவேண்டும். இம்மாதிரிக் குறைந்த எண்ணிக்கையில் உள்ள மிருகங்களை அழித்துவிட அனுமதிக்கக் கூடாது, அங்கே வேட்டையாடுபவர்களை அனுமதிக்கக்கூடாது, அதற்குரிய தடைகளை விதிக்க வேண்டும், அதையும் மீறி வேட்டையாடும் ஆசாமிகளின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கூறி என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*<u>திரு. எ. எம். இராஜா</u>: தலைவரவர்களே, இந்த மானியத்தின்மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றையும் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த ஆண்டு மொத்த வருவாயிலே விற்பனை வரியின் மூலம் நம்முடைய அரசுக்கு நல்ல வருமானம் கிடைத்திருக்கிறது. இது இந்தத் துறை நல்ல முறையிலே செயலாற்றுவதைத்தான் நமக்கு எடுத்துக் காட்டுகிறது. இப்படி ஒவ்வொரு ஆண்டும் விற்பனைத் துறையின் மூலம் கிடைக்கும் வருமானத்தைப் பெருக்கிக்கொண்டே வருவோமானால் நம்முடைய அரசினுடைய வருமானத்திலே இப்பொழுது 180 கோடி ரூபாயாக இருக்கிற வருமானம் 280 கோடி அல்லது 300 கோடி ரூபாயாக உயர்வதற்கு வாய்ப்பிருக்கிறது. ஆகவே, அடுத்த ஆண்டு நிச்சயமாக நாம் 280 கோடி ரூபாயை எட்டிப்பிடிக்க முடியும் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

இந்த நேரத்தில் நான் முக்கியமாக ஒன்றைப்பற்றிக் குறிப்பிடவிரும்புகிறேன். நான் ஒவ்வொரு ஆண்டும் சொல்லி வந்ததுதான். இப்பொழுது நம்முடைய அரசு இந்த நாட்டில் குதிரைப்பந்தயத்தை ஒழித்துவிடுவது என்று முடிவு செய்திருக்கிறது. நாம் குதிரைப் பந்தயத்தை இனிமேல் இந்த நாட்டில் விட்டு வைப்பதில்லை என்று சட்டம் கொண்டு வந்துவிட்டோம். ஆனால் இந்த குதிரைப் பந்தயத்தை நடத்துபவர்கள் நிச்சயமாக குதிரைப் பந்தயம் தொடர்ந்து நடந்துகொண்டுதான் இருக்கப்போகிறது என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு அவர்கள் சொல்லும் காரணம் என்னவென்றால், அங்கே 2,000 பேர்களுக்கு மேல் வேலை செய்வதாகக் கூறிக்கொள்கிறார்கள். ஆனால் உண்மையிலேயே அங்கே எவ்வளவு பேர் நிரந்தரமாக வேலை செய்கிறார்கள் என்றால் 146 பேர்கள்.

இந்த 2,000 பேர்கள் என்று சொல்லப்படுபவர்கள் ஆண்டு ஒன்றுக்கு அந்தக் குதிரைப் பந்தயம் நடக்கும் நாட்களில் வேலை செய்பவர்கள்தான். இந்த ஆண்டை எடுத்துக் கொண்டால் 50 நாட்கள் நடந்திருக்கிறது.

இதற்குமுன் ஒவ்வொரு ஆண்டும் எவ்வளவு நாட்கள் நடந்தது என்று பார்த்தால் 1971–72ஆம் ஆண்டில் 41 நாட்கள் குதிரைப் பந்தயம் நடந்திருக்கிறது. 1972–73ஆம் ஆண்டில் 38 நாட்கள் குதிரைப் பந்தயம் நடந்திருக்கிறது. 1973–74ஆம் ஆண்டில் 45 நாட்கள் நடந்திருக்கிறது. இந்த ஆண்டு எப்படியும் குதிரைப்பந்தயத்தை இந்த அரசு இருக்கின்ற வரையில் விட்டு வைக்க மாட்டார்கள் என்ற எண்ணத்தில் எப்படியாவது மாக்சிமம் சுரண்டிவிட 'வேண்டுமென்ற எண்ணத்தில் 50 நாட்கள் குதிரைப் பந்தயத்தை இன்றுவரையில் நடத்தியிருக்கிறார்கள். ஆகவே, இந்தக் குதிரைப் பந்தயம் ஒழிக்கப்பட வேண்டுமென்பதில் நம்முடைய அரசு கண்டிப்பாக இருக்கிறது.

ஆனால், குதிரைப் பந்தயத்தை நடத்துபவர்கள் குதிரைப் பந்தயத்தை எப்படியும் நடத்த வேண்டுமென்ற எண்ணத்தில் இருக்கிறார்கள். அதற்கான முயற்சியை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இப்படிபட்ட முயற்சிகளை மேற்கொண்டிருக்கிற இவர்கள் இந்தக் குதிரைப் பந்நயத்தைத் தொழிலுக்காக ஏதாவது முதலீடு செய்திருக்கிறார்களா, இந்த ரேஸ் கிளப்பிற்கு ஏதாவது முதலீடு செய்திருக்கிறார்களா என்றால் ஒருவர்கூட ஒரு பைசாகூடப் போடவில்லை. ஆனால் அவர்கள் அங்கே அனுபவிப்பதோ மிகமிக அதிகம். பொதுமக்களுடைய பணம் அங்கே வருகிறது. பொது மக்களுடைய அந்தப் பணத்தை ஒரு குறிப்பிட்ட 10, 12, பேர் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

கடந்த 10, நாட்களாக குதிரைப் பந்தயத்திலே நடந்த குழப்பங்களைச் செய்தித்தாள்களில் பார்க்கிறோம். அங்கே ஒரே ரகளை நடந்துகொண்டிருக்கிறது. எந்தக் குதிரை முதலிலே வந்தது, எந்தக் குதிரை இரண்டாவதாக வந்தது என்று தீர்ப்புச் சொல்வதிலே அங்கே பெரிய தவறுகள் நடந்திருக்கின்றன. பொதுவாகவே குதிரைப் பந்தயம் என்றால், குதிரை தானாக வந்து, அது முதலில் வருவதாக இல்லை. இப்படிப்பட்ட நிலையிலே இந்தக் குதிரைப் பந்தயத்தை ஒழிக்க வேண்டுமென்று நான் மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அங்கே வேலை பார்க்கின்ற 146 பேரில் 6 பேரைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம். அந்த அறுவருக்கும் ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு ஊதியம் கொடுக்கிறார்கள் என்றால், உண்மையிலேயே நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். ஒருவருக்கு ஒரு வருஷத்திற்கு அந்த 6 அதிகாரிகளிலே ஒவ்வொருவருக்கும் 54,671 ரூபாய் கொடுக்கிறார்கள். அந்த 6 பேருக்காக ஆகும் செலவு 1974-ல் 3,28,030 ரூபாய். இதை நான் சொல்லவில்லை, பேலன்ஸ் ஷீட்டிலேயே இருக்கிறது. ஆகவே, இவர்களைப்பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. இவர்களுக்கு இந்தக் குதிரைப் பந்தயத்தை நடத்தும் மேனேஜ்மெண்ட் கமிட்டியில் வழி செய்து கொள்வார்கள்.

ஆனால் மிச்சமிருக்கின்ற 140 பேர்கள், அவர்கள் யார்? அவர்கள் இந்தக் குதிரைப் பந்தயத்திலே, ரேஸ் கிளப்பிலே பல ஆண்டுகளாகப் பணியாற்றியவர்கள். 20, 25, வருஷங்களாகப் பணியாற்றியிருக்கிறார்கள். அவர்களுடைய நிலையை எண்ணும்பொழுதுதான் நமக்கு மிகவும் சங்கடமாக இருக்கிறது.





இவர்களுக்கு எப்படியும் நம்முடைய அரசு வழிவகைக் காணவேண்டும், இவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கவேண்டும். இப்பொழுது பல கார்ப்பரேஷன்கள் உருவாக்கப்படுகின்றன. அனிமல் ஹஸ்பெண்ட்ரியிலே ஒரு கார்ப்பரேஷன், டிரான்ஸ்போர்ட்டிலே பல கார்ப்பரேஷன்கள் என்று பல கார்ப்பரேஷன்கள் வருகின்றன. இப்படிப் புதிதாக கார்ப்பரேஷன்களை உருவாக்கும்பொழுது அவர்களுக்கு—140 பேர் என்பது அதிகம் இல்லை—அங்கே வேலை வாய்ப்பை உடனடியாக ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று அமைச்சரவர்களை நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அவர்களுடைய விவரத்தையும் சொல்கிறேன்.

| | |
|---|---|
| Managers .. .. .. .. .. | 6 |
| P. A. to Secretary, Senior Assistants, Assistants, Cashier and Assistant Cashier. | 10 |
| Stonographers .. .. .. .. | 7 |
| Junior Clerks .. .. .. .. | 15 |
| Assistant Engineer .. .. .. | 1 |
| Tote Assistants .. .. .. .. | 2 |
| Assistant Analyst (Veterinary Laboratory). | 1 |
| Attandants and Peons .. .. .. | 14 |
| Drivers .. .. .. .. .. | 5 |
| Barman and Cook .. .. .. | 3 |
| Wireman .. .. .. .. .. | 2 |
| Plumber .. .. .. .. .. | 1 |
| Brick-layer .. .. .. .. | 1 |
| Waiter .. .. .. .. .. | 7 |
| Watchmen .. .. .. .. .. | 14 |
| Course and Garden labourers .. .. | 23 |
| Sweepers .. .. .. .. .. | 4 |
| Jamedars and Syces .. .. .. | 6 |

மீதமுள்ளவர்கள் இவ்வளவு பேர்கள்தான். ஆகவே, இவர்களுக்கு ஒவ்வொரு துறையிலேயும் நம்மால் வேலை கொடுக்க முடியும். அதற்கு அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நேரத்தில் குதிரைப் பந்தயத்தில் இந்த ஆண்டில் எவ்வளவு வருமானம் வந்திருக்கிறது என்று பார்க்கும் நேரத்தில் நம்முடைய அரசு அவர்களுக்கு வரிகளைக் குறைத்துக் கொடுத்திருக்கிறது. அப்படி வரிகளைக் குறைக்க வேண்டிய காரணம் என்னவென்று தெரியவில்லை. குதிரைப் பந்தய பணைய ஒப்புநர்களுக்கு 20 சதவீதத்திலிருந்து 12 சதவீதமாகக் குறைத்திருக்கிறது. அதேபோல் முன் மதிப்பீடு மற்றும் இரட்டைப் பந்தயத்திற்கு 25 சத விகிதத்திலிருந்து 20 சதவிகிதமாகக் குறைத்திருக்கிறது. அதேபோல் வெற்றி மற்றும் இடம் (மின்சார கூட்டுப் போறி) என்ற இதிலே 20 சதவிகிதத்திலிருந்து 10 சதவிகிதமாகக்

குறைத்திருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் இளப்பை எடுத்துக்கொண்டால் அந்தக் கமிஷனைக் குறைக்கவில்லை. 22½ பர்செண்ட் வரையில் எடுக்கிறார்கள். ஆனால் வேறு எந்த மாநிலத்திலும் இவ்வளவு கமிஷன் எடுப்பதாகத் தெரியவில்லை. மகாராஷ்டிரத்தில் 15 அல்லது 17 பர்செண்ட் தான் எடுக்கிறார்கள். கர்நாடகத்தை எடுத்துக்கொண்டால் 15 பர்செண்ட். தான் எடுக்கிறார்கள். ஆனால் நம்முடைய ரேஸ் கோர்ஸிலே மட்டும் 22½ சதவிகிதம் வரையில் எடுக்கிறார்கள். இந்த 22½ சதவிகிதம் எப்படிச் செலவாகிறது என்று பார்த்தால் மிகவும் வேடிக்கையாக இருக்கும். இங்கே அவர்கள் கொடுத்திருக்கிற அந்த பேலன்ஷீட்டை பார்க்கும்பொழுது அதிலே "ஸ்டேக் மணி" என்று சொல்வார்களே, குதிரை வெற்றி பெற்றால் கொடுக்கும் பணம், அந்தப் பணம் வேறு எந்த மாநிலத்தையும் விட இங்கே அதிகம்.

இந்த ஆண்டு 1973-74 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் 54,26,814 ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். சப்சிடி டு ஓனர்ஸ் அண்டு டிரெயினர்ஸ் குதிரை வைத்திருக்கின்றவர்களுக்கும், பயிற்சி தருகின்றவர்களுக்கும் சப்சிடி 9 லட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். மாடு வளர்க்க இந்த அரசால் பணம் கொடுக்க முடியவில்லை. பொதுமக்கள் பணத்தை அங்கே உட்கார்ந்து கொண்டு ஒரு கும்பல் சுரண்டிக் கொண்டிருக்கிறது. அவர்கள் குதிரையை வாங்கி வெற்றி பெறச் செய்து மிக அதிகமான பலன் அடைகிறார்கள். மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கும் அவர்களுக்கு 9 லட்சம் ரூபாய் சப்சிடி கொடுக்கப்படுகிறது. டிராவிலிங் அண்டு கன்வேயன்ஸ் அலவன்சுக்காக 2,21,000 ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. இந்த அதிகாரிகள் வேறு மாநிலங்களில் ரேஸ் நடந்தால் அங்கே போவது, மானேஜ்மெண்டில் இருப்பவர்கள் இப்படிப் போவதற்கு இந்தத் தொகை கொடுக்கப்பட்டிருக்கிறது. குதிரைகள் வெளி மாநிலங்களிலிருந்து இங்கு வர போக்குவரத்துச் செலவாகக் கொடுக்கப்பட்டிருப்பது ஒரு லட்சம் ரூபாய். குதிரை பந்தயத்தில் கலந்து கொண்டாலே ஜெயிக்காத குதிரைகளுக்குக்கூட 500 ரூபாய் கொடுக்கப்படுகிறது. ஜெயித்த குதிரைக்குத்தான் பரிசு. அப்படி இருக்க இந்த அளவு ஏன் போக்குவரத்துச் செலவு கொடுக்க வேண்டும் ?

குதிரைகளுக்குத் தீனி வாங்குவதற்காக சப்சிடி 2,13,000 ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. குதிரைக்குப் புல் வாங்கிப் போடக்கூட மானியம். இந்த அரசு ஏமாந்தால் இன்னும் என்னென்னவோ கேட்பார்கள். நிச்சயமாக இந்தக் குதிரைப் பந்தயம் ஒழிக்கப்பட்டாக வேண்டும். அந்த முடிவிலிருந்து நிச்சயமாக மாறக் கூடாது. அவர்கள் எப்படியாவது குதிரைப் பந்தயத்தை நீட்டிக்க வேண்டுமென்று முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். அதைத் தடுத்தே ஆகவேண்டும்.

வனத்துறை பற்றி ஓரிரண்டு வார்த்தைகள் கூறவிரும்புகிறேன். வனத் துறையில் கிடைக்கிற வருமானம் சுமார் 8 கோடி ரூபாய். அதிலே செலவு நமக்கு 5½ கோடி ரூபாய் ஆகிறது. மொத்தத்தில் நிகர வருமானத்தைப் பார்த்தால் குறைவாகத்தான் இருக்கிறது. காடுகள் வெட்டப்படுகின்றன. மறுபடியும் காடுகள் வளர்க்கப்படுவதற்காக ஐந்தாண்டுத்



திட்டத்தில்கூட 11 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் அதிலே அதிக அக்கறை காட்டுவதாக இல்லை. காடுகளைப் புதிதாக வளர்க்க நம்முடைய துறை அதிக அக்கறை எடுத்துக் கொள்ளவேண்டும்.

அந்தியூருக்கருகே பருகூர், சத்தியமங்கலம் காடுகள் வெட்டப்பட்டிருக்கின்றன. புதிதாக மரங்களை வளர்க்கும் முயற்சிகள் மிக மிகக் குறைவாகத்தான் இருக்கின்றன.

வனத் துறை வருமானத்தில் 3-ல் ஒரு பகுதி சந்தன மரங்களால் கிடைக்கிறது. 280 லட்சம் ரூபாய் கிடைத்திருக்கிறது. இந்தச் சந்தன மரங்களைப் பயிரிட நம்முடைய துறை மேலும் அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும். தமிழ் நாட்டில் சந்தன மரங்கள் அதிகமாகக் கிடைப்பது ஒன்று வட ஆற்காடு மாவட்டம், இரண்டாவது கோவை மாவட்டம். கோவை மாவட்டத்தில் இருக்கும் சந்தன மரங்கள் ஆயில் எக்ஸ்ட்ராக்‌ஷனுக்கு மிகவும் உயர்ந்த மரங்கள் என்று சொல்லப்படுகிறது. அந்தியூருக்கு அருகே பருகூர் ஃபாரஸ்டில் நிறையச் சந்தன மரங்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் அங்கு 5,400 ஏக்கர் நிலம் தரிசாகக் கிடக்கிறது. அந்த நிலத்தை நிலமற்ற விவசாயிகளுக்குக் கொடுங்கள் என்று முதலமைச்சர் அவர்களிடம் கூட மகஜர் கொடுத்திருக்கிறோம்.

மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்களை இரண்டாண்டுகளுக்கு முன்னால் நானே அந்தப் பகுதிக்குக் கூட்டிச் சென்று காண்பித்திருக்கிறேன். பக்கத்தில் வருஷம் முழுவதும் தண்ணீர் செல்லக்கூடிய ஆறு இருக்கிறது. 1907-ம் ஆண்டு வரை அது ரெவினியூவில் இருந்திருக்கிறது. அங்கு ஏதோ கொள்ளை நோய் ஏற்பட்டு அங்கு இருந்த மக்கள் அங்கிருந்து வெளியேறி இருக்கிறார்கள். 1907-ம் ஆண்டுக்குப் பிறகுதான், அது வனத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இந்த 65 ஆண்டு காலத்தில் அவர்கள் எவ்வளவு சந்தன மரங்களை அந்தப் பகுதியில் வளர்த்திருக்கிறார்கள் ? சந்தன மரங்கள் இல்லாவிட்டால் சாதாரண மரங்களையாவது வளர்த்திருக்க வேண்டாமா ? எதையும் செய்யவில்லை. இது எதைக் காட்டுகிறது ? வனத் துறை என்று ஒரு துறை இருக்கிறது. ஏரியாவை எடுத்து வைத்துக் கொள்ளுகிறார்கள். அந்த நிலத்தை நிலமற்ற ஏழை விவசாயிகளுக்குக் கொடுத்தாலாவது விவசாயமாவது செய்வார்கள். இந்த நாட்டின் பொருளாதாரம் உயரவாவது வழி ஏற்பட்டிருக்கும். இவர்களும் ஒன்றும் செய்யமாட்டார்கள். பிறரையும் ஒன்றும் செய்யவும் விடமாட்டார்கள். இந்தப் போக்கும் மாற்றப்பட வேண்டும். அப்படி மாற்றியமைக்கும் முயற்சிகளை அமைச்சர் அவர்கள் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கால்நடைகளைப் பற்றி ஓரிரண்டு வார்த்தைகள். பால்-வெண்மைப் புரட்சி என்று சொல்லுகிறார்கள். பால் உற்பத்தி உற்பத்தி பெருக வேண்டுமென்பதற்காக உயர்ரக காளைகளை வெளிநாடுகளில் இருந்து வரவழைத்திருக்கிறார்கள். அறிக்கையில் பார்த்தால் தஞ்சை மாவட்டத்திற்குத்தான் அத்தனையும் சென்றிருக்கிறது. அதை விட்டால் ஊட்டி.

திரு. ஆலடி அருணா : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கால்நடைகளைப் பற்றிக் குறிப்பிடுகிறார்கள். உலகத்தில் எங்காவது கையால் நடப்பது இருக்கின்றதா? விலங்கினங்கள் என்று சொன்னால் போதுமே.

திரு. ஏ. எம். இராஜா : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக் கொள்வேன். குரங்கு கையாலும் நடக்கிறது. காலாலும் நடக்கிறது.

தஞ்சை, கோவை, மதுரை மாவட்டங்களில் பால் பெருக்குத் திட்டத்திற்காகச் சிறப்பு முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். உயர்ரக காளைகள் தஞ்சைக்கு மட்டுமல்லாது மற்ற மாவட்டங்களுக்கும் கொடுக்கப்பட வேண்டும். தற்போது அது இம்போர்ட் செய்யப்பட்டிருப்பது மிகவும் குறைவு. டாக்டர் குரியர் அவர்கள் குறிப்பிட்டார்கள்—உயர்ரக காளைகளை எவ்வளவு விலை கொடுத்து வேண்டுமானாலும் வாங்கத் தயாராக இருக்கிறேன். ஒரு காளையை வாங்குவது மூலம் பல கிராமங்களில் பால் இனத்தைப் பெருக்க முடியும். அதன் மூலம் பால் உற்பத்தியைப் பெருக்க முடியும் என்று சொன்னார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் பண்ணைகளை ஏற்படுத்தி உயர் ரக காளைகளை, ஜெர்சி, ப்ரீஷியன் போன்றவற்றை வாங்கிக் கொடுக்க வேண்டும். என்னுடைய மாவட்டத்தில் என்னுடைய தொகுதியான கவுந்தம்பாடியில் கூட அந்த இனங்கள் கிடையாது. நான்காம் தர, ஐந்தாம் தரக் காளைகள் தான் இருக்கின்றன. பத்து மைல் தூரத்திற்கு இந்தக் குறிப்பிட்ட ஆஸ்பத்திரியைத் தவிர பெரிய ஆஸ்பத்திரி ஒன்றும் கிடையாது. இதை விட்டால் பவானி தூக்கநாயக்கன் பாளையந்தான் போக வேண்டும். ஆகவே, தரமான காளைகளைக் கொடுக்க முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பவுல்ட்ரி டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன் புதிதாக ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்த கார்ப்பரேஷன் ரிசர்ச்சில் அதிகமான நாட்டத்தைச் செலுத்த வேண்டும். அமெரிக்காவில் புதிய ஸ்ட்ரெயின் எல்லாம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ஒரு கோழி ஒரு ஆண்டுக்கு 250, 300 முட்டைகள் போடும் அளவுக்கு புதிய ஸ்ட்ரெயின்களை எல்லாம் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

நம்முடைய மாநிலத்தில் மேயர் என்ற புதியதொரு இனத்தைக் கண்டுபிடித்திருப்பதாகச் சொல்கிறார்கள். அது எந்த அளவிற்குப் பாப்புலராக ஆகியிருக்கிறது என்று தெரியவில்லை.

நம்முடைய டயரி டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன் ரிசர்ச்சில கான்ஸெண்ட்ரேட் செய்ய வேண்டும். அவர்கள் புதிய ரகங்களை உருவாக்க முயற்சிக்கவேண்டும். தொழில் துறையில் எப்படி பட்டதாரிப் பொறியாளர்களுக்கு மூன்று லட்சம் ரூபாய் வரையில் கடன் கொடுத்து அவர்கள் புதிய தொழில்கள் தொடங்க ஊக்கம் கொடுக்கப்படுகிறதோ அந்த முறையில் வெட்டரினரி படித்து பட்டம் பெற்றவர்களுக்குக் குறைந்தது ஒரு லட்சம் ரூபாய் ஆவது கடன் கொடுக்கவேண்டும்.



இப்போது கோழிகளின் மூலம் கிடைக்கிற வருமானத்திற்கும் கால்நடைகளின் மூலம் வருகிற வருமானத்திற்கும் இன்கம் டாக்ஸ் வந்துவிட்டது. முட்டைகள் குறைய இருக்கின்றன. அதை நீங்கள் கருத்தில் கொள்ள வேண்டும். ப்ளாக் மணியை வொயிட் மணியாக்க பெரிய பெரிய தொழில் அதிபர்களும், மற்றும் அதிகப்படி வருமானம் உள்ளவர்களும் பெரிய பெரிய கோழிப் பண்ணைகளை உருவாக்கி வைத்திருந்தார்கள். சினிமாத் துறையில் உள்ளவர்களும் கோழிப்பண்ணைகளை வைத்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் அப்படி கோழிப் பண்ணைகள் வைப்பதற்குக் காரணம் கோழிப்பண்ணைமீது அக்கறை கொண்டா அவற்றை வைத்திருந்தார்கள்? கருப்புப் பணத்தை வெள்ளைப் பணமாக்க அவர்கள் கோழிப் பண்ணைகள் வைத்திருந்தார்கள். இப்போது மத்திய அரசு அதற்கும் வருமான வரி போட்டுவிட்டது. எனவே, அவர்கள் அவற்றை மூடப் போகிறார்கள். அந்தத் துறையில் உண்மையிலே அக்கறை உள்ளவர்கள் மட்டும்தான் இனிமேல் அவற்றை வைத்து நடத்தப் போகிறார்கள். எனவே, வெட்டரினரியில் படித்துப்பட்டம் பெற்ற பட்டதாரிகளுக்குத் தொழில் துறையில் படித்துப்பட்டம் பெற்ற பட்டதாரிகளுக்கு மூன்று லட்சம் ரூபாய் வரையில் கடன் கொடுப்பதைப் போல் இவர்களுக்கும் ஒரு லட்சம் ரூபாயாவது நீங்கள் கடன் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*திரு. ஆலடி அருணா : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் வணிகத் துறைக்குக் கோரப்பட்டிருக்கிற மானியத்திற்கு எதிர்கட்சிகள் சார்பில் அளிக்கப்பட்டிருக்கிற வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

"நீரின்றி அமையாது உலகு" என்பதைப் போன்று "வரியின்றி இயங்காது அரசு" என்பது அரசியல்வாதிகள் அனைவரும் ஒத்துக் கொள்கிற கருத்தாகும். எனவே, ஆட்சிப் பொறுப்பில் வீற்றிருக்கிற கட்சி நாட்டு மக்களுக்கு நல்வாழ்வு அளிக்க வேண்டும் என்ற தூய நோக்கத்தோடு வருமானத்தைப் பெருக்குவதற்காகப் புதிய வரிகள் விதிப்பதும், இருக்கிற வரிகளை அதிகரிப்பதும் மாற்றங்களைச் செய்வதும் தவிர்க்க முடியாததாகும். எனவே, இப்படிப்பட்ட மாற்றங்கள், அல்லது வரி உயர்வுகள் அல்லது புதிய வரிப் பளுக்கள் இவற்றை ஜனநாயகத்தில் மக்கள் ஒவ்வொரு காலக் கட்டத்திலும் சந்தித்தே தீர வேண்டிய நிர்பந்தம் இருக்கிறது.

ஒரு காலத்தில் வரி என்பது "Taxation for revenue only" என்று சொன்னார்கள். பிறகு "revenue for defence and justice only" என்று சொன்னார்கள். வருமானம் என்பது அல்லது வரி என்பது பாதுகாப்பிற்கும் நீதி வழங்குவதற்காகவும்தான் என்று சொன்னார்கள்.

ஆனால், காலப் போக்கில் மக்கள் ஆட்சித் தத்துவங்கள் ஒவ்வொரு நாட்டிலும் பூத்துக் குலுங்க ஆரம்பித்தவுடன் வரி விதிப்புக் கொள்கை என்பது ஒரு நாட்டின் பொருளாதாரத்தில் முக்கிய கருவியாக மாறிவிட்டது. உற்பத்தியைப் பெருக்குவதற்கும்; சில நேரங்களில் உற்பத்தியை

கட்டுப்படுத்துவதற்கும் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கும் தேக்க நிலையை அகற்றுவதற்கும், புதிய வரிகள் முக்கிய கருவிகளாக மாறி விட்டன. இதுகுறித்து இங்கிலாந்து நாட்டைச் சார்ந்த ஒரு பெரியார் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

'The job of taxation is not merely to balance Government's expenditure. Taxation is nowadays devised to reduce consumption, increase savings and investments, to mop up surplus money and curb inflationary pressure, to reallocate and deploy factors and inputs, to recast the productive pattern and refashion the consumption path.'

<u>திரு. ஜே. ஜேம்ஸ்</u> : பாயிண்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆலடி அருணா அவர்கள் எதையோ வைத்துப் படிக்கிறார்கள். அதைப் படிப்பதற்கு தலைவர் அவர்களுடைய அனுமதியைப் பெற்றிருக் கிறார்களா? அவர்கள் படிப்பது என்ன என்று அவர்கள் சொன்னால் மற்ற உறுப்பினர்கள் அதைத் தெரிந்து கொள்ள ஒரு வாய்ப்பிருக்கும். எந்தப் புத்தகத்தை வைத்துக் கொண்டு படிக்கிறார்கள்? அதைச் சொல் லவே இல்லையே.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : சொன்னார்கள். சொல்லிவிட்டுத்தான் படித்தார்கள். கொட்டேஷன்களுக்கு பெர்மிஷன் தேவை இல்லை.

<u>திரு. ஆலடி அருணா</u> : அந்தப் பெரியவர் இந்தக் கருத்தைச் சொல்லி இருக்கிறார்கள். இதன் அடிப்படையில் அரசாங்கம் செயல்பட புதிய வரிகள் விதிக்கவேண்டிய நிர்ப்பந்தங்கள் வருகின்றன என்பதை ஒப்புக் கொள்கிறோம்.

இன்று தமிழ் நாட்டைப் பொறுத்தமட்டில் வரிப்பளு நாட்டு மக்களால் சுமக்க முடியாத அளவிற்கு, நாட்டின் பொருளாதாரத்திற்குக் குந்தகம் விளைவிக்கக்கூடிய அளவிற்குப் பயங்கரமாக ஏழை எளிய பாட்டாளி மக்கள் மீது, வாங்குகிற மக்கள் மீது சுமத்தப்பட்டிருக்கிறது என்ற குற்றச் சாட்டை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

விற்பனை வரி என்பது ஒரு காலத்தில் காமதேனு, கற்பகத்தரு என்றெல்லாம் சொல்லப்பட்டது. இந்த வரி 1939-ம் ஆண்டு புகுத்தப் பட்டபோது சென்னை மாநில அரசுக்கு வந்த வருமானம் அறுபது லட்சம் ரூபாய். அதை சரியாகச் சொல்லப் போனால் ரூ. 59,49,000 வருமானம் வந்தது. அதே வருமானம் இன்றைய தினம் கடந்த பெப்ர வரி மாதம் முடிய இந்த விற்பனை வரி மூலம் அரசு 180 கோடி ரூபாய் வசூலித்திருக்கிறது என்றால் எந்த அளவிற்கு வரியை உயர்த்தியிருக்கி றோம், வருமானத்தைப் பெருக்கியிருக்கிறோம் என்பதைப் பரிசீலித்தாக வேண்டும். இதற்கெல்லாம் அரசாங்கச் சார்பில் ஒரு விளக்கம் அளிக்கப் படுகிறது.



இன்றையதினம் நமது வரி வாய்ப்புக்கள், வரி ஆதாரங்கள் பெருகு வதற்கு பல்வேறுவிதமான சட்டங்களை வைத்திருக்கிறோம்.

தமிழ் நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் மூலம் 1967—68-க்குப் பிறகு நான்கு மடங்கு வரியை அதிகரித்திருக்கிறோம்.

மத்திய விற்பனை வரிச் சட்டம் மூலம் நான்கு மடங்கு வரியை அதிகரித்திருக்கிறோம்.

தமிழ் நாடு மோட்டார் எண்ணெய் விற்பனை வரிச் சட்டத்தின் மூலம் வரியை நாம் நான்கு மடங்கு அதிகரித்திருக்கிறோம்.

கேளிக்கை வரிச் சட்டத்தின் மூலம் நம் வரியை நாம் நான்கு மடங்கு அதிகரித்திருக்கிறோம்.

தமிழ் நாடு உள்ளாட்சி மன்றங்கள் நிதிச் சட்டத்தின்கீழ் வரி இரண்டு மடங்கு அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

பந்தைய வரிச் சட்டத்தின் மூலம் மூன்று மடங்கு வரி அதிகரிக்கப் பட்டிருக்கிறது.

இப்படி இரண்டு மடங்கு, மூன்று மடங்கு, நான்கு மடங்கு என்று வரிகளை அதிகரித்துக்கொண்டே வந்திருக்கிறோம்.

தமிழ் நாட்டு வரிகளைப் பற்றி சென்னை பல்கலைக்கழக பேராசிரியர் திரு. சோணாசலம் அவர்கள் ஒரு கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். அவர்களுடைய கருத்தை சென்னை பல்கலைக்கழகம் புத்தக வடிவில் வெளியிட்டிருக்கிறது. அதை இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வருவது எனது தலையாய கடமையாகும் என்று நான் கருதுகிறேன். விற்பனை வரி மகாராஷ்டிரத்திற்கு அடுத்தபடியாக இந்தியாவிலேயே அதிகப் படியாக விற்பனை வரி விதிக்கப்படுவது தமிழ் நாட்டு அரசாங்கத்தில்தான் என்று அந்தப் பேராசிரியர் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

'Tamil Nadu ranks second only to Maharashtra. The rates have been raised to still higher levels. The future of sales tax in Tamil Nadu lies in efficient collection rather than in enhancement of the rates. . . . .'

என்று சொல்லியிருக்கிறார்கள். எதிர்காலத்தில் விற்பனை வரியின் உயர்வு என்பது அதை வசூலிப்பதில் இருக்கிறதே தவிர அதை உயர்த்துவதில் இல்லை என்று அந்தப் பேராசிரியர் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதே பேரா சிரியர் அவர்கள், வாகன வரி மூலம் இந்தியாவில் வைத்தே அதிகமான அளவிற்கு வருமானத்தைப் பெறுவது நம் மாநிலம்தான் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

'Tamil Nadu stood first in record to the revenue from this tax, excelling even Maharashtra'.

இதன்மூலம் மகாராஷ்ட்ரா மாநிலத்தை விட நாம் அதிக அளவிற்கு வரி வசூலிக்கிறோம் என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். நாம் எந்த அளவிற்கு வரிப்பளுவைத் தாங்கிக் கொண்டிருக்கிறோம் என்பதை இந்த மன்றத்தின் மூலம் நாட்டு மக்கள் தெரிந்து கொள்ளவேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

1958-59-ல் வருமான வரி மூலம் ஒரு மனிதன் 96 காசு கொடுத்தான் சராசரியாக. இன்று 72-73–ல் ரூ. 8·90 கொடுக்கிறான்.

யூனியன் எக்ஸைஸ் மூலம் வெறும் 98 காசு கொடுத்துக்கொண்டிருந்தான் சராசரியாக. இப்போது ரூ. 8·80 கொடுக்கிறான்.

மோட்டார் வாகன வரிகள் மூலம் ரூ. 1·42 கொடுத்தான். இப்போது ரூ. 5·76 கொடுக்கிறான்.

ஸ்டேட் எக்ஸைஸ் மூலம் 1958-ல் ஒன்பது காசு கொடுத்தான் சராசரியாக. இப்போது ரூ. 8·45 கொடுக்கிறான்.

வருமான வரி 57-58-ல் ரூ. 3·66 என்று கொடுத்தான்; இப்போது ஏறத்தாழ ரூ. 30-க்கும் மேலாகக் கொடுக்கிறான்.

இந்த அளவுக்கு வரிப் பளு அதிகமாகியிருக்கிறது. இதை பல்வேறு பத்திரிகைகள் எல்லாம் கண்டித்திருக்கின்றன. தமிழ் நாட்டில்தான் அதிகப்படியான வரிப்பளு இருக்கிறது என்பதை இண்டஸ்ட்ரியல் டைம்ஸ் என்ற பத்திரிகைகூட தனது ஆண்டு மலரில் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறது.

'Sales tax level in Tamil Nadu, where the tax was first introduced, is about the highest in the country and accounts for approximately one-fourth the total revenues of the State....'

என்று மிகத் தெளிவாக அந்தப் பொருளாதாரப் பத்திரிகை குறிப்பிட்டிருக்கிறது. இவைகளை எல்லாம் நான் நினைவுபடுத்தக் காரணம், இவ்வளவு வரிகளையும் உயர்த்திவிட்டு இந்த மன்றத்தில் இந்த அரசு சொல்லும்போது 180 கோடி ரூபாய் வருமானம் வருகிறது என் தெரியுமா? நாம் வரி போட்டதால் அல்ல; அல்லது வரிகளை உயர்த்தியதால் அல்ல என்று சொல்கிறார்களே தவிர உண்மை நிலையை இந்த மன்றத்தில் சொல்வதில்லை. அதற்கு மாறாக நாட்டில் தொழில்கள் பெருகிவிட்டன, வாணிபம் அதிகரித்து விட்டது, எங்கள் அதிகாரிகள் மிகத் தீவிரமாக வேலை செய்கிறார்கள், அவர்களது அசகாயசூரத்தனமான பணிகள் அவர்களின் ஆக்கபூர்வமான முயற்சியும் ஊக்கமும்தான் இந்த உயர்வுக்குக் காரணம் என்று சொல்கிறார்கள். 180 கோடி ரூபாய் அளவிற்கு வசூலாகிறது என்றால் அவர்களது பணியின் துணையும் இருக்கிறது இல்லையென்று சொல்லவில்லை. தொழில் முன்னேற்றம்; வாணிப முன்னேற்றம், அரசாங்க அதிகாரிகளின் பணி இவைகள் ஒரு பக்கத்தில் இருக்கின்றன என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் அதைவிட முக்கியமானது இந்த அரசாங்கம் அவ்வப்போது புதிய வரிகளைப் போடுவதும்,





இருக்கிற வரிகளை அதிகரிப்பதும்தான் இந்த அளவிற்கு வரி வருமான உயர்வுக்குக் காரணம் என்ற குற்றச்சாட்டை இந்த நேரத்தில் நான் சாட்ட விரும்புகிறேன்.

(முற்பகல் 10-30)

இன்னொன்றையும் இந்த நேரத்தில் நான் குறிப்பிடுவது என்னுடைய தலையாய கடமை என்று நினைக்கிறேன். இந்த வறட்சியான நேரத்தில் முதலமைச்சர் அவர்கள் 6 கோடிக்கு வரி போட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். எப்படிப்பட்ட இனங்களுக்கு வரி போட்டு இருக்கிறார்கள்? சாதாரண இனங்களுக்கு வரி போட்டு இருக்கிறார். தேயிலை, காப்பி, சிக்கரி போன்றவற்றிற்கு $5\frac{1}{2}$ சதவீதத்திலிருந்து 6 சதவீதம் ஆக்கியிருக்கிறார்கள்; எண்ணெய், பிண்ணாக்கு போன்றவற்றிற்கு $3\frac{1}{2}$ சதவீதத்திலிருந்து 4 சதவீதம் ஆக்கியிருக்கிறார்கள்; மின் விசிறி, மின் அரைவை, மின் துணி துவைத்தல் போன்றவற்றிற்கு 9 வீதத்திலிருந்து 12 சதவீதம் ஆக்கியிருக்கிறார்கள்; பருத்தி, நெல் போன்றவற்றிற்கு 2 சதவீதத்திலிருந்து 3 சதவீதம் ஆக்கி வரி போட்டிருக்கிறார்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வரி விதிப்பதையோ, வரி போடுவதையோ தவறாகக் குறிப்பிடவில்லை. நாட்டின் நலனுக்காக செய்யலாம். இந்த ஆண்டைப் பொறுத்தவரையில் வரலாறு காணாத அளவுக்கு வறட்சி என்று சொல்லிவிட்டு, அசாதாரண நிலைமை என்று நாட்டு மக்களுக்குச் சொல்லிவிட்டு 6 கோடி ரூபாய்க்கு வரி போட்டு இருப்பது அவசியம்தானா, தேவைதானா என்பதை தயவு செய்து சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 6 கோடி ரூபாய்க்கு வரி போட்டு இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்த மன்றத்தின் மூலமாக பகிரங்கமாக, உறுதியாக நான் சொல்லுகிறேன், இது 6 கோடி ரூபாய்க்கு வரி அல்ல, 20 கோடி ரூபாய்க்கு உரிய வரியாகும். அரசாங்கம் இதை இப்போது ஒத்துக்கொள்ளாது. அடுத்த ஆண்டு என்ன சொல்லும் என்றால், நாட்டிலே தொழில்கள் முன்னேறிவிட்டன, வாணிபம் பெருத்து விட்டது என்று சொல்வார்கள். இதேபோன்றுதான் 1972-ம் ஆண்டு கூட 102 கோடி வருமானம் வரும் என்று சொன்னார்கள், பிறகு 110 கோடி ரூபாய் வந்தது. நான் என்ன சொல்கிறேன் என்றால், தங்களுடைய தவறை, தங்களுடைய வரிக் கொடுமையை மறைப்பதற்கு இப்படி வாணிப முன்னேற்றம், தொழில் முன்னேற்றம் என்று இந்த அரசாங்கம் சொல்லிக் கொண்டு இருக்கிறது.

இவ்வளவு வரிகள் நிச்சயமாகத் தேவையில்லை. அதுவும் இந்தக் காலத்தில், வறட்சியான இந்தக் காலத்தில் இந்த வரி தேவையில்லை. அரசாங்கம் இதைத் திரும்பப் பெறவேண்டும்.

இப்படியெல்லாம் வரி போட்டு மக்களைப் புண்ணாக்குகிறீர்களே என்று சொன்னால், புண்ணாக்குக்கு வரி இல்லை என்று சொன்னார்கள். புண்ணாக்கும் எல்லா வரிகளையும் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில், வரி ஏய்ப்பு என்பது நிறைய அளவுக்கு பெருகி இருக்கிறது என்பதை ஒப்புக்கொள்கிறார்கள். சில்லறை வியாபாரிகள் அதிகாரிகளுக்கு பயந்து ஒழுங்காக வரி கட்டுகிறார்கள். சில்லறை வியாபாரிகளிடத்தில் போய் நின்று அரசாங்க அதிகாரிகள் நிர்ப்பந்தித்து வரியை வாங்கிவிடுகிறார்கள். பெரிய வியாபாரிகள் சட்டத்தின் கூர்மையை பணத்தால் ஒடித்துவிடுகிறார்கள். சட்டத்தின் கூர்மையை ஒடித்துவிடுவது மட்டுமல்ல; அரசாங்க அதிகாரிகளையே விலைக்கு வாங்கி விடுகிறார்கள்.

கமிஷன் மண்டிகளில் வரி ஏய்ப்பு அதிகமாக இருக்கிறது. அதை நானே கண்கூடாகப் பார்த்து இருக்கிறேன். வத்தல் மிளகாய் ஒரு கமிஷன் மண்டிக்கு 1,000 குவிண்டால் வருகிறது என்று சொன்னால், 50 குவிண்டால்தான் கணக்கில் வைக்கிறார்கள். 750 குவிண்டால் சிறு தானியம் வருகிறது என்று சொன்னால், 50 குவிண்டால்தான் கணக்கில் எழுதுகிறார்கள், பருத்தி பேல் பேலாக வருகிறது, அதற்கு ஒழுங்காக கணக்கு வைத்திருக்கிறார்களா என்றால் இல்லை. வந்த சரக்கு மொத்தத்திற்கும் விவசாயிகளிடத்தில் விற்பனை வரி வாங்கிவிடுகிறார்கள். ஆனால் அரசாங்கத்திற்கு அந்தப் பணத்தைச் செலுத்துவது இல்லை. யாருக்குச் செல்லுகிறது தெரியுமா? மாதம் ஒன்றுக்கு அந்த வட்டத்தில் இருக்கும் சி.டி.ஓ.; ஜே.சி.டி.ஓ. அவர்களுக்கு எல்லாம் ஒரு குறிப்பிட்ட தொகையாக வழங்கிக்கொண்டு இருக்கிறார்கள். இது பரவலாகப் பல இடங்களில் நடக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட கமிஷன் மண்டிகளிடமிருந்து அரசாங்கத்திற்கு ஒழுங்காக விற்பனை வரி வருவது இல்லை.

அரசாங்கம் இன்னும் தீவிரம் காட்டினால், கண்டிப்புடன நடவடிக்கை எடுத்தால், வரி வசூல் இன்னும் 100 கோடி ரூபாய்க்கு மேல் வரும். அந்த அளவுக்கு விற்பனை வரி ஏய்ப்பு இருக்கிறது என்பதை இந்த மன்றத்தில் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்படி ஒழுங்காக வரி கட்டாதவர்கள் பேரில் அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதில்லை, அக்கறை காட்டுவது இல்லை, ஆர்வம் செலுத்துவது இல்லை, நடவடிக்கை எடுப்பது இல்லை, ஆனால் யாரை அரசியல்ரீதியில் பழி வாங்கவேண்டுமென்று விரும்புகிறார்களோ, அவர்கள் மீது அரசாங்கம் அளவுக்கு மீறி நடவடிக்கைகளை எடுக்கிறது என்று குறிப்பிட விரும்புகிறேன்.

வேலூர் மருத்துவ மனை 1969-70-ல் 74 லட்சம் ரூபாய்க்கு புதிதாக வரியை 1974-ம் ஆண்டில் போட்டு இருக்கிறார்கள். இது இப்போது தேவைதானா, நியாயமாக வசூலிக்க வேண்டிய வரி என்றால், 1970-ம் ஆண்டிலேயே அதை அரசாங்கம் போட்டு இருக்கலாம். எனக்குக் கிடைத்த தகவல்படி 1969-ம் ஆண்டில் இப்படிப்பட்ட மருந்துப் பொருள்களுக்கு விதிவிலக்கு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. எனக்குக் கிடைத்த தகவல் தவறானது என்றால் மன்றத்தில் அமைச்சர் அவர்கள் விளக்கலாம். அல்லது அப்படியே கொடுக்கவேண்டுமென்று முறையாக இருந்தாலும் கூட 1969-70-ம் ஆண்டில் விதிக்கவேண்டிய விற்பனை வரியை 74 லட்சம் விற்பனைக்கு இப்போது வரி கட்டவேண்டுமென்று கட்டாயப்படுத்துவதற்குக் காரணம் என்ன? அரசாங்கம் ஏன் இப்படி பழி வாங்கும் நோக்கத்தோடு நடந்து கொள்கிறது என்று கேட்க ஆசைப்படுகிறேன்.





இன்னும் இதிலே வேடிக்கை என்னவென்றால், இதுவரையில் வரி கட்டாததற்கு $1\frac{1}{2}$ மடங்கு அதிகமாகக் கட்டவேண்டுமென்று போட்டிருப்பது உண்மைதானா; அப்படியிருந்தால், வரி போடாமல் இருந்த இந்த அரசாங்கத்திற்குத்தான் தண்டனை கொடுக்க வேண்டும். இன்னும் சொல்லப் போனால், நியாயமான வரியை குறித்த காலத்தில் வசூலிக்காத அமைச்சர் ராஜினாமா செய்ய வேண்டும். அதை விட்டு விட்டு, அரசியல் நோக்கத்தோடு அந்த வரி போட்டு இருப்பது தேவையில்லை, அவசியம் இல்லை, அது நாட்டுக்கு நன்மை பயக்காது என்று சொல்லிக் கொள்கிறேன்.

இன்னும் அந்த நிர்வாகத்தில் எத்தகைய தவறுகள் நடக்கின்றன என்று சொல்லிக்கொள்வேன். இந்த அரசாங்கத்திற்குத் தேவையான வரியை அந்த அதிகாரிகள் வசூலிக்கிறார்கள். வசூலிக்கக் கடமைப்பட்டு இருக்கிறார்கள். ஆனால் என்ன நடக்கிறது என்றால் ஆளும் கட்சி கலை நிகழ்ச்சிக்கு அவர்கள்தான் நன்கொடை வசூல் செய்கிறார்கள். அதைச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

நெல்லை மாவட்டத்தில் ஆறு திங்களுக்கு முன்னால் குற்றாலத்தில் கலை நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மகன், தம்பி மு. க. முத்துவின் கலை நிகழ்ச்சி நடைபெற்றது. நான் அந்த நிகழ்ச்சியைப் பற்றியோ அல்லது அதை நடத்திய நகர மன்றத் தலைவரைப் பற்றியோ குறை சொல்ல விரும்பவில்லை. அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்கள் 500,700 பேருக்கு மேல் இருக்க மாட்டார்கள். ஆனால் வசூல் ரூ. 40,000. யார் வசூலித்தார்கள் என்றால் திருநெல்வேலி மாவட்டத்தில் இருக்கிற சி.டி.ஓ., ஜே.சி.டி.ஓ., ஏ.சி.டி.ஓ. வசூலித்தார்கள். இப்படி அரசியல் கட்சியில் இருக்கிற தலைவர்கள் தங்களுடைய சுய நலனுக்காக, சொந்த லாபத்திற்காக இப்படிப்பட்ட காரியங்களுக்கு நிர்வாகத்தைப் பயன்படுத்திக்கொள்வது நல்லது அல்ல, நாட்டின் முன்னேற்றத்திற்கு பயன்தரக்கூடியது அல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒழுங்காக வசூலிக்கிற வரியை அரசாங்கம் இன்னும் கவனிப்போடு வசூலிக்குமானால், நான் குறிப்பிட்டது போல் ரூ. 100 கோடிக்குமேல் உள்ள வரி ஏய்ப்பைக் குறைக்க முடியும். இந்த 100 கோடியை வசூலிக்க வேண்டுமானால், அரசாங்கம் அதற்காக இருக்கும் சிப்பந்திகளின் எண்ணிக்கையைப் பெருக்கினால், மேலும் அதிகாரிகளுக்கு வருமானம் பெருகலாமே தவிர அரசாங்கத்தின் வருமானத்தைப் பெருக்க முடியாது. புதிய அதிகாரிகளை நியமித்து வேலைவாய்ப்பு கொடுக்கலாம், ஆனால் நாட்டின் வருமானம் உயராது. ஆகவே, வரி ஏய்ப்பிலிருந்து வியாபாரிகளைத் தடுக்க வேண்டுமானால், நியாயமான முறையில் வசூலிக்க வேண்டிய வரி வசூலிக்கப்பட வேண்டுமானால் தமிழ் நாட்டிலுள்ள லாரிப் போக்குவரத்தை அரசாங்கம் உடனடியாக தேசீயமயமாக்க வேண்டும். லாரி டிரான்ஸ்போர்ட் தனிப்பட்டவர்கள் கையில் இருக்கக்கூடாது. அதுதான் கடத்தல், வரி ஏய்ப்பு, திருட்டுக்கணக்கு இவைகளுக்கெல்லாம் பெரும் அளவில் உதவி செய்வதாக இருக்கிறது. ஆகவே, பெரிய வியாபாரிகளிடமிருந்து, தொழில் அதிபர்களிடமிருந்து நியாயமான அளவில் வசூலிக்க வேண்டிய வரியை

வசூலிக்கவேண்டுமென்ற உறுத்தல் இருக்குமானால், உள்ளம் இருக்குமானால், உடனடியாக அந்தப் போக்குவரத்தை தேசியமயமாக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வேலூர் மருத்துவ மனை மீது அரசியல் ரீதியாக எடுத்த நடவடிக்கையைத் திரும்பப் பெறவேண்டுமென்று கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன். வணக்கம். நன்றி.

*திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவரவர்களே, அமைச்சர் அவர்களால் மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ள மானியக் கோரிக்கைகள் மீது எனது கருத்துக்கள் சிலவற்றைக் கூற விரும்புகிறேன். இங்கே வைக்கப்பட்டுள்ள 3 மானியங்களில், முதலாவதாக காட்டு இலாகாவைப் பற்றி எனது கருத்துக்களைத் தெரிவிக்கலாம் என்று கருதுகிறேன்.

பொதுவாக ஒரு நாட்டுக்கு காடுகள் இன்றியமையாதது என்பதை இங்கே கொடுக்கப்பட்டுள்ள புத்தகத்தில் குறிப்பிட்டு இருக்கிறார்கள். ஒரு நாட்டின் மொத்த பரப்பளவில் குறைந்தபட்சம் மூன்றில் ஒரு பங்கு காடுகள் இருக்கவேண்டும் என்ற கருத்தை இங்கே வலியுறுத்தி பல ஆண்டு காலமாக இங்கே சொல்லப்பட்டாலும், ஏற்கனவே இருந்த 14 சதவீதம், 16 சதவீதம் காடுகளை மேலும் வளர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதுதான் எனக்கு இருக்கும் குறைபாடு என்பதை நான் வருத்தத்தோடு தெரிவிக்க விரும்புகிறேன்.

அதேபோல் இன்று காடுகளைப் பொறுத்தவரையில் சில தனியார்கள் அந்தக் காடுகளை தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, அரசாங்கத்திற்குச் சேரவேண்டிய அங்கே இருக்கிற மரங்களை எல்லாம் வெட்டி தங்களுக்குச் சொந்தமாகப் பயன்படுத்திக்கொண்டு இருப்பதை நான் இங்கே கவனப்படுத்த விரும்புகிறேன்.

கிட்டத்தட்ட ஒரு வாரத்திற்கு முன்பு கூட, நம்முடைய நீலகிரி மாவட்டத்தில் இருக்கிற காடுகளில் இருந்து பிர்லாவுக்குச் சொந்தமான ஒரு கம்பெனி, கேரளாவில் இருக்கும் ரயான் பாக்டரிக்கு மரங்களை வெட்டிச் செல்வதாக மன்றத்தில் தெரிவித்தேன். அமைச்சர் அவர்கள், தகுந்த ஆதாரத்தோடு அதைச் சொன்னால் அதைத் தடுப்பதற்கான காரியங்களை மேற்கொள்ளுவதாகச் சொன்னார்கள். பேரவைத் தலைவர் அவர்களே, நான் தங்கள் மூலம் ஏற்கனவே புகைப்படத்தைக் காட்டியிருக்கிறேன். இங்கே இப்போதும் வைத்து இருக்கிறேன். அந்தப் படங்களை அமைச்சரின் கவனத்திற்கு வேண்டுமானால் நான் தரத் தயாராக இருக்கிறேன். நீலகிரி மலையில் ஏறத்தாழ 1,100 எக்கர் வரை மேட்டுப்பாளையத்திலுள்ள விஸ்கோஸ் பாக்டரி.........

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இங்கே ஒரு விளக்கம் சொல்ல வேண்டுமென்று கருதுகிறேன். அவர்களுக்கு கேரளாவில் பாக்டரி இருக்கிறது. சட்டங்களைப் பார்த்தால், அவர்களுக்கு தனியாக இங்கே உள்ள சொந்தமான நிலங்களிலிருந்து மரங்களை வெட்டியெடுத்துச் சென்றால் அதை நாம் தடுக்க முடியாது. அம்மரங்கள் அரசுக்குச் சொந்தமான காடுகளிலிருந்து வெட்டிச் செல்லப்பட்டன என்பதை நான் மறுக்கிறேன்.





இங்கே அவர்களுக்கு நிலம் இருக்கிறது. அங்கே தொழிற்சாலை இருக்கிறது. தொழிற்சாலைக்கு வேண்டிய மரங்களை இங்கே வாங்குகிறார்கள். தடுப்பதற்கு யோசனை கூறினால் அதைப் பரிசீலிக்கலாம்.

*திரு. சு. துரைசாமி : நீலகிரி மலையில் 1,600 எக்கர் நிலங்களில் 1,100 எக்கர் நிலங்களில் உள்ள மரங்களை மேட்டுப்பாளையத்திலுள்ள விஸ்கோஸ் பாக்டரிக்கு கொடுக்க ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறது. மீதம் உள்ள 500 எக்கர் நிலத்தில் உள்ள மரங்கள் ஏலம் விடப்பட்டு வெட்டப்படுகிற மரங்கள், தனியார் காடுகளில் வெட்டப்படுகிற மரங்கள் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு வந்து மேட்டுப்பாளையத்தில் நான் ஏற்கனவே புகைப்படத்தில் குறிப்பிட்டிருப்பது போல ஏராளமான மரங்களை பிர்லா கம்பெனியார் வைத்துக்கொண்டு அவர்களுடைய பாக்டரிக்கு பயன்படுத்துகிறார்கள். ஆதாரத்துடன் நிரூபிக்க முடியுமா என்று கேட்டால் எப்படி முடியும் ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இன்னும் சற்று விளக்கமாகச் சொல்லலாம் என்று கருதுகிறேன். மரங்களை ஏலம் விடுவதாக இருந்தாலும் கூட இந்த மாநிலத்தில் ஏலம் விடுகிற மரங்களை வேறு மாநிலத்திற்கு கொண்டு செல்லக்கூடாது என்றுதான் ஏலம் விடுகிறார்கள். சட்டம் இருக்கிறது, தவறு செய்யக் கூடாதென்று. தவறு செய்யாமல் இருக்கிறவர்களும் உண்டு. தவறு செய்கிறவர்களும் நாட்டில் இருக்கிறார்கள். யாராவது மரங்களை திருட்டுத்தனமாக வெட்டி ஏற்றிச் சென்றால் அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதில் எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை.

திரு. சு. துரைசாமி : இதை எப்படி நிரூபிக்க முடியும் என்பதுதான் என் கேள்வி. நீலகிரி மலையில் உள்ள 1,600 எக்கர் காடுகளில் 500 எக்கர் காடுகள் மரங்க ளை தனியார் ஏலத்தில் எடுக்கிறார்கள். நம் மரங்களை வெட்டுகிறார்கள். தனியாருக்குச் சொந்தமான காடுகளில் உள்ள மரங்களையும் வெட்டுகிறார்கள். இரண்டையும் லாரியில் ஏற்றி மேட்டுப்பாளையத்தில் அடுக்கி வைத்திருக்கிறார்கள். எப்படி நிரூபிப்பது ?

என்னுடைய கருத்தெல்லாம் தமிழ்நாட்டில் இருக்கின்ற ஒரு பெரிய தொழிற்சாலை மேட்டுப்பாளையத்தில் உள்ள விஸ்கோஸ் பாக்டரியாகும். இந்தத் தொழிற்சாலைக்குத் தேவையான மரங்கள் மட்டும் கிட்டத்தட்ட 2,500 எக்கர் பரப்பளவு தேவைப்படுகிறது. தமிழ் நாட்டில் மிகப் பெரிய தொழிற்சாலையான விஸ்கோஸ் பாக்டரியை இங்கே அமைப்பதற்கு எடுத்துக் கொண்ட முயற்சி மிகவும் பாராட்டுக்குரிய ஒன்றாகும். பிர்லா கம்பெனியார் தமிழ் நாட்டில் ஒரு ரயான் தொழிற்சாலை ஏற்படக்கூடாது என்று மத்திய சர்க்காரிடம் முட்டுக்கட்டைப் போட்டு அது வராமல் தடுத்தார்கள். அதையும் மீறி அரசு எடுத்துக் கொண்ட முயற்சியின் காரணமாக விஸ்கோஸ் பாக்டரி அமைந்தது.

கிட்டத்தட்ட 2,500 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். இவ்வாறு மரங்கள் வெட்டப்பட்டு கேரளாவுக்கு கடத்தப்பட்டால் எதிர்காலத்தில் தமிழ் நாட்டிலுள்ள தொழிற்சாலைக்கு எவ்வாறு பாதுகாப்பு கிடைக்கும் ? மரங்

கள் வேண்டுமென்றால் பத்தாண்டு காலம் வளர்ந்தால்தான் கிடைக்கும். இன்றைக்கு அந்த பாக்டரி விரிவு அடையும் காலத்தில் தேவையான மரங்கள் இல்லையென்றால் தமிழ்நாட்டிலுள்ள தொழிற்சாலை பாதிக்கப்படும். ஆகவே, பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். தமிழ் நாட்டில் தனியார் துறையிலும் சரி, அரசாங்கக் காடுகளானாலும் சரி, இங்கிருந்து மரங்கள் எடுத்துச் செல்லுவதை அனுமதிக்காத அளவுக்கு அதைத் தடுப்பதற்கு சட்டம் கொண்டு வரவேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படிச் செய்யாவிட்டால் எதிர்காலத்தில் தமிழ் நாடு பெரிதும் பாதிக்கப்படும். இது நேரிடையாக அமைச்சர் அவர்களுக்குத் தெரியாமல் இருக்கலாம். பெரிய அதிகாரிகள் காட்டிலாகாவில் இருக்கின்றனர். பிர்லா கம்பெனி இந்தியா பூராவும் உள்ள கம்பெனி. அவர்களுக்குள்ள வசதியைக் கொண்டு தமிழ் நாட்டில் உள்ள காடுகளிலிருந்து மரங்களைத் தொடர்ந்து எடுத்துக் கொண்டு செல்லுவார்கள். அதைத் தடுக்க, உணவுப் பொருள்களை எவ்வாறு தமிழ் நாட்டிலிருந்து வெளியே எடுத்துச் செல்லுவதை தடுக்க அதிகாரம் பெற்று இருக்கிறோமோ அதைப்போல் நமது மாநிலத்திலுள்ள மரங்களை வேறு மாநிலங்களுக்கு எடுத்துச் செல்லுவதைத் தடுக்கக்கூடிய முறையில் சட்டம் ஒன்றை இயற்ற வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இரண்டாவது, சத்தியமங்கலம் காடுகளிலிருந்து மூங்கில் திருட்டுப் போகிறது. மைசூருக்குச் செல்லுகிறது. எடுக்கப்படுகிற பாரஸ்ட் கூப்புகளிலிருந்து, அரசாங்கத்திற்குச் சொந்தமான இடத்திலிருந்து மூங்கிலை எடுத்துச் செல்லுகிறார்கள். அதைத் தடுக்க அரசாங்கம் போதிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அமைச்சர் முயற்சி எடுக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். என்ன சொன்னாலும் நடைமுறையில் இன்றைக்கு ஏராளமான குறைபாடுகள் இருக்கின்றன. அதைப் போக்குவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

விற்பனை வரியைப் பற்றி என் கருத்துக்களைச் சொல்லுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் ஆலடி அருணா இந்த அரசாங்கம் ஏராளமாக வரி போட்டுவிட்டது என்று சொன்னார்கள். நம்முடைய மாநில அரசுக்கு 500 கோடி ரூபாய் வருமானம் என்றால் அதில் ஏறத்தாழ ரூ. 200 கோடி விற்பனை வரி மூலமாகக் கிடைக்கிறது. இந்த வருமானம் 1937-ம் ஆண்டு ரூ. 65 லட்சமாகத்தான் இருந்தது என்று சொன்னார்கள். நாட்டில் அரசாங்க நிர்வாகத்தை நடத்துவதற்கு இந்த விற்பனை வரியில்லாமல் வேறு முறையில் வருமானத்தைப் பெருக்குவதற்கு ஏதாகிலும் ஒரு திட்டத்தைச் சொல்லியிருந்தால் அதை நாம் ஏற்றுக் கொள்ளலாம். ஒட்டுமொத்தமாக வரி போட்டுவிட்டார்கள் என்றுதான் சொன்னார்.

ரூ. 6 கோடி மாநில அரசாங்கம் வரிபோட்டிருக்கிறது என்று அருணா அவர்கள் சொன்னார்கள். அதே சந்தர்ப்பத்தில் மத்திய சர்க்கார் ரூ. 250 கோடிக்கு வரி போட்டிருக்கிறது. பொதுமக்கள் அன்றாடம் பயன்படுத்தும் பொருள்களுக்கு மத்திய சர்க்கார் வரி போட்டிருக்கிறது. அதைப்பற்றி இவர் ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லை. அந்தப் பேச்சோடு பேச்சாக ஒரு கருத்தைச் சொன்னார்கள். சிறு தானியங்களுக்கும் அரசாங்கம் வரி போட்டிருப்பதாகச் சொன்னார். அவர் தெரிந்து சொன்னாரோ அல்லது தெரியாமல் சொன்னாரோ, புரியவில்லை.



உணவுப் பொருள்களைப் பொறுத்தவரையில் நமது அரசாங்கம் எந்தப் பொருளுக்கும் வரி விதிக்கவில்லை. அவர் பேச்சோடு பேச்சாகச் சொன்னார், உணவுப் பொருள்களுக்கும் உணவு தானியங்களுக்கும் வரி போட்டிருப்பதாக. எதிர்க்கட்சி என்ற அடிப்படையில் அரசாங்கத்தைக் குறை கூறும் நோக்கத்தோடு பேசிய பேச்சுக்களாக அமைந்திருந்ததேயன்றி ஒரு பயன் உள்ள முறையில் அரசாங்கத்திற்கு ஒரு மாற்றுத் திட்டத்தைக் கொடுத்து இன்றின்ன இனங்கள் மீது வரிகளை எடுத்து வேறு இனங்கள் மீது வரிகளைப் போட்டு, வருமானத்தைப் பெருக்க முடியும் என்று சொல்லியிருந்தால் அதை நாம் ஏற்றுக்கொள்ள முடியும். பரிசிலனையும் செய்யலாம். சில இனங்கள் மீது வரியைக் குறைத்து சில இனங்கள் மீது வரியைப் போட்டு வருமானத்தைப் பெருக்கக்கூடிய கருத்து எதையும் அவர் தெரிவிக்கவில்லை. ஒட்டுமொத்தமாக ரூ. 60 லட்சம் இன்றைக்கு ரூ. 200 கோடியாக ஆகிவிட்டது என்று பேசினாரேயொழிய வேறு இல்லையென்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல. வரிகள் ஏறுவதற்கு விலைவாசி ஏற்றம் தான் முக்கியமான காரணம் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. ரூ. 1 அல்லது ரூ. 2 என்று இருந்த நான்கு முழ வேஷ்டி இன்று ரூ. 10 என்று விற்கிறதென்றால் அன்றைக்கு இருந்த வரியை விட ஐந்து மடங்கு உயரத்தான் செய்யும். ஆகவே, விலைவாசி ஏறினால் வரி உயரக்கூடிய தன்மையும் இருக்கிறது என்று கவனப்படுத்த விரும்புகிறேன்.

அதே சந்தர்ப்பத்தில் வருமானம் பெருகக்கூடிய முறையில் விற்பனை வரித் துறையில் முயற்சி எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். பெரும் நகரங்களை எடுத்துக் கொண்டால், சென்னை, மதுரை, கோவை போன்ற நகரங்களில் பெரிய ஹோட்டல்கள் இருக்கின்றன. ஒவ்வொரு ஹோட்டலிலும் நாள் ஒன்றுக்கு ரூ. 4 அல்லது 5 ஆயிரம் வியாபாரம் ஆகிறது. அதற்கென் சில அதிகாரிகளைத் தனியாகப் போட்டு ஒரு வாரத்தில் 2, 3 நாட்கள் ஒவ்வொரு ஹோட்டலுக்கும் சென்றால் தாராளமாக விற்பனை வரி அதிகமாக வரக்கூடிய வாய்ப்பு ஏற்படும்.

இன்றைக்கு ஆயிரக்கணக்கில் வியாபாரம் ஆனாலும் அவர்கள் ரூ. 500 க்கும் குறைவாகத்தான் கணக்கு காட்டுவார்கள். அதை நேரடியாகப் போய் சோதனை செய்ய அதற்கென சில அதிகாரிகளைப் போட்டால் நிச்சயமாக வருமானம் பெருகக்கூடிய வாய்ப்பு ஏற்படும். அங்கே உள்ள உணவுப் பண்டங்களை எடுத்துக் கொண்டால், சாதாரணமாக ஒரு ஸ்வீட் வேண்டுமென்றால் 90 பைசா அல்லது ரூ. 1 என்று விற்கிறார்கள். எவ்வளவு விற்பனையானாலும் காட்டுகிற விற்பனைவரிக் கணக்கு குறைவாகத்தான் இருக்கிறது. இதற்காக தீவிர முயற்சி எடுத்து அதற்கென

சில அதிகாரிகளைப் போட்டு உண்மைக் கணக்கைக் கண்டுபிடித்து வருமானத்தைப் பெருக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

சினிமா தியேட்டர்களைப் பொறுத்தவரையில் ஏராளமாக ஏமாற்ற வாய்ப்பு உண்டு. ஏமாற்றிக்கொண்டுதான் இருக்கிறார்கள். இதற்கும் சில தனிப்பட்ட அதிகாரிகளை நியமித்து வாரம் ஒரு முறை அல்லது இரண்டு முறை சோதனை நடத்தினால் நிச்சயம் வருமானம் பெருகுவதற்கு வாய்ப்பு உண்டு. இதற்கான முயற்சியை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று பணிவன்புடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இன்றைக்கு சில இனங்களுக்கு போடப்பட்டிருக்கின்ற வரிகளைப் பற்றி நம் அரசாங்கம் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இன்று பஞ்சாலை நூலுக்கு 2 சதவீதம் வரியை 3 சதவீதம் ஆக உயர்த்தியிருக்கிறார்கள். பஞ்சாலைக்குப் போடுகின்ற வரியைக் குறைக்க வேண்டுமென்ற விதத்தில் தெரிவிக்கவில்லை. பொதுவாக இந்திய நாடு முழுவதும் குறிப்பாக, தமிழ்நாட்டிலும் பஞ்சாலைகளுக்கு ஏற்பட்டிருக்கின்ற நெருக்கடியை எண்ணிப் பார்க்க வேண்டும். 1966–67-ம் ஆண்டில் பஞ்சாலைகளுக்கு நெருக்கடி ஏற்பட்டு 20 ஆலைகள் மூடப்பட்டன. அரசாங்க உதவி கொடுத்தோம். தனியார் பாங்கிக்கு காரண்டி கொடுத்தோம். சில ஆலைகளை அரசாங்கம் ஏற்று நடத்துகிற தன்மையைப் பார்க்கிறோம். இப்படிப்பட்ட ஒரு நிலைமை ஏற்பட்டு பஞ்சாலைகள் ஒரு ஸ்திரத்தன்மையைப் பெற ஆரம்பித்தன. கடந்த ஆறுமாத காலமாக நூல் தேக்கம் ஏற்பட்டு சாதாரணமாக சில ஆலைகள் ஜனவரி மாதத்தில் கட்டக்கூடிய ரூ. 20 ஆயிரம் அல்லது ரூ. 25 ஆயிரம் விற்பனை வரியைக் கட்டமுடியாமல் சிரமப்பட்டுக் கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில் 2 சதவீதத்தை 3 சதவீதமாக உயர்த்தியிருப்பதை கொஞ்ச காலத்திற்காகினும் ஒத்திவைக்க முடியுமா, தள்ளிவைக்க முடியுமா என்பதை நம் அரசாங்கம் பரிசீலிக்க வேண்டுமென்று மெத்தப் பணிவுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அதைப்போல பனியன் தொழிலைப் பொறுத்தவரையில் இந்தத் தொழிலுக்கு வேறு சில மாநிலங்களில் விற்பனை வரி இல்லை. இந்த விற்பனை வரி இந்தத் தொழிலுக்கு வேறு மாநிலங்களில் இல்லாது இருப்பதன் காரணமாக நம் மாநிலத்தில் இருப்பவர்கள் அவர்களோடு போட்டியிட கஷ்டமாக இருக்கிறது. இத்தொழில் வளர்ந்து நல்ல முறையில் விரிவடைய வேண்டும் என்றால் இந்தப் பனியன் தொழிலுக்கு போட்டிருக்கிற வரியைக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, இன்னொரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, பல்லடம் ஆகிய இம்மூன்று பகுதிகளுக்கும் சேர்ந்து ஒரு சி.டி.ஓ. ஆபீஸ் பொள்ளாச்சியில் இருக்கிறது. இந்த விற்பனை வரியில் இம்மூன்று பகுதிகளில் இருந்தும் கிடைக்கிற வரியில் 50



சதவிகிதம் வரி திருப்பூரில் இருந்து திருப்பூர் வியாபாரிகள் செலுத்துகிறார்கள். ஆகவே இந்த சி.டி.ஓ. அலுவலகத்தை திருப்பூரில் அமைத்துக் கொடுப்பதுதான் நியாயம். 50 சத விகிதம் வருமானம் தருகிற திருப்பூரில் இந்த அலுவலகம் இல்லாமல் பொள்ளாச்சியில் இருப்பதால் திருப்பூரில் இருக்கிறவர்களுக்கு மிகுந்த தொல்லையாக இருக்கிறது. திருப்பூர் பகுதியில் இருந்து விற்பனை வரி செலுத்துகிறவர்களுக்கு இந்த அலுவலகத்தை மாற்றி திருப்பூருக்கு கொண்டு வந்து வசதி செய்துதர வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்ளுகிறேன். ஏதாவது ஒரு முறையீடு செய்ய வேண்டும் என்றால் திருப்பூரில் இருந்து பொள்ளாச்சிக்கு 40 மைல் தூரம் செல்ல வேண்டியிருக்கிறது. திருப்பூரில் நாலு அதிகாரிகள் ஜே.சி.டி.ஓ. போன்று இருக்கிறார்கள். ஒரு சி.டி.ஓ. அலுவலகத்தை திருப்பூரில் அமைத்துத் தருவது மிகவும் பொருத்தமானதாகும். இந்த அலுவலகத்திற்கு தொலைபேசிகூட இல்லாமல் இருக்கிறது. ஆகவே தொலைபேசியும் ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்றைக்கு இருக்கிற விற்பனை வரிச் சட்டங்களை வியாபாரிகள் புரிந்து கொள்ளுகிற முறையில் தமிழில் அச்சடித்துக் கொடுக்க வேண்டும் என்று இந்த அறிக்கையில் தெரிவித்து இருந்தாலும் விரைவாக அதை தமிழில் அச்சடித்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்தத் துறையில் டி.சி.டி.ஓ போன்ற பல அதிகாரிகள் பல்வேறு இடங்களில் முறைகேடாக வியாபாரிகளிடத்தில் நடந்து கொள்ளுகிறார்கள். 1,500 ரூபாய் வரி போடுவேன் என்று சொல்லி அந்த அதிகாரிகள் 500, 600 என்று பணத்தைப் பெற்றுக் கொண்டு வரிகளை குறைத்து விடுகிறார்கள். இதை பல இடங்களில் பார்க்கிறோம். மற்ற துறைகளில் ஒரு அதிகாரி தொடர்ந்து 3, 4 வருடம் இருப்பதில் பாதகம் இல்லை. ஆனால் இந்தத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் தொடர்ந்து மூன்று ஆண்டு காலம் இருக்கிற வாய்ப்பு ஏற்பட்டால் பலவிதமான குறைபாடுகள் ஏற்பட வாய்ப்பு ஏற்ப கிறது. ஆகவே, இதையும் தவிர்க்க வேண்டும் என்று இந்தத் துறையைச் சேர்ந்தவர்களைப் பணிவோடு கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து கால்நடை பொறுத்தவரையில் கால்நடை இலாகா நம்முடைய விற்பனை வரித் துறை அமைச்சரிடம் ஒப்படைக்கப்பட்டு இருக்கிறது. டயரி பார்ம் இன்னொரு அமைச்சரிடம் ஒப்படைக்கப்பட்டு இருக்கிறது. இப்படி இரண்டு தனித்தனி அமைச்சர்களிடம் இவை இருப்பதால் கால்நடை உற்பத்தி பெருக வாய்ப்பு குன்றி இருக்கிறது. இந்த இரண்டு இலாகாக்களும் பிரிந்து இருப்பது முறையானது அல்ல. சரியானது அல்ல. இரண்டு அமைச்சர்களில் யாராவது ஒருவரிடம், ஒருவர் பொறுப்பில் இந்த மில்க் டயரி பார்ம் என்பதையும் கால்நடை இலாகாவையும் ஒப்படைக்க வேண்டும் என்ற கருத்தை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இங்கே இருக்கிற அமைச்சர் அவர்களும் மற்ற எல்லோரும் சேர்ந்து இதற்கு முயற்சி எடுத்து வேண்டிய நடவடிக்கையை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய திரு. ராஜா அவர்கள் குறிப்பிட்டதைப் போல கோவை மாவட்டம் கால்நடையில் சிறப்பு பெற்று வருகிற மாவட்டமாகும். நல்ல திட்டங்களை எல்லாம் நிறைவேற்ற வேண்டும். தஞ்சை மாவட்டத்திற்கு இந்த கால்நடைகளைப் பயன்படுத்துவதற்கு நல்ல சலுகைகளை அளிப்பதைப்போல் கோவை மாவட்டத்தில் இந்தப் பணிகள் நடைபெற வசதிகளைச் செய்து தருவதுதான் சரியானதாக இருக்கும். அமைச்சர் அவர்கள் இதைப்பற்றி பரிசீலனை செய்து தேவையான நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

(திரு. கு. காமாட்சி தலைமை)

சிங்கோனா பாக்டரியைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டில் எந்த அளவு உற்பத்தியைச் செய்ய முடியுமோ அந்த அளவு செய்வது கிடையாது. உற்பத்தி குறைவாக இருக்கிறது. அமைச்சர் அவர்களும் அதிகாரிகளும் அந்த சிங்கோனா பாக்டரிக்கு எந்த அளவு உற்பத்தித் திறன் இருக்கிறதோ அந்த அளவு உற்பத்தி செய்யத் தக்க முயற்சி எடுக்க வேண்டும் என்ற கருத்தையும் தெரிவித்து வாய்ப்பு கொடுத்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். வணக்கம்.

*திரு. கே. பி. கோபால் : மாண்புமிகு தலைவர் அவர்களே, விற்பனை வரித் துறை மற்றும் வனத் துறை அமைச்சர் சமர்ப்பித்த கோரிக்கை மீது எங்கள் கட்சி சார்பாக கொடுத்த வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து சில கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முதலில், பொது விற்பனை வரி என்ற தலைப்பின் கீழ் சுமார் 222½ கோடிக்கு வருமானம் உள்ளது என்று காட்டப்பட்டு இருக்கிறது.... **Taxes on immovable property other than agricultural land, Sales Tax** மற்றும் **other Taxes and Duties** என்பதின் கீழ் இவ்வளவு வருமான்ம் அதிகரித்து இருக்கிறது.

எனக்கு முன்னாலே பேசிய திரு. ஆலடி அருணா அவர்களும் திரு. துரைசாமி அவர்களும் 100 கோடி ரூபாய்கள்வரை வரி ஏய்ப்பு நடந்திருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். சில மாதங்களுக்கு முன்பு நம் முதலமைச்சர் அவர்கள் கூட கேளிக்கை வரியில் அதிகாரிகளால் வரி ஏய்க்கிறவர்களைத் தடுக்க முடியவில்லை என்று கூறினார்கள். ஒரு சிலர் வரி ஏய்ப்பு செய்கிறார்கள் என்றாலும் வியாபாரிகள் அனைவரும் பொதுவாக நல்லவர்கள் என்ற எண்ணத்தில்தான் அந்த அதிகாரிகள் அணுக வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அவர்களுக்கு வீண் தொந்தரவுகளையும் சிரமங்களையும் கொடுப்பது கண்டிப்பாக தவிர்க்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதைப்போலவே விற்பனை வரி என்பதை ஒருமுக விற்பனை வரியாக மாற்ற வேண்டும் என்ற கோரிக்கையை நீண்ட நாளாக வைத்திருக்கிறோம். இவ்வளவு வரி உயர்வு கிடைத்திருந்தும் அந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை. மேலும் உணவுப் பொருள் மீது, விவசாய





பொருள்கள் மீது வரி உயர்வு இருக்கக் கூடாது என்று சொல்லிவருகிறோம். ஆனால் அதிலே அரை சதவிகித வரியை ஏற்றியிருக்கிறார்கள். வரி ஏய்ப்பதை தவிர்த்து இந்த வரியை நீக்குவதோடு விவசாயிகளுக்குத் தேவையான உரம் மற்ற பண்டங்கள் மலிவான விலையில் கிடைப்பதற்கு அரசு முன் வர வேண்டும், ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கால்நடையைப் பொறுத்தவரையில் மாடுகளின் எண்ணிக்கை ஒரு கோடிக்கு மேல் இருக்கிறது என்று புள்ளிவிவரம் இருந்தாலும் அவை தரமானவை அல்ல. பால் அளவு அதிகரிப்பதற்கும் அவைகளின் தரத்தை உயர்த்துவதற்கும் வெட்டுத் தீர்மானத்தில் சில கருத்துக்களைச் சொல்லியிருக்கிறேன். அதேபோல் உறையப்பட்ட விந்துகள் எல்லா கிராமங்களுக்கும் எல்லா விவசாயிகளுக்கும் கிடைக்கும் வகையில் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அந்த அளவு கீ வில்லேஜ் சென்டர்களை அதிகப்படுத்த வேண்டும். இப்போது 120 கீ வில்லேஜ் சென்டர்கள் தான் இருக்கின்றன.

அடுத்து, கேரளத்திற்கு பெரும் அளவு கால்நடைகள் கொண்டு செல்லப்படுகின்றன என்ற குற்றச்சாட்டு இருக்கிறது. வெட்டுத் தீர்மானத்தில் இதுபற்றி பலர் குறிப்பிட்டு இருக்கிறார்கள். எந்தப் பகுதியில் கடத்தப்பட்டு செல்லுகிறது என்பதை அரசு கண்காணிக்க வேண்டும். கம்பம் பகுதியில் கொண்டு செல்லப்படுகிறது. இப்படி கொண்டு செல்லப்படுவதால் கால்நடைகளுக்கு ஏற்படுகிற கொடிய தொத்து வியாதி கம்பம் போன்ற பகுதிகளில் பரவ வாய்ப்பு உண்டாகிறது. ஆகவே அந்தப் பகுதிகளில் கீ வில்லேஜ் சென்டர்களை ஏற்படுத்த வேண்டும். கம்பம் போன்ற பகுதிகளில் அதிகமாகத் திறக்கப்படும் என்று அதிகாரிகள் வாக் குறுதியை மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் தந்தார்களே தவிர, வேலை ஒன்றும் நடக்கவில்லை.

கிராமங்களில் மருந்தகங்களில் பணியாற்றும் நேரங்களில் கால்நடை மருத்துவர்கள் எவ்வளவு அவசரமாகக் கூப்பிட்டாலும் வருவதில்லை. வேலை நேரத்தில் வெளியே போகக் கூடாது என்ற உத்தரவு இருப்பதாகச் சொல்லிவிட்டு நேரம் கடந்துதான் வருகிறார்கள். அப்படிப்பட்ட நிலை இருக்கக் கூடாது. அவர்கள் அப்படி வெளியே வந்து அவசர கேஸ்களை கவனிக்க அதர் ட்யூட்டி ஓ.டி. ரிஜிஸ்தர் ஒன்று பதிவு செய்து அதில் எழுதிவிட்டு வெளியே வந்து அவசர கேஸ்களைக் கவனிக்க ஒரு முறை வர வேண்டும்.

சில நேரங்களில் உயர்ந்த ரக கறவை மாடுகளும் உழவு மாடுகளும் ஆபத்தாக இருக்கிற நேரத்தில் கூப்பிட்டால்கூட விதிகளின்படி 2 மணிக்குத் தான் வருகிறார்கள். இது சரியான நிலைமையாக இருக்க முடியாது.

நான் ஏற்கெனவே வெட்டுத் தீர்மானம் 333-ல் குறிப்பிட்டு இருக்கிறேன். சில டிவிஷன்கள் கால்நடை பராமரிப்புக்கு பரப்பளவில் அதிகமாக இருக்கிறது, சரியாக கவனிக்க முடிவதில்லை. இதைக் குறைக்க வேண்டும்

என்று சொல்லியும் இந்தக் கோரிக்கை இதுவரை கவனிக்கப்படவில்லை. கொடைக்கானல் டிவிஷனை இரண்டாகப் பிரித்து கொடைக்கானலில் ஒன்றும் உத்தமபாளையத்தில் ஒன்றும் அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளு கிறேன்.

(முற்பகல் 11–00)

முக்கியமாக நான் கூற விரும்புவது, வனத் துறையில் பணியாற்றுகின்ற அதிகாரிகளுக்கு மூன்று பொறுப்புகள் இருக்கின்றன.

(1) இருக்கும் வனங்களைப் பாதுகாப்பது.

(2) புது வனங்களை உண்டாக்குவது.

(3) வனத் துறைக்குத் தேவையில்லாத நிலங்களை ரெவின்யூ பிரிவுக்குக் கொடுத்து, நிலம் இல்லாதவர்களுக்கு வழங்குதல்.

வனத்துறை பாதுகாப்பு என்று சொல்லும்போது இப்போது இருப்பதைப் போல இன்னும் இரண்டு மடங்கு அதிகாரிகளை நியமிக்கலாம். இப்போது வருவாய் இரண்டு மடங்காகப் பெருகியிருக்கிறது என்று அமைச்சரவர்கள் தன்னுடைய அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் மொத்தம் இருக்கின்ற வன சரகங்கள் 342 தான். வனசரகங்களை இன்னும் அதிகப்படுத்த வேண்டும். அதைப்போல வனத் துறையில் செயல்படும் அதிகாரிகளின் ஊதியமும் குறைவாக இருக்கிறது. பாரஸ்டர்களுக்கு அடிப்படைச் சம்பளம் 210 ரூபாய்தான் என்று கருது கிறேன். அதைப்போல "பாரஸ்ட் கார்டுகளுக்கு" 140 ரூபாய்தான். இந்த அளவில் குறைந்த சம்பளம் இருப்பதால்தான் இந்த அவையில் எனக்கு முன்னால் பேசியவர்களும், சென்ற ஆண்டு மானியக் கோரிக் கையில் பேசிய ஆளும் கட்சி உறுப்பினர்கள், தோழமைக் கட்சி உறுப் பினர்கள், எதிர்கட்சி உறுப்பினர்களும் காட்டு இலாகாவில் பல தவறுகள் நடக்கின்றன என்று சுட்டிக்காட்டியதற்கு காரணமாகும். போதுமான அளவுக்கு வன அதிகாரிகள் இந்த இலாகாவில் இல்லை; இருப்பவர் களுக்கு மிகக் குறைந்த அளவு ஊதியம் வழங்கப்படுகிறது. 210, ரூபாய், 140 ரூபாய் என்று ஊதியம் கொடுத்தால் இப்படிப்பட்ட தவறு கள் நடக்காமல் எப்படி இருக்க முடியும் என்று கூறிக் கொள்ள விரும்பு கிறேன்.

இன்றைக்கு மூன்றில் ஒரு பங்குதான் காடுகள் இருக்கின்றன தமிழ் நாட்டில். ஏற்கெனவே மழை ஆண்டுக்காண்டு குறைந்து கொண்டே வருகிறது, இந்த ஆண்டு பொய்த்து வருகிறது. இந்த நிலையில் நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். தனியார் காடுகளில் உள்ள மரங்களை வெட்டிச்செல்லும் உரிமை தனியாருக்கு இருந்தாலும் கூட கொண்டு செல்ல மாவட்ட ஆட்சித்தலைவரின் அனுமதி பெறப்படுகிறது. அது கூடாது, அதுபற்றி என்னுடைய வெட்டுத் தீர்மானம் 984-ல் கூட தெரிவித்திருக்கிறேன். தனியார் காடுகளை



எல்லாம் "ஹில் ப்ரிசர்வேஷன் ஆக்டின்" கீழ் கொண்டுவர வேண்டும். அப்படியானால்தான் அவர்கள் பெருமளவில் மரங்களை வெட்டிச் செல் வதைத் தடுக்கமுடியும்.

அந்த முறையில் மதுரை மாவட்டத்தில் கண்டமநாயக்கனூர், இரசக்க நாயக்கனூர் போன்ற இடங்களில் முன்னாள் ஜமீனுக்குச் சொந்தமான காடுகள் இருக்கின்றன. அங்கு மரங்கள் பெருமளவில் வெட்டப்படு கின்றன. அதை எல்லாம் தடை செய்யவேண்டும்.

அடுத்தபடியாக, கூப்புகளை தனியாருக்குக் கொடுக்கக் கூடாது என்று பெரியவர் மணலி கந்தசாமி அவர்கள் கூட சென்ற ஆண்டு இந்த மானியத்தின்மீது கொடுத்திருந்த தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தில் கேட்டிருந்தார்கள். கூப்புகளை தனியாருக்குக் கொடுப்பதால் பல தவறுகள் நடக்கின்றன. ஆகவே, தனியார்களுக்குக் கொடுக்காமல் அர சாங்கம் டிப்போக்கள் மூலம் விற்பனை செய்ய வேண்டும்.

இன்னொன்று, வன நிலங்களில் மிகக் குறைந்த அளவில்தான் ஏலம் பயிர் செய்யப்படுகிறது. இன்னும் ஏலம் பயிர் செய்யத்தகுந்த நிலங்கள் ஏராளம் இருக்கின்றன. திருநெல்வேலி, மதுரை மாவட்டங் களில் கூட பெரும் நிலப்பரப்பு ஏலம் பயிருக்கு ஏற்றதாக இருக்கிறது. ஏலம் பயிர் செய்வதற்கு அந்த நிலங்களை ஏல விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டும். ஏலம் பயிர் செய்யும் விவசாயிகளுக்கு அந்த நிலங்களை ஏலம் விட்டு, வன இலாகா அதிகாரிகள் எல்லாம் அவர்களை மேற்பார்வை செய்துகொள்ள வேண்டும்.

அதைப்போல நிலம் இல்லாதவர்கள் இல்லை என்ற நிலையை ஏற்படுத்துவதுதான் இந்த அரசின் கொள்கை என்று சொல்கிறார்கள். இது பிரச்சாரத்திற்கு வேண்டுமானால் பயன்படும். உண்மையில் அந்த நிலைமை இப்போது இல்லை. எந்த நிலத்தைப் போய்கேட்டாலும் வன இலாகா கொடுக்கத் தயாராக இல்லை. வன இலாகாவிற்குச் சொந்தமான புல்வெளிகளை காடுகளாக மாற்ற வேண்டும். இல்லை என்றால் அதை ரெவின்யூ இலாகாவிற்கு கொடுத்து நிலம் இல்லாதவர்களுக்கு கொடுக்க வேண்டும்.

அமைச்சரவர்களின் விளக்க உரையில் சாலை அமைக்க ஒரு பகுதி நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. விசேஷ கிராமப் பணித் துறையில் கிராம இணைப்புச் சாலைகளுக்கு நிதி ஒதுக்கப் படுவதாக அறிகிறேன். அந்த நிதியிலிருந்து இணைப்புச் சாலை போடுவதற்காக 1975ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26ஆம் நாள் அன்று கம்பம் ஊராட்சி ஒன்றியத் தலைவர் வனத்துறை தலைவருக்கும், அமைச்சருக்கும் கேட்டிருக்கிறார்கள். அதற்கு அனுமதி காலதாமதமின்றி கொடுக்கவேண்டும்; இணைப்புச் சாலை போடவேண்டும். இப்படிப் போடுகின்ற இணைப்புச் சாலைகள் வனங்களில் மரங்கள் திருட்டுப் போவதை

தடுத்து, கண்காணிக்கவும் வசதியாக இருக்கும். ஆகவே, வனங்களோடு தொடர்பு கொள்ளுகின்ற வகையில் இணைப்புச் சாலைகளைப் போடுவது பொருத்தமாக இருக்கும்.

கேரள அரசுக்கும் தமிழ்நாட்டு அரசுக்கும் கடந்த 2, 3 ஆண்டுகளாக கடிதப் போக்குவரத்தில் ஒரு விஷயம் இருந்துகொண்டிருக்கிறது. அதாவது, பத்தினிக்கோட்டம் என்ற பெயரில் கண்ணகி கோயிலான மங்களதேவியம்மன் கோயில் என்னுடைய தொகுதியில் சுருளி மலையில் இருக்கிறது. அந்தக் கோயில் இருப்பது தமிழ்நாட்டின் எல்லையில்தான் என்பதற்கான வரைபடம் இருக்கிறது; புகைப்படங்கள் இருக்கின்றன; ஆராய்ச்சிக் கட்டுரைகள் எல்லாம் இருக்கின்றன. என்னிடம் இருக்கின்ற சில தகவல்களையும் தலைவரவர்களின் மூலமாக இறுதியில் மாண்புமிகு அமைச்சரவர்களிடம் தந்துவிடுகிறேன். அவைகளைப் பார்வையிட்டு, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மூலமாக கேரள அரசுடன் பேசி, மங்களதேவியம்மன் கோயில் நம்முடைய எல்லையில்தான் இருக்கிறது; அதை நாமே பராமரிக்க வேண்டுமென்று கோரி, பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அந்த மங்களதேவி கோயில் இருப்பது நம்முடைய எல்லையில்தான் என்று முடிவு ஏற்பட்டவுடன் அங்கிருந்து சுருளியாறு நீர் மின் திட்டத்திற்கு மேல் முகாமிற்கு ஒரு சாலை அமைத்தால் முதுமலை சரணாலயம் போல் அங்கும் ஒரு சரணாலயம் அமைய வழிவகை உண்டாகும்.

<u>மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. காமாட்சி)</u>: ஏதோ கொடுப்பதாகச் சொன்னீர்கள், இன்னும் கொடுக்கவில்லையே, இருக்கிறதா?

<u>திரு. கே. பி. கோபால்</u>: என்னிடம் இருக்கிறது. என்னுடைய உரை முடிந்தவுடன் தங்களிடம் தந்துவிடுகிறேன்.

அந்தப் பாதை அமைக்கப்பட்டால் முதுமலை சரணாலயம் போல் அங்கும் ஒரு சரணாலயம் ஏற்படுத்த முடியும். அதற்கு ஏற்பாடு செய்யத் வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்னொன்று. அது சில மாதங்களுக்கு முன்னால் பத்திரிகையில் வந்த செய்தி. வனத் துறை அதிகாரிகள் எந்த அளவுக்கு கடமையைச் செய்யத் தவறியிருக்கிறார்கள் என்பதை அது எடுத்துக்காட்டுகிறது.

The police located large areas of Kanja cultivation near Cumbam.

என்று இருக்கிறது. அந்த வனப் பகுதியில் கஞ்சா செடி பயிரிடும் அளவுக்கு தைரியம் வந்துவிட்டது என்பது ஒருபுறம் இருக்க, வனத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள்— ரேஞ்சர், பாரஸ்டர், கார்டு போன்ற



வர்கள் அந்தப் பகுதிக்கு முறைப்படி சென்று வந்திருந்தால் இப்படி ஒரு லார்ஜ் ஏரியாவில் கஞ்சா பயிர் செய்யப்பட்டிருக்குமா என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இதைப் போலவே விலையுயர்ந்த சந்தன மரங்கள், தேக்கு மரங்களை எல்லாம்கூட வன இலாகா அதிகாரிகள் கவனக் குறைவாக இருந்தால் வெட்டிக்கொண்டு போய்விடக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதற்கு உடந்தையாக அல்லது கவனக் குறைவாக இருக்கும் வன இலாகா அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கூறி, எங்கள் கட்சியின் சார்பாகக் கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்தும், நான் கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானங்களை வலியுறுத்தியும் கூறி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

<u>திரு. வா. மை. அப்துல் ஜப்பார்</u>: மாண்புமிகு தலைவரவர்களே, இந்தக் கோரிக்கைகளின்மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்வதற்கு முன்பு உடல் நலம் குன்றி, நீண்டநாள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று இன்று சட்டமன்றத்திற்கு வருகை தந்துள்ள நம்முடைய மரியாதைக்குரிய பின்தங்கியோர் நலத்துறை அமைச்சரவர்களுக்கு எங்கள் கட்சியின் சார்பாகவும், மற்ற சட்டமன்ற உறுப்பினர்களின் சார்பாகவும் என்னுடைய நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து என்னுடைய பேச்சை ஆரம்பிக்கிறேன்.

முதலில் இந்த ஒருமுனை விற்பனை வரி பற்றி சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, அதாவது முந்திய ஆண்டு பல பொருட்களுக்கு 50-க்கு மேற்பட்ட பொருட்களுக்கு ஒருமுனை விற்பனை வரி விதிக்கப்பட்டது. அதன் காரணமாக கடந்த ஆண்டில் எதிர்பாராதவிதமாக 25 சதவீதம் விற்பனை வரி கூடுதலாகக் கிடைத்திருக்கிறது. எதிர்பாராத வகையில் இந்த உயர்வு ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால் அது இந்த ஒருமுனை விற்பனை வரியின் மூலமாகக் கிடைத்ததுதான் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். வேறு எந்த வகையிலும் வந்தது அல்ல இந்த கூடுதல் வருமானம். ஒருமுனை விற்பனை வரி விதித்ததால் வணிகர்கள் மகிழ்ச்சியுடன் கொடுத்த வரியின் மூலம்தான் இந்த வருவாய் வந்திருக்கிறது. இது அரசாங்கத்திற்கு ஒரு படிப்பினையாகக் கூட இருக்கிறது. இந்தப் படிப்பினையிலிருந்து இன்னும் பல பொருட்களுக்கு ஒருமுனை விற்பனை வரியைப் போட வேண்டும். ஒருமுனை விற்பனை வரிக்குள் கொண்டுவரப்பட வேண்டிய பல பொருட்கள் இன்னும் இருக்கின்றன.

உதாரணமாக மெட்டல் சாமான்கள் இருக்கின்றன. அந்தப் பொருட்களுக்கு எல்லாம் ஒருமுனை விற்பனை வரி விதிக்கலாம். அதனால் பல தொந்தரவுகள் குறைய முடியும். அதன் மூலம் விற்பனை வரி அதிகம் பெற வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, இதில் அமைச்சரவர்கள் கவனம் செலுத்தி, இன்னும் எந்தெந்த, பொருட்களுக்கு எல்லாம் ஒருமுனை விற்பனை வரி போட முடியும் என்று பார்த்து அதைச் செய்யவேண்டும்.

வணிகர்கள் அதனால் மனமுவந்து வரி கட்ட முன்வருவார்கள். ஆகவே, உடனடியாகக் கவனம் செலுத்தினால் அரசாங்கத்திற்குக் கிடைக்கும் வருமானத்தை கூடுதலாக்க வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, திரு. துரைசாமி அவர்கள் சொல்லிக்காட்டியபடி நமது மாநிலத்தில் பனியன் தொழில் மீது 2 சதவீதம் வரி விதிக்கப் படுகிறது. பனியன் அதிகமாகத் தயாரிக்கப்படுகிற இரண்டு மாநிலங்கள், இந்திய தாய்த் திருநாட்டிலே- ஒன்று மேற்கு வங்காளம்; இரண்டாவது தமிழகத்தில் திருப்பூர் போன்ற பகுதிகள். மேற்கு வங்காளத்தில் பனியன் தொழிலுக்கு விற்பனை வரி கிடையாது. நம் மாநிலத்தில் மட்டும் பனியன் தொழில் மீது 2 சதவீதம் விற்பனை வரியை விதிக்கிறோம். இதனால் நிலைமை என்ன? நம் நாட்டில் உற்பத்தியாகிற பனியன்கள் மார்க்கெட்டில் ஒருவரோடொருவர் போட்டியிடுகிறபோது பின்தங்கும்படி நேரிடுகிறது.

கடந்த ஆண்டு ஸீ. பாரம் சம்பந்தமாக விற்பனை வரித்துறை அமைச்சரிடத்தில் சொன்னோம். அவர்களும் மனமிரங்கி அந்த ஸீ. பாரத்தில் இருந்து விலக்கு அளித்தார்கள். அது சாதகமாகத்தான் அமைந்தது. அதுபோல இந்த ஆண்டு நான் தெரிவித்துக்கொள்ளக் கூடிய வேண்டுகோள் என்னவென்றால் பனியன் தொழில்மீது போடப் படுகிற 2 சதவீத வரியை ரத்து செய்யவேண்டும் என்பதாகும். இந்த வரியை ரத்து செய்வதன் மூலம் பனியன் சிறு தொழிலுக்கு ஆக்கமும் ஊக்கமும் ஏற்படும். சிறு தொழில்கள் வளரவேண்டும் என்பதுதான் நமது நோக்கம். இன்றைக்கு பனியன்கள் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிற பொருளாக மாறிவிட்டது. ஆகவே அதற்கும் ஆக்கம் தரவேண்டியது அரசின் கடமை. அந்த அடிப்படையில் பனியன் தொழிலுக்கு விதிக்கப்படுகிற 2 சதவீத விற்பனை வரியை நீக்கவேண்டுமென்று நான் இங்கே என்னுடைய கோரிக்கையை வைக்கிறேன்.

அடுத்தபடியாக, கேளிக்கை வரி-இது எல்லோருக்கும் தெரிந்த உண்மை. எனக்குத் தெரியாது-கேள்விப்பட்டுச் சொல்கிறேன். கேளிக்கை வரியை பெரும்பாலும் ஏமாற்றுகின்றனர். கண்டுபிடிக்கக்கூடிய குற்றங்களின் மீது கூட மேலதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுப்பதில்லை. படத்தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள்-திரை அரங்குக்காரர்கள் மேலதிகாரிகளைச் சரிப் படுத்திக்கொண்டு தப்பித்துக்கொள்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு பரவலாக தமிழ்நாடெங்கும் பேசப்படுகிறது. உள்ளாட்சித் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் திடீரென்று சோதனை நடத்தி குற்றங்களைக் கண்டுபிடித்து மேலதிகாரிகளுக்கு விண்ணப்பம் செய்தாலும்-ஓராண்டு ஆனாலும் கூட உரிய நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை என்று சொல்லப்படுகிறது. இதைக் கவனித்து-இந்தக் கேளிக்கை வரியில் இருந்து திரை அரங்குக்காரர்கள் தப்பித்துக்கொள்ளாதிருக்க திட்டவட்டமாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.



இந்தக் கேளிக்கை வரியில் 90 சதவீதம் உள்ளாட்சித்துறை மன்றங் களுக்குத்தான் போகிறது. அவர்கள் இன்றைய தினம் வருமானம் இல்லாமல் மிகவும் சிரமப்பட்டுக்கொண்டிருக்கிற நேரத்தில்-இந்தக் கேளிக்கை வரியும் பெரும்பாலும் ஏமாற்றப்படுவது உள்ளாட்சி மன்றங் களுக்குத்தான் பாதகமாக இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முதன்முதலாக இந்தக் கேளிக்கை வரியை உயர்த்தினார்கள். அவர்கள் எப்படியோ முதலமைச்சரிடம் வந்து அந்த வரியைக் குறைத்துக்கொண்டு போய்விட்டார்கள். அன்றைக்கே நான் சொன்னேன். இந்தத் திரைப்படங்கள்-திரை அரங்கங்கள் தேவையற்றவை-அனுவசியமானது-மக்களது பொருளாதாரத்தைச் சீரழிக்கக்கூடியது-இதற்குப்போட்ட வரியைக் குறைக்கக்கூடாது என்று. இன்றைக்கும் அதே வேண்டுகோளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வணிக வரி அலுவலகங்களுக்கு தனிக் கட்டிடங்கள் கட்டப்படவேண்டும். 230 கோடிக்கு இந்தத் துறை நமக்கு வருமானத்தைத் தேடித்தருகிறது. அப்படிப்பட்ட துறை அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டிடங்கள் இல்லாமல் அங்கங்கே தனியார் கட்டிடங்களில் வாடகைக்கு இருந்து வருவது சரியல்ல. அதிகாரிகள் எப்படியோ உட்கார்ந்துவிடுகிறார்கள். ஆனால், அலுவலகங் களுக்குச் செல்கிற வணிகர்கள் உட்கார வசதியின்றி தவிக்கிறார்கள். அதிகாரிகள் தங்களை ஏதோ டமூய காலத்து எஜமான்களைப் போலவும்-வரி கட்டுகிற வியாபாரிகள் ஏதோ ஆண்டிகள் போலவும் நடத்தக்கூடிய பரிதாபகரமான காட்சி இன்னமும் இருந்துகொண்டுதான இருக்கின்றன. நான் சட்டமன்ற உறுப்பினராக வருவதற்கு முன்னால் ஒரு அதிகாரி என்னை அல்ல—எனது சகோதரனை "அந்த நாயை அங்கே இருக்கச் சொல்" என்று சொன்னார். அந்த அதிகாரியையும் எனக்குத் தெரியும். வேறு ஒரு சட்டமன்ற உறுப்பினரின் துணை கொண்டு அந்த அதிகாரியை வேறு இடத்திற்குத்தான் மாற்ற முடிந்ததே தவிர அவர் மீது வேறு நடவடிக்கை எதுவும் எடுக்க முடியவில்லை. இப்படி வணிக வரித்துறை அதிகாரிகள் வியாபாரிகளை மரியாதைக் குறைவாக நடத்துகிறார்கள். அவர்களால் வியாபாரிகளுக்கு தொந்தரவுகள்—அவமரியாதை ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். எங்கள் பல்லைப் பிடுங்குங்கள்—வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் வலியில்லாது பிடுங்குங்கள் என்பதுதான் என் கோரிக்கை.

<u>மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:</u> மாண்புமிகு உறுப் பினருக்கு எவ்வளவு பற்கள் இருக்கின்றன? (சிரிப்பு)

<u>திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:</u> மற்றவர்களுக்கு இருப்பதைவிட எனக்குக் குறைவுதான்.

அடுத்து விரால் மீன்களுக்கு நமது மாநிலத்தில் 5 சதவிகிதம் வரி விதிக்கிறார்கள். விரால் மீன்கள் மூலம் நாம் அந்நியச் செலாவணி யைச் சம்பாதித்துக் கொண்டிருக்கிறோம். கேரளம் போன்ற மாநிலங்கள் மிக அதிகமான அளவுக்கு கடல் பொருள்களில் சம்பாதித்துக்கொண் டிருக்கும்போது—நாம் இங்கே ஆரம்ப கட்டத்தில்தான் இருக்கிறோம்.

மீன் விரால்—தவளைக் கால்கள் ஏற்றுமதி செய்வதில் ஆரம்பக் கட்டத்தில் இருக்கும் இந்தத் தொழில் நசித்து விடாதிருக்க இந்த 5 சதவிகிதம் விற்பனை வரியை ரத்து செய்ய வேண்டும். இதற்கு ஆக்கமும், ஊக்கமும் நூ சப்சிடி தரவேண்டும். ஆகவே இதுபற்றி அரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தோல் சம்பந்தமாக விதிக்கப்படுகிற விற்பனை வரியில் அனுமலி இருக்கிறது. அது ஒரு விசித்திரமான வரி—காரணம் நம் மாநிலத்திலும்—நம்முடைய நாட்டிலும் விற்கப்படுகிற தோலுக்கு 2 சதவிகிதம் விற்பனை வரி—அதே தோலை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தால் இதன் மீது விதிக்கப்படுகிற வரி 3 சதவிகிதம். இது ஒரு விசித்திரமான அனுமலி. வெளிநாடுகளுக்கு நாம் ஏற்றுமதி செய்கிற தோல் இதனால் பாதிக்கப்படுகிறது. இதுபற்றி ஏற்கனவே இத்துறை அமைச்சராக இருந்தவரிடம் சுட்டிக் காட்டியிருக்கிறேன். அவரும் இது பற்றி பரிசீலிப்பதாக வாக்களித்திருக்கிறார்கள். தற்போது இந்தத் துறை அமைச்சராக இருக்கக் கூடியவர் இதைப் பற்றி பரிசீலனை செய்து இந்த வரியை ஒன்று குறைக்க வேண்டும்—அல்லது அடியோடு நீக்க வேண்டும்.

அடுத்து, மாட்டுத் தீவனங்கள் பற்றி ஒரு விஷயம். மாட்டுத் தீவனங்களுக்கு வரி விலக்கு இருக்கிறது. மாட்டுத் தீவனங்கள் என்கிற பட்டியலில் உடைக்கப்பட்ட பருத்திக் கொட்டை சேர்க்கப்படவில்லை. அது சேர்க்கப்படாத காரணத்தால் அரசாங்கம் இதற்கு வரி விலக்குக் கொடுத்திருக்கிறதா இல்லையா என்றே தெரியவில்லை. இதன் காரணமாக அதிகாரிகள் இதற்கு வரி கட்ட வேண்டும் என்று நிர்ப்பந்திக்கிற நிலைமை இருப்பதைக் காண்கிறோம். ஆகவே; "காட்டன் ஹஸ்க்" கையும் மாட்டுத் தீவனங்கள் என்ற பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நண்பர் துரைசாமி அவர்கள் பேசும்போது பஞ்சாலை நூல்களுக்கு 3 சதவிகிதம் வரி விதிக்கப்பட்டிருக்கிறது; பஞ்சாலைகள் நல்ல நிலைமையில் இல்லை; அதைக் குறைக்க வேண்டுமென்று சொன்னார்கள். நான் சொல்கிறேன். இன்னும் அந்த வரியைக் கூடுதலாக ஆக்குங்கள். கள்ளச் சந்தையில் கோடிக் கணக்கில் இன்றைக்கு அவர்கள் லாபம் சம்பாதிக்கிறார்கள். கைத்தறி நெசவாளர்களை வாட வைத்து—அவர்களிடம் இரக்கம் காட்டாது கள்ளச் சந்தையில் கொள்ளை அடித்துக் கொண்டிருக்கிற பஞ்சாலைக்காரர்களுக்கு இன்னும் கூடுதலாக வரி விதிக்க வேண்டுமென்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக காட்டு இலாகா. முன்பு நான் எடுத்துக் காட்டியதைப்போல காட்டு இலாகாவில்—தேயிலைத் தோட்டங்களின் பரப்பளவை அதிகப் படுத்த வேண்டும். அதிலும் குறிப்பாக இலங்கை பர்மா போன்ற நாடுகளில் இருந்து வருகிற அகதிகளைப் பயன்படுத்திக் கொண்டு மிக அதிகமாக வருவாய் வரக்கூடிய தேயிலைத் தோட்டங்களை விரிவுபடுத்தியாக வேண்டும். இப்போது இருக்கக்கூடிய பரப்பளவு மிகமிகக் குறைவாக இருக்கிறது. காட்டு நிலங்களை—புறம்போக்கு நிலங்களைக் கையகப்



படுத்தி—இதற்கென்று விசேஷ அதிகாரிகளைக் கூடுமானவரையில் போட்டு—தேயிலைத் தோட்டங்களில் அகதிகளுக்கு வாழ்வளிக்க வேண்டும். நமக்கும் அதிக அளவுக்கு அதன்மூலம் வருமானம் கிடைக்கும்.

அடுத்தபடியாக, சந்தன மரம். சந்தன மரம் உண்மையிலேயே விலை மதிக்க முடியாத பொருள். அப்படியிருந்தும் கூட அதனால் கிடைக்கக்கூடிய பலனை அரசாங்கம் 10 சதவிகிதம்கூட அனுபவித்துக் கொண்டிருக்கவில்லையென்பதுதான் என்னுடைய கருத்து. பெரும் பகுதி; கல்கத்தா போன்ற பெரிய நகரங்களுக்கு எப்படியோ கடத்தப் படுகிறது. இதற்கு அதிகாரிகள் உடந்தை என்று சொல்வது வெள்ளிடையான பேச்சு, எப்படியோ கடத்தப்படுகிறது. நம்முடைய அரசாங்கத்திற்கு உண்மையிலே 10 சதவிகிதத்திற்கும் குறைவாகத்தான் அதிலேயிருந்து வருவாய் கிடைக்கிறது. அதிலே தக்க கவனம் செலுத்த வேண்டும்.

முதுமலை பகுதியிலேயிருக்கிற சந்தன மரங்களை அந்நிய மாநிலத்திலுள்ளவர்கள் இரவோடு இரவாக வந்து தங்கியிருந்து; வெட்டிக் கொண்டு போகிறார்கள் என்று அங்கே சொல்லப்படுகிறது. ஜவ்வாது மலையிலும் அதேபோல் பெரும் அளவுக்குக் கடத்தப்படுகிறது; திருடப் படுகிறது என்று சொல்லப்படுகிறது. ஆகவே, இவற்றையெல்லாம் கண்காணிப்பதோடு, சந்தன மர எண்ணெயைப் பயன்படுத்தி, தொழிற்சாலை ஏற்படுத்திட வேண்டும். அதுபற்றி நம்முடைய மதிப்பிற்குரிய முதலமைச்சரவர்கள் ஆலங்காயத்திலே சந்தன மர எண்ணெய் தொழிற்சாலை ஏற்படுத்தப்படுமென்று வாக்குறுதி அளித்தார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அந்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும். அதுவும் குறிப்பாக முதலமைச்சர் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

விஸ்கோஸ் தொழிற்சாலைக்குக் காட்டு மரங்களை உபயோகிப்பதைப் போல், டான் இந்தியா கம்பெனிக்கு மிளார் காடுகள் குத்தகைக்கு விடப் பட்டிருக்கிறது. நான் சொல்வது என்னவென்றால், அந்தக் காடுகள் ஏக்கருக்கு ரூ. 50 என்ற கணக்குப்படி குத்தகைக்கு விடப்பட்டிருக்கிறது. இது மிக மிகக் குறைவானது. எப்படியோ இந்த டான் இந்தியா லிமிடெடுக்கு மிகப் பெரிய சலுகை தெரிந்தோ, தெரியாமலோ செய்யப் பட்டிருக்கிறது. அவர்கள் இத்தனை ஏக்கர்களை நாங்கள் பயன்படுத்தவில்லை, அதற்குக் கழிவு வேண்டுமென்று அரசாங்கத்திடமிருந்து ரிபேட் கேட்டு பெற்றிருக்கிறார்கள் என்று நான் கேள்விப்படுகிறேன். உண்மையிலே அப்படிப்பட்ட கொழுத்த கம்பெனிகளுக்குத் தரக்கூடாது. அதிலே கண்டிப்பாக இருந்து அதிக வருவாய்க்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

அதிலே இன்னொன்று.. அவர்கள் தோல் தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படுகிற எக்ஸ்ட்ராக்டைஸ்க் கூடுதலான விலைக்கு விற்கிறார்கள். அதையும் சரி செய்ய வேண்டுமென்று வேண்டுகோள் விடுக்கிறேன்.

பெரும்பாலான காடுகளைப் பற்றி எல்லைகளைக் கணக்கெடுத்து, அதனுள் ஏற்படுகிற ஆக்கிரமிப்புக்களைக் கண்டிப்பாக தடுக்க வேண்டும், கடத்தலைத் தடுக்க வேண்டும்.

புது மரங்களை நட வேண்டும். முன்னால் ஆண்டுதோறும் வன மகோத்சவம் என்று விழா கொண்டாடப்படும். அது எந்த தனிப்பட்ட மனிதருக்கும், எந்தக் கட்சிக்கும் சொந்தமல்ல. அது நாட்டின் திட்டம். நம்முடைய அரசு கூட ஏதாவது ஒரு நாளை அல்லது வாரத்தை அதற்கென்று குறிப்பிட்டு, அதிக மரங்களை நட்டு, ஊக்குவித்து, மரங்களைக் கூடுதலாக வளர்ப்பதற்கான திட்டத்தை மேற்கொள்ளவேண்டும்.

புதர்களை வைத்துக் கொண்டு மரமும் வளராது, மக்களுக்கும் பயன்படாது என்ற பகுதிகளை வேண்டுமானால் ஏழைகளுக்கு வீடு கட்டிக் கொடுக்க, விவசாய நிலங்களாகப் பயன படுத்த காட்டு நிலங்களைப் பிரித்துக் கொடுக்க ஆட்சேபணையில்லை. ஆனால் ஒழுங்காகக் காடுகளாக உள்ள பகுதிகள், செழித்து ஓங்கி வரக்கூடிய பகுதிகளிலே ஒரு இன்ஞ் நிலத்தைக் கூட வெட்டிக் கொடுக்கக் கூடாது என்ற கோரிக்கையை நான் விடுக்க ஆசைப்படுகிறேன்.

அதோடு காட்டு இலாகாவுக்கு நன்றி, மிகப் பெரிய நன்றி. காயிதே மில்லத் கல்லூரி ஏற்படுத்த எங்கள் பொதுச் செயலாளரும் அடியேனும் ஈடுபட்டுள்ளோம். அதற்காக, 40 ஏக்கர் நிலத்தை காட்டிலாகா ஒரு எளிய விலைக்குத் தந்துள்ள காரணத்திற்காக, எங்கள் சமுதாயச் சார்பிலே, சம்பந்தப்பட்டவர்களுக்கு நன்றி தெரிவிக்கிறேன்.

அடுத்தபடியாக, அரவக்குறிச்சி பகுதியிலே ஆட்டு வளர்ச்சிப் பண்ணையொன்று ஏற்படுத்த வேண்டும். எங்கள் பகுதியிலே கிடைக்கக்கூடிய கொழுக்கட்டை புல் மிக நல்ல பொருள். அதன் மூலமாக எங்கள் பகுதியிலே உள்ள சத்துள்ள ஆடுகள் ருசியான ஆடுகளாக இருக்கின்றன. அமைச்சரவர்கள் எங்கள் பகுதிக்கு வந்திருந்தால் தெரியும். மற்ற பகுதிகளிலே கிடைக்கக்கூடிய ஆட்டு ருசியை விட இந்த ஆடுகள் ருசியாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மெம்பர்கள் ருசி பார்க்க இங்கே பிரியாணி சப்ளை பண்ணுவார்களா உறுப்பினர் அவர்கள் ?

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: மாண்புமிகு உதவித் தலைவர் அவர்கள் என்னுடையத் தொகுதிக்கு வருகை தருவார்களானால் நிச்சயமாக நான் சொன்ன கூற்றை நிரூபித்துக் காட்டுகிறேன் என்று தெரிவித்து கொள்கிறேன். அந்த அழைப்பு என்றைக்கும் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரவக்குறிச்சியில் ஆட்டு வளர்ச்சிப் பண்ணை ஏற்படுத்துவதன் மூலம் நாட்டு உணவுப் பிரச்னையிலும் நீங்கள் உதவி செய்தவர்கள் ஆவீர்கள். அதைப் பரிசீலிக்க வேண்டும். இது நீண்ட நாள் கோரிக்கை. இதற்கு முக்கியத்துவம் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



பள்ளப்பட்டியிலே கால் நடைக்காக ஒரு மருத்துவ மனை வேண்டுமென்று கேட்டு வருகிறேன். 20 மைல் சுற்றளவுக்கு மையமான பகுதியாக அது இருக்கிறது. அங்கே கால் நடை மருத்துவ மனை இல்லாதது சுற்றுப்புற விவசாய மக்களுக்கு மிகுந்த பாதகமாக இருக்கிறது. ஆகவே பள்ளப்பட்டியிலே ஒரு கால் நடை மருத்துவ மனையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கர்நாடக மாநிலத்திலே என்ன ஏற்பட்டிருக்கிறது என்று தெரியவில்லை. திருச்சியிலிருந்து ஏராளமான ஆடுகள் ஏற்றுமதி செய்யப் படுகின்றன. அதன் காரணமாக எங்கள் பகுதியிலே ஆடுகளின் விலை தாறுமாறாக ஏறிவிட்டது. ஆகவே அதிகாரப்பூர்வமற்ற ஏற்றுமதிகளைத் தடுத்து நிறுத்தவேண்டும்.

அதேபோல் கேரளாவுக்கு ஏராளமான மாடுகள் ஏற்றுமதியாகின்றன. கேரளப் பாதையிலே நாம் சென்று பார்த்தோமென்றால், 50 மைல் கடந்து செல்வதற்குள், நூற்றுக் கணக்கான மாட்டு மந்தைகள் நம்மைக் குறுக்கிட்டு செல்கின்றதைக் காணலாம். அந்த அளவுக்கு ஒவ்வொரு தினமும் நம்முடைய மாநிலத்திலிருந்து அண்டை மாநிலங்களுக்குக் கால்நடைகள் கடத்தப் படுமானால், நம்முடைய மாநிலத்தில் கால்நடைகள் இருக்குமா என்று அஞ்ச வேண்டிய நிலைமையிருக்கும். ஆகவே கால்நடைச் செல்வங்களை வளர்க்க அமைச்சரவர்கள் விசேஷ கவனம் செலுத்த வேண்டுமென்று கூறிக் கொண்டு, என்னுடைய உரையை இத்தோடு முடித்துக் கொள்கிறேன்.

* திரு. மா. மீனாட்சிசுந்தரம்: தலைவரவர்களே, நம்முடைய அமைச்சரவர்களால் கொண்டு வரப்பட்ட மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில கூற ஆசைப்படுகிறேன்.

வேதாரண்யம் தொகுதியில் கோடியக்காடு இருப்பது எல்லோருக்கும் தெரியும். அந்தக் காட்டிலே மான்கள், பன்றிகள், குதிரைகள் போன்ற விலங்கினங்கள் சிறப்பாக இருப்பதை வெளி நாடுகளிலிருந்தும் வெளி மாநிலங்களிலிருந்தும் வருகின்றவர்கள் பார்த்துக் களிக்கின்றனர். அதற்குப் பக்கத்திலே பறவை சரணாலயமாக லகூன் பகுதி இருக்கிறது. அதிலேயே கிட்டத்தட்ட 40, 50 வகை வெளி நாட்டுப் பறவைகள் வந்து கூட்டங் கூட்டமாகத் தங்குகின்ற காட்சிகளையெல்லாம் பார்த்தால் மிகச் சிறப்பாக இருந்தாலும் அந்தப் பறவைகளைப் பார்க்க ஏற்ற வகையில் பொதுமக்கள் எளிதாகப் பார்க்கின்ற வகையில் அமையவில்லை. அதற்காக ஒரு திட்டத்தை முன்னாள் சுற்றுலாத் துறை அமைச்சராக இருந்த திரு. இராசாராம் அவர்கள் அந்தப் பகுதி சுற்றுலாப் பகுதி என்று அறிவித்து அந்தப் பறவை இனங்களையும் காட்டிலே இருக்கிற மிருகங்களையும் பார்க்கின்ற வகையிலே எளிதாகப் பார்க்க சாலைகள் அமைக்க, போட்டுகள் போக, வாய்க்கால் வெட்டி வசதி செய்து தருவதாக அறிவித்தார்கள். அறிவித்ததாக இருக்கிறதே தவிர, பல வசதிகளை அரசு இன்னும் செய்து தரவில்லை. இருப்பினும் சுற்றுலாப் பகுதியாக அறிவித்தமைக்காக அரசுக்கு என்னுடைய தொகுதியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்தக் காட்டைப்போய் பார்க்க, சாலை வசதியும் பறவைகள் சரணாலயம் சென்று பார்க்க வசதியாகவும் ஒரு திட்டத்தை அரசு தீட்ட வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன். அந்தக் காட்டிலேயிருக்கின்ற மான்களை வேட்டையாடுவது ஒரு வழக்கமாக இருக்கிறது என்பது இங்கே இருக்கிறவர்களுக்கும் அமைச்சரவர்களுக்கும் அதிகாரிகளுக்கும் தெரிந்தாலும் அதைத் தடுக்கின்ற வகையிலே அங்கேயிருக்கிற ஊழியர்களுக்கும் அதிகாரிகளுக்கும் தகுந்த பாதுகாப்பு இல்லையென்பதை அங்கே உள்ளவர்கள் அடிக்கடி கூறுகின்றார்கள். மான் வேட்டை வழக்கு ஒன்று இப்பொழுது பதிவாகி, கோர்ட்டிலேயிருக்கிறது. மான் வேட்டை ஆடப்பட்டபோது, அதிகாரிகளும் ஊழியர்களும் சென்றபோது அவர்களிடத்திலே ஆயுதம் இல்லாததால், மான்வேட்டை ஆடியவர்கள் இவர்களைத் துப்பாக்கிக் காட்டி மிரட்டி; இவர்களும் பயந்து கொண்டு ஓடி விட்டார்கள். அவர்களைக் கையும் களவுமாகப் பிடிக்க, எந்தவித ஆயுதமும் இல்லாமல் போய் அது பற்றி இப்பொழுது வழக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதற்கு இனிமேலாவது உடனடியாக நடவடிக்கை எடுத்து, அதிகாரிகள் அங்கேயிருப்பதற்கு துப்பாக்கிகள், இன்னும் சில ஆயுதங்களையும் கொடுத்து, இந்த அரசு உதவிட வேண்டும்.

(முற்டகல் 11.30)

அப்படிச் செய்தால் தான் அப்படிப்பட்ட வேட்டைகளைத் தடுப்பதற்கு அவர்களாலே முடியும். அதோடு மட்டுமல்ல, வேட்டையாடுவது சம்பந்தமாகப் போடப்பட்ட பல வழக்குகள் புத்தகத்திலேயே இருக்கின்றன, இன்னும் வழக்கு மன்றத்திற்குக் கொண்டு செல்லப்படாமல் இருக்கின்றன. ஒரு சில வழக்குகள், இரண்டொரு ஆண்டுகளுக்கு முன்னால் நடந்த வழக்குகளைப் பற்றி நானே அதிகாரிகளிடத்திலே சொல்லியிருக்கிறேன். கூடிய விரைவிலே அந்த வழக்குகளையெல்லாம் விசாரணைக்குக் கொண்டு வந்தால்தான் இனிமேலாவது அங்கே மான்கள் தங்குவதற்கும், மான்கள் அதிகமாக பெருகுவதற்கும் முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அந்தக் காட்டிலே இருக்கக்கூடிய மரங்களை வளர்ப்பதற்கு வாட்ச்மேன் போன்றவர்களை நியமிப்பதற்கும் மரங்களை அதிகமாக வளர்ப்பதற்கும் வழிவகைகள் காணவேண்டும். வறட்சிப் பகுதியாக இப்போது இருப்பதால், மழையில்லாத பகுதியாக இருப்பதால் அங்கேயிருக்கின்ற ஆடுமாடுகள் மான், குதிரை போன்றவைகளுக்கு குடிக்க தண்ணீர் கிடைக்கவில்லை, ஆகவே, அங்கேயிருக்கின்ற குளங்களை வெட்டி ஆழப்படுத்துவதன் மூலம் அந்த மிருகங்களுக்கு தண்ணீர் கிடைக்கச்செய்து அவையெல்லாம் பிழைக்கின்ற வழியேற்படும். ஆகவே, அதற்கும் அரசு ஆவனசெய்ய வேண்டும்.





வனத்துறையிலே பணியாற்றுகின்ற வாட்சர்கள் போன்றவர்களுக்கும் ஓய்வூதியம், கிராஜூவிட்டி; பிராவிடண்ட் பண்ட் போன்ற சலுகைகள் எல்லாம் கிடைக்கச் செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

முத்துப்பேட்டையிலே கிட்டத்தட்ட 400, 500 ஏக்கர் தரிசு நிலங்கள் விவசாயத்திற்கு ஏற்ற நிலங்கள் இருக்கின்றன. சாகுபடி செய்தால் உணவு உற்பத்தி பெருகும் என்ற எண்ணத்திலே இரண்டொரு ஆண்டுகளுக்கு முன்னாலேயே வருவாய்த் துறை அதிகாரிகள் அதைச் சுற்றிப் பார்த்து அந்த இடத்தைச் சாகுபடிக்குக் கொடுக்கலாம் என்று எண்ணி சர்வே செய்து 100, 150 பேர்களுக்குக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்தும் காட்டு இலாகாவிலே அந்த பேப்பர் பெண்டிங் ஆக இருக்கிறது என்று ரெவின்யூ இலாகாவினர் சொல்கிறார்கள்; அதையும் உடனடியாகக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கும் அங்கேயிருக்கிற காட்டைப் பாதுகாப்பதற்கு வசதியாக இருக்கும்.

கோடியக்கரை,தலை ஞாயிறு போன்ற பகுதிகளுக்கு ஒரு ரேஞ்சர் அலுவலகம் வேதாரண்யத்திலே இருக்கிறது. 8, 10 மைல் தொலைவில் அது இருப்பதால் வழக்குகளைப்பற்றியோ அல்லது வேறு எதுபற்றியோ கலந்துரையாடல் செய்வதற்கு வாய்ப்பு குறைவாக இருக்கிறது, ஆகவே கோடியக்கரையிலேயே அந்த அலுவலகத்தை அமைத்தால் அங்கே வந்து சுற்றிப் பார்க்கிறவர்களுக்கும்; வழக்குகளைப்பற்றி கலந்துரையாடுவதற்கும் அங்கேயுள்ள காட்டை நல்ல முறையிலே பாதுகாக்கவும் வசதியாக இருக்கும் என்று தெரிவித்து, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே; இந்தச் சபையின் முன்னால் இருக்கக் கூடிய நான்கு மானியக் கோரிக்கைகளின் மீதும் எங்களுடைய கட்சியின் சார்பில் கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

வணிக வரி 1966-67-ஆம் ஆண்டு 56 கோடி ரூபாய் வருமானமாக இருந்தது இன்றைக்கு 180 கோடி அளவிற்கு உயர்ந்திருக்கிறது என்றால் அதிலே பெரும் பகுதி சாதாரண மக்கள் தான் கொடுக்கிறார்கள். சாதாரண மக்கள் வாங்கக் கூடிய பொருள்களின் விலையில் வரி ஏற்றியதால் உயர்வு ஏற்பட்டு அதை அவர்கள் கொடுக்கிறார்கள். மக்களிடமிருந்து வாங்கக்கூடியதில் இருந்து வணிகர்கள் ஒரு பகுதியை வரி என்று சர்க்காருக்குக் கொடுத்து விட்டு மற்றொரு பகுதியை அவர்களே வைத்துக் கொள்கிறார்கள். எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர் குறிப்பிட்டது போல்இன்னும் கண்டிப்பாக வசூல் செய்வதாக இருந்தாப்

இன்னும் அதிகமாக வருமானம் இருக்கும். ஒரு பைசாவாக இருந்த வரி இன்றைக்கு உயர்த்திக்கொண்டே போகப்பட்டு இந்த ஆண்டு கூட 1 சதவீதம், 2 சதவீதம் என்று உயர்த்தப்பட்டிருக்கிறது. அப்படி உயர்த்தப் பட்டதால் சாதாரண மக்கள் வாங்குகிற பொருள்களின் விலை ஏறி யிருக்கிறது; இதனால் சாதாரண மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதைப் பரிசீலித்து இப்போது உயர்த்தியிருப்பதையாவது குறைக்கவேண்டும்.

பருப்பு போன்ற பொருட்களை எடுத்துக் கொண்டால் $3\frac{1}{2}$ சதவீதத்தி லிருந்து $4\frac{1}{2}$ சதவீதமாக உயர்த்தியிருக்கிறார்கள். காபி, தேயிலை போன்ற பொருள்களுக்கு $5\frac{1}{2}$ சதவீதத்திலிருந்து $6\frac{1}{2}$ சதவீதமாக உயர்த்தியிருக்கி றார்கள். $5\frac{1}{2}$ சதவீதத்திலிருந்து 5 சதவீதமாகக் குறைக்கலாமே தவிர $3\frac{1}{2}$ சதவீதத்திலிருந்து 3 சதவீதமாகக் குறைக்கலாமே தவிர உயர்த்த வேண்டிய அவசியம் கிடையாது. உயர்த்துவதால் சாதாரண மக்கள்தான் பாதிக்கப்படுகிறார்கள். அதைக் குறைக்க வேண்டுமென்று! கேட்டுக்கொள் கிறேன்

இந்த வரி வசூலிலே சிறு சிறு வியாபாரிகள் தான் அதிகமாகப் பாதிக்கப்படுகிறார்கள். அவர்கள் வரியை முழுதாகச் செலுத்தி விடுகி றார்கள். பெரிய வணிகர்கள் வரியை முழுதாகச் செலுத்துவதில்லை. 50 சதவீத வரியைச் செலுத்துகிறார்களா என்பது கூடச் சந்தேகந்தான். சரியான கண்காணிப்பின் மூலமாக முழுவதையும் அவர்களிடமிருந்து வசூலிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இந்தத் துறையிலே திறமையான இளைஞர்களை நியமிக்க வேண்டும். அதிகமாக பழகிப் போனவர்களைப் போடக் கூடாது. எக்ஸ்டன்ஷன் என்ற முறையிலே கொடுத்து பதவி நீடிப்புக் கொடுத்துக்கொண்டே போவது சரிதானா என்பதைப் பார்த்து அதையெல்லாம் அறவே ஒழிக்க வேண்டும்.

இன்று புதிதாக ஒரு பதவி மக்கள் தொடர்பு அலுவலர் என்ற முறையிலே ஏற்படுத்துகிறார்கள். வரி கொடுப்பது, வாங்குவது என்று இருக்கிற இந்தத் துறைக்கு இந்தப் பதவி அவசியம் தானா என்பதை யோசிக்க வேண்டும். அது தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

வரி வசூல் சம்பந்தப்பட்ட மட்டில் சிறு சிறு வியாபாரிகளுக்கு அதிகமாகத் தொந்திரவுகள் கொடுக்கிறார்கள். அதைக் குறைக்க வேண்டும். பல முனை வரி என்று பல பொருட்களுக்கு இருக்கிறது. ஏற்கெனவே பல முனை வரி என்று இருந்த பல பொருட்களுக்கு எல்லாம் ஒரு முனை வரி போட்டு விட்டிருக்கிறார்கள். அதைப் போன்று இன்னும் பல பொருட்களுக்கும் ஒரு முனை வரி என்று போட்டு விட வேண்டும். பல முனை வரி என்று இருப்பதால் 4, 5 கட்டங்களிலே ஒவ்வொரு கட்டத்திலே 4 சதவீதம் என்ற முறையிலே போட்டால், ஒவ்வொரு பொருளும் 5, 6 கைகள் மாறுகின்றன. ஒவ்வொரு தடவையும் ரூபாய்க்கு கால் ரூபாய் என்ற முறையில் வரி போடப்பட்டு விலை அதிகமாகி விடுகிறது. ஆகவே ஒரு முனை வரி என்று எல்லாப் பொருள்





களுக்கும் போட்டு, வரி வசூலை விடாது கறாராகச் செய்தால் வரியில் 50 சதவிகிதம் குறைத்தால் கூட இன்றைக்கு வரக் கூடிய வருமானம் வந்து விடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வணிக வரித் துறை அதிகாரிகளையெல்லாம் சமூக நலத் திட்டங்களுக்கு நன்கொடை வசூலிக்கக் கூடிய நிலைமை இருக்கிறது. ரசீது இல்லை. பெரிய பெரிய வணிகர்கள் 400, 500 ரூபாய் என்று கொடுக்கிறார்கள். ரசீது இல்லை, அப்படி அவர்களிடம் வசூல் செய்தால் வரியை எப்படி அவர்கள் செலுத்த முன் வருவார்கள்? ஆகவே, நன்கொடை வசூல் செய்வதைத் தடுக்க வேண்டும். வணிக வரித் துறை அலுவலர்கள் போவதைத் தடுக்க வேண்டும், சிறுசேமிப்பு போன்று தனியாக அதற்காகப் போய் வசூலிக்கலாம், ஆனால் இந்தக் காரியங்களுக்கு அந்த அதிகாரிகளைப் பயன் படுத்தக் கூடாது.

கால்நடை வளர்ப்பு சம்பந்தமாக தமிழகத்திலே விவசாயிகளுக்கு அது ஒரு பெரிய செல்வமாக இருக்குகிறது. கிராமப் புறங்களில் உள்ள மக்களுக்கு அது ஒரு உப தொழில் மட்டுமல்ல, வருமானம் வரக்கூடிய தாகவும் இருக்கிறது, அதை அபிவிருத்தி செய்ய வேண்டும். இப்போது ஏற்பட்டுள்ள வறட்சியால் கால்நடைகளைப் பலர் விற்று விட்டார்கள். கால் நடைகளுக்குத் தீவனம் கொடுப்பதற்கு முடியாமல் விற்று விட்டார்கள். ஹரியானா போன்ற மாநிலங்களிலே தீவனம் அரசாங்கம் கொடுக்கிறது என்று கேள்விப் பட்டேன். அதைப் போன்று நம்முடைய அரசாங்கமும் தீவனத்தை இலவசமாக வழங்க வேண்டும். அப்படிச் செய்திருந்தால் இம்மாதிரி மக்கள் அவைகளை விற்றிருக்க மாட்டார்கள். வேறு மாநிலங் களுக்கு பல இடங்களுக்கு இன்றைக்கு அவை செல்கின்றன. இருக்கின்ற கால்நடைகளுக்குப் பாதுகாப்புக் கொடுக்கின்ற முறையிலே தீவனத்தை அரசாங்கம் மானியமாகவோ, கடனாகவோ கொடுக்கவேண்டும். மலிவான விலையில் கால்நடைகளுக்கு தீவனம் கிடைக்கவில்லை. கலப்புத் தீவனங்களை அரசாங்கமே தயார் செய்து அவர்களுக்குக் கொடுக்கவேண்டும். பிண்ணாக்கு போன்ற பொருட்களின் விலை அதிகமாகி விட்டது; அந்தப் பொருட்களை அவர்கள் வாங்க முடியாமல் கால்நடைகள் பிழைக்க முடியவில்லை, வேறு இடங்களுக்குப் போகின்றன; மக்கள் விற்று விடுகிறார்கள், அதைத் தடுப்பதற்கு அரசாங்கமே தீவனங்களைக் கொடுக்க வேண்டும்.

பால் உற்பத்தியைப் பொறுத்த வரையில் 84 கிராம் ஒரு நபருக்கு சாரசரி கிடைக்கிற நிலைதான் இருக்கிறது. ஊட்டச் சத்து ஒரு மனிதனுக்கு சராசரி 280 கிராம் பால் கிடைக்க வேண்டும். ஆனால் இப்போது 84 கிராம்தான் கிடைக்கிறது.

ஆகவே, எவ்வளவு வேகமாக, அதிகமாகக் கால்நடைகளை அபிவிருத்தி செய்ய வேண்டியிருக்கிறதோ அதற்கு வேண்டிய வேகத்திலே கவனத் தோடு கால்நடை சம்பந்தப்பட்ட வரையில் செய்கிறதா என்று பார்க்க வேண்டும். பலயிடங்களிலே கால்நடை சம்பந்தப்பட்ட வரையில் உதவி சரியாகக் கிடைப்பதில்லை. எத்தனை திட்டங்களைப் போட்டாலும்கூட விவ

சாயிகள் சம்பந்தப்பட்டவரையில் கால்நடைகள் வாங்குவதற்கு அரசாங்கத்தின் மூலமாகவோ, கூட்டுறவு வங்கிகளின் மூலமாகவோ சரியாகக் கடன் வழங்கவில்லை. அதற்கு வேண்டிய கடன்களை வழங்குவதற்கு சீரான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். இம்மாதிரி செய்வதற்குப் பதிலாக, இன்றைக்கு அந்தக் கால்நடைகளை வாங்குவதற்கு அரசாங்கம் கடன் கொடுப்பதற்குப் பதிலாக இன்றைக்கிருக்கின்ற கால்நடைகளைப் ாது காக்கும் அளவிற்குக்கூட வழியில்லாமல் இருந்துகொண்டிருக்கிறார்

செம்மறியாடுகளைப் பொறுத்த வரையில் 56 இலட்சம்தான் இருக்கின்றன. ஆனால் அதிகமாக இருக்க வேண்டும். வறட்சிப் பகுதிகளில் செம்மறி ஆடுகளை வளர்க்க, அதற்குக் குறைந்தபட்ச மழையும், குறைந்த புல்லும் இருந்தாலும் போதும். அதற்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பித்து கடன் வழங்க முயற்சிக்கப்பட்டது. 49 சங்கங்கள் இன்றைக்கு ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக அறிகிறேன். தமிழ்நாட்டிலே பலயிடங்களிலே, டெல்டாப் பகுதிகளிலேயும், மானாவாரிப் பகுதிகளிலேயும் உள்ள விவசாயிகளுக்கு, அது உபதொழிலாக இருப்பதோடு மட்டுமல்லாமல், விவசாயத்தை அபிவிருத்தி செய்ய வேண்டிய உரங்கள் கிடைக்கும் வகையிலும் இருக்கும். எனவே அந்த செம்மறியாடுகள் வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்களை அதிகமாகத் தோற்றுவித்து, அதற்குத் தனியாக ஒரு ஏற்பாடாவது செய்து, பேங்குகளின் மூலமாகவோ அல்லது எல்.ஐ.சி. மூலமாகவோ கடன்பெற்று எங்கெங்கே முடியுமோ அங்கங்கேயெல்லாம் அதிக செம்மறியாடுகள் வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்களைத் தோற்றுவிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது இருப்பது மிகவும் குறைவு. 56 இலட்சம் செம்மறியாடுகள்தான் இருப்பது மிகவும் குறைவு என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோழி அபிவிருத்தி கார்ப்பரேஷன் சம்பந்தமாக ஆரம்பகாலத்தில் இது சம்பந்தமாக செலவுகளைச் சீராகச் செய்யாததால் பல தவறுகள் நடந்திருக்கின்றன. அதற்காக ஸ்பெஷல் ஆடிட் கூடப் போடப்பட்டதாகக் கேள்விப்படுகிறேன். அந்த ஸ்பெஷல் ஆடிட் போடப்பட்டதே, அதற்கான ரிப்போர்ட் வந்துவிட்டதா, அரசாங்கத்திற்கு அந்த ரிப்போர்ட் கிடைத்துவிட்டதா என்பதை அமைச்சரவர்கள் பதில் சொல்லும்பொழுது கூற வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேமாதிரி, இன்றைக்குக் கோழிப்பண்ணை பலயிடங்களிலே ஆரம்பிக்க அரசாங்கத்திலேயிருந்து அதற்கு வேண்டிய கோழிக் குஞ்சுகளையும், அதற்கு வேண்டிய கோழிகளையும் வாங்கிக் கொடுக்கும் முறையில் அதிக விலை ஆகிறது. இப்படி அதிக விலையில் வாங்குவதால் கோழிப்பண்ணைகளில் நஷ்டம் ஏற்படுகிறது. எனவே, மலிவான ரேட்டிலே குஞ்சுகளை வாங்கி அந்த கோழிப்பண்ணை வைப்பவர்களுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இதனால் கிராம மக்களுக்கு சிறு வருமானம் கிடைக்கும், அந்த விவசாயிகளுக்கு ஒரு உபதொழிலாக அமைந்து உப வருமானம் கிடைக்க வழியேற்படும். அந்த ஏற்பாட்டைச் செய்வதோடு, அந்தக் கோழிப்பண்ணை வைத்திருப்பவர்களுக்கு, கூட்டுறவுச் சங்கங்களாக



அமைத்து, அவைகளின் மூலம், முட்டைகளை விற்று அவர்களுக்கு வருமானத்தை ஏற்படுத்த வேண்டும். அதிலும் தீவிர கவனத்தை அரசாங்கம் செலுத்தவேண்டும். அதிலே ஏனோ தானோ என்றுதான் இந்த அரசாங்கம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இந்தக் கால்நடை இலாக்காவில் சுமார் இரண்டாயிரத்திற்கும் அதிகமான பேர் நிரந்தரமாக்கப்படாமல் டெம்பரரியாகவே இருக்கிறார்கள். பல தொழில்களையும் செய்பவர்கள். மாட்டைப் பிடித்துக் கட்டுவது; போன்ற இம்மாதிரி காரியங்களில் ஈடுபட்ட பல ஆயிரக்கணக்கானவர்கள் டெம்பரரியாகவே இருந்தார்கள். அவர்களில், ஒரு பகுதியினர், ஆயிரத்துச் சொச்சம் பேர்களோ என்னவோ நிரந்தரமாக்கப்பட்டிருக்கிறார்கள். மீதிப்பேர் இன்னும் டெம்பரரியாகவே இருக்கிறார்கள். அவர்களையும் நிரந்தரமாக்கி அவர்களின் வருமானம் உயரத்தக்க அளவிற்குத் தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சின்கோனா சம்பந்தப்பட்டவரையில் பல்விதமான மூலிகைகள், நறுமணச்செடிகள் அதிகமாக வரும் வாய்ப்பிருக்கிறது. அதிலே அதிகக் கவனம் செலுத்தி, எங்கெங்கே வாய்ப்புகள் இருக்கின்றனவோ அங்கேபோய் அதிகமாக சாகுபடி செய்தால் அதிகமாக விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். அதுமட்டுமல்லாமல், அன்னியச் செலாவணியும் கிடைக்கும் வாய்ப்பும் இருக்கிறது. எனவே, அதற்கான விசேஷ கவனம் செலுத்தப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இப்பொழுது அதில் செலுத்தப்படும் கவனம் மிகவும் குறைவு என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

பலயிடங்களில் காடுகளில் கற்பூர மரங்களை வளர்க்கும்பொழுது, அப்படிக் கற்பூர மரங்களை வளர்ப்பதனால் மழை பெய்வது பாதிக்கப்பட்டு வறட்சி ஏற்படுவதாகச் சொல்லுகிறார்கள். அது உண்மையா என்று பார்க்க வேண்டும். பலயிடங்களிலே, புதுக்கோட்டை போன்ற இப்படிப்பட்ட பகுதிகளிலே இம்மாதிரி மரங்களை வளர்த்து ஏதோ தொழிற்சாலைகளுக்கு, பேப்பர் தொழிற்சாலைக்கு வேண்டுமென்று வளர்க்கிறார்கள். இதனால் அவைகள் பூமியிலிருந்து நீரை இழுத்து, அதன் காரணமாக மழை வராமல் வறட்சி ஏற்படுகிறது என்று சொல்லப்படுகிறது. அது சம்பந்தப்பட்டவரையில் பரிசீலித்து இம்மாதிரி கண்டயிடங்களில் இந்த மரங்களை வளர்க்காமல் வேறு மரங்களை வளர்ப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

அடுத்து, காடுகள் சம்பந்தப்பட்டவரையில் எடுத்துக்கொண்டால் மாடுகள் ரொம்ப ரொம்பக் குறைவு. எனவே, காடுகளைப் பெருக்குவதற்கான ஆலோசனைகளைச் செய்யவேண்டும். இது சம்பந்தமாக எனக்கு முன்னால் பேசிய பல அங்கத்தினர்கள் சொல்லியிருக்கிறார்கள். காடுகளில் கிடைக்கும் மூலப்பொருள்களைத் தனிப்பட்ட

வர்கள் நடத்தும் தொழிற்சாலைகளுக்குக் கொடுக்கிறோம். சேஷசாயி மில், சன் பேப்பர் மில், சவுத் இந்தியா விஸ்கோஸ் போன்ற தொழிற்சாலைகளுக்கு மூலப்பொருள்களை, கற்பூர மரக்கட்டைகளைக் கொடுக்கிறோம். எப்படிக்கொடுக்கிறோம் என்றால் குறைந்த ரேட்டிலே கொடுக்கிறோம். அதை இன்னும் அதிகமான விலையில் கொடுக்க முடியும். அவர்கள் அந்தத் தொழிற்சாலைகளின்மூலம் பெரும் பெரும் லாபம் சம்பாதிக்கிறார்கள். எனவே, அங்கே நாம் கொடுக்கும் மூலப் பொருட்களுக்கு நியாயமான விலை வாங்கவேண்டும். இல்லையென்றால் நீங்கள் ஆயிரம் ஏக்கரில் வெட்டிக் கொள்ளுங்கள் என்று சொல்லுகிறோமா என்று தெரியவில்லை. எப்படியிருந்தாலும் அதற்கு நியாயமான, உரிய விலை நிர்ணயிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கிராம நலக் காடுகளைப் பொறுத்தவரையில் 25 இலட்சம் ஏக்கர் ஒதுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. பலயிடங்களிலே, அந்தக் காலத்திலே, ஜமீன் பிரதேசங்களிலே, ஃபாரஸ்டாக இருந்தது, இன்றைக்குச் சும்மா கிடக்கிறது., கேட்பாரற்றுக் கிடக்கிறது. எட்டயபுரம் ஜமீனையொட்டி ஆயிரம் ஏக்கர்கள் அந்தக் காலத்திலே ஃபாரஸ்டாக இருந்து இன்றைக்கு சர்க்காரின் ஜமீன் ஒழிப்புச் சட்டத்தின்படி சர்க்ககாருக்குச் சொந்தமானதாயிருக்கும். ஆனால் அவர்கள் மறுபடியும் கேஸ் நடத்தினார்கள். அதில் சர்க்காரும் கேஸ் நடத்தினார்களா என்ன என்று தெரியவில்லை. சர்க்கார் அதை மறந்துவிட்டது என்று கருதுகிறேன். அந்த ஆயிரம் ஏக்கர்களில் காடுகளை வளர்க்க ஏற்பாடு செய்து, அங்கே வரக்கூடிய மரங்களை வளர்த்தால், கால்நடை அபிவிருத்தியும் ஏற்படும், சர்க்காருக்கு வருமானமும் வரும். மழை பெய்வதற்கான வசதியும் வரும். அதேபோல் எட்டயபுரம் ஜமீனிலே இருப்பதைப்போல பலயிடங்களிலே இருக்கின்றன. அதற்கு அதிகமான நிதியை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

வனத்துறையை எடுத்துக்கொண்டால் தனியாரிடம் 1½ இலட்சம் ஏக்கர், 2 இலட்சம் ஏக்கர் என்ற அளவில் இருக்கிறது. தனியாரிடம் உள்ள காடுகளை அரசாங்கம் நஷ்டயீடு இல்லாமல் எடுத்து காடுகளை வளர்க்கலாம் அல்லது அதை விவசாயிகளுக்குக் கொடுக்கலாம். கேரளாவில் இதுபோன்று, தனியார் காடுகளை நஷ்டயீடு இல்லாமல் எடுத்திருக்கிறார்கள். இதற்கு மத்திய அரசு குறுக்கிடவில்லை. அல்லது, அரசிலமைப்புச் சட்டம் குறுக்கிடவில்லை. தனியார் காடுகளில் அவர்கள் மரங்களை வைத்து வளர்ப்பதில்லை, அங்கே தானாகவே வளர்கின்றன. அந்தக் காலத்தில் அப்படியிருந்தவற்றை தனியார்கள் தங்களுடையதாக வைத்துக்கொண்டார்கள். எனவே, அந்தக் காடுகளை நஷ்டயீடு கொடுக்காமல் சர்க்கார் எடுத்து அவைகள் சாகுபடிக்கு லாயக்கானவைகளாக இருந்தால் அவற்றை ஏழை அரிசனங்களுக்கு கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இதில் துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.



அடுத்தபடியாக, காண்ட்ராக்ட் சம்பந்தமாகப் பார்த்தால் ஏகப்பட்ட ஊழல். அவர்கள் எந்த மரத்தை வெட்ட வேண்டுமென்று சொல்கிறோமோ அதற்கடுத்த மரங்களையும் சேர்த்து வெட்டிக்கொண்டு செல்கிறார்கள். அதற்கான கண்காணிப்பு சரியானபடி இல்லை. சில நேரங்களில் மலைப்பகுதிகளில் அதிகமான மரங்களை வெட்டிக்கொண்டு போய்விடுகிறார்கள். சில நேரங்களில், நாம் வெட்டச் சொன்னது ஒரு இடமாக இருக்கும், அவர்கள் வேறு இடத்தில் வெட்டிச் செல்கிறார்கள். இப்படியெல்லாம் நடக்காமல் பாதுகாக்கப்பட வேண்டுமென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்து, முக்கியமான ஒரு விஷயம். குமரி கல்டிவேஷன் என்று இருக்கிறது. சேலம் மாவட்டம் ஓமலூர் பகுதியில் காஞ்சேரி ரிசர்வ் ஃபாரஸ்ட் என்று 1972–73ஆம் ஆண்டில் விடப்பட்டது. அது 31 அரிசனங்களுக்கு 62 ஏக்கர் விடப்பட்டது. அவர்களுக்கு 3 வருஷம் காண்ட்ராக்ட். ஆனால் அவர்களை ஒரு வருஷத்திலேயே ஃபாரஸ்ட் ஆபீஸர்கள் வெளியேற்றி விட்டார்கள். அந்த 31 பேரும் ஏழை அரிசனங்கள், நிலமற்ற ஏழைகள். அவர்களிடமிருந்த அந்த இடம் நல்ல வசதியும், செல்வாக்கும் படைத்த பலருக்குக் கொடுக்கபட்டிருக்கிறது. அது சம்பந்தமாக நான்கூட சம்பந்தப்பட்ட பெரிய அதிகாரிகளைப் பார்க்க நண்பர் வடிவேலுடன் சென்று அதிகாரிகளை நேரடியாகச் சந்தித்துக் கேட்டோம். அதற்கு அவர்கள் நாங்கள் என்ன செய்வது என்று சொல்லுகிறார்கள். செல்வாக்குப் படைத்த லோகல் ஆட்கள், அல்லது எம். எல்.ஏ.க்கள் சிலர் அதற்கு ஆதரவாக இருக்கிறார்களோ என்னவோ தெரியவில்லை. இன்னும் அந்த 31 அரிசன மக்களுக்கு 62 ஏக்கர் நிலம் கொடுக்கப்படவில்லை. இது சேலம் மாவட்டத்தில் காஞ்சேரி ரிசர்வ் ஃபாரஸ்டில் நடந்திருக்கிறது. அவர்கள் தங்கள் கையிலேயிருந்த காசைப்போட்டு, கணவனும் மனைவியுமாகச் சேர்ந்து உழைத்திருக்கிர்கள். அவர்களை ஒரு வருஷத்திலேயே வெளியேற்றி இருக்கிறார்கள். அவர்களை வெளியேற்றி இரண்டாண்டுகளாகியும் அவர்களுக்கு அந்த நிலம் இன்னும் திருப்பியளிக்கப்படவில்லை. அதிகாரிகள்கூட, வேறு இடம் இருக்கிறது, அந்த இடத்தைக் கொடுக்கிறோம் என்று சொன்னார்கள். இந்த இரண்டு வருஷமாக 500 ஏக்கர் நிலம் கொடுக்கப்பட்டிருக்கிறது, 500 ஏக்கர் நிலம் அப்படிப் பலருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது, வசதியுள்ள ஆட்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. என்ன காரணத்தினால் அப்படிப்பட்டவர்களுக்குக் கொடுத்தார்களோ தெரியவில்லை, பலன் ஏதாவது பெற்றுக்கொண்டு கொடுத்தார்களோ என்னவோ தெரியவில்லை. ஆனால் இந்த 31 அரிசனங்களுக்கு இன்று வரையில் நிலம் எதுவும் கொடுக்கப்படவில்லை. இதை உடனடியாக அமைச்சரவர்கள் கவனித்து, அந்த நிலத்தை, அவர்கள் சாகுபடி செய்யக்கூடிய அந்த நிலத்தைக் கொடுக்க முடியாவிட்டாலும், வேறு இடத்திலே,

அவர்கள் கஷ்டப்பட்டதற்குப் பலன் திரும்பக் கிடைக்கும் வகையில், அவர்கள் கையிலேயிருந்து செலவு செய்த காசைத் திரும்பப் பெறும் வகையிலே அந்த 31 அரிசனங்களுக்கும் உடனடியாக நிலம் கொடுப்பதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. செ. சதாசிவம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கும் மானியக் கோரிக்கைகளை வரவேற்று என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

கிராமங்களிலுள்ள கால்நடை மருத்துவமனை பொறுப்பு வன இலாகா துறை அமைச்சர் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அவற்றைப் பற்றி இரண்டொரு கருத்துக்கள் சொல்ல விரும்புகிறேன். கால்நடைகளுக்கெல்லாம் கிராமங்களிலே ஆங்காங்கு மருத்துவ சென்டர்கள் அமைக்கப்பட்டிருந்தாலும் கூட, அந்த மருத்துவமனைப் பொறுப்பில் இருக்கிறவர்கள் எங்கோ தங்கி இருந்து சரியான நேரத்திற்கு வராமல் அவர்களின் சவுகரியப்பட்ட நேரத்திற்கு வந்து போய்க் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் அந்தந்த கிராமங்களிலேயே தங்கியிருந்து பணிபுரிய வேண்டுமென்று கண்டிப்பான உத்தரவு போடவேண்டும். இந்த சென்டர்கள் கிராமங்களில் அமைக்கப்பட்டிருந்தாலும் சொந்த கட்டடம் இல்லாமல் வாடகைக் கட்டடத்தில் இருந்துக் கொண்டிருக்கும் காரணத்தாலும் சரியான மருந்துகள் கூட இல்லாமல் இருப்பதாலும் பலவிதமான சால்ஜாப்புகளைச் சொல்லிக்கொண்டு மருத்துவ வசதி கிராம மக்களுடைய கால்நடைகளுக்குக் கிடைக்க முடியாத நிலையில் இருந்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, ஒவ்வொரு மருத்துவ சென்டருக்கும் ஒரு கட்டிடம் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அரியலூர் வட்டம் செந்துறை கிராமத்தில் ஒரு கால்நடை மருத்துவமனை இருக்கிறது. அங்கிருக்கக்கூடிய அதிகாரிகள், கால்நடைகள் நோய்வாய்பட்டால் கால்நடைச் சொந்தக்காரர்கள் தங்கள் வீட்டுக்கு வந்து பார்க்கும்படி கேட்டுக் கொண்டால் வர மறுக்கிறார்கள். ஆஸ்பத்திரிக்கு கொண்டு வந்தால் நான் வைத்தியம் செய்வோம் என்று கூறுகின்றார்கள். மாடுகளுக்கு சப்பை நோய் கண்டிருந்தால் அவற்றை ஓட்டி செல்லவும் முடியாது, வேறு வண்டிகளில் வைத்துக் கொண்டு செல்லவும் முடியாது. இந்த நிலையில் அந்த மாடுகள் நோய்வாய்ப்பட்டு குணமடையாத நிலையில் இறந்துவிடும் நிலைமை ஏற்படுகிறது. எனவே, அதற்கென்று தனியாக கட்டணம் வசூலித்தாலும் பரவாயில்லை. வீட்டுக்கு சென்று பார்க்க வழி செய்யவேண்டும். இதற்கு கண்டிப்பான முறையில் உத்தரவு அளிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அரியலூர் வட்டத்தில் அரசாங்கத்தின் பாதுகாக்கப்பட்ட காடுகள் ஏராளமாக இருக்கின்றன. அவை இரண்டு பிரிவாக இருக்கின்றன. வனத்துறை மூலமாக பாதுகாக்கப்படுபவை, வனத்துறை கார்பரேஷன் மூலமாகப்





பாதுகாக்கப்படுபடுபவை என்று இரு பிரிவாக இருக்கின்றன. அது இரண்டு பிரிவாக பரிபாலிக்கப்பட்டு வருகிறது. அரசாங்க பாதுகாக்கப்பட்ட காடுகளில் சில இடங்களில் எந்தவிதமான முந்திரி, மூங்கில் போன்ற வருமானம் வரக்கூடிய பயிர்களைச் சாகுபடிச் செய்ய முடியாத நிலங்கள் ஏராளமாக இருக்கின்றன. அவற்றில் அரசாங்கத்தின் சார்பில் இருக்கின்ற காடுகளில் பொதுப்பணித் துறை மூலமாகவும், பஞ்சாயத்து யூனியன்கள் மூலமாகவும் பொது காரியங்கள் சிலவற்றுக்கு அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருந்தும் கூட. மூன்று, நான்கு ஆண்டு காலமாக அனுமதி அளிக்கப்படாமல் பல வேலைகள் தடைப்பட்டிருக்கின்றன.

அரியலூர் வட்டம் செந்துறை பகுதியில் கவங்காரம் பாரஸ்ட் இருக்கிறது. அங்கு பள்ளிக்கொண்டான் ஏரியை ஆயக்கட்டு ஏரியாக அபிவிருத்தி செய்து அமைக்க பொதுப் பணித்துறை 1971–ம் ஆண்டிலேயே மனு செய்திருந்தும்கூட இதுவரை அனுமதி அளிக்கப்படவில்லை. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் திருச்சி மாவட்டத்தில் நீர்ப்பாசன மாநாட்டை நடத்திக்கொண்டிருந்தபோது கூட இதைப் பற்றிச் சொன்னேன். அரசாங்கத்தின் ஒரு இலாகாவிலிருந்து மற்றொரு இலாகாவுக்கு அனுமதி கிடைக்காத காரணத்தால் எந்த விதமான பயனும் இல்லாத அளவுக்கு உள்ள நிலம் அப்படியே கிடக்கிறது. அதை ஆயகட்டு ஏரியாக உண்டாக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது.

அதே போன்று வங்காரம் பெரிய ஏரியை சீர்திருத்துவதற்கும் வங்காரம் கிராமத்திலிருந்து சன்னாசிநல்லூர் கிராமத்திற்குப் பாதை அமைக்க மனு செய்தும் கூட அந்த அனுமதி இதுவரை வழங்கப்படவில்லை. இந்த இடம் வெறும் களர் மண் தரைதான். ஒன்றுமே பயிர் செய்ய முடியாது. அங்கிருக்கும் விளாம்பழங்களை ஏலம் விடுவதன் மூலம் எந்த விதமான வருமானமும் கிடையாது. ஒரு ஏரிக்கு 40 ஏக்கர்தான் தேவை. ஆகவே, அதற்கான அனுமதியை வழங்கி அந்த ஏரியை அமைப்பதன் மூலம் அந்த பகுதி கிராமங்கள் வசதி பெற முடியும். ஆகவே அதற்கான அனுமதியை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உடையார்பாளையம் நகரத்திற்குச் செல்ல துலாக்குறிச்சி கிராமத்திலிருந்து பாதுகாக்கப்பட்ட காட்டின் வழியாக ரோடு அமைக்க அனுமதி அளிக்க வேண்டுமென்று விண்ணப்பம் செய்யப்பட்டது. அதற்கும் இதுவரை அனுமதி வழங்கப்படவில்லை. இன்று கூட அந்தப் பாதையில்தான் மக்கள் நடந்து போய்க்கொண்டிருக்கிறார்கள்; வண்டிகள் சென்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால் அனுமதி இல்லாத காரணத்தால் ரோடு போடும் வேலை நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. மார்கெட்டிங் கமிட்டி மூலம் அந்த ரோடு போடும் வேலைக்காக ஒரு தொகை ஒதுக்கப்பட்டும் கூட அனுமதி கிடைக்காத காரணத்தால் அதை செலவழிக்க முடியாமல், அனுமதி கிடைக்காமல் இரண்டு மூன்று ஆண்டு காலமாக அப்படியே இருந்துக் கொண்டிருக்கிறது. உடனடியாக அனுமதி கொடுத்து அந்தச் சாலையைப் போட்டுக்கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

[திரு. செ. சதாசிவம்] [1975 மார்ச் 31

சில காடுகளில் முந்திரி பயிரிடப்பட்டிருக்கின்றது. இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு வரை முந்திரி மகசூல் பொறுக்கி எடுத்துக்கொள்ள ஏலத்தின் மூலமாக விடப்பட்டது; விற்கப்பட்டது. இப்போது அரசாங்கமே நேரடியாக முந்திரிக் கொட்டைகளைப் பொறுக்கி எடுத்து விற்பனை செய்து கொண்டு வருகிறது. மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் முந்திரிக் கொட்டையின் விலை 80 கிலோ மூட்டை ஒன்றுக்கு 150 ரூபாயாக இருந்தது. சென்ற ஆண்டு 330 ரூபாயாக இருந்தது; இந்த ஆண்டு 230 ரூபாய்க்கு வந்திருக்கிறது. 150 ரூபாய் என்று ஏலத்திற்கு விட்ட காரணத்தால் ஏலத்திற்கு விட்ட தொகையும் தற்சமயம் விற்பனை ஆகிய தொகையும் ஏறத்தாழ ஒன்றாக இருக்கிறது என்று வைத்துக்கொண்டாலும் இந்த கொட்டைகளை பொறுக்குவதில் சிரமங்கள் ஏற்படுகின்றன.
பக்கத்திலுள்ள கிராமங்களில் உள்ளவர்களை வேலைக்கு வைத்து அந்த அதிகாரிகள் முந்திரிக் கொட்டைகளை பொறுக்க வேண்டியதாக இருக்கிறது. கிராமங்களிலுள்ளவர்கள் கூலிக்குக் கூலியும் பெற்றுக் கொண்டு முந்திரி கொட்டைகளையும் மறைத்து வீட்டுக்கு எடுத்துச்செல்லக்கூடிய நிலை இருக்கிறது. இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை ஏலத்தின் மூலமாகவும், மறு ஆண்டு அரசாங்கம் நேரடியாகவும் முந்திரிக் கொட்டைகளை விற்று எதிலே லாபம் அதிகமாக கிடைக்கிறது என்று முடிவு செய்வது நலமாக இருக்கும்.

இவற்றைத் தவிர தனியார் முந்திரிக் காடுகளும் இருக்கின்றன. கேரள மாநிலத்திலே இதற்கு நல்ல கிராக்கி இருப்பதாகத் தெரிகிறது. தமிழ் நாட்டில் முந்திரிக் கொட்டை உடைப்புத் தொழிற்சாலை இல்லாத காரணத்தாலும் தமிழ் நாட்டிலிருந்து வெளிநாட்டு ஏற்றுமதிக்கு அனுமதிப் பெற்றவர்கள் இல்லாத காரணத்தாலும் கேரளாக்காரர்கள் வாங்கிய பிறகு தான் விலை நிர்ணயம் செய்ய வேண்டியிருக்கிறது. சென்ற ஆண்டில் கொள் முதல் விலைக்கு 5 சதவீதம் டாக்ஸ் விதித்திருப்பதன் காரணமாக இப்போது அங்கு வருகிற வியாபாரிகள் எல்லாம் "சி" பார்ம் 3 சதவீதம் சேர்த்து கிட்டத்தட்ட 8 சதவீதம் விலையை குறைத்து வைத்து பொது மக்களிடத்தில் கொள்முதல் செய்துகொள்ள ஏற்பாடு செய்கிறார்கள்.

[நண்பகல் 12-00]

ஆக, வெளிநாட்டு செலாவணியைப் பெருகிற இந்த முந்திரிக்கொட்டை உடைப்பு தொழிற்சாலையைப் பொறுத்து அதிகமாக முந்திரி விளைகிற திருச்சி மாவட்டத்தில் ஜாயின்ட் செக்டாரில் (முந்திரி பயிரிடுகிறவர்கள் இவ்வளவு சதவிகிதம் கொடுக்க வேண்டும் என்றும் அரசாங்கம் இவ்வளவு சதவிகிதம் கொடுக்க வேண்டுமென்றும் போட்டு) அங்கு முந்திரி உடைப்புத் தொழிற்சாலையை ஏற்படுத்துவது என்று சொன்னால் அதை ஏற்று நடத்த அங்குள்ள மக்கள் தயாராயிருக்கிறார்கள்.

ஆனால், வருடம் பூராவிற்கும் அவர்களுக்கு வேலை கொடுக்க முடியுமா என்று சந்தேகத்தை கிளப்பலாம். எப்படி கரும்பாலைகளில் ஆண்டுக்கு நான்கு அல்லது ஐந்து மாதங்கள் வேலை செய்து விட்டு, பாக்கி நாட்களில் நிறுத்தி வைக்கிறார்களோ அதேபோல் முந்திரிக் கொட்டைகளைத் தயாரிக்கும் தொழிற்சாலையிலும் முடிகிற காலம் வரையில் வேலை கொடுத்து பாக்கி



1975 மார்ச் 31] [திரு. செ. சதாசிவம்]

நாட்களில் நிறுத்தி வைக்கலாம். ஆகவே, அரியலூர் வட்டத்தில் முந்திரிக் கொட்டை உடைப்புத் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பின்னர், சிறு வியாபாரிகளுக்கு இந்த ஒருமுனை விற்பனை வரியை அதிகமான பொருள்களுக்கு ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் என்றும் இந்த டேர்ண் ஓவர் தொகையை ரூ. 50,000 லிருந்து ரூ. 75,000 ஆக உயர்த்திக்கொடுக்குமாறும் கேட்டுக்கொண்டு, எனக்கு இந்தச் சந்தர்ப்பத்தை அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, மாண்புமிகு வன இலாகா அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் வைத்திருக்கிற மானியக் கோரிக்கைகள்மீது எங்கள் கட்சிசார்பில் கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுத் தீர்மானங்களையொட்டி சில கருத்துக்கள் சொல்ல விரும்புகிறேன்.

அரசாங்கம் தயார் செய்து இரண்டொரு தினங்களுக்கு முன்பாக இந்த மன்றத்தில் வைத்த மாநிலத் திட்ட அறிக்கையைப் பார்த்தபோது ஏறத்தாழ 23,000 ஏக்கர் காடுகள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருப்பதாகவும் அவை தனியார் கைகளில் இருப்பதாகவும் பார்ப்பதற்கு வாய்ப்பு ஏற்பட்டது. இந்த 23,000 ஏக்கர் நிலங்களும் அதிக வசதி உள்ளவர்கள் கைகளில்தான் இருக்கிறது என்பதை இந்த மன்றத்தில் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதை ஒரு வேளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன். இந்த அளவிற்கு வசதி படைத்தவர்கள் அரசாங்க நிலங்களை ஆக்கிரமிப்பு செய்து கொண்டு தங்கள் வருவாய்களைப் பெருக்கிக்கொள்வதற்கு அரசாங்கம் உறுதுணையாக இருக்கிறது என்று சொன்னால் அது நிச்சயமாக வருந்தக்கூடிய ஒரு நிலையாகும்.

ஆனால், வசதி படைத்தவர்கள் இந்த அளவிற்கு அரசாங்கத்திற்குச் சொந்தமான காட்டு நிலங்களை வைத்திருந்தாலும் கூட அரசாங்கம் அவர்களை அப்புறப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. ஆனால், ஏழை எளிய மக்கள் ஐந்து அல்லது இருபத்தைந்து சென்ட் நிலத்தை, அரசாங்க நிலத்தை வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்றால் அவர்களை அப்புறப்படுத்துவதில் தீவிரமாக இருக்கிறது இந்த அரசாங்கம். ரெவன்யூ புறம்போக்குகளைக்கூட வன இலாகா ஆக்கிரமிக்கிறது. ரெவின்யூ புறம்போக்கை ஏழை எளிய மக்கள் வைத்திருக்கிறார்கள் என்றால், அது காட்டு இலாகா நிலத்தின் பக்கத்தில் இருக்கிறது என்றால் அந்த ஏழை எளிய மக்களை அப்புறப்படுத்தி அந்த நிலத்தை காட்டு நிலத்தோடு சேர்த்துக்கொள்ளும் நிகழ்ச்சிகள் ஆங்காங்கே நடைபெறுகின்றன என்பதை அரசின் கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன்.

எங்கள் பக்கத்தில் குறிப்பாக பல வழக்குகள் இருக்கின்றன. அவற்றை சர்வே டிப்பார்ட்மென்ட் கூட அவை வன இலாகாவிற்குச் சொந்தமானவை அல்ல ரெவின்யூ டிப்பார்ட்மென்ட்டுக்குச் சொந்தமானவை என்று கூறியும் கூட அவற்றை கைவசம் வைத்திருப்பவர்களுக்குப் பட்டா செய்து கொடுக்க

இடையூறு செய்கிறார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், இம்மாதிரி ஏழை மக்கள் பாதிக்கப்படக்கூடிய அளவிற்கு இந்தத் துறை செயல்படக்கூடாது. இந்தத் துறையில் உள்ள அரசாங்க ஊழியர்கள் இப்படிப்பட்ட முறைகளைக் கையாளக்கூடாது என்று அமைச்சர் அவர்கள் கட்டளை பிறப்பிக்க வேண்டும். ரெவன்யூ நிலம் என்றிருந்தால் அதை ஏழை மக்களுக்குப் பட்டா செய்து கொடுப்பதில் எந்தவிதமான இடையூறும் இருக்கக்கூடாது.

அடுத்தபடியாக, எங்கள் பகுதியைப் பொறுத்தவரையில் வன இலாகா நிலங்களுக்கும் வன இலாகா செக்போஸ்ட்ஸ்க்கும் இடையே ஏறத்தாழ பத்து பதினைந்து மைல் தூரம் இருக்கிறது. இந்த இரண்டுக்கும் இடையே பட்டா நிலங்கள் அதிகமாக இருக்கின்றன. தனியார்களுக்குச் சொந்தமான இந்தப் பட்டா நிலங்களை அனுபவிப்பதில் பல கஷ்டங்கள் உள்ளன. பல இடையூறுகளை வன இலாகா அதிகாரிகள் செய்து கொண்டிருக்கிறார்கள். தனியார்களுக்குச் சொந்தமான அந்த நிலங்களில் இருந்து தங்களுக்குச் சொந்தமான மரங்கள் அல்லது தழை உரம் போன்றவற்றை எடுத்துச் செல்ல வேண்டுமென்றால் இப்போதுள்ள விதிமுறைகள் படி முதலாவதாக வில்லேஜ் ஆபீஸரின் அனுமதி வாங்க வேண்டும். தங்களுக்குச் சொந்தமான நிலத்திற்கு ப்ளான் தயார் செய்து திருநெல்வேலி மாவட்டத்தில் இருக்கிற டி. எப். ஓ. யிடத்தில் கொடுத்து அவர்கள் அனுமதி பெற்றுத்தான் தங்கள் சொந்த நிலத்திலிருந்து தழை உரம் போன்றவற்றை எடுத்துச் செல்லலாம் என்று விதி இருக்கிறது. ஏழை மக்களுக்கு இது மிகவும் கஷ்டத்தைக் கொடுக்கிறது. எனவே எவ்வளவோ ஆண்டுகளுக்கு முன்னால் தயார் செய்த இந்த விதிமுறைகளை உடனடியாக மாற்றியமைக்க வேண்டும். தங்களுக்குச் சொந்தமான நிலத்திலிருந்து மரங்கள், தழை உரம் போன்றவற்றை எடுத்துச் செல்வதற்கு எந்தவிதமான இடையூறும் இருத்தல் கூடாது.

அடுத்தபடியாக, எனக்கு முன்பு பேசிய ஒரு உறுப்பினர்- முந்திரிக் கொட்டை தயாரிக்கும் பாக்டரி இல்லை என்று சொன்னார்கள். இங்கிருக்கிற முந்திரிக் கொட்டைகள் கேரளாவிற்குச் சென்று கொண்டிருக்கின்றன என்று சொன்னார்கள். உண்மை அது அல்ல. எங்கள் மாவட்டத்தில் ஏறத்தாழ அறுபது முந்திரிக் கொட்டை தயாரிக்கும் பாக்டரிகள் உள்ளன. அவற்றிற்குத் தேவையான முந்திரி நம் மாநிலத்தில் உற்பத்தியாவதில்லை. அவற்றிற்குத் தேவையான முந்திரி கேரளாவிலிருந்து வந்துகொண்டிருக்கிறது. இப்போது கேரளா அரசு ஒரு ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். அங்கிருந்து முந்திரி வரக்கூடாது என்று உத்தரவு பிறப்பித்திருப்பதால் அங்குள்ள முந்திரிக்கொட்டை தயாரிக்கும் பாக்டரிகளில் உள்ள ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் இப்போது பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். அதிக அளவிற்கு முந்திரி உற்பத்தி செய்யும் அளவிற்கு நம் மாநிலத்தில் திட்டங்கள் இருந்தாலும் கூட நமக்குத் தேவையான அளவிற்கு முந்திரி உற்பத்தி செய்யும் அளவிற்கு ஏற்பாடுகள் செய்யப்படவில்லை. எனவே, அதிக அளவிற்கு முந்திரி சாகுபடி செய்யக்கூடிய அளவிற்கு வன இலாகா தனது திட்டங்களை விஸ்தரிக்கவேண்டும். எங்கள் பகுதியில் முந்திரி விவசாயத்திற்குத்



தேவையான நிலங்கள் இருக்கின்றன. அங்கு இத் திட்டத்தை விஸ்தரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, கோதையாறு பகுதியில் ஒரு அவல நிலை உள்ளது. கோதையாறு மின்சாரத் திட்டத்திற்காக வன இலாகாவிலிருந்து நிலம் கொடுத்தோம். அந்த நிலத்தை இப்போது பி. டப்ளியூ. டி. க்கு கொடுத்து அத் திட்டத்தில் வேலை செய்கிற தொழிலாளர்கள் அங்கு குடியேறி அங்கு வீடுகள் கட்டிக் கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அங்கு கோதையாறு வில்லேஜ் பஞ்சாயத்து என்ற ஒரு பஞ்சாயத்தும் இருக்கிறது. இப்போது அங்கு குடியிருக்கிற மக்களை அங்கிருந்து அகற்ற வேண்டும் என்று நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டு வருகின்றன. அவர்களை அங்கிருந்து அகற்றுவது எனபதில் ஏற்படுகிற விளைவு என்னவென்றால் அந்த ஏழை மக்கள் குடியிருப்பதற்கு வேறு இடமில்லை, அதோடு, அந்தப் பஞ்சாயத்தும் செயல்பட வழியில்லாது போகும். எனவே எடுக்கப்பட்டிருக்கிற இந்த நடவடிக்கைகளை அரசாங்கம் உடனே நிறுத்தியாக வேண்டும். அந்தப் பஞ்சாயத்து தொடர்ந்து செயல்படவும் அங்குள்ள மக்கள் அங்கு வாழவும் வகை செய்ய வேண்டும்.

கடைசியாக, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள ரப்பர் ப்ளான்டேஷன்ஸ் பற்றி சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். ஏற்கனவே விவசாய மானிய விவாதத்தில் நான் கலந்துகொண்டு பேசும்போது தனியார் பயிரிடுகிற ரப்பர் ப்ளான்டேஷன்ஸ் பொறுத்து விவசாய இலாகா தான் அதற்குப் பொறுப்பாக இருக்கும் என்று கருதி சில கருத்துக்கள் சொல்ல நான் முற்பட்ட போது விவசாயத்துறை அமைச்சர் அவர்கள் எனக்கும் அந்த ரப்பர் ப்ளான்டேஷன்ஸ்க்கும் ஒரு பந்தமும் இல்லை அவை வன இலாகாவைச் சேர்ந்ததாக இருக்கும் என்று சொன்னார், கள். ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் வைத்திருக்கிற குறிப்பேடுகளைப் பார்க்கும்போது அங்கிருக்கிற தனியார் ரப்பர் தோட்டங்கள் பற்றி எந்தக் குறிப்பும் காணப்படவில்லை. இந்த இலாகாவிற்கு அதில் பொறுப்பு இருப்பதாகத் தெரியவில்லை. எனவே, அந்தத் தனியார் ரப்பர் தோட்டங்கள் எந்த இலாகாவைச் சார்ந்தது; அவற்றிற்கு எந்த அமைச்சர் பொறுப்பு என்பதை நிச்சயமாக விளக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஏனெனில், ஆயிரம் ஆயிரம் ஏக்கர் தனியார் ரப்பர் தோட்டங்கள் இருக்கின்றன. பல காரியங்கள் செய்து கொண்டேயிருக்கிறார்கள். ஆகவே, எந்த இலாகாவிற்கு எந்தப் பொறுப்பு என்பதை விளக்க வேண்டும்.

அடுத்து, அரசாங்க ரப்பர் தோட்டத்தைப் பொறுத்தமட்டில் நாம் பெரிய அளவில் ரப்பர் அங்கே பயிர் செய்து கொண்டிருக்கிறோம். ஆனால் அங்கே வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு அரசாங்கம் போதிய ஊதியம் கொடுக்கவில்லை என்பதை அரசாங்கம் ஒப்புக்கொள்ளும் என்று நினைக்கிறேன். சாதாரணமாக அவர்களுக்கு ஊதியம் வழங்கும் போது தனியார் தோட்டங்களில் வேலை செய்யும் தொழிளாலர்களுக்கு தனியார் முதலாளிகள் எந்த வகையில் ஊதியம் கொடுக்கிறார்களோ அதைப் பின்பற்றி நாம் கொடுத்து வருகிறோம். அந்த முறையை மாற்ற வேண்டும். தேசிய மயமாக்கப்பட்ட பின்னாலே, அரசாங்கம் அவர்களுக்கு

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1975 மார்ச், 31

பாதுகாப்பு அளித்து நல்ல முறையில் அவர்களுக்கு ஊதியம் அளிக்கக் கடமைப்பட்டு இருக்கிறது. ஆனால் ஏதோ பிற்பட்ட சக்திகள், தனியார் கொடுக்கும் ஊதியத்தைப் பின்பற்றி அரசாங்கத் தொழிற்சாலையில் வேலைச் செய்யும் தொழிலாளர்களுக்குக் கொடுப்பது என்றால் நிச்சயமாக அது விரும்பத்தக்கதாக இல்லை. தனியார் துறையில் கொடுக்கும் ஊதியத்தையே நாமும் கொடுப்பது என்று ஆரம்பித்தால், அரசாங்கத் தொழிற்சாலையில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு ஆர்வம் இல்லாமல் போய்விடும். அவர்களுக்கு வேலையில் ஆர்வம் குறையும். ஆகவே, அமைச்சர் அவர்கள் நிச்சயமாக உடனடியாக அவர்களுக்கு நியாயமான ஊதியம் கொடுக்க முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நாம் பல்லாண்டு காலமாக அங்கே வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு போனஸ் கொடுப்பதாகக் கூறிக் கொண்டு வருகிறோம். அதற்கு அக்ரிமென்ட் ஆகியிருக்கிறது. ஆனால் இது வரையிலும் போனஸ் கொடுக்கப்படவில்லை. தனியார் தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு போனஸ் ஏறக்குறைய 20% கொடுக்கிறார்கள். தனியார் துறையில் கொடுக்கிறபோது, அரசாங்கத் துறையில் கொடுக்கவில்லை என்றால், தனியார் துறையில் இருக்கும் தொழிலாளர்களுக்கும் அவர்கள் பிற்பாடு கொடுக்காமல் இருக்கும் பயங்கரமான சூழ்நிலை உருவாகும். ஆகவே, அரசாங்கம் அந்தத் தொழிலாளர்களுக்கு போனஸ் அல்லது எக்ஸ்-கிரேசியா பேமென்ட் 20% அளவுக்குக் கொடுக்க வேண்டும். அதற்கு அரசாங்கம் உடனடியாக முன் வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக ஒன்றை மாத்திரம் சொல்லி, என்னுடைய உரையை முடித்துக் கொள்ளலாம் என்று கருதுகிறேன். ரப்பர் விவசாயத்தைப் பொறுத்த வரையில், மத்திய அரசாங்கத்தின் ரப்பர் போர்டு ஒன்று கேரளாவில் இருக்கிறது. கேரளாவில் உள்ள அந்த போர்ட் மூலமாக அங்கேயுள்ளவர்களுக்கு பல விதமான நன்மைகள் கிடைக்கின்றன. ஆனால் தமிழ்நாட்டில் உள்ள, கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மக்களுக்கு அதனால் நன்மை இல்லை—அது கேரள மாநிலத்தில் இருக்கிற காரணத்தால். ஆகவே, அங்கேயுள்ள ரப்பர் பயிர் செய்வோருக்கும் ஊக்கம் கிடைக்க வேண்டிய விதத்தில், கிடைக்க வில்லை, நியாயமான முறையில் கிடைக்கவில்லை, அங்கே கொடுக்கப்படுகிற சலுகைகள் கொடுக்கப்படவில்லை. ஆகவே, மத்திய அரசாங்கத்தை மாநில அரசாங்கம் வலியுறுத்தி, தமிழ் நாட்டில் ஒரு ரப்பர் போர்டு அமைப்பதற்கு உண்டான ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**Thiru B. VENKATASWAMY**: Sir, in support of the cut motions given notice of on behalf of our Party, I want to offer a few remarks regarding Demands relating to General Sales Tax, Animal Husbandry, Cinchona, Forest, etc.

As regards General Sales Tax, it is called 'Khamadhenu' by the Government because it gives nearly an income of Rs. 151 crores to the Government. The tax was first introduced by our great leader Rajaji



1975 மார்ச் 31] [Thiru B. Venkataswamy]

If it is collected more efficiently, definitely we can get more revenue from this source of taxation. We can even get Rs. 50 crores more. In this connection, I want to point out that according to the recent amendment of the main Act, option is given to the evening cinema theatres to compound the tax and so the theatre owners are evading the tax. In Denkannikottah I discussed this matter with the Executive Officer of the Town Panchayat and he had stated that the Panchayat was getting only one-third of the revenue which they were getting previously. I think there is a loophole in the amended Act and I request the Hon. Minister examine this aspect of the matter and see that the tax is collected in accordance with the provisions of the main Act from 14th September 1974. Due to the evasion of the tax, not only Panchayats but also the Government are losing money. So, I request the Governmentto examine whether the provisions of the main Act or the amended Act should be applied for the efficient collection of the tax.

Coming to Animal Husbandry Department it is one of the most vital Departments and animal is the heart of the agriculturists andthe Government and so we should protect it very carefully. Otherwise, it will get so many diseases. Sir, because the Animal Husbandry Department has been neglecte, dwe are not getting good milk. In the Budget speech, it was stated that they could get only 80 grams of milk per day for each individual instead of 290 grams. We are having low breed of animals.

Three or four years ago when the Hon. Thiru Anbazhagan was in charge of Animal Husbandry, he had stated that they were just like dogs and he told the truth. What steps the Government have taken to make the dog-sized animals into large-sized animals ?

We have got very limited schemes for implementation. We cannot improve them with these schemes. I am given to understand that exotic breeds of animals are imported from other countries. Some of them have been given as gifts. Even in our house if we give any gift, only the worst thing will be given. So also we get only the werst type of exotic breeds as gifts. I am told that a good type of exotic breed would cost Rs. 5 to 10 lakhs. So the Government should import good breeds of exotic animals to improve our cattle.

Coming to the Frozen Semen Bank, we must establish as many Frozen Semen Banks as possible because they can play a major role in the improvement of the economic conditions of the farmers in our State. These Banks can be kept for so many purposes and so, we must import good breed of exotic animals from foreign countries to establish these Banks in every district. For instance, we can import bulls of

[Thiru B. Venkataswamy] [1975 மார்ச் 31

exotic breeds such as Friesion Jersey, Red Dane, etc., for this purpose. We can also use Murrah Buffaloes bulls for crossing purpose. These are all good animals.

In dairy development we are wasting lot of money. We do not have foundation stock. When such is the case, there is no use of thinking of dairy development. I came to understand that we have limited stock of high yielding animals. What I say is, let the existing stock be looked after well so that we could have a good breed. Otherwise it is no use. If existing stock is not looked after properly, the scheme will fail. Some amount is marked for purchase of good animals. First of all, let our stock be improved.

Next I come to half-rearing centres. How many do we have? We do not have even one. In my area people are rearing calves and they are being purchased by Bangalore people. If you give subsidy to them, they will rear good calves. But that is not done. Karnataka Government has imposed a ban of others purchasing animals from their State and there is also a ban of animals going outside Karnataka State When our stock is being purchased by them, why not we also impose a ban as is done in Karnataka State? Otherwise our good stock will go out of our State. The Hon. Minister should introduce such a legislation banning movement of our animals to outside States. If good animals go out, how can we have dairy development? If a ban is there, we can protect our good breed and rear them well.

For people growing fodder, we must give subsidy and encourage them, NB 21, NB 8 and Koilpatti cholam is giving good fodder: NB 21 grows very tall and it gives 15 tonnes of fodder. We can feed a dozen animals.

திரு. எம். முத்தையா : பாயிண்ட் ஆப் ஆர்டர். கோரம் இருக்கிறதா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் எண்ணிப் பார்த்துச் சொல்லுங்கள். நல்லது. கோரம் இருக்கிறது. நீங்கள் பேசுங்கள்.

THIRU B. VENKATASWAMY : We must try to import good exotic breed of animal. Key village centres and distribution centres should be organised properly. Otherwise there will be duplication of work. We must try to have good foundation stock.

I organised a sheep breeding co-operative society three years before in Denkanikotta in Hosur. But no amount has been given to the society. People are suffering. It is no use of having a society in name with no help from Government. I think Marino breed mixed with Mandya variety gives good offspring. That should be encouraged.



1975 மார்ச் 31]

MR. DEPUTY SPEAKER : The hon. Member has taken 15 minutes. He can finish within another 5 minutes.

THIRU B. VENKATASWAMY : I will finish in another ten minutes. Steps should be taken to prevent animals from dying of rinderpest. Foot and mouth vaccine should be distributed to ryots of Tamil Nadu to prevent death of animals from the foot and mouth disease.

We are not able to produce highline chicks. Government must step in, in a big way, to produce highline chicks.

In Hosur cattle farm, 400 to 500 workers are working on daily wages for so many years, getting Re. 1 to Rs. 2·50. In these hard days, that sum is very meagre. I request the Hon. Minister to see that they get minimum wages. We ask others in the industry to introduce minimum wages for their workers. Let the Government give minimum wages for these people.

ICDB scheme has been introduced without providing sufficient staff. About 200 Livestock assistants are there in panchayats. They may be posted to ICDB centres. As Panchayat Union Chairman I know the difficulty of Livestock Assistants. They should be transferred to their original Department. We can have one such Assistant in each panchayat union. Let them be transferred to their original department. Then, better work will be done.

The Forest Department should sow the seed through helicopter so that during rainy seasons the seeds will sprout up. In that way we can raise plantations.

Anjatti-Urigam road should be laid by Forest Department. Since they have not done so and nobody has laid the road, elephant nuisance is there and many people have died. That road is important and Forest Department must lay the road so that buses can ply.

The watchers should be given pension and fixed travelling allowance. They are doing good work.

Duplication of work by Animal Husbandry department and dairy Development department should be avoided. Both are doing artificial insemination work. We should not have two departments for doing the same work. Let there be proper co-ordination.

[பிற்பகல் 12-30]

I understand that there is some prejudice in the matter and the two departments do not look upon each other in a friendly way (Interruption). Of course, the Ministers may be friendly. But in the department of Animal Husbandry, people will not go to the Dairy Development department which has the frozen semen. But the Animal Husbandry has no such facility. These people stand on prestige. The Hon. Minister should see that there is some co-ordinationbetween the two andI suggest that the two departments may be under one Minister. Thank you, Sir.

*திரு. எம். சுரேந்திரன் : துணைச் சபாநாயகர் அவர்களே, இங்கே சபைக்கு முன்னால் வைத்திருக்கின்ற இந்த மானியத்தின் மீது சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இந்த மானியத்தை எடுத்துக் கொள்கிறபோது விற்பனை வரியும் இதர வரிகளும் என்ற தலைப்பில் 8 விதமான வரிகள் போடப்படுவதாக இந்த அறிக்கையில் சொல்லப்படுகிறது. இந்தவரிகளை நாம் எண்ணிப்பார்க்கிறபோது 74–75 வருட மதிப்பீட்டிற்கும் வருமானத்திற்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லாமல் இருக்கிறது, மதிப்பீடு போடுகின்றபோது அது எவ்வளவு என்று தீர்மானிக்கப்பட்டு அந்த அடிப்படையாக வைத்து நம் வரவு செலவுகள் நிர்ணயிக்கப்படுகின்றன. மதிப்பீட்டுத் தொகையில் குறைவு ஏற்பட்டால் அதனுடைய விளைவை நாம் சமாளிக்கவேண்டியிருக்கிறது. மதிப்பிடுவதில் உயர்வு ஏற்பட்டால் நல்லது என்று கருதுகிறோம். எப்படி இருந்தாலும் மதிப்பீடுகள் அளவு சரியானவையாக இருந்தால்தான் வரவு செலவு குறித்து இந்தச் சபையில் விவாதிப்பது பொருத்தமாக இருக்குமே தவிர மதிப்பீடே சரியாக இல்லாமல் வருமானம் பல கோடி ரூபாய், இந்த இனத்திற்கு இவ்வளவு ஒதுக்கவேண்டும் என்று இந்த வரவு செலவை விவாதிப்பது என்பது புத்திசாலித்தனம் அற்ற ஒன்றாக அமைந்து விடுகிறது என்று இந்த நேரத்தில் முதன் முதலாக கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

விற்பனை வரியையும் மற்ற வரிகளையும் எடுத்துப் பார்த்தால் ஒவ்வொரு வருடமும் வரிகள் உயர்ந்துகொண்டே போகிறது. இந்த அரசின் கொள்கை வரிகளைக் குறைத்து வசதிகளைப் பெருக்குவது என்பது ஆகும். ஆனால், இங்கே பார்க்கின்ற போது வரியையும் உயர்த்துவோம் வசதியையும் பெருக்குவோம் என்ற அளவில் தான் பெருகி இருக்கிறது. ஆனால் வரி உயர்ந்திருக்கிற அளவு வசதிகள் பெருகி இருக்கிறதா என்று பார்த்தால் வரிகளை உயர்த்திய அளவு வசதிகளைப் பெருக்கவில்லை என்பதில் யாருக்கும் எந்த விதமான சந்தேகமும் இருக்க முடியாது. ஆகவே, சொல்லப்பட்ட கருத்தை வருங்காலத்தில் மாற்றிக்கொள்ள வேண்டும். வரிகளையும் உயர்த்துவோம், வசதிகளையும் பெருக்குவோம். வரி உயர்ந்த அளவு வசதிகளைப் பெருக்காவிட்டாலும் முடிந்த அளவு பெருக்குவோம் என்று சொன்னால் அது சரியானதாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.





வரி விதிப்பில் ஒரு வெட்டு தீர்மானத்தில் குறிப்பிட்டு இருக்கிறேன் இந்த வரியை வசூலிக்கிற அதிகாரிகளின் வருமானங்கள் சொத்துக்களை வருடா வருடம் பரிசீலிக்க வேண்டியது அவசியம் என்று என்று வெட்டுத் தீர்மானத்தில் குறிப்பிட்டு இருக்கிறேன். எதைக் குறிப்பிடுகிறேன் என்றால் மிக ஏராளமான வரி இப்போது போடப்பட்டு இருக்கிறது. விதி முறைப்படி அதிக அளவு வர வாய்ப்பு இருக்கிறது என்று அனைவரும் ஒப்புக்கொள்கிறார்கள். ஆனால், வரிகள் அரசாங்கத்தில் வராமல் வேறு பக்கத்தில் சேர்ந்து விடுகிறது. அதனால், அந்த அதிகாரிகள் வீடுகள் பெரிதாகி விடுகிறது. இரும்பு பெட்டிகள் நிரம்பி விடுகின்றன, சொத்துக்கள் சேர்ந்து விடுகின்றன. இது தமிழகத்தில் உள்ள மக்கள் மனதில் கொண்டுள்ள கருத்தாகும். இது மாமூலாக நடக்கிற நிலை. இப்படிப்பட்ட ஒரு நிலையை அப்படியே விட்டு விடுவது சரிதானா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். எல்லாத் துறையிலும் இப்படிப்பட்ட நிலை இருந்தாலும் இந்த வரி வசூலிப்புத் துறையில் இது முக்கியமாக இருக்கிறது. இதற்கு யார் பொறுப்பு என்று எண்ணிப் பாருங்கள். இது உண்மை தானா? அப்படி உண்மை என்றால்......

திரு. கு. காமாட்சி : அதிகாரிகளது இரும்புப் பெட்டிகள் நிரம்பி விடுகின்றன என்று குறிப்பிடப்பட்டது. ஏதாவது ஒரு இரும்பு பெட்டியை உதாரணத்திற்குக் காண்பிக்க முடியுமா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நிரம்பி விடும் என்று எதிர் காலத்தில் சொன்னார்கள். நிகழ்காலத்தில் சொல்லவில்லை.

திரு. எம். சுரேந்திரன் : ஒவ்வொருவர் வீட்டிலும் இரும்பு பெட்டியில் பணம் இருக்கிறது. இரும்புப் பெட்டி சாவி அவர்களிடத்தில் இருப்பதால் எந்தப் பெட்டியில் எவ்வளவு இருக்கிறது என்று என்னால் சொல்ல முடியவில்லை. எனவே, இன்னும் ஒன்றை சொல்ல விரும்புகிறேன்.

திரு. கு. காமாட்சி : அவர்களிடத்தில் பெட்டி இருக்கிறது. ஆனால் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் மத்திய அரசில் பதவியில் இருக்கிறவர்கள். அவர்களிடத்தில் சாவி இருக்கிறது. எப்படி அவை கண்டுபிடிக்கலாம் என்று சொன்னால் புரிந்து கொள்ள முடியும்.

திரு. எம். சுரேந்திரன் : இதைக் கண்டுபிடிக்க முடியாது என்று உறுதியாக நீங்கள் சொன்னால் நாங்கள் கண்டு பிடித்துத் தருகிறோம். கண்டு பிடித்துத் தர மாட்டேன் என்று சொல்லமாட்டேன் என்கிறீர்களே.

திரு. கு. காமாட்சி : அந்த அதிகாரம் இல்லை. அந்த அதிகாரத்தைக் கொடுத்தால் நிச்சயமாகக் கண்டு பிடிப்போம்.

திரு. எம். சுரேந்திரன்: இப்போது இருக்கிற சட்டங்களைப்பற்றித் தவறாக நினைக்கிறீர்கள். இதில் எல்லாவிதமான அதிகாரமும் இருக்கிறது. இதில் இருக்கிற கஷ்டம் எல்லாம் இந்தக் கள்ளப் பணத்தை ஒருவர்

சேர்க்க முடிகிறது என்றால் அதற்கு யார் பொறுப்பாளிகள் என்ற சந்தேகம் நமக்கு இருக்கிறது. கள்ளப் பணம் ஒரு இடத்தில் சேர நாம் தான் காரணம் என்றால் நம்மிடத்தில் அதிகாரத்தை தருவதால் அது எப்படி வெளியே வரும் என்ற சந்தேகம் நமக்கு வருகிறது. அந்தச் சந்தேகம் நீங்கினால் அதற்குப் பிறகு உங்களுக்கு அதிகாரத்தைக் கொடுக்க நானே சிபாரிசு செய்யலாம் என்றுதான் இருக்கிறேன்.

திரு. செ. கந்தப்பன் : நம்மிடம் முழுமையாக அதிகாரத்தைக் கொடுத்துவிட்டு சில அதிகாரங்களை மத்திய அரசு மா ல அரசிற்சாக இணையாக வைத்துக் கொள்ள வேண்டும் என்றுதான் சொல்கிறோம். இதை மறுக்க எந்தவிதமான நியாயமும் இல்லை.

திரு. எம். சுரேந்திரன் : அதற்குத்தான் நான் பதில் சொல்லி விட்டேன். நம்மிடம் உள்ள கள்ளப் பணத்தைப் பற்றி விவாதிக்கிற நேரத்தில் நம்மிடம் மேலும் அதிகாரத்தைப் பகிர்ந்து கொடுத்துவிட்டால் அதனால் பலன் ஏற்படுமா நிறைவேறுமா என்ற சந்தேகம் இருக்கிறது. அந்த சந்தேகம் போனால் மேலும் அதிகாரத்தை, நீங்கள் கேட்கிற அதிகாரத்தைக் கொடுக்கலாம் என்ற சிபாரிசு செய்யலாம். ஆனால் அந்தச் சந்தேகம் எப்போது தீரும் என்று சொல்ல முடியவில்லை. இதற்குக் காரணம் என்ன? வரிவசூல் செய்கிறவர்களுக்கு ஒரு விசேஷ வசதி கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த அரசாங்கத்தின் விழாக்களாக இருந்தாலும், அமைச்சர்கள் செல்லுகிற விழாக்களாக இருந்தாலும் இந்த நிதி வசூல் பொறுப்பு அதிகாரிகளிடத்தில் விடப்படுகிறது. அவர்கள் எல்லா வியாபாரிகளிடமும் தொழிலதிபர்களிடமும் போய் அரசாங்கம் சொல்கிற கோட்டா அந்த அளவு பணம் வசூலிக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். அப்படி வசூல் செய்யும்போது அந்த வியாபாரிகளுக்கு தொழிலதிபர்களுக்கு பல சலுகைகளைக் காட்ட வேண்டியிருக்கிறது. ஆகவே, இது அரசாங்கத்தின் அதிகாரிகளின் சம்மதத்தோடு நடைபெறுகிறது. வசூல் செய்யும் போது கேட்ட காரியத்திற்குக் கொஞ்சம் நன்கொடை கொடுத்தால் அந்த அதிகாரிகளுக்கும் கொஞ்சம் நன்கொடை கொடுக்கிறார்கள். ஆகவே இந்தப் பிரச்சினையில் அடிப்படையில் உள்ள கோளாறை நீங்கள் பார்க்க வேண்டும். இது எவ்வளவு தூரம் கொண்டு செல்கிறது என்பதை அமைச்சர் பரிசீலிக்க வேண்டும். மேலெழுந்தவாரியாக இதைப் பார்த்தால் ஒன்றும் தெரியாது. அடிப்படைக் கோளாறை ஒழித்தால் தான் ஊழல் போகுமே தவிர வேறு எப்படியும் போகாது. இந்த விஷயத்தைப்பற்றி மேற்கொண்டு போக நான் விரும்பவில்லை.

அடுத்தபடியாக சோதனைச் சாவடி வைத்து இதை எல்லாம் கண்டு பிடிக்கிறோம் என்று சொல்லப்படுகிறது. ஒன்றே ஒன்று சொல்ல விரும்புகிறேன். சோதனைச் சாவடிகளால் வசூலிக்கப்படுவது நல்லதுதான். ஆனால் சோதனைச் சாவடிகளில் எல்லா லாரிகளையும் ஒரே இடத்தில் குமிய நிறுத்திவிடுகிறார்கள். ரோடு முழுவதும் நிறுத்திவிடுவதால் சாதாரண போக்குவரத்து கூட சில நேரங்களில் இடைஞ்சலாக இருக்கிறது. லாரிகளை நிறுத்துகின்ற போது ஒழுங்காக அவைகளை நிறுத்த வேண்டும்.



சீக்கிரமாக இவைகளைப் பரிசீலித்து அனுப்பி விட வேண்டும் என்பதற்காக ஒரு வழிமுறையைக் காணவேண்டியது ரொம்ப முக்கியமானது. இதை அவசியம் செய்தாக வேண்டும்.

அதைப்போல குதிரைப் பந்தயம் பற்றிப் பலர் பேசினார்கள். மாண்புமிகு உறுப்பினர் இராஜா அவர்கள் பேசும் போது பல விபரங்களைப் பற்றிச் சொன்னார்கள். அவருடைய பேச்சின்போது ஒரு சந்தேகத்தையும் எழுப்பினார்கள். குதிரைப் பந்தயம் ஒழிக்கப்படுமா அல்லது மறுபடியும் வந்துவிடுமா என்று தெரியவில்லை. தொழிலாளர்களையும் மற்றவர்களையும் கிளர்ச்சி பண்ணச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். குதிரைப் பந்தய ஒழிப்பினால், வர வேண்டிய வருமானம் போய்விடுகிறது என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருப்பதனால் மறுபடியும் வந்துவிடுமோ என்ற சந்தேகத்தை ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினரே எழுப்பக்கூடிய அளவுக்கு நிலைமைகள் இருந்து கொண்டிருக்கின்றன. அதனால் எங்களுக்கும் இப்போது சந்தேகம் வந்து கொண்டிருக்கிறது.

ஏற்கனவே ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு கேள்வி வந்தபோது நம்முடைய முதலமைச்சரவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்த மாதிரியாக வரக்கூடிய பாவ பணத்தை வைத்துக் கொள்ளலாமா என்று கேட்டபோது, இப்போது முடிவாக அறவே நீக்கி விடலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அங்கே இருக்கிற தொழிலாளர்களுக்கு வேலை போய்விட்டால்கூட அவர்களுக்கு வேலை போட்டுக் கொடுக்கவும் தயார் என்று சொல்லியிருக்கிறார்கள். அதனால் உறுதியாக குதிரைப் பந்தயம் போய்விடும் என்று நம்பிக் கொண்டிருந்தோம். ஆளும் கட்சி உறுப்பினர் இராஜா அவர்கள் பேசும்போது இதுபற்றி ஒரு சந்தேகத்தை எழுப்பியதால் எங்களுக்கும் சந்தேகம் வருகிறது. எப்படி இருந்தாலும் இந்தக் குதிரைப் பந்தயம் போனது வராது என்று நம்புகிறோம், அந்த நம்பிக்கை வீண்போகாது பார்த்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

அடுத்தபடியாக கேளிக்கை வரி சட்டத்தைப் பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். கேளிக்கை வரி, காட்சி வரிகளில் பெரும் பகுதி பஞ்சாயத்துக்களுக்குப் போகிறது. பல பஞ்சாயத்துக்கள் பணம் இல்லாமல் ரொம்ப கஷ்டத்திற்கு உள்ளாகியிருக்கின்றன. பஞ்சாயத்துக்களுடைய வருமானத்தை எப்படிப் பெருக்குவது என்பதற்கு ஒரு கமிட்டி கூடப் போட்டிருக்கிறார்கள். அந்தக் கமிட்டி வருமானத்தைப் பெருக்குவது பற்றி ஆராயப் போகிறது. கேளிக்கை வரியை எப்படி வைத்தாலும் சரி, என்னென்ன முறைகளில் வசூல் செய்தாலும் சரி, முழுமையாக வசூல் செய்ய முடியவில்லை. அந்த வகையில் அங்கே என்னென்ன நடக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும்.

இதிலே ஒரு புதுமுறையைப் புகுத்தலாம் என்று கருதுகிறேன். பஸ்களுக்கு ஒரு சீட்டுக்கு இவ்வளவு கட்ட வேண்டுமென்று நிர்ணயம் செய்திருப்பதைப்போல கேளிக்கை வரி, காட்சி வரிகளையும் சீட்டுக்கு இவ்வளவு என்று மாற்றி அமைப்பது பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். அந்த வகையில் மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சமீபத்தில் இந்த வரிகளை உயர்த்தியபோது, உயர்த்தக் கூடாது என்று கோரிக்கை வைத்தார்கள். எவ்வளவு வரிகளைப் போட்டாலும், ஜனங்கள் நிறைய சினிமாவுக்குப் போகிறார்கள். வரிகளைக் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். அதனால் சினிமாவுக்கு எவ்வளவு வரி போட்டாலும் கெடுதல் இல்லை. அதில் ஒரு கணிசமான தொகை அரசாங்கத்திற்கும் பஞ்சாயத்துக்களுக்கும் கிடைப்பதால், இதில் கெடுதல் ஒன்றும் இல்லை.

ஆனால் சர்க்காரின் கொள்கை வரி போடுவதில் அல்ல; சினிமா தியேட்டர்களை எல்லாம் எடுத்துவிடப் போகிறோம் என்று ஒரு முறை சொல்லப்பட்டது. தேசியமயமாக்கி விடுவோம் என்று சொன்னார்கள். அப்படிச் சொன்னவர்கள் இன்றைக்கு சினிமாத் தியேட்டர்காரர்களின் கடன் வசதிக்காக, இந்தத் தொழிலின் வளர்ச்சிக்காக கடன் அமைப்புகளை உருவாக்கி, கடன் தருகிறார்கள். இது ஒன்றுக்கொன்று முரண்பாடாக இருக்கிறது. இப்படி முரண்பட்ட கருத்துக்களை ஏன் சொல்கிறார்கள்? அதனால் மெம்பர்களுக்கு என்ன உறுதியான நடவடிக்கை எடுக்கச் சொல்வது என்ற சந்தேகம் ஏற்படுகிறது; குழப்பம் ஏற்படுகிறது. குழப்பத்திற்கு இடம் இல்லாமல் நான் சொன்ன மாதிரி சீட்டுக்கு இவ்வளவு வரி என்ற வகையில் போட்டு அரசாங்கத்திற்கும், பஞ்சாயத்துக்களுக்கும் பணம் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u>: நேரமாகிவிட்டது; 12-45க்கு முடித்து விடுங்கள்.

<u>திரு. எம்.சுரேந்திரன்</u>: இன்னும் ஐந்து நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். அடுத்தபடியாக பாரஸ்ட் விவகாரம் இருக்கிறது, பாரஸ்ட் பற்றிச் சொல்லும் போது எல்லோரும் சொல்வார்கள்: இத்தனை சதவிகிதம் பாரஸ்ட் நிலம் இருக்க வேண்டுமென்று சொல்வார்கள். ஒரு மாநிலத்தில் இருக்கிற நிலப் பரப்பில் இத்தனை சதவிகிதம் பாரஸ்ட் இருக்க வேண்டுமென்று சொல்வார்கள். அதில் அபிப்பிராய பேதம் யாருக்கும் கிடையாது. இந்த விஷயத்தில் பாரஸ்ட் என்று சொல்லி, வெறும் புள்ளி விபரத்தை மட்டும் வைத்துக் கொண்டிருந்தால் பிரயோஜனம் இல்லை. புள்ளி விபரத்திலே சொல்லப்படும் இடங்கள் பல வெறும் சொட்டையாக இருக்கின்றன. இப்படி ஏன் சொட்டையாகக் கிடக்கிறது என்று பாரஸ்ட் இலாகாவைக் கேட்டால் மரம் வைக்க பணம் இல்லை என்று சொல்கிறார்கள். அப்படி இருக்குமானால் விவசாயக் காரியங்களுக்கு அந்த இடத்தை குத்தகைக்கு விடலாமே. எந்த நேரத்தில் பணம் கிடைக்கிறதோ அப்போது அந்த நிலத்தை எடுத்துக் கொள்ளலாம். பணம் வரும் வரையில் ஏன் சொட்டையாகப் போட வேண்டும்? விவசாயக் காரியங்களுக்குக் கொடுத்தால் உற்பத்தியாவது பெருகும் அல்லவா? ஆகையால் வீணாகப் போட்டு வைப்பது புத்திசாலித்தனமான காரியம் அல்ல. அம்மாதிரியாக இருக்கும் இடங்களை எப்போது தேவைப்படுமோ அப்போது எடுத்துக் கொள்ளும் வகையில் விவசாயக் காரியங்களுக்கு குத்தகைக்குக் கொடுக்கலாம். அதனால் நமக்கு பெரும் பயன் ஏற்படும்.



அடுத்தபடியாக, வனத்திலிருந்து பல மூலப் பொருட்கள் பல்வேறு தொழிற்சாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைசாமி அவர்கள் கூடச் சொன்னார்கள். தொழிற்சாலைகளுக்கு அனுப்புவதற்காக வனத்திலிருந்து மரங்களை வெட்டிய பிறகு மீண்டும் மீண்டும் மரம் தேவைப்படுகிறது. ஆனால் மரம் வெட்டப்பட்ட இடங்களில் புதிதாக மரங்களை வளர்க்க ஏதாவது ஏற்பாடு இருக்கிறதா என்றால் ஒன்றும் இல்லை. அப்படியானால் வெட்ட வெட்ட மரம் எங்கிருந்து வரும்? வெட்டப்பட்ட இடங்களில் மேற்கொண்டு மரம் வைக்க ஏற்பாடு இல்லாததால் பல இடங்களில் இன்றைக்கு மூங்கில் அறவே இல்லாமல் போய் விட்டது.

அதைப்போலவே யூக்கலிப்ட்ஸ், முருக்கு போன்ற மரங்களும் இல்லாமல் போய்விட்டன. மீண்டும் மீண்டும் தொழிலுக்கு மூலப் பொருள் கொடுக்க வேண்டுமென்று நாம் நினைக்கிறோம். ஆகவே, மரங்களை வெட்ட அனுமதி கொடுக்கும்போது, வெட்டும் இடங்களில் எல்லாம், ஏதாவது சர்சார்ஜ் மாதிரி போட்டு, மரங்களை வளர்க்க அந்த நிதியைப் பயன்படுத்திக் கொள்வதில் அரசாங்கத்திற்குக் கஷ்டம் இல்லை. அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் ஒரே ஒரு கருத்தைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன். சமீபத்தில் அமைச்சரவர்களிடம் கூட அது பற்றிச் சொன்னேன். சாயில் கன்சர் வேஷன் செய்கிறார்கள். மண் அரிப்பைத் தடுக்க வேண்டுமென்று சொல்லிக் கொள்கிறார்கள். அரிப்பைத் தடுப்பது நல்லதுதான். மண் அரிப்பைத் தடுப்பதற்கு என்று மரம் வைப்பதன் மூலம் விவசாயத்திற்கு உதவியாக இருக்க வேண்டுமே தவிர, அவர்களுக்குக் கெடுதலாக அது இருக்கக்கூடாது. சமீபத்தில் நான் சொன்ன விபரம் இதுதான். மேட்டூரில் கூணண்டிப்புதூர் என்ற ஊரில் 21 விவசாயிகள் 40 வருஷமாக விவசாயம் செய்து வருகிறார்கள். இப்போது அங்கே சாயில் கன்சர் வேஷன் செய்கிறோம் என்று சொல்லி, குழி வெட்டி, மரம் வைக்க பாரஸ்டிலிருந்து ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள். அதனால் 40 வருஷமாக விவசாயம் செய்து கொண்டிருந்தவர்களுக்கு பாதகம் ஏற்படுகிறது. புதிதாக ஒரு இடத்தில் சாயில் கன்சர்வேஷன் செய்தால் பரவாயில்லை. ஆனால் 40 வருஷமாக விவசாயம் செய்துவரும் ஒரு இடத்தில் இது தேவையா? பெரும் நிலப்பரப்பையும் அவர்கள் வைத்துக் கொள்ளவில்லை. அவர்கள் 21 பேர்கள்தான்; 41 எக்கர் நிலம்தான் இருக்கிறது. 40 வருஷமாக விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள். அங்கே இப்போது போய் மரம் வைக்கப் போகிறார்கள். மரம் வைக்க வேண்டாமென்று நான் சொல்லவில்லை. அந்த விவசாயிகளுக்குப் பாதகம் ஏற்படாமல் மரம் வைக்க வேண்டும். 40 வருஷமாக விவசாயம் செய்து வருபவர்களை வெளியேற்றுவது என்று சொன்னால் நம்முடைய கொள்கை என்ன? வறட்சி நிவாரணப்பணி என்கிறோம். விவசாயிகளுக்கு உதவி செய்கிறோம். இந்த நேரத்தில் அவர்களைத் தொந்தரவு செய்தால் எப்படி?

மேட்டூர் டாம் கட்டும்போது ஏராளமான நிலம் வெள்ளத்தில் மூழ்கி விட்டது. அதனால் தங்கள் சொத்துக்களை இழந்து, இங்கே வந்து விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த இடத்தை பட்டா செய்து

[திரு. எம். சுரேந்திரன்] [1975 மார்ச் 31

கொடுக்க வேண்டுமென்று சொல்லி, மேட்டூர் சப்-கலக்டர் வந்து பார்வையிட்டு, அதன் பின்னுல்தான் அது பாரஸ்ட் நிலம் என்று தெரியவந்தது. அதன் பின்னர் பட்டா செய்யும் பிரச்சினை அப்படியே இருக்கிறது. அங்கே புதிதாக யாரும் விவசாயம் செய்ய முற்படவில்லை. அங்கே இப்போது விவசாயம் செய்து கொண்டிருப்பவர்கள் கடந்த 40 வருஷமாக இருந்து கொண்டிருக்கிறார்கள். இதை கருத்திற் கொண்டு, அவர்கள் பிரச்சினையை கனிவோடு பரிசீலனை செய்து, அவர்களுக்குக் கஷ்டமில்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதில் அரசாங்கத்திற்கு எந்த விதமான கஷ்டமும் இல்லை.

அடுத்து, கால்நடைகள் பற்றி பலர் இங்கே சொன்னார்கள். கால்நடைகள் தமிழ்நாட்டிலிருந்து வெளி மாநிலங்களுக்குப் போகின்றன. ஏன் போகின்றன என்றால் வெட்டுக்காகத்தான். இங்கே பயன்படாமல் இருப்பதை அவர்கள் பயன்படுத்திக் கொள்கிறார்கள். இப்படிப் போவதைத் தடுக்க வேண்டுமென்றால் அது நமக்குப் பயன்படுவதாக இருக்க வேண்டும்.

புள்ளி விபரத்தைப் பார்த்தால் ஒருவருக்கு 84 கிராம் பால் தான் கிடைக்கிறது. 280 கிராம் பால் தேவைப்படுகிறது. கிட்டத்தட்ட 200 கிராம் பால் இன்னும் அதிகமாக வேண்டும். அதற்கு நாம் எவ்வளவு அக்கறை எடுத்திருக்கிறோம்; எவ்வளவு வேகமாக நடவடிக்கைகள் எடுத்திருக்கிறோம் என்று பார்த்தால் இந்த மானியத்தைப் பார்த்தால் எந்தவிதமான காரியங்களும் நடைபெறுவதாக நமக்குத் தெரியவில்லை.

ஒரு நல்ல சமுதாயத்தை அமைக்க வேண்டுமென்றால் எல்லாத் துறைகளிலும் படிப்படியாக வளர்ச்சி காண முயற்சி செய்ய வேண்டும். அதில் செய்திருக்கிறோம்; இதில் இல்லை என்றால் பயனில்லை. இந்த மூன்று மானியங்களுமே முக்கியமானவைதான். மூன்றிலும் வளர்ச்சி காண வேண்டும். அதற்கு நான் சொன்ன கருத்துக்களை எடுத்துக் கொண்டு, விரைவாக இந்தக் குறைபாடுகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, அந்த வகையில் அரசாங்கம் செயல்படும் என்ற நம்பிக்கையோடு அமர்கிறேன்.

திரு. கு. காமாட்சி: தலைவரவர்களே, ஒரு சின்ன விளக்கம். மாண்புமிகு உறுப்பினர் சுரேந்திரன் அவர்கள் குதிரைப்பந்தயம் ஒழிப்பு பற்றி வரவேற்று பேசினார்கள். அதிலே எந்தவிதமான சந்தேகம் பட வேண்டியதில்லை. அதே நேரத்தில் அவர்களுடைய கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் திரு. கே. எம். எஸ். அவர்கள் குதிரைப்பந்தயத்தை ஒழிப்பது தவறு என்ற கருத்துப்பட காலையிலே கூறியிருக்கிறார்கள். இதில் தங்களுடைய கட்சியின் நிரந்தரமான கொள்கை என்ன என்று அறிய விரும்புகிறேன்.

திரு. எம். சுரேந்திரன்: எங்கள் கட்சியின் நிரந்தரக் கொள்கை தீமைகளை ஒழிக்க வேண்டுமென்பதுதான். அவர்களுடைய மனதில் இன்னும் கொஞ்சம் சபலம் இருக்கிறது. இப்போதுதான் எங்களோடு சேர்ந்து, அந்தச் சபலத்தை போக்கிக் கொண்டிருக்கிறார்கள்.



1975 மார்ச் 31]

## 6. நடைமுறைக் கேள்வி.

ஹவுஸ் சர்ஜன்கள் வேலை நிறுத்தம் பற்றி உறுப்பினர்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கும்போது, அது குறித்து தகவலை அவைக்கு அறிவிக்காமல், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் செய்தித்தாள் நிருபர்களுக்கு தகவல் அளிக்க அழைத்திருப்பதாக கூறப்படுவது குறித்து :—

திரு. ஏ. சுப்பிரமணியம்: சார், பாயிண்ட் ஆப் ஆர்டர். நான் கேட்கும் பாயிண்ட் ஆப் ஆர்டர் இது சம்பந்தப்பட்டதல்ல. இங்கே, நம்முடைய தமிழ்நாட்டில் நடக்கிற ஹவுஸ் சர்ஜன் வேலை நிறுத்தம் சம்பந்தமாக ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறோம். நானும் மற்றும் பலரும் கொடுத்திருக்கிறோம். இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்து 2, 3 நாட்களாகிவிட்டன. இப்போது சம்பந்தப்பட்ட அமைச்சரவர்கள் இல்லை. ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அமைச்சர் சட்டசபையில் விளக்கம் சொல்ல வேண்டும். ஆனால் இங்கு விளக்கம் சொல்லாமல், பத்திரிகை நிருபர்களிடம் இது பற்றி கருத்துச் சொல்வதற்காக அவர்களை அழைத்திருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. ஒத்திவைப்புத் தீர்மானத்தைச் சட்ட சபையில் கொடுத்திருக்கிறோம்; அதற்கு இங்கே விளக்கம் சொல்லாமல் பத்திரிகை நிருபர்களை அழைத்துப் பேசுவது முறைதானா? அது இந்த சபைக்கு உரிய கௌரவத்தைக் காட்டுவதாக இருக்குமா? என்று அறிய விரும்புகிறேன்.

நாங்கள் இதில் மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறோம். இது சம்பந்தமாக சட்டமன்ற உறுப்பினர்கள் கவலை கொண்டிருப்பதால் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறோம். மன்றம் கூடும்போது, இந்த மன்றத்தில்தான் இதுபோன்ற தகவல்களைத் தர வேண்டுமென்று விதி இருக்கிறது. அப்படியிருக்கும்போது பத்திரிகை நிருபர்களை அழைத்து—இங்கே சொல்லாமல்— கருத்துக்களை வெளியிட இருப்பது முறையா? அது இந்த சபைக்கு காட்டும் மரியாதையாகுமா? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்று மக்கள்—நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு பேரவைத் தலைவரிடம் சொல்லியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். இன்றைக்கு அவர் பத்திரிகை நிருபர்களுக்கு அதுபற்றி இண்டர்வ்யூ கொடுக்கிறாரா இல்லையா என்பது ஹைபதடிகல் க்வெஸ்டின் அதைப்பற்றி நாம் முடிவு கூறுவது நல்லதல்ல.

## 5. 1975-76 ஆம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

THIRU K. M. SUBRAMANIAM: On a point of personal explana-tion, Sir. (Interruption) No, no. I will finish. Because my name has been dragged, I will explain. We have voted for the abolition of races

and there is no question about it. I only pointed out that enforcement is impossible in the present circumstances. That is all. The Party's policy is definitely clear. But whatever it is, it cannot be enforced and so many people in the middle will make money and Government will lose the revenue.

மாண்புமிகு திரு. ஒ. பி. ராமன் : தலைவர் அவர்களே, இன்றைக்கு அவையில் கோரப்பட்டிருக்கிற மானியக் கோரிக்கைகளின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் தங்களுடைய நல்ல கருத்துக்களை வழங்கி இருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

இந்த ஐந்து மானியக் கோரிக்கைகளில், முதலாவதாக கால்நடை பராமரிப்புத் துறையைப் பற்றி சில கருத்துக்களைச் சொல்ல வேண்டுமென்று விரும்புகிறேன்.

பொதுவாக, இந்த ஆண்டு வறட்சியின் காரணமாக கால்நடை பராமரிப்பில் விவசாயிகள் அதிகம் துயருறுகிறார்கள் என்பதை ஓரிரு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அதோடு அரசு கால்நடைத் துறை மூலமாக கால்நடையின் தரத்தை உயர்த்துவதற்குப் பல்வேறு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று அவர்கள் தங்கள் ஆலோசனை களைக் கூறியிருக்கிறார்கள். கால்நடைகளின் தரத்தை உயர்த்த—கால் நடைகளின் வளத்தைப் பெருக்கத்தான் சமீபகாலமாக ஆர்டிபிஷியல் இன்செமினேஷன் முறையில் நமது மாடுகளை நல்ல தரமான வெளி நாட்டுக் காளைகளுடன் இனப்பெருக்கம் செய்து வருகிறார்கள். இப்படி மரபு வழிகளை மேம்படுத்துவதன் மூலம் தான் நல்ல தரமான கால் நடைகள் உருவாகும் என்பதில் யாருக்கும் கருத்து மாறுபாடு இருக்க முடியாது. அது போதுமான அளவு செய்யப்படுகிறதா இல்லையா என்ற வினாவை இங்கே எழுப்பியிருக்கிறார்கள்.

இப்போது இந்த ஐ.சி.டி.பி. திட்டத்தின் கீழ்—மதுரை மாவட்டத் திலும், திருநெல்வேலி மாவட்டத்திலும், 150 இடங்களில் செயற்கை கருத்தரிப்பு முறை பயன்படுத்தப்பட்டு வருகிறது. அது இல்லாமல் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் 138 இடங்களில் இந்த சென்டர்கள் இருக்கின்றன. கீ வில்லேஜ் ஸ்கீமின் கீழ் 28 சென்டர்கள் இருக்கின்றன. ஆக மொத்தம் 316 இடங்களில் செயற்கை கருத்தரிப்பு முறை இன்றைக்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதைச் சற்று அதிகப்படுத்த வேண்டும். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் உள்ள எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டுமென்ற கோரிக்கை நியாயமானது என்பதை நான் உணர்கிறேன்.



நல்ல தரமான — மேம்பாடான மாடுகளை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டும். அப்படி இறக்குமதி செய்தால்தான் அதன்மூலமாக இனப்பெருக்கம் செய்து—நல்ல வளமுள்ள கால்நடை களை உருவாக்க முடியும் என்ற கருத்தும் சொல்லப்பட்டது. இப்போது நமது நாட்டிலே வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்த மாடுகளை இனம்வாரியாக பார்த்தால் ஜெர்஁ஸி—49, ஃபிரிஷியன் —46, ரெட்டேன் 8, ப்ரௌன்—28, முர்ரா எருமைகள்—258 — இவை அல்லாமல் கால் நடைக் கல்லூரியில் வெளிநாடுகளில் இருந்து வரவழைக்கப்பட்ட காளை கள் 29, எருமைகள் 73 இருக்கின்றன. வெளிநாடுகளில் இருந்து கால்நடைகளை வரவழைத்து இந்த எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டு மென்று சொல்வது நல்ல கருத்து. என்றாலும், வெளிநாடுகளில் இருந்து மாடுகள் வாங்குவதில் பல சிக்கல், சிரமங்கள் இருக்கின்றன.

இருப்பினும் ஏப்ரல்—மே மாதங்களில்—குறிப்பாக மே மாதத்தில் டென்மார்க்கில் இருந்து 240 ஜெர்ஸி கிடேரிகளையும், 10 ஜெர்ஸி காளை களையும்—தஞ்சை மாவட்டத்தில் உள்ள ஈச்சங்கோட்டை பண்ணைக்கு வாங்கி வர இருக்கிறோம். பசு மாட்டின் விலை 10 ஆயிரம் ரூபாய், காளையின் விலை 1 லட்சம் ரூபாய். தஞ்சை மாவட்டத்தில் கால்நடை வளத்தை— குறிப்பாக தமிழகத்தின் கால்நடை வளத்தைப் பெருக்க இது மிகவும் உதவியாக இருக்கும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார் ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். மே மாதத்தில் டென்மார்க்கில் இருந்து 250 மாடுகள் வாங்கி வர இருப்பதாகச் சொன்னார்கள். மாடு வாங்க அமைச்சர் போகப் போகிறாரா ? அல்லது வேறு யாராவது போகப்போகிறாரா என்று தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது எப்படி பாயிண்ட் ஆப் ஆர்டரில் வரும். ?

மாண்புமிகு திரு. ஒ. பி. இராமன் : மாண்புமிகு உறுப்பினர் சுவைக்காக பழைய ஞாபகத்தில் சொல்லியிருக்கிறார் என்று கருது கிறேன். யாரும் மாடு வாங்கப் போகவில்லை. அங்கிருந்து மாடுகளை இங்கே அனுப்பி வைக்க ஏற்பாடுகள் நடந்துவிட்டன. இப்படி வெளிநாடுகளில் இருந்து மாடுகளைத் தருவித்து இங்குள்ள கால்நடைகளின் தரத்தை உயர்த்த வேண்டும் என்பதற்கான முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன.

இன்னொன்று; கால்நடைகளின் தரத்தை உயர்த்துவதோடு — இங் குள்ள மாடுகளைப் பாதுகாக்க வேண்டும். அடிமாட்டுக்காக நாள்தோறும் ஆயிரக்கணக்கான மாடுகள் அண்டை மாநிலங்களுக்குப் போகின்றன என்ற கருத்தும் சொல்லப்பட்டது. இது நியாயமான கருத்து. நான் இது பற்றித் தகவல் விசாரித்தேன். நாள் ஒன்றுக்கு 3 ஆயிரம் மாடுகள் போவதாகச் சொன்னார்கள். ஆனால் ஐந்தாயிரம் மாடுகள் தமிழ் நாட்டில் இருந்து வெளிமாநிலங்களுக்குப் போவதாகச் சொல்லப்படுகிறது.

இதை எப்படித் தடுப்பது என்று கவனம் செலுத்த வேண்டும். குஜராத், மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களில் இதுபோல மாடுகள் போவதைத் தடுக்க சட்டம் இருக்கிறது. அதே போன்ற சட்டத்தை இங்கே கொண்டுவரலாம் என்பதில் — அபிப்பிராய பேதங்கள் சட்ட இலாக்காவில் இருந்தாலும் — அந்தச் சட்டத்தைப்போன்ற இணக்கமான சட்டம் ஒன்றை இங்கு கொண்டு வருவதில் ஆட்சேபணை இல்லை. அதற்கானதொரு சட்டம் இங்கே — இந்த ஆண்டே கொண்டுவரப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக, கோழி வளர்ப்புக் கழகம் மூலமாக—முன்பு இலாக்கா பொறுப்பில் இருந்தது—இப்போது இதற்காகவே தனிக் கார்ப்பரேஷன் அமைக்கப்பட்டிருக்கிறது —ஒரு நாள் ஒன்றுக்கு 1 லட்சம் முட்டைகளை விற்கக்கூடிய அளவுக்கு விரைவுத் திட்டம் உருவாக்கப்பட்டு வருகிறது. குஞ்சு பொரிக்கிற சென்டர்களையும் நான்கைந்து இடங்களில் ஏற்படுத்தி மாதத்திற்கு 20 ஆயிரம் குஞ்சுகளைப் பொரிக்கின்ற அளவில் அவை செய்யப்படும். அதன்மூலம் தனியாருக்கும் அரசுத்துறை நிறுவனத்திற்கும் கோழிக் குஞ்சுகளைத் தருவதற்கு கோழி வளர்ப்புக் கழகத்தின் மூலம் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-00)

இந்தக் கோழி வளர்ப்பு அல்லது பால் பண்ணைக்காக மாடு வளர்ப்புக்காகச் சில இடங்களிலே சிரமப்படுகிறார்கள். பலபேர் கோழிப் பண்ணை வைக்கிறார்கள்; நஷ்டம் வருகிறது என்று மூடிவிடுகிறார்கள். அப்படி ஏன் நஷ்டம் வருகிறது என்றால், ஒரே ஒரு காரணம்தான். ஃபீட் காஸ்ட், தீவனத்தின் விலை அதிகமாக இருக்கிறது. ஒரு சம்சாரி அல்லது ஒரு குடியானவன், 4 ஏக்கர், 5 ஏக்கர் நிலம் வைத்திருப்பவன் பால் பண்ணைக்காக மாடு வளர்த்தாலோ, அல்லது கோழிப் பண்ணை வைத்தாலோ, சமாளிக்க முடிகிறது. குதிரை மசால் என்று புதிதாக ஒரு செடி வருகிறது. அது கோழிக்கு முக்கியமான உணவாகக் கருதப்படுகிறது. ஆனால், பண்ணை வைப்பதையே தொழிலாகக் கொண்டு, பண்ணை வைப்பவர்களுக்கு அது கட்டுப்படியாகவில்லையென்பதை நான் ஓரளவுக்கு ஒத்துக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், அண்டை மாநிலங்களிலே, கேரளாவிலே, தீவனத்திற்காக, சப்சிடி கொடுக்கிறார்கள். அந்த மாதிரி ஏன் தமிழ் மாநிலத்திலே செய்யக் கூடாது ? அந்த மாதிரி தமிழகத்திலே ஏன் குறைந்த விலைக்குக் கோழித் தீனி கொடுக்க அரசு ஏற்பாடு செய்யக் கூடாது ?

திரு. சோ. அழகர்சாமி : கோழிப் பண்ணை ஆரம்பிக்கப்பட்டது பற்றி ஸ்பெஷல் ஆடிட் ரிப்போர்ட் வந்திருப்பதாகச் சொன்னார்களே, அதை அரசாங்கம் சபைக்கு வைக்குமா ?





திரு. ஏ. எம். இராஜா : தலைவரவர்களே கோழித் தீவனத்தைப் பொறுத்தவரையில், அதன் உற்பத்தியில் முக்கியமான பங்கு வகிக்கின்ற "ஃபிஷ்மீல்" சரியாகக் கிடைப்பதில்லை, தனியாருக்கு, கோழித் தீவனம் தயாரிப்பவர்களுக்கு. ஆகவே, அதற்கு நம்முடைய அரசு ஏதாவது ஏற்பாடு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : கோழித் தீவனமானாலும் மாட்டுத் தீவனமானாலும் அந்தத் தீவன விலையைக் குறைக்க வேண்டுமென்பதிலே கருத்து வேறுபாடில்லை. அதை நான் ஒத்துக்கொள்கிறேன். 3, 4 நாட்களுக்கு முன்னாலே முதலமைச்சரவர்களும், பால் வளத் துறை அமைச்சரவர்களும், நானும் புதிதாக மாட்டுத் தீவனத் தொழிற்சாலையைத் துவக்கச் சென்றிந்தோம். மாண்புமிகு முதலமைச்சரவர்கள், மாதவரத்திலே மாட்டுத் தீவனத் தொழிற்சாலையை ஆரம்பித்து வைத்தார்கள். விலை சட்டுபடியாகக் கூடிய வகையிலே, அங்கே இருக்கக்கூடிய மாடுகளுக்குத் தீவனம் தயார் செய்ய முடியும் என்ற வகையிலே, அத்தொழிற்சாலையை ஆரம்பித்து வைத்தார்கள்.

பெரும்பாலும், நகர்ப்புறத்திலே, விவசாயத்திலில்லாதவர்கள் பண்ணையை ஆரம்பிக்கும்போது சிரமம் ஏற்படுகிறது. கழிவுத் தீவனங்களைப் போட்டு, பல இடங்களிலே, கிராமங்களிலே, கோழிப் பண்ணைகள் வைத்திருக்கிறார்கள். தனிப்பட்டவர்கள் வீட்டில் வைத்திருக்கிறார்கள். அவர்கள் அரசாங்கம் விற்கிற தீவனம் தனியார் விற்கிற தீவனம் ஆகியவற்றை வாங்கிக் கூட, இலாபகரமாக நடத்தி வருகிறார்கள்.

சென்னைக்குத் தென் பகுதியிலே, தாம்பரம் பகுதியிலே, 40, 50 பேர் கோழிப் பண்ணை வைத்திருக்கிறார்கள். அவர்கள் என்னிடத்திலே பேசினார்கள். தீவன விலை, சற்று அதிகமாக இருக்கிறது; அதைக் குறைக்க வேண்டுமென்று சொன்னார்கள். நாங்கள் எல்லாக் கணக்கையும் பார்த்தால், வெளியிலே விற்கிற விலையை விட, அரசுத் துறையிலே, தீவன விலை அதிகமாக இருக்கிறது என்று சொன்னார்கள். நான் கேட்டேன், வெளியிலேயே வாங்கிக்கொள்ளலாமே; அங்குதான் குறைவாக இருக்கிறதே என்று. அதற்கு அவர்கள், வெளியிலே இருப்பதை விட, அரசுத் துறையிலே தரமான உணவு தயாரிக்கப்படுகிறது என்று சொன்னார்கள். அதை அவர்கள் ஒத்துக்கொள்கிறார்கள். நாம் ஓரளவுக்குத்தான் விலையைக் குறைக்க முடிந்தது. இருந்தாலும், அதை இன்னும் குறைக்கின்ற அளவு முயற்சியில் ஈடுபட்டால், நகர்ப்புறங்களிலே, அல்லது வேளாண்மையில்லாத தொழிலாக நடத்துகிறவர்கள் அதை இலாபகரமாக நடத்த முடியும் என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். அந்த அளவிலே, இலாகா அளவிலே, என்ன முயற்சியில் ஈடுபடவேண்டுமோ அந்த முயற்சியிலே ஈடுபடலாம் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்கிறேன்.

காட்டிலாகா பற்றி இங்கே எல்லோரும் பேசினார்கள். காட்டிலாகாவுக்கு 4, 5 ஆண்டுகளுக்கு முன்னாலே ரூ. 3 கோடி தான் வருமானம். இந்த ஆண்டு ரூ. 9 கோடி வருமானம் எய்தியிருக்கிறது. இருந்தாலும், வருமானம் அதிகம் வரவேண்டுமென்ற கருத்தெல்லாம் சொன்னார்கள். நல்ல கருத்துக்கள் தான். ஆனால், காட்டிலாகாவினுடைய குறிக்கோள் வியாபார முறையிலே அதை நடத்தி, சம்பாதிக்க வேண்டுமென்ற நுண்ணிய நோக்கத்தோடு நாம் செய்வதைக் காட்டிலும், உறுப்பினர்கள் சொன்னதைப் போல, காடுகள் பாதுகாத்துப் பராமரிக்கப்பட வேண்டுமென்பது தான் முக்கியமான கருத்து.

இருக்கிற காடுகளை அழியாத நிலையிலே பாதுகாத்தல், அல்லது புதுக் காடுகளை வளர்த்தல் என்பது ஒரு முயற்சி. இரண்டாவது முயற்சி, தொழிற்சாலைகளுக்குத் தேவையான, தொழில் உற்பத்திக்குத் தேவையான மரங்களை—ராமெட்டீரியல்ஸ்ஸை—தயாரிக்கப்பயன்படுத்தலாம் என்பதாகும். இரண்டாவது முயற்சிக்குத்தான் இரண்டு மூன்று ஆண்டுகளாக நமது உறுப்பினர்கள் தொழில் வளம் பெருக காட்டிலாகா வேலை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டதற்கிணங்க, சென்ற ஆண்டு ஃபாரஸ்ட் கார்ப்பரேஷன் துவக்கப்பட்டிருக்கிறது. 75,000 ஹெக்டேர் நிலப்பரப்பு அவர்களிடத்திலே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இராமநாதபுரம், திருச்சி, புதுக்கோட்டை, தென் ஆற்காடு மாவட்டங்களிலே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இன்னும் இன்டஸ்ட்ரீஸ்—உட்–பேஸ்ட் இண்டஸ்ட்ரீஸ் என்று சொல்லக்கூடிய, மரத்தை நம்பி உருவாகக் கூடிய தொழிற்சாலைகளுக்கு எந்த எந்த அளவுக்கு நாம் மர உற்பத்தி செய்ய முடியுமோ அந்தப் பொருள்களை யெல்லாம் தருகின்ற பொறுப்பை இந்தக் கழகத்தின் மூலமாக மேற்கொள்கின்ற மிகப் பெரிய திட்டத்தை அவர்கள் வைத்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த வன இலாகாவிலே, தேயிலை பயிரிடுகின்ற நிலையில் தேயிலைத் தோட்டங்கள் வைக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக இலங்கையிலிருந்து வருகின்ற அகதிகளுக்கு வாழ்வளிக்க மத்திய அரசாங்கத்திடம் இருந்து லோன் பெற்று, நீலகிரி மாவட்டத்திலே, 3,750 ஏக்கர் பரப்பளவிலே தேயிலை பயிரிடுகின்ற திட்டம் உருவாக்கப்பட்டு, 1,750 ஏக்கர் பயிர்செய்து முடிக்கப்பட்டு விட்டது. கிட்டத்தட்ட ஆயிரம் பேர் வேலை செய்கிறார்கள். 3,000 பேரை வேலையில் அமர்த்த வேண்டுமென்ற அடிப்படையிலே திட்டம் உருவாக்கப்பட்டு, மத்திய சர்க்கார் கடன் கொடுப்பதாகவும் ஒத்துக்கொண்டிருக்கிறது. அதிலே தற்சமயம் சுமார் 1,000 அகதிகள் டீ பண்ணையிலே அமர்த்தப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.



மாண்புமிகு உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள், ஆண்டுதோறும் அவர்கள் மாவட்டத்திலேயுள்ள ரப்பர் தோட்டத்தைப் பற்றிப் பேசுவார்கள். அந்தத் திட்டத்தின் கீழ் 8,295 ஏக்கர் பரப்பளவிலே ரப்பர் பயிரிட முடிவு செய்திருக்கிறோம், பயிர் செய்து வருகிறோம். இப்பொழுது பலன் கொடுக்கிற தோட்டத்தின் அளவு 2,947 ஏக்கர். சென்ற ஆண்டு ரூ. 60 இலட்சம் அளவு சம்பந்தமான ரப்பர் விற்கப்பட்டிருக்கிறது. 8,295 ஏக்கரிலும் பயிர் செய்து முடிக்கின்ற, அந்தத் திட்டம் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படுமானால் கடைசியாக, ஆண்டு ஒன்றுக்கு ரூ. 2 கோடிக்கு இலாபம் தரக்கூடிய திட்டமாக இருக்கும் என்றுதான் நிபுணர்கள் சொல்லியிருக்கிறார்கள். இப்பொழுது கிட்டத்தட்ட மூன்றிலே ஒரு பங்குதான் பயிரிடப்பட்டிருக்கிறது. இது தென் கோடியிலே, கன்னியாகுமரியிலே இருக்கின்ற காரணத்தாலே சீதோஷ்ண நிலை ஏற்றதாக அங்கு இருக்கிறது. ஒரு ரப்பர்தோட்டம் உருவாகக்கூடிய சாத்தியக்கூறு இருக்கிறது.

தொழிலாளர்களுடைய பிரச்னையை ஆண்டுக்கு ஒரு தடவை சொல்லி வருவார்கள். நானும் செய்துதான் வருகிறேன். ஏதாவது, தொழிலாளர் பிரச்னை இருந்தாலும், நானும் அவர்களுடன் பேசி சாதாரணமாகத் தீர்த்துக்கொள்வதைப் போல், நாம் தீர்த்துக்கொள்ளலாம் என்று கருதுகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் எல்லாப் பிரச்னைகளையும் தீர்த்து விடுவேனென்று சொன்னார்கள். போனஸ் அல்லது எக்ஸ்–கிரேஷியா பேமெண்ட் கொடுப்பதற்காக, இலாகாவிலிருந்து அரசாங்கத்திற்கு சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது. இலாக்கா, தொழிலாளர்களுடன் அக்ரிமெண்ட் செய்திருக்கிறது, உடனடியாக நிறைவேற்றிக் கொடுப்பதாக. அரசாங்கம், அதற்கு ஏதாவது முடிவு செய்திருக்கிறதா என்பதை இப்பொழுது அறிவிப்பார்களா ? இது நல்ல சந்தர்ப்பம். இப்பொழுது அறிவித்தால் விளம்பரமாகவும் இருக்கும். அதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ? ரூ. 1 கோடி இலாபம் இருக்கிறது.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : ரூ. 1 கோடி இலாபம் என்று சொன்னது, 8,259 ஏக்கர் நிலமும் பலன் தரும்போதுதான் அந்தக் கணக்கு. தற்பொழுது மூன்றில் ஒரு பங்கு தான் பலன் தருகிறது. அதற்குத் தனியாகக் கூட கார்ப்பரேஷன் அமைக்கலாமா என்று யோசிக்கலாம். அதை அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

திரு. ஆர் பொன்னப்ப நாடார் : போனஸ் சட்டத்தை, அரசு நிறுவனங்களுக்குக் கொண்டு வர, இப்பொழுது அதன் மேலே பரிந்துரைகள் எல்லாம் வந்திருக்கின்றனவே, மத்திய அரசாங்கத்திடமிருந்து. போனஸ் கொடுக்காவிட்டாலும், எக்ஸ் கிரேஷியா பேமெண்ட் கொடுக்க—இலாபகரமாக நடந்து வருகிறது—ஏன் அரசாங்கம் தயங்குகிறது ? தனியார் கொடுக்கிறார்களே, அந்த அளவிலாவது அரசாங்கம் தொழிலாளர்களுக்கு நன்மை செய்யக் கூடாதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: இப்பொழுது இலாபகரமாக நடந்து கொண்டிருக்கிறது என்று சொல்வது முழுமையான கருத்து அல்ல. காரணம், இப்பொழுது காப்பிட்டல் எக்ஸ்பெண்டிச்சர்தான் அதிகம் செய்கிறோம். அப்படிப் பார்த்தால் நஷ்டம் வரும். பெரிய திட்டம், 8 ஆயிரம் சொச்சம் ஏக்கரில், இப்பொழுது 2 ஆயிரத்து சொச்சம்தான் பயிர் செய்யப்படுகிறது. மொத்தமாக செய்தபிறகுதான் டாப்பிங் ஆனபிறகு தான் இலாபம் வரும். இப்பொழுது காப்பிட்டல் எக்ஸ்பெண்டிச்சர் அதிகமாக இருக்கிற காரணத்தாலே இந்நிலையிருக்கிறது. தொழிற்சங்கத் தலைவர் அவர்தான். ஒவ்வொரு ஆண்டும் ஒப்புக்கொள்கிற அளவுதான்—இதிலே தொழிலாளர் பிரச்னை, நியாயமான பிரச்னை இருந்தால், அதை அரசு செய்யலாம் என்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

இந்த வன இலாகாவின் இன்னொரு பகுதியிலே சின்கோனா என்ற ஒரு சிறிய பிரிவு இருக்கிறது. கிட்டத்தட்ட 6,500 ஏக்கர் பரப்பளவில் சின்கோனா செடிகள் பயிரிடப்படுகின்றது. இதிலேயும் ஒவ்வொரு ஆண்டிலேயும் வருகிற வருமானக் கணக்கைப் பார்த்தால் சற்று அதிகமாகத்தான் வருகிறது. இதை நாம் லாபகரமான தொழிலாகப் பார்க்கவில்லை, மருந்துப் பொருளாகப் பார்க்கிறோம், அரோமேடிக் பிளாண்ட், சின்கோனா என்ற அளவிலேதான் அதை மருந்துப் பொருளாகப் பார்க்கிறோம். 9 இலட்ச ரூபாய் வரையிலே இந்த ஆண்டு வந்திருக்கிறது, இன்னும் மூவாயிரம் தொழிலாளர்களுக்கு, மலைப்பகுதியிலே உள்ள அந்த மக்களுக்கு, வேலை வாய்ப்புக் கொடுக்கக்கூடிய ஒரு திட்டம் வகுக்கப்படுகிறது. இப்போதே இந்தத் துறையில் மூவாயிரம் தொழிலாளர்கள் வேலை பார்க்கிறார்கள், மேலும் 3,000 தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கக்கூடிய வாய்ப்பு ஏற்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு வெளி நாடுகளிலே இந்த சின்கோனா தூளைப் பயன்படுத்தக் கூடிய முறையிலே அதற்கு கிராக்கி ஏற்பட்டிருப்பதாக அறிகிறோம், இப்படிப்பட்ட கிராக்கி நிலவுமானால் வேலைவாய்ப்பு அதிகமாகிற வாய்ப்பு ஒரு புறம் இருந்தாலும், இப்போது வருகிற லாபம் ஒருபுறம் இருந்தாலும் அது இன்னும் அதிகமாகக்கூடிய நல்ல அம்சமும் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வணிக வரித் துறையைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் நல்ல அம்சங்கள் சிலவற்றைச் சொன்னார்கள். இவ்வளவு தூரம் அவர்கள் வசூல் செய்திருக்கிறார்கள், ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்பு 50 கோடி ரூபாய் வருமானம் வந்தது, இந்த ஆண்டு 150 கோடி ரூபாய்க்கு மேலே வசூல் செய்திருக்கிறார்கள், இதுவெல்லாம் மக்களைப் பிழிந்துதான் செய்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள்.

மல்டிபாயின்ட் ஆக இருப்பதை சிங்கிள் பாயின்ட் ஆக மாற்றியிருப்பதை திரு ஜப்பார் அவர்கள் குறிப்பிட்டு நல்ல முயற்சி, நல்லத் திட்டம் வியாபாரிகளுக்கு அதனால் கஷ்டம் கிடையாது, மிக்க மகிழ்ச்சியோடு வரியைத் தருகிறார்கள் என்று சொன்னார்கள். ஆனால் அதைப்போன்று எல்லாப் பொருட்களுக்கும் மாற்றிவிடவேண்டுமென்று சொன்னார்கள். உற்பத்தியாகிற



பொருள்களுக்கு வரிப் போடுவது என்பது சுலபம். பல்வேறு முனைகளில் வரி என்று வருகிற போது வியாபாரிகள் பல இடங்களிலே தவறு செய்கிறார்கள், ஆகவே அவர்கள் வரியை ஏய்க்காமல் இருக்க வேண்டுமென்ற முறையிலே சிங்கிள் பாயின்ட் போடுகிறோம். ஆனால் எல்லா சரக்குகளுக்குமே சிங்கிள் பாயின்ட் என்று போட்டுவிட முடியாது.

## It depends upon the nature of the goods

எல்லா பொருள்களுக்குமே சிங்கிள் பாயின்ட் போடுவது என்றால் சிரமங்கள் ஏற்படும். 1973–74 ஆம் ஆண்டில் சுமார் 150 கோடி ரூபாய் வந்தது. இந்த ஆண்டு 1974–75-ஆம் ஆண்டு மார்ச் 31-ஆம் தேதி வரையில் கிட்டதட்ட 200 கோடி ரூபாய்க்கு வரும் என்று கருதுகிறேன். சுமார் இருநூறு கோடி ரூபாய் வரும் என்று அதிகாரிகள் சொன்னார்கள். இன்னும்கூட ஒன்றிரண்டு கோடி சேர்த்து 201, 202 கோடி வசூலாகும் என்று நினைக்கிறேன். அதைப்பற்றி இன்னும் இரண்டு நாட்கள் போன பிறகு பார்த்தால்தான் விவரம் தெரியும். வரி ஏய்ப்புத் தீவிரமாக நடக்கிறது, அரசாங்கம் கண்காணிப்புத் துறையை விஸ்தரிக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஏற்கனவே இண்டலிஜென்ஸ் விங்கில் இரண்டு அஸிஸ்டெண்ட் கமிஷனர்கள் இருக்கிறார்கள், இப்போது இன்னும் ஒரு அஸிஸ்டெண்ட் கமிஷனரைப் போடுவதாக இருக்கிறோம்,இண்டலிஜென்ஸ் விங்க் பார் கமர்ஷியல் டாக்ஸஸ் என்ற முறையிலே அப்படி ஒரு போஸ்ட் சாங்ஷன் செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் வரி விகிதத்தை, ஏனைய மாநிலங்களில் உள்ள வரி விகிதங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது எந்த அளவிற்கு நாம் விதிக்கிறோம் என்பது புரியும். நண்பர்கள் இங்கே புத்தகங்களையெல்லாம் படித்துக் காட்டினார்கள், நாம் வரி போடலாம், எந்த இனத்திற்குப் போட வேண்டுமென்பதுதான் கேள்வி, வரி போடக்கூடாது என்று, இங்கே சொன்னார்கள், போடக்கூடாது என்று நானும் சொல்ல முடியும், எல்லோரும் சொல்ல முடியும் போடக்கூடாது என்பதற்கு நானும் ஒவ்வொன்றுகச் சொல்லி விளக்கங்கள் சொல்லிவிட முடியும். துணியின் விலை ஏறியிருக்கிறது, அதை ஏழை எளிய மக்கள்தான் பயன்படுத்துகிறார்கள். ஆகவே போடக்கூடாது என்று விளக்கம் சொல்ல முடியும், பஞ்சை எடுத்துக்கொண்டால் அதற்கு வரிப்போட்டால் விவசாயிகளை, உற்பத்தியாளர்களை பாதிக்கும், அதன்பிறகு நூல் விலையைப் பாதிக்கும். ஏழை எளிய மக்கள்தான் அதனால் பாதிக்கப்படுவார்கள் என்று விளக்கம் நானும் கூட சொல்லலாம்.

இன்றைக்கு இப்படியே சொல்லிக்கொண்டே போனால் நாம்தான் இவற்றையெல்லாம் அனுபவிக்கிறோம். எதற்கு வரிப் போடலாம் என்று யோசித்துப் பார்த்து தவிர்க்க முடியாத கட்டங்களிலே. ஓரளவிற்கு சமுதாயத்தில் இருந்து வரி வாங்க வேண்டும். மக்கள் பொருள்களை வாங்குகிறார்கள், அவர்கள் வரி கொடுக்க வேண்டுமென்ற முறையிலே போடுகிறோம். ஆனால் அதிகமாக சுமையாக இருக்கக்கூடாது என்ற வாதத்தை நான் ஒப்புக்கொள்கிறேன். தமிழ் நாட்டிலே வரி விகிதம் அதிகம் என்று சொன்னார்கள். கிட்டத்தட்ட 10 ஆண்டுக் கணக்கை, 20 ஆண்டுக் கணக்கை மொத்தமாகப் பார்க்காமல்

ஒவ்வொரு ஆண்டும் பார்த்தால் நாம் எந்த அளவிலே மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது உயர்த்தி இருக்கிறோம் என்பது தெரியும். வேறு மாநிலங்களைவிட தமிழ் நாட்டில் சுமை குறைவாக இருக்கவேண்டுமென்ற முறையைத்தான் நம்முடைய அரசு கையாண்டு வருகிறது. இருந்தாலும்கூட இந்த ஆண்டு 6½ கோடி ரூபாய்க்கு போடப்பட்டிருக்கிறது, இதை வேண்டாமென்று அவர்கள் சொல்வதற்கு என்ன தர்க்கம் என்று எனக்குத் தெரியவில்லை. காபி, டீ இவையெல்லாம் ஏழை எளிய மக்கள்தான் சாப்பிடுகிறார்கள் என்று சொல்லிவிடலாம், தென் மாநிலங்களிலே பக்கத்து மாநிலங்களிலே இருக்கிற வரி அளவிற்குத்தான் இப்போது விதிக்கப்பட்டிருக்கிறது, அதிகமாக அல்ல, 5½ சதவீதமாக இருந்தது 6 சதவீதமாக ஆக்கப்பட்டது. மெஷின்மேட் மேட்சஸ் அண்ட் பல்ஸஸ்-க்கு அரை சதவீதம் உயர்த்தப்பட்டிருக்கிறது. இன்னும் சில மாநிலங்களிலே நாம் சாப்பிடுகிற உணவுப் பொருள்களுக்குக்கூட வரிப் போடுகிறார்கள். அண்டை மாநிலங்களில், கேரள மாநிலத்தில் போட்டிருக்கிறார்கள். கர்நாடகத்திலே போடப்பட்டிருக்கிறது, ஆந்திர மாநிலத்தில் போடப்பட்டிருக்கிறது, நாம் அந்த அளவிற்கு உணவு தானியங்களுக்கு வரிப் போடுவதை நிறுத்தியிருக்கிறோம், அவைகளுக்கு வரிப்போடுகின்ற முறையை நாம் பின்பற்றவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், பருப்பு, எண்ணெய் இவைகளுக்கு எல்லாம் 3½ சதவீதமாக இருந்ததை 4½ சதவீதமாக உயர்த்தி இருக்கிறீர்கள். மல்டிபாயிண்ட் டாக்ஸ் என்று வருகிறபோது 4, 5 ஸ்டேஜஸ்களை கிராஸ் பண்ண வேண்டியிருக்கிறது, ஏற்கனவே விலை அதிகமாக இருக்கிறது, அதோடு ஒவ்வொரு கட்டத்திலும்—நீங்கள் அரை சதவீதம்தான் உயர்த்தியிருக்கிறோம் என்று சொன்னாலும்கூட—மக்கள் தலையிலே 5, 6 கட்டங்களிலும் சேர்த்து மேலும் 3 சதவீதம் என்ற அளவிற்குத்தான் வந்து விழும். ஆகவே, இது மாதிரி பொருள்களுக்கு வரிப் போடாமல் அமைச்சர் அவர்கள் எக்ஸம்ப்ஷன் கொடுப்பதற்கு முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : முக்கியமான உணவுப்பொருட்களைப்பற்றி நாம் பார்க்கவேண்டும். உப பொருட்களாக உள்ளவை, உணவு தயாரிப்பதற்காக பயன்படுகின்றவற்றை நாம் எடுத்துக்கொள்ளக் கூடாது, அண்டை மாநிலங்களிலே நாம் சாப்பிடுகின்ற அரிசி, நெல் போன்றவற்றிற்கு அவர்கள் போடுகிறார்கள், நாம் அவற்றிற்குப் போடவில்லை என்றுதான் சொன்னேன். பருப்பு, எண்ணெய் எல்லாவற்றிற்கும் விதிவிலக்கு வேண்டுமென்கிறார்கள். அப்படியானால் அதை காம்பன்சேட் செய்ய என்ன செய்யலாம் என்று அவர்கள் ஆலோசனை சொன்னால் அரசாங்கம் பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





திரு எம். சுரேந்திரன் : மெம்பர்களை ஆலோசனை கேட்பதில்லை, கேட்டால் சொல்கிறோம்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : நாங்கள் செய்திருக்கிறோம்; சரியில்லை என்று சொல்வீர்களானால் ஆலோசனை சொல்லுங்கள்; பார்க்கலாம். சிறுவியாபாரிகளைப் பொறுத்தவரையில் 50 ஆயிரம் ரூபாய் இருந்தால் விற்பனை வரியிலிருந்து விலக்கு அளித்திருக்கிறோம். பக்கத்திலே உள்ள மாநிலங்களிலே எல்லாம் இதைவிட குறைவாக வைத்திருக்கிறார்கள். கேரளத்திலே 20 ஆயிரம் ரூபாய் என்றும், கர்நாடகத்திலே 25 ஆயிரம் ரூபாய் என்றும், ஆந்திராவிலே 25 ஆயிரம் ரூபாய் என்றும் வைத்திருக்கிறார்கள். நாம் ஏற்கெனவே குறைவாக இருந்ததை 50 ஆயிரம் என்று இப்போது உயர்த்தியிருக்கிறோம்; 50 ஆயிரத்திலிருந்து 1 லட்சம் வரையில் இருந்தால் கம்பவுண்டிங் பெஸிலிட்டிஸ் என்று கொடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொண்டு மொத்தமாக இந்த இலாகாவிலே நல்ல ஆலோசனைகளை வழங்கியிருக்கிறார்கள்.

நான் சில கருத்துக்களுக்குப் பதில் சொல்லாமல் இருந்தாலும்கூட முறைப்படி அரசுத் துறையிலே பரிசீலிக்கும் வாய்ப்பு இருக்கிறது என்று எடுத்துச் சொல்லி, கால்நடைகளை வெளிமாநிலங்களுக்குக் கொண்டு செல்வதைத் தடுக்கக்கூடிய ஒரு சட்டத்தை முடிந்தால் இந்தக் கூட்டத்திலேயே கொண்டுவரலாம் அல்லது அடுத்த கூட்டத்திலே கொண்டுவர முயற்சி செய்கிறோம், அது நல்ல முயற்சி என்று கருதுகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொண்டு மேற்கொண்டு பிரச்னைகள் இருக்குமானால் அரசாங்கம் அவற்றைப் பரிசீலனை செய்யும் என்று தெரிவித்து, வெட்டுத் தீர்மானங்களை சம்பிரதாய முறைப்படி கொடுத்து இருக்கிறீர்கள், அவற்றைத் திரும்பப்பெறவேண்டுமென்று நானும் சம்பிரதாய முறைப்படி கேட்டுக்கொண்டு இந்த அளவிலே உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் நல்ல ஆலோசனைகளைச் சொன்னால் ஏற்றுக்கொள்வோம் என்று கூறினார்கள். ஒரு ஆலோசனையை மட்டும்.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : புது ஆலோசனைகளையெல்லாம் இப்பொழுது சொல்ல வேண்டாம்.

திரு. ஜே. ஜேம்ஸ் : ஒரு கிளாரிஃபிகேஷன். 1974-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 4-ஆம் தேதி ஒரு அக்ரிமெண்ட் நடந்திருக்கிறது. அதாவது "பிளானடேஷன்" நிர்வாகத்திற்கும் அங்கே வேலை செய்யும் தொழிலாளர்களின் பிரதிநிதிகளுக்கும் இடையே அக்ரிமெண்ட் ஆகியிருக்கிறது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : புதுக்கருத்தைச் சொல்லக்கூடாது.

<u>திரு. ஜே. ஜேம்ஸ்</u> : ஏற்கெனவே சொன்ன விஷயம்.

"The management assures to address the Chief Conservator of Forests, Madras to contact the Government of Tamil Nadu to evolve a scheme for making such payment on the other lines of *ex-gratia* payment made to workers in the department of Government in lieu of bonus payable under the Payment of Bonus Act."

அந்த சிபார்சு சென்ற 6 மாதங்களாக அரசாங்கத்தில் இருந்து கொண்டிருக்கிறது. தனியார் தோட்டங்களில் 20 சதவிகிதம் போனஸ் கொடுக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏதோ நஷ்டத்தில் ஓடுகிறது பிளான்டேஷன் என்று சொன்னார்கள். முழுக்க பிளான்டேஷன் செய்தால் 1 கோடி ரூபாய்........

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : தனிப் பிரசங்கம் செய்து புதுக் கருத்தைச் சொல்ல முடியாது. கிளாரிஃபிகேஷன் என்றால் பேசப்பட்ட கருத்திலே கிளாரிபிஃகேஷன் கேட்கலாமே தவிர, புதுக்கருத்தைச் சொல்லக் கூடாது.

<u>திரு. ஜே. ஜேம்ஸ்</u> : ஒரு கோடி இலாபம் வரும் என்று சொன்னார்கள். இப்பொழுதே இலாபத்தில்தான் இருக்கிறது என்பதை மறுக்க முடியாது. முக்கியமான பிரச்னை. இது பெண்டிங்காகவே இருக்கிறது. இதில் உடனடியாகத் தீர்வு காணவில்லையென்றால் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்யும் அபாயம் இருக்கிறது. அம்மாதிரி நிலைமை வந்தால் அரசாங்கத்திற்குப் பெரும் நஷ்டம் ஏற்படும். ஆகவே, அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கின்ற பிரச்னையானதால் போனஸ் பிரச்னையில் உடனடியாகக் கிடைக்கும் வகையில் முடிவு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன.

<u>மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்</u> : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்களின் பேச்சு தொழிலாளர்களை வேலை நிறுத்தத்திற்குத் தூண்டச் செய்வதாக நானும் கருதவில்லை. ஆனால் அந்தத் தொனியில் தான், வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவார்கள் என்று சொல்லுகிறார்கள் அதற்கு அவசியமில்லை; அரசாங்கம் சிபார்சை ஏற்றுக்கொண்டிருக்கிறது என்று அவர்கள் சொல்கிறார்கள். அதைப்பற்றிய விவரம் தெரிந்தாக வேண்டும்; ஏற்றுக்கொண்டதாக எனக்கு நினைவில்லை. பரிசீலனையில் தான் இருக்கிறது என்று நான் கருதுகிறேன். இதைப்போன்ற இணையான இடங்களில் இருப்பதையும் பரிசீலித்து ஆவன செய்யப்படும்.



<u>திரு. சு. துரைசாமி</u> : பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் கால்நடைகள் செல்வதைத் தடுக்க இந்தக் கூட்டத்திலேயே சட்டம் கொண்டு வருவதாகக் கூறினார்கள். நான் பேசும்பொழுது காட்டிலாக்கா மாங்களை பிர்லா கம்பெனிக்கு எடுத்துச் செல்கிறார்கள்; அதைத் தடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டேன். அதைப்பற்றி அமைச்சரவர்கள் பதில் சொல்லவில்லை. தமிழகத்திலிருந்து அப்படிச் செல்வதைத் தடுக்க அமைச்சரவர்கள் சட்டம் கொண்டு வருவார்களா ? திருப்பூரில் சேல்ஸ் டாக்ஸ் அலுவலகம் அதாவது சி.டி.ஓ. அலுவலகம் அமைக்க வேண்டுமென்று கேட்டதற்கும் பதில் சொல்லவில்லை.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : உறுப்பினர்கள் சொன்ன எல்லாவற்றிற்கும் விடை பெற வேண்டுமென்றால் அப்படி விடை பெற முடியாது. நான் பேசியதற்கு என்ன பதில் என்று ஒவ்வொருவரும் கேட்டால் எப்படி ?

<u>திரு. எம். முத்தையா</u> : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதிலில் வெளி மாநிலத்திற்கு மாடுகளைக் கடத்திச் செல்வதைச் சட்டத்தின் மூலம் தடை செய்வதாகக் கூறினார்கள். ஆனால் தற்சமயம் மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் வறட்சி காரணமாக விவசாயிகள் ஆடுமாடுகளை விற்கின்ற சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே, இதற்காக வைக்கோல் போன்ற தீவனப் பொருட்களைச் சொடுத்து அவைகளை விற்காமல் இருக்க என்ன திட்டம் அரசாங்கத்திடம் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

<u>திரு. வா. மை. அப்துல் ஜப்பார்</u> : தலைவரவர்களே, பனியன் தொழிலுக்கு வரி விதிவிலக்கு வேண்டுமென்று நான் கேட்டேன். இரண்டாண்டுகளாகக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அதைப்பற்றி ஒன்றும் பதில் சொல்லவில்லை. அடுத்ததாக, சிங்கிள் பாயிண்ட் டாக்ஸ் பற்றி அமைச்சரவர்கள் ஒப்புக்கொண்டார்கள், அதுதான் சிலாக்கியமானது. நன்மை தரக் கூடியது என்றெல்லாம் கூறினார்கள். அப்படி ஒப்புக்கொண்டதற்குப் பிறகு, இந்த ஆண்டில் இந்தந்த இடங்களில் சிங்கிள் பாயிண்ட் டாக்ஸ் என்று குறிப்பிட்டுச் சொல்லப்படவில்லை.

<u>திரு. ஏ. எம். இராஜா</u> : தலைவரவர்களே, மிக முக்கியமான ஒன்று, குதிரைப் பந்தயம் நாளையிலிருந்து இந்த நாட்டைவிட்டே ஒழிகிறது. ஆனால் அதில் வேலை செய்யும் 140 பேர்களுடைய வாழ்க்கைப் பிரச்னை இருக்கிறது. ஒவ்வொருவரும் 20 ஆண்டுகள் 15 ஆண்டுகள் வேலை செய்திருக்கிறார்கள். அவர்களுக்கான மாற்று வேலைத் திட்டம் என்ன வைத்திருக்கிறார்கள் என்று ஒன்றுமே குறிப்பிடவில்லை. அதைப் பற்றிக் குறிப்பிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், இந்தக் குதிரைப் பந்தயம் சம்பந்தமாக வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு கிராஜுடி அதிகமாகக் கொடுக்க முடியுமா என்பதைப் பார்க்க வேண்டும். ஏனென்றால், அவர் கள் வேலையை விட்டே போகிறார்கள். எனவே அவர்கள் பிழைக்க வழி செய்ய அவர்களுக்கு கிராஜுடி அதிகமாகக் கொடுக்கப்படுமா ? அடுத்து பனியன் தொழிற்சாலையை எடுத்துக்கொண்டால் திருப்பூர் பனியனுக்கு நெருக்கடி வந்திருக்கிறது. மத்திய அரசாங்கம் எக்ஸைஸ் வரியை ஏற்றி யிருக்கிறார்கள். அதன் காரணமாகத் தமிழ் நாட்டிலுள்ள தொழிற்சாலை கள் பாதிக்கப்படும். மேற்கு வங்காளமும் தமிழ் நாடும் தான் அதில் அதிகமாக ஈடுபட்டிருக்கின்றன. எனவே தமிழ்நாட்டைத் தனியாகக் காப் பாற்ற ஏதாவது நடவடிக்கை எடுத்து வரி விலக்கு கொடுப்பதற்கு அரசுக்கு எண்ணமுண்டா ?

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, நான் முதலிலே பேசும் பொழுதே சொன்னேன். சேலம் மாவட்டத்தில் காஞ்சேரி ரிசர்வ் ஃபாரஸ்ட்- டில் ஆரம்பத்தில் கொடுக்கப்பட்ட 31 பேர்களுக்கு 3 வருடத்திற்குக் கொடுக்கப்பட்டடும் அவர்களை அதிலிருந்து வெளியேற்றிவிட்டார்கள். அவர் களுக்குத் திரும்பவும் அவற்றைக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தனி விவாதமாக என் சொல் கிறீர்கள் ? இது கேள்வி நேரம் கூட அல்ல. கேள்வி நேரம் என்றால் பரவாயில்லை. எல்லாவற்றிற்கும் எப்படி பதிலை எதிர்பார்க்க முடியும் ?

திரு. சோ. அழகர்சாமி : அதோடு ஒருமுனை விற்பனை வரியின் மூலம் அதிக வருமானம் வரும் என்று ஒத்துக்கொள்ளப்படுகிறது. ஆகவே எல்லாப் பொருட்களுக்கும் ஒருமுனை விற்பனை வரி விதிக்கும் உத்தேசம் உண்டா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, எல்லாப் பொருட்களுக்கும் செய்வதில்லை. அந்தந்தப் பொருட்களைப்பற்றித்தான் செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது. எதற்குச் சாத்தியக் கூறு இருக் கிறதோ அவைகளை ஒத்துக் கொள்வதில் சிரமம் இல்லை.

31 பேர் பட்டாவைப் பற்றிச் சொன்னார்கள். தனிப்பட்ட பிரச்னை ஒரு மாவட்டத்தில் நடந்தது. அதற்கான முழுத் தகவல் இல்லை. நிலம் இல்லாதவர்களாக இருந்தால், நிலம் இருந்தால், கொடுப்பதில் சிரமம் இல்லை.

குதிரைப் பந்தயத்திற்கான கடைசிநாள் என்ற முறையிலே அவர்கள் பேசியிருக்கிறார்கள். ஏற்கெனவே நமது முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் அங்கே வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு ஓரளவு அரசு



துறையிலே வேலை வாய்ப்பு கொடுப்பதற்கான முயற்சியிலே ஈடுபடுவேன் என்று சட்டமன்றத்திலேயே சொன்னதாக எனக்கு ஞாபகம் இருக்கிறது. தலைவர் சொன்னதற்குப் பிறகு மீண்டும் உறுதியளிக்க வேண்டிய அவசிய மில்லை என்று கருதுகிறேன்.

Thiru B. VENKATASWAMY : Regarding the forest roads I request the Hon. Minister to see that the forest roads are taken up by the Forest Department and repaired. Otherwise, let them be handed over to the Panchayat Union or to the Highways because half a dozen people died in the forest due to the elephant menace. May I request the Hon. Minister to consider this sympathetically ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது.

திரு. எம். முத்தையா : நான் சொன்னதற்கு பதில் என்னவென்று தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லாவற்றிற்கும் பதில் பெற வேண்டுமென்றால் முடியாது.

திரு. எம். சுரேந்திரன் : சார், நண்பர் திரு. அழகர்சாமி அவர்கள் சொன்னதைப்போல, நான் கேட்பது, கூணன்டிப்புதூரில் 21 விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுரேந்திரன் அவர்கள் ஐந்தாறு ஆண்டுக்காலமாக சம்பிரதாயங்களைச் சொல்லி, பல சாதனைகளைச் சாதித்திருக்கிறார்கள். இது அவருக்கும் தெரியும். எனக்கும் தெரியும். பல பேர் பட்டா வாங்கி யிருக்கிறார்கள். இது ஏதோ விடுபட்டுப்போன பிரச்னை என்று கருது கிறேன். மேட்டூர் அணைக்கட்டுப் பக்கத்திலே இருப்பதாலே சில சிரமங்கள் இருப்பதாக அதிகாரிகள் சொன்னார்கள். கேட்ச்மென்ட் ஏரியா பக்கத்தில் வருவதால் அனுபவிக்க விடுவது சரியல்ல என்று கூறியிருக்கிறார்கள். அதையும் அங்கே வரும்பொழுது நேரில் பார்த்து முடிவெடுக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து வெட்டுத் தீர்மானங்கள். நிதிக் கோரிக்கை எண் 4.

திரு. எம். சுரேந்திரன் : சார், நல்ல ஆலோசனைகளை ஏற்றுக் கொள்வதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். வரி வசூலிப்பு அதிகாரி களின் சொத்துக்களை வருடத்துக்கொருமுறை பரிசீலனை செய்ய வேண்டு மென்பது குறித்து விவாதிக்க என்று வெட்டுத் தீர்மானம் கொடுத் திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுதுள்ள பிரச்னை, நீங்கள் வெட்டுத் தீர்மானத்தை வற்புறுத்தப் போகிறீர்களா அல்லது திரும்பப் பெறப் போகிறீர்களா என்பதுதான்.

திரு. எம். சுரேந்திரன் : நான் வற்புறுத்துகிறேன்.

திரு. எம். சுரேந்திரன் அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவிடப்பட்டு, தோல்வியுற்றது.

திரு. கே. ஏ. வகாப் அவர்கள் இருக்கையில் இல்லாததால், அவருடைய வெட்டுத் தீர்மானம் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்பட்டது.

திரு. என். டென்னிஸ் அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி :

"நிதிக் கோரிக்கை எண் 4—பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூபாய் 3,98,10,000–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண். 22. திரு. கே. ஏ. வகாப் அவர்கள் இருக்கையில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்பட்டது.

திரு. என். டென்னிஸ் அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி :

"நிதிக் கோரிக்கை எண் 22— கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின் கீழ் ரூ. 5,65,57,000–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.





நிதிக் கோரிக்கை எண் 25. திரு. என். டென்னிஸ், திரு. பெ. சௌந்தரபாண்டியன் ஆகியோர் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி :

"நிதிக் கோரிக்கை எண் 25—சின்கோனா என்ற தலைப்பின் கீழ் ரூ. 73,34,000–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 45. திரு. பெ. சௌந்தரபாண்டியன் அவர்கள் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டது.

(பிற்பகல் 1–30)

திரு. ஜேம்ஸ் அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"நிதிக் கோரிக்கை எண் 45—காட்டு வளத் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,28,72,000–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 55–க்கு திரு. ஜேம்ஸ் அவர்கள் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"நிதிக் கோரிக்கை எண் 55—காட்டு வள மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,48,78,000–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

(3) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ்நாடு 1975–ம் ஆண்டு நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு—

தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/75), 29–3–1975ஆம் நாளன்று சட்டமன்ற மேலவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, பரிந்துரை ஏது மின்றி நிறைவேற்றப்பட்டதாக மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர் களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இந்த அளவோடு முடிவுற்று நாளைக் காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1–32 மணி அளவில் ஒத்திவைக்கப்பட்டது.

## 7. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

154. Notification issued in G.O. Ms. No. 1931, Rural Development and Local Administration, dated the 29th August 1974, in regard to framing of certain rules under the Tamil Nadu Panchayats Act, 1958: [*Laid on the table of the House under section* 199(2) *of the Tamil Nadu Panchayats Act*, 1958 (*Tamil Nadu Act XXXV of* 1958).]

155. Notification issued in G.O. Ms. No. 466, Home, dated the 5th March 1974, in regard to certain amendments to the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [*Laid on the table of the House under section* 193(3) *of the Motor Vehicles Act*, 1939 (*Central Act IV of* 1939).]

* 156. Annual Administration Report of the Tamil Nadu Water Supply and Drainage Board, for the year 1971–72. [*Laid on the table of the House under section* 44 *of the Tamil Nadu Water Supply and Drainage Board Act*, 1970 (*Tamil Nadu Act* 4 *of* 1971).]

* 157. Annual Administration Report of the Tamil Nadu Water Supply and Drainage Board for the year 1972–73. [*Laid on the table of the House under section* 44 *of the Tamil Nadu Water Supply and Drainage Board Act*, 1970 (*Tamil Nadu Act* 4 *of* 1971).]

* 158. Annual Administration Report of the Tamil Nadu Water Supply and Drainage Board for the year 1973–74. [*Laid on the table of the House under section* 44 *of the Tamil Nadu Water Supply and Drainage Board Act*, 1970 (*Tamil Nadu Act* 4 *of* 1971).]



### B. *Reports, Notifications and Other Papers.*

125. Notification issued in G.O. Ms. No. 115, Commercial Taxes and Religious Endowments, dated the 5th February 1975, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 on the instruments of transfer of debentures issued in the form of Stock Certificates and Promissory notes by the Tamil Nadu Housing Board.

† 126. A Review on the Industrial Growth in Tamil Nadu Major Industries 1974–75 (Tamil).

† 127. A Review on Industrial Growth in Tamil Nadu Sugar Industry, 1974–75 (English).

‡ 128. A Review on Industrial Growth in Tamil Nadu Sugar Industry, 1974–75 (Tamil).

‡ 129. Performance Budget on Inustries, 1975–76.

‡ 130. Policy Note of Cinchona Department, 1975 (English and Tamil).

‡ 131. Policy Note on Forest Department, 1975–76 (English and Tamil).

---

* Cutmotions circulated separately.

† Despatched to Members on 27th March 1975.

‡ Despatched to Members on 28th March 1975.

* Laid on the table of the House on 29th March 1975.

## இணைப்பு I.

[III-ம் பக்கத்தில் 491-ஆம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

1972-73லிருந்து பள்ளிகளின் சேமிப்பு வங்கிகள், இம் மாநிலத்தி லுள்ள கல்வி மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டுள்ளன. மேற்படி திட்டத்தில் சேர்ந்த ஆசிரியர்கள், ஆசிரியைகள் மற்றும் மாணவ-மாணவியரின் எண்ணிக்கையும் அவ்வாண்டில் மொத்தம் வசூலான தொகையும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.







| கல்வி மாவட்டம். | சேர்ந்தவர்களின் மொத்த எண்ணிக்கை. | வசூலான மொத்த தொகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | ரூ. பை. |
| 1. வட சென்னை .. .. .. .. | 1,344 | 2,920.00 |
| 2. தென் சென்னை .. .. .... .. | 83 | 3,155.55 |
| 3. சைதாப்பேட்டை .. .. .. .. | இல்லை | இல்லை. |
| 4. செங்கற்பட்டு .. .. .. .. | 11 | 120.00 |
| 5. திருவள்ளூர் .. .. .. .. | 271 | 24,970.00 |
| 6. காஞ்சீபுரம் .. .. .. .. | 2,102 | 30,861.16 |
| 7. விழுப்புரம் .. .. .. .. | இல்லை | இல்லை. |
| 8. கடலூர் .. .. .. .. | இல்லை. | இல்லை. |
| 9. விருத்தாசலம் .. .. .. .. | 556 | 5,076·00 |
| 10. திண்டிவனம் .. .. .. .. | 386 | 11,580·00 |
| 11. நாகப்பட்டினம் .. .. .. .. | 7,985 | 799·00 |
| 12. தஞ்சை .. .. .. .. | 133 | 555·50 |
| 13. மாயூரம் .. .. .. .. | 72 | 2,009·45 |
| 14. பட்டுக்கோட்டை .. .. .. .. | 306 | 850·36 |
| 15. திண்டுக்கல் .. .. .. .. | 3,350 | 13,603·12 |
| 16. மதுரை .. .. .. .. | இல்லை. | இல்லை. |
| 17. உசிலம்பட்டி .. .. .. .. | இல்லை. | இல்லை. |
| 18. பெரியகுளம் .. .. .. .. | 1812 | 9,182·07 |
| 19. தேவகோட்டை .... .. .. .. | 118 | 103·50 |
| 20. விருதுநகர் .. .. .. .. | 852 | 845·67 |
| 21. இராமநாதபுரம் (மையம்) .. .. .. | இல்லை. | இல்லை. |
| 22. இராமநாதபுரம் .. .. .. .. | இல்லை. | இல்லை. |
| 23. கோயில்பட்டி .. .. .. .. | 524 | 3,421·20 |
| 24. நாகர்கோயில் .. .. .. .. | இல்லை. | இல்லை. |
| 25. தக்கலே .. .. .. .. | இல்லை. | இல்லை. |
| 26. வேலூர் .. .. .. .. | 783 | 3,392·45 |
| 27. திருவண்ணமலை .. .. .. .. | இல்லை. | இல்லை. |
| 28. திருப்பத்தூர் .. .. .. .. | 265 | 990·00 |
| 29. செய்யார் .. .. .. .. | 532 | 2,157·00 |
| 30. சேலம் .. .. .. .. | 60 | 6,500·00 |
| 31. தர்மபுரி .. .. .. .. | 1379 | 13,561·12 |
| 32. நாமக்கல் .. .. .. .. | 327 | 1,853·77 |
| 33. சங்கரிதுர்க்கம் .. .. .. .. | 609 | 2,335·92 |
| 34. திருச்சி .. .. .. .. | 765 | 15,715·00 |
| 35. புதுக்கோட்டை .. .. .. .. | இல்லை. | இல்லை. |

| கல்வி மாவட்டம் | சேர்ந்தவர்களின் மொத்த எண்ணிக்கை | வசூலான மொத்த தொகை |
|---|---|---|
| (1) | (2) | (3) ரூ. பை. |
| .. .. .. .. | 272 | 1,596·90 |
| 36. அரியலூர் .. .. .. .. | 101 | 399·00 |
| 37. கரூர் .. .. .. .. | 65 | 820·00 |
| 38. ஈரோடு .. .. .. .. | 678 | 13,396·60 |
| 39. கோவை .. .. .. .. | 1,455 | 7,591·10 |
| 40. பொள்ளாச்சி .. .. .. .. | 780 | 4,216·39 |
| 41. கோபி .. .. .. .. | 1,874 | 10,616·00 |
| 42. நீலகிரி .. .. .. .. | இல்லை. | இல்லை. |
| 43. குழித்துறை .. .. .. .. | 516 | 1,818·97 |
| 44. கிருஷ்ணகிரி .. .. .. .. | 1,845 | 3,497·28 |
| 45. திருநெல்வேலி (தெற்கு) .. .. | 1,527 | 87,048·00 |
| 46. திருநெல்வேலி (கிழக்கு) .. .. | இல்லை. | இல்லை. |
| 47. திருநெல்வேலி (மையம்) .. .. | | |
| மகளிர் பள்ளி ஆய்வாளர்களின் வட்டங்கள். | 413 | 4,048·93 |
| 1. சென்னை .. .. .. .. | 2,386 | 6,011·00 |
| 2. செங்கை .. .. .. .. | 473 | 8,457·06 |
| 3. தஞ்சை .. .. .. .. | இல்லை. | இல்லை. |
| 4. மதுரை .. .. .. | 5,610 | 4,482·00 |
| 5. திருநெல்வேலி .. .. .. .. | 2,376 | 13,289·80 |
| 6. கோவை .. .. .. .. | 648 | 28,740·09 |
| 7. சேலம் .. .. .. .. | இல்லை. | இல்லை. |
| 8. ஆங்கிலோ இந்திய பள்ளி ஆய்வாளர் சென்னை. | | |

சில கல்வி மாவட்டங்களில் பயிலும் மாணவர்கள் மிக ஏழைகள் என்ற காரணத்தால் இத்திட்டத்தில் சேர வாய்ப்பு இல்லாமல் இத்திட்டத்தில் சேர முன் வரவில்லை.



## இணைப்பு-II.

[12ம் பக்கத்தில் 500-ம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க].

1919ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி சட்டத்தின்கீழ் கால்நடைகள் வைத்திருக்கும் தொழுவங்களுக்கு நகராட்சியிடமிருந்து உரிமம் பெற்றாக வேண்டும்.

2. சென்னை நகரில் தற்சமயம் உரிமம் பெற்ற 800 தனியார் கால்நடைத் தொழுவங்களும் அவற்றில் 10,000 பசுக்களும், எருமைகளும் உள்ளன. இவை சரிவர பராமரிக்கப்படுகின்றதா என மாநகராட்சியின் கோட்டத் துப்புரவு ஆய்வாளர் அவர்களால் கண்காணிக்கப்பட்டு வருகிறது. உரிமம் பெறாத தொழுவங்களில் ஏறத்தாழ 13,000 கால்நடைகள் உள்ளன. கடந்த ஆண்டிலிருந்து மாநகராட்சி கடைபிடிக்கும் தாராளமான உரிமக்கொள்கையின்படி தொழுவத்தின் சொந்தக்காரர்கள் தொழுவங்களுக்கான வசதிகளைப் படிப்படியாகப் பெருக்குவதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள். தொழுவ உரிமத்தைக் காட்டி மாட்டுத் தீவனத்தை நியாய விலையில் பெறுகிறார்கள் என்றும் தெரியவருகிறது.

3. 1919-ஆம்ஆண்டு சென்னைமாநகராட்சி சட்டத்திலோஅல்லது 1939-ஆம் ஆண்டு மக்கள் நல்வாழ்வுச் சட்டத்திலோ, சாலையில் திரியும் கால்நடைகளை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்க வகை செய்யப்படவில்லை. ஆனால், 1888-ஆம் ஆண்டு நகர காவல் சட்டத்தின்படி தடை செய்யலாம். பல காவல் நிலையங்களில் தொழுவப்பட்டிகள் இல்லை. இருக்கும் தொழுவப்பட்டிகள் இப்பிரச்சினையைத் தீர்க்கப் போதுமானதாக இல்லை. எனவே, அயனாவரம் பால்வள நிறுவனத்திற்குச் சொந்தமான இடத்தில் மத்திய தொழுவப் பட்டி அமைப்பதற்கான கருத்துரு ஒன்றை சென்னை மாநகராட்சி சென்னை காவல் துறையுடன் கலந்து ஆய்வு செய்து வருகின்றது. இத் தொழுவத்தில் மாதத்திற்கு மூன்று ரூபாயிலிருந்து ஐந்து ரூபாய் வரை கட்டணம் செலுத்தி ஏறக் குறைய 160 கால்நடைகளை பராமரிக்கத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

4. சென்னை மாநகராட்சியானது காவல் துறைக்கு கால்நடைகளை அப்புறப்படுத்துவதற்காக நான்கு இழுவைகளை அளித்துள்ளது. மேலும் தேவைப்படும்போது இழுவைகளை இழுப்பதற்கு டிராக்டர்களையும் காவல் துறைக்கு அளிக்க முடிவு செய்துள்ளது.

5. தெருவில் திரியும் கால்நடைகளை மட்டுமின்றி சென்னை நகரில் உள்ள எல்லாக் கால்நடைகளையும் அப்புறப்படுத்தி நகர எல்லைக்கு அப்பாலுள்ள ஓர் இடத்தில் அமைப்பது குறித்து சில ஆண்டுகளுக்கு முன்பு மாநகராட்சி கருத்துரு ஒன்றை அரசுக்கு அனுப்பியுள்ளது. இக்கருத்துருவில் தனியார் வீடுகளில் இரண்டிற்கு மேற்பட்ட கால்நடைகளை வைத்திருக்கலாகாது எனவும் கண்டிருந்தது. இக்கருத்துருவை பால்வள நிறுவனமும், சென்னை மாநகராட்சியும் ஆய்வு செய்து வருகின்றன. ஆனால் இறுதியான முடிவு எதும் எடுக்கப்படவில்லை.

## தமிழ் நாடு சட்ட மன்றப் பேரவை.

---

### செவ்வாய்க்கிழமை, 1975 ஏப்ரல் 1.

---

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

*New courses in Engineering*

*506 *Q.*—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state:

(*a*) whether it is a fact that training in Electro Chemical Engineering is being imparted in the Government Engineering colleges in the State; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) & (இ) மின் வேதியியலில், பட்டப்படிப்பிற்கு மேற்பட்ட பட்டய பயிற்சி வகுப்பு ஒன்று ஐந்து பகுதி நேர மாணவர்களுக்கும், ஐந்து முழு நேர மாணவர்களுக்கும் நடத்த 1973-74-லிருந்து, காரைக்குடி அழகப்பா பொறியியல் மற்றும் தொழில் நுட்பக் கல்லூரியில் வசதி உள்ளது.

*** 507 வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நமது மாநிலத்திலுள்ள என்ஜினியரிங் கல்லூரிகளில் கம்ப்யூட்டர் பற்றிய பட்டமேற்படிப்பு துவங்கப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், எந்தெந்த கல்லூரிகளில் தொடங்கப் பட்டுள்ளது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) ஆம்.

(இ) சென்னை கிண்டி அரசினர் தொழில் நுட்பக் கல்லூரியில் மட்டும் கம்யூட்டர் பற்றிய பட்ட மேல்படிப்பு துவங்க அனுமதி யளிக்கப்பட்டுள்ளது. படிப்பு அடுத்த ஆண்டு துவக்கப்படலாம்.

**திரு. என். கிட்டப்பா:** தலைவர் அவர்களே, கம்ப்யூடர் பற்றிய பட்ட மேற்படிப்பு வேறு பொறியியற் கல்லூரிகளிலும் துவங்குவதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றனவா? இதைத் துவங்க அடிப்படைச் செலவு எவ்வளவு ஆகின்றது என்பதை அறியலாமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, கம்ப்யூடர் பற்றிய பட்ட மேற்படிப்பு துவங்குவதற்கான வசதி கிண்டியிலுள்ள பொறியியற் கல்லூரியில் தான் இருக்கிறது. ஆகவே, கிண்டி பொறியியற் கல்லூரியில் கம்ப்யூடர் பற்றிய பட்ட மேற்படிப்பு துவங்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. அதற்கான கருவிகளுக்கு ஒரு இலட்சம் ரூபாய் ஆகிறது. மற்ற தளவாட சாமான்களுக்குப் பத்தாயிரம் ரூபாய் ஆகிறது. நூலகப் புத்தகங்கள் முதலியவற்றிற்கு 18 ஆயிரம் ரூபாய் ஆகிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** கிண்டி பொறியியற் கல்லூரியில் ஏற்கெனவே எலெக்ட்ரானிக்ஸ், டெலி-கம்யூனிகேஷன்ஸ் எடுத்து மாணவர்கள் படிக்கிறார்கள். அவர்களுக்கு இது உப-ஸப்ஜெக்டாகச் சேர்த்துக் கொள்ளப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரம் தெரியவில்லை. அதோடு இதைச் சேர்ப்பார்களா, அல்லது தனியாக நடத்துவார்களா என்று விவரம் அறிந்துதான் சொல்ல வேண்டும்.

**திரு. கே. எ. வகாப்:** தலைவர் அவர்களே, இன்றையதினம் உலகமே கம்ப்யூடர் மயமாக மாறி வருகிறது. குறிப்பாக முன்னேற்றம் அடையக்கூடிய நம்முடைய நாட்டைப் போன்றவற்றில் கம்ப்யூடர் எல்லா விஞ்ஞானத் துறையிலும் உதவி செய்யும் என்று எதிர்பார்க்கப்படுவதால் கிண்டியிலுள்ள பொறியியற் கல்லூரியில் மட்டும் இம்மாதிரி படிப்பைத் துவக்குவது மட்டுமல்லாமல், இதற்கென்று தனியான ஒரு அமைப்பை ஏற்படுத்தி, தீவிரமாக அமுல்படுத்த அரசு ஏதாவது வழி வகுக்குமா?



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இப்பொழுது கிண்டி பொறியியற் கல்லூரியில்தான் அதற்கான வசதி இருக்கிறது. அது மாத்திரமல்லாமல், ஐ.ஐ.டி. இல் ஆசியாவிலேயே சிறப்பானது என்று சொல்லப்படுகிற கம்ப்யூடர் இருக்கிறது. அதைப் பயன்படுத்தியும் பயிற்சி பெற நல்ல வாய்ப்புகள் இருக்கின்றன. இதில் ஏற்படுகிற விளைவுகளையும் இதனால் ஏற்படுகிற ஆதரவையும் பொறுத்து மேற்கொண்டு விரிவுபடுத்துவதற்கான சாத்தியக்கூறு இருக்கிறதா என்று பார்த்துத்தான் செய்ய வேண்டும். முதற்படியாக கிண்டி பொறியியற் கல்லூரியில் துவக்கி இதனை நடத்தி வருவதுதான் முறையாக இருக்கும். ஆகவே தான் கிண்டி பொறியியற் கல்லூரியில் துவக்கப்பட்டிருக்கிறது.

**திரு. கோ. இளங்கோவன்:** தலைவர் அவர்களே, கம்ப்யூடர் மூலமாக கணக்கிடும்போது தவறு ஏற்படுவதாகச் சொல்லப்படுகிறது. இதற்குக் காரணம் கம்ப்யூடரில் கோளாறா? அல்லது, இயக்குபவரின் கோளாறா? அதுபற்றி அரசு ஆராய்ந்திருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இரண்டு விதமாகவும் கோளாறுகள் வரலாம். கோளாறு வந்தால் தவறுகள் ஏற்படும். கோளாறுகள் ஏற்படாமலிருப்பதற்கான வகையில்தான் இந்தப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, கம்ப்யூடரைப் பயன்படுத்துவதற்கான ஆரம்ப அறிவினை மாணவர்கள் பெறும் பயிற்சியை தமிழ் நாட்டிலுள்ள பாலிடெக்னிக்குகளில் உள்ள மாணவர்களுக்கு ஆரம்பிப்பதற்கான சூழ்நிலை இருக்கிறதா? அதற்கு அரசு ஏற்பாடு செய்ய முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, கிண்டி பொறியியற் கல்லூரியில் மேல் பட்டப் படிப்பில் இதை நாம் துவக்கியிருக்கிறோம். இதனுடைய விளைவையும், ஆதரவு தரும் சூழ்நிலையையும் பார்த்து எந்த எந்த வகையில் விரிவுபடுத்தலாம் என்று நாம் ஆராய்ந்து அறியலாம்.

வேறு பல தொழில் நிறுவனங்களில் இருப்பவர்களும் மற்றவர்களெல்லாம் கூட குறுகிய கால பயிற்சியினைப் பெற இந்தக் கம்ப்யூட்டரைப் பயன்படுத்தி வருகிறார்கள்.

*New Hotels*

* 508 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state whether there is any proposal to construct 3 star or two star hotels in this State to attract the foreign tourists?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சென்னை அரசினர் தோட்டத்தில் ஒரு சுற்றுலா கூட்டமைப்பு கட்டிடம் கட்டப் போகிறது. இக் கூட்டமைப்பில் இரண்டு அல்லது மூன்று ஸ்டார் ஹோட்டல் கட்டுவதற்கான திட்டமும் உள்ளது. இத்திட்டம் ஆரம்ப நிலையிலேயே இருக்கிறது.

* 509 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை அரசினர் தோட்டத்தில் அமைக்கப்படுவதாக இருந்த நவீன சுழல் மாடி ஹோட்டல் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சென்னை அரசினர் தோட்டத்தில் சுற்றுலா கூட்டமைப்புக் கட்டிடம் கட்டுவதற்கான திட்டம் ஒன்று வகுத்துள்ளது. இக்கூட்டமைப்பில் நவீன சுழல்மாடி கட்டிடம் அமைப்பதற்கான திட்டமும் இருக்கிறது. என்றாலும் இது இன்னமும் முதல் கட்டமான பரிசிலனையில் இருக்கிறது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, இரண்டு நட்சத்திர, மூன்று நட்சத்திர ஹோட்டல்கள் கட்டுவதற்கு தனியார்களுக்கு சுற்றுலாத் துறையின் மூலமாக ஏதாவது கடன் வழங்கப்பட்டிருக்கிறதா? இல்லையென்றால், இனிமேலாவது வழங்க அரசு ஏதாவது திட்டமிட்டிருக்கிறதா?



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அரசாங்கம் நேரடியாக வழங்குவதில்லை. ஆனால், சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பாகவும் அதற்கென்றிருக்கும் நிதி உதவி நிலையத்தின் சார்பாகவும் தனியார் நடத்துகிற நட்சத்திர ஹோட்டல்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. அந்த முறையில் இந்த சுற்றுலா மாளிகை கூட அரசாங்கத்தின் சுற்றுலாத் துறையின் சார்பாகக் கட்டப்படவில்லை. சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பாக இந்த முயற்சி மேற்கொள்ளப் படுகிறது.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவர் அவர்களே, அரசினர் தோட்டத்தில் சுழல்மாடி ஹோட்டல் கட்ட ஏற்பாடு இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஏழ்மையுள்ள நம்முடைய நாட்டில் இப்படி அதிகமாகப் பணம் செலவழித்து பெரிய கட்டடம் ஹோட்டலுக்காகக் கட்டுவது அவசியந்தானா? அந்தப் பணத்தையெல்லாம் வேறு பிரயோசனமான—உற்பத்திக்குப் பயன் அளிக்கக்கூடிய—கண்மாய்கள், கால்வாய்கள் போன்ற பொது மராமத்து வேலைகளை மேற்கொள்வது நல்லதல்லவா? ஆகவே, பெரிய பெரிய ஹோட்டல்கள் கட்டும் திட்டத்தை அரசு நிறுத்துமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பாக ஒரு பத்து அடுக்கு மாளிகை கட்டுவது என்றும், அதிலே சுழல் மாடி கட்டலாம் என்றும் செயற் குறிப்பு இருந்து வருகிறது. இரண்டு ஸ்டார், மூன்று ஸ்டார் ஹோட்டல்களாக மாற்றலாம் என்றும், அந்த அமைப்பிலே ஏர்-லைன் இன்னும் மற்றவைகளை அமைக்கலாம் என்றும் திட்டமிடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் கூறும்போது, இதற்காகும் செலவை வேறு வகையில் செலவழிக்கலாம் என்று சொன்னார்கள். நாட்டிற்கு சுற்றுலாவின் மூலம் வரும் வருமானத்தையும் கவனிக்க வேண்டும். இந்த நாட்டிலிருந்து மூலப்பொருள், விளைபொருள் முதலியவற்றை வெளிநாடுகளுக்கு அனுப்பி அதன் மூலமாக வருவதைவிட சுற்றுலாத் துறையின் மூலம் அதிகம் வருகிறது. சென்ற ஆண்டு 78 கோடி ரூபாய் இதன் மூலம் வருவாய் வந்திருக்கிறது. மற்ற வகைகளில் பொருள்களை ஏற்றுமதி செய்து அதன் மூலம் அன்னியச் செலாவணி பெறுகிறோம். என்றாலும், வெளி

நாட்டவர்கள் நான்கு லட்சம் பேர் இந்த நாட்டுக்கு வந்தார்கள் என்றால், 60,000 பேர் தமிழகத்திற்கு வருகிறார்கள். அதன் மூலம் லாபம் வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்வதுபோல் இந்தத் தொகையை மற்ற வகைகளில் பயன்படுத்தலாம் என்றால், முதல் போட்டு அதில் லாபம் எடுப்பதால்தான் இத்தகைய முயற்சிகளில் ஈடுபடுகிறோம். செலவழிக்கிற பணம் லாபகரமாக இல்லையென்றால் வீண்தான். ஆனால், அதில் லாபம் வரும் நோக்கத்தின் அடிப்படையில்தான் இந்தத் திட்டம் மேற்கொள்ளப் பட்டிருக்கிறது.

திரு. என். கிட்டப்பா : சென்னை அரசினர் தோட்டத்தில் நவீன சுழல் மாடி ஹோட்டல் அமைக்க திட்டமிடப்படுவதில், அதன் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு? அந்த வேலையைத் துவங்கும் செயற்குறிப்பு இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதன் முழு மதிப்பீட்டின் தொகை விவரம் திருத்தியமைக்கப்படுகிற அளவிற்கு இன்னும் வந்து சேரவில்லை. பத்து அடுக்கு மாளிகையாக இருக்கலாம் என்றாலும் ஒரே தடவையில் கட்ட முடியாது. த்ரீ பேஸ்ட், அதை மூன்று கட்டத் தன்மையில் அமைக்கலாம் என்று கருதிக்கொண்டிருக்கிறார்கள். சுழல் அடுக்கு என்றால் மேல் மட்டத்தில் இருக்கிற ஒன்றே ஒன்றுதான் சுழல்கிற அளவில் அமையும். மூன்று கட்டத்தில் அந்த அடுக்கு மாளிகையைக் கட்டலாம் என்று விடப்பட்டிருக்கிறது. முதல் கட்டம், கீழே எல்லா ஏர்லைன்ஸுக்கும் இடம் தந்து வெளி நாட்டிலிருந்து வருகிறவர்கள் ஒரே இடத்தில் அவர்களுக்கு பயன்படுகிற அளவிற்கு எல்லா வசதிகளும் இருக்கத்தக்க அளவிற்கு ஒரே இடத்தில் அமையவும், தமிழ் நாட்டு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மத்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இவற்றின் அலுவலகங்கள் ஒரே இடத்தில் அமையும் தன்மையிலும் இந்த பத்து ஆண்டுக்கு மாளிகை கட்ட திட்டமிடப்பட்டிருக்கிறது. அதை ஒரேயடியில் நிறைவேற்றுவது என்றில்லை. மூன்று கட்டத்தில் அதை நிறைவேற்ற திட்டமிடப்பட்டிருக்கிறது.





திரு. ஏ. சுப்பிரமண்யம் : சுற்றுலா வளர்ச்சிக்கு இத்தகைய ஹோட்டல்கள் இன்றியமையாதவை என்ற ஒரு அப்ஸெஷன் இருப்பதுபோல் தோன்றுகிறது. இதனால் மட்டும் வளருகிறதா? பல ஹோட்டல்களில் உள்ளூரில் இருக்கிறவர்களே அங்கு போய் தங்கி கும்மாளம் அடிக்க அதைப் பயன்படுத்துகிறார்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் கேள்வி போடவேண்டுமே தவிர கருத்தைத் தெரிவிக்க இந்த நேரத்தைப் பயன்படுத்தக் கூடாது.

திரு. ஏ. சுப்பிரமண்யம் : அம்மாதிரி பயன்படுத்தப்படுகிறது. ஆகவே இதுபற்றி அரசாங்கம் ஏதாவது ஒழுங்காக ஆராய்ந்திருக்கிறதா? ஆராய்ந்து இத்தகைய ஹோட்டல்கள் இன்றியமையாதவை என்று கண்டு, இந்த ஹோட்டலைக் கட்ட தீர்மானித்திருக்கிறதா அல்லது ஒரு பெண் நகை போட்டுக்கொண்டால் மற்றப் பெண்களும் நகை அணிய விரும்புவது போல் மற்ற இடங்களில் அல்லது மற்ற நகரங்களில் இருப்பதால் நாமும் இங்கு அப்படிக் கட்டவேண்டும் என்று கட்டுகிறார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இந்த நாட்டில் இருக்கிற சுற்றுப் பயணிகள் தங்குவது என்ற முறையில் அல்ல. வெளிநாடுகளிலிருந்து வருகிற பயணிகள் தங்குகிற அளவிற்கு வைத்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட கட்டடங்கள் வேறு பல நகரங்களிலும் இருக்கின்றன. கொழும்பு, சிங்கப்பூர், கோலாலம்பூர் போன்ற நகரங்களில் இருக்கின்றன. வெளி நாடுகளிலிருந்து வருகிற சுற்றுலா பயணிகள் செலவழிக்க என்றே வருகிறார்கள். ஐரோப்பியா, அமெரிக்க கண்டங்களிலிருந்தும், மத்திய கிழக்கு நாடுகளிலிருந்தும் வருகிறவர்கள் ஏராளமான பணத்தை செலவழிக்க வேண்டுமென்றே வருகிறார்கள். அவர்களுக்கு தக்க வாய்ப்பு வசதி ஏற்படுத்திக் கொடுத்து அவர்களை செலவழிக்க வைத்து அன்னியச் செலாவணியை நாம் பெற வேண்டும் என்ற நோக்கத்தில்தான் செய்யப்படுகிறது. இங்கிருப்பவர்கள் பணத்தைச் செலவழிக்கவேண்டும் என்று அல்ல. சிறிய ஹோட்டல்களிலேயே கூட கும்மாளம் அடிக்கிறார்கள். கும்மாளம் போட ஹோட்டல்கள்தான் வேண்டும் என்று அவசியம் இல்லை. இதன் நோக்கம் உலகச் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில் திட்டங்கள் அமைக்கவேண்டும் என்பதுதான்.

[1975 ஏப்ரல் 1

**திரு. நா. வீராசாமி :** வெளிநாடுகளிலிருந்து வருகிற சுற்றுப் பயணிகள் பெரும்பாலும் கடற்கரை ஓரங்களில் இருக்கிற ஹோட்டல்களையே விரும்புகிறார்கள். மகாபலிபுரத்தில் ஸில்வர் ஸான்ட், கோல்டன் பீச் என்றெல்லாம் இருக்கின்றன. அங்கு ஸன் பாத் எடுக்க வசதியாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்தக் கேள்வியைப் பொறுத்து துணைக் கேள்வி கேளுங்கள். புதிதாக எங்கெங்கேயோ போகாதீர்கள்.

**திரு. நா. வீராசாமி :** ஆகவே, இப்படிப்பட்ட ஹோட்டல்களை எண்ணூரில் அமைக்க சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மூலம் முயற்சி எடுக்கப்படுமா? சுழல் ஹோட்டல் ஒன்று அண்ணா நகரில் அமைக்க டெண்டர் போட ஏற்பாடு செய்து இப்போது இருக்கிற பெரிய டவரில் வைக்கமுயற்சி நடந்ததே, அது என்னவாயிற்று?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** சுற்றுலாப் பயணிகள் வந்து தங்கும் விடுதிகள் போன்றவை சென்னையில் இருந்து மகாபலிபுரம் வரை உள்ள பகுதியில் இருக்கின்றன. அங்கு இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பிலும் ஒரு சுற்றுலாப் பயணிகள் தங்கும் இடம் இருக்கிறது. ஸில்வர் ஸான்ட், கோல்டன் பீச் போன்றவை இருக்கின்றன. கோவலத்தில் ஒன்று வர இருக்கிறது. திருவான்மியூர் பக்கத்தில் ஒன்று வர இருக்கிறது. எண்ணூர் என்பது அப்படி கட்ட ஏற்ற இடமில்லை. அங்கு அதிகப்படியான தொழிற்சாலைகள் உள்ளன. அங்கு புகை மண்டி சாதாரண மக்கள் வாழக் கூட இடமில்லை, தொழிற்சாலைகளை வளர்க்கும் இடமாக எண்ணூர் ஒதுக்கப்பட்டிருக்கிறது. சென்னை-மகாபலிபுரம் இவற்றிற்கு இடையில் புது தொழிற்சாலைகள் மற்றவை வரக்கூடாது, அங்குள்ள இடங்களின் தூய்மை காப்பாற்றப்படவேண்டும் என்ற அளவில் புது ஹோட்டல்கள் வருவது அந்தப் பக்கம்தான் வரவேண்டும். அண்ணா நகரில் உள்ள டவர் சாதாரண காட்சிப்பொருளாக இருக்கிறதே தவிர ஒரு ஹோட்டல் கட்ட வசதி இல்லை. அப்படி ஒரு திட்டம் இல்லை.



1975 ஏப்ரல் 1]

**திரு. கு. அ. பொம்மன் :** வெளிநாட்டுப் பயணிகளைக் கவரும் விதத்தில் மலைப்பகுதிகள் இருப்பதால், வளம் நிறைந்தும், தட்ப வெப்ப நிலையிருப்பதாலும் மலைப் பிரதேசங்களில் இப்படிப்பட்ட சுழல் மாடி ஹோட்டல் கட்ட அரசுக்கு யோசனை இருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அந்தந்த மலைப் பகுதிகளில் சுற்றுலா பயணிகள் வருகிற நிலையையொட்டி அதற்கான ஏற்பாடுகளை செய்து வருகிறார்கள். அந்த முறையில் ஊட்டி, கொடைக்கானல், ஏர்க்காடு போன்ற இடங்களில் இப்படிப்பட்ட வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன.

**புலவர் சி. பழனிச்சாமி :** இந்த ஹோட்டல்கள் ஐந்து நட்சத்திரம் வரை இருக்கிறது என்று கேள்விப்படுகிறோம். ஒவ்வொரு நட்சத்திர ஹோட்டலுக்கும் என்னென்ன வசதிகள் உள்ளன என்ற விவரத்தை அறிவிக்க முடியுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அதைப்பற்றிய விவரக் குறிப்புகள் இல்லை. ஒவ்வொன்றுக்கும், அந்தந்த ஸ்டார்களுக்கு இன்னின்ன வசதிவாய்ப்புகள் இருக்கவேண்டும் என்று அகில உலக அடிப்படையில் சிலபல வரைமுறைகள் இருக்கின்றன. அதன் அடிப்படையில் இந்த ஹோட்டல்கள் எல்லாம் ஒரு நட்சத்திரம், இரண்டு, மூன்று என்று பிரித்து வைக்கப்படுகிறது.

**திரு. கே. ஏ. வகாப் :** இப்போது கட்டப்படுவதாக இருக்கிற ஹோட்டல் அரசாங்க கார்டனில் கட்டப்படப் போவதாகச் சொன்னார்கள். முன்பு எலியட் பீச்சில் இப்படி ஒரு ஹோட்டல் கட்டுவது என்றும், மகாபலிபுரத்தில் இருந்து 'ஹூவர்க்ராப்ட்' விடுவதற்கும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சார்பில் ஒரு திட்டம் இருந்தது. அந்தத் திட்டம் கைவிடப்பட்டுவிட்டதா? வெளிநாட்டுப் பயணிகள் கடற்கரையோரப் பகுதிகளிலும் திறந்த வெளிகளிலும்தான் தங்க விரும்புகிறார்கள். எனவே எலியட் பீச் போன்ற கடற்கரையோரமாக இந்த அமைப்பை எடுத்துச் செல்வார்களா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தமிழ்நாட்டு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் மகாபலிபுரத்தில் இப்படிப்பட்ட காட்டேஜஸ், அங்கு ஒரு ஹோட்டல் கட்ட தனியாக முயற்சி எடுக்கப்படுகிறது. இந்த பத்து அடுக்கு ஹோட்டல்

என்பது பல்வேறு அமைப்புகள் ஒன்றாக சேரவேண்டும் என்பதாகும். வெளிநாட்டுப் பயணிகள் தங்குவதற்கும் அவர்கள் பஸ்கள் மூலம் செல்ல வாய்ப்பு வசதி ஏற்படுத்தவும், சென்னையில் உள்ள பல்வேறு ஏர்லைன்ஸ்க்கும் தனித்தனி இடங்கள் கொடுத்து ஒரேயிடத்தில் இருக்கவும் இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழக அலுவலகமும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக அலுவலகமும் ஒரேயிடத்தில் இருந்தால் வெளிநாட்டுப் பயணிகளுக்கு அதிகத் தொல்லை இருக்காது. பயணிகளுக்கு அதிக வசதிகள் வாய்ப்புகள் செய்து கொடுக்கவேண்டியிருக்கிறது. எனவே, பீச் பக்கத்தில் கொண்டுபோய் வைக்க முடியாது. சென்னை நகரில் மையப் பகுதியில்தான் வைக்கவேண்டும். அந்த முறையில்தான் அரசினர் தோட்டம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. தொ. ப. சீனிவாசன்:** வெளிநாட்டுப் பயணிகள் நம் நாட்டுக்கு கவர்ச்சியால் வருகை தருகிறார்கள், அவர்களுக்கு வேண்டிய வசதிவாய்ப்புகளை ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும் என்று அமைச்சர் அவர்கள் தெளிவாகக் கூறினார்கள். தமிழ்நாட்டிலுள்ள சரித்திரப்புகழ் பெற்ற இடங்களை வெளிநாட்டுப் பயணிகள் பார்வையிட வேலூர், மதுரை போன்ற தலைநகரங்களில் அவர்கள் தங்குவதற்கு வசதிவாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்க ஆங்காங்கே சிறு சிறு ஹோட்டல்கள் கட்டிக் கொடுக்க ஆவன செய்யப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** வெளிநாட்டுப் பயணிகள் ஆங்காங்கு தங்கும் தன்மையில் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தினர் அங்காங்கு விடுதிகள் கட்டிக்கொண்டு வருகிறார்கள். நான்கு நாட்கள், ஏழு நாட்கள், பத்து நாட்கள் சுற்ற ஒரு திட்டம் வைத்து அதன் மூலம் ஸ்பெஷல் பஸ்கள் மூலம் போய் வர ஏற்பாட்டையும் தமிழ்நாட்டு சுற்றுலாக் கழகத்தினர் செய்து கொண்டு வருகிறார்கள்.

**திரு. கோவை செழியன்:** பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், வெளி நாட்டிலிருந்து வருகிற பயணிகளைக் கவருகிற வகையில் ஓட்டல்கள் இருக்கவேண்டுமென்கிற அடிப்படையில் இருக்கவேண்டும், கடற்கரை ஓரங்களில் கட்டினால் 'சன் பாத்' எடுப்பார்கள் என்று சொன்னார்கள். நான் கோவாவில் பார்த்தேன். ஹிப்பிகள் அங்கே



அசிங்கமாக, அரைநிர்வாணமாக வந்து நம்முடைய உயர்ந்த உணர்வுகளைக் கெடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, அம்மாதிரி இடங்களில் கட்டுவதைவிட காடுகளில் மரங்களின்மேல் பல இடங்களில் வீடுகள் கட்டியிருக்கிறார்கள். அது மாதிரி நடுக் காடுகளில் மரங்களின் மேல் வீடுகள் கட்டிவிடுவதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அப்படிப்பட்ட செயற்குறிப்பு இப்போது தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம் வைத்து இருக்கவில்லை. அப்படிப்பட்ட நிலைமை வெளிநாடுகளில் உண்டு. முதுமலைக் காடுகளில் தங்க, வேறுபட்ட சூழ்நிலையில் தங்க, விரும்புகிற பயணிகள், தங்குவோர் அதிகமானால், அது பற்றியும் சுற்றுலா வாரியம் யோசிக்கலாம்.

**திரு. எம். சுரேந்திரன்:** சார், சுற்றுலாப் பயணிகளைக் கவருவதற்கும், வெளிநாட்டுச் செலாவணி உருவாக்குவதற்கும் இம்மாதிரியான ஓட்டல்கள் கட்டுவது அவசியம் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அதே நேரத்தில் அதிலே இருக்கிற ஆடம்பரம், பட்டாடோபம் இவற்றைப் பார்த்து விட்டு, இங்கேயிருக்கும் சாதாரணமக்களும் அங்கே செல்வதற்கு ஒரு சபலம் உண்டாகி, பல்வேறு விதமான தவறான காரியங்களில் ஈடுபட ஏதுவாகிறது. அதுபற்றி அரசாங்கத்திற்கு ஏதாவது தகவல் வந்து இருக்கிறதா? அதே நேரத்தில் அவற்றிற்கு சிங்கிள் ஸ்டார், டபில் ஸ்டார், 5 ஸ்டார் என்று சொல்லப்படுகிறதே அது எந்த அடிப்படையில், அது சினிமா ஸ்டாரா அல்லது வேறு ஏதாவது ஸ்டாரா என்பதற்கு அமைச்சர் அவர்கள் விளக்கம் அளிப்பார்களா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, இங்கே இப்போதே இரண்டு ஸ்டார், மூன்று ஸ்டார், 5 ஸ்டார் என்று ஓட்டல்கள் இருக்கின்றன. அவைகள் எல்லாம் இருக்கின்றன என்பதால் சென்னையில் உள்ள 28 லட்சம் மக்கள் விரும்பி அதிலே நுழைகிற மாதிரி இல்லை. ஒரு நாள் வாடகை ரூ. 250, ரூ. 350 என்று இருக்கிறது. இதனால் சாதாரண மக்கள் நெருங்க மாட்டார்கள். வசதியுடையவர்கள் தான் போவார்கள், அகில உலக அடிப்படையில்—இண்டர்நேஷனல் ஸ்டாண்டர்டு—இது முடிவு செய்யப்படுகிறது.

[1975 ஏப்ரல் 1

ஸ்டார் என்பது பெருமைக்குடையவர்களைக் குறிக்கிற ஒன்றாகும். ஓட்டல்களைப் பொறுத்தவரையில் 1 ஸ்டார் என்றால் இன்னின்ன வசதிகள் இருக்கவேண்டும், 2 ஸ்டார் என்றால் இன்னின்ன வசதிகள் இருக்கவேண்டும், 3 ஸ்டார் என்றால் இன்னின்ன வசதிகள் இருக்கவேண்டுமென்று வரையரை செய்யப்பட்டு இருக்கிறது. அந்த அடிப்படையில் தான் அவைகள் இயங்குகின்றன. பெருமைக்குரியவர்களை ஸ்டார் என்று சொல்கிறோம். அந்த அடிப்படையில் சினிமாஸ்டார் வருகிறார்கள். அதனால் அவர்களுக்கும் ஸ்டார் என்று பெயர். வானத்தில் இருப்பதற்கும், ஸ்டார் என்று தான் பெயர்.

**திரு. எஸ். வடிவேல்:** தலைவரவர்களே, வெளிநாட்டினர் தங்கும் விடுதியில் எம்.எல்.ஏ.-க்கள் தங்கலாமா, அப்படித் தங்கினால் ஏதாவது கன்செஷன் கொடுப்பார்களா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, எம்.எல்.ஏ.க்கள் போய் தங்கலாம், ஆனால் கன்செஷன் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மாதச் சம்பளத்தைக் கொடுத்துவிட்டு, ஒருநாள் போய் தங்கிவிட்டு வரலாம்.

**திரு. கு. காமாட்சி:** தலைவரவர்களே, வெளிநாட்டிலிருந்து வரும் பயணிகளைக் கவருவதற்காக கடற்கரையில் ஓட்டல் கட்டுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எல்லோரும் இப்போது மிதக்கும் ஓட்டல்களை அதிகம் விரும்புகிறார்கள். ஆகவே, வெளிநாட்டிலிருந்து வருகிறவர்களைக் கவரத்தக்க வகையில் 'கடலில் மிதக்கும் ஓட்டல்' ஆரம்பித்தால், சுற்றுலாப் பயணிகள் ஏராளமாக வருவார்கள், அந்த மாதிரி செய்வார்களா? அமைச்சர் அவர்கள் சுழலும் ஓட்டல் பற்றிக் குறிப்பிட்டார்கள். உள்ளே இருப்பவர்கள் சுழலுவார்களா, அல்லது ஓட்டலே சுழலுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்விக்கு பதில், இப்போது அப்படிப்பட்ட உத்தேசம் எதுவும் இல்லை. வெளிநாடுகளில் அப்படிப்பட்ட இடங்கள் இருக்கின்றன. அப்படி இங்கே கட்டுவதற்கு நீண்ட பெரும் காலம் ஆகும். சுழலும் ஓட்டல் பற்றி கேட்டார்கள். உட்கார்ந்து இருப்பவர்கள் சுழல வேண்டியது இல்லை. அவர்கள் அப்படியே இருப்பார்கள். வெளியே இருப்பவர்களுக்கு சுழலுவது தெரியும். அதிலே இருப்பவர்கள் சுழல வேண்டுமென்பது இல்லை. அவர்கள் உட்கார்ந்து இருக்கும் கட்டிடம் தான், இருக்கைதான் சுழலும்.



1975 ஏப்ரல் 1]

### பாலக்கோம்பையில் புதிய கண்மாய்

* 510 வினா—**திரு. நா. வெ. குருசாமி:** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், ஆண்டிப்பட்டி தொகுதியைச் சேர்ந்த பாலக்கோம்பையில் ஒரு கண்மாய் அமைக்கும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

(இ) அதன் விபரங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) & (இ) இத்திட்டம் பரிசீலனையில் உள்ளது.

**திரு. நா. வெ. குருசாமி:** தலைவரவர்களே, இந்தக் கண்மாய் திட்டம் பல ஆண்டுகாலமாக அரசின் பரிசீலனையில் இருந்து கொண்டு இருக்கிறது. இந்தப் பகுதி இப்போது மிகவும் வறண்ட பகுதியாக இருக்கிறது. அங்கேயுள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் அடிப்படையில்—அவர்கள் இப்போது வேலை எதுவும் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள்—அந்தத் திட்டத்தை உடனடியாக அரசு எடுத்து துவங்குவதற்கு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** அது ஒரு சிக்கனமற்ற திட்டம் என்று ஏற்கனவே கைவிடப்பட்டது. அதை எப்படியாவது நிறைவேற்ற முடியுமா என்று பார்க்கும்படி வருவாய்த் துறை வாரியத்தைக் கேட்டு இருந்தோம். வருவாய்த்துறை வாரியத்திடமிருந்து இன்னும் பரிந்துரை அரசுக்கு வரவில்லை.

### நல்லநாயகபுரம் ஏரிக்கு வரத்துக்கால்வாய்

* 511 வினா—**திரு. செ. சதாசிவம்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், அரியலூர் வட்டம், வஞ்சினபுரம் ஊராட்சி நல்லநாயகபுரம் ஆயக்கட்டு ஏரிக்கு வரத்துக் கால்வாய் வெட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மதிப்பீட்டின் தொகை என்ன ?

(உ) எப்பொழுது வேலை துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) ரூ. 1.70 இலட்சம்.

(உ) இவ்வேலை 1975-76-ம் ஆண்டு எடுத்துக் கொள்வது பற்றி பரிசீலனையில் உள்ளது.

திரு. செ. சதாசிவம்: தலைவரவர்களே, நீண்டகாலமாக அந்த ஏரிக்கு நீர் வரத்து சரிவர இல்லாமல், அந்த ஏரியின்கீழ் இருக்கும் நிலமெல்லாம் வருஷா வருஷம் சாவியாகப்போகிறது. ஆகவே, அதை உடனடியாக நடைமுறைப்படுத்த அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, 1975-76-ம் ஆண்டுத் திட்டத்தில் எடுத்துக்கொள்வதாக இருக்கிறோம்.

### பார்த்திபனூர் கண்மாய்

*512 வினா—திரு. தொ. க. சிறைமீட்டான்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி ஊராட்சி ஒன்றியம், பார்த்திபனூர் கண்மாயினை மராமத்து செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், மதிப்பீடு எவ்வளவு?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இத்திட்டத்திற்கான முன்னிலை மதிப்பீடு ஸ்தலப் பொறியாளர்களால் தயார் செய்யப் பட்டு வருகின்றது.

(இ) இந்தக் கேள்வி எழவில்லை.

திரு. தொ. க. சிறைமீட்டான்: தலைவரவர்களே, இது ஒரு பெரிய கண்மாய் ஆகும். 2,000 ஏக்கருக்கு மேற்பட்ட கண்மாய் ஆகும். அதற்கு மதிப்பீடு தொகை எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன். கால்வாயும் சேர்ந்து மதிப்பீடு செய்யப் பட்டு உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மதிப்பீடு அரசாங்கத்திற்கு வரவில்லை. இருந்தாலும் பார்த்திபனூரையும் சேர்த்து பழுது பார்க்க ரூ. 90,000 என்று உத்தேச மதிப்பீடு கொடுத்து இருக்கிறார்கள். இன்னும், அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.



திரு. தொ. க. சிறைமீட்டான்: ரூ. 90,000 என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். முழுமையாக மராமத்து செய்வதற்காக மதிப்பீடு இவ்வளவு செய்யப்பட்டுள்ளதா? ஸ்பெஷல் வறட்சி நிவாரணப்பணியாக இதைச் செய்வதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, அது ஒரு உத்தேச மதிப்பீடுதான். வறட்சி நிவாரணப்பணியாக ஏற்றுக்கொள்ள முடியுமா என்று பரிசீலிக்கப்பட்டு வருகிறது. அப்படி முடியுமானால் எடுத்துக் கொள்ளலாம்.

### *Family cards in Kanyakumari district*

*513 Q.—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state whether there is any proposal under the consideration of the Government to issue family cards to those who have wet paddy lands up to an extent of 50 cents in the belt area of Kanyakumari district?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில், 25 சென்டுக்குக் குறைவான நிலமுள்ளவர்களுக்கு தற்போது அரிசி வழங்கப்படுகிறது. 25 சென்டிலிருந்து 50 சென்டு வரை நிலமுள்ளவர்களுக்கு கோதுமை வழங்கப் படுகிறது.

திரு. என். டென்னிஸ்: இப்போது 25 சென்ட் நிலம் வைத்துள்ளவர்களுக்குத்தான் குடும்பக் கார்டு வழங்கப்பட்டு அரிசி வழங்கப்படுகிறது. அதிலே பல விதமான கஷ்டம் ஏற்படுகிறது. அந்த நிலங்களில் எல்லாம் பயிர் கருகி விட்டது. அதனால் விவசாயிகள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு போதுமான அளவுக்கு அரிசி கிடைக்கவில்லை. அதோடு பல அங்கத்தினர்கள் உள்ள குடும்பங்களில் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். மேலும், 50 சென்ட் நஞ்சை நிலம் வைத்துள்ளவர்களுக்கும் குடும்பக் கார்டு கொடுத்து, அரிசி வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அறுவடை காலம் சென்று, பற்றுக்குறை மாதங்களில், அப்படிப்பட்ட யோசனைகளை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நிறைவேற்ற விரும்புகிறார்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, அங்கேயுள்ள நிலங்களில் பயிர் தீய்ந்து போய்விட்டதால், மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அப்படியிருக்கும் நிலையில் 50 சென்டிற்கு மேல் நிலம் வைத்துள்ளவர்களுக்கும், அவர்கள் நிலங்களில் ஒரு மணிநெல் விளைச்சல் இல்லை என்று சொன்னால், அரிசி கொடுக்க அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இந்தக் கோரிக்கை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பி வைக்கப்படும்.

திரு. வீ. கே. இராஜாப்பிள்ளை: தலைவரவர்களே, பொதுவாகவே கன்னியாகுமரி மாவட்டத்தில் பற்றாக்குறை இருக்கிறது. அதிலே சில பகுதிகளில், ஹரிஜன மக்கள், ஏழைகள் பெருவாரியாக வாழும்பகுதிகளில், தோவாளை, அகஸ்தீஸ்வரம் போன்ற தாலுக்காக்களில், அரிசி உணவுப் பங்கீட்டு அட்டை வழங்கி அரிசி கொடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இந்தக் கேள்வி பற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை.

திரு. செ. சதாசிவம்: தலைவரவர்களே, திருச்சி மாவட்டத்தில், அரியலூர், உடையார்பாளையம் தாலுக்காக்களில், உள்ள கிராமங்களுக்கு புஞ்சை தானியம்கூட வழங்கப்படவில்லை. உடனடியாக வழங்க உத்தரவு பிறப்பிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தனியாகக் கேட்க வேண்டும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில், பெல்ட் ஏரியாவில் இப்போது குடும்பக் கார்டு மூலமாக அரிசி விநியோகம் செய்து இருந்தாலும், சில நிறுவனங்களுக்கு, கான்வென்ட் போன்ற கல்வி நிலையங்களுக்கு கார்டு வழங்கப்படவில்லை. அவர்களுக்குக் கார்டு வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கல்வி நிலையங்களைப் பொறுத்தவரையில் அங்கு விடுதிகள் இருந்தால் உணவு வழங்க வேண்டுமென்று நாம் ஆலோசனை கூறி இருக்கிறோம். எங்காவது வழங்கவில்லை என்று தெரிவித்தால் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சொல்லி ஏற்பாடு செய்யலாம்.





### *Consumer Co-operative Societies*

* 514 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state :

(*a*) whether the Chairman in-charge of the Tamil Nadu Co-operative Union had represented to the Government recently that the retail distribution of foodgrains be given to consumer co-operative societies; and

(*b*) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இன்றியமையாப் பொருள்கள் விற்பனை செய்வதைக் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து எடுத்துவிட்டு தமிழ்நாடு உணவுப்பொருள் வழங்கு கழகத்திடம் ஒப்படைக்கக்கூடாது என்று தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க ஒன்றியத்தின் தற்போதைய தலைவருமான செங்கற்பட்டு மாவட்டத் கூட்டுறவு வழங்கல்-விற்பனைச் சங்கத்தின் தலைவர் 1973 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் அரசிடம் முறையிட்டார்.

(இ) இன்றியமையாப் பொருள்களை விற்பனை செய்யும் பணியில் தமிழ்நாடு உணவுப்பொருள் வழங்கு கழகத்தை மொத்த வணிக முகவரமைப்பாகவும், கூட்டுறவுச் சங்கங்களைச் சில்லறை வணிக முகவரமைப்புகளாகவும் வளர்ச்சி பெறச் செய்வதென்றும், அதையடுத்து, வருங்காலத்தில் இன்றியமையாப் பொருள்களைச் சில்லறையில் வழங்குவதைப் படிப்படியாகத் கூட்டுறவுச் சங்கங்களிடம் ஒப்படைப்பது என்றும் அரசு கொள்கையளவில் முடிவு செய்துள்ளது.

### சிறு தொழில்களுக்குத் தேவைப்படும் மூலப்பொருள்கள்

* 515 வினா—திரு. கே. ரங்கநாதன் : மாண்புமிகு தொழில்-மின்சாரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்தில் உள்ள சிறு தொழில்களுக்குத் தேவைப்படும் நிலக்கரி, பிக் அயர்ன், மோட்டார் ஸ்டெம்பிங்ஸ், காப்பர் ஒயர்ஸ் போன்ற மூலப்பொருட்கள் சரிவரக் கிடைக்கின்றனவா ?

(இ) இல்லை எனில், அதுகுறித்து அரசினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) & (இ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் சிறு தொழில்களுக்கு தேவையான மூலப்பொருள்கள் சிலவற்றில் பற்றாக்குறை ஏற்பட்டது குறித்துப் புகார்கள் உள்ளன. கூடியமட்டில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கலந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு தொழில்களுக்கு உதவி அளிக்கப்பட்டுள்ளது.

(முற்பகல் 9-30)

திரு. எம். சுரேந்திரன்: கோவை மாவட்டத்தில் சிறு தொழில்கள் பரவலாக வளர்ந்துள்ளன. அந்த இடத்தில் எந்த எந்த தொழில்களுக்கு என்ன என்ன அளவில் மூலப்பொருள்கள் பற்றாக்குறை ஏற்பட்டது, எந்த அளவில் அதற்கு அரசாங்கம் உதவி செய்திருக்கிறது, அதன் மூலம் தொடர்ந்து வருஷம் பூராவும் தொழில்கள் நடைபெறுகின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தேவையான மூலப்பொருள்கள் நிலக்கரி, பிக் அயர்ன், மோட்டார் ஸ்டாம்பிங்ஸ், காப்பர் ஒயர்ஸ் என்று கேள்வியில் சொல்லப்பட்டிருக்கிறது. காப்பர் ஒயர்ஸ் பற்றி தட்டுப்பாடு இல்லை, நேற்று முன்தினம் கோவையில் நடைபெற்ற விழாவில் கூட சிறு தொழில் அதிபர்கள் இப்போது மற்ற மூலப்பொருள்களுக்கு தட்டுப்பாடு இல்லையென்று சொன்னார்கள்.

## Oil for industries

* 516 *Q.*—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state:

(*a*) wheher the current oil crisis has affected many industries in the State:

(*b*) if so, the details of the industries so affected; and

(*c*) the steps taken by the Government thereon?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) & (இ) கட்டுப்படியாகாத உலை எண்ணெய் விலையால், சில சிமிட்டி தொழில் பிரிவுகள் உற்பத்தியை ஓரளவுக்குக் குறைத்துக் கொண்டது.



(உ) (i) சிமிட்டித் தொழிற்சாலைகளும், இவ்வரசும் வற்புறுத்தியதின்பேரில் உலை எண்ணெய் விலையின் ஏற்றத்தால் உற்பத்தியில் ஏற்பட்ட விலை உயர்வை மட்டுப்படுத்த ஒரு டன் சிமிட்டிக்கு ரூ. 50-ஐ எண்ணெய் உதவிப் பணமாக இந்திய அரசு வழங்கியுள்ளது.

(ii) சிமிட்டித் தொழில் பிரிவுகளில் உலை எண்ணெய்க்குப் பதிலாக வேண்டிய அளவு நிலக்கரி இருப்பை வைக்க இந்திய அரசு வாக்களித்துள்ளது.

(iii) இந்திய அரசு அமைத்த எண்ணெய் விலைகள் குழுவிடம் எண்ணெய் நெருக்கடியால் ஏற்பட்ட எதிர்விளைவுகளை சமாளிக்க வேண்டிய தக்க பரிந்துரைகள் வழங்க இவ்வரசு வேண்டியுள்ளது.

(iv) மாநில அரசு உடைமையில் உள்ள போக்குவரத்து நிறுவனங்களில் டீசல் எண்ணெய் உபயோகிப்பதில் சிக்கனத்தையும், திறனையும் வளர்க்க இவ்வரசு நடவடிக்கைகள் எடுத்துள்ளது.

திரு. கே. எ. வகாப்: தலைவர் அவர்களே, பெரிய தொழிற்சாலைகளான சிமெண்ட் போன்றவைகளுக்கு சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. சிறு தொழிற்சாலைகளுக்குத் தேவையான பர்னஸ் ஆயில் கிடைக்காததாலும் விலையேற்றத்தின் காரணமாகவும் அவைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளுக்கு உதவி செய்ய மத்திய சர்க்காரிடம் வாதாடிப் பெற்றுத் தர அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU S. J. SADIQ PASHA: In respect of the supply of furnace oil to cement units in Tamil Nadu, the matter was taken up with the Government of India. The Government of India have since sanctioned oil subsidy of Rs. 50 per tonne of cement.

அதுகூட upto 16—11—1974.

The Government of India have also been requested to consider coal subsidy on the analogy of oil subsidy for the sea-borne coal.

பெரிய தொழிற்சாலை என்றுதான் பிரிவு இருக்கிறது. சிறு தொழிற்சாலை என்ற பிரிவு இல்லை.

[1975 ஏப்ரல் 1

**திரு. ஏ. சுப்ரமணியம்:** தலைவர் அவர்களே, பஞ்சாலைகள் போன்ற தொழிற்சாலைகள் இந்த மின்வெட்டு உள்ள காலத்தில் ஜெனரேட்டரைப் பயன்படுத்தி ஆலைகளை ஓட்டிக் கொண்டிருக்கின்றன. ஜெனரேட்டர்களுக்கு டீசல் எண்ணெய் கிடைக்காமல் ஜெனரேட்டர்களை நிறுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. இதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** ஜெனரேட்டர்களுக்கு போதுமான டீசல் எண்ணெய் கிடைக்கவில்லையென்று புகார் வரவில்லை. அப்படி வந்தால் பரிசீலிக்கலாம். இப்போது பருத்தி ஆலைகள் ஜெனரேட்டர்களைக் கொண்டு சமாளித்து வருவதாகத் தான் தகவல் கிடைத்திருக்கிறது.

## தஞ்சாவூர் பனகல் கட்டடம்

* 517 விஞ—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் பனகல் கட்டடத்தை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** ஆம்.

**திரு. என். கிட்டப்பா:** தலைவர் அவர்களே, தஞ்சாவூர் பனகல் கட்டிடத்தில் குறிப்பாக மாவட்ட பஞ்சாயத்து அலுவலர்களின் அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. அதற்கு போதுமானதாக இடம் இருப்பதாகத் தெரியவில்லை. அந்தக் கட்டிடத்தில் நெடுஞ்சாலைத் துறை கோட்டப் பொறியாளர், மாவட்ட முதன்மை கல்வி அதிகாரி அலுவலகங்கள் இயங்க நடவடிக்கை எடுத்திருக்கிருர்கள். பனகல் கட்டிடத்தை விரிவுபடுத்தி இந்த இரண்டு அலுவலகங்களைப் பிரித்து மாவட்ட பஞ்சாயத்து அலுவலகங்கள் மட்டும் இயங்கக்கூடிய இடமாக ஆக்குவதற்கு அரசு ஆவன செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தலைவர் அவர்களே, பனகல் கட்டிடத்தில் மேலும் இடவசதி தேவைப்படுவதால் அதற்காக ரூ. 2.5 லட்சத்தில் ஒரு திட்டத்தைத் தயாரித்து இப்போது சர்க்கார் பரிசீலனையில் இருக்கிறது.



1975 ஏப்ரல் 1]

**திரு. கோ. இளங்கோவன்:** அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது அரசு பரிசீலனையில் இருக்கிறது, அதற்காகப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்ஞர்கள். அலுவலகங்களைப் பிரித்து வைத்தால் அங்கே சென்று காரியங்கள் நடைபெறுவதற்கு வசதியாக இருக்குமென்று அமைச்சர் அவர்கள் உணர்ந்து அந்த அலுவலகங்களை மாற்றுவதற்கு முயற்சி செய்வாரா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** புதிதாக அடிஷனல் பில்டிங் கட்டுவதற்கு ஏற்பாடாகியிருக்கிறது. தனியாக வைப்பதா, அல்லது சேர்த்து வைப்பதா என்பது பின்னல் யோசிக்கப்படும்.

**திரு. சீ. க. வடிவேலு:** தலைவர் அவர்களே, பனகல் கட்டிடத்தை அபிவிருத்தி செய்தால் அங்கே 4, 5 சிறும் சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கும் ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுக்கும் என்று ஏற்பாடு செய்தால், அவர்கள் வேலைகளை துரிதமாகப் பார்க்கலாம். அத்துடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் பார்க்கலாம். அவ்வாறு இடம் ஒதுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** எந்த மாவட்டத்திலும் இல்லாத வசதி, தஞ்சையில் ராஜா சத்திரம் என்ற அரசினர் விடுதி இருக்கிறது. ரொம்ப தூரம் இல்லை. அங்கே நூற்றுக்கணக்கான அறைகள் இருக்கின்றன. அதன் காரணமாக மேலும் இதற்காக வசதிகள் செய்வதற்கு ரூ. 2.5 லட்சத்தில் ஒரு கட்டிடம் கட்ட நாம் எஸ்டிமேட் போட்டது 1973-ல். அதற்கு இப்போது இன்னும் அதிகம் செலவழியும். முதற்கட்டமாக எக்ஸ்டென்ஷன் பில்டிங் கட்ட முயற்சிக்கிறோம்.

**திரு. அ. தேவேந்திரன்:** தலைவர் அவர்களே, 1973-ம் ஆண்டு ரூ. 2.5 லட்சத்தில் கட்டிடத்தை விரிவுபடுத்த ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் பதில்சொல்லும்போது கூறினர்கள். பனகல் கட்டிடத்தை விரிவுபடுத்துகின்ற நேரத்தில் அதற்கு நில ஆர்ஜிதம் செய்ய வேண்டிய அவசியமோ அல்லது வேறு சங்கடமோ எழப்போவதில்லை என்பது உண்மை. இந்த ஆண்டிலேயே செய்ய முன் வருவார்களா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** இந்த ஆண்டிலேயே செய்வதற்கு முயற்சிக்கிறோம்.

## கோட்டபாளையம்-ராமாபுரம் சாலை

* 518 வினா—திரு. வ. முத்து: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், திருச்செங்கோடு வட்டத்தில், மல்லசமுத்திரம்-வையப்பமலை சாலையில் கோட்டப்பாளையத்திலிருந்து ராமாபுரம் செல்லும் சாலையை கிராமச்சாலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்படவிருக்கிறதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. வ. முத்து: தலைவர் அவர்களே, அந்த சாலையில் கோட்டப்பாளையம், ராமாபுரம் போன்ற மூன்று கிராமங்கள் அடங்கியிருக்கின்றன. அவைகளின் நலனைக் கருதி உடனடியாக மறுபடியும் ஏற்பாடு செய்ய முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: அந்த சாலையில் 3.4 கிலோ மீட்டர் தான் இருக்கிறது. புது வளைவு, ஏரிக்காட்டு வளைவு, சேவியன் வளைவு, என்று மூன்று கிராமங்கள் இருக்கின்றன. மக்கள் தொகை 328 பேர். எனவே 1,500 பேர் கொண்ட கிராமச் சாலைத் திட்டத்தில் எடுத்துக் கொள்ள முடியாது.

## *Medicines supplied under E.S.I. Scheme*

* 519 Q.—Thiru N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Labour be pleased to state:

(*a*) whether officials of the Drug Control Inspectorate have found out large quantities of drugs with Employees' State Insurance labels during April 1974 from houses and residences of some Pharmaceutical shop keepers in Singanallur, Coimbatore; and

(*b*) if so, the details of the same?





மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) ஆம்.

(இ) 19—3—1974-ல் R.A.M.O. (ESI) கோவை, ஈட்டுறுதி அரசு மருத்துவமனை, பீளமேட்டில் செய்த திடீர் சோதனையின் பொழுது சில மருந்துகள் குறைந்தமையைக் கண்டார். R.A.M.O வின் முன் ஆய்விற்குப் பிறகு மருத்துவ அதிகாரி E.S.I கோவை, ஈரோட்டில் உள்ள Senior Drug Inspector கோவை, சிங்காநல்லூரில் உள்ள ராணி மருந்துக் கடையையும் அதன் பாகஸ்தர் வீட்டையும் சோதனை செய்து, 2—4—1974-ல் ஈ.எஸ்.ஐ. குறிகள் உள்ள வில்லைகள், கூடுகள், மருந்துகள், ஊசி மருந்துகள் முதலியனவற்றை கைப்பற்றினர். ராணி மருந்துக் கடை அதன் பாகஸ்தரான திரு. வி. பழனியப்பா ஆகியோர்பேரில் துறையினால் சப்-டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் முன் வழக்கு தொடரப்பட்டது. ஒரு வழக்கில் திரு. வி. பழனியப்பன், குற்றம் சாட்டப்பட்டவர், வழக்கு மன்றம் முடியும்வரை சிறை தண்டனையும் ரூ. 200 அபராதமும் விதிக்கப்பட்டார். ராணி மருந்துக்கடையின் பேரிலும் அதன் பாகஸ்தர் திரு. பழனியப்பன் பேரிலும் உள்ள மற்ற இரண்டு வழக்குகளும் சப்-டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றத்தில் பைசல் ஆகாமல் உள்ளன. காவல்துறையும் பீளமேடு இ.எஸ்.ஐ. மருத்துவமனையின் இரண்டு பார்மஸிஸ்டுகள் மீதும் வழக்கு தொடுத்திருக்கிறார்கள். இ.எஸ்.ஐ. மருத்துவமனை, பீளமேட்டின் பார்மஸிஸ்டும் ஒரு இளநிலை உதவியாளரும் திருட்டிற்காக ஒழுங்கு நடவடிக்கைக்காக தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். சம்பந்தப்பட்ட மருத்துவ அதிகாரியிடமிருந்தும், செவிலியரிடமிருந்தும் விளக்கம் கோரப்பட்டுள்ளது.

திரு. என். மருதாசலம்: இந்த இ.எஸ்.ஐ. மருத்துவமனையில் மருந்துகள் வெளியே கொண்டு வந்து திருட்டுத்தனமாக விற்பதை தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்தது உண்டா? அவ்வாறு விற்பதற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மருந்து விற்பதற்குக் காரணம் களவாடப்பட்டது தான். வேறு ஒன்றுமில்லை. அவர்கள் இருவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. வழக்கும் இருக்கிறது. ஒருவர் தண்டனை பெற்றிருக்கிறார்.

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, பார்மசிஸ்டு மீது நடவடிக்கை எடுத்திருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மருந்துகள் ஸ்டோர்ஸ்-இல் ஸ்டாக் வைத்திருப்

பார்கள். அது சம்பந்தப்பட்ட கிளார்க் மூலம் தான் வெளியில் போகக்கூடிய வாய்ப்பு உண்டு. அதற்கு தலைமை மருத்துவ அதிகாரியும் உடந்தையாக இருந்திருக்க வேண்டும். இவர் மீதும் அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** பார்மசிஸ்ட்டும், ஒரு அசிஸ்டெண்டும் தான் ஈடுபட்டிருக்கிறார்கள். தாமஸ், தனராஜ் இருவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. கே. என். குமாரசாமி:** தலைவரவர்களே, ஈ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரியில் நல்ல மருந்துகள் திருடு போகிறது என்று பல நாட்கள் சொல்லி வந்ததில் இப்போது இரண்டு பேர் பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் பல்வேறு அடிப்படைகளில் இப்படிப்பட்ட திருட்டுகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன என்ற முறையில் புகார்கள் வந்து இருக்கிறதா? பேஷண்டுகள் பேரில் உயர்ந்த இன்ஜக்ஷன் மருந்துகள் உபயோகப்படுத்தாமலேயே உபயோகப்படுத்தியதாக எழுதுகின்ற ஒரு சூழ்நிலை இப்படிப்பட்ட ஆஸ்பத்திரிகளில் உருவாகி இருப்பதாக பல புகார்கள் சொல்லுகிறார்கள். இதன் பேரில் எல்லாம் நடவடிக்கை எடுக்கப்படுகிறதா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** ஈ.எஸ்.ஐ. மருத்துவ மனைகளில் இருக்கிற மருந்துகள் சரிவர இருக்கிறதா என்பதைப் பரிசீலிக்க அவ்வப்போது அதிகாரிகளால் கண்காணிக்கப்பட்டு வருகிறது. இப்போது குறிப்பிடப்பட்ட ஆஸ்பத்திரியில் கூட ரூ. 793.66 மதிப்புள்ள மருந்துகள் களவாடப்பட்டதாக தகவல் வந்ததும் 645.00 ரூபாய் மதிப்புள்ள மருந்துகள் போலீசார் மூலம் பறிமுதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. மீதம் 152.00 ரூபாய் மருந்துகள் விற்கப்பட்டுவிட்டதாக தகவல். ஆகவே, எந்த நேரத்தில் குற்றச்சாட்டு வந்தாலும் அதை விசாரித்து, அதன் பேரில் உடனடியாக நடவடிக்கை எடுத்து வருகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இம்மாதிரி ஈ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரியில் திருட்டுப் போவதும் ஸ்டாக்கில் குறைவதும் சாதாரணமாக பெரும்பாலான இடங்களில் இருக்கத் தான் செய்கிறது. அண்மையில் அயன்புரம் ஈ.எஸ்.ஐ. மருத்துவமனையில் கூட பல ஆயிரம் ரூபாய் பெறுமான மருந்துகள் காணமற் போனதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.



ஆகவே இம்மாதிரி ஈ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரியில் இருக்கும் மருந்துகளின் ஸ்டாக்கை சர்ப்பிரைஸ் செக் செய்யக் கூடிய அதிகாரத்தை, உரிமையை சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு வழங்க அரசு முன்வருமா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** கேள்வியிலிருந்து வெகுதூரம் மாண்புமிகு அங்கத்தினர் விஷயத்தை கொண்டு போய்விட்டார். ஈ.எஸ்.ஐ. ஆலோசனைக் குழுவில் இருப்பவர்கள் வேண்டும் என்றால் ஆலோசனை வழங்கலாம். ஆனால் அமைச்சரே கூட சர்ப்பிரைஸ் செக் செய்து மருந்து ஸ்டாக்கை கண்டுபிடிக்க முடியாது. ஸ்டாக் முழுவதும் கணக்கு பார்க்கவேண்டும் என்றால் அது ஒரு நாளில் ஆகிற காரியம் அல்ல. இதற்காக துணை இயக்குனர் அவர்களும், இயக்குனர் அவர்களும் ஆங்காங்கே தவறுகள் நடைபெறாமல் இருக்கும் பொருட்டு கண்காணிப்பு செய்ய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளுகிறார்கள். மற்றவர்கள் கண்காணிப்பது என்பது இயலாது. மாண்புமிகு அங்கத்தினர் குமாரசாமி குறிப்பிட்டதைப் போல அடிப்படையில் ஏதாவது திருட்டு நடைபெறுகிறது என்றால் அதை உடனுக்குடன் போலீஸ் இலாகாவிற்கோ, துறைக்கோ தெரிவித்தால் தக்க நடவடிக்கைகள் எடுக்க முடியும்.

**திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒரு சில தொழிலாளர்கள் லீவு வேண்டும் என்பதற்காக ஈ.எஸ்.ஐ.க்கு செல்லுகிறார்கள். லீவு கொடுத்துவிட்டு அந்தத் தொழிலாளர்களுக்கு உயர்ந்த ரக மருந்துகளை அளிப்பதாக கணக்கில் அவர்கள் பேரில் எழுதிவிட்டு அந்த மருந்துகளை கொண்டு சென்று டாக்டர்கள் தவறாக பயன்படுத்துகிறார்கள். இப்படிப்பட்ட புகார்கள் நிறைய வருகிறது. ஆகவே, இதைக் கண்காணிக்க விசேஷ ஏற்பாடுகள் செய்ய அரசாங்கம் முன்வருமா என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** ஈ.எஸ்.ஐ. மருத்துவமனைகள் தொழிலாளர்களுடைய நலனுக்காகத்தான் இருக்கிறது. அவர்களும் டாக்டர்களும் சேர்ந்து விட்டால் இராஜ்யத்தை யார் காப்பாற்றுவார்கள் என்று எனக்கு புரியவில்லை. இருந்தாலும் இப்படிப்பட்ட குறைபாடுகள் ஏற்படாமல் இருக்க தொழிற்சங்க தலைவர்கள் தொழிலாளர்களுக்கு ஆலோசனை கொடுத்தால் அவர்களுக்கும் நல்லது, நாட்டுக்கும் நல்லது.

*[1975 ஏப்ரல் 1*

## *Workers of India Meters*

*520 Q.—THIRU KOVAI CHEZHIYAN and THIRU N. KITTAPPA: Will the Hon. the Minister for Labour be pleased to state :

(a) whether the Government are aware of the non-payment of lay-off compensation to the workers of India Meters since August, 1974; and

(b) if so, the action taken thereon by the Government in this regard to redress the grievances?

*மாண்புமிகு திரு. க. இராசாராம்:* (அ) இந்தியா மீட்டர்ஸ் நிறுவனத்தின் தொழிலாளர்களுக்கு 1974 அக்டோபர் திங்களிலிருந்து பணிநிறுத்த இழப்பீடு (Lay off Compensation) கொடுக்கப்படவில்லை.

(இ) இந்த நிறுவனத்திற்குச் சேரவேண்டிய தொகைகள் அனைத்தும் தனது வங்கியின் மூலமாகவே செலுத்தப்படும் என்று மேற்படி நிறுவனம் தனது வங்கிக்கு உறுதி அளித்துள்ளது. செலுத்தப்பட்ட தொகைகளை தனக்குச் சேரவேண்டிய தொகைகளுக்காகக் குறித்து சென்ட்ரல் வங்கி சரிக்கட்டிக் கொண்டு வந்துள்ளது. தொழிலாளர்களுக்குச் சேரவேண்டிய ஊதியங்களைக் கொடுக்க இயலும் வகையில் இந்நிறுவனத்திற்கு வேண்டிய தொகைகளை அளிக்க இந்திய சென்ட்ரல் வங்கிக்கு ஆலோசனை நல்குமாறு இந்திய அரசுக்கு எழுதப்பட்டுள்ளது. இந்திய அரசிடமிருந்தும், வங்கி அதிகாரிகளிடமிருந்தும் பதில் எதிர் பார்க்கப்படுகிறது.

*திரு. கோவை செழியன்:* பேரவைத் தலைவர்களே, இந்த நிறுவனத்தை சேர்ந்த தொழிலாளர்கள் அரசாங்கத்தின் மெத்தனம் காரணமாக மிகவும் அல்லல் பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். இதற்கு ஒரு இடைக்கால நிவாரணமாகவாவது அரசாங்கம் ஏதாவது உதவி செய்ய வேண்டும். எதை உடனடியாக செய்ய முடியுமோ அதைச் செய்ய வேண்டும்.

*மாண்புமிகு திரு. க. இராசாராம்:* அரசாங்கம் இதில் எந்த மெத்தனத்தையும் காட்டவில்லை. பிரச்னையும் அந்த அளவு இல்லை. மெத்தனம் காட்ட வேண்டிய அளவு அவசியமும் அரசாங்கத்திற்கு இல்லை. எந்த அளவு வேகமாக இந்தப் பிரச்னையில் செயல்பட



*1975 ஏப்ரல் 1]*

முடியுமோ அந்த அளவு வேகமாக செயலாற்றி இருக்கிறது. ஆனால் இந்த நிறுவனத்தின் நிலை பலஹீனமாக இருக்கிறது என்பதை மட்டும் குறிப்பிட கடமைப்பட்டு இருக்கிறேன்.

*திரு. என். கிட்டப்பா:* தலைவரவர்களே, தொழில்கள் வளர்ந்து வருகின்ற இந்த நேரத்தில் இந்தியா மீட்டர்ஸ் நிறுவனம் எப்படி செயல்பட்டு வருகிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியும். இந்தியா மீட்டர்ஸ் தொழிலாளிகளும் எப்படி நடத்தப்படுகிறார்கள் என்பதும் அரசாங்கத்திற்குத் தெரிந்திருக்கிறது. ஆகவே, இந்தியா மீட்டர்ஸ் நிறுவனத்தை அரசாங்கமே மேற்கொண்டு நடத்த முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. க. இராசாராம்:* தலைவரவர்களே, இந்தியா மீட்டர்ஸ் பற்றி முழு அளவு பரிசீலனை செய்தால்தான் அரசாங்கம் ஏற்றுக்கொள்ள இயலுமா இல்லையா என்று சொல்ல முடியும். இந்தப் பிரச்னையின் அடிப்படையில் ஒன்றும் சொல்லிவிட முடியாது. ஆராய்ச்சி செய்யாமல் தற்போது உள்ள சூழ்நிலையில் ஒன்றும் இயலாது என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

DR. H. V. HANDE: Is the Hon. Minister aware of the fact that this particular company has beeu closed since a number of months and the workers had met and represented their grievances to the department concerned and still no proper conciliation has taken place. Will the Hon. Minister come forward with a categorical statement for resolving this dispute. The Chairman of the company Shri R. P. Iyer has written to Government for providing an assistance of Rs. 50 lakhs and it seems that Government has acceded to that request. When it is possible to give that much of amount, why not the Government properly conduct the whole affairs of the company? What is the difficulty of the Government, may I know, Sir?

*மாண்புமிகு திரு. க. இராசாராம்:* தலைவரவர்களே, இந்த கம்பெனி சென்ட்ரல் பாங்குக்கும் 200 லட்சம் ரூபாய் தரவேண்டும் என்று தகவல் இருக்கிறது. இதைப்பற்றி தக்கபடி ஆராய்ச்சி செய்த பிறகு தான் அரசாங்கம் ஒரு கருத்திற்கு வரமுடியும். கன்சிலியேஷன் நடக்கவில்லை என்று சொல்லுவது தவறானதாகும். இதுபற்றி பல முறை தொழிலாளர் ஆணையர் முன்னாலே பேச்சு நடந்திருக்கிறது. அரசாங்கமும் சென்ட்ரல் பாங்கிற்கு பணம் கொடுக்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு எழுதி இருக்கிறோம்.

தொழிலாளர் நல அமைச்சர் அவர்களும் நானும் இதுபற்றி யோசனையில் ஈடுபட இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. நா. வீராசாமி:** மீட்டர் தயாரிக்கிற பெரிய தொழிற்சாலை இரண்டு. ஒன்று டாட்டா நடத்துவது. இரண்டாவது இந்தியா மீட்டர்ஸ் நிறுவனம். வேண்டும் என்றே இந்தியா மீட்டர்ஸ் நிறுவனம் நடக்காமல் இருப்பதற்கு டாட்டா கம்பெனிக்காரன் முயற்சியில் ஈடுபட்டு இருப்பதாகத் தெரிகிறது. அதனால்தான் அந்த டைரக்டர்கள் இன்றைக்கு இல்லை. எல்லா டைரக்டர்களும் இன்றைக்கு பம்பாயில் போய் உட்கார்ந்து கொண்டு இருக்கிறார்கள். 700 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். இதை அரசாங்கம் தொடர்ந்து நடத்தும் முயற்சியில் ஏதாவது நடவடிக்கை எடுக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தொழில் மானியத்தின் போதே கிளப்பப்பட்ட இந்தக் கேள்விக்கு விளக்கமாக பதில் சொல்லியிருக்கிறேன். நிலைமையை பரிசீலித்த பின்னர்தான், பேச்சு வார்த்தைக்கு பின்னர்தான் ஒரு முடிவை எடுக்க முடியும் என்று இந்த மாமன்றத்தில் சொன்னேன். மறுபரிசீலனை செய்ய 10-ந்தேதி நாள் குறிக்கப்பட்டு இருக்கிறது. தொழில் துறைக்கும் இதுபற்றி தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. பரிசீலனை செய்த பிறகு ஒரு முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** தலைவரவர்களே, இந்தத் தொழிற்சாலை சம்பந்தமாக நல்ல ஏற்பாடுகள்தான் செய்யப் படுகின்றன. ஆனால் இடையில் :00 தொழிலாளர்கள் ஆறு மாதத்திற்கு மேல் எந்தவிதமான வருமானம் இல்லாமல் இருக்கிறார்களே, அதற்காக அந்த நிறுவனமும் நஷ்ட ஈடு கொடுக்கத் தயாராக இல்லை. ஆகவே, இந்தத் தொழிலாளர்களுக்கு எந்த நிதியில் இருந்து நிவாரணம் தரமுடியுமோ அதைக் கொடுக்க வேண்டும். இது கோவை பஞ்சாலை தொழிலாளர்களுக்கு முன்பு ஏற்பட்ட நிலைக்கு ஒத்த நிலையாகும். நான் ஏற்கனவே இதுபற்றி கேட்டபோது முதலமைச்சர் அவர்கள் கவனிப்போம் என்று சொன்னார்கள். அதை அமுல்படுத்துகிற முறையில் அந்தத் தொழிலாளர்களுக்கு முதலமைச்சர் நிதியிலிருந்தாவது நிவாரணம் கொடுக்க இயலுமா என்று அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** திரு. தங்கமணி போன்றோர் முதலமைச்சர் நிதிக்கு தொடர்ந்து ஆதரவு தருவார்கள் என்றால் இதைப்பற்றி கவனிக்கலாம்.

**திரு. சு. துரைசாமி:** பேரவைத் தலைவரவர்களே, மூடப்பட்டத் தொழிற்சாலைகளில் பாதிக்கப்பட்டத் தொழிலாளர்களுக்கு தமிழக அரசின் சார்பாக உதவித் தொகைகள் கோவைப் பஞ்சாலைத் தொழிலாளர்களுக்குக் கொடுத்தோம். அதேமாதிரி அண்டை மாநிலங்களில் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தற்போது அதுபற்றிய தகவல் எதுவும் என்னிடம் இல்லை.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவரவர்களே, பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு நிவாரணம் அளிக்க இப்போது வழிவகை இல்லை என்றாலும், அவர்களுக்கு மாற்று வேலை கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மீண்டும் அந்த நிறுவனத்தை திறப்பது எப்படி என்பதில்தான் அரசாங்கம் கருத்து செலுத்த முடியும். மாற்று வேலை கொடுத்துவிட்டால் அந்த நிறுவனமும் போய்விடும்; தொழிலாளர்களும் வேறு வேலைக்குப் போய் விடுவார்கள். ஆகவே, அந்த நிறுவனத்தை மீண்டும் திறப்பதில் தான் அரசு அக்கறை கொண்டிருக்கிறது.

**திரு. பெ. சீனிவாசன்:** சார், நான் கேட்பது இந்த கேள்வியோடு கொஞ்சம் சம்பந்தப்படாததாக இருந்தாலும் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தமாதிரி 'லே ஆஃப் அல்லது குளோஷர்' இருக்கிற இடங்களில் தொழிலாளர்களுக்கு உடனடியாக நிவாரணம் தேட வேண்டுமென்பது அரசாங்கத்தின் கொள்கையா, அல்லது அவர்கள் தலைவிதிப்படி போகட்டும் என்பது அரசாங்கத்தின் கொள்கையா? விருதுநகருக்கு அமைச்சரவர்கள் வந்திருக்கிறார்கள். அங்கே பஸ் தொழிலாளர்கள் 30 பேர் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். அவர்களுக்கு என்ன ஏற்பாடு செய்ய இருக்கிறார்கள் என்பது தெரியவில்லை. அந்த பஸ் கம்பெனி பஸ்களை விற்றுவிட ஏற்பாடு செய்துகொண்டிருப்பதாகத் தெரிகிறது. இதில் அரசாங்கத்தின் கொள்கை என்ன என்பதை அறிவிப்பார்களா?

[1975 ஏப்ரல் 1

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** எந்தத் தொழிலாளர்களையும் அவர்களது தலைவிதிப்படி விட்டுவிட வேண்டுமென்பது அரசின் கொள்கை அல்ல. முடிந்த அளவு தொழிலாளர்கள் பக்கம் இருப்பதுதான் இந்த அரசின் கொள்கை.

**திரு. எம். சுரேந்திரன் :** சார், ஏழைத் தொழிலாளர்களுக்கும், தொழிற்சாலைகள் மூடப்பட்டு, அதன் காரணமாக கஷ்டப்படுகிற தொழிலாளர்களுக்கும் உதவி செய்ய வேண்டும் என்பதற்கு முதலமைச்சரவர்கள் சி.எம்.சி. மருத்துவமனை விவகாரத்தில் ஒரு முன் உதாரணமாக நடந்துகொண்டிருக்கிறார்கள். அதைப்போன்று இந்தத் தொழிலாளர்களுக்கு உதவி செய்ய, திரு. தங்கமணி அவர்களின் உதவி இல்லாமலேயே, உதவி செய்ய முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** முதலமைச்சர் அவையில் இல்லை.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** தலைவரவர்களே, இந்தியா மீட்டர்ஸ் நிறுவனத்தினுடைய தலைவர் ஏற்கெனவே டாட்டா நிறுவனத்துடன் தொடர்பு கொண்டுள்ளவராக இருப்பதால் திட்டமிட்டு, இந்த நிறுவனத்தை வளரவிடாமல், டாட்டா நிறுவனத்திற்கு உதவி செய்யும் வகையில் இந்த நிறுவனம் அழிக்கப்படுகிறது என்று கூறப்படுகிறது. ஏராளமான ஆர்டர்கள் வெளிநாட்டிலிருந்து வந்தும் இந்தத் தொழிற்சாலை திட்டமிடப்பட்டபடி மூடக்கப்பட்டிருக்கிறது என்ற புகார் இருக்கிறது. இதுபற்றி அரசு ஆராய்ந்து இருக்கிறதா? இந்தத் தொழிற்சாலைத் தலைவருக்கும் டாட்டாவுக்கும் தொடர்பு இருப்பதுபற்றி இந்த அரசு ஆராய்ந்து இருக்கிறதா? அப்படியானால் இந்தத் தொழிற்சாலை பற்றி அரசாங்கம் என்ன முடிவு செய்ய இருக்கிறது? இந்தத் தொழிற்சாலை நிர்வாகத்தை மாற்றியமைத்து, மீண்டும் நல்ல நிலைக்கு கொண்டுவர அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** இந்தத் தொழிற்சாலையை மீண்டும் திறப்பதற்கான எல்லா வழிவகைகளையும் ஏற்படுத்த அரசாங்கம் முயற்சி செய்யத் தயாராக இருக்கிறது. ஆனால், உறுப்பினரவர்கள் குறிப்பிடுகிற மாதிரி டாட்டாவுக்கு மீட்டர் தொழிற்சாலை இருப்பதாகத் தகவல் இல்லை; பிர்லாவுக்குத்தான் இருப்பதாகத் தெரிகிறது. என்னென்ன தொடர்பு இருக்கிறது என்று இதுவரை ஆராயப்படவில்லை. கனம் உறுப்பினர் அவர்கள்



1975 ஏப்ரல் 1]

எண்ணுவது மாதிரி ஏதாவது தொடர்பு இருக்கிறதா என்பது பற்றி அரசு ஆராயும். மேற்கொண்டு பேச்சுவார்த்தை நடக்கும் போது இது கருத்திற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கோவை செழியன் :** தலைவரவர்களே, இந்தியா மீட்டர்ஸ் நஷ்டம் அடைவதற்குக் காரணம் பெரிய உற்பத்தியாளரான டாட்டா போன்றவர்கள்தான். இவர்களால் "ப்ரொடக்ஷன் கம்பீட்" பண்ண முடியவில்லை. ஆகையால் டாட்டா போன்றவர்கள் விலை குறைவாகக் கொடுக்கிறார்கள்; இவர்கள் அதிக விலை கேட்கிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு உத்தரவு போட்டார்கள். தமிழ்நாட்டில் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஏற்கெனவே நீங்கள் தொழில் மானியத்தின் போதும் இதே கருத்தைச் சொல்லியிருக்கிறீர்கள். அதற்கு பதிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

**திரு. கோவை செழியன் :** அப்போது நான் சொன்னதற்கு பதில் தரப்படவில்லை. அதனால் மீண்டும் கேட்கிறேன். கேரளாவில் ஒரு சட்டம் இருக்கிறது. அங்கே உற்பத்தியாகிற பொருட்களுக்கு 15 சதவிகிதம் அதிகம் கொடுத்து வாங்கலாம் என்று ஒரு சட்டம் இருக்கிறது. அப்படி நம்முடைய அரசாங்கம் வாங்கியிருந்தால் இந்த நஷ்டம் வந்திருக்காது. இனிமேலாவது அரசாங்கம் அதற்கு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொழில் மானியத்தின்போதும் இந்தப் பிரச்சனையை எழுப்பியிருக்கிறார்கள். அப்போது விளக்கமாக பதில் சொன்னேன். மின்சாரத் துறையிலே 50 சதவிகிதம் இந்தியா மீட்டர்ஸ் வாங்கலாம் என்று உத்தரவு போடப்பட்டிருக்கிறது; வாங்கியும் இருக்கிறார்கள். அப்படி இருந்தும் அங்கே ஏற்படுகிற நஷ்டத்தைப் பார்க்கும்போது நமக்கு ஒரு அச்சம் ஏற்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதற்கு மீண்டும் மறுபரிசீலனை செய்யப்படும் என்று சொன்னேன். அது பற்றிய பேச்சுவார்த்தைக்கான தேதியும் குறிப்பிடப்பட்டுவிட்டதாகச் சொன்னேன். மீண்டும் மீண்டும் அதுபற்றி கேட்டால் என்ன சொல்வது? டாட்டாவும் பிர்லாவும் போட்டி போடுவது பற்றி நம்முடைய அரசுக்குக் கவலை இல்லை. அது பெரிய பெரிய உற்பத்தியாளர்களின் போட்டி; தொழில் நுணுக்கத்தின் போட்டி. அதைப்பற்றி நாம் கவலைப்படவில்லை. ஏற்கெனவே சொன்னது

போல அரசாங்கத்தின் சார்பில் அந்த நிர்வாகத்தில் ஒரு டைரக்டர் போடுவதற்கு கேட்கப்பட்டது; இன்னும் பதில் வரவில்லை. ஏற்கெனவே நான் தெரிவித்ததுபோல, தொழிலாளர் நல அமைச்சரவர்களும் சொல்லியிருக்கிறார்கள். 10-ந் தேதி இதுபற்றி பரிசீலித்து, என்ன முடிவு எடுக்கலாம் என்பதைப் பார்க்கலாம்.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, அங்கு இருக்கிற தொழிலாளர்கள் இந்தியா மீட்டர்ஸ் நிறுவனத்தை லாபகரமாக நடத்திக்கொடுக்க முடியும் என்று சொல்கிறார்கள். மற்ற மீட்டர்களைக் காட்டிலும் குறைந்த விலைக்குக் கொடுக்க முடியும் என்றும் சொல்கிறார்கள். ஏராளமாக விற்பனை ஆகும்; அந்த அளவுக்கு தொழில் நுட்பம் இருக்கிறது என்று சொல்கிறார்கள். அப்படியானால் நிர்வாகத்தில்தான் ஏதோ கோளாறு இருக்கிறது. அதனால்தான் நஷ்டம் ஏற்படுகிறது என்று அவர்கள் குறைபட்டுக் கொண்டிருக்கிறார்கள். தொழிலாளர்களின் உத்தரவாதத்தின் பேரில் அந்தத் தொழிற்சாலையை ஏற்று நடத்தினால் நல்ல லாபம் கிடைக்கும் என்று தெரிகிறது. ஆகவே, அதற்கான நடவடிக்கையை அரசாங்கம் எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: ஏற்கெனவே சொன்னது போல இது ஒரு தேசியமயமாக்கும் கொள்கை. உடனடியாக இதுபற்றி முடிவு செய்துவிட முடியாது. பரிசீலனை செய்து பார்த்த பிறகுதான் தக்க பதில் கூற முடியும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: தலைவரவர்களே, இந்த கேள்வி நேரத்தில் தொழில் துறை அமைச்சரவர்கள் பதில் கொடுத்ததை பாராட்டுகிறோம். அதே நேரத்தில் இந்த யோசனையை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். தொழிலமைச்சரவர்கள் மின்சாரத் துறைக்கும் பொறுப்பு வகிப்பதால் கேட்கிறேன். மின்சாரத்திற்கு சம்பந்தப்பட்ட பொருட்களை மின்சார இலாகாவில் தயார் செய்கிறார்கள். இந்தத் தொழிற்சாலைக்கு ஏற்கெனவே 50 லட்சம் ரூபாய் கொடுக்கிறோம் என்று ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அதைவிட இன்னும் கொஞ்சம் அதிகமாக மூலதனம் போட்டு, மின்சார இலாகாவிலேயே ஒரு அங்கமாக இந்தத் தொழிற்சாலையை ஆக்கி, மின்சார இலாகாவுக்குத் தேவையான பொருட்களை அங்கே உற்பத்திசெய்து கொள்ள ஏற்பாடு செய்ய அரசாங்கம் தயாராக இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒரு பிரச்சனையை எழுப்பியிருக்கிறார்கள். இந்தத் தொழிற்சாலையில் உற்பத்தியாகும் பொருட்களை மின்சார இலாகாவில் வாங்கிக்கொள்ளலாம் என்ற முறையில் கருத்து தெரிவிக்கிறார்கள். 10-ந்தேதி பேசும்போது இது பற்றி பரிசீலனை செய்து, வாய்ப்பு இருக்கிறதா என்று பார்க்கலாம். சாத்தியக்கூறு இருக்கிறதா என்று பார்த்து, மின்சார இலாகாவில் அல்லது அரசாங்கத்தில் இந்தத் தொழிற்சாலையை எடுத்துக் கொள்ளலாமா என்று பரிசீலனை செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

**திரு. எஸ். ஆறுமுகம் தம் உறுப்பினர் பதவியை ராஜிநாமா செய்யவில்லை என பத்திரிகைக்கு செய்தி அளித்திருப்பதாகக் கூறப்படுவது குறித்து**

THIRU G. R. EDMUND: Sir, on a point of clarification. I want to get a clarification from the Hon. Speaker. நேற்றைய தினம் நம்முடைய முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் தன்னுடைய பதவியை இராஜிநாமா செய்திருக்கிறார் என்றும், அந்த இராஜிநாமா கடிதத்தை ஏற்றுக்கொண்டதாகவும் இந்த மன்றத்தில் தாங்கள் அறிவித்திருக்கிறீர்கள். நேற்று மாலையில் வெளிவந்த நாளிதழில் 'நான் அப்படி ஒரு இராஜிநாமா கடிதத்தை பேரவைத் தலைவருக்கு அனுப்பவில்லை என்றும், பேரவைத் தலைவர் தன்னோடு தொடர்பு கொள்ளவில்லை என்றும், ஏனென்றால் தான் அப்படி ஒரு கடிதம் எழுதவில்லை என்றும்' சொன்னதாக செய்தி வந்திருக்கிறது. பத்திரிகை நிருபர்களுக்கு அப்படி ஒரு செய்தி கொடுத்ததாக வந்திருக்கிறது. நேற்றைய மாலை பத்திரிகையில் இந்தச் செய்தி வந்திருக்கிறது. அவருடைய இந்தப் பேட்டிக்குப் பின்னால் பேரவைத் தலைவரவர்களே, தாங்கள் என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறீர்கள்? அதைப் பற்றி அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பத்திரிகையில் வருகிற செய்திக்கெல்லாம் . . .

Dr. H. V. HANDE : On a point of order, Sir. This arises out of the subject-matter which Mr. Edmund has raised. Sir, yesterday, the Hon. speaker gave a ruling that the Speaker was not obliged to read the contents of the letter. I went through the whole Rules books, but there is no rule saying that the Speaker is not obliged to read the explanation of an hon. Member. who has submitted his resignation. Even when Hon. Ministers resign, whether of the State Government or the Central Government, the cooncerned Minister is allowed an opportunity to give his reasons to the House why he has resigned. In the case of a member, after resigning he cannot come into the House and therefore, normal courtesy requires that when the member has given an explanation as to why he was resigning, the Hon. Speaker should read the letter of the member in full, so that the authenticity of the letter also could be known.

Now the Deputy Leader of our Party has raised doubts regarding the bonafides of the letter. If the full letter had been read, such doubts would not be there. Therefore, if the Hon. Speaker reads the letter of the member explaining the reasons that prompted him to resign, that would only be proper.

(முற்பகல் 10-00)

* **திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) :** Sir, I want to make a submission to the Hon. Speaker. நேற்றையதினம் இந்தப் பிரச்சினை வந்த சமயத்தில் நான் இங்கே இல்லை. அப்போது நமது அருமை நண்பர் திரு. வீராசாமி அவர்கள்கூட அந்தக் கடிதம் திரு. ஆறுமுகம் எழுதினதுதானா என்பதை டெலிபோனில் விசாரித்து முடிவு செய்வது சரியாக இருக்காது என்று தெரிவித்திருக்கிறார்கள். பாராளுமன்ற முறைகளில்—சாலன்ஜ் ஆக—கோபதாபத்தில் அப்படி ராஜீநாமாக் கடிதத்தை அனுப்பியிருந்தால்கூட உடனே ஏற்றுக்கொள்வதில்லை. இங்கேயே சாலன்ஜ் ஆக—வெளியில் வந்து பாருங்கள்—நானும் ராஜீநாமாச் செய்கிறேன். நீங்களும் செய்யுங்கள் என்று பேசுவதை எல்லாம்



ஏற்றுக்கொள்வதில்லை. அதுபோல திரு. வேலப்பன் அவர்களுக்கும் திரு. ஆறுமுகம் அவர்களுக்கும் இந்த அவையிலேயே சாலன்ஜ் ஏற்பட்டு அதைத் தாங்கள் ஏற்றுக்கொண்டுவிட்டீர்கள் என்று சொல்ல முடியாது.

டெலிபோன் மூலமாக விசாரித்தேன். அவர்களே எழுதிக் கொடுத்தது என்று ஒத்துக்கொண்டார்கள் என்று தாங்கள் சொன்னது சிறந்த முறையாகப் படவில்லை. அந்த உறுப்பினரை நேரில் தாங்கள் தங்கள் அறையில் அழைத்துப் பேசியிருக்க வேண்டும். டெலிபோனில் தொடர்பு கொண்டு முடிவு செய்தது சிறந்ததாகப் படவில்லை. அவர் கையெழுத்துப்போட்டு அனுப்பியிருக்கிறார்கள் என்றால் கையெழுத்து அவர் போட்டதுதானா என்பதைப் பரிசீலித்திருக்கவேண்டும். அவருடைய கையெழுத்தைப்போல வேறு யாராவது போட்டார்களா என்பதும் பரிசீலனை செய்து முடிவு எடுக்க வேண்டிய விஷயம் என்று நான் கருதுகிறேன்.

என்னுடைய சிறிய விருப்பம்—ஆளுங்கட்சி உறுப்பினர் என்பதற்காகச் சொல்லவில்லை—எதிர்க் கட்சி உறுப்பினராக இருந்தாலும்கூடத்தான் சொல்கிறேன்—நாங்கள் எல்லாம் சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கிறோம். காண்டெக்ட் சர்டிபிகேட் என்று பலருக்குக் கையெழுத்துப்போட்டுக் கொடுக்கிறேன். இன்னும் சொல்லப்போனால் ப்ளாங்க் லெட்டர் பாடில் நான் கையெழுத்துப்போட்டுக் கொடுத்திருப்பது இருபது, முப்பதுகூட இருக்கும். யாரும் அதுபோல ஒரு சட்டமன்ற உறுப்பினர் ப்ளாங்க் பேப்பரில் போட்டுள்ள கையெழுத்துக்கு மேல் எதையும் எழுதிக்கொண்டு இதுபோலகூடச் செய்ய முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. கிருஷ்ணமூர்த்தி—தாங்கள் ஓரளவில் நில்லுங்கள். ஓரளவுக்கு மேலே போக வேண்டாம்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) :** ஆகையால் தான் அந்த அங்கத்தினரை வரவழைத்து தாங்கள் விசாரணை செய்ய வேண்டும். ரிஜிஸ்தர் தபால் மூலமாகவாவது தாங்கள் அவருக்கு எழுதி அவரது கருத்தைக் கேட்டறிந்து இதில் முடிவு பண்ணவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[1975 ஏப்ரல் 1

**திரு. எம். சுரேந்திரன்:** திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தம்முடைய கருத்தைத் தெரிவித்தார்களே, நானும் என்னுடைய கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது என்ன விவாதமா ?

**திரு. கோவை செழியன்:** தாங்கள் இந்த மன்றத்தின் தலைவர். இங்குள்ள உறுப்பினர்களின் உரிமைகளையும், கௌரவத்தையும் காப்பாற்றக் கூடியவர். நாங்கள் எந்தக் கொள்கை உடையவராக இருந்தாலும் தாங்கள் சொல்கிற செய்தியை ஏற்று, தாங்கள் கொடுக்கிற தீர்ப்புக்குக் கடமைப்பட்டவர்கள். அதன்படி தாங்கள் ஒரு செய்தியைச் சொல்லியிருக்கிறீர்கள். 'நான் டெலிபோனில் பேசினேன். அவர்தான் அந்தக் கடிதத்தை எழுதினதாக ஒத்துக்கொண்டார்' என்று சொன்னீர்கள். தாங்கள் சொன்ன செய்தியை ஒத்துக்கொள்வது எங்கள் கடமையாகும். மன்றத் தலைவர் அவர்கள், இதுபோல அவர்தான் அந்தக் கடிதத்தை எழுதினரா என்பதை நான் உறுதிசெய்து கொண்டுவிட்டேன் என்று சொன்னதை சந்தேகப்பட்டு பேசுவது —இந்த மன்றத்திற்கு களங்கம் கற்பிப்பது ஆகும்

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்):** கோவை செழியன் மாதிரி நான் கூடப் பேச முடியும்—டெலிபோனில். நேரே அழைத்துக் கேட்டிருக்கவேண்டும் அல்லது ரிஜிஸ்தர் தபாலில் ஆவது அவரது கருத்தைக் கேட்டுத் தெரிந்துகொண்டிருக்க வேண்டும் . . .
There are prescribed rules . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஏற்கனவே உங்கள் கருத்தைச் சொல்லியாகிவிட்டது.

**திரு. கோவை செழியன்:** என்மாதிரியே டெலிபோனில் பேசுவேன் என்று அவர் சொன்னதைக் கேட்டு எனக்கு பயமாகி விட்டது. அதுபோல யாரிடம் என்ன பேசுகிறார்கள் என்று தெரியவில்லை. இது பற்றிய பிரச்சினை எழுந்திருப்பதற்குக் காரணமே 'மக்கள் குரல்' பத்திரிகையில் வந்துள்ள செய்திதான். 'மக்கள் குரல்' பொறுப்பான பத்திரிகை. தங்கள் கட்டளையை மீறி எதையும் பிரசுரிக்கமாட்டார்கள். அதிலே அந்த உறுப்பினர்



1975 ஏப்ரல் 1] [திரு. கோவை செழியன்]

தாம் அதுபோல கடிதம் எழுதவில்லை என்று—அது தவறு என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த உறுப்பினர் இப்போது இங்கே இல்லை. ஆகவே இதை பிரிவிலேஜ் கமிட்டிக்கும் அனுப்ப முடியாது. தாங்கள் இது பற்றி ஒரு விளக்கம் சொல்ல வேண்டும்.

**திரு. எம். சுரேந்திரன்:** சட்டமன்ற உறுப்பினர் தாம் அதுபோல ராஜீநாமாச் செய்யவில்லை என்று வெளியில் சொல்லி யிருப்பதாக பத்திரிகையில் வந்துள்ளது. பீகார் மாநிலத்திலும் கூட நிர்ப்பந்தம் காரணமாக இதுபோன்ற நிலைமை ஏற்பட்டது என்று சொல்லப்பட்டது. அதேபோன்ற நிலைமை இங்கே ஏற்பட்டிருக்கிறதா ? திரு. வி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஒரு விஷயத்தைச் சொன்னார்கள். வெறுந்தாளில் தாம் கையெழுத்து போட்டுக் கொடுத்துள்ளதே பல இருக்கும் என்றார்கள். அது போன்ற தாளில் இதுபோல எழுதிக்கொடுத்துவிடக் கூட முடியும் என்ற பயத்தை வெளிப்படுத்தினார்கள். ஆகவே, இது விஷயத்தில் அதிக கவனம் செலுத்தவேண்டும் என்றார்கள். திரு. ஆறுமுகம் 1962-இல் இருந்து தொடர்ந்து சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறார். சட்டமன்ற விதிமுறைகள்—நடைமுறைகள் தெரியாமல் எழுதிவிட்டார்கள் என்று சொல்ல முடியாது. எப்படியோ சட்டசபை சபாநாயகர் அதுபற்றி முறையாக அறிவித்துவிட்ட பின்னர் இதை விவாதத்திற்குரிய பிரச்சினையாக ஆக்குவதற்கு என்ன காரணம் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பத்திரிகையில் வந்துள்ள செய்தியை வைத்து திரு. எட்மெண்டு அவர்கள் எழுப்பினார்கள். பத்திரிகையில் வருகிற செய்திகளைப்பற்றி நாம் கவனிக்க வேண்டியதில்லை. எனக்கு எழுதியுள்ள கடிதத்தின் அடிப் படையில் நேற்று இதுபற்றி நான் அறிவித்ததற்குப் பின்னால் வேறு எதையும் சொல்வதற்கில்லை. சொல்ல வேண்டுமென்ற நிலைமையும் ஏற்படவில்லை.

Dr. H. V. HANDE: The hon. Member Thiru V. Krishnamoorthy has raised a very serious matter. The House has to view it with grave concern because either pressure has been brought upon the Member according to Mr. Krishnamoorthy—we also

[Dr. H. V. Hande] [1975 ஏப்ரல் 1

feel that way—or an earlier letter was accidentally taken and that letter was produced. A similar instance had gone to the Court in the Legislative Council. So, it is a very serious matter. I am quite sure members like Mr. Ponnappa Nadar and others here will be equally concerned and we have to view the whole matter with seriousness. I would like a very definite protection to be given to the Members because we want to know whether any pressure was put upon the Member or whether an earlier letter was produced. You are the protector and the guardian angel of the entire rights of the House and we expect you to act accordingly.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்று நான் இந்த அவையில் அறிவித்ததற்கு மேலாக நான் எதையும் சொல்வதற்கில்லை.

Next item— "Continued hunger strike by the House Surgeons............

THIRU R. PONNAPPA NADAR : I would like to raise a point of order. Our Constitution—Article 190—Disqualifications of Members—says :

"(3) If a member of a House of the Legislature of a State—

(a) becomes subject to any of the disqualifications mentioned in clause (1) of Article 191; or

(b) resigns his seat by writing under his hand addressed to the Speaker or the Chairman, as the case may be, and his resignation is accepted by the Speaker or the Chairman, as the case may be,

his seat shall thereupon become vacant :

Provided that in the case of any resignation referred to in sub-clause (b), if from information received or otherwise and after making such inquiry as he thinks fit, the Speaker or the Chairman, as the case may be, is satisfied that such resignation is not voluntary or genuine, he shall not accept such resignation ", என்று இருக்கிறது.



1975 ஏப்ரல் 1] [Thiru. R. Ponnappa Nadar]

நேற்றையதினம் என்ன காரணத்தினால் திரு. ஆறுமுகம் அவர்கள் ராஜிநாமாச் செய்தார்கள் என்ற விவரத்தைக் கேட்டேன். அரசியல் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறபடி அவர் ராஜிநாமாச் செய்துள்ளது வாலண்டரியாகச் செய்யப்பட்டது தானா என்கிற விசாரணையைத் தாங்கள் நடத்தித் தெரிந்து கொண்டீர்களா? அப்படி நடத்தியிருந்தால் தாங்கள் அது பற்றிய விவரங்களை இந்த மன்றத்திற்குத் தெரிவிப்பதில் என்ன கஷ்டம் இருக்கிறது? அவர் ராஜிநாமாச் செய்ய நிர்ப்பந்தப் படுத்தப்பட்டாரா? இதுபற்றி பலவகையில் ஐயப்பட்டுக் கொண்டிருக்கிறோம். இது முக்கியமான பிரச்சினை.

திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஏதோ கையெழுத்துப் போட்ட வெறுந்தாள்கள் எல்லாம் கொடுத்திருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். உண்மையாகவே கூறியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். இந்த நிலையில் பத்திரிகையில் வந்த செய்திகள் மாறுபாடாக இருப்பதனால்—இது சம்பந்தமாக தாங்கள் விரிவாக அறிக்கையோ, தங்கள் ரூலிங்கையோ தந்தால் பொருத்தமாக இருக்கும் என்று ஆலோசனை கூறி—எங்களுக்கு தாங்கள் சட்ட பூர்வமான எல்லாப் பாதுகாப்பையும் அளிக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE : We expect the Hon. Speaker to give a ruling. Because he says that in the Constitution itself it has been laid down that it should be in his own handwriting. டைப் அடித்து கீழே மட்டும் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தால் ஏற்க முடியாது.

The whole letter must be written in his own handwriting. That is the Constitutional provision. Therefore, the House is entitled at least to see the letter. I am not suspecting you, but at least let us be sure that the Members rights are protected. We expect that at least the letter should be allowed to be seen by us. A similar situation arose when Mr. Raghavanandam complained in the High Court that he had not given any resignation, but a blank letter was signed. He claimed like that. A similar matter went to the Court and in that case the Court had given a decision. That is a different matter. I am not going into the merits of that case. Such an instance occurred in the precincts or within

the four walls of the Legislative Council. We do not want a similar thing to take place here. Let us ensure ourselves that the whole thing is *bona fide*. That is why we request you—you have got the right and you can say that the matter is over—but we are making a very impassioned plea to the Hon. Speaker to show the letter to us—at least to a few leaders of the House, so that they may be convinced that the matter is a genuine one.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சார், உங்களுக்கு . . ,

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** ஹாண்டே அவர்கள் சொன்னதிலே ஒரு தவறு—அதைச் சொல்லிவிடுகிறேன். திரு. ஹாண்டே அவர்கள் பேசுகிறபொழுது, ஏற்கனவே நீதிமன்றத்திலே, தீர்ப்பளிக்கப்பட்ட ஒரு செய்தியைக் குறித்து (குறுக்கீடு) என்னவென்றால், அவரே எழுதிய கடிதம் என்ற அடிப்படையிலே தீர்ப்பேயாகிவிட்டது. ஆகவே, அப்படிப்பட்ட பிரச்னையில் . . .

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** கண்டெஸ்ட் செய்யப் பட்டுள்ளது.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** கண்டெஸ்ட் செய்தாலும் அது தவறு என்று தீர்ப்பளிக்கப்பட்ட பிறகு (குறுக்கீடு) வெளியிலே ஒருவர் பொய் சொல்கிறார் அல்லது தவறாகச் சொல்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அப்படி ஒரு நிலைமை ஏற்படுமானால் அதைச் சட்டசபையிலே சாட்சியாக சொல்வது சரியல்ல.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** எக்ஸாம்பிள் . . ,

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** எக்ஸாம்பிளே தவறு. கோர்ட்டிலே கன்டெஸ்ட் ஆனாலும் அது நிரூபிக்கப்பட்டிருக்குமானால் சொல்லலாம். நிரூபிக்கப்படாத கன்டெஸ்டேஷனை எடுத்துச் சொல்வது பொருத்தமல்ல. அப்படி சொல்லி, இந்த ஒரு பிரச்னையிலும் தவறான எண்ணம் ஏற்பட இடம் தரக் கூடாது, என்று தலைவரவர்களே, கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** அரசியல் சட்டத்திலே விஷயம் தெளிவாக இருக்கிறது. யாராவது உறுப்பினர் தன்னுடைய பதவியை இராஜினாமாச் செய்ய வேண்டுமென்று சொன்னால் அதை



நேரடியாகத் தங்களுக்குத்தான் எழுதியிருக்க வேண்டும். அப்படி எழுதியிருந்தார் என்று சொன்னால்தான் முடிவு செய்திருக்க வேண்டும். அவர் தன் இராஜினாமா கடிதத்தை வாபஸ் வாங்கிக்கொள்கிறேன் என்ற மாதிரி ஏதாவது கடிதம் எழுதியிருக்கிறாரா? அப்படி ஏதாவது இருந்தால் தங்கள் கருத்து என்னவென்று சொன்னால், மன்றத்திற்குக் கருத்துச் சொல்ல வசதியாக இருக்கும்.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** நம்முடைய அரசியல் சட்டத்தின் 190-வது ஆர்ட்டிக்களின்கீழ், அந்த இராஜிநாமா கடிதத்தை அவரே தன்னுடைய கைப்பட எழுதியிருக்க வேண்டுமென்றும் அந்தக் கடிதத்தைப் பரிசீலனை செய்யும்போது பேரவைத் தலைவரவர்கள் எந்தவிதமான நிர்ப்பந்தத்திற்கும் உட்பட்டு கடிதம் எழுதியிருக்கிறாரா என்று பார்க்கவேண்டுமென்றும், அது உண்மையாக இருக்கிறதா, ஜெனுயினாக இருக்கிறதா என்று பார்க்கவேண்டுமென்றும் நமது அரசியல் சட்டத்திலே சொல்லப் பட்டிருக்கிறது. நான் எழுப்பியிருக்கிற பிரச்னை, நீங்கள் கொடுத்திருக்கிற தீர்ப்பின்மீது நம்முடைய ஆறுமுகம் அவர்கள் எந்தவிதமான மறுப்பும் சொல்லாமலிருந்திருந்தால், எழும்பி இருக்காது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பத்திரிகையிலே ஏதாவது வந்திருக்கலாம், பத்திரிகையிலே வந்திருப்பதையெல்லாம் அடிப்படையாக வைத்து இங்கே பேச முடியாது.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** நான் பத்திரிகையை ஆதாரத்துக்காகத்தான் கொண்டு வருகிறேனே தவிர, துணைக்குத்தான் கொண்டு வருகிறேனே தவிர . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நாம் இங்கே ஒரு பெரிய விவாதம் பற்றிப் பேசுகிறோம். நமக்கு அடிப்படையாக, பேசும் போது ஆதாரபூர்வமான தகவலை வைத்துப் பேசவேண்டும். பத்திரிகையிலே ஒரு செய்தி வந்திருக்கிறது என்று சொல்கிறீர்கள். ஆகவே, நீங்கள் சொல்வது ஏற்றுக்கொள்ளக் கூடாத ஒரு ஆதாரமாகும்.

## திரு. எஸ். ஆறுமுகம் தம் உறுப்பினர் பதவியை ராஜிநாமா செய்ய வில்லை என பத்திரிகைக்கு செய்தி அளித்திருப்பதாகக் கூறப்படுவது குறித்து

[1975 ஏப்ரல் 1

**திரு. க. உரோ. எட்மண்ட் :** என்னுடைய வாதத்திற்கு நேற்று பத்திரிகையிலே வந்திருக்கிற செய்தியை ஆதாரமாகக் கொண்டு வரவில்லை. நான், இங்கே குறிப்பிட விரும்புவது எல்லாம் ஒரு இராஜினமா கடிதத்தைப்பற்றி பரிசீலிக்கும்போது மூன்று நிபந்தனைகள் இருக்கின்றன. ஒன்று இராஜினமா கடிதத்தை உறுப்பினரே எழுதியிருக்கவேண்டும். அதை இன்னொருவர் எழுதி, அவர் கையெழுத்து செய்தால், அதை ஏற்றுக்கொள்ளக் கூடாது. அல்லது டைப் செய்து, அதிலே கையெழுத்து ஆகியிருந்தாலும் ஏற்றுக்கொள்ளக் கூடாது. அவரே கைப்பட எழுதியதைத்தான் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று இருக்கிறது.

இன்னொன்று, அவர் வாலண்டரியாக, தானாக மனமுவந்து எழுதிக் கொடுத்திருக்கிறாரா என்று பார்க்கவேண்டும். மூன்றாவது, அதிலே உண்மையிருக்கிறதா, ஜெனூயினாக இருக்கிறதா என்று பார்க்கவேண்டும். இந்த மூன்று கன்டிஷன்களையும் பார்க்கவேண்டும். அந்த அடிப்படையிலேதான், எங்களுக்கு அவையிலே ஒரு சந்தேகம் கிளம்புகிறது. திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஒரு சந்தேகத்தைக் கிளப்பி விட்டார்கள். நான் கையெழுத்துப்போட்ட வெற்றுக் காகிதத்தைச் சிலரிடம் கொடுத்து வைத்திருக்கிறேன் என்று அவர் சொல்லியிருக்கிறார் . . . (திரு. கிருஷ்ணமூர்த்தி குறுக்கீடு) நீங்கள்தான் சொன்னீர்கள். தலைவரவர்களே, அவருடைய கடிதத்தை நீங்கள் குறைந்தபட்சம் எதிர்க்கட்சியிலேயிருக்கிற தலைவர்களுடைய பார்வைக்காவது வைத்து . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர்களுக்கு என்னென்ன உரிமை இருக்கிறதோ, அந்தந்த உரிமைகளைத்தான் கேட்கலாம். உரிமையை மீறிக் கேட்பது முறையல்ல.

கடிதம் வந்தது. அது அவராலே எழுதப்பட்ட கடிதம்தானா, உண்மைதானா என்று பேரவைத் தலைவர் தன்னுடைய திருப்திக்காகத் தெரிந்துகொள்ளவேண்டும். அதைப் பேரவைத் தலைவர் தெரிந்து கொண்டார். திருப்தியாகிவிட்டது, தீர்ப்பளித்து விட்டார். அதோடு அது முடிந்துவிட்டது.

அடுத்து அட்ஜர்ன்மென்ட் மோஷன் . . .

" Continued hunger-strike by the House Surgeons and the consequent lardships to the patients . . ."



## 3. நடைமுறைக் கேள்வி

### சென்னை கடற்கரையில் இரண்டு சீனக் கப்பல்கள் வந்திருப்பது குறித்து

**திரு. நா. வீராசாமி :** தலைவரவர்களே, என்னுடைய பாய்ன்ட் ஆஃப் ஆர்டர், இன்று நாட்டிலே ஏற்பட்டிருக்கிற ஒரு ஆபத்தான சூழ்நிலையைப் பற்றியது. இன்று பத்திரிகையிலே, நமது கடற்கரையில், இரண்டு சீனக் கப்பல்கள், தமிழகத்தினுடைய எல்லையிலே, குவாங் ஜான் 3, குவாங் ஜான் 2 என்று இரண்டு கப்பல்கள் வந்திருப்பதாகவும், அதிலே 36 சீனர்கள் வந்திருக்கிறார்கள் என்றும் செய்தி வந்திருக்கிறது. அந்தக் கப்பல்களிலே எலக்ட்ரானிக் இயந்திரங்கள் எல்லாம் வைத்திருப்பதாகச் சொல்கிறார்கள். நம்முடைய கடற்கரையின் ஆழத்தைக் கண்டுபிடிக்கக் கூடிய கருவிகள் எல்லாம் வைத்திருப்பதாக செய்தி வந்திருக்கிறது. ஏன், இதை எழுப்புகிறேன் என்றால், முன்பு சீன யுத்தம் வந்த நேரத்திலே, இரண்டு கப்பல்கள் வந்திருக்கின்றன. இதனால், நாட்டுக்கு ஆபத்து வருமோ என்ற அச்சம் வந்திருக்கிறது. இதைப் பற்றி ஏதாவது தகவல் வந்திருக்கிறதா? மாண்புமிகு அமைச்சரவர்கள் இதைப்பற்றி விளக்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. க. உரோ. எட்மண்ட் :** இது எப்படி பாய்ன்ட் ஆஃப் ஆர்டரின் கீழ் வரும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவர், பாய்ன்ட் ஆப் ஆர்டர் எழுப்பியிருக்கிறார். இன்னும் முடிக்கவேயில்லை. அதற்குள் நீங்கள் . . .

**திரு. நா. வீராசாமி :** அரசாங்கத்திற்கு ஏதாவது தகவல் வந்திருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, இது பற்றி மத்திய சர்க்காரினுடைய காவல் துறையினர் நடவடிக்கை எடுத்து, அவர்களை எல்லாம் பிடித்து வைத்திருக்கிறார்கள். போலீசார் நடவடிக்கை எடுப்பதாக இருந்தாலும் கூட, ஆந்திர மாநிலப் போலீசார்தான் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது. அவ்வளவுதான் அதைப்பற்றிச் சொல்ல முடியும்.

2. தகவல் கோரல்—தொடர்ச்சி.

திரு. எஸ். ஆறுமுகம் தம் உறுப்பினர் பதவியை ராஜிநாமாச் செய்யவில்லை என பத்திரிகைக்கு செய்தி அளித்திருப்பதாகக் கூறப்படுவது குறித்து—(தொடர்ச்சி).

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): ஒரு எக்ஸ்பிளனேஷன், சார், எதிர்க்கட்சித் தலைவர் எட்மண்ட் அவர்கள் பேசும்பொழுது நான் அப்பொழுதே சொல்லலாம் என்று பார்த்தேன்—காமாட்சி எழுந்தார் நான் உட்கார்ந்துவிட்டேன்—கையெழுத்துப் போட்டு கொடுத்து வைத்திருக்கிறேன் (குறுக்கீடு) அதைப்பற்றி விளக்குவது நல்லதாக இருக்கும் என்பதால் நான் ஒரு முடிவைச் சொல்லிவிடுகிறேன். உங்களுக்கு இருக்கிற நிர்ப்பந்தமும் எனக்குத் தெரியும். உங்களுக்கு இருக்கிற நிலைமைகளும் எனக்குத் தெரியும். மெம்பர்களுக்கு இருக்கிற நிலைமைகளும் எனக்குத் தெரியும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: ஏதாவது நிர்பந்தம் இருந்தால், தலைவர் அவர்களே, சொல்லுங்கள்.

DR. H V. HANDE: Sir, the hon. Member is indirectly casting aspersion on the Hon. Speaker.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): மேற்கொண்டு நான் சொல்லக்கூடிய நிலையிலேயில்லையென்ற காரணத்தால் . . .

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: உங்களுடைய நிலைமை தெரிய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னுடைய நிலைமை இந்தப் பேரவைக்குத் தலைமை வகிப்பது. இந்தப் பேரவை வகுத்துக் கொடுத்திருக்கின்ற விதிமுறைகளின்படி அவையை நடத்துவது. ஆகவே, இந்த நிலைமையிலே ஒவ்வொருவரும் இருந்துவிட்டால் போதும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: உங்கள் மேலே ஒரு குறையைச் சொல்கிறார் . . .

THIRU R. PONNAPPA NADAR: The hon. Member (Thiru V. Krishnamorthy) should be asked to withdraw that word.

THIRU V. KRISHNAMOORTHY (Nelikuppam): Sir, I withdraw that word.



4. ஒத்திவைப்புத் தீர்மானம்

மனையக மருத்துவர்கள் (ஹவுஸ் சர்ஜன்ஸ்) உண்ணாவிரத வேலை நிறுத்தமும் அதனால் நோயாளிகளுக்கு ஏற்பட்டுள்ள அல்லலும் குறித்து.

MR. SPEAKER:

அடுத்து,

"Continued hunger-strike by the House Surgeons and the consequent lardships to the patients . . ."

என்னும் பொருள் பற்றி கீழ்க்கண்ட மாண்புமிகு உறுப்பினர்கள் பேரவையின் 42-வது விதியின் கீழ் ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள்.

திரு. க. உரொ. எட்மண்ட், டாக்டர் எச். வி. ஹாண்டே, திருமதி ஜோதி வெங்கடாசலம், திரு. ஜே. ஜேம்ஸ், திருமதி அனந்தநாயகி, திரு. எம். சுரேந்திரன், திரு. ஏ. சுப்பிரமணியன், திரு. கே. டி. கே. தங்கமணி, திரு. சோ. அழகர்சாமி, திரு. என். கே. பழனிசாமி, திருமதி சத்தியவாணிமுத்து.

இப்பொழுதே மணி 10-20 ஆகிவிட்டது. அடுத்து, போலீஸ் மானியம் வருகிறது. ஏற்கனவே இது ஒருமுறை வந்து டிஸ்ஸலவாகியிருக்கிறது. ஆகவே, சுருக்கமாகச் சொல்லி விடுங்கள்.

* DR. H. V. HANDE: Sir, we want the business of this House to be adjourned because a very serious situation is prevailing in Madurai even now. More than 150 persons have been arrested and a number of House Surgeons have also been arrested. The situation there has become serious because of the arrests. Secondly, there is a failure on the part of the Government because even the assurances given by the Hon. Minister during last year's House Surgeons' strike have been cast to the winds and have not been implemented.

Sir, I want the Health Minister to appreciate the point of view of the House Surgeons. The arguments of the strikers is that by abolishing Honorary Surgeons' posts, over 800 doctors will immediately get jobs.

Secondly, as a result of doing away with the extension of service to doctors 125 doctors per year retire—more persons will get employment.

[Dr. H. V. Hande] [1975 ஏப்ரல் 1

Thirdly, by appointing one more doctor in each primary health centre, a substantial number of doctors will get employment and also the patients especially in rural parts will be benefited.

Fourthly, more doctors can be employed by the Government take-over of the Panchayat Union Hospitals and the standard of treatment will also improve.

Also in regard to Leprosy Eradication and Mass Immunisation Programmes, doctors can be utilised. Then, if the assurance of the Government that 200 fresh doctors will be employed every year is to be implemented, it will take nearly 10 years to clear the backlog of 2,000 unemployed doctors.

Then, by implementing the Resident system, an extra 400 doctors can be provided for. They also want that the stipend of Rs. 275 to be increased.

Lastly, even post-graduate doctors are also asking for increase in their pay.

These are the innocuous and reasonable demands of the House Surgeons and I just do not know the difficulties of the Government in accepting their demands. I do not want to take much time of the House and the Hon. Speaker has already asked me to be brief. So, if the business of the House is adjourned, the whole matter can be discussed threadbare. This is the request that I place before the Government and the House for consideration.

* THIRUMATHI JOTHI VENCATACHELLUM : Mr. Speaker, I have given notice of the following adjournment motion :

'Under Rule 42 of the Assembly Rules, the business of the House do stand adjourned to discuss a definite matter of urgent public importance, namely, the hunger-strike by House Surgeons as the second stage of their agitation to press their demands for better emoluments and job opportunities and their continued strike since March 11, 1975.'

இந்த ஹவுஸ் சர்ஜன்களின் ஸ்ட்ரைக் தொடர்ந்து ஆண்டுதோறும் வருவதை நாம் பார்க்கிறோம். மார்ச் மாதம் வந்தவுடனே அதிகப்படி ஊதியம் கொடுக்கவேண்டுமென்றும் வேலை



1975 ஏப்ரல் 1] [திருமதி ஜோதி வெங்கடாசலம்]

வாய்ப்பு அதிகமாகக் கொடுக்கவேண்டுமென்றும் அவர்கள் கேட்டு ஸ்ட்ரைக் செய்வதைப் பார்க்கிறோம். இந்தச் சபையை ஒத்தி வைத்து இதைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்று கூறுவதினுடைய அடிப்படை நோக்கம் அவர்களுக்கு படிப்பிற்காக நாம் ஒவ்வொரு மாணவருக்கும் எவ்வளவு செலவு செய்கிறோம் என்று பார்த்தால் அவர்களுடைய மருத்துவப் பயிற்சிக் காலத்திலே ஏற்படக்கூடிய செலவு சுமார் 60 ஆயிரம் ரூபாய்க்கு மேலே இருக்கும் என்று நான் நினைக்கிறேன். அப்படியிருக்கும்போது ஒரு ஹவுஸ் சர்ஜன்ஸி அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய அவசியம் இருப்பதால் அவர்களுக்கு இப்போது 90-இல் ஆரம்பித்து 275 ரூபாய் வரையிலும் கொடுக்கிறோம். 275 ரூபாயை சற்று உயர்த்திக்கொடுப்பதோடு அவர்களுக்கு ஐந்தாண்டுக் காலத்திற்கு ஹவுஸ் சர்ஜன்களுக்கு கொடுக்கக் கூடிய ஊதியம் மறுபரிசீலனை செய்யப்படமாட்டாது என்றும் சொல்லவேண்டும். காரணம், ஒவ்வொரு ஆண்டும் இது ஒரு வியாதியாகப் பரவுமானால் ரெக்கரிங் எக்ஸ்பென்டிச்சர் என்ன ஆகும் என்று அரசு ஆலோசிக்க வேண்டும். அவர்களுக்குக் கொடுக்கக் கூடிய சலுகைகளைக் கொடுக்கவேண்டும், மறுக்கவில்லை. தொடர்ந்து அவர்களுக்குக் கொடுத்துக்கொண்டே போனால் ஏற்படும் செலவுபற்றி ஆலோசிக்கவேண்டும். அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது ஒருக்கால் 300 ரூபாயாக உயர்த்தலாம், எவ்வளவு உயர்த்தப் போகிறார்கள் என்று எனக்குத் தெரியாது, அப்படி உயர்த்தினாலும் ஒரு ஆண்டுக் காலத்திற்கு இதை குறிப்பிட்ட ஒரு தொகையாக வைத்துவிட வேண்டுமேயல்லாமல்—அமைச்சர் அவர்களும் ஹெல்த் மினிஸ்டர்ஸ் கான்பரன்சில் எல்லா மாநிலங்களோடும் ஒப்பிட்டுப் பார்த்து—இதை ஓரளவிற்குக் கொண்டுவந்து வைத்துவிட்டால் தான் ஸ்ட்ரைக் போன்றவை எல்லாம் இனிமேல் வராமல் இருக்கும். ஜாப் ஆப்பர்சுனிட்டிஸ் அவர்களுக்கு நிறையக் கொடுக்கவேண்டும். டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னதைப் போல் ஒரு ஆண்டு காலத்திற்கு இருநூறு டாக்டர்களுக்கு வேலை கொடுக்கவேண்டுமென்று இருக்கிறது, ஏற்கனவே இந்தச் சபையிலே அமைச்சர் அவர்கள் கூறியதைப்போல் இன்னும் ஆயிரத்திற்கு மேற்பட்ட டாக்டர்கள் லிஸ்டில் இருக்கிறார்கள், அவர்களுக்கு எல்லாம் சீனியாரிட்டி பிரகாரம் கொடுக்க

வேண்டிய நிலை இருக்கிறது, அப்படிப்பட்ட நிர்ப்பந்தம் இருப்பதால் ஒவ்வொரு பிரைமரி ஹெல்த் சென்டரில் 3-வது டாக்டர் போடுவதற்கு வழிவகை ஏதாவது இருக்கிறதா என்று மத்திய அரசோடு ஆலோசனை செய்து பார்த்து அப்படிச் செய்து வேலைவாய்ப்பு அவர்களுக்குக் கொடுக்க இயலுமா என்பதையும் பார்க்க வேண்டும். ஆகவே, உடனடியாக டாக்டர்களை அழைத்து சமாதானம் செய்து அவர்களுக்கு தகுந்த முறையில் ஆதரவளிக்கக்கூடிய முறையிலே அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதால் அதைப்பற்றி விவாதிக்க இந்த சபையை ஒத்திவைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* **திருமதி த. ந. அனந்தநாயகி:** சார், இன்று நாங்கள் கொடுத்திருக்கக்கூடிய அவசரத் தீர்மானத்தினுடைய கருத்தே ஹவுஸ் சர்ஜன்ஸ் உண்ணாவிரதம் இருக்கக்கூடிய அளவிற்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள். படித்தவர்கள், பட்டதாரிகள், சமுதாயத்திற்கு சேவை செய்ய வேண்டியவர்கள் அவர்களுடைய தேவைகளைக் கேட்பதற்கு உண்ணாவிரதம் இருந்துதான் இந்த அரசாங்கத்தின் கவனத்திற்கு அதைக் கொண்டுவர முடியும் என்று சொன்னால் அந்த அளவிற்கு நாடு அவல நிலையில் இருக்கிறதா என்றுதான் நினைக்கவேண்டியிருக்கிறது. அவர்கள் என்ன தொழிலாளர்களா, ஊர்வலம் மற்றவையெல்லாம் செய்வதற்கு? அவர்கள் சில பிரச்னைகளைச் சொல்கிறார்கள் என்றால் உடனடியாக அவர்களைக் கூப்பிட்டு உங்கள் பிரச்னை என்ன என்று கேட்டு அதை எப்படி தீர்க்கவேண்டுமோ அப்படித் தீர்க்காமல் இருக்கிற இந்த அரசாங்கத்திற்குக் கொஞ்சம்கூட அவசர உணர்ச்சியில்லாமல் இருப்பது சமுதாயத்தை வருந்தத் தக்க நிலைக்குக் கொண்டுபோய்விடக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அவர்களுடைய பிரச்னை தொடர்ந்து இருந்துகொண்டே இருக்கிறது என்பதை அரசாங்கம் அறியும். இந்த சட்டசபையிலேயே நாங்கள் அடிக்கடி சொல்லி இருக்கிறோம். வேலையில்லாமல் ஆயிரக்கணக்கானவர்கள் அவதிப்பட்டுக் கொண்டு இருக்கக்கூடிய நாட்டிலே வயதானவர்களுக்கு எல்லாம் எக்ஸ்டன்ஷன் கொடுத்துக்கொண்டே இருக்கக்கூடாது. None is indispensable. அவர்களுடைய அனுபவம் இருக்கலாம், அறிவுத் தன்மை



இருக்கலாம். அதையெல்லாம் வேறு முறையிலே பயன்படுத்தலாமே தவிர கீழே இருந்து வருகின்றவர்களுக்குக் கிடைக்கக் கூடிய புரமோஷனல் ஆப்பர்சூனிட்டியை நிறுத்தக்கூடிய முறையிலே உங்கள் இஷ்டம்போல் வயதானவர்களுக்கு எக்ஸ்டன்ஷன் கொடுப்பது என்றால் அரசாங்கத்திடம் கொடுக்கப் பட்டிருக்கிற சலுகைகளை துஷ்பிரயோகம் செய்கிறீர்கள் என்றுதான் ஆகிறது. அடிக்கடி நாங்கள் சட்டசபையிலே சொல்கிறோம், வயதான அதிகாரிகளுக்கு எக்ஸ்டன்ஷன் கொடுக்கக்கூடாது என்று, செய்யமாட்டோம் என்று இங்கே சொல்லிவிட்டு திருப்பித் திருப்பி அப்படியே செய்கிறீர்கள். அது எங்கள் முடிவு, அவர்களுக்கு திறமை இருக்கிறது. அவர்களுடைய திறமை எங்களுக்குத் தேவைப்படுகிறது, ஆகவே, நாங்கள் வைத்துக் கொள்ளவேண்டுமென்று ஆசைப்படுகிறோம் என்ற முறையிலே அந்தப் போர்வையில் கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்வது கண்டிக்கத்தக்கதாகும்.

அவர்கள் இன்றைக்கு வேறு வழியில்லாமல் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். ஹவுஸ் சர்ஜன்ஸ் 1,300 பேர்கள் வரையில் வேலையில்லாமல் இருக்கிறார்கள். இது எவ்வளவு பெரிய தேசிய நஷ்டம் என்பதை இந்த அரசாங்கம் யோசிக்கவில்லை. பெற்றோர்களின் பணச் செலவு, அரசாங்கத்தின் பணச் செலவு எல்லாம் சேர்ந்து ஒரு டாக்டரை உருவாக்குவதற்கு சமுதாயத்திற்கு ஒன்றரை லட்சம் செலவாகிறது. அப்படிப்பட்டவர்களை வேலையில் அமர்த்தாமல், நீ தெருவிலேயே திரிந்துகொண்டு இரு என்று அரசாங்கம் சொல்லுமானால் இதைவிட துரதிருஷ்டமானது என்ன இருக்கிறது? ஹானரரி சிஸ்டத்தை ரத்துசெய்து விட்டு அவர்களுக்கு ஏன் வேலை கொடுக்கக் கூடாது? அவர்கள் 275 ரூபாயிலிருந்து 300 ரூபாயாக உயர்த்தவேண்டுமென்று சொல்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கை நியாயமானது. இன்றைக்கு விலைவாசி ஏறிக்கொண்டே இருக்கிறது. ஒரு டீசன்ட் அமவுண்ட் அவர்கள் பெறுகிற முறையிலே இருக்கவேண்டும்.

அரசாங்கம் உடனடியாக எதையும் செய்யாமல் எல்லாப் பிரச்னைகளையும் முத்தவிட்டு, முத்தவிட்டு இருக்கக்கூடியவர்களின் நேரங்களையெல்லாம் எடுத்துக்கொண்டு அவர்கள்

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1975 ஏப்ரல் 1

இன்றைக்கு உண்ணாவிரதம் இருக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. அரசாங்கம் கவனக்குறைவாக இருப்பதாலே இன்றைக்கு கட்டாயம் சட்டசபையை அரை மணி நேரமாவது ஒத்திவைத்து ஆப்பரேஷன் செய்யவேண்டும். சும்மா மருந்து தடவி தடவி அது கான்சராக ஆகிவிடப்போகிறது. அமைச்சர் அவர்கள் ஆப்பரேஷன் செய்யக்கூடிய முறையிலே இதற்கு நல்ல சொல்யூஷன் கண்டுபிடிக்கவேண்டும். அப்படிச் செய்வதற்கு அமைச்சர் அவர்கள் உடனடியாக முன்வருவது நல்லது. இல்லையென்றால் சமுதாயத்தில் ஒரு புற்றுநோயாக வளர்ந்துகொண்டிருக்கிறது என்ற நிலைமை ஏற்படும். ஆகவே, இதைக் கவனிக்க வேண்டுமென்ற முறையிலே இதைப்பற்றி விவாதிக்க இந்த அவையை ஒத்தி வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சபாநாயகர் அவர்களே, நான் ஏற்கனவே இது சம்பந்தமாக ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். பதினெட்டாம் தேதி ஒரு நாள் வேலை நிறுத்தம் என்று சொன்னதையொட்டி திரு. ஜேம்ஸ் அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்தார்கள். அதற்குப் பிறகு 21-ஆம் தேதியிலிருந்து தொடர்ந்து 1,000 பேர்களும் வேலை நிறுத்தம் செய்கிற நிலைபற்றி கொடுத்தபோது மீண்டும் எடுத்துக் கொள்ள முடியாது என்று தாங்கள் தெரிவித்தீர்கள்.

(முற்பகல் 10-30)

அடுத்தாற்போல, நேற்று மதுரையிலே 71 ஜூனியர் டாக்டர்கள் கைது செய்யப்பட்டார்கள். அதில் 5 பேர் பெண்கள். மதுரையிலே அவர்களைச் சந்திக்கின்ற வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவர்களிடத்திலே பேசிய விஷயங்களை இங்கே சொல்வது சபைக்கு உதவிகரமாக இருக்கும் என்று கருதி, சில விஷயங்களைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

இப்பொழுது 8 ஆஸ்பத்திரிகளில் ஆயிரம் ஹவுஸ் சர்ஜன்கள் ஒரு வருஷ காலத்திற்குப் பயிற்சி பெறுகிறார்கள். இன்றைக்கு ஆயிரம் பேர்களுமே ஒரு வேலைநிறுத்தத்தில் ஈடுபடுகிறார்கள் என்றால் அவர்களுடைய கோரிக்கையிலே கண்டிப்பாக நியாயம் இருக்கிறது என்பதை முதலில் பார்க்க வேண்டும்.



1975 ஏப்ரல் 1] [திரு. கே. டி. கே. தங்கமணி]

அடுத்தாற்போல, ஏற்கனவே அமைச்சரவர்கள் இங்கே சொல்லியிருக்கிறார்கள், ஒரு டாக்டரைத் தயாரிக்க 60,000 ரூபாய் செலவாகலாம் என்று. அப்படி 60,000 ரூபாயை நாம் இன்வெஸ்ட் செய்திருக்கிறோம். அப்படி இன்வெஸ்ட் செய்த பிறகு அதைப் பயன்படுத்துவதற்கான கியாரண்டி, பயன்படுத்துவதற்கான ரெஸ்பான்சிபிலிட்டி யாருக்கு இருக்கிறது? அரசுக்குத்தானே அந்த ரெஸ்பான்சிபிலிட்டி இருக்கிறது? அந்த முறையில் இது ஒரு முக்கியமான பிரச்னையாக வருகிறது.

சாதாரணமாக டாக்டர்களுக்கு வேலையிருக்கிறது என்று பொதுவாகச் சொல்லப்பட்டது. இப்பொழுது பார்த்தால், இதே மன்றத்தில் அறிவிக்கப்பட்டது, ஆயிரம் பேருக்கும் அதிகமாக குவாலிஃபைட் டாக்டர்களுக்கு வேலை இல்லை என்று. வருஷத்திற்கு வருஷம் இந்த ஆயிரம் ஹவுஸ் சர்ஜன்கள் பயிற்சி பெற்று அவர்களும் வேலையில்லாமல் போவார்கள் என்றால் வேலையில்லாத பட்டாளத்தில் இனிமேல் டாக்டர்களும் வந்து சேருவார்கள் என்ற நிலைமையிருக்கிறது.

நேற்று நான் மதுரையில் பார்த்தபொழுது ஆஸ்பத்திரியில் 100 படுக்கைகள் இருக்கும் இடத்தில் 30 பேர் கூட இல்லை. ஓ.பி.-யில் யாருமே கவனிக்க முடியாமல் இருக்கிறது. அங்கே 220 ஹவுஸ் சர்ஜன்கள் இருக்கிறார்கள், பி.ஜி. ஸ்டூடன்ஸையும் சேர்த்தால் 350 பேர் இருக்கிறார்கள்.

மதுரையிலே கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து நிலைமை சிக்கலாக இருக்கிறது. இப்படித் தினசரி கைது செய்யப்பட்டால் நிலைமை ரொம்பவும் மோசமாகி விடும். இப்பொழுது அவர்கள் கோரியிருப்பது, 275 ரூபாய் அலவன்ஸை 350 ரூபாயாக ஆக்குங்கள் என்று சொல்கிறார்கள். அதை ஏற்றுக் கொள்வதில் ஒன்றும் சிரமம் இருப்பதாகத் தெரியவில்லை.

பி.ஜி. ஸ்டூடன்ஸைப் பொறுத்தவரையில் தங்களுக்கு அலவன்ஸை உயர்த்த வேண்டுமென்று கேட்கிறார்கள். வேலை வாய்ப்பு சம்பந்தமாக அவர்கள் பல ஆலோசனைகளைக் கொடுத்திருக்கிறார்கள்.

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1975 ஏப்ரல் 1

சாதாரணமாக டாக்டர்கள் நகரத்தில்தான் இருக்க விரும்புவார்கள், கிராமங்களுக்குச் செல்வதற்கு விரும்பவில்லை என்று சொல்வார்கள். ஆனால், இப்பொழுது அப்படிப்பட்ட நிலைமை இல்லை. அவர்கள் கிராமத்திற்குப் போகத் தயாராக இருக்கிறார்கள். மற்ற மாநிலங்களில் 'ரெசிடென்ஷியல் டாக்டர்கள்' என்று வைத்திருக்கிறார்கள். இங்கே 'ஆனரரி சர்ஜன்ஸ்' வேண்டுமா என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

மதுரையைப் பொறுத்த வரையில் இ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரிக்கு 12 டாக்டர்கள் வேண்டும். 3 பேர் தான் இருக்கிறார்கள், ஒரு சர்ஜன், ஒரு ஃபிசிஷியன் இருக்கிறார். எனவே, அங்கே கொடுக்க முடியும் என்று சொல்கிறார்கள்.

ஆகவே, இன்றைக்கு வேலைநிறுத்தம் செய்யும் ஹவுஸ் சர்ஜன்களின் தலைவர்களை உடனடியாக அழைத்து, அவர்களோடு பேசட்டும். அப்படிப் பேசும்பொழுது, விரும்பினால் எதிர்க் கட்சியிலே உள்ள நாங்களும் வந்து பேசுகிறோம். ஏனென்றால் நாட்டிலே உள்ள நிலைமை தெரியும். அவர்கள் கோரிக்கையை எந்த அளவிற்கு விட்டுக்கொடுக்க முடியும் என்று பேச முடியும். இதை ஒரு கௌரவப் பிரச்னையாக வைத்து சும்மா இருக்கக் கூடாது. நேற்று அவர்கள் மறியல் செய்தார்கள், நாளைக்கு என்ன ஆகுமோ தெரியாது. இந்த மாதிரி நிலைமை ஏற்பட்டால் அவர்கள் கூடித்தான் முடிவு செய்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு மதிப்புக் கொடுத்து, அவர்களை வரவழைத்து, தேவை என்றால், எங்களையும் அழைத்துப் பேச வேண்டும். அந்த முறையில் அறிவிப்பு வந்தால்தான் நல்லது. ஏனென்றால், இப்பொழுது வந்திருப்பவர்கள் பழைய டாக்டர்களின் வீட்டுப் பிள்ளைகள் அல்ல. அப்படியிருந்தாலும் அவர்களிடத்திலே வேலை செய்து கொள்ளலாம். அதற்கு அப்பாற்பட்டு பலரும் வந்திருப்பதால் இந்தமாதிரி நிலைமைகள் இருக்கின்றன. இவர்களை நல்லமுறையில் கவனிக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு உண்டு. ஆனால். அப்படிக் கவனிக்காமல் இருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டைக் கூற விரும்புகிறேன். எனவேதான், இந்த ஒத்தி வைப்புத் தீர்மானம். ஆகவே, அவையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1975 ஏப்ரல் 1]

**திருமதி சத்தியவாணிமுத்து:** சட்டப் பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது தங்களுடைய நியாயமான கோரிக்கைகளுக்காக அரசோடு வாதாடிக்கொண்டிருக்கும் இந்த டாக்டர்களின் பிரச்னைகளைப் பற்றி இங்கே என்னுடைய கட்சியின் சார்பில் நான் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். அரசு ஏழைகள்மீது மிகவும் அக்கறை கொண்டிருக்கிறது என்பதற்காக எத்தனையோ காரியங்களைச் செய்து வருகிறார்கள் என்று கூறப்படுகிறது. ஆனால் பெரும்பாலான ஏழைகள் மருத்துவமனைகளுக்குச் சென்றுதான் தங்களுக்கு இருக்கின்ற நோய்களைத் தீர்த்துக் கொள்ளும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ளுகிறார்கள்.

அப்படிப்பட்ட மருத்துவமனைகளில் இன்றைக்குப் பயிற்சி பெற்று பணியாற்றும் இந்த டாக்டர்கள் தங்களது கோரிக்கைகளை இரண்டாண்டுக் காலத்திற்கு முன்பு அரசுக்கு வைத்திருக்கிறார்கள். அதிலே எந்தவிதமான மாற்றமும் இல்லை என்று கருதி இன்றைக்கு அவர்கள் உண்ணாவிரதம், வேலைநிறுத்தம் போன்ற முறைகளில் தங்களது அதிருப்தியைக் காட்டும் முறையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இது முக்கியமான பிரச்னை. இன்றைக்கு மருத்துவமனைகளில் சிகிச்சை தருவதற்கு மருத்துவர்கள் இல்லாத நிலைமை ஏற்பட்டிருப்பதால் பாதிக்கப் படுபவர்கள் ஏழைகள்தானே தவிர பணக்காரர்கள் அல்ல. இன்றைக்கு அவர்கள் இரண்டாயிரம் பேர்கள் வேலைவாய்ப்பின்றி இருக்கிறார்கள். அந்த இரண்டாயிரம் பேர்களுக்கும் எப்படி வேலை வாய்ப்புத் தருவது என்பதற்கான வழிமுறைகளை அவர்களே கூறுகிறார்கள். அவர்கள் கூறுவதைத்தான் இந்த அரசு ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கூறவில்லை, அவர்கள் கூறுகின்ற அத்தனையையும் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்கவில்லை. ஆனால் எவையெவை நல்ல கருத்துக்கள் என்று தெரிகிறதோ அவைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆண்டுதோறும் இப்பொழுதிருக்கின்ற முறையில் 200 பேர்களுக்கு வேலைதரும் வாய்ப்பிருப்பதாகக் கூறப்படுகிறது. ஆண்டுதோறும் 200 பேர்களுக்கு என்றால், ஆண்டுதோறும் படித்துவிட்டுவரும் மாணவர்களுக்கு என்றால், 2,000 பேர் ஏற்கனவே வேலைவாய்ப்பில்லாமல் இருப்பவர்களுக்கு கடினமாக இருக்கும் என்ற அவர்களது கோரிக்கையும், குற்றச்சாட்டும் நியாயமாக இருப்பதால் அதிலே சிலவற்றை அரசு கட்டாயமாக ஏற்றுக்கொள்ள வேண்டும். அவர்கள்மீது அரசு, தனிப்பட்ட அரசியல் கட்சிக்காரர்களிடம்

[திருமதி சத்தியவாணிமுத்து] [1975 ஏப்ரல் 1

காழ்ப்புணர்ச்சியோடு பிரச்னைகளைப் பார்ப்பதுபோல் இல்லாமல், நோய்வாய்ப்பட்ட மக்களுக்கு வாய்ப்பளிக்கும் தூதுவர்கள் என்ற முறையில் அவர்களது நியாயமான கோரிக்கைகளை ஏற்க வேண்டும்.

குறிப்பாக அவர்கள் பி.ஜி. படிக்கும் நேரத்தில் அவர்களது ஊதியத்தைச் சற்று அதிகமாகத் தர வேண்டுமென்று கேட்கிறார்கள். அதுவும் இன்றைக்கு நியாயமாகத் தோன்றுகிறது. காரணம், அப்பொழுது அவர்களுக்கு அரசாங்கச் சார்பிலே, அவர்களுக்கு ஊதியமாக இல்லாத காரணத்தால் உபகாரச் சம்பளம்போல் கொடுக்கிறார்கள். (மணியடிக்கப்பட்டது) தாங்கள் மணியடித்தவுடன் மின்சாரத் தூண்டிப்பும் நின்று விடுகிறது. அந்த அளவிற்கு உங்களுக்கும் அவர்களுக்கும் தொடர்பிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எந்தப் பேரவைத் தலைவருக்கும் அது இருக்கும். அதையெல்லாம் சுட்டிக்காட்டுவது முறையே அல்ல. நீங்கள் பேசிக்கொண்டிருந்தபொழுது மற்றவர்கள் பேசிக்கொண்டிருந்ததால் உங்கள் பேச்சு சரியாகக் கேட்கவில்லை, எல்லோரும் பேசுகிறார்கள் என்பதற்காக அப்படிச் செய்தேன். அதுகூடத் தப்பாக இருக்கிறது.

**திருமதி சத்தியவாணிமுத்து:** எனவே, இப்பொழுது 200 பேர்களுக்கு வேலைவாய்ப்புத் தரும் நிலையை மாற்றி, பலருக்கு வாய்ப்பு தரும் நிலையை உருவாக்க வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. நீண்டகாலமாக அதை ஏற்றுக்கொள்ளாமல் வைத்திருப்பதன் மூலம் ஏழைகள்தான் பாதிக்கப்படுகிறார்கள். நேரிலே செல்லும்பொழுதும் எங்களிடத்திலே தங்கள் குறைகளைக் கூறுகிறார்கள். பலயிடங்களிலும் அப்படிப் பார்த்துக்கொண்டு வருகிறோம். எனவே, இதற்காக அவையை ஒத்திவைப்பது நியாயமானது என்று தெரிவித்துக் கொண்டு, இந்தக் கோரிக்கைகளைச் செவி மடுத்து, நியாயமான கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, தமிழக மருத்துவக் கல்லூரிகளில் பயிற்சி பெறுகிற மனை மருத்துவர்களாக இருக்கும் ஹவுஸ் சர்ஜன்கள் அண்மையில் சில கோரிக்கைகளை அரசாங்கத்திற்குத் தந்து, அந்தக் கோரிக்கைகளைப் பற்றிய சில விளக்கங்கள்கூடப் பெற்று, அந்த விளக்கத்திற்குப் பிறகு ஒரு



1975 ஏப்ரல் 1] [திரு. க. அன்பழகன்]

தெளிவு அடையாத நிலையில் வேலைநிறுத்தத்தில் அவர்கள் ஈடுபட்டிருப்பதால் அதை மறுபடியும் இந்த அவையிலே விவாதிக்க வேண்டுமென்ற அடிப்படையில் ஒத்திவைப்புத் தீர்மானத்தை பல எதிர்க்கட்சித் தலைவர்கள் இங்கே கொண்டு வந்து ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள்.

இந்த மனை மருத்துவர்களின் வேண்டுகோளை அரசு சார்பில் அமைச்சரோ அல்லது முதலமைச்சரோ ஆராயாமலும் இல்லை திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் சொன்னார்கள், அவசர உணர்ச்சி காட்டப்படவில்லை என்று. அவசர உணர்ச்சியோடு கவனிக்க வேண்டிய பிரச்னைகளை இந்த அரசாங்கம் கவனித்துக்கொண்டுதான் இருக்கிறது. உண்மையிலேயே அவர்கள் தந்திருக்கின்ற அந்த வேண்டுகோளின் அடிப்படையிலே திரு. ஹாண்டே அவர்கள் அந்த வேண்டுகோளை யெல்லாம் உண்மை என்று கருதி, வேண்டுகோள் உண்மை, வேண்டுகோளின் காரணமாக அவர்களால் அறிவிக்கப்பட்ட கருத்துக்களை உண்மை என்று கருதிக்கொண்டு--எடுத்துச் சொன்னார்கள்.

இந்த மனையக மருத்துவர்கள் 13--3—1975 அன்று ஒருநாள் அடையாள வேலைநிறுத்தம் செய்யப் போவதாக 17 ஆம் தேதி யன்று மாலையில் அறிவிப்புக் கொடுத்தார்கள். அந்த ஒருநாள் அடையாள வேலை நிறுத்தத்தையும் செய்தனர்.

அதற்குப் பின்னர் 18-வது நாள் முற்பகல் அடையாள வேலை நிறுத்தம் சில பகுதிகளிலே நடைபெற்றிருக்கிறது. 24-ம் நாள் மனையக மருத்துவர்கள் பிரதிநிதிகள் என்னைச் சந்தித்தார்கள். அரசு எடுத்திருக்கும் நடவடிக்கை பற்றியும், மாநிலத்திலுள்ள நிதிப் பற்றாக்குறை நிலைமை பற்றியும் அவர்களிடம் விளக்கிக் கூறினேன். மேலும், அவர்கள் வேலை நிறுத்தத்தைக் கைவிடுவது நல்லது, அதைக் கைவிட்டுவிட்ட உடனே முதலமைச்சர் அவர்களிடத்தில் அழைத்துச் சென்று எந்த வகையில் சலுகை காட்ட முடியும் என்று முதலமைச்சரிடத்தில் பேசலாம் என்று கூடத் தெரிவித்து அனுப்பினேன். 29-ம் நாள் அன்று மறுபடியும் அவர்கள் வேலைநிறுத்தத்தை ஆரம்பித்தார்கள். என்னிடத்தில் பேசிய போதே வேலை நிறுத்தத்தைக் கைவிடவில்லை. தொடர்ந்து நடத்திக் கொண்டு வந்தார்கள். 29-ம் நாள் 75 மனையக

[திரு. க. அன்பழகன்] [1975 ஏப்ரல் 1

மருத்துவர்கள் தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைக்குள்ளே செல்பவர்களைத் தடுக்கின்ற ஒரு வகையிலே மறியலை மேற்கொண்டார்கள். அதற்குப் பின்னர் வேறு மருத்துவர்களை மருத்துவ மனைக்குள்ளே செல்லாமல் தடுக்கும் காரியங்களில் ஈடுபட்டார்கள். திரு. தங்கமணி அவர்கள் எடுத்துச் சொன்னது போல் மதுரையில் மட்டும் மறியலைக் கலெக்டர் அலுவலகத்தின் முன் நடத்துவது என்று தொடங்கினார்கள். அதற்குப் பின்னர் மருத்துவ மனையிலும் நடத்தினார்கள். அவர்கள் சொன்னபடி, மற்றவர்கள் செல்லுவதைத் தடுத்தார்கள்—

unlawful assembly and obstruction

என்ற முறையில் 71 பேரைப் போலீசார் கைது செய்த பிறகு 'பர்சனல் செக்யூரிடி'-யில் உடனே விடுதலை செய்திருக்கிறார்கள். இவை எல்லாம் சட்ட முறைப்படி நடைபெறுகிற காரியங்கள். உண்மையிலேயே இந்த மனையக மருத்துவர்கள் வேலை நிறுத்தம் செய்வதற்கான நியாயமான காரணம் எதுவும் இல்லை. அவர்களுக்கு ஏதாவது குறை இருக்குமானால் அந்தக் குறைகளை அரசாங்கம், அவர்கள் வேலை நிறுத்தம் செய்யாமலேயே கவனிக்கத் தயாராக இருக்கிறது என்று தெரிவித்திருக்கிறேன்.

அவர்கள் எல்லா மருத்துவர்களுக்கும் வேலை தரவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். எல்லா மருத்துவர்களுக்கும் வேலை தருவது என்று சொன்னால் இப்போது பட்டியலில் இடம் பெற்றிருக்கும் மருத்துவர்கள் ஏறத்தாழ 1,203 பேர் ரிஜிஸ்டர் செய்திருக்கிறார்கள். இப்போது இந்த மனையக மருத்துவர்களாகப் பயிற்சி பெறுகிறவர்கள் 1,103 பேர். ஆக 2,306 பேர். 700, 800, 1,000 என்று இருந்த பட்டியல் 1,125 மாணவர்கள் சேர்க்க வேண்டிய நிலையில் இப்போது வரத் தொடங்கியிருக்கும் மாணவர்கள் ஆண்டுக்கு ஆயிரம் பேர் வருகிற நிலைமை ஏற்படுகிறது. 1,103 பேர் மனையக மருத்துவர்களாக இருக்கிறார்கள். 2,300 என்ற அளவுக்குப் பட்டியல் உயரும். அப்படி உயரும்போது மாநில அரசாங்கம் எவ்வளவு பேருக்கு வேலை வாய்ப்புத் தர முடியும் என்று கேட்டால்—1972-வது ஆண்டில் 325 பேருக்கு, 1973-ம் ஆண்டில் 374 பேருக்கு, 1974-ல் 308 பேருக்கு ஆக ஏறத்தாழ ஆயிரம் பேருக்கு மேல் மூன்றாண்டுக் காலத்தில் வேலை வழங்கப்பட்டிருக்கிறது.



1975 ஏப்ரல் 1] [திரு. க. அன்பழகன்]

அரசாங்கம் புதிய பொறுப்பு—நியூ சர்வீஸ்—என்ற வகையில் 700 பேருக்கு வேலை வழங்கியிருக்கிறது. அதன்படி மாவட்ட மருத்துவ மனைகள், தாலுக்கா மருத்துவ மனைகளில்—அத்தனையிலும் டாக்டர்கள் அதிகமாக்கப்பட்டிருக்கிறார்கள். வருகிற இந்த ஆண்டிலும் பதவியிலிருந்து விலகக் கூடியவர்களின் இடம் 130 முதல் 150 இடங்கள். புதிதாக நியமிக்கப்பட 175 இடங்கள் ஆகக் குறைந்தது 300 பேருக்கு இந்த ஆண்டு வேலை தர தமிழக அரசு திட்டமிட்டு முறைப்படி ஏற்றுக் கொண்டிருக்கிறது. ஒரு மாநில அரசாங்கம் தன்னுடைய பொருளாதார நிலையிலே இருந்து 100 டாக்டர்களுக்கு வேலை கொடுக்குமானால் அதற்கு நடைமுறைச் செலவில் 30 லட்சம் ரூபாய் ஒதுக்கினால்தான் முடியும். நூறு டாக்டர்கள் வேறு வேறு இடத்தில் பணி செய்ய வசதிகள் அளித்து பணியாற்றச் செய்ய அந்த அளவுக்குச் செலவிட வேண்டியிருக்கிறது. கிராம மருத்துவராக இருந்தால் அவரே எல்லாவற்றையும் கவனித்துக் கொள்வார். எம்.பி.பி.எஸ். படித்த டாக்டர்களைப் போடும்போது இட வசதி, மருந்து வசதி, உதவியாளர்கள், இன்னும் சொல்லப்போனால் படுக்கை இருக்குமானால் செவிலியர்கள், படுக்கைகளில் நோயாளிகள் இருந்தால் அவர்களுக்கு உணவு வசதி இவ்வளவு ஏற்பாடுகளையும் அரசு செய்து கொடுக்க வேண்டும்.

திரு. தங்கமணி அவர்களும் மற்றவர்களும் ஒருவர் டாக்டராகப் படித்து முடித்து வெளிவர அரசு 60,000 ரூபாய்க்கு மேல் செலவு செய்கிறது என்று கூறினார்கள். அப்படி அரசு செலவழித்து அவர்கள் டாக்டர் தகுதி பெற 'ஹவுஸ் சர்ஜன்' என்பது படிப்பு, பயிற்சிதானே தவிர அது வேலை அல்ல. அந்தப் பயிற்சி பெற்றால் தான் எம்.பி.பி.எஸ். பட்டம் உண்டு. அதற்கு அவர்களுக்கு மாதம் 275 ரூபாய் கொடுக்கப்படுகிறது. திருமதி ஜோதி அம்மையார் அவர்கள் மிக நன்றாகச் சொன்னார்கள். 90 ரூபாயிலிருந்து மெல்ல மெல்ல உயர்த்திக் கொண்டே வந்து கடந்த இரண்டு ஆண்டுகளில் 200 ரூபாயிலிருந்து 275 ரூபாயாக ஆக்கியிருக்கிறோம். நான் வருகிற நேரத்தில் 175 ரூபாயாக இருந்தது. 175 ரூபாயை நான்கு ஆண்டுக் காலத்தில் 275 ஆக ஆக்கியிருக்கிறோம். இது அவர்களுக்குப் பயிற்சிக்காகவே தவிர, சர்விசுக்காக அல்ல.

திரு. தங்கமணி அவர்கள், அவர்கள் இல்லாத காரணத்தால் மருத்துவ மனைகளில் நோயாளிகள் கூடுகின்றனர், சிகிச்சை குறைகிறது என்று சொன்னார்கள். இவர்கள் மற்ற டாக்டர்கள் சிகிச்சை அளிப்பதைப் பார்த்துப் பழகிக் கொள்பவர்களே தவிர, தாங்களாகவே சிகிச்சை அளிக்க உரிமை பெற்றவர்கள் அல்ல.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** ஓ.பி.-யில் இவர்கள் இல்லை என்று சொன்னால் எந்தக் காரியமும் நடக்காது. ஓ.பி.-யில் டாக்டரே இருக்கிறார் என்று நோயாளிகள் மகிழ்ச்சியோடு காட்டிப் போகிறார்கள். அங்கே டாக்டர்கள் இருக்கலாம். பயிற்சியின் பகுதியாக அவர்கள் ஓ.பி. பிரிவைக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** அதற்குப் பெயர்தான் பயிற்சி. ட்ரெயினிங் பீரியட் என்பது முதல்; இரண்டாவது அவர்கள் மற்ற டாக்டர்களுக்குத் துணை செய்வது. அடிப்படையில் அவர்கள் பெற வேண்டிய பயிற்சிக்காகத்தான் செய்கிறார்களே தவிர, மற்றவர்களுக்காக அல்ல. அந்தப் பயிற்சிக்கு 275 ரூபாய் கொடுக்கப்படுகிறது. அது உயர்த்தப்பட வேண்டுமென்று அம்மையார் அவர்கள் சொல்லுகிறபோது சொன்னார்கள். ஐந்தாண்டுக் காலத்திற்கு இந்தப் பிரச்சினை எழுப்பப்படாத அளவுக்கு, வேலை நிறுத்தம், தகராறு வராமல் நிரந்தரமாகக் குறிப்பிட்ட தொகையை உயர்த்திக் கொடுத்து முடித்து விட வேண்டுமென்று சொன்னார்கள். அவர்கள் நீண்டகாலமாக அமைச்சராக இருந்தவர்கள். அவர்கள் பிரச்சினையை உணர்ந்தவர்கள். நானே இந்தப் பிரச்சினையைப் பல முறை விளக்கி இருக்கிறேன். அவர்களுக்கு உதவி செய்யலாமா, கூடாதா என்பதில் இரண்டு விதமான கருத்து இல்லை. இந்த அரசாங்கம் முடிந்த அளவுக்கு உதவி செய்யத் தயாராக இருக்கிறது.

இப்போது 1,103 பேர் பயிற்சி பெறுகிறார்கள். அந்தப் பயிற்சி தரமுள்ளதாக இருக்க மருத்துவ மனைகளில் வசதிகளைப் பெருக்கி நியூ மெடிகல் காலேஜஸ் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டு ஓராண்டுக்கு 25, 30 லட்சம் ரூபாய்க்குப் புதிய திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதுவும் பயிற்சி பெறும் டாக்டர்களின் வசதிக்காகத்தான் சில புதிய பிரிவுகள் ஏற்படுத்தப் படுகின்றன.





அவர்களுக்கு முதலில் சொல்லிவிட விரும்புகிறேன். 25 ரூபாய் உயர்த்திக் கொடுப்பதாக இருந்தால் 3,20,000 ரூபாய் ஓராண்டுக்கு அதிகச் செலவாகும். இப்போது 1,103 பேருக்கு 275 ரூபாய் மேனிக்கு கொடுக்கும்போது ஏறத்தாழ 35, 40 லட்சம் ரூபாய்—42 லட்சம் ரூபாய் ஆகிறது என்பதற்கான குறிப்பு வைத்திருக்கிறேன். இவ்வளவு பணம் ஸ்டைபண்டாக ஓராண்டுக்குக் கொடுக்கிறோம். 25 ரூபாய் உயர்த்திக் கொடுத்தால் 3½ லட்சம் ரூபாய் ஆகும். இப்போது வறட்சிப் பணியாற்றுகின்ற நேரத்தில் முதலமைச்சரிடத்தில் இந்தத் தொகையைக் கேட்டால்—பல நேரங்களில் 3 லட்சம், 5 லட்சம் தரத் தயார் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னாலும் இப்போது வறட்சிப் பணியினைப் பெரிதாகச் செய்து கொண்டிருக்கிற நிலையில் யோசிக்க வேண்டிய நிலைமை இருக்கிறது.

மாணவர்களிடத்தில் பேசும்போது நான் சொன்னேன்—மற்றப் பிரச்சினைகள் என்னுடைய ஆற்றலுக்கு அப்பாற்பட்டது; தமிழக அரசின் சக்தியை மீறியது; அரசாங்கத்திடம் சொல்லிப் பயன் இல்லை. உங்களுக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டுமென்ற அடிப்படையில் கருதப்படுமானால் 250 ரூபாய், 275 ரூபாய் என்று உங்களுக்குக் கொடுக்கப்படுகிற அலவன்ஸ் குறைவு என்று கருதுவீர்களானால் வேலை நிறுத்தத்தை விட்டு விடுங்கள், அதனால் முதலமைச்சருக்குத் திருப்தி ஏற்படும்; அதை வைத்து உதவித் தொகையை அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று உடனடியாகப் பேசலாம், வாருங்கள் என்று அழைத்தேன். திரும்பிச் சென்ற மாணவர்களில் சென்னையிலுள்ள மாணவர்களுக்கு அமைச்சர் சொன்னதில் திருப்தி; ஆனால் மற்ற மாணவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. மதுரை, திருநெல்வேலி மாணவர்களும் நாங்கள் சொன்னதைக் கேட்டுவிட்டுப் போனாலும் அங்கே சென்று கூறும்போது மற்றவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. எதிர்க்கட்சித் தலைவர்கள் அவர்களுக்கு ஆலோசனை சொல்ல வேண்டும். இந்த அரசாங்கம் அவர்களுடைய வேண்டுகோள்களில் சிலவற்றை, குறிப்பாக உதவித் தொகையை உயர்த்துவது பற்றிப் பரிசீலிக்கத் தயாராக இருக்கிறது. முதலமைச்சரிடத்தில் கேட்காவிட்டாலும் தைரியமாகச் சொல்லுகிறேன். மூன்று லட்சம் ரூபாய் அளவுக்கு அரசாங்கத்தில் இருந்து நிதி எதிர்பார்க்க முடியும். 25 ரூபாய் உயர்த்த முடியும். ஆனால் மாணவர்கள் 25 ரூபாய்

தருகிறோம் என்று சொல்லியும் மனத் திருப்தி இல்லாமல் நடப்பார்களானால் அது அவர்களுக்கும் நல்லது அல்ல; அரசாங்கத்திற்கும் நல்லது அல்ல; நாட்டுக்கும் நல்லது அல்ல.

திரு. தங்கமணி போன்றவர்கள் 60,000 ரூபாய்க்கு மேல் அரசாங்கம் ஒரு மாணவனுக்குச் செலவு செய்வதாகச் சொன்னார்கள். ஒரு மாணவனுக்கு 80,000 ரூபாய் கூடச் செலவாகிறது. அவ்வளவு செலவிட்டு அதற்கு மேலும் அவர்களுக்குப் பயிற்சி காலத்தில் 275 ரூபாய் கொடுத்து, அதை உயர்த்திக் கொடுத்து, அதற்கு மேலும் அவர்களுக்கு வேலை கொடுத்து, சம்பளம் கொடுத்தால்தான் சமூகம் பாதுகாக்கப்படும் என்று கருதுவதற்கு இன்றைக்கு நிலைமை இடம் தரவில்லை.

மற்றொன்று டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னார்கள், 800 பேர்கள் ஆனரரி டாக்டர்களாக மருத்துவக் கல்லூரிகளிலும் மருத்துவ மனைகளிலும் நியமிக்கப்பட்டிருப்பதாக. 800 பேர்கள் நியமித்திருக்கிறார்கள், நியாயம்தானா என்ற கருத்தில் கேட்டதாகச் சொன்னார்கள். 800 பேர்கள் அல்ல. இதுவரையில் இந்த வகையில் நியமிக்கப்பட்டிருப்பவர்கள் கல்வித் துறையில் சிவில் ஸர்ஜன்ஸ் மாதம் ரூ. 150-ல் 67 பேர்கள் இருக்கிறார்கள். அதே சிவில் ஸர்ஜன்ஸ் அரசாங்கத்தில் இருந்தால் ரூ. 1,300, ரூ. 1,400 ஆகும். எந்த அளவிற்குப் பணியாற்றுகிறார்கள் என்பது அவரவர்களைப் பொறுத்தது. அது அவரவர்கள் திறமையை, ஆற்றலைப் பொருத்திருக்கிறதே தவிர ரூ. 150 பெற்றுக்கொண்டு சிறந்த முறையில் பணியாற்றுகிறவர்களும் இருக்கிறார்கள். அஸிஸ்டென்ட் சிவில் சர்ஜன்ஸ் 236, அதில் கூட 25 பேர்கள் இடங்கள் நிரப்பப்படவில்லை. மொத்தம் மருத்துவக் கல்வித் துறையில் 278 பேர்கள். மருத்துவ நலத்துறையில் இதுவரையில் மொத்தம் இடம் பெற்றிருப்பவர்கள் ஏறத்தாழ 103 பேர்கள். 46 இடங்கள் நிரப்பப்படவில்லை. மொத்தம் 800 பேர்கள் அல்ல, 335 பேர்கள்தான். இதில் அரசு செலவழிப்பது ரூ. 150 வீதம் 70 பேர்களுக்கு மட்டும்தான். மீதி சம்பளம் இல்லாமல் வேலை செய்கிறார்கள். இது அரசுக்கு லாபம் என்று கூடக் கருதவில்லை. ஆயிரம் ரூபாய் பெற்று டாக்டராக வந்து வேலை செய்வதை விட கல்வித் துறையோடு தொடர்பு கொண்டு பொது மருத்துவ மனைகளில் ஊதியம் இல்லாமல் வேலை செய்யும் 300 பேர்கள் ஆனரரி அஸிஸ்டென்ட் ஸர்ஜன்களாக இருக்கிறார்கள். அதை



எளிதாக என்னால் புறக்கணித்துவிட முடியாது. ஆனரரி ஸர்ஜன்ஸ் தேவை இல்லை என்ற முடிவை, மருத்துவக் கல்வி ஆலோசனைக் குழு (நாஷனல் கவுன்ஸில்) அப்படி ஒரு ஆலோசனை வழங்கியிருக்கிறார்கள். இரண்டு ஆண்டுகள் கழித்து, 1978-79-ல் வேண்டுமானால் அதைக் கைவிடுவது பற்றி அந்தக் குழுவின் கருத்தை ஏற்கத் தயாராகயிருக்கிறோம்.

அடுத்து, 125 பேர்களுக்கு ரீ எம்ப்ளாய்மென்ட் தந்திருப்பதாக சொல்லும்போது டாக்டர் ஹாண்டே போன்றவர்கள் அதன் பட்டியல் கிடைக்குமா என்று பார்த்திருக்க வேண்டும். மாணவர்கள் கோபத்தில் எதை வேண்டுமானாலும் சொல்லலாம். உண்மையில் 5 பேர்களுக்குத்தான் கல்வித் துறையில் பதவி நீட்டிப்பு தரப்பட்டிருக்கிறது. மூன்று பேர்கள் ஆப்தால்மிக் சர்ஜன்ஸ், வெங்கடசாமி, ஆப்ரகாம், இன்னொரு டாக்டர், அவர் பெயர் நினைவுக்கு வரவில்லை—ஸீனியர் டாக்டர்கள்; இன்று ஐ கேம்ப்ஸ் அதிகமாக நடத்த வேண்டியிருப்பதால் பதவி நீட்டிப்பு தரப்பட்டிருக்கிறது. டாக்டர் வெங்கடசாமி அகில உலகம் சுற்றுகிற அளவிற்கு பல்வேறு சமூக நலத் திட்டங்களில் தொடர்புடையவர். ஆகவே நீட்டிப்பு தரப்பட்டிருக்கிறதே தவிர அவர்களுக்கு உதவி செய்வதற்கு அல்ல. அவர்கள் பணி எங்களுக்குத் தேவை என்பதால் தரப்பட்டிருக்கிறது.

பின், டாக்டர் அண்ணாமலை. இன்னும் ஒருவர். ஐந்து பேர்கள் டி.எம்.இ. ஸைடில். ஒருவர் டீன். ஸ்டான்லி காலேஜ் டீன், அவர் பாடம் நடத்தவோ, மருத்துவம் செய்யவோ அல்ல.

டி.எச்.எஸ். ஸைடில் ஒருவர் நீட்டிப்பு பெற்றிருக்கிறார். அவர்கள் ஈ.எஸ்.ஐ. மருத்துவத் துறையில் பயிற்சி பெற்று அவர்கள் ஸூப்பரன்டென்ட்டாக பணியாற்றுகிறார்கள்.

55-க்கு மேலாக 58 வயதுக்குள்ளாக உள்ள இன்னொருவர் மத்திய அரசு சர்வீஸில் இருந்து தொடர்ந்து பணியாற்றுகிறார் இயக்குநராக.

எனவே மாணவர்கள் நினைப்பதுபோல் 125 பேர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள் என்று நினைப்பது தவறு.

தமிழ்நாடு அரசு இதுவரையிலும் எவ்வளவு டாக்டர்களுக்கு வேலை கொடுத்திருக்கிறது என்றால் அரசுத் துறையிலும், உள்ளாட்சித் துறையிலும் சேர்த்து அர்பன் பாமிலி ப்ளானிங் சென்டர்களைச் சேர்த்து 4,900 டாக்டர்கள். இன்னும் மூன்று மாத காலத்தில் 5,000 ஆகும். நான்கு கோடி பதினைந்து லட்சம் மக்கள் உள்ள இடத்தில் அரசாங்கச் செலவில் எம்.பி.பி.எஸ். படித்தவர்கள்—பி.ஐ.எம்.; ஆர்.ஐ.எம்.பி. சேர்த்தல்ல, கிராம மருத்துவர்கள் சேர்த்தல்ல, 5,000 எம்.பி.பி.எஸ். டாக்டர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. அகில இந்திய புள்ளிவிவரத்தை எடுத்துப் பார்த்தால் 8,300 பேர்களுக்கு ஒரு டாக்டர் வேண்டும். இன்னும் ஆறாயிரம், பத்தாயிரம் டாக்டர்கள் வெளியில் இருப்பார்கள். டாக்டர் ஹாண்டே போன்றவர்கள் என் கணக்கில் வரவில்லை. 8,300 பேர்களுக்கு ஒரு டாக்டர் வீதம் என்று சொன்னால், தமிழக அரசின் மொத்த வருமானத்தில் 9 சதவிகிதம், 10 சதவிகிதம் செலவு செய்து திட்டங்களை அரசு நிறைவேற்றிக் கொண்டு வருகிறது. மற்றொன்று. ஆரம்பச் சுகாதார நிலையங்களில் மக்களுக்கு இருக்கிற வசதி வாய்ப்புகளைப் பெருக்க வேண்டும், தேர்ட் டாக்டர் நியமிக்கலாம் என்று சொன்னார்கள். மத்திய அரசின் உறுதுணை பெற்று தேர்ட் டாக்டரை நியமிக்கலாமே என்று சொன்னார்கள். மத்திய அரசை மன்றாடி கேட்டுப் பார்த்தோம். இலட்சம் மக்களுக்கு மேல் உள்ளவற்றில் இரண்டு பேர்களை நியமிக்கலாம், ஒருவருக்கு அவர்கள் ஒத்துக்கொண்டால் நாம் ஒருவரை ஏற்றுக்கொள்ளலாம் என்றால் அதற்கு மத்திய அரசு ஒத்துக்கொள்ளவில்லை.

இந்த ஆண்டு நூறு இடங்களில் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் அமைப்பது என்றால் ரிக்கரிங் எக்ஸ்பென்டிச்சர் வருகிறது. மருந்து தரவேண்டும். அடுத்த ஆண்டு இன்னும் நூறு இடங்களில் தரவேண்டும். நூறு இடங்களுக்கு நூறு டாக்டர்கள் நியமிக்க வேண்டும் என்பதை ஒத்துக்கொண்டிருக்கிறோம் கொள்கை அடிப்படையில். ஆக, ஆனரரி டாக்டர்ஸ் 800 பேர்கள் அல்ல, 300 பேர்கள். 55 வயதுக்கு மேல் பணியாற்றுகிறவர்கள் 125 பேர்கள் அல்ல, 6 அல்லது 7 பேர்கள். புதிய வேலைவாய்ப்புத் தரப்படுகிறவர்கள் இந்த ஆண்டு 350. இந்த மாநில அரசின் பொருளாதார அடிப்படையில் ஆயிரம் பேர்கள் பயிற்சி பெற்று





வந்தால் அவர்களுக்கு எல்லாம் வேலைவாய்ப்பு அளிப்பது என்பது மருத்துவத் துறையில் என்றல்ல எந்தத் துறையிலும் முடியாத காரியம்.

செவிலியர்கள் பயிற்சி பெற்று பத்தாண்டுகள் வேலையில்லாமல் இருந்தார்கள். இந்தப் பயிற்சியைக் குறைத்து கூடுமான வரையில் ஏற்கனவே இருந்தவர்களுக்கு வேலை கிடைக்க வழி செய்தோம். ஆயிரம் மாணவர்கள் என்பதை சிறிது குறைத்துச் சேர்க்கலாம் என்று இந்த அவையில் மூன்று முறை சொல்லிவிட்டேன். எதிர்க் கட்சித் தலைவர்கள் மாணவர்களைச் சேர்க்கும்போது—அரசியல் கண்ணோட்டத்தில் அரசாங்கம் அதிகமாகச் சேர்ப்பது அவர்களுக்கு லாபம் தருகிறது, வேலை கிடைக்காத நிலை ஏற்படும்போது அது அரசின் தவறாகத் தெரிகிறது.

அகில இந்தியாவில் 13,000 பேர்களுக்கு மேல் டாக்டர்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள் என்று மத்திய அமைச்சர் அவர்கள் தெரிவிக்கிறார்கள். இது இந்தியா முழுவதிலும் உள்ள பிரச்னை. ஆனால் டாக்டர்கள் தங்கள் சொந்த அறிவில் நம்பிக்கை வைக்க வேண்டும். அவர்கள் தாங்களாகவே தொழில் செய்து நல்ல வருமானத்தைத் தேடிக்கொள்ள வேண்டும். போஸ்ட் க்ராஜுவேட்ஸ்க்கு வழங்கப்படுகிற உதவித் தொகை ஒரு கொள்கை அடிப்படையில் வழங்கப்படுகிறது. ஐந்து ஆண்டுகளுக்கு மேல் வேலையில் இருந்து சிறப்பு படிப்பு படிக்கிறவர்களுக்கு முழுச் சம்பளமும் தரப்படுகிறது. 500 பேர்களில் 202 பேர்களுக்கு முழுச் சம்பளமும் தரப்படுகிறது. இவர்கள் சொல்கிற முறையில் பார்த்தால் பத்து ஆண்டுகள் வேலையில் இருப்பவர்களுக்குக் கூட பாதிச் சம்பளம் தான் கிடைக்கும். எட்டு ஆண்டு, பத்தாண்டுகள் வேலையில் உள்ளவர்களுக்கு முன் உரிமை தரவேண்டும் என்ற அடிப்படையில் அவர்களுக்கு முழுச் சம்பளம் தருகிறோம். அதற்கு ஏராளமான தொகை செலவாகிறது. சிலவற்றிற்கு, டி.பி.-ஐ எடுத்துக் கொண்டால் யாரும் வரமாட்டார்கள். ரேடியோ டயகனோஸிஸ் பகுதிக்கு வரமாட்டார்கள். அதற்கு ஸ்டைபன்ட் ஏராளமாக இருக்கிறது. அவர்கள் ஸ்டைபன்ட் பெற அவசியம் இல்லாமல் வேலையில் இருப்பவர்கள் வருவதால் முழுச் சம்பளம் அவர்கள் பெறுகிறார்கள்.

இரண்டாயிரம் பேர்கள் இருந்தால் 100, 150 பேர்களுக்குத்தான் இடம் கிடைக்கும். 150 பேர்களுக்கு ஸ்டைபன்ட் கொடுப்பதால் பிரச்னை தீர்ந்துவிடாது. அது வரவேற்கத்தக்கதல்ல.

இவ்வளவு விவரமாக இதற்கான பதிலைச் சொன்ன பிறகு— அரசு நல்லெண்ணத்தோடு மனை மருத்துவர்களாக இருப்பவர் களுக்கு மேலும் 25 ரூபாய் உதவித்தொகையை உயர்த்திக் கொடுக்க அரசு இசையும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்த பிறகு—மாணவர்கள் வேலைநிறுத்தத்தை கைவிட, உடனடியாக அவர்கள் பெறவேண்டிய முழுப் பயிற்சியைப் பெற எதிர்க்கட்சித் தலைவர்களும் உதவவேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு அவர்கள் நல்லெண்ணத்தைக் காட்டும் வகையில்—அவர்கள் நல்லெண்ணத்தை நம்பிக் கொண்டிருக்கிறேன்—இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தை வலியுறுத்தமாட்டார்கள் என்று எதிர்பார்த்து அப்படி வலியுறுத்த அவசியம் இல்லை என்பதையும் தங்களுக்குத் தெரிவித்துக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-00)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் கொடுத்த நீண்ட விளக்கத்திற்குப் பிறகு, இந்தப் பிரச்னை குறித்து விவாதிக்க இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டிய அவசியம் இல்லை என்ற காரணத்தால், இதற்கு அனுமதி மறுக்கிறேன்.

## 5. அமைச்சரின் அறிக்கை.

**ஒரு துணை வினாவிற்கு 28—2—1975-ம் நாளன்று தாம் அறிவித்த விடையைச் சரி செய்து கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் அளிக்கும் அறிக்கை.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விதி 82-எ கீழ் மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் 28—2—1975-ம் நாளன்று 101-ஆம் எண் வினாவிற்கு, திரு. ஆர். பொன்னப்ப நாடார் அவர்களால் எழுப்பப்பட்ட துணை வினாவிற்கு அளிக்கப் பட்ட விடையைச் சரி செய்து, இங்கே ஒரு அறிக்கை அளிப்பார்கள்.





**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, 28—2—1975-ம் நாளன்று 101-ம் எண் உடுக் குறியிட்ட சட்டப் பேரவை வினாவைத் தொடர்ந்து திரு. பொன்னப்ப நாடார், அவர்கள் கேட்ட துணை வினாவிற்கு நான் பதிலளிக்கும்போது கீழ்க்கண்டவாறு கூறியுள்ளேன்.

"நாலைந்து ஆண்டு காலத்திற்கு முன்னால் இந்த போர்டு இங்கு ஒரு தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்தை அமைக்க வேண்டு மென்ற கருத்து மத்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டு பல்கலைக் கழக மானியக் குழுவுக்கும் அனுப்பப்பட்டது. பொறியியல் கல்லூரி, தொழில் நுட்பப் பணிகள் முழுமையும் இந்தப் பல்கலைக் கழகத்தின் கீழ் வந்தால்தான் எல்லாத் தொழில் நுட்ப வல்லுநர்களும், பொறியியல் வல்லுநர்களும் ஈடுபாட்டு அதிகக் கவனம் செலுத்த முடியும் என்று எடுத்துச் சொல்லப்பட்டது. ஆனால் யு.ஜி.சி. ஒரு கல்லூரியை மட்டும் அந்தப் பல்கலைக் கழகத்தின் கீழ் எடுத்துக் கொள்ளுங்கள், மற்றைய கல்லூரிகளை அபிலியேட் செய்யக் கூடாது என்று சொல்லிற்று. ஒரு பொறியியல் கல்லூரியை மட்டும் இந்தப் பல்கலைக் கழகத்தின் கீழ் வைத்துக் கொண்டு மற்றைய பொறியியல் கல்லூரிகள் எல்லாம் சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இருந்தால் அதற்கும் இதற்கும் வேறு பாடுகள் வரும், இதைப்பற்றி பலமுறை வற்புறுத்தி எடுத்துச் சொல்லியும், மத்திய அரசும், யு.ஜி.சி.யும் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகவே. இப்போதைக்கு இண்டியில் இருக்கும் பொறியியல் கல்லூரியை தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்தில் வைத்துக் கொண்டு எதிர்காலத்தில் மற்றவற்றை இணைத்துக் கொள்ளலாம் என்ற அளவுக்கு அதற்காவது அனுமதி தாருங்கள் என்று கேட்கப் பட்டிருக்கிறது. அதுபற்றிய பதில் விரைவில் எதிர்பார்க்கப்படு கிறது" என்று குறிப்பிட்டேன். நான் இப்படி குறிப்பிடுவதற்கு முன்னாலேயே ஒரு தகவல் வந்து இருக்கிறது. அது என் பார்வைக்கு வரவில்லை. அதாவது, "தமிழ் நாட்டில் ஒற்றை வகை (யுனிடரி டைப்) தொழில் நுட்பப் பல்கலைக்கழகம் ஒன்று தொடங்க கொள்கை அளவில் ஒப்புதல் அளித்து 1975-ம் ஆண்டு ஜனவரித் திங்களில் பல்கலைக் கழக மானியக் குழுவிடமிருந்து இவ்வரசுக்குப் பதில் வந்துள்ளது. மேலும் சென்னை பல்கலைக் கழகத்தைச் சார்ந்த கீழ்க்கண்ட நிறுவனங்களை புதிய பல்கலைக் கழகத்துடன் இணைக்க வேண்டும் என்றும் வற்புறுத்தியுள்ளது.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1975 ஏப்ரல் 1

இராசயன நுட்பவியல் துறை, தோல் நுட்பவியல் துறை, நெசவு நுட்பவியல் துறை, சிற்பம் மற்றும் நகரமைப்பு கலைத் துறை, ஆகியவற்றையும் அதோடு இணைத்து பல்கலைக் கழகம் துவங்க கொள்கையளவில் ஒப்புக்கொண்டுள்ளது.

அது குறித்து சென்னைப் பல்கலைக்கழகத்தின் கருத்து அறிய, அதன் ஒப்புதலைக் கோரி இவ்வரசு எழுதியுள்ளது" என்று மாற்றிக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

## 6. 1975-76-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

### (அ) நிதிக் கோரிக்கை எண். 15—காவல் துறை.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன் :—

"நிதிக் கோரிக்கை எண் 15—காவல் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 26,47,68,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

THIRU B. VENKATASWAMY : Sir, to discuss about the increase in the number of crimes in the State, I move—

"That the allotment of Rs. 26,47,68,000 under Demand No. 15—Police—be reduced by Rs. 100."

THIRU K. T. K. TANGAMANI : Sir, to discuss about the cases of excesses in police stations manned especially by new recruits, I move—

"That the allotment of Rs. 26,47,68,000 under Demand No. 15—Police—be reduced by Rs. 100."

THIRU N. DENNIS: Sir, to discuss about the political interference in the Police administration, I move—

"That the allotment of Rs. 26,47,68,000 under Demand No. 15—Police—be reduced by Rs. 100."



1975 ஏப்ரல் 1]

**திரு. க. உரா. எட்மண்ட்:** தலைவரவர்களே, தமிழ் நாட்டின் பல பகுதிகளிலும் அண்ணா தி.மு.க. தோழர்கள் தொடர்ந்து மிகுந்த அளவில் தாக்கப்படுவது பற்றி எடுத்துக் கூற—

"நிதிக் கோரிக்கை எண் 15—காவல் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 26,47,68,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. எம். சுரேந்திரன்:** தலைவரவர்களே, குற்ற நிரூபண வேலைகளின் ஒரு பகுதியாக போலீஸ் நிலையங்களில் ஆட்களை அடித்து துன்புறுத்தும் முறையை மாற்றியமைப்பது பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 15—காவல் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 26,47,68,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

### (ஆ) நிதிக் கோரிக்கை எண் 16—தீயணைப்புப் பணிகள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை எண் 16—தீயணைப்புப் பணிகள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,14,90,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவரவர்களே, ஒவ்வொரு வட்டத் தலைநகரிலும் தீயணைப்பு நிலையங்கள் துவக்கவேண்டிய அவசியம்பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 16—தீயணைப்புப் பணிகள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,14,90,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. கே. என். குமாரசாமி:** தலைவரவர்களே, பல்லடத்தில் ஒரு தீயணைக்கும் படை அமைப்பது பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 16—தீயணைப்புப் பணிகள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,14,90,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

[1975 ஏப்ரல் 1

THIRU B. VENKATASWAMY : Sir, to discuss about the need for the application of labour legislation for the staff of the fire service units in the State, I move—

"That the allotment of Rs. 2,14,90,000 under Demand No. 16—Fire Services—be reduced by Rs. 100."

THIRU K. T. K. TANGAMANI : Sir, to discuss the need to provide Fire Service Station with all the equipments, I move—

"That the allotment of Rs. 2,14,90,000 under Demand No. 16—Fire Services—be reduced by Rs. 100."

THIRU J. JAMES : Sir, to discuss the necessity to start a Fire Service Station at Kulasekaram in Kanyakumari district to protect the Government and other Rubber Plantations from sudden outbreak of fire in the forest, I move—

"That the allotment of Rs. 2,14,90,000 under Demand No. 16—Fire Services—be reduced by Rs. 100.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் அவை முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, காவல் துறை, தீயணைப்புப் படைகள் ஆகிய துறைகளைப் பற்றிய ஆய்வுரைகள்@ அவைமுன் வைக்கப்பட்டுள்ளன. விவாதத்திற்குப் பிறகு, விவாதங்களுக்கு பதில் நான் அளிப்பேன் என்று கூறி, விவாதத்திற்கு அவற்றை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கோவை செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த போலீஸ் மானியத்தில் எனது கட்சியின் சார்பில் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நேரம் இப்போது 11 மணி ஆகிறது. பேசுகிற உறுப்பினர்கள் சுருக்கமாகப் பேச்சை முடித்துக்கொள்ள வேண்டும். 25 நிமிடங்களில் உங்கள் பேச்சை முடித்துக் கொள்ளுங்கள். உங்கள் தலைவர் கேட்டது அப்படித் தான்.

---

@ 347-387-ம் பக்கங்களில் இணைப்புகள் I & II ஆக அச்சிடப் பட்டுள்ளன.



1975 ஏப்ரல் 1]

**திரு. கோவை செழியன் :** நான் 25 நிமிடங்களில் முடிப்பதைப் பற்றி ஆட்சேபணை இல்லை. என்னை 5 நிமிடம்கூட பேசவிடாமல் குறுக்கிட்டால் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** குறுக்கீடுகளையும் சேர்த்துத் தான் 25 நிமிடம் என்று சொல்லியிருக்கிறார்கள். திரு. எட்மண்ட் அவர்கள் அப்படித்தான் கேட்டுக் கொண்டார்கள்.

**திரு. கோவை செழியன் :** நான் எந்தவிதமான குறுக்கீடுகளுக்கும் இடம் கொடுக்கத் தயாராக இல்லை. நான் யாருக்கும் யீல்ட் செய்யப் போவதில்லை.

இந்த மானியக் கோரிக்கைகள்மீது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கொடுக்கப்பட்ட வெட்டுத் தீர்மானங்களை ஆதரிக்கிற வகையில், இந்த மன்றத்திலே சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

போலீஸ் மானியத்தைப் பொறுத்தவரையிலும், இந்த நாட்டிலே காவல் துறை—நீதித் துறை எப்படி தனியாக இயங்குகிறதோ அதேபோல் தனியாக இயங்க வேண்டும் என்பது என்னைப் போன்றவர்களின் கருத்தாகும். அரசாங்க அதிகாரத்தின்கீழ் போலீஸ் துறை இயங்க வேண்டிய நிலை இருந்தாலும், இன்றைக்கு ஆழ்ந்து கவனிக்கிறபோது, அந்தக் காவல் துறை எதற்குப் பயன் படுகிறது என்று ஆராய்ந்து பார்க்கிறபோது, ஒரு அடானமஸ் பாடியாக இருந்தால் பரவாயில்லை என்று சொல்லும்படி இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு நம்முடைய தமிழ் நாட்டைப் பொறுத்தவரையிலும், போலீஸ் நிர்வாகம் என்பது ஆளும் கட்சிக்குச் சாதகமாக பணியாற்றுவதற்கும், ஆட்சியில் இருக்கின்றவர்களின் சொற்களைக் கேட்டு அந்தக் கட்சியை வளர்ப்பதற்காகவும்தான் அந்தத் துறை பயன்படுகிறதே தவிர இது ஒரு தன்னிச்சையாக மக்களைப் பாதுகாப்பதற்கும், மக்களுடைய குறைகளைப் போக்குவதற்கும் அந்தத் துறை இல்லை என்பதை நான் முதலிலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

போலீஸ் துறை எந்தக் கட்சிக்காரர்களாக இருந்தாலும், யாராக இருந்தாலும், கவலையில்லாமல் தன்னிச்சையாக இயங்க வேண்டும். ஆனால் இன்றைக்கு அப்படி தன்னிச்சையாக இயங்கவில்லை, ஆளும் கட்சிக்காரர்கள் சொல்கிறபடி, ஆடுகிற மாதிரி

இருக்கிறதே தவிர, தன்னிச்சையாக எந்த முடிவையும் அவர்கள் எடுக்கவில்லை என்பதற்கு பல ஆதாரங்கள் நான் வைத்து இருக்கிறேன்.

பொதுவாகவே, போலீஸ் துறையிலே அதிகமாக யாரும் ஈடுபடாமல்தான் அமைச்சர்களும், மற்றவர்களும் இருந்து வந்தார்கள். ஆனால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஏற்பட்டதற்குப் பின்னாலே இந்தக் காவல் துறையை எவ்வளவு கேவலமாக மதிப்பிட்டு, அவர்கள் எவ்வளவு கேவலமாக நடத்துகிறார்கள் என்பதை நான் இந்த மன்றத்திலே பல முறை பேசியிருக்கிறேன். நான் இந்த மன்றத்தில் ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தபோது, முதலமைச்சர் அவர்கள், அல்லது மந்திரி சபையில் இருப்பவர்கள் சொல்கிற பேச்சைக் கேட்காத காவல் துறை அதிகாரிகள் எப்படி அவமானப்படுத்தப்பட்டார்கள், எப்படி பழி வாங்கப்பட்டார்கள், எப்படி அவர்கள் ஒரே நாளில் 3 அல்லது 4 ஊர்களுக்கு மாற்றப்பட்டார்கள், எப்படி அவர்கள் சித்தரவதை செய்யப்பட்டார்கள் என்பதை தெளிவாகச் சொன்னேன். ஆனால் அதற்குப் பிறகு ஏதாவது மாற்றங்கள் ஏற்பட்டு இருக்கிறதா என்றால் எந்த விதமான மாற்றமும் இல்லை. இன்னும் ஆளுங்கட்சியின் தலையீடு அதிகமாகி, ஆட்சியில் இருக்கின்றவர்கள் தலையீடு அதிகமாகி, இன்று காவல் துறை தி.மு.க.-வின் அங்கமாக மாறிவிட்டது. அப்படி யாராவது அதை மீறி தன்னிச்சையாக ஈடுபட்டு பணியாற்றுவார்களானால் அந்த அதிகாரிகள் பழி வாங்கப்படுகிறார்கள். அந்த அதிகாரிகளின்மீது என்ன என்ன கொடுமையான தண்டனைத் தர முடியுமோ அந்த அளவுக்கு தண்டனையைத் தந்திருக்கிறார்கள். அவர்கள் தன்னிச்சையாக இயங்க முடியவில்லை. பல ஆதாரங்களை வைத்துக் கொண்டுதான் பேசுகிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு இடத்தில் தகராறு நடைபெறுகிறது என்றால் அங்கே சென்று அவர்கள் இஷ்டப்படி உண்மையான குற்றவாளி யார் என்று கண்டுபிடிக்க அவர்களால் முடியவில்லை. அவர்களுக்கு கண்டுபிடிக்க வேண்டும் என்ற எண்ணமிருந்தாலும் அவர்களால் முடிவதில்லை. எவ்வளவு பெரிய கேஸ்களை சிக்கலான வழக்குகளைக் கண்டுபிடித்த டிப்பார்ட்மெண்டு இன்றைக்கு ஏன் இப்படி ஒன்றும் செய்ய முடியாமல் கைகள் கட்டப்பட்டிருக்கின்றன என்பதை என்னால்





புரிந்து கொள்ள முடியவில்லை. எவ்வளவு பெரிய சிக்கலான கேஸ்களையெல்லாம் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஸ்காட்லாந்து யார்ட் போலீஸ் துறையைவிட நம் போலீஸ் துறை மிகவும் திறமையானது என்று ஒரு காலத்தில் பாராட்டப்பட்ட துறை ஏன் இந்தவிதமான வழக்குகளைக் கண்டுபிடிக்க முடியாத நிர்ப்பந்தத்தில் இருக்கிறார்கள் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

நாகப்பட்டினம் கள்ள நோட் வழக்கு, கோவை கள்ள நோட் வழக்கு, இவைகளையெல்லாம் திறமையாகக் கண்டுபிடித்தவர்கள் பல கொலைக் குற்றங்களைக் கண்டுபிடிக்க முடியாது என்று சொல்லப்பட்ட வழக்குகளையெல்லாம் எவ்வளவு திறமையாக இருந்து மாறுவேஷம் போட்டுச் சென்று கண்டுபிடித்தார்கள் என்று பெருமையாகச் சொல்லியிருக்கிறோம். அப்பேர்ப்பட்ட ஒரு போலீஸ் துறை இன்றைக்கு ஒரு சின்ன வழக்கைக்கூட கண்டுபிடிக்க முடியாமல் சோர்ந்து போய் இருக்கிறதே, என்ன காரணம்? இதை தயவு செய்து நீங்கள் சிந்தித்துப் பார்த்தால் இதில் ஆட்சியின் தலையீடு ஒவ்வொரு அணு அணுவாக ஒவ்வொரு நடவடிக்கையிலும் வீழ்ந்து கொண்டிருக்கிற காரணத்தால் போலீஸ் துறை போலீஸ் துறையாக இல்லாமல் அது எடுப்பார் கை பிள்ளையாகிவிட்ட நிலைமைக்கு வந்திருக்கிறது.

உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமென்றால் ஒரு தகராறு நடைபெறுகிறதென்றால் அதன் உண்மையான குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆளும் கட்சிக்காரர்கள் இரண்டு பக்கமும் தகராறு செய்தால் அந்த வழக்குகள் நீதிமன்றத்திற்குச் செல்வதில்லை. பல இடங்களில் வழக்கு பதிவு செய்யப்படுவதில்லை. அதற்கு ஆதாரங்கள் இருக்கின்றன. அதே நேரத்தில் எதிர் கட்சிக்காரர்கள் தவறே செய்யாமல் இருந்தும் இந்த ஆட்சியினரால் காவல் துறையைப் பயன்படுத்தி பல வழக்குகள் போடப்பட்டு அந்த வழக்குகள் நீதிமன்றங்களால் தள்ளுபடி செய்யப்பட்டது மட்டுமல்லாமல் இந்த வழக்கு வேண்டுமென்றே தயார் செய்யப்பட்டது. 'பேப்ரிகேட்' செய்யப்பட்டது என்று நீதிபதிகளால் தீர்ப்புச் சொல்லப்பட்டிருக்கிறது என்றால் இன்று ஆட்சியில் இருக்கின்றவர்கள் அவமானப்பட வேண்டாமா, அதற்காக வெட்கப்பட வேண்டாமா, அதற்கு யார் பொறுப்பாளியாக இருக்கிறார்களோ அவர் அதற்காக ராஜினாமாச் செய்திருக்க வேண்டாமா?

இன்றைக்கு புள்ளி விவரப்படி 60 சதவிகிதம் 'பிராசிக்கியூஷன் லெயிட் ஆன் பொலிட்டிகல் பார்ட்டிஸ்' அரசியல் காழ்ப்புணர்ச்சியை வைத்துக் கொண்டு ஒரு கட்சி பிடிக்கவில்லையென்றால், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பிடிக்கவில்லையென்றால், காங்கிரஸ் கட்சி பிடிக்கவில்லையென்றால், கம்யூனிஸ்ட் கட்சி பிடிக்கவில்லையென்றால், ஆளும் கட்சியிலிருந்து வேறு ஒரு கட்சிக்குப் போனால், உடனே அவர்கள்மீது என்ன வழக்குப் போடலாம், ஒருவரைப் பிடிக்கவில்லையென்றால் போலீஸைக் கூப்பிட்டு வழக்குப் போடுவது என்பது இன்றைக்கு மிகவும் சாதாரணமாகி விட்டது. அந்தக் காலத்தில் சர்வாதிகாரி ஆட்சியில் அப்படியெல்லாம் இருந்தது, என்பதைப் பார்த்தோம். ஜனநாயக ஆட்சியில் இப்படி நடைபெறுகிறது என்று எண்ணுகிறபோது வேதனையாக இருக்கிறது. இப்படிப் போட்ட கேஸ்களில் 60 சதவிகிதம் வழக்கு அரசியல் காரணமாக ஜோடிக்கப்பட்ட கேஸ் என்று தீர்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக 51 சதவிகிதம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின்மீது இவர்கள் வழக்குப் போட்டிருக்கிறார்கள். அந்த வழக்குகள் எல்லாம் பொய் என்று தீர்ப்பு அளிக்கப் பட்டிருக்கிறது.

சேலம் மாவட்டத்தில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் அமைப்பாளர் குஞ்சு கவுண்டர்மீது ஒரு கொலை வழக்குப் போட்டார்கள். அதில் ஒரு தீர்ப்பு சொல்லியிருக்கிறார்கள். போலீஸ்காரர்கள் வேண்டுமென்றே இந்த கேஸை வலிந்து போட்டிருக்கிறார்கள் என்று. இந்தத் தீர்ப்பைப் பார்த்ததற்குப் பின்னால் அமைச்சராக இருக்கின்றவர் ராஜினாமாச் செய்திருக்க வேண்டாமா. தன்னுடைய இலாகாவிற்கு இழுக்கு ஏற்பட்டிருக்கிறது என்று துடித்திருக்க வேண்டாமா? இல்லை.

அது மட்டுமல்ல. ஒரு சட்டமன்ற உறுப்பினர் ஜெயம்கொண்டான் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்மீது ஒரு வழக்குப் போட்டார்கள், அவர் ஒரு பெண்ணைக் கற்பழித்து விட்டார் என்று. நீதி மன்றத்தில் வழக்கு தவறு என்று சொன்னது மட்டுமல்லாமல் ஒரு குறிப்புச் சொன்னார்கள். கற்பழிப்புச் சம்பந்தமான வழக்கில் டாக்டர் கற்பழிக்கப்படவில்லை யென்று சொல்லியிருக்கிறார்கள் என்று நோட் எழுதி வைத்திருக்கிறார்கள். இந்த வழக்கு எப்போது போடப்பட்டது





ன்றால் ஆறு மாதங்களுக்குப் பிறகு, ஏன் போட்டார்கள் ன்றால் அந்த உறுப்பினர் அவர்களுடைய கட்சியிலிருந்து தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்த காரணத்தால். ஆகவே தங்களுக்கு பிடிக்கவில்லை, தங்களுக்கு பார் மீது கோபம் வருகிறதோ அவர்கள் மீது வேண்டுமென்றே ழக்குகள் போடுகிறார்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அவர் திராவிட முன்னேற்றக் கழகத்திலிருக்கும்போதே அவர் மீது புகார் தரப்பட்டு புலன் விசாரணை நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதற்குப் பிறகுதான் அவர் வேறு கட்சிக்குப் போனார். தி.மு.க. எம்.எல்.ஏ.-யாக இருந்தபோது வழக்கு பதிவு செய்யப்பட்டது. புகார் கொடுத்தவர்கள் திடீரென்று காணாமல் போய்விட்டார்கள், கடத்திச் செல்லப்பட்டு விட்டார்கள். ஆகவேதான், உடனே நடவடிக்கை எடுக்கப்படவில்லை. தி.மு.க. எம்.எல்,ஏ,-யாக இருந்தபோதே வழக்கு பதிவு செய்யப்பட்டிருந்தது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. அ. சின்னசாமி:** யாரையும் கடத்திச் செல்லவில்லை. போலீசார் வேண்டுமென்றே மறைத்து வைத்திருந்தார்கள். நான் தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றக் கழகத்திற்குச் சென்றுவிட்டேன் என்பதற்காக என் மீது கேஸ் ஜோடிக்க வேண்டும், என்னை பயமுறுத்த வேண்டுமென்ற காரணத்தால் மறைத்து வைத்தார்களே தவிர. . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** வழக்கு முடிந்து விட்டது. அந்த விவரங்களையெல்லாம் ஆராய விரும்பவில்லை. நண்பர் செழியன் அவர்கள், அவர் திராவிட முன்னேற்றக் கழகத்தை விட்டுப் போனதற்குப் பிறகு வழக்கு பதிவு செய்யப்பட்டதாகச் சொன்னார். அதைத்தான் நான் மறுக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்தபோது, எல்லோரும் அம்மையார் உள்பட திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்த போது அப்படி ஒரு புகார் வந்தது. அவர் உள்பட அனைவரையும் சேர்த்து ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது. பதிவு செய்யப் பட்ட வழக்கை வாபஸ் பெற வேண்டுமென்று என்னிடம் வலியுறுத்தப்பட்டது. அதற்கு நான் இணக்கம் தெரிவிக்கவில்லை. அதற்குப் பிறகு நடந்தவைகள் . . .

[1975 ஏப்ரல் 1

**திரு. அ. சின்னசாமி :** எப்.ஐ.ஆரில் என் பெயர் இல்லை. திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து வந்த பிறகு என் பெயரை அதில் சேர்த்திருக்கிறார்கள். எட்டு மாத காலமாக தேடிப்பிடித்து ஜெயம்கொண்டான் சின்னசாமி காணமல் போய் எங்கிருந்து பிடித்து வந்தார்கள்? எதிர்க்கட்சிக்காரனை நசுக்க வேண்டுமென்று முதலமைச்சர் திட்டமிட்டு இவ்வாறு செய்திருக்கிறார்கள் என்று குற்றம் சாட்டுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** போலீஸ் ஸ்டேஷனில் கொடுக்கப்பட்ட புகாரில் வேளாங்கண்ணிக்குச் சென்ற ஒரு ஹரிஜன கிறிஸ்துவப் பெண் ஒரு ஹோட்டலில் இருந்தபோது இந்தச் சம்பவம் நடைபெற்றதாகக் கூறப்பட்டிருக்கிறது. இப்படி ஒரு சம்பவம் நடைபெற்றபோது ஒரு எம்.எல்.ஏ. அடுத்த அறையில் இருந்ததாகப் புகார் கொடுத்தார்கள். போலீஸ் விசாரித்ததற்குப் பிறகு இந்த எம்.எல்.ஏ. இருந்தார் என்று சொன்னார்கள். பின் வழக்கு பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணை நடைபெற்றது. தி.மு.க.-வில் இருந்தபோதே புலன் விசாரணை ஆரம்பமாகிவிட்டது.

**திரு. அ. சின்னசாமி :** 16 ஆம் தேதி கேஸ் தொடரப்பட்டது. அன்று காலையிலேதான் தி.மு.க. எம்.எல்.ஏ. என்று சொல்லுகிறார்கள். 17 ஆம் தேதி கோர்ட்டுக்கு நோட்டீஸ் அனுப்பப்படுகிறது. அந்த இடத்தில் தி.மு.க. எம்.எல்.ஏ. சின்னசாமி என்று குறிப்பிடவில்லை. 8 மாதங்களுக்குப் பிறகு அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக என் பெயர் சேர்க்கப்பட்டு கேஸ் ஜோடிக்கப்பட்டது என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நான் சொல்ல வருவது எல்லாம் அந்த வழக்கு என்ன ஆயிற்று, அதன் காரணமாக நடந்தவை உண்மையா அல்லவா என்பது அல்ல. ஒரு புகார் போலீஸ் ஸ்டேஷனில் கொடுக்கிறார்கள், கற்பழிக்கப்பட்டது என்று. போலீஸ் ஸ்டேஷனில் அந்தப் புகாரை எடுத்துக் கொண்டார்கள். அதை எடுத்துக் கொள்ளாமல் இருந்திருந்தால் எதிர்க்கட்சிக்காரர்கள் பேசுவது வேறுவிதமாக இருக்கும். எதற்காகச் சொல்லுகிறேன் என்றால் அவர் தி.மு.க.-வில் இருந்தபோதே வழக்கு புலன் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது என்பதுதான்.



1975 ஏப்ரல் 1]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் பேசும்பொழுது சொல்லுங்கள்.

**திரு. பெ. சீனிவாசன் :** இட் இஸ் எ குவெஸ்டியன் ஆப் பிரிவிலெஜ்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒரு உறுப்பினருக்காக இன்னொருவர் எழுந்திருக்கக் கூடாது.

**திரு. பெ. சீனிவாசன் :** எ மெம்பர் ஹேஸ் பீன் அக்கியூஸ்டு. சட்டமன்ற உறுப்பினர் மீது வழக்கு போட்டிருக்கிறார்கள். அவர் பேசுவதற்கு உரிமை கொடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவர் சொல்ல வேண்டியதற்கு இடம் கொடுத்தாகிவிட்டது. சொல்ல வேண்டிய விளக்கத்தையும் சொல்லிவிட்டார்.

**திரு. கோவை செழியன் :** கற்பழிப்பு கேஸ் சம்பந்தமாக முதலில் செய்ய வேண்டியது டாக்டர் சர்டிபிகேட் வாங்கியிருக்க வேண்டும். டாக்டர் சர்ட்டிபிகேட் வாங்காமல் வழக்குத் தொடருகிறார்கள் என்றால் என்ன பொருள்? டாக்டர் சர்ட்டிபிகேட் இல்லாமல் எவனாவது கோர்ட்டுக்குப் போவானா? இவ்வளவு பெரிய அரசாங்கம் லீகல் அட்வைசரை வைத்துக் கொண்டு கற்பழிப்பு கேசில் டாக்டர் சர்ட்டிபிகேட் கூட இல்லாமல் போகிறார்கள் என்றால் இது அரசியல் காழ்ப்புணர்ச்சியால் செய்யப்படுகின்ற காரியங்கள் இல்லையா? போலீஸ் டிபார்ட்மெண்ட் இந்தக் காவல் துறையினரை பயமுறுத்துகிறார்கள்.

திரு. வெங்கா அவர்கள் சட்ட மன்ற உறுப்பினர் விடுதிக்கு முன்னால் தாக்கப்பட்டு இருக்கிறார். இவ்வளவு பெரிய போலீஸ் டிபார்ட்மெண்டால் அவரைத் தாக்கியவர்களைப் பிடிக்க முடியாமல் போய்விட்டது. பிடிக்க முடியவில்லை என்றால் அந்தப் போலீஸ் ராஜினாமா செய்துவிட்டு போக வேண்டாமா. எவ்வளவு பெரிய வழக்குகளை எல்லாம் கண்டுபிடிக்கிறவர்கள் இதை ஏன் கண்டுபிடிக்க முடியவில்லை.

எனவே, ஆளும் கட்சிக்கு தாளம் போடுகிற அதிகாரிகளை வைத்துக் கொண்டு வேண்டும் என்றே எதிர்க் கட்சியினருக்கு தொல்லை கொடுப்பீர்கள் என்றால் அது எவ்வளவு நாட்களுக்கு முடியும் என்று கேட்கிறேன்.

யார் யார் தாளம் போடுகிறார்களோ, யார் எல்லாம் இசைந்து போகிறார்களோ அவர்களை எல்லாம் 10 வருஷம் என்றாலும் 7 வருஷம் என்றாலும் மாற்றுவது கிடையாது. அங்கேயே வைத்திருக்கிறார்கள். ஆனால் நேர்மையாக செயல்படுகிறவர்களை 3 மாதத்தில், 4 மாதத்தில் தூக்கி விட்டு விடுகிறார்கள். எவ்வளவு நாளைக்கு இது முடியும்? இன்னும் 6 மாதம் அல்லது 9 மாதம் இல்லாவிட்டால் ஒரு வருஷம். அதற்கு மேல் என்ன செய்யப் போகிறீர்கள்? அந்த அதிகாரிகள் யாருக்குப் பதில் சொல்லப் போகிறார்கள்? அப்போது அவர்களை வந்து காப்பாற்ற முடியுமா?

நான் உங்கள் முன்னாலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அரசாங்கம் நிர்ப்பந்தித்தாலும் அதிகாரிகள் அடிமைகளாக நடந்துகொள்ள வேண்டுமா? ஐ.பி.எஸ். அதிகாரிகள் ஏன் பயப்பட வேண்டும்? அவர்களை ஜனாதிபதி தவிர வேறு யாரும் ஒன்றும் செய்துவிட முடியாது. ஆனால் ஏன் அவர்கள் கீ கொடுத்த பொம்மைகள் மாதிரி அமைச்சர்கள் முன்னால் சுற்றிக்கொண்டு இருக்கிறார்கள் என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. தமிழ்நாடு காவல் துறை பெரும்பாலும் இப்படித்தான் நடந்து கொண்டு இருக்கிறது. உதாரணம், சேலத்தில் சுகுமாரன் என்ற எங்கள் கட்சியைச் சேர்ந்த தொண்டன் ஒருவனை ஒரு எம்.எல்.ஏ.-யின் அண்ணன் மகனை நல்ல நடுரோட்டில் மோட்டார் பைக்கில் சென்று கொண்டிருந்தபோது சுட்டுக் கொன்றார்கள். அதில் இன்றைக்கு வரையிலும் ஒருவரையும் கைது செய்யவில்லை. போலீஸ் நாய் போயிற்று என்று சொன்னார்கள். தடயங்கள் எல்லாம் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது என்று சொன்னார்கள். ஏன் இதுவரை ஒன்றும் செய்ய முடியவில்லை? என்ன காரணம். இவ்வளவு பெரிய கேசைக் கூட கண்டுபிடிக்க முடியாத அளவு ஒரு மானம் கெட்ட நிலையில் இந்தப் போலீஸ் டிபார்ட்மெண்ட் இருக்கிறதா? அல்லது, அந்தக் காவல் துறை அதிகாரிகள் கைகள் கட்டப்பட்டு இருக்கிறதா என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.





ஒரு ஸ்டேட்டை பொறுத்தவரையில் ஐ.ஜி. ஒருவர் இருக்கலாம். அடிஷனல் ஐ.ஜி. ஒருவர் இருக்கலாம். அப்படி ஐ.ஜி. யாக ஒருவரும் ஆண்டி கரப்ஷன் ஸ்பெஷல் ஐ.ஜி. யாக ஒருவரும் இருந்தார்கள். இப்போது அவசர அவசரமாக இன்னொருவரை ஐ.ஜி. க்ரேடுக்கு மாற்ற வேண்டிய நெசஸ்ஸிடி, அவசியம் என்ன வந்தது? மத்திய சர்க்கார் கூட கேட்டது மூன்று பேரை ஐ.ஜி.-யாகப் போடுவது எப்படி என்று. கமிஷனர் பதவியை அப்கிரேட் பண்ணுகிறோம் என்று சொன்னால் இந்தப் போலீஸ் கமிஷனர் ஆளும் கட்சிக்கு உடந்தையாக இருக்கிறார் என்பதைத் தவிர வேறு என்ன பொருள்? ஏற்கனவே உள்ள ஐ.ஜி. தாளம் போடவில்லை, ஆளும் கட்சியினருக்கு என்று தானே பொருள்? இவரை இன்றைக்கு பழி எடுப்பதற்காக, தண்டனையாக இன்னொருத்தரை ஐ.ஜி. யாக உயர்த்த துணிந்து இருக்கிறார்கள். நான் சந்தேகப்படுகிறேன். இப்போது இருப்பவர் எத்தனை நாளைக்கு ஐ.ஜி. யாக இருப்பாரோ தெரியவில்லை. அவரை ஆண்டி கரப்ஷனுக்குப் போட்டு இன்றைக்கு கமிஷனராக இருப்பவரை ஐ.ஜி.-யாகப் போட்டாலும் போடக் கூடும். இதை எல்லாம் பார்க்கும்போது கேவலமாக நாலு பேர் சிரிக்கிற அளவு காவல் துறையை வைத்திருக்கிறார்கள்.

சௌத் டி.சி. ஒருவர் இருக்கிறார். 7 வருஷம் ஏறத்தாழ இங்கேயே சுற்றிக் கொண்டு இருக்கிறார். யார், யார் இவர்களுக்கு இசைவாக இருக்கிறார்களோ அவர்களுக்குப் பதவி உயர்வு கொடுக்கப்படுகிறது. எல்லாவிதமான சலுகைகளும் கொடுக்கப் படுகிறது. இன்னும் ஒன்றையும் சொல்ல விரும்புகிறேன். உண்மையிலேயே இவர்கள் சரியாக நடந்து கொண்டிருந்தால் வெங்கா, எம்.எல்.சி. வழக்கில் சில தடயங்கள் கிடைத்தனவே, அதில் பெரிய மனிதர்கள் சிலர் ஈடுபட்டு இருப்பதாகச் சொன்னார்களே, அவர்களை எல்லாம் ஏன் கைது செய்யவில்லை? இன்னமும் சொல்லப் போனால் ராஜாராம் போர்ட் மெம்பராக இருந்து ஒரு விசாரணை நடத்தி ஒரு ரிப்போர்ட் தந்தார்கள். சென்ற முறை நான் கேட்டபோது முதலமைச்சர் சொன்னார்கள். அந்த ரிப்போர்ட்டில் ஏதோ பெரிதாக அவர்களுக்குச் சாதகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கிறார்கள், தந்து விடுகிறேன் என்று சொன்னார் முதலமைச்சர். ஆனால் வெங்கா கொலை வழக்கில் பல பெரிய மனிதர்கள் ஈடுபட்டு இருக்கிறார்கள் என்று குற்றச்சாட்டு

வருகிறது. நான் சொல்லுகிறேன் அந்த ரிப்போர்ட்டில் இது எல்லாம் இல்லை என்றால் அந்த ரிப்போர்ட்டைத் தாருங்கள். தஞ்சை மாவட்டத்திலிருந்து. . . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, வெங்கா கொலை வழக்கு முயற்சி என்று திருத்திக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திரு. கோவை செழியன் :** கொலை முயற்சி, அகப்பட்டு இருந்தால் கொலையே பண்ணி இருப்பார்கள். கொலை முயற்சி வெற்றி பெறவில்லை. கொலை முயற்சி தோற்றது.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** அபன்ஸ் நாட் கமிட்டட்.

**திரு. கோவை செழியன் :** தஞ்சை மாவட்டத்தில் 40 லட்சம் மதிப்புள்ள சிலை ஒன்று திருடப்பட்டு அதை மீண்டும் கைப்பற்றி இருக்கிறார்கள். அந்தச் சிலை திருட்டு சம்பந்தமாக யார் மீதும் இதுவரை வழக்கு தொடரப்படாமல் இருப்பதற்கு என்ன காரணம்? வாங்கியவர்கள், வாங்க முற்பட்டவர்கள் பெரிய மனிதர்கள். வுட்லண்ட்ஸ் ஹோட்டலில் மத்திய சர்க்காரைச் சேர்ந்த புலனாய்வு அதிகாரி டைரக்டர் ஆப் சி.பி.ஐ. பக்கத்து ரூமில் தங்கி இருந்திருக்கிறார்கள். இது சம்பந்தமாக தமிழக அரசுக்கு செய்திகள் கிடைத்தன.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** எந்தச் சிலை வழக்கு என்று சொன்னால் தகவல் அறிய எனக்கு ஏதுவாக இருக்கும்.

**திரு. கோவை செழியன் :** தஞ்சை மாவட்டத்தில் 40 லட்சம் மதிப்புள்ள சிலை திருடப்பட்டு மீட்கப்பட்டது. ஒரே ஒரு கேஸ் தான். எக்ஸ்பன்ஜ் செய்யவில்லை என்றால் பல செய்திகளை சொல்லுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, எந்தச் சிலை வழக்கு என்று குறிப்பிட்டால்—உதாரணமாக சிவபுரம் சிலை அமெரிக்காவில் இருக்கிறது—அதைப்போல எந்தச் சிலை என்று சொன்னால் நான் பதில் சொல்லும்போது தகவல் தெரிந்து கொண்டு பதில் சொல்ல வாய்ப்பாக இருக்கும்.



**திரு. கோவை செழியன் :** தாமஸ் நாடார் என்பவர் மீது குற்றம் சாட்டப்பட்ட அந்த வழக்கு. (மணியடிக்கப்படுகிறது) இன்னும் இரண்டு நிமிஷம் தான். பேரவைத் தலைவர் அவர்களே, எதைப் பேசுவது என்றே தெரியவில்லை. ஆகவே, இந்தக் காவல் துறையைப் பொறுத்தமட்டிலும் இந்த ஆட்சியில் இருக்கிறவர்களுக்கு வேண்டியவர்கள் வேண்டாதவர்கள் என்ற பாகுபாடு செய்து வழக்குகளைப் போடுகிறார்கள் என்பது என் குற்றச்சாட்டு ஆகும்.

பத்தாயிரம் லிட்டர் ஸ்பிரிட் தயாரிக்கிறவர் சர்க்காரிடம் அனுமதி பெற்றவர் ஆலந்தூரில் இருப்பவர், ஆட்சியில் உள்ளவர்களுக்கு மிகவும் வேண்டியவர். அவர் ஸ்பிரிட் வைத்திருக்கிற இடத்திற்கு மதுவிலக்கு ஆணையர் ஒருவர் சர்பிரைஸ் செக் பண்ணப் போனார். ஆனால் அவரை அனுமதிக்கவில்லை அந்த ஸ்பிரிட் தயாரிக்கிற முதலாளி. அவரை அவமானப்படுத்தி வெளியே துரத்தினார்கள். சென்னை வருவதற்குள் அந்த ஆளையே மாற்றி விட்டார்கள். இப்படி இருந்தால் எந்தப் போலீஸ் அதிகாரிக்கு எந்த சப்-இன்ஸ்பெக்டருக்கு, எந்த அதிகாரிக்கு தைரியமாகப் பணியாற்ற மனம் வரும்? ஏதாவது துணிந்து போய் காரியம் செய்தால், மாற்றுகிறார்கள் என்றால் அப்படிச் செய்ய யாருக்குத் துணிச்சல் வரும்?

ஆகவே, சப்இன்ஸ்பெக்டர் பல பேர் ஆளும் கட்சியினர் எதைச் சொல்லுகிறார்களோ அதைச் செய்தால் போதும் என்று தான் கருதுகிறார்கள்.

எங்கள் பகுதியில் மடத்துக்குளம் என்ற இடத்தில் ஒரு சப்-இன்ஸ்பெக்டர் இருக்கிறார். அவரைப் பார்க்கிறவர்கள் மனநோய் உள்ளவரோ என்று தான் கருதுவார்கள். யார் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போனாலும் முதலில் 4 அடி கொடுத்து விட்டுத்தான் பேச ஆரம்பிப்பார். ஆசிரியர் ஒருவரை மாட்டை அடிப்பது போல் அடித்து இருக்கிறார்.

மானாமதுரையில் உள்ள இன்ஸ்பெக்டர் ஒருவரைப்பற்றி பலமுறை இங்கே சொல்லப்பட்டு இருக்கிறது. ஏழு முறை மாற்றம் செய்யப்பட்டும் கூட மறுமுறை எப்படி வந்தார்கள்? இப்படி பல நிகழ்ச்சிகளை நான் இங்கே சொல்ல முடியும். இப்படி பல பிரச்னைகள் இருக்கின்றன.

சென்னை நகரத்தைப் பொறுத்தவரையிலும் மனமகிழ்மன்றம், வள்ளுவர் மன்றம் என்று வைத்துக்கொண்டு சீட்டு ஆடுகிறார்கள். நடனப்பள்ளி என்று சொல்லிக் கொண்டு விபச்சாரம் செய்கிறார்கள். போலீஸ் துறை இவர்களை ஏன் பிடிப்பதில்லை? யார் யாருக்கோ வேண்டியவர்கள். சில பேரைப் பிடிக்க போலீஸ் பயந்து நடுங்குகிறது, கரண்ட் இருக்கிற மாதிரி. என்ன காரணம்? அதை விசாரணை செய்ய வேண்டாமா? அதை ஆலோசனை செய்ய வேண்டாமா? விஜிலன்ஸ் டிப்பார்ட்மெண்டார் பயப்படுகிறார்கள் என்றால் என்ன காரணம்? சி.ஐ.டி. டிப்பார்ட்மெண்டில் அறிக்கை கொடுக்கப் பயப்படுவதற்கு என்ன காரணம்? ஆகவே, இந்த மாதிரி நிலைமைகளை எல்லாம், தலையீடுகளை எல்லாம் மாற்ற வேண்டும். இந்தத் துறை தன்னிச்சையாக செயல்பட அனுமதிக்க வேண்டும். (திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்); கனம் அங்கத்தினர் அங்கே போய்விட்டு வந்திருப்பாரோ) என்னுடைய நண்பர் அவர்மாதிரி சொல்லிக் கேள்வி.

(முற்பகல் 11-30)

போலீஸ் டிப்பார்ட்மெண்டில் இருக்கிற அதிகாரிகளுக்கு 24 மணி நேரம் டியூட்டி என்றிருக்கிறது. அதை மாற்றி 12 மணி நேரம் என்று ஆக்க வேண்டும். இப்போது அவர்களுக்கு வழங்கப்படும் 'பாட்டா' மிக, மிகக் குறைவு. அதை உயர்த்திக் கொடுக்க வேண்டும். (மணியடிக்கப்பட்டது).

கடைசியாக, ஒன்றைக் கூறி முடித்துக்கொள்கிறேன். நான் இங்கே பல குற்றச்சாட்டுக்களைச் சொன்னேன். இவ்வளவு குற்றச்சாட்டுகளும் உண்மை என்று என்னால் நிரூபிக்க முடியும். நம்முடைய முதலமைச்சரவர்கள் மிகவும் கோபம் உள்ளவர்கள். திடீரென்று எழுந்து எதையாவது சொல்வார்கள். நான் இவ்வளவும் சொன்ன பின்னாலாவது, முதலமைச்சரவர்கள் தன்னுடைய இலாகாவில் தவறு நடக்கிறது என்று கருதி இராஜிநாமா செய்வார்கள் என்று நம்புகிறேன். இல்லாவிட்டால் ஆறுமுகம், எம்.எல்.ஏ. அவர்கள் இராஜிநாமா செய்திருக்கிறார்கள். அந்த இடத்திற்கு நடக்கக்கூடிய இடைத் தேர்தலின் காரணமாக, இதை ஒரு காரணமாக வைத்து, உங்களுடைய இலாகாவில் ஊழல் இருக்கிறது என்று சொல்லி நாங்கள் போட்டியிடுகிறோம். ஊழல் இல்லையென்று சொல்லி நீங்க போட்டியிடுங்கள். யார் வெற்றி பெறுகிறார்கள் என்பதை பார்த்து முடிவு செய்யலாம்.





**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** ஊழல் இருக்கிறது, ஊழல் இருக்கிறது என்று ஊழல் போராட்டத்தோடு இருப்பவர் உங்கள் தலைவர் எம்.ஜி.ஆர். தான். அவர் வேண்டுமானால் பரங்கிமலைத் தொகுதியில் இராஜிநாமா செய்யட்டும், தேர்தலை நடத்திப் பார்க்கிறோம்.

**திரு. கோவை செழியன்:** அந்த இடத்தில் முதலமைச்சர் நிற்பதாக இருந்தால், எங்கள் தலைவரின் சார்பாக நான் சொல்லிக் கொள்கிறேன். அதற்குத் தயார் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எம். ஆர். கண்ணன்:** பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கிற இந்தப் போலீஸ் மானியத்தை வரவேற்று என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைக் கூற விரும்புகிறேன்.

இங்கே எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் கோவை செழியன் அவர்கள் போலீஸ் துறை தன்னிச்சையாக செயல்பட வேண்டுமென்று சொல்கிறார்கள். ஒருவேளை அவர்கள் ஆட்சியில் வேண்டுமென்றால் போலீஸ் துறை தன்னிச்சையாக செயல்பட ஏதாவது சட்டம் போடுவார்களோ என்னவோ தெரியவில்லை. ஒரு ஆட்சி என்று இருந்தால் அதற்குச் சில சட்டதிட்டங்கள் இருக்கின்றன. அந்தச் சட்டதிட்டங்கள் எல்லாம் இந்தச் சட்டமன்றத்திலேதான் நிறைவேற்றப்படுகின்றன.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

அந்த அடிப்படையிலேதான் எந்த ஒரு சர்க்கார் அமைப்பும் இயங்க முடியும். அது அல்லாமல் தன்னிச்சையாக இயங்க முடியும் என்பது எப்படி என்று புரியவில்லை. இது கூட ஒரு சட்டமன்ற உறுப்பினருக்குத் தெரியவில்லையே என்று எண்ணி மிகவும் வருத்தப்படுகிறேன். தன்னிச்சையாக போலீஸ் இலாகா செயல்பட வேண்டுமென்று விரும்புவது மிக மிக தவறானது, அது ஒரு சட்டத்தின் அடிப்படையில் இயங்கும் இலாகா; அந்த சட்டத்தை மீறி நடந்தால் நிலைமை எப்படி இருக்கும்? அதனால் பிரயோஜனமே இல்லாமல் போய்விடும். ஆகவே, போலீஸ் இலாகா தன்னிச்சையாக நடக்க வேண்டுமென்று சொல்வது தவறு.

[திரு. எம். ஆர். கண்ணன்]    [1975 ஏப்ரல் 1

அடுத்தபடியாக, போலீஸ் இலாகாவில் அரசியல் தலையீடு இருக்கிறது என்று சொல்கிறார்கள். போலீஸ் என்பது அன்றாட வாழ்வில் மிக மிக தொடர்பு கொண்டிருக்கிற ஒரு துறை. அதில் சில நேரங்களில் பொதுமக்கள் பாதிக்கப்படலாம். அப்படி பாதிக்கப்படும்போது இந்த இலாகவுக்குச் சென்று, பாதிக்கப் பட்டவர்களுக்காக சட்டப்படி என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதை எடுத்து, வேண்டியதைச் செய்யுங்கள் என்று கேட்பது தலையீடு என்று சொன்னால் பிறகு எதற்காக ஒரு சட்டமன்ற உறுப்பினர்? எதற்காக ஒரு சட்டமன்றம்? எதற்காக ஒரு ஆட்சி? சாதாரண விஷயங்களில் கூட பாதிக்கப் பட்ட மக்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டுமென்று சொல்வதில் என்ன தவறு இருக்கிறது என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

குறிப்பாக, காவல் துறைக்கு இன்னும் அதிகமாக காவலர்கள் தேவை என்ற எண்ணம் இருக்கிறது. அதை நிச்சயமாக கவனிக்க வேண்டும். இப்போது மக்கள் தொகை அதிகமாக இருக்கிறது. அதற்கேற்ப காவல் துறையில் பணியாளர்கள் இல்லை. ஆகவே, காவலர்கள் எண்ணிக்கையை உயர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒலிபெருக்கி வைத்துக்கொள்வதில் சில விதிமுறைகளுக்கு உட்பட்டு லைசென்ஸ் கொடுக்கப்படுகிறது. அந்த விதிமுறைகள் நல்லமுறையில் கையாளப்படுகின்றன. கூட்டம் நடக்கும்போது 10 மணி ஆனதும், உடனடியாக நிறுத்த வேண்டுமென்று நாம் ஏற்பாடு செய்திருக்கிறோம். இருந்தாலும் கூட மாண்புமிகு அமைச்சர்களும், மற்றுள்ள உறுப்பினர்களும் கலந்துகொள்ளும் கூட்டங்களில் 15 நிமிடம், 20 நிமிடம் 'கிரேஸ் டைம்' கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எல்லா போலீஸ் நிலையங்களுக்கும் கூடியவரை டெலிபோன் வசதி இருக்க வேண்டும். டெலிபோன் எக்ஸ்சேஞ்சில் இருந்து ஒரு குறிப்பிட்ட போலீஸ் நிலையத்திற்கு தொடர்பு கேட்டால், கொஞ்ச நேரம் கழித்து அந்த ஸ்டேஷன் எங்கே இருக்கிறது என்று கேட்கிறார்கள். மீண்டும் அவர்கள் கேட்பது சிரமமாக இருக்கிறது; கேட்க முடியவில்லை. ஒருமுறை போன் செய்வதற்கு பலமுறை கேட்கவேண்டியிருக்கிறது. ஆகவே இதைத் திருத்திக் கொள்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1975 ஏப்ரல் 1]    [திரு. எம். ஆர். கண்ணன்]

போலீஸ் நிலையத்தில் முன்னால் கடைபிடிக்கப்பட்ட முறைகள் தான் இப்போதும் கடைபிடிக்கப்படுகின்றன. அந்த முறையை மாற்றி அமைக்க வேண்டும். உண்மையை வரவழைப்பதற்கு வேறு சில புதிய முறைகளைக் கொண்டுவர வேண்டும்.

சந்தேகத்தின் பேரில் சிலரைக் கைது செய்கிறார்கள். அவர்களுடைய அட்ரசைப் பார்த்தால் அவர்கள் அந்தக் காவல் துறையின் எல்லைக்குட்பட்டவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் சொல்கின்ற ஊரிலேயே இருப்பவர்களாகவும் இருக்கிறார்கள். இப்படி சந்தேகத்தின் பேரில் கைது செய்யப் பட்டவர்கள் குறிப்பிட்ட ஊரில் இருப்பவர்கள் தான் என்று தெரியவந்தால் அவர்களுடைய சொந்த ஜாமினிலேயே அவர்களை விடுவிக்க வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் அவர்களுக்கு வேண்டாத வர்களைக் கைது செய்யச் சொல்லியிருக்கிறார்கள், இவர்கள் கைது செய்கிறார்கள் என்ற ஒரு தவறான எண்ணம் இந்த ஆட்சியின்மீது மக்களுக்கு ஏற்படும். இந்தத் தவறான எண்ணத்திற்கு இடம் இல்லாமல் இப்படிப்பட்ட சாதாரண விஷயங்களில், அவர்களுடைய விலாசத்தைத் தெரிந்த பிறகாவது, அவர்களுடைய சொந்தக்காரர்கள் வந்து கேட்டால் அவர்களை விட்டுவிடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சூதாட்டம் இருக்கிறது. 'ரெக்கிரியேஷன் கிளப்' என்ற பெயரால் சூதாட்டம் நடைபெறுகிறது. சில சட்டதிட்டங்களின் அடிப்படையிலே ரெக்கிரியேஷன் கிளப் நடைபெற்றாலும், தவறுகள் நடை பெறுவதால் அவைகளை ஒழித்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குற்றவாளிகளை ஜாமீனில் எடுத்தால், ஜாமீனில் எடுக்கும் போது 'ஷூரிட்டி சர்டிபிகேட்' கேட்கிறார்கள். முன்னால் எம்.சி. கொடுத்தாலும் போதும் என்று இருந்தது. இப்போது எம்.எல்.ஏ. சர்டிபிகேட் வாங்க வேண்டுமென்று இருக்கிறது. அது தேவையில்லை. சாதாரண சிறிய வழக்குகளாக இருந்தால் அவர்களுடைய சொந்தப் பொறுப்பிலோ அல்லது அவர்களுடைய உறவினர்களுடைய பொறுப்பிலோ ஜாமீனில் விட்டுவிடுகின்ற வகையில் விதிமுறைகளை எளிதாக மாற்றியமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. எம். ஆர். கண்ணன்] [1975 ஏப்ரல் 1

இன்றைக்கு, காவல் துறையில் இருக்கின்ற அதிகாரிகளில் சிலர் குடிப் பழக்கம் உள்ளவர்களாக இருக்கிறார்கள். சில அதிகாரிகள் குடித்துவிட்டு ஸ்டேஷனிலே சில நேரங்களில் இருந்துவிடுகிறார்கள். சில சந்தர்ப்பங்களில் பொதுமக்கள் அவரைப் பார்த்துவிட்டு, புகார் செய்கிறார்கள். அதை மேலிடத்தில் இருக்கிற அதிகாரிகள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விதிமுறைகளை மீறி, கேட்பாரற்று திரிகின்ற மாடுகளைப் பிடித்து பட்டிகளில் அடைக்கிறார்கள். அந்த மாடுகளுக்குச் சொந்தக்காரர்கள் வந்து கேட்டால், கேஸ் போடாமல், பட்டியில் அடைக்காமல் அந்த மாடுகளை விட்டுவிடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

இரவு நேரங்களில் சில ஓட்டல்கள் நடைபெறுகின்றன. இரவு நேரத்தில் ஓட்டல் நடத்தக்கூடாது என்று சட்டம் இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் சில இடங்களில் ஓட்டல் இரவு நேரத்திலும் நடத்த வேண்டியிருக்கிறது. இரவு நேரத்தில் வேலை முடிந்து வீட்டுக்கு வருகிறவர்கள், சினிமாவுக்குப் போய்விட்டு வருகிறவர்கள், சில நேரங்களில் மாநாடுகள் நடத்தும்போது அந்த மாநாட்டுக்குப் போய் வருகிறவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். இவர்களுக்கு இரவு நேரத்தில் ஓட்டல் இருந்தால் வசதியாக இருக்கும். அதற்காக இரவு நேரத்தில் ஓட்டல் நடத்துகிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு வேண்டுமென்றால் ஏதாவது விசேஷ லைசென்ஸ் வழங்கி, இரவு நேரத்திலும் ஓட்டல் நடத்த அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சர்க்கார் துறையில் இருக்கிற எல்லா துறைகளிலிருந்தும். ரிப்போர்ட் கொடுத்தால் பதில் வருகிறது. ஆனால் காவல் துறையிலிருந்து பதில் வருவதில்லை. அதற்கு என்ன காரணம் என்றும் தெரியவில்லை. ஏற்கெனவே போலீஸ் துறை கமிஷனில் கூட ரிப்போர்ட் வந்தால் அதற்குப் பதில் அனுப்ப வேண்டுமென்று குறிப்பிட்டிருந்தார்கள். ஆகவே, ஏதாவது முக்கிய பிரச்சனையாக இருந்தால் அதற்கு நிச்சயமாக பதில் எழுதவேண்டுமென்ற நிலை இருந்தால் நல்லது.

அடுத்தபடியாக, சாலையோர வியாபாரிகள் இருக்கிறார்கள். ஏழை எளிய மக்கள்தான் சாலையோரத்தில் வியாபாரம் செய்கிறார்கள். அவர்களை வியாபாரம் நடத்த அனுமதிக்க வேண்டும்;



1975 ஏப்ரல் 1] [திரு. எம். ஆர். கண்ணன்]

அல்லது நிரந்தரமாக நடத்தக் கூடாது என்று தடை செய்ய வேண்டும். அப்படி இல்லாமல் திடீர் திடீர் என்று காலி செய்யச் சொல்வதும், மீண்டும் நடத்துவதும் நல்லதாகத் தெரியவில்லை. இந்த ஆட்சி வந்த பிறகுதான் இப்படிச் செய்கிறார்கள் என்று அவர்கள் எல்லாம் குறை சொல்கிறார்கள். இந்த ஆட்சிதான் காரணம் என்று சொல்கிறார்கள். ஆகையால் ஒன்றில் அவர்களை ரெகுலராக வியாபாரம் நடத்த அனுமதிக்க வேண்டும்; இல்லாவிட்டால் வியாபாரமே நடத்தக் கூடாது என்று தடை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற விடுதியில் திரு. வெங்கா அவர்கள் தாக்கப்பட்டார்கள் என்ற நிலை வந்தது. அங்கே அவர் தாக்கப்பட்டார் என்பதால், யாரையும் யாரும் எங்கேயும் தாக்கலாம் என்று நினைத்து ஒவ்வொருவருடைய பின்னாலும் போலீஸ்காரர் போய் பாதுகாப்பு அளிக்க முடியாது. அந்த ஒரு நிலைமையை வைத்துக் கொண்டு, இன்றைக்கு சட்டமன்றத்திற்கு முன்னால் கூட, சாதாரண உறுப்பினர்கள் கூட வருவது கஷ்டமாக இருக்கிறது. ஆகையால் எந்த அளவுக்கு இந்தத் தடையை நீக்க முடியுமோ அந்த அளவுக்கு நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு பொதுமக்களுக்கு ஒரு எண்ணம் பெரிதாக இருந்துகொண்டிருக்கிறது. எந்த ஒரு காரியத்திற்கும் எம்.எல்.ஏ. தான் போய் சொல்ல வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள். அந்த அளவுக்கு எண்ணம் வளர்ந்திருக்கிறது. அந்த எண்ணம் ஒழிய வேண்டும். யார் வந்து சொன்னாலும், பிரச்சனை என்ன என்று பார்த்து அதற்கான நடவடிக்கைகளை அதிகாரிகள் எடுத்தால் பொதுமக்களுக்கு இப்போது இருக்கிற இந்த எண்ணம் குறையும். இப்போது சொல்கிறார்களே ஆளும் கட்சியினரின் தலையீடு இருக்கிறது என்று, இந்தத் தவறான பிரச்சாரத்திற்குக் கூட வழியில்லாமல் போய்விடும், பிரச்சனையைப் பார்த்து உரிய நடவடிக்கைகளை அதிகாரிகள் எடுத்தால்.

நேற்றுவரை இங்கே இருந்து இந்த இலாகாவைப் பாராட்டிக் கொண்டிருந்த கோவை செழியன் அவர்கள் இன்றைக்கு அந்தப் பக்கத்தில் போயிருந்து கொண்டு, போலீஸ் இலாகா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு உடந்தையாக இருக்கிறது என்று குற்றஞ்சாட்டுகிறார். இங்கிருக்கும்போது நேர்மையாக,

நாணயமாக போலீசார் செயல்படுகிறார்கள் என்று சொன்னவருக்கு அங்கே போனவுடன் தவறு செய்வதாகத் தோன்றுகிறது; ஆளும் கட்சிக்கு உடந்தையாக இருக்கிறார்கள் என்று இப்போது குறை சொல்கிறார்

நம்முடைய போலீஸ் கமிஷனர் அவர்கள் நியாயமாக, நாணயமாக, நடுநிலைமையோடு மிகச் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிறப்புக்குரிய அதிகாரிகள் பலர் இருக்கிறார்கள். அந்த அதிகாரிகள் மட்டும் சிறப்புக்குரியவர்களாக இருந்தால் போதாது. இந்த இலாகாவிலே ஆங்காங்கு இருக்கிற அத்தனை பேர்களையும் அவர்கள் சிறப்புக்குரியவர்களாக ஆக்க வேண்டும். அவர்களை எல்லாம் நல்லமுறையில் கண்காணித்து செயல்பட வேண்டுமென்று கேட்டு, இந்த இல்ாகா மிக மிகச் சிறப்பாக செயல்படுகிறது; இந்த இலாகாவிலே பணியாற்றுகிறவர்களுக்கு திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பில் வந்தபிறகு எவ்வள்வு நன்மைகள் செய்ய முடியுமோ அவ்வளவையும் செய்திருக்கிறது; மேலும் அந்த நன்மைகளை தொடர்ந்து பெற்று, நல்லமுறையில் செயல்பட்டு, இந்த ஆட்சிக்கு உறுதுணையாக இருக்க வேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. சி. ஆறுமுகம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற காவல் துறை மானியத்தை முழுமனதோடு ஆதரித்து ஒருசில கருத்துக்களை இந்த அவைமுன் தெரிவிப்பது என் கடமை என்று கருதுகிறேன்.

காவல்துறை மானியக் கோரிக்கையின் மீது விவாதத்தைத் துவக்கி வைத்த மரியாதைக்குரிய—எதிர்தரப்பு—அருமை நண்பர் செழியன் அவர்கள் தங்களுடைய இயக்கத்தில் உள்ளவர்கள் தான் பாதிக்கப்படுவதாக மெத்த வருத்தப்பட்டுக் கொண்டார்கள். ஆனால் ஆளுங்கட்சியில் உள்ள நாங்கள் மிக அதிக அளவில் பாதிக்கப்படுகிறபோதும்கூட கட்சிக் கட்டுப்பாடு என்ற முறையில் வெளியில் சொல்ல முடியாமல் காவல்துறையினிடத்தில் வருத்தத்தைக் காட்டிக்கொள்ள முடியாமல் இருக்கிறோம். ஆட்சியில் இருப்பதால் எவ்வளவுதான் பாதகங்கள் எங்களுக்கு





ஏற்பட்டாலும் நாங்கள் நெஞ்சிலேயே அவற்றை நிறுத்திக் கொண்டு ஆட்சியினைக் காத்துக்கொண்டு வருகிறோம். ஆனால், திரு. செழியன் அவர்கள் இந்த இரண்டாண்டு காலத்தில் அண்ணா தி.மு.க.-வில் உள்ளவர்களில் 59 சதவிகிதம் பேர்கள் மீது வழக்குகளைப் போட்டிருப்பதாக வருத்தப்பட்டுக்கொண்டார்கள். ஆளும் கட்சியினர்கள் மீது போடப்பட்டுள்ள வழக்குகளைச் சொல்ல வேண்டுமானால் இந்த அவையில் நேரம் இருக்காது என்று நான் கருதுகிறேன். இதிலே அதிகமாக பாதிக்கப்படுகிறவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களேயல்லாது, வேறு யாரும் இல்லை என்பதை காவல்துறை மானியத்தின் மீது நான் பேசும்போது திரு. செழியன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இது செழியன் அவர்களுக்கும் லாபமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

கடந்த ஓராண்டு காலத்தில் கத்திவாக்கத்தில் அசோக் லேலண்டு தொழிலாளர் சங்கத்திற்குத் துணைத் தலைவராக இருந்தவர்—எங்கள் இயக்கத்தைச் சேர்ந்தவர்—அருமை நண்பர் நரசிங்கன் அவர்களைக் கொன்றுபோட்டார்கள். அவரைக் கொன்றவர்கள் அண்ணா தி.மு.க.-வைச் சேர்ந்தவர்கள்தான் எனப் பத்திரிகையில் எழுதினார்கள். ஆனால்—அண்ணா தி.மு.க.-வினரைப் போல—நாங்கள் பாதிக்கப்படுவதாக வெளியில் சொல்ல முடியாது இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தத் தோழரது குடும்பத்திற்கு தமிழ்நாடு முதல்வர்—கழகத் தலைவர் ரூபாய் இருபதாயிரம் வசூல் செய்து பத்து தினங்களில் கொடுத்தார்கள். அந்த நிகழ்ச்சியில் பேசுகின்றபோது—ஆளும் கட்சித் தரப்பில் இருப்பதால் முதலமைச்சரிடத்து ஒரு வேண்டுகோளோடு என் வருத்தத்தைத் தெரிவித்தேன். நினைத்திருந்தால்—இந்தக் கொலை நடைபெறாதவாறு காவல் துறையினர் தடுத்து இருக்கலாம். காரணம், 3 தினங்களுக்கு முன்பே—சுவற்றில் நரசிங்கன் தலையை எடுத்துக்கொண்டுபோக முடியும் என்று எழுதிப்போட்டு—இதுபற்றி காவல்துறையினருக்கும் தெரிவிக்கப்பட்டு அவர்கள் உடனடியாக தகுந்த நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் அருமை நண்பர் எங்கள் இயக்கத்தைச் சேர்ந்த தொழிலாளர்களது சங்கத் துணைத் தலைவர் உயிரிழக்க வேண்டிய துர்ப்பாக்கியமான நிலைமை ஏற்பட்டது. இதைச் சொல்ல முடியாத நிலையில் நாங்கள் இருக்கிறோம், இதுபோல பலரது உயிரை எடுத்துக்கொண்டு போவதற்கு மாற்றுக் கட்சியினர்கள் இன்றைக்குத் தயாராகிக்கொண்டிருக்கிறார்கள்.

கடந்த 12-ஆம் தேதி கூட திருவொற்றியூர் தொழிற்சாலையில் திராவிட முன்னேற்றக் கழகததைச் சேர்ந்தவர்கள் 3 பேரை பட்டப்பகலில் வெட்டினார்கள். அதில் ஒரு தோழர் மீனவர் சமுதாயத்தைச் சேர்ந்தவர். திருவொற்றியூர் குப்பத்தில் இருக்கிறவர். குடல் வெளியில் வந்து சரிந்து விழுமாறு குத்தப் பட்டிருந்த அவரை நானே சென்று பார்த்தேன். இங்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களே பாதிக்கப்பட்டிருக் கிறார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்னை மன்னிக்க வேண்டும். இன்னொன்றையும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு போலீஸ் துறையில் உள்ளவர்கள் அண்ணா தி.மு.க. வைச் சேர்ந்தவர்கள் 1976 ஆம் ஆண்டு தேர்தலில் ஆட்சிக்கு வந்துவிட்டால் நம் கதி என்ன ஆகுமோ என்று நினைத்து அண்ணா தி.மு.க.-வைச் சேர்ந்தவர்களுக்கு இப்போதே சப்போர்ட்டாகப் போகிறார்கள். இந்த அளவுக்கு ஆளுகின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களை யாரும் காப்பாற்றவில்லை, அந்தப் பஞ்சத்திலும் திராவிட முன்னேற்றக் கழகம் இல்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தைக் காப்பாற்றிக் கொள்ள திராவிட முன்னேற்றக் கழகமே போதும். இடையில் வருகிற ஆட்சியை வைத்து—அதிகாரிகளை வைத்து—திராவிட முன்னேற்றக் கழகத்தைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும் என்பது இல்லை—எங்கள் இயக்கத்தின் மரபும் அது அல்ல என்பதை அருமை நண்பர் திரு. செழியன் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்வது கடமை என்று கருதுகிறேன்.

அதற்கடுத்து மதுராந்தகம் தாலுக்காவைப் பொறுத்த மட்டில் 450 கிராமங்கள் இருக்கின்றன. இந்த 450 கிராமங்களுக்கும் ஒரு சர்கிள் இன்ஸ்பெக்டர்தான் இருக்கிறார். ஒரு தாலுக்காவுக்கு இரண்டு சர்கிள் இன்ஸ்பெக்டர்கள் என்ற முறையில் —மதுராந்தகம் பெரிய தாலுக்காவாகவும் இருப்பதால்—இதற்கு இரண்டு சர்கிள் இன்ஸ்பெக்டர்களைப் போடுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று—தலைவர் அவர்களை—தங்கள் மூலமாக—முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

எங்களது தாலுக்கா கடலோரப் பகுதி. கடலோரப் பகுதியான இங்கே செய்யூரில் ஒரு காவல் நிலையம் இருக்கிறது. அணைக்கட்டு பகுதியில் ஒன்று இருக்கிறது. மத்தியில் முகையூரில் ஒரு காவல் நிலையத்தை அமைத்துக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். அப்போதுதான் வழக்குகளை உடனடியாக அங்கங்கே கவனிக்க முடியும். மக்களுக்குக் குறைகளை உடனடியாக அங்கங்கு தெரிவிக்க வசதியேற்படும்.





அதற்கடுத்து தீ விபத்து என்றால் ஃபயர் என்ஜின்களுக்கு திண்டிவனத்தில் தான் தெரிவிக்க வேண்டும். இல்லை செங்கற்பட்டு போகவேண்டும். இருபதாண்டுகளுக்கு முன்னால் தீ விபத்து நேர்ந்துவிடுமானால் செய்தி தெரிவித்த பத்துப் பதினைந்து நிமிடத்தில் தீ அணைப்பு என்ஜின்கள் வந்துவிடும். ஆனால் இப்போதெல்லாம் என்ஜின் வருவதற்குள்ளாகவே ஊர்க்காரர்கள் தண்ணீரை வாரி இரைத்துத் தீயை அணைத்து விடுகிறார்கள். இல்லை யென்றால் தீயில் எரிந்து சாம்பலாகி தீ அவிந்துவிடுகிறது. என்ஜின்கள் வருவதற்கு அவ்வளவு காலதாமதமாகிறது. காரணம் முன்பு தீ அணைப்பு என்ஜின்களுக்கு ஸ்பீட் லிமிட் இல்லை. இப்போது 20 மைல் வேகத்திற்குமேல் போகக்கூடாது என்று ஒன்றிரண்டு விபத்துக்கள் நடந்துவிட்டன என்பதற்காக ஏற்படுத்தியிருக்கிறார்கள், விபத்து ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது. அதற்காக இவற்றுக்கு ஸ்பீட் லிமிட் வைக்கக் கூடாது. முன்போலவே தீ விபத்து என்றால் அவர்கள் துரிதமாகச் சென்று தீயை அணைக்க வகை செய்யவேண்டும்.

மதுராந்தகத்தைப் பொறுத்தவரையில் செங்கல்பட்டில் இருந்து தீ அணைப்பு என்ஜின் வருவதாக இருந்தாலும், திண்டிவனத்தில் இருந்து வருவதாக இருந்தாலும் இரண்டு மூன்று மணி ஆகிவிடுகிறது. தீ விபத்து ஏற்பட்டால் உடனடியாக டெலிபோன் பண்ணுவதில் கூட தொலைபேசி கிடைப்பது இல்லை, நீண்ட நேரம் ஆகிவிடுகிறது. ஆகவே மதுராந்தகத்திலேயே இந்த ஆண்டு தீ அணைப்பு நிலையம் ஒன்றை ஏற்படுத்துவது குறித்து முதலமைச்சர் அவர்கள் இந்த அவையில் அறிவிப்புச் செய்யவேண்டுமென்று தெரிவித்துக்கொள்வது என் கடமை என்று கருதுகிறேன். இந்த அளவோடு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** மாண்புமிகு உதவி சபாநாயகர் அவர்களே, போலீஸ் மானியத்தின் மீது நான் பேசுகின்றபோது எங்கள் கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய சில வெட்டுத் தீர்மானங்களை வற்புறுத்தி, பொதுவாக சில

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1975 ஏப்ரல் 1

கருத்துக்களைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். ஆரம்பத்திலேயே சில பொதுவான திருத்தங்களைச் சொல்லிவிட்டு, நேரம் இருந்தால் சில விவரங்களையும் கொடுக்கலாம் என்று நினைக்கிறேன்.

சென்ற வருஷம் நான் பேசும்போது 11—3—1974, 12—3—1974-இல் நடந்த செமினாரில்

'Drastic changes in organisational structure, method of work, attitude and approach of police needed to improve its image. *Ad hoc* changes no good; changes should be from a total angle'

என்று அன்றைக்குச் சொல்லப்பட்ட கருத்தை எடுத்துச் சொல்லி, அது எப்படி பொருத்தமாக இருக்கும் என்பதை உதாரணங்கள் மூலம் எடுத்துச் சொன்னேன்.

இப்போது ஐ.ஜி.-க்களுடைய மகாநாடு சமீபத்தில் டெல்லியில் நடந்தது, அந்த மகாநாட்டில் பேசிய பிரதம மந்திரி அவர்கள் நான்கு முக்கியமான கருத்துக்களைச் சொன்னார்கள்.

ஒன்று, போலீஸ் இலாகா பூராவும் இன்றைக்கு நாட்டிலேயிருக்கிற ஜனநாயக அடிப்படையைப் புரிந்துகொள்ள வேண்டும். இரண்டாவது, அரசியல் சட்டத்தை நல்ல முறையிலே தெரிந்திருக்க வேண்டும். மூன்றாவது செக்குலரிசம்—ஜாதிமத பேதமின்றி செயல்படக் கூடிய பக்குவம் அடையவேண்டும். நான்காவது, அதிகாரிகளைப் பொறுத்தவரையில் கீழே இருக்கக்கூடிய சாதாரண போலீசார்களுக்கு மத்தியிலே நல்ல உறவு கொண்டிருக்க வேண்டும். இந்த நான்கு அம்சங்களை அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். இந்த 4 அம்சங்களை வைத்துப் பார்க்கும்போது எவ்வளவு குறைகளிருக்கின்றன என்று அந்த இலாகாவே பார்க்கும் என்று கருதுகிறேன்.

இங்கு அமைத்திருக்கின்ற போலீஸ் கமிஷன் ரிப்போர்ட்டை நான் படித்துப் பார்த்தபொழுது, எப்படி அட் ஹாக்காகச் செய்ய வேண்டுமென்ற கருத்துக்கள் தான் வந்திருக்கின்றனவே தவிர, இம்மாதிரி ஆழமான, இன்றைக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய சமுதாய மாற்றங்களுக்கு ஏற்ற மாதிரி காரியங்களைச் செய்யவேண்டுமென்று வரவில்லையென்றுதான் எனக்குப் படுகிறது. இதை வைத்துப் பார்க்கும்போது, ஒரு முக்கியமான விஷயத்தைப் போலீஸ் ஆபீசர்களுக்கு உங்கள் மூலமாகச் சொல்ல விரும்புகிறேன்.



1975 ஏப்ரல் 1] [திரு. கே. டி. கே. தங்கமணி]

இப்பொழுது, க்ரிமினல் ப்ரொஸீஜர் கோடில், கமிட்டல் கோர்ட் கிடையாது. நேரடியாக செஷன்ஸ் கோர்ட்டுக்குப் போகிறது. அப்படி செஷன்ஸ் கோர்ட்டிலே விடுதலை ஆகிறபோது, அது மலீஷியஸ் பிராசிக்யூஷன் என்று கண்டிப்பாக வரவிருக்கிறது.

"Suit for compensation for malicious prosecution"

என்று வரவிருக்கிறது என்பதை மட்டும் நான் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஏனென்றால், இந்தமாதிரி பொலிட்டிக்கல் மோட்டிவ் பேரிலே கேஸ்கள் நடத்தப்படுகின்றன என்று சமீபத்திலே குசேலரைச் சேர்த்திருப்பது பற்றி ஜட்ஜ் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். குசேலரும், மாதவன் போன்றவர்கள் எல்லாம் அரசியல் நோக்கத்தோடுதான் சேர்க்கப்பட்டு இருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அதுபற்றி என்னுடைய கருத்தைச் சொல்ல விரும்பவில்லை. இந்தமாதிரி அரசியல் நோக்கத்தோடு, அரசியல் ஆதாயத்துக்காக, இம்மாதிரி போலீஸ் பிராசிக்யூஷன்ஸ் ஆரம்பிப்பதைக் கொஞ்சம் திட்டமிட்டு, அவர்கள் தடுத்து நிறுத்தவேண்டும். ஏனென்றால், ஏதாவது ஓரிடத்தில்—என்னைக்கூட என் கட்சியில் வற்புறுத்தினார்கள் நீங்கள் கண்டிப்பாக டாமேஜஸ் வழக்கு போட வேண்டும், அந்தத் தீர்ப்பைப் பொறுத்தவரையிலென்று. அந்த வழக்கை யார் மேல் போடுவது? அரசாங்கம் மேல் அல்ல—போலீசார் மேல்தான் போட வேண்டும். அந்த அபாயம் வந்துவிடும் என்று முதன்முதலில் நான் எச்சரிக்கை விடுக்கிறேன்.

தமிழ்நாடு போலீஸ் சாதனைகள், மற்றவைகள்பற்றியெல்லாம் சொன்னார்கள். It is in herited.

இந்த நாட்டை பிரிட்டிஷார் விட்டுப் போயிருக்கக்கூடிய நேரத்தில் இந்த அமைப்பை நல்ல முறையில் வைத்துவிட்டுப் போயிருக்கிறார்கள். அது தொடர்ந்து வருகிறது என்பதற்கு மேல் வேறு சொல்ல முடியவில்லை.

Investigation is not only defective but it leads to all kinds of questioning.

ஆனால், இன்றைக்கிருக்கிற அளவிலே எந்த அளவு புகுத்தப்பட்டிருக்கிறது என்பதைத்தான் பார்க்கவேண்டும்.

பெரிய அளவில் பார்த்தால், சென்னை நகரத்திலே ஏற்பட்ட 3 சம்பவங்கள்பற்றி ஏற்கனவே குறிப்பிட்டார்கள். ஒரு சம்பவம், வெங்கா சம்பவம். வெங்கா சம்பவத்தில் ஒரே ஒரு பாய்ன்ட்டை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன். யார் இதனால் ஏமாந்து விடுவார்கள் என்று இந்த போலீஸ் அதிகாரிகள் நினைக்கிறார்கள்? அல்லது இதற்கு அறிக்கை விடக்கூடிய கமிஷனர் நினைக்கிறார்?

பட்டப்பகலிலே, ஹாஸ்டலிலே ஒரு டாக்சி வந்து, அதிலிருந்து 4 பேர் இறங்கி, அங்கே இருக்கக்கூடிய ஒருவரைத் தாக்கிவிட்டுப் போகிறார்கள். டாக்சியைப் பிடித்திருக்கிறோம். டிரைவருக்கு ஒன்றும் தெரியாது என்று சொல்கிறாராம். டாக்சி டிரைவருக்கு வேறு நோக்கமில்லாமல் இருந்தால், ஒருவரைக் குத்திவிட்டு வருகிறவர்களை ஏற்றுவாரா? அதுகூடத் தெரியாதா? ஆகவே, even gullible people will not be taken in by this kind of statement என்ற அளவுக்கு மட்டும் நான் இந்த விஷயத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, சென்ற மாதம் 24-ம் தேதி, சட்டக் கல்லூரியில் நடந்த சம்பவம்—3½ மணி நேரம் உள்ளே இருக்கிற மாணவர்களை வெளியே இருக்கிறவர்கள் தாக்குகிறார்கள். எங்களுக்குக் கிடைக்கிற விவரம் போலீசாருக்குக் கிடைத்திருக்காதா? வெளியிலே இதற்காக ஏற்படுத்தப்பட்டவர்கள் உள்ளே செல்கிறார்கள். கூட வரக்கூடிய மாணவர்களுக்கு ஏதாவது தாக்குதல் ஏற்பட்டு விடுமோ என்று கையிலே கைக்குட்டையைக் கட்டி, கையை உயர்த்திக்கொண்டு போகிறார்கள். இதுமாதிரி சென்னையிலே 3½ மணி நேரம் நடக்கிறதென்றால், போலீசாருக்குத் தெரியாதா? இது ஒன்றும் பாராட்டக்கூடிய விஷயமல்ல, வருத்தப் படக்கூடிய விஷயம். யாரைச் சொல்ல முடியும்? போலீஸ் கமிஷனரைத் தான் சொல்ல முடியும்.

சென்னையிலே, பத்திரிகையிலே படித்தேன். கமிஷனர் அவர்கள் அடிக்கடி பத்திரிகைகளுக்கு அறிக்கை விடுகிறார்கள். அறிக்கைகள் விடுவது சரிதானா என்பது வேறு விஷயம். அறிக்கைகள் விட்டு எங்களை எல்லாம் தயாரிக்கிறார்கள். நுங்கம் பாக்கத்திலே ஓட்டல் மாடியிலேயிருந்த ஒருவர் இறந்துவிட்டார். அவர் டான்ஸ் மாஸ்டர் மலேசியா மகாலிங்கம். ஒரு பரபரப்பான செய்தி. ஒரு பெரிய ஓட்டலிலிருந்து ஒருவர் கீழே விழுந்து இறந்திருக்கிறார். உடனே, போலீஸ் அறிக்கை என்ன வந்திருக்கிறது. கொலை செய்திருக்கிறார்கள், அதற்கு இன்வெஸ்டிகேஷன் நடத்திக் கொண்டிருக்கிறோம், என்று. ஒரு வாரத்திற்குப் பிறகு அது கொலையல்ல, தற்கொலையென்று அறிக்கை விடுகிறார் கமிஷனர். தயவுசெய்து நீங்கள் செய்யாதீர்கள். அது ரொம்பத் தவறான விஷயம். அது என்ன நிலையிலிருக்கிறது? என் கொலை என்று சொன்னது? தற்கொலை என்று ஒரு வாரத்திற்குள் வருகிறது? இது சென்னை நகரத்திற்குள் வருகிறது. இப்படிச்





செய்தால், உங்கள் இன்வெஸ்டிகேஷனைப்பற்றி நாங்கள் ரொம்பவும் யோசிக்கக்கூடிய நிலையிலிருக்கிறோம் என்பதை மட்டும் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

செழியன் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். சென்ற வருஷம் ஜூன் மாதத்தில் சேலம் வீரபாண்டியில் நடந்த விஷயம்பற்றிச் சொன்னார்கள். ஜூன் 6-ம் தேதி இரண்டு பேர் கொலை செய்யப் பட்டிருக்கிறார்கள்—இன்றையதினம் வரைக்கும் நீங்கள் சார்ஜ் ஷீட் போட்டிருக்கிறீர்களா? அப்படி சார்ஜ் ஷீட் போடவில்லை யென்றால் ரொம்ப யோசிக்கவேண்டிய விஷயம். 10 மாதத்திற்குப் பிறகு ஒரு கொலை கேசிலே சார்ஜ் ஷீட் போடவில்லையென்ற நிலைக்கு வருகிறது.

நான்கு உதாரணங்கள்தான் சொன்னேன். இப்படி எத்தனையோ உதாரணங்களைச் சொல்ல முடியும். எதற்காக இதைச் சொல்கிறேனென்றால், இன்றைக்கு இந்த மாநிலத்திலே இன்வெஸ்டிகேஷனைப் பொறுத்தவரையிலே it is coloured by political prejudice அல்லது you are being influenced. இந்த நிலையை எடுப்பார்களானால் யாருக்குமே பாதுகாப்பு இல்லை யென்ற பயங்கரமான நிலை ஏற்படும் என்ற அளவோடு இதைச் சொல்லி, அந்த இடத்திலே நிறுத்திக்கொள்ளலாம் என்று நினைக் கிறேன்.

அடுத்தாற்போல், போலீஸ் துப்பாக்கிப் பிரயோகங்கள் சம்பந்தமாக, ஒவ்வொரு வருஷமும் விவரங்கள் கொடுக்கிறோம். நாங்கள் கேட்கிறோம், போலீஸ் நல்ல முறையிலே ரிப்போர்ட் கொடுக்கிறார்களா என்று. நான்கு வருஷ ரிப்போர்ட்டைப் படிக்கிறேன். எல்லாம் ஒரேமாதிரியிருக்கிறது. Even in preparing the report, you do not apply your mind. எந்த விசேஷத் தன்மை, இந்த வருஷத்திலே என்ன அம்சங்கள் என்று பார்க்க முடியவில்லை. இருப்பது எவ்வளவு டிஃபெக்டிவாக இருக்கிறது என்பதற்கு ஓரே ஒரு உதாரணம் சொல்கிறேன். அது என்னவென்று சொன்னால், வாலாந்தூரில் நடந்த சம்பவம். அக்டோபரில், பக்கத்திலிருக்கிற ஒரு போலீஸ் சப்-இன்ஸ் பெக்டர் அங்கே போனார் என்று விவரம் கொடுத்திருக்கிறார்கள். கடைசியிலே எஸ்.டி.எம். விசாரித்திருக்கிறார். இப்படித்தான் எஸ்.டி.எம். ரிப்போர்ட் என்று சொன்னால் யோசிக்க வேண்டிய விஷயம். எஸ்.டி.எம். ரிப்போர்ட்டைக் கொடுங்கள். விசாரித்திருக்கிறார் என்று சொன்னால், நான் வேறு கடுமையான வார்த்தை சொல்ல விரும்பவில்லை.

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1975 ஏப்ரல் 1

A to Z, it is a falsified statement.

இப்படி எதற்காக நீங்கள் கொடுக்க வேண்டும்? ஒரு குறிப்பிட்ட போலீஸ் எஸ்.ஐ.-யைப் பாதுகாக்க வேண்டுமென்பதற்காகவா? அன்றைக்கு ப்ரொஹிபிஷன் ரெய்டுக்கா போனார்? விசாரித்துத் தெரிந்துகொள்ள முடியாதா? அங்கே பார்த்தால், விரோதமாக நடந்து கொண்டார் என்று 200 பேர்கள் சொல்கிறார்கள். நான் மறுநாள் அங்கு போனேன். போலீஸ் அதிகாரிகள் நீங்கள் போகவில்லை, நான் போனேன், அங்கே காங்கிரஸ் தியாகி நடந்த விஷயத்தைச் சொன்னார். சுட்டது நாயக் அல்ல. சுட்டது ரிவால்வரால், கையிலேயிருந்த மஸ்கட்டால், சுட்ட பிறகு நாயக் சுட்டார் என்று சொல்கிறார்கள். உண்மையாகத் தெரிந்த விஷயமாக இருக்கிறது. எனக்குத் தெரிந்த விஷயம் இப்படி இருக்கும் என்று சொன்னால், போலீஸ் சம்பந்தமான விஷயங்களை நாங்கள் எப்படி ஏற்றுக்கொள்வது? ஏனென்றால், அந்த விஷயம் எனக்குத் தெரிந்த விஷயம். எஸ்.டி.எம். விசாரித்த பிறகு ஏன் இன்றைக்கு பிராசிக்யூட் பண்ணவில்லை? அந்த எஸ்.ஐ. முகத்தைக்கூட நான் பார்த்தது கிடையாது. அவர் துப்பாக்கிப் பிரயோகம் பண்ணியவர். அங்கேயே இருக்கிறார். அவரே இன்வெஸ்டிகேட் பண்ணுகிறார். அவரே கேஸ் போடுகிறார் என்றால் எங்களுக்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது? அந்த சப்-இன்ஸ்பெக்டரை மாற்ற வேண்டும். இங்கு எஸ்.டி.எம். ரிப்போர்ட்டைக் கொடுக்க வேண்டும். இப்படி நடக்கிற நிகழ்ச்சிகளுக்கு வருத்தம் தெரிவிக்கிற முறையிலே உங்கள் அறிக்கை இருக்க வேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன். மற்றபடி காழ்ப்புணர்ச்சியோடு அல்ல, போலீசுக்கு உதவி செய்கிற முறையிலேதான் சொல்கிறேன்.

(நண்பகல் 12-00)

அடுத்தபடியாக, மதுரையிலே பார்க்கிறோம் மதுரையிலே எந்த போலீஸ் அதிகாரியையும் நான் சந்தித்தது கிடையாது. பொதுவாக விசாரிக்கிறபோது அவர்களைப்பற்றித் தெரிய வருகிறது. அங்கேயிருக்கிற இரண்டு எஸ்.பி.-யாக இருந்தாலும் சரி, டி.எஸ்.பி.யாக இருந்தாலும் சரி, குறைகள் இருப்பதாகத் தெரியவில்லை, போலீஸ் மத்தியிலே இருக்கலாம், அம்மாதிரியான நிலைமைகளை மாற்றவேண்டும்.



1975 ஏப்ரல் 1] [திரு. கே. டி. கே. தங்கமணி]

சில சந்தர்ப்பங்களிலே சில நிகழ்ச்சிகள் ஏற்படுகிறபோது சில போலீஸ் அதிகாரிகளை மாற்றுகிறார்கள், சில அதிகாரிகளை மாற்றுவதில்லை. யார் யாரை மாற்றவேண்டுமோ அவர்களை மாற்றுவதில்லை, யார் யாரை மாற்றக்கூடாதோ அவர்களை மாற்றக்கூடிய நிலைமை இருக்கிறது. சொக்கத்தேவன்பட்டியிலே நடந்த விஷயம் சம்பந்தமாக வாலாந்தூரிலே இருக்கிற சப் இன்ஸ்பெக்டர் மாற்றப்பட்டிருக்கவேண்டும். ஆனால் அவர் மாற்றப்படவில்லை. அதேமாதிரி மடத்துக்குளம் சம்பவம்பற்றி இங்கே பேசப்பட்டது என்பதால் நான் விவரங்களைச் சொல்லவில்லை, சப்-இன்ஸ்பெக்டர் முருகையன் கணியூரிலிருந்து கொண்டு எல்லோரையும் மிரட்டுகிறார். எங்கள் கட்சிக்காரர்களையும் மிரட்டியிருக்கிறார். எங்கள் கட்சிக்காரர்கள் நாங்கள் எட்மண்ட் இடமும் தங்கமணியிடமும் சொல்கிறோம் என்று அவரிடம் சொன்னபோது அவர் சொன்னதாகச் சொல்கிற வார்த்தைகள் மிகவும் மோசமான வார்த்தைகள், மனிதனே வெட்கப்பட வேண்டிய வார்த்தைகள், பண்புடைய ஆறறிவுடைய மனிதன் பேசக்கூடாத வார்த்தைகளைப் பேசியிருக்கிறார், எனக்கு அதிகாரம் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார். இவர்களையெல்லாம் மாற்றமாட்டேன் என்று சொல்கிறார்கள்.

கோபிசெட்டிபாளையத்திலே சப்-இன்ஸ்பெக்டர் 60 பாக்யூரியாவைப் பிடித்துவிட்டார். அவர் அந்தக் கேஸை நடத்துவேன் என்று சொல்கிறார், கலெக்டர் நடத்தாதே என்று சொல்கிறார். அவர் நிலைமை என்ன ஆகுமோ? மாற்றப்படப் போகிறாரா என்பது எனக்குத் தெரியாது.

அடுத்தபடியாக, சென்னையிலே நடக்கக்கூடிய விஷயங்கள், அப்போதே சொல்ல வேண்டுமென்று நினைத்தேன். இரண்டு இடங்கள் இருக்கின்றன, ஒன்று பல்லாவரம், இன்னொன்று குரோம்பேட்டை—எங்கள் பக்கத்திலே தெற்கத்தி ரௌடியும் வடக்கத்தி ரௌடியும் போனாலும் என்று சொல்வார்கள். பல்லாவரத்திலே ஒரு ரௌடிக் கூட்டம், குரோம்பேட்டையில் ஒரு ரௌடிக் கூட்டம் இருக்கிறது. குரோம்பேட்டை ஸ்டேஷனையே படாதபாடு படுத்தினார்கள், ஜனங்கள் எல்லாம் ஓடியிருக்கிறார்கள்: அங்கே பாவம் ஒரு எஸ்.ஐ. நல்ல மனுஷன், அவரை மாற்றியிருக்கிறார்கள். நான் விவரங்களுக்குள் போகவில்லை, இப்படி இருக்க வேண்டிய ஆள் இருக்க வேண்டிய இடத்தில் இருப்பதில்லை. ஒரு இடத்திலே இருக்கக்கூடாத ஆள் இருந்துகொண்டிருக்கிறார் என்ற நிலைமைதான் இருக்கிறது.

முத்துப்பேட்டையிலே ஒருவர் இருக்கிறார், ராமசுவாமி அய்யர் என்பவர். அவர் இந்த நவம்பர் மாதம் ரிடையர் ஆகப் போகிறார். இங்கேயிருந்து ஒரு மந்திரி அங்கே போகிறார். அங்கேயிருக்கிற எம்.எல்.ஏ. அவரிடம் அவரை வேண்டாம், அவரை மாற்றவேண்டுமென்று சொல்கிறார். மாற்றப்படுகிறார் என்றால் இதைப்பற்றி ஒரு போலீஸ் அதிகாரி சொன்னார், நீங்கள் சொல்லுங்கள், இப்படி ரிடையர் ஆகக்கூடியவர்களையெல்லாம் மாற்றுகிறார்கள் என்று சொன்னார். இந்த நிலைமைகள் எல்லாம் இருக்கின்றன. இது சரியல்ல.

இந்த போலீஸ் பற்றி நாங்கள் எப்போதுமே சொல்வது, அது விவசாயிகள் நடத்தக்கூடிய போராட்டமாக இருந்தாலும் சரி, தொழிலாளர்கள் நடத்தக்கூடிய போராட்டமாக இருந்தாலும் சரி, அல்லது அரசியல் இயக்கங்கள் நடத்தக்கூடியவைகளாக இருந்தாலும் சரி, போலீஸ் தலையிடாமல் இருப்பது நல்லது. அவர்கள் தலையிடுவதால் சிக்கல்கள் வருகின்றன. அவர்களே தீர்த்துக் கொள்ளக்கூடிய விஷயங்கள் இருக்கின்றன. அவைகளிலே இவர்கள் தலையிடுகிறார்கள். சிக்கல்கள் ஏற்படுகின்றன, அரசியல் கலர் கொடுக்கிறார்கள். ஒரு காலத்திலே நாங்கள் பிரிட்டிஷாரை எதிர்த்த காலத்திலேயும் சரி, நாங்கள் காங்கிரஸ்காரர்களை எதிர்த்த காலத்திலேயும் சரி, தி.மு.க.வை எதிர்த்த நேரத்திலேயும் சரி போலீசார் இப்படி இப்படி பேசவேண்டும் என்று சொல்லிக்கொடுக்கிறார்களோ என்னமோ தெரியவில்லை. ஸ்ட்ரைக் என்றாலும் மற்ற எந்தக் காரியமானாலும் அப்படித்தான் நடந்துகொள்கிறார்கள். ஹாஸ்டலில் தாக்குதல் நடைபெற்றது, ஒவ்வொரு பையனும் நான் ஹைகோர்ட் ஜட்ஜாக வருவேன் என்றும் நான் டிஸ்ட்ரிக் ஜட்ஜாக வருவேன் என்றும் சொல்லி அந்தப் பையன்களை ரத்தக் கறையோடு ஓடுகிற நேரத்திலே போலீசார், போகிறார் ஐயா ஹைகோர்ட் ஜட்ஜ், போகிறார் ஐயா இவர்தான் டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ் என்று சொல்கிறார்கள், இந்தமாதிரி காரியங்கள் எல்லாம் செய்யக் கூடாது.

ஹவுஸ் சர்ஜன்ஸ் ஸ்ட்ரைக் நடக்கிறது. நான் நேற்று அவர்களோடு 2 மணி நேரம் பேசினேன். மதுரைக்குப் போயிருந்தேன். அவர்கள் மறியல் பண்ணினார்கள். சட்ட விரோதமானதா, ஆம், சட்ட விரோதம் என்றால் சட்டவிரோதமாக இருக்கிற எல்லாவற்றிலும் போலீஸ் நடவடிக்கை எடுக்கிறதா? நான் கேட்கிறேன். சட்டவிரோதமாகச் செய்யக்கூடிய எத்தனை





நிலப்பிரபுக்களை, எத்தனை முதலாளிகளை நீங்கள் கைது செய்திருக்கிறீர்கள்? முடியாது, சாத்தியமில்லை. ஆனால் தொழிலாளர்கள் என்றால் இன்றைக்கு கேவலமாகிவிட்டது. ஏதோ ஸ்ட்ரைக் என்றால் பாவமாக இருக்கிறது என்ற முறையிலே உங்கள் ரிப்போர்ட்டிலே ஒரு கருத்தோட்டம் இருக்கிறது. உலகத்திலேயே ஸ்ட்ரைக் சட்ட பூர்வமானது என்று சொல்கிறார்களே, விவசாயிகள் போராட்டத்திலே இப்படிச் செய்தோம், ஸ்ட்ரைக்கிலே இப்படிச் செய்தோம் என்று போலீஸார் தலையிடுவதைச் சொல்கிற முறையிலே உங்கள் ரிப்போர்ட் அமைந்திருக்கிறது, அந்தப் போக்கு சரியில்லை. ஹவுஸ் சர்ஜன்ஸ் மறியல் செய்கிறார்கள். இந்த போலீஸார் அவர்களை அரஸ்ட் பண்ணி லாக் அப்பிலே வைத்து கேஸ் போடுகிறார்கள். இது என்ன அவ்வளவு பெரிய கேஸா, அவர்களிடத்திலே முச்சலிக்காவிலே கையெழுத்து வாங்கி வாருங்கள். என்று சொல்கிறார்கள். இதற்குத்தானா அவர்கள் இருக்கிறார்கள். இம்மாதிரியான காரியங்களை அவர்கள் செய்யக்கூடாது.

மடத்தினுடைய நிலங்களையெல்லாம் குத்தகைதாரர்களுக்குக் கொடுப்பது என்ற கருத்து இருக்கிறது, அதற்காக சட்டம்கூட வரலாமென்ற நிலைமையிருக்கிறது. வைத்தீஸ்வரன் கோயிலில் மடத்திற்குச் சொந்தமான நிலங்களில் குத்தகைதாரர்கள் இருக்கிறார்கள். அவர்கள் குத்தகை கொடுத்தால் அவர்கள் வாங்குவதில்லை. அவர்களுக்கு பட்டா இருக்கிறதா இல்லையா என்று பார்ப்பது வேறு விஷயம். அப்படி வாங்காமல் அவர்களே எடுத்துக்கொண்டார்கள் என்ற முறையிலே 5 பேர்களை ஜெயிலில் பிடித்துப் போட்டிருக்கிறார்கள். தொழிலாளர்களை ஜெயிலில் பிடித்துப்போடுவது, ஹவுஸ் சர்ஜன்களை ஜெயிலில் பிடித்துப் போடுவது என்ற இப்படிப்பட்ட காரியங்களிலே எல்லாம் ஈடுபடவேண்டாம்.

அப்படி ஏதாவது செய்யவேண்டுமென்றால் ஆன்ட்டி அன்டச்சபிலிட்டி ஸ்குவாட் என்ற அமைப்பு வேலைசெய்து இத்தனை பேர்கள்மீது வழக்குப்போட்டோம் என்று அடுத்த வருஷத்திலே வரட்டும். இல்லஸ்ட்ரேட்டட் வீக்லியிலே ஒருவர் எழுதியிருக்கிறார், தமிழ்நாட்டிலே ஆன்ட்டி அன்டச்சபிலிட்டி ஸ்குவாட் மூவாக ஆரம்பித்து கைது செய்யவேண்டுமென்றால் பல லட்சக்கணக்கான கேஸ்கள் போடவேண்டுமென்று மாஜி போலீஸ் அதிகாரி எழுதியிருக்கிறார். அந்தமாதிரியான காரியங்களைச் செய்தியிருந்தால் புரிந்துகொள்ளலாம்.

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1975 ஏப்ரல் 1

நேரம் போய்க்கொண்டிருக்கிறது. நான் ஃபயர் சர்வீஸ் பற்றிச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். 'Can the Ethiopian change his skin and leopard its spots' என்ற ஒரு 'saying' இருக்கிறது. அந்தமாதிரி நிலைமை போலீஸுக்கு வந்துவிடுமோ என்று நினைக்கிறேன். இப்போது புதிதாக போலீஸ் அதிகாரிகள் வருகிறார்கள். அவர்கள்தான் அப்படி இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். 'Stations manned especially by new recruits excesses in police' என்ற முறையிலே நான்கூட வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

ஜனங்கள் பயப்படக்கூடிய முறையிலே நீங்கள் நடந்து கொள்ள வேண்டும், அப்படிச் செய்தால்தான் அந்தஸ்து இருக்கும் என்று சொல்லுகிறார்களோ என்னவோ தெரியவில்லை. உதாரணத்திற்குச் சொல்கிறேன். 23 ஆம் தேதி மதுரையிலே ராத்திரி சினிமா பார்த்துவிட்டு வந்த கைத்தறி நெசவாளர்கள், வியாபாரிகள் விளக்குத் தூண் பக்கத்திலே நின்றுகொண்டிருந் திருக்கிறார்கள். அங்கேயுள்ள புதிய எஸ்.ஐ. அவர் பெயர் அருணாசலமோ, அண்ணாமலையோ தெரியவில்லை, அவர்களை உள்ளே பிடித்துக் கொண்டுபோய் போட்டிருக்கிறார். சந்தேகக் கேஸ் என்ற முறையிலே போட்டிருக்கிறார். இந்த சந்தேகக் கேஸ் என்பதே சர்க்காருக்கு சந்தேகிக்கக்கூடிய கேஸ் என்ற முறையிலே தெரிவித்துக்கொள்கிறேன். மூன்றாவது வருஷம் நான் இந்த சந்தேகக் கேஸ்களைப்பற்றி சொன்னபோதுகூட முதலமைச்சர் அவர்கள் அப்போது சொன்னார்கள், நீண்டநாட்களாக பிடிபடாத 3 பேர்களை அதனால் பிடித்துவிட்டோம் என்று சொன்னார்கள். நீண்டநாட்களாக பிடிபடாமல் இருந்தார்கள் என்றால் அது போலீஸ் திறமைக் குறைவு என்று அர்த்தம். அதற்காக சந்தேகக் கேஸ்களைப்போட்டு இரண்டொரு பேர்களுக்காக பலபேர்களைப் பிடிக்கக்கூடிய முறை சரியல்ல.

எரியோட்டிலே சிலர் கல்யாணத்திற்காக வந்தவர்கள் அங்கே படுத்திருந்திருக்கிறார்கள். அவர்களையும் கைது செய்து, கல்யாணப் பார்ட்டி பூராவும் சந்தேகக் கேசில் போய்விட்டது. சந்தேகக் கேசே பூராவும் சந்தேகக் கேசில் போய்விட்டது. சந்தேகக் கேசே போடக்கூடாது என்று ஒரு 'மான்டேடரி ஆர்டர்' போட்டால்கூட நல்லது என்று நினைக்கிறேன். அப்படிச் செய்வது பலவிதத்திலும் உதவிகரமாக இருக்கும். இன்றைக்கு அழுக்குச் சட்டை போட்டு-



1975 ஏப்ரல் 1] [திரு. கே. டி. கே. தங்கமணி]

கொண்டிருப்பவர்கள், இடமில்லாத காரணத்தால் எங்கேயாவது படுத்துக் கொண்டிருப்பவர்கள் என்று இவர்கள்மீதுநான் சந்தேகக் கேஸ் போடக்கூடிய நிலைமை இருக்கிறது.

அடுத்தபடியாக, ஃபயர் சர்வீஸ் பற்றி வருகிறேன். As important as police. ஏனென்றால் போலீஸ் ஸ்டேஷன்களைத் திறப்பதைவிட ஃபயர் சர்வீஸ் ஸ்டேஷன்களை அதிகமாகத் திறப்பது நல்லது என்று கருதுகிறேன். ஏனென்றால் அவர்களுக்கு வகுத்திருக்கிற கடமைகள் மக்களுக்கு உதவி செய்யும் கடமைகள். மக்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்றுதான் போலீஸ் அமைப்பும் ஏற்பட்டது. ஆனால் போலீஸ் அமைப்புகள், பிரிட்டிஷார் காலத்தில் செய்ததைப்போலவே, இன்றைக்கும் ஆளுங்கட்சியிலே இருப்பவர்களுக்கு உதவியாக இருக்க வேண்டு மென்ற முறையிலே 'பொலிடிகல் மோடிவேஷனில்' காரியங்களைச் செய்து வந்திருப்பதால்தான் போலீஸ் ஸ்டேஷன்களின் எண்ணிக்கையைக் குறைத்து ஃபயர் சர்வீஸ் ஸ்டேஷன்களை எண்ணிக்கையில் கூட்டுவது நல்லதாக இருக்கும்.

ஃபயர் சர்வீசைப்பற்றி கொடுத்த ரிப்போர்ட்டிலே ஒரே யொரு காட்டிகரியைப் பற்றி மட்டும் வாசிக்க விரும்புகிறேன். போன வருஷம் லீடிங் ஃபயர்மென் 328 என்று இருந்தது இன்றைக்கு 284 என்று குறைந்திருக்கிறது. போன வருஷத்தை விட அதிகமாக இருப்பார்கள் என்று கருதிப் பார்த்தேன். ஆனால் டோட்டலில் 200, 300 கூடியிருக்கிறதே தவிர முக்கியமான காட்டிகரியில் ஆட்கள் குறைந்திருக்கிறது.

திரு. பழனிவேல் ராஜன் அவர்கள் எஸ்டிமேட்ஸ் கமிட்டி சேர்மனாக இருந்தபொழுது, 1972-73-இல் எஸ்டிமேட்ஸ் கமிட்டி கொடுத்த ரிப்போர்ட்டில், பாரா 38-லே I refer to Para 38 for consideration of Government. அதிலே அவர்கள் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இரண்டு பேர்களுடைய வேலையும் ஒன்றுதான், இரண்டு பேர்களின் தகுதியும் ஒன்றுதான், வெகுமதி கொடுப்பதும் இரண்டு பேர்களுக்கும் ஒன்றுதான், அப்படி யிருந்தும்கூட,

The Committee comes to the irresistible conclusion that there is no sufficient or valid reasons for this disparity.

The Committee therefore strongly recommends that the pay and allowances of the fireman must be equated with the pay and allowances of the police constable.

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1975 ஏப்ரல் 1

The Committee also recommends that as in the case of fireman and the police constable, so in the case of other personnel of the Fire Service, they must be equated with their counter parts in the police force in the matter of not only pay but also other allowances, such as uniform allowance, house rent allowance, off-duty allowance and other allowances. என்று அவர்களைப்பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தமாதிரி ஏதாவதொரு இடத்தில் நெருப்பு பிடித்துக் கொண்டால் அதற்கு அங்கேயிருந்து சாமான்கள் போகவேண்டும். ஆள் மட்டும் போனால் என்ன பிரயோசனம்? அதற்கான சாதனங்கள் வேண்டாமா? மைலாப்பூரில் நடந்த ஒரு சம்பவத்தைப் பற்றி . . . (மணி யடிக்கப்பட்டது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 25 நிமிஷங்கள் ஆகிவிட்டன, சீக்கிரம் முடித்துவிடுங்கள்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** இன்னும் பத்து நிமிடங்களில் முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 5 நிமிடங்களில் முடித்துவிடுங்கள்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** நான் இப்பொழுதே வேண்டுமானாலும் முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வேண்டாம், பேசி முடியுங்கள்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** நான் ஸ்பீக்கரிடம் அரை மணி நேரம் கேட்டேன். அரை மணி நேரம் ஆனதற்குப் பிறகு நான் உட்கார்ந்து விடுவேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, பேசுங்கள்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** அந்த டிரெண்ட்டே போய் விட்டது. I have lost the trend. The trend is gone. ஃபயர்மேன்களைப் பொறுத்தவரையில் சில வெட்டுப் பிரேரணைகளைக் கொடுத்திருக்கிறேன், அவைகளைப் பாருங்கள். அந்த ஃபயர்மேன்களுக்கு நல்ல ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். ஃபயர் ஸ்டேஷன்களை வெரிஃபை செய்து பார்த்தேன். புதிதாக அமைக்கப் போகிறோம் என்று சொல்லிய இடங்களில்



1975 ஏப்ரல் 1] [திரு. கே. டி. கே. தங்கமணி]

அப்படி நான் பார்த்ததில் அமைக்கப்படவில்லை. எனவே, கொடுத்த வாக்குறுதி காப்பாற்றப்பட வேண்டும். இன்னும் அதிகமான இடங்களில் ஃபயர் ஸ்டேஷன்களை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக இரண்டு விஷயங்களை மட்டும் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். ஒன்று, இந்த சென்னை சம்பவத்தைப் பற்றி நான் மறுபடியும் சொல்வதிலே யாரும் தவறாக எடுத்துக் கொள்ளக் கூடாது. சென்னை சம்பவம் கொலையா, தற்கொலையா என்ற பிரச்னை வந்தபொழுது, தற்கொலை என்று கமிஷனர் அறிவிக்கிறார். அப்படி அறிவித்த கொஞ்ச நாட்களுக்குள்ளேயே Commissioner-cum-Additional Inspector–General என்று ஆகிறார். அப்பொழுது எங்களைப் போன்றவர்களுக்குச் சந்தேகம் ஏற்படுமா ஏற்படாதா? அதிலே கோளாறு இருக்கிறது. திடீரென்று இப்படிச் செய்வானேன்? காக்காய் ஏற பனம்பழம் விழுந்தது என்பதுபோல், இந்த அறிவிப்பு வந்ததற்கும் அதற்கும் என்ன சம்பந்தம் என்ற நிலை வரும்பொழுது இதில் அரசியல் உட்பொருள் இருக்கிறதோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது. அந்தச் சந்தேகத்தை பதில் சொல்லும் நேரத்தில் தெளிவுபடுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, போலீசுக்கு ப்ரிவென்ஷன் பண்ணக் கடமையிருக்கிறது. உதாரணமாக, தென்னார்க்காடு ஜில்லாவிலே நடந்த ஒரு சம்பவம். சாதாரணமாக, நம்முடைய நாட்டிலே மாசி மாதம் சிவராத்திரி வந்தவுடன் திருவிழாக்கள் வர ஆரம்பித்துவிடும். சிவராத்திரி அன்று அநேக இடங்களில் கூட்டம் கூடுவார்கள். மாசி சிவராத்திரிக்கு மறுநாள் அமாவாசை. பலயிடங்களிலே சிறு கோயில்களிலும் கூட்டம் கூடுகிறது. அந்த இடங்களுக்கு போலீஸ் பந்தோபஸ்து போக வேண்டாமா? அப்படிப் போகாமல் இருந்ததன் காரணமாக எத்தனைபேர் செத்தார்கள். ஒரு சிறு கோயிலில் இடிந்து விழுந்து எத்தனைபேர் செத்திருக்கிறார்கள்? மண்டபம் அந்தச் சுவர்களிலே உட்கார்ந்து அந்தமாதிரி நடந்திருக்கிறது. என்னைக்கேட்டால் அப்படி நடந்தது போலீசின் கவனக் குறைவால் என்று சொல்வேன்.

அதேமாதிரி இன்னொரு சம்பவம். சமீபத்தில் வறட்சி சம்பந்தமாகப் போய் ஒரு இடத்தில் குழி தோண்டுகிறார்கள். சென்னையிலேயிருந்து எக்ஸ்பர்ட்கள் போய் கிணற்றைத் தோண்டினார்கள். அவர்களுக்கு அந்த ஏரியாவைப் பற்றித்

தெரியவில்லை. அதனால் இரண்டு பேர் உள்ளே போய்விட்டார்கள். பிறகு 4 மணி நேரம் கழித்து பிணத்தை எடுத்திருக்கிறார்கள். இது போலீசுக்குத் தெரியுமா தெரியாதா? இது சம்பந்தமாக ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வந்த நேரத்தில் நீங்கள் வறட்சி நிவாரணம் சம்பந்தமாகப் பேசும்பொழுது பேசலாம் என்று சொல்லிவிட்டார்கள். இன்றைக்குக்கூட மனிதனுடைய உயிர் ரொம்பவும் முக்கியம் என்று சொல்கிறார்கள். ஆதிகாலம் முதற்கொண்டே, murder will be out என்றைக்காவது ஒருவன் கொலை செய்யப்பட்டால் 20 வருஷத்திற்குப் பிறகுகூட அந்தக் கொலை கண்டுபிடிக்கப்படும். மனிதனுடைய உயிருக்கு அவ்வளவு மதிப்பு கொடுத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட மனிதனுடைய உயிர் இப்படிப் போகிறதே என்று பார்க்கும்பொழுது, அதிலே 3 அம்சங்கள் இருக்கின்றன. போலீசைப் பொறுத்தவரையில் முதலாவதாக ப்ரிவென்ஷன், இரண்டாவதாக டிடெக்ஷன், மூன்றாவதாக இன்வெஸ்டிகேஷன் ஆகிய இந்த 3 அம்சங்கள் இருக்கின்றன.

இன்வெஸ்டிகேஷனைப் பொறுத்தவரையில் இருக்கும் டிஃபெக்ட்ஸைப் பற்றி இரண்டு மூன்று உதாரணங்களை மட்டும் சொல்லிவிட்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன். சரித்திர ரீதியாக எடுத்துக்கொண்டு பார்ப்போமே யானால், ஒரு வருஷத்திற்கு முன்பு ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்கள் இங்கு வந்தபொழுது ஒரு கருத்தைச் சொன்னார்கள், இப்பொழுது என்ன சொல்லுவார்களோ என்னவோ எனக்குத் தெரியாது. அப்போது ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்கள், இங்கே விவசாயிகள் மேல் போடும் கேஸ்களெல்லாம் தண்டனைக் குள்ளாகின்றன, நிலச்சுவான்தார்களின்மேல் போடும் கேஸ்கள் விடுதலை ஆகின்றன, இது தமிழ்நாட்டினுடைய தனித்தன்மையாக இருக்கிறது என்று அன்றைக்குச் சொல்லிவிட்டுப் போனார்கள். ஏனென்றால் 44 பேர்கள் இறந்து கேஸ் நடந்தபொழுது ஹைகோர்ட் என்ன சொல்லியிருக்கிறது என்று பார்த்தால், defective investigation இது யாருடைய குற்றம், இதில் போலீசாருக்கு பொறுப்பு கிடையாதா? 44 பேர் இறந்ததற்குப் பிறகு, கொலை செய்யப்படுவதற்கு யார் குற்றவாளி என்று பார்த்து அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லும் நேரத்தில் ஹைகோர்ட் சொல்லும் நிலைமை என்ன? ஹைகோர்ட் defective investigation— என்று சொல்லியிருக்கிறது.



அதேபோல் குசேலர் கேசில், political motivation என்று சொல்லியிருக்கிறது.

என்னுடைய கேசிலே செஷன்ஸ் ஜட்ஜ் motive அரசியலாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். சிந்தன் மேல் போட்ட கேசைப்பற்றி எடுத்துக்கொண்டாலும், ஒரு குறிப்பிட்ட தலைவர் பஸ்ஸிலே போகிறார், அவர் தாக்கப்படுகிறார், அப்படித் தாக்கப் பட்டதற்கு யார்மேலும் குற்றம் இல்லை என்று சொன்னால் இதை எங்கே போய்ச் சொல்வது? எல்லோரும் விடுதலை செய்யப் படுகிறார்கள். நல்ல வக்கீலை வைத்து அவர்கள் விடுதலை செய்யப் படுகிறார்கள். ஆனால் இன்வெஸ்டிகேஷனில் யாராவது ஒருவரை யாவது பிடிக்க முடியாதா? இன்வெஸ்டிகேஷனைப் பொறுத்த வரையில் இதைச் சொல்லிக்கொள்கிறேன்.

குறிப்பாக, ப்ரிவென்ஷன் என்ற முறையிலேயும் குறிப்பிட் டிருக்கிறேன். அடுத்து, இந்த டிடெக்ஷன் என்று வரும்பொழுது பல விவரங்களைச் சொல்லியிருக்கிறேன். டிடெக்ஷன் என்ற முறையில், தமிழக போலீசார் நினைத்தால் இன்றைக்கு எந்தக் கேசையும் சரியாகக் கண்டுபிடிக்க முடியும், அந்தத் திறமை அவர்களுக்கு இருக்கிறது. அப்படிச் செய்யாமற்போனால் அதற்கு திறமைக் குறைவு காரணமல்ல, வேறு ஏதோ காரணம். அதுதான் வீரபாண்டி கேஸ். வீரபாண்டி கேசில் டிடெக்ஷன் முடியவில்லை யென்றால், அவ்வாறு செய்ய முடியவில்லையென்றால் அதற்கு ஏதோவொரு காரணமே தவிர, இவர்களின் திறமைக்குறைவு காரணம் இல்லை. இந்த மூன்று விஷயங்களிலேயும் திறமையைக் காட்ட வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். பள்ளிகளிலே, நம் நாட்டில் பார்லிமெண்டரி ஜனநாயகம் என்றால் என்ன, பார்லிமெண்டரி ஜனநாயகத்தில் முறைகேடுகள் நடந்தால் யார் அதைச் செய்தாலும் அதை தவறு என்று எடுத்துச் சொல்ல வேண்டும்.

அரசியல் சட்டத்தின் புனிதத் தன்மையை உணர்ந்து அரசியல் சட்டத்தின் அடிப்படையில் இன்றைக்கு போலீஸ்காரர்கள் நடக்கிறார்களா என்று பார்க்க வேண்டும். அதே சமயத்தில் அரசியல் சட்டத்தைப் புறக்கணிக்கக்கூடியவர்கள் யாராக இருந் தாலும் அவர்கள் பேரில் நடவடிக்கை எடுக்க போலீசார் தயாராக இருக்க வேண்டுமென்ற அந்த அம்சம் சொல்லப்பட வேண்டும். சாதிச் சண்டைகள் வருகின்றன. ஒரு சாதியைச் சார்ந்தவராக

இன்ஸ்பெக்டரோ, சப்-இன்ஸ்பெக்டரோ, சாதாரண கான்ஸ்டபிளோ இருக்கலாம். அதை வைத்துக்கொண்டு ஏதாவது செய்துவிட்டார்கள் என்று வரக்கூடாது.

மிகவும் கீழ்த்தட்டில் இருக்கும் சாதாரண கான்ஸ்டபிள் இன்றைக்கும் அவஸ்தைப்படுகிறான். அவனுக்கு இன்றைக்கு பாதுகாப்பு இல்லை. பாரதப் பிரதமர் அவர்கள் சொல்லியிருப்பது போல் மேலே இருக்கும் ஐ.ஜி. முதற்கொண்டு கீழே இருக்கும் போலீஸ் கான்ஸ்டபிள் வரையில் நல்ல உறவு இருக்கவேண்டும். 'செல்லிடத்துச் சினம் தீது'. இன்னொரு முறையில் சொன்னால் ஜனங்களைப் பொறுத்தவரை ஐ.ஜி. முதல் கான்ஸ்டபிள் வரை நம்பிக்கைக்குரியவர்களாக இல்லை. அடுத்து, 162 ஸ்டேட்மெண்ட்— Even if it is a statement made before the Inspector-General, you cannot use it here. You cannot use it before a Constable. கான்ஸ்டபிளிலிருந்து ஐ.ஜி. வரை ஜனங்களைத் தண்டிக்கக் கூடிய இடத்தில் ஒரே முறை இருந்து வருகிறது. பாதுகாப்பு என்ற முறையிலும் அந்த முறை வரவேண்டும். அந்த அளவுக்கு இந்தக் காலகட்டத்தில் சாதாரண போலீஸ் கான்ஸ்டபிளிலிருந்து ஐ.ஜி. வரை ஜனங்களுக்கு உதவுகிற முறையில் செயல்படுகிறார்கள். என்ற நிலை வரவேண்டும். அப்போதுதான் ஐ.ஜி. கான்பரன்ஸ் முடிவுகளும், தமிழ்நாட்டில் அளித்த கருத்துரைகளும் இடம் பெறக்கூடிய நிலைமை ஏற்படும் என்று சொல்லிக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. கே. பி. கோபால்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள காவல் துறை, தீயணைப்புத் துறை மானியக் கோரிக்கைகளின்மீது எங்கள் கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்ட வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து ஒருசில கருத்துக்கள் கூற விரும்புகிறேன்.

இந்தியாவிலேயே தமிழ்நாட்டுக் காவல் துறை சிறப்புக்குரியது, பெருமைப்படக்கூடியது என்பதிலே இரண்டுவித அபிப்பிராயங்கள் இருக்க முடியாது. அதே சமயத்தில் இந்தத் துறையிலே செயல்படும் அதிகாரிகள் அனைவரும் நல்லவர்கள் என்று சொல்வதற்கில்லை. ஒரு சிலர் இலாகாவுக்கு பெரும் களங்கமும், மாசும் ஏற்படும் வகையில் பெரும் தவறுகளை மிகத் துணிச்சலுடன் தெரிந்து செயல்படுகிறார்கள் என்ற குற்றச் சாட்டைக் கூற விரும்புகிறேன்.





இதற்கு நான் என்னுடைய நேரடி அனுபவங்களை உதாரணமாக எடுத்துக் கூற விரும்புகிறேன். 6—9—73-ம் தேதியன்று உத்தமபாளையம் தாலுகாவில் கம்பம் பகுதியில் கூடலூரில் அரிசன கிறித்தவத் தெருவில் தெருச் சண்டை நடந்தது. அதிலே, அரசாங்க உத்தியோகஸ்தர்கள், வசதி மிக்கவர்கள் முதலில் காவல் நிலையத்திற்குச் சென்று புகார் மனு கொடுக்கிறார்கள். ஏழ்மை நிலையில் உள்ளவர்கள், அரசியல் பின்னணி இல்லாதவர்கள் தங்கள் தரப்பில் கவுண்டர் பெட்டிஷன் கொடுக்க வேண்டுமென்று என்னை அணுகினார்கள். ஃபோன் மூலம் தொடர்பு கொள்ள முடியாத நிலையில் நான் நேரடியாகக் காவல் நிலையத்திற்குச் சென்றேன். அப்போது அங்கிருந்த ஏ.எஸ்.ஐ. அவர்கள் இரண்டு தரப்பு மனுக்களையும் ஏற்றுக் கொண்டார்கள். இரண்டு தரப்பினரும் காயப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிய வருகிறது, இரண்டு தரப்பினரையும் மருத்துவ மனைக்கு அனுப்புகின்றேன், கோர்ட்டில் நீதி வழங்கப்படும் என்று கூறிவிட்டு நான் தேனிக்குச் செல்ல வேண்டுமென்று கூறினார்கள். அதுமட்டுமல்ல. என்னுடைய முன்னிலையிலேயே என்னுடன் வந்தவர்களை ஏ.எஸ்.ஐ. அவர்கள் காவல் நிலையத்தில் அரெஸ்ட் செய்து வைத்துக் கொண்டார்கள். என்ன நடந்துவிடும் என்று பயந்து அவர்கள் என்னிடம் வந்தார்களோ அது அங்கே நடைபெற்று விட்டது.

பின்பு கோர்ட்டிலே விசாரணை. அன்று முழுக்க முழுக்க கூடலூரில்தான் இருந்தேன். வேறு எங்கும் செல்லவில்லை. முழுக்க முழுக்க எல்லா சாட்சியங்களையும் விசாரித்தார்கள். 'நானே விசாரித்தேன், புலன் விசாரணையை நான்தான் செய்தேன், எதிரியான கைதிகளைக் கைது செய்தது இரவு 11 மணி; ஸ்தலத்திற்குச் சென்று பிடித்து வந்தேன்' என்று கோர்ட்டில் அவர் சாட்சியம் அளித்திருக்கிறார். குறிப்பிட்ட நம். 233 11-வது சாட்சியாக ஜுடீஷியல் ஃபர்ஸ்ட் கிளாஸ் க்ரைம் மாஜிஸ்ட்ரேட்டால் விசாரிக்கப்பட்டிருக்கிறார். அவருடைய சாட்சியம் அது.

கீழ்க் கோர்ட்டில் 14 பேர்களுக்கும் தண்டனை கொடுக்கப்பட்டது. நிச்சயமாக அவர் தேனி ஏ.எஸ்.பி. கூட்டத்திற்குச் சென்றிருக்கிறார் என்று தெரிந்த காரணத்தால், டி.ஏ. பில் பெற்றிருப்பார்கள், ஸ்டேஷன் ஹவுஸ் ரிக்கார்டிங் காப்பி எஸ்.பி. ஆபீசில் இருக்கும், அதை கோர்ட்டுக்கு வரவழைக்க வேண்டுமென்று மேல் முறையீடு செய்யும்போது வழக்கறிஞருக்கு அறிவுரை கூறியதன் பேரில் அந்த ரெக்கார்டுகள் செஷன்ஸ்

கோர்ட்டுக்கு வரவழைக்கப்பட்டன. டி.ஏ. பில்லில்—காலை 9½ மணிக்கு கூடலூரிலிருந்து தேனிக்குச் செல்லுகிறார்; இரவு 12½ மணிக்குத் திரும்பி வருகிறார். அவர் சாட்சியம் அளிக்கிறார். காலை 11 மணிக்கு ஸ்பாட் மகஜர் என்று. என் முன்னிலையில் போலீஸ் ஸ்டேஷனில் கைது செய்தவர்களை வீட்டில் இரவு 11 மணிக்கு கைது செய்ததாகக் கூறுகிறார். அதற்கு அடுத்தபடியாக எஸ்.ஐ. அந்த வழக்கில் 14-வது சாட்சியாகச் சொல்லுகிறார்—

I took up further investigation, examined further witnesses and completed investigation and then charged the case.

இந்த அளவிற்கு நடந்திருக்கிறது. இந்த அளவுக்கு தைரியமாக தன்னுடைய ரெக்கார்டுகளுக்குப் புறம்பாக, தான் பயணப்படி பில்லில் குறிப்பிட்டதற்குப் புறம்பாக கோர்ட்டில் சாட்சியம் சொல்லியிருக்கிறார். நிச்சயமாக தகாத முறையிலே புகார் கொடுத்தவர்களிடமிருந்து காவல் துறையினர் சில சலுகைகளைப் பெற்றிருக்க வேண்டும். காட்ட வேண்டியதைக் காட்டி பெற வேண்டியதைப் பெற்றிருக்கிறார் மனுதாரர்.

இரண்டாவது அனுபவம் மிகவும் வேதனைக்குரியது. தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று இந்த 14 பேர்களும் 27—9—73 அன்று மாவட்ட காவல் துறை அதிகாரி அவர்களுக்கு நடந்த சம்பவங்களை விளக்கிக் கடிதம் எழுதிவிட்டு எனக்கும் ஒரு நகல் அனுப்பினார்கள். நான் அந்தக் கடிதத்தை இணைத்து மாவட்ட காவல் துறை அதிகாரிக்கும், மதிப்பிற்குரிய முதல்வர் அவர்களுக்கும் நடந்த சம்பவங்களைப் பற்றி விளக்கி எழுதியுள்ளேன். ஆனால் விசாரணை செய்து திரும்பவும் என்ன எழுதியிருக்கிறார்கள் என்றால், கம்பம் சட்டமன்ற உறுப்பினர் கே. பி. கோபால், எம்.எல்.ஏ.—மதுரையில் கோபால் என்ற பெயரில் நான் மட்டுந்தான் எம்.எல்.ஏ. வாக இருக்கிறேன். ஆனால் அவர்கள் சின்டிகேட் காங்கிரஸ் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த எம்.எல்.ஏ. போலீஸ் நிலையத்திற்கு வந்தார்கள் என்று கூறிவிட்டு எதற்காக வந்தார்கள் என்று சொல்லும்போது, நான் சென்ற சமயத்தில் யாரும் கைது செய்யப்படவில்லை என்று அவர்கள் சொல்லுகிறார்கள், கைது செய்யப்பட்டு இருப்பவர்களை ஜாமீனில் விடுவிக்க வேண்டுமென்று கேட்டதாகச் சொல்லுகிறார். இப்படித் தவறு நடந்திருக்கிறது.





மூன்றாவது அனுபவத்தைச் சொல்லுகிறேன். உசிலம்பட்டி சப் டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட்டிடம் நான்கு ஆசிரியர்கள் பிரைவேட் கம்ப்ளெயின்ட் கொடுக்க சி.ஆர்.பி.சி. செக்ஷன் 202 படி காவல் துறை அதிகாரிகள் அந்த ஆசிரியர்களை விசாரித்து தஸ்தாவேஜுகளைப் பார்த்து குறிப்பு அனுப்பும்படி கேட்டு நாட்கள் பல ஆகியும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. நானே காவல் துறை அதிகாரிகளிடம் சென்று அந்த ரெக்கார்டுகளைப் பார்வையிடுங்கள், பார்வையிட்டு நியாயம் என்ன என்பது பற்றி கருத்தை அனுப்புங்கள் என்று கூறினேன். நடந்தது என்ன? ஆசிரியர்களைக் கேட்காமல் நிர்வாகிக்கு எதிராகக் கொடுத்த மனுவுக்கு, நிர்வாகியையும், நிர்வாகியின் கணவனையும் வைத்துக் கொண்டு ரிப்போர்ட்டை அனுப்பியிருக்கிறார்கள். எவ்வளவு தைரியமாகச் செய்கிறார்கள்? பின்னணியில் இருப்பவர் யார்? உத்தமபாளையத்திலே அவர் ஷராபாக 15 ஆண்டு காலமாகச் செயலாற்றி வருகிறார். எங்கள் கட்சித் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் டிஸ்ட்ரிக்ட் அட்மினிஸ்ட்ரேஷன் மானியத்திலே குறிப்பிட்டார்களே, அது அவர்தான். கல்வித் துறை மானியத்திலே கூடக் குறிப்பிட்டேன். மனைவியின் பெயரிலே பள்ளியை வைத்துக்கொண்டு பல ஊழல்களைச் செய்து வருகிறார் என்று குறிப்பிட்டதும் அவரைத்தான். எந்த அளவுக்கு தனக்கு அரசியல் பின்னணி இருக்கிறது என்று காட்டியிருக்கிறார்கள்.

நானே நேரிலே அழைத்துச் சென்று காவல் நிலையத்தில் கம்ப்ளெயின்ட் கொடுக்கப் போனபோது அவர்களைக் கைது செய்துவிட்டு பின்னர் நான் அவர்களை ஜாமீனில் மீட்க வந்ததாகச் சொல்லிவிட்டார்கள். இங்கே கொடுத்த மனுவை விசாரிக்காமலே எந்தவிதத் தவறும் நடக்கவில்லை என்று சொல்லிவிட்டார்கள். ஆகவே, இந்த அதிகாரிகள் மேல் எல்லாம் இப்போதாவது தயவு செய்து நடவடிக்கை எடுங்கள்.

(பிற்பகல் 12-30)

அவர்களைப் போன்றவர்கள் மீண்டும் இந்த இலாகாவில் இருக்க வேண்டுமா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

வேறு சில வேதனைப்படக்கூடிய சம்பவங்களும் நடந்திருக்கின்றன. ஒரு கர்ப்பிணி ஆசிரியை தாக்கப்பட்டார். தலைமை ஆசிரியர் அறைப் பூட்டை உடைத்து ரிக்கார்ட்ஸ் பூராவையும் பள்ளி நிர்வாகி எடுத்துச் சென்றார்கள். தலைமை ஆசிரியர் மனு

கொடுத்தார். கர்ப்பிணி ஆசிரியையும் மனு கொடுத்தார். அப்படித் தாக்கப்பட்டதைக் கண்டித்து பி.டி. ஆசிரியர்கள், ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் உட்பட கண்டன ஊர்வலம் நடத்தினார்கள், சர்வ கட்சிக் கூட்டம் போட்டு கண்டித்தார்கள். அப்படியிருந்தும் தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவில்லை. மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கோவையில் ஆர். எஸ். புரத்திலுள்ள கலைவாணர் அரங்கில் பேசும்போது கட்சியிலுள்ள குட்டி தேவதைகளைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அதுபோன்ற குட்டி தேவதைகள் இதுபோன்ற இலாகாக்களிலும் இருக்கின்றனர்.

ஏற்கனவே திரு. தங்கமணி அவர்கள் ஒன்று கூறினார்கள். கூடலூரில் ஒரு சப்-இன்ஸ்பெக்டர் சலவைத் தொழிலாளர் சமுதாயத்தைச் சார்ந்த ஒரு இளம் பெண்ணை விசாரணைக்கு அழைத்து தகாத முறையில் நடந்துகொண்டதாகத் தெரிவித்தார்கள். அப்படி விசாரணைக்கு என்று அழைத்து தகாத முறையில் நடந்துகொள்ள வேண்டுமென்றால் எப்படி அந்தத் தைரியம் வந்தது? அரசியல் பின்னணி இருக்கிறது. எனக்கு அவரைத் தெரியும், இவரைத் தெரியும், அவரோடு படித்தேன், இவரோடு படித்தேன் என்று சொல்கிறார்கள். கள்ளச்சாராயம் காய்ச்சுவது, விற்பது என்பதுபற்றி—நிதிநிலை அறிக்கை விவாதத்தில் என்று கருதுகிறேன்—திரு. ஜப்பார் அவர்கள் கூறினார்கள். இதுபோன்ற புகார்கள் வருகின்றன. காவல் துறை அதிகாரிகளின் உடந்தையோடு இவை நடக்கின்றன என்று என்னிடம் சொல்கிறார்கள், அவை உண்மையாக இருக்கக்கூடாது என்று சொன்னார்கள். அப்படி உண்மையாக இல்லாமல் இருந்தால் மதிப்பிற்குரிய உறுப்பினர் ஜப்பார் அவர்களுக்கு இதுபோன்ற செய்திகள் எட்டியிருக்காது. கம்பம் பகுதியில் இதை ஒரு குற்றம் என்று யாரும் கருதுவதே இல்லை. அரசியலில் தனக்குள்ள அந்தஸ்தாக கருதுகிறார்கள். இதுகுறித்த பத்திரிகைச் செய்தி ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

சமீபத்தில் 12,000 ரூபாய் பெறுமானமுள்ள சாராயத்தைக் கைப்பற்றி, 78 நபர்களையும் கைது செய்திருக்கிறார்கள். அதை அங்குள்ள காவல்துறை அதிகாரிகள் செய்தார்களா என்றால் இல்லை. மதுரை வடக்கு மாவட்ட போலீஸ் சூப்பரின்டென்டென்ட் கே. கந்தசாமி தலைமையில் திண்டுக்கல் போலீஸ் உதவி சூப்பரின்டென்டென்ட் அலெக்சாண்டர், பெரியகுளம் துணை போலீஸ் சூப்பரின்டென்டென்ட் ரமணி, நிலக்கோட்டை உதவி





போலீஸ் சூப்பிரண்டெண்டென்டு பி. என். குருபாதம் மற்றும் ஐந்து இன்ஸ்பெக்டர்கள் ஏராளமான சப்-இன்ஸ்பெக்டர்கள் போலீசார் இந்த சாராய வேட்டையை நடத்தினர். அதுவரை அங்கு பணியாற்றி வந்த போலீஸ் அதிகாரிகள் என்ன செய்தார்கள் என்று நான் கேட்க விரும்புகிறேன்.

The Madurai (North) Police, who made a prohibition raid on six hamlets in the Cumbum Valley on Sunday last located a vast Ganja Plantation at the foot of a hill near Karunahamuthanpatty Village.

இந்த அளவிற்கு பெரிய அதிகாரிகள் சென்றுதான் இதுபோன்ற குற்றங்களைக் கண்டுபிடிக்க முடியும் என்ற நிலை இருக்கிறதே தவிர அங்குள்ள காவல் துறை அதிகாரிகள் இதற்கு முழுக்க முழுக்க உடந்தையாக இருந்து செயல்படுகிறார்கள் என்றுதான் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

கீழ் மட்டத்தில் உள்ளவர்களுக்கு அச்சம் என்பதே இல்லை என்பதற்கு ஒரு உதாரணம் கூற விரும்புகிறேன். நவம்பர் 9-ம் தேதி நெய்யாற்றங்கரையை அடுத்த அமரவிளை சோதனைசாவடியில் போலீஸ் வானிலேயே சாராயம் கடத்திச் செல்லப்பட்டது கண்டு பிடிக்கப்பட்டது. தென் ஆர்க்காடு மாவட்டத்தில்—டிசம்பர் மாதம் 31-ம் தேதி இந்துவில் வந்த செய்தி—ஒரு சப் இன்ஸ்பெக்டர், மூன்று ஹெட் கான்ஸ்டபிள்ஸ், 11 கான்ஸ்டபிள்ஸ் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அதேபோல் டிசம்பர் 31-ம் தேதி எக்ஸ்பிரசில் வந்திருக்கிறது, ப்ரொஹிபிஷன் ப்ளையிங் ஸ்க்வாடில் ஒரு சப் இன்ஸ்பெக்டர், இரண்டு கான்ஸ்டபிள்ஸ் சஸ்பென்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள். நடவடிக்கை எடுத்து விட்டோம் என்று கூறலாம். ஆனால் இந்த அளவிற்கு தைரியம் வந்துவிட்டது.

பொதுவாக, காவல்துறையை எடுத்துக் கொண்டால் பெரும்பாலோருக்கும் தங்களுக்கு நியாயம் கிடைக்கும் என்ற நம்பிக்கை சிறிது அளவு கூட இல்லை. 6—9—1973-ம் தேதி சம்பவத்தை ஏற்கனவே குறிப்பிட்டேன். 1975, ஜனவரி 16, 17, 20 தேதிகளில் கூடலூரில் பொங்கல் திருவிழாவில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த பலர் பல புகார் மனுக்கள் கொடுத்தார்கள். அவர்களின் புகார் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்

படவில்லை. ஆனால் போலீஸ் கமிஷன் பரிந்துரை 124-ல் all complaints made in person or by post to the police should be properly acknowledged.' என்றிருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

ஆனால் இதுவரை அப்படி ரெபர் செய்ததாகத் தெரியவில்லை. முழுக்க முழுக்க அரசியல் தலையீடு இருந்தது. அவர்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் தங்கள் குறைகளை எனக்கு எழுதியனுப்பியிருக்கிறார்கள். போலீஸ் கமிஷன் அறிக்கையில் உள்ள சிபார்சு 36-ல் 'avoidance of transfer of personnel in the middle of the year' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நானும் இதற்கு முன்பு பல முறை வலியுறுத்தியிருக்கிறேன், transfer is not a punishment என்று. அப்படியிருந்தும் இரண்டு மாதங்களுக்குள், கம்பம், கடலூர், போடி நகரங்களில் எஸ்.ஐ. மாற்றப்பட்டிருக்கிறார்கள். உத்தமபாளையம் டி.எஸ்.பி. மாற்றப்பட்டிருக்கிறார்.

(மணியடிக்கப்பட்டு திரு. தேவேந்திரன் பேச அழைக்கப்பட்டார்)

**திரு. அ. தேவேந்திரன் :** தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களால் தரப்பட்டிருக்கிற இந்த போலீஸ் மானியத்தையும் தீயணைப்பு மானியத்தையும் வரவேற்று என்னுடைய ஒரு சில கருத்துக்களைச் சொல்ல நான் முற்படுகிறேன்.

குறிப்பாக, தமிழகத்தில் சென்னை நகரில்தான் பெண் காவலர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தப் பிரிவை மாவட்டத் தலைநகரங்களிலும் ஏற்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அதேபோல் நம் தமிழ்நாட்டைச் சேர்ந்த தமிழ் மணி என்ற வாலிபர் ஜப்பான் சென்று கராத்தே பயிற்சி பெற்று இங்கு பயிற்சி அளித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். அப்படிப்பட்ட சிறந்த ஆசிரியர்களைக் கொண்டு போலீஸ் பயிற்சிப் பள்ளியிலும், பி.டி.சி., ஒவ்வொருவருக்கும் சப்-இன்ஸ்பெக்டர் ட்ரெயினிங்கில் இருப்பவர்களாக இருந்தாலும் சரி, கான்ஸ்டபிள் டிரெயினிங்கில் இருப்பவர்களாக இருந்தாலும் சரி, டி.எஸ்.பி. ட்ரெயினிங்கில் இருப்பவர்களாக இருந்தாலும் சரி அவர்களுக்கு எல்லாம் அந்தப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.





அதேபோல் இங்கு பேசும்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை செழியன் அவர்கள் போலீஸ் துறையில் ஊழல்கள் நிரம்பி விட்டன, ஆக அப்படி ஊழல் நிரம்பிவிட்ட காரணத்தால் முதல் அமைச்சர் அவர்கள் ராஜிநாமா செய்துவிட்டு அண்மையில் ஏதாவது இடைத் தேர்தல் வந்தால் அங்கு நிற்கவேண்டும் என்றும் அங்கு எங்கள் கட்சி சார்பில் எங்கள் கட்சித் தலைவரை நிற்கச் சொல்கிறேன், அந்தப் பொறுப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன் என்று குறிப்பிட்டார். எங்கள் தலைவர் வேறு, அவர்கள் தலைவர் வேறு. சாதாரணமாக இப்படிப்பட்ட சவால்கள் நம் நாட்டுக்குத் தேவையில்லாத ஒன்று என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தேர்தலில் போட்டியிட எங்கள் தலைவர் தேவையில்லை. இந்த நாட்டில், மொழிக்காக, ஒரு பெயர் மாற்றத்திற்காக தண்டவாளத்தில் தலை வைத்தவர்கள் எங்கள் தலைவர் அவர்கள்—மீட்டர் கேஜாக இருக்கலாம்—அவர்கள் தலைவர் வைக்கிறது ப்ராட்கேஜ் என்று வால்போஸ்டர்களில் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இப்படிப்பட்ட சவால்கள் தேவையில்லை. காவல் துறையில் பணியாற்றுகிற கான்ஸ்டபிள்ஸ் இருக்கிறார்கள். கண்டக்டர்களாக வந்து சேருகிறவர்கள் செக்கர் ப்ரமோஷன் வரவேண்டுமென்று விரும்புகிறார்கள். அதேபோல் கான்ஸ்டபிளாக ஒருவர் பத்தாண்டுகள் பணியாற்றினால் கண்டிப்பாக எந்தக் கல்வித் தகுதியையும் பாராது, சொல்லப்போனால் ஜாதிதகுதி கூடப் பார்க்காமல் அவரை ஏட்டாக ஆக்கிவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல் சப்-இன்ஸ்பெக்டராக நேரடியாக வருகிறவர்கள் ஏழு ஆண்டுகள் பணி புரிந்தால் அவரை உடனடியாக டெப்டி இன்ஸ்பெக்டர் அல்லது இன்ஸ்பெக்டராக நியமித்து விடவேண்டும். எந்தத் தகுதியையும் பார்க்காமல் அவருக்குப் பதவி உயர்வு கொடுத்துவிட வேண்டும். டெப்டி இன்ஸ்பெக்டர் அல்லது இன்ஸ்பெக்டராக. அதேபோல் எஸ்.ஐ. செலக்ஷன் நடக்கிறது. தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைக் கூடுமானவரையில் அந்த மாவட்டத்தில் போடாமல் இருக்குமாறு என் யோசனையைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்போது எல்லாம் காவல் நிலையத்திற்கு மோட்டார் சைக்கிள் தரப்படுகிறது. நான் முன்னால் பேசும்போதே சொல்லியிருக்கிறேன். அது தேவையில்லாத ஒன்று. ஆவடியில் இருக்கும் ராணுவ தளத்தில் பழுதாகிவிட்ட ஜீப்புகள் நூற்றுக்கணக்கில் இருக்கின்றன. அதை ரூ. 8,500-க்கு ஏலத்திற்குப் போடுகிறார்கள் என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும். 3.5 மோட்டார்

[திரு. அ. தேவேந்திரன்] [1975 ஏப்ரல் 1

சைக்கிளும் கிட்டத்தட்ட அந்த விலை வரும் ஆகவே, அதை வாங்கி அந்தக் காவல் நிலையங்களுக்குத் தரலாம். ஏனெனில், ஏதாவது சங்கடம் ஏற்பட்டால் ஒரு கான்ஸ்டபிள் மட்டும் அந்த மோட்டார் சைக்கிளில் சென்று அந்தக் கலவரத்தை அடக்க முடியாது. ஒரு சப்-இன்ஸ்பெக்டர் வேண்டுமானால் கூட போகலாம். சட்டத்தை மீறிச் செல்வது என்றால் 3 பேர் போகலாம். அதற்கு மேல் போனால் அந்த 3.5 எச்.பி. மோட்டார் இழுக்காது. ஆகவே, ராணுவத்தில் பழுதுபட்டு இருக்கும் ஜீப்புகளை எல்லாம் ஏலத்தில் எடுத்து அந்த போலீஸ் ஸ்டேஷன்களுக்கு—புல்லட் மோட்டார் சைக்கிளுக்குப் பதிலாகக்—கொடுத்தால் பேருதவியாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

பத்து ஆண்டுகளுக்குப் பின்னால் இப்போதுதான் ஹாக்கி போட்டியில் நாம் வெற்றி பெற்று இருக்கிறோம். போலீஸ் நிலையத்தில் இருப்பவர்களுக்கு விளையாட்டுப் பயிற்சியில் ஊக்கம் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முன்னால் ஒரு டி.எஸ்.பி. இருந்தார். ஜோசப் என்று பெயர். அவர் இப்போது எங்கே இருக்கிறார் என்று தெரியாது. அவர் ஒலிம்பிக் பந்தயத்தில் கலந்து கொண்டு போட்டியிட்டு இருக்கிறார். ஆகவே, அந்த அளவுக்குப் பயிற்சி கொடுத்து, காவல்துறையில் இருப்பவர்களையும் விளையாட்டில் நல்ல தேர்ச்சி பெற ஊக்கமும், ஆக்கமும் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆர்.டி.ஓ.-க்களுக்குத் தனியாக பங்களா தந்து இருக்கிறார்கள். ஆனால் டி.எஸ்.பி.-களுக்குத் தனியாக பங்களா கொடுக்கவில்லை. அவர்கள் ஏதாவது தெருவில் இருக்கும் வீடுகளில்தான் வசிக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே, தாலுக்கா ஹெட் குவார்டர்ஸ் நகரமாக இருக்கும் இடங்களில் டி.எஸ்.பி.யாக இருப்பவர்களுக்கு பங்களா கட்டித்தர வேண்டும், குடியிருப்பு கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக, போலீஸ்காரர்களுடைய வீட்டுப் பிள்ளைகள் சரியாகப் படிக்கவில்லை என்பது நாடறிந்த உண்மை. அந்தப் பிள்ளைகள் நல்ல மார்க் வாங்கி நல்ல முறையில் படிக்க வசதி செய்து கொடுக்கும் முறையில் மாவட்டத் தலைநகரங்களில் தனியாக அவர்களுக்கென ஒரு பள்ளியை நிறுவி, அதில் போலீஸ் அதிகாரிகளின், சப்-இன்ஸ்பெக்டர்களின், கான்ஸ்டபிள்களின் பிள்ளைகள் படிக்க வசதி செய்து தரவேண்டும். அதேபோல்,



1975 ஏப்ரல் 1] [திரு. அ. தேவேந்திரன்]

தமிழகத்தில் இருக்கும் காவல் துறை அலுவலாளர்கள், டி.எஸ்.பி., எஸ்.பி., எஸ்.ஐ., இன்ஸ்பெக்டர், கான்ஸ்டபிள், எட்-கான்ஸ்டபிள் போன்றவர்களின் பிள்ளைகள் காலேஜ் படிப்பு படிக்கும் வகையில், அவர்களுக்கென மாநில அளவில் ஒரு போலீஸ் கல்லூரியை—போலீஸ் கல்லூரி என்று சொன்னால்—போலீஸ் பயிற்சிக் கல்லூரி அல்ல—மற்ற மற்றக் கல்லூரி போல் ஏற்படுத்தி, படிப்பதற்கு வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஐ.பி.எஸ். தேர்வு பெற்று வேலைக்கு வந்து, 6 வருஷம் பணி யாற்றி விட்டால், அவர்களுக்கு ஜே.எஸ்.பி. தந்து விடுகிறோம். ஆனால் என்ன பாவமோ தெரியவில்லை, குரூப்-1 தேர்வு எழுதி டி.எஸ்.பி.யாக வருகிறவர்களுக்கு அந்த முறையில் ஜே.எஸ்.பி. தராத அவல நிலை இருக்கிறது. தமிழ்நாட்டிலே பிறந்து, நம்மு டைய மாநிலத்தில் தேர்வு எழுதி வேலைக்கு வந்த பின்னால், அவர் களுக்கு 6 வருஷம் ஆனபிறகு ஜே.எஸ்.பி. பதவி உயர்வு தராமல், அகில இந்திய அடிப்படையில் தேர்வு பெற்று வந்தவர்களுக்கு 6 ஆண்டுகள் வேலை பார்த்தால் ஜே.எஸ்.பி. தந்து விடுகிறோம். இந்த நிலைமையை மாற்றி, இருவருக்கும் ஒரே அடிப்படையில்—6 ஆண்டுகள் பணியாற்றிய பிறகு—ஜே.எஸ்.பி. நியமனம் வழங்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, நான் முன்கூட்டியே சொன்னேன். நக்சலைட்டிற்காக, ஒரு செல் வைத்து இருக்கிறோம். புட் செல் என்று வைத்து இருக்கிறோம். அதேபோல், சில திருட்டு கண்டு பிடிப்பதற்குத் தனியாக ஒரு செல் அமைக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் தந்திருக்கிற அறிக்கையில் 80 சதவீதம் வீடுகள் கட்ட உத்தேசம் என்றும், அதில் 61 சதவீதம் கட்டி முடிக்கப்பட்டு இருப்பதாகவும் தெரிவித்து இருக்கிறார்கள். அதற்காக என்னுடைய பாராட்டுதல்களையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில், இன்னொன்றையும் தெரிவித்துக் கொள்கிறேன். இப்போதுள்ள போலீஸ் லைன்கள் மிகுந்த பர்போசாக, அசிங்கமாக இருக்கிறது. குறிப்பாக மாயூரம், நன்னிலம் போன்ற இடங்களில் மிகவும் மோசமாக இருக்கிறது. சாதாரண மக்களையும் உயர்ந்த நிலைக்குக் கொண்டுவரவேண்டு மென்று காரியங்களைச் செய்துகொண்டு இருக்கும் டாக்டர் கலைஞர் தலைமையில் அனைவருக்கும் காற்றோட்டமுள்ள வீடுகள் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காலரா, பிளேக்

போன்றவைகளெல்லாம் அங்கேயிருந்துதான் வருகின்றன, அங்கேயுள்ள அசிங்கத்தின் காரணமாக இது வருகிறது. ஆகவே, போலீஸ் லைன்களை மாற்றி அமைக்க முன் வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒரு பஞ்சாயத்து யூனியனுக்கு ஒரு சர்க்கிள் இன்ஸ்பெக்டர் நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த யோசனையை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திட்டச்சேரி என்ற இடத்தில் போலீஸ் ஸ்டேஷன் இருக்கிறது. நன்னிலத்தில் போலீஸ் ஸ்டேஷன் இருக்கிறது. இதற்கு இரண்டுக்கும் இடையில் 10 மைல் இருக்கிறது. ஆகவே, இரண்டுக்கும் இடையில் நடுவில் போலீஸ் அவுட்போஸ்ட் ஒன்று அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அன்-டச்சபிளிடி ஆக்டின் கீழ் வழக்குப் போட்டால் சமாதானமாகப் போய்விடலாம் என்று இருக்கிறது. 302–307 செக்ஷன்களின்படி கேஸ் போட்டால் சமாதானமாகப் போக முடியாது. ஆகவே, அந்த வகையில் அந்தக் குற்றம் செய்பவர்கள்மீது கேஸ் போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நன்னிலத்திற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு பையர் ஸ்டேஷன் தந்தார்கள். ஒரு ஆம்புலன்ஸ் வண்டியும் இந்த ஆண்டில் தரவேண்டுமென்று கேட்டு, வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி செலுத்தி, முடித்துக் கொள்கிறேன்.

* திரு. எம். முத்தையா: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள இந்த மானியக் கோரிக்கைகளை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விழைகிறேன்.

தமிழ்நாட்டில் போலீஸ் இலாகா செய்து இருக்கும் சாதனையைப் பாராட்டாமல் இருக்க முடியாது. அதே நேரத்தில்—தமிழ்நாட்டில் மட்டுமல்ல, குறிப்பாக எங்கள் மாவட்டத்தில் இருக்கும் போலீஸ்காரர்கள் செய்கிற செயல்கள், அதுவும் குறிப்பாக தாழ்த்தப்பட்ட, மைனாரிட்டி சமுதாயத்தைச் சேர்ந்த மக்களைத் துன்புறுத்துவதையும், அட்டூழியம் செய்வதையும் பார்த்தால்—





மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் எங்கள் மாவட்டத்திலிருந்து புகார்கள் வந்து இருக்கும் என்று நினைக்கிறேன்—மிகவும் வருத்தமாக இருக்கிறது.

ஒரு தடவை கரிவலம்வந்த நல்லூரில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவனை லாக்கப்பில் அடித்துக் கொன்று இருக்கிறார்கள். அதன் காரணமாக பெரிய கலாட்டா நடந்தது. அதில் 2 பேர் போலீஸ்காரர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். அன்றோடு அந்த மழை பெய்வது நின்றதா என்றால் இல்லை, மீண்டும் தூவானம் தூவிக்கொண்டு நிற்கிறது.

அதற்கு அடுத்தபடியாக நாங்குனேரியில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவர்—வேலு என்பவர், களவு கேஸ் கொடுத்ததற்காக சுப்பையா என்ற தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவரை 11—12—1974-ம் தேதி கைது செய்து, அடித்து இம்சை செய்து இருக்கிறார்கள். 18—12—1974-ம் தேதி அரசாங்க மருத்துவ மனையில் சுடலைமுத்து என்ற புதுப் பெயரைக் கொடுத்துச் சேர்த்து இருக்கிறார்கள். அவன் 19—12—1974 அன்று இறந்துவிட்டான் என்று செய்தி. அதற்காக 27—12—1974 நாங்குனேரியில் சர்வ கட்சி ஊர்வலம், கூட்டம் நடத்த முயன்றபோது, அங்கேயுள்ள சர்க்கிள் இன்ஸ்பெக்டர் அதைத் தடுத்து நிறுத்த முயன்றார். ஆனால் அந்த சர்வ கட்சி ஊர்வலமும் நடந்து கூட்டமும் நடந்தது. அதற்குப் பிறகு மீண்டும் ஓட்டப்பிடாரம் புதியம்புத்தூரில் ஜாதிச் சண்டை ஏற்பட்டதன் காரணமாக, ஓட்டப்பிடாரத்திலுள்ள எஸ்.ஐ. அவர்களைக் கூப்பிட்டு விசாரிக்க வேண்டுமென்று சொன்னதாகவும், அவர்களில் சிலர் வரவில்லை என்றதால், மீண்டும் போலீசை விட்டுக் கூப்பிட்டு, வராததால்—பாளையங்கோட்டையிலிருந்து ஆயுதம் தாங்கிய போலீசை வரவழைத்துத் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களை கைது செய்து, அடித்து, இம்சை செய்து, அவர்கள் பொருள்களையும் தானியங்களையும் அள்ளிச் சேதப்படுத்திச் சென்று இருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாநில தலைமைப் போலீஸ் அதிகாரிகளுக்கும் இதுபற்றிப் புகார் மனு கொடுத்து இருக்கிறார்கள். இது சம்பந்தமாக நடவடிக்கை எடுத்ததன் பேரில், அங்கேயுள்ள போலீஸ் அதிகாரி வேறு சரகத்திற்கு மாற்றப்பட்டு விட்டார். அடுத்து, அடுத்தபடியாக வந்தவரும் அதே வேலையைச் செய்து கொண்டு இருக்கிறார். அதாவது ஓட்டப்பிடாரத்தில் திருட்டுக் கேஸ் சம்பந்தமாக 3, 4 பேரை போலீஸ் அரெஸ்ட் செய்து இருக்கிறது. 16—1—1975லிருந்து 23—1—1975 வரை

அவர்களை லாக்கப்பில் வைத்து இம்சை செய்து இருக்கிறார்கள். பிறகு 28—1—1975 அன்று தூத்துக்குடி கோர்ட்டுக்குக் கொண்டு போய் சேர்த்து இருக்கிறார்கள். 1—2—1975 அன்று அங்கே போய் சேர்த்தி சேஷய்யா இறந்து இருக்கிறார். இது சம்பந்தமாக நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. ஆனால் 20—1—1975-ல் நான் ஒட்டப்பிடாரம் சென்று எஸ்.ஐ. இந்த மாதிரிச் செய்யலாமா, அப்படித் திருடி இருந்தால் அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுத்து, உடனே கோர்ட்டில் ஆஜர் செய்யுங்கள் என்று சொன்னதற்கு, அந்த எஸ்.ஐ. எங்களுக்கு மேல் அதிகாரி உத்தரவு, இதில் நீங்கள் தலையிடாதீர்கள் என்று மறுத்து விட்டார்கள். மறுத்துவிட்டு 10, 15 நாட்களுக்குப் பிறகு ஒரு நாள் அங்கிருந்து விளாத்திகுளத்திற்கும் பிறகு எட்டையபுரத்திற்கும் அதன் பின் ஒட்டப்பிடாரத்திற்கும் எடுத்துச் சென்று இம்சை செய்திருக்கிறார்கள். பிறகு இறந்திருக்கிறான். இதுபற்றி 18—2—1975 அன்று சர்வகட்சிக் கண்டன ஊர்வலமும் பொதுக் கூட்டமும் நடந்திருக்கிறது.

அடுத்தபடியாக, பணகுடி போலீஸ் ஸ்டேஷனில் நடந்த ஒரு சம்பவம். பணகுடியைச் சேர்ந்த இரண்டு தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த சுப்பையாவும் இன்னொருவரும் தங்களுடைய மாடு காணாமல் போய் தேடிக் கொண்டிருக்கிறபோது பணகுடி போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் அவர்கள் மீது கள் குடித்ததாக கேஸ் போட்டார்கள். அதற்கு அடுத்தபடியாக அதே பணகுடியில் பாஸ்கிராபுரம் என்ற காலனியில் மீனாட்சி என்ற பெண்ணை எஸ்.ஐ. மூன்று போலீஸ்காரர்கள் 12 மணிக்கு மேல் சிவில் டிரஸ்சில் போய் சந்தேகப்பட்டுக் கதவைத் தட்டியிருக்கிறார்கள். அங்குள்ளவர்கள் விழித்து அவர்களை விரட்டியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு அந்தப் பெண்ணை ஸ்டேஷனுக்கு அழைத்து வந்திருக்கிறார்கள். அது சம்பந்தமாக பணகுடி பேரூராட்சி மன்ற உறுப்பினர் சிவராஜ் போலீஸ் அட்டூழியம் செய்திருக்கிறது என்று பணகுடி பேரூராட்சி மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு அவரை மாற்றியிருக்கிறார்கள். ஆனால் சிவராஜ் பேரிலும் போலீஸ் கேஸ் போட்டுள்ளது.

அடுத்து விளாத்திகுளம் சிதம்பராபுரம் அண்ணா நகரில் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் ஜாதி இந்துக்களுக்கும் இடையே உள்ள தகராறில் ஒருதலைப்பட்சமாக போலீஸ் கேஸ் போட்டிருக்கிறார்கள். அது கோயில்பட்டி நீதி மன்றத்திற்கு வந்து ஜனவரி மாதத்தில் அது பொய் கேஸ் என்று தீர்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது.





அடுத்தபடியாக திருநெல்வேலியில் டிப்டி தாசில்தாராக வேலை பார்த்த டி. சண்முகவேல் ஒரு தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர். தன் சொந்த ஊரான சங்கரன்கோவிலுக்கு 15—2—1975 அன்று சென்றவரை அங்கே உள்ள போலீஸ்காரர் முன் விரோதத்தின் காரணமோ என்னமோ தெரியவில்லை அவரோடு மூன்று போலீஸ் சென்று அவர் வீட்டில் புகுந்து அவர் வைத்திருந்த லைசென்சு, துப்பாக்கியை பிடுங்கி அவரை அடித்து கையைக் கட்டித் தெருவில் இழுத்துக்கொண்டு போய் போலீஸ் ஸ்டேஷனில் ஒப்படைத்து சாராய கேஸ் போட்டிருக்கிறார்கள். அது சம்பந்தமாக டிப்டி தாசில்தாரை திருநெல்வேலி மாவட்ட கலெக்டர் சஸ்பெண்டு செய்திருக்கிறார்கள். அது சம்பந்தமாக இந்த போலீஸ் பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்றால் எடுக்கப்படவில்லை.

அடுத்தபடியாக, விருதுநகருக்குச் சமீபத்தில் வச்சக்காரபட்டி காவல் நிலையத்தில் ஒரு பகுதியில் ஒரு தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் காலனியில் ஒரு வாலிபனைச் சந்தேகப்பட்டு அவனை அடித்து இரண்டு நாட்கள் வைத்திருக்கிறார்கள். அவன் நிலைமை மோசமாய்ப் போன பிறகு அவனைக் கொண்டு வந்து அவன் வீட்டுக்குப் பக்கத்தில் போட்டிருக்கிறார்கள். அதற்கு பிறகு அவனை எடுத்துக்கொண்டு அங்கே உள்ள சிவகாசி சப் கலெக்டரிடம் ஒப்படைத்து அவனை ஆஸ்பத்திரியில் சேர்த்து விசாரணை நடந்து கொண்டிருக்கிறது. இப்படிப் பார்க்கிறபொழுது எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தையும் அதுவும் மைனாரிட்டி சமுதாயத்தையும் போலீஸ் ரொம்பவும் கெடுபிடி செய்கிறது. இதில் முதலமச்சர் அவர்கள் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனிலும் சந்தேக கேஸ் போடுவதென்றால் தாழ்த்தப்பட்டவன் மீது தான் போடுகிறார்கள். சி.ஐ.டி. மூலம் ஒவ்வொரு ஸ்டேஷனிலும் லிஸ்டு எடுத்துப் பார்த்தால் தெரியும். எங்கள் மாவட்டத்துக்கு வருகிற டைரக்ட் ரெக்ரூட் சப்-இன்ஸ்பெக்டர்கள் அட்டூழியம் சொல்லவே முடியாது.

* இன்னும் ஒரு விஷயம், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த சப்-இன்ஸ்பெக்டர்களைக் கிராமப்புறங்களில் போட வேண்டாம். ஏனென்றால் கிராமங்களில் அவர்களுக்கு வீட்டு வசதியில்லை. அவர்களுக்கு வீடு கிடைக்காமல் அலைவதைப் பார்த்தால் மிகவும் பரிதாபத்திற்குரிய விஷயமாகும். தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த சப் இன்ஸ்பெக்டர்களை டவுனில் போடுங்கள், கிராமப்புறங்களில் போட வேண்டாம். இதுமாதிரி போலீஸ் அராஜகம் நடைபெறுவதால் சர்க்காருக்கும் தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கும் வெறுப்புணர்ச்சி உண்டாகிறது. இது உண்டாகாமல் இருக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலையிட்டு திருநெல்வேலி மாவட்டத்தில் என்ன நடந்திருக்கிறது என்பதை நன்கறிந்து ஒரு நல்ல நிர்வாகம் ஏற்பட வழி செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொண்டு விடை பெறுகிறேன்.

* திருமதி த. ந. அனந்தநாயகி : கனம் சபாநாயகர் அவர்களே, இன்று போலீஸ் மானிய கோரிக்கையில் எதிர்க்கட்சியைச் சார்ந்த ஒரு சட்டசபை அங்கத்தினர் என்ற முறையில் ஒரு சில கருத்துக்களை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

நீதியையும் நேர்மையையும் சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்கவேண்டிய காவல்துறை இன்றைக்கு ஆளுகிற கட்சியினுடைய விருப்பு வெறுப்பைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் உண்மையிலேயே எங்கே நேர்மையும் திறமையும் கடைப்பிடிக்கப்பட வேண்டுமோ அங்கேயெல்லாம் கடைப்பிடிக்கப்படாமல் போலீஸ் துறை போலித்துறையாக மாறிக்கொண்டு வருகிறது என்பதற்கு எத்தனையோ சான்றுகள் இதுவரையில் உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறார்கள். இன்னும் சில சான்றுகளைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இன்றைக்கு காவல் துறை மக்களின் மானத்தையும் மரியாதையையும் உயிரையும் உடமையையும் பாதுகாக்க பெயர் பெற்றது. ஆனால் இங்கே நடத்தப்பட்ட வழக்குகளையும் சுமத்தப்பட்ட வழக்குகளையும் தொடரப்படுகிற வழக்குகளையும் பார்த்தால் இங்கு தமிழகத்தை ஆளுகிற கட்சியினுடைய எடுபிடி ஆளாகக் காவல் துறையைப் பயன்படுத்த வேண்டுமென்று ஆசைப்படுகிறார்களே யொழிய உண்மையில் நேர்மையை நிலைநாட்டக்கூடிய இலாகாவாக, மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கக்கூடிய காவல் துறையாக



இருக்கிறதா என்பது கேள்விக்குறியாக இருக்கின்றது என்பதை அரசுக்குத் தெரிவிக்க ஆசைப்படுகிறேன். எதற்காகச் சொல்லுகிறேன் என்றால் போலீஸ் துறையில், அவர்கள் இருக்கிற துறையின் காரணமாக சில கெடுபிடிகள் இயற்கையாகவே இருக்கும். அதிலும் சிலர் அத்துமீறி நடக்கக்கூடிய சூழ்நிலையும் உண்டு. அப்படிப்பட்ட இலாகாவில் தலையீட்டின் காரணமாக நிர்வாகத்தில் ஆளுகிற கட்சியின் செல்வாக்கைப் பயன்படுத்துகிற காரணமாக நீதியும் நேர்மையும் தவறான பாதையில் போனால் அது மக்களுக்கு எவ்வளவு பெரிய சுமையாகிவிடும் சமுதாயத்தை எந்த அளவுக்குப் பாதிக்கும் என்பதைச் சற்று யோசித்துப் பார்த்தால் அதன் விளைவுகள் தெரியும் என்று தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். பதில் சொல்லுவது பெரிதல்ல. இன்றைக்கு ஒரு சட்டமன்ற அங்கத்தினர் மீது ஒரு வழக்குத் தொடரப்பட்டு அவர் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார் என்று சுலபமாகச் சொல்லலாம். புலன் விசாரணையில் இருந்தது, பிறகுதான் அவர் அதில் சம்பந்தப்பட்டவர் என்று தெரிய வந்தது என்று சுலபமாகச் சொல்லலாம். அதில் தொக்கி நிற்கிற முறைகளைப் பார்த்தால் எவ்வளவு அராஜகப் பாதையில் இந்த அரசு போய்க் கொண்டிருக்கிறது எப்படி அச்சுறுத்தக்கூடிய பாதையில் பாசிசப் பாதையில் போய்க்கொண்டிருக்கிறது என்பதை எடுத்துக் காட்ட முடியும்.

ஏன் சொல்லுகிறேன் என்றால் ஒரு சட்டசபை அங்கத்தினர் அவருடைய பெயர் எப்.ஐ. ஆரில் இல்லை. பஸ்ட் இன்பர்மேஷன் ரிப்போர்ட்டில் இல்லையென்றால் சுமத்தப்பட்ட குற்றத்திற்குப் பாதி பலம் போய்விட்டது என்று அர்த்தம். எப்.ஐ. ஆரில் இல்லாத பெயரை இரண்டு மூன்று நாளைக்குப் பிறகு யோசித்துச் சேர்த்து 'ஆப்டர் தாட்' எப்படிப் போடுவது என்று யோசித்து அதற்குப் பிறகும் அவர் எங்கே நிற்கிறார் எங்கே போகிறார் என்று பார்த்து அந்தக் காலம் வரை உள்ள கால தாமதத்தைப் புலன் விசாரணை பூர்த்தியாகவில்லை என்று சொல்லி பின்னர் அவரை அவமானப்படுத்த ஹராஸ்மெண்ட் செய்ய என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்யுங்கள் என்று ஏற்பட்டு கடைசியில் நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்து குற்றவாளி இல்லையென்ற சூழ்நிலை ஏற்படுகிறதென்றால் இப்படிப்பட்ட நிலைக்கு யார் பொறுப்பு ஏற்பது, போலீஸ் மந்திரி பொறுப்பாளியா, போலீஸ் இலாகா பொறுப்பு ஏற்கிறதா? இந்தக் கதி சட்டமன்ற உறுப்பினருக்கே என்றால் சாமான்ய மக்களின் கதி என்ன ஆகும் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும்.

அதே போன்று இன்று சி.எம்.சி. மருத்துவ மனையில் என்ன நடந்தது? அங்கே தொழிலாளர்களுக்கும் மேனேஜ்மெண்டுக்கும் இடையே தகராறு முற்றுகிறது. இதில் அரசாங்கமே ஒரு கட்சியினுடைய போர்வையில் நியாயம் நேர்மையை மறந்துவிட்டு அவர்களுக்கு எவ்வளவு கஷ்டங்கள் கொடுக்க முடியுமோ அவைகளைக் கொடுத்தார்கள். ஒரு நல்ல தலைசிறந்த டாக்டரை கைது செய்கிறார்கள். கேட்டால் 1974-ல் அவர்மீது புகார் கொடுக்கப்பட்டது. 1975-ல்தான் புலன் விசாரணை முடிந்தது என்கிறார்கள். கால தாமதம் செய்து புலன் ஆய்வு செய்வதில் போலீஸ் இலாகா என்ன செய்து கொண்டிருந்தது என்பது ஒன்று. புலன் விசாரிக்க லாயக்கில்லாது பல மாதங்களாக ஒரு புலன் விசாரணை செய்ய முடியாத இலாகா என்றால் இலாகாவின் திறமைக்கு இழுக்குத் தேடிக் கொண்டிருக்கிறீர்கள் என்பது மற்றொன்று. தமிழகப் போலீஸ் விஷ ஊசி போன்ற கேஸ்களை எல்லாம் கண்டுபிடித்துப் பெயர் வாங்கிய போலீஸ். இப்படித் திறமையான இயாகாவை உங்கள் கட்சியின் கைப்பாவையாக ஆட்டி வைப்பதன் காரணமாக எவ்வளவு அவமானகரமான பெயரை வாங்கித் தருகிறீர்கள்.

(பிற்பகல் 1-00)

புலன் விசாரித்துக்கொண்டே இருப்பார்கள். என்றைக்கு உதயமாகிறதோ, ஞானம் பிறக்கிறதோ அன்றைக்குக் குற்றம் சாட்டப்படும். இப்படி இருந்தால் எங்கேயிருந்து நீதி நியாயம் இருக்கும் என்று பொதுமக்கள் நடுநடுங்குகின்ற நிலையில் இன்றைக்கு இருப்பதை நாம் பார்க்கிறோம்.

அதைப்போல இன்றைக்கு அரசியல் எதிர்ப்புகளை வைத்துக் கொண்டு பல இடங்களில் பல காரியங்களில் ஈடுபடுகிறார்கள். பழி வாங்குகிறார்கள். சிவகங்கையில் இருந்து எனக்கு ஒரு செய்தி. சுதர்சன் என்ற எங்கள் கட்சிக்காரருடைய அப்பாவின்மீது கேஸ் பதிவு செய்யப்பட்டு இருக்கிறது. போலீஸ் என்றாலே இன்றைக்குப் பயப்பட வேண்டிய நிலை இருக்கிறது. நீதித்துறை என்றால்கூட பெனிபிட் ஆப் டவுட் ஷுட் பி கிவன் டு தி அக்கியூஸ்ட் என்ற முறையில் விசாரித்துப் பார்த்துதான் தண்டனை கொடுப்பார்கள். உண்மையில் குற்றம் செய்திருந்தால்கூட அது நிரூபிக்கப்படாமல் இருந்தால் பெனிபிட் ஆப் டவுட் கொடுக்க வேண்டும் என்று விடுதலை செய்யப்படுவான் நீதிமன்றத்தில். ஆனால் போலீஸ் ஸ்டேஷனுக்கு ஒருவன் போய்விட்டான் என்றால்





அவன் தொலைந்தான். பிறகு தான் பிழைத்து வருவது தப்பித்து வருவது சந்தேகந்தான். நாங்குநேரியில் ஒரு செல்வந்தர் ஒரு வழக்கைக் கொடுத்து, இவன் மீது சந்தேகம் இருக்கிறது என்று சொன்னால் உடனே அந்த ஹரிஜனை வரவழைத்து, அவன் குற்றம் செய்தானா என்று கூடத் தெரியவில்லை, அவனை அடித்துக் கொல்லு கிறார்கள். இப்படி அடித்துக் கொல்லுகிறார்கள் என்றால் இதற்கு யார் பொறுப்பு? போனவன் உயிரைத் திருப்பித் தர முடியுமா? எதற்காக இந்தப் போலீஸ் அடிக்கிறார்கள்? இப்படிப் பல வழக்குகளை நான் சொல்ல முடியும். செல்வந்தர் குறை சொல்லி விட்டால் அதற்காக நடவடிக்கை எடுக்கிறேன் என்று போய் அடித்து, ஆளையே சாகடித்துவிட்டால் இப்படிப்பட்ட குற்றத்தைச் செய்தவர்களை எப்படித் தண்டிக்க வேண்டும் என்று பார்த்து அப்படித் தண்டிக்கிற தைரியம் வந்தால் நான் உங்களைப் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

பல உதாரணங்களை நான் சொல்ல முடியும். நேற்று கூட ஏன் பகுதியில் ஒரு நிகழ்ச்சி நடந்திருக்கிறது. இரண்டு குடும்பத் திற்குள் வாய்ச்சண்டை. 100-க்கு போன் செய்து வான் வருகிறது. அந்த குடும்பத்தில் நாலு பேர்கள். ஸ்டேட் பாங்க் ஆபீசர். அவர் மனைவி, கல்லூரியிலும் மெட்ரிகுலேஷன் அதாவது எஸ்.எஸ்.எல்.சி. படிக்கிற மாணவர்கள் அவர்களுடைய பையன்கள் இவர்களை எல்லாம் தரக்குறைவாக பேசி, ஏறுடா வண்டியில் என்று ஏற்றி லத்தியால் அடித்து அவமானப்படுத்துகிறார்கள் என்றால் மரியாதை வாரம் கொண்டாடுவதில் என்ன அர்த்தம் இருக்கிறது?

இந்தக் குற்றத்தை ஏன் செய்கிறார்கள்? ஒருவர் மீது புகார் கொடுத்தால் விசாரியுங்கள். இன்றைக்கு வக்கீல்கள் ஆகட்டும், புரபசராகட்டும், ஸ்டேட் பாங்க் ஆபீசராகட்டும் எந்தவிதமான தாரதரமும் இல்லாமல் மரியாதைக் குறைவாக நடத்துகிறார்கள், அடிக்கிறார்கள். ஆனால், அதே நேரத்தில் தவறு செய்கிறவர்கள், திருடுகிறவர்கள் அவர்களுக்கு எல்லாம் மரியாதை கொடுக்கக் கூடிய அளவு இன்றைக்கு உள்ள ஆட்சியில் நிலைமை மாறிக் கொண்டு இருக்கிறது. போலீஸ் இலாகாவின் நோக்கம், போக்கு அவர்களின் எல்லாவிதமான நிலைமைகளும் இன்றைக்கு மாறிக் கொண்டு இருக்கிறது.

நான் ஏற்கனவே சொன்னேன், போலீஸ் துறை மோசமான துறை. இன்னும் தலையீடு காரணமாக இந்தத் துறையினை இன்னும் மோசமாக ஆக்கினால் இது எங்கே போகும் என்று கேட்கிறோம்.

யார் வேண்டுமென்றாலும் எப்படி வேண்டும் என்றாலும் அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்யலாம் என்ற நிலைமைதான் வரும் என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இதற்கெல்லாம் சட்ட சபையில் வந்து நீதி விசாரணை வையுங்கள் என்று சொல்லிக் கொண்டு இருக்க முடியுமா? அப்படி மீறி வந்து சொன்னால் என்ன ஆகிறது?

பெரியகுப்பம் ரிப்போர்ட் இன்னும் வரவில்லை. அங்கே பெண்கள் அவமானப்படுத்தப்பட்டார்கள். அறிக்கைகூட சபைக்கு வருவது கிடையாது, நாங்கள் வாதாடிப் பெற்ற நீதி விசாரணைக்குப் பிறகும். இதை எல்லாம் சபாநாயகர் கண்டுபிடிக்க வேண்டும். எதற்காக அரசு இருக்கிறது? எதற்காக நாங்கள் பிரச்னையை எழுப்புகிறோம்? காலதாமதம் செய்து எந்த நியாயத்தையும் பெற இயலாதபடி செய்துகொண்டு இருக்கிறார்கள். நீதி விசாரணைக்குப் பிறகு தவறு என்று கண்டு பிடிக்கப்பட்டாலும் இந்த அரசுக்கு உறைப்பது இல்லை. க்ளைவ் ஹாஸ்டல், பாளையம் கோட்டை நிகழ்ச்சிகளில் கொடுக்கப்பட்ட தீர்ப்புகள் அச்சில் எழுதி கொடுத்தாலும் அதுபற்றி இவர்களுக்கு அச்சம் கிடையாது. எல்லா மரபுக்கும் தாங்கள் மிஞ்சியவர்கள் என்பதால் எந்த மரபுகளையும் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணமும் இவர்களுக்கு இல்லை. (மணி அடிக்கப்படுகிறது.) ஒரு ஐந்து நிமிடம் தாருங்கள். எதிர்க்கட்சியாகிய நாங்கள்தான் பேச வேண்டும். அவர்களுக்கு என்ன?

இன்றைக்கு சந்தேக கேசை எடுத்துக்கொண்டால் சினிமாவுக்குப் போகிறவர்களைப் பிடிக்கிறார்கள். மறு நாள் கோர்ட்டுக்குப் போனால் 50, 60 ரூபாய் கட்ட வேண்டியிருக்கிறது. இன்றைக்கு இதைவிட உண்மையான திருடர்களைக் கண்டு பிடித்தால் பாராட்டலாம். புள்ளி விவரத்தைப் பார்த்தால் டெக்காயிட்டி இன்கிரீஸ், மேஜர் கிரைம்ஸ் இன்கிரீஸ், எல்லாம் இன்கிரீஸ் ஆக இருக்கிறதே தவிர டிக்கிரீஸ் இல்லை. இப்படிக் குற்றங்கள் அதிகமாவதற்குப் பொருளாதாரக் குறை, பசி, பஞ்சம், பட்டினி இவை எல்லாம் அதற்குத் துணையாக ஆகிவிடுகின்றன. இந்த நிலை கட்டாயமாக ஒரு அராஜக நிலைக்குக் கொண்டுபோய் விட்டுவிடும்.

இந்த நிலையில் உதாரணத்திற்கு ஒன்று சொல்லுகிறேன். போலீஸ் லாரியில் அரிசியையும் சாராயத்தையும் கடத்திக்கொண்டு போகிறார்கள் என்றால் அப்படிப்பட்ட போலீஸ்மீது பொது





மக்களுக்கு என்ன மரியாதை ஏற்படும்? அதிலே வழக்குப் போடுவார்கள் என்று பார்த்தால் அதிலேகூட சம்பந்தப்பட்ட கான்ஸ்டபிள் செத்துவிட்டான் என்று சொல்லப்படுகிற சூழ்நிலையில்தான் நாம் இருந்துகொண்டு இருக்கிறோம்.

போலீஸ் இலாகாவினருக்காக ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். இன்றைக்குப் போலீஸ் இலாகாவில் வேலை செய்கிற சாதாரண போலீஸ்காரர்களுக்கு ஆப் டியூட்டியில், மெடிகல் லீவில் இருக்கிறவர்களைக்கூட ரோல் காலில் வந்து ஆஜராக வேண்டும் என்று சொல்லுவதில் அர்த்தம் இல்லை. வேலை நேரம் கிடையாது. இப்படி அவர்களுக்கு வேண்டிய கோரிக்கைகளை எடுத்துச் சொல்லப் பாதுகாப்பு இல்லாமல் இருக்கிறார்கள்.

**திரு. சி. ஆறுமுகம்:** தலைவரவர்களே, அம்மையார் பேசுகின்ற நேரத்தில் வழக்கில் சம்பந்தப்பட்ட போலீஸ்காரர் ஒருவர் இறந்து விட்டாரே என்று குறிப்பிட்டார். அறுபது லட்சம் சம்பந்தப்பட்ட மத்திய சர்க்கார் வழக்கில் நகர்வாலா இறந்து விட்டான் என்ற நிலை ஏற்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** ஏட்டிக்குப் போட்டியாகப் பேசித் தப்பித்துக்கொள்ள முடியாது. அவரவர்கள் செய்கிற பாவத்திற்கு அவரவர்கள் அனுபவிப்பார்கள். (மணி அடிக்கப் படுகிறது.) இரண்டு நிமிஷம் கொடுங்கள்.

இதே மாதிரி ஒரு எம்.எல்.சி. திரு. வெங்கா என்பவர் பட்டப் பகலில் தாக்கப்படுகிறார். என் பகுதியில் உள்ள விடிவெள்ளி ஆசிரியர் மைலாப்பூர் தொகுதியில் தான் எதிர்க்கட்சி கவுன்சிலரால் அடிக்கப்படுகிறார். போலீஸ் ஸ்டேஷனில் கம்ப்ளயிண்ட் கொடுத்தும் இதுவரை விசாரணை இல்லை. இப்படிக் குற்றம் செய்கிறவர்களை விட்டுவிட்டு, குற்றம் செய்யாதவர்களைப் பிடித்துத் துன்புறுத்துகின்ற அந்தக் காவல் துறையை வைத்து இருப்பதைக் காட்டிலும் உங்கள் கிளைச்சங்கமாக அதை மாற்றிக் கொள்ளலாம் என்று சொல்லி என் பேச்சை முடிக்கிறேன்.

*** திரு. தொ. ப. சீனிவாசன்:** தலைவரவர்களே, காவல் துறை மானியத்தை வரவேற்று என் கருத்துக்களைக் கூறக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அகில இந்தியாவிலேயே சிறந்தது தமிழ்நாட்டுக் காவல் துறை என்ற பாராட்டுதலைப் பெற்றது நம் காவல் துறை. இந்தக் காவல் துறையைப் பொறுப்பேற்று இருக்கின்ற கலைஞர் அவர்கள் மிகவும்

பாராட்டக் கூடிய முறையில் நடத்திக் கொண்டு வருகிறார்கள் என்பதையும், நான் உங்களுக்கு நினைவூட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். இந்த மாமன்றத்தில் பேசுகின்றபோது சில உறுப்பினர்கள் ஆளும் கட்சிக்குத் துணையாக காவல் துறை செயல் படுகிறது என்று எல்லாம் சொன்னார்கள். மாண்புமிகு அனந்தநாயகி அம்மையார் கிளைக்கழகமாக வைத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னார்கள். நடுநிலையாக இயங்குகின்ற காவல் துறையை ஒருதலைப்பட்சமாகச் செயல்படுவதாக மாண்புமிகு உறுப்பினர் திரு. செழியன் அவர்கள் பேசுகின்றபோது குறிப்பிட்டார். எதிர்க் கட்சிகளின்மீது வழக்குகளைப் போடுகிறது என்று சொன்னார்கள்.

நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எதிர்க்கட்சியினர் பேசுகின்றபோது பல இடங்களில் கலவரங்களில் அதிக அளவு ஈடுபடுகிறார்கள். எம்.ஜி.ஆர். கட்சிக்காரர்கள் அதிக அளவு தீவிரமான கலவரங்களில் ஈடுபடுகிறார்கள். அப்படி இல்லை என்றால் வழக்குப் போட வேண்டிய சூழ்நிலை உருவாகாது. பல இடங்களில் கூட்டங்களைப் போட்டால் கலவரங்களை உருவாக்கு கிறார்கள்:

ஒரு வேதனையான செய்தியை உங்களுக்குச் சொல்லப் போகிறேன். போளூரில் ஒரு கூட்டம் நடத்தப்பெற்றது. அதில் அரசியல் பேசப்பட்டிருந்தால் மக்கள் பாராட்டியிருப்பார்கள். அதை விட்டுவிட்டு, ஏதோ அவர்களுடைய தலைவர் ராணுவத்தையே சந்திக்கிற வீரர் என்ற எண்ணத்தில் எங்கள் பொதுச் செயலாளர் கே. ஏ. கிருஷ்ணசாமி இந்த நாட்டை ஆளுகின்ற தலைவன் தலையைக் கொண்டு வரச் சொன்னது அவ்வளவு பெரிய விசேஷம் இல்லை. அதைவிட மேலாக காமராசர் தலையைக் கொண்டுவர முடியும் என்று ஒரு நடிகர் குண்டுமணி பேசுகிறார் என்றால் காவல் துறை சும்மா இருக்குமா? வழக்குப் போடாதா? அரசியலில் அமைதியைக் கடைப்பிடித்தால் ஏன் வழக்குப் போடுகிறார்கள்?

இன்னும் ஏதோ சொன்னார்கள். வெங்காவைப் பற்றிச் சொன்னார்கள். வெங்கா தாக்கப்பட்டதற்கு முதல்வர் அவர்கள் வருத்தப்பட்டார்கள். அவர் தாக்கப்பட்டதற்கு ஆளும் கட்சிதான் காரணம் என்று சொல்கிறார்கள். போலீசார் நடவடிக்கை எடுக்க வில்லை என்று சொல்கிறார்கள். போலீசார் நடவடிக்கை எடுக்காமல்



சும்மாவா இருக்கிறார்கள்? அவர்கள் நடவடிக்கை எடுப்பதை எல்லாம் உங்களிடம் சொல்லிக்கொண்டா இருப்பார்கள்? இருக்கின்ற நிலைமைகளை எண்ணிப்பார்த்துப் பேசவேண்டும். வெங்கா தாக்கப்பட்ட அதே எம்.எல்.ஏ. ஆஸ்டலிலேதான் சில மாதங்களுக்கு முன்பு நானும் நண்பர் கிருஷ்ணமூர்த்தியும் நின்று கொண்டிருந்தோம். அவருடைய காரை நேரடியாகத் தாக்கியது மட்டுமல்ல, கொலை செய்யும் முயற்சியிலும் ஈடுபட்டார்கள். நானும் அந்த இடத்திலிருந்து ஓடிவிட வேண்டிய நிலைமை ஏற்பட்டது. என்னைக் கொல்ல வந்தார்கள். வந்தவர் யார் தெரியுமா? நான் எம்.ஜி.ஆர். கட்சியைச் சேர்ந்தவன், நான் தான் ஜே.பி.ஆர். என்று சொல்லிக்கொண்டு இந்தக் கொலை முயற்சியில் ஈடுபட்டார்கள்.

அதுமட்டுமல்ல. மவுண்ட் ரோட்டில் காரைத் தள்ளி, கொல்ல வேண்டுமென்று முயற்சி செய்தார்கள். இதை எல்லாம் பார்த்துக் கொண்டு போலீசார் சும்மாவா இருப்பார்கள்? நடவடிக்கை எடுக்க மாட்டார்களா? நடவடிக்கை எடுத்தால் அது ஆளும் கட்சியின் தூண்டுதலா? இந்த ஜே.பி.ஆர். கள்ளச்சாராயம் காய்ச்சுகிறார் என்றால் அதைப் பார்த்துக்கொண்டு போலீசார் சும்மா இருக்கவேண்டுமென்று சொல்கிறீர்களா? நடவடிக்கை எடுக்கக்கூடாதா? கள்ளச்சாராயம் காய்ச்சுகிறவர்களையும் விற்கிறவர்களையும் சும்மா விட்டுக்கொண்டிருப்பது என்றால் போலீசாருக்கு வேறு என்ன வேலை? இப்படிப்பட்ட நேரங்களில் போலீசார் தக்க நடவடிக்கைகளை எடுத்தால் அது ஆளும் கட்சிக்கு உடந்தையாகச் செய்யப்படுகிற வேலை, ஆளும் கட்சியின் தூண்டுதலால் செய்யப்படுகிறது என்று சொல்லக்கூடிய நிலைமை இன்று நாட்டிலே இருந்து கொண்டிருக்கிறது.

காவல் துறை எந்த நேரத்திலும் பொறுப்பற்ற முறையில் நடந்துகொள்ளவில்லை; பொறுப்போடுதான் செயல்படுகிறது. காவல் துறையினர் பொறுப்போடு செயல்படுவதால்தான் இன்றைக்குத் தமிழ்நாட்டு மக்கள் அவர்களைப் பாராட்டுகிறார்கள்.

அருமை நண்பர் பெரியவர் கே. டி. கே. அவர்கள் ஒன்றை இங்கே சொன்னார்கள். காவல் துறை சரியாக நடக்கவில்லை என்று சொன்னார்கள். ஆளும் கட்சியின் தூண்டுதலால் சரியாக இயங்க வில்லை என்று சொன்னார்கள். அவர்களுக்கு ஒன்றை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில் களம்பூரில் திடீர் திடீரென்று வீடுகள் எல்லாம் எரியத் தொடங்கின. வலது கம்யூனிஸ்டு கட்சியினர் அங்கே ஒரு ரகசியக் கூட்டம்

போட்டார்கள். அந்தக் கூட்டம் போட்ட இரண்டு, மூன்று நாட்களில் இப்படி எரியத் தொடங்கின. வீட்டுக் கூரையின்மேல் பாஸ்பரஸ் போடப்பட்டதால் இப்படி எரிகிறது என்று சொன்னார்கள். இது எப்படி நடைபெறுகிறது என்பதை ஆராய்வதற்காக அங்கே இருந்த எஸ்.பி. அவர்கள் கட்சி சார்பற்ற கூட்டம் ஒன்றைக் கூட்டினார்கள். ஊர் மக்கள்கூட அந்தக் கூட்டத்திற்கு வந்திருந்தார்கள். வலதுசாரி கம்யூனிஸ்டுக் கட்சியினர்தான் இப்படி வீடுகளுக்குத் தீ வைக்கிறார்கள் என்று எல்லோரும் சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் அப்படிச் சொல்லவில்லை. கட்சி சார்பற்ற கூட்டம் அப்படிச் சொன்னது. அது ரிக்கார்டில் இருக்கிறது. இதையெல்லாம் வேடிக்கைப் பார்ப்பதுதான் போலீஸின் வேலை என்று கனம் உறுப்பினர் கருதுகிறாரா?

அகில இந்தியாவிலும் தமிழ்நாடு சிறந்து விளங்குகிறது; அமைதியாக இங்கே ஆட்சி நடக்கிறது; இந்த அமைதியைக் குலைக்க வேண்டும்; கலவரம் ஏற்படுத்த வேண்டும் என்று திட்டமிட்டு இப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபடுகிறார்கள். தமிழ்நாடு எல்லா வகையிலும் சிறந்து விளங்குகிறது என்ற ரிக்கார்டைப் பெற்று விட்டது. அதை எப்படியாவது கெடுக்க வேண்டுமென்று பார்க்கிறார்கள்.

முதலமைச்சர் கூட்டத்திலே. கலவரம் செய்கிறார்கள். காரை வழிமறிக்கிறார்கள். அதைப்பார்த்துவிட்டு காவல் துறை சும்மா இருக்குமா? முதலமைச்சரின் தலையை வெட்டுவோம் என்று சொன்னால். போளூரில் குண்டுமணி என்ற நடிகர் காமராஜர் தலையை வெட்டுவேன் என்று பேசினார். காவல் துறை நடவடிக்கை எடுக்காமல் இருக்குமா? எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்து, அவருடைய தலையை வெட்டுங்கள் என்று சொன்னால் நீங்கள் விட்டுவிடுவீர்களா? நடவடிக்கை எடுக்கச் சொல்லமாட்டீர்களா? ஆகவே, போலீசார் நடவடிக்கை எடுக்கிறார்கள் என்றால் அவர்கள் நியாயத்தை உணர்ந்துதான் எடுக்கிறார்கள்; நடுநிலையோடு நடந்து கொள்கிறார்கள்; கட்சிக் கண்ணோட்டத்தோடு அவர்கள் செயல்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய தொகுதியில் ஐவ்வாது மலை காட்டுப்பகுதி இருக்கிறது. அங்கே 40,000-க்குமேல் மலைவாசிகள் இருக்கிறார்கள். அங்கு ஒரு காவல் நிலையம் இருக்கிறது. அதற்குக் கட்டடம் இல்லை. ஒரு சாதாரணக் குடிசையில் காவலர்கள் இருக்கிறார்கள். அங்கே





ஒரு காவல் நிலையம் அதாவது கட்டடம் வேண்டுமென்ற கோரிக்கை நீண்டகாலமாக இருந்துகொண்டிருக்கிறது. விரைவிலேயே அந்தக் கட்டடத்தைக் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு கோரிக்கை. நீண்டகாலமாக வேலூரில் சப்-இன்ஸ்பெக்டர் பயிற்சி நிலையம் இருந்துவருகிறது. அதை சென்னைக்கு மாற்றப்போவதாகக் கேள்விப்படுகிறோம். அங்கு எல்லா வசதிகளும் இருக்கின்றன. ஆகையால் அதை வேலூரிலிருந்து மாற்ற வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏதாவது குற்றம் நடந்தால், அதைக் கண்டுபிடிப்பதற்குத் துப்பறியும் நாய்க்கு சென்னைக்கு வரவேண்டியிருக்கிறது. அதனால் காலதாமதம் ஏற்படுகிறது. காலதாமதம் ஏற்படுவதால் குற்றவாளிகள் தப்பித்துவிடுகிறார்கள். ஆகவே, ஒரு துப்பறியும் நாய்ப் பிரிவை வேலூரில் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

போளூரில் தீ விபத்து ஏற்பட்டால், தீ அணைக்கும் படை வேலூரிலிருந்துதான் வரவேண்டும். வேலூரிலிருந்து அவர்கள் வருவதற்குள் எல்லாம் எரிந்து ஒன்றும் இல்லாமல் போய் விடுகிறது. ஆகவே, போளூரில் தாலுகா தலைமை இடத்தில் ஒரு தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். அதோடு போளூர் அருகில் உள்ள கலசப்பாக்கத்திலும் ஒரு போலீஸ் அவுட்போஸ்ட் நிலையம் அமைக்க வேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. கோவை செழியன்:** சார், ஒரு கிளாரிபிகேஷன். எங்களுடைய கட்சியைப்பற்றி அவர்கள் சொன்னதால் நான் கேட்கவேண்டியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது எங்கள் கட்சியைச் சேர்ந்த ஜே.பி.ஆர். பற்றிச் சொன்னார்கள். அவர் இந்தச் சபையில் இல்லை. இரண்டு கேஸ் போட்டார்கள். ஒன்று திரு. கிருஷ்ணமூர்த்தியின் காரைத் தாக்கினார்கள் என்பது. மற்றொன்று கொலை செய்ய முயன்றார்கள் என்பது. ஒரு கேசுக்குப் போலீசார் சாட்சி சொன்னார்கள். கிருஷ்ணமூர்த்தி மற்றொரு கேசுக்குச் சாட்சி சொல்ல வேண்டும். ஆனால் அவர் சாட்சி சொல்லப் போகமாட்டார். சாட்சி சொல்லி விட்டால் அவருடைய சன்னது போய்விடும். அதனால் அவர் சாட்சி சொல்லத் தயாராக இல்லை.

THIRU B. VENKATASWAMY : Sir, In support of my cut-motions given on behalf of the Swatantra party I want to offer a few remarks regarding the Police Demand and Fire Service Demand in Tamil Nadu.

At the outset, I can say that the lawlessness has increased and the crimes have also increased. We note that the detective apparatus has collapsed. According to the notes given here people have lost their faith in the police because of the interference of the ruling party as well as individuals. We cannot say only ruling party, but some influential people and moneyed people are also able to influence the police and get things done. So, I request that there should not be any interference by the ruling party or by the individuals.

Our police is having a very good reputation and it can do its work efficiently if it is left alone. But the ruling party and its influential people are not leaving the police alone to do their duties properly. That is the main reason why our police have become ineffective and lawlessness and crimes have increased. These are all the reasons why our police have become defective.

So, I want to mention some instances wherein the police have not been able to do their duties properly because of the influence made by influential people. For example, in one case what I came to understand I want to bring to the notice of the Hon. Minister. In Thali Police Station a man went to the Police Station to file a complaint. The other man, the counterpart went to the police station and bet him in the police station itself. I went to that village on that day. He was in the police station. At the same time the police were not in a position to register a case because he was an influential man. Then I asked the police to register a case. I said ' even though he is a very big man we should not leave it because he has bet the other man in the police station itself and, therefore, you must register a case '. Then the police registered a case. After a few days the case was withdrawn. You can refer this case very well. Then, I met the Inspector-General of Police. The Police Inspector and the Police S.I. were transferred because they had booked the case and they had done justice to the man as he was bet in the police station. If they do like that, how can the police do their work properly? That is all I want to say. Then I met the I.G. and requested him to at least



retain them till the investigation was over and he had done it. If such be the case, how can we expect law and order and how can we expect law from the police? It is highly impossible. So, there should not be any interference by the ruling party or by the individuals. Then only the police can do their work properly. I request the Hon. Minister to probe into this matter, particularly into the case of Thali police station and see why this case was withdrawn by the Sub-Inspector I do not know who has ordered for it and why this case has been withdrawn. There must be sorce reasons for that. There is no use of simply withdrawing a case. Then there will be no interest if such cases are withdrawn and the police also cannot book good cases because they know that they will be withdrawn. Then they will think ' why should we book a case? Leave it '. Finally there will not be any law and order in the State.

Coming to illicit arrack, it is prevalent everywhere in Tamil Nadu after the reintroduction of prohibition. In every village illicit arrack is prepared and it has become a cottage industry. Now the person who prepares illicit arrack pays the police instead of to the Government and that is what the people say. There is quota fixed for the payment of money to the Sub-Inspector and the Circle Inspector. So, I would request the Government to establish a Special Wing for the enforcement of prohibition. Now most of the Sub-Inspectors attend to prohibition cases and they are not in a position to attend to law and order activities. So, if a special wing is established, they will enforce prohibition effectively and stop the distillation of illicit arrack.

Regarding smuggling of rice, it is reported that in the Kerala border rice and arrack have been smuggled in the police van. If the fence itself eats the garden, what can we do? What protection can we expect from the Police. Such immoral police personnel should be punished very severely.

As regards murders, they are on the increase. In my constituency 20 days ago one Thiru Ramiah Gowda, a very good person, was murdered. Prior to his murder three complaints against his opponents were given to the police but no action has been taken by the police in Denkanikottah. Since no action has been taken on those complaints, the persons concerned stabbed him to death. There was a conspiracy to murder him. In my constituency people are saying that a very good person had been murdered 20

days ago but no person has so far been arrested by the police. I suspect that the police have not made proper investigation and so I request the Hon. Chief Minister to depute a top officer of the Criminal Investigation Wing of C.I.D. to investigate the case. Justice delayed is justice denied. In three or four cases of murder which happened in my constituency, investigation has not been done properly. Such kind of things should not take place and the Government should see that the persons concerned are punished without mercy.

Coming to false cases filed by the police, if the police do not like a person, they simply file a case against him. This is a common occurrence in villages. Even the poor people returning after witnessing the cinema show are falsely prosecuted. They are harassed by the police. Rich and well-dressed persons will not be taken to the police station but only poor people are taken there and harassed. The relevant section of the Police Act under which such false cases are filed should be repealed.

Then with regard to highway robbery, it takes place in the diversionary routes in the Madras-Bangalore Trunk Road. Some persons will get into a lorry and remove valuable goods which they sell and earn lakhs of rupees. They use jeeps and cars for that purpose. The Government should put an end to such highway robbery.

Coming to naxalite activities, three or four murders had taken place in the Dharmapuri district and what is the security for the people there? I understand that there is a Special Wing to look into the naxalite activities and some officers have been posted there. But so far, no investigation has been made with regard to these murders. I request the Government to look into the matter.

Coming to Fire Service Stations, I have given notice of a cut motion. The staff working in these stations are working for more than 12 to 18 hours instead of for 8 hours. But they have not been paid any extra remuneration for that and I request the Hon. Chief Minister to look into the matter, and revise their working hours.

Another cut motion stresses the need for the application of labour legislation for the staff of the fire service units in the State. So far as their emoluments are concerned, as pointed out by the hon. Member, Thiru Tangamani, they are doing the same service



as the police constables do and they are in the same cadre to which the police constables also belong. I request the Hon. Chief Minister to look into this aspect of the matter.

(Mr. Speaker sounded the gong.)

Sir, I have given notice of a cut motion to discuss the need to open an outpost at Mathagondapally, Denkanikottah.

I have also given notice of a cut motion to discuss the need to open a Police Station at Anchetty, Denkanikottah.

I have also given notice of yet another cut motion to discuss the appointment of child labour and boy constables at the Police Administration Offices in this State.

The other cut motion is intended to discuss the need to construct houses for the Inspectors of Police.

Another cut motion seeks to discuss the need to implement the recommendations of the Police Commission. Policemen are doing excellent work and the recommendations of the Commission should be implemented.

Regarding Fire Service Stations, I have also given notice of a cut motion to discuss about the need to locate the Fire Service Stations near residential areas in urban cities.

I once again request the Government to see that the murder case I have mentioned earlier is properly investigated and justice rendered. Thank you, Sir.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று நாளைக் காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும். வணக்கம்.

*பின்னர் பேரவை பிற்பகல் 1-30 மணி அளவில் ஒத்திவைக்கப் பட்டது.*

## 7. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders*

'NIL'

### B. *Reports, Notifications and Other Papers*

@ 132. Commercial Budget on Cinchona Department, 1975–76.

@ 133. Policy Note on Animal Husbandry, 1975–76 (English).

@ 134. Note on Demand No. 4—General Sales Tax and Other Taxes and Duties (English and Tamil).

@ 135. Review on Tamil Nadu Fire Service, 1974–75 (English and Tamil).

136. Review on Tamil Nadu Police, 1974–75 (English and Tamil).

% 137. Policy Note on Animal Husbandry, 1975–76 (Tamil).

& 138. Report of the Committee of Privileges on the matter of Privilege against Thiru Abdul Salam, Arakandanallur, for casting aspersions on the Chairman and members of the Estimates Committee in his Lawyer's notice issued to the Editor of 'Makkal Kural'.

---

@ Despatched to Members on 29-3-75.

% Despatched to Members on 30-3-75.

& Laid on the table of the House on 31-3-75.



இணைப்பு I

[284ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

## தமிழ்நாடு காவல் துறை.

### 1974–75 ஆம் ஆண்டின் ஆய்வுரை.

சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட, ஆற்றல் படைத்த காவற்படை இன்றியமையாததாகும். நாட்டின் மிகச் சிறந்த திறமைசால் காவற்படை தமிழ்நாட்டின் காவற்படையே என்கிற நற்பெயரையும், புகழையும் தமிழ்நாட்டுக் காவல்படை இடைவிடாது பேணி வந்துள்ளது.

தற்போதுள்ள காவற்படையின் எண்ணிக்கை பற்றிய விவரங்கள் பிற்சேர்க்கையில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

#### படைக்கலம் தாங்கிய காவற்படை அணிகள்.

தமிழ்நாட்டில் படைக்கலம் தாங்கிய காவற்படை அணிகள் ஐந்து உள்ளன. ஐந்து அணிகள் அவற்றிற்கு நிகராகக் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் நிறுத்திவைக்கப் பட்டுள்ளன.

#### தமிழ்நாடு சிறப்புக் காவற்படை.

| | | |
|---|---|---|
| முதல் அணி | .. | திருச்சிராப்பள்ளி. |
| இரண்டாம் அணி | .. | ஆவடி. |
| மூன்றும் அணி | .. | மணிமுத்தாறு. |
| நான்காம் அணி | .. | கோவைபுதூர் (கோயம்புத்தூர்). |
| ஐந்தாம் அணி | .. | ஆவடி. |

1974 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 1 ஆம் நாள் முதல் மாநில எல்லையிலுள்ள உணவுப் பொருள் வழங்கல் சோதனைச் சாவடிகளில் பணிபுரிவதற்காக தமிழ்நாடு சிறப்புக் காவற்படை மூன்றுவது அணி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

#### பயிற்சியும் பணிக்கேற்ற ஆள் திரட்டலும்.

ஐ.பி.எஸ். இளநிலை அதிகாரிகள் மூவர். அவர்களுக்குரிய நடைமுறைப் பயிற்சியை முடித்த பின்னர், மாவட்டங்களில் காவல் துறை உதவி சூப்பிரன்டெண்டுகளாக நியமிக்கப்பட்டனர். ஐந்து ஐ.பி.எஸ் இளநிலை அதிகாரிகள் தற்போது வேலூரிலுள்ள காவலர் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெற்று வருகின்றனர். நேரடி நியமனம் பெற்ற (முதல் நிலை) காவல் துறை டெபுடி சூப்பிரன்டெண்டுகள்

மூவர் மாவட்டங்களில் பயிற்சி பெற்று வருகின்றனர். நடைமுறைப் பயிற்சி முடித்த பின்னர் அவர்கள் துணைக் கோட்டங்களில் நியமிக்கப்படுவர். நேரடி நியமனம் மூலம் தமிழ்நாடு காவல் துறை பணியில் சேர்த்துக் கொள்ளப்பட்ட காவல் துறை (முதல் நிலை) டெபுடி சூப்பிரன்டெண்டுகள் இருவர் வேலூரிலுள்ள காவலர் பயிற்சிக் கல்லூரியில் தற்போது பயிற்சி பெற்று வருகின்றனர்.

காவல் துறை சப்-இன்ஸ்பெக்டர் பதவிக்கு நேரடியாக ஆட்சேர்ப்பு செய்வதன் மூலம் ஆட்களைத் தெரிந்தெடுக்கும் பணி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட வேண்டுமென்று 1974 ஆம் ஆண்டு நவம்பரில் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

சென்னை மாநகரக் காவல் துறையில் பெண்கள் பிரிவொன்றை (Women Police Wing) 1973 டிசம்பரில் அரசு ஏற்படுத்தியுள்ளது. இதற்கென்று காவல் துறை பெண் சப்-இன்ஸ்பெக்டர் ஒருவரும், பெண் காவலர்கள் இருபத்தொருவரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்கள் சென்னை, கீழ்ப்பாக்கத்திலுள்ள காவலர் பயிற்சி பள்ளியில் பயிற்சி பெற்று முடித்த பின்னர் 1974 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 1 ஆம் நாளில் சென்னை மாநகரக் காவல் துறையின் பெண்கள் பிரிவில் நியமிக்கப்பட்டனர்.

### ஐதராபாத்தில் உள்ள மத்தியப் புலனாய்வுப் பயிற்சிப் பள்ளியில் பயிற்சி பெறுதல்.

ஆய்வாண்டில், ஐதராபாத்தில் உள்ள மத்தியப் புலனாய்வுப் பயிற்சிப் பள்ளியில் புலனாய்வுக்குத் தொடர்பான அறிவியல் நுட்பக் கருவிகளிலும், மேம்பாடான புலனாய்வு முறைகளிலும் பதினான்கு வாரங்கள் பயிற்சி பெறுவதற்காக தமிழ்நாட்டைச் சேர்ந்த ஐந்து சப்-இன்ஸ்பெக்டர்கள் அனுப்பப்பட்டனர். அதே பள்ளியில் இருவாரக் காலத்திற்குக் குறுகிய காலப் பயிற்சி பெறுவதற்காகப் பத்து சப்-இன்ஸ்பெக்டர்கள் கொண்ட மற்றொரு தொகுதி அனுப்பப்பட்டது.

### தமிழ்நாடு சட்டஞ்சார்ந்த அறிவியல்-இரசாயன ஆய்வுக்கூடம்.

முன்னாள் தமிழ்நாடு சட்டஞ்சார்ந்த அறிவியல் ஆய்வுக் கூடத்தையும், தமிழ்நாடு இரசாயனப் பரிசோதகர் ஆய்வுக் கூடத்தையும் இணைத்து 1973-ம் ஆண்டு மார்ச் திங்கள் 1 ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டஞ்சார்ந்த அறிவியல்-இரசாயன





இணைக்கப்பட்ட ஆய்வுக்கூடம் தோற்றுவிக்கப்பட்டது. காவல் துறை இந்த ஆய்வுக்கூடத்தின் இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்த இன்ஸ்பெக்டர்-ஜெனரல் ஆய்வுக்கூடம் கீழ்க்கண்ட பிரிவுகளைக் கொண்டு சீரமைக்கப் பட்டுள்ளது :—

1. எறிபடை பிரிவு (Ballistics).
2. உயிரியல் பிரிவு (Biology).
3. இரசாயனப் பிரிவு (Chemistry).
4. ஆவணப் பிரிவு (Documents).
5. பௌதீகப் பிரிவு (Physics).
6. ஆராய்ச்சிப் பிரிவு (Research).
7. குருதி வடிநீர் இயல் பிரிவு (Serology).
8. நச்சூட்டாய்வியல் பிரிவு (Toxicology).

தற்போது இந்த ஆய்வுக்கூடத்தில் கூட்டு இயக்குநர்கள் இருவர், உதவி இயக்குநர்கள் 11 பேர், ஏனைய வகைகளைச் சேர்ந்த பணியாளர்கள் 150 பேர் ஆகியோர் பணியாற்றி வருகின்றனர். இவர்களில் 115 பேர் தொழில் நுட்பப் பணியாளர்கள் ஆவர். குற்றப் புலனாய்வு வகையில் எல்லா வகையான காட்சிப் பொருள்களையும் (Material objects) பரிசோதனை செய்யும் பணியை இந்த ஆய்வுக்கூடம் மேற் கொண்டு, குற்றப் புலனாய்வின் தொடக்க நிலைகளில் புலனாய்வு அதிகாரிகளுக்கு இயன்ற உதவிகளனைத்தையும் செய்து வருகிறது. 1974 ஆம் ஆண்டில் பதினான்கு அறிவியல் உதவி யாளர்கள், புகைப்படம் எடுப்பவர் 7 பேர், இளநிலை ஆய்வுக் கூட உதவியாளர்கள் 4 பேர், தொழில் நுட்ப வல்லுநர் 2 பேர், இரண்டு உதவியாளர்கள், ஒரு இளநிலை உதவியாளர் ஆகியோரை இந்த ஆய்வுக்கூடத்திற்கு நியமிக்க அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. மாவட்ட இயலூர்தி ஆய்வுக் கூடங்களில் தற்காலிகமாகப் பணியாற்றிவந்த காவல் துறை சப்-இன்ஸ்பெக்டர்களுக்குப் பதிலாக இந்த அறிவியல் உதவி யாளர்கள் முகமையில் அனுப்பப்பட்டுள்ளனர்.

கடந்த மூன்றாண்டுகளில் இந்த ஆய்வுக்கூடத்தில் ஆய்வு செய்யப்படுவதற்காக அனுப்பப்பட்ட நேர்வுகளின் எண்ணிக்கை, இந்த ஆய்வுக்கூடத்தினால் பகுப்பாய்வு

[1975 ஏப்ரல் 1

செய்யப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை ஆகியவற்றைக் காட்டும் புள்ளி விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| ஆண்டு. | ஆய்வுக் கூடத்தால் ஆய்வு செய்வதற்கு அனுப்பப்பட்ட நேர்வுகள். | பகுப்பாய்வு செய்யப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை. |
|---|---|---|
| 1972–73 (தமிழ்நாடு சட்டஞ் சார்ந்த அறிவியல் ஆய்வுக் கூடம்). | 5,305 | 36,335 |
| 1973–74 தமிழ்நாடு சட்டஞ் சார்ந்த அறிவியல்-இரசாயன ஆய்வுக்கூடம். | 4,847 | 34,774 |
| 1974–75 தமிழ்நாடு சட்டஞ் சார்ந்த அறிவியல்-இரசாயன ஆய்வுக்கூடம் (31–12–1974) வரை. | 5,815 | 49,423 |

**குற்றமும் துப்புத் துலக்கலும்.**

1973–74 ஆம் ஆண்டுகளில் நடந்த சொத்து குறித்த குற்றங்கள் பற்றிய ஒப்பீட்டு அறிக்கை பின்வருமாறு :—

| குற்றத் தலைப்பு. | அறிவிக்கப்பட்ட புகார்களின் மொத்த எண்ணிக்கை. 1973 | 1974 |
|---|---|---|
| கொலை .. .. .. | 37 | 48 |
| வழிப்பறி .. .. .. | 13 | 17 |
| கொள்ளை .. .. .. | 87 | 110 |
| கன்னக் களவு .. .. .. | 6,891 | 7,717 |
| பெரிய திருட்டுகள் .. .. | 19,463 | 23,617 |
| சிறிய திருட்டுகள் .. .. | 634 | 497 |
| கால்நடைத் திருட்டுகள் .. | 1,319 | 1,444 |
| மொத்தம் .. | 28,444 | 33,450 |



1975 ஏப்ரல் 1]

| | | |
|---|---|---|
| குற்றவாளிகளுக்குத் தண்டனை விதிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை அடிப்படையில் புலனாய்வு செய்யப்பட்ட வழக்குகள் எத்தனை சத வீதம் என்பது. | 60·0 | 58·1 |
| தண்டனை விதிக்கப்பட்ட வழக்கு விசாரணை நடைபெறுகின்ற வழக்குகளின் எண்ணிக்கையில் புலனாய்வு செய்யப்பட்ட வழக்குகள் எத்தனை சத வீதம் என்பது. | 72·9 | 72·9 |

கொலை உட்பட சொத்து குறித்து 1973 ஆம் ஆண்டில் பதிவான குற்ற வழக்குகளின் எண்ணிக்கை 28,444. அவ்வகையில் 1974-ல் புகார் பதிவு செய்யப்பட்ட குற்றங்களின் எண்ணிக்கை 33,450. முந்திய ஆண்டைவிட இவ்வாண்டில் குற்றங்களின் எண்ணிக்கை 5,006 அதிகரித்துள்ளது. அதாவது 17·5 சத வீதம் உயர்ந்துள்ளது.

குற்றங்கள் எண்ணிக்கை உயர்ந்துள்ள போதிலும்கூட துப்புத் துலக்கப்படும் குற்றங்களின் சத வீத அளவு அதே உயர்ந்த அளவில் இருக்குமாறு தமிழ்நாடு காவல் துறை நடவடிக்கை எடுத்துவருகிறது.

குற்றப் பிரச்சினையைத் திறமையாகவும், செவ்விய முறையிலும் சமாளிப்பதற்குத் தேவையான முயற்சிகளனைத்தையும், தமிழ்நாடு காவல் துறை மேற்கொண்டது. 1974 ஆம் ஆண்டில் 58·1 சத வீதம் வழக்குகளில் துப்புத் துலக்கப்பட்டது. துப்புத் துலக்கப்பட்ட குற்றங்கள் எண்ணிக்கை குறித்த சத வீத அளவு சிறிது குறைந்துள்ளதற்கு முக்கிய காரணம், வழக்கு மன்றங்களில் விசாரணை முடிவு பெறுமல் தேங்கி நின்ற வழக்குகளின் எண்ணிக்கை முந்திய ஆண்டுப் புள்ளி விவரத்துடன் (அதாவது 3,720 வழக்குகள்) ஒப்பிட்டுப் பார்க்கையில், இவ்வாண்டில் மிக அதிக அளவில் (அதாவது 4,940 வழக்குகள்) இருந்ததே காரணமாகும். திருட்டுச் சொத்துக்களை மீட்பது குறித்த வழக்குகளைப் பொறுத்த வரையில், குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்பட்டது. அதாவது 1973 ஆம் ஆண்டில் திருட்டுச் சொத்துக்கள் மீட்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை மொத்தத்தில் 49·7 சத வீதமாயிருந்ததற்கு மாறுக, 1974 ஆம் ஆண்டில் திருட்டுச்

[1975 ஏப்ரல் 1

சொத்துக்கள் மீட்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 56·7 சத வீதமாகும். புலனாய்விற்கு அறிவியல் சாதனங்களைப் பயன்படுத்தும் வகையால், சென்னையிலுள்ள கைவிரல் ரேகைப் பதிவுக் கழகம், மாவட்டங்களிலுள்ள ஒற்றை விரல் ரேகைப் பதிவு நிலையங்கள், தமிழ்நாடு குற்றஞ்சார்ந்த அறிவியல் இரசாயன ஆய்வுக்கூடம், மாவட்டங்களிலுள்ள குற்றஞ் சார்ந்த அறிவியல் ஆய்வுக்கூட ஊர்திகள், காவல் துறை கம்பியில்லாத் தந்தி அமைப்புகள், துப்பறியும் நாய்ப் படைகள் ஆகியவற்றைப் புலனாய்வுப் பணியாளர்கள் பெருமளவில் பயன்படுத்தி வருகின்றனர். இது தவிர, பயங்கரமான குற்ற வழக்குகளில் துப்புத் துலக்கும் முறையை மேம்படுத்தும் பொருட்டு கொலை வழக்கில் துப்புத் துலக்குவதில் நவீன உத்திகளைக் கையாளுவதற்கான மும்முரப் பயிற்சியைக் குற்றப் புலனாய்வுத் துறையைச் சேர்ந்த குற்றப் பிரிவு (Crime Branch) 1972-ல் தொடங்கியது. கடந்த மூன்றாண்டுகளில், எட்டு அணிகளில் இதுவரை 203 இன்ஸ்பெக்டர்களும், 96 சப்-இன்ஸ்பெக்டர்களும் கொலை வழக்குப் புலனாய்வில் தீவிரப் பயிற்சி பெற்றுள்ளனர்.

### கள்ள நோட்டு வழக்குகள்.

1971, 1972, 1973 ஆகிய ஆண்டுகளில் மாநிலங்களுக்கு இடையே செயல்பட்டுவந்த கள்ள நோட்டுப் பேர் வழிகளின் நடவடிக்கைகளைத் துப்புத் துலக்கிய குற்றப் புலனாய்வுத் துறையின் கள்ள நோட்டு புலனாய்வுச் சிறப்புப் பிரிவு (The Special Counterfeit Cell) 1974-ல் மறுபடியும் கள்ள நோட்டு நடவடிக்கைகளில் துப்புத் துலக்கி தன்னுடைய திறமையை வெளிக்காட்டியது.

இப்பிரிவு தற்போது ரூ. 100, ரூ. 20, ரூ. 2 கள்ள நோட்டு வழக்குகளில் துப்புத் துலக்கி வருகிறது. இந்த வழக்கின் ஆதாரங்கள் தமிழ்நாடு முழுவதிலும், அண்டை மாநிலங்களிலும் பரவியுள்ளது.

1974 நவம்பரில், கள்ள நோட்டுப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் ஒருவர் பெரிய கருப்பன் என்கிற ராஜு என்பவரை மதுரை வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த வாடிப்பட்டி பேருந்து நிலையத்தில் கைதுசெய்து இரண்டு 20 ரூபாய் கள்ள நோட்டுகளைக் கைப்பற்றினார். இந்நபரை சாமர்த்தியமாக விசாரித்ததன் மூலம் அவரது கூட்டாளியான கந்தசாமி என்பவரைக் கைதுசெய்யவும் ரூ. 34,880 மதிப்புள்ள கள்ள நோட்டுக்களை (1,744 இருபது ரூபாய் நோட்டுகள்) கைப்பற்றவும் முடிந்தது. இந்தக் கள்ள நோட்டுகள் புழக்கத்தில் விடப்படுவதற்கு ஆயத்தமாயிருந்தன.



1975 ஏப்ரல் 1]

புலன் விசாரணையிலிருந்து, குற்றவாளி இவற்றை சிவகாசியில் அச்சிட்டார் எனத் தெரிந்தது. மேலும் புலனாய்வு நடைபெற்று வருகிறது.

1974 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 22 ஆம் நாளன்று மதுரை வடக்கு மாவட்டம் திண்டுக்கல்லில் சுப்பிரமணியம் என்பவர் கைது செய்யப்பட்டார். கள்ள ஒரு ரூபாய் நோட்டுகளை அச்சிடுவதற்காகச் செய்யப்பட்டிருந்த 5 அச்சுருக்கள் கைப்பற்றப்பட்டன. இதில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளும் கண்டுபிடிக்கப்பட்டனர். இந்த மோசடியை உரிய காலத்தில் கண்டு பிடித்ததால் இம்மாநிலத்தில் கள்ள ஒரு ரூபாய் நோட்டுகள் பெருமளவில் புழக்கத்திற்கு வர இருந்ததைத் தடுத்தது.

### கோயில் சிலைத் திருட்டுகள்.

தொன்மையான சிலைகளை அவற்றின் பீடங்களிலிருந்து அகற்றிவிட்டு, போலிச் சிலைகளை அவற்றுக்குப் பதிலாக, திருட்டுத் தனமாக வைத்துவிடுவது தொடர்பான வழக்குகளைப் புலனாய்வு செய்வதில் குற்றப் புலனாய்வுத் துறையின், குற்றப்புலனாய்வுப் பிரிவில் உள்ள, கோயில் சிலைத் திருட்டுகள் தொடர்பான சிறப்புப் பிரிவு இந்த ஆண்டில் மேலும் முன்னேற்றம் கண்டது. இந்த ஆண்டில் இத்தகைய வழக்குகளில் சம்பந்தப்பட்டுக் குற்றம் சாட்டப்பட்ட மேலும் 4 பேர்களைக் கைது செய்து கூடுதல் சாட்சியங்களையும் சேகரித்துள்ளது. சிவபுரம் நடராஜர் சிலை வழக்கில், அதனை மீட்பதற்காக அமெரிக்காவிலும், லண்டனிலும் உள்ள நீதி மன்றங்களில் உரிமை வழக்கு நடவடிக்கைகள் தொடரப்பட்டுள்ளன.

### காவல் துறையினர் துப்புத் துலக்கிய முக்கிய வழக்குகளில் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு குற்றப் புலனாய்வுத் துறையைச் சேர்ந்த குற்றப் புலனாய்வுப் பிரிவு, சென்னையைச் சேர்ந்த பிரபல மருந்தாக்குநரான வைத்தீஸ்வரன் என்பவர் தலைமையில் செயல்பட்டு வந்த ஒன்பது பேரடங்கிய பயங்கரக் குற்றவாளிக் கும்பலொன்றைக் கண்டுபிடித்தது. இக்கும்பலைச் சேர்ந்தவர்கள் தொடர்ந்தாற்போல் நடந்த பல கோரமான கொலைகளுக்குக் காரணமாயிருந்தவர்கள். இக்குற்றவாளிகள் சுங்க அதிகாரிகள் அல்லது ஆயத் தீர்வைச் சட்டங்களைச் செயல்படுத்தும் அதிகாரிகள் (Customs or Enforcement Officers) போல நடித்துத் தங்களுக்குப் பலியாகும் ஆட்களைத் தெரிந்தெடுத்து அவர்களுக்கு "உண்மை சொல்ல வைக்கும் ஊசி" போடுவதாகக் கூறி பெருமளவில் பெதிடின்

ஊசி மருந்தைக் கொடுத்து அவர்களைக் கொன்று விட்டு அவர்கள் எடுத்து வந்த தொகையை எடுத்துக் கொண்டு உடல்களைத் தொலைவிடங்களில் கிடத்தி விட்டு வந்தனர். காவல்துறை இவ்வழக்கில் புலனாய்வு செய்து 9 பேரைக் கைது செய்தது. ரூ. 1,28,000 மதிப்புள்ள சொத்துக்களை மீட்டது. குற்றஞ்சாட்டப்பட்ட 9 பேரில் 8 பேர் மீது விசாரணை நடந்தது. ஒருவர் அப்ரூவராக மாறினார். விசாரணை முடிவில் குற்றவாளிகளில் 4 பேருக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. மற்ற 4 பேருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

இந்திய தேசிய ராணுவத்தினைச் சேர்ந்த வீரர்கள் என்று சொல்லிக் கொண்டு விடுதலை வீரர் வீரமானியம் பெற்று வந்த மோசடி வழக்கு ஒன்றை தமிழ்நாடு குற்றப்புலனாய்வுத் துறையின் குற்றப்பிரிவு துப்புத் துலக்கிக் கண்டறிந்தது. இந்த நபர்கள் போலியான அல்லது பொய்யான சான்றிதழ்களை காட்டி அவற்றினடிப்படையில் வீரமானியத் தொகை பெற்று வந்ததாகப் புலனாய்வின் மூலம் தெரிய வந்துள்ளது. இந்த மோசடி நிகழ்ச்சிகள் இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் நிகழ்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கில் மேலும் புலனாய்வு நடைபெற்று வருகிறது.

வீட்டையுடைத்துத் திருடிய வழக்குகள் 4, திருட்டு வழக்குகள் 30 ஆகியவற்றில் சம்பந்தப்பட்ட கும்பல் ஒன்றை தமிழ்நாடு குற்றப்புலனாய்வுத் துறையினர் கைது செய்தனர். இக்கும்பல், திட்டக்குடி, பெண்ணாடம், தொழுதூர், குன்னம், செந்துரை காவல் நிலையங்களின் எல்லைகளில் செயல்பட்டு வந்தனர். இந்த வழக்குகளில் பெரும்பாலும் மின்சார மோட்டார்கள், ஸ்டார்ட்டர்கள், சுவிட்சுகள் முதலியவைகள் திருடப்பட்டன. இந்த வழக்கு விசாரணையிலுள்ளது.

கோயம்புத்தூர் நகர்ப்புறம், கோயம்புத்தூர் கிராமப்புறம், சேலம், சென்னை மாநகரம் போன்ற இடங்களில் தண்டபாணி, அவரது கூட்டாளிகள் தலைமையில் மற்றொரு குற்றவாளிக் கும்பல் 35 கொள்ளைகளையும், திருட்டுகளையும் 1972 அக்டோபர் திங்களுக்கும் 1974 மே திங்களுக்குமிடையே நடத்தியது. தட்டச்சு இயந்திரங்கள், மின்விசிறிகள், சைக்கிள்கள், டேப் ரிக்கார்டர்கள், டிரான்ஸிஸ்டர்கள் போன்ற ரூ. 35,000 மதிப்புள்ள பொருள்கள் இக்கும்பலிடமிருந்து மீட்கப்பட்டன. இந்த வழக்கு விசாரணையில் உள்ளது.



திருநெல்வேலியைச் சேர்ந்த தங்கையா, முத்துசுவாமி ஆகியோரின் தலைமையிலும், பரமசிவம், நடராஜ குடும்பன் ஆகிய அவர்களது கூட்டாளிகளுடனும் அமைந்த கும்பல் ஒன்று திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் 12 கொள்ளைகளையும், திருட்டுகளையும் நடத்தியது. ரூ. 10,000 மதிப்புள்ள பொருட்கள் மீட்கப்பட்டன. இந்த வழக்கு விசாரணையில் உள்ளது.

மாநிலங்களுக்கிடையே கொள்ளை நடத்தி வந்த குற்றவாளிகளான கல்கத்தாவைச் சேர்ந்த கோஸ், சக்கரவர்த்தி ஆகியோரை சென்னை மாநகரக் காவல்துறையினர் கைது செய்தனர். கன்னம் வைத்துத் திருடிய பல இடங்கள் இதன் மூலம் கண்டுபிடிக்கப்பட்டதுடன், ரூ. 75,000 மதிப்புள்ள சொத்துக்கள் மீட்கப்பட்டன.

### மின்கம்பித் திருட்டுகள்

மின்கம்பித் திருட்டுகளைக் கவனிக்க அம்பத்தூர், திருவொற்றியூர், திருவள்ளூர், அரக்கோணம் ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு கம்பி இல்லாத் தந்திச் செய்தித் தொடர்பு அறை வீதம், நான்கு அறைகளை ஏற்படுத்த அரசு 1974 செப்டம்பரில் அனுமதி வழங்கியது.

அவை 1–10–1974 முதல் செயல்படத் தொடங்கின. தேவையான போக்குவரத்து, செய்தித் தொடர்பு வசதிகளுடன் கூடிய இயங்கும் காவலர்படை ஒன்று இச்செய்தித் தொடர்பு அறை ஒவ்வொன்றுக்கும் வகை செய்யப்பட்டுள்ளது. மின்கம்பித் திருட்டுகள் நிகழா வண்ணம் தடுப்பதில் உள்ளூர் காவலர்களுக்கு இவை மிக்க உதவியாயுள்ளன.

வடஆற்காடு மாவட்டத்தில் ரயில்வே சிக்னல் லைன் கம்பங்கள், தபால் தந்தி கம்பங்களிலிருந்து 63 தடவை மின்கம்பித் திருட்டுகள் நடத்திய எல்லப்பன் தலைமையிலான குற்றவாளிக் கும்பல் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. காவலர் புலனாய்வு நடத்தியதில் ரூ. 50,000 மதிப்புள்ள மின்கம்பிகள் மீட்கப்பட்டன. இக்குற்றவாளிகளுக்கெதிராக வழக்கு நடத்தப்பட்டு வருகிறது.

சென்னை மாநகரைச் சேர்ந்த பார்த்தசாரதி, அவரது கூட்டாளிகள் தலைமையிலான வெளியூரைச் சேர்ந்த நான்கு குற்றவாளிகள் அடங்கிய கும்பல் ஒன்று செங்கற்பட்டு, மேற்கு மாவட்டத்தில் 41 தடவைகளில் மின்கம்பித் திருட்டுகளை நடத்தியது. இந்த வழக்கு விசாரணையில் உள்ளது.

இந்த ஆண்டில் கோயம்புத்தூர் கிராமக் காவல்துறையினர் ஈரோடு தொலைபேசி இணைப்பகத்தில் பணியாற்றி வந்த கந்தசாமி என்பவரை கைது செய்து கோவை நகர்ப்புறத்திலும், கோவை கிராமப் புறத்திலும், அவர் 23 தடவை நடத்திய மின்கம்பித் திருட்டுகளைக் கண்டுபிடித்தனர். ரூ. 75,000 மதிப்புள்ள மின்கம்பிகள் மீட்கப்பட்டன. திருட்டுகளைச் செய்வதற்கு குற்றவாளி மோட்டார் சைக்கிளைப் பயன்படுத்தினார் என்று புலனாய்வின் மூலம் தெரிய வந்தது.

### துப்பறியும் நாய்ப்படை

இம்மாநிலத்தில் இப்பொழுது சென்னை மாநகரில் ஒன்றும், மதுரையில் ஒன்றும், கோயம்புத்தூரில் ஒன்றுமாக நாய்ப்படை பிரிவுகள் மூன்று உள்ளன. இவை மனநிறைவளிக்கும் முறையில் செயலாற்றி வருகின்றன. திருச்சிராப்பள்ளியிலும் துப்பறியும் நாய்ப்படை பிரிவு ஒன்றை அமைப்பதற்கு 1973-ல் அரசு அனுமதி அளித்துள்ளது. நாய்ப்பட்டி ஒன்று கட்டப்பட்டு வருகிறது. நாய்ப்பட்டி கட்டி முடிக்கப்பட்ட பின்னர் இப்பிரிவு செயல்படும்.

1973-ல் துப்பறியும் நாய்ப்படையின் பணி 484 வழக்குகளில் பயன்படுத்தப்பட்டிருக்க, 1974-ல் 470 வழக்குகளில் இது பயன்படுத்தப்பட்டது.

### வகுப்புக் கலவர நிலை

இவ்வாண்டில் இங்குமங்கும் சில வகுப்புக் கலவரங்கள் நிகழ்ந்தன. பெரும்பாலான நிகழ்வுகளில் பல்வேறு வகுப்பினரிடையே எவ்வித ஆழ்ந்த பகைமை உணர்ச்சியோ அல்லது காழ்ப்புணர்ச்சியோ இல்லையென்று பெரும்பாலான நிகழ்வுகளில் ஆய்வு செய்ததன் மூலம் தெரிய வந்தது. பொதுவாக உள்ளூர்ப் பிரச்சினைகளை அடிப்படையாக வைத்து மோதல்கள் ஏற்பட்டன. 1974-ல் இரண்டு வகுப்புக் கலவரங்கள் ஏற்பட்டன. ஒரு கலவரத்தில் திருநெல்வேலி மாவட்டம் உவரியில் நாடார்களுக்கும், மீனவர்களுக்குமிடையே தகராறு ஏற்பட்டது. மற்றொரு கலவரத்தில், தருமபுரி மாவட்டம் தேன்கனிக்கோட்டையில் இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்குமிடையே கலவரம் ஏற்பட்டது. இந்த இரண்டு நிகழ்ச்சிகளுக்கும் உள்ளூர் தகராறே முக்கிய காரணமாகும்.

### தொழிலாளர் நிலைமை

ஊதிய உயர்வு, ஊதியக் கொடை ஆகிய கோரிக்கைகளை முன்வைத்துத் தொழிலாளர்கள் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம், தொடர் உண்ணாவிரதம், கடையடைப்பு, அரசு அலுவலகங்களுக்கு முன்பு மறியல் செய்தல்



போன்றவற்றில் ஈடுபட்டனர். எனினும் சட்டம்-ஒழுங்கு பற்றிய பெரும் பிரச்சினை எதுவும் நடைபெறவில்லை. இந்த ஆண்டு மாநிலத்திலுள்ள பீடி, சுருட்டுத் தொழிலாளர்கள் நடத்திய கிளர்ச்சி, கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஆலைத் தொழிலாளர்கள் நடத்திய கிளர்ச்சி, இவ்வாண்டில் நிகழ்ந்த ரயில்வே தொழிலாளர் வேலை நிறுத்தம் ஆகியவை காவல் துறையினர் எதிர்நோக்க வேண்டியிருந்த சில முக்கியப் பிரச்சினைகளாகும்.

### தீவிரவாதிகளின் நடவடிக்கைகள்

தீவிரவாதிகளின் பெரிய அளவிலான நடவடிக்கைகள் எதுவும் இந்த ஆண்டில் தமிழ்நாட்டில் காவல் துறையின் நாட்டத்திற்கு வரவில்லை.

### காவலர்கள் துப்பாக்கிச் சுடல்

1974-ல் 7 நேர்வுகளில் துப்பாக்கிச் சூடு நடத்தவேண்டி வந்தது. விவரங்கள் வருமாறு:—

(1) 1974 ஜூன் 27 ஆம் நாளன்று பிற்பகல் 3 மணிக்கு கேரள மாநிலத்திற்குக் கடத்திச் செல்வதற்காக 8 பேர் தலைச்சுமையாக அரிசி மூட்டைகளை எடுத்துச் செல்வதை திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை எல்லையிலுள்ள நீலியம்மன்கோயில் சோதனைச் சாவடியிலுள்ள உணவுப்பொருள் வழங்கு துறை சோதனைச் சாவடிப் பணியாளர்கள் கண்டனர். சோதனைச் சாவடிப் பணியாளர்களில் தமிழ்நாடு சிறப்புக் காவல் 4-வது அணியைச் சேர்ந்த 2 காவலர்களும் இருந்தனர். சோதனைச் சாவடிப் பணியாளர்களைக் கண்டவுடன் கடத்தல்காரர்கள் தங்களுடைய அரிசி மூட்டைகளைப் போட்டுவிட்டு ஓடிவிட்டனர். 8 மூட்டை அரிசி கைப்பற்றப்பட்டது. தப்பிச் சென்ற கடத்தல்காரர்கள் அடுத்த நாள் காலை சுமார் 8 மணிக்கு அந்த இடத்திற்குத் திரும்பி வந்து கைப்பற்றப்பட்ட அரிசி மூட்டைகளைத் திருப்பித் தந்தால் ரூ. 100 கொடுப்பதாகச் சோதனைச் சாவடி அதிகாரிகளுக்குச் சொன்னார்கள். சோதனைச் சாவடிப் பணியாளர்கள் மறுத்தபோது கடத்தல்காரர்கள் மலையின் உச்சியிலிருந்து கற்களை உருட்டிவிட்டனர். கடத்தல்காரர்களுடன் அப்போதிருந்த வெள்ளைத்துரை என்ற ஒருவர் நாட்டுத் துப்பாக்கியினால் சோதனைச் சாவடிப் பணியாளர்களை நோக்கிச் சுட்டார். சோதனைச் சாவடிப் பணியாளர்கள் உடனடியாக மறைவிடங்களில் பதுங்கிக் கொண்டனர். சோதனைச் சாவடியிலுள்ள காவலர் தங்கள் துப்பாக்கியினால் வானத்தை நோக்கிச் சுட்டனர். கடத்தல்காரர்கள் அரிசி மூட்டைகளில்

ஒன்றைத் தூக்கிக்கொண்டு ஓடிவிட்டனர். மலையுச்சியிலிருந்து உருண்டுவந்த கற்களினால் காவலர் ஒருவரும், சோதனைச் சாவடியில் பணிபுரியும் சௌக்கிதார் ஒருவரும் இலேசான காயம் அடைந்தனர். குற்றம் சாட்டப்பட்டவர்கள் பின்னர் கைது செய்யப்பட்டனர். புலியரைக் காவல் நிலையத்தில் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. விசாரணை வேண்டாம் என்று அரசு கருதியதால், நீதிமன்ற அளவிலான விசாரணை எதுவும் நடைபெறவில்லை.

(2) 1974ஆம் ஆண்டு ஜுலை மாதம் 2ஆம் நாளன்று பெண்களைக் கிண்டல் செய்த இளைஞர் மூவரை கல்லாவி காவல் நிலைய சப்-இன்ஸ்பெக்டர் கண்டித்தார். போக்கிரிகள் சிலர் சப்-இன்ஸ்பெக்டரைத் தாக்க முயற்சி செய்தனர். கையில் துப்பாக்கி வைத்திருந்த 190-ம் எண் காவலர் சப்-இன்ஸ்பெக்டருக்கு உதவ விரைந்தார். கூட்டத்தினர் துப்பாக்கியைப் பறித்துக்கொள்ள முயற்சித்தனர். காவலர் தற்காப்புக்காக ஒரு முறை வானத்தை நோக்கிச் சுட்டார். ஒருவரும் காயமடையவில்லை. இது சிறிய நிகழ்ச்சியானதால் நீதிமன்ற விசாரணை வேண்டாம் என்று முடிவு செய்யப் பட்டது.

(3) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தேங்காய்ப் பட்டினத்திலுள்ள A. V. M. வாய்க்கால் மூலமாக கேரளாவுக்கு அரிசியைக் கடத்திச் சென்ற நாட்டுப் படகு ஒன்றை நாகர்கோயிலில் முகாமிட்டிருந்த மதுரை குற்றப் புலனாய்வுத் துறை, உணவுப் பொருள் பிரிவு காவல்துறை சூப்பிரண்டெண்டெண்டு வழிமறித்தார். படகிலிருந்தவர்கள் படகை நிறுத்த மறுத்து, தப்பியோட முயன்றனர். குற்றப்புலனாய்வுத்துறை உணவுப் பொருள் பிரிவுகாவல்துறை சூப்பிரண்டெண்டெண்டு படகை நோக்கி இரண்டு முறை சுட்டபோது படகிலிருந்த வர்கள் படகை விட்டுவிட்டு ஓடிவிட்டனர்.

(4) 1974ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 11ஆம் நாள் அன்று இரவு 2-45 மணியளவில் சென்னையிலிருந்து 2 லாரிகள் ஒன்றன் பின் ஒன்றாக வந்து செங்கல்பட்டு கிழக்கு மாவட்டம் ஆரம்பாக்கத்திலுள்ள சோதனைச் சாவடியிலுள்ள கடையின் மீது மோதி நிற்காமல் ஆந்திரப் பிரதேசத்தை நோக்கிச் சென்றன. வழக்கமான சோதனைக்காக சோதனைச் சாவடியில் லாரிகளை நிறுத்துவதற்கான முயற்சிகள் பலனளிக்காமல் போகவே, சோதனைச் சாவடியில் பணியிலிருந்த துணைத் தாசில்தார் அவற்றைச் சோதனைக்காகத் தடுத்து நிறுத்தும் பொருட்டு அந்த லாரிகளின் டயர்களை நோக்கிச் சுடுமாறு காவலிருந்த காவலருக்கு உத்தர



விட்டார். காவலர் ·303 ரவைகளைக் கொண்டு லாரியின் டயர்களை நோக்கிச் சுட்டார். ஆனால், இருள் காரணமாக குறி தவறியது. இரண்டு லாரிகளும் தப்பி ஓடிவிட்டன. இந்தத் துப்பாக்கிச் சூட்டினால் காயமோ, உயிர்ச் சேதமோ ஏற்படவில்லை.

(5) 1974 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 1–ஆம் நாள் அன்று காலை 06-15 மணியளவில் திருநெல்வேலி மாவட்டம் கோவில்பட்டியைச் சேர்ந்த காவல்துறை டெபுடி இன்ஸ் பெக்டர் தலைமையிலான காவல்படை, பள்ளிகளிலும், கோயில்களிலும் கன்னம் வைத்துத் திருடிய குற்றவாளி களைக் கைது செய்தது. இந்தத் திருட்டுகளில் தவிடன் என்ற மற்றொருவரும் சம்பந்தப்பட்டிருந்தார் என்று கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் டெபுடி இன்ஸ்பெக்ட ரிடம் தெரிவித்தார். அதன் பின்னர் டெபுடி இன்ஸ்பெக்டர் தனது காவலர்களுடன் தவிடன் ஒளிந்து கொண்டிருந்த திட்டக்குளம் கிராமத்திற்குச் சென்றார். காவற்படை யினர் அந்த வீட்டைச் சுற்றி வளைத்துக் கொண்டனர். காலை 2-00 மணியளவில் தவிடன் வேல் கம்புடன் வெளி வந்தார்; தன் அருகில் எவரேனும் நெருங்கினால் அவரைக் குத்திவிடுவதாக அச்சுறுத்தினார். சரணடையும்படி அவ ருக்கு காவல்துறை டெபுடி இன்ஸ்பெக்டர் கூறினார். ஆனால், அவரது அறிவுரைபல னளிக்கவில்லை. முதலில் தவிடன் காவலர் ஒருவரைத் தாக்கினார். ஆனால், அக் காவலர் காயம் ஏதுமின்றித் தப்பினார். தவிடன் வேல் கம்பினால் டெபுடி இன்ஸ்பெக்டரைத் தாக்கியபோது, டெபுடி இன்ஸ்பெக்டர் தற்காப்பிற்காக ஒரு முறை சுட்டார். தவிடன் காயம் அடையவில்லை. மறுபடியும், தவிடன் டெபுடி இன்ஸ்பெக்டரைத் தாக்கினான். டெபுடி இன்ஸ்பெக்டர் இரண்டாவது முறையும் சுட்டார். துப்பாக்கிக் குண்டினால் தாக்குண்ட தவிடன் தப்ப முயன் றான். ஆனால், அவன் காவலர் ஒருவரால் பிடிக்கப்பட்டான். அவன், கோயில்பட்டி பொது மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டான். அவனுடைய நிலைமை மோசமாக உள்ள தாக மருத்துவ அதிகாரி கூறினார். மருத்துவ அதிகாரியின் ஆலோசனையின் பேரில் தவிடன், பாளையங்கோட்டையி லுள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டான். 1974ஆம் ஆண்டு அக்டோபர் 1ஆம் நாளன்று காலை 6-30 மணியளவில் அவன் இறந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது. கோயில்பட்டி வருவாய்க் கோட்ட அதிகாரி நீதிமன்ற விசாரணை ஒன்றை நடத்தினார்.

(6) மதுரை மாவட்டம், வாலாந்தூர் காவல் நிலைய சப்-இன்ஸ்பெக்டர் தனது காவற்படையுடன் 1974 அக்டோபர் 19-ஆம் நாளன்று வாலாந்தூரிலிருந்து அரை கிலோ மீட்டர் தொலைவில் உள்ள சொக்கத்தேவன்பட்டி கிராமத்திற்கு மதுவிலக்குச் சோதனைக்காகச் சென்றார். காவல் படையினர் கிராமத்திற்குள் நுழைந்தபோது, சொக்கத்தேவன்பட்டி ஊராட்சித் தலைவர் சொக்கலிங்கம் கிராம மக்கள் சுமார் 100 பேருடன் கிராம மந்தையில் இருந்தது தெரியவந்தது. காவல் துறை சப்-இன்ஸ்பெக்டரையும், காவலர்களையும் அவர் தடுத்து நிறுத்தி அக்கிராமத்திற்குள் அவர்கள் நுழைய என்ன உரிமை இருக்கிறது என்று வினவினார். மதுவிலக்குச் சோதனை ஒன்றை நடத்தத் தாம் கருதியுள்ளதாக சப்-இன்ஸ்பெக்டர் தெரிவித்து, அதற்குத் தங்களுக்கு உதவுமாறு அவரைக் கேட்டுக்கொண்டார். அதன் பின்னர், அத்தகைய சோதனைகளுக்காக கிராமத்திற்குள் நுழைய வேண்டாம் என்று சொக்கலிங்கம் சப்-இன்ஸ்பெக்டரை எச்சரித்து, மேற்கொண்டும் காவற்படையினரைப் போகவிடாமல் தடுத்தார். காவல் துறை சப்-இன்ஸ்பெக்டரும் காவலர்களும் மேற்கொண்டும் உள்ளே போக விரும்பியபோது, சொக்கலிங்கம் காவற்படையினரைத் தாக்குமாறு சுமார் 100 பேரடங்கிய அந்தக் கூட்டத்தினரைத் தூண்டினார். உடனே சொக்கலிங்கத்தைப் பின்தொடர்ந்து கூட்டத்தினர் காவலர்மீது கல்லெறியத் தொடங்கினர். சப்-இன்ஸ்பெக்டரும் மற்றும் நான்கு காவலர்களும் காயம் அடைந்தனர். கூட்டத்தில் இருந்த சிலர் பக்கத்தில் உள்ள தங்கள் வீடுகளுக்கு ஓடி, பின்னர், அரிவாள், கம்புகளுடன் கூட்டத்தினருடன் சேர்ந்து கொண்டனர். அபாயகரமான கருவிகளுடன் கூட்டத்தினர் வந்ததைப் பார்த்தவுடன், சப்-இன்ஸ்பெக்டர் கலைந்து செல்லுமாறு அவர்களுக்கு உத்தரவிட்டார். ஆனால், கூட்டத்தினர் கலைந்து செல்லவில்லை. கூட்டத்தினரிடையே அரிவாளையும், கம்புகளையும் வைத்திருந்த 20 பேர் காவல் துறையினரை நோக்கி முன்னேறினர். அவர்கள் மேலும் முன்னேறினால் வன்முறை பயன்படுத்த வேண்டியதிருக்கும் என்று சப்-இன்ஸ்பெக்டர் எச்சரித்தார். கூட்டத்தினர் அவரின் எச்சரிக்கைக்குச் செவி சாய்க்கவில்லை. ஆனால், பயங்கரமான ஆயுதங்களுடன் காவலர் படையை நோக்கி முன்னேறினர். எச்சரிக்கை விடுத்த பின்னர், சப்-இன்ஸ்பெக்டர் தடியடி செய்யும்படி உத்தரவிட்டார். கூட்டம் காவலர் படையை விட எண்ணிக்கையில் அதிகமாயிருந்ததால் தடியடி பலனளிக்கவில்லை. கூட்டத்தினர் ஆத்திரம் அடைந்தனர். அவர்கள் கலைந்து செல்லாவிட்டால் துப்பாக்கிச் சூடு நடத்த





வேண்டியதிருக்கும் என்று சப்-இன்ஸ்பெக்டர் எச்சரித்தார். ஆனால், எச்சரிக்கை ஒரு பலனையும் அளிக்கவில்லை. கூட்டம் காவலர் படையைச் சுற்றி வளைத்துக்கொண்டது. இந்த வன்முறையாளர்களிடமிருந்து தன்னையும், தன்னைச் சேர்ந்த காவலர்களையும் காப்பாற்றிக்கொள்வது முடியாதது என்று கண்டவுடன், ரவைத் தோட்டாவினால் ஒரு முறை சுடும்படி நாயக்கிடம் சப்-இன்ஸ்பெக்டர் கட்டளையிட்டார். துப்பாக்கிச் சுடல் நடைபெற்றதும், கூட்டத்தினர் கலைந்தனர். இந்த நிகழ்ச்சியில், கூட்டத்திலுள்ள சில நபர்கள் ரவைகளினால் காயமுற்றனர். உசிலம்பட்டி வருவாய்க்கோட்ட அதிகாரியால் நீதிமன்ற விசாரணை நடத்தப்பட்டது.

(7) 1974 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 27 ஆம் நாளன்று மதுரை தென் மாவட்டத்தைச் சேர்ந்த காவல் துறை ரிசர்வ் இன்ஸ்பெக்டர் ஒருவர், ரிசர்வ் சப்-இன்ஸ்பெக்டர், தலைமைக் காவலர் ஒருவர், லான்ஸ் நாயக் இருவர், காவலர் இருவர் ஆகியோர் அடங்கிய காவற் படை ஒன்று, பறிமுதல் செய்யப்பட்ட தங்கத்திற்குப் பாதுகாப்பாக மதுரை மைய ஆயத்தீர்வைத் துறை அதிகாரிகள் இருவருடன் பம்பாய்க்குச் சென்றனர். 1974 நவம்பர் 2 ஆம் நாளன்று அவர்கள் பம்பாய்-சென்னை ஜனதா விரைவு ரயில் வண்டியில் திரும்பி வந்து கொண்டிருக்கையில் அந்த வண்டி அரக்கோணம் ரயில் நிலையத்தினருகே, மங்கம்மாபேட்டை ரயில்வே கேட் அருகில் 500 அரிசி கடத்தல்காரர்கள் அடங்கிய கட்டுக்கடங்காத கூட்டத்தினால் தாக்கப்பட்டது. காவல் படையினர் பயணம் செய்துகொண்டிருந்த ரயில் பெட்டி மீது கூட்டத்தினர் கல் வீசினர். இக்கல்வீச்சில் காவலர் ஒருவர் காயமடைந்தார். காவல் துறை ரிசர்வ் இன்ஸ்பெக்டர் உத்தரவிட்டதன்மேல் லான்ஸ் நாயக் இரு முறை வானத்தை நோக்கிச் சுட்டார். மங்கம்மா பேட்டை ரயில்கேட் அருகே ரோந்து வந்துகொண்டிருந்த ரயில்வே காவல் துறையைச் சேர்ந்த 3 காவலர்களும், கூட்டத்தினருடன் மோதினர். காவலர்களில் ஒருவர் கற்களால் தாக்கப்பட்டார். கூட்டத்தினரால் அவர் சூழ்ந்து கொள்ளப்பட்டபோது தற்காப்பிற்காக அக்காவலர் தன்னுடைய கைத்துப்பாக்கியால் வானோக்கி ஒரு முறை சுட்டார். ரயில் நகர்ந்தது. அரக்கோணம் ரயில் நிலையத்திற்கு சுமார் 2 கிலோ மீட்டர் முன் அபாயச் சங்கிலியை இழுத்ததன் காரணமாக ரயில் மீண்டும் நிறுத்தப்பட்டது. கல் வீச்சு தொடர்ந்தது. பாதுகாப்பாக வந்த காவலரில் இருவர் காயமுற்றனர். துப்பாக்கி ஒன்றும் சேதமடைந்தது. காவல் துறை ரிசர்வ் இன்ஸ்பெக்டர் ஆணையிட்டதன்பேரில்

லான்ஸ் நாயக் வாஞேக்கி மற்ெருரு முறை சுட்டார். கூட்டத்திலிருந்த இருவர் ரயில் பெட்டியில் மண்ணெண்ணெயை ஊற்றித் தீ வைக்க முயன்றனர். எச்சரிக்கை கொடுத்த பின்னர் லான்ஸ் நாயக் போக்கிரிகள் மீது ஒரு முறை சுட்டார். ஒருவர் குண்டடிபட்டு 40 அடி தொலைவுக்கு ஓடி ரயில் பாதைக்கருகே விழுந்தார். கூட்டத்தினர் மீண்டும் கல்லெறியத் தொடங்கினர். காவல் துறை ரிசர்வ் சப்-இன்ஸ்பெக்டர் தன்னிடமுள்ள ·380 ரிவால்வரிலிருந்து வாஞேக்கி ஒரு முறை சுட்டார். கூட்டத்தினர் கலைந்து சென்றனர். பின்னர் அரக்கோணம் ரயில்வே உதவி மருத்துவ அதிகாரி அந்த இடத்திற்கு வந்தார். ரயில்வே பாதைக்கருகே விழுந்திருந்த காயமுற்ற நபரை அவர் பரிசோதித்துப் பார்த்து அவர் அநத—நபர் இறந்துவிட்டார் என்று அறிவித்தார். ராணிப்பேட்டை வருவாய்க் கோட்ட அதிகாரி நீதிமன்ற விசாரணை நடத்திஞர்.

### கண்ணீர்ப் புகை வீசுதல்.

1974-ல் 13 நேர்வுகளில் கண்ணீர்ப்புகை குண்டு வீசப் பட்டது.

(1) இரயில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தின்போது, போத்தனூர் ரயில் நிலையத்தில் கூடியிருந்த வன்முறையாளர் கூட்டத்தைக் கலைப்பதற்காக 25–5–1974 அன்று கண்ணீர்ப்புகை வீசப்பட்டது.

(2) இரயில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தின்போது, மதுரை பாலம் இரயில்வே நிலையத்தில் பாண்டியன் விரைவு இரயில் வண்டியின்மீது கற்களை வீசிய வெறி கொண்ட கூட்டத்தைக் கலைப்பதற்காக 25–5–1974 அன்று கண்ணீர்ப்புகை வீசப்பட்டது.

(3) வடஆற்காடு மாவட்டம், போளூரில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தின்போது கலகக் கூட்டத்தைக் கலைப்பதற்காக 8–6–1974 அன்று கண்ணீர்ப்புகை வீசப்பட்டது.

(4) செங்கற்பட்டு கிழக்கு மாவட்டம் வேளச்சேரியில் சட்ட விரோதமாகச் கூடியிருந்த இரு எதிரிகள் கூட்டத்தைக் கலைப்பதற்கு 17–6–1974 அன்று கண்ணீர்ப்புகை பயன் படுத்தப்பட்டது.

(5) மேற்கு தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்தில் வன்முறையாளர் கூட்டத்தைக் கலைப்பதற்காக 12–7–1974 அன்று கண்ணீர்ப்புகை பயன் படுத்தப்பட்டது.





(6) கிழக்கு செங்கற்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் அரிசி வணிகர் ஒருவரைத் தாக்கிய கட்டுக்கடங்காத கூட்டத்தைக் கலைப்பதற்காக 1–8–1974 அன்று கண்ணீர்ப் புகை பயன்படுத்தப்பட்டது.

(7) சென்னை மாநகரம் கால்வாய்ச்சாலைச் சந்திப்பு, எல்லையம்மன் கோயில் தெருவில் பொதுமக்கள் மீதும், காவலர்படை மீதும் கற்களையும் சோடா புட்டிகளையும் வீசியெறிந்த கூட்டத்தைக் கலைப்பதற்காக 4–8–1974 அன்று கண்ணீர்ப்புகை வீசப்பட்டது.

(8) திருநெல்வேலி மாவட்டம், தூத்துக்குடி, " ஸ்பிக் நகரி"ல் வன்முறையில் ஈடுபட்ட தொழிலாளர்களைக் கலைப்பதற்காக 6–8–1974 அன்று கண்ணீர்ப்புகை பயன் படுத்தப்பட்டது.

(9) தருமபுரி மாவட்டம் கிருஷ்ணகிரி அரசு கலைக் கல்லூரி மாணவர்களின் சட்ட விரோதமான கூட்டத்தைக் கலைப்பதற்காக 19–8–1974 அன்று கண்ணீர்ப்புகை பயன் படுத்தப்பட்டது.

(10) பைகிராப்ட்ஸ் சாலை, பெல்ஸ் சாலைச் சந்திப்பில் சட்ட விரோதமாகக்கூடி பொதுமக்கள், காவற்படை ஆகியோர் மீது கற்களையும் சோடா புட்டிகளையும் வீசியெறிந்த சென்னை மாநிலக் கல்லூரி மாணவர்களைக் கலைப்பதற்காக 11–11–1974 அன்று கண்ணீர்ப்புகை வீசப்பட்டது.

(11) சென்னை மாநகர் பைகிராப்ட்ஸ் சாலை, பெல்ஸ் சாலைச் சந்திப்பில் பொதுமக்கள் மீதும், காவலர் படை மீதும் கற்கள் சோடா புட்டிகள் ஆகியவற்றை வீசியெறிந்த மாணவர்களையும், பொதுமக்களையும் கொண்ட கட்டுக்கடங் காத கூட்டத்தைக் கலைப்பதற்காக 19–11–1974 அன்று கண்ணீர்ப்புகை வீசப்பட்டது.

(12) வட ஆற்காடு மாவட்டம் செய்யார் கன்னைக் காலனியில் காவலர் படைமீது கற்களை வீசியெறிந்த சட்ட விரோதமான மாணவர் கூட்டத்தைக் கலைப்பதற்காக 2–12–1974 அன்று கண்ணீர்ப்புகை பயன்படுத்தப்பட்டது.

(13) சென்னை மாநகரம், நந்தனம் கலைக் கல்லூரி முன்பு சட்ட விரோதமாக காவலர் மீதும் அவ்வழியே சென்ற பொதுமக்கள் மீதும் கற்களை வீசியெறிந்த மாணவர்களையும் பொதுமக்களையும் கலைப்பதற்காக கண்ணீர்ப்புகை பயன் படுத்தப்பட்டது.

[1975 ஏப்ரல் 1

காவல் துறை வானொலிப் பிரிவு.

தமிழ்நாடு காவல்துறை வானொலித் தொகுதியில் மாவட்டத் தலைமையிடங்கள் அனைத்தும் சென்னையுடன் இணைக்கப்பட்டுள்ளன. சென்னை மாநகரில் மத்தியச் சரகம், தெற்குச் சரகம், மேற்குச் சரகம், வடக்குச் சரகம் எனப்படும் நான்கு செய்தித் தொடர்பு நிலையங்கள் உள்ளன. மேலே கூறியவைத் தவிர சென்னை மாநகரக் காவற்படை, வானொலித் தொடர் அமைப்பு, தமிழ்நாடு சிறப்புக் காவற்படை வானொலித் தொடர் அமைப்பு ஆகியவை உள்ளன. சென்னை மாநகரம், கீழ் அணை, மேல் அணை, கல்லணை, தஞ்சாவூர், பவானிசாகர், தேக்கடி, மேட்டூர், ராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி ஆகிய இடங்களில் வெள்ளக்கால நெருக்கடி அறிவிப்பு நிலையங்கள் உள்ளன. 19 இடம் பெயர் வானொலி நிலையங்கள், 8 உட்கோட்ட வானொலி நிலையங்களுடன் 14 நிலையான வானொலி நிலையங்கள், 8 மிக உயர் மின்னலை செய்தித் தொடர்பு அறைகள், 19 மாநகர் செய்தித் தொடர்பு அறைகள், 11 நெருக்கடி கால அறிவிப்பு நிலையங்கள் ஆகியவை தமிழ்நாடு காவல் துறை வானொலி இணைப்பகத்துடன் இணைந்துள்ளன. முக்கியமான எல்லாப் பண்டிகைகள், இடைத் தேர்தல்கள், புயல்கள், வேலை நிறுத்தங்கள், பெருமக்கள் வருகை, மற்ற நெருக்கடிக் காலங்கள் எல்லாவற்றிலும் இந் நிலையங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்த ஆய்வாண்டில் காஞ்சீபுரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, திண்டுக்கல், காரைக்குடி, நாகர்கோயில், ஈரோடு, தருமபுரி, உதகமண்டலம் ஆகிய இடங்களில் தகவல் தொடர்பு நிலையங்களை ஏற்படுத்த அனுமதி வழங்கப்பட்டது. தமிழ்நாட்டிலுள்ள மாவட்டத் தலைமையிட நகரங்கள் அனைத்தும் தகவல் தொடர்பு அறை வசதிகளைப் பெற்றுள்ளன. பொது மக்களிடமிருந்து வரும் புகார்களை அவை இரவு, பகல் எந்நேரமும் கவனிக்கின்றன.

சென்னை, காஞ்சீபுரம், கடலூர், தஞ்சாவூர் ஆகிய இடங்களில் அமைந்துள்ள காலநிலை எச்சரிக்கை நிலையங்கள் மன நிறைவளிக்கும் வகையில் செயல்பட்டு வருகின்றன.

இந்த ஆண்டில் அரசிதழ்ப் பதிவுள்ள தொழில் நுட்ப உதவியாளர் ஒருவர், அரசிதழ்ப் பதிவிலா தொழில் நுட்ப உதவியாளர் மூவர், வானொலி மேற்பார்வையாளர் 19, வானொலி தொழில் நுட்பப் பணியாளர் 55, 6 சப்-இன்ஸ்பெக்டர்கள், 48 உதவி சப்-இன்ஸ்பெக்டர்கள், முதல்நிலைக் காவலர் 25 ஆகிய கூடுதல் பணியாளர்களை நியமிக்க அரசு அனுமதி வழங்கியது.



1975 ஏப்ரல் 1]

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் நன்கு அமைந்து ஒருங்கிணைக்கப்பட்ட காவல் துறை வானொலி செய்தித் தொடர்பு ஏற்பாடு உள்ளது.

தமிழ்நாடு காவல்படையைக் காலச்சார்புடன் மாற்றி அமைத்தல்

காவலர் படையின் செயல்படும் திறனை அதிகரிப்பதும் மாறிவரும் சமுதாயத்தின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதுமே "காவலர் படையை காலத்திற்கேற்ப மாற்றியமைக்கும்" திட்டத்தின் நோக்கமாகும். அரசால் நியமிக்கப்பட்ட காவல் துறை ஆணைக்குழு காவலர் படையைக் காலத்திற்கேற்ப மாற்றியமைத்தல் தொடர்பாக பல பரிவுரைகளைச் செய்துள்ளது. அவைகளில் பெரும்பாலானவை செயல்படுத்துவதற்காக அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. காவலர் படையைக் காலத்திற்கேற்ப மாற்றியமைப்பதற்கான திட்டம் ஒன்றை இந்திய அரசும் தெரிவித்துள்ளது. நிதி உதவியும் அளித்து வருகிறது. கருவிகளை இயக்குகின்ற பணியாளர்களுக்கு ஊதிய வகையில் ரூ. 33·75 இலட்சம் தொடரினச் செலவு தவிர வண்டிகள், கம்பியில்லாத் தந்திச் சாதனங்கள், ஆய்வியல் சாதனங்கள் வாங்குவதற்காக இது வரை இத்திட்டத்தின் கீழ் ரூ. 249·25 இலட்சத்திற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. வண்டிகள் வாங்குவதற்காக ரூ. 62·4 லட்சம் அரசு அனுமதித்துள்ளது.

போக்குவரத்து.

இத் திட்டத்தின் கீழ் உட்கோட்டங்கள், வட்டங்கள், காவல் நிலையங்கள் இயங்கும் சட்டம் சார்ந்த அறிவியல் ஆய்வுக்கூடங்கள், ரசாயன ஆய்வுக்கூடங்கள், காவல் துறை வானொலி நிலையங்கள் ஆகியவற்றின் தேவைகளை நிறைவு செய்வதற்காக வண்டிகளின் எண்ணிக்கைகள் அதிகரிக்கப்பட்டன.

செய்தித் தொடர்பு.

உயர் மின் அலைச் செய்தித் தொடர்பு, மிக உயர் மின் அலை செய்தித் தொடர்பு இவைகளின் மூலம் காவல் நிலையங்களை மாவட்டத் தலைமையிடங்களுடனும், மாவட்டத் தலைமை இடங்களை மாநிலத் தலைமை இடங்களுடனும் இணைப்பதே அரசின் நோக்கமாகும்.

ஒலிபரப்பு டெலிபிரிண்டர் மூலம் செய்திப் பரப்பு ஆகியவற்றிற்கு காவல் துறை வானொலி நிலையம் வகை செய்கிறது. தவிர, 863 காவல் நிலையங்களில் 578 காவல் நிலையங்கள் சம்பந்தப்பட்ட மாவட்டத் தலைமையிடங்கள் தற்போது இணைக்கப்பட்டுள்ளன. விரல் ரேகைப் பதிவுகள்,

நிழற்படங்கள், ஐயத்திற்கிடமான ஆவணங்கள் ஆகிய
வற்றை அனுப்பும்பொருட்டு மதுரை, திருச்சிராப்பள்ளி,
கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள சரகத் தலைமை
யிடங்களில் உருவ நேர்படித் தொடர்பு வசதிகள் தற்போது
உள்ளன.

மாநிலத்திற்கும், மாவட்டத் தலைமையிடத்திற்கும்
இடையே செய்திப் போக்குவரத்து பெருகி விட்ட காரணத்
தினல் தற்போதுள்ள ஒரு வழி மிக உயர் மின்னலை செய்தித்
தொடர்பு போதுமானதாயில்லை. எனவே, சுமார் ரூ. 96
லட்சம் செலவில் நுண்ணலைச் செய்தித் தொடர்பை
ஏற்படுத்த ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்த ஏற்பாடு
1977-ல் தொடங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
பலவழி ஏற்பாடு சுமார் 540 கிலோ மீட்டர் தொலைவிற்குச்
செய்தித் தொடர்பை அளிக்கும் ஆறு இடங்களில்
5 கிலோ மீட்டர் வானொலி நிலையங்கள் மிக உயர்ந்த இடங்
களில் உள்ளன. இந்த ஏற்பாடு செயல்படத் தொடங்கு
கையில் இம்மாநிலத்தில் ஏதாவது ஒரு இடத்தில் ஒரு
குற்ற நிகழ்வு குறித்து புள்ளி விவரங்கள் தேவைப்படும்
போது, இம்மாநிலத்தின் விரல் ரேகைப் பதிவுகள் குற்ற
வழக்குகள் குறித்த தகவல்கள் மாவட்டத் தலைமையிடங்கள்
அனைத்திலுமிருந்து டெலிபிரிண்டர்கள், உருவ நேர்படித்
தொடர்பு ஆகியவற்றின் மூலம் ஒரே நேரத்தில் விரைவாகத்
தகவல் அனுப்ப வகை செய்யும்.

863 காவல் நிலையங்களில் 722 காவல் நிலையங்
களுக்குத் தொலைபேசி வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.
இந்த ஆண்டு 136 காவல் நிலையங்கள் தொலைபேசி நிறுவு
வதற்கு அனுமதியளிக்கப்பட்டிருப்பதும் இதில் அடங்கும்.

### காவல் துறையினருக்கு அறிவியல்-தொழில் நுட்பக் கருவிகள்.

சட்டத்தையும் ஒழுங்கையும் திறம்படப் பேணி
வரவும் குற்ற நிகழ்வுகளையும் குற்றவாளிகளையும் கண்டு
பிடிக்கவும் எல்லா மாவட்டங்களிலும் அறிவியல் சாதனங்களை
ஏற்படுத்துவதற்கு அரசு முடிவு செய்துள்ளது. மாநிலச்
சட்டம் சார்ந்த அறிவியல்-ரசாயனவியல் ஆய்வுக்கூடத்திற்கு
நவீன கருவிகள் அளிக்கப்பட்டுள்ளன. காவல் துறை
மாவட்டங்கள் அனைத்திலும் எல்லாவகையிலும் நிறைவு
பெற்ற, சட்டம் சார்ந்த அறிவியல் ஆய்வுக்கூட இயங்கும்
பிரிவுகளுக்கு வகை செய்யப்பட்டுள்ளன. ஆய்வு செய்வதில்
இந்தப் பிரிவுகள் செவ்விய முறையில் செயல்பட்டு
வருகின்றன. 18 காவல் துறை மாவட்டங்களிலும்
நிழற்படப் பிரிவுகளும், ஒரு விரல் ரேகைப் பிரிவும்
செயல்பட்டு வருகின்றன.



### காவல் துறைக் கணக்கிடும் பிரிவு.

காவல் துறை புள்ளி விவரக் கணக்கிடும் பிரிவினை
ஏற்படுத்த அரசு அனுமதி வழங்கியுள்ளது. அங்கு 5 லட்சம்
குற்ற நிகழ்வுகள் குறித்த தகவல்கள் சேகரிக்கப்பட்டு,
பதிவு செய்யப்பட்டு, குறியீடு இடப்பட்டுள்ளன. மூன்று
லட்சம் விரல் ரேகை பதிவுகளும் கம்ப்யூட்டர் முறையில்
கணக்கு வைத்து வரப்படுகின்றன. குற்ற நிகழ்வுகள்,
குற்றவாளிகள் பற்றிய விவரங்கள் விரல் ரேகைப் பதிவுகள்
ஆகியவற்றைக் கம்ப்யூட்டர் முறையில் கணக்கிடுவது
முடிவடைந்துள்ளது. இம்மாநிலத்திலுள்ள காவல்நிலையங்கள்
அனைத்திற்கும் அன்றாடம் ஆலோசனை வழங்கும்
நடைமுறை 1-2-1975 முதல் தொடங்கப்பட்டது.
குற்ற நிகழ்வுகளையும் குற்றவாளிகளையும் விரைவில்
கண்டுபிடிக்க இம்மாநிலத்திலுள்ள காவலர் அனைவருக்
கும் இது மிகவும் பயனுள்ளதாயிருக்கும்.

### காவல்துறை நிர்வாகப் பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்.

காவல் துறை ஆணைக்குழுவின் பரிவுரைகளைப் படிப்படி
யான திட்டத்தின் கீழ் செயல்படுத்த அரசு முடிவெடுத்
துள்ளது. காவல் துறை ஆணைக்குழுவின் பரிவுரைகள்
அடிப்படையில் கீழ்க்காணும் கூடுதல் பணியாளர்களை
நியமிக்க அனுமதி வழங்கப்பட்டது :—

1973-74-ல் காவல் துறை டெபுடி சூப்பிரெண்டுகள்
(முதல் தரம்) 6, காவல் துறை டெபுடி சூப்பிரெண்டு
(இரண்டாம் தரம்) 1, காவல் துறை இன்ஸ்பெக்டர்கள் 21,
காவல் துறை டெபுடி இன்ஸ்பெக்டர்கள் 74, சப்-இன்ஸ்
பெக்டர்கள் 11, உதவி சப்-இன்ஸ்பெக்டர்கள் 174,
முதல் நிலைக் காவலர் 494, ரிசர்வ் இன்ஸ்பெக்டர்கள் 8,
ரிசர்வ் சப்-இன்ஸ்பெக்டர்கள் 19 ஆகியோரடங்கிய கூடுதல்
பணியாளர்களை நியமிக்க அனுமதி வழங்கப்பட்டது. அதன்
விளைவாக 6 உட்கோட்டங்கள், 21 கூடுதல் வட்டங்கள்,
19 போக்குவரத்துக் காவல் நிலையங்கள் ஆகியவை புதிதாக
ஏற்படுத்தப்பட்டன. டெபுடி இன்ஸ்பெக்டர்கள் பதவித்
தரம் இந்த ஆண்டு புதிதாக ஏற்படுத்தப்பட்டது. குற்றப்
பணிகளைக் கவனிக்க சென்னை மாநகரிலும், மாவட்டங்
களிலுமுள்ள 74 வட்டங்களில் 74 டெபுடி இன்ஸ்பெக்டர்கள்
நியமிக்கப்பட்டனர்.

[1975 ஏப்ரல் 1

*1974-75-ல் காவல் துறை டெபுடி சூப்பிரெண்டுகள் (முதல் தரம்) 9, இன்ஸ்பெக்டர்கள் 24, டெபுடி இன்ஸ்பெக்டர்கள் 80, சப்-இன்ஸ்பெக்டர்கள் 10, உதவி சப்-இன்ஸ்பெக்டர்கள் 174, முதல் நிலைக் காவலர்கள் 516, ரிசர்வ் இன்ஸ்பெக்டர்கள் 8, ரிசர்வ் சப்-இன்ஸ்பெக்டர்கள் 25, ரிசர்வ் உதவி சப்-இன்ஸ்பெக்டர்கள் 6, நாயக் 24, லான்ஸ் நாயக் 24, இரண்டாம் நிலைக் காவலர்கள் 288, ஆகிய கூடுதல் பணியாளர்களை நியமிக்க அனுமதி வழங்கப்பட்டது. இதனால் 8 உட்கோட்டங்கள், குற்ற வழக்கு உட்கோட்டம் 1, வட்டங்கள் 24, போக்குவரத்துக் காவல் நிலையம் 19 ஆகியவை புதிதாக ஏற்படுத்தப்பட்டன. படைக்கலந் தாங்கிய ரிசர்வ் அணிகள் ஆறு கூடுதலாக ஏற்படுத்தப்பட்டன. இவற்றில் இரண்டு சென்னை மாநகரத்திற்கும், எஞ்சியவை கிழக்கு செங்கற்பட்டு, கிழக்குத் தஞ்சாவூர், கோயம்புத்தூர் கிராமப்புறம், தருமபுரி ஆகிய மாவட்டங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒதுக்கப்பட்டன. முதல் நிலைக் காவலர்கள் பதவிகள் 516, பள்ளியிறுதித் தேர்வும் அதற்கு மேற்பட்டும் தகுதியுடையவர்களை நேரடியாக நியமிப்பதன் மூலம் நிரப்பப்பட்டன.*

*திருநெல்வேலி மாவட்டம் முத்தையாபுரத்தில் காவல் நிலையம் ஒன்றும், கோயம்புத்தூர் கிராமப்புற மாவட்டம் வடக்குப் பாளையத்தில் ஒன்றும், சென்னை மாநகரில் தாண்டவராயன் சத்திரத்தில் ஒன்றுமாக இரண்டு புறநகர் காவல் நிலையங்கள் 1974-75-ல் ஏற்படுத்தப்பட்டன. காவல் பணி, புதிய மோட்டார் வண்டிகளுக்கு வலவர்களை நியமித்தல் போன்ற இயல்பான காவல் பணிக்கு கூடுதலாக தனிப்பட்ட பணியாளர்களை நியமிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதற்காக 1974-75-ல் சப்-இன்ஸ்பெக்டர் 1, தலைமைக் காவலர்கள் 10, காவலர்கள் 115, ஆகியோர் கூடுதலாக நியமிக்கப்பட்டனர்.*

*சென்னை மாநகரிலும், இராமநாதபுரம் மாவட்டத்திலும் படைக்கலந் தாங்கிய காவல் படையினரின் திறமை, ஒழுங்கு முறை, பயிற்சி, மேற்பார்வை ஆகியவற்றை மேம்படுத்தவும், படைக்கலம் தாங்கிய ரிசர்வ் படையின் டெபுடி சூப்பிரெண்டுகளுக்குப் பதவி உயர்வு வாய்ப்புகளை மேம்படுத்தவும் 1974-75-ல் காவல் துறை கூடுதல் சூப்பிரெண்டு பதவிகள் இரண்டு ஏற்படுத்தப்பட்டன.*

*திருச்சிராப்பள்ளி, மதுரை மாநகரங்களில் போக்குவரத்துப் பணியைச் செயல்படுத்த 1974-75-ல் காவல் துறை டெபுடி சூப்பிரெண்டு (இரண்டாம் தரம்) பதவிகள் இரண்டு கூடுதலாக ஏற்படுத்தப்பட்டன.*



*1975 ஏப்ரல் 1]*

சார்நிலைப் பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்.

*தமிழ்நாடு சார்நிலைப் பணியாளர்கள் சங்கம் கேட்டுக் கொண்டதன்பேரில், ரூபாய் 350-15-425-25-600 சம்பள வீதத்தில் பணியாற்றும் இயல்பான தர கண்காணிப்பாளர் பதவிகளை ரூபாய் 525-25-600-30-750 சம்பள வீதத்தில் தேர்வுத்தரக் கண்காணிப்பாளர் பதவிகளாக உயர்த்த அரசு அனுமதி வழங்கியுள்ளது.*

தமிழ்நாடு காவலர் நல நிதி.

*காவல் துறையில் பணிபுரியும் அரசிதழ்ப் பதிவிலாப் பணியாளர்களின் நன்மைக்காக ஏற்படுத்தப்பட்ட தமிழ்நாடு காவலர் நல நிதி, நிதியுதவி, படிப்புதவி, நல உதவி, பொழுதுபோக்கு வசதி ஆகியவற்றை அளிப்பதன் மூலம் தொடர்ந்து செவ்விய முறையில் செயல்பட்டு வருகின்றது. காவல் துறையில் பணிபுரியும் அரசிதழ்ப் பதிவிலா அதிகாரிகள் மனமுவந்து கொடுக்கும் தொகைகள் மூலமும், அரசிதழ் பதிவு அதிகாரிகளிடமிருந்து பெறும் நன்கொடைகள் மூலமும் இந்நிதிக்குத் தொகை சேர்க்கப்படுகிறது. 1971-72 முதல் ஒவ்வொரு நிதியாண்டுக்கும் அரசு ரூபாய் $1\frac{1}{2}$ லட்சம் மொத்தம் மானியத்தை இந்நிதிக்கு வழங்குகிறது.*

*மேற்கூறிய நிதியைத் தவிர, தமிழ்நாட்டுக் காவல் துறை நூற்றாண்டு விழா படிப்பு உதவித் தொகை நிதியொன்றும் உள்ளது. அந்நிதியிலிருந்து காவல் துறை அரசிதழ்ப் பதிவிலா நிர்வாக அதிகாரிகளின் தகுதியுள்ள மக்களுக்கும், மகளிருக்கும் கல்லூரிகளில் உயர்படிப்புக்கும், தொழில் நுட்பப் படிப்புக்கும் படிப்புதவித் தொகை ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது. தனி நபர்களிடமிருந்து பெறப்படும் நன்கொடைகள் மூலம் இந்நிதி நிர்வகிக்கப்படுகிறது. 1974-75-ம் ஆண்டில் படிப்புதவித் தொகை வழங்கப்படுவதற்காக இந்நிதியிலிருந்து ரூபாய் 23,000 செலவிடப்பட்டது.*

தமிழ்நாடு காவலர் குடும்பநல அமைப்பு.

*தமிழ்நாடு காவலர் குடும்பநல அமைப்பு மிகச் செவ்விய முறையில் பணியாற்றி வந்துள்ளது. இந்த அமைப்பின்கீழ் நூற்பு, தையல் வேலை, பாய் முடைதல், ஜமக்காளம் நெசவு, தீக்குச்சி-பட்டாசு மேலுறைகள் செய்தல், பீடிச் சுற்றுதல், காகித உறை செய்தல், புத்தகம் கட்டுதல், பாற் பண்ணை கோழிப் பண்ணை அமைத்தல், கைத்திறத் தொழில், பனியன்கள் தயாரித்தல் போன்ற பல்வேறு தொழில்கள் காவலர் குடும்பங்களின் வருவாயை உயர்த்துவதில் தொடர்ந்து துணைபுரிந்து வருகின்றது*

### ஊர்க்காவல் படை.

இந்தத் தொண்டு நிறுவனம் காவலருக்குத் தொடர்ந்து துணைப்படையாகத் திறம்பட உதவிபுரிந்து வருகிறது. தமிழ்நாட்டிலுள்ள 113 அணிகளில் 38 அணிகள் சென்னை மாநகரில் உள்ளன. ஏனைய 75 அணிகள் மாவட்டங்களில் 40 இடங்களில் அமைந்துள்ளன. 6 ஊர்க்காவல் படை (மகளிர்) அணிகள் உள்ளன. 4 அணிகள் சென்னை மாநகரத்திலும், 2 அணிகள் நான்கு மாவட்டத் தலைமை இடங்களிலும் அமைந்து உள்ளன. இந்த ஆண்டில் கீழ்க்கண்ட பணிகளில் ஊர்க்காவல் படையினர் பணியாற்றினர் :—

(அ) போக்குவரத்தை முறைப்படுத்தல்.

(ஆ) இரவு நேரத்தில் ரோந்து சுற்றும் பணி.

(இ) பல்வேறு திருவிழாக் காலங்களில் பாதுகாப்புப் பணியும், இரயில்வே தொழிலாளர் வேலை நிறுத்தத்தின் போது பாதுகாப்புப் பணியும். அவர்களுக்கு அடிக்கடி பயிற்சியும் அளிக்கப்பட்டது ; குறிப்பாக முதலுதவி, தீயணைப்புப் பணி உள்நாட்டுப் பாதுகாப்பு ஆகிய பணிகளில் தொடர்ந்து பயிற்சி அளிக்கப்பட்டது.

இந்த ஆண்டில் 15 ஊர்க்காவல் படையினருக்கு திருச்சிராப்பள்ளி, சேலம், மதுரை மாவட்டங்களில் தொலை பேசி இயக்குபவர்கள் பயிற்சி முறையில் பயிற்சி அளிக்கப்பட்டது.

### காவற் படையினருக்குக் குடியிருப்பு வசதி.

காவல் துறை சார்நிலைப் பணியாளர்களில் 80 சத வீதத்தினருக்கு குடியிருப்பு வசதிகள் செய்து தருவது இத்திட்டத்தின் நோக்கமாகும். இதுவரையில் '' திட்டத்திற்குப் புறம்பான பணி '' என்ற வகையில் கருதப்பட்ட இத்திட்டமானது இவ்வாண்டுமுதல் '' திட்டப்பணியாக''ச் சேர்க்கப்பட்டுள்ளது. 61 சத வீத குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன என்று கணக்கிடப்பட்டுள்ளது.

ரூபாய் 6,97,52,920 மதிப்பிட்டுச் செலவில் உள்ளூர் காவல்படை படைக்கலந் தாங்கிய சேமக்காவற் படையைச் சேர்ந்த 133 இன்ஸ்பெக்டர்கள், 6 ரிசர்வ் இன்ஸ்பெக்டர்கள், 486 சப்-இன்ஸ்பெக்டர்கள், 52 ரிசர்வ் சப்-இன்ஸ்பெக்டர்கள், 2 உதவி சப்-இன்ஸ்பெக்டர்கள்



43 ரிசர்வ் உதவி சப்-இன்ஸ்பெக்டர்கள், 1,051 தலைமைக் காவலர்கள், 6,793 காவலர்கள் ஆகியோருக்கு குடியிருப்புகள் கட்டவும், ரூ. 73·75 இலட்சம் செலவில் 2 டெபுடி சூப்பிரண்டுகள், 2 இன்ஸ்பெக்டர்கள் (அட்ஜுடண்ட்), 9 இன்ஸ்பெக்டர்கள், 20 சப்-இன்ஸ்பெக்டர்கள், பணிப்பட்டயம் பெறாத 689 அதிகாரிகள் தமிழ்நாடு சிறப்புக் காவல் படைப் பிரிவில் ஏனைய பதவித் தரத்தில் உள்ளவர்கள் ஆகியோருக்கு குடியிருப்புகள் கட்டவும், நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.

மாவட்டங்களில் 128 இன்ஸ்பெக்டர்கள், 6 ரிசர்வ் இன்ஸ்பெக்டர்கள், 484 சப்-இன்ஸ்பெக்டர்கள், 52 ரிசர்வ் சப்-இன்ஸ்பெக்டர்கள், 2 உதவி சப்-இன்ஸ்பெக்டர்கள், 43 ரிசர்வ் உதவி சப்-இன்ஸ்பெக்டர்கள், 995 தலைமைக் காவலர்கள், 6,170 காவலர்கள் ஆகியோருக்கும், 2 டெபுடி சூப்பிரண்டுகள், 2 இன்ஸ்பெக்டர்கள் (அட்ஜுடண்ட்), 9 இன்ஸ்பெக்டர்கள், 20 சப்-இன்ஸ்பெக்டர்கள், 689 பணிப்பட்டயம் பெறாத அதிகாரிகள், தமிழ்நாடு சிறப்புக் காவல் படைப் பிரிவில் உள்ள ஏனைய ஆறு பதவித் தரங்களில் உள்ளவர்கள் ஆகியோருக்கும் குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டு அவர்கள் குடியேறியுள்ளனர். இவ்வாண்டில் 161 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டு குடிபுகுவதற்குத் தயாரான நிலையில் உள்ளன. மேலும் 32 குடியிருப்புகள் கட்டப்படும் பணி பல்வேறு நிலைகளில் நடந்தேறி வருகிறது.

### காவலர் பதக்கங்கள்.

1974-ஆம் ஆண்டில் காவல் தீயணைப்புத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள், காவலர்கள் 27 பேருக்கு குடியரசுத் தலைவரின் காவல் தீயணைப்புப் பதக்கங்கள் வழங்கப்பட்டன. 1974 ஆம் ஆண்டில் அதிகாரிகள், காவலர்கள் 25 பேர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் பதக்கங்கள் வழங்கப்பட்டன.

### செயல் திறமைப் போட்டிகள்.

தமிழ்நாடு மாநிலக் காவலர் அணி 8—12—1974 முதல் 15—12—1974 வரையில் சென்னை மாநகரில் நடைபெற்ற அகில இந்தியக் காவலர் பணிப் போட்டிகளில் மீண்டும் வெற்றி வாகை சூடியது. புலனாய்வில் அறிவியல் சாதனங்களைப் பயன்படுத்தும் போட்டிகளில் தமிழ்நாடு காவல் துறையின் இரண்டு அணிகள் பங்கு பெற்றன. தமிழ்நாடு காவல் துறையின் இந்த இரண்டு அணிகள் போட்டியில்

[1975 ஏப்ரல் 1

முதலிடமும், இரண்டாவது இடமும் பெற்றன. இந்தப் போட்டியில் தமிழ்நாடு காவலர் அணி தொடர்ந்து ஆறு ஆண்டுகளாக வெற்றி பெற்று வருகிறது. வீர முதன்மைக் கேடயமும் பெற்றது.

தமிழ்நாடு காவலர் அணி பெற்ற பதக்கங்களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

1. புலனாய்வில் அறிவியல் சாதனங்களைப் பயன்படுத்துதல்—

6 தங்கப் பதக்கங்கள்.

4 வெள்ளிப் பதக்கங்கள்.

5 வெண்கலப் பதக்கங்கள்.

3 கேடயங்கள்.

5 வெற்றிக் கேடயங்கள்.

2. முதலுதவிப் போட்டி—

அணி செவ்விய முறையில் செயல்பட்டதற்காக நான்கு தங்கப் பதக்கங்களும், வீர முதன்மைக் கேடயமும் வழங்கப்பட்டது. மேலும் வாய்மொழித் தேர்வுகளில் சார்ந்த சோதனைகளில் செவ்விய முறையில் செயற்பட்டதற்கு ஒரு தங்கப் பதக்கமும், ஒரு வெள்ளிப் பதக்கமும் மற்றும் ஒரு வெண்கலப் பதக்கமும் வழங்கப்பட்டது.

3. காவலர் நிழற்படப்பிடிப்புக் கலை—

1 தங்கப் பதக்கம்.

1 வெண்கலப் பதக்கம்.

1 வீர முதன்மைக் கேடயம்



1975 ஏப்ரல் 1]

4. மோட்டார் போக்குவரத்துப் போட்டி—

சிற்றுந்துவண்டி (Pickup van) 1 தங்கப் பதக்கம்

1 வீர முதன்மைக் கேடயம்.

ஜீப் வண்டி .. .. 1 தங்கப் பதக்கம்

1 வீர முதன்மைக் கேடயம்.

5. கம்பியில்லாத் தந்திப் போட்டி—

1 வெள்ளிப் பதக்கம்.

6. சுழல் துப்பாக்கிச் சுடும் பந்தயம் (நடைமுறைப் பழக்கம் II)—

1 வெள்ளிப் பதக்கம்.

7. காவல் துறை நாய்ப் போட்டி—

வளர்ப்புப் போட்டியில் 1 வெள்ளிப் பதக்கம்.

(லாப்ரடார்ரெட்ரீவர்-ஆண்நாய்)

8. நலப் பொருட்காட்சி—

காவலர் நலப் பொருட்காட்சியில் இரண்டாம் இடத்தைப் பெற்றதற்கான கேடயம் ஒன்று.

காவலர்களுக்கு அரசு அளித்த சலுகைகள்—

முந்திய ஆண்டில் காவலர்களுக்குப் பல தனிச் சலுகைகளை அரசு அளித்தது. 1974–1975 ஆம் ஆண்டில் காவலர்களுக்கு அரசு அளித்த சலுகைகள் பின் வருமாறு :—

(1) படைக்கலந் தாங்கிய ஏமக்காவற் படையைச் சேர்ந்த நாயக்குகளின் சிறப்பு ஊதியம் திங்கள் ஒன்றுக்கு 3 ரூபாயிலிருந்து 10 ரூபாயாக உயர்த்தப்பட்டது.

(2) படைக்கலந்தாங்கிய ஏமக்காவற் படையைச் சேர்ந்த லான்ஸ் நாயக்குகளின் சிறப்பு ஊதியம் திங்கள் ஒன்றுக்கு $1\frac{1}{2}$ ரூபாயாக இருந்து திங்கள் ஒன்றுக்கு 5 ரூபாயாக உயர்த்தப்பட்டது.

(3) படைக்கலந் தாங்கிய காவல் அணியைச் சேர்ந்த லான்ஸ் நாயக்குகளின் மாதச் சிறப்பு ஊதியம் 3 ரூபாயிலிருந்து 5 ரூபாயாக உயர்த்தப்பட்டது.

(4) காவல் துறை தலைமைக் காவலர்கள், காவலர்கள் ஆகியோரின் மாதச் சீருடைப் படி 5 ரூபாயிலிருந்து 7 ரூபாய்க்கு உயர்த்தப்பட்டது. உதவி சப்-இன்ஸ்பெக்டர்களுக்கு சீருடைப் படி முன்பு வழங்கப்படவில்லை. அவர்கள் மாதம் ஒன்றுக்கு 7 ரூபாய் சீருடைப் படி பெற தற்போது அவர்கள் தகுதி பெற்றுள்ளனர்.

(5) நீலகிரி, கொடைக்கானல் காவல் நிலையங்களைத் தவிர, மாவட்டங்கள், சென்னை மாநகரிலுள்ள காவல் துறை இன்ஸ்பெக்டர்கள், டெபுடி இன்ஸ்பெக்டர்கள், சப்-இன்ஸ்பெக்டர்கள், உதவி சப்-இன்ஸ்பெக்டர்கள், ஆகியோருக்கு சீருடைப் படிக்குப் பதிலாக இலவச சீருடை வழங்க அரசு அனுமதித்துள்ளது. படைக்கலந் தாங்கிய ஏமக்காவலர் படையைச் சேர்ந்த அட்ஜூடென்ட் உள்பட இன்ஸ்பெக்டர்கள், ரிசர்வ் இன்ஸ்பெக்டர்களும் இலவச சீருடை பெறத் தகுதி பெற்றுள்ளனர்.

(6) கூடலூர், தோவாளை வட்டாரங்களிலுள்ள காவல் நிலையங்களைத் தவிர நீலகிரி மாவட்டக் காவல் நிலைய இன்ஸ்பெக்டர்கள், டெபுடி இன்ஸ்பெக்டர்கள், சப்-இன்ஸ்பெக்டர்கள், உதவி சப்-இன்ஸ்பெக்டர்கள் ஆகியோர்களுக்கு இலவசமாக இரு ஜதை கம்பளிச் சீருடைகள் வழங்க அரசு அனுமதித்துள்ளது. கூடலூர், தோவாளை, கொடைக்கானல் காவல் நிலையங்களில் பணிபுரியும் இன்ஸ்பெக்டர்கள், டெபுடி இன்ஸ்பெக்டர்கள், சப்-இன்ஸ்பெக்டர்கள் உதவி சப்-இன்ஸ்பெக்டர்கள் ஆகியோர்களுக்கு ஒரு ஜதை கம்பளி உடையும், ஒரு ஜதை காக்கி உடையும் வழங்க அரசு அனுமதித்துள்ளது.



(7) பாதுகாப்புக் கடமைக்காக பணிபுரியும் காவல் துறை சார்நிலைப் பணியாளர்களின் சில பதவித் தரத்திலுள்ளவர்களுக்கு வழங்கப்படும் உணவுச்செலவு வீதம் பாதுகாவல் படி) 9-5-1974 முதல் கீழ் உள்ளவாறு உயர்த்தப்பட்டுள்ளது :—

| பதவித் தரம். | பழைய வீதம். (நபர் ஒருவருக்கு நாளொன்றுக்கு). | மாற்றியமைக்கப்பட்ட வீதம். (நபர் ஒருவருக்கு நாளொன்றுக்கு) |
| --- | --- | --- |
| | ரூ. | ரூ. |
| உள்ளூர் காவல்படையைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர்கள், டெபுடி இன்ஸ்பெக்டர்கள், சப்-இன்ஸ்பெக்டர்கள், உதவி சப்-இன்ஸ்பெக்டர்கள், படைக்கலந்தாங்கிய ஏமக்காவல் படையைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர்கள். | இல்லை. | 4·50 |
| உள்ளூர் காவல்படை, படைக்கலந்தாங்கிய ஏமக்காவல் படையைச் சேர்ந்த தலைமைக் காவலர்கள், முதல்நிலைக் காவலர்கள், இரண்டாம்நிலை காவலர்கள். | 2·00 | 3·00 |
| படைக்கலந் தாங்கிய ஏமக் காவற் படையைச் சேர்ந்த ரிசர்வ் சப்-இன்ஸ்பெக்டர்கள். | 2·50 | 4·50 |
| படைக்கலந் தாங்கிய ஏமக் காவற் படையைச் சேர்ந்த ரிசர்வ் உதவி சப்-இன்ஸ் பெக்டர்கள். | 2·25 | 4·50 |
| படைக்கலந்தாங்கிய காவல் அணியைச் சேர்ந்த இன்ஸ் பெக்டர்கள், சப்-இன்ஸ் பெக்டர்கள். | இல்லை. | 4·50 |

| பதவித் தரம். | பழைய வீதம். | மாற்றியமைக்கப்பட்ட வீதம். |
|---|---|---|
| | (நபர் ஒருவருக்கு நாளொன்றுக்கு). | (நபர் ஒருவருக்கு நாளொன்றுக்கு). |
| படைக்கலந் தாங்கிய காவல்படை அணியின் உதவி சப்-இன்ஸ்பெக்டர்கள், ஹவில்தார்கள், நாயக்குகள், லான்ஸ் நாயக்குகள், காவல் துறை காவலர்கள். | பாதுகாப்புப் பணிகளுக்கு அனுப்பப் படும்போது ஒவ்வொரு நாளும் இரு வேளை சாப்பாடு, ஒரு வேளை சிற்றுண்டி அளிப்பதற்காக சென்னை மாநகரில் மாதமொன்றுக்கு ரூ. 27-ம், வெளியூர்களில் ரூ. 22-ம் அளிக்கப்படுகிறது. | பாதுகாப்புப் பணிகளுக்கு அனுப்பப் படும்போது ஒவ்வொரு நாளும் இரு வேளை சாப்பாடு ஒரு வேளை சிற்றுண்டி அளிப்பதற்காக சென்னை மாநகரில் மாதமொன்றுக்கு ரூ. 35-ம், வெளியூர்களில் மாதமொன்றுக்கு ரூ. 30-ம் அளிக்கப்படுகிறது. மேற்சொன்னவாறு அவர்களுக்கு உணவளிக்கப்படாவிடில் ஹோட்டல் உணவுகளுக்காக நாள் ஒன்றுக்கு ஒவ்வொருவருக்கும் ரூ. 3-ம் கொடுக்கப்படும். |



### காவல்படையின் ஒழுங்கு உணர்வு.

காவல் துறையினரின் உயரிய கட்டுப்பாடும், ஒழுங்குணர்வும், தொடர்ந்து போற்றத்தக்க வகையில் இருந்து வந்துள்ளது. சட்டம்-அமைதியை நிலை நாட்டும் பிரச்சினைகளின் காரணமாக ஆண்டு முழுவதும் காவலர்களுக்கு பணிச்சுமை அதிகமிருப்பினும், அவர்கள் பாராட்டத்தக்கவகையில் தங்கள் கடமையை ஆற்றினர். காவல்துறையில் எல்லாப் பதவித் தரங்களில் உள்ளவர்களும், ஆர்வத்துடனும், கடமைப்பற்றுடனும் தொடர்ந்து பணிபுரிந்து வந்தனர்.

### இணைப்பு.

**1974-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ம் நாளன்றுள்ளவாறு காவல்படையில் உள்ளவர்களின் எண்ணிக்கை.**

| | |
|---|---|
| காவல்துறை இன்ஸ்பெக்டர்-ஜெனரல் .. .. | 1 |
| காவல்துறை ஆணையர், காவல்துறை கூட்டு இன்ஸ்பெக்டர்-ஜெனரல். | 1 |
| காவல்துறை டெபுடி இன்ஸ்பெக்டர்-ஜெனரல். | 7 |
| காவல்துறை சூப்பிரண்டெண்டு, காவல்துறை இணை சூப்பிரண்டெண்டு (முகமையில் அனுப்புவது உட்பட). | 62 |
| (இந்தியக் காவல்துறை பணிசாராத) தளவாய்கள் .. | 1 |
| காவல்துறை கூடுதல் சூப்பிரண்டெண்டுகள் .. | 5 |
| காவல்துறை உதவி சூப்பிரண்டெண்டுகள் .. .. | 32 |
| காவல்துறை டெபுடி சூப்பிரண்டெண்டுகள் நிலை 1 | 127 |
| காவல்துறை டெபுடி சூப்பிரண்டெண்டுகள் நிலை 2 | 23 |
| காவல்துறை டெபுடி சூப்பிரண்டெண்டுகள் நிலை 3 | 24 |
| துணை தளவாய் .. .. .. .. | 1 |
| காவல்துறை இன்ஸ்பெக்டர்கள் ரிசர்வ் இன்ஸ்பெக்டர்கள். | 670 |
| காவல்துறை டெபுடி இன்ஸ்பெக்டர்கள் .. | 154 |

| | |
|---|---|
| காவல்துறை சப்-இன்ஸ்பெக்டர்கள்/காவல் துறை ரிசர்வ் சப்-இன்ஸ்பெக்டர்கள். | 2,185 |
| காவல்துறை உதவி சப்-இன்ஸ்பெக்டர்கள்/காவல்துறை ரிசர்வ் உதவி சப்-இன்ஸ்பெக்டர்கள். | 689 |
| தலைமைக்காவலர்கள்/ஹவில்தார்கள்/ நாயக்குகள். | 5,064 |
| காவல்துறைக் காவலர்கள் முதல்நிலை .. | 3,752 |
| காவல்துறை காவலர்கள் இரண்டாம் நிலை, லான்ஸ் நாயக்குகள். | 32,890 |
| மொத்தம் .. | 45,688 |

## இணைப்பு II

[284-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

### தமிழ் நாடு தீயணைப்புத் துறை.

*1974-75*

ஆய்வுரை

மக்களின் உயிரையும், உடைமையையும் தீ மற்றும் பிற விபத்துக்களிலிருந்து காப்பாற்றுவதற்கென உள்ள துறை தீயணைப்புத் துறையாகும். பொதுமக்களுக்கு இத்துறையின் பணி எந்த நேரத்திலும் கிடைக்கிறது. இந்தியாவிலேயே தமிழ்நாட்டு தீயணைப்புத்துறைதான் மற்ற தீயணைப்புத் துறைகளைவிட பெரியதாகும்.

2. தீ விபத்தைத் தவிர்ப்பதும், தீயை அணைப்பதும் இத்துறையின் தலையாய பணியாயினும், மக்களின் நலனுக்காக அது வேறு பல வழிகளிலும் செயலாற்றுகிறது. உதாரணமாக காட்சிக் கடைகள், திருவிழாக்கள் நடைபெறும்பொழுது தீத்தடுப்பு பணிகளை மேற்கொள்வது, நோயுற்றவர்கள், கிணறுகள், வெள்ளம், இடிபாடுகள், சேதாரங்கள் ஆகியவைகளில் காயமடைந்த மக்களையும், மிருகங்களையும் காப்பாற்றி உடனடி மருத்துவ வசதிதர மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லுதல் போன்ற பணிகளையும் இத்துறை மேற்கொள்கிறது. மேலும் சுகாதாரத்துறையின்



தொத்துநோய் தடுப்புப்பணி, காவல்துறையின் தேர்தல்காலப் பணிகளில் பங்கேற்பது போன்ற இதர பணிகளையும் ஆற்றி வருகிறது. மேற்கண்ட பணிகளைத் தவிர, தமிழ் நாடு பொது மக்கள் உபயோகிக்கும் இடங்கள் சட்டத்தின் கீழும், பஞ்சாயத்து, நகராட்சி, மாநகராட்சி, படைக்கலச் சட்டங்களின் கீழும் உரிமங்கள் வழங்கப்பட்ட, வழங்கப்பட உள்ள இடங்களை ஆய்வு செய்வதிலும் ஈடுபடுகிறது.

3. தீயணைப்புப் படையின் எண்ணிக்கை பற்றி விவரங்கள் பிற்சேர்க்கையில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

4. **தீயணைப்பு நிலையங்கள்.**—நமது மாநிலத்தில் இயங்கும் தீயணைப்பு நிலையங்களின் எண்ணிக்கை 1975-ம் ஆண்டு மார்ச் திங்கள் 1-ம் நாளில் 81 ஆக உயர்ந்துள்ளது. அவற்றில் சென்னை மாநகரில் 14 நிலையங்களும் மற்றவை வெளி நகரங்களிலும் இயங்கி வருகின்றன. இவ்வாண்டில் 25 தீயணைப்பு நிலையங்களை நிறுவ அரசு ஒப்பளித்துள்ளது. இவற்றில் எட்டு தீயணைப்பு நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. தீயணைப்பு நிலையங்களுக்குத் தேவையான வண்டி சட்டங்கள் (Chassis) வாங்கப்பட்டுவிட்டன. சட்டங்கள் மீது தீயணைப்பு வண்டிகளை கட்டும் வேலை மும்முரமாக நடைபெற்று வருகிறது. தீயணைப்பு நிலையங்கள் திறக்க காலதாமதமாவதற்கு முக்கிய காரணங்கள் தகுந்த இடம் கிடைக்காமையும், சட்டங்கள் மீது வண்டிகள் கட்டுவதற்குத் தேவையான காலமும் ஆகும்.

5. **தீயணைப்பு அழைப்புகள்.**—1974-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் முடிய, இம்மாநிலத்திலுள்ள தீயணைப்பு நிலையங்கள் 6,807 அழைப்புகளை பெற்று செயல்பட்டன. இவற்றில் 6,036 தீ விபத்து அழைப்புகளும், 666 அவசர மீட்பு அழைப்புகளும், 105 போலி அழைப்புகளுமாகும். தீ விபத்துக்களில் 2,895 நகர்ப்புறங்களிலும், 3,141 நாட்டுப்புறங்களிலும் ஏற்பட்டுள்ளது. இவற்றில் 61 தீ விபத்துக்கள், உயிர் இழப்பு அல்லது ரூ. 50,000-க்கு மேற்பட்ட சொத்துக்களுக்குச் சேதம் சம்பந்தப்பட்ட பெருந் தீ விபத்துக்களாகும். தீயினால் அழிக்கப்பட்ட உடைமைகளின் மதிப்பு ரூ. 222.5 லட்சமாகும். அழிவின்றி தீயணைப்புப் படையினரால் மீட்கப்பட்ட உடைமைகளின் மதிப்பு ரூ. 1,531.2 லட்சமாகும். தீயணைப்புப் படைகள் வருமுன் தீ விபத்துக்களில் 57 பேர் உயிரிழந்தனர். காப்பாற்றப்பட்டவர்களின் எண்ணிக்கை 145 ஆகும். தீ மற்றும் விபத்துக்களிலிருந்து 111 பிராணிகள் மீட்கப்பட்டன. உயிரிழந்தவைகளின் எண்ணிக்கை 54.

6. **அவசர மீட்பு அழைப்புகள்.**—தீயணைப்புப் படையினர் இவ்வாண்டு ஆற்றிய மிகச் சிறந்த உயிர் மீட்பு பணியின் விவரங்கள் :

666 அவசர மீட்பு அழைப்புகளில், வெள்ளத்திலானவை 221, சாக்கடை விபத்துக்கள் 27, இயங்கேணி (Lifts) விபத்துக்கள் 9, வீடு இடிபாடுகள் 22, உயரமான இடங்களிலிருந்து மீட்பு 73, நச்சு வாயுவினுல் உண்டான அவசர மீட்பு 18, மற்ற மீட்பு அழைப்புகள் 296 ஆகும்.

(1) 1974-ம் ஆண்டு ஜூன் திங்கள் 15-ம் நாளில் திருப்பரங் குன்றம் மலையில் இருந்து 200 அடி பள்ளத்தில் உள்ள மலைக் குகைக்குள் விழுந்துவிட்ட பைத்தியம் பிடித்த நபர் ஒருவர் மதுரை தீயணைப்புப் படையினரால் காப்பாற்றப்பட்டார். காற்று மிக பலமாக வீசியதாலும், விழுந்த நபர் தீயணைப்புப் படையினருடன் ஒத்துழைக்காததாலும், முதல் நாளன்று 8 மணி நேரம் கடினமாகப் போராடியும், அவரை மீட்க இயலவில்லை. இருப்பினும், மனந்தளராமல், அடுத்த நாள் காலையும் மீட்புப் பணி தொடர்ந்தது. தீயணைப்புப் படையினர் மிகவும் திறமையுடன் செயலாற்றி, கயிறுகளின் உதவியால் அவரை உயிருடன், எவ்வித காயமுமின்றி 200 அடிக்கு கீழேயுள்ள குகைப் பள்ளத்திலிருந்து மீட்டனர்.

(2) 1974-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15-ம் நாளில் பெரும் மழையின் காரணமாக ஈரோட்டில் பெரும்பள்ளம் ஓடையில் ஏற்பட்ட வெள்ளத்தின் காரணமாக தாழ்வான பகுதியில் இருந்த அநேக குடிசை வீடுகள் நீரில் மூழ்கின. ஈரோடு தீயணைப்புப் படையினர் ஓடையில் இரண்டு இடங்களில் மீட்புப் பணியில் ஈடுபட்டனர். வேகமாக பாய்ந்து செல்லும் நீரில் நீந்திக் கடந்து தீயணைப்புப் படையினர் கயிறுகளின் உதவியால், ஆண்கள், பெண்கள் குழந்தைகள் உட்பட 23 நபர்களைப் பாதுகாப்பான இடத்திற்கு அப்புறப்படுத்தியது பாராட்டத்தக்க செயலாகும். தமிழ் நாடு சட்டமன்ற பேரவை உறுப்பினர்கள் திருவாளர்கள் சுப்பிரமணியம், சின்னசாமி ஆகியோர் மீட்புப்பணியின்பொழுது உடனிருந்தார்கள்.

(3) 1974-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 26-ம் நாளில் மதுரையிலிருந்து; கொடைக்கானலுக்கு ஓட்டுநர், நடத்துனர் உட்பட 65 பிரயாணிகளுடன் சென்று கொண்டிருந்த ஒரு தனியார் பேருந்து,





கொடைக்கானல் மலைச்சாலையில் தம்பட்டம் பாறை அருகே விபத்துக்குள்ளாகி அப்பேருந்து 600 அடி பள்ளத்தில் விழுந்து விட்டது. விபத்தைப்பற்றிய செய்தி கிடைத்தவுடன், பெரியகுளம் மற்றும் திண்டுக்கல் தீயணைப்பு நிலையங்களிலிருந்து தீயணைப்புப் படையினர் விபத்து நடந்த இடத்திற்கு விரைந்து சென்று படுகாயமடைந்த 23 நபர்களை 600 அடி பள்ளத்திலிருந்து மேலே எடுத்து வந்து நோயாளி வண்டி மற்றும் காவல்துறை வாகனங்கள் மூலம் அவர்கள் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக எடுத்துச் சென்றனர். காயமடைந்தவர்களைக் கோணித் துண்டுகளில் படுக்க வைத்து, நீண்ட கயிறுகள் மூலம் தீயணைப்புப் படையினர் மிகவும் திறமையுடன் துரிதமாக அவர்களை மேலும் ஊறுகளடையாமல் மேலே கொண்டு வந்தனர். மீட்புப்பணியினர் நொறுங்கிய பேருந்தின் அடிப்பாகத்திலும். மரங்களிலும் சிக்கிக்கொண்டு, இறந்துபோன 22 பேருடைய சடலங்களையும் விடுவித்து மேலே கொண்டு வந்தனர். மொத்தம் 18 மணி நேரத்திற்கு மேலாக மீட்புப் பணி மதுரை மாவட்ட ஆட்சியாளர் மேற்பார்வையில் நடந்தது. தீயணைப்புப் படையினர் துரிதமாகச் செயல்பட்டு காயமடைந்தவர்களை மீட்டதால், 23 நபர்களின் உயிர்கள் காப்பாற்றப்பட்டது பாராட்டத்தக்கதாகும்.

7. **நோயாளி வண்டி அழைப்புகள்.**—ஒவ்வொரு நகரத்திலே தேவைக்கேற்ப, ஒவ்வொரு தீயணைப்பு நிலையத்திலும், தீயணைப்பு ஊர்திகளுடன், நோயாளி வண்டிகளும் உள்ளன. இத்துறையில் மொத்தம் 65 நோயாளி வண்டிகள் பணியாற்றுகின்றன. 1974-ம் ஆண்டில் 13,841 ஆம்புலன்ஸ் வண்டிகளுக்கான அழைப்புகளை தீயணைப்புத் துறை ஏற்று செயல்பட்டது. அவற்றில் விபத்து மற்றும் இலவச அவசர அழைப்புகள் 853 ஆகும். நோயாளிகளை சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு எடுத்துச் சென்ற வகையில் வாடகை கட்டணமாக வசூலிக்கப்பட்ட தொகை ரூ. 2.49 லட்சமாகும்.

8. **தீத்தடுப்பு இதர பாதுகாப்பு மற்றும் நீர் இறைத்தல்.**—சூழ்நிலையின் பேரில் ஏற்படக்கூடிய தீ விபத்துக்களை தடுக்கும் நோக்கத்துடன் தீயணைப்புத் துறை பணிகளை மேற்கொண்டுள்ளது. 1974-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் முடிய 300 ஆதாரப்பணிகள் மற்றும் நீர் இறைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு ரூ. 44,933 வாடகை கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது.

9. **நெருக்கடி வண்டி.**—இத்துறையில் ஒரே ஒரு நெருக்கடி வண்டி (Emergency breakdown Van) மட்டும் தனிப்பட்ட தளவாடங்கள் கொண்டுள்ளது. இது சென்னை கோட்டத்தில் இருக்கிறது. இவ்வண்டி கவிழ்ந்த வண்டிகளைத் தூக்கி அகற்றவும், மீட்பு வேலைகளின்போது இடிபாடுகளை அகற்றவும், பள்ளங்களிலிருந்து விலங்குகளை காப்பாற்றவும் பயன்படுத்தப்படுகிறது. 1974-75-ம் வருடத்தில் 18 அழைப்புகளை இவ்வண்டி ஏற்று செயல்பட்டது. ரூ. 1,122 வாடகை கட்டணமாக இதன் மூலம் வசூலிக்கப்பட்டுள்ளது.

10. **மாநில பட்டறையும், நடமாடும் பழுது பார்க்கும் குழுக்களும்.**—இத்துறையிலுள்ள ஊர்திகள், சாதனங்கள் ஆகியவற்றின் பழுதுகளை, உடனுக்குடன் செப்பனிட கோட்ட அளவில் ஏழு நடமாடும் பழுது பார்க்கும் குழுக்கள் செயல்படுகின்றன. சென்னையில் ஒரு மாநில பட்டறையும் இயங்கி வருகிறது. ரூ. 95.361 மதிப்புள்ள 365 பழுது பார்க்கும் வேலைகளை மாநிலப்பட்டறையும், ரூ. 64,849 மதிப்புள்ள 661 பழுதுபார்க்கும் வேலைகளை ஏழு நடமாடும் பழுதுபார்க்கும் குழுக்களும் செய்திருக்கின்றன.

11. **பயிற்சி.**—தீயணைப்புத் துறைக்கென ஒரு பயிற்சிப் பள்ளி சென்னையில் செயல்படுகின்றது. இப்பள்ளியில் இவ்வாண்டு நான்குவிதப் பயிற்சிகள் அளிக்கப்பட்டன. அவற்றுள் 3 பயிற்சி வகுப்புகள் தீயணைப்போர்களுக்கும், மற்ற ஒரு பயிற்சி வகுப்பு நிலைய தீயணைப்பு அலுவலர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முன்னணி தீயணைப்போர்களுக்கும் நடைபெற்றன. மொத்தம் 226 பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. நிலைய தீயணைப்பு அலுவலர் பதவிக்கு நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட்ட 13 நபர்களுக்கும் மற்றும் நிலையத் தீயணைப்பு அலுவலர் பதவி உயர்வுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 10 முன்னணி தீயணைப்போர்களுக்கும் தமிழ்நாடு தீயணைப்புத்துறை பயிற்சிப்பள்ளியில் 1974-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 4-ம் நாள் முதல் பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வருகிறது. மேலும் நாகபுரியிலுள்ள தேசீய தீயணைப்புக் கல்லூரியில் முன்னேற்றப் பயிற்சி பெற இவ்வருடம் ஒரு நிலைய தீயணைப்பு அலுவலர் அனுப்பப்பட்டார்.

12. **வெகுமதிகள்.**—இவ்வாண்டில் சிறப்பாக பணியாற்றிய உதவிக் கோட்டத் தீயணைப்பு அலுவலர் திரு. பி. எம். குட்டி கிருஷ்ணனுக்கும், முன்னணி தீயணைப்போர் 919 திரு. ஏ. ஜீ.





சுப்பையாவுக்கும், தீயணைப்போர் 203 திரு. என். முருகேசனுக்கும் பாராட்டத்தக்க பணிக்காக காவலர் பதக்கம் வழங்கப்பட்டது. நிலைய தீயணைப்பு அலுவலர், திரு. என். மாரிமுத்துக்கு பாராட்டத்தக்க பணிக்காக தமிழ்நாடு முதலமைச்சரின் பதக்கம் வழங்கப்பட்டது. குடியரசுத் தலைவர் "ஜீவன் ரக்ஷா" பதக்கங்கள் திருவாளர்கள் காத்தான் மற்றும் செல்லையாவுக்கு வழங்கப்பட்டன.

தென் ஆற்காடு மாவட்டத்தில் 1972-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 5-ம் நாள் இரவு புயல் மற்றும் மழையின் காரணமாக பெண்ணார், கடிலம், பரவனார் மற்றும் கோமுகி ஆறுகளில் ஏற்பட்ட எதிர்பாராத வெள்ளத்தில் சிக்கித்தவித்த நபர்கள் தீயணைப்புப் படையினரால் காப்பாற்றப்பட்டனர். தென் ஆற்காடு மற்றும் செங்கற்பட்டு கோட்டத்தைச் சார்ந்த இரண்டு அலுவலர்கள் மற்றும் 68 தீயணைப்புப் படை பணியாளர்களின் இச்சேவையைப் பாராட்டி, அவர்களுக்கு ரொக்க வெகுமதியாக ரூ. 4,485 பிரத்தியேக முறையில் அரசு வழங்கியுள்ளது.

13. **தீயணைப்புத் துறை பணியாளர் நல நிதி.**—தமிழ்நாடு தீயணைப்புத் துறையில் பணிபுரியும் அரசிதழ் பதிவுபெறாத பணியாளர்களின் நன்மைக்காக தமிழ்நாடு தீயணைப்புத்துறை சேமநல நிதி 1962-ல் ஏற்படுத்தப்பட்டது. இந்நிதி இதனுடைய அங்கத்தினர்களுக்கு பணவுதவி அளிப்பதற்கும் அவர்களது நலத்தைப் பேணுவதற்கும் ஏற்படுத்தப்பட்டதாகும். என்புருக்கு நோய், புற்றுநோய், தொழுநோய் போன்ற நோய்களினால் அவதியுறும் அங்கத்தினர்கள் அல்லது அவர்களைச் சார்ந்திருப்பவர்கள் ஆகியோருக்கு நல்ல சத்துள்ள உணவு வகைகள் வாங்குவதற்கும் அங்கத்தினர்களின் பிள்ளைகளின் உயர்கல்விக்கும் இறந்துவிட்ட பணியாளர்களின் குடும்பத்திற்கும் அவர்களது குடும்பத்தை சேர்ந்தவர்களின் ஈமகிரியைகளுக்கான செலவுகளுக்கும் இந்நிதி உதவி அளிக்கிறது. மேலும் பணிக்காலத்தில் இந்நிதியிலிருந்து உதவி எதுவும் பெறாமல் ஓய்வுபெறும் நபர்களுக்கும் ஒரு குறிப்பிட்ட தொகை மானியமாக வழங்கப்படுகிறது. தீயணைப்புத்துறையில் பணிபுரியும் 2,896 பேர் இதில் சேர்ந்துள்ளனர். இவ்வாண்டில் இந்நிதிக்கு சந்தாவாக ரூ. 4,925 வசூலிக்கப்பட்டுள்ளது. இதுவரை ரூ. 26,381 உதவித் தொகையாக பணியாளருக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்நிதிக்கு அரசு ஈட்டு மானியத் தொகையாக ஒரு வருடத்திற்கு ரூ. 5,000-த்திற்கு மேற்படாமல் கொடுத்துவந்தது. மேற்கண்ட மானியத் தொகை ரூபாய் 15,000-க்கு மேற்படாதவாறு உயர்த்தப்பட்டுள்ளது.

**14. தீயணைப்புத் துறைக்கு நவீன சாதனங்கள்.**—தீயணைப்புப் படையினரின் உபயோகத்திற்காக இவ்வாண்டு அமெரிக்காவிலிருந்து ரூ. 31,000 செலவில் இரண்டு மூச்சுக் கருவிகள் (Gas masks) வரவழைக்கப்பட்டுள்ளது. இவை விஷவாயு மற்றும் புகை சூழ்ந்த ஆழமான கிணறுகள், மற்ற இடங்களில் அகப்பட்டுக் கொண்ட நபர்களை காப்பாற்றும்பொழுது தீயணைப்புத் துறையினருக்குப் பயனளிக்கும். மேலும் ரூ. 2.76 லட்சம் விலையுள்ள "விபத்து வண்டி" (Crash Tender) என்னும் சிறப்புப் பொறியை எண்ணூர் தீயணைப்பு நிலையத்தின் உபயோகத்திற்காக வழங்க அரசு ஒப்பளித்துள்ளது. இப்பொறி மிகப் பெரிய எண்ணெய் எரிவதால் ஏற்படும் விபத்துக்கள் மேலும் மற்றைய பெருந் தீ விபத்துக்கள் ஆகியவற்றை அணைக்கப் பயன்படும்.

15. தீயணைப்புத் துறை பணியாளர்களுக்கு வாரத்தில் ஒருநாள் விடுமுறை அளித்து, அவர்களுக்குப் பதிலாக கூடுதலாகப் பணி செய்யும் பணியாளர்களுக்கு, படி அளிக்கும் திட்டமொன்றை அரசு அங்கீகரித்துள்ளது. முதலில் இது சென்னை எழும்பூர் தீயணைப்பு நிலையத்தில் மாதிரி திட்டமாகச் செயற்படுத்தப்பட்டது. இத்திட்டம் நல்ல முறையில் இயங்கியதால் இம்மாநிலத்திலுள்ள எல்லா தீயணைப்பு நிலையங்களிலும் 1975-76-ல் செயற்படுத்தப்படவிருக்கிறது.

## இணைப்பு.

1974-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ம் நாளன்றுள்ளவாறு தீயணைப்பு படையிலுள்ளவர்களின் எண்ணிக்கை :—

(1) அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர்கள்—

1. தீயணைப்புத்துறை இயக்குநர்
2. துணை இயக்குநர்கள்
3. கோட்ட தீயணைப்பு அலுவலர்கள்





(2) அரசிதழ் பதிவு பெறாதவர்கள்—

| | |
|---|---|
| 1. உதவிக் கோட்டத் தீயணைப்பு அலுவலர்கள் | 10 |
| 2. போக்குவரத்து உதவிக் கோட்டத் தீயணைப்பு அலுவலர். | 1 |
| 3. நிலைய தீயணைப்பு அலுவலர்கள் | 85 |
| 4. போக்குவரத்து நிலைய அலுவலர்கள் | 7 |
| 5. முன்னணி தீயணைப்போர்கள் | 328 |
| 6. இயந்திரக் கம்மியர் ஓட்டிகள் | 90 |
| 7. பற்ற வைப்பவர் (Welder) | |
| 8. தீயணைப்போர் இயந்திர கம்மியர் | 8 |
| 9. தச்சர் | 1 |
| 10. தீயணைப்போர் ஓட்டிகள் | 554 |
| 11. தீயணைப்போர் | 2,062 |

## தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை

புதன்கிழமை, 1975 ஏப்ரல் 2.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. என். கணபதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள். வினா எண் 521. திரு. என். இட்டப்பாவின் கேள்விக்கு மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் விடையளிக்கலாம்.

### 1. நடைமுறைக் கேள்விகள்.

**(அ) வினாப்பட்டியலை உறுப்பினர்களுக்கு முன்னதாக அனுப்புவது குறித்து.**

THIRU A. SUBRAMANIAM : I am raising a point of order, Sir.

MR. DEPUTY SPEAKER : The hon. Member can raise the point of order after the close of question-hour.

THIRU A. SUBRAMANIAM : My point of order is in regard to question-hour business.

கேள்விப் பட்டியல் முதல் நாள் மாலையிலோ இரவிலோ அங்கத்தினர்களுக் கெல்லாம் கிடைப்பது வழக்கம். ஆனால், நேற்றையதினம் எனக்கு அது கிடைக்கவில்லை. எனக்கு மட்டுந்தான் வரவில்லை என்பதில்லை. விசாரித்ததில், இம்மாதிரி உறுப்பினர்கள் பலருக்கு கேள்விப் பட்டியல் நேற்றையதினம் கிடைக்கவில்லை என்று தெரிகிறது. கேள்விப் பட்டியல் முன்கூட்டியே கிடைக்க வில்லையென்றால் நாங்கள் எப்படித் துணைக் கேள்விகள் போட முடியும்? ஆகவே, இதுபற்றி துணைத் தலைவர் அவர்கள் தகுந்த நிவாரணம் அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அதைப்பற்றி விசாரித்து தக்க நடவடிக்கை எடுக்கிறேன். இனிமேல் அம்மாதிரி நிகழாது என்று கருது கிறேன்.

## 2. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

### உயர்நிலைப் பள்ளிகளுக்குச் சுயாதிகாரம்

*521 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) உயர்நிலைப் பள்ளிகளுக்கு சுயாதிகாரம் அளிக்க வேண்டுமென சென்னை நகர தலைமை ஆசிரியர்கள் மகாநாடு கோரிக்கை விடுத்துள்ளதா?

(இ) ஆமெனில், அது குறித்து அரசின் நடவடிக்கை யாது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) அரசிடம் கோரிக்கை விடப்படவில்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. என். கிட்டப்பா:** தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சியின் கீழுள்ள பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் தங்களுக்கு அப்படியொரு சுய அதிகாரம் அளிக்கவேண்டும் என்று கேட்டதாகச் செய்தித்தாள்களில் வெளி வந்துள்ளது. அவர்கள் எத்தகைய சுய அதிகாரம் கேட்கிறார்கள் என்பதையும், அதை எதற்காகக் கேட்கிறார்கள் என்பதையும் அறியலாமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, நான் முதலில் குறிப்பிட்டபடி, அரசுக்கு அதுபற்றி கோரிக்கை ஏதும் வரவில்லை. ஆனால், 14—9—1974 அன்று சென்னை நகரத்தைச் சேர்ந்த தலைமையாசிரியர்களுடைய மாநாடு ஒன்று நடைபெற்றது. அதில் நான்கு தலைப்புக்களில் விவாதங்கள் நடத்தினார்கள். அதிலே காம்ப்ரஹன்ஸிவ் ஹைஸ்கூல்ஸ் பற்றியும், ஆட்டானமஸ் ஸ்கூல்ஸ் பற்றியும், இன்டர்னல் அஸெஸ்மெண்ட் பற்றியும், எக்ஸாமினேஷன் ரிபார்ம்ஸ் பற்றியும் நான்கு தலைப்புக்களில் விவாதங்கள் நடத்தியிருக்கிறார்கள். ஆனால், அதைப்பற்றி தீர்மானம் ஏதும் வரவில்லை. பள்ளிக்கூடங்களுக்கு சுயாட்சி உரிமை பொதுவாக விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பொருள்களில் ஒன்றாக இருந்து வருகிறது. ஆனால், அதுபற்றி தீர்மானம் நிறைவேறியதாகவோ கோரிக்கை விட்டதாகவோ தெரியவில்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, may I know from the Hon. Minister for Education and Tourism, the exact meaning of the word 'autonomous powers'. Does it mean that each high school should have its own syllabus and text-books? What is the exact meaning Sir?





**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, பள்ளிக்கூடங்களைப் பொறுத்த வரையில், இப்படிப்பட்ட நிலை எங்கும் ஏற்படவில்லை. இப்பொழுது சில கல்லூரிகளுக்கு பாட திட்டங்களை வகுக்க, தேர்வு நடத்த சுயாட்சி அதிகாரம் தரலாம் என்ற அளவுக்குப் பல்கலைக் கழக மானியக் குழு குறிப்பிட்டிருக்கிறது. ஆனால், அப்படித் தருவதற்கு முன்னால் சில முன்னேற்பாடுகள், சில வசதி வாய்ப்புகள் ஒரு கல்லூரிக்கு இருக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. கல்லூரி அளவில்தான் பேசப்படுகிறதே தவிர, பள்ளி அளவில் பேசப்படவில்லை. அதுபற்றி முழு விவரக் குறிப்புகள் தெரியவில்லை.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** தலைவர் அவர்களே, இந்தப் பள்ளிக்கூடங்களில் கல்வி இலாக்கா அதிகாரிகளுடைய தலையீடு மிக அதிகமாக இருந்து, ஆசிரியர்களுடைய நடவடிக்கைகளை முடக்கும் முறையில் இருப்பதால், கல்விக்கென்று தனியாக ஒரு வாரியம் அமைத்திட வேண்டும் என்ற கோரிக்கை வெகுவாக ஆசிரியர்களிடம் இருந்து வருகிறது. அதுபற்றி அனுகூலமான முடிவு எடுக்கப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, பெரும்பாலும் வணிகத் துறையின் அடிப்படையில், இலாபம் வரக்கூடிய இனங்களுக்கும், அதன் மூலமாக நிதி உதவி செய்கின்ற நிலையில் உள்ள நிறுவனங்களிடமிருந்தும் தொகையை வாங்கிப் பயன்படுத்தும் அளவுக்கு தனி அதிகாரங்கள் கொண்டவைகளாக வாரியங்கள் அமைக்கப்படுகின்றன, ஆனால், கல்வித் துறைக்கு தனி வாரியம் அமைப்பதென்றால் அது சட்டமன்றத்திற்குப் பெரும் இழப்பாகும். ஏனென்றால், வேறு எந்த வகையிலும் நாம் ஒன்றும் செய்ய முடியாது. ஆகவே, அரசு அதிகாரிகளின் தலையீடு இருக்க வேண்டும்; முறைப்படி நடக்க வேண்டும், பல்வேறு வகைகளில் செம்மைப்படுத்த வேண்டுமென்றால் அரசின் முழு கண்காணிப்பு இருக்கவேண்டும். இது செலவு செய்கின்ற ஒரு இனமே தவிர, இலாப நோக்கோடு நடத்தப்படுவதல்ல. வாரியம் அமைத்தால் வாரியத்தினுடைய தலைமையில் உள்ளவர்களுடைய தலையீடுகளை நம்மால் கட்டுப்படுத்த முடியாமல் போய்விடக்கூடிய சூழ்நிலையும் ஏற்படலாம். எங்கும் தனி வாரியம் இதற்காக அமைக்கப்படவில்லை. இந்த அரசும் இதற்கென வாரியம் அமைக்கும் கொள்கையை ஏற்றுக்கொள்ளவில்லை.

**திரு. என். டென்னிஸ்:** சில காரியங்களில் கல்வி அதிகாரிகள்—குறிப்பாக சி.இ.ஓ., டி.இ.ஓ.—முக்கியமாக உடனே நடவடிக்கை எடுக்கவேண்டிய காரியங்களில் நடவடிக்கை எடுக்காமல் கால தாமதம் இருக்கிறது. அமெனிடீஸ் ஃபண்டிலிருந்து 15 ரூபாய்தான் உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர்

செலவிடலாம் என்ற நியமம் இருக்கிறது. பள்ளிக்கூட இம்ப்ரூவ்மென்டுக்காக 500 ரூபாய் செலவு செய்ய உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியருக்கு அதிகாரம் கொடுத்தால் மிக நன்றாக இருக்கும். அதுபோல், பல பள்ளிக்கூடங்களில் பர்சென்டேஜ் ஆப் பாஸ் உயர்நிலைப்பள்ளி வகுப்புகளில் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஒரு சமயத்தில் ஒரு துணைக் கேள்வி மட்டும் போடுங்கள்.

**திரு. என். டென்னிஸ் :** பர்சென்டேஜ் ஆப் பாஸ் அதிகமாக இருக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அதனால் ஸ்டாண்டர்டு மெயின்ட்டெயின் பண்ணுவது கஷ்டமாக இருக்கிறது. அதிகாரிகள் தலையீடு குறைக்கப்பட்டு, உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு அதிக அதிகாரம் கொடுக்கப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, கல்வித் துறையில் பணிகள் காலத் தாழ்வு இல்லாத வகையில் நிறைவேறவேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில்தான் அதிகாரிகளினுடைய எண்ணிக்கை பெருக்கப்பெற்று விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இக் கருத்தில்தான் ஒரு கல்வி மாவட்டமாக இருந்ததை இரண்டு கல்வி மாவட்டங்களாகவும், மூன்று கல்வி மாவட்டங்களாகவும், நான்கு கல்வி மாவட்டங்களாகவும் ஆக்கியும், மூன்று நான்கு வருவாய் மாவட்டங்களுக்கு ஒரு சி.இ.ஓ. இருந்ததை மாற்றி, ஒவ்வொரு கல்வி மாவட்டத்திற்கும் ஒரு சி.இ.ஓ. இருக்கவேண்டும் என்று நான்கைந்து ஆண்டுகளாக வைத்திருப்பதன் காரணமாக விரைவாகப் பணிகள் நடக்கின்றன. என்றாலும், சில சமயங்களில் காலத் தாழ்வு, கடிதப் போக்குவரத்து காரணமாக ஏற்பட்டு விடுகிறது என்று சொல்கிறார்கள். ஆனால், இந்தத் துறையிலுள்ள அதிகாரிகளுக்கு, காலத் தாழ்வு ஏற்படாத அளவுக்கு உடனடியாக பணிகள் நிறைவேற வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அது மாத்திரமல்லாமல், அமெனிடீஸ் பண்டு போன்றவற்றைப்பற்றி உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதையெல்லாம் தனியாக ஆராய வேண்டும்.

**டாக்டர் ச. மு. பழனியப்பன் :** தலைவர் அவர்களே, தனியார் உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்—ஆசிரியர்கள் சுயாட்சியாக நடக்க முடியாத நிலையில் அங்கே மானேஜ்மென்டார்—கரெஸ்பாண்டென்ட் என்றும் செக்ரடரி என்றும் சொல்லப்படுபவர்கள் அன்றாட நிர்வாகத்தில் தலையிட்டு தலைமையாசிரியர்—தலைமையாசிரியைகளுக்குத் தொல்லை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். தனியார் பள்ளிக்கூடச் சட்டம் அமுலுக்கு வந்தும் இம்மாதிரி



நிலைமை நீடிக்கிறது. தலைமையாசிரியர்கள் ஓரளவு பள்ளி நிர்வாகத்தில் சுயாட்சியாக நடக்கும் அளவுக்கு அவர்களுக்கு நியாயமான உரிமைகள் வழங்க ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, தனியார் பள்ளிப் பாதுகாப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டு, அது 1-12-1974 முதல் அமுலுக்கு வரப்பட்டதாக கூறப்பட்டிருக்கிறது. அதற்கான விதிமுறைகள் வகுக்கப்பட்டு அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது. அந்த விதிமுறைகளின்படி நடக்க வேண்டுமென்பதுதான் இப்பொழுது இருக்கிற நியதி. எனினும் அதை மீறி நடக்கிற சூழ்நிலை ஏற்படுமானால் கல்வித் துறை அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுவரலாம். அதன்மீது அவர்கள் தக்க நடவடிக்கை எடுப்பார்கள்.

**திரு. கோ. இளங்கோவன் :** தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் விடையளிக்கும்போது, கல்லூரிகள் அளவில்தான் பாட திட்டங்களையும் மற்றவைகளையும் மாற்றியமைத்துக் கொள்ள உரிமைகள் வழங்கப்பட்டிருக்கின்றன, உயர்நிலைப் பள்ளிகளுக்கு அல்ல என்று சொன்னார்கள். உயர்நிலைப் பள்ளிகளில் மெட்ரிக்குலேஷன், உயர்நிலைப் பள்ளிகளுக்கு அப்படிப்பட்ட அதிகாரம் அளிக்கப்படவில்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, கல்லூரிகளுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்று நான் கூறவில்லை. அப்படிப்பட்ட நிலைமையை கல்லூரிகளில் ஏற்படுத்தலாம் என்று பல்கலைக்கழக மானியக் குழு கருத்துத் தெரிவித்திருக்கிறது ; அதற்கு சிலபல வரன்முறைகள் ஏற்படுத்த வேண்டும் என்று சொல்லியிருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்த வரையில், அப்படிப்பட்ட, தன்னிச்சையாக இயங்கக்கூடிய, அடானமஸ் ஸ்டேட்டஸுடன் இயங்கக்கூடிய கல்லூரிகள் இன்னும் துவக்கப்படவில்லை. இரண்டு மூன்று கல்லூரிகளை எடுக்கலாம் என்ற எண்ணத்தின் அடிப்படையில் ஆராயப்பட்டு வருகிறது. ஆகவே, பள்ளிகளைப் பொறுத்தவரையில் அந்த நிலை இன்னும் ஏற்படவில்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சார், தனியார் பள்ளிகளுக்குப் பாதுகாப்புக் கொடுக்கக்கூடிய, அங்கேயிருக்கக் கூடிய ஊழியர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கக்கூடிய சட்டத்தை எதிர்த்து, ஹைகோர்ட்டிலே பலர் வாதாடிக் கொண்டிருக்கிறார்களே, அப்படிப்பட்ட நிறுவனங்களுக்கு அரசு கொடுக்கக் கூடிய மானியம் நிறுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அதை நாம் நிறுத்த இயலாது. அந்தந்தப் பள்ளிகளைப் பொறுத்தவரையிலும் ஸ்டே ஆர்டரை உயர்நீதிமன்றம் தந்திருப்பதாலே, ஏற்கனவே இருக்கிற சட்ட திட்டத்தின்படி அலுவல்கள் நடைபெறும். வழக்குகள் முடிந்தபிறகு, அதன் படி சட்டதிட்டம் அமுலுக்கு வரும். வழக்கு மன்றத்துக்குப் போகாத மற்ற பள்ளிகளைப் பொறுத்தவரையிலே புதிய சட்ட திட்டம் கட்டுப்படுத்தும். ஆனுல், இந்தக் காரியத்தை வைத்து, மானியத்தை நிறுத்துவோமானுல் வழக்கு மன்றத்தை அவமானப்படுத்தியவர்கள் ஆவோம். இந்தப் புதியச் சட்டத்தை அமுல்படுத்த முடியாதே தவிர, ஏற்கனவே இருக்கிற சட்டத்தை அமுல் படுத்துகிருேம்.

**திரு. நா. வீராசாமி :** தலைவரவர்களே, சென்னை நகரத்திலே நடந்த தலைமையாசிரியர்கள் மாநாட்டிலே பெரும்பாலும் தனியார் பள்ளிகளுடைய தலைமை ஆசிரியர்கள்தான் கலந்து கொண்டார்கள். சென்னையிலே நெரிசல் அதிகம். ஆகவே, எல்லா உயர்நிலைப் பள்ளிகளிலும் மாணவர்களுக்கு இடம் கிடைப்பதில்லை. ஆகவே எல்லா தலைமையாசிரியர்களும் மாணவர்களைச் சேர்க்கின்ற அதிகாரமானுலும், பியூன் அப்பாய்மெண்ட் அதிகாரமானுலும்கூட நமக்கு இல்லை. நமக்கு மேலும் அதிகாரம் தேவை. ஆருவது, 7-வது, 8-வது மாணவர்களைச் சேர்க்கக்கூட நமக்கு அதிகாரமில்லை. மாணவன் இன்டெலி ஜென்டாக இருந்தால்கூடச் சேர்க்க முடியவில்லையென்று சொல்லியிருக்கிருர்கள். ஆகவே, நம்முடைய அமைச்சரவர்கள், அரசாங்கப் பள்ளிகளிலே மாணவர் களைச் சேர்க்க என்ன விதிமுறைகள் வைத்திருக்கிருர்களோ, அதே விதிமுறை களைத் தனியார் பள்ளிகளிலும் அமுல்படுத்த வேண்டும் என்று அரசாங்கத்தி லிருந்து உத்தரவு பிறப்பித்து, அதன்படி நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உங்கள் கேள்வி அதிகாரத்தைப் பற்றியது. அது எப்படி இதில் வரும்?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, நான் முதலிலே குறிப்பிட்டபடி புதியதாக வகுத்திருக்கிற சட்டதிட்டத்திலே இதற்கான வழிவகையிருக்கிறது. மாணவர்களைச் சேர்ப்பது, தேர்வு நடத்துவது, மேல்வகுப்புகளுக்கு அனுப்புவது ஆகிய அத்தனையும் தலைமை யாசிரியர்களைப் பொறுத்ததுதான். அது நடைபெறவில்லையென்ருல், அது பற்றி தலைமையாசிரியர்கள் சொல்வார்களானுல் கல்வித்துறை அதிகாரிகள் அதைப்பற்றி விசாரிப்பார்கள்.





**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவரவர்களே, தனியார் பள்ளி தலைமை தலைமையாசிரியர்களுக்கும் யாசிரியர்களுக்கும், அரசுப் பள்ளியிலுள்ள அதிகாரத்தில் ஏதாவது வேறுபாடு இருக்கிறதா என்பதை அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அப்படிப் பட்ட வேறுபாடு இல்லை. மாணவர்களைச் சேர்த்துக்கொள்வது, தேர்வு நடத்துவது, மேல்வகுப்புகளுக்கு அனுப்புவது ஆகியவற்றை ஏற்கனவே வகுத் திருக்கிற சட்டத்திலுள்ள வழிவகைகளின்படி உருவாக்கவேண்டும். இரண்டு வகைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கும் வேறுபாடு இல்லை.

**திரு. வை. பாலசுந்தரம் :** தலைவரவர்களே, சில தனியார் பள்ளிகளில் தலைமையாசிரியர்கள், கோடை விடுமுறை கழிந்து பள்ளிக்கூடம் ஆரம்பிக்கின்ற நேரத்தில், கட்டிடம் கட்டுவது, பள்ளிச் சீரமைப்பு போன்றவற்றிற்காக இவ்வளவு வசூலித்துத் தரவேண்டுமென்று நிர்பந்தப்படுத்தப்படுகிருர்கள் என்று சொல்லப்படுகிறதே, இதையெல்லாம் அரசு அறியுமா? அப்படி அறிந்திருந் தால், அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதை அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, மூலக் கேள்வி தலைமையாசிரியர்கள் மாநாட்டில் உயர்நிலைப்பள்ளிகளுக்குச் சுயாதிகாரம் அளிக்க வேண்டுமென கேட்டதில் ஆரம்பித்து, தலைமையாசிரியர் களுக்குப் போய், அங்கிருந்து பள்ளிகளுக்குப் போய், பிறகு நிர்வாகத்திற்குப் போய்விட்டது. எல்லாவிதக் கேள்விகளுக்கும் தேவையான விவரங்கள் இங்கிருக்க இயலாது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு, தக்க ஏற்பாடுகள் இருக்கின்றன, விதிமுறைகளிருக்கின்றன. தனிக் கேள்வி போட்டால் விதிமுறைகள்பற்றி சொல்லலாம்.

**திரு. என். மருதாசலம் :** தலைவரவர்களே, நகராட்சியிலுள்ள உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர், கோவையிலே உள்ள நகராட்சி இயக்குநருடைய உத்தரவின்பேரில்தான் நியமிக்கப்படுகிருர். ஆகவே, கால தாமதம் ஆவதால், அந்தந்த நகராட்சியிலுள்ள கமிஷனரே நியமிக்கலாமென அரசு உத்தரவிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, நகராட்சி களைப் பொறுத்தவரையில், நகராட்சி அதிகாரிகள்தான் நியமிக்கவேண்டும். அதற்கென்று அப்பாய்ன்ட்மென்ட் கமிட்டியிருக்கிறது. நகராட்சியினரும் பொறுப்பையேற்க வேண்டும், ஆணையரும் முழுப் பொறுப்பையேற்க வேண்டும். இயக்குநர் நியமிப்பதில்லை.

**திரு. கே. எ. வகாப் :** தலைவரவர்களே, உயர்நிலைப் பள்ளிகளுக்கு இந்தச் சுயாட்சி கொடுப்பதிலே பல சிரமங்கள் இருக்கலாம். ஆனால், கல்லூரிகள் தங்களுக்குச் சுயாட்சி வேண்டுமென்றும், பல்கலைக் கழகத் தலையீடு அதிகமாக வந்திருக்கிறதென்றும் சொல்லி, ஆகவே, தாங்கள் செம்மையாக நடைபெற அட்டானமஸ் பவர்ஸ் வேண்டுமென்று, குறிப்பாகத் தனியார் கல்லூரிகள் கேட்டிருக்கின்றனவே, அதைப்பற்றி அரசு பரிசீலித்து, சாதகமான முடிவு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அந்தக் கருத்தை மத்திய அமைச்சரகம் தெரிவித்திருக்கிறது—பல்கலைக்கழக மானியக் குழுவும் தெரிவித்திருக்கிறது. இரண்டு மூன்று கல்லூரிகள் அந்த வழிவகைகளைக் கொண்டு வரலாமென்றும் அதற்கான வசதி வாய்ப்புகளிருக்கின்றனவென்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அது அரசின் பரிசீலனையிலிருக்கிறது. ஆகவே, இரண்டு மூன்று கல்லூரிகளில் பரீட்சார்த்தமாகப் பார்த்து, அதில் வேறு எதுவும் தீங்கு ஏற்படவில்லை, கேடு ஏற்படவில்லையென்ற நிலைமை ஏற்படுமானால் வேறு கல்லூரிகளுக்கு அதனைக் கொண்டு வரலாம். இப்பொழுது, பல்கலைக் கழகங்களுக்கு அட்டானமஸ் ஸ்டேட்டஸ் கொடுக்கப் பட்டிருக்கிறது. அதன் காரணமாகப் பல்கலைக் கழகங்களிலேயே பல குறைபாடுகளிருக்கின்றன. ஆகவே, கல்லூரிகளுக்குத் தந்து, அவர்கள் விருப்பப்படி பட்டங்கள் வழங்குகிற சூழ்நிலை ஏற்படுமானால், கல்லூரிகளுக்கு இருக்கிற கட்டுக்கோப்புக் குறைந்துவிடும். ஆகவே, இரண்டு மூன்று கல்லூரிகளில் பரீட்சார்த்தமாகப் பார்த்து, இருக்கிற நிலைமைகளை ஆராய்ந்து பிறகு, மற்ற கல்லூரிகளில் கொண்டு வருவதை கவனிக்கலாம்.

**திரு. கே. கந்தசாமி :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, சில தனியார் பள்ளிகளில், மானேஜ்மென்ட்டார், தலைமையாசிரியர்கள் பல வருடங்கள் வேலை பார்த்தும் அவர்களுக்குரிய உரிமைகளைக் கொடுக்காமல், நியாயமானவற்றை நடைமுறைப்படுத்தாமல் நிர்வாகத்தினர் இருக்கிறார்கள். அதேபோல், ஆசிரியர்கள் ஒழுங்கீனமாக நடந்தால், நடைமுறையில் தண்டனை அளிக்க அவர்களுக்குக் குறைவான அதிகாரங்களிருக்கின்றன என்று கூறப்படுகிறது. ஆகவே, தவறு செய்பவர்கள் மானேஜ்மென்ட்டாராக இருந்தாலும், ஆசிரியர்களாக இருந்தாலும் உடனடி நடவடிக்கை எடுக்க, ஆக்டிவ் கோட் ஆஃப் டிசிப்ளின் என்ஃபோர்ஸ் செய்வதற்கு

There should be a code of conduct and discipline. They have only obsolete rules, outmoded rules.

அவ்வாறு இருக்கின்றனவே, காலத்திற்கு ஒவ்வாதனவாக இருக்கின்றனவே, அவற்றை மாற்றி நிலைமைக்கேற்ப விதிமுறைகளை நடைமுறைப்படுத்த, அமுலுக்குக் கொண்டுவர அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, நான் முதலிலே குறிப்பிட்டபடி, புதிய சட்டம் விரைவாக அமுலாக்கப்பட்டிருக்கிறது அது ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கிறது. மானேஜ்மென்ட்டாரும் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்று கூறுகிறது. மானேஜ்மென்ட்டாருக்கும் ஆசிரியருக்கும் விதிமுறைகள் அதில் கூறப்பட்டிருக்கின்றன. விதிமுறைகளை நாம் தெளிவாக வைத்திருக்கிறோம். காலதாமதம் ஏற்படாமல் விரைவாகத் தீர்க்கப்படக் கூடிய நிலையில் வைத்திருக்கிறோம். அதற்காக, நீதிபதிகளை நியமிக்க அரசு திட்டம் வகுத்திருக்கிறது. விரைவிலே நடவடிக்கை எடுக்க அரசு ஏற்பாடு செய்து வருகிறது.

**திரு. எம். சுரேந்திரன் :** தலைவரவர்களே, தனியார் பள்ளிகளையும், தனியார் கல்லூரிகளையும் அரசாங்கமே எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற கோரிக்கை வலுப்பட்டு இருக்கிறது. இங்கே, உயர்நிலைப் பள்ளிகளுக்குச் சுயாதிகாரம் வேண்டுமென்ற கோரிக்கையும் அது நல்லதல்ல என்று அமைச்சராலும் சொல்லப் படுகிறது. ஆகவே, சுயாதிகாரம் வேண்டுமென்று கூறுவதற்குக் காரணம், மாநிலத்திற்கு சுயாதிகாரம் கோருவதுதான், அதன் விளைவாகத்தான் இது வளர்ந்து வருகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அதற்கும் இதற்கும் சம்பந்தமில்லை. பல்கலைக் கழகம் அட்டானமஸ் ஸ்டேட்டஸ் பெற்றிருக்கிறது. கல்லூரிகளுக்கும் அட்டானமஸ் ஸ்டேட்டஸ் கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசு அமைச்சகம் சொல்லியிருக்கிறது, கல்லூரிகளாலும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், இங்கே ஒரு கருத்தரங்கிலே 4 தலைப்புகளை எடுத்துக்கொண்டு, அதிலே விவாதத்திலே, கூறப்பட்டிருக்கிறதே தவிர, அது கோரிக்கை வடிவிலே, அல்லது தீர்மான வடிவிலே செய்ய வேண்டுமென்று அவர்கள் கோரவில்லை. அதைப்பற்றி விவாதித்திருக்கிறார்கள் அவ்வளவுதான் நமக்குத் தகவல் கிடைத்திருக்கிறது.

### கன்னியாகுமரி மாவட்டத்தில் பள்ளிக் கட்டடங்கள்

* 522 வினா—திரு. வீ. கே. இராஜாப்பிள்ளை : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1974-75 பொதுப்பணித்துறை பட்ஜெட்டில் ( Detailed public works Budget for 1974-75) பணம் ஒதுக்கீடு செய்யப் பெறப்பட்ட தோவாளை, கொட்டாரம், தாழக்குடி, திருப்பதிசாரம் திட்டுவிளை, ரத்தினபுரம், அழகப்பபுரம், வழுக்கம்பாறை, ஒற்றயால்விளை, கனகப்பபுரம் முதலிய ஊர்களில் பள்ளிக் கட்டடங்களுக்கான வேலை எப்பொழுது துவங்கப்படும்?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** விவர அறிக்கை@ சட்டப் பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. வீ. கே. இராஜாப் பிள்ளை :** தலைவரவர்களே, இந்த விவர அறிக்கையில் 12 பள்ளிகளுக்கான குறிப்புகள் கொடுத்திருப்பதோடுகூட, 7 பள்ளிகளுக்கான கட்டிடங்களைப் பொறுத்தவரை 1974–75-ம் வருஷம் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து கட்டிட வேலைகள் துவங்கப்படவேயில்லையென்றும் கூறப்பட்டிருக்கிறது. அதோடு, 1975–76-லும் அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. அப்படியென்றால் இந்த வேலைகள் எல்லாம் எப்படி நடத்தப்படும், நடத்துவார்கள் என்பது சந்தேகமாக இருக்கிறது. ஏனென்று கேட்டால், இதில் குறிப்பிடப்படாத சில பள்ளிகளுக்கு, 1974–75-ல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, வேலை தொடங்கப்படாமலிருந்தும் இந்த வருஷம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, அதற்கு அமைச்சர் விளக்கம் கூறுவதோடுகூட தோவாளை உயர்நிலைப்பள்ளி, 1974 மார்ச்சில் துவங்கியிருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. துவங்கியிருப்பது உண்மைதான். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கேள்வியைக் கேளுங்கள். அவர் ஸ்டேட்மெண்ட் வைத்தார் என்பதற்காக, நீங்கள் ஸ்டேட்மெண்ட் வைத்தால் எப்படி ?

**திரு. வீ. கே. இராஜப் பிள்ளை :** இதுவரை ரூ. 10,000 தான் செலவு செய்யப்பட்டிருக்கிறது. அதுவும் கட்டி முடிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அந்த விவர அறிக்கையிலே தெளிவுபட குறிப்பிடப்பட்டிருக்கிறது. சில பள்ளிக்கூடங்களுக்கான கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன, சிலவற்றைப் பொறுத்தவரையில் பொறியியல் துறை மதிப்பீடுகளைத் திருத்த வேண்டியிருக்கிறது, சில கட்டடங்களைப் பொறுத்தவரையில் மதிப்பீடு அவர்கள் போடவேண்டியவர்களாக இருக்கிறார்கள், சில பள்ளிக் கட்டடங்களைப் பொறுத்தவரையில் பொறியியல் துறையினரிடம் தகவல்கள் கேட்கப்பட்டிருக்கின்றன. ஆகவே இந்த முறையிலே எவ்வளவுக்கெவ்வளவு நிறைவேற்ற இயலுமோ அவற்றை பொதுப்பணித்துறைக்கு கல்வித் துறை எடுத்துச் சொல்லும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, பல்வேறு இடங்களிலே நல்ல கட்டடங்கள் இல்லாமல் ஓலைக் கொட்டகையிலே பல பள்ளிகள் நடந்து கொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட இடங்களிலே உள்ளவைகளையாவது

* 533— -ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.





மாற்றி நல்ல கட்டடங்களாக மாற்றி தருகின்ற முறையிலே திருத்தியமைக்கின்ற முறையிலே அவற்றிற்காக முன்னுரிமை வழங்குவதற்கு இலாகா ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** கட்டடங்களுக்காக ஒரு குறிப்பிட்ட அளவிலே தான் நாம் நிதியை ஒதுக்குகிறோம், அந்த நிதியை மாவட்ட அளவிலே பிறகு ஒதுக்கித் தருகிறோம், அதற்குக் கட்டடக் குழுவினர் தருகின்ற ஒத்துழைப்பின் அடிப்படையிலேயும் ஊராட்சி ஒன்றியங்கள் மன்றங்கள் ஆகியவை தருகின்ற ஒத்துழைப்பின் அடிப்படையிலேயும் அரசு ஈட்டு மானியம் மற்றவையும் தந்து முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அந்த அந்த மாவட்டங்களிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போன்று மிகவும் கட்டட வசதிகள் இல்லாத இடங்களுக்கு முதலிடம் தர வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

### அரசு உயர்நிலைப்பள்ளி, கன்னிகைப்பேர்

* 523 வினா—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் வட்டம், கன்னிகைப்பேரில் அமையும் அரசு உயர் நிலைப்பள்ளிக் கட்டடம் கட்டும் திட்டம் விரைவு படுத்தப்பட உள்ளதா ?

(இ) ஆம் எனில், இப்பணி எப்போது முடிவடையும் ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) கன்னிகைப்பேரில் உள்ள அரசு உயர்நிலைப்பள்ளிக்கு கட்டிடம் கட்டும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

### செம்பனார்கோயில் ஒன்றிய மருத்துவமனைகள்

* 524 வினா—**திரு. எஸ். கணேசன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் செம்பனார் கோயில் ஒன்றிய பராமரிப்பில் உள்ள திருக்கடையூர், பரசலூர் மருத்துவமனைகளை நடப்பு ஆண்டில் அரசு மேற்கொள்ளும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இல்லை.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலே செம்பனார்கோவில் ஒன்றியப் பராமரிப்பில் உள்ள திருக்கடையூர், பரசலூர் மருத்துவ மனைகளில் இரண்டில் ஒன்றை நடப்பு ஆண்டிலாவது அரசு மேற் கொள்ளும் எண்ணம் அரசுக்கு இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, திருக்கடையூரில் உள்ள ஊராட்சி ஒன்றிய மருத்துவ மனையை எடுத்துக் கொள்வதற்கான முறையிலே அதற்குத் தேவையான ஏற்பாடுகள் என்ற வகையிலே சில ஏற்பாடுகள் குறித்து இந்த இலாகாவைச் சேர்ந்தவர்கள் பரிசீலனை செய்து வருகிறார்கள். அதிலே இரண்டு ஆண்டுகளுக்கு நிதி தருவதற்கு இசைய வேண்டும், அப்படி இசைந்ததற்குப் பின்னாலே கட்டட வசதி, இடவசதி பற்றி யெல்லாம் பரிசீலிக்கப்படும். அவை கிடைக்குமானால் இந்த ஆண்டு இல்லா விட்டால் அடுத்த ஆண்டிலே எடுத்துக்கொள்ள முயற்சிக்க வேண்டும்.

## *Seizure of spurious drugs.*

* 525 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Health be pleased to state :

(a) whether it is a fact that over Rs. 15,000 worth of spurious life-saving drugs were seized by the City Police in September 1973 at Madras ; and

(b) if so, the details thereof and the action taken thereon ?

* 526 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Health be pleased to state :

(a) whether it is a fact that an inter-State gang engaged in the manufacture and distribution of spurious drugs has been unearthed in recent times by the Madras City Police; and

(b) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) & (இ) 1972-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் போலியான அல்லது தரக்குறைவான சில ஆண்டி-பயாடிக் ( anti-biotic ) மருந்துகளும் ஏனைய மருந்துகளும் சென்னை மாநகரக் காவல் துறையினரால் கைப்பற்றப்பட்டன ; அவற்றின் மதிப்பு ஏறத்தாழ ரூ. 13,000 (ரூபாய் பதின்-மூன்றாயிரம்) ஆகும். இது தொடர்பாக மூவர் கைது செய்யப்பட்டனர். இவ்வழக்கு தொடர்ந்து புலனாய்வு செய்யப்பட்டு வருகிறது. வேறு சில மாநிலங்களிலே அவர்கள் பணி செய்திருக்கக் கூடும் என்று கருதப்படுகிற காரணத்தாலே புலனாய்வு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.



**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, போலியான மருந்துகள் எங்கே தயாரிக்கப்பட்டு சென்னைக்குக் கொண்டு வரப்பட்டன ? அவைபற்றி புலனாய்வில் ஏதாவது விவரம் தெரிந்ததா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, அவை போலி மருந்துகள் என்ற அளவிற்குத்தான் கண்டுபிடிக்கப்பட்டன. அவை ஏற்கனவே ஒரு காலத்திலே மருந்தாக இருந்தவற்றை ஏதாவது மற்றவற்றோடு கலந்து பென்சைன் பென்சிலின் சோடியம், பென்சைன் பென்சிலின் சோடியம் சால்ட், பென்கோல் பெட்டானட்டசன் சோடியம் பாஸ்பேட்—தமிழிலே எழுதியிருப்ப தால் உச்சரிப்பு சரியாகச் சொல்ல முடியவில்லை—தரக்குறைவாக இருந்ததற்கு காரணம் ஒன்றிலே 31 சதவிகிதம் மருந்து அடங்கியிருந்தது; மற்றொன்றிலே 34 சதவிகிதம் மருந்து அடங்கியிருந்தது, மற்றொன்றிலே மருந்தே அடங்கி யிருக்கவில்லை, அந்த அடிப்படையிலே இது மேலும் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** தலைவர் அவர்களே, இந்தத் தரக்குறை வான மருந்தைத் தயாரித்தது நம்முடைய மாநிலத்திலா அல்லது அயல் மாநிலத்திலா ? அதைத் தயாரித்த தனிப்பட்டவர்களுடைய கம்பெனி இருக்கிறதா ? அவர்களைப் போலீசார் பிடித்திருக்கிறார்கள் என்று கூறியிருக் கிறார்கள், அவர்கள் யார் என்று அறிவிக்க முடியுமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, கைது செய்யப் பட்ட மூன்று பேர்களில் ஆந்திர மாநிலத்திலே உள்ள தாடப்பள்ளியைச் சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி ஒருவர், சென்னையைச் சேர்ந்த சுந்தரராஜன், பாலகிருஷ்ணன் ஆகிய இருவர், 9—9—1972 இல் கைது செய்யப்பட்டார்கள். அவர்கள் தயாரித்த தவறான மருந்துகள் மருத்துவ மனைகளிலிருந்து மருந்துகளை திருட்டுத்தனமாக எடுத்துச்சென்று ஆந்திர மாநிலத்திலே விற்பனை செய்வதிலே ஈடுபட்ட ஒரு கூட்டத்தினரில் பல மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள், அதிலே மைய சூத்திரதாரியாக ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த மாண்டாபா கிருஷ்ணமூர்த்தி என்பவர் இருக்கக்கூடும் என்று சந்தேகப் படுகிறார்கள், அந்த மாநிலத்திலே உள்ளவர்கள் அப்படித் தெரிவித்திருக் கிறார்கள், இவ்விஷயம் குறித்து இன்ஸ்பெக்டர் ஆப் ஜெனரலுக்கு தெரிவிக்க வேண்டுமென்று மருத்துவத் துறையைச் சேர்ந்தவர்கள் கேட்டுக் கொண்டார்கள். இதுபற்றிய புலனாய்வு நடைபெற்று வருகிறது. மத்திய புலனாய்வுத் துறை இதைப் புலனாய்வு செய்ய வேண்டுமென்ற நேரத்தில் அவ் வாறு செய்வதற்கில்லை என்று அவர்கள் தெரிவித்து விட்டார்கள். சென்னை குற்றப் புலனாய்வுத்துறை டெபுடி இன்ஸ்பெக்டர் ஜெனரல் மேற்பார்வையில் புலனாய்வு நடத்தப்படுகிறது.

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவர் அவர்களே, போலி மருந்துகளைக் கண்டுபிடிக்கிற அதிகாரிகள் சில நடவடிக்கைகள் எடுத்ததன் காரணமாக சில அதிகாரிகள் அரசியல் தன்மைகள் காரணமாக மாற்றப்பட்டதாக புகார்கள் வந்து இருக்கின்றனவா ? செல்வாக்கு படைத்தவர்களின் சிபாரிசுகளின் கேஸ்கூட போடப்படாமல் பென்டிங் ஆக இருப்பதாகப் பேசப்படுகிறதே அது சம்பந்தமாக அரசுக்குத் தகவல் வந்திருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** மருந்து கலப்படத்தைக் கண்டுபிடிப்பதற்காக டிரக் இன்ஸ்பெக்டர்கள் இருக்கிறார்கள், 10, 12 ஆண்டுக்காலமாக சென்னை நகரிலேயே இருக்கிறார்கள். அவர்கள் குழந்தைகள் படிக்கிறார்கள் என்று என்னிடத்திலே சொன்னார்கள். 6 மாதம் நீடித்தோம், பிறகு மேற்கொண்டும் ஆறுமாதம் கேட்டார்கள், 6 மாதம் நீடித்தோம், மூன்றாவது முறையாக வழக்குகள் இருக்கின்றன. ஆகவே, மாற்றக்கூடாது என்று சொன்னார்கள். நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன், மாற்றுங்கள் என்று சொன்னேன். அதிகமான காலத்திற்கு ஒரே இடத்தில் இருக்கின்றவர்கள் மாற்றப்படுகிறார்கள், அப்படி மாற்றப்படுகிறபோது செல்வாக்குப் படைத்தவர்களின் சிபாரிசுகளை பெரிய மனிதர்களின் முறையீடுகளை அரசாங்கம் கவனிப்பதில்லை. அரசாங்கம் கண்டிப்பாக இருக்கிறது. அரசாங்கம் என்பது தொடர்ந்து இயங்குகிற ஒரு இயந்திரமே தவிர குறிப்பிட்ட முனியனோ முத்துசாமியோ தான் பார்க்க முடியும் என்ற நிலையில் அது இருந்தால் அதற்குப் பெயர் அரசாங்கமல்ல நீண்ட நாட்கள் இருந்ததற்குப் பிறகு மாற்றப்படுகிறார்கள், தொடர்ந்து ஒரே இடத்தில் இருக்க வேண்டுமென்று யார் கேட்டாலும் அரசு அதை ஒத்துக் கொள்வதில்லை.

**திரு. பெ. சீனிவாசன் :** ஆங்கில மருந்துகளில் போலி மருந்துகள் இருந்தால் கண்டுபிடிப்பதற்கு வழிவகைகள் இருக்கின்றன. சித்த வைத்தியத்திலே சந்தைக் கடையைப் போல் பழனி போன்ற இடங்களிலே எல்லாம் ஊறுகாய் கடைகள் மாதிரி வைத்துக் கொண்டிருக்கிறார்கள், அதிலே போலி மருந்துகளை வைத்திருக்கிறார்களா என்று பார்ப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** ஊறுகாய் கடைகளைப் போல இருந்தாலும் ஊறுகாய் ஒரு உயர்ந்த மருந்து. பல நேரங்களில் காய்ச்சல்காரர்களுக்கு எலுமிச்சை ஊறுகாய் தேவைப்படுகிறது, அதிலே வைட்டமின் 'சி' இருக்கிறது. அந்த மருந்துகள் எல்லாம் தரக்குறைவாக இருக்கின்றன என்று நிச்சயமாக நாம் சொல்லமுடியாது. மருந்துகளைத் தயாரிக்கும்போது கான்ஸ்டிட்டுவன்ட்ஸ், அதிலே கலக்கப்படுகிற பொருட்கள் 10, 12 பொருட்கள் இருக்கின்றன என்றால் அதிலே 3, 4 பொருட்கள் வேறு பொருட்களாக இருக்கலாம், அந்த மருந்தைச் சாப்பிடுகிறபோதுகூட நெய்யில் குழைத்துச் சாப்பிடலாம் அல்லது தேனில் குழைத்து சாப்பிடலாம் என்று சொல்வார்கள். அந்த மருந்துகளை பார்மோகோபியா முறைப்படி தயாரிக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது. அப்படித் தயாரிக்கப்படவில்லையென்றால் கண்டுபிடிக்கலாம். ஆனால் தகுந்த விரிவான ஏற்பாடுகள் இப்போது இல்லை.



(முற்பகல் 9.30)

**திரு. பெ. சீனிவாசன் :** தலைவரவர்களே, இப்பொழுது நம்முடைய அரசாங்கம் நம்முடைய இந்திய மருத்துவ முறைகளைப்பற்றி ரொம்பத் தீவிரமாகப் பயிற்சி கொடுத்து செய்து கொண்டிருக்கிறது. இந்த மருந்துகளுக்கு அட்லீஸ்ட் ஒரு ஃபார்முலா வகுத்து, இந்த மாதிரிதான் தயாரிக்க வேண்டும் என்று வழிமுறை வகுத்து, டிரக் இன்ஸ்பெக்டர்கள் இருப்பதைப் போல் சித்த வைத்தியம் தெரிந்த சில சாமியார்களை வைத்தாவது அதைக் கண்காணிக்க ஏற்பாடு செய்யப்படுமா ? பத்திரிகைகளில் பார்த்தால் முழுப்பக்க விளம்பரங்களைத் தொடர்ந்து எல்லாப் பத்திரிகைகளிலும் கொடுக்கின்ற அளவிற்குப் பணக்காரர்களாக இருக்கிறார்கள். அவர்கள் சம்பாதிப்பது ரொம்பவும் மர்மமாக இருக்கிறது. எனவே இந்த மருந்துகளுக்கு ஒரு ஸ்டாண்டர்ட் ஃபார்முலா வகுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, அகில இந்திய அடிப்படையிலே சித்த மருத்துவ மருந்துகளை உற்பத்தி செய்யும் முறை பற்றிய பட்டியலைத் தயாரிக்க அமைக்கப்பட்ட குழு 400, 500 மருந்துகளைத் தான் தெரியப்படுத்தி, பார்மோகோபியா தயாரித்திருக்கிறது. அரசாங்க மருத்துவ மனைகளுக்கு தயாரிக்கப்படும் மருந்துகள், அதைபோல் கோவாப்பரேட்டிவ் சொசைட்டி ஒன்று அடையாற்றில் இருக்கிறது, 'இம்காப்ஸ்' என்று பெயர். அந்த சொசைட்டி இந்திய முறை மருந்துகளிலே பார்மோகோபியா முறையில் தான் தயாரிக்கிறது. இன்னும் பட்டியலில் வராத வேறு பல முறைகளும் இருக்கின்றன. ஆகவே, அந்த முறைகளைப்பற்றி, மேலும் பல மருந்துகளைப் பற்றிய விவரப் பட்டியல் தயாரித்த பிறகுதான் முழு அளவில் பரிசீலிக்க முடியும்.

இன்றைக்கு மருந்துகளைப் பரிசீலிப்பது பார்மசி படித்தவர்களைக் கொண்டு தான் நடைபெறுகிறது. இந்திய மருத்துவத் துறை இயக்குநர் ஆலோசனைப்படி டிரக் இன்ஸ்பெக்டர்களாக உள்ளவர்கள் மூலம்தான் மருந்துகளில் தரக் குறைவு இருந்தால் பரிசீலிக்கின்ற நிலை இருக்கிறது. இன்னும் சரியாக வளர்ந்த பிறகு முழு அளவிற்கு ஒழுங்குபடுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1975 ஏப்ரல் 2

சிலர் விளம்பரம் செய்கிருர்கள், அதைக் கட்டுப்படுத்த, முறைப்படுத்த சில ஆலோசனைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. மறுபடியும் அந்த ஆலோசனைகளை மீறி நடந்தால் மறுபடியும் இந்திய மருத்துவத் துறை இயக்குநர் மூலம் அதை மேலும் பரிசீலிப்பதற்கான முயற்சிகளை எடுத்துக் கொள்ளலாம்.

**டாக்டர் ச. மு. பழனியப்பன்:** தலைவரவர்களே, இந்த மருந்து தயாரிப்பதற்காக இருக்கின்ற தனியார் கம்பெனிகளையெல்லாம் அரசே எடுக்க வேண்டுமென்று இந்த அரசு மத்திய அரசாங்கத்திற்குச் சிபார்சு செய்யுமா? ஐ.டி.பி. என்ற இந்திய நிறுவனத்திற்கு 80 கோடி ரூபாய் வரை நஷ்டம் ஏற்பட்டது என்று சொல்கிருர்கள். அதைத் தவிர்க்க மத்திய அரசாங்கத்தின் கவனத்திற்கு இந்த அரசு கொண்டு வருமா? போலி மருந்துகளைக் கண்டுபிடிக்கும் நேரத்தில் யார் அந்த முறையீடுகளைக் காவல்துறைக்கு அனுப்புகிருர்கள், டிரக் இன்ஸ்பெக்டர்களா அல்லது தனிப்பட்ட பொதுமக்களா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு கேள்வியோடு விட்டு விடுங்கள். மத்திய அரசாங்கத்திற்குச் சிபார்சு செய்வது சம்பந்தப்பட்ட கேள்வியோடு விட்டுவிடுங்கள், அடுத்த கேள்வியை அப்புறம் பார்த்துக்கொள்ளலாம்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, ஒரு பெரிய நிறுவனத்திற்கு நஷ்டம் வருகிறது என்று சொன்னர்கள். அதுபற்றி எனக்கு எந்த விவரமும் இல்லை. தனியார் தொடங்கி நடத்தும் மருந்து தயாரிக்கும் நிலையங்களை அரசாங்கம் எடுக்குமா என்று கேட்டார்கள். அதற்கு இப்பொழுது அவசியமில்லை. இன்னும் பல நூற்றுக்கணக்கான மருந்து தயாரிக்கும் நிலையங்கள் தமிழ்நாட்டில் வரவேண்டுமென்றுதான் அரசு விரும்புகிறது. ஏனென்றல் இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மருந்து தயாரிக்கும் நிலையங்கள் —பார்மாசூடிகல் கம்பெனிஸ்—குறைவாக இருக்கின்றன. அவைகளை மேலும் அதிகப்படுத்திஞல்தான் தமிழ்நாட்டின் முழுத் தேவைகளையும் நிறைவு செய்ய முடியும். அதுதவிர மற்ற வகைகளிலேயும் இந்த மருந்து தயாரிப்புக்கு அரசு ஊக்கம் தர வேண்டுமென்று விரும்புகிறது. ஜாயிண்ட் செக்டார் என்ற முறையிலே தமிழ்நாடு தாதா பார்மாசூடிகல் என்று அண்மையிலே அமைந்து நல்ல முறையில் செயல்படுவதால் மேலும் அவ்வாறு வர விரும்பிஞல் அது வரவேற்கக் கூடியதாகும்.

**திரு. கோவை செழியன்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, இத்தகைய கலப்பு மருந்துகளால் பல உயிர்களை இழக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. ஏற்கனவே பலபேர் குறிப்பிட்ட மாதிரி இத்தகைய மருந்துகளில் கலப்படம் செய்பவர்களை, அவர்களுக்கு மரண தண்டனை கொடுக்க வேண்டுமென்ற சட்டத்தை நிறைவேற்றி மத்திய அரசாங்கத்திற்கு அனுப்புமா? அதோடு இன்னொரு கேள்வியையும் அது தொடர்பாகக் கேட்டு விடுகிறேன்.



1975 ஏப்ரல் 2] [திரு. கோவை செழியன்]

விளம்பரங்கள் பத்திரிகைகளில் மருந்துகளைப்பற்றி வருவதாகச் சொல்
கிருர்கள். தனிப்பட்ட இந்த விளம்பரங்களுக்காக, நாட்டு மருந்துகள்
சம்பந்தப்பட்ட இந்த விளம்பரங்களுக்காக ஒரு ஆண்டுக்கு ஏழெட்டு இலட்சம்
ரூபாய் செலவு செய்து வெளியிடுகிருர்கள். உண்மையிலேயே அவர்கள் அந்த
மருந்துகளுக்காகத்தான் விளம்பரம் செய்கிருர்களா அல்லது அந்தப் பெயரிலே
சமூக விரோதக் காரியங்களைச் செய்கிருர்களா என்பதை அரசு கவனிக்குமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, இந்தப் போலி மருந்து
களைப் பயன்படுத்துவதால் மக்களில் ஏராளமானவர்கள் இறந்து போகிருர்கள்
என்ற ஒரு கருத்தை அங்கத்தினர் அவர்கள் எழுப்பிஞர்கள். இறந்து
போகிருர்கள் என்று தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் அதிகம் சொல்ல
முடியாது. நல்ல மருந்திலேயும் இறந்து போகிருர்கள். இறந்து போவது என்ற
நிலைமை ஏற்படும்பொழுது பென்சிலின் முறைப்படி போடுகிற நேரத்திலேயும்
சில சமயங்களில் ஷாக் ஏற்பட்டு இறந்து போகிருர்கள். போலி மருந்து
களிலேயும் கெடுதல் செய்யும் மருந்துகள் சில இருக்கின்றன. பயனில்லாமல்
இருக்கும் மருந்துகளும் சில இருக்கின்றன, எந்தப் பலனும் இல்லாமல் காசு
செலவு என்று அப்படி வரும் நிலையும் உண்டு. ஆனல் சட்டப்படி விரோதம்.
இதற்காக உள்ள தண்டனையை அதிகப்படுத்த மத்திய அரசுக்கு ஏற்கனவே
ஆலோசனை சொல்லப்பட்டு மத்திய அரசு மிகத் தீவிரமாக இதைப் பரிசீலனை
செய்து வருகிறது. ஏற்கனவே பாராளுமன்றத்தில் நிறைவேறிய சட்டத்தை
திருத்தி நிறைவேற்றுகின்ற நிலை வரும்பொழுது மாநிலத்திற்கும் அந்தப் பலன்
கிடைக்கும். தமிழ்நாட்டில் போலி மருந்துகளைத் தயாரிக்கும் நிலையங்களை
நம்முடைய சட்டத்திலேயே கட்டுப்படுத்த முடியும். எங்கேயாவது தயாரிப்
பதாகத் தகவல் வந்தால் அதன் பலனை அவர்கள் அனுபவிக்கக் கூடும். இந்த
வகையில் இந்திய அரசாங்கம் சட்டம் கொண்டுவந்தால் அது வரவேற்கக்
கூடிய ஒன்று.

விளம்பரங்கள் செய்பவர்கள் பல இலட்சக்கணக்கான ரூபாய் செலவு
செய்து விளம்பரம் செய்கிருர்கள் என்று சொல்கிருர்கள். அதன் முழு விவரமும்
எனக்குத் தெரியாது. இலட்சக்கணக்கான ரூபாயிலே விளம்பரம் செய்யும்
அவர்களுக்கு எப்படி வசதி கிடைக்கிறது என்பதைப்பற்றி ஏதாவது புகார்கள்
வந்தால் விஜிலென்ஸ் துறைக்கு அனுப்பி அவர்கள் மூலம் விசாரிக்கச் செய்ய
ஏற்பாடு செய்யலாம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சார், கலப்படம் மற்றச் சாமான்களில்
வருவது மாதிரி இந்த மருந்துகளிலும் வந்த காரணத்தால் பாதிக்கப்படுகிருர்
கள். அவர்களது நோய் நீடிக்கிறது அல்லது அவர்களது உயிர் போய்விடு
கிறது என்ற அதுசம்பந்தமான விஷயங்களைப்பற்றிய விவரங்களைச் சேகரிப்
பதற்கு அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, அப்படியொரு போலி மருந்தை யாராவது வாங்கி, அதை இவ்வளவு நாட்கள் உண்டு, அதனால் இன்ன விளைவு ஏற்பட்டது என்று சான்றோடு புகார் இருந்தால் அதைச் சேகரிக்க முடியும். இல்லையென்றால் அதைச் சேகரிப்பது மிகவும் கடினம். ஏனென்றால் மருத்துவமனைகளில் போலி மருந்து என்று தெரிந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கிறார்கள் அல்லது கைவிடுகிறார்கள். வெளியிலே தனியாரிடம் வாங்கினால் அது போலி மருந்தாக இருந்தால் அதைத் தடுக்கச் சட்டம் இருக்கிறது, தடுத்து விடலாம், பறிமுதல் செய்யலாம். பறிமுதல் செய்யப்பட்டது 13,000 ரூபாய் மதிப்பு உடையது என்று கருதப்படுகிறது. அது உண்மையான மதிப்பாகக்கூட இருக்காது, மதிப்பு என்று கருதும் அந்த மருந்து கைப்பற்றப்பட்டிருக்கிறது. ஆகவே, இவைகளெல்லாம் போலி மருந்துகளாக இருந்து அதன் விளைவுகள் ஒரு குறிப்பிட்ட வட்டாரத்திற்குள்ளேயே இருந்தால் நம்மால் சேகரிக்கக்கூடிய நிலைமை இருக்காது என்று நான் கருதுகிறேன்.

**திரு. கே. கந்தசாமி :** தலைவரவர்களே, மருந்து கலப்படத்திற்கு அதிகத் தண்டனைக்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் மத்திய அரசாங்கத்திற்குச் சிபார்சு செய்திருப்பதாகச் சொன்னார்கள். நமது கோவை செழியன் அவர்கள் சொன்னதைப்போல் மரண தண்டனை அல்லது குறைந்தது ஆயுள் தண்டனைக்காவது சிபார்சு செய்துள்ளார்களா என்ற விவரத்தை அறிய விரும்புகிறேன். அடுத்தபடியாக . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அடுத்தபடியாக என்று போகக்கூடாது. ஒன்றோடு நிறுத்துங்கள். ஒவ்வொருவரும் மூன்று கேள்விகள் என்று கேட்டால் எப்படிப் பதில் சொல்ல முடியும் ?

**திரு. கே. கந்தசாமி :** அடுத்ததாக, ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும்பொழுது மாநிலத்தில் தயாரித்தால் அதன் விளைவுகளை அனுபவிக்க வேண்டுமென்று கூறினார்கள். அதை, more possession என்று வைத்திருந்தால் தண்டனை என்று குற்ற எண்ணத்தோடு செய்யும் காரியத்தை attribute செய்து தண்டிக்க அரசு ஆவன செய்யுமா ?

This is a very serious offence against humanity

ஆகவே தயவுசெய்து இன்றைக்கு மிகக் கடுமையான நடவடிக்கைகளைத் துரிதமாக எடுக்க முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, மருத்துவ சோதனைகளைத் தான் அரசாங்கம் தீவிரப்படுத்த முடியும். அந்தச் சோதனைகளைத் தீவிரப்படுத்தப் பொதுமக்களும் ஒத்துழைக்க வேண்டும். மருந்து விற்பனையாளர்கள்





தவறு செய்தால் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க இப்பொழுதே வாய்ப்பிருக்
இறது. ஏற்கனவேயும் எடுக்கப்பட்டிருக்கிறது. தனிப்பட்டவர்கள் வாங்கி,
ஏமாந்தால் அந்த மருந்து எங்கு விற்கப்பட்டது என்று கண்டுபிடிக்கப்
பட்டால் நடவடிக்கை எடுக்க முடியும்.

ஆயுள் தண்டனை, மரண தண்டனை என்று சொன்னார்கள். உண்மையான
குற்றவாளிகளுக்கு மிகப்பெரிய தண்டனை விதித்தாலும் அதிலிருந்து தப்பித்துக்
கொள்வதற்கு மிகத் தீவிரமாகக் கண்டுபிடிப்பார்கள். நம்முடைய நாட்டி
லுள்ள சமுதாய நிலையில் தீவிரத் தண்டனை என்பது உண்மையான குற்றவாளி
களுக்கே கிடைக்கும் என்று உறுதியாகச் சொல்ல முடியுமா என்பதையும் சட்ட
மன்றத்திலே இந்தக் காலத்தில் ஆலோசிக்க வேண்டும்.

**திரு. கே. எ. வகாப் :** தலைவரவர்களே, சமுதாயத்திற்கு இருக்கின்ற
பொறுப்புணர்ச்சியோடு கூட இந்தப் போலி மருந்துகள் விஷயத்தில் டாக்டர்
களும் விழிப்போடிருக்க வேண்டும். சில நேரங்களில் இப்படிப்பட்ட மருந்து
கள் போலி மருந்துகள் என்று தெரிந்தாலும், அதை கைவிட்டு விடுகிறார்களே
தவிர போலீசுக்கோ அல்லது அரசாங்கத்திற்கோ தெரிவித்து அப்படிப்பட்ட
போலி மருந்து நடமாடுகிறது என்று சொல்வதில்லை. அதற்கு அவர்களின்
வருவாய் காரணமாக இருக்கலாம். ஆகவே, டாக்டர்கள், டிரக் இன்ஸ்பெக்
டர்கள் ஆகியவர்களுக்கும் அக்கறையிருக்க வேண்டும். அப்படிப்பட்ட போலி
மருந்துகளில் அவர்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள் ? அவர்களுக்குக் கேள்வி புரிய வேண்டுமல்லவா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** பொதுவாக மருந்துகள் தரக் குறைவாக
இருந்தால் டாக்டர்கள்தான் தெரிவிக்கிறார்கள். தெரிவிக்கவில்லை என்று
கருதுவதற்கு இடம் இல்லை. தமிழ் நாட்டில் அப்படிப்பட்ட உற்பத்தி பெரும்
பாலும் இல்லை என்றே நான் சொல்ல முடியும். ஒன்றிரண்டு இடங்களில்
தவறு நடைபெற்றுக் கொண்டிருக்கிறதே தவிர, தவறான தொழில் நடக்க
வில்லை. வேறு சில மாநிலங்களோடு தொடர்பு வைத்துக்கொண்டு தவறான
மருந்துகள் வருவதைக் கட்டுப்படுத்தும் அளவுக்குப் பொதுவாக விழிப்
புணர்ச்சி இருக்கிறது.

**திரு. எஸ். வடிவேல் :** குஷ்டம், வெண்குஷ்டம், ஆஸ்த்துமா ஆகியவை
ஆங்கில வைத்திய முறையில் அகலவில்லை. சித்த வைத்திய முறையில்
அவற்றைக் குணப்படுத்த முடியும் என்று மணலி அவர்கள் கூறுகிறார்கள்.
மணலி அவர்களை மருத்துவ மனையில் போட்டு பரிட்சார்த்தமாக சிகிச்சை
கொடுக்கச் சொல்வார்களா ?

[1975 ஏப்ரல் 2

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இந்தக் கேள்வியிலிருந்து எழுந்த கேள்வி அல்ல. தனியாக எழுந்த தொழு நோய்க் கேள்வி. தனிக் கேள்வி கேட்டால் பதில் அளிக்க முடியும்.

**திரு. கா. காளிமுத்து :** இந்தியாவில் உற்பத்தியாகும் மருந்துகளில் தமிழகத்தில் ஓரளவுதான் தயாராகிறது. ஆகவே, தமிழகத்தில் தரமான நல்ல மருந்துகளை உற்பத்தி செய்ய விரிவான திட்டம் இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** விரிவான நோக்கம் இருக்கிறது. விரிவான திட்டமிடவேண்டுமானால் மத்திய அரசிடத்தில் ஒவ்வொன்றுக்கும் அனுமதி வாங்கவேண்டும். இந்த நாட்களிலே மாடர்ன் பார்மாகூடிகல், அலபதி பார்மாகூடிகல் கம்பெனி தொடங்குவது என்றால் சில மூலப் பொருள்கள் வெளிநாட்டுகளிலிருந்து வரவழைக்கப்பட்டாக வேண்டும். பெரிய அளவில் நடத்தப்படும் கம்பெனிகளால்தான் சிக்கனமாக அந்த மருந்துகளைத் தயாரிக்க முடிகிறது. அந்த வகையில் மத்திய அரசின் ஒத்துழைப்பும் ஆதரவும் தேவை.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** அமைச்சர் அவர்கள் வழக்குபற்றிச் சொன்னபோது 1972-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் தொடங்கப்பட்டதாகச் சொன்னார்கள். ஏறத்தாழ 2½ ஆண்டுகள் முடிந்துவிட்டன. இவ்வளவு காலதாமதம் ஆகியும் புலன் விசாரணை முடியவில்லை என்று சொன்னால் குற்றப் பதிவு நோக்கமே கெட்டுப் போய்விடுகிறது. ஏன் இவ்வளவு காலதாமதம் ஆகிறது ? துரிதமாகப் புலன் விசாரணையை முடித்துக் குற்றவாளிகளை நீதி மன்றத்திற்கு அனுப்ப அரசு வகை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** வழக்கு புலன் ஆய்வில் நீடிக்கிறது என்று சொன்னால் குற்றம் தொடருகிறது என்று பொருள் அல்ல. குற்றவாளிகளை கைது செய்துவிட்டார்கள். தொடர்ந்து அவர்கள் அந்தத் தொழிலைச் செய்ய முடியாது. அவர்களை நீதி மன்றத்தில் நிறுத்துகிறபோது குற்றம் செய்ததற்கான ருஜுக்கள், ஆதாரங்கள் அத்தனையும் சேகரித்துக் கொண்டு வரப்பட்டால்தான் தண்டனை கிடைக்கும். இல்லையெனில் தண்டனை கிடைக்காமல் தப்பித்துக்கொள்வார்கள்.

இந்த வழக்கில் புலனாய்வு மேற்கொண்டதில் கேரளம், ஆந்திரப் பிரதேசம், ஆகிய மாநிலங்களில் புலன் விசாரணை நடத்த வேண்டிய அளவிற்கு இது கிளைத்துப் பரவியுள்ளது என காவல் துறை கமிஷனர் தெரிவித்துள்ளார். இந்த மருந்துகள் தயாரிக்கப்படுகின்ற தொழிற்சாலைகள் அமைந்துள்ள இடங்களுக்கு (பம்பாய்க்கும் ரிஷிகேசத்திற்கும்) நேரில் சென்று பார்வையிட



1975 ஏப்ரல் 2]

வேண்டியது அவசியம் என்று உணரப்பட்டதால் இந்த வழக்கு சென்னையிலுள்ள புலனாய்வுத் துறையின் குற்றப் பிரிவுக்கு மாற்றப்பட்டது. ஆனால், இந்த வழக்கில் சதி நடந்துள்ளதாகக் காட்டுவதற்கு எவ்விதத் தடயமும் இல்லை எனவும், இது மத்தியப் புலனாய்வுக் கழகம் புலனாய்வு மேற்கொள்ள வேண்டியது என்றும் சென்னையிலுள்ள குற்றப் புலனாய்வுத் துறையின் டெபுடி இன்ஸ்பெக்டர்-ஜெனரல் தெரிவித்துள்ளார். மேற்சொன்ன வழக்கில் புலனாய்வுப் பணியை மேற்கொள்ள மத்தியப் புலனாய்வுக் கழகம் மறுத்துள்ளதால், இது தொடர்பாகச் சென்னை மாநகருக்கு வெளியே பல்வேறு இடங்களில் தொடர்ந்து புலனாய்வு செய்யும் பொருட்டு மாநகரக் காவல்துறையின் மத்தியக் குற்றப் பிரிவு இவ்வழக்கு விசாரணையை மேற்கொண்டுள்ளது. புலனாய்வு குறித்த இறுதி அறிக்கை இன்னும் வந்து சேரவில்லை.

மூன்று நான்கு மாநிலங்களுக்குப் போய் வரவேண்டியிருக்கிறது. சரியாக நடைபெற்றதா, சூழ்ச்சியாக நடைபெற்றதா, தவறாக நடைபெற்றதா அல்லது ஒருவரிடத்தில் இருந்து ஒருவர் மட்டுமே வாங்கி விற்றார்களா என்ற விவரங்கள் எல்லாம் வழக்குக்குத் தேவை. அதைத் தேடிப் பெறுவதில் காலதாமதம் ஏற்படுகிறது.

## தரங்கம்பாடி-ஆடுதுறை சாலை

* 527 வினா—**திரு. டி. வி. சம்பத் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தரங்கம்பாடி-ஆடுதுறை சாலையை தார்ச்சாலையாக மாற்றும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது வேலை துவங்கும் ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) ஆம்.

(இ) இவ் வேலை தொடங்கப்பட்டுப் படிப்படியாக நடைபெற்று வருகிறது.

**திரு. கு. இராசமாணிக்கம் :** தரங்கம்பாடி-ஆடுதுறை சாலை நீண்டகாலமாகவே மண் சாலையாக இருக்கிறது. இதனால் சாலையின் சில பக்கத்தில் இருக்கும் வழித் தடங்களை வாழைத் தோட்டங்களாக ஆக்கிரமித்து உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த ஆக்கிரமிப்பு அகற்றப்படுமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அதுபற்றித் தகவல் இல்லை. தனியாகக் கேள்வி போட வேண்டும்.

[1975 ஏப்ரல் 2

## சேலம் மாவட்டத்தில் புதிய ஏரிகள்

* 528 வினா—**திரு. மூ. மாரிமுத்து :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

சேலம் மாவட்டம், காமக்காபாளையம், உளிபுரம் ஆகிய இடங்களில் ஏரிகள் கட்டும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** சேலம் மாவட்டம், காமக்காபாளையம் கிராமத்தில் ஏரி கட்டும் திட்டம் ஏதுமில்லை. உளிபுரத்தில் ஏரி அமைப்பதற்கான திட்டம் ஒன்று தல அதிகாரிகளின் ஆய்வில் உள்ளது.

**திரு. மூ. மாரிமுத்து :** காமக்காபாளையம் கிராமத்தில் ஏரி கட்டுகின்ற திட்டத்தை அரசாங்கத்திற்குக் கொடுக்கும்போது போதிய தண்ணீர் வரத்து இல்லை என்று தப்பான புள்ளிவிவரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இப்போது மறு பரிசீலனை செய்ய அரசாங்கம் முயலுமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** காமக்காபாளையம் மஞ்சலி ஆற்றில் அணை கட்டி ஏரிக்குத் தண்ணீர் கொடுக்க வேண்டுமென்றாலும் பாசன வசதிக்குப் போதுமான அளவுக்குத் தண்ணீர் கிடைக்கவில்லை என்று அரசாங்க அதிகாரிகள் பரிசீலித்த பிறகுதான் அரசுக்குத் தகவல் தெரிவித்திருக்கிறார்கள். தண்ணீர் இல்லாத காரணத்தால் திட்டம் கைவிடப்பட்டிருக்கிறது. மறு பரிசீலனைக்கு இடம் இல்லை.

## கூட்டுறவுச் சங்கங்கள் சம்பந்தப்பட்ட குற்றங்கள்

* 529 வினா—**திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் :** மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் கூட்டுறவுச் சங்கங்களில் நடைபெறும் குற்றங்களைக் கண்டுபிடிப்பதற்கென விசேஷ போலீஸ் பிரிவு அமைக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) ஆம்.

(இ) கூட்டுறவுச் சங்கங்களிலும் அது போன்ற நிறுவனங்களிலும் ரூபாய் 5,000-க்கு குறையாமல் நிதிகளைக் கையாடல் செய்திருந்தால் அது சம்பந்தப்பட்ட வணிகக் குற்றங்கள், தொழில் குற்றங்கள்பற்றிச் செவ்விய முறையில் புலனாய்வு செய்வதற்காக 1971 ஆம் ஆண்டில் வணிகக் குற்றப் புலனாய்வுப் பிரிவு ஒன்று அமைக்கப்பட்டது.



1975 ஏப்ரல் 2]

**திரு. த. சோணையா :** இராமநாதபுரம் மாவட்டத்தில் 1967-ம் ஆண்டுக்கு முன்பு கூட்டுறவுச் சங்கங்களில் மோசடி செய்தவர்கள்மீது எத்தனை வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன ? அதிலே தண்டனை பெற்றது யார் யார் ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தனிக் கேள்வி வேண்டும்.

**திரு. என். கிட்டப்பா :** கூட்டுறவுச் சங்கங்களில் நடைபெறும் குற்றங்களைப் பற்றி எவ்வளவு எடுத்துச் சொன்னாலும் உடனடியாகப் பரிசீலிக்கப்படுவதில்லை. யாரிடத்தில் சொல்ல வேண்டும், எப்படிச் சொல்லவேண்டும் என்பதை அறிய இயலுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** பலவிதமான குற்றங்கள் நடைபெறுகின்றன. இலாகாப் பூர்வமான நடவடிக்கை வேண்டுமானால் இலாகாவிடத்தில் சொல்ல வேண்டும். கிரிமினல் குற்றமாக இருக்குமானால் இதற்கென்று அமைக்கப்பட்டிருக்கும் விசேஷப் புலன் ஆய்வுத் துறையிடத்தில் சொன்னால் நடவடிக்கை எடுப்பார்கள்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** சிறப்புத் துறை போலீஸ்காரர்களால், ஏற்படுத்தப்பட்ட நாளில் இருந்து இதுவரை எத்தனை குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன ? எத்தனை பேர் உண்மையாகத் தண்டனை அடைந்திருக்கிறார்கள் ? இந்த அடிப்படையில் அரசாங்கம் பெற்ற அனுபவத்தின் காரணமாக இது சம்பந்தமாக அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** 1971-ம் ஆண்டு வழக்குப் பதிவு செய்யப்பட்டது 261 ; தண்டிக்கப்பட்டவர்கள் 29 ; 1972-ல் வழக்குப் பதிவு செய்யப்பட்டது 335 ; தண்டிக்கப்பட்டவர்கள் 81 ; 1973-ல் வழக்குப் பதிவு செய்யப்பட்டது 300 ; தண்டிக்கப்பட்டவர்கள் 73 பேர் ; 1974-ல் வழக்குப் பதிவு செய்யப்பட்டது 290 ; தண்டிக்கப்பட்டவர்கள் 40 பேர்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கேள்வி நேரத்திலாவது உறுப்பினர்கள் தங்கள் இருக்கையில் இருந்தால் நலமாக இருக்கும்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** ஸ்பெஷல் பிராஞ்ச் போலீஸ் கண்டுபிடிக்கின்ற குற்றங்களில் வழக்குப் பதிவு செய்ய வேண்டுமென்று சொன்னால் அரசாங்கத்தின் அனுமதி பெற வேண்டுமா அல்லது தாங்களாகவே அவர்கள் வழக்குப் பதிவு செய்யலாமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அரசாங்கத்தின் அனுமதி தேவையில்லை.

*திரு. வி. பழனிவேலு :* ஆத்தூர் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் 1969-70-ம் ஆண்டில் நெல் லெவி கொள்முதல் செய்யப்பட்டதில் லட்சக்கணக்கான ரூபாய் மோசடி செய்யப்பட்டிருக்கிறது. அது 1971-72-ல் கண்டுபிடிக்கப்பட்டது. அந்த நடவடிக்கை என்னவாயிற்று ?

*மாண்புமிகு திரு. செ. மாதவன் :* தனியாகக் கேள்வி கேட்க வேண்டும்.

*திரு. செ. அரங்கநாயகம் :* கூட்டுறவு சம்பந்தப்பட்ட வழக்குகளில் நிறைய டாக்குமென்டரி எவிடென்ஸ் இருக்கும் காரணத்தால் ஒரே பப்ளிக் பிராசிக்யூட்டர் இருந்து எல்லா வழக்குகளையும் போட காலதாமதம் ஆகிறது. ஆகவே, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இன்னொரு பப்ளிக் பிராசிக்யூட்டரைப் போட அரசாங்கத்தில் யோசனை இருக்கிறதா ?

*மாண்புமிகு திரு. செ. மாதவன் :* எங்கெங்கு வழக்குகள் அதிகமாக இருக்கின்றனவோ அங்கு ஸ்பெஷல் ஏ.பி.பி. போட ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

THIRU B. VENKATASWAMY : Sir, in most of the cases, some lakhs and lakhs of rupees are being misappropriated and the persons concerned go to other States and live there. They do it want only and intentionally. May I know from the Hon. Minister whether he will take preventive steps to stop this sort of thing?

*மாண்புமிகு திரு. செ. மாதவன் :* வேறு மாநிலத்திற்குப் போனாலும் நாம் விட வேண்டிய அவசியம் இல்லை. அந்த மாநிலக் காவல்துறை உதவியோடு நடவடிக்கை எடுக்க வாய்ப்பு இருக்கிறது. அப்படிப்பட்ட வழக்கு இருந்து கவனத்திற்குக் கொண்டுவரப்படுமானால் நடவடிக்கை எடுக்கப்படும்.

*திரு. ஆர். பொன்னப்ப நாடார் :* சிறப்பு அதிகாரி மாவட்ட போலீஸ் அதிகாரியினுடைய கண்காணிப்பில் இருக்கிறார்களா அல்லது மாவட்ட பதிவாளர் கண்காணிப்பில் இருக்கிறார்களா ? அவர்கள் நேரடித் தொடர்பு யாரோடு கொள்ள வேண்டுமென்று ஏதாவது விதிமுறைகள் இருக்கின்றனவா ?

*மாண்புமிகு திரு. செ. மாதவன் :* மாநிலம் முழுவதற்கும் சேர்ந்து ஒரு எஸ். பி. இருக்கிறார். அவர் இங்கு தலைமைச் செயலகத்தில் செயல்படுகிறார். ஆங்காங்கு, தனிப்பட்ட ஒரு கூட்டுறவுச் சங்கத்தில் தவறு நடந்திருக்குமானால்





சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் டெப்டி ரெஜிஸ்ட்ரார் புகார் கொடுக்கிறார். உடனே இவர்கள் இன்வெஸ்டிகேட் செய்து நடவடிக்கைகள் எடுக்கிறார்கள். பதிவாளரது ஆலோசனையையும் கேட்டுக்கொள்கிறார்.

*திரு. எஸ். வடிவேல் :* லட்சம் ரூபாய்க்கு மேற்பட்டு கையாடல்கள் செய்தவர்கள் எவ்வளவு ? அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா ? குற்றம் செய்தவர்கள் தண்டிக்கப்பட்டிருக்கிறார்களா ? எவ்வளவு வழக்குகள் நடந்துகொண்டிருக்கின்றன ? தண்டிக்கப்பட்ட பேர்கள் எவ்வளவு ?

*மாண்புமிகு திரு. செ. மாதவன் :* விவரங்களைப் பற்றி ஏற்கனவே சொன்னேன். லட்சம் ரூபாய்க்கு மேற்பட்டு என்பதற்கு என்னிடம் விவரம் இல்லை.

*திரு. க. உரோ. எட்மண்ட் :* நெல்லை மாவட்டத்தில் கடையநல்லூர் கூட்டுறவு நெசவாளர் சங்கத்தில் மோசடி ஏற்பட்டு ஏறத்தாழ 43 வழக்குகள் . .

MR. DEPUTY SPEAKER : This does not relate to the particular area. Put a general question.

*திரு. க. உரோ. எட்மண்ட் :* ஏறத்தாழ 43 வழக்குகள் இரண்டாண்டுகளாக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படாமல் நீதிமன்றத்தில் இருக்கின்றன. தனி நீதிமன்றம் ஏற்படுத்தப்பட்டு இலட்சக்கணக்கான ரூபாய் அதற்காகச் செலவழிக்கப்படுகிறது. இந்த வழக்குகளைக் கூடிய விரைவில் நடத்த அரசு முன்வருமா ?

*மாண்புமிகு திரு. செ. மாதவன் :* குற்றப்பத்திரிகை அண்மையில் தாக்கல் செய்யப்பட்டு ஒரு வழக்கு விசாரணை தொடங்கிவிட்டது. இந்த வழக்கைப் பொறுத்தவரையில் ஏராளமான பொருள் நஷ்டம் அரசுக்கு உண்டு என்பதும் உண்மை. இந்த வழக்கில் காலதாமதம் ஏற்பட்டிருப்பதும் உண்மை. இந்த வழக்கு இது 1967-க்கு முன்னால் நடைபெற்றது. இந்த அமைப்பைப் பார்க்கும்போது பல்வேறுவிதமான தவறுகள், பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களில் ஏற்பட்டிருக்கிற வழக்காகும். இது ஒரு கஷ்டமான வழக்கு. ரொம்பக் கஷ்டப்பட்டு ஒரு வழக்குப் போடப்பட்டிருக்கிறது. இதன் முடிவைப் பொறுத்து மற்ற வழக்குகளை மேற்கொண்டு நடத்துவதா என்பதைப்பற்றி அரசாங்கம் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று முடிவு செய்திருக்கிறது.

## *Rice Bran Oil Plant at Sembanarkoil*

* 530 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether there is any proposal to set up a rice bran oil extraction plant at Sembanarkoil in Thanjavur district; and

(*b*) if so, the details of the same?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) இல்லை.

(இ) விஞவிற்கு இடமில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** விஞ எண்கள் 531, 532, 533 அமைச்சர் அவர்கள் வேண்டுகோளுக்கு இணங்கத் தள்ளி வைக்கப் படுகின்றன.

### கும்முடிப்பூண்டியில் வீட்டு மனைகள்.

* 534 விஞ—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்முடிப்பூண்டித் தொகுதியில் 1972 ஆம் ஆண்டுக்கு முன் புறம்போக்கு மனையில் வீடு கட்டியிருந்தும் இன்னும் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படாமல் உள்ளவர்கள் இருக்கிருர்களா?

(இ) ஆம் எனில், விபரம் என்ன?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** (அ) & (இ) செங்கல்பட்டு மாவட்ட வருவாய் அலுவலரின் 11—12—1974 தேதியிட்ட அறிக்கையின்படி கும்மிடிப்பூண்டித் தொகுதியிலுள்ள 81 கிராமங்களிலுள்ளவர்களிடமிருந்து வந்த 2,185 பட்டா மனுக்களில் 1,769 நேர்வுகளில் வீட்டு மனைப் பட்டாக்கள் கொடுக்கப்பட்டுவிட்டன. எஞ்சியுள்ள 416 ஆக்கிரமிப்புகளில் 107 நேர்வு களில், நிலக்கிரயம் வசூலிக்கப்பட வேண்டியிருக்கிறது. 309 நேர்வுகளில் விரைவில் பட்டாக்கள் கொடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

### எண்ணமங்கலம் கிராமத்தில் வீட்டு மனைகள்

* 535 விஞ—திரு. ஈ. எம். நடராசன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், பவானி வட்டம், எண்ணமங்கலம் கிராமத்தில் எத்தனை தியாகிகள் நிலம் பெற்றுள்ளனர்?



(இ) வழங்கப்பட்ட நிலங்கள் அவர்களால் உபயோகப்படுத்தப்படுவது எவ்வாறு கண்காணிக்கப்படுகிறது?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** (அ) கோவை மாவட்டம், பவானி வட்ட எண்ணமங்கலம் கிராமத்தில் நான்கு தியாகிகளுக்கு நிலம் ஒப்படை செய்யப்பட்டிருக்கிறது.

(இ) நிலங்களை ஒப்படை செய்யும்போது அவற்றைப்பற்றி சம்பந்தப் பட்ட 'டி' பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளபடி ஒப்படைதாரர் ஒப்படை செய்யப்பட்ட நிலங்களை மூன்றுண்டுகளுக்குள் விவசாயம் செய்ய வேண்டும். ஆனல் மேற்படி தியாகிகள் நிலங்களைச் சரிவர அனுபவிக்காமலும் சுவாதீனமே எடுத்துக்கொள்ளாமலும், மேலும் ஒருவர் விற்றுவிட்டதால், நிலங்கள் அவர்கள் வசத்தில் இல்லை.

**திரு. ஈ. எம். நடராசன் :** இந்த எண்ணமங்கலம் கிராமத்தில் சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்காக தலைக்கு ஐந்து ஏக்கர் வீதம் நிலம் கொடுக்கப் பட்டிருக்கிறது. அந்தத் தியாகிகள் பலபேர்களை அந்தக் கிராமத்தைச் சேர்ந் தவர்கள் விரட்டிவிட்டு அவர்களே அந்த நிலங்களை ஆக்கிரமித்துக்கொண்டிருக் கிருர்கள். மேலும் பட்டாகூட வாங்கிவிட்டார்கள். இதனுல் பல பிரச்னைகள் வந்தன. கலவரங்கள் வருகின்றன. எனவே அரசு தலையிட்டு மீண்டும் அந்தத் தியாகிகள் உயிரோடிருந்தால் அவர்களுக்கு அல்லது அவர்களின் வாரிசுகளுக்கு அந்த நிலங்களைக் கொடுக்க ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** இந்த நான்கு தியாகிகளில் திரு. ரெங்கசாமி ரெட்டியாருக்கு ஒப்படை செய்யப்பட்ட நிலங்கள் இதுவரை அவரது எந்தவிதமான அனுபவத்திலும் இல்லை. அதை ஏற்கனவே நீண்ட காலமாக சென்னிமலைக் கவுண்டர், ராஜா கவுண்டர், அப்பு கவுண்டர், குருசாமி கவுண்டர், நாச்சிமுத்து இவர்களுக்கு ஒப்படை செய்வதற்கு முன்னுல் அவர்கள் அனுபவத்தில் இருந்து வந்திருக்கிறது. இது மாற்றம் செய்யப்பட்டு அவர்கள் உழவடை செய்து கொண்டு வருகிருர்கள். குருசாமி ரெட்டியாருக்குக் கொடுக்கப்பட்ட நிலங்கள் ஒப்படை செய்யப்பட்ட நாளிலிருந்து இதுவரையில், அவர் அனுபவத்தில் இல்லை. அவர் அதற்காக நடவடிக்கைகளும் எடுக்கவில்லை. ஆகவே அதுவும் ஏற்கனவே நிலத்தில் சாகுபடி செய்து வந்தவர்களுக்கு, ராமலிங்கம், கண்ணுசாமி, குருசாமி ஆகியோருக்கு ஒப்படை செய்யப்பட் டிருக்கிறது. கோவிந்தன் என்ற தியாகிக்கு ஒப்படை செய்யப்பட்ட நிலம் இதுவரை அவரது அனுபவத்தில் வரவில்லை. அவர் இப்போது இல்லை. எனவே, அதை ஏற்கனவே அனுபவித்து வந்த காளி கவுண்டர், குப்புசாமி

ஆகியோருக்கு இப்போது பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. சுப்புசேஷ ஐயர் அனுபவித்து வந்ததை விற்றுவிட்டுப் போய்விட்டார். ஆகவே, அதில் நடவடிக்கை இப்போது தேவை இல்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** அந்தத் தியாகிகளுக்குக் கொடுக்கப்பட்ட நிலங்கள் அவற்றை உழுதுகொண்டிருக்கிறவர்களுக்கு ஒப்படை செய்யப்பட்டதாகத் தெரிவித்தார்கள். இந்தத் தியாகிகளின் வாரிசுகள் யாராவது இதற்கு ஆட்சேபணை தெரிவித்தார்களா ? அப்படி ஏதாவது ஆட்சேபணை தெரிவித்திருந்தால் அவற்றின் மீது அரசாங்கம் ஏதாவது நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** யாரும் அவைபற்றி மனுக்கள் செய்யவில்லை. ஆட்சேபணையும் தெரிவிக்கவில்லை.

### திருக்கடையூர்-தரங்கம்பாடி இணைப்புச்சாலை

*536 வினு—**திரு. டி. வி. சம்பத் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருக்கடையூரிலிருந்து வேப்பஞ்சேரி, தாழம்பேட்டை, மாணிக்கப்பங்கு வழியாக தரங்கம்பாடிக்கு இணைப்புச்சாலை ஒன்று அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், வேலை எப்போது துவங்கும்?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. எஸ். கணேசன் :** இந்த சாலை விஷயம் அந்தப் பகுதியில் இருக்கிற விவசாயப் பெருங்குடி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக இருந்து வருகிறது. எனவே நடப்பாண்டிலாவது சிறப்பு நிதி உதவி செய்து இந்த இணைப்புச் சாலையை திட்டத்தில் சேர்த்து அந்தப் பகுதியில் சாலையை அமைக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** உறுப்பினர் அவர்கள் சொல்வது முழுதும் உண்மை. அது மக்களுக்குப் பயன்படும் சாலைதான். நான்கு மதகுகளும் ஒரு சிறிய பாலமும் கட்டவேண்டியிருக்கிறது. அதற்கு ரூ. 13 லட்சத்திற்கு மேல் செலவாகும் நிலை இருப்பதால் அந்த வேலையை இந்த ஆண்டில் செய்து முடிக்கமுடியாது.



### ஆரணியாற்றின் குறுக்கே தரைப்பாலம்

*537 வினு—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் 22—1—1974 அன்று வினு எண் 80-க்கு அளித்த விடையையொட்டி, தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னேரி வட்டம், ஆரணியாற்றின் குறுக்கே, புதுப்பாளையம் கிராமத்தையும், புதுவாயல்—பெரியபாளையம் நெடுஞ்சாலையையும் இணைக்கும் தரைப்பாலம் கட்டும் வேலை இன்னும் தாமதமாவதேன் ?

(இ) இதை விரைந்து முடிக்க மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** (அ) இவ்வேலைக்கான விரிவான தொழில் நுட்ப ஆய்வு செய்து பிறகு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, பின்பு ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு, ஒப்பந்தப் புள்ளிக்காரருக்கு வேலை ஒப்படைக்க ஆணை பிறப்பிக்கப்பட்டு, அவர் ஒப்பந்தத்தில் 17—2—75-ம் நாள் கையொப்பமிட்டார்.

(இ) இவ்வேலை 1975—76 ஆம் ஆண்டில் எடுத்துச் செயலாக்கப்படும்.

### பெரியபாளையம்-மேல்மளிகைப்பட்டு சாலை

*538 வினு—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

எல்லாபுரம் ஒன்றியத்தில் பெரியபாளையத்திற்கும், மேல்மளிகைப்பட்டுக்கும் இடையே சாலை அமைப்பதற்கான நில ஆர்ஜிதப் பணி எப்போது முடிவடையும்?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** எல்லாபுரம் ஒன்றியத்தில் பெரியபாளையத்திற்கும் மேல்மளிகைப்பட்டுக்கும் இடையே சாலை அமைப்பதற்கான நில உரிமைப்படுத்தல் பணியை விரைவில் முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### *Road works under Vyasarpadi Housing Scheme*

*539 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Labour pleased to state—

(a) whether any irregularities in a contract and execution of road works by the Tamil Nadu State Housing Board, Vyasarpadi Sub-Division, have been detected by the Government recently;

(b) if so, the details thereof; and

(c) the steps taken by the Government in this regard?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** (அ) ஆம்.

(இ) & (உ): வியாசர்பாடியில் வடசென்னை புறநகர் திட்டத்தின்கீழ் சாலை அமைக்க, சம்பந்தப்பட்ட உதவிப் பொறியாளரும், பிரிவு அலுவலரும் ஏற்கனவேயுள்ள ஒப்பந்தத்தின்படி ஒப்பந்ததாரரே அமைக்கவேண்டிய 12 அடி அகலத்திற்குப் பதிலாக 18 அடி அகல சாலையை அமைக்கவும், அதிகப் படியான அகலத்திற்கான பணத்தை வேறு ஒரு ஒப்பந்தக்காரர் மூலம் பெறவும் அனுமதியளித்துள்ளனர் என்பது குற்றச்சாட்டு. இக் குற்றச்சாட்டு புலனாய்வில் இருக்கிறது. சம்பந்தப்பட்ட உதவிப் பொறியாளரும், பிரிவு அலுவலரும் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

### முளப்பாக்கம் வீட்டுவசதித் திட்டம்

* 540 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுப் பணியாளர்களுக்காக மாயூரம் தாலுக்கா முளப்பாக்கத்தில் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டித்தரும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

(இ) அத்திட்டத்தின் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

(உ) எவ்வளவு வீடுகள் கட்டித் தரப்படும்?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** (அ) அரசுப் பணியாளர்களுக்காக மாயூரம் தாலுக்கா முளப்பாக்கம் கிராமத்தின் அருகிலுள்ள மன்னம்பந்தல் என்னுமிடத்தில் வீட்டு வசதி வாரியத்தினால் எடுக்கப்பட்டுள்ள வாடகை குடியிருப்புகள் கட்டும் வேலை கட்டிடத்தளம் வரை வந்துள்ளது.

(இ) ரூ. 12.80 லட்சம்.

(உ) 72 குடியிருப்புகள்.

**திரு. என். கிட்டப்பா :** இந்தக் குடியிருப்புகளை மேலும் அதிகமாக்கித் தர ஏதாவது கோரிக்கை கொடுத்துள்ளார்களா? அதுபற்றிப் பரிசீலனை செய்யப் பட்டுள்ளதா?



**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** இந்த 72 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்ட பிறகுதான் மேற்கொண்டு அவற்றை விரிவாக்கும் திட்டம் பற்றி ஆலோசிக்க முடியும். தற்போது எந்தக் கோரிக்கையும் வரவில்லை.

**திரு. என். மருதாசலம் :** இந்தக் குடியிருப்புகளை மற்ற மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கும் உத்தேசமுண்டா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** எல்லா மாவட்டங்களிலும் கெஸட் பதிவில்லாத அலுவலர்களுக்கு குடியிருப்புகள் நிறைய கட்டிக்கொடுக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(முற்பகல் 10-00)

## 3. அறிவிப்புகள்.

### (அ) பேரவைத் தலைவரை பதவி நீக்கம் செய்யக் கோரும் தீர்மானம்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அடுத்து, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கக்கோரும் தீர்மானம். தீர்மானத்தை நான் பேரவைக்கு படிக்கிறேன்.

"பல காரியங்களில் ஆளும் கட்சியை எப்படியேனும் பாதுகாக்கும் வகையில் உரிமைப் பிரச்சினைகள் தொடர்பாகச் செய்திருக்கும், செய்யத் தவறியிருக்கும் பல்வேறு செயல்களுக்காக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கவேண்டும் என்று இந்த அவை தீர்மானிக்கிறது".

தீர்மானத்தை கொடுத்து இருக்கும் உறுப்பினர்களின் பெயரைப் படிக்கிறேன்.

திருவாளர்கள் கே. டி. கே. தங்கமணி, ஏ. ஆர். மாரிமுத்து, திருமதி சத்தியவாணிமுத்து, திருவாளர்கள் ஆர். பொன்னப்ப நாடார், க. உரொ. எட்மண்ட், பி. வெங்கடசாமி.

விதி 54 (1)-ன் கீழ் இதற்கு பேரவை அனுமதி அளிக்க வேண்டும். அப்படி அனுமதி அளிப்பதற்கு, இதற்கு 35 உறுப்பினர்கள் ஆதரவு இருக்கவேண்டும். இதற்கு அனுமதி அளிக்கலாம் என்று கருதும் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் இருக்கையில் எழுந்து நிற்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[பேரவைத் துணைத் தலைவர்] [1975 ஏப்ரல் 2

கீழ்க்கண்ட உறுப்பினர்கள் தீர்மானத்திற்கு ஆதரவு தெரிவித்து எழுந்து நின்றனர் :—

1. திரு. க. உரொ. எட்மண்ட்
2. திரு. ஆர். பொன்னப்ப நாடார்
3. திருமதி ஜோதி வெங்கடாசலம்
4. திரு. பி. வெங்கடசாமி
5. திரு. கே. டி. கே. தங்கமணி
6. திருமதி சத்தியவாணிமுத்து
7. திரு. முனு ஆதி
8. டாக்டர் எச். வி. ஹாண்டே
9. திரு. ஜே. ஜேம்ஸ்
10. திரு. கு. அ. பொம்மன்
11. திரு. சோ. அழகர்சாமி
12. திரு. அ. சின்னசாமி
13. திரு. சு. ம. துரைராஜ்
14. திரு. பெ. சௌந்தரபாண்டியன்
15. திரு. கே. பி. கோபால்.
16. திரு. ஏ. சுப்பிரமணியம்
17. திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்
18. திரு. எஸ். வடிவேல்
19. திரு. கா. காளிமுத்து
20. திரு. குழ. செல்லையா
21. திரு. எம். சத்தியமூர்த்தி
22. திரு. எம். சுரேந்திரன்
23. திரு. நா. வே. குருசாமி
24. திரு. பெ. சீனிவாசன்
25. திரு. செ. அரங்கநாயகம்
26. திரு. ஏ. பாலையா
27. திரு. கே. என். குமாரசாமி
28. திரு. என். மருதாசலம்



1975 ஏப்ரல் 2] [பேரவைத் துணைத் தலைவர்]

29. திரு. ஆலடி அருணா
30. திரு. என். டென்னிஸ்
31. திரு. கோவை செழியன்
32. திரு. துரை கோவிந்தராசன்
33. திரு. வீ. சா. இளஞ்செழியன்
34. திரு. வீ. கே. இராஜாப்பிள்ளை
35. திரு. ஆண்டி அம்பலம்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தேவையான உறுப்பினர்கள், 35 பேர் எழுந்து நின்றதால், இத்தீர்மானத்தை அவையில் முன்மொழிய அனுமதி அளிக்கப்படுகிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

1. நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

**(ஆ) பேரவைத் தலைவரை பதவி நீக்கம் செய்யக் கோரும் தீர்மானத்தை முன்மொழிய அனுமதி தேவையா என்பதுபற்றியும், 15 சதவிகித உறுப்பினர்கள் அனுமதி அளிக்க ஆதரவு தரவேண்டும் என எந்த அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்பது பற்றியும்**

THIRU K. T. K. TANGAMANI : Before this resolution is taken up, I would like a ruling on this very important point because in respect of removal of the Speaker or removal of the Deputy Speaker Article 179 deals with fourteen days' notice to be given. The Article clearly says that after the lapse of fourteen days the resolution will be taken. Nowhere is it stated that the leave for moving the motion is necessary. I find that in the Lok Sabha also the minimum number of members required for giving leave is 10%, that is, 50 members. Here, it is fixed at 15 per cent and I would also like to know how this 15 per cent is arrived at. If we are following the pattern of the Lok Sabha 10 per cent will be proper.

My first contention is that no leave is necessary. After the lapse of 14 days the resolution matures and it is for the Deputy Speaker or whoever is presiding over the House to take up the motion for consideration. Our rules clearly say that the date will have to be fixed within seven days. All that is required is 14 days' notice and after the end of the 14th day the resolution will be

taken up. The fact that the resolution has been given will be notified to the House and for taking it for consideration a date will be fixed by the Chairman. I would like a ruling on this particular point, whether it is necessary for getting leave of the House for moving the motion and if it is necessary how we arrived at this figure of 15 per cent or 35.

THIRU R. PONNAPPA NADAR: So far as the point raised by the hon. Member Thiru K. T. K. Tangamani is concerned. I think it is a valid Constitutional objection. So far as the fixing of quorum is concerned, it cannot be against the provisions adumbrated in the Constitution and as such, any rules framed under Article 208 of the Constitution will have to be read subject to the conditions imposed in Article 179 of the Constitution and I think this House after the maturity of 14 days can very well take up the motion and I think it will be in order. . . (At this stage there was power failure and the mikes were not working).

THIRU KOVAI CHEZHIYAN: Sir, mikes are not working. .

MR. DEPUTY SPEAKER: I am able to hear him. Let the hon. Member carry on.

THIRU R. PONNAPPA NADAR: Our Rules only say that a limit of 35 persons is needed. It may be argued that the Rules have been framed under Article 208 and that has been followed. Now in this particular case there is no necessity for any quorum so far as the removal of the Speaker or the Deputy Speaker is concerned because the Constitution does not at all specify that such a quorum is needed. So much so the point that has been raised by the hon. Member Thiru K. T. K. Tangamani is a very valid point.

(At this stage the mikes began working.)

We would like to have a ruling from the Chair. The principles that have been followed in the Lok Sabha and in the other Legislatures may be just compared and a considered ruling may be given. This is a valid point which will have to be examined at length because it is a Constitutional issue and I request the Deputy Speaker to be pleased to give a ruling on this point.



**டாக்டர் எச். வி. ஹாண்டே:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, முக்கியமானதொரு ஒழுங்குப் பிரச்னை கிளப்பப்பட்டு இருக்கிறது. இந்த ஒழுங்கு பிரச்னையைப் பொறுத்தவரையில், முறைப்படி இந்தத் தீர்மானத்தை இந்த மன்றத்தில் எழுப்பியிருக்கிறோம். ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானம் சபாநாயகர் பேரிலோ அல்லது துணைச் சபாநாயகர் மீதோ கொண்டு வரப்பட்டால், அதற்கு ஆதரவு தெரிவித்து இத்தனை பேர் எழுந்து நின்றால் போதும், அதை உடனே விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளலாம் என்று நிர்மாண சட்டத்திலேயே போட்டு இருக்கிறார்கள். ஆனால், நம்முடைய விதிகள் எப்படியிருக்கிறது என்றால், அட்மிஷன் பொறுத்தவரையில் இன்று பார்த்துவிட்டு, மீண்டும் பிசினஸ் அட்வைசரி கமிட்டி போட்டு, அதை என்றைக்கு எடுத்துக்கொள்வது என்று முடிவு செய்து—ஒரு வாரத்திற்குள் எடுத்துக்கொள்ளப்படவேண்டும் என்று இருக்கிறது—அதற்குப்பின் அவையில் விவாதிக்கப்படும் என்பது என்ன ஆகும் என்றால், விபரீதமான விளைவுகளை ஏற்படுத்தும். நான்கு-ஐந்து நாட்கள் காலதாமதம் ஆவதால் அந்த சந்தர்ப்பம் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட பயங்கர விளைவுகள் வாராமல் இருப்பதற்காகத்தான் நிர்மாணச் சட்டத்திலேயே போட்டு இருக்கிறார்கள், மிகத் தெளிவாகப் போட்டு இருக்கிறார்கள். ஆனால், இங்கே நிலைமைகள் எப்படி வருகிறது என்றால், மன்றத்தின் உணர்வுகளை புறக்கணித்துவிட்டு 'டிலேயிங் டாக்டிஸ்'—காலதாமதம் செய்வதற்கு அங்கே நம்முடைய ரூல்ஸ் புத்தகத்தில் இல்லாத ரூல்ஸை எடுத்துக்கொண்டு பயன்படுத்துவதற்காக அதிலே ஒரு ஏற்பாட்டை செய்து இருக்கிற நிலைமை இருக்கிறது. அது இல்லாத வகையில் இருக்கவேண்டும்.

அதே நேரத்தில், இன்னும் கூட எதற்காகச் சொல்கிறேன் என்றால், இதைப் பற்றியெல்லாம் முன்பே பிசினெஸ் அட்வைசரி கமிட்டியில் கூடிப் பேசியிருந்தால் நல்லது. அதாவது, இப்படி 35 பேர்கள் எழுந்து நின்றுவிட்டால் உடனடியாக எடுத்துக் கொள்ளலாமா என்று முன்கூட்டியே முடிவு செய்து இருந்தால் நன்றாக இருக்கும். அதேபோல் இப்படி நின்றுவிட்டால், அதற்குப் பிறகு யார் இந்த மன்றத்தில் சபையை தலைமை வகித்து நடத்துவது என்பதைப் பற்றிய பிரச்னை வருவதால், அதையும் தெளிவுபடுத்தவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ப்ரீப்பாகச் சொல்லுங்கள்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** இது ஒரு அமைச்சரவையின் மீது வரும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் போல் அல்ல. இது இந்த மன்றத்தை நடத்திச் செல்லும் தலைவர் மீது வரும் நம்பிக்கையில்லாத் தீர்மானம். அப்படி வருகின்ற

நேரத்தில் இந்த அவையை நடத்திச்செல்கிற தலைவர் யார் என்கிற முடிவு இப்போதே செய்யவேண்டும், இந்த நேரத்தில், இந்தக் கட்டத்தில் செய்ய வேண்டும். இல்லாவிட்டால் இங்கே குழப்பம் வரும். மேலும் எங்களுக்கு சில பாதுகாப்புகள் வேண்டும். அதை நாங்கள் எதிர்பார்க்கிறோம். நாங்கள் பேசும் பேச்சுக்களை எக்ஸ்பஞ்ச் செய்து விடாமல் இருக்கவேண்டுமென்று எதிர்பார்க்கிறோம்.

MR. DEPUTY SPEAKER: That is going beyond your limits. Let me give my ruling.

*டாக்டர் எச். வி. ஹாண்டே:* ஆகவே, அதற்குரிய ரூலிங்கை சரியான வகையில் தாங்கள் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. நா. வீராசாமி:* டிபுடி ஸ்பீக்கர் இருக்கும்போது, இன்னொரு தலைவரை நியமிக்க வேண்டுமென்று எண்ணுவது சரியா ?

MR. DEPUTY SPEAKER: Our Constitution is quite clear as far as possible. Though the Constitution has not provided a procedure, it is prescribed under Article 179 (c) that for the removal of the Speaker 14 days' notice should be given for the moving of the resolution. Under Article 208 the House is given the powers to frame rules for regulating its business. Under the rules framed—Rule 54 (1) we ask for leave of the House and we require at least 35 members for granting leave. That is decided by the Rules Committee. Therefore, if the members want any change in the strength of members to support a notice for granting leave, then it has to be discussed in the Rules Committee and we have to frame a new Rule. As the Rule stands now the requirement of 35 members is according to the rules and there is nothing wrong regarding the taking up of the motion and our rules are quite clear. Rule 54 (2) says:

"If leave of the House is granted discussion on the resolution may follow immediately or the House may fix for its discussion a date not being more than seven days from the day on which leave is granted." If the House is prepared to take it





even now, the Chair is ready to put the motion for consideration Since the leave has been granted for the moving of this motion, I request the hon. Members to move the motion.

*திரு. கே. டி. கே. தங்கமணி:* தலைவரவர்களே, இந்த மோஷனை எடுத்துக் கொள்ளலாமா என்பது சம்பந்தமாக உறுப்பினர்களின் ஆலோசனை தெரிய வேண்டுமென்று ரூல்சில் இருக்கிறது. ஆனால் மற்ற மாநிலங்களிலேயோ அல்லது மத்தியிலேயோ மொத்த உறுப்பினர்களில் 10 சதவீதம் என்று இது பற்றி இருக்க, இங்கு 15 சதவீதம் என்பது

will it not be irregular? will is not be unconstitutional?

நாளைக்கு 15 சதவீதம் என்பதை 50 சதவீதம் என்று வைத்துக் கொள்ளலாம். அப்படி வைத்தால்

will it not be irregular? will it not be unconstitutional?

என்று நான் கேட்டதற்கு தலைவர் கருத்தைத் தெரிவித்தால் நன்றாக இருக்கும்.

MR. DEPUTY SPEAKER: The Rules Committee framed the Rules and the House approved it. Rule 54 (1) has been approved by the House. Therefore, there is nothing wrong. If the hon. Member wants any change, itcan be done afterwards. Now, I ask the hon. Member Thiru Tangamani to move the resolution.

*திரு. பெ. சீனிவாசன்:* தலைவரவர்களே, நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை எதிர்க்கட்சியினர் இங்கே கொண்டு வந்தது, அதை நிறைவேற்றி விட முடியும் என்ற நம்பிக்கையில் அல்ல. இதைக் கொண்டு வந்ததன் நோக்கம் சட்டசபை நடக்கும்போது எதிர்க்கட்சியினருக்கும் நியாயம் கிடைக்குமென்ற அடிப்படையிலே தான். சட்டசபை இன்னும் 10 நாட்களுக்கு நடக்க இருக்கிறது. அதற்குப் பிறகு கூடுமோ என்னமோ தெரியாது. ஆகவே அதற்கு முன்னாலே எடுத்துக் கொண்டால் நன்றாக இருக்கும்.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:* 14 நாள் நோட்டீஸ் வேண்டுமே.

**4. பேரவைத் தலைவரைப் பதவி நீக்கம் செய்யக் கோரும் தீர்மானம்.**

THIRU K. T. K. TANGAMANI: Sir, I move—

'That this House resolves to remove the Hon. Speaker from his office for his various acts of commission and omission in respect of admitting Privilege Motions protecting the Ruling Party at all costs in various matters etc.'

Dr. H. V. HANDE : Sir, I second it.

Mr. DEPUTY SPEAKER : The Motion is taken up for consideration now.

*திரு. கே. டி. கே. தங்கமணி :* உதவி சபாநாயகர் அவர்களே . . .

*திரு. க. உரொ. எட்மண்ட் :* தலைவரவர்களே, நம்முடைய சட்ட மன்ற விதிகள் 54-இன் கீழ் பேரவைத் தலைவர் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வந்து அனுமதி கேட்டதற்குப் பின்னால் உடனடியாக அதன் மீது விவாதம் நடத்தலாம், அல்லது இன்னொரு நாள் குறிப்பிடப்பட்டு இன்னொரு நாளில் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று குறிப்பிடலாம் என்று இருக்கிறது. ஆகவே உடனடியாக எடுக்கப்படவேண்டுமென்று . . .

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :* தலைவரவர்களே, டாக்டர் ஹாண்டே தான் உடனடியாக எடுக்க வேண்டுமென்று சொன்னார்.

*திரு. க. உரொ. எட்மண்ட் :* தலைவரவர்களே, பேரவையினுடைய அனுமதி வேண்டும். அதற்கு 35 பேர் வேண்டும். முதலில் அது இருக்கிறதா இல்லையா என்று பார்த்துக் கொண்டாகவேண்டும். அதற்காகத் தான் நான் பாயிண்ட் ஆஃப் ஆர்டர் எழுப்புகிறேன். ஒரு வேளை இல்லாவிட்டால் என்ன செய்வது? உடனடியாக விவாதத்தை வைத்துக் கொள்ளலாம், அல்லது 7 நாட்களுக்குள் ஒரு நாளைக் குறிப்பிட்டு விவாதத்தை எடுத்துக் கொள்ளலாம் என்று இருக்கிறது. ஆகவே இன்னொரு நாளைக்கு விவாதத்தை எடுத்துக் கொண்டால் நன்றாக இருக்குமென்று நான் சொல்லிக் கொள்கிறேன்.

Mr. DEPUTY SPEAKER : I have already given my ruling The hon. Member, Thiru Tangamani, has started addressing the House. You are questioning my ruling. Under Rule 54 (1) I have been given powers to decide, whether it could be taken up immediately or afterwards. Now, the hon. Member, Thiru Tangamani has initiated the debate.

*திரு. ஆலடி அருணா :* தலைவரவர்களே, மாண்புமிகு அவைத் தலைவர் மீது நம்பிக்கை இல்லை என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்து அவர் மீது குற்றச்சாட்டுகளை, குறைபாடுகளை இந்த அவை சொல்ல இருக்கிறது. இந்த நேரத்தில் நாங்கள் எதைச் சொல்கிறோம், எந்த அடிப்படையில் சொல்கிறோம் என்று தெரிந்து கொள்வதற்கு மாண்புமிகு புலவர் கோவிந்தன் அவர்கள் இங்கே இல்லை. அவர் இங்கே வந்தால் தான் வசதியாக இருக்கும். அவர் வந்தால் தான் தர்க்கம் நடத்துவதற்குச் சரியாக இருக்கும்.



*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* பேரவைத் தலைவர் அவர்கள் வருவார்கள்.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :* தலைவரவர்களே, தாங்கள் இதை உடனடியாக இப்போது எடுத்துக் கொள்ளவேண்டுமென்று சொல்லி, அதற்கிணங்க எடுத்துக் கொண்ட பிறகு, மறுபடியும் இப்போது வேண்டாமென்று சொல்ல என்ன காரணம் என்று புரியவில்லை.

*திரு. க. உரொ. எட்மண்ட் :* தலைவரவர்களே, முதலமைச்சரவர்கள் வார்த்தைகளில் விளையாடி பிரச்சனையை திசை திருப்புவதில் கெட்டிக்காரர். என்னுடைய ஒழுங்குப் பிரச்னை இதை இன்னொரு நாளைக்கு எடுத்துக் கொள்ளலாம் என்பது அதற்குக் காரணம் இந்த நம்பிக்கை இல்லாத தீர்மானத்தின் மீது எத்தனை நாள் விவாதம் நடத்துவது என்பதை அலுவலாய்வுக்குழு முடிவு செய்யவேண்டும்.

The number of days for discussion is not limited in the Rule. We can have it for any number of days.

Mr. DEPUTY SPEAKER : There is no point. You are questioning the ruling of the Chair. The Chair has decided to take up the matter immediately.

Thiru G. R. EDMUND : I am not at all questioning the ruling of the Chair. I only want to know, for how many days you are going to have discussion on this Resolution whether it is for only one day or two days or three days or four days...

Mr. DEPUTY SPEAKER : The Chair has got powers to decide about the time and duration of the discussion. I decide that the discussion should end by 1–30 or 2 p.m. to-day. We will finish it today itself.

*திரு. க. உரொ. எட்மண்ட் :* தலைவரவர்களே, டிஸ்கஷன் எத்தனை நாட்களுக்கு என்று முடிவு பண்ணுவது பிஸினஸ் அட்வைசரி கமிட்டியாகும்.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :* தலைவரவர்களே, தாங்கள் அறிவித்தவாறு விவாதம் ஆரம்பமாகட்டும். பிஸினஸ் அட்வைசரி கமிட்டியில் உட்கார்ந்து எவ்வளவு நேரம் என்று தீர்மானித்துக் கொள்ளலாம்.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* உறுப்பினர்கள் தீர்மானமே வேண்டாமென்று நினைக்கிறார்களா?

1. நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

(இ) பேரவைத் தலைவரைப் பதவி நீக்கம் செய்யக் கோரும் தீர்மானம் விவாதிக்கப்படும் போது அவையை நடத்த ஒரு தலைவரைத் தேர்ந்தெடுப்பது குறித்து.

THIRU J. JAMES: Sir, on a point of order. Rule 54-A says—

'If the provisions of the rules 53 and 54 are not complied with, the House may on a motion made by any member of the Assembly, elect any person to preside over the Assembly to conduct the proceedings of the House under rule 54.'

என்று இருக்கிறது, இதற்காக தலைவர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்;

preside பண்ண வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

we have to do all these things.

MR. DEPUTY SPEAKER: I have to bring to the notice of the House the provisions of Article 180 which says—

"While the office of Speaker is vacant, the duties of the office shall be performed by the Deputy Speaker or, if the office of Deputy Speaker is also vacant, by such member of the Assembly as the Governor may appoint for the purpose.

During the absence of the Speaker from any sitting of the Assembly the Deputy Speaker or, if he is also absent, such person as may be determined by the rules of procedure of the Assembly, or, if no such person is present, such other person as may be determined by the Assembly, shall act as Speaker.'

So, in the absence of the Speaker, the Deputy Speaker presides, and in the absence of the Deputy Speaker, a Member in the Panel of Chairmen presides and this is also in accordance with our Rules. Also according to Article 181, if a Motion against the Speaker is under consideration, the Speaker shall not preside and if the motion against the Deputy Speaker is under consideration, the Deputy Speaker shall not preside. Now the motion is against the Speaker and so the Deputy Speaker presides and there is nothing wrong in it.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, இன்றைக்கு அஜெண்டாவிலே இரண்டு விஷயங்கள் இருக்கின்றன. ஒன்று, இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானம். இன்னொன்று, போலீஸ் மானியத்தின் பேரில் விவாதம், போலீஸ்



ானியத்திற்கு இரண்டு நாட்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இன்றையதினம் ந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின் பேரில் விவாதம் குறைந்தது ½ மணி வரையில் நடைபெறும் என்று அறிவித்தீர்கள். போலீஸ் ானியத்தை, விட்டுப்போயிருப்பதை, என்றைக்கு வைத்துக் கொள்வது ன்பதை தெரிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பிஸினஸ் அட்வைசரி கமிட்டி ன டி முடிவு பண்ணி விடலாம்.

Let us proceed with the discussion.

திரு. முனு ஆதி: தலைவரவர்களே, பேரவைத் தலைவர் மீது பேச இருக்கிறோம். அவரை இங்கே உட்கார வைத்தால் நாங்கள் என்ன பேசுவது? அவர் இங்கே இருக்கக் கூடாது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, திரு. ஆலடி அருணா அவர்கள் பேரவைத் தலைவர் ஏன் வரவில்லை என்று கேட்டார். அவர் வந்து உட்கார்ந்திருக்கிறார். அவர் எப்படி வரலாம் என்று திரு. முனு ஆதி அவர்கள் கேட்கிறார்கள்.

திரு. முனு ஆதி: தலைவரவர்களே, முதலமைச்சரவர்கள் முடிச்சுப்போடப் பார்க்கிறார். தலைவரவர்கள் ஏற்கெனவே எங்களைப் பழி வாங்கிக் கொண்டிருக்கிறார். நாங்கள் கை தூக்கினாலும் கூப்பிடுவதில்லை. இப்போது அவர் மீது நேரடியாக குற்றச்சாட்டுகளைச் சொல்லும்போது அதை வைத்து அவர் எங்களைப் பழி வாங்கினால் . . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, அப்படி பயந்து இருந்தால் இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தையே கொண்டு வராமல் இருந்திருக்கலாம்.

4. பேரவைத் தலைவரைப் பதவி நீக்கம் செய்யக் கோரும் தீர்மானம்—தொடர்ச்சி.

திரு. கே. டி. கே. தங்கமணி: உதவி சபாநாயகர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிந்திருக்கிறேன்.

"That this House resolves to remove the Hon. Speaker from his office for his various acts of commission and omission in respect of admitting privilege motions, protecting the Ruling Party, at all costs in various matters etc."

முதல் முதலாக இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வருவதற்கான உடனடிக் காரணமென்ன என்பதைப் பற்றி நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். ஏனென்ருல் நமது சட்டமன்றத்தில் தான் இந்த 1971-ம் வருடம் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு ஏற்கனவே இரண்டு முறை சபாநாயகர் பேரிலே நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. ஒரு தடவை ஆளும் கட்சியினுலும், இன்னொரு தடவை எதிர்க் கட்சியினுலும் கொண்டு வரப்பட்டது. அதேமாதிரியாகத் தானே உதவி சபாநாயகர் பேரில் ஒரு தடவை எதிர்க் கட்சியாலும், இன்னொரு தடவை ஆளும் கட்சியாலும் கொண்டு வரப்பட்டது. எதிர்க் கட்சியால் கொண்டு வரப்பட்ட தீர்மானங்கள் வெற்றியடைந்திருக்க முடியாது என்று நான் சொல்லலாமலே விளங்கும். ஆளும் கட்சியால் கொண்டு வரப்பட்ட தீர்மானங்கள் இரண்டும், ஒன்று நிறைவேற்றப் பட்டு, இன்னென்று நிறைவேற்றப்படும் என்ற நிலையில் சபாநாயகர் அவர்கள் அன்றைக்கு தன்னுடைய பதவியிலிருந்து நீக்கப்பட்டார். உதவி சபாநாயகர் அவர்களும் நீக்கப்பட்டார்கள்.

இது பொதுவாக ஒரு சட்ட மன்றத்திற்கு ஒரு நல்ல பாரம்பரியத்தை உண்டாக்கியதாக ஆகாது. அதற்கு வழி காட்டியதே ஆளும் கட்சிதான் என்பதை நான் இந்த இடத்தில் சுட்டிக் காட்ட வேண்டும். ஏனென்ருல் சபாநாயகர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்படுவது சர்வ சாதாரணமாக எண்ணக் கூடிய விஷயமல்ல. இப்பொழுது சமீபத்தில் கூட, சபாநாயகர் பேரிலே நாடாளு மன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவதாக நோட்டீஸ் கொடுத்திருந்தார்கள். ஜென்னிங்ஸ் அவர்கள் எழுதுகிருர்கள்,

What is behind the Speaker's Chair

என்று சொல்லி. அது மிகமிக அவசியம். அந்த அவசியத்தை ஒட்டித்தான் பல காரியங்கள், நாம் பிஸினஸ் அட்வைஸரி கமிட்டி என்று வைத்திருக்கிறோம். அதில் விவாதித்து எந்த தீர்மானத்தை எடுப்பது, எடுக்கக் கூடாது என்ற முடிவுகளெல்லாம் ஏற்படுகிறது. அந்தமாதிரியான நடவடிக்கைகள் இது சம்பந்தமாக எதுவும் ஏற்படவில்லை.

இன்றைக்கு காலையில் தான் ஆளும் கட்சியின் சார்பிலே அவர்களுடைய மினிஸ்டர் ஃபார் பார்லிமெண்டரி அபேர்ஸ் என்று சொல்ல விரும்புகிறேன். அவர் கொரடா, அவர் எங்களிடத்தில் வந்தார், அவர் மினிஸ்டர் ஃபார் பார்லிமெண்டரி அபேர்ஸாக இருந்திருப்பாரானுல் நல்லதாக இருந்திருக்கும். அந்த அதிகாரத்தோடு வந்து பேசியிருக்க முடியும். இன்று காலையில்தான்



எங்களிடத்தில் வந்து இந்தமாதிரி ஒரு தீர்மானம் அவசியம் தானு என்று கேட்டார்கள். அவசியம்தானு என்ருல் ஏதாவது குறிப்பிட்ட கட்சியைச் சேர்ந்தவர்கள் தீர்மானம் கொடுத்திருந்தால் உடனடியாக அதைப் பற்றி யோசித்து வாபஸ் வாங்கலாம். இதே மன்றத்தில் உங்கள் பேரில் ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானம் காலையில் கொடுக்கப்பட்டு, மத்தியானம் வாபஸ் வாங்கப்பட்டது. அந்தமாதிரி நிகழ்ச்சி நடந்திருக்கிறது. அது தவறு என்று சொல்லவில்லை. அந்தமாதிரி தீர்மானம் வாபசாகியிருக்கலாம்.

ஆனுல் ஆளும் கட்சியைப் பொறுத்தவரையில் இதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல், இன்றைக்கு காலையில் வந்து தனித்தனியாக வந்து பேசுவது அது உதவிகரமாகயில்லை. ஒரு சில நாள்கழித்து எல்லோரும் உட்கார்ந்து இருந்து பேசக்கூடிய நிலை ஏற்பட்டால், ஏதாவது வழி வகுத்திருக்க முடியும் என்று நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளுகிறேன். ஏனென்ருல் உங்களுக்கு நாங்கள் எந்த அளவுக்கு நியாயமாக இருக்கிறோம் என்பதை வலியுறுத்த வேண்டும் என்பதற்காக இந்த விஷயத்தைச் சொன்னேன்.

அடுத்தாற்போல், இன்றைக்கு ஏற்பட்ட Provocation என்ன? சாதாரணமாக சபாநாயகர் மீது நம்பிக்கையில்லாத தீர்மானம் கொண்டு வந்தால் மொட்டையாக,

We move for the removal of Speaker

என்று சொல்லக் கூடாது. அரசாங்கத்தின்பேரில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவதை,

We have no confidence in the Council of Ministers.

என்று தீர்மானம் கொண்டு வந்து விடலாம். ஆனுல் சபாநாயகர் பேரில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரக் கூடிய நேரத்தில், நாம் இது தவறு என்று ஒன்றிரண்டு காரணங்கள் எடுத்துச் சொல்ல வேண்டும். நாங்கள் ஏற்கனவே அதேமாதிரி சொல்லியிருக்கிறோம்.

இங்கு நாங்கள் கொடுத்திருக்கக்கூடிய காரணம் பிரதானமாக Privilege motion சம்பந்தமாக சபாநாயகர் அனுஷ்டிக்கக் கூடிய முறை என்பதைத்தான் நாங்கள் கோடிட்டு காட்டியிருக்கிறோம். இன்றைக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய ஒரு Provocation என்ன? தங்களுக்கே தெரியும்.

இந்த மன்றத்திலே வறட்சி சம்பந்தமாக பல அறிக்கைகள், மாற்று அறிக்கைகள், எதிர் அறிக்கைகள், சவால்கள் இவைகளெல்லாம் வந்து கொண்டிருக்கின்றன. மக்களை பாதிக்கக் கூடிய மிக முக்கியமான ஒரு பிரச்னையாகும். அப்பேர்ப்பட்ட பிரச்னையைப் பற்றி முதன் முதல் இந்த மன்றத்திலே முதலமைச்சர் அவர்கள், இன்றைக்கு சி. சுப்பிரமணியம் நிதியமைச்சராக இருக்கின்ற வரையிலும், நாங்கள் நிதி கேட்கப்போவதில்லை என்ற கருத்தைச் சொன்னார்கள். அந்தக் கருத்தைச் சொன்ன மறு தினத்தில் தான் இப்படி சபையைக் கட்டுப்படுத்தக் கூடிய முறையிலே ஒரு காரியத்தைச் செய்யலாமா என்று நான் ஒரு Privilege motion கொண்டு வருவதற்கு முயற்சித்தேன். அதை அனுமதிக்காத முறையிலே, அதற்கு மறு நாள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானமாக உருவாக்கினார்கள். இந்த மன்றத்திலே ஏற்கனவே பல நிகழ்ச்சிகளெல்லாம் இருக்கின்றன. அதை நான் குறிப்பிட்டுச் சொன்னேன். முதலமைச்சரிடத்தில் நிதி இருக்கிறது. அதற்கு ஒரு தனி அந்தஸ்து உண்டு. எங்கேயாவது நெருப்பு பிடித்து விட்டால், திடீரென்று யாராவது வேலை இல்லாமல் போய் விட்டால், மில்கள் மூடப்பட்டால், அவர்களுக்கு கொடுப்பதற்கு பிரத்யேகமாக முதலமைச்சருக்கு அதிகாரம் கொடுத்திருக்கக்கூடிய நிதி இருக்கிறது. அந்த நிதி சம்பந்தமாக எதுவும் சாதாரணமாக மன்றத்தில் வர வேண்டிய அவசியமில்லை. ஆனால் வறட்சி சம்பந்தமாக சில அரசியல் நிலைமைகள் ஏற்பட்டு விட்டன. அந்த அரசியல் நிலைமை என்னவென்றால் மத்திய சர்க்காருக்கும், மாநில சர்க்காருக்கும் மோதல். மத்திய சர்க்காருக்கும், மாநிலத்து மக்களுக்கும் அல்ல. மத்திய சர்க்காருக்கும், மாநில சர்க்காருக்கும் மோதல் என்ற நிலைமை ஏற்பட்டு, நாங்கள் வறட்சிக்கு ஒரு புது நிதி அமைக்கப் போகிறோம், என்றார்கள். வறட்சிக்கு நிதி அமைப்பது நான்கு மாதத்திற்கு முன்பே செய்திருந்தால் அதன் நிலைமை வேறு. ஏனென்றால் ஒவ்வொருவரும் அரசியலைப் புரிந்து கொண்டு தான் செய்கிறார்கள். இந்த வறட்சி நிதி தவிர, வேறு வேறு நிதிகள் வந்த பொழுதெல்லாம் எல்லா மக்களும் பங்கெடுத்திருக்கிறார்கள். இது குறிப்பிட்ட நிலையில் வறட்சி நிதி என்று தனியாக தமிழ்நாடு அரசு ஒரு நிதி அமைக்கின்றோம் என்று சொன்னவுடனே, இது சபையைக் கட்டுப்படுத்துவதாக இருக்கிறது. நமக்கு சில முறைகள் இருக்கின்றன. அரசாங்கம் சில சமயத்தில் முடிவெடுத்து, அந்த முடிவை இந்த மன்றத்தில் கொண்டு வந்து, அதை அமுலாக்குவதற்கு பல முறை இருக்கிறது. தீர்மானம் இருக்கிறது, சட்டப்பூர்வமாக வரலாம். அந்த முறைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டு, திடீரென்று ஒரு நிதி அமைப்பது என்ற அறிவிப்பை மட்டும் சொல்லி விட்டு, இந்த அறிவிப்பு சபை பூராவையும் கட்டுப்படுத்துவது என்பது இது ஸ்பெஷலாக நோட்டீஸ் கொடுப்பதாக இருக்காது. வேறு முறையில் சொன்னால் it amounts to contempt of the House





என்ற முறையில் நான் ஒரு Privilege Motion கொடுத்திருந்தேன். இது எப்படி Privilege Motion என்பது சபை விதிகளுக்கு எப்படி உட்பட்டிருக்கிறது என்பதை உங்கள் மத்தியில் நாங்கள் வாதாடினோம். உங்கள் சபாநாயகர் முன் வாதாடினோம். அப்போது அவர்கள் சொன்னார்கள். இதற்கு நான்-பிரையாரிட்டி, கன்சென்ட் கொடுக்கவில்லை. பிரையாரிட்டி, கன்சென்ட் கொடுக்காமல் இருக்கும்போது, இங்கே எழுப்ப முடியாது என்று சொன்னார். பிரிவிலேஜ் என்பது மிக முக்கியமான விஷயம். இன்றைக்கு சபாநாயகரின் அந்தஸ்தை பாதிக்கக் கூடிய காரியங்கள் வந்தால், அதை பிரிவிலேஜ்ஜாக எழுப்புவதற்கு யாருக்கும் அதிகாரமுண்டு. பிரிவிலேஜ் எழுப்பக் கூடிய நேரத்தில், எந்த உறுப்பினர் தவறு பண்ணியிருக்கிறாரோ, அந்த உறுப்பினருக்கு நோட்டீஸ் கொடுப்பார். நம்மைப் பற்றி வெளியில் யாராவது சொன்னால் அப்பொழுது பிரிவிலேஜ் வருகிறது. இங்கே ஒரு உறுப்பினர் தப்பான கருத்துக்களை சொல்வதாகவோ, சபாநாயகரை அவமதிப்பதாக நடவடிக்கை எடுத்தால், அப்பொழுது பிரிவிலேஜ் வருகிறது.

Privilege motion is sacrosancet. It is a very great privilege given to each and every member of the House.

அப்பேர்பட்ட ஒரு முக்கியமான விஷயத்தைப் பொறுத்த வரையில் எல்லா பார்லிமெண்ட்களிலும் திடீரென்று பிரிவிலேஜ் மோஷன் கொண்டு வருகிறேன் என்று சொல்லுவார்கள். சில சமயத்தில் விவாதங்கள் நடைபெறுகின்றபோது ஒரு பிரிவிலேஜ் மோஷன் கிளப்பலாம். அதற்குக் கூட நம் விதிகளில் இடமிருக்கிறது. ஆனால் பொதுவாக பிரிவிலேஜ் என்ற தனி அந்தஸ்து இருக்க வேண்டுமென்ற முறையில் ஏதாவது பிரிவிலேஜ் மோஷன் கொண்டு வருவார்களானால், சபாநாயகர் கையில் சம்பவம் பற்றி கொடுத்து விடுவார்கள்.

It is a notice to the Speaker. It is not a notice given for getting prior consent.

சபாநாயகர் என்ன சொல்லலாம்? இன்றைக்கு ஒரு பிரிவிலேஜ் மோஷன் நோட்டீஸ் வந்திருக்கிறது. அதற்கு பல அமைச்சர்கள், மற்றவர்கள் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது; நாளைக்கு எடுக்கலாம் என்று சொல்லலாம். அப்படி இல்லாமல், நான் கன்சென்ட் கொடுக்க மாட்டேன் என்று சொல்லுவது முறையல்ல. எதிர்க் கட்சியில் இருக்கக் கூடிய மதிப்பிற்குரிய தலைவர்கள், அனுபவமுள்ள தலைவர்கள் கிட்டத்தட்ட முக்கால் மணி நேரம் வாதாடினோம். அதற்குப் பிறகு அவர் தன்னுடைய முடிவில் நின்று, தான் எடுத்த முடிவை மாற்ற மாட்டேன் என்று சொல்வதற்கு அவருக்கு உரிமையுண்டு. ஆனால் இப்பேர்பட்ட உரிமைப் பிரச்னையில் அவர் மறு சிந்தனை செய்வதற்கு

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1975 ஏப்ரல் 2

கண்டிப்பாக வந்திருக்க வேண்டும் என்ற முறையில், உடனடியாக நாங்கள் இதை ஏற்றுக் கொள்ளவில்லை என்ற முறையில் அப்பொழுது நாங்கள் வெளிநடப்பு செய்தோம். அது உங்களுக்குத் தெரியும்.

(முற்பகல் 10-30)

வெளிநடப்பு செய்த பின்னுல் வெளியிலே இருந்த எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து இந்த ஒரு குறிப்பிட்ட பிரச்சனையை மக்கள் மத்தியிலே சொல்ல வேண்டுமென்று முடிவு செய்தோம். எதிர்க்கட்சித் தலைவர்கள் என்று சொல்லும்போது, அதில் அண்ணு திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கிறது ; ஸ்தாபன காங்கிரஸ் இருக்கிறது ; சுதந்திராக் கட்சி இருக்கிறது ; ஆளும் காங்கிரஸ் இருக்கிறது ; கம்யூனிஸ்ட் கட்சி இருக்கிறது ; தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றக் கழகம் இருக்கிறது. இப்படி ஆறு கட்சிகள் ஒன்று சேர்ந்திருக்கின்றன. இந்த ஆறு கட்சிகளும் சேர்ந்துதான் இந்தக் குறிப்பிட்ட பிரச்சனையை மக்கள் மத்தியிலே எடுத்துச் சொல்ல வேண்டும் ; சபைக்கு உரிய அந்தஸ்தைக் கொடுக்க வேண்டுமென்ற முறையில் அந்தத் தீர்மானத்தைக் கொடுத்தோம். இது தாங்கள் அறிந்த விஷயம்தான்.

இதில் வருகிற பிரச்சனை என்ன என்று பார்க்க வேண்டும். பாதிக்கப்பட்டவர் யார் ? ஆளும் கட்சியைச் சேர்ந்த ஒருவர் என்று சொல்லியிருக்கிறோம். அரசாங்கத்தைச் சேர்ந்த ஒரு அமைச்சர் பாதிக்கப்படுகிறார். அப்படியானால் அமைச்சருடைய அறிவிப்பு கேள்விக்குறியாக வருகிறது. அமைச்சருடைய அறிவிப்பின் மூலமாக இந்தச் சபையைக் கட்டுப்படுத்துவது சபையை உயர்த்துவதாக இல்லை ; இந்தச் சபையைத் தாழ்த்துவதாக இருக்கிறது.

அது மட்டுமல்ல. இதற்கு முன்னுல் கூட ஏதாவது ஒரு குறிப்பிட்ட அமைச்சர் பெயரில் உரிமைப் பிரச்சனை வந்துவிட்டால் அதை அனுமதிப்பதில் சபாநாயகர் தயக்கம் காட்டுகிறார். ஏன் தயக்கம் காட்ட வேண்டும்? சபாநாயகராக இருப்பவருக்கு அந்த தயக்கம் கூடாது என்று வலியுறுத்திச் சொல்ல நான கடமைப்பட்டிருக்கிறேன்.

இதற்கு முன்னுல் ஏற்பட்ட ஒரு சம்பவத்தைக் குறிப்பிடுகிறேன். உறுப்பினர் சுப்பு அவர்கள் எழுப்பிய ஒரு பிரச்சனையை வைத்து அன்றைக்கு சபையில் நடந்த சம்பவங்கள்—நடந்த முறைகள் சரியா இல்லையா என்பது ஒரு புறம் இருக்கட்டும்—காரணமாக கோபம் அதிகமாக வந்துவிட்டது. குறிப்பிட்ட ஒரு அமைச்சரைப் பாதிக்கின்ற விஷயம் என்று வந்தவுடன் பல விஷயங்களை 'எக்ஸ்பஞ்ச்' செய்கிறேன் என்று சொல்லிவிட்டார். இது உறுப்பினர்களின்



1975 ஏப்ரல் 2] [திரு. கே. டி. கே. தங்கமணி]

உரிமையைப் பாதிக்கும் செயலாகவும், நேரடியாக அமைச்சர்களைக் காக்கும் செயலாகவும் இருக்கிறது ; இந்த விஷயத்தில் சபாநாயகரின் நடவடிக்கை சரியல்ல என்று அப்போது கூறியிருக்கிறார்கள்.

இந்த இரண்டு உதாரணங்களையும் நான் சொல்லியிருக்கிறேன். மேற்கொண்டு பல உதாரணங்களை எனக்குப் பின்னுல் பேசுகின்ற உறுப்பினர்கள் சொல்வார்கள். சபாநாயகர்பற்றி இன்னென்றையும் குறிப்பிட விரும்புகிறேன்.

சபாநாயகரைப் பொறுத்த வரையில், அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு சபாநாயகர் ஆகிறார். அடுத்த தேர்தலில் போட்டியிடும்போது அவரை எதிர்த்து யாரும் போட்டியிடுவதில்லை என்ற உயர்ந்த நியதி இருந்து வந்தது. அது மட்டுமல்ல.

How can the Speaker be removed? The Speaker can be removed by resignation which he sends to Deputy Speaker or when he retires or retires from the world.

பல வருஷங்கள் சபாநாயகராக இருக்கிறவர் இறப்பு அல்லது இராஜினாமா என்ற நிலை தவிர வெளியேற்றப்படக் கூடாது என்ற கருத்தோட்டம் இருந்த காலம் போய், படிப்படியாக சபாநாயகர்களுடைய தடுமாற்றம் காரணமாக தற்போதைய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

நாடாளுமன்றத்தில் சபாநாயகர் ரிமூவல் பற்றி வரும்போது ஒரு குறிப்பிட்ட விஷயத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அப்படிச் சொல்லும்போது சபாநாயகருக்கு எந்த அளவுக்குப் பாதுகாப்பு இருக்க வேண்டுமென்று விதிகளை எல்லாம் போட்டிருக்கிறார்கள் என்பதை நான் அறிவேன். இந்த நேரத்தில் ஒரு சபாநாயகரைப்பற்றி குறிப்பிட விரும்புகிறேன். இது சுமார் 60, 70 வருஷங்களுக்கு முன்புள்ள ஒரு விஷயம். லவ்சர் ஸ்பீக்கராக இருந்தார். அவர் தேர்ந்தெடுக்கப்பட்டு, மறுபடியும் மக்களிடம் போய் சொல்கிறார்.

More than ten years ago I was unanimously adopted by the House of Commons to preside over the deliberations of Committee as Chairman of the Committee of Ways and Means, and during that period it was my privilege and good fortune to discharge the duties of that office and on June 8, 1905 I was unanimously elected to be the Speaker of the House of Commons, one of the most distinguished and dignified offices open to me by His Majesty's subjects.

இது அந்த சபாநாயகருக்கு எந்த அளவுக்கு அந்தஸ்து இருக்கிறது என்பதை அந்த சபாநாயகருடைய வாயாலே சொல்லியிருக்கிறார் என்பதை மேற்கோளாக காட்டுகிறேன்.

It is one of the most distinguished and dignified offices

அடுத்தாற்போல் சொல்கிறார்.

I trust you will consider my record and qualification to be of such a character as to justify you in continuing to return me as your representative, an honour of which I have been deeply sensible in the past.

அதாவது தான் தேர்ந்தெடுக்கப்பட்டது என்பதும் 'ஆனர்' தான் என்று கேட்கிறார். . . .and for which in the future I will be grateful. The Speaker as you know has no politics and I forbear therefore from entering upon a discussion of any of the current topics of the political opinions he may have addressed or advocated before he donned the wig and gown of the Speakership.

இன்று இருக்கக்கூடிய முக்கிய அரசியல் சம்பவங்களைப்பற்றி எல்லாம் நான் இப்போது சொல்வது சரியல்ல. நான் ஏற்கெனவே ஸ்பீக்கராக இருந்திருக்கிறேன் என்ற பெருமையைத் தவிர வேறு ஒன்றும் சொல்வதற்கில்லை. நீங்கள் என்னைத் தேர்ந்தெடுத்த பின்னால், என்னை சபாநாயகராக தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அதைத் தவிர, அரசியல் பற்றியோ அரசியல் முரண்பாடுகள் பற்றியோ பேச நான் தயாராக இல்லை என்று சொல்லி இருக்கிறார்.

He is regarded as the choice of the whole House.

முதலமைச்சரையோ அல்லது பிரதமரையோ எப்படி தேர்ந்தெடுக்க வேண்டுமென்று அரசியல் நிர்ணய சபையில் விவாதம் நடந்தது. பிரதமரையும் முதலமைச்சரையும் எல்லாக் கட்சிகளையும் சேர்ந்தவர்கள் தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற கருத்து வந்தது. 'எலக்டோரல் காலேஜில்' வைத்து தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற கருத்து வந்தது. அதற்குப் பின்னால் எந்தக் கட்சி மெஜாரிட்டியாக இருக்கிறதோ அந்த மெஜாரிட்டி கட்சியினர் பிரதமரை தேர்ந்தெடுக்க வேண்டுமென்று சொன்ன கருத்தை பிரிட்டிஷ் பார்லிமெண்டில் ஏற்றுக் கொண்டார்கள். பிரதமராக வரக்கூடியவர் அல்லது முதலமைச்சராக வரக் கூடியவர் " He is only a choice of his party என்று இருக்கிறது. இங்கே முதலமைச்சராகவோ பிரதம அமைச்சராகவோ வரக்கூடியவருக்கு அந்தஸ்து குறைவாகத்தான் இருக்கிறது. ஆகையால் சபாநாயகர் The Speaker is appointed as a choice of the whole house என்று இருக்க வேண்டும். அவர் ஆளும் கட்சியாக இருக்கலாம்; அல்லது வேறு எந்தக் கட்சி



யாகவும் இருக்கலாம். ஆனால் சபாநாயகரைப் பொறுத்தவரையில் சபை முழுவதற்கும் பொதுவானர். சபை மொத்தமாகச் சேர்ந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர் என்ற அந்தஸ்து அவருக்கு உண்டு.

He is a choice of the whole House

இந்தக் குறிப்பிட்ட சபாநாயகரைப் பொறுத்தவரையில்

It is said that after his appointment, he never enters a political club.

மேல் நாட்டில் பொலிட்டிக்கல் கிளப் இருக்கிறது; அங்கு போவதில்லை.

He migrates from Carlton. He never enters Carlton. He migrtes from Carlton or the Reform to the Athenalum. So anxious is he to appear absclutely impartial that though in the House of Commons necessarily chosen from one of the great parties of the State, we believe we are accurate in saying that no one of the three most recent occupants of the Chair has ever entered the political club of his party after accepting his high office.

இந்தமாதிரி ஒரு அந்தஸ்து ஸ்பீக்கராக இருப்பவருக்கு கொடுக்கப்பட்டிருக்கும்போது, இப்படி நடந்துகொண்ட முறையைப் பார்த்து ரொம்ப வருத்தப்பட வேண்டியிருக்கிறது. ஆகையால் பிரிவிலேஜ் என்று சொல்லும்போது இதன் பிறகாவது 'பொலிட்டிகல் அவர்ஷன்' ஜாஸ்தியாக காட்டக் கூடாது. அப்படி இருந்தால் அது ஆளும் கட்சிக்கு சாதகமாக இருந்தார் என்ற நிலைதான் வரும். ஆளும் கட்சி மீது சொல்லப்படும் அவதூறுகளை ஆளும் கட்சி மீது சொல்லப்படும் குற்றச்சாட்டுகளை அவர்களுக்கு பாதகம் ஏற்படும் என்று தெரிந்தவுடன் அதைத் தடுக்கின்ற ஒரு திரையாக சபாநாயகர் இருக்கக்கூடாது. அது ரொம்பக் கண்டிக்கத் தக்கது. சபாநாயகர் அப்படி செய்யக்கூடாது.

சட்டத்திற்கு உட்பட்டு, எந்தெந்த முறையிலே அரசாங்கம் தவறு செய்கிறது என்பதை எடுத்துச் சொல்வதற்கு எதிர்க்கட்சிகளுக்கு உரிமை இருக்கிறது. அப்படிச் சொல்லும்போது பெருமளவில் இருக்கிற ஆளும் கட்சிக்கு சாதகமாக சபாநாயகர் நடந்துகொள்ளக் கூடாது. ஆளும் கட்சியினர் எதைச் சொன்னாலும் 'ஆம்' என்று சொல்லக்கூடிய நிலை சபாநாயகருக்கு இருக்குமானால் அது காலை வாரி விட்டுவிடும் என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்று காலைகூட ஒன்றைச் சொல்லியிருக்கிறேன். நேற்றுமுதல் மதுரையில் பஸ் தொழிலாளர்கள் ஸ்டிரைக் செய்கிறார்கள் அதனால் கிட்டத்தட்ட 100 பஸ்கள் ஓடவில்லை. ஆகையால் மதுரை, திருநெல்வேலி, இராம

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1975 ஏப்ரல் 2

நாதபுரம் ஜில்லாக்களுக்கு பஸ் போக்குவரத்து பாதிக்கப்படலாம் என்று ஒரு தீர்மானத்தை இங்கே கொடுக்கிறேன் என்று வைத்துக்கொள்ளுங்கள். அந்தத் தீர்மானத்திற்கு இங்கே பதில் சொல்லலாம். இல்லாவிட்டால்,

Government may not be aware of all facts.

வெளியே நடக்கக்கூடிய எல்லாச் செய்திகளும் ஆளும் கட்சிக்கு அல்லது அரசாங்கத்திற்குத் தெரிந்திருக்க வேண்டுமென்றில்லை. அதை எல்லாம் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர, நன்மைகள் ஏற்பட, எல்லா விஷயங்களையும் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டியது எதிர்க்கட்சிகளுடைய கடமை. அரசியல் காரணத்தாலோ அல்லது மற்ற காரணத்தாலோ அந்த விஷயங்களில் ஏற்படுகிற தவறுகள் தீருவதற்கு அதனால் வழி இருக்கிறது. ஆகவே, அப்படி எதிர்க் கட்சியினர் சொல்லக்கூடிய நேரத்தில்,

Government is apprised of the matter and the Minister concerned will take suitable action.

என்ற ஒரு கருத்தை மட்டும் வைத்துக்கொண்டு, சபாநாயகர் தடுத்து நிறுத்தக் கூடாது.

சபாநாயகர் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வந்ததற்கான இரண்டு காரணங்களை நான் சொன்னேன். மற்றவைகளை எனக்குப் பின்னால் பேசுகிறவர்கள் எடுத்துச் சொல்வார்கள். சபாநாயகர் விரும்பினால் இதுபற்றி பேசலாம்; விரும்பினால் பேசலாம் என்றுதான் அரசியல் சட்டத்தில் இடம் கொடுத்திருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல. இந்தத் தீர்மானம் நிறைவேறுமா, இல்லையா என்பது உங்களுக்குத் தெரியும். இங்கே 234 உறுப்பினர்கள் இருக்கிறார்கள் என்று கருதுகிறேன். பாதிக்குமேல் இந்தத் தீர்மானத்தை ஆதரித்தால்தான் தீர்மானம் நிறைவேறும் என்று அரசியல் சட்டம் சொல்கிறது. மிக முக்கியமான ஒரு கட்டத்தில் நான் இந்தத் தீர்மானத்தைக் கொடுத்து, வலியுறுத்திச் சொல்கிறேன். இந்தச் சபையினுடைய அதிகாரம் காப்பாற்றப்பட வேண்டும்; சபைக்கு அங்கீகாரம் கொடுக்க வேண்டும்; சபையின் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும், அப்படிப் பாதுகாக்கின்ற முறையில் சபாநாயகர் இருக்க வேண்டும். ஆனால் நம்முடைய சபாநாயகர் எப்படி நடந்துகொள்கிறார் என்பது எல்லோருக்கும் தெரியும். ஒரு முறை, இரண்டு முறை அல்ல; பலமுறை ஆளும் கட்சிக்குச் சாதகமாக நடந்துகொண்டிருக்கிறார்; எங்கள் தீர்மானங்களை மறுத்திருக்கிறார் என்பதால் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வரவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று கூறி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.



1975 ஏப்ரல் 2]

டாக்டர் எச். வி. ஹாண்டே: பேரவைத் துணைத் தலைவரவர்களே,

MR. DEPUTY SPEAKER: How long will you take?

DR. H. V. HANDE: About 20 or 25 minutes.

துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு துர்ப்பாக்கியமாக நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கோவிந்தன் அவர்கள்மீது ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்து அதில் பேசவேண்டிய சூழ்நிலையை-துர்ப்பாக்கியமான சூழ்நிலையை புலவர் கோவிந்தன் அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள் என்பதை நான் வருத்தத்துடன் கூற விரும்புகிறேன்.

நம்முடைய சபாநாயகராக இந்த மன்றத்தில் உட்கார்ந்து—நல்ல முறையில் நடுநிலைமை வகித்து—சரியான முறையில் அவையை நடத்திச் செல்ல வேண்டிய ஒருவர் தொடர்ந்து பல தவறுகளைச் செய்து வந்திருக்கக்கூடிய காரணத்தினால் நான் கட்டாயமாக இந்த மன்றத்தில் இந்தமாதிரி நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை இரண்டு முறை கொண்டு வர வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

ஒரு முக்கியமான விஷயத்தை இந்த மன்றத்திற்குச் சொல்வது மிகப் பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். நான் சொல்லப் போகிற கருத்துக்கள் திரு. புலவர் கோவிந்தன் அவர்கள் மனதைப் புண்படத்தான் செய்யப் போகிறது. அவர் மனம் புண்படும்படியாகச் சொல்வதில் எனக்கு ஒன்றும் மகிழ்ச்சி கிடையாது. இந்தமாதிரியாக அவர் பல தவறுகளைச் செய்து வந்திருக்கிறார் என்பதை எடுத்துக் காட்டுவதற்காகத்தான் இதைச் சொல்ல வேண்டியிருக்கிறது.

இந்த மன்றத்திற்கு நன்றாகத் தெரியும். 1971 ஆம் ஆண்டு தேர்தலுக்குப் பிறகு புலவர் கோவிந்தன் இந்த மன்றத்தில் ஒரு சாதாரண உறுப்பினராகத்தான் இருந்தார். 1971 தேர்தலிலே இந்த மன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்த பிறகு உடனே இவர் பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படவில்லை. அதற்குப் பிறகு—இரண்டாண்டுகளுக்குப் பிறகு—ஆளுங்கட்சிக்குப் பல தொல்லைகள் உருவான நேரத்தில்—ஒரு இக்கட்டான நிலைமை உருவான நேரத்தில்—புலவர் கோவிந்தன் சபாநாயகராக அமர்த்தப்பட்டார்கள்.

அன்றையதினம்—1971 ஆம் ஆண்டு மார்ச் 15 ஆம் தேதி—மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முதலமைச்சர் பதவியை ஏற்கக் கூடிய நேரத்தில்—மற்ற எதிர்க்கட்சிக்காரர்கள் வரவில்லை—ஆனால் நான் பார்லிமெண்டரி டெமாக்ரசியைக் காப்பாற்ற வேண்டுமென்ற முறையில்—அவருக்கு வாழ்த்து தெரிவிக்க நான் சென்றிருந்தேன். அப்போது புலவர் கோவிந்தன் அவர்கள் அங்கே வந்திருந்தார்கள். அவரைப் பார்த்தேன். அப்போது கூட அவர்

தாம் மீண்டும் சபாநாயகராக உடனே தேர்ந்தெடுக்கப்படலாம் என்று கருதிக் கொண்டிருந்தார். ஆனால் அவருக்கு உடனே அந்தப் பதவி கிடைக்காத தற்கு மூலகாரணம் நான் என்று சொன்னால் அது மிகையாகாது.

இது 1970 ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஒரு நிகழ்ச்சியின் விளைவு—அப்போது அவர்கள் சபாநாயகராக இருந்தார்கள். இரண்டாண்டு அவர் சபாநாயகராக இருப்பதற்குள் நடந்துகொண்ட முறைபற்றி புலவர் கோவிந்தன் அவர்கள் மீது ஒரு உரிமைப் பிரச்சினை கொண்டுவந்தேன். அப்போது நான் கொண்டு வந்த உரிமைப் பிரச்சினை சாதாரணமான பிரச்சினை அல்ல. நாத்திகம் என்ற பத்திரிகையில்—கொட்டை எழுத்தில்—தெளிவாக—புள்ளிவிவரத்தோடு—புலவர் கோவிந்தன் அவர்கள் தாழ்த்தப்பட்டவர்களுக்காக ஒதுக்கப்பட்ட புறம்போக்கு நிலத்தை தமக்காக எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று எழுதப்பட்டிருந்தது. இது சாதாரணமான குற்றச்சாட்டு கிடையாது. பயங்கரமானதொரு குற்றச்சாட்டு. அந்தப் பத்திரிகையையே எடுத்துக் கொண்டு வந்து புலவர் கோவிந்தனிடம் காட்டினேன். அந்தப் பத்திரிகை என்னிடத்தில் இருக்கிறது. "தி.மு.க. ஆட்சியில் சபாநாயகர் குடும்பத்திற்கு 25 ஏக்கரா புறம்போக்கு நிலம்—29 ஆயிரம் ரூபாய் கடன் உதவி" என்பதாக இதுபற்றி விவரமாக எழுதப்பட்டிருக்கிறது. அப்போது அமைச்சராக இருந்த மாண்புமிகு ஆதித்தன் இலாக்காவைப்பற்றி குறைகூறி எழுதப்பட்டிருக்கிறது. அந்தப் பத்திரிகையையே எடுத்து வந்து காட்டினேன். என்ன ஆயிற்று?

எனக்கு ஒரு கடிதம் எழுதினார்கள். 1½ பக்கத்திற்கு எழுதினார்கள்—இந்த உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வரவேண்டாம் என்று எழுதினார்கள். நான் கேட்கிறேன்—புலவர் கோவிந்தனைப் பார்த்துக் கேட்கிறேன். பாராளு மன்றத்தில் சபாநாயகராக திரு. ஹீக்கம்சிங் இருந்தார். ஒரிசா மாநிலத்தைச் சேர்ந்த த்விவேதி அவர் மீது சாதாரணமாக ஒரு குற்றச்சாட்டைச் சொல்லி விட்டார். தம்முடைய அதிகாரத்தை சபாநாயகர் துஷ்பிரயோகம் செய்திருப்பதாகச் சொல்லிவிட்டார். ஆனால் உடனே பாராளுமன்றத்திலேயே திரு. ஹீக்கம்சிங் என்ன சொன்னார்? "நான் என்னுடைய பதவியை துஷ்பிரயோகம் செய்திருப்பதாகச் சொல்லப்பட்ட இந்தக் குற்றச்சாட்டு நிரூபிக்கப் பட்டால் நான் பதவி விலகத் தயாராய் இருக்கிறேன்" என்று சொல்லி

He called all the Leaders of Opposition Parties and said: 'Examine my records; if there is anything wrong, I am perpared to submit my resignation'.

என்றார். இந்த சர்தார் உக்கம்சிங் மரபு எங்கே? நம்முடைய புலவர் கோவிந்தனுடைய மரபு எங்கே?





நாத்திகம் பத்திரிகையில் கொட்டை எழுத்தில் எழுதப்பட்டு அதைக் கொண்டுவந்தே காட்டிய பிறகு—நான் அவர் மீது கூட உரிமைப் பிரச்சினை கொண்டுவரவில்லை—நான் உரிமைப் பிரச்சினை கொண்டுவந்தது எல்லாம் அந்தப் பத்திரிகை மீதுதான். — —

நாத்திகம் பத்திரிகை ஆசிரியர் இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் பக்கத்தில் இருக்கலாம். ஆனால் அவரே இந்தக் கொடுமையான ஆட்சியை எதிர்த்து சிறையில் எத்தனையோ நாட்கள் இருந்திருக்கிறேன் என்று எழுதியிருக்கிறார்.

But that is beside the point.

நான் சொல்வது எல்லாம் அன்றைக்கு புலவர் கோவிந்தன் அவர்கள் தைரியமாக—துணிச்சலாக I am prepared to face this என்று சொல்லியிருப்பாரேயானால்—அதை நான் சந்திக்கத் தயாராக இருக்கிறேன். அதை உரிமைக் குழுவிற்கு அனுப்பலாம் என்று சொல்லியிருப்பாரேயானால் நான் எப்போதும் புலவர் கோவிந்தனுக்கு மரியாதை செலுத்தியிருப்பேன்.

I would have permanently respected him.

ஆனால் அவர்கள் அன்றைக்கு நான் பேசிய பேச்சுக்கள் அனைத்தையும் சபை நடவடிக்கைக் குறிப்பில் இருந்து நீக்கினார்கள். அது சாதாரணமான வேலை அல்ல.

He expunged the whole thing. He is master of expunctions and Pulavar Govindan expunged a huge chunk, large portions of Parliamentary debates. It is not an ordinary matter.

அப்போதே எனக்கும் அன்றைக்கு சபாநாயகராக இருந்த புலவர் கோவிந்தன் அவர்களுக்கும் வாக்குவாதம் நடைபெற்றிருக்கிறது. அதற்குப் பிறகு என்ன ஆயிற்று?

அவர்களது கட்சிக் கூட்டத்திலேயே, புலவர் கோவிந்தன் மீது பகிரங்கமாக கடுமையான குற்றச்சாட்டை சட்ட மன்றத்திலேயே ஹாண்டே எழுப்பியிருக்கிறார்கள்; அவருக்கு சபாநாயகர் பதவியை மீண்டும் தரக்கூடாது என்று கட்சிக்காரர்களே சொல்லியிருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் இருக்கலாம். ஒருவர் போகலாம்.

Men may come and men may go, but institutions go on for ever.

நாம் அந்த மரபைக் காப்பாற்ற வேண்டும் என்று சொல்கிறேன்.

Caesar's wife must be above suspicion.

அப்படி அவர்களது கட்சியில் உள்ளவர்களே அவருக்கு சபாநாயகர் பதவியைத் தரக்கூடாது என்று சொல்லி—அதன் விளைவாக புலவர் கோவிந்தனுக்கு சபாநாயகர் பதவி கொடுக்கப்படவில்லை.

For two years he could not get the post.

அப்படி ஒரு பயங்கரமான நிலையை தனக்கு அவர்களே ஆக்கிக்கொண்டார்கள். அவர்கள் எவ்வாறு நடுநிலைமையில் இருப்பதற்குப் பதிலாக தலையிடுகிறார்கள் என்பதற்காகச் சொல்கிறேன்.

அடுத்தது என்ன ஆயிற்று? இரண்டாண்டு காலம் வந்தார்கள், போனார்கள். தமக்கு சபாநாயகர் பதவி கொடுக்கப்படவில்லையே என்று உள்ளம் குமுறிக் கொண்டிருந்தார்கள்.

சபாநாயகர் பதவியில் ஒரு இக்கட்டான நிலைமை ஏற்பட்ட பிறகு—கட்சியின் பலம் குறைய ஆரம்பித்த பிறகு—அவருக்கு கொடுக்காவிட்டால் வடாற்காடு மாவட்டத்திற்கே கவலை வரும் என்ற அடிப்படையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இவருக்கு சபாநாயகர் பதவியைக் கொடுத்தார்கள். அதை ஒரு குற்றச்சாட்டாகவே இந்த மன்றத்தில் சொல்கிறேன். அந்த நாளில் இருந்து—கிட்டத்தட்ட ஒரு வருஷம் ஒண்ணரை வருஷம்—ஹாண்டே பேச்சினால் அல்லவா தமக்கு முதலிலேயே சபாநாயகர் பதவி கொடுக்கப்படவில்லை—ஹாண்டே பேசுவதற்கே எந்தவிதமான வாய்ப்பும் கொடுக்கக்கூடாது என்று எனக்கு வாய்ப்பே கொடுப்பதில்லை—இப்போது கொடுக்கிறார்கள்—அன்றைக்கு எனக்கும் அவருக்கும் சைலண்ட் போராட்டமே நடந்துகொண்டிருந்தது. எனக்கு பேசுவதற்கு வாய்ப்பே தரக்கூடாது என்று அப்போது அவர்கள் திட்டமிட்டே செயல்பட்டு வந்தார்கள். ஏன்? என் மேல் இருக்கக்கூடிய காழ்ப்புணர்ச்சியாலே, நான் இப்படி அவர் பதவி வகித்ததற்குக் களங்கம் கற்பித்தேன்; அவருக்குப் பதவி வராமருலிக்கிற நிலைமையை உருவாக்கினனே இந்த ஹாண்டே, ஆகவே, அவனுக்கு எப்படியாவது பேச வாய்ப்பு கொடுக்கக்கூடாது என்று செய்திருக்கிறார்.

நான் இந்த மன்றத்திலே நடத்த ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த மன்றத்திலே, மாண்புமிகு அனந்தநாயகி அவர்களுக்கு ஆபத்தான நிலைமை ஏற்பட்டது என்பதற்காக பிரிவிலேஜ் மோஷன் கொண்டு வந்தோம். நான் என்ன செய்தேன், ½ மணி நேரம் தாமதமாகக் கொடுத்தேன். நான் இங்கே பேசுவதற்கு வாய்ப்பு கேட்டேன். அந்த நோட்டீஸ் கொடுக்காதவர்களுக்கெல்லாம் வாய்ப்பு தந்தார். இங்கே யார் கொடுத்தார்களோ அவர்களுக்கு வாய்ப்பு தந்தால், அதற்கு ஆட்சேபம் சொல்லமாட்டேன்.





மற்றவர்களுக்கு வாய்ப்பு தந்தார்கள். அதற்கும் ஆட்சேபம் சொல்லமாட்டேன். ஆனால், நான் கொடுத்திருக்கிறேனே. அவர் மனசாட்சியைத் திறந்து பேசட்டும். Let him conscientiously speak.

இன்றைய தினம் நான் பேச வேண்டாமென்றுதான் நினைத்தேன். பேசினால் கடுமையாகப் பேசவேண்டும்; ஆகவே பேச வேண்டாமென்று நினைத்தேன். ஆனால், ஏறத்தாழ 3, 4 ஆண்டுகளாக உள்ளத்திலே இருக்கக்கூடிய கருத்துக்களைச் சொல்லவேண்டுமென்றுதான் பேசுகிறேன். சென்ற முறை கூட நான் சொல்லவில்லை. ஆனால், அவற்றையெல்லாம் சொல்லியாக வேண்டும். உண்மை உலகத்திற்குத் தெரிந்தாக வேண்டுமென்றுதான் சொல்கிறேன். அன்று நான் கேட்டேன் பேச வாய்ப்பு வேண்டுமென்று. எவ்வளவு கடுமையாக பதில் அளித்திருக்கிறார் புலவர் கோவிந்தன். 'இது என்ன தபால் ஆபீஸா', என்று ஒரு சபாநாயகர்.

Should the Chair not respect the Members if he wants them to respect him.

நான் இப்பொழுதும் சொல்கிறேன், ஒரு தவறான வார்த்தையை நான் இங்கே பயன்படுத்தியது கிடையாது. பேசுகிற நேரத்திலே வேகம் இருக்கலாம். ஒரே ஒரு முறை ஒரு அமைச்சரைப்பற்றி ஒரு வார்த்தை பேசினேன்.

Immediately I said, " I withdraw it. I am sorry if I have hurt anybody ".

அது மாதிரி என் பழக்கம். " இப்படி நீங்கள் கொண்டு வந்ததை நிராகரிப்பேன், உட்காருங்கள் " என்றார். அதற்குப் பிறகு என்னை வெளியேற்றினார்.

He is a master of expunction and expulsion. இரண்டு வேலைகளைத்தான் அவர் திறமையாகச் செய்கிறார். அப்பொழுது நான் பேசவில்லை. அப்பொழுது கூட, வெளியேற்றுகிறேன் என்று சொன்னவுடனே, என்னுடைய பேப்பர்களையெல்லாம் உடனடியாகக் கலெக்ட் பண்ணிக்கொண்டிருந்தேன். அதற்குள்ளாக, " போகிறாயா, இல்லையா—நான் வெளியேற்றுகிறேன், இங்கேயே இருக்கிறாய் " என்றார். இப்படிப் பேசுகிறார். தனிப்பட்ட நபரின் மீது, மற்றவர்கள் மேலில்லாத காழ்ப்புணர்ச்சியோடு ஏன் புலவர் கோவிந்தன் பேச வேண்டும்? காரணம், அவருடைய பதவிக்கு ஆபத்தாக இருக்கிறேன் என்பதற்காகப் பேசினார். அப்பொழுதுகூட நான் அமைதியாகப் போய்க்கொண்டிருந்தேன். அப்பொழுது கூட, ஹாண்டே பேசிய பேச்சை சபை நடவடிக்கையிலிருந்து நீக்கவேண்டுமென்று உத்தரவிட்டார். நான் கேட்டேன், எதற்காக நீக்க வேண்டும் என்று? அது பத்திரிகையிலே வந்துவிட்டால்? பொதுமக்களுக்குத் தெரிந்துவிட்டால்?

People will understand, what the Speaker is. . சபாநாயகர் அவர்களை நன்றாகப் புரிந்துகொள்வார்கள் என்பதற்காக நீங்கள் உலகத்தைப் பார்த்து, பயந்துகொண்டு, நான் பேசிய பேச்சுக்களை எக்ஸ்பஞ்ச் செய்தீர்கள், என்று சொன்னேன். அதற்காக, ' You are a coward என்று நான் சொன்னேன். நான் சொன்னதுகூட, மைக்கிலே .கிடையாது. நான் போகும்போது சொன்னேன். நான் ஒரு வார்த்தையைப் பயன் படுத்தினேன். I said, "நீங்கள் பொதுமக்களைப் பார்க்க பயப்படுகிறீர்கள்

There is absence of courage. "
இந்த மன்றத்திலே நான் கேட்கிறேன், அவருடைய மனச்சாட்சியைத் திறந்து சொல்லட்டும், மனச்சாட்சியைத் தொட்டுச் சொல்லட்டும். இந்த மன்றத்திலே எந்தெந்த வார்த்தைகள் சபாநாயகர்மீது வீசப்பட்டன. நான் அவற்றைச் சரி என்று சொல்லவில்லை. அதை நான் கடுமையாக எதிர்க்கிறேன். ஆனால், நான் 'கோழைத்தனம்' என்று போகிற நேரத்திலே சொல்கிறேன், அதை எக்ஸ்பஞ்ச் செய்திருக்கலாம். பல பிடிக்காத வார்த்தைகளை எக்ஸ்பஞ்ச் செய்கிறீர்கள். பல பிடிக்காத வார்த்தைகளை இக்நோர் செய்கிறீர்கள். ஆனால், இதை எக்ஸ்பஞ்ச் செய்கிறார். நான் பேசிய பேச்சுக்களை வைத்து, எப்படி யாவது என்னை மாட்டி வைக்க வேண்டுமென்பதற்காக—அங்கிருந்து என்ன சிக்னல் வந்ததோ தெரியவில்லை—இங்கு முக்கியமான ஒருவர் எழுந்தார், அது உரிமைக் குழுவுக்குப் போகிறது என்றார். அந்த அளவுக்கு இங்கே காழ்ப் புணர்ச்சியைக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமை யென்றால் இது சாதாரண விஷயமா?

இரண்டாவது குற்றச்சாட்டு ஒன்று சொன்னேன். இப்படி ஊழல் புகாரிலே ஈடுபட்டிருக்கிறீர்களே, என்றேன். இப்பொழுது என்னவாயிற்றோ, எனக்குக் கவலையில்லை. அன்றையதினம்; 1970-ம் ஆண்டு அவருடைய அறைக்குப் போய் பேசினேன். நீங்கள் நிலம் வாங்கிக் கொண்டீர்களா, இல்லையா, என்றேன். நான் வாங்கிக் கொண்டிருக்கிறேன் என்று சொன்னார். வாங்கிக் கொண்டிருக்கிறேன் என்று சொன்னால், திருப்பிக் கொடுக்கக்கூடாதா என்று கேட்டேன். கடன் வாங்கியிருக்கிறேனே, என்று சொன்னார். நான் யாரோடும் நல்ல வகையிலேதான் பேசியிருக்கிறேன். என்னைக் கொலை செய்ய முயற்சி செய்தவன் வந்தபோது கூட நல்ல வகையிலே பேசியிருக்கிறேன்—மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களுக்கும் தெரியும். நம்முடைய தொகுதியிலே நடந்தது. நான் அதைப்பற்றி இப்பொழுது சொல்லவில்லை. நம்முடைய சபாநாயகர் அன்றையதினம் நான் பணத்தை வாங்கியிருக்கிறேன்
'I have taken a loan from the co-operative society'
நான் எப்படி திருப்பிக்கொடுக்க முடியும்' என்று சொன்னாரா, இல்லையா? என்று இப்பொழுது சொல்லட்டும். இது ஒரு கேவலமான நிலைமை. ஒரு





சபாநாயகர், நம்முடைய அகில இந்தியாவிலே இல்லாத அளவுக்கு இப்படி கேவலமான நிலைமைக்குத் தன்னை ஆக்கிக் கொண்டதன் விளைவாக வந்த நிலைமையென்ன? தினந்தோறும் அந்த நாற்காலியிலே உட்கார்ந்து கொண்டு புலவர் கோவிந்தன் பார்க்கக்கூடியது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர வர்களைத்தான். மாண்புமிகு முதலமைச்சருடைய கடாட்சத்திலே, எல்லைக் குள்ளே இருக்கிறார் புலவர் கோவிந்தன் அவர்கள்.
He has to be constantly in the good books of the Hon. Chief Minister.

மாண்புமிகு முதலமைச்சர் ஒரு இன்டிகேஷன் கொடுத்துவிட்டால் தீர்ப்பு மாறும். இதைப் பேச வேண்டாம், இதைப் பேசட்டும், இந்தக் கேள்வி கேட்கட்டும் என்று சிக்னல் போகிறது. உடனடியாக அதைக் கேட்பார். தாங்கள் இங்கே நடுநிலைமை வகிக்காது, இந்த மன்றத்தினுடைய நிகழ்ச்சியை நடுநிலைமையில் நடத்தும் சக்தியை இழந்துவிட்டீர்கள், இந்த ஊழலிலே அகப் பட்டுக் கொண்டதன் விளைவாக.

நான் உங்களை மிகத் தாழ்மையாகக் கேட்டுக்கொள்கிறேன், எனக்கு இதனால் இலாபம் கிடையாது. நீங்கள் நன்றாகச் சிந்தித்துப் பாருங்கள். நாங்கள் எத்தனை வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறோம். ஒவ்வொரு மானியக் கோரிக்கையும் வருகிற நேரத்திலும் எத்தனை வெட்டுத் தீர்மானங்களை—பல குற்றச்சாட்டுக்களை, அரசாங்கம் செய்துள்ள தவறுகளைச் சுட்டிக்காட்ட என்று கொடுத்திருக்கிறோம். அங்கே ஊழல் நடைபெற்றதைப் பற்றி எடுத்துக்கூற என்று வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறோம். அனுமதி கொடுத்திருக்கிறார் புலவர் கோவிந்தன். நான் சாதாரண வார்த்தையைப் பயன்படுத்தினேன், ஒரு டெஸ்ட் கேஸாக. எத்தனை வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்தாலும் அத்தனைக்கும் காப்பி வைத்திருக்கிறேன். இந்த ஊழல் புகாரைப் பொறுத்த வரை, எஸ்டிமேட்ஸ் கமிட்டி சொல்லியிருக்கிறபடி, சம்பந்தப்பட்ட அத்தனை பேர் மீதும் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். என்று.
'However high he may be' அமைச்சரை
நான் எதற்காகக் கொடுத்திருக்கிறேன்? ஒரு தனிப்பட்ட ஏற்கனவே, மனதிலே வைத்துக்கொண்டு கொடுத்திருக்கிறேன். அதில் ஒரு வார்த்தை எஸ்டிமேட்ஸ் கமிட்டி ரிப்போர்ட்டிலே வந்திருக்கிறது. இவர் அமைச்சருக்குச் கடுமையாகக் கிடையாது. இவர் என்ன செய்தார்? இவர் அமைச்சருக்குச் சாதகமாக, சூசகமாக, தன்னுடைய மாவட்டக்காரர் ஆயிற்றே. எப்படி காப்பாற்ற வேண்டுமோ, அப்படி காப்பாற்ற வேண்டுமே? இல்லையென்றால் தன் மீது பாய்வாரே என்பதற்காக—இரண்டு விஷயத்தை மனதிலே வைத்து, காப்பாற்ற வேண்டும், காப்பாற்றுகிற ஒரு தோற்றத்தையும் கொடுக்கவேண்டும் என்ற
'However high he may be'
என்பதற்காக

தவறில்லாத வார்த்தையை நீக்கியிருக்கிறார். இப்படி தன்னுடைய பதவியை வைத்துக்கொண்டு, துஷ்பிரயோகம் செய்கிறார் என்பதைச் சுட்டிக்காட்டி நான் சொல்கிறேன். That is my charge against Pulavar Govindan.

அது மாத்திரமல்ல, இந்த மன்றத்திலே பல கடமைகளை அவர் செய்யத் தவறிவிட்டார். இங்கே துணை சபாநாயகர் உட்கார்ந்தாலும், பேனல் ஆஃப் சேர்மனிலேயிருக்கிறவர்கள் உட்கார்ந்தாலும், அவர்களுக்கு எடுத்துக் காட்டாகவும், தூண்டுகோலாகவும், உதவிகரமாகவும், அவையை நடத்துகின்ற வகையில் சபாநாயகர் இருக்கவேண்டும். ஒரு பேனல் ஆஃப் சேர்மன் போடுகிறீர்கள். மரியாதையோடு நீங்கள் பேச வேண்டாமா? பேனல் ஆஃப் சேர்மன் பற்றி நாங்கள் யாரிடத்திலே சொல்லமுடியும்? அவர்மீது நம்பிக்கையில்லா தீர்மானம் கொடுக்க முடியாது. புலவர் கோவிந்தனிடம்—சபாநாயகரிடம் தான் சொல்ல முடியும்.

ஆனால், இங்கு என்ன நடந்தது? சபாநாயகர் ரூடாக, நான் கொடுத்த—கேட்ட ஒன்றை எடுத்து, நீக்கி, பேசக்கூடாது என்று சொன்னவுடனே, அந்தக் கேள்வியை அடித்துவிடுகிறார்கள். அதில் வேடிக்கை என்னவென்றால், அடுத்த நாள் அதே கேள்வி வேறு ஒருவரால் கேட்கப்பட்டு அனுமதிக்கப்படுகிறது. இந்த மன்றத்தில் மரியாதையோடு நாங்கள் வாழ முடியாது. அந்த நாற்காலியிலே உட்கார்ந்து கொண்டிருக்கிற ஒரே காரணத்திற்காக, அந்த நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு பதவியைத் துஷ்பிரயோகம் செய்வதினுடைய விளைவுதான் இது. ஊழல் நடைபெற்ற காரணத்தாலே அவர் நடுநிலைமை வகிக்கத் தவறிவிட்டார், அவர் பலவகையிலே ஆளுங்கட்சிக்குச் சாதகமாக இருக்கிறார் என்பது என்னுடைய குற்றச்சாட்டு. ஒரு சம்பவத்தை நான் சொல்கிறேன். இந்த மன்றத்திலேயிருந்து என்னை அன்று வெளியேற்றினார்கள். இந்த மன்றத்திலே என்னுடைய கருத்தைச் சொல்வதற்கு எனக்கு வாய்ப்புக் கிடையாது. திட்டவட்டமாக நான் ஒன்றைச் சொல்லிக்கொள்கிறேன், இந்த மன்றத்தைவிட சுப்ரீம் பாடி வேறு எது இருக்கிறது? தமிழகத்திலே உள்ள நாலரை கோடி மக்கள்தான் சுப்ரீம் பாடி. அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ள மன்றம் தான் இது, நாங்கள் இங்கே பப்ளிக் செர்வன்ட்ஸ், எங்களுக்கு இங்கே பேசுவதற்கு வாய்ப்புக் கிடையாது என்றால் என்ன அர்த்தம்?

(முற்பகல் 11-00)

எனக்கு பதவி பெரிதல்ல, அரசியலைப்பற்றி நான் கவலைப்படவில்லை, எனக்கு ஒன்றுமில்லை, 1942-லேயே இறந்து போகவேண்டியது, ஏதோ எனக்கு 33 வருஷம் போனஸ் கிடைத்த மாதிரி கிடைத்தது, ஆனால் இங்கே எங்கள்



உணர்ச்சிகளை மதிக்காமல் எங்கள் கருத்துக்களைச் சொல்லவிடாமல் தடுத்து நிறுத்திவிட்டார்கள். அதற்குப் பிறகு என்ன நிலைமை? ஊர் ஊராகச் சென்று இவர் செய்யக்கூடிய குற்றத்தை நான் பகிரங்கமாகச் சொல்லவேண்டிய நிலைமை, அப்போது என்ன ஆயிற்று?. இந்த மன்றத்திற்குத் தெரியாத ஒரு ரகசியத்தை நான் சொல்ல விரும்புகிறேன். புலவர் கோவிந்தன்தான் தூண்டினார்கள் என்று நான் கருதுகிறேன். நம்முடைய அமைச்சர் நெடுஞ்செழியன் அவர்கள், லீடர் ஆப் ஹவுஸ், உரிமைப் பிரச்னை கொண்டு வந்தார்கள்.

'I am directed to forward herewith a copy of the notice of privilege, dated 30th January 1974 given by the Hon. the Leader of the House and to request you to state on or before 14th March 1974, whether you wish to say anything.'

I accepted the challenge and I had given the reply. Now I would read only a portion of the reply. It says—

"During the public meeting I explained to the people that the conduct of any Speaker should be distinctly above party politics. The Speaker should not only be neutral but must appear to be so and convince the House and the people outside that he is neutral. It is after all, the people who are masters and therefore I consider them as the highest and supreme body. I also said I was prepared to sacrifice myself if I could impress upon every one concerned, that the office of the Speaker should not be subject to pressures from the Chief Minister and Members of the Cabinet. The Speaker should not be the victim of whimsical prejudices. The entire fabric and structure of democracy rests on the fulcrum of the key-stone of the neutrality of the Speaker. If I have repeatedly failed to achieve success in establishing this axim, I should normally have become desperate and lost faith in the very institution of democracy. But I did not become so. It is nowdays common to find members of Parliament and Legislatures gheroing not only the President and Governors but also the Hon. Speaker in several parts of the country. Why should this happen? It is only because people are slowly losing faith in the mode of democracy as a result of desperation and frustration that the Legislatures have failed to discharge their obligations to the people. I do not want this to happen here. During the public meetings I told my audience that I thought of writing about it, exposing the Hon. Speaker.

Therefore, my submission is that whenever an argument is advanced against the Government, the constant practice of the Hon. Speaker, Pulavar Govindan, is to expunge it and that is being followed by his subordinates under his behest. . . .

MR. DEPUTY SPEAKER : The word 'subordinates' should not be used by the hon. Member because the Deputy Speaker is not subordinate to the Speaker or the Chairman in the panel of Chairmen is not subordinate to the Speaker.

DR. H. V. HANDE : I have no objection to withdraw it. I am glad that the Deputy Speaker has got an opportunity to express his autonomy. I can use the word colleagues. My point is that whenever anything inconvenient to the Government is stated it is expunged by the Hon. Speaker.

உங்கள் தலைவர் இங்கே வரவில்லையா ? என்று கேட்கிறார்கள். ஒன்றரை மணி நேரம்—இந்தச் சபையிலே 90 நிமிடங்கள் எங்கள் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் பேசியிருக்கிறார்கள், நாங்கள் உட்கார்ந்து கொண்டிருந்தோம், அத்தனை பேர்களும் இருந்தார்கள் இங்கே, அவர் அவ்வளவு நேரம் பேசியதற்கு என்ன காட்டினார்கள் ? என்னுடைய குற்றச்சாட்டெல்லாம் சபாநாயகரை கன்ட்ரோல் செய்வது முதலமைச்சருடைய நாற்காலிதான். அதனுடைய விளைவுகள் என்ன ? எம்.ஜி.ஆர். உங்களுக்குப் பிடிக்கவில்லை என்ற காரணத்தினால் ஒன்றரை மணி நேரம் பேசினார், அவர் பேசியதை எல்லாம் இங்கே கன்ட்ரோலிங் ஆபீஸராக உட்கார்ந்திருக்கக்கூடிய நம்முடைய மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் கன்ட்ரோலினால் நீக்கவில்லையா ? நாங்கள் எவ்வளவோ துன்பங்களையும் அவமானங்களையும் பொறுத்துக் கொண்டிருக்கிறோம். நாங்கள் கோபமாகப் பேசியிருக்கலாம், காட்டமாகப் பேசியிருக்கலாம். முதலமைச்சரைப் பொறுத்தவரையில், சபாநாயகரைப் பொறுத்தவரையில் மீண்டும் யார் வருகிறார்கள் என்பது நம்முடைய கையில் இல்லை.

Men may come and men may go. After all, we are going to live for a few days in this planet.

அதுவரையிலும் நம்முடைய கடமைகளை நாணயமாக நாம் கவனித்துக்கொள்ள வேண்டும். எனக்கு மிக மிகச் சங்கடமாக இருக்கிறது அவரைப்பற்றிப் பேசுவதற்கு. இருந்தாலும் ஜனநாயகக் கடமைகளைச் செய்வதற்காக, ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்காகப் பேசியிருக்கிறேன் என்று எடுத்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. செ. கந்தப்பன் :** தலைவர் அவர்களே, முக்கியமான ஒரு பிரச்னையை இங்கே நாம் விவாதித்துக் கொண்டிருக்கிறோம் இந்த விவாதத்தைத் தொடங்கி வைத்த மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கமணி அவர்கள் உரை



யினையும் கேட்டு அதற்குப் பின்னாலே பேசிய நண்பர் டாக்டர் ஹாண்டே அவர்கள் ஆற்றிய உரையினையும் பார்க்கிறபோது ஜனநாயக அமைப்புகளிலே நம்பிக்கையற்றவர்கள் என்று சொன்னாலும்கூட பொதுவுடைமைக் கட்சி என்ற அளவிலே அவர்கள் இருக்கின்ற அந்த அமைப்புகளிலே நம்பிக்கைகொண்டு அமைதியுடன் பேசினார்கள். ஆனால் அந்த நேரத்திலே ஜனநாயகத்தைப் பாதுகாப்பதுதான் நம் முதல் அரசியல் கடமை என்று சொன்ன அண்ணல் ராஜாஜி அவர்களின் வழிவந்த டாக்டர் ஹாண்டே அவர்கள் அந்த அமைப்புக்களையெல்லாம் குழி தோண்டிப் புதைக்கின்ற அளவிற்குப் பேசியிருக்கிறார்கள் என்பதை இங்கேயுள்ளவர்கள் ஒப்பு நோக்கத் தவறமாட்டார்கள் என்று கருதுகிறேன்.

உண்மையிலேயே வெளியிலே இருக்கிறவர்கள் இந்தச் சபையிலே டாக்டர் ஹாண்டே போன்றவர்கள், கோவை செழியன் போன்றவர்கள், எட்மண்ட் போன்றவர்கள், தங்கமணி போன்றவர்கள்தான் உறுப்பினர்களாக இருக்கிறார்கள் என்று கருதிக்கொள்ளக்கூடிய முறையில் ஆளுங்கட்சியிலே இருக்கிற 160 பேர்கள் அவையில் இல்லை என்று நினைக்கக்கூடிய முறையிலேதான் நிலைமை இருக்கிறது. சபாநாயகர் அவர்கள்மீது பேசுவதற்குப் போதுமான வாய்ப்பு இங்கே இல்லை என்ற முறையிலே நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர வேண்டுமென்றால் அதை நாங்கள்தான் செய்யவேண்டுமே தவிர எதிர்க்கட்சித் தலைவர்கள் கொண்டுவருவது நியாயமாக இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

THIRU R. PONNAPPA NADAR : Sir, may I seek one clarification? Is the hon. Member supporting the Resolution or opposing it?

THIRU S. KANDAPPAN : Sir, I am referring to the charge made by the hon. Member, Dr. Hande, that he was not given any opportunity to make remarks and this is quite contrary to facts. Rather, he is monopolising the whole time. That is my point.

நாடாளுமன்றத்திலே, பல்வேறு மாநிலங்களிலே உள்ள சட்ட மன்றங்களிலே எனக்குத் தெரிந்து ஒவ்வொரு கட்சியிலேயும் இருக்கிற உறுப்பினர்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலே நேரம் வழங்கப்படுவதாகத் தெரியவில்லை. நாங்கள் பெரும்பான்மையாக இருக்கலாம், அதன் காரணமாக நாங்கள் சார்ந்திருக்கிற கட்சித் தலைவர் அவர்கள் அமைக்கின்ற அமைச்சரவை பொறுப்பிலே இருக்கலாம், எங்களுடைய தொகுதிக் கருத்துக்களை, உறுப்பினர்களின் கருத்துக்களை இந்த மன்றத்திற்குச் சொல்கின்ற முழு உரிமையை இழந்து நாங்கள் வாய் மூடி மௌனிகளாக இருந்தால் ஜனநாயகக் கடமையாற்றுவதிலிருந்து நாங்கள் தவறியவர்களாவோம்.

ஜனநாயகக் கடமையாற்றுவது உலகெங்கிலும் இருந்து வருகிறது, இந்தியாவிலும் இருந்து வருகிறது.

ஆனால் நம்முடைய சட்ட மன்றத்திலேதான் பெரும்பாலும் எதிர்க்கட்சிகளுக்குத்தான் அதிகமான சலுகைகள் தரப்படுகின்றன, ஒரு பிரச்னை குறித்து எதிர்க்கட்சிகள் மட்டும் அதிகமாக நேரம் எடுத்துக்கொண்டு பேசப்படுகிற மரபு இருக்கிறது, எங்களுக்கு அந்த வாய்ப்பு குறைவாக இருக்கிறது என்று நான் கருதுகிறேன். எங்களுக்கு எதிரான நிலைமைகளைத்தான் நாங்கள் பார்க்கிறோம், இதைப்பற்றிப் பல முறைகள் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். ஆனால் எதிர்க்கட்சிகளைப் பொறுத்தவரையில் அவர்கள் அதிகமான நேரத்தை எடுத்துக்கொண்டு சொல்வது பொருத்தமான கருத்தோ இல்லையோ தெரியாது, அதிகமான நேரம் பேசுவதற்கான வாய்ப்புப் பெற்றிருக்கிறார்கள். எதிர்க்கட்சியிலே உள்ளவர்களுக்கு சபாநாயகர் போதிய வாய்ப்புக் கொடுக்கவில்லை என்று எப்படிச் சொல்லமுடியும் என்று கேட்க விரும்புகிறேன்.

இங்கே நம்முடைய திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் பேசும்பொழுது அவர்களின் பேச்சின் மையக் கருத்தாக உரிமைப் பிரச்னையை வைத்துக் கொண்டு தங்களது வாதத்தைத் தொடங்கினார்கள். அந்த வாதத்தின் தரத்தை நான் பெரிதும் உண்மையிலேயே வரவேற்கிறேன். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் வறட்சி நிவாரண நிதி குறித்து எப்படி இந்த அவையிலே அறிவிக்காமல் வெளியிலே அறிவித்தார்கள், இது இந்தத் தமிழ்நாட்டினுடைய உரிமையைப் பாதிக்கக் கூடியது அல்லவா? அது நியாயம்தானா? இந்த உரிமைப் பிரச்னையை நாம் விவாதிக்க வேண்டுமென்ற நியாயமான பிரச்னையை அனுபவமிக்க சர்வக்கட்சித் தலைவர்கள் உரிமைப் பிரச்னை கொடுத்திருக்கிறோம், அது போதிய அளவிற்கு மதிக்கப்படவில்லை என்பதைத்தான் தன்னுடைய வாதத்தில் அவர்கள் மிகவும் வலியுறுத்திய கருத்தாக நான் கருதுகிறேன். இது அவர்களின் எண்ணம்.

ஆனால் உரிமைப் பிரச்னையில் இது உரிமைப் பிரச்னையா என்று குறைந்த அளவிற்கு பிரைமா ஃபேஸியாவது இருக்கிறதா என்று பார்க்க வேண்டிய சபாநாயகருக்கு அது மாறுபட்ட கருத்தாக இருக்க முடியும், அப்படி இருக்க அவர்கள் விரும்பினால் அந்த உரிமையை அவர்களுக்குக் கண்டிப்பாகத் தந்தாக வேண்டும் என்பது என்னுடைய கருத்து. இந்திய நாட்டின் திட்டக் குழு என்பது காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரையில் இந்த நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கின்ற, இந்த நாட்டின் வளர்ச்சிக்குக் கட்டுப்படுத்தக்கூடிய அல்லது தூண்டிவிடக்கூடிய பெரும் பொறுப்பிலே உள்ள அந்தத் திட்டக் குழு முறைப்படி நாடாளுமன்றத்திலே ஒரு தீர்மானத்தின் மூலம் எந்தவிதமான



அங்கீகாரத்தையும் பெறாமல் அரசியல் சட்டத்திலே எந்தவிதமான அங்கீகாரத்தையும் பெறாமல், நேரு அவர்களின் எண்ணத்தின் பிரதிபலிப்பாக உருவாக்கப்பட்டது. அது சரியா, தவறா என்ற ஆராய்ச்சிக்குப் போக விரும்பாத மற்றக் கட்சித் தலைவர்கள், இந்த நாட்டின் வறட்சிக்கு உடனடியாக நிவாரணம் காண வேண்டிய முதலமைச்சர் இந்தப் பிரச்னையின் உடனடித் தன்மையைக் கருதிச் செய்த செயலை எப்படி உரிமைப் பிரச்னையாகக் கொண்டு வரமுடியும் என்று தெரியவில்லை.

ஆகவே, அந்தக் கருத்தில் அது நிராகரிக்கப்பட முடியும், நிராகரிக்கப்பட வேண்டும் என்று சபாநாயகர் வரும்பொழுது அந்த முடிவோடு அவர்கள் மாறுபடலாம். ஆனால் அதற்காக சபாநாயகர் முதலமைச்சரின் பைக்குள்ளே இருக்கிறார் என்ற அளவிற்கு இந்தப் பிரச்னையைக் கொண்டு போவது நிச்சயமாக இந்த அமைப்பைப் பலகீனப்படுத்துவதாகாதா என்பதை மாற்றுக் கட்சித் தலைவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மெஜாரிட்டி சார்பில் அமைச்சரவை அமைகிறது. அந்த அமைச்சரவையில் முதல்வராக இருப்பவர் மெஜாரிட்டியின் சின்னமாக இருக்கிறார். அப்படிப்பட்ட மெஜாரிட்டி ஒரேயடியாக நசுக்கப்பட்டு மைனாரிட்டியினருக்கு உரிமை தரவேண்டுமென்ற நிலைமை வந்தால் ஒழிய இன்றைக்கு அமைச்சர்களின் அல்லது முதலமைச்சரின் பின்னால் சபாநாயகர் போகிறார் என்ற குற்றச்சாட்டுகளைக் கூறுவது கொஞ்சமும் பொருந்துவதாக இல்லை. யாரும் நிச்சயமாக எந்தச் சபாநாயகரும் மைனாரிட்டிக்கு முழுமையான ஆதரவு தர வேண்டும், நியாயமாக இருந்தாலும் பரவாயில்லை, மெஜாரிட்டி புறக்கணிக்கப்பட வேண்டுமென்று மாற்றுக் கட்சித் தலைவர்கள் சொல்ல மாட்டார்கள் என்று கருதுகிறேன். ஆகவே, மெஜாரிட்டிக்கு நியாயமான உரிமைகளைத் தரும்பொழுது உங்களுக்கு அது நியாயம் என்ற எண்ணம் ஏற்பட வேண்டுமேயொழிய, ஏதோ மெஜாரிட்டியோடு ஒட்ட நினைக்கிறார்கள் அல்லது மெஜாரிட்டிக்குத் தலைமை தாங்கும் முதலமைச்சரின் பின்னால் ஒட்ட நினைக்கிறார்கள் என்ற எண்ணம் ஏற்படுவது அவ்வளவு சரியானதாகாது என்று எண்ணுகிறேன்.

இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசும்பொழுது மிகக் கடுமையான குற்றச்சாட்டுகளையெல்லாம் கூறினார்கள். எனக்கு உண்மையிலேயே அது சட்ட வரம்பிற்குள் சரியா என்ற சந்தேகம்கூட வருகிறது. இருந்தாலும் அவ்வாறு எழுப்பப்பட்ட நிலைமை ஏற்பட்ட காரணத்தால் சொல்கிறேன், அவர்கள் பேசும்பொழுது கடந்த காலத்திலே சில உரிமைக் குரல்களை வலுவாக எழுப்பிய நேரத்தில் அந்தக் குரல் அடக்கப்பட்டது என்று சொன்னார்கள். இந்த நிலைமையைச் சுட்டிக்

காட்டும்பொழுது ஆளுங்கட்சி உறுப்பினர்கள் இதைக் கூடப் பொறுத்துக் கொள்ளவில்லையே என்ற மனநிலைக்கு அவர்கள் ஆளாகக்கூடும்; ஆத்திரப்படக் கூடும் என்பதால் அதை நான் எழுப்ப விரும்பவில்லை. அவர்கள் இன்னும் கொஞ்சம் நாகரிகமாக அவர்களது வாதத்தை வைத்திருக்க முடியும். அந்த நாகரிகத்தை, நிதானத்தை அவர்களால் கடைப்பிடிக்க முடியவில்லை என்று சொல்லும்பொழுது, நிச்சயமாக எப்படிப்பட்ட நிதானத்தின் அடிப்படையிலே நின்று ஒரு முடிவிற்கு வந்து, சபாநாயகர்மீது ஒரு தீர்ப்பை வழங்க எந்த அளவிற்கு தகுதியுடையவர்கள் ஆகிறார்கள் என்பதை இந்த மன்றம் தான் தீர்மானிக்க வேண்டும். அவர்கள் மனத்தைப் புண்படுத்தும் நோக்கத்தோடு நான் சொல்லவில்லை.

நான் பல ஆண்டுக்காலம் சட்டமன்றத்தில் பல்வேறு கட்சிகளிலேயும் இருந்து பார்த்துவிட்டு, தங்களுக்கு ஒரு வாய்ப்பு கிடைக்காவிட்டாலும், குறைந்தபட்சம் புலவர் கோவிந்தனுக்கு இருந்த வாய்ப்பை நான் தடுத்து விட்டேன் என்று ஹாண்டே அவர்கள் பெருமைப்படுகிறார்கள். பெருமைப் பட்டுக்கொள்கிறார்கள் என்று தெரிகிறது. ஆனால் அவர்கள் புலவர் கோவிந்தனுக்கிருந்த வாய்ப்பை தடுக்கவில்லை. இந்த இயக்கம் பார்த்து அல்லது இயக்கத்தின் தலைமை பார்த்து யார் யாருக்கு இந்தந்த நிலைமையிலே இந்தந்தப் பொறுப்பைத்தர வேண்டுமென்று தீர்மானிக்கிறதே தவிர ஹாண்டே அவர்கள் என்ன கருதுகிறார்கள் என்று தெரிந்துகொண்டு எங்கள் முதலமைச்சரோ அல்லது இயக்கத்தின் தலைமையோ தீர்மானிப்பதில்லை. எனவே, இப்படி ஒரு கட்சியின் உள்கட்சி விவகாரத்தைக்கூட இதில் இழுத்திருக்க வேண்டிய அவசியமில்லை என்று நான் கருதுகிறேன்.

இங்கே இந்தப் பிரச்னையைப் பொறுத்தவரையில் நிச்சயமாக இன்றைக் குள்ள சூழ்நிலையில் இந்த விவாதத்தை ஆரம்பித்ததே கொஞ்சம் தடுமாற்றத் தோடு ஆரம்பிக்கப்பட்டது. சபையிலே உடனடியாக இதைக் கொண்டுவர வேண்டுமென்ற கோரிக்கை எழுந்து, அந்தக் கோரிக்கையை எழுப்பிய அதே கட்சியைச் சேர்ந்தவர்கள் கொஞ்சம் இதைத் தள்ளி வைத்துக்கொண்டால் என்ன என்று கேட்டார்கள். சபாநாயகர் ஏன் சபையில் இல்லை என்று கேட்ட அதே கட்சியைச் சேர்ந்தவர்களே இதில் ஏன் சபாநாயகர் வந்து உட்கார்ந் திருக்கிறார் என்ற பிரச்னையை எழுப்பினார்கள். ஆக இப்படித் தடுமாற்றத் தோடு தொடங்கப்பட்ட இந்த விவாதம் அதிகமாகத் தடம் மாறிவிடாமல் உண்மையிலேயே இந்தப் பிரச்னையில் எந்த அளவிற்கு இந்தச் சபையைக் கட்டுப்படுத்திச் செயல்படுத்த முடியுமோ அதை நம்முடைய . . .





திரு. ஆலடி அருணா: தலைவரவர்களே, திரு. கந்தப்பன் அவர்கள் இந்த விவாதத்தைத் தொடங்கும்பொழுது தடுமாற்றம் இருந்ததாகக் கூறுகிறார்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எந்தவிதமான தடுமாற்றமும் இல்லை, மாற்றமும் இல்லை, விவாதத்தை முறையாக, ஒழுங்காக, தெளிவாக நடத்த எங்கள் கருத்துக்கள் துணைபுரிய வேண்டுமென்ற அடிப்படையிலே சொன்னோமே தவிர தடுமாற்றம் இல்லை.

திரு. கோவை செழியன்: தலைவரவர்களே, ஒரு கட்சியிலேயிருக்கும் உறுப் பினர்கள் சில நேரங்களில் சில கருத்துக்களைச் சொல்வது இயற்கை. உங்கள் வரிசையிலேயே அமைச்சர்களுக்கும், அங்கத்தினர்களுக்கும் லாவணிக் கச்சேரி போல் பல நேரங்களில் நடந்திருக்கிறது. ஆகவே, இதைப் பெரிதுபடுத்துவ தாக இருந்தால் அதைப்போல் எங்களுக்கும் சொல்ல முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. கந்தப்பன்: தலைவரவர்களே, அவர்கள் சொல்கிற பதத்துக்கு எனக்குப் பொருள் விளங்கவில்லை. அவர்கள், எங்களுக்குள்ளேயே மாறுபாடு இருக்கிறது என்ற எண்ணத்தில் பேசியிருந்தால், ஆரோக்கியமான ஜனநாயக மரபுக்கேற்ப அப்படி இருப்பது பாவம் அல்ல. இன்றைக்குப் பல்வேறு சட்ட மன்றங்களிலேயும், நாடாளுமன்றத்திலேயும் நடக்கும் நடைமுறைதான் அது. இன்றைக்கு நீங்கள் இந்தப் பக்கத்தில் இல்லாமல் இருக்கலாம், ஆனால் ஒரு காலத்தில் இந்தப் பக்கத்திற்கு வர ஆசைப்படுகிறீர்கள், அது இயற்கை. அங்கேயிருக்கும்பொழுதே எவ்வளவோ மாறுபாடுகள் இருக்கின்றன, நாளைக்கு இந்த இடத்திற்கு வந்தால் அந்த மாறுபாடுகள் பெருகுமே தவிர ஒன்றும் குறைந்துவிடப் போவதில்லை.

திரு. பெ. சீனிவாசன்: தலைவரவர்களே, கொள்கை மாறுபாடு இருந்தால் பெரிதாகச் சொல்லலாம். சில அபிப்பிராயங்கள், சில ஒபினியன்கள், சில டேஸ்டுகளை ஏதோ கொள்கைப் பிரச்னை மாதிரி இவர் ஒன்று சொன்னார், அவர் ஒன்று சொன்னார் என்று பெரிதுபடுத்திப் பேசுவது அவ்வளவு பொருத்தமாக இல்லை.

திரு. செ. கந்தப்பன்: தலைவரவர்களே, எடுத்துக்கொண்ட பிரச்னையை விட்டு வேறு திசையில் செல்ல விரும்பவில்லை. பொதுவாக இன்றைக்குள்ள சூழ்நிலையில் இந்தச் சட்டமன்றத்தைப் புலவர் அவர்கள் நடத்திச் செல்லும் பாங்கு எல்லாத் தரப்பாலும் வியந்து போற்றிப் பாராட்டப்பட வேண்டிய ஒன்று என்று நான் மனப்பூர்வமாக கருதுகிறேன். ஏதோ பழைய செய்திகளை யெல்லாம் இழுத்து, முடிந்த கதைகளுக்கு மீண்டும் உயிர் கொடுத்து, புதைக்கப்

பட்டவற்றை மீண்டும் எடுத்து அந்த ஸ்கெலிட்டன் எப்படியிருக்கும் என்ற ஆராய்ச்சியிலே இறங்குவது சிறப்பான மரபாக அமையும் என்று நான் கருதவில்லை.

இன்றைக்கு தில்லானைப்பற்றி அல்லது அவருக்கு முன்பிருந்த சபாநாயகர்களைப்பற்றி அல்லது மற்ற இடங்களில் உள்ள சபாநாயகர்களை 'கேரோ' கூட நடத்தக்கூடிய நிலைமை வந்தது மாதிரி தமிழ்நாட்டிலேயும் வர வேண்டுமா? என்ற அந்த உணர்வே நம்முடைய நாட்டிலே தவிர்க்கப்பட வேண்டும். இன்றைக்கு வருகின்ற நிலைமைகள் நாட்டிலே இருக்கின்ற பிரச்னைகளை வைத்துத்தான் வருகின்றன. நாட்டிலே பிரச்னைகள் சூடாக இருக்கும்பொழுது ஒவ்வொருவரும் அதைப் பிரதிபலிக்கக்கூடிய நிலையில்தான் இருப்பார்கள். அப்பொழுது சட்டமன்ற உறுப்பினர்கள் உணர்ச்சிப் பிழம்பாக மாறலாம். அப்படி அவர்கள் உணர்ச்சிப் பிழம்பாக மாறியிருக்கும்பொழுது அவர்களைக் கட்டுப்படுத்தும் பொறுப்பு சபாநாயகருக்குத்தான் இருக்கிறது. நான் நினைத்துப் பார்க்கிறேன், 1965-ஆம் ஆண்டில் நான் டெல்லியில் நாடாளு மன்றத்தில் இருந்தபொழுது, தமிழ்நாட்டிலே துப்பாக்கிச் சூடு நடைபெற்றது. என்னுடைய திருச்செங்கோடு தொகுதியிலே 4 பேர் துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியாகி இறந்து போனார்கள். அந்தத் துப்பாக்கிச் சூட்டைப்பற்றி அறிந்தபொழுது நான் நாடாளுமன்றத்தில் நிதானமாக இல்லை. கூடுமான வரையில் நிதானத்தோடு பழகக்கூடிய நானே அப்பொழுது நிதானம் இழந்து காணப்பட்டேன். அப்பொழுது பிரதம அமைச்சராக திரு. லால் பகதூர் சாஸ்திரி அவர்கள் இருந்தார்கள். அவர்கள், கனம் உறுப்பினரவர்கள் ஏதோ ஊர்வலத்திற்குத் தலைமை தாங்குவதைப்போல் நடந்துகொள்ள வேண்டாம் என்று குறிப்பிட்டார்கள். அதை இன்றைக்கு நினைத்தாலும் எனக்கு வேதனையாக இருக்கிறது. ஆனால் என்னுடைய மனநிலை, என்னுடைய தொகுதியில் நான்கு தமிழர்கள் இரத்தம் சிந்தி இறந்திருக்கிறார்கள் என்று அதை நினைக்கும்பொழுது பரபரப்பு அடையும் நிலைமை இருக்கிறது. அந்த நேரத்தில் நம்முடைய உரிமை தடுக்கப்படுகிறபோது சபாநாயகர் நியாயத்திற்குப் புறம்பாக நடந்து கொண்டார் என்று நான்கூடக் கருதினேன். இப்போது நினைத்துப் பார்க்கும்போது சபாநாயகர் நியாயமாகத்தான் நடந்து கொண்டார் என்று உணருகிறேன். 500 பேருக்கு 500 பிரச்சினைகள், 500 உணர்ச்சிப் பிழம்புகள் கிளம்பும். அஸ்ஸாமிலே உள்ள ஒரு பிரச்சினை, வங்காளத்திலே உள்ள ஒரு பிரச்சினை, அதை எல்லாம் எப்படிக் கட்டுப்படுத்துவது?

தமிழகத்திலே பல்வேறு இயக்கத்தைச் சார்ந்தவர்கள், பல்வேறு பகுதியைச் சார்ந்தவர்கள், பல்வேறு பிரச்சினைகளைப் பற்றி வேகத்தோடு, விருப்பு வெறுப்போடு பேசுகின்ற நேரத்தில் அதை ஒழுங்குபடுத்த, வழிமுறைப்படுத்த



பெரிய பொறுப்பிலுள்ள சபாநாயகர் அவர்கள் நிச்சயமாக சில பேரைக் கட்டுப்படுத்தித்தான் தீரவேண்டும். அவற்றை அனுமதிக்கும்போது சில வரன்முறைக்குள்ளேதான் அனுமதித்தாக வேண்டும்.

பாயின்ட் ஆப் ஆர்டர் என்ற அடிப்படையில் குறிப்பாக நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் தங்கமணி அவர்கள் 'இந்த 14 நாட்கள் தேவைதானா? 35 உறுப்பினர்கள் எழுந்திருக்க வேண்டுமென்ற சூழ்நிலை தேவைதானா?' என்றெல்லாம் கேட்டார்கள். 35 பேர் என்று இல்லாமல் ஒரு தீர்மானத்தைக் கொடுத்தவுடனேயே நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற நிலை மட்டும் கடைப்பிடிக்கப்படுமானால் நாள்தோறும் நம்பிக்கையில்லாத் தீர்மான விவாதம் நடந்து கொண்டுதான் இருக்கும். வேறுகாரியம் எதுவும் நடக்காது. அப்படிப்பட்ட நிலை இருந்தால் ஒரு துணைக் கேள்விக்கு சபாநாயகர் அனுமதிக்காமல் விட்டுவிட்டார் என்பதற்காக உடனே ஒரு காகிதத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எழுதிக்கொடுத்துவிட்டு உடனே, அடுத்த நாளே அதைப்பற்றி விவாதிக்க உரிமை வந்துவிடும்.

குறிப்பிட்ட பிரச்சினைகளில் உடனடியாக ஏற்படுகின்ற அவசரத்தின் காரணமாக இதுபோன்ற நிலைமைகளைப் பெரிதுபடுத்திவிடக் கூடாது என்பதற்காகத்தான் இத்தனை நாட்கள் என்று வைத்திருக்கிறார்கள். இவ்விஷயமாகச் சிந்தித்துப் பார்த்து, உணர்ச்சி வேகத்தில் ஆராயக் கூடாது, தெளிந்த முடிவுக்கு வரவேண்டுமென்பதற்காகத்தான், பலர் கூடி முடிவுக்கு வரவேண்டுமென்பதற்காகத்தான் 35 என்ற எண்ணிக்கை வைத்திருக்கிறது. அது 15 சதவிகிதமாக இருக்கலாம், அல்லது 20 சதவிகிதமாக இருக்கலாம்; அல்லது திரு. தங்கமணி அவர்களும் மற்ற கட்சித் தலைவர்களும் சொன்னது போல் 10 சதவிகிதமாகக் குறைக்கப்படலாம். நிச்சயமாகப் பலர் கலந்து, கட்டுப்பாடுகள் இருந்து, அதன் பின்னால் இது வரவேண்டுமென்ற அடிப்படை மட்டும் இல்லாமல் இருந்திருக்குமானால் நிச்சயமாக வேறு விவாதங்கள் நடத்த மாட்டோம். சபாநாயகர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மான விவாதந்தான் நடந்து கொண்டிருக்கும்.

இப்படிப்பட்ட அடிப்படையில் ஆரோக்கியமாகச் செல்லுகிறபோது தங்கள் தவிப்பின் காரணமாக, தங்களுக்கு ஏற்படுகிற ஆசை காரணமாக, எண்ணிக்கையில் இருக்கும் பலகீனம் காரணமாக, அந்த பலகீனத்தால் தாங்கள் எதுவும் செய்ய இயலாத வகையில், இந்த அமைப்புக்கு களங்கத்தை ஏற்படுத்துவது, பலகீனத்தை ஏற்படுத்துவது நல்லது அல்ல என்று வலியுறுத்திக் கூறி, இந்தத் தீர்மானத்தை வன்மையாக எதிர்ப்பதோடு மட்டுமல்லாமல்—பல சிந்தனைகளை அவர்கள் சுற்றிச் சுற்றிச் செய்து கொண்டிருக்கிறார்கள்—தொடர்ந்து

சிந்தனைகளை அவர்களுக்குள்ளே மீண்டும் செய்து நல்ல மரபை உண்டாக்கும் அடிப்படையில் இந்தத் தீர்மானத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அமைகிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** தலைவர் அவர்களே, இன்றைக்கு சபாநாயகர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எல்லாக் கட்சித் தலைவர்களும் கொண்டு வரவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது குறித்து உண்மையிலேயே நாங்கள் வருத்தப்பட வேண்டியிருக்கிறது. ஜனநாயக மரபுகளைக் காப்பாற்றுவதிலே அவர்களுக்கு நாங்கள் பின்தங்கியவர்கள் அல்ல.

தமிழகத்தின் சட்டமன்ற சபாநாயகருடைய திறமை, நேர்மை, பாரபட்சம் இல்லாமை எல்லாம் சரித்திரத்திலே இடம் பெற்றிருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமைக்கு மாறாக இன்றைக்கு இந்த மன்றத்திலே அடிக்கடி சபாநாயகர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்துதான் எதிர்க்கட்சிக்காரர்கள் தங்களுடைய உரிமைகளைப் பாதுகாக்க வேண்டிய அவல நிலை இருக்கிறது என்றால் இதைவிடப் பெரிய அவமானம் வேறு தேவை இல்லை என்றுதான் கூற விரும்புகிறேன். அது இங்கே ஓட்டுக்கு விடப்பட்டு வெற்றி பெறுகிறதோ இல்லையோ, சபாநாயகர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை அடிக்கடி சட்ட சபையில் கொண்டுவந்துதான் எதிர்க் கட்சிக்காரர்கள் தங்கள் உரிமையைப் பாதுகாக்க வேண்டும். இப்படி பெரிய போராட்டத்தை நடத்த வேண்டும் என்றால், இது ஒன்றே போதும், இங்கே ஜனநாயக மரபுகள் காப்பாற்றப்படவில்லை என்பதற்கு.

எனக்கு முன்னாலே பேசிய கனம் உறுப்பினர் அவர்கள் எண்ணிக்கை பலவீனத்தின் காரணமாக இதையெல்லாம் செய்வதாகச் சொன்னார்கள். உங்களுடைய மிருக பலத்தின் காரணமாகத்தான் இப்படிப்பட்ட செய்கைகள் தமிழகத்தில் நடந்து கொண்டிருக்கின்றன என்று திருப்பிச் சொன்னால் என்ன வாரும்? சரியான எண்ணிக்கையில் ஆளும் கட்சி, எதிர்க் கட்சி என்று இருந்திருந்தால் இத்தகைய போராட்டம் எங்களுக்குத் தேவையில்லை. நாங்கள் இப்படித் தவித்துக் கொண்டிருக்கத் தேவையில்லை. ஒரு மிருக பலத்தை வைத்துக்கொண்டு சபாநாயகரை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கிறீர்கள். இதன் விளைவு என்ன? உங்களுடைய ஆட்சியில் என்றைக்குத் தொடர்ந்து ஒருவரே சபாநாயகராக இருந்திருக்கிறார்? நீங்கள் ஆட்சிக்கு வந்தது முதல் இன்று வரை பார்ப்பீர்களானால் தொடர்ச்சியாக முழுவதும்—ஃபுல்டர்ம் ஒருவரே சபாநாயகராக இருந்திருக்கிறாரா? அப்படி ஒருவரைத் தொடர்ந்து சபாநாயகராக அமர வைத்திருக்கிறீர்களா? இல்லையே, மிருக பலத்தை வைத்துக்கொண்டு சபாநாயகரை ஆட்டிப்படைக்கிறீர்கள்.





உண்மையிலேயே சபாநாயகர் நேர்மையாக இருக்க வேண்டும், பாரபட்சம் இல்லாமல் இருக்க வேண்டுமென்று நினைத்தாலும் உங்களுடைய சூழ்நிலை அவரைச் சும்மாவிடமாட்டேன் என்கிறதே. இத்தகைய நிலைமைகளுக்குக் காரணம் ஒரு சபாநாயகர் மட்டுமல்ல. அவர் பின்னால் இருக்கும் ஆளும் கட்சி தான் என்று பகிரங்கமாகக் குற்றம் சாட்ட விரும்புகிறேன்.

முதல் பெஞ்சிலுள்ள முதலமைச்சர் என்ன சொல்லுகிறார், என்னமாதிரி உணருகிறார் என்று பார்த்துத்தான் தீர்ப்புகள் வருகின்றனவே தவிர, தானாகவே தீர்ப்புகள் வருவதில்லை. அதுதான் நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு முதல் சார்ஜ்.

The Speaker must be impartial. But you are not impartial. You are guided by the Treasury Benches at every stage. அந்த வகையிலே தீர்ப்புக் கொடுக்கிற அவல நிலை இன்று இருந்து கொண்டிருக்கிறது.

சபாநாயகரைப் பாதுகாக்க என்று தமிழ்நாடு அசெம்பிளி ரூல்ஸ் இருக்கிறது. அந்த விதிகளைப் புரிந்து கொண்டு, யார் சொன்னாலும் பரவாயில்லை என்று சபாநாயகர் சற்றுத் தைரியமாக வேலை செய்தால் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் வர அவசியமில்லை.

பிரிவிலேஜ் குவெஸ்டியன் வந்தது. அதை அனுமதிப்பது பற்றி ஐந்து ரூல்கள் இருக்கின்றன. 184-வது விதியின்படி கனம் கே. டி. கே. தங்கமணி அவர்கள் கொண்டு வருகிறார்கள். 'நோட்டீஸ் டு தி ஸ்பீக்கர்'—இந்த மாதிரி பிரிவிலேஜ் எழுப்பப் போகிறேன் என்று கொடுக்க வேண்டும். அதை எழுப்ப அனுமதி கொடுப்பதற்குப் பதிலாக எழுப்பலாமா, வேண்டாமா, கன்செண்ட் ஆப் தி ஸ்பீக்கர் அவசியமா, இல்லையா என்ற வாதத்தை எழுப்பினார்கள். விதிகள் 184, 185, 186, 187 திட்டவட்டமாக என்ன சொல்லுகிறது? முடிந்தால் காலையில் ஒரு துண்டு கடுதாசியில் எழுதிக் கொடுத்தால் கூட அதை எழுப்ப அனுமதிக்க வேண்டும். பிரிவிலேஜ் மோஷன் கொண்டு வரும்போது அதற்கு எழுத்து மூலமாக அனுமதி வேண்டுமென்ற நிலை இல்லை. இங்கே யார் எழுந்து பேசினாலும் உங்கள் அனுமதியின் பேரில்தான் எழுந்து பேசுவதாகும். சாதாரணமாக சட்டசபையில் அங்கத்தினர்கள் எந்தப் பிரச்சினையில் எழுந்தாலும் சபாநாயகருடைய அனுமதியின் பேரிலேதான் எழுந்து பேசுகிறார்கள். ஆகவே, எழுத்து மூலமாக விருப்பு வெறுப்புக்கேற்ப அனுமதிப்பது என்ற நிலை தவறாகும். இதைவிட உறுப்பினர்களின் உரிமையைப் பறிக்கக்கூடிய காரியம் எதுவும் இருக்க முடியாது. அது அரசாங்கத்தை இக்கட்டான நிலையில் வைக்கக்கூடியதாக இருந்தால் அதற்கு அனுமதி கிடையாது.

வறட்சி நிதி என்றால் அது நிதியமைச்சருடைய சொத்தா, அவர் வீட்டுச் சொத்தா, கிடையாதே. முதலமைச்சருடைய வீட்டுச் சொத்தா அது? மக்களுடைய சொத்து. நாலரைக் கோடி மக்களின் வரிப் பணத்திலிருந்து வறட்சிக்கு நிதி ஒதுக்க வேண்டுமென்று மத்திய அரசாங்கத்தைக் கேட்க உரிமை இருக்கிறது. மத்திய அரசாங்கம் நமக்குக் கொடுக்க உரிமை இருக்கிறது. இது யார் வீட்டுத் தனிப் பிரச்சினையும் அல்ல. 'நான் மத்திய அரசைக் கேட்க மாட்டேன்' என்று சொல்லுவது முறையல்ல.

அப்படிப்பட்ட முக்கியமான பிரச்சினையில் உறுப்பினர்கள் உரிமைப் பிரச்சினை கொண்டு வருகிறார்கள். அந்த உரிமைப் பிரச்சினையை எடுத்துக் கொள்ள உரிமை தரவில்லை. இதைவிட சர்வாதிகாரப் போக்கை எங்கே பார்க்க முடியும்? இதை அனுமதிக்க வேண்டுமென்பதற்காக விதிகளைப்பற்றி அக்கு வேறாக, ஆணி வேறாகப் பிரித்துப் பிரித்து எடுத்துச் சொன்னாலும் புரிந்து கொள்ள மறுக்கிறார். புரிந்து கொள்ளாமல் இருப்பது வேறு. புரிந்து கொள்ளாதவர்களுக்கு விளக்கிச் சொல்ல முடியும். எனவே, அரசாங்கத்திற்கு இக்கட்டான நிலை என்றால் எங்கள் உரிமை மறுக்கப்படுகிறது.

How can he be above party politics? I am saying that he is nothing but a tool of the ruling party here.

ஆகையால் இன்றைக்கு இருக்கக்கூடிய சபாநாயகர் இப்படி எங்களுடைய உரிமைகளைப் பறித்துக் கொண்டிருந்தால் எப்படி எதிர்க்கட்சிகள் வேலை செய்ய முடியும்?

அதேமாதிரி எக்ஸ்பங்க்ஷன். நடவடிக்கைக் குறிப்பிலிருந்து எப்படி நீக்குவது என்பதற்கு விதி இருக்கிறது. விதி 235-ல் மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. 'அன்-பார்லிமெண்டரி, அன்-டிக்னிஃபைட்' என்ற முறையிலே வரக்கூடிய சில வார்த்தை, அல்லது வார்த்தைகளைத்தான் நீக்கலாம். 'வேர்டு ஆர் வேர்ட்ஸ்'—வார்த்தை அல்லது வார்த்தைகள். இங்கு இருக்கக்கூடிய சபாநாயகருக்கு இது புரியவில்லை. ஒன்றரை மணி நேர விவாதத்தையே எக்ஸ்பஞ்ச் பண்ணி விடுகிறார். அவருடைய டிக்ஷனரியில் ஒன்றரை மணி நேர விவாதம் 'வேர்டு ஆர் வேர்ட்ஸ்' என்பதில் வரும் போல் இருக்கிறது. அவருக்கென்று தனியாகத்தான் டிக்ஷனரி போட வேண்டும். சபாநாயகர் விருப்பு வெறுப்புக்கேற்றபடி நடக்கக் கூடாது. அதனால்தான் சட்டசபைக்கென்று சில விதிகளைப் போட்டிருக்கிறோம். விதிகளில் கிளியராகச் சொல்லப்பட்டிருக்கிறது—

(முற்பகல் 11-30)

இங்கிருக்கிற சபாநாயகர் அதைப்பற்றி கவலைப்படவில்லை. அந்த ரூல்படி வேர்ட் அல்லது வேர்ட்ஸ் இவற்றை நீக்குவதை விட்டு மணிக்கணக்காக பேசியதை ரிமூவ் செய்வது என்றால் எனக்குப் பிடிக்கவில்லை ரிமூவ் செய்கிறேன்,





அரசாங்கத்தைத் தாக்கிப் பேசினாய், எக்ஸ்பஞ்ச் செய்கிறேன் என்று போனால் பின் இங்கு எதற்காக நாங்கள் பேச வருகிறோம்? கொஞ்சம் மிஞ்சிப் போனால் வெளியே போ என்கிறார். என்ன பள்ளிக்கூடமா நடத்துகிறார்கள், இது என்ன திண்ணைப் பள்ளிக்கூடமா நடத்துகிறார் என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** 'கர்நாடக மாநிலத்தில் என்று கருதுகிறேன், 22 உறுப்பினர்களை வெளியில் அனுப்பியதாகக் கேள்வி.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** தமிழ்நாட்டுச் சட்டசபையில் உள்ள உறுப்பினர்கள் அத்தனை பேர்களும் அவரவர்கள் பொறுப்புகளை உணர்ந்து நடந்து கொள்ளக்கூடியவர்கள். எங்களிடம் அப்படி நடந்துகொள்வதால் இப்படிச் சொல்கிறோம். நாங்கள் என்ன அத்துமீறி பேசுகிறோமா? நாங்கள் என்ன வரம்பு மீறி பேசுறோமா, அல்லது வரம்பு மீறி ஏதாவது கேட்கிறோமா? நாங்கள் எல்லோரும் வரம்புக்கு உட்பட்டுத்தான், ஜனநாயக மரபுகளுக்கு உட்பட்டுத்தான் வேலை செய்கிறோம். அப்படி ஏதாவது நாங்கள் வரம்பு மீறி செய்ய வேண்டி வந்தால் அது உங்களால்தான். அப்படி நீங்கள்தான் இரிடேட் செய்கிறீர்கள். நாங்கள் மரபுகளுக்கு உட்பட்டுத்தான் வேலை செய்கிறோம்.

அன்று கனம் உறுப்பினர் சுப்பு அவர்கள் பேசினார்கள். அதில் என்ன அன்-பார்லிமென்டரி வார்த்தைகளைச் சொன்னார்கள்? அதில் என்ன அன்-டிக்னிஃபைடாக இருந்தது? ஒரு வார்த்தை கூட அவர் கடுமையாகச் சொல்லவில்லை. அமைச்சர் இப்படிச் சொன்னாரே என்று கேட்டார். அதை ஏன் எக்ஸ்பஞ்ச் செய்ய வேண்டும். ரூலிற்கும் அவர்கள் கொடுக்கிற ரூலிங்குக்கும் சம்பந்தம் இல்லாதிருக்கிறது. ஆகவே அதைப்பற்றி இந்த நோ கான்ஃபிடன்ஸ் மோஷனில்தான் கேட்கவேண்டும். அவர்கள் எடுத்துக் காட்டுகிற ரூல்ஸ்க்கும் கொடுக்கிற ரூலிங்குக்கும் எந்தவிதமான சம்பந்தமுமில்லை.

இப்படிப்பட்ட ஒரு சபாநாயகரை வைத்து வேலை செய்வதா அல்லது விதிகளுக்கு உட்பட்டு வேலை செய்வதா? சபாநாயகர் என்றால் அவர்கள் ஆளும் கட்சியின் சர்வாதிகார போக்கிற்கு வாடி வதங்கி வேலை செய்வதா? அப்படி என்றால் எப்படி ஜனநாயகம் பிழைக்கும்? எதிர்க்கட்சியினர் தங்கள் மனதில் இருப்பதை எடுத்துச் சொல்லக் கூடிய பாரம்பரியம் சபாநாயகர் அவர்களால் காப்பாற்றப்பட வேண்டும். இன்றுள்ள நிலையை எடுத்துப் பார்த்தால் எதற்கெடுத்தாலும் எக்ஸ்பங்க்ஷன்ஸ்.

பின்னர், ரூல்ஸ் 41, 42-ன் கீழ் நாங்கள் மோஷன்ஸ் கொடுக்கிறோம். ஒன்று அட்ஜோர்ன்மென்ட் மோஷனுக்கு நோட்டீஸ் கொடுக்கிறோம் அல்லது கால் அட்டன்ஷன் நோட்டீஸ் கொடுக்கிறோம். சில பேர்களுக்கு என்ன பதில்

வருகிறது? வரவு-செலவுத் திட்டம் நடக்கிறது, அதில் பேசலாம் என்று. இளிச்சவாயன் என்றால் அந்தப் பதில். ரொம்ப மிரட்டினால் நிலை வேறு, அப்படியானால் எல்லோரும் சபாநாயகர் அறைக்கு வருகிறோம், சண்டை போடுகிறோம். 42-ன் கீழ் கொடுத்தால் 41-ன் கீழ் எடுத்துக்கொள்வது, 41-ன் கீழ் கொடுத்தால் 42-ன் கீழ் எடுத்துக்கொள்வது. அதற்கும் இதற்கும் உள்ள வித்தியாசம் என்ன என்று பார்க்கவேண்டும். 42-ன் கீழ் கொடுத்தால் ப்ரையாரிட்டி என்று சொன்னார்கள். அப்படியே கொடுக்க ஆரம்பித்தேன். எல்லாம் ரிஜெக்டெட். அமைச்சர்கள் என்றால் உடனே வசதி. பப்ளிக் இம்பார்ட்டென்ஸ் என்று விதி 82-ன் கீழ் ஸ்டேட்மென்ட் என்று சொன்னால் சபாநாயகர் யாருக்காக வேலை செய்கிறார்? ஆளும் கட்சிக்காக, அமைச்சர்களுக்காக, ஆளும் கட்சி மெம்பர்களுக்காக வேலை செய்கிறார்கள். ரூல்ஸ் 41, 42-ன் கீழ்--பின்னர் ஷார்ட் நோட்டீஸ் க்வொஸ்டின்ஸ் கொடுத்தால் ஒன்றரை மாதமாகிறது, இன்னும் பதில் வரவில்லை. க்வொஸ்டின்ஸ் கொடுத்தால் ஏதாவது கோளாறு சொல்லி திரும்ப வருகிறது, என்னடா குற்றம் இருக்கிறது என்று கண்டுபிடிக்கிறார்கள். அவை பப்ளிக் இம்பார்ட்டன்ஸா இல்லையா என்று பார்த்து அலவ் செய்ய வேண்டும். They did not want to inconvenience the Government எதிர்க் கட்சியினர் எப்படி வேலை செய்வது? இந்த அளவில் நிலைமை இருக்கிறது. மிக மோசமாக இருந்து கொண்டிருக்கிறது. சட்ட சபையில் வேலை செய்து கொண்டிருக்கிற ப்யூன்களை எடுத்துக்கொண்டால் அவர்களை பெர்மெனன்ட்டாக எடுத்துக்கொள்வதில், சீனியாரிட்டிபடி எடுத்துக் கொள்வதில், அதில் கூடவா இன்டர்பியரன்ஸ்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இது சபாநாயகர் அவர்கள்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம், அதில் சர்வீஸ்பற்றி என்ன பேச்சு?

**திருமதி த. ந. அனந்தநாயகி:** எவ்வளவோ பேர்களை டெம்பரரியாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். வருடா வருடம் டெம்பரரி, டெம்பரரி என்றிருக்கிறார்கள். நாம் ஒரு எடுத்துக்காட்டாக இருக்கவேண்டாமா? சார்ஜண்டை விட்டு எம்.எல்.ஏ-க்களை வெளியே தூக்கிக் கொண்டு போ என்று சொல்வது. இதையெல்லாம் பார்க்கும்போது உறுப்பினர்களுக்கு என்ன மரியாதை இருக்கும்? உறுப்பினர்களுடைய உரிமைகளை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். சட்ட விதிகளின்படி என்னென்ன முறையில் பாதுகாப்பு கொடுக்கவேண்டும் என்று தெரிந்து பாதுகாப்பு கொடுக்கவேண்டும். பாரபட்சம் இல்லாமல் நடந்தால்தான் எதிர்க்கட்சியினர் நன்கு வேலை செய்ய முடியும்.



சார்ஜன்டுக்கு இன்றைக்கு சார்ஜன்டுக்கே பாதுகாப்பு இல்லையாம். வேலை செய்யும் ாதுகாப்பு இல்லை, மெம்பர்களுக்கு பாதுகாப்பு இல்லை. சபாநாயகருக்கும் பாதுகாப்பு த்தியோகஸ்தர்களுக்கு பாதுகாப்பு இல்லை. ஆளும் கட்சியினருக்கும் பாதுகாப்பு )ல்லை. அவர்களை ஆட்டிப்படைக்கிற ஜனநாயக மரபுகளைக் காப்பாற்றும் )ல்லை கடைசியில். ஆகவே, தயவுசெய்து காப்பாற்றும் வகையில், ;கையில், தமிழ்நாட்டின் தனித்தன்மையைக் காப்பாற்றும் வகையில், அவற்றைப் ;மிழ்நாடு தனிப்புகழ் பெற்றிருந்ததைக் ஆளாகாமல், உறுப்பினர் ;ாழாக்கக்கூடிய அளவில் விருப்பு வெறுப்புகளுக்கு சபாநாயகர் நடக்க ;ளின் இன்ப்ளுவன்ஸ்க்கு ஆளாகாமல் நல்ல முறையில் ;வண்டுமென்று கேட்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. எம். ஏ. லத்தீப்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்த்து நான் ஒருசில கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் கூடச் சொன்னார்கள், துர்பாக்கியகரமான நிலையில் இன்று இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறோம் என்று. இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்ததே துர்பாக்கியகரமானது என்பதை ஏற்றுக்கொண்ட டாக்டர் ஹாண்டே அவர்களுக்கு நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** நான் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். ஒரு துர்பாக்கியகரமான சூழ்நிலையை புலவர் கோவிந்தன் அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள் என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். அந்த துர்பாக்கியகரமான நிலையில் கொண்டு வரவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்றுதான் சொன்னேன்.

**திரு. எம். ஏ. லத்தீப்:** எப்படியோ துர்பாக்கியகரமான நிலைமை அல்லது துர்பாக்கியகரமான காரணத்தால் கொண்டுவந்திருக்கிறார்கள். துர்பாக்கியகரமானது என்று ஏற்றுக்கொண்டதற்காக அவர்களுக்கு நான் நன்றி செலுத்திக் கொள்ள விரும்புகிறேன். ஆம், இது ஒரு துர்பாக்கியகரமான நிலைமைதான். சபாநாயகர் அவர்கள் மீது இந்த மன்றத்தில் ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவது என்றால் அதற்கு சில முக்கியமான காரணங்கள் இருக்க வேண்டும். அந்தக் காரணங்கள் என்ன என்பதை நம்முடைய ஜனநாயக மரபுகள் சுட்டிக்காட்டுகின்றன. பல்வேறு சட்ட மன்றங்களில் மிக மிக அரிதாகக் கொண்டு வந்திருக்கிற நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் என்ன என்ன காரணங்களின் அடிப்படையில் நம்பிக்கையில்லாத்

தீர்மானத்தை சபாநாயகர் அவர்கள் மீது கொண்டு வரவேண்டும் என்பதற்குள்ள விளக்கங்களை, ஜனநாயக மரபுகளை நாம் தெரிந்து வைத்திருக்கிறோம். அப்படி ஏதாவது ஒரு காரணத்தின் அடிப்படையில் இதைக் கொண்டுவந்திருக்கிறார்களா என்றால் நிச்சயமாக இல்லை.

அவர்கள் சொல்லியிருப்பது, ஆளும் கட்சிக்கு எந்தவகையிலும் பாதுகாப்பு தரவேண்டும் என்று சபாநாயகர் முயற்சிகள் செய்கிறார்கள். ஆகவே, அவர்கள் மீது நம்பிக்கை இல்லை என்று சொல்வது ஒரு விசித்திரமான போக்கு என்றே நான் கருதுகிறேன். அதிலும் குறிப்பாக இந்த அவையின் நிகழ்ச்சிகளைக் கவனித்துக் கொண்டிருப்பவர்களுக்கு நிச்சயமாகத் தெரியும், சபாநாயகர் அவர்கள் ஆளும் கட்சிக்காரர்களுக்கு மட்டுமல்லாமல் தோழமைக் கட்சிகளில் இருக்கக்கூடிய எங்களைப் போன்றவர்களுக்குக்கூட உரிய, கிடைக்க வேண்டிய நேரம் கொடுக்க வேண்டிய சலுகைகள் இவற்றைக் குறைத்து இன்றைக்கு டாக்டர் ஹாண்டே போன்றவர்களுக்கும், இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்தவர்களைப் போன்றவர்களுக்கும் அதிகமான சலுகைகள் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று ஆளும் கட்சியில் இருப்பவர்கள் குறை சொல்கிறார்கள் என்றால் அப்படிச் சொல்லிக்கொண்டிருப்பதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. இந்த சபையின் குறிப்பேடுகளை எடுத்துப் பார்த்தால் அதை நிச்சயமாகத் தெரிந்துகொள்ளலாம்.

அவர்கள் சொல்கிறார்கள் மரபுகள், ஜனநாயக மரபுகள் காப்பாற்றப்பட வேண்டும் என்று. ஜனநாயக மரபுகளுக்கு வேட்டு வைக்கக்கூடிய முறையில் தான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். சபாநாயகரின் பொறுப்பு கடுமையானதொரு பொறுப்பு என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். பல நேரங்களில் எங்களைப் போன்றவர்கள்கூட குறை சொல்கிறோம். ஆனால் அந்த இடத்தில் உட்கார்ந்தால்தான் சபாநாயகரின் கடுமையான பொறுப்பை நாம் உணர்ந்துகொள்ள முடியும். அதுவும் அடிக்கடி தேவை இருந்தும், தேவை இல்லாமலும் பொதுப்படையாக குறைகளைச் சொல்லக் கூடிய சிலர் இருக்கிற சபையில் ஒரு சபையை கண்ணியமாக நடத்திச் செல்வது என்றால் அங்கு உட்கார்ந்தால்தான் அதன் கஷ்டத்தைத் தெரிந்து கொள்ள முடியும்.

ஒன்று தெளிவாகக் கூறுகிறேன். சபாநாயகர் அவர்களின் போக்கு சரியாக இல்லை என்று இந்தத் தீர்மானத்தின்மீது பேசியவர்கள், அனந்தநாயகி அம்மையாராக இருந்தாலும் சரி, அல்லது டாக்டர் ஹாண்டேயாக இருந்தாலும்





சரி அங்கு போய் உட்கார்ந்து மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்கள் காட்டுகிற அளவிற்கு பாரபட்சம் காட்டாது அவர்கள் நடப்பார்களா என்பது சந்தேகம் தான்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : It is an insinuation against the Members.

திரு. எம். ஏ. லத்தீப் : அது எங்கள் ஊகம். நீங்கள் மறுக்கலாம். காரணம் இல்லாமல் சொல்லவில்லை. ஒரு உதாரணம் சொல்கிறேன். அம்மையார் அவர்களைக் குறைத்துச் சொல்லவேண்டும் என்று சொல்லவில்லை.

திரு. பெ. சீனிவாசன் : ஒரு உறுப்பினர் பேரவையில் பேசும்போது தேவையில்லாமல் இன்டரப்ஷன்ஸ் வரவேண்டும் என்று எண்ணி பேசுவது என் என்று புரியவில்லை.

திரு. எம். ஏ. லத்தீப் : அப்படி நான் எண்ணவில்லை. அப்படி இன்டரப் ஷன்ஸ் வரவேண்டும் என்று எண்ணி பேசவேண்டிய அவசியமில்லை. யாரிடம் இருந்து இன்டரப்ஷன்ஸ் வரவேண்டும், அவற்றிற்கு என்ன பதில் சொல்ல வேண்டும், எந்த நேரத்தில் பேச வேண்டும் என்று பேச வேண்டிய நேரம் இருக்கிறது. இப்போது அப்படி நான் பேசவில்லை.

அதற்கு ஒரு உதாரணம் கூட இருக்கிறது. நாம் இன்று சொல்கிறோம், இந்த அவையில் இருக்கும் அத்தனை எதிர்க்கட்சி உறுப்பினர்களும் வெளி நடப்புச் செய்தார்கள். அன்று மாண்புமிகு புலவர் கோவிந்தன் அவர்களோ, மற்றவர்களோ சபையை நடத்தவில்லை. நம்முடைய மன்றத்தில் ரொம்ப அமைதியானவர் என்று பெயர் பெற்ற ஜோதி அம்மையார் அவர்கள் தலைமை வகித்து இந்த அவையை நடத்தினார்கள். அன்று ஜோதி அம்மையார் அவர்கள் அளித்த தீர்ப்பு சரியல்ல என்று இந்த அவையிலுள்ள அத்தனை எதிர்க்கட்சி உறுப்பினர்களும் வெளிநடப்புச் செய்தார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: அங்கே யார் உட்கார்ந்து இருக்கிறார்கள் என்பது பிரச்னை அல்ல—அது ஜோதி அம்மையாராக இருந்தாலும் சரி, லத்தீப்பாக இருந்தாலும் சரி, அளித்தத் தீர்ப்பு, அங்கேயிருந்து வந்த தீர்ப்பு சரியல்ல என்று சொன்னால் அதைக் கண்டிக்கும் வகையில் வெளியேறினோம். எக்ஸ்பஞ்ச் செய்யப்பட்ட ஸ்பீச்சை அவர் எப்படி படிக்கலாம்?

திரு. துரை முருகன் : அப்படியானால் ஜோதி அம்மையார் கொடுத்த தீர்ப்பு சரியல்ல என்று சொல்கிறீர்களா?

**திருமதி ஜோதி வெங்கடாசலம்:** இந்த விஷயத்தில் பர்சனல் எக்ஸ்பிளனேஷன் நான் தான் செய்யவேண்டும். நான் என்ன சொல்கிறேன் என்றால், அவர் எக்ஸ்பஞ்ச் செய்யப்பட்ட மேட்டரை படித்தார் என்பது உண்மை. அப்படி படித்தது தலைவருடைய அனுமதி பெற்று படித்தால் தவறு இல்லை. ஆனால் அது குறிப்பேடுகளில் முன்பு ஏறவில்லை—அன்று இருந்த சபாநாயகர் அப்படி தீர்ப்பு கொடுத்தார் என்பதால்—படித்தது தவறு. ஏற்கனவே குறிப்பேடுகளில் ஏறக்கூடாது என்று முன்பு இருந்த சபாநாயகர் தீர்ப்பு கொடுத்துள்ள காரணத்தால், என்னுடைய அனுமதியைப் பெற்று அதைப் படித்து இருந்தாலும், அதை எக்ஸ்பஞ்ச் செய்கிறேன் என்று சொன்னேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, திருமதி ஜோதி அம்மையார் அவர்கள் விளக்கம் கொடுத்தார்கள். அவர் அளித்த தீர்ப்பை எதிர்த்து அன்று எதிர்க்கட்சி வெளிநடப்பு செய்தார்களே, அதைப்பற்றி என்ன சொல்கிறீர்கள்?

**திருமதி ஜோதி வெங்கடாசலம்:** தலைவரவர்களே, எதிர்க்கட்சிகள் என்னுடைய தீர்ப்பை எதிர்த்துச் சென்றது பற்றி நான் குறிப்பிடுவதற்கு இல்லை. அன்று நான் அந்த சேரில் இருந்தபோது, நான் பொது. ஆகவே, அதைப்பற்றி இப்போது நான் குறிப்பிட விரும்பவில்லை.

**திரு. எம். ஏ. லத்தீப்:** அதைத் தான் நான் இங்கே சொன்னேன். அங்கே யார் தலைமை வகித்து நடத்தினாலும், அவர்கள் பேரில் எதிர்க்கட்சிகள் குறை சொல்வார்கள். அது தான் எதிர்க்கட்சிகளின் வேலை. குறை இருந்தாலும், இல்லாவிட்டாலும் குறை இருக்கிறது என்று சொல்லவேண்டியது எதிர்க்கட்சிகளின் வேலை. அந்த வகையில் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள் என்று சொல்லி, ஜோதி அம்மையார் போன்றவர்கள் நடந்து கொண்ட முறையிலே தான், நம்முடைய புலவர் கோவிந்தன் அவர்கள் நடந்து கொள்கிறார்கள் . . .

DR. H. V. HANDE: With the permission of the Member, Mr. Latheef, I should like to explain. Eventhough Mrs. Jothi Vencatachellum was a member of the Opposition, she did not bother about the Opposition or the Ruling Parties; she had given her ruling eventhough that ruling was inconvenient to her own party. So, on that Mrs. Jothi Vencatachellum should be complimented. We want the Speaker also to be so impartial and not be a play-thing of the ruling party. He should forget that he is a partyman at least.





**திரு. பெ. சீனிவாசன்:** பாயின்ட் ஆப் ஆர்டர் சார், புலவர் கோவிந்தன் அவர்கள் மீது நாம் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்து விவாதித்துக் கொண்டு இருக்கிறோம். அவர்கள் கொடுத்த தீர்ப்பைப் பற்றி விமர்சிக்கலாமே தவிர அதற்கு முன்பு பல சபாநாயகர்கள் கொடுத்த தீர்ப்பைப் பற்றி விவாதிக்கக்கூடாது. முதலமைச்சர் அவர்கள் திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்களிடமே, அந்தத் தீர்ப்பு சரியா தவறா என்ற முறையில் கேட்டார்கள். அப்படிச் சொல்வதற்கு அவருக்கே இன்று உரிமை கிடையாது. அந்த இடத்தில் அவர் உட்கார்ந்து இருந்தபோது அளித்த தீர்ப்பை, இந்த அவையில் தற்போது விவாதிப்பது பொருத்தமல்ல என்று கருதுகிறேன்.

**திரு. கே. கந்தசாமி:** பாயின்ட் ஆப் ஆர்டர் சார். தலைவரவர்களே, நமது மாண்புமிகு உறுப்பினர் சீனிவாசன் அவர்கள் சொன்னதில் எனக்கு கருத்து வேறுபாடு. நாம் இந்த சபையின் நடவடிக்கைகளை கன்ட்ரோல் செய்து நடத்தக்கூடிய மாண்புமிகு புலவர் கோவிந்தன் அவர்கள் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்து அது பற்றி விவாதிக்கிறபோது, அதில் கருத்துச் சொல்வதற்காக இதற்கு முன்னதாக இருந்த சபாநாயகர்கள் கொடுத்த தீர்ப்புகளையும் முன்மாதிரிக் காட்டிப் பேசுவதற்கு முழு உரிமை இருக்கிறது. இப்படி மாண்புமிகு உறுப்பினர் சொன்னதால் அந்த உரிமை எனக்குப் பாதிக்கப்படுகிறது என்று சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நண்பர் சீனிவாசன் அவர்கள் ஒரு பொதுக் கருத்தைச் சொன்னார்கள். அந்த இடத்திலிருந்து அளிக்கப்படுகிற தீர்ப்பைப்பற்றி விமர்சிக்கக் கூடாது என்று சொன்னார்கள். இப்போது நடைபெறுகிற விவாதமே அது தான்.

**திரு. பெ. சீனிவாசன்:** இப்போது சபாநாயகராக இருப்பவர் கொடுத்த தீர்ப்பைத்தான் விமர்சிக்கலாம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** எந்த ஒரு சபாநாயகர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறதோ, அவர்கள் நடவடிக்கைகளைப் பற்றியெல்லாம், இதற்கு முன்னால் குறிப்பிட்டுச் சொல்ல முடியாத சில விஷயங்களையெல்லாம்கூட, இப்போது சொல்வதற்கு உரிமை இருக்கிறது என்று விதிகளில் சொல்லப்பட்டிருக்கிறது.

**திரு. பெ. சீனிவாசன்:** இப்போது இருக்கிற நம்பிக்கையில்லாத் தீர்மானம் சபாநாயகர் என்ற பதவியின் மீது அல்ல. திரு. புலவர் கோவிந்தன் அவர்கள் சபாநாயகர் பதவியில் இருப்பதைக் கண்டித்துத்தான் நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்திருக்கிறது. ஆகவே, இன்னொரு சபாநாயகர் பற்றிப் பேசுவது பொருத்தமாக இருக்காது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசும்போது கூடச் சொன்னார்கள். பேனல் ஆப் சேர்மன்பற்றிக் குறிப்பிட்டார்கள். பேனல் ஆப் சேர்மன் எப்படித் தீர்ப்பு வழங்கினர் என்று சொன்னார்கள். அதே போன்று லத்தீப் அவர்களும் ஜோதி அம்மையார் அவர்கள் தலைவராக இருந்தபோது, எப்படித் தீர்ப்பு வழங்கினார்கள் என்று தான் கூறினார்கள்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** ஜோதி அம்மையார் அவர்கள் சபாநாயகராக இருந்தபோது எப்படி நடந்து கொண்டார்கள் என்று குறிப்பிட்டேன். டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒரு உண்மையைச் சொன்னார்கள். எதிர்க்கட்சிகள் எப்படி, அவ்வளவு பாரபட்சமற்று நடந்து கொண்ட தலைவர் அவர்கள் தீர்ப்பை எதிர்த்து வெளிநடப்புச் செய்தோம் என்று சொன்னார்கள். அவர்கள் ஜோதி அம்மையாருக்கு காம்ப்ளிமென்ட்டாகச் சொன்னார்கள். இவ்வளவு பாரபட்சமில்லாமல் நடந்து கொண்டதற்கே வெளி நடப்புச் செய்திருக்கிறீர்களே அப்படிச் செய்திருக்கிறபோது . . .

THIRU R. PONNAPPA NADAR : Sir, I emphatically protest against the aspersions cast by the hon. Member Mr. Latheef. I say this with all the emphasis at my command. [*] but let him not repeat things which have no relevancy. I strongly protest against the insinuations that have been cast by Mr. Latheef. Let him not be repeating this umpteen times.

(The hon. Members Thiru V. M. Abdul Jabbar and Thiru K. Kandasami were standing.)

MR. DEPUTY SPEAKER : I would like to say this. While the hon. Member Mr. Ponnappa Nadar complains about aspersions let him not himself cast aspersions on other members also.

THIRU V. M. ABDUL JABBAR : What are you going to do about the aspersions already cast by him?

THIRU K. KANDASAMY : The hon. Member Thiru Ponnappa Nadar while referring to the aspersions alleged to have been made by Mr. Latheef has himself cast very serious damage and injury to the prestige of the hon. Member Latheef. *

MR. DEPUTY SPEAKER : Let Mr. Latheef continue. Let me hear what he has to say.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.





**திரு. கே. கந்தசாமி : சார், பாயின்ட் ஆப் ஆர்டர்.** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகிற நேரத்தில் நண்பர் லத்தீப் அவர்களைப்பற்றி ஒரு கௌரவமிக்க உறுப்பினர் படித்து, நல்ல பட்டம் பெற்று இருக்கிற உறுப்பினர், மக்கள் மத்தியில் நன்மதிப்பைப் பெற்று இருக்கிற அரசியல்வாதி, அவர்களைப்பற்றிப் பொதுமக்கள் மத்தியில் ஒரு தவறான கருத்து ஏற்படுகிற அளவிற்குக் கருத்துச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இன்று வந்த அதே நிலைமை எனக்கும் வரலாம். ஆகவே, அதைக் குறிப்பேட்டிலிருந்து நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த வகையில் எங்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. DEPUTY SPEAKER : I would like to know the views of the hon. Member Mr. Latheef now.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** பாயின்ட் ஆப் ஆர்டர் சார். தலைவரவர்களே, மாண்புமிகு பொன்னப்ப நாடார் அவர்கள் பேசும்போது * நாங்கள் பேசுகிறோம் என்றால், நாட்டின் உண்மையான கருத்தையும், எங்களுடைய சமுதாயத்தின் கருத்தையும் சொல்கிறோமேயல்லாமல் பாரபட்சமான முறையில் * நாங்கள் எதிர்பார்க்கவில்லை. * ஆகவே, அந்த மாதிரிக் குற்றச்சாட்டை, ஒன்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களே திரும்பப் பெறவேண்டும் அல்லது அதைக் குறிப்பேட்டில் இருந்து நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆலடி அருணா :** மாண்புமிகு உறுப்பினர் பெருமதிப்பிற்குரிய பொன்னப்ப நாடார் அவர்கள் திரு. லத்தீப் அவர்கள் மீது ஒரு குற்றச்சாட்டைச் சொல்கிற மாதிரி * என்று சொன்னார்கள். திரு. லத்தீப் அவர்களுக்கு அதை மறுப்பதற்குப் போதிய வாய்ப்பு இருக்கிறது.

He is an enlightened lawyer; he can easily defend his case. ஆகவே, அப்படிச் சொல்வதற்கு உரிமை இருக்கிறது. திரு. பொன்னப்ப நாடார் ஒரு கருத்தைச் சொன்னார்கள். அப்படி அவர் சொன்னதால் யாருடைய உரிமையும் பாதிக்கப்படவில்லை. ஆகவே, அதை எக்ஸ்பஞ்ச் செய்யவேண்டிய அவசியம் இல்லை என்று சொல்லிக்கொள்கிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** கனம் லத்திப் என்ன சொன்னார்? அந்த அம்மையார் கொடுத்த தீர்ப்பு சரியானது என்றால், ஏன் வெளிநடப்புச் செய்தீர்கள் என்று கேட்கிறார். எங்கள் கட்சியைச் சேர்ந்த அம்மையாராக இருந்தாலும், அங்கேயிருந்துகொண்டு, ஆளும் கட்சிக்குச் சாதகமான முறையில் தீர்ப்புக்கொடுப்பது சரியல்ல, அதை நாங்கள் கண்டிக்கிறோம் என்ற முறையில் வெளிநடப்புச் செய்தோம். இன்று நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருகிறோம் என்றால், எதிர்க்கட்சிகள் தங்கள் நன்மைக்காகக் கொண்டு வரவில்லை. இந்தச் சட்டமன்றத்தின் மரபுகள் கட்டிக் காப்பாற்றப்படவேண்டுமென்ற முறையில்தான் கொண்டு வருகிறோம். புரியாமல் வெளியேறினோம், தெரியாமல் வெளியே போனோம் என்று சொன்னார்கள். கொடுக்கிற தீர்ப்பு சரியான தீர்ப்பாக இல்லாவிட்டால், யாராக இருந்தாலும் அதை ஒப்புக் கொள்ள மாட்டோம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

* **திருமதி ஜோதி வெங்கடாசலம்:** தலைவரவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கோவிந்தன் அவர்கள் மேல் வந்திருக்கிற நம்பிக்கை இல்லாத் தீர்மானம் என் மேல் திரும்புமோ என்னமோ தெரியவில்லை. தலைவரவர்களே, இன்றைக்கு நீங்கள் இருக்கிற அந்த ஸ்தானத்தில், பேனல் ஆஃப் சேர்மனில் நான் இருந்தேன். மாண்புமிகு புலவர் கோவிந்தன் மீது நம்பிக்கை இல்லை என்று . . . (திரு. க. உரோ. எட்மண்ட் குறுக்கீடு)

I was in the panel of Chairmen. I was eligible to sit that day. ஆகையினாலே, அன்றைக்கு நடந்தது என்னவென்றால்—மதிப்பிற்குரிய திருமதி அனந்தநாயகி அவர்கள் என்னுடைய தீர்ப்பு அவர்களுக்கு திருப்தி அளிக்கவில்லையென்று கூறுகிறார்கள். அவருக்கு சேருடைய தீர்ப்பு திருப்தி அளிக்காமல் இருந்திருக்கலாம்—என்னுடைய எக்ஸ்ப்ளனேஷன் என்னவென்று கேட்டால் இந்த சேரிலே இருக்கும்போது நடுநிலைமையாக இருந்து தீர்ப்புக் கொடுக்க வேண்டியது என் கடமை. இந்த மன்றத்தில் பல ஆண்டுகளாக நான் இருந்து வருகிறேன். பல சபாநாயகர் தீர்ப்புகளைப் பார்த்திருக்கிறேன். அன்றைக்கு நடந்ததென்ன? எதிர்க்கட்சியிலிருந்து வாக் அவுட் செய்ததற்குக் காரணம், மாண்புமிகு புலவர் கோவிந்தன் அவர்கள் ஏற்கெனவே எக்ஸ்பஞ்ச் செய்த ஒரு குறிப்பை இங்கே வாசித்தார் என்பது. குறிப்பிட்ட எக்ஸ்பஞ்ச் செய்ததை, அவரை வாசிக்க அனுமதிப்பதற்கு பேனல் ஆஃப் சேர்மனில் இருக்கிற எந்த மெம்பருக்கும், டெபுடி ஸ்பீக்கருக்கும், யாராக இருந்தாலும் அவர்களுக்கு உரிமை உண்டு. அனுமதி பெற்று வாசிக்கலாம். அப்படி அவர் வாசித்தார் என்று

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.





கூறினேன். அப்படி அவர் வாசித்திருந்தாலும் ஏற்கெனவே குறிப்பேடுகளில் ஏறாத காரணத்தினால், இதற்கு முன்பாக இருந்த ஒரு சபாநாயகர் இதை ஏறவிடாமல் செய்த காரணத்தினால் மறுபடியும் குறிப்பேடுகளில் ஏறக் கூடாதென்று தீர்ப்பளித்தேன். நடுநிலைமையாக இருந்து தீர்ப்புக் கூறினேன். எதிர்க்கட்சியினரும், என் கட்சியைச் சேர்ந்தவர்களும் வெளி நடப்புச் செய்தார்கள். என்னுடைய தீர்ப்பு நியாயமாக இருக்கவேண்டுமென்று அந்தத் தீர்ப்பைக் கொடுத்தேன்.

**திரு. எம். சுரேந்திரன்:** தலைவரவர்களே, புலவர் கோவிந்தன் அவர்கள் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் வந்திருக்கிற நேரத்தில் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சுரேந்திரன் அவர்களை, உட்காரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம்:** ஆளும் கட்சிக்கு ஆதரவாக இருந்தார்கள், சலுகையாகத் தீர்ப்புக் கொடுத்ததற்காக வெளியேறினோம் என்று திருமதி அனந்தநாயகி அம்மையார் கூறுவது சரி அல்ல.

Aspersion of the hon. Member is not correcet and I ask the hon. Member to withdraw it.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: I have got every right to say that the ruling of the Chair was not proper. Rightly or wrongly when the hon. Member was in the Chair, she wanted to get over the then situation, and gave that ruling.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இரண்டு லேடி மெம்பர்களும் பிரச்சனையைத் தீர்த்துக்கொள்ளட்டும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** தலைவரவர்களே, நாங்கள் வாக் அவுட் செய்தோம் என்றால் அது எப்படி அவர்கள்மீது ஆஸ்பர்ஷன் என்று சொல்ல முடியும்?

Now the hon. Member is casting aspersion.

**திருமதி ஜோதி வெங்கடாசலம்:** Not at all. தலைவரவர்களே, என்னுடைய நிலைமையை நான் விளக்கினேன். எப்படிப் பணியாற்ற வேண்டுமென்று நான் விளக்கினேன். இதிலே ஆளும் கட்சியை சப்போர்ட் செய்தேன் என்று சொல்வது தவறு. பர்சனல் ஒபீனியனைக் கொண்டு அவர்கள் வாக்

அவுட் செய்தார்கள். பர்சனல் ஒபினியன், என்றால் இட் ஈஸ் எ டிஃப்ரண்ட்திங். It is a wrong opinion. எல்லோரும் வெளியேறியிருக்கிறார்கள். சேரில் இருந்தபோது, நடுநிலைமையில் இருந்த போது நான் தீர்ப்புக் கொடுத்தேன்.

How can the hon. Member Thiru K. T. K. Tangamani cast aspersion on me. I am very sorry for it.

**திரு. எம். சுரேந்திரன் :** தலைவரவர்களே, ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. லத்தீப் அவர்கள் பேசலாம்.

**திரு. எம். சுரேந்திரன் :** தலைவரவர்களே, நம்பிக்கை இல்லாத் தீர்மானம் தலைவர் மீது வந்திருக்கிறது. என் பாயிண்ட் ஆஃப் ஆர்டருக்கு அனுமதி கொடுக்கவில்லையென்றால் என்ன பொருள் ?

இங்கே இருக்கிற புலவர் கோவிந்தன் அவர்கள் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் வந்து விவாதம் நடந்து கொண்டிருக்கிறது. ஏற்கெனவே திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்கள் தீர்ப்புக் கொடுத்ததைப்பற்றி இவ்வளவு நேரம் விவாதம் நடந்துவதும், அதிகப்படியாக நேரத்தைச் செலவிடுவதும் நியாயம் தானா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் சுரேந்திரன் சொல்லிய கருத்துக்கு நன்றி. லத்தீப் அவர்கள் தொடர்ந்து பேச வேண்டும். திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் பேசிய நேரத்தில் * சொன்னார்கள். அந்தக் கருத்தை மாத்திரம் அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன்.

THIRU R. PONNAPPA NADAR : If that is your ruling I have no objection for the expunction of the entire relevant portion

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** துணை சபாநாயகர் அவர்களே. நான் உங்களுடைய அனுமதியோடு ஒரு ஒழுங்குப் பிரச்சனையைக் கிளப்பி இருந்தேன்.

(பல உறுப்பினர்கள் குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** டாக்டர் ஹாண்டே அவர்கள் தான் பேசுகிறார்.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.





DR. H. V. HANDE : Sir, I am raising a point of order. The whole proceedings should be there and there should be no expunction. The hon. Member Thiru Latheef has brought in Thirumathi Jothi Vencatachellum just to create a conflict between her and others so that the charge against Pulavar Govindan will be side tracked. By expunging certain portions of the proceedings, you are helping to sidetrack the main issue. We are not concerned about the ruling given by Thirumathi Jothi Vencatachellum when she was in the Chair. But the Opposition has got a right to walk out when we are not satisfied with it. Now the hon. Member Thiru Latheef, is a tool or instrument of the Government and that is why he has brought the issue of Thirumathi Jothi Vencatachellum and by expunging the relevant portion, you are indirectly helping Pulavar Govindan. I submit that at least so far as the discussion on this Resolution is concerned, nothing should be expunged.

MR. DEPUTY SPEAKER : There cannot be a blanket protection. Let the hon. Member, Thiru Latheef, continue his speech.

**திரு. எம். ஏ. லத்தீப் :** தலைவரவர்களே, டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசும்போது என்னைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். எனக்கு இன்றைக்கு உடல் நலம் இல்லை. நான் நிதானமாகப் பேசுகிறேன். ஆனால் அவர் நிதானம் இழந்து பேசக் கூடிய அளவிற்கு நான் அரசாங்கத்தினுடைய டூலாக, இன்ஸ்ட்ருமெண்டாக இருக்கிறேன் என்கிறார். அவர் டாக்டர். அவருக்கு அதுதான் ஞாபகம் வரும். அவருடைய மனச் சாட்சி சொல்லட்டும். நான் என்றைக்காவது மனச்சாட்சிக்கு விரோதமாக, அது யாராக இருந்தாலும், அவர்களுக்காக லத்தீப் தன் மனச்சாட்சியை விடுப்பான் என்று டாக்டர் ஹாண்டே அவர்கள் சொல்லட்டும், நான் ஏற்றுக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE : I definitely say that what I have stated earlier is correct. நான் சொன்னதற்குப் பல ஆதாரங்களைக் காட்ட முடியும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே. பல கட்சிகளுக்கு ஆயுதமாக இருப்பதைவிட ஒரு கட்சிக்கு ஆயுதமாக இருப்பது எவ்வளவோ பரவாயில்லை.

**திரு. எம். சுரேந்திரன் :** தலைவரவர்களே, இந்த உண்மையை முதலமைச்சரவர்கள் அங்கீகரித்ததற்கு நன்றி. திரு. லத்தீப் மீது ...

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, உண்மையை ஒத்துக் கொண்டது என்பது அல்ல. திரு. ஹாண்டே அவர்கள் பல கட்சிகளுக்கு ஆயுதமாக இருப்பது போல திரு. லத்தீப் அவர்கள் அவ்வாறில்லை என்றுதான் சொல்கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** தலைவரவர்களே, நான் பொது மக்களுக்கு ஆதரவாக இருக்கிறேன். லட்சக்கணக்கான மக்களுக்கு ஆதரவாக இருக்கிறேன். அவர் கட்சிக்கு ஆதரவாக இருக்கிறார். நான் மக்களுக்கு ஆதரவாக இருக்கிறேன்.

**திரு. கோவை செழியன் :** தலைவரவர்களே, கேரளாவில் மனச்சாட்சி ஒரு மாதிரியாகவும் தமிழ் நாட்டில் மனச் சாட்சி ஒரு மாதிரியாகவும் இருக்கக் கூடாது.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** தலைவரவர்களே, பல கட்சிகளுக்கு ஆயுதமாக இருப்பதைவிட ஒரு கட்சிக்கு ஆயுதமாக இருப்பது நல்லது என்று முதலமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் நடைமுறையில் முதலமைச்சரவர்கள் பல கட்சிகளுக்கு ஆயுதமாக இருந்தவர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்கள் என்பதைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

*(நண்பகல் 12-00)*

THIRU R. PONNAPPA NADAR : Sir, I would like to make a submission so far as the ruling given by Mrs. Jothi Vencatachellum while presiding over the House and while she was in the Chair, is concerned, that is a matter which is a closed chapter. What I say is, personal insinuations should not be made against any person. I think we will have to follow that good principle in the interest of good debate. It is not a personal thing. It is a thing which has happened and we staged a walk-out. That is a closed chapter. That is not a thing relevant here so far as the matter before the House is concerned. That cannot be brought in here now as a collateral proceeding.

The matter before the House now is that we have tabled a motion and I think we are within our rights to speak on the motion before the House. It will be better if personal insinuations are not made; any such remark against a member of our





party will be out of place. That is the only expression I am going to use. I do not want to use any other strong expression. Whatever has been done has been done in good faith. No insinuation should be made and no personal attacks should be made, Sir.

MR. DEPUTY SPEAKER : The hon. Member Thiru M. A. Latheef may finish within two minutes. It is already time.

**திரு. எம். ஏ. லத்தீப் :** தலைவரவர்களே, இந்த விவாதம் தனிப்பட்ட முறையில் என்னை விமர்சனம் செய்யக்கூடிய முறையில் இருந்தது குறித்து நான் பெரிதும் வருந்துகிறேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் *

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** That question is finished. That has been expunged.

**திரு. எம். ஏ. லத்தீப் :** அதற்கு நான் நன்றி சொல்லிக் கொள்கிறேன். வரும் காலத்தில் ஏதாவது பதவி கிடைக்குமா என்று அமைச்சருக்குப் போகக் கூடிய ஆளில்லை என்று ஒரு கருத்தைச் சொன்னேன். ஆம். நான் எப்பொழுதும் முஸ்லீம் லீகிற்கு ஒரு கருவியாக இருப்பேன் என்பதையும், அந்தக் கருவி காலப் போக்கில், வேகத்திலும், அரசியல் சரித்திரத்திலும் ஏற்படக்கூடிய நச்சுப் பாகங்களை அந்தக் கருவி அறுத்து வீசப்போகிறது என்பதை நான் அவருக்குச் சொல்ல ஆசைப்படுகிறேன். ஆகையினால் நான் சொல்ல வந்ததெல்லாம் நச்சு உள்ளங்களை, நண்பர்களைத் தாக்குகின்ற ஒரு கட்சியிலிருந்து இன்னொரு கட்சிக்குப் பதவி நாடிச் செல்லுகின்றவர்களை, அரசியலிலிருந்து அகற்றுவதற்கு இந்தக் கருவி நிச்சயம் பயன்படும். அதை டாக்டர் ஹாண்டே அவர்கள் உணர்வில் வைத்துக் கொள்ள வேண்டும். சபாநாயகராக யார் உட்கார்ந்தாலும், சில நிலைகளை, மரபுகளைக் கடைப்பிடிப்பதற்காக இருக்கிறார்கள். இந்த அவை நடைபெறுவது மையமாக நடைபெறுவது, எக்சிக்யூடிவ், இந்த மினிஸ்டிரி என்று சொல்லக் கூடிய அமைச்சரவையின் காரணமாக நடைபெறுகிறது. அமைச்சரவை இங்கே உட்கார்ந்து விட்டால்

there cannot be a legislature. The legislature will then be 'potential' legislature. It cannot be a 'kinetic' legislature, which means a creative force.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

ஆகையினால் இந்த பொட்டன்ஷியல் போர்ஸாக இருக்கிற இந்த லெஜிஸ்லேசர் சாடி kinetic force நடமாடும் சக்தியாக இருக்கிற பாடியை மாற்றுவது எக்சிக்யூடிவ் ஒன்று தான். அந்த எக்சிக்யூடிவ்வை சட்டத்திற்கு உட்பட்ட சில நடைமுறைகள் லெஜிஸ்லேஷன் நடைபெறுவதற்குச் சில வகையிலே உதவி செய்வது, காப்பாற்ற வேண்டியது சபாநாயகர் பொறுப்பு என்பது ஜனநாயக மரபாகும். ஆகையினால் இந்த ஜனநாயக மரபுகளுக்குட்பட்டு, சபாநாயகர் எக்சிக்யூடிவ்வை லெஜிஸ்லேச்சர், எக்சிக்யூடிவ்ஸ் காப்பாற்றுவதற்கு, இந்த அவையின் மரபுக்கு உட்பட்டுச் சில நடவடிக்கைகள் எடுப்பார்களானால் அது நிச்சயம் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும்.

சில குறைகள் ஏற்படலாம். இதை அனுமதிக்கவில்லை, அதை அனுமதிக்க வில்லை என்று சொல்லலாம். அதில் தவறில்லை. அதற்காக சபாநாயகர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் அடிக்கடி கொண்டுவருவதன் வாயிலாக நாம் இந்த அவையின் நல்ல ஜனநாயக மரபுகளைக் காப்பாற்றுவதிலிருந்து தவறியவர்களாக இருப்போம் என்ற காரணத்திற்காக இதை நான் சொல்ல விரும்புகிறேன். சில குற்றச்சாட்டுகளைச் சொன்னார்கள். என்ன சொன்னார்கள். சபாநாயகர் அவர்கள் அரசாங்கத்தைப் பாதுகாக்கும் வகையில் சில காரியங்கள் செய்கிறார்கள் என்று சொன்னார்கள். இப்படி நடந்தது, இந்தத் தேதியில் நடந்தது என்ற வகையில் பேசினார்களா என்றால் இல்லை. ஒட்டு மொத்தமாகச் சொல்லுகிறார்களே தவிர, குறிப்பிட்டு, அறுதியிட்டு, குறிப்பேட்டிலிருந்து சொல்லக்கூடிய வகையில் இல்லை. ஆகவே சபாநாயகர் புலவர் கோவிந்தன் நடந்து கொண்ட முறையில், எதிர்க்கட்சியாக இருப்பவர்களுக்குச் சில குறைகள் இருந்தாலும், உள்நோக்கம் கற்பிப்பது, அவர் உள்நோக்கத்துடன் நடந்துகொண்டார்கள் என்பதை மறுத்து, இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நான் எதிர்த்து அமருகிறேன்.

THIRU B. VENKATASWAMY: Sir, in support of the motion before the House for the removal of the Hon. Speaker, I want to offer a few remarks.

The Speaker is the presiding officer of the House. In parliamentary democracy, he presides over every meeting of the House and he is the spokesman of the rights of the whole House. In parliamentry language, he is the mouth-piece of the House. After election as Speaker, it is the convention in this House that he is led to the rostrum of the Speaker by the House and by the Leader of the Opposition. Therefore, the Speaker must be impartial to all sections of the House, both to the Opposition as well as to the ruling party. But here I have to say that the Speaker is not doing like that.





I shall quote a precedent in the Central Legislative Assembly as to how the Speaker spoke on a particular occasion. It is the duty of the Speaker to protect the rights of the Opposition and minorities. On 8th March 1926 when Sardar Vithalbhai Patel was the Presiding Officer, the then Finance Minister has made a demand for customs. But Pandit Motilal Nehru made a statement and then he and the other members of the Swaraj Party walked out of the Central Legislative Assembly Chamber in a body. On that occasion, the Speaker, Sardar Vithalbhai Patel said :—

"The Chair regrets the circumstances which have necessitated the withdrawal from the Chamber of the largest party in this House. This House ceases to be representative in the sense in which it was intended to be by the Government of India Act, and it was for the Government to consider how far they should continue this House or not. But so long as it was allowed to function, I would advise the Government to bring forward only such business as is absolutely necessary for the purpose of carrying on the administration and not to bring forward any controversial measures. The Chair has a duty to see that the machinery of the Government of India Act is not abused to the prejudice of the people of the country and for that purpose this Chair possesses sufficient powers in the shape of adjournment of the House sine die, or in the shape of refusing to put the motion to the House. I think it is necessary in the present atmosphere to adjourn the House till 1 O' Clock ".

This ruling of Sardar Vithalbhai Patel is classic, historical and establishes the duty of the Presiding Officer to protect the rights of the Opposition and minorities from the tyranny and onslaught of the Government and the majority. The powers of the Presiding Officer in upholding the Parliamentary practice is paramount and the constitutional machinery expects every Presiding Officer to uphold those traditions.

But what happened here is different. On that day the elder member of the House, Mr. Manali Kandasami asked the Speaker to adjourn the House since there was heated discussion. He requested adjournment so that tempers might cool down. But

what happened? The Speaker never cared. The House was not adjourned. Tempers increased. The entire opposition walked out and staged a dharna. That could have been avoided. That shows that the Speaker has not been efficient. To the extent he has allowed the dharna to take place, he has shown his inefficiency.

The other day another thing happened. The Speaker ruled that a member should be sent out of the House. The member remained. Nothing was done afterwards. He could have asked the sergeant to remove that member compulsorily. Such sort of things are happening in the Assembly. That shows the inefficiency of the Speaker. The Speaker should be efficient in the discharge of his duties. In Lok Sabha, if a member does not go out as per orders of the Speaker, the sergeant removes him. There should not be any interference from the ruling party. I will give an important example to show that the duties of the Speaker shall not be interfered with by any quarters in the discharge of his duties. On 23rd March 1629, the Crown in the United Kingdom sent a message to Speaker Finch to adjourn the House of Commons. But the Commons refused to adjourn, held the Speaker to the Chair, locked the doors and passed a remonstrative resolution against the British Crown. Thus Parliament in England has firmly settled against any external intervention. But here, our Speaker is often interfered with. He should not be influenced by others, whether Ministers or other members. Every member has equal rights here.

Our Speaker always sees to the Minister to give his decisions. I have never known him pulling up any Minister. I have been a member here for the last 8 years. I have never known the Speaker pulling up any Minister.

Finally, I would say a few words about the Speaker's Secretariat.

MR. DEPUTY SPEAKER: We have the State Legislature Demand and then that could be spoken.

THIRU B. VENKATASWAMY: I will refer to Speaker's office. There should not be any outside influence there. He should be independent. I understand that the Public Service



Commission is making appointments to the Speaker's office. It should not be so. The Speaker should be independent. Further, it should not be a Legislature Department, but it should be the Legislature Secretariat. Because of all these things, the Speaker is not in a position to discharge his duties independently and freely.

At one time, Sardar Vithalbhai Patel, on his election as the Presiding Officer of the Central Assembly, said on the 24th August 1925:

> "In the discharge of my duties, I shall, I assure you, observe strict impartiality in dealing with all sections of the House irrespective of party considerations. From this moment I cease to be a partyman, I belong to no party, I belong to you all."

These are the words of Sardar Vithalbhai Patel. But our Speaker continues to be a ruling party man. He has not resigned his membership of the party. How can we expect justice from him?

Because of all these things, I say our Speaker has shown injustice and partiality towards the Opposition Party members. We therefore request that he should be removed from the office of the Speaker. Thank you, Sir.

திருமதி சத்தியவாணிமுத்து: சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவர்மீது கொண்டு வந்துள்ள இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தில் நானும் பேசுகிறேனே என்றுதான் வருந்துகிறேன். இதற்கு முன்னாலும் அவர்மீது இப்படிப்பட்ட ஒரு தீர்மானம் கொண்டுவரப் பட்டு, பல குற்றச்சாட்டுகள் அப்போது அவர்மீது சுமத்தப்பட்டன. அதற் கெல்லாம் அவர்கள் பதிலைச் சொன்னார்கள். மறுபடியும் அவரே இன்றைக்கு சபாநாயகராக இருக்கிறார். எனவே, இது எல்லாம் சம்பிரதாயத்திற்காக நடைபெறுகின்ற ஒன்றாகத்தான் இருக்கிறது.

நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்து, இந்தத் தீர்மானத்தின் முக்கியத்துவத்தைப்பற்றி வலியுறுத்திப் பேசும்போதெல்லாம் 'அவர் இந்த அவையிலே நடந்துகொள்கிற முறை ஆளும் கட்சிக்குத் துணை போவதாக இருக்கிறது; பொதுவான முறையில் அவர் நடந்துகொள்ளவில்லை' என்ற கருத்துக்களைத்தான் சொன்னார்கள்.

[திருமதி சத்தியவாணிமுத்து] [1975 ஏப்ரல் 2

இந்தத் தீர்மானத்தை இப்போது அவர்மீது கொண்டுவரக் காரணம் மாண்புமிகு மத்திய நிதியமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் வறட்சி நிதிக்கு மத்திய அரசு ஒதுக்குகின்ற நிதியைச் சரியான முறையிலே மாநில அரசு செயல்படுத்தி இருக்கிறதா இல்லையா என்பதைப் பரிசீலித்துத்தான் மேலும் நிதி தரப்படும் என்று சொன்னதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அப்படி அவர் கேட்கிறாரே; அவர் கேட்கலாமா, கேட்கக் கூடாது என்று சொன்னார்கள். அவர் எங்கு பேசினார், என்ன பதிலைச் சொன்னார் என்பதை எல்லாம் கூட இந்த மன்றத்திலே அவர் வைக்கவில்லை. மத்திய நிதியமைச்சர் எப்படி ஒரு பொதுக் கூட்டத்தில் பேசினாரோ அதைப்போல் முதலமைச்சரும் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசியிருக்கிறார். அப்படி என்றால் அந்தப் பணத்தை வாங்கமாட்டேன் என்று சொல்வது, அது அவரைப் பொறுத்தல்ல, இந்த நாட்டைப் பொறுத்தது. எனவே பணத்தை வாங்குவதா கூடாதா என்பதைப்பற்றி முடிவு செய்ய வேண்டியது இந்த மன்றம். மத்திய நிதியமைச்சர் இப்படிச் சொல்லியிருக்கிறார். அவர் சொல்வது சரியல்ல; ஆகவே, அந்த பணத்தை வாங்கலாமா கூடாதா என்று இந்த மன்றத்திலே கேட்டிருந்தால், நாம் தமிழர்கள், இதைச் சொன்னவரும் ஒரு தமிழர்தான்; தமிழ் நாட்டைச் சேர்ந்த ஒருவர்தான் இப்படிச் சொல்லியிருக்கிறார்; ஆகவே அவர்கள் நிதியை ஏற்றுக்கொள்வதா கூடாதா என்று இந்த மன்றத்திலே கேட்டிருந்தால் ஒருவேளை நாமும் ஒத்துக்கொண்டிருககலாம. இந்த மாநிலத்தைச் சேர்ந்த ஒருவர் இந்த மாநிலத்தைப்பற்றித் தவறாகப் பேசிக் கொண்டிருக்கிறார்; அவரும் இந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்தான் என்ற விவரங்களை இந்த மன்றத்திலே வைத்து விவாதித்து முடிவு செய்திருந்தால் எதிர்க்கட்சிகளும் ஒப்புக்கொண்டிருப்பார்கள். முதலமைச்சர் அந்த முறையைக் கையாளாமல், அவர் எப்படிப் பேசலாம், இனிமேல் நிதி பெற்றுக்கொள்ள மாட்டேன் என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் கொடுத்த 6 கோடி ரூபாயைப் பெற்றுக்கொண்டு இப்படிச் சொல்லியிருக்கிறார். அந்தப் பணத்தைத் திருப்பிக் கொடுத்து விட்டு, தனியாக ஒரு நிதியைத் தொடங்கினால் கூட பரவாயில்லை. ஏதோ, வருவது வரட்டும், கொடுப்பதைக் கொடுக்கட்டும் என்ற முறையில் இந்த வறட்சி நிவாரண நிதியைத் தொடங்கியிருக்கிறார்கள். முதலமைச்சருக்கு இருக்கிற தனிப்பட்ட கோபதாபத்தால், பணத்தை வாங்கிக் கொண்டு மேலும் வாங்கமாட்டேன் என்று சொல்லி, வறட்சி நிதிக் குழு ஒன்றைப் போட்டு, இங்கே பணம் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். முதலமைச்சர் இப்படி நடந்துகொள்ளலாமா, இப்படிப் பேசலாமா என்று ஒரு பிரச்சினையை எழுப்பி, அதுபற்றி இங்கே விவாதிக்க வேண்டும்; அதற்கு அனுமதி வேண்டுமென்று எதிர்க்கட்சிகள் சபாநாயகரைக் கேட்டார்கள்.



[திருமதி சத்தியவாணிமுத்து] 1975 ஏப்ரல் 2]

அனுமதி கேட்பது அறையிலா அல்லது இந்த அவையிலா என்றுதான் அன்றைக்கு சர்ச்சை ஏற்பட்டது. சபாநாயகரை அனுமதி கேட்டார்களா இல்லையா என்பது ஒரு பெரிய பிரச்சினை அல்ல. சபாநாயகரை 'கன்சென்ட்' கேட்கிறார்கள். அதை அறையிலே கேட்வேண்டும், அவையிலே கேட்கக் கூடாது என்று சொன்னார்கள். அறையிலே கேட்க வேண்டுமா அல்லது அவையிலே கேட்க வேண்டுமா என்பதற்குச் சரியான விதிமுறைகள் இங்கே இல்லை. அறையில்தான் கேட்க வேண்டுமென்று தெளிவான விதி இருந்து, அதை அவையிலே கேட்டிருந்தால் சபாநாயகர் இப்படிச் சொல்வதில் அர்த்தம் உண்டு. அறையிலே கேட்க வேண்டுமா அவையிலே கேட்க வேண்டுமா என்ற பிரச்சினையில் அன்றைக்குப் பல மணி நேரம் விவாதம் நடைபெற்றது. அந்த விவாதத்திற்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல், அவரே திணறிக் கொண்டு, என்ன முடிவு செய்யலாம் என்று தெரியாமல், அதற்குத் தீர்ப்பு கூறாமலேயே அந்த ஒழுங்குமுறைபற்றிப் பேசலாமா கூடாதா என்று நியாயமான தீர்ப்பு வழங்காமல் அன்றைக்குத் தள்ளிவிட்டார்.

எனவேதான் அவருக்கு அப்படிப்பட்ட ஒரு குழப்பம் இருக்கலாமா, அந்தக் குழப்பம் எதனால் ஏற்பட்டது என்று பார்க்கிற நிலையே உண்டாகிறது. விதிமுறையில் பேரவைத் தலைவருடைய அனுமதியைத்தான் பெறவேண்டுமென்று திட்டவட்டமாக இருக்கிறது. அவர் ஒன்று, எடுத்துக்கொள்கிறேன் என்று சொல்லியிருக்க வேண்டும், இல்லையென்றால் அவையில் கேட்கப்படுவது எடுத்துக்கொள்ளப்படமாட்டாது என்றாவது அறிவித்திருக்கவேண்டும். இந்த ஒரு சிறு பிரச்சினையில் அன்றைக்கு அவர் மிகவும் பிடிவாதமாக இருந்த காரணத்தினால்தான்—எதற்காக அவர் அப்படி இருந்தார், ஆளுகிற கட்சியினர் தம்மைக் குறை கூறுவார்களே என்ற காரணத்தினாலா? பேரவைத் தலைவர் ஆளுகிற கட்சிக்கு அடிமையாக இருக்கலாமா என்கிற அடிப்படையில்தான் இந்தத் தீர்மானத்தையே கொண்டுவந்திருக்கிறார்கள்.

இது அவரது தனிப்பட்ட குணமாக இருக்கலாம் என்றும் கருதுகிறேன். ஆளுகிற கட்சிக்குத் துணைபோகிற நிலை பயத்தின் காரணமாக—நிர்ப்பந்தத்தின் காரணமாக இருக்கிறதா என்பதையும் நாம் கவனிக்கவேண்டும்.

ஏற்கனவே அவர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்த போதும் பேசப்பட்டது. அரிசனங்களுக்காக—தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ஒதுக்கப்பட்ட புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமித்துக்கொண்டார்கள் என்பது ஏற்கனவே பத்திரிகையில் வந்தது. பிறகும் அவருக்கு இந்தப் பதவி கொடுக்கப்பட்டிருக்கிறது. இதுபோல வேறு பல சட்டமன்ற உறுப்பினர்களும் கூட அரிசனங்களுக்காக ஒதுக்கப்பட்ட புறம்போக்கு நிலங்களை கையகப்

படுத்திக்கொண்டிருக்கிறார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. உடனே முதலமைச்சர் அவர்கள்—அதுபோல அரிசனங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிலத்தைப் பெற்றிருப்பார்களானால் உடனே அதைத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும் என்று தெரிவித்தார்கள். முதலமைச்சருடைய கட்டளைக்கிணங்க பலர் திருப்பிக்கொடுத்துவிட்டார்கள். ஆனால் அதுபோல சபாநாயகர் அந்த நிலத்தைத் திருப்பிக் கொடுத்துவிட்டார்களா? இன்றுவரை திருப்பிக் கொடுக்கவில்லை என்று கருதுகிறேன். அப்படிப்பட்ட தனிப்பட்ட பண்பு அவருக்கு இருக்கிறது. தலைவருக்குக் கட்டுப்பட்டோ, கட்சிக்குக் கட்டுப்பட்டோ—அரிசனங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிலத்தை தாம் பெற்றுக்கொண்டுள்ளது சரியல்ல என்பதை எடுத்துச் சொல்லிய பிறகாவது தாமே உணர்ந்தோ அவர் அந்த நிலத்தைத் திருப்பிக் கொடுத்ததாகத் தெரியவில்லை.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அம்மையார் அவர்கள் என்ன சொல்கிறார்கள்? திருப்பிக் கொடுக்கவில்லை என்கிறாரா? கொடுத்து விட்டார் என்கிறாரா?

**திருமதி சத்தியவாணிமுத்து :** திருப்பிக் கொடுக்கவில்லை என்று கூறப்படுகிறது. கொடுத்திருப்பார்களானால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லட்டும்.

இரண்டாவது அவருக்குப் பதவி கொடுக்கப்படவில்லை என்றபோது எப்படி நடந்துகொண்டார்கள்? பதவிதான் முக்கியம் என்கிற நிலையில் எத்தனையோ பேர் வாடி—வதங்கி—அழுங்கி பதவிக்காகவே உட்கார்ந்து கொண்டு இருக்கிறார்கள். அப்படி உட்கார்ந்திருந்தாவது பதவியை வாங்கியிருக்கலாம். ஆனால் இந்த மன்றத்திற்கு வராமலேயே சண்டித்தனம் செய்தார்கள். கட்சியில் இருக்கிறவர்—அந்தப் பதவியைக் கொடுத்தால்தான் உள்ளே நுழைவேன்—அந்தப் பதவி இல்லையென்றால் உள்ளே நுழைய மாட்டேன்—என்பதாக கட்சிக் கட்டுப்பாட்டுக்கோ—தலைவரது கட்டுப்பாட்டுக்கோ உட்படாமல்—சபாநாயகராக இருந்தால்தான் உள்ளே வருவேன்—சட்ட மன்ற அங்கத்தினர் என்றால் டோன்ட் கேர்—உள்ளே வரமாட்டேன் என்று இருந்திருக்கிறார். அப்படி அவருக்கு ஒரு தனிப்பட்ட எண்ணம்—பதவி இல்லையென்றால் உள்ளே போகக் கூடாது என்று. இவைகளை எல்லாம் நான் சுட்டிக்காட்ட காரணம்—அவருக்கென்றே சில குணங்கள் இருக்கின்றன—அந்தக் குணத்தினால்—ஆளுகிற கட்சிக்கு துணையாக இருந்து தம் பதவியைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தினால்—அவர்கள் இதுபோல இங்கே நடந்துகொள்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை நானும் கூற விரும்புகிறேன்.



ஆளுகிற கட்சிக்குத் துணையில்லாத எந்தப் சபாநாயகரும் இங்கே வர முடியாது என்கிற நிலைமையும் உருவாக்கப்பட்டிருக்கிறது. இவருக்கு முன்னால் ஒரு சபாநாயகர் இருந்தார்—சரியோ—தவறோ—ஒரே நேரத்தில் அந்தச் சபாநாயகர் இங்கே இருக்கிறபோதே—இன்னொரு நாற்காலியைக் கொண்டு வந்து போட்டு—அதிலே இன்னொருவரை உட்கார வைத்து சபாநாயகர் சபையை நடத்துகிறபோதே—இன்னொருவர் இன்னொரு சபைபோல இங்கே இந்த அவையில் சில நிகழ்ச்சிகளை நடத்திய வேடிக்கை இங்கே நடந்திருக்கிறது. சபாநாயகர் நாற்காலியில் இருந்து நடக்கிற நிகழ்ச்சிகள் ஒலிபெருக்கியில் வரவில்லை. கீழே உட்கார்ந்து நடத்தியவர்கள் நிகழ்ச்சி ஒலிபெருக்கியில் வந்தது. இப்படி அன்றைக்கு ஒலிபெருக்கி யாருக்கு வேலை செய்தது? ஒருவேளை சபாநாயகர் ஆசனத்தில் இருந்தவரை அங்கே உட்கார செய்தது? ஒருவேளை சபாநாயகர் ஆசனத்தில் இருந்தவரை—சார்ஜன்டை விட்டு கீழே இறங்கி வெளியே அப்புறப்படுத்திவிட்டு இன்னொருவரை அங்கே உட்கார வைத்துக்கூட சபையை நடத்தியிருக்கலாம். ஆனால் அவர் கல்போல் அங்கே உட்கார்ந்திருக்க—புதியசபாநாயகர் கீழே நாற்காலியில் உட்கார்ந்தே இந்த அவையை நடத்த இந்த அவையில் இரண்டு சபைகள் நடந்ததுபோன்ற அலங்கோலமான நிலை அன்றைக்கு இருந்தது. அப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்ட பிறகு சபாநாயகராக வருகிறவர்கள் எப்படி அரசாங்கத்திற்குப் பயப்படாமல் இருக்க முடியும்? அதுபோன்ற நிகழ்ச்சி தங்களுக்கும் வந்துவிடக் கூடாதே என்றுதான் வருகிறவர்கள் ஆளுகிற கட்சிக்குத் துணைபோகிற நிலையே ஏற்படுகிறது. தங்களுடைய பதவி போய்விடுமோ என்ற அச்சம் காரணமாக ஆளுகிற கட்சிக்குத் துணையாக இருக்கிறார்கள். (மணி அடிக்கப்பட்டது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சீக்கிரம் முடியுங்கள். நேரமாகி விட்டது.

**திருமதி சத்தியவாணிமுத்து :** எங்கள் கட்சியின் சார்பில் தாழ்த்தப்பட்டவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். அடக்கி ஒடுக்கப்படுகிறார்கள்—குறிப்பாக வடாற்காடு மாவட்டம் தேக்கவாடியில் 6-ஆம் தேதியன்று தியேட்டரில் ஏற்பட்ட கலவரத்தையொட்டி தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ஆண்கள் கைது செய்யப்பட்டு பின்கை கட்டப்பட்டு—பின்களால் குத்தப்படுகிறார்கள். பெண்கள் கற்பழிக்கப்படுகிறார்கள்—என்கிற தகவல் எனக்குக் கிடைத்து விதி 42-ன் கீழ் இந்த அவசரப் பொது முக்கியத்துவத்தை அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்து விவாதிக்க வேண்டுமென்று நான் தீர்மானம் கொடுத்தேன். சபாநாயகர்—இதுபற்றிய மானியம் விவாதத்திற்கு வருகிறது. அப்போது பேசலாம்—இப்போது இதற்கு அனுமதி அளிக்க முடியாது என்று மறுத்து திருப்பி அனுப்புகிறார்கள். இந்தச் சம்பவம் நடைபெற்றது 6-ஆம் தேதி. அங்கே போலீஸ் இலாக்காவைச் சேர்ந்தவர்கள் அடிக்கிறார்கள்—பெண்கள் அவமானப்

படுத்தப்படுகிறார்கள். இந்தப் பிரச்சினையின் அவசரத்தன்மையை உத்தேசித்து உடனடியாக அரசின் கவனத்திற்குக் கொண்டுவர நான் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். இதற்குச் சபாநாயகர் இடம் தரவில்லை என்றால்—அவருக்கு இருக்கிற சில அதிகாரங்களை வைத்துக்கொண்டு இதற்கு அனுமதி தர மறுத்தால் நாங்கள் எந்த விதிமுறையில்தான் கொண்டுவந்து பேசுவது? எனவேதான், நாங்களும் இந்தச் சபாநாயகர் மீது நம்பிக்கையில்லை என்று கருதுகிறோம்.

இதுபோல ஒன்றிரண்டல்ல—குடியரசுக் கட்சிக்காரர்கள் ஒரு மகாநாடு நடத்துகிறார்கள். அதன் தொடர்பாகப் பலர் கைது செய்யப்படுகிறார்கள். என்ன காரணம்? போராட்டம் என்ன காரணத்திற்காக நடக்கிறது? இந்த முக்கியமான பிரச்சினைபற்றி அவசரத் தீர்மானத்தைக் கொடுத்தேன். அதையும் இப்போது பேசக் கூடாது என்று திருப்பிவிட்டுவிட்டார்கள். ஆகவேதான் சபாநாயகர் மீது நம்பிக்கையில்லை என்ற தீர்மானத்தில் கையெழுத்துப் போட்டு, இந்தத் தீர்மானத்தை ஆதரித்து இங்கே பேசவேண்டிய நிலைக்கு ஆளாக்கப்பட்டுவிட்டேன் என்று தெரிவித்துக்கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, திரு. மணலி கந்தசாமி (திரு. நா. வீராசாமி குறுக்கீடு) நீங்கள் நான் கூப்பிடுகிறபோது பேச வேண்டுமே தவிர, நீங்கள் நினைக்கிறபோது பேச முடியாது.

திரு. மணலி சி. கந்தசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது விவாதிக்கப்படும்—புலவர் கோவிந்தன் அவர்கள் மீது நம்பிக்கையில்லை என்கிற தீர்மானத்தின் மீது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றைக்கு இருக்கக்கூடிய சூழ்நிலையில் இந்தச் சபையை நடத்திப் போவதற்கு மிக அசாத்தியமான பொறுமை வேண்டும். அந்த அடிப்படையில் பார்க்கிறபோது புலவர் கோவிந்தன் அவர்கள் மீது நம்பிக்கை இல்லை என்று சொல்வதைவிட மிக அசாத்தியமான பொறுமையோடு அவர் இந்தச் சபையை நடத்திப் போவதற்கு நான் என்னுடைய பாராட்டுதலைத்தான் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

இன்றைக்கு இந்த அவை அரசாங்கக் காரியங்களிலே அதிக கவனம் செலுத்தக்கூட முடியவில்லை—காரணம் காழ்ப்புணர்ச்சி காரணமாக—விரோதம் காரணமாக—சீக்கிரம் அதிகாரத்திற்கு வரவேண்டுமென்ற நோக்கத்தில் செயல்படுகிற தன்மை மேலாக இருக்கிறதே தவிர பொறுப்புணர்ச்சியோடு—அடுத்த பொதுத் தேர்தலுக்குக் கொஞ்ச நாட்களே இருக்கின்றன—அதுவரை நிர்வாகத்





(முற்பகல் 10-30)

நான் அமைச்சர் அவர்களைக் கேட்பதெல்லாம் ஏன் ஒரு சர்க்கரை ஆலைக்கும் இன்னொரு சர்க்கரை ஆலைக்கும் விலை நிர்ணயம் செய்கிறீர்கள். எந்த அடிப்படையில் நிர்ணயம் செய்கிறீர்கள். அந்த நிர்ணய விலையைக் கொடுக்காத தனியார் ஆலைகளின் மீது எத்தகைய நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு செ. மாதவன்: தலைவரவர்களே, அண்ணா அவர்களுடைய கொள்கையை தொழிற் துறையில் பின்பற்ற வேண்டும், என்று சொன்னார்கள். ஸ்பிக் எப்ப[illegible]ருவானது என்று கேட்டார்கள். அண்ணா அவர்கள் இருந்தபோது [illegible]த் இந்தியா கார்ப்பரேஷன் என்ற தனி நிறுவனம் அண்ணா அவர்களைச் சந்தித்து கூட்டுத் துறையில் ஒரு நிறுவனத்தை ஆரம்பிக்க வேண்டும் என்று மனு கொடுத்தார்கள். அண்ணா அவர்கள் 6—12—1968-ல் அவர்களோடு சேர்ந்து கூட்டு முறையில் ஆரம்பிக்க வேண்டும் என்று உத்தரவு போட்டார்கள் என்று தெரியப்படுத்திக் கொள்ளுகிறேன்.

திரு. செ. அரங்கநாயகம்: கூட்டுத் துறை சார்பில் விளம்பரம் செய்யப்பட்டு இஷ்டப்பட்ட தொழில் அதிபர்கள் விண்ணப்பம் கொடுத்து அதிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்றுதான் சொல்ல விரும்புகிறேன். அண்ணா அவர்கள் மீது ஊழல் புகார்களை யாரும் சொல்லவில்லை. இன்றைய அமைச்சரவை மீது அந்த புகார்கள் இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, திரு. ஏ. எம். இராஜா, நீங்கள் பேசுங்கள். பத்து நிமிஷத்திற்கு மேல் எடுத்துக் கொள்ள வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இது கண்டிப்பான உத்தரவுதான்.

*திரு. ஏ. எம். இராஜா: தலைவர் அவர்களே, தொழில் துறை மானியத்தின் மீது என் கருத்துக்கள் சிலவற்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

கடந்த மூன்றாண்டு காலமாக தமிழ்நாட்டில் புதிதாக தொழில்கள் ஆரம்பிக்கப்படுவது மிக அதிகமாகக் காணப்படுகிறது. ஆகவே[illegible] நாட்டில் ஒரு நல்ல சூழ்நிலை இருக்கிறது. தனிப்பட்ட[illegible] டைரக்டரா[illegible] டைய பணத்தை ரிஸ்க் எடுத்து முதலடு செய்யத் தயாரானதை நான் போ[illegible] இதைத்தான் இன்றைக்கு நாம் பார்க்கிறோம். சீனியர் ஐ.ஏ.எஸ் தொழிலுக்கு மிக முக்கியமானது மின்சாரம். அதிகாரிகள் இருப்ப[illegible] தொழிற் துறையும் மின்சாரத் துறையும் தொழில் [illegible]ரட்டர். இன்னொ[illegible] டமே இருப்பதால் தொழில்கள் நல்லபடியாக [illegible] ஒருவரே எப்ப[illegible] நடத்தப்படுவதற்கு மின்சாரம் கிடைக்கிற வகையில் முடியும்? அப்படியே கவனத்தைச் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் [illegible] என்றால் எப்ப[illegible] இருக்க வேண்டும்

நம்முடைய ஹொகேனக்கல் திட்டத்தின் மூலம் வரும் என்று அப்போதிலிருந்தே சொல்கிறார்கள். கும்போதே சொன்னார்கள். ஹேமாவதி திட்டத்

ஹொகேனக்கல்லையும் கட்டித்தான் ஆக வேண்டும். தெர்மல் ஸ்டேஷன்களை அதிகமாக்க வேண்டும். அடாமிக் ஸ்டேஷன்களை ஆரம்பிக்க வேண்டும். ஆனால், தற்போது ஆரம்பித்துள்ள அடாமிக் ஸ்டேஷன்களிலிருந்து 200, 300 மெகாவாட் தான் கிடைக்கும். அதனால் அதனுடைய உற்பத்திச் செலவு அதிகமாக ஆகிறது என்று சொல்லுகிறார்கள். 2,000 மெகாவாட் என்ற அளவு கிடைக்கக் கூடிய அடாமிக் ஸ்டேஷன்களை ஆரம்பித்தால் உற்பத்தி விலை குறையும் என்று அறிஞர்கள் சொல்லுகிறார்கள். இதையும் அமைச்சர் அவர்கள் கருத்தில் கொண்டு செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, நம் நாட்டைப் பொறுத்த வரையில் பெரிய தொழில் ஒன்றை ஆரம்பிக்க வேண்டும் என்றால் தனியார்கள் ஆரம்பிக்க வேண்டும் என்றால் டில்லிக்குச் சென்று லைசென்ஸ் பெற்று வர வேண்டியிருக்கிறது. புதிதாக ஆரம்பிப்பதற்கு லைசென்ஸ் பெற பகீரதப் பிரயத்தனம் செய்ய வேண்டியிருக்கிறது. டில்லிக்கு ஒரு முறை போய் வர 2 ஆயிரம் ஆகிறது. 10 அல்லது 15 தரம் போனால் தான் லைசென்ஸ் பெற முடிகிறது. இதற்காக நம் அரசு டில்லியில் ஒரு லையசன் ஆபீசை ஏற்படுத்த வேண்டும். இப்போது அப்படிப்பட்ட அலுவலகம் இருக்கிறது. ஆனால், அது அரசாங்கத் துறையில் வருகின்ற லைசென்ஸ்களைத்தான் பார்த்துக்கொண்டு இருக்கிறது. தனியார்கள் தொழில் ஆரம்பிக்க விண்ணப்பம் போட்டபின் அது எந்த ஸ்டேஜில் இருக்கிறது, அந்த விண்ணப்பத்தில் என்னென்ன குறைபாடுகள் இருக்கின்றன, அவைகளில் எதை நிவர்த்தி செய்ய வேண்டும் என்று தனியார்களுக்குத் தகவல் அறிவிக்கத்தக்க ஒரு லையசன் ஆபீஸ் இருக்க வேண்டும். இப்போது இருக்கும் லையசன் ஆபீசையாவது திருத்தி அமைக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இதற்காக தனியார்களிடத்தில் ஒரு கட்டணத்தை வேண்டும் என்றால் கூட வசூலிக்கலாம். குறைந்தது 30 ஆயிரம் 40 ஆயிரம் ரூபாய் லைசன்ஸ் பெறுவதற்காக செலவிடவேண்டிய கட்டாயம் இருக்கின்ற நேரத்தில் ஒரு மூவாயிரம் அல்லது நாலாயிரம் ரூபாய் கட்டணமாக வைத்துக்கொண்டு அவர்களுக்கு வேண்டிய உதவியைச் செய்வதில் தவறு இல்லை. அமைச்சர் அவர்கள் இது பற்றி நல்ல முடிவை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

—த்திப் போடி,ார்நிலத்தில் பேக்வர்ட் ஏரியாஸ் என்று சிலவற்றை டிக்ளேர்
என்று நினைக்கிறேன். ர்கள். படம்போட்டு காட்டப்பட்டு இருக்கிறது. Backward
for interest free sales tax loan and concessions
இன்றைக்கு இந்த அவை income-tax என்ற இதில் திருநெல்வேலி மாவட்டம்,
சேலம் மாவட்டம் நீலகிரி மாவட்டம் இவை விடப்பட்டு
செலுத்தக்கூட முடியவில்லை—கா என்ன பாவம் செய்தன என்று எனக்குத்தெரிய
காரணமாக—சீக்கிரம் அதிகாரத்வட்டம் தொழில் துறையில் மிகவும் வளர்ந்து
படுகிற தன்மை மேலாக இருக்கிறது. ஆனால், கிழக்கு கோயம்புத்தூரை எடுத்துக்
பொதுத் தேர்தலுக்குக் கொஞ்ச ல் வளர்ச்சி கிடையாது. திருநெல்வேலி மாவட்டம்
அடைந்த இடமா என்றால் அதுவும் இல்லை.

எஸ். ஜே. சாதிக் பாட்சா: கோவை மாவட்டத்தில்





திரு. ஏ. எம். இராஜா: இப்போது தான் ராஜாவை மாற்றிவிட்டு அமைச்சர்களை, வைப்பது என்ற ஜனநாயக முறையைக் கைக்கொண்டு இருக்கிறோமே. இந்த நாலு மாவட்டங்களைத் தவிர ஒவ்வொரு மாவட்டத்திலும் பின்தங்கிய பகுதிகளாக பல தாலுக்காக்கள் காட்டப்பட்டு இருக்கின்றன. Backward areas eligible for subsidy என்று 27 தாலுக்காக்கள் உதவியைப் பெறுகின்றன. இராமநாதபுரம், மதுரை, வட ஆர்காடு, தர்மபுரி, புதுக்கோட்டை மாவட்டங்களிலேயே இந்த 27 தாலுக்காக்கள் என்று இருப்பதை ஒரு மாவட்டத்திற்கு இரண்டு தாலுக்காக்கள் என்ற அளவிப் பிரித்து ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இந்த சப்சிடி கிடைக்கில் அளவு பாக்வார்ட் ஏரியாஸ் எலிஜிபிள் பார் சப்சிடி என்று இடங்களைப் பிரிக்க வேண்டும். இதற்கு மத்திய அரசு தடையாக இருக்காது என்று கருதுகிறேன்.

மத்திய அரசு அதிகமாக பேக்வோர்டு ஏரியாக்களை ஏற்படுத்தி தொழில்களை ஆரம்பிக்க அனுமதி கொடுப்பது இல்லை. சப்சிடியும் கிடைப்பதில்லை. இருக்கிற 27 தாலுக்காக்களை பிரித்துக் கொள்ள நமக்கு அதிகாரம் இருக்கிறது. இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாகச் செய்தால்தான் நலமாயிருக்கும். இல்லையென்றால் கோவையில் இருக்கும் புதிய தொழில் முனைவர்கள் எப்படி வேறு மாவட்டத்திற்குச் சென்று தொழில் ஆரம்பிக்க முடியும். பக்கத்தில் உள்ள தாராபுரம், பல்லடம் என்று இருந்தால் தொழில் ஆரம்பிக்க முன்வரக்கூடும். அதைப்போலவே சங்கரன்கோவில், நாங்குநேரி போன்ற பகுதிகள் திருநெல்வேலியில் பின்தங்கிய தாலுக்காக்கள். சேலத்தில் சங்ககிரி, திருச்செங்கோடு போன்ற பகுதிகள் பின்தங்கிய தாலுக்காக்கள். ஆகவே இதையெல்லாம் மாற்றி அமைக்க வேண்டும்; இப்படிப்பட்ட பின்தங்கிய தாலுக்காக்களும் இந்த லிஸ்டில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமைச்சர் அவர்கள் உடனடியாக இதைக் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்கே இப்போது இண்டஸ்ட்ரீஸ் டிபார்ட்மெண்ட் தனியாக இயங்குகிறது. இப்போது பல கார்ப்பரேஷன்களும் ஏற்பட்டு இருக்கின்றன. ஒவ்வொரு கார்ப்பரேஷனும் தனித்தனியாக இயங்குகின்றன. சரியான co-ordination கிடையாது. அதனால் இண்டஸ்டிரீஸ் டைரக்டரை சேர்மனாக போடவேண்டும். டெக்னிகல் பர்சன்ஸ்களை மானேஜிங் டைரக்டராக போடவேண்டும். தொழில் துறையினைச் சார்ந்தவர்களைத்தான் போட வேண்டும். போர்ட் மெம்பர் தகுதியில் இருப்பவர், சீனியர் ஐ.ஏ.எஸ். அதிகாரியாக இருக்க வேண்டும். செகரட்டரியே சேர்மனாக இருப்பது ஒத்துவராது. ஒரு பக்கத்தில் அட்மினிஸ்ட்ரேட்டர். இன்னொரு பக்கத்தில் எக்சிகியூட்டராக இருக்கிறார். அவர் ஒருவரே எப்படி முரண்பட்ட இரண்டு வேலையைச் செய்ய முடியும்? அப்பலேட் அதிகாரியும் அவரே, எக்சிகியூட்டரும் அவரே என்றால் எப்படி தொழில் வளர முடியும். எக்சிகியூட்டர் தனியாக இருக்க வேண்டும்.

அட்மினிஸ்ட்ரேட்டர் தனியாக இருக்க வேண்டும். செகரட்டரி சேர்மனாக இருப்பதை மாற்றி இண்டஸ்ட்ரீஸ் டைரக்டரையே சேர்மனாக போர்ட் மெம்பர் அந்தஸ்தில் போட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மற்றும் ஒன்று. இந்த இண்டஸ்ட்ரீஸ் டிபார்ட்மெண்டில் பலர் நீண்ட காலம் ரெகுலரைஸ் செய்யப்படாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு இன்கிரிமெண்ட் கூடக் கிடையாது. இதுவும் கவனிக்கப்பட வேண்டும்.

இந்த இண்டஸ்ட்ரீஸ் டிபார்ட்மெண்டில் டெக்னிக்கல் போஸ்ட்டில் நான்—டெக்னிகல் ஆட்களைப் போடுகிறார்கள். அங்கே டெபுடி டைரக்டர், அசிஸ்டெண்ட் டைரக்டர்கள் ஆக எஸ்.எஸ்.எல்.சி. படிப்பே போதும் என்று சொல்லுகிறார்கள். சிப்காட்டில் கிளார்க் வேலைக்கே எம்.ஏ. வேண்டும் என்று சொல்லுகிறார்கள். ஆனால் இங்கே டெபுடி டைரக்டர் ஆக எஸ். எஸ். எல். சி. போதும் என்று சொல்லுகிறார்கள். இந்த நாட்டில் பி.இ. படித்தவர்கள் இல்லையா? ஆகவே நிறைய பி.இ. படித்தவர்களைப் போட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

சர்க்கரை ஆலை விஷயத்தில் ஒரு முக்கியமான விஷயத்தைப்பற்றி பேச வேண்டும். தற்போது நம் மாநிலத்தில் புதிதாக சர்க்கரை ஆலைகள் ஆரம்பிக்கப்பட இருப்பதாக அறிவிக்கப்பட்டு இருக்கிறது. ஒன்று ஈரோட்டில் துவக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஈரோட்டுப் பகுதி மக்கள் அப்படிப்பட்ட ஒரு ஆலைக்கு ஷேர் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அந்தப் பகுதியில் கரும்பும் நிறைய அளவு கிடைக்கும். கட்டாயமாக அந்தப் பகுதியில் சர்க்கரை ஆலை ஒன்று துவக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மற்றும் ஒன்று. இந்த அறிக்கையில் கூட்டுறவு சர்க்கரை ஆலைகள், தனியார் சர்க்கரை ஆலைகளைவிட நல்ல விதத்தில் இயங்கி இருக்கின்றன. உற்பத்தியும் கூட்டுறவு ஆலைகளில் அதிகமாக இருந்து இருக்கிறது. ரெகவரியும் அதிகமாக இருக்கிறது. பொதுவாக, கூட்டுறவுத் துறையைவிட தனியார் துறைதான் திறமையாக நடத்தப்படுகிறது; லாபம் ஈட்டுகிறார்கள்; கூட்டுறவுத் துறையில் நஷ்டம்தான் வரும் என்பது பொதுவாக பரவலாக உள்ள கருத்தாகும். ஆனால் இன்றைக்கு கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் நல்ல விதத்தில் இயங்கி இருக்கின்றன. தொழில் அதிபர்களும் இதைப் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். கூட்டுறவு ஆலையில் 73-74ல் ஒரு டன் கரும்புக்கு ரூபாய் 137 கொடுத்து இருக்கிறார்கள். தனியார் ஆலையில் அதிகபட்சமாக 110 தான் கொடுத்து இருக்கிறார்கள். அதைப்போல 72-73ல் ஒரு டன் கரும்புக்கு ரூபாய் 127 கொடுத்து இருக்கும்போது தனியார் ஆலைகள் 114 தான் கொடுத்து இருக்கிறார்கள். இப்படி ஏற்பட்டு இருப்பது தனியார் ஆலைகளில் உள்ள நிர்வாகத் திறமையின்மையாலா அல்லது ஏமாற்று





லாலா என்பதை அரசு கண்காணித்தாக வேண்டும். ரெகவரியைப் பற்றியும் எந்த தனியார் ஆலையிலும் சரியாக தெளிவாக சொல்லுவது கிடையாது. அவர்கள் சொல்லுவதுதான் ரெகவரி என்று இருக்கிறது.

உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால் தனியார் ஆலைகள் ஒரு நாளைக்கு 19,700 டன் அரைக்கிறார்கள். அதில் ஒரு சதவிகிதம் தவறு செய்தால் கூட 197 குவிண்டால் சர்க்கரை கிடைக்கும். ரெக்கவரியில் அரை சத விகிதம் அடித்தால், கணக்குப் போட்டுப் பாருங்கள், ஒரு நாளைக்கு 197 டன் சர்க்கரை கிடைக்கிறது. இப்படி அவர்கள் ரெக்கவரியிலும் தவறு செய்கிறார்கள், உற்பத்தியிலும் தவறு செய்கிறார்கள். கரும்பிற்கு சரியான விலையும் கொடுக்க மறுக்கிறார்கள். ஆகையால் இந்த சர்க்கரை ஆலைகளை எல்லாம் அரசு ஏற்று நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அரசு நிர்ணயம் செய்த விலைக்கு சர்க்கரை ஆலைகளில் சில கொடுக்கவில்லை. அருணா சர்க்கரை ஆலையில் கரும்பு விலை 102 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டது. ஆனால் அவர்கள் கொடுத்தது 98 ரூபாய்தான். சவுத இந்தியா சர்க்கரை ஆலை விலை ரூ. 104.75 என்று நிர்ணயம் செய்யப்பட்டது. ஆனால் அவர்கள் கொடுத்தது 97 ரூபாய்தான்.

இவர்கள் ஏன் இப்படி ஏமாற்றுகிறார்கள்? இப்படி ஏமாற்றுதல் செய்கிறவர்கள் மீது அரசாங்கம் கடுமையான நடவடிக்கை எடுத்து அவர்களைத் தண்டிக்க வேண்டும். இப்படிப்பட்ட ஆலைகளை அரசே ஏற்று நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

* திரு. ஏ. பாலையா: பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் துறை மானியக் கோரிக்கைமீது காங்கிரஸ் கட்சியின் சார்பில் ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

தமிழ்நாட்டுத் தொழில் துறையில் தமிழ் நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் மிக முக்கியப் பங்கை வகித்துக்கொண்டிருக்கிறது. இந்த நிறுவனம் பின்தங்கிய பகுதிகளில் தொழில்களைத் தொடங்கி அல்லது தொழில்களைத் தொடங்க துரித நடவடிக்கைகளை எடுத்து, துரித தொழில் முன்னேற்றங்களை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகளையும் வழிவகைகளையும் கண்டறிந்து அங்கே எந்தெந்தவிதமான தொழில்களை ஆரம்பித்தால் தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க முடியும் என்ற ஒரு அரிய நோக்கத்தைக் கொண்டதாக இந்த நிறுவனம் அமைக்கப்பட்டிருக்கிறது.

எங்கெங்கெல்லாம் தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க முடியும் என்ற ஆய்வுகளை நடத்தி, எங்கெங்கெல்லாம் புதிய தொழில்களை தொடங்க முடியும் என்ற ஏற்பாடுகளை இந்த நிறுவனம் நிர்வகித்துக் கொண்டு வருகிறது. பொதுவாக இந்த நிறுவனம் ஐந்தாவது திட்டக்காலத்தில் 37 தொழில்களை

தொடங்கும் திட்டங்களை வைத்துக் கொண்டிருக்கிறது. இதன் மொத்த மூலதனம் சுமார் 340 கோடி ரூபாய். இந்த மொத்த மூலதனத்தில் பொதுத்துறையில் 90 கோடி ரூபாயும், கூட்டுத் துறையில் 250 கோடி ரூபாயும் செலவு செய்யப்பட இருக்கிறது. இதன் அடிப்படையில் இந்தத் திட்டங்கள் செயலுக்கு வந்தால், இந்தத் திட்டங்கள் தமிழ்நாட்டில் அமுலுக்கு வந்தால் கூட்டுத் துறையில் 11,500 பேர்களுக்கும் பொதுத் துறையில் 5,500 பேர்களுக்கும் வேலைவாய்ப்பு கொடுக்க முடியும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இத்திட்டங்களை எல்லாம் 1976-77; 1977-78 ஆகிய ஆண்டுகளில்தான் முடிவுறும் என்று இந்தத் தொழில்துறை அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. நாம் இந்தத் தொழில் மானியக் கோரிக்கையைப் பற்றி விவாதிப்பது 1975-76-ஆம் ஆண்டுக்கானது. இந்த நேரத்தில் 1977-78-ல் நடைபெற்று வேலை வாய்ப்புகளைக் கொடுக்கக்கூடிய திட்டங்களைப்பற்றி நாம் சொல்வது எவ்வளவு உண்மையாக இருக்க முடியும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இது ஒரு தவறான திட்டத்தை மக்களுக்கு அளிப்பதாகத்தான் இருக்க முடியும் என்று நான் கருதுகிறேன்.

பொதுவாக இந்தத் தொழில் முன்னேற்ற நிறுவனம், தமிழ்நாட்டில் எங்கெல்லாம் பின்தங்கிய பகுதிகள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும், வேலைவாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்தைக் கொண்டது என்று நான் குறிப்பிட்டேன். ஆனால் இந்தத் தொழில் நிறுவனம் 4 மாவட்டங்களிலே மட்டும் சுற்றிச் சுற்றி தங்களுடைய தொழில்களை ஆரம்பித்து செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. பொதுவாக மதுரை, இராமநாதபுரம், தர்மபுரி, சென்னை போன்ற மாவட்டங்களில் தான் இந்த நிறுவனத்தினுடைய செயல் திட்டங்கள் அமைந்திருக்கின்றன.

இந்த நிறுவனத்தின் மூலம் இராமநாதபுரம் மாவட்டத்தில் "தமிழ்நாடு ஃபுளோரின் அண்டு அலைடு கெமிகல்ஸ் லிமிடெட்" என்ற நிறுவனத்தை ஆரம்பிக்கப் போகிறார்கள். அதனுடைய மூலதனம் 5½ கோடி ரூபாய். அதைப்போல இராமநாதபுரம் மாவட்டம் மண்டபத்தில் இழு படகுகள் தளம் அமைக்கும் திட்டம் இருக்கிறது. அதற்கு 80 இலட்சம் ரூபாய் மூலதனம். அதைப்போல தமிழ்நாடு கெமிக்கல் ப்ராடக்ட்ஸ் லிமிடெட் நிறுவனம் 4.45 கோடி ரூபாய் மூலதனத்தில் நிறுவப்பட இருக்கிறது. தமிழ்நாடு ரப்பர் லிமிடெட் நிறுவனம் 25½ கோடி ரூபாய் மூலதனத்தில் நிறுவப்பட இருக்கிறது. அதைப்போல ஆனைக்காரன்பட்டியில் 2.40 கோடி ரூபாய் மூலதனத்தில் ஒரு தொழிலும், மானாமதுரையில் 4.5 கோடி ரூபாய் மூலதனத்தில் ஒரு தொழிலும், நிறுவப்பட இருக்கின்றன. இவ்வளவும் இராமநாதபுரம் மாவட்டத்தில் செயல்படுத்தப்படுகின்ற திட்டங்களாகும்.



அதைப்போல தர்மபுரி மாவட்டத்தில் ஓசூரில் 1271 ஏக்கர் பரப்பளவில் தமிழ்நாடு இண்டர்நேஷனல் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் நிறுவனம் 2 கோடி ரூபாய் மூலதனத்தில் செயல்பட இருக்கிறது. ஆசியா புகையிலை நிறுவனம் லிமிடெட் சுமார் 2½ கோடி ரூபாய் மூலதனத்தில் ஓசூரில் அமைக்கப்பட இருக்கிறது. அஷியன் பேரிங்ஸ் லிமிடெட் நிறுவனம் 10 கோடி ரூபாய் மூலதனத்தில் தொடங்கப்பட இருக்கிறது. இவை தர்மபுரி மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட இருக்கிற தொழில்கள்.

அதைப்போல மதுரை மாவட்டமும் இருக்கிறது. மதுரை மாவட்டம் ஏற்கெனவே தொழில் துறையில் முன்னேறி இருக்கிற மாவட்டம். இந்த மாவட்டத்தில் கப்பலூரில் ஸ்கூட்டர் தொழிற்சாலை ஒன்று 2½ கோடி ரூபாய் மூலதனத்தில் செயல்பட இருக்கிறது. பாண்டியன் கெமிக்கல்ஸ் லிமிடெட் 80 லட்சம் ரூபாய் மூலதனத்தில் ஆரம்பிக்கப்பட இருக்கிறது. தமிழ்நாடு நைலான் நூல் தொழிற்சாலை லிமிடெட் 12 கோடி ரூபாய் மூலதனத்தில் தொடங்கப்பட இருக்கிறது.

இத்தகைய திட்டங்கள் எல்லாம் பின்தங்கிய பகுதிகளில் அமைக்கப்பட வேண்டும். ஆனால் குறிப்பாக சில மாவட்டங்களில் மட்டும் இப்படிப் பட்ட பெரிய திட்டங்களை எல்லாம் அமைத்துவிட்டு, ஏராளமான பின்தங்கிய இடங்களில் அமைக்கப்படாமல் இருப்பது ஓரவஞ்சனையோடு சர்க்கார் நடந்துகொள்கிறது என்பதைத்தான் எடுத்துக்காட்டுகிறது.

இந்தத் தொழில் நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கமே பின்தங்கிய பகுதிகளிலே வாழ்கின்ற மக்களுக்கு வேலைவாய்ப்புகளை அளித்து அந்த பிற்பட்ட பகுதியை முன்னேற்ற வேண்டுமென்பதற்காகத்தான். ஆனால் அந்த நோக்கம் நிறைவேறுமா என்பது சந்தேகமாக இருக்கிறது. ஏனென்றால் தொழில் திட்டங்களை நிறைவேற்றும் இடங்கள் அப்படி இருக்கின்றன.

அதைப்போல சென்னை இருக்கிறது. சென்னை பல்வேறு துறைகளிலே முன்னேறியிருக்கிறது. இது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். அப்படி இருந்தும் கூட பல்வேறு தொழில் நிறுவனங்கள் இந்த தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் மூலம் தொடங்கப்பட இருக்கின்றன. இதை எல்லாம் பார்க்கின்ற நேரத்தில் இந்தத் தொழில் நிறுவனம் சென்னை, இராமநாதபுரம், தர்மபுரி, மதுரை ஆகிய இந்த 4 மாவட்டங்களுக்காகத் தான் அமைக்கப்பட்டிருக்கிறதோ என்ற சந்தேகம் எழுகிறது.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கூட மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் தொழில் அபிவிருத்தித் தொகுதிகளை நிறுவுவதற்கு அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. இப்படி இந்த மாவட்டங்களுக்கு எல்லாம் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.

தொழில் துறையில் பின்தங்கிய மாவட்டங்கள் ஏராளமாக இருக்கின்றன. குறிப்பாகச் சொல்லப்போனால் கன்னியாகுமரி மாவட்டம் மிகவும் பிற்பட்ட ஒரு மாவட்டமாகும். தொழில் முன்னேற்றமே அடையாத

[திரு. எ. பாலையா] [1975 மார்ச் 29

ஒரு மாவட்டம் அது. அப்படி இருந்தும் இந்தச் சர்க்கார் கன்னியாகுமரி மாவட்டத்தை அடியோடு மறந்துவிடக்கூடிய நிலையில் இருக்கிறது. அதனால் எனக்கு ஒரு ஐயம் ஏற்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாட்டில்தான் இருக்கிறதா அல்லது பழைய மாதிரியே கேரள மாநிலத்தில் இருக்கிறதா என்ற ஐயப்பாடு ஏற்படுகிறது. காரணம் பல கோடி ரூபாய்க்கான திட்டங்கள் எத்தனையோ தமிழ்நாட்டில் போடப்படுகின்றன; ஏற்கெனவே பல திட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன. அதில் ஒரு சிறு பகுதிகூட அந்த மாவட்டத்திற்கு வழங்கப்படவில்லை.

நாங்கள் நீண்ட நாட்களாக ஒரு கோரிக்கையை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டே இருக்கிறோம். கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் ஏராளமாக கிடைக்கிறது. 20,000 ஏக்கரில் அரசு ரப்பர் தோட்டம் அங்கே செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. ஏராளமான ரப்பர் கிடைக்கிறது. தனியார் ரப்பர் தோட்டங்களிலிருந்தும் ஏராளமான அளவுக்கு ரப்பர் கிடைக்கிறது. இந்த ரப்பரை வைத்துக்கொண்டு ஒரு ரப்பர் தொழிற்சாலையை அங்கு அமைக்க வேண்டுமென்று நாங்கள் நீண்ட நாட்களாகக் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

அதைப்போல இன்னும் கன்னியாகுமரி மாவட்டத்தில் மணவாளக்குறிச்சி மணல் ஆலை இருக்கிறது. அங்கு கிடைக்கின்ற மணல் உலகப் புகழ் பெற்றுள்ளது. பல்வேறு ரக மணல் வகைகள் அங்கே தயார் செய்யப்பட்டு, ஜப்பான், அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன. அந்த மணலை மூலப் பொருளாக வைத்து பெயிண்ட் தொழிற்சாலையும், மின்சார பல்பு தொழிற் சாலையும் அமைக்க வாய்ப்புகள் இருக்கின்றன. இந்தத் தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் அவைகள் பற்றி ஆராய வேண்டும்.

இந்தத் திட்டங்களை எல்லாம் தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் நிச்சயமாகக் கவனிக்க வேண்டும்.

அடுத்தபடியாக, தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் தமிழ்நாட்டில் 1967-68 இல் 395 செயல்பட்டு வந்தன. ஆனால் 1973-74 இல் 336 தொழில் கூட்டுறவுச் சங்கங்களே செயல்படுகின்றன. இதுபோலத் தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை குறைந்துவிட்டதற்குக் காரணம் என்ன? இதை ஆராய வேண்டும்.

மேலும் இந்தத் தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் 19·32 லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது, இந்த நஷ்டம் எவ்வாறு ஏற்படுகிறது? இதை அரசாங்கம் சிந்திக்க வேண்டும். இன்றைக்கு நஷ்டத்தில்தான் ஏராளமான தொழில் கூடங்கள் தமிழகத்தில் செயல்படுகின்றன. (மணிஅடிக்கப்பட்டது)

*திரு. எ. ஆர். சுப்பையா: பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் துறை மானியத்தை வரவேற்று என் கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இன்று இரண்டு வகையில் தொழில் முன்னேற்றத்திற்காக நமது அரசு செயல்படுகின்றது. ஒன்று இலாக்கா மூலம், மற்றொன்று கார்ப்பரேஷன்கள் மூலம்.



1975 மார்ச் 29] [திரு. எ. ஆர் சுப்பையா]

இலாக்கா சம்பந்தப்பட்ட மட்டில் ஒன்றிரண்டு சீர்திருத்தங்கள் தேவை. அது பற்றி சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இன்றைக்கு மினரல் டெவலப்மெண்டு என்பதாக தனிப்பிரிவு இருக்கிறது. இவர்கள் மூலப்பொருள்களைப் பற்றி விரிவாக ஆராய்ந்துகொண்டிருக்கிறார்கள். மூலப்பொருள்களை மட்டும் ஆராய்ந்து பயன் இல்லை. அந்தந்த மூலப்பொருள்கள் என்ன என்ன வேலைகளுக்குப் பிரயோஜனம் என்பதைப் பற்றியும் ஆராய்ந்து மாதந்தோறும் இந்தப் பிரிவின் மூலம் அறிக்கை வெளியிடப்பட்டால்தான் தொழில் துறையில் உள்ளவர்களுக்கு உபயோகமாக இருக்கும். எந்த எந்த ஏரியாவில் என்ன என்ன மூலப்பொருள்கள் கிடைக்கின்றன; அவற்றை எந்த எந்தத் தொழில்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதைத் தெரிந்து தொழில்களை ஆரம்பிக்க விரும்புகிறவர்கள் பயன்படுத்திக் கொள்வதற்கு வாய்ப்பு ஏற்படும்.

அதுபோக, கெமிகல் லாபரடரி என்று இருக்கின்றது. காரைக்குடியில் லாபரடரி இருக்கிறது. அங்கே கெமிகல்களைப் பற்றி ஆராய்ந்து கொண்டே இருப்பதனால் பிரயோசனம் இல்லை. அவற்றைக் கொண்டு என்ன என்ன தொழில்களுக்கு பயன்படுத்திக்கொள்ளலாம் என்பது பற்றியும் மாதந்தோறும் அவர்களும் ஒரு அறிக்கை கொடுக்க வேண்டும். அதன் மூலம் செயல்படுத்த மக்களுக்கு ஊக்கம் கிடைக்கும்.

அதேமாதிரி ஆன்ஸிலரி இண்டஸ்ட்ரீஸ் இன்றைக்கு சர்க்கார் துறையிலும், தனியார் துறையிலும் நடந்துக்கொண்டிருக்கின்றன. மேற்கொண்டும் என்ன என்ன செய்யலாம், A survey should be conducted within six months or a year. அதைச் செய்து அதன் மூலம் இன்ன இன்ன தொழில்களுக்கு இன்ன இன்ன பாகங்களைத் தயாரிக்கலாம் என்பது அறிவிக்கப்பட்டால் இந்தத்துறையில் இன்னும் அதிக அளவுக்கு அங்கங்கே சிறுசிறு தொழிற்சாலைகள் உண்டாக வாய்ப்பு ஏற்படும்.

அதுபோக, ப்ளானிங் அண்டு டெவலப்மெண்டு செல் என்பதாக இலாக்காவில் ஒரு செல் இருந்து கொண்டிருக்கிறது. அது இன்றைக்கு என்ன வேலை செய்து கொண்டிருக்கிறது என்பதே ஒரு கேள்விக் குறியாக இருக்கிறது. நல்ல தொழில் வளம் படைத்தவர்கள்கூட இன்றைக்கு உற்சாகத்தை இழந்து கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு ப்ளானிங் செல்லில் உள்ளவர்கள் வெறும் சிமின்ட் விநியோகம் செய்வது; இண்டஸ்ட்ரியல் கோவாப்ரேடிவ்ஸ், இண்டஸ்டரியல் எஸ்டேட் ஆகியவற்றின் வேலைகளைப் பார்ப்பது என்றுதான் இருக்கிறார்களே தவிர புதுப்புதுதொழில்களை உண்டாக்கக் கூடிய அளவில் ப்ளான்களைத் தயாரிப்பதாக இல்லை. வருங்காலத் திட்டங்கள் குறித்து ஆராய்ச்சி செய்வதாக இல்லை. அட்மினிட்ஸ்ரேஷன் ஒரு பக்கம் இருக்கட்டும். நான்- டெக்கனிக்கல் ஸ்டாப்பைக் கொண்டு அதைப் பார்த்துக்கொள்ளலாம். டெக்னிகல் ஸ்டாப்புகளைக் கொண்டாவது ப்ளானிங் அண்டு டெவலப்மெண்டு குறித்து—எதிர்காலத்

[திரு. எ. ஆர். சுப்பையா] [1975 மார்ச 29

தமிழக தொழில் வளர்ச்சி குறித்து ப்ளான் போட்டுக்கொண்டே இருக்க ஏற்பாடு செய்ய வேண்டும். நிறைய அதிகாரிகளை வேலை வாய்ப்பு இல்லாமல் அரசு வைத்துக்கொண்டிருக்க முடியாது.

இதுபோக ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரிகளை அங்கங்கே உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். ஆனால் அவை எவ்வாறு செயல்படுகின்றன என்பது கவனிக்கப்படுவதே இல்லை. Whether they are in existence.? அது பற்றி எந்தவிதமான கணக்கும் எடுக்கப்படவில்லை. இண்டஸ்ட்ரிக்களை ஸ்டார்ட் பண்ணிவிட்டால் போதாது. ரா மெட்டீரியல்களை சப்ளை செய்து விட்டால் போதாது. அவை சரியான முறையில் செயல்படுகின்றனவா என்பதை அவ்வப்போது கண்காணித்து வரவும் தக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

அதுபோக தொழில் வளர்ச்சிக்காக—சிப்காட், டிட்கோ, சிட்கோ, டான்சி போன்றுகார்ப்பரேஷன்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அது வரவேற்கத் தக்கது. ஆனால் நல்ல முறையில் செயல்பட வழி இருக்க வேண்டும். இன்றைக்கு சேர்மென், டைரக்டர்களுக்கு எல்லாம் பர்மனெண்ட் எஸ்டாபிளிஸ்மெண்டு-பர்மனெண்ட் எக்ஸிஸ்டென்ஸ் இல்லை-சேர்மெனை 3 மாதங்களுக்குள் மாற்றிவிடுகிறார்கள். சேர்மென்-மானேஜிங் டைரெக்டர்களை எல்லாம் இதுபோல மூன்று, மூன்று மாதங்களுக்குள் மாற்றிவிட்டால் என்ன செய்வது? கார்ப்பரேஷன் பணி என்ன என்பதைத் தெரிந்து கொள்ளவே 3 மாதம் ஆகும். அதற்குள் மாற்றப்பட்டு விடுகிறார்கள். அதுபோலச் செய்யக் கூடாது.

அதோடு இன்னும் வருந்தக்கூடிய சமாசாரம் என்னவென்றால் டைரெக்டர்கள்-செக்ரடரிகளை—8, 10, 20 நிறுவனங்களுக்கு சேர்ந்தாற் போல போடுகிறார்கள். இதன் காரணமாக அவர்களால் கோட்டையில் வேலை பார்க்க முடியவில்லை. அங்கேயும் வேலை பார்க்க முடியவில்லை. கார்ப்பரேஷனுக்கு புல்டைம் சேர்மென்களைப் போட வேண்டும். தொழில் துறையில் உள்ளவர்களைப் போட வேண்டும். வெளியில் இருப்பவர்களைக் கொண்டுவந்து சேர்ப்பது நல்லதல்ல. ஒருவர் ஒரு தொழிலில் தொடர்ந்து இருந்தால்தான் அந்தத் தொழில் சிறப்பாக நடைபெற பணியாற்ற வாய்ப்பு ஏற்படும்.

இன்றைக்கு பிரிக் யூனிட்டை எடுத்துக்கொண்டால் சிராமிக் கார்ப்பரேஷன் கீழ் ஒரு பிரிக் யூனிட் இருக்கிறது. தமிழ்நாடு இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மெண்டு கார்ப்பரேஷன் கீழ் ஒரு பிரிக் யூனிட் இருக்கிறது. இரண்டையும் கணக்கு எடுத்துப் பார்த்தால் மிகவும் வருந்தக்கூடிய நிலையில் இருக்கிறது. தமிழ்நாடு சிராமிக் இண்டஸ்ட்ரீஸ் கீழ் உள்ள பிரிக் யூனிட்டில் 1970 ஆம் வருஷம் 10 லட்சம் நஷ்டம். 1974 இல் 12 லட்சம் நஷ்டம். இதை ஏன் தனியாக வைத்துக்கொண்டிருக்க வேண்டும்.? சதர்ன் பிரிக் வொர்ச்ஸ் என்டதாகத் தமிழ்நாடு இண்டஸ்ட்ரீஸ் இன்வெஸ்ட்மெண்டு கார்ப்பரேஷன்கீழ் ஏன் இந்த இரண்டு யூனிட்டையும் கொண்டு வரக்கூடாது? அப்படிக் கொண்டுவருவதன் மூலம் நஷ்டத்தைக் குறைக்கலாம் அல்லவா? இதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கிறேன்.



1975 மார்ச் 29] [திரு. எ. ஆர். சுப்பையா]

அதுபோக, ஒவ்வொரு கார்ப்போரேஷனும் ஒழுங்காக செயல்படுகின்றதா என்பதைக்கவனிக்க அமால்கமேடெட் பார்மில் இருக்கக்கூடாது—தனியாகவே Vigilance cell attached to finance department ஏற்படுத்த வேண்டும்.

அடுத்து, இன்றைக்கு பின்தங்கிய பகுதியில் தொழில்கள் வளர வேண்டும் எனபதற்காகத் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தை—டிட்கோ ஏற்படுத்தினோம். இதன்மூலம் மாநிலத்தில் உள்ள பின்தங்கிய மாவட்டங்களில் தொழில்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனவா என்று பார்த்தால் ஒன்றும் இல்லை. சென்னை-செங்கற்பட்டில் மட்டும் 8 தொழிற்சாலைகள் இராமநாதபுரத்தில் 5 வந்திருக்கின்றன. தர்மபுரி ரொம்ப பின்தங்கிய மாவட்டம்—அங்கே மூன்று கொடுக்கப்பட்டிருக்கின்றன. எங்கள் திருநெல்வேலிக்கு இரண்டே இரண்டு. டிட்கோ ஏற்பட்டதே பின்தங்கிய பகுதியில் தொழில் வளத்தைப் பெருக்கத்தான். சென்னை—செங்கற்பட்டிற்கு அதிகமாகக் கொடுத்திருப்பதற்குக் காரணம் என்ன ? இந்தப் பாகுபாட்டைக் குறைத்து உண்மையில் மிகவும் பின்தங்கிய பகுதியாக உள்ள இடங்களில் போதுமான முக்கியத்துவம் கொடுத்து இது செயல்பட வேண்டுமென்று சொல்லிக் கொண்டு, என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 11-00]

*திரு. எம். முத்தையா.—தலைவரவர்களே, இந்தத் தொழில் வளர்ச்சித் துறை மானியததை ஆதரித்து நானும் எனது கருத்துகளைச் சொல்ல விழைகின்றேன்.

நம் நாட்டிலே பெரும்பாலும் விவசாயத்தை நம்பியிருந்தார்கள். ஆனால், இப்பொழுது ஜன நெருக்கடி காரணமாக, ஆங்காங்கு உள்ளவர்கள் சிறு சிறு தொழிற்சாலைகளை ஏற்படுத்தி, அதனை ஒரு குடிசைத் தொழில் மாதிரி நடத்தலாமா என்று நினைக்கிற நேரத்திலே, அரசு மூலமாகக் கடன் வழங்கப்படுகிறது. அந்தக கடனை வாங்கி அவர்கள் தொழிலை ஆரம்பிக்க முடியுமா என்றால் முடியாது. ஏனென்றால், அவர்கள் கொடுக்கின்ற நிபந்தனையைப் பார்த்தால் தருகின்ற பணம் போதாததாக இருக்கிறது. ஆகவே, சிறு தொழில்களுக்குத் தகுந்தவாறு கடன்களைத் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள ஆசைப் படுகிறேன்.

திருநெல்வேலி மாவட்டத்தைப் பொறுத்த அளவிலே, அநேகமாக தொழில்களே இல்லை. அது மிகவும் பின்தங்கிய மாவட்டமாகும். அங்குள்ள ஒட்டப்பிடாரம் கோவில்பட்டி, விளாத்திக்குளம், சங்கரன்கோயில், நாங்குநேரி போன்ற தாலுக்காக்கள் மிகவும் பின்தங்கிய தாலுக்காக்கள். அங்கு சிறு சிறு தொழில்களைத் தொடங்கினால் விவசாய மக்கள் போக மீதமுள்ளவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். அதுவும் போக இந்த வறட்சியான காலத்திலே அவர்களுக்கு மிகவும் உதவிகரமாக இருக்கும் என்று நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதற்கடுத்தபடியாக, தொழிலைப்பற்றி கேட்கும்போது என்ன சொல்கிறார்களென்றால், எங்கெங்கு மூலப்பொருள்கள் கிடைக்கின்றனவோ, அந்தந்த இடங்களில்தான் அந்தத்தொழில்கள் ஆரம்பிக்கப்படும் என்று சொல்கிறார்கள். அப்படி பார்க்கின்ற நேரத்திலே, மூலப்பொருள் ஓரிடத்திலே கிடைக்கிறது. ஆனால் தொழில் தொடங்குகிற இடம் இன்னொரு இடமாக இருக்கிறது. இப்படி வட்டத்திற்கு வட்டம், மாவட்டத்தில் மாவட்டம் என்று சொல்கின்றபோது, எங்கள் பின்தங்கிய மாவட்டத்திற்கு ஏன் ஒரு தொழிற்சாலை அமைக்கக்கூடாது என்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

எனது தொகுதியைச் சேர்ந்த ஒட்டப்பிடாரம் பகுதியிலே சிமெண்டுக்கான மூலப்பொருள் கிடைக்கிறது. ஒட்டப்பிடாரம் வட்டாரத்திலே கயத்தாறு யூனியனிலும் சிமெண்டுக்கான மூலப்பொருள் கிடைக்கிறது. அது எங்கே செல்கிறது? தாழையூத்து சங்கர் சிமெண்ட் தொழிற்சாலை, ஆலங்குளத்தில் உள்ள அரசாங்கம் நடத்துகிற சிமெண்ட் பாக்டரி, ஆகிய இடங்களுக்குச் செல்கிறது. ஒட்டப்பிடாரம் பகுதியிலாவது, கயத்தாறு பகுதியிலாவது ஒரு சிறு சிமெண்ட் தொழிற்சாலையை ஏற்படுத்தக்கூடாதா? அரசாங்கம் முன் நின்று ஆரம்பிக்கக்கூடாதா? அப்படி நடத்தினால் அங்குள்ள மக்களுக்கு மிகவும் வேலை வாய்ப்பு கிடைக்கும். அப்படி இருந்தால் கஷ்டம் தீரும் என்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒட்டப்பிடாரம் பகுதியிலேயுள்ள மக்கள் தக்காளியை மிகவும் அதிகமாகப் பயிர் செய்கிறார்கள். அங்கு தக்காளி ஏராளமாகப் பயிரிடப்படுகிறது. அந்தத் தக்காளியை பானைகளில் அடைத்துச் சென்னை வரை அனுப்புகிறார்கள். ஆனால், அவர்களுக்கு நியாயமான விலை கிடைக்கவில்லை. அப்படி ஏராளமாகப் பயிராகிற தக்காளிப் பழத்தைக் கொண்டு ஜூஸ் தயாரிக்கும் தொழிற்சாலை ஏற்படுத்தினால் அரசுக்கு அந்நியச் செலாவணியும் கிடைக்கும் அங்குள்ள விவசாயிகளுக்கு நிரந்தரமாக வேலையும் கிடைக்கும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கட்டபொம்மன் கோட்டை திறப்பு விழாவின்போது ஒரு உறுதி மொழி கொடுத்தார்கள். அந்த உறுதி மொழியை இங்கே சொல்ல விரும்புகிறேன். "உங்களுக்கு நான் ஒரு உறுதி மொழி கொடுக்கிறேன். இந்த வட்டாரம் மிகவும் பின்தங்கிய வட்டாரம். இநத வட்டாரத்திற்கு நான் வந்தது முதற்கொண்டு இந்த வட்டாரம் வளம் கொழிக்கக்கூடிய வட்டாரமாக ஆக்கப்பட வேண்டுமென்று நினைக்கிறேன்" என்று உறுதிமொழி கொடுத்தார்கள்.

அங்கே, கூட்டுறவுத் துறையில் நூற்பாலை ஒன்றை இயக்கவிருப்பதாக அமைச்சரவர்கள் உறுதி கூறினார்கள். ஆனால், இதுநாள் வரையில், அதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. ஆகவே, மாண்புமிகு தொழில் அமைச்சரவர்களும், முதலமைச்சரவர்களும் உடனடியாக, மக்களிடம் உறுதிகூறிய மாதிரி நூற்பாலையொன்றை அங்கு தொடங்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.





அதற்கடுத்தபடியாக, தூத்துக்குடியிலே மத்திய சர்க்காரும் மாநில சர்க்காரும் சேர்ந்து ஒரு உரத் தொழிற்சாலையை இயக்கி வருகின்றன. அங்கு ஆட்களை வேலைக்கு தேர்ந்தெடுக்கும்போது, திருநெல்வேலி மாவட்டத்திற்கப்பாற்பட்டவர்களைத் தேர்ந்தெடுக்கிறார்களேயொழிய, எங்கள் மாவட்டத்திலுள்ளவர்களைத் தேர்ந்தெடுக்கவில்லை. ஆகவேதான் சொல்கிறேன், ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆரம்பிக்கப்படுகிற தொழிற்சாலையிலும் அந்தந்த மாவட்டத்திலுள்ள மக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, வேலை வாய்ப்புக் கொடுக்க வேண்டும். அந்த மாவட்டம்—இன்னொரு மாவட்டம்—இந்த மாநிலம் அந்நிய மாநிலம் என்று அந்தத தொழிற்சாலையிலே வேலை செய்யக்கூடியவர்களுக்குள் ஒரு தகராறு—பூசல் ஏற்பட்டுள்ளது. இது அமைச்சரவர்களுக்குக்கூட தெரியும். ஆகவே, உரத் தொழிற்சாலையில் இனிமேலாவது அங்குள்ளவர்களுக்கே முக்கிய பங்கு கொடுத்து ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்றும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மதுரை மாவட்டத்திலே, மதிப்பிற்குரிய மாண்புமிகு முதலமைச்சரவர்கள், உசிலம்பட்டியிலே, ரூ. 2 கோடியில் 25,000 கதிர் கொண்ட நவீன நூற்பாலை ஒன்றை ஆரம்பிக்கவிருப்பதாகச் சொன்னார்கள். அது என்ன நிலையிலிருக்கிறது என்று தெரியவில்லை. 6 மாதத்திற்கு முன்பாக மதுரை வந்தபோது மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கூடிய விரைவில் இது தொடங்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அதனை உடனடியாக ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது மாவட்டத்தில், இந்த ஒட்டப்பிடாரத்தில், முதலமைச்சரவர்கள் வாக்குறுதி கொடுத்த நூற்பாலையைத் தொடங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு, எனது உரையை முடித்துக்கொள்கிறேன் வணக்கம்.

*திரு. சு. துரைசாமி. தலைவரவர்களே, இந்த மன்றத்தில் தொழில் அமைச்சரவர்களால் கொண்டு வரப்பட்ட மானியக் கோரிக்கையை ஆதரித்து எனது கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற தமிழ் நாட்டில் தொழில் வளர்ச்சி, பெரிய தொழில்கள் என்ற புத்தகத்தில், 1974-ம் ஆண்டு 6,985 தொழிற்சாலைகள் இருப்பதாகவும், அதிலே பணியாற்றக்கூடிய தொழிலாளர்களின் எண்ணிக்கை 4,98,798 என்ற கணக்கையும் கொடுத்திருக்கிறார்கள். நம்முடைய, தமிழ்நாட்டு மக்கள் தொகையைக் கணக்கிட்டுப் பார்த்தால், ஏறத்தாழ 4–3/4 கோடி, 5 கோடி மக்கள் வாழ்கின்ற இவ்வளவு பெரிய தமிழ் நாட்டில், 4,98,798 பேர்தான் தொழிற்சாலையில் வேலை பார்க்கிறார்கள் என்பது மிகவும் குறைவானது என்று கருதுகிறோம். இந்த எண்ணிக்கையை அதிகமான தொழில்களைத் துவக்கியும் அதிகமான தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்தும், உயர்த்த வேண்டுமென்றும் அதற்கு நம்முடைய அரசாங்கம் முயற்சி எடுக்க வேண்டுமென்றும் நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

பெரிய தொழில் என்கின்ற அடிப்படையில் நெய்வேலி சுரங்கம் இணைப்பு ரெயில் பெட்டித் தொழிற்சாலை, இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் நிறுவனம் போன்ற அமைப்புகளை விரிவுபடுத்துவதற்கும் ஏராளமான தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கவும் மத்திய அரசாங்கம் எந்தவிதமான முயற்சியும் எடுத்ததாகத் தெரியவில்லை. இந்தப் புத்தகத்தில், இரண்டாவது சுரங்கத்தை நெய்வேலியில் வெட்ட வேண்டும் என்று மத்திய அரசாங்கத்திடம் வலியுறுத்திச் சொல்லியும், அவர்கள் செவி சாய்க்கவில்லையென்றுதான் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய அரசாங்கம் வற்புறுத்தி, மத்திய அரசாங்கத்தின் சார்பாக இருக்கக் கூடிய தொழிற்சாலைகளை விரிவுபடுத்தவும் போதிய தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கவும் முயற்சி எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தொழில் துறையைச் சேர்ந்த பல்வேறு வாரியத் தலைவர்கள், அவற்றில் பொறுப்பேற்றிருக்கக் கூடியவர்கள் எல்லாம் இங்கே வந்திருக்கிறார்கள். 'தமிழ்நாட்டில தொழில் வளர்ச்சி—தொழில்களுக்கு நிதியுதவி' என்ற புத்தகத்தில், ஒப்பளிக்கப்பட்ட நிதி உதவி தமிழ்நாட்டிற்கு ரூ. 27,60.7 இலட்சம என்றும் வழங்கப்பட்ட நிதி உதவி ரூ. 21,84.6 இலட்சம் என்றும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், மஹாராஷ்டிரத்திற்கு ஒப்பளிக்கப்பட்ட நிதி உதவி ரூ. 52,69.3 இலட்சம் என்றும் வழங்கப்பட்ட நிதியுதவி ரூ. 35,05.5 இலட்சம் என்றும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏராளமான, நிதி உதவியை மஹாராஷ்டிர மாநிலம் பெற்றிருப்பதை நாம் பார்க்கிறோம். நம்முடைய தமிழ்நாட்டிற்குப் பணம் கிடைக்க, இங்கே தொழிற்சாலைகள் தொடங்க, இந்தத் துறையிலே பணியாற்றுகின்ற பெரிய அதிகாரிகள் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலே; பஞ்சாலைத் தொழில்தான் பெரிய தொழிலாக அமைந்திருப்பதைப் பார்க்கிறோம். நம்முடைய அமைச்சரவர்கள் சொன்னார்கள், பஞ்சாலை சம்பந்தமான மானியக் கோரிக்கை முடிந்துவிட்டது என்று. என்றாலும், எல்லா மானியக் கோரிக்கைகளிலும் பேச வாய்ப்பில்லையென்ற காரணத்தால், தெரிவிக்கிறேன், இந்தப் பஞ்சாலைத் தொழிலுக்கு எதிர்காலத்தில் நெருக்கடி வராமல் இருக்க அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும்.

கடந்த 1966 ஆம் ஆண்டிலேயும், 1967 ஆம் ஆண்டிலேயும் பஞ்சாலைகள் எல்லாம் நெருக்கடிக்கு ஆளாகி பல ஆலைகள் மூடப்பட்டதையும் அவற்றைத் திறப்பதற்கு அரசாங்கம் எவ்வளவு முயற்சிகளை எடுத்துக் கொண்டது என்பதையும் நாம் அறிவோம். கடந்த சில மாதங்களாக நூல் தேக்கம் ஏற்பட்டிருக்கிறது. சரியான விலை கிடைக்காத நிலையில் எந்த அளவிற்குப் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை அரசாங்கம் கவனிக்க வேண்டும். அண்மையிலே கூட அதற்கு 2 சதவீதம் சேல்ஸ் டாக்ஸ் என்று இருந்ததை 3 சதவீதமாக உயர்த்தியிருக்கிறார்கள். அது அதிகமாக அந்தத் தொழிலை பாதிக்கும் என்று கருதுகிறேன். ஆகவே இதை எல்லாம் கவனித்து அரசாங்கம் அந்தத் தொழில் எந்த வகையிலும் சிதைந்து விடாமல் இருக்கக்கூடிய முறையில் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





தமிழ் நாட்டிலே பஞ்சாலைத் தொழில்போல் பனியன் தொழிலும் முக்கியமானதொன்றாகும். உற்பத்தி செய்கின்ற பனியன்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி வெளிநாடுகளிலே மார்க்கெட் பிடிப்பதற்கு அரசாங்கம் முயற்சியெடுத்துக்கொள்ள வேண்டும். அப்படி செய்தால்தான் இந்தத் துறை வளருவதற்கு வாய்ப்பு ஏற்படும். ஆகவே அரசாங்கம் வெளிநாடுகளிலே பனியன்களுக்கு மார்க்கெட் பிடிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, எஞ்சினியரிங் தொழில் இருக்கிறது. தமிழ் நாட்டிலே ஏராளமான பம்பு செட்டுகளைத் தயாரிக்கிறோம். அவைகளுக்கும் வெளிநாட்டிலே மார்கெட் ஏற்படுத்தக்கூடிய வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டும். அவற்றைத் தயாரித்து வெளிநாடுகளுக்கு அனுப்பக்கூடியவர்களுக்கு அதிகமான ஊக்கம், சலுகைகள் கொடுத்தால்தான் எஞ்சினியரிங் தொழில் நல்ல முறையிலே வளர முடியும். அந்தத் தொழில் நிலைத்து நிற்கும். ஆகவே, அதற்கான வாய்ப்புகளை அரசு ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழில் துறையில் பிற்படுத்தப்பட்ட பகுதிகள் என்று அறிவிக்கப்பட்டு அங்கே தொழில் அமைப்புகள் ஏற்படுத்தப்படுகின்றன. முன்னாலே பேசிய உறுப்பினர் திரு ஏ. எம். இராஜா அவர்கள் சொன்னதைப்போல் கோவை மாவட்டத்திலே உள்ள பல்லடம், தாராபுரம், அவிநாசி ஆகிய பின்தங்கிய பகுதிகள் இருக்கின்றன. அந்தப் பகுதி பருவ மழை, பொய்த்து வருகின்ற பகுதியாக இருப்பதால் அந்த மூன்று தாலுக்காக்களையும் தொழில் துறையிலே பின்தங்கிய பகுதிகளாக அறிவிக்கவேண்டும். தர்மபுரியிலே தொழில் துவங்க கோவையிலே இருக்கிற தொழிலதிபர்கள் மறுக்கிறார்கள் தர்மபுரி, ஹோசூருக்குச் செல்லக்கூடியவர்கள், நாங்கள் இன்னும் 20 மைல் தாண்டினால் மைசூரிலே தொழில் ஆரம்பித்தால் அங்கே சலுகைகள் கொடுக்கிறார்கள். அங்கே ஆரம்பிப்போம் என்ற முறையிலேதான் சொல்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் பல்லடம், தாராபுரம், அவிநாசி ஆகிய பின்தங்கிய பகுதிகளில் தொழில்களைத் துவங்குவதற்கு அரசாங்கம் போதுமான வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழிலுக்கு அடிப்படைத் தேவை மின்சாரம்தான். மின்சாரம் இல்லாமல் எந்தத் தொழிலும் நடக்க முடியாது, வளர முடியாது. தமிழ் நாட்டிலே மின்சார உற்பத்தியை அதிகமாக்கவேண்டும். சிட்கோ, டி.ஐ.ஐ.சி. (T.I.I.C.) ஆகியவை மூலமாக 20 ஆயிரம், 30 ஆயிரம் பணம் வாங்கி மூலதனம் போட்டு தொழில்களை ஆரம்பித்தாலும்கூட அந்தத் தொழில்களுக்கு மின்சார இணைப்பு கிடைக்கவில்லை. அதனால் வாங்கிய கடனும் முடங்கிக் கொண்டிருக்கிறது. ஆகவே சிறு தொழில்களுக்கு முன்னுரிமை கொடுத்து மின் இணைப்பு கொடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறு தொழில்களைப் பொறுத்தவரையில் நம்முடைய மாநிலத்திலே மின்சாரக் கட்டணமும் அதிகமாக இருக்கிறது. கேரளா, ஆந்திரா, மைசூர் ஆகிய மாநிலங்களிலே வாங்கப்படுகிற மின்சாரக் கட்டணத்தோடு

ஒப்பிட்டுப்பார்க்கிறபோது நம்முடைய மாநிலத்திலே மின்சாரக் கட்டணம் சிறு தொழில்களுக்கு அதிகமாக இருக்கிறது. அதைக் குறைப்பதற்கு அரசாங்கம் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

இன்னொரு கருத்தையும் சொல்லலாமென நினைக்கிறேன். இன்றைக்கு நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகள் இருக்கின்றன. அந்த வங்கிகளிலிருந்து கடன் பெறவேண்டுமென்றால் செக்யூரிட்டி, பொறுப்பு வேண்டும் என்று சொல்கிறார்கள். அப்படி இருந்தால்தான் கடன் கொடுக்கப்படும் என்று சொல்கிறார்கள். சிட்கோ, டி.ஐ.ஐ.சி. மூலமாகக் கடன், 10 சதவீதம், 25 சதவீதம் என்ற அளவிற்கு கொடுத்தால் மீதமுள்ளவற்றை அவர்கள் ஹையர் பர்ச்சேஸ் என்ற முறையிலே வாங்கிக் கொடுக்கிறார்கள். ஆனால நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகளில் செக்யூரிட்டி கேட்கிறார்கள். சாதாரணமானவர்கள் தொழில்களை ஆரம்பிக்க வேண்டுமென்றால் கஷ்டமாக இருக்கிறது. நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகளின் மூலமாக சிறு தொழில்கள் ஆரம்பிக்கவேண்டுமென்று விரும்புகிறவர்களுக்கு ஏதாவது ஒரு முறையை வைத்து கடன்களைக் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்யவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

சிறு தொழில்களைப் பொறுத்தவரையில் சமீபத்திலே அவர்கள் எல்லாம் மின்வாரியத்தில் டெபாசிட்டுகள் கட்டவேண்டுமென்று சொல்கிறார்கள். பனியன் தொழில் செய்கிறவர்கள், பவர்லூம் பேக்டரி வைத்திருக்கிறவர்கள், 2 தறி வைத்திருக்கிறவர்கள் எல்லாம் டெபாசிட்டு கட்டவேண்டுமென்று சொல்கிறார்கள். அதைத் தள்ளி வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த மாதத்திற்குள் அவர்கள் கட்டாவிட்டால் பியூஸை பிடுங்குவார்கள் என்று சொல்கிறார்கள். ஆகவே, அமைச்சர் அவர்கள் அவ்வாறு செய்யாமல் இருக்க அந்த டெபாசிட்டு கட்டுவதைத் தள்ளிவைக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசாங்கத்தின் மூலமாக சிட்கோ, டி.ஐ.ஐ.சி. (T.I.I.C.) மூலமாக மேற்கொள்ளப்படுகின்ற முயற்சிகளை நாம் பாராட்டிக்கொண்டிருக்கிறோம். முன்பெல்லாம் டி. ஐ. ஐ. சி. யிலே பெரிய தொழில் அதிபர்கள் கடன் வாங்கக்கூடிய நிலைமைதான் இருந்தது. ஆனால் இன்றைக்கு 20 ஆயிரம், 30 ஆயிரம் மூலதனம் போடக்கூடியவர்கள் எல்லாம்கூட சிறு தொழில்கள் ஆரம்பிக்க அங்கே இருந்து உதவிபெறலாம் என்ற முறை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. சிட்கோவிலே பணியாற்றக்கூடியவர்கள் உற்சாகத்தோடு பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். என்னுடைய திருப்பூர் நகரில் சிட்கோ மூலமாக ஒரு தொழில் பேட்டையை 75 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்தப் போகிறார்கள். அதை விரைவிலே ஏற்படுத்த ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

தொழில் துறையில் இவ்வளவு ஆர்வத்தோடும் [illegible]த்தோடும் அரசாங்கம் இருந்தாலும்கூட தொழில் துறையில் இருக்கக்கூடிய சில அதிகாரிகள் உற்சாகக் குறைவாக செயல்படுகிறார்கள். அவர்கள் செய்கிற



தவறுகளை திருத்திக்கொள்ள வேண்டுமென்ற முறையிலே நான் இந்தக் கருத்தைச் சொல்கிறேன். இங்கே இருக்கின்ற பல்வேறு தொழில் துறை அதிகாரிகளும் அதை உணரவேண்டுமென்ற முறையிலே சொல்கிறேன்.

திருப்பூரிலே செல்வி எஞ்சினியரிங் தொழில் என்று ஆரம்பிக்க 2–8–1974-ல் மனு போட்டார்கள். இது சிட்கோவிலிருந்து 15–11–1974 அன்று டி. ஐ. ஐ.சி.க்கு போயிற்று. டெக்னிக்கல் ரிப்போர்ட் கேட்டு 7–1–1975இல் அது இண்டஸ்ட்ரீஸ் டிபார்ட்மெண்டிற்கு அனுப்பப்பட்டது. இன்றைக்குவரை, 3 மாத காலமாகியும் அனுமதி கிடைக்கவில்லை. இந்தத் துறையிலே உள்ள டெபுடி டைரக்டர் ரிப்போர்ட்டை அனுப்பாமல் இன்னும் காலதாமதம் செய்துகொண்டிருக்கிறார். இப்படி இருந்தால் எப்படி புதிய தொழில்களை ஆரம்பிக்க முடியும், முன்வருவார்கள் என்பதை யோசிக்க வேண்டும். அந்த அதிகாரியைப் பார்க்க திருப்பூரிலிருந்து அவ்வளவு பணம் செலவழித்து இங்கே வரமுடியுமா ? இப்படிப்பட்ட குறைகளும் இருக்கக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொண்டு, அரசாங்க மானியத்தை வரவேற்று, ஆதரித்து, உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* திரு. எம். சுரேந்திரன்: தலைவர் அவர்களே, இந்தத் தொழில் மானியத்தைப் பார்க்கிறபோது மிகக் குறைவான தொகையாக இருக்கிறது. இந்தத் தொகையை வைத்தே, வருகின்ற மானியம் எவ்வளவு என்ற கணக்கைப்பார்த்தே அந்தத் துறையின் வேலையை, அந்தத் துறையின் தன்மையை ஓரளவிற்குப் புரிந்துகொள்ளமுடியும் என்று நான் கருதுகிறேன். இந்த மானியத்தில் கிட்டத்தட்ட 7 அல்லது $7\frac{1}{2}$ கோடி ரூபாய்தான் கேட்கப்பட்டிருக்கிறது. இந்தத் தொழில் துறை என்பது விவசாயத்திற்கு அடுத்தபடியாக நிலங்கள்மீது உச்சவரம்பு, சீர்திருத்தம் போன்றவையெல்லாம் கொண்டுவந்துவிட்டபிறகு விவசாயிகள் பலபேர்கள் இந்தத் தொழில் துறையில் மூலதனத்தை முடக்குவதற்கான சூழ்நிலை இருக்கிறபோது அதை இந்தத் துறையானது கவருவதற்கும் தொழிற்சாலைகளை நிறுவுவதற்கும் தேவையான முயற்சிகளை எடுத்துக்கொள்வது அவசியமாகும்.

அந்த முறையிலே பார்த்தால் சாதாரணமாக சொல்லப்படுவது எல்லாம் மத்திய அரசுதான் எல்லாவற்றிலும் குறுக்கிட்டுக்கொண்டிருக்கிறது. நாங்கள் தொழில்கள் துவங்க வேண்டுமென்று கேட்டால் மத்திய அரசு அனுமதி தருவதில்லை என்று அமைச்சர்களாலும் மற்றவர்களாலும் வாதம் செய்யப்படுகிறது. மத்திய அரசின் அனுமதியில்லாமல் ஒரு கோடி ரூபாய்க்குள் மூலதனம் போடக்கூடிய தொழில்களை இங்கேயே செய்துகொள்ள முடியும் என்று அவர்கள் அனுமதித்துள்ளார்கள். அப்படியிருந்தும் நம் மாநிலத்திலே ஏற்பட்டுள்ள தொழில் வளர்ச்சி பற்றியும் செயல்படுகின்ற விதத்தையும் பார்த்தால் மகிழ்ச்சியளிக்கக்கூடியதாக இல்லை. காரணம் அரசாங்கத்தின் சார்பில் நடத்தப்படுகின்ற தொழிற்சாலைகள் எல்லாம் ஒன்றை நோக்கமாகக் கொண்டிருக்கவேண்டுமென்று எனக்கு தோன்றுகிறது. ஒன்று இந்த மாநில மக்களுக்கு மிகத் தேவையான உபயோகப் பொருட்களை உண்டாக்க வேண்டும். இரண்டாவது இந்த மாநிலத்திலே உள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தைப்

போக்குவதற்கு பயன் உள்ளதாக இருக்கவேண்டும், மூன்றாவதாக அந்தத் தொழிற்சாலையிலே வேலை செய்கிறவர்கள் மனநிறைவுடனே தனியாக தொழிற்சாலைகளில் பணியாற்றுகிறவர்களைவிட அதிகமான சௌகரியங்கள், வசதிகள், சம்பளம் பெறக்கூடியவர்களாக இருக்கவேண்டும் ஆகிய இவற்றையெல்லாம் செய்வது அரசாங்கத்தினுடைய கடமையாகும். இந்த வகையிலே பார்க்கும்போது டான்சியால் தொடங்கப்படுகிற தொழில்கள் யாவும் எஞ்சினியரிங் வேலை சம்பந்தப்பட்டவையாகும். அங்கே அந்தத் தொழிலாளர்களுக்கு எஞ்சினியரிங் தொழிலில் ஈடுபடுகிறவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற ஊதியம் தரப்படுகின்றதா என்றால் இல்லை.

என்ஜினியரிங் தொழிற்சாலையில் வேலைசெய்யும் தொழிலாளர்களுக்கும் சம்பளம் கொடுப்பது சம்பந்தமாக ஒரு பரிந்துரை வந்திருக்கிறது. அதன்படி அந்தத் தொழிலாளர்களுக்குச் சம்பளம் தருவதற்கு அது நடைமுறையிலே வரவில்லை பல ஆண்டுகளாக. அதோடு மட்டுமல்லாமல், அந்தத் துறையிலே பணிபுரிபவர்கள் ஃபிட்டர், டர்னர் என்றால் அவர்களது டெசிக்னேஷன் ஒழுங்காக இருக்க வேண்டும், அதற்குத் தகுந்த சம்பளம் தர வேண்டும். அதற்கேற்ற வசதிகளைத் தர வேண்டும். அந்த முறை இருக்கிறதா என்றால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. ஏதாவது ஒரு டெசிக்னேஷனை வைத்து, அவர்கள் எல்லா வேலைகளையும் செய்யவேண்டுமென்ற முறையிலே இன்றைக்கும் தொழிற்சாலைகளில் நடந்துகொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோல் நம்முடைய மாநிலத்திற்கு மிகவும் தேவையான மீட்டர் தயாரிக்கும் தொழிற்சாலை இருக்கிறது. மீட்டர் தயாரிக்கும் தொழிற்சாலை வடக்கேதான் இருக்கிறது. அவர்கள்தான் மொனாபலியாக இருக்கிறார்கள் என்ற நிலையை மாற்றி திருச்சியிலேயும் ஏற்படுத்தி, அது நல்ல விதத்திலே இயங்குகிறது. அதேபோல் இந்தியா மீட்டர் என்ற தொழிற்சாலை மூடப்பட்டு அங்கேயுள்ள தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருப்பதோடு, நம்முடைய பணமும், மத்திய அரசாங்கத்தின் பணமும் சாப்பிடப்பட்டு சீரழிந்து இருக்கிறது. அந்த மீட்டர் தொழிற்சாலையை நாம் ஏன் எடுத்து நடத்தக்கூடாது, அதற்காக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

அடுத்தாற்போல, தொழில் கூட்டுறவுகள் என்று பல தொழில் கூட்டுறவுகளை அமைத்திருக்கிறோம். ஆனால், இவைகளிலே ஏதாவது தொழில் கூட்டுறவு சரியாக, இலாபகரமாக நடக்கிறதா என்றால் மிகக் குறைவான எண்ணிக்கையிலேதான் இலாபகரமாக நடக்கின்றன. தொழிற் கூட்டுறவு என்று ஆரம்பிப்பது, ஏதோ பெயருக்காக; எண்ணிக்கைக்காக இருக்கிறதேயல்லாமல், அது முறையாக, தொழில் கூட்டுறவில் உற்பத்தியாகும் பொருட்களை எப்படி செலவு செய்வது, நாமே எடுக்க வழிமுறை செய்யப்பட்டிருக்கிறதா என்றால், அம்மாதிரி செய்யப்படவில்லை. தொழில் கூட்டுறவில் ஈடுபட்டிருப்பவர்கள் சாதாரண தொழிலாளிகளாக இருப்பார்கள். சாதாரண வசதியுள்ளவர்களாகத்தான் இருப்பார்கள். ஆகவே,



அந்தத் தொழில் முறையாக நடக்க வேண்டிய அளவிற்குப் பாதுகாப்பையும் அதன் வளர்ச்சிக்கேற்ற உற்சாகத்தையும் அரசாங்கமேதான் தர வேண்டுமே தவிர அவர்கள் வேறு எங்கேயும் அதை எதிர்பார்க்க முடியாது. நமது மாநிலத்தில் தொழில் வளர்ச்சி அதிகப்பட வேண்டுமென்ற எண்ணமுள்ள நாம் சாதாரண மக்களுடைய தொழில் வாய்ப்புகளையும், தொழிலிலே ஈடுபட வேண்டுமென்ற அக்கறையையும் விரிவுபடுத்த முயற்சிக்க வேண்டும்.

தொழில்களை அமைப்பதிலே மாநிலம் முழுவதும் ஒட்டுமொத்தமாக பிற்பட்ட பகுதி, முற்பட்ட பகுதி என்ற ஒரு கண்ணோட்டத்தை சமீபத்தில் மத்திய அரசு உண்டாக்கியிருக்கிறது. இந்த மாநிலத்தில் இரண்டு மாவட்டங்கள் பிற்பட்ட பகுதிகளாக அறிவிக்கப்பட்டு, பல்வேறு சலுகைகளையும் அளிப்பது என்ற முடிவுக்கு வரப்பட்டிருக்கிறது. அப்படியிருந்தாலும் நாம் தொழில்களை ஆரம்பிப்பதிலே அந்தக் கண்ணோட்டத்துடன் ஆரம்பிக்கின்ற முறையிலே துணிகிறோமா, வழிகாட்டுகிறோமா என்றால் அப்படி இல்லை என்பதை இங்கே பல உறுப்பினர்களும் எடுத்துக் காட்டினார்கள்.

தர்மபுரி மாவட்டத்தை முற்போக்கான மாவட்டமாகச் செய்ய அங்கே தொழில்களை வளர்க்கும் காரியங்களிலே நாம் அக்கறை காட்டினாலும்கூட, அந்த மாவட்டத்திலே தண்ணீர் இல்லை; மற்ற வசதிகள் இல்லை என்று அங்கேயுள்ளவர்கள் புகார் சொல்கிறார்கள். அதனால் தொழில் மூலதனத்தைப் போடப் பலரும் தயங்குகிறார்கள். அப்படித் தயங்குபவர்களின் தயக்கத்தைப் போக்கி, அதிக மூலதனத்தை அங்கே கொண்டு செல்லுகின்ற முறையிலே செய்ய வேண்டுமே தவிர, பிற்பட்ட மாவட்டம் என்று அறிவிப்பதால் மட்டும் அங்கே தொழில் வளரும் என்ற கற்பனையில் இருந்துகொண்டிருப்பதாகத் தோன்றுகிறது.

இங்கே கூறினார்கள், சென்னையிலும், செங்கற்பட்டிலும் அதிகமான தொழில்கள் உண்டாவதற்கும், மற்றப் பகுதிகளிலே தொழில்கள் குறைவாக இருப்பதற்கும் காரணம் என்ன என்று கேட்டார்கள். காரணம் என்னவென்றால், தொழில் சம்பந்தமான நமது கொள்கையிலே, நம்முடைய கண்ணோட்டத்திலே, நம்முடைய பார்வையிலே மாற்றம் உண்டாக வேண்டுமென்பதைத்தான் அது காட்டுகிறது. ஆகவேதான், தொழில்கள் பரவலாக வளரவில்லை. இன்றைக்குப் பார்க்கின்றோம், ஒரே பகுதியில் தொழில் வளம் பெருகுவதால் அங்கே பல்வேறு நெருக்கடிகளுக்கு ஆளாகும் நிலைமை இருக்கிறது. கெமிக்கல் தொழிற்சாலை தோன்றியுள்ள பகுதிகளிலே கெட்ட தண்ணீர் உண்டாகி, அது பக்கத்து நிலங்களையும் கெடுத்து, அங்கே அருகிலுள்ள கிராமங்களில் வாழும் மக்களுக்குச் சங்கடங்களை உண்டாக்கும் நிலையை அனுபவத்தில் பார்க்கிறோம். அம்மாதிரித் தொழிற்சாலைகளை ஆரம்பிக்கும்பொழுது அது மக்கள் வாழும் பகுதிகளிலேயிருந்து வெகுதூரத்திற்கு அப்பால் ஆரம்பிக்கப்பட வேண்டும். அந்தத் தொழிற்சாலையினால் ஏற்படும் விளைவுகள் மற்றவர்களைப் பாதிக்காத அளவில் இருக்க வேண்டும் என்ற முறையிலே எண்ணிப் பார்த்திருக்கிறோமா என்றால் இப்பொழுதுகூட அப்படி எண்ணிப் பார்க்கவில்லை என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது.

அதேபோல் சிறு தொழில்களை ஆரம்பித்தால் மூலதனம் மிகவும் குறைவாக இருக்கும். அவர்களுக்கு உற்சாகம் அளிக்க வேண்டுமென்றால் சிறு தொழிலுக்குத் தேவையான மூலப் பொருட்கள், மின்சாரம் இவைகளிலே பற்றாக்குறை ஏற்படும்பொழுது நாம் அவர்களுக்கு என்ன உதவி செய்கிறோம்? மூலப்பொருட்கள் பற்றாக்குறை ஏற்படும்பொழுதும், மின்சாரப் பற்றாக்குறை ஏற்படும்பொழுதும் மற்றப் பெரும் தொழிற்சாலைகளுக்கு அளிக்கும் மின்சாரத்தைத் தடுத்தாவது இந்தச் சிறு தொழில்களுக்கு அளிக்கின்ற காரியத்தைச் செய்தால் சிறு தொழில்களை ஆரம்பிப்பவர்களுக்கு உற்சாகம் ஏற்படும். ஆனால், அந்த வகையில் பார்ப்பதற்குத் தயாராக இல்லை.

சிறு தொழில்களை வளர்ப்பதற்கான மிகப் பிரதானமான இன்னொரு காரணம், நம் மாநிலம் முழுவதும் உள்ள தொழிலாளர்களுக்குப் பரவலாக வேலை கொடுக்க வேண்டுமென்றால் பெருந் தொழில்களை ஆரம்பிப்பதால் மட்டும் அதைச் செய்துவிட முடியாது. பெருந்தொழில்களில், இயந்திரங்கள் விஞ்ஞான முறையில் வளர்ந்திருப்பதால், மிகக் குறைந்த தொழிலாளர்களே அங்கே வேலை செய்யலாம். ஆகவே, பெருந்தொழில்களைத் துவக்குவதனால், மிக அதிகமான மூலதனத்தை அதிலே முடக்கினாலும் அதிகமான தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கும் ஆதாரம் இன்றைக்கு இல்லாமல் போயிருக்கிறது. ஆகவே, சிறு தொழில்கள் பரவலாக ஏற்படுவதற்கான வழியிலே காரியங்களைச் செய்தால் தான் நம்முடைய மாநிலத்தில் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியும். அதற்கான முறையில் நம் கவனத்தைச் செலுத்த வேண்டுமென்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, ஒரு டைரக்டர் இருக்கிறார், பிளானிங் டெவலெப்மெண்ட் என்று ஒரு இலாகா இருக்கிறது. அந்த இலாகா எந்தவிதமான பணியையும் செய்யப் பணிகளே இல்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறது என்ற தகவல் எனக்கு வந்திருக்கிறது. ஆகவே, இலாக்கா என்று வைத்து, அந்த இலாக்கா சரியாக செயல்படக்கூடிய அளவிற்கு வேலை இல்லாமல் இருக்கிறது, அது சரியாகச் செயல்பட எந்த வேலைகள் என்று நிர்ணயம் செய்து, அது செயல்படுவதற்கான வழிமுறைகளைச் செய்வதில் கவனம் செலுத்த வேண்டுமென்பது முக்கியமான ஒன்றாகும்.

கடைசியாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். தொழிற்சாலைகளுக்கு நாம் நிலம் ஒதுக்கும்பொழுது அந்த நிலம் எவ்வளவு ஒதுக்க வேண்டும் என்பதற்கு விதிமுறைகள் இருக்கின்றன. ஆனால் இந்த விதிமுறைகளையெல்லாம் மீறி ஏராளமான நிலங்களைத் தொழிற்சாலைகள் எடுத்துக் கொண்டு, அந்தத் தொழிற்சாலைக்குப் பயனில்லாத அளவில் விவசாயம் செய்து, மாமரங்களை வைத்தும், மாடு வள்ர்க்கவும் ஈடுபட்டு, அந்த நிலங்களின் மூலம் வருமானத்தைப் பெற்று, அந்த வருமானத்தைக் கணக்கில் காட்டாமல் சிலர் மட்டும் அனுபவிக்கக்கூடிய வாய்ப்பு வசதிகளை உண்டாக்கித் தந்திருக்கும் நிலைமை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



பல தொழிற்சாலைகளை நாம் தேசியமயமாக்க வேண்டுமென்ற எண்ணத்தில் இருக்கிறோம். அப்படி எண்ணிச் சிலவற்றைச் சொல்லியிருக்கிறோம். அதற்கு மத்திய அரசாங்கத்தின் அனுமதி இல்லை என்று சொல்லி நடக்காமல் போயிருக்கின்றன என்று சொல்கிறார்கள். ஆனால் இன்றைக்குக் கரும்புத் தொழிலில், சர்க்கரைத் தொழிற்சாலைகளை தேசியமயமாக்கிக்கொள்ள முடியும் என்று அறிவித்திருக்கிறார்கள். ஆகவே, இந்த அரசின் கொள்கை என்று சில நாட்களுக்கு முன்னால் தொழில் அமைச்சராக இருந்த மதிப்பிற்குரிய மாதவன் அவர்கள் கூறினார்கள். இனிமேல் சர்க்கரைத் தொழிற்சாலை ஆரம்பிப்பதில் தனியாருக்கு வழங்கப் போவதில்லை, கூட்டுறவு முறையிலேதான் அமைக்கப் போகிறோம் என்று சொன்னார்கள். ஆகவே, இப்பொழுதுள்ள தனியார் சர்க்கரை ஆலைகளை தேசியமயமாக்குவதில் இந்த அரசுக்கு கருத்து வேற்றுமை இருக்காது என்று நான் கருதுகிறேன். ஆகவே, இதுவரையில், தேசியமயமாக்குவதற்குத் தடையாக இருப்பது மத்திய அரசாங்கம் என்று சொல்லிக் கொண்டிருந்த இந்த அரசு; இந்த அனுமதியைக்— கொடுத்த பிறகு இந்தச் சர்க்கரை ஆலைகளை விரைவில் தேசியமயமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமா என்பதையும் நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

ஆகவே, இதுபோன்ற இந்தத் தொழில் சம்பந்தமான காரியங்களில் அதன் கண்ணோட்டத்தை மாற்றி, கொள்கையை மாற்றி இன்றைக்கு மாநில மக்களின் நலன்களுக்காக நிறைவேற்றும் வகையிலும், தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கும் வகையிலும், சிறு தொழில்களுக்கு வேண்டிய மூலப் பொருட்கள் மற்றும் மின்சாரம் போன்றவைகள் கிடைக்கும் வகையில் ஊக்கமும், உற்சாகமும் அளிக்கும் வகையில் வளர்த்து நல்ல முறையில் கொண்டுவர வேண்டுமென்று கூறி, என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

திரு. வெ. ந. முத்தமிழ்ச்செல்வன்: தலைவரவர்களே, மாண்புமிகு தொழிலமைச்சரவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற, தொழில்கள், தொழில் வளர்ச்சி ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது என்னுடைய கருத்தைக் கூறுகிறேன்.

நம்முடைய தமிழகத்தில் தொழில் துறையின் மூலமாக சிறிய தொழில்கள், குடிசைத் தொழில்கள் சிறப்பாக வளர்வதற்குப் பல நிறுவனங்களின் மூலமாகத் திட்டமிட்டு நாம் நல்லதொரு வளர்ச்சியைக் கண்டு வருகிறோம். இந்த வளர்ச்சி, இன்னும் நம்முடைய கிராமப்புறங்களைச் சரியாக எட்டாத நிலைமை இருக்கிறது. நகரங்களிலேதான் இந்தச் தொழில்கள் சிறப்பாக வளர்ந்து வருகின்றன.

எங்களது வட்டாரத்தை எடுத்துக் கொண்டால், அங்கே ஜிப்சம் நிறையக் கிடைக்கிறது. வெள்ளைக் களிமண் நிறையக் கிடைக்கிறது. சுண்ணாம்புக்கல் நிறையக் கிடைக்கிறது. இதைப் பயன்படுத்தி பல ஆண்டுகளுக்கு முன்பு ஏற்படுத்தப்பட்ட டால்மியா சிமெண்ட் தொழிற்சாலை அங்கே இயங்கி வருகிறது. இருந்தாலும்கூட இந்தக் கனிப் பொருட்கள்

கிடைக்கும் அந்தக் கிராமப் பகுதியிலே உள்ள மக்களின் வாழ்க்கையைப் பார்க்கும்பொழுது அவர்கள் பொருளாதாரத்திலே மிகவும் தாழ்ந்த நிலையிலேதான் இருக்கிறார்கள்.

(முற்பகல் 11-30)

இப்படி பெரிய தொழில் ஒரு பக்கம் இயங்கினாலும்கூட அந்தத் தொழில்கள் இயங்குவதற்கு மூலப் பொருள்களைக் கொடுக்கின்ற அந்தக் கிராம மக்களுடைய வாழ்க்கை உயருவதற்கேற்றவாறு ஆங்காங்கு சிறு தொழில்களை ஏற்படுத்த அரசு முன் வரவேண்டுமெனக் கேட்டுக்கொள் கிறேன்.

குறிப்பாக, எங்களுடைய லால்குடி தொகுதியில் புள்ளம்பாடி வட்டாரம் மிகமிகப் பின் தங்கிய வட்டாரமாகும். அங்கே கிடைக்கிற ஜிப்சம், சுண்ணாம்புக்கல், வெள்ளைக் களிமண் இவற்றைப் பயன்படுத்தி சிறு தொழில்களை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது தொழில் பேட்டை என்று எடுத்துக்கொண்டால் திருச்சியில் இருக்கிறது; அதற்கு அடுத்த 50-வது மைல் தூரத்தில் அரியலூரில் இருக்கிறது. இடையிலுள்ள இந்த வட்டாரத்தில் ஒரு தொழில்பேட்டை துவக்கினால் அந்தக் கிராமங்கள் தொழிற்துறையில் முன்னேற வசதியாக இருக்குமென்று கூறிக் கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்கும், இந்திய நாட்டின் அந்நியச் செலாவணியை ஈட்டித் தருகிற தொழிலாகவும் உள்ளது சர்க்கரைத் தொழில் ஆகும். இன்றைக்குச் சர்க்கரை உற்பத்தியை நாம் ஓரளவுக்குப் பெருக்கிக் கொண்டே வந்தாலும் கூட இன்று அந்தத் தொழிலினுடைய நிலையைப் பார்க்கிறபோது நம்முடைய எதிர்காலத் திற்கு ஒரு நல்ல அறிகுறி இல்லாத நிலையைப் பார்க்க முடிகிறது. இன்று கரும்பு எவ்வளவு பரப்பில் பயிரடப்பட்டு வருகிறது என்பதைப் பற்றி இங்கே அறிக்கையில் கொடுத்திருக்கிறார்கள்.

1969-70-ல் 135 ஆயிரம் ஹெக்டரில் பயிரிடப்பட்டிருக்கிறது. 1970-71-ல் 135 ஆயிரம் ஹெக்டரில் பயிரிடப்பட்டிருக்கிறது. 1971-72-ல் 121 ஆயிரம் ஹெக்டரில் பயிரிடப்பட்டிருக்கிறது. 1972-73-ல் 113 ஆயிரம் ஹெக்டரில் பயிரிடப்பட்டிருக்கிறது.

கரும்பு பயிரிடப்படும் நிலத்தின் பரப்பானது வரவரக் குறைந்து கொண்டே வருவதை நாம் கவனிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். எவ்வளவு தான் நாம் முற்போக்காக அதிகமாகக் கரும்பு உற்பத்தி செய்யவேண்டு மென்று திட்டத்தைப் போட்டாலும் கூட அதை உற்பத்தி செய்கிற விவசாயிகளுடைய வாழ்விலே எந்தவிதமான மாற்றத்தையும் காண முடியாத அளவுக்கு இன்று விவசாயச் செலவு, கரும்பு உற்பத்தியாகிற செலவு அதிகமாக ஆகிறது. இந்த நேரத்தில் அதற்குக் கொடுக்கப்படுகிற விலைக் குறைவின் காரணமாக—வறட்சி ஒரு பக்கம் இருந்தாலும் கூட, கரும்பு உற்பத்தி செய்வதற்கு ஆகும் செலவுக்கேற்ற விலை கொடுக்கப் படாததன் காரணமாக கரும்பு சாகுபடிப் பரப்பானது வரவரக் குறைந்து வந்திருப்பதை அரசும் முக்கியமாகக் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த நிலை நீடித்தால் தமிழ்





விவசாயிகளுடைய நிலை பாதிக்கப்படும். அதே நேரத்தில் இந்தியப் பேரரசின் அந்நியச் செலாவணி வருவாயும் பெருமளவு பாதிக்கப்படக் கூடும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆக, 8·5 சர்க்கரை கண்டு முதல் உள்ளதற்கு டன்னுக்கு 80 ரூபாய், என்றிருந்ததை 85 ரூபாய் என்று மத்திய அரசு நிர்ணயித்திருக்கிறது. நம்முடைய அரசு 125 ரூபாய் குறைந்த அளவு கொடுக்கவேண்டுமென்று கேட் டிருக்கிறது. இதைக் கொடுப்பதற்கு நம்முடைய தமிழக அரசு முறையாக முயற்சிகளை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று இந்த நேரத்தில் தெரி வித்துக் கொள்கிறேன். ஆனால் மத்திய அரசு இதில் பாராமுகமாக இருந்தால் அது இந்திய அரசுக்கு ஒரு பெரிய நட்டமாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, சர்க்கரைத் தொழிலை மிகவும் பாதிக்கக்கூடிய அளவுக்கு உள்ளது இந்தக் கரும்பைக் காலா காலத்தில் பிழிய முடியாத நிலை இருப்பதாகும். இரண்டு மூன்று ஆண்டுகளாகத் தொடர்ந்து இந்த நிலை இருந்து வருவதைப் பார்க்கிறோம். ஒவ்வொரு அரைவை சீசனிலும் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் காரணமாக ஒரு மாதம், ஒன்றரை மாதம் கழித்துத்தான் கரும்பை எடுக்கின்ற காரணத்தால் அதிலே கிடைக்கக்கூடிய கண்டுமுதலானது குறைந்து வருவதை நான் இங்கே கொடுக்கப்பட்டிருக்கும் புள்ளி விவரத்திலிருந்தே எடுத்துக் காட்ட ஆசைப்படுகிறேன்.

1969-70-ல் 7·87 சதவிகிதமாக இருந்தது, 1970-71-ல் 8·99 சத விகிதமாகக் கூடியிருக்கிறது. 1971-72-ல் 9·17 சதவிகிதமாகக் கூடியிருக் கிறது. ஆனால் 1972-73-ல் 8·26 சதவிகிதமாகவும், 1973-74-ல் 8·38 சதவிகிதமாகவும் ஆகியிருக்கிறது. ஓரளவு குறைவு ஏற்பட்டிருக்கிறது. இப்படிச் சத்து குறைந்துவரக் காரணம் கரும்பானது காலாகாலத்தில் பிழியப்படாமல் தொழிலாளர்கள் போராட்டத்தின் காரணமாக இந்த நிலை ஏற்பட்டு விடுகிறது.

இதனால் கரும்பு உற்பத்தி செய்கிற விவசாயிகளுக்குப் பெரிய ஏமாற்றம் ஏற்பட்டு இன்று கரும்பு சாகுபடி செய்யலாமா என்று நினைக்கும் நிலைக்கு வந்திருக்கிறார்கள். தொழிலாளர்கள் பிரச்சினை ஒரு பக்கம் இருந்தாலும், இது இந்திய நாட்டுக்கு அந்நியநாட்டுச் செலாவணியை ஈட்டித் தருகிற ஒரு தொழிலாகும். தொழில், தொழிற்சாலைகள் என்றால் பிரச்சினைகள், கோரிக்கைகள், போராட்டங்கள் இருக்கத்தான் செய்யும். கரும்பு, கரும்புத் தொழில் என்று வருகிற நேரத்திலே அதிலே ஈடுபட்டிருக்கும் ஆலைத் தொழிலாளர்களுடைய அடிப்படைப் பிரச்சினைகளை ஓரளவு தீர்க்கக்கூடிய முறையில் வழிவகைகளைச் செய்து, அதே நேரத்தில் கரும்பாலையானது அந்தந்த வட்டாரங்களில் தொடர்ந்து பருவ காலத்தில் இயங்க தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரை மூன்று சர்க்கரை ஆலை கள் இருக்கின்றன. இதிலே உண்டாகும் கழிவுப் பொருள்களை, சக்கை

களைப் பயன்படுத்தி பேப்பர் தொழிற்சாலை ஆரம்பிக்க வாய்ப்பு இருக்கிறது. எங்கள் மாவட்டத்தில், குறிப்பாக லால்குடி வட்டாரத்தில் காகிதத் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்தி எங்கள் வட்டார வளர்ச்சிக்கும், தமிழனின் வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, மானியக் கோரிக்கைகளை வரவேற்று, உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. எம். ஏ. லத்தீப் : பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் மானியத்தின்மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்லிக் கொள்ள ஆசைப் படுகிறேன்.

தமிழ்நாட்டிலே போதிய தொழில் வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்பதை யாரும் மறுத்துவிட முடியாது. தொழில் வளர்ச்சியே ஏற்படாத மாநிலம் என்ற அளவில் பேசுவது இந்தத் துறையில் ஈடுபட்டிருக்கும் அதிகாரிகள், அமைச்சர்களின் உற்சாகத்தைக் குறைக்கக்கூடிய அளவுக்கு அது அமைந்து விடும் என்ற காரணத்தால், ஆங்காங்கு இருக்கும் குறைபாடுகளைச் சுட்டிக் காட்டுவதோடு நிறைவுகளையும் எடுத்துச் சொன்னால் அது இந்தத் துறையில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு உற்சாகத்தையும் நம்பிக்கையையும் அளிக்குமென்ற வகையில், அவ்வாறு நடந்து முடிந்திருக்கின்ற நல்ல வளர்ச்சிகளைப் பற்றி எடுத்துச் சொல்லுவது கடமை என்பதை உணர்ந்தாக வேண்டும்.

இன்றைக்குத் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் மற்ற மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது மிகப் பெரிய அளவில் தொழில் வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் மட்டுமல்ல, நாடே இன்றைக்கு ஏற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே, இன்றைக்கு இந்தத் துறையில் வளர்ச்சியைக் காணவேண்டுமென்பதற்காக முயற்சிகளை மேற்கொண்டு வருகிற இந்தத் துறையினருக்கு என்னுடைய பாராட்டைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

அதே நேரத்தில் நாம் திட்டமிடுகிற அளவுக்குத் தொழிற் துறையில் முன்னேற்றங்களைக் காணவில்லை என்பதும் உண்மைதான். இதற்குக் காரணம் இந்தத் துறையில் ஈடுபட்டிருப்பவர்களுடைய திறமையின்மை என்று யாரும் எடுத்துச் சொல்ல முடியாது. பல்வேறு காரணங்கள் இருக்கின்றன.

இன்றைக்கு தொழிற்துறையில் முன்னேற்றத்தை நாம் அடைய முடியாத அளவுக்கு முட்டுக்கட்டைகள் பல இருக்கின்றன என்பதை நாம் உணர்ந்தாக வேண்டும். முதலாவதாக, நம்முடைய இந்தத் துறைக்குப் பெரிய பிரச்சினையாக இருப்பது மின்சாரம். மின்சாரம் இல்லாத காரணத்தால் பல தொழிற்சாலைகளை இன்றைக்கு நாம் புதிதாகத் தொடங்க முடியாத நிலையில் இருக்கிறோம். அதே நேரத்தில் இன்றைக்கு நாட்டிலே இருக்கின்ற பல தொழிற்சாலைகள் முழுமையான அளவுக்கு "ஆப்டிமம் லெவல்"—தங்களுடைய உற்பத்தியைச் செய்ய முடியாத சூழ்நிலை உருவாகியிருக்கிறது என்பதை நாம் மறந்து விடுவதற்கில்லை.



ஆகையால் இந்த மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு எந்தெந்த வகையில் நாம் முயற்சிகளை மேற்கொள்ளவேண்டுமென்பதற்குத் திட்டமிட்டுச் செயல்பட்டால்தான் நம்முடைய தொழிற்துறை மேலும் வளர்ச்சியைப் பெறமுடியும் என்ற அளவுக்கு மின்சாரத் துறையில் உற்பத்தியை அதிகமாக்க நல்ல பல திட்டங்களைத் தீட்டி செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் இன்றைக்கு எந்தெந்தத் தொழிற்சாலைக்கு எந்தெந்த மூலப் பொருள்கள், எந்தெந்த அளவுக்குக் கிடைக்கின்றன என்பதைப் பற்றி ஒரு முறையான சர்வே எடுக்கப்பட்டு அந்த அடிப்படையிலே திட்டங்கள் தீட்டப்படுவது தொழில் வளர்ச்சிக்கு உதவிகரமாக இருக்குமென்று நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப் படுகிறேன்.

நமக்கு இன்னொன்று தேவையாக இருப்பது டெக்னிக்கல் நோஹௌ, அதாவது தொழில் அறிவு. இன்று தொழில் அறிவில் நாம் போதிய அளவிற்கு முன்னேற்றம் கண்டிருக்கிறோமா, அந்தத் தொழில் அறிவு பரவலாக்கப்பட்டிருக்கிறதா என்று கேட்டால் நிச்சயமாக அந்தத் தொழில் அறிவு பரவலாக்கப்படவில்லை என்பதை நாம் உணர்ந்தாக வேண்டும்.

தொழில் அறிவு என்று சொன்னால் பொறியியல் கல்லூரிகளில் அல்லது தொழில் கல்லூரிகளில் படித்து பட்டம் பெற்று வருபவர்கள் மட்டும்தான் அந்தத் தொழில் அறிவைப் பெற்றிருக்கிறார்கள் என்ற எண்ணம் வளர்ந்து கொண்டிருக்கிற காரணத்தால் அனுபவபூர்வமாக தொழில் துறையில் ஈடுபட்டு தொழில் அறிவைப் பெருக்கிக்கொண்டிருப்பவர்கள் பல்வேறு விதிகளின் அடிப்படையில் தொழில் துறையில் கவனம் செலுத்தி தொழில் வளர்ச்சிக்கு அவர்கள் உதவியைத் தருவதற்குப் போதிய அளவில் இன்றைக்கு நிலைமைகள் இல்லை என்பதை நாம் உணர்ந்து பார்த்து, சில விதிகளைத் தளர்த்தி எங்கெல்லாம் அனுபவபூர்வமான தொழில் அறிவு நமக்குத் தேவையோ அங்கு அந்த அறிவுகளைப் பயன்படுத்திக் கொள்கிற அளவிற்குப் போதிய வழிமுறைகளை, முயற்சிகளை நாம் மேற்கொள்ளுதல் வேண்டும்.

தொழில் அறிவு என்று சொல்லும்போது ஒரு சில குறிப்பிட்டவர்களுக்கு மட்டும் அது சொந்தம் அல்ல. அவர்கள் மட்டும் பெறக்கூடிய அறிவு என்று நினைக்காமல் இந்த அறிவை எல்லோராலும் பெற முடியும் என்ற எண்ணத்தில் இந்தத் தொழில் அறிவை நாம் பரவலாக்கி அதை நம் நாட்டின் தொழில் துறையில் பயன்படுத்தும் வகையில் நல்ல பல திட்டங்களை நாம் தீட்டவேண்டும். தொழில் அறிவைப் பெற்றிருப்பவர்கள், அனுபவபூர்வமாகவும் கல்வியின் அடிப்படையிலும் தொழில் அறிவைப் பெற்றிருப்பவர்கள் பலர் இன்று இந்த மாநிலத்தில் இல்லாமல் வேறு மாநிலங்களுக்கு அல்லது வேறு நாடுகளுக்குச் செல்லக் கூடியதொரு நிலை உருவாகியிருக்கிறது. எனவே இந்த மாநிலத்தில் தொழில் அறிவைப் பெற்றவர்கள் இந்த மாநில மக்களின் வரிப்பணத்தில் தங்கள் தொழில் அறிவைப்

பெருக்கிக் கொண்டவர்கள் தங்களுடைய தொழில் அறிவை இந்த மாநிலத்திற்குப் பயன்படுத்தும் வகையில் செய்யவேண்டும். அந்த வகையில் சில திட்டங்களை அரசு தீட்டவேண்டும்.

இன்னொன்று நமக்கு முட்டுக்கட்டையாக இருப்பதாக பலர் பேசினார்கள். மத்திய அரசுதான் பொறுப்பு என்று குற்றச்சாட்டு சாட்டி பேசுகிறீர்களே, ஒரு கோடி ரூபாய் அளவிற்கு தொழில் வளர்ச்சியை மேற்கொள்வதற்கான அதிகாரங்களை நம் மாநிலம் பெற்றிருக்கிறதே; அந்த அதிகாரத்தை வைத்து இந்த மாநிலத்திற்குத் தேவையான தொழிற்சாலைகளை ஏற்படுத்தியிருக்கிறதா என்று பார்க்கும்போது வேதனையும் ஏமாற்றமும் ஏற்படுகிறதே என்று சொன்னார்கள். ஒரு கோடி ரூபாய் அளவிற்கு உரிமங்களைப் பெருவதற்கு அதிகாரத்தை நாம் பெற்றிருந்தாலும், நமக்குத் தேவையான இயந்திரங்களை மற்ற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்வதற்கான கட்டாயம் ஏற்படும்போது, அந்தத் தேவையான இயந்திரங்களைப் பெறுவதற்குக் கூட சுலபமான வழிவகைகளை மத்திய அரசு ஏற்படுத்தாமல் பல சிக்கல்கள் ஏற்படும் வகையில் செயல்முறைகள் இருப்பதை நாம் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அதே நேரத்தில் ஒரு கோடி ரூபாய் என்று வரைலிங் போட்டிருக்கிறார்களே அது எந்தளவிற்கு நம் நாட்டின் வளர்ச்சிக்கு உதவும் என்பதையும் நாமும் சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். மத்திய ஆட்சியில் இருப்பவர்களும் எண்ணிப் பார்க்கவேண்டும். ஒரு கோடி ரூபாய் அளவிற்கு உரிமம் பெறக் கூடிய அதிகாரத்தை, இந்த அதிகார வரம்பை உயர்த்திக்கொள்ள நாம் எந்த வகையில் போராட்டங்களை நடத்த வேண்டும், எந்த வகையில் சட்டபூர்வமான போராட்டங்களை நடத்த வேண்டும், என்றும் அவர்கள் அதைத் தர மறுப்பார்களானால் இந்தத் தமிழ் மாநிலத்தில் இருக்கிற நாலரைக் கோடி மக்களின் சார்பாக அவர்களுக்கு எச்சரிக்கை விடுத்து நமது அதிகார வரம்பினை அதிகப்படுத்திக் கொள்வதற்கான திட்டங்களை, செயல்முறைகளை இந்த அரசு செய்யுமேயானால் அது உண்மையில் நாம் மாநில சுயாட்சி என்று பேசிக்கொண்டிருக்கிறோம், அதைப் பலர் தவறாகப் புரிந்துகொண்டிருக்கிறார்கள்—இதற்காகத்தான் மாநில சுயாட்சி கேட்கிறார்கள், இது நியாயந்தானே, என்று மக்கள் உணர்ந்து கொள்ள வாய்ப்பாகயிருக்கும். அதை இந்த அரசு செய்யவேண்டுமென்று நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

தொழில் துறையிலும் நிதித் துறையிலும் நாம் அதிக அதிகாரங்கள் வேண்டும் என்று கேட்கும்போது, இதற்காகத்தான் அதிகாரங்களை கேட்கிறார்கள் என்று மற்றவர்கள் புரிந்துகொள்ள முடியும். மாநில சுயாட்சி என்ற ஒரே வார்த்தையில் போராடிக்கொண்டிருப்போமானால் நிச்சயமாக இங்கிருப்பவர்கள் மட்டுமல்ல எங்கெங்கேயோ இருப்பவர்கள் கூட தவறாகப் புரிந்துகொள்ளக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. மாநில சுயாட்சி என்பது பெயர். இதில் உட்பட்ட இத்தகைய அதிகாரங்கள், வாய்ப்புகள், வசதிகள் இவற்றைப் பெருக்கிக்கொள்ள வேண்டும் என்பதற்காக இந்த அரசு



போராட்டம் ஒன்று நடத்துமானால் அது சர்ச்சைக்குரிய போராட்டமாக அல்லாது மற்றவர்கள் புரிந்து கொள்ளச்கூடியதொரு போராட்டமாக, ஒருவேளை பாராட்டு பெறக்கூடிய போராட்டமாகவும் இருக்கலாம் என்பதற்காகத்தான் இதை நான் இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். (மணியடிக்கப்பட்டது). பல நாட்களுக்குப் பிறகு பேசுகிறேன், எனக்குப் பேச வாய்ப்பு கொடுக்க வேண்டும், இல்லை என்றால் நான் உட்கார்ந்துவிடுகிறேன்.

அடுத்து இறக்குமதி உரிமங்கள் பெறுவதற்கான அதிகாரங்களை உயர்த்த வேண்டும். இந்த உரிமங்களைப் பெறுவற்கு, இன்டஸ்ட்ரியல் லைசென்ஸ்களைப் பெறுவதற்கு உண்டான அதிகாரங்களை அங்கிருப்பவர்கள் தேக்கி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அங்கிருப்பவர்களுக்கு இந்த அதிகாரங்களின் மீது என்ன காதலோ தெரியவில்லை. இந்த அதிகாரங்களை அவர்கள் கட்டிக்கொண்டு அழுதுகொண்டிருக்கிறார்கள். சிரித்துக்கொண்டிருந்தாலும் பரவாயில்லை. மத்தியில் இருப்பவர்கள் இப்படிப்பட்ட இந்த அதிகாரங்களை கட்டிக்கொண்டு அழுதுகொண்டிருக்கிறார்கள். இந்த சோகமான நிலையில் அதிகப்படியான அதிகாரங்களை அவர்கள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே உரிமங்கள் பெறச்கூடிய அதிகார வரம்பை தளர்த்த வேண்டும். மாநிலங்களுக்கு இருக்கிற அதிகார வரம்பை உயர்தத வேண்டும். அப்போதுதான் நாம் தொழில் துறைக்கு ஆக்கம் அளித்தவர்களாவோம்.

இன்னொன்று சேவிங்ஸ். பல வகைகளில் இன்று நாட்டில் பணம் நடமாடுகிறது, செலாவணிக்கு விடப்படுகிறது. நடமாடுகிற பணம், செலாவணியில் உள்ள பணம் மக்களுக்கு நேரிடையாகப் போய் சேருகிறதா, நல்ல முறையில் எல்லாயிடங்களுக்கும் போய்ச் சேருகிறதா என்பது கேள்விக்குறியாக இருக்கிறது. சில சந்துபொந்துகள் வழி ஒருசில இடங்களில்தான் பணம் போய்ச் சேருகிறது .ஒரு சில இடங்களில், ஒரு சிலரிடம்தான் பணம் குவிந்துவிடுகிற நிலை இருக்கிறது. அதிகப்படியான சம்பளம் உயர்வானாலும் சரி அல்லது அதிகப்படியான கூலி உயர்வானாலும் சரி (மணியடிக்கப்பட்டது) அதிகப்படியான பணம் அல்லது சேமித்து வைக்கப்படுகிற பணம் உற்பத்தித் துறையில் ஈடுபடுத்தப்பட வேண்டும். அதற்கு இந்த அரசு தக்க திட்டங்களைத் தீட்டவேண்டும். அதன் காரணமாக பண வீக்கமும் குறையும். நாம் மக்களிடமிருந்து பெறும் வரிப் பணத்ததை உற்பத்தி ஆதாரங்களுக்கு அதிகமாகச் செலவழித்தால் தொழில் உற்பத்தியும் ஏற்படும், வேலைவாய்ப்பும் அதிகமாகும், பண வீக்கமும் குறையும், விலைவாசிகளும் குறையும்.

எனவே, நாம் வரிப்பணத்தை உற்பத்தித் துறையில் செலவழிக்க வேண்டும். உற்பத்தித் துறை அல்லாத துறைகளில், அதாவது கட்டடங்கள் கட்டவேண்டியதுதான். எப்போது கட்டடங்கள் தேவை? உணவு இருந்தால்தானே இருக்கை வேண்டும். உண்ண உணவு சரியாக இல்லை என்ற நிலையில் நாம் சில திட்டங்களை வகுத்து உற்பத்தி ஆதாரங்களுக்கு நம் சேமிப்புகள் பயன்படும் வகையில் வரிப்பணத்தை நாம் பயன்படுத்த வேண்டும்.

இன்று சர்க்கார் பணியாளர்கள் இருக்கிறார்கள். அவர்களிடமிருந்து பெறுகிற பணத்தைக் கூட அவர்கள் பணத்திலிருந்து ஒரு பாகத்தை கட்டாயமாக எடுத்து ஒரு குறிப்பிட்ட அளவிற்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு வட்டத்திலும் அவர்கள் பணத்தைக் கொண்டு தொழிற்சாலைகளை ஏற்படுத்தலாம். இன்று கூட்டுறவுக்கு பேட்ரனேஜ் செய்ய வேண்டியிருக்கிறது. பணியாளர்களிடமிருந்து பெறுகிற பணத்தை, அதில் குறிப்பிட்ட ஒரு பாகத்தை கட்டாயமாகப் பெற்று இண்டஸ்ட்ரீஸ் ஏற்படுத்தி அவர்கள் அதில் பங்குபெறும் அளவிற்கு நாம் முயற்சிகளை மேற்கொண்டால் அவர்களிடம் சேமிப்புப் பழக்கமும் ஏற்படும், தொழில்வளர்ச்சியும் ஏற்படும். (மணியடிக்கப்பட்டது).

அடுத்தபடியாக, தொழில் அமைதி ஏற்படுவதற்கான முறையில் சூழ்நிலைகள் மாற்றியமைக்கப்பட வேண்டும். தொழிலாளர்களிடையே அமைதி நிலவ வேண்டும், அதோடு கூட முதலாளிகளும் நம்பிக்கையோடு இருக்கத் தக்க அளவில் சூழ்நிலைகளை மாற்றியமைக்கவேண்டும். இன்று நாட்டில் மொனாப்பலிஸ்டிக் டென்டென்ஸி அதிகமாக இருக்கிறது. ஒரு சிலரே திரும்பத் திரும்ப தொழில் அதிபர்களாக இருந்து கொண்டே இருக்கிறார்கள். ஒரு சிலரே, யார் யார் முன்பு அதிபர்களாக இருந்து வந்தார்களோ அவர்களே தொடர்ந்து தொழில் அதிபர்களாக இருந்து வருகிறார்கள். அவர்கள் மிக மிக அறிவாளிகள். ஜாக்கிரதையாக இருக்கிறார்கள். யார் வந்தாலும் அவர்களை தங்கள் பக்கம் இழுத்துக்கொள்ளும் அறிவை, அனுபவத்தைப் பெற்றிருக்கும் ஒரு சிலரே அந்தக் காலத்திலும் முதலாளிகளாக இருந்தார்கள், இந்தக் காலத்திலும் முதலாளிகளாக இருக்கிறார்கள். ஆகையால் அவர்களிடத்தில் மட்டும் அந்தத் தொழில் அதிகாரம் தங்கி இருக்காமல், பரவலாக்கப்பட வேண்டும், எல்லா இடங்களுக்கும் பரவலாக்கப்படவேண்டும், எல்லா மாவட்டங்களுக்கும் பரவலாக்கப்பட வேண்டும்.

மூலத்தொழில்களை ஏற்படுத்தும்போது துணைத் தொழிற்சாலைகளை, பேசிக் இண்டஸ்டிரிஸ் ஏற்படுத்தும்போது, ஆக்சிலரி இண்டஸ்டிரிஸ் ஏற்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் சொல்லிக்கொண்டு; அதற்கான திட்டங்களையும் வகுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. என். டென்னிங்—தலைமை]

நாம் மார்க்கெட்டிங் சர்வே செய்து, நல்ல முறையில் மார்க்கெட் செய்வதற்கு முறைகளை வகுத்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சர்க்கரை ஆலை ஒரு மாவட்டத்திற்கு மூன்று எதற்கு என்று கேட்கிறேன் அது மிகப் பெரிய பயங்கரத்தை ஏற்படுத்துகிறது. (மணியடிக்கப்பட்டது). இரண்டு நிமிடங்களில் முடித்துக்கொள்கிறேன்.

எங்கள் மாவட்டத்தில் அரிசிஉற்பத்தி உபரியாக இருந்தது. ஆனால் இன்று வடார்காடு மாவட்டம் உபரி ஜில்லாவாக மாறியிருக்கிறது. என்ன காரணம் என்றால், மூன்று சர்க்கரை ஆலைகள் அந்த மாவட்டத்தில் இருக்கின்றன. சர்க்கரை ஆலைகளால் என்ன பயன், அவை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டு, அந்தப் பணம் டெல்லி சர்க்காருக்குச் செல்கிறது.



அதனால் மாநிலத்துக்கு ஆதாயம் கிடையாது. ஆகவே, அந்த மாவட்டத்தில் மூன்று சர்க்கரை ஆலைகள் இருப்பதைக் கண்டிக்கிறேன். அது மட்டுமல்ல, அந்த மூன்று ஆலைகள் இருப்பதால்தான் அங்கேயிருக்கும் நிலங்கள் எல்லாம் கரும்பு நிலமாக மாற்றப்பட்டு, இன்றைய தினம் பற்றாக்குறை ஏற்பட்டு இருக்கிறது.

அதோடு, அந்த மாவட்டத்தையொட்டியிருக்கிற கள்ளக்குறிச்சியில் ஒரு ஆலை இருக்கிறது. அதையும் வடார்காடு மாவட்டத்தில்தான் சேர்த்துக் கொள்ளவேண்டும். இப்படி நான்கு தொழிற்சாலைகள், சர்க்கரை தொழிற்சாலைகள் அங்கே அந்த மாவட்டத்தில் இருப்பதால், நெல் உற்பத்தி குறைந்து விட்டது, அந்த ஜில்லாவில் பற்றாக்குறை ஏற்பட்டு இருக்கிறது. ஆகவே, அது எந்தவிதமான முறையிலும் இந்த நாட்டுக்கு நன்மை செய்வதாக இல்லை என்பதால் நான் அதைக் கண்டிக்கக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன், அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவன் என்ற காரணத்தால். தோல் தொழிற்சாலை.......

**Mr. CHAIRMAN (Thiru N. DENNIS)**: The hon. Member has already taken 15 minutes.

**திரு. எம். ஏ. லத்தீப்**: தோல் தொழிற்சாலை குறித்து, மற்ற தொழிற்சாலைகளுக்கு ஆர்வம் காட்டுகிற அளவுக்கு இந்த அரசாங்கம் ஆர்வம் காட்டியிருக்கிறதா என்று கேட்க ஆசைப்படுகிறேன். அந்தத் தொழிலில் முஸ்லிம்கள் அதிகமாக இருப்பதால்தான் அது சரியாக கவனிக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டை நான் சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா**: அந்தக் குற்றச்சாட்டு சரியானதல்ல. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் டெல்லிக்குப் போன போது, தோல் தொழில் சம்பந்தமாக மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் மாதவன் அவர்களும் அது குறித்த சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பிரச்னை குறித்து நல்ல விதத்தில் தீர்ப்பதற்கு, தீவிரமான நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. அதைத் தீர்க்க வேண்டிய பொறுப்பு மத்திய அரசிடம் இருக்கிறது. மத்திய அரசுதான் அதைச் செய்ய வேண்டும். "டெல்லி தூர் ஹை", அங்கே அவர்கள் செய்ய வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி**: "டெல்லி தூர் ஹை" என்று சொல்லிவிட்டால் மட்டும் போதாது. அங்கே இருப்பவர்களுக்கு இங்கே இருக்கும் பிரச்னைகளை எடுத்துச் சொல்ல வேண்டும். டெல்லி தூரமாக இருக்கிறது என்று சொல்லிவிட்டு தப்பித்துக் கொள்வதில் பிரயோசனம் இல்லை. நாம் தமிழ் நாடு எந்த விதத்தில் பாதிக்கப்படுகிறது என்று டெல்லியில் இருப்பவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். இதில் எத்தனையோ ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள், ஆகவே, இந்த "அன்-பினிஷ்டு லெதர் எக்ஸ்போர்ட்" தடை செய்வதை இன்னும் ஒரு ஐந்து வருஷம் கழித்து லேட்டாகக் கொண்டு வரவேண்டுமென்று சொல்லவேண்டும். அப்படிச் சொல்லாதது உங்கள் தவறுதான் என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : எங்களுடைய தவறு இல்லை. நம்முடைய அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் வற்புறுத்தி சொல்லப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் டெல்லிக்குப் போய் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு அப்துல் லத்தீப் அவர்கள் டெல்லிக்குச் சென்று, ஜனாதிபதியைச் சந்தித்து, பிரதமர் அவர்களைச் சந்தித்து "மெமோரண்டம்" கொடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். இவ்வளவு செய்ததற்குப் பிறகு, நான் "டெல்லி தூர் ஹை" என்று சொல்லாமல் வேறு என்ன சொல்ல முடியும் ?

திருமதி த. ந. அனந்தநாயகி : இதனால் ரூ. 80 கோடிக்கு பாரின் எக்ஸ்சேஞ்ச் லாஸாகிற நிலைமை இருக்கிறது. ஆகவே, ஒரு சர்வகட்சிக் கமிட்டி போடுங்கள். எல்லோரும் போவோம் சண்டைக்கு.

*திருமதி ஜோதி வெங்கடாசலம் : டெல்லியிலே ஒரு குழு அமைத்து எல்லா மாநிலங்களுக்கும் அனுப்பினார்கள். அதாவது இந்த "பினிஸ்ட் கூட்ஸ், அன்-பினிஷ்ட் கூட்ஸ்" ஏற்றுமதி சம்பந்தமாக கொண்டுவரப்பட்ட சட்டத்தால் பாதிக்கப்படுவது குறித்து, தோல் வியாபாரி எல்லோரிடமிருந்தும் கருத்து அறிவதற்காக அந்தக் குழு எல்லா மாநிலங்களுக்கும் சென்றது. ஆனால் அந்தக் குழு தமிழ் நாட்டிற்கு வராமல் சென்று விட்டது. பெங்களூர் வரையில் வந்து சென்று விட்டது. ஆகவே, அப்படிப்பட்ட குழுவின் சிபார்சை மத்திய அரசாங்கம் எப்படி ஏற்றுக்கொண்டார்கள் ? நம்முடைய அரசு இதைச் சுட்டிக் காட்டி, நம்முடைய மாநிலத்தின் தோல் வியாபாரிகளின் நிலையை எடுத்துச் சொல்வார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு ஜோதி அம்மையார் அவர்கள் கூறிய கருத்தை நான் மனப்பூர்வமாக ஏற்று, பாராட்டுகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு என். டென்னிஸ்) : திரு. ரங்கநாதன்........

திரு. இ. ரங்கநாதன் : தலைவரவர்களே........

திரு. எம். ஏ. லத்தீப் : இரண்டு நிமிடம். நான் முடித்து விடுகிறேன். தலைவரவர்களே, இந்த அவையில் எல்லா கட்சியைச் சார்ந்தவர்களும் சேர்ந்து, ஏகமனதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறோம். அப்படி இருந்தும் டெல்லி சர்க்கார் இணங்கவில்லை என்றால், ஏன் ஒரு போராட்டம் நாம் நடத்தக்கூடாது ? மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், தொழில் அமைச்சர் சொல்லியிருக்கிறார்கள், நாம் சொல்லியிருக்கிறோம், மற்றவர்களும் சொல்லியிருக்கிறார்கள், ஆனால் அதிகாரிகள் வேறு ஏதாவது சொல்லி திசை திருப்பி விடுகிறார்கள். இந்த நிலை நீடிக்குமானால் மிகப்பெரிய பயங்கரமான சூழ்நிலை ஏற்படும். இதில் லட்சக்கணக்கான ஹரிஜன தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மணியடிக்கப்பட்டு, அடுத்த உறுப்பினர் அழைக்கப்பட்டார்.)



திரு. இ. ரங்கநாதன் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் அவை முன்வைத்துள்ள மானியக் கோரிக்கையை வரவேற்று என்னுடைய சில கருத்துக்களைக் கூறுவதற்கு விரும்புகிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். வாணியம்பாடியில் பொதுத் துறையில் ஒரு பொதுத் தொழில் ஏற்படுத்தப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த பட்ஜெட்டில் அறிவிக்கிறேன் என்று சொன்னார்கள். ஆனால் அறிவிக்கவில்லை. வாணியம்பாடியில் ஒரு தொழிற்சாலை கூட கிடையாது. வேலூரிலும், திருவண்ணாமலையிலும்தான் தொழிற்சாலை இருக்கிறது. (மணியடிக்கப்பட்டது.)

* திரு. இ. ரங்கநாதன் : மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டுள்ள தொழில் மானியக் கோரிக்கைகள்மீது ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இன்றைக்கு தமிழ் நாட்டில் தொழில்கள் ஏராளமாக வளர்ந்து இருப்பதற்குக் காரணம், சிட்கோ, சிப்காட், டான்சி போன்ற நிறுவனங்களின் முயற்சியால்தான் என்று சொல்லிக்கொள்கிறேன்.

இந்தத் தொழிற்சாலைகள் நல்ல முறையில் உதவி பெறுவதற்கும், மூலப்பொருள்களை தொழிற்சாலைகள் நல்ல விதத்தில் பெறுவதற்கு உதவி பெறுவதில் இருக்கும் பல சிரமங்களை தவிர்ப்பதற்கும் நம்முடைய சிப்காட், உதவி செய்து இருக்கிறது. எந்தெந்த மூலப்பொருள்கள், எந்தெந்த தொழிற்சாலைக்குத் தேவையோ அதைத் தேவையான நேரத்தில் வழங்கிக் கொண்டு வருகிறது. அப்படி வழங்குகிற நேரத்தில் ஒரு தொழிற்சாலைக்குத் தேவையான, குறிப்பாக, கோக், மற்ற பொருள்கள், ஒட்டுமொத்தமாக ஒரு மாதத்திற்கு 20 டன் என்று சொல்லி, அந்த 20 டன்னையும் ஒரே நேரத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அறிவிப்பு செய்து இருக்கிறார்கள். அந்த 20 டன்னையும் சிறிய தொழில் அதிபர்கள் ஏறத்தாழ ரூ. 18,000 கட்டி, ஒரே நாளில், அந்த மூலப்பொருள்களை எடுக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. நான் கேட்டுக்கொள்வது எல்லாம், சிறிய தொழிற்சாலை வைத்து இருப்பவர்கள் ஒரே நாளில் ரூ. 18,000 சிட்கோ நிறுவனத்திற்குக் கட்டி மூலப் பொருள்களை எடுப்பதற்கு சிரமப்படுகிறார்கள். அவர்களுக்கு ஒரு மாத காலத்திற்கு இவ்வளவு என்று ஒதுக்கிவிட்டு, வாரத்திற்கு ஒரு முறை 5 டன் என்று சொல்லி, ஒரு மாதத்திற்குள் அந்த 20 டன்னையும் எடுத்துக்கொள்ளலாம் என்று உத்தரவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்

இந்தியாவிலே தேவைப்படுகிற மூலப்பொருள்களை வழங்குவதற்கு ஒரு குழு டெல்லி அரசால் நியமிக்கப்பட்டு இருக்கிறது. அந்தக் குழு இந்திய துணைக் கண்டத்திற்குத் தேவைப்படுகிற எல்லா மூலப்பொருள்களையும் ஒவ்வொரு மாநிலத்திற்குத் தேவையானதை, ஒதுக்கித் தருகிறது. ஆனால் குறிப்பாக, நம்முடைய தமிழகத்திற்கு ஒதுக்கியிருக்கும் மூலப்பொருள் குறைவாக இருக்கிறது. அதற்குக் காரணம் 15 ஆண்

களுக்கு முன்னுலே நம்முடைய தமிழகத்திலே இருந்த தொழிற்சாலைகளை கணக்கில் கொண்டு, அந்த அடிப்படையில் அவர்கள் மூலப்பொருள்களை ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால், இந்த 15 ஆண்டு காலத்திற்குப் பின்னால் மூன்று மடங்கு தொழில்கள் பெருகியிருக்கிறது. ஆகவே, அந்த அடிப்படையில், மூலப்பொருள்களை ஒதுக்கித்தரவேண்டுமென்று அந்த டெல்லியில் இருக்கும் கமிட்டியிடம் சொல்லி, மூலப்பொருள்களை பெறறுத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். போராடியாவது அந்தச் சலுகையைப் பெற்றுத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் இருக்கிற 17 தொழிற்சாலைகள் தவிர, மற்ற தொழிற்சாலைகளை, எந்தத் தொழிற்சாலையாக இருந்தாலும், ஆரம்பிப்பதற்கு நலத்துறையின் அனுமதி பெறத் தேவையில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அது நடைமுறையில் செயல்படவில்லை. அந்த அறிவிப்பு செயல்படுகிற விதத்தில் நம்முடைய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில், "பாக்டரி லைசென்சு" ஆண்டுக்கொருமுறை புதுப்பிக்க வேண்டிய நிலை இருக்கிறது. அது ஓராண்டு என்று இருப்பதை மாற்றி, மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பித்தால் போதும் என்ற நிலைமை உருவாக்கப்பட வேண்டும்.

இன்று நம்முடைய விற்பனை வரி அதிகாரிகள், சிறிய தொழிற்சாலைகளை அதிகம் மிரட்டிக்கொண்டு இருக்கிறார்கள். பணம் ஒரேயடியாகக் கட்ட வேண்டுமென்று சொல்கிறார்கள். இல்லையென்றால் தொழிற்சாலை அனுமதியை ரத்து செய்வோம் என்ற முறையில் அச்சுறுத்துகிறார்கள், மிரட்டிக்கொண்டு இருக்கிறார்கள்.

[நண்பகல் 12–00]

நான் சொல்லுவது எல்லாம் எப்படி விவசாயிகளுக்கு சிரமம் ஏற்படுகின்ற நேரத்தில் அவர்களுக்கு கடன்களை ஒத்தி வைக்கிறோம், சில நேரங்களில் ரத்து செய்யப்படுகிறது. அதைப் போல் சிறிய தொழிற்சாலைகளும் விற்பனை வரி மூலம் பாதிக்கப்படுகின்றபோது அதைத் தள்ளுபடி செய்யாவிட்டாலும்கூட ஒன்று இரண்டு மாத தவணை முறையில் கட்டுவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகள் சிறிய தொழிற்சாலைகளுக்குக் கடன் உதவி வழங்குகிறது. சில நேரங்களில் அவ்வங்கிகள் நினைத்த நேரத்தில் முடிவு எடுத்துவிடுகின்றன. ஒவ்வொரு முடிவும் அவ்வப்போது அறிவிக்கப்படுகின்ற நேரத்தில் சிறிய தொழிற்சாலைகள் நடத்த சிரமம் ஏற்படுகிறது. அந்த முடிவுகளை மேற்கொள்ளுவதற்கு முன்னால் வங்கியினுடைய பிரதிநிதியும் அதே போல் அரசு பிரதிநிதியும் தொழில் அதிபர் ஒருவரையும் சேர்த்து ஒரு கமிட்டியை அமைத்து வங்கிகள் எடுக்கிற முடிவினை கமிட்டியால் பரிசீலித்து அறிவிப்பார்களேயானால் சிறிய தொழிற்சாலைகள் நடத்துவதற்கு மிகவும் நன்றாக இருக்குமென்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



மின்சாரவெட்டு நம் நாட்டில் எந்த அளவுக்கு இருக்கிறது என்பதை எல்லோரும் அறிவார்கள்.

மின்சார வெட்டால் பல தொழிற்சாலைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. பாதிக்கப்படுகிற காரணத்தால், சிட்கோ போன்ற பல நிறுவனங்கள் மூலமாக கடன் பெற்றிருந்தால அந்தக் கடனை மாதம் தோறும் அல்லது வருடத்திற்கு ஒரு முறை என்று கட்டுவதில் சிரமம் ஏற்படுகிறது. மின்சார வெட்டினால் ஏற்படுகிற கஷ்டத்தைப் புரிந்து நம் அரசு அந்தத் தொழிற்சாலைகள் மாதம் தோறும் அல்லது வருடத்திற்கு ஒரு முறை கட்டுகிற கடன் தொகையை தள்ளிவைக்கின்ற வகையில் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக் கொள்ளுகிறேன். தற்போது கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் வருகிற தொழிற்சாலைகள் அனைத்தும் வேறு மாவட்டங்களுக்குத்தான் போகின்றன. குறிப்பாக இராமநாதபுரம், தர்மபுரி மாவட்டங்களுக்குப் போய்க் கொண்டிருக்கின்றன. என்ன காரணம் என்றால் கோவை மாவட்டத்தில் தொழிற்சாலைகள் அதிகமாக இருக்கின்றன, வருகிற தொழிற்சாலைகள் எல்லாம் இல்லாத மாவட்டங்களுக்கு ஏற்பாடு செய்கிறோம் என்கிறார்கள். அப்படிச் சொல்லுகிற நேரத்தில் கோவை மாவட்டத்தில் புதிய தொழிற்சாலைகள் உருவாக வழியில்லை. புதிய தொழிற்சாலைகள் அரசு தரப்பிலானாலும் சரி, தனியார் துறையிலானாலும் சரி, அவை கோவை மாவட்டத்தில் ஆரம்பிக்க முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். கோவையில் கெமிகல் இண்டஸ்டிரியல் எஸ்டேட்டும், எலக்டிரானிக் இண்டஸ்டிரியல் எஸ்டேட்டும் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். தொழிற்சாலைகள் நல்ல முறையில் இயங்க வேண்டுமென்றால் கோவையில் தொழில் துறையின் மூலம் ஒரு சோதனை ஆய்வுக் கூடம் அமைக்க வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்ளுகிறேன். தமிழக அரசு தொழில் வளர, சிட்காட், சிட்கோ, டான்சி போன்ற ஸ்தாபனங்களின் மூலம் சிறந்த முறையில் பணி புரிவதற்குப் பாராட்டி, நன்றி தெரிவித்து முடித்துக் கொள்ளுகிறேன்.

THIRU B. VENKATASWAMY: Sir, in support of the cut motions I want to offer a few remarks on the Industries Demand.

Industries in Tamil Nadu are not coming rapidly because if one want to start an industry he will go to Delhi Secretariat a number of times, spending lot of money. The Hon. Minister mentioned "*Delhi bahuth door hai*". What I say is, going to Delhi number of times, spending money will take 2 to 3 years and then only he can hope to get the licence to start industry. What I say is licensing system should be liberalised. It should be like 'Manu needhi thittam', giving applications and getting licence. That way, it should be liberalised. Last time on behalf of the Small Industries Development Corporation, a team came from Delhi. It came to Dharmapuri to study the situation. But I find only 3 to 4 licences have been given. I do not konw how many were the applicants. But there has been drastic cut. Only a few had been given. If this is the procedure adopted, only the big-shots, the rich will get licence and start the industry. The middle man cannot get the licence

The Hon. Minister should see that poor and middle income people also are enabled to start small industries. There is no scarcity of raw material But there is no sufficient electricity, machinery, etc. Those facilities we must have. With the present cumber some procedure only rich people from the North will get licence and start industry here. Our Tamilian brothers will not be able to start industries. This should be guarded against.

I find according to Rule 8, only finished goods and not raw materials should be exported to foreign countries. But I find that raw blocks of granite had been exported to Japan. Japan had refused now to take raw blocks. Some big shots are involved in this, I think. When the rule says only finished goods should be sent, how was this raw block sent? This should be enquired into. Along with small buildings, the requiredmachinery also should be there. What I say is, let sugercane bagasse and straw be made use of fully to start some industries. Let us give encouragement to our men to start small scale industries or cottage industries. There is no use of saying "we will start only big industries" without having the technical know-how. Let cottage and small-scale industries also be developed. Agro based industries should be started in each house as is done in Japan. Otherwise there is no use. Preparing Ragimalt, extracting oil from oil-cakes—these can be started. Rural industries should be encouraged.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

TANSI and SIPCOT are doing excellent work. Ihave also given a cut-motion to start an industrial complex at Hosur early. I request the Hon. Minister to take immediate steps in that connection. The SIPCOT complex must come early. It is said that there is land acquisition problem. There is no problem at all. The people are willing to give the land. Those poor people want some higher rates. Negotiate with them and you can traightaway purchase the land easily. Elaborate arrangements need not be made under the Land Acquisition Act. When the people are willing to give land, purchase it paying the price they want after negotiation, then immediately start the industrial complex. That is what I want to say. I have some difficulties and I want to stress one thing.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, அவை கோரம் இல்லாமல் நடந்து கொண்டிருக்கிறது என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 24 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். திரு. வெங்கடசாமி தொடர்ந்து பேசலாம்.

THIRU B. VENKATASWAMY: For example, though some indusdtries are to be started, the construction work in that connection is delaye-o There is lack of cement. There is also scarcity for electrictiy. Some f



the industrialists are saying that they would go away to Bangalore. I request the Hon. Minister to give a categorical assurance about the facilities that Government propose to give them. Electricity is the most important thing.

Regarding mineral survey, it has not been done properly.

As for major industries, there is the Salem Steel Plant. But only three crores have been allotted. The Finance Minister at the Centre is one from our State. I therefore request our Industries Minister to request him to allot more money and expedite the starting of industry. I alsoe rquest members in this House who belong to the ruling party at the Centre to request the Central FinanceMinister to allot enough money for that project. If that major industry comes into being, a number of ancillary industries also will grow up.

In regard to silk production, it is most important industry. There should be subsidy for seed materials, pump-set, etc. Subsidies have now been stopped. That should be given again. People are suffering. Then should be given incentive. I request the Hon. Minister to reconsider and renewthe subsidy scheme and also give other concessions to these people, that is, those who produce silk.

I understand that there is a proposal to start a Mulbery Corporation. If so, it should be done immediately and the entire Dharmapuri district should be included, so that we may achieve Yellow Revolution on. Thank you.

• திரு. நா. வீரா.சாமி: தலைவரவர்களே, மாண்புமிகு தொழிற்துறை அமைச்சர் அவர்கள் வைத்திருக்கிற மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

நம் மாநிலத்தில் தொழில்கள் நல்ல முறையில் வளர்ந்து இருக்கின்றன. வேகமாக வளர்ந்து இருக்கின்றன. பலருக்கு வேலைவாய்ப்புக் கிடைத்திருக்கிறது என்பதை யெல்லாம் யாரும் மறுக்க முடியாது. இருக்கிற புள்ளி விவரங்களைப் பார்க்கிற நேரத்தில் 1967-ல் மத்திய அரசு தொழிற் துறையில் 17 உரிமங்களும் 1969-ல் 39 உரிமங்களும் கிடைத்தன. இதற்கு மாறாக நம் முன்னாள் தொழிலமைச்சர் திரு. மாதவன் அவர்களின் பெருமுயற்சியின் காரணமாக 83 உரிமங்கள் இந்த ஆண்டு கிடைத்திருக்கின்றன. இந்த அளவு வளர்ந்து இருப்பதற்குக் காரணமான திரு. மாதவன் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறோம்.

அதுபோல வாலாஜாபேட்டை பகுதியில் ராணிப்பேட்டையில் காங்கிரஸ்காரர்கள் ஆட்சியில் 600 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டு அது எதற்கும் பயன்படுத்தப்படாமல் இருந்த நிலைமையை மாற்றி அங்கே இன்றைய தினம் பல தொழில் நிறுவனங்கள் வரக் கூடிய அளவுக்கு

இன்றையதினம் சிப்காட் பல நூறு கோடி ரூபாய்களை அந்தப் பகுதியில் செலவிட்டு தொழிற் வளர்ச்சியடையக்கூடிய நிலைமை அங்கு அமைந்துள்ளது என்றால் இதற்கும் நம் தொழில் அமைச்சர் திரு. மாதவன் அவர்கள் எடுத்த பெருமுயற்சியும் அரசாங்கத்தின் முயற்சியும்தான் காரணம் என்பதைத் தெரிவித்து அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இப்படி தொழில்கள் பெருகியிருக்கின்றன. நம் நாட்டில் சிறு சிறு தொழில்களிலும் வளர்ந்து இருக்கிறோம். குறிப்பாக செங்கல் ஓடு இவைகளை தயாரிக்கிற இடங்கள் ஆயிரக்கணக்கில் இருக்கிறது. அவர்களுக்குத் தேவையான அளவு கரி கிடைப்பதில்லை; கோல் கிடைப்பதில்லை. ஆனால் இந்தக் கோல் பல ஆண்டுகாலமாக வட நாட்டைச் சேர்ந்த மிடில் மென்கள் மூலமாக ஒரு டன்னுக்கு 280 ரூபாய் என்ற அளவில் கொடுத்து இந்தத் தொழிலில் ஈடுபட்டு இருக்கிறவர்கள் பெற்றுக்கொண்டு இருந்தார்கள். ஆனால், அமைச்சர் அவர்களும் தொழில்துறை இயக்குனர் அவர்களும் 6 மாதம் தொடர்ந்து முயற்சி எடுத்ததன் விளைவாக கூட்டுறவு சங்கத்தின் மூலமாக டன் 140 ரூபாய் என்ற அளவில் பிரிக்கில்ன் அசோஷியேஷனில் இருப்பவர்களுக்குக் கிடைக்கிறது. அவர்கள் தயாரிக்கிற செங்கலை ஆயிரம் 73 ரூபாய்க்குத்தான் விற்க வேண்டும் என்று அரசு உத்தரவு போட்டிருக்கிறது. இது சென்னைக்கும் செங்கற்பட்டுக்கும் பொருந்தும். ஆனால் மதுரை, கோவை, வேலூர் போன்ற இடங்களுக்கு இது பொருந்தாது. இது தேவைதானா, இதை மாற்றி அமைக்கவேண்டாமா என்பதை அரசு பரிசீலிக்க வேண்டும். ரூ. 73-க்குத்தான் விற்க வேண்டும் என்ற உத்திரவினால் அரசாங்கத்திற்குக் கிடைக்க வேண்டிய 25 லட்சம் ரூபாய் வணிகவரியை ஆண்டு தோறும் அரசு இழந்து கொண்டுவருகிறது. ஆகவே இதை மாற்றி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதைப் போல முன்பு வாலாஜாபேட்டை தாலுக்காவை இன்டஸ்டிரியலி பாக்வார்ட் என்று டிக்ளேர் செய்தார்கள். அப்படி டிக்ளேர் செய்யும் போது அன்றைக்கு ஆர்காடு வாலாஜாப்பேட்டையில் ஒரு தாலுக்காவாக அதனுள்ளே இருந்தது. இந்த உத்தரவு வந்ததற்குப் பின்னால் ஆர்காடு தனி தாலுக்காவாக அறிவிக்கப்பட்டு பிரிந்து போயிற்று, ஆகவே இன்டஸ்டிரியலி பாக்வார்ட் என்ற சலுகையை ஆர்காடு இழக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. ஆகவே ஆர்காட்டில் பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடையக்கூடிய தொழில்களை ஆரம்பிக்க அனுமதி வழங்கப்படுவது இல்லை. ஆகவே, இந்தச் சலுகையை பெறத் தக்க முறையில் ஆர்காடு பகுதியும் இந்தப் பயனைப் பெற வழிவகுத்து ஆர்காட்டையும் இந்த இன்டஸ்டிரியலி பாக்வர்ட் என்ற பகுதியில் இணைத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

சேலம் தொழிற்சாலை பற்றி என் கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்திய பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அன்றைக்கு வந்தார்கள். அடிக்கல் நாட்டினார்கள். 15 கோடி ரூபாய் கிடைக்கும் என்று அறிவித்தார்கள். மத்திய அரசு சென்ற ஆண்டிற்கு முந்தைய ஆண்டு 4 கோடி ரூபாய் தந்தது. போன ஆண்டு 3 கோடி ரூபாய் கொடுத்து



இந்த ஆண்டு கொடுத்து 3 ஆண்டு இருக்கிறது. ஏறத்தாழ 400 கோடி ரூபாய் மூலதனம் போட வேண்டிய இடத்தில் 3 கோடி 4 கோடி என்று கொடுத்தால் அந்தத் தொழிற்சாலை எப்படி வரும், என்றைக்கு வரும் என்று யாருக்கும் தெரியவில்லை. கொடுக்கப்பட்ட 3 கோடிக்கும் 4 கோடிக்கும் யார் யாரை வேலைக்கு வைத்திருக்கிறார்கள் என்றால் 100-க்கு 90 பேர் நம் மாநிலத்தைச் சேராதவர்கள், தமிழர்கள் அல்லாதவர்கள்.

அது மட்டுமல்ல. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்திய அரசாங்கம் தொழில்களை வளர்ச்சி அடையச் செய்யப் போகிறோம் என்று 3,600 கோடிக்குத் திட்டத்தை தீட்டியுள்ளது. தமிழகம் என்ன பாவம் செய்ததோ தெரியவில்லை ஒரு கோடி ரூபாயைக் கூட மத்திய அரசு சென்ட்ரல் சப்சிடியில் கொடுக்க முன்வரவில்லை. நியாயமாக மக்கள் தொகை அடிப்படையில் பார்த்தால்கூட 360 கோடியாவது நமக்குக் கிடைத்து இருக்கவேண்டும். ஆனால் ஒரு கோடி கூட கொடுக்காமல் தமிழ் நாட்டைப் பொறுத்தவரை மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடந்து கொள்கிற மத்திய அரசைப் பார்க்கிற நேரத்தில் நாம் நிச்சயமாக தொழில் துறையில் எப்படி முன்னேறப்போகிறோம் என்ற சந்தேகம் வருகிறது. அது மட்டுமல்ல. இன்றையதினம் இந்த நாட்டில் மத்திய அரசு அதிகாரத்தில் இயங்குகிற சேலம் ஸ்டீல் ப்ளாண்டாக இருக்கட்டும், நெய்வேலியாகட்டும், பாய்லர் ப்ளாண்ட் ஆகட்டும், இந்தியன் ஆயில் ஆகட்டும் டெலிபிரிண்டர் தொழிற்சாலை ஆகட்டும் எந்தத் தொழிற்சாலையை எடுத்துக் கொண்டாலும் அங்கே 100-க்கு 80 பேர் மலையாளிகளாக—தமிழர்கள் அல்லாதவர்களாக இருக்கிறார்கள். இன்றைக்குத் தமிழகத்தில் தமிழர்கள் ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது. குஜராத்தில், மகாராஷ்டிரத்தில் சன்ஸ் ஆப் தி சாயில் என்ற தியரியை வைத்துக்கொண்டு 80 சத விகித வேலையை அங்கு உள்ளவர்களுக்குத்தான் அங்கே முதலில் கொடுக்கிறார்கள். அப்படித்தான் கொடுக்க வேண்டுமென்று அங்கே உத்தரவு போட்டு இருக்கிறது. ஆனால் இங்கே நாம் வாயளவில் பேசிக்கொண்டிருக்கிறோம். அங்கே 20 சத விகிதம் கூட யாரை எடுக்க வேண்டும் என்றால் டெக்னிகல் ஆட்களைத்தான் எடுக்கவேண்டும். க்ளார்க்காக டைப்பிஸ்டாக இருந்தால் லோகல் மென்னாக இருக்கவேண்டும் என்று உத்தரவு போட்டு இருக்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில் நம் அரசாங்கம் அப்படிப்பட்ட உத்தரவைப் போட்டு அப்படிப்பட்ட சட்டத்தை அமுல்படுத்த ஏன் தயங்குகிறது என்று புரியவில்லை. அப்படிப்பட்ட உத்தரவைப்போட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்றைக்குத் தொழில்கள் பெருக வேண்டும் என்று சொல்லுகிறோம். ஆனால் இந்தியாவில் கெமிக்கலை அடிப்படையாகக் கொண்ட தொழிற்சாலைகள்தான் வளருகின்றன. கெமிக்கலை ஒட்டிய தொழில்கள் தான் வளருகின்றன. பொருளாதாரமும் அதன்மூலம்தான் அதிக அளவு வளருகிறது என்று பார்க்கிறோம். ஆனால் தமிழ் நாட்டில் கெமிக்கல் இன்டஸ்டிரீசைப் பற்றி யாரும் அக்கறை காட்டுவது இல்லை, கவலைப்படுவது இல்லை. விண்ணப்பம் போட்டால் அரசாங்கம் கவனிப்பது இல்லை. இப்படி இருந்தால் நம் நாட்டின் பொருளாதாரம் பெரிய அளவு பாதிக்கப்படும். வெளியிடங்களிலிருந்து கெமிக்கல் வாங்கவேண்டிய சூழ்நிலை ஏற்படுவதால் நம் பொருளாதாரம் பாதிக்கப்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்ட கடமைப்பட்டு இருக்கிறேன்.

நம்முடைய மாநில அரசு உருவாக்குகின்ற சில தொழிற்சாலைகள் எப்படி இருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அரசாங்கத்தால் நடத்தப்படும் சில தொழிற்சாலைகள் எப்போது பார்த்தாலும் நஷ்டம் நஷ்டம் என்கிறார்கள். அரக்கோணம் ஸ்டீல் பிளாண்டில் பல கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அதைப்போல சிராமிக் இண்டஸ்ட்ரி நஷ்டத்தில் ஓடிக்கொண்டிருக்கிறது. இந்த சிராமிக் இண்டஸ்ட்ரி கூட நஷ்டத்தில் ஓடுகிறது என்றால் இதற்கு யார் பொறுப்பு ? யார் பொறுப்பாக இருந்தாலும் அவர்களை டிஸ்மிஸ் செய்யவேண்டும். தனிப்பட்டவர்கள் எந்தத் தொழிலை நடத்தினாலும் பெரும் லாபம் வருகிறது. ஆனால் அரசாங்கம் நடத்தினால் நஷ்டம் வருகிறது. அதற்கு என்ன காரணம் என்று ஆராயவேண்டும். அங்கே இருப்பவர்கள் என்ன வேலை செய்கிறார்கள் என்பதைக் கண்காணிக்க வேண்டும். திறமையாக வேலை செய்யவில்லையென்றால் யாராக இருந்தாலும் டிஸ்மிஸ் செய்ய வேண்டும். அப்போதுதான் அரசாங்கத் தொழில் நிறுவனங்கள் ஒழுங்காக வேலை செய்யும்.

நான் இன்னொன்றையும் மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய நாட்டில் ஏராளமான "செமி ப்ரெஷியஸ் ஸ்டோன்ஸ்" இருக்கின்றன. ஆயிரம், கோடிக்கணக்கில் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். ஜியலாஜிக்கல் டிப்பார்ட்மெண்டில் என்ன செய்கிறார்கள் என்று தெரியவில்லை. இங்கே இருக்கிற கனிவளங்களை வேறு யாருக்கோ காட்டிக் கொடுக்கிறார்களா என்று தெரியவில்லை. வட நாட்டுக்காரர்கள் இங்கு வந்து இரவோடு இரவாகக் கனி வளங்களைத் தோண்டிக்கொண்டுபோய், அந்தப் பொருட்களை "செமி ப்ரெஷியஸ் ஸ்டோன்ஸ்" என்று சொல்லி ஏற்றுமதி செய்து கோடிக்கணக்கில் பணம் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். யார் யார் அப்படி செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதற்கான விபரங்கள் வேண்டுமானால் நான் தனியாக அமைச்சரவர்களிடம் தருகிறேன். இப்படி எல்லாம் நிலைமைகள் இருப்பதைப் பார்த்தால் இந்த ஜியலாஜிக்கல் டிப்பார்ட்மெண்டையே மூடிவிடலாம் போலிருக்கிறது ; மூடிவிட்டாலும் பரவாயில்லை.

எனக்கு இரண்டு நண்பர்கள் இருக்கிறார்கள். அவர்கள் படிக்காதவர்கள், பார்த்தால் பைத்தியக்காரர்கள் மாதிரி தெரியும். ஆனால் எந்தெந்த இடத்தில் என்னென்ன கனிவளம் இருக்கிறது என்பதை, என்னென்ன பொருள்கள் கிடைக்கும் என்பதை மிகத் தெளிவாகச் சொல்கிறார்கள். அப்படி பல பொருட்களை அவர்கள் கண்டுபிடித்து எடுத்து வைத்திருக்கிறார்கள். அவர்களை இந்தத் துறையில் நம்முடைய அரசாங்கம் பயன்படுத்திக்கொள்ளலாம்.

அடுத்தபடியாக "லார்ஜ் அண்ட் மீடியம் இண்டஸ்ட்ரீஸ்" இருக்கின்றன. நாம் ஏதாவது தொழில் தொடங்க வேண்டுமானால் உள்ளபடியே மத்திய அரசு தமிழ்நாட்டுக்கு லைசென்ஸ் வழங்குவதில் காலதாமதம் செய்கிறது. பொட்டாசியம் கார்பனேட், என். பி. கே. பெர்டிலைசர்ஸுக்கு உரிமம் கொடுங்கள் என்று கேட்டால் கிடைக்கமாட்டேன் என்கிறது. நண்பர் இராஜா கூட லைசென்ஸ் கேட்டு மனு போட்டிருக்கிறார். எந்தத்



தொழிலை தொடங்கவேண்டுமானாலும் டில்லிக்கு படையெடுக்க வேண்டியிருக்கிறது. பம்பாயிலே இருக்கிற ஒரு தனி நபர் ஏகபோக உரிமை பெற்றிருக்கிறார். அவருடைய செல்வாக்கைப் பயன்படுத்தி நம்முடைய அரசுக்கு உரிமம் கிடைக்காமல் செய்கிறார். நாம் டில்லிக்குப் போனாலும் பம்பாயில் இருக்கிற ஏகபோக உரிமம் பெற்றவரால் நமக்குக் கிடைக்காமல் போகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், உறுப்பினர்கள் பிஸினஸ் சம்பந்தமாக "கான்வாஸ்" பண்ணக்கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி இருக்கும்போது ஒரு உறுப்பினர் வேறு ஒரு உறுப்பினர் மனு போட்டிருக்கிறார் என்று சொல்கிறாரே, அது கான்வாஸ் பண்ணுவதுமாதிரி ஆகாதா ?

திரு. நா. வீராசாமி : நாம் கான்வாஸ் பண்ணக்கூடாது என்பதை ஒத்துக்கொள்கிறேன். தொழில் தொடங்குவதற்காக அனுமதி கேட்டிருக்கிறார் ; கிடைக்கவில்லை ; பம்பாய்க்காரரின் செல்வாக்கினால் நமக்கு அனுமதி கிடைப்பதில்லை ; கிடைத்தாலும் ரொம்ப காலதாமதமாகக் கிடைக்கிறது என்று சொல்கிறேன்: அனுமதி கிடைக்கவில்லை என்று சொல்வதில் தவறு ஒன்றும் இல்லை. இராஜா அவர்கள் உறுப்பினர் என்றால் அவர் நிரந்தரமாக எம்.எல்.ஏ.–ஆக இருக்கப்போவதில்லை. இப்படி தொழில் தொடங்க லைசென்ஸ் கொடுப்பதில் மத்திய அரசு காலதாமதம் செய்வதற்கு என்ன காரணம் என்று கேட்க விரும்புகிறேன். (மணியடிக்கப்பட்டது) இன்னும் கொஞ்சம் நேரம் கொடுங்கள் ; முடித்து விடுகிறேன்.

அரசுத் துறையிலே வேலை என்று சொல்லும்போது, தொழில் துறையில் பயிற்சி பெற்ற பட்டதாரிகள் ஒரு தொழில் நிறுவனத்தில் தனியாகச் சொந்தமாகத் தொழில் ஆரம்பித்து மூன்று ஆண்டுகள் நடத்தவேண்டும்; அதில் அவர்கள் வெற்றிகண்டால் தொடர்ந்து அந்தத் தொழிலை செய்யலாம் ; இல்லை என்றால் மூன்றாண்டு கழித்து விட்டுவிடுவது என்று சி.எஸ்.ஐ.ஆர். ரிப்போர்ட்டில் வழிவகை செய்திருக்கிறார்கள். ஆனால் நம்முடைய மாநிலத்தில் இப்படி தொழில் அதிபர்கள் தொழில் துறையில் பட்டம் பெற்றவர்களுக்கு சலுகை அளிக்க முன்வரவில்லை ; இனியாவது இச்சலுகையை அளிக்க அவர்கள் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்.

தொழில் துறையிலே முன்னேறி இருக்கிற மராட்டியம், குஜராத், பஞ்சாப், அரியானா போன்ற மாநிலங்களில் மாநில மத்திய தொழிற்சாலைகள் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கின்றன. ஆனால் தமிழ்நாட்டிலே அந்த நிலைமை இல்லை. அதனால் அங்கே தனிப்பட்டவர்களுக்குப் பயிற்சியளிக்க நிறைய வாய்ப்பு இருக்கிறது ; இங்கே நம்முடைய அரசுதான் அதைக் கவனிக்க வேண்டியிருக்கிறது.

இதற்கு முன்னால் இருந்த டைரக்டர் ஆப் இண்டஸ்ட்ரீஸ் அண்ட் காமர்ஸ் திரு. பழனியப்பன் அவர்கள் அவருக்கு இருந்த அதிகாரங்களை எல்லாம் அரசாங்கத்திற்குக் கொடுத்துவிட்டார். இந்தமாதிரியான

வேலைகளை எல்லாம் டைரக்டர் ஆப் இண்டஸ்ட்ரீஸ் அண்ட் காமர்ஸ்தான் கவனித்துக் கொள்ள வேண்டும். இப்போது இருக்கிற டைரக்டருக்கு என்ன வேலை என்று தெரியவில்லை. எதைக்கேட்டாலும் சிப்காட், டிட்கோ, சிட்கோ இருக்கின்றன; அங்கே போய் கேளுங்கள் என்று சொல்லி விடுகிறார். அப்படியானால் அவர் என்ன செய்கிறார், எதற்காக இருக்கிறார் என்று தெரியவில்லை. தொழில்கள் வளர வேண்டுமென்றால் டைரக்டர் ஆப் இண்டஸ்ட்ரீஸ் அண்ட் காமர்ஸுக்கு நிறைய அதிகாரங்கள் இருக்கவேண்டும். இதில் முக்கிய கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்தியா மீட்டர்ஸ் தமிழ்நாட்டில் நல்ல முறையில் இயங்கிக் கொண்டிருந்தது. தொழிலாளர்கள் தகராறு செய்ததால் அது மூடப்பட்டிருக்கிறது. அவர்கள் அந்தத் தொழிலை நடத்தவில்லை என்றால் அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டும். மின்சாரத் துறையும், தொழில் துறையும் ஒரே அமைச்சரிடம் இருப்பதால், மாண்புமிகு அமைச்சரவர்கள் அதை எடுத்துக்கொள்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. என். கே. பழனிசாமி : சார், இந்தச் சர்க்காருடைய தொழில் கொள்கை பற்றி சொல்ல வேண்டுமானால் சர்க்காரின் கொள்கை தொழில் அபிவிருத்தி செய்யக்கூடியதாக அமையவில்லை என்றுதான் குறிப்பிட வேண்டும்.

குறிப்பாக இன்றையதினம் ஏராளமான மெஷின்கள் பொருத்தப்பட்டு வருஷக்கணக்காக இருக்கின்றன. இன்னும் மின்சாரம் கொடுக்கவில்லை. அதுமட்டுமல்ல; இருக்கக்கூடிய மெஷின்களில் பாதிக்கு மேல் ஒரு ஆண்டில் ஓடவில்லை. அதனால் ஏராளமான தொழிற்சாலைகள் இன்றைக்கு மூடப்பட்டிருக்கின்றன. தொழிலுக்கு முக்கியமான மின்சாரம் இல்லை. இந்த வருஷம் மழை இல்லாமல் மின்சாரம் போய்விட்டது என்று சொல்லப்பட்டது. இது வருஷா வருஷம் இப்படி ஏற்படக்கூடிய ஒரு சம்பவமாக வந்துவிட்டது. இருந்தபோதிலும் சீராக மின்சாரம் கொடுக்க, தொழில் வளர்ச்சி பெருக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? சர்க்கார் ஏதாவது திட்டம் வைத்திருக்கிறதா என்றால் ஒன்றும் இல்லை. அது "ஷார்ட் ஸைட்டட் பாலிஸி" யாகத்தான் இருக்கிறது. மழை பெய்தால் தொழில் நடக்கும்; இல்லை என்றால் நடக்காது. இந்த நிலைமையினால்தான் பிரிட்டிஷ் காலத்திலேயே ஹைடல் பவரை மட்டும் நம்பி இருக்கக்கூடாது என்று சொன்னார்கள்.

மழை பெய்து தண்ணீர் வந்தால் சர்க்கார் செய்தது, சர்க்காருக்கு வெற்றி என்கிறார்கள். பருவ மழை பெய்யாமல் கோளாறு ஏற்பட்டால் சர்க்கார் என்ன செய்ய முடியும் என்கிறார்கள். உண்மையிலேயே தொழில் பெருக வேண்டுமென்ற எண்ணம் இருந்தால் மின்சாரப் பெருக்கத்திற்கு சர்க்கார் ஏதாவது வழிவகை கண்டிருக்க வேண்டும். அப்படி எதுவும் செய்யவில்லை. ஆகையால் தொழில் துறையிலே சர்க்காருக்கு நிலையான ஒரு கொள்கை கிடையாது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



ஸ்டேட் பிளானிங் கமிஷன் கூட சொல்லியிருக்கிறது. 6,000 மெகாவாட் மின்சாரம் 1984-ம் ஆண்டு தேவை என்று சொல்லியிருக்கிறது. 3,000 மெகாவாட் தொழில் துறைக்கு மட்டும் தேவைப்படுகிறது. அதனால் சர்க்கார் 75 சதவிகிதம் தெர்மல் பிளாண்டை நம்பி இருக்க வேண்டுமென்று சொல்லி இருக்கிறது. அதற்கு என்ன நடவடிக்கை சர்க்கார் எடுத்திருக்கிறது? இதுவரை ஒன்றும் செய்ததாகத் தெரியவில்லை.

ஆயிரம் மெகாவாட் நெய்வேலியில், ஆயிரம் மெகாவாட் மேட்டூர் தெர்மல் பிளான்டில், இப்படி தெர்மல் பிளான்டாக இருந்தாலும் நியூக்ளியர் பிளான்டாக இருந்தாலும் ஆயிரம் ஆயிரமாக இருக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்; அது மட்டுமல்ல. இப்போதிருக்கிற ஃப்யூயல் லிஸ்டத்தை மாற்றியமைக்க வேண்டும். நியூக்ளியர் பேஸ்ட் பவர் பிளான்டுகளை அதிகமாக ஏற்படுத்த சர்க்கார் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கல்பாக்கம் பிளான்டை எடுத்துக்கொண்டால் முதல் ஷிப்டு 75-ம் வருஷத்தில் ஆரம்பிக்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால் இன்னும் வரவில்லை. எப்போது வரும் என்றே தெரியாது. காரணம் என்ன என்று கேட்டால் புளூட்டோனியம் எல்லாம் ராஜஸ்தான் பிளான்டுக்கு பயன்படுத்தப்பட்டுவிட்டது; கானடாவிலிருந்து மேலும் கொடுக்கமாட்டேன் என்று சொல்கிறார்கள்; அதனால் தாமதம் ஏற்படுகிறது என்று சொல்கிறார்கள். இங்கே ஹெவி வாட்டர் இருந்தாலும் புளூட்டோனியம் முக்கியமானது—அங்கேயிருந்துதான் வரவேண்டியிருக்கிறது. ஆகவே, இன்னும் 5, வருஷங்களானாலும் கல்பாக்கம் வருமா என்ற பயம் ஏற்படுகிறது. இந்த நெருக்கடியான நேரத்தில் உடனடியாக கல்பாக்கம் அணுமின்சார நிலையம் செயல்பட வேண்டும். அதற்கு சர்க்கார் என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறார்கள் என்று தெரியவில்லை.

அடுத்தபடியாக, இன்வெஸ்ட்மென்ட் பாலிசியை எடுத்துக்கொண்டால், அதிலே மத்திய சர்க்காரின் பணம் வந்தாலும், பல்வேறு நிறுவனங்களில் இருந்து வரக்கூடிய பயனைப் பார்த்தால் பூராவும் பிரைவேட் செக்டாருக்குத்தான் போகிறது. எந்த எந்த இடங்களிலே பொதுத்துறை அமைய வேண்டுமோ அங்கெல்லாம் பிரைவேட் செக்டார் இருக்கிறது. தொழில் துறையிலே இந்த சர்க்காரின் கொள்கை ஒரு "மிக்சட் எக்னாமிக் பாலிசி"யாக இருக்கிறது. கூட்டு வேண்டுமென்றால் காய்கறியில் கூட்டு இருக்கலாம்; இண்டஸ்ட்ரீசில் கூட்டு வேண்டுமென்றால் அந்தக் கூட்டு எப்படி இருக்கும்? கூட்டுத்துறையில் யாருக்கு டாமினன்ட் பொசிஷன் இருக்கும்? பிரைவேட் செக்டார் அல்லது பப்ளிக் செக்டார். இதுதான் நம் முன்னால் இருக்கக்கூடிய பிரச்சனை. பப்ளிக் செக்டார்தான் வேண்டுமென்றால் அதற்கு ஒரு "ஹெல்தி நாஷனலைசேஷன் பாலிஸி" கிடையாது.

சில பஸ்களை எடுத்தோம். அவர்கள் சுப்ரீம் கோர்ட்டுக்கு தடைக்காகப் போனார்கள். இந்தமாதிரி வரக்கூடாது. சரியாகச் சட்டம் போட்டு எடுத்துக்கொள்ள வேண்டும். இந்தமாதிரி இலாபம் வரக்கூடிய தொழிலை எல்லாம் சர்க்கார் துறையில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

சர்க்கரை ஆலைகளை எல்லாம் கூட ப்ப்ளிக் செக்டாரில் எடுத்துக் கொள்ள வேண்டும். கூட்டுறவுத் துறையிலே விட்டு வைத்தாலும் கூட நமக்கு உரிய வருமானம் வராது. சர்க்காரே நேரடியாக சர்க்கரை ஆலைகளை எடுத்து நடத்துவதன் மூலம் வியாபாரம் பண்ணக்கூடிய வாய்ப்பும் ஏற்படும். அதனால் அதிகமாக வரக்கூடிய பணத்தை கன்சாலிடேட் பண்டுக்குப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

இப்போது டபிள் பிரைஸ் என்ற முறையில் ஜனங்களை கசக்கிப் பிழி கிறார்கள்.

[பிற்பகல் 12-30.]

இந்தச் சர்க்கரை ஆலைகளை சர்க்காரே எடுத்துக்கொள்வதன் மூலம் சர்க்காருக்கும் ப்ராபிட்—ஜனங்களுக்கும் ரிலீ·்ப்.

டெக்ஸ்டைல்களை எடுத்துக்கொண்டால் ஓட்டி, ஓட்டி மெஷின்களை காயலாண் கடைக்கு ல்ாயக்காகத்தான் வைத்திருந்தார்கள். மத்திய சர்க்கார் அதற்கு ஏராளமான பணத்தைக் கொடுத்து எடுத்துக்கொண்டார்கள். அதில் நமக்கும் பங்குவேண்டுமென்று நாம் வாதாடுகிறோம். இன்றைக்கு டெக்ஸ்டூல் மில்லை நடத்த முடியாமல்—சர்க்கார் ஏற்று நடத்துகிறார்கள். போதுமான நிதி இல்லை என்கிறார்கள். இன்றைக்கு பின்னி கம்பெனி அதை, வாங்கப் போகிறார்கள். பின்னி கம்பெனியை ஏன் அனுமதிக் கிறீர்கள்? சர்க்காரே எடுத்து நடத்தக் கூடாதா என்று கேட்க ஆசைப் படுகிறேன்.

முன்பாவது மத்திய சர்க்கார் இடைஞ்சலாக இருந்தது என்று சொன்னார்கள். இன்றைக்கு மாநில சர்க்காரே சட்டம் போட்டு சர்க்கரை ஆலைகளை தேசியமயமாக்கலாம் என்று மத்தியசர்க்கார் அறிவித்து விட்டார்கள். இது நமது சர்க்காருக்கே ஒரு சாலன்ஜ்—இந்த சாலன்ஜை நமது சர்க்கார் ஏற்றுக்கொண்டு இதற்கான சட்டத்தை உடனடியாகக் கொண்டுவரவேண்டும். மில் முதலாளிகளின் ப்ரஷர் காரணமாக கைவிட்டுவிடுவார்களோ என்று சந்தேகமாக இருக்கிறது. அதற்கு இடமின்றி அந்தச் சட்டம் இந்தக் கூட்டத் தொடரிலேயே கொண்டுவரப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் இன்றைக்கு அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள் கிறேன்.

இந்தியா மீட்டர்ஸ் நிறுவனத்தை எடுத்துக்கொண்டால் யாரோ தவறு செய்தார்கள் என்பதற்காக ஒரு வருஷமாக மூடிக்கிடக்கிறது. 800 பேர் களுக்கு வேலை இல்லை.

பிர்லா கன்சர்ன்—திருச்சி சிம்கோ கம்பெனியார்—ஜப்பான் கொலாபரேஷனுடன் மீட்டர் தயாரிக்கிறார்கள். இவை போதவில்லை என்று வெளி மாநிலங்களில் இருந்து வாங்க வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது. ஏன் உடனடியாக இந்தியா மீட்டர்ஸ் நிறுவனத்தை நாம் எடுத்துக்கொள்ளக் கூடாது என்று கேட்க ஆசைப்படுகிறேன்.





சிறு தொழில்களை எடுத்துக்கொண்டால் அவற்றுக்கு ரா மெட்டீரியல்ஸ், மின்சாரம் ஆகிய இரண்டும்தான் தேவை. இதில் ஏராளமான பேர்கள் இருக்கிறார்கள். லட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். மின்சாரப் பற்றாக்குறை காரணமாக அவை முடங்கிக் கிடக்கின்றன. நாம் மேட்டூர் அலுமினியம் கம்பெனிக்கு மின்சாரத்தை கன்சஷனில் கொடுக்கிறோம். இந்தச் சிறு தொழில்களுக்கும் ஏன் கன்சஷனில் மின்சாரம் கொடுக்கக்கூடாது? இதில் போதுமான கவனம் செலுத்தப்படவில்லை என்று சொல்ல விரும்புகிறேன்.

இண்டஸ்ட்ரியல் அன்ரெஸ்ட் பல டிஸ்ப்யூட்ஸ் காரணமாக எழுகிறபோது தொழில் முறையில் அணுகக்கூடிய பாலிசி இந்தச் சர்க்காருக்குக் கிடையாது.

ஹெல்தி நாஷனலைசேஷன் பாலிசியை எடுத்துக்கொண்டாலும் அதில் ஒரு உருப்படியான கொள்கை கிடையாது. மத்திய சர்க்காரை எடுத்துக் கொண்டாலும் சரி, மாநில சர்க்காரை எடுத்துக் கொண்டாலும் சரி 1956ஆம் ஆண்டு இண்டஸ்ட்ரியல் ரெசலூஷனுக்கு விரோதமாகப் போகிற போக்கைத்தான் காண்கிறோம். அதோடு, இன்றைக்கு மத்திய சர்க்கார் பொதுத்துறையில்—பொதுஜனங்கள் பார்ட்டிசிபேஷன் என்ற முறையில் ஒரு கொள்கையைக் கொண்டுவர முயல்கிறார்கள். பணம் உள்ளவர்கள்தான் அதில் பார்ட்டிசிபேட் பண்ண முடியும்? பணக்காரர்களது ஆதிக்கம்தான் வரும். இது தவறான கொள்கை—இதைப் பின்பற்றக்கூடாது. நமது சர்க்கார் மத்திய சர்க்காரின் இந்தத் தவறான கொள்கையை எதிர்த்து அறிவிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது).

*<u>திரு. எஸ். முருகையன்</u>: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கோரியிருக்கிற மானியக் கோரிக்கைகளை ஆதரித்து என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன.

சர்க்கரை ஆலை பற்றி எனக்கு முன்பாகப் பேசிய மாண்புமிகு லத்தீப் அவர்கள்—சர்க்கரை ஆலைகளை அதிகமாக ஏற்படுத்துவது உணவு உற்பத்தியைப் பாதிக்கும் என்று சொன்னார்கள். சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு வேண்டுமென்று எல்லா நிலங்களிலும் கரும்பே பயிரிடுவதில்லை. உணவுப் பயிர்களை வைக்கிறபோதே விவசாயிகள் பணப் பயிரையும் வைத்தால்தான் அவர்களுக்கு செலவுக்கு வேண்டிய பண வசதியைப் பெற முடிகிறது. ஆகவே சர்க்கரை ஆலை ஆரம்பிப்பதில் தவறு இல்லை. வடாற்காடு மாவட்டத்தில் இன்னும் இரண்டு சர்க்கரை ஆலைகள் ஆரம்பிக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது என்று சொல்லிக்கொள்ள ஆசைப் படுகிறேன்.

சர்க்கரை ஆலைகளில் சீ·ப் இன்ஜினியர்—சீப் கெமிஸ்ட்டுகளைப் போட வேண்டுமென்றால் வடநாட்டில் உள்ளவர்களைக் கொண்டுவந்து இங்கே போடுகிற நிலைமைதான் இருக்கிறது. இந்தத் துறையில் நல்ல பயிற்சி பெற்றவர்கள் தமிழகத்திலேயே இருக்கிறார்கள். டெபுடி சீப் இன்ஜினியர்ஸ்—டெபுடி சீப் கெமிஸ்ட்ஸ் பதவிகளுக்கெல்லாம் நியமிக்கும்போது இவர்களை எல்லாம் அந்தப் பதவிகளுக்குப் போடுகிற நிலையை உருவாக்க வேண்டும்.

வட நாட்டில் உள்ளவர்களை இங்கே கொண்டுவந்து போட வேண்டிய அவசியம் இல்லை என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

தமிழகத்தில் சந்தன மரங்கள் ஏராளம் உற்பத்தியாகின்றன. ஆனால் கர்நாடக மாநிலத்தில் இருந்துதான் சந்தன எண்ணெய் அதிக அளவுக்கு ஏற்றுமதியாகிறது. அரசாங்கமே அங்கே ஒரு சந்தன எண்ணெய் தொழிற்சாலையை வைத்திருக்கிறார்கள். நாமோ நமது மாநிலத்தில் அதிக அளவு சந்தன மரங்கள் உற்பத்தியானாலும் மரங்களை ஏலம் விட்டு அவற்றை வெட்டி பிற மாநிலங்களுக்கு எடுத்துப்போக விட்டுவிடுகிறோம். இது வனத்துறையைச் சேர்ந்தது என்று சொல்லாமல் உடனடியாக தொழில்துறை மூலமாக நமது மாநிலத்திலேயே சந்தன எண்ணெய் தயாரிக்கும் ஒரு தொழிற்சாலையை நிறுவி—இங்கேயே எண்ணெய் தயாரிக்க ஏற்பாடு செய்யவேண்டும். இதன்மூலம் நமக்கு ஏராளமாக அந்நியச் செலாவணி கிடைக்க வாய்ப்பு இருக்கிறது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக கிராமப் பகுதிகளில் எல்லாம் சிறு தொழில்கள் வளர வேண்டுமென்று சொல்லிக்கொண்டிருக்கிறோம். பஞ்சாப் மாநிலத்தைப் பார்க்கிற நேரத்தில் அங்கே ஏராளமான சிறு தொழில்கள் வளர்ந்து வருகின்றன. தொழில் அமைச்சராக இருந்த மாண்புமிகு திரு மாதவன் அவர்களே வடநாட்டில் சுற்றுப் பயணம் செய்தபோது பஞ்சாப் மாநிலத்தைச் சுற்றிப் பார்த்து அந்த அளவுக்கு நம் மாநிலத்திலும் சிறுதொழில்களை வளர்க்க வேண்டுமென்ற முயற்சியை மேற்கொண்டார்கள்.

பொதுவாக பஞ்சாப் மாநிலத்தில் சிறுதொழில்கள் அதிக அளவுக்கு வளர்ச்சி பெற்றிருப்பதற்குக் காரணம்—அங்கே பொதுசுகாதாரச் சட்டம்—நகர அமைப்புத் திட்டம் ஆகியவற்றை சிலகாலத்துக்கு ஒத்திவைத்துவிட்டார்கள்— எங்கு வேண்டுமானாலும் எந்தத் தொழிலையும் வைக்கலாம் என்ற சூழ்நிலையை உருவாக்கி இருக்கிறார்கள், அதனால்தான் பஞ்சாபில் கிராமப் பகுதிகளில் எல்லாம் சிறு தொழில்கள் வளருவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன.

ஆனால் இங்கே மாவு அரைப்பதற்கு நாம் மில்லைப் போடவேண்டுமென்றாலும் கூட, பதினான்கு அடி உயரக் கட்டிடம் வேண்டும், வெளிப்புறக் கதவுகள் திறக்கப்பட்டு இருக்க வேண்டும், நான்குபுறமும் சுற்றுவட்டாரத்தில் திறந்த வெளி இருக்கவேண்டும் என்றெல்லாம் சட்டப்படியான கட்டுப்பாட்டை வைத்திருக்கிறோம். சிறு தொழில்கள் வளரவேண்டுமென்றால் இந்தச் சட்டங்களில் இருந்து எல்லாம் தாராளமாக விதிவிலக்குக் கொடுப்பது மிகமிக முக்கியமானது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய தமிழகத்தில் கறுப்புக் கற்களை வெட்டி மற்ற நாடுகளுக்கு அனுப்புகிறார்கள். கறுப்புக் கற்களை வெட்டி வேறு நாடுகளுக்கு அனுப்பக்கூடிய உத்தரவை வேறு மாநிலத்தில் உள்ளவர்கள் வாங்கி அனுபவிக்கிறார்கள். அண்மையில் கூட டால்மியா கம்பெனியார்



இதுபோன்று கறுப்புக் கற்களை வெட்டி வெளியிடங்களுக்கு அனுப்ப ஏற்பாடு செய்துகொண்டிருப்பதாகத் தெரிகிறது. நமது மாநிலத்தில் தொழில் செய்கிறவர்களை ஒன்றாகச் சேர்த்து இதுபோன்ற தொழிலை நமது மாநிலத்திலேயே செய்ய ஆரம்பித்தால் ஏராளமான வருவாய் கிடைக்கும். இதற்கு அமைச்சர் அவர்கள் நன்றாக—தீர ஆலோசித்து ஏற்பாடு செய்யவேண்டுமென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

சிப்காட் இருக்கிறது. வட ஆறகாடு மாவட்டத்திலே ஒரு சிறந்த பெரிய சாதனையை அது செய்திருக்கிறது. ஏராளமான தொழில்களை அங்கே ஆரம்பித்திருக்கிறார்கள். தொழில்களையெல்லாம் யார் ஆரம்பிக்கிறார்கள்? மூன்றில் இரண்டு பாகம் பெரும்பணம் உள்ளவர்கள்தான் ஆரம்பிக்கிறார்கள். அவர்கள் அத்தனைபேரும் வடநாட்டைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களுக்கு இன்னும் பெரிய தொழில்களுக்கான லைசென்ஸ் கொடுப்பதற்கு சிப்காட்டிலே அக்கறை காட்ட வேண்டுமென்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

சிப்காட் மூலம் தொழில்களை ஆரம்பிக்க 700-க்கு மேற்பட்ட ஏக்கர் கொண்ட நிலங்களை அங்கே வாங்கியிருக்கிறார்கள். இன்னும் இது போன்ற தொழில்களை ஆரம்பிக்க லைசென்ஸ் கொடுக்கின்ற நேரத்திலே, தமிழகத்திலே உள்ளவர்களுக்கு இதுபோன்ற நல்ல நிலையை உருவாக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

சிப்காட்டிலே பின்தங்கிய பகுதிகளில் தொழில் செய்பவர்களுக்கு சப்சிடி கொடுக்கிறார்கள். சப்சிடி கொடுக்கப்படுவது, தொழிலை ஆரம்பித்து உற்பத்தியாகக் கூடிய நிலையிலேதான் 15 சதவீதம் மானியத்தைக் கொடுக்கிறார்கள். பொதுவாக, அந்தத் தொழிலை ஆரம்பிப்பது என்றால் மூலதனம் ஏராளமாகப் போட வேண்டியிருக்கிறது. எப்படி வீடு கட்டும் சங்கத்திலே வீடு கட்டும்போது ஒரு கட்டம் முடிந்தவுடனே தொகையைக் கொடுக்கிறார்களோ. அதுபோல் ஒவ்வொரு கட்டத்திலும் சிப்காட் 15 சதவீதம் மானியத்தில் பகுதி பகுதியாக கொடுத்தால் தொழில் ஆரம்பிப்பவர்களுக்குப் பண விஷயத்தில் வசதியாக இருக்கும் என்று நான் சொல்ல ஆசைப்படுகிறேன்.

அன்னியச் செலாவணி கொண்டு வெளிநாடுகளிலிருந்து இயந்திரங்கள் இறக்குமதி செய்வதிலே டி.ஐ.ஐ.சி.யிலே பணம் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். சிறு தொழில்களுக்கு இயந்திர இறக்குமதி செய்ய உரிய நேரத்திலே பணம் கிடைக்கவில்லையென்று சொல்கிறார்கள். பணம் இருக்கிற நேரத்திலே இறக்குமதி செய்கின்ற லைசென்ஸ் பெறுவதிலே மிகுந்த சிரமம் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். அதிலே தொழிலமைச்சரவர்கள் கவனம் செலுத்தி ஏராளமான சிறு தொழில்களை ஆரம்பிக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறுதொழில்களுக்கு ஒரு அசிஸ்டெண்ட் டைரக்டரை போட்டிருக்கிறார்கள். அவர்கள் மாவட்டம் பூராவும் சுற்றிப் பார்ப்பது முடியாத காரியமாக இருக்கிறது. ஆகவே, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 2 அல்லது 3 அசிஸ்டெண்ட் டைரக்டர்களைப் போடவேண்டுமென்று இந்த நேரத்திலே தொழிலமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

திருவண்ணாமலையில் ஒரு இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. கட்டிடம் எல்லாம் கட்டப்பட்டு, ஏறக்குறைய 3 மாதம் ஆகிறது. அதிலே என்ன தொழில் ஆரம்பிப்பது என்பதிலே சிரமம் ஏற்பட்டு, அங்கே உள்ளவர்கள் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, சம்பந்தப்பட்டவர்கள் ஒரு நாளைக்கு அங்கு சென்று, உடனடியாக அங்கு தொழில்களைத் துவக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

திருவண்ணாமலைக்கு அருகில் கவுத்தி மலை, வேடியப்பன் மலை இந்த இரண்டு இடங்களிலேயும் இரும்பு கிடைக்கிறது. சேலத்திலே 15 கோடி டன் கிடைக்கிறது என்று சொல்லுகிறார்கள். இந்த இரண்டு மலைகளையும் ஆராய்ச்சி செய்திருக்கின்ற நிபுணர்களும் 14 கோடி டன் கிடைக்கிறது என்று சொல்லுகிறார்கள். சேலம், சேலம் என்று சொல்லிக் கொண்டு காலம் தாழ்த்திக் கொண்டு வருகிறோம். திருவண்ணாமலையிலே கிடைக்கும் இரும்புபற்றி, மத்திய அரசுக்கு எழுதி, மாநில அரசே எப்படியாவது அந்தத் தொழிலை ஆரம்பிக்க ஏற்பாடு செய்தால் மிகவும் வசதியாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

சில பகுதிகளை 15 சதவீதம் மானியம் கொடுக்கக்கூடிய பின்தங்கிய பகுதி என்று ஒதுக்கியிருக்கிறார்கள். வட ஆற்காடு, செங்கம், வந்தவாசி, திருவண்ணாமலை போன்ற பகுதிகளிலே தொழிலே இல்லாத பகுதிகளாக விவசாயம் மட்டும் நடந்து கொண்டிருக்கிறது. அவற்றைப் பின்தங்கிய பகுதியென்ற அளவில் சேர்க்கவேண்டுமென்று கேட்டு—செய்யாற்றிலே மக்களுக்கு வேண்டிய எல்லாவற்றினையும் அவர் செய்து கொண்டிருக்கிறார்—ஆகவே, செங்கம், வந்தவாசி, திருவண்ணாமலை, கடைசியாக செய்யாறு என்று சொல்லலாம்—பின் தங்கிய பகுதியாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

[திரு. எம். ஏ. லத்தீப் எழுந்து நின்றார்.]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுக்குக் கொடுத்த 10 நிமிடத்திலே 19 நிமிடம் பேசினீர்கள். இப்பொழுது நேரமில்லை.

திரு. எம்.ஏ. லத்தீப்: பணப் பயிரை அதிகமாக உற்பத்தி செய்து இன்னும் 10 சர்க்கரை ஆலைகளை வைத்துக்கொள்ளலாம் என்றார்கள் அதைப்பற்றி கவலையில்லை. ஆனால், மக்களுக்கு வேண்டியது முதலாவதாக அரிசி. இந்தப் பணப் பயிரினால் கிடைக்கின்ற அன்னியச் செலாவணியை மத்திய அரசே வெளிநாடுகளிலிருந்து அரிசி தருவிக்க அனுமதி அளிப்பார்களானால், வட ஆற்காடு மாவட்டத்திலே, நம்முடைய முருகையன் அவர்கள்......(மணியடிக்கப்பட்டு திரு. ஆ. கு. சுப்பையா அழைக்கப்பட்டார்.)

*திரு. ஆ. கு. சுப்பையா: மாண்புமிகு தலைவரவர்களே, இன்றைய மாண்புமிகு தொழில் அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கிற மானியத்தின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்லுவதற்கு விரும்புகிறேன்.





தமிழகத்திலே தொழில்கள் முன்னேறிக் கொண்டிருக்கின்றன. தொழில் முன்னேற்றத்தைக் குறித்து, தமிழகத்திலே இருக்கிறவர்களும், இந்தியாவிலே இருக்கின்றவர்களும் பாராட்டக்கூடிய ஒரு நிலையில் இந்தத் தொழில் துறை வேகமாக முன்னேறி வருகிறது என்பதை நாம் மறுப்பதற்கில்லை. இருந்த போதிலும், நம்முடைய மத்திய அரசால் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்ற நெய்வேலி பழுப்பு நிலக்கரி திட்டம் இரண்டாவது சுரங்கம் வெட்ட வேண்டுமென்று பல முறைகள் மத்திய அரசாங்கத்திடம் சொல்லியும் இன்னும் அந்த வேலைகளைச் செய்யாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே சுட்டிக் காட்டாமல் இருக்க முடியவில்லை.

அதுபோல், பெரிய தொழிற்சாலை ஒன்று சேலம் உருக்குத் தொழிற்சாலை ஆரம்பிக்க வேண்டுமென்று தமிழகத்திலே இருக்கக்கூடிய மக்கள் எல்லாம் கிளர்ந்தெழுந்து கிளர்ச்சி செய்த பிறகு அந்தத் திட்டத்தை ஏற்றுக்கொண்டார்கள். 1972-வது வருஷம் சேலம் உருக்காலைத் திட்டம் துவங்கப்பட்டது. இன்றையதினம் அந்தத் திட்டமும் மிக மெதுவாக நடந்து வருவதாக அமைச்சரவர்கள் கூறுகிறார்கள். இம்மாதிரி உறங்கிக் கொண்டிருந்தால், இந்தத் திட்டத்தின் மூலம் பயன் பெறக்கூடிய தமிழக மக்கள் எந்த அளவு பாதிக்கப்படுவார்கள்—எவ்வளவு பேர்களுக்கு வேலை இழப்பு ஏற்படுகிறது என்பதை நாம் இந்தச் சந்தர்ப்பத்திலே பார்த்தாகவேண்டும்.

அதுபோல் தென்னை நார்த் தொழில்கள். தஞ்சை மாவட்டத்திலே நிறைய தென்னை மரங்களிருக்கின்றன. அவற்றிலிருந்து கிடைக்கின்ற தேங்காய் நார் கொண்டு கயிறுத் தொழில் ஆரம்பிக்கத் திட்டம் தயாரிக்கப்பட்டு, தொழில்கள் ஆரம்பித்திருக்கிறார்கள். இம்மாதிரி ஆரம்பித்திருக்கிற தொழில்களுக்கு மின் இணைப்பு கொடுக்கவில்லை. தொழில் அமைச்சர் மின்சார அமைச்சராக இருப்பதாலேதான் அந்தக் கருத்தை நான் இங்கே சொல்லுகிறேன். இம்மாதிரி மின்சார இணைப்பு கொடுக்காத தொழில்களுக்கு உடனடியாக முதல் சலுகை கொடுத்து, மின்சார இணைப்பு கொடுக்க வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டும்.

மற்றொன்று, தஞ்சை மாவட்டத்திலே நிறைய வைக்கோல்கள் இருக்கின்றன. வைக்கோல்களைக் கொண்டு காகிதத் தொழிற்சாலை ஆரம்பிக்கலாம் என்ற கருத்து சொல்லப்படுகிறது. அதையும் அரசாங்கம் ஆராய்ந்து தஞ்சை மாவட்டத்திலே ஒரு காகிதத் தொழிற்சாலை ஆரம்பிப்பதன் மூலமாக, வீணாகின்ற வைக்கோலைக் காகிதத் தொழிற்சாலைக்கு உபயோகப்படுத்திக்கொள்ள முடியும். ஆற்றுப் படுகைகளிலே நிறைய மூங்கில் வளர்த்து அந்த மூங்கில்களிலிருந்து கிடைக்கக்கூடிய பொருள்களையும் காகிதத் தொழிற்சாலைகளுக்குப் பயன்படுத்தியும் வேலை வாய்ப்பு அளிக்கலாம்.

வேதாரணியம் பகுதியிலே ஒரு மெரைன் காம்ப்ளெக்ஸ் திட்டம் கொண்டு வரலாம் என்று சென்ற ஆண்டு பத்திரிகைகளிலே பார்த்தேன். அம்மாதிரி ஒரு திட்டம் கொண்டு வருவார்களேயானால்

10,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்று சொல்லப்படுகிறது. அந்தத் திட்டத்தையும் அரசாங்கம் ஆராய்ந்து பார்த்து, உடனடியாக அமுலுக்குக் கொண்டு வர ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளு கிறேன்.

தமிழ் நாடு கரும்புப் பண்ணைக் கழகம்—1,489 எக்கர் நிலத்தை விவசாயம் செய்து ஆரூரான் சர்க்கரை ஆலைக்குக் கரும்பு கொடுப்பதற்காக தொடங்கப்பட்டு வருகிறது. இம்மாதிரியான கழகத்தைத் தமிழகத்திலே எல்லா இடங்களிலும் ஏற்படுத்துவதன் மூலமாகப் கரும்பை நல்ல முறை யிலே உற்பத்தி செய்து கரும்பு ஆலைகளுக்கு வழங்க உதவியாக இருக்கும். அந்தக் காரியத்தையும் அரசு செய்தாக வேண்டும். அதுபோல், கரும்பு ஆலைகளிடமிருந்து செஸ் வசூலிக்கப்படுகிறது. அதன் மூலமாக சாலைகள் போடப்பட்டு வருகின்றன். அந்த வேலைகள் கூட மிகத் தாமதமாக நடந்து வருகின்றன. அதற்குப் போதுமான அதிகாரிகளை நியமித்து, இன்றைய தினம் செஸ்ஸிலே வரக் கூடிய வருவாயைக் கொண்டு அதிக மான சாலை வசதிகளைச் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும். எந்த ஒரு ஆலையாவது செஸ் கொடுக்கவில்லை யென்றுல், கண்டிப்பாகக் கொடுத்தாக வேண்டுமென்ற நிலையை அரசாங்கம் எடுத்தாக வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அம்மாதிரி கொண்டு வருவதன் மூலமாக இன்றைய தினம் நல்ல போக்குவரத்து வசதியை ஏற்படுத்திக்கொடுக்க முடியும். விவசாயிகளுக்கும் நல்ல வசதியைச் செய்து கொடுத்ததாக இருக்கும்.

தஞ்சை மாவட்டத்திலே ஒரு சர்க்கரை ஆலை ஆரம்பிக்கக்கூடிய திட்டம் இருப்பதாக அமைச்சரவர்கள் கூறியிருக்கிறுர்கள். அந்தத் திட்டமும் மத்திய அரசாங்கத்தின் அனுமதிக்காகக் காத்துக் கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. விரைவிலே அனுமதி பெற்று மற்ருெரு சர்க்கரை ஆலையைத் தஞ்சாவூரிலே ஆரம்பிப்பதன் மூலம் ஆயிரக்கணக்கானவர் களுக்கு வேலை வாய்ப்பளிக்கின்ற நல்ல நிலையை ஏற்படுத்த முடியும். அதையும் அரசாங்கம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கரும்பு உற்பத்திக் குறைந்திருப்பதாகக் கூறப்படுகிறது. அதற்குக் காரணம் அதற்கு நியாயமான விலை கிடைக்க வில்லை யென்பதுதான். மத்திய அரசு விலை நிர்ணயம் செய்கிறது. தமிழ் நாடு அரசாங்கம் டன்னுக்கு ரூ. 125 என்று நிர்ணயிக்க வேண்டுமென்று கேட்டும் கூட அதை மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வில்லை. அதனுல் கரும்பு உற்பத்தி வேக மாகக் குறைந்து வருகிறது. மத்திய அரசு அன்னியச் செலாவணி அதிகமாக ஈட்டுவதற்கு, கரும்பு அதிகமாக உற்பத்தி செய்து சர்க்கரையை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து, அதன் மூலம் அதிகமாக வெளி நாட்டுச் செலாவணியைப் பெற முடியும். அந்த வாய்ப்பு ஏற்படக் கூடிய முறை யில் கரும்பு உற்பத்தியாளர்களை ஊக்கப்படுத்தக் கூடிய, உற்சாகப்படுத்த கூடிய முறையில் தமிழ் நாடு அரசாங்கம் சொல்கிறபடி 125 ரூபாய் டன்னுக்கு விலை நிர்ணயம் செய்ய முன் வர வேண்டும். அப்படிச் செய்வ தால் கரும்பு விவசாயம் நிறைய ஏற்பட முடியும். சில பேர்கள் கரும்பு விவசாயம் அவசியமில்லை என்று சொல்கிறுர்கள். கரும்பு விவசாயத்தின்





மூலமாக விவசாயிகளுக்கு நிறைய வருமானம் கிடைக்கிறது. விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கிறது. இந்த இரண்டு வாய்ப்புக்களும் கிடைக்கின்றன. அதனுல் கரும்பு விவசாயத்தை ஊக்குவிக் கக்கூடிய நிலைமையை அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும். அப்படிச் செய்தால் நம்முடைய கரும்பு ஆலைகளுக்கு நிறைய கரும்பைக் கொடுத்துதவ முடியும். ஆகவே அந்த வகையிலே அரசாங்கம் யோசனை செய்து அதிக மான கரும்பாலைகளை ஏற்படுத்துவதோடு இருக்கின்ற தனியார் கரும்பு ஆலைகளையெல்லாம் அரசுடைமையாக்க வேண்டும். அரசுடைமையாக்கு வதற்கு இந்த அரசாங்கத்திற்கு அதிகாரம் இருக்கிறது என்று ஒரு பக்கம் பேசப்படுகிறது. மத்திய அரசாங்கத்தின் பொறுப்பில் உள்ள அமைச்சர் நேற்றைய தினம் பேசியிருக்கிறுர்கள். அது உண்மையாக இருக்குமானுல் நம்முடைய அரசாங்கம் தனியார் கரும்பாலைகளை உடனடியாக அரசுடைமை யாக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

<u>மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா</u> : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் அவையின் முன்னுலுள்ள மானியக் கோரிக் கையின்மீது தொழிற் துறை சம்பந்தமான பல்வேறு கருத்துக்களைச் சொன்னதற்காக அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாகத் தமிழகத்தைப் பொறுத்த வரையில் தொழில் துறையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டு இருக்கிறது என்பதை யாரும் மறுக்க மாட் டார்கள் என்று நம்புகிறேன். கடந்த ஆண்டிலே தொழில் துறையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருப்பது புள்ளி விவரங்களை ஒப்பிட்டுப் பார்த் தால் நன்ருகப் புரிய வரும். கடந்த ஆண்டிலே இந்தத் துறைக்குப் பொறுப்பு வகித்த மாண்புமிகு அமைச்சர் திரு. மாதவன் அவர்களுடைய முயற்சியாலும் இந்தத் துறையிலே உள்ள அதிகாரிகள் எடுத்துக்கொண்ட முயற்சிகளாலும் இந்தத் துறை நல்ல முறையிலே வளர்ந்துகொண்டு வந்திருக்கிறது. சில புள்ளி விவரங்களைப் பார்த்தால் தெரியும், தொழில் துறையிலே நம்முடைய மாநிலம் முன்னேறி வருகிறது என்பது.

தொழில் துறை முன்னேற்றத்திற்கு அடிப்படையானது, தேவையானது லைசென்ஸ் ஆகும். மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துக்களைத் தெரிவிக் கும்போது லைசென்ஸ் வழங்குவதிலே கால தாமதம் இருக்கிறது. மத்திய சர்க்காரின் சில கொள்கைகளின் காரணமாகக் காலதாமதம் ஆகிறது— மாண்புமிகு உறுப்பினர் திரு. க. துரைசாமி அவர்கள் பேசும்போது கூடச் சொன்னுர்கள்—நம்முடைய அதிகாரிகளாலும் காலதாமதம் ஆகிறது என்று. தொழில்களுக்கு அனுமதிகள் தாராளமாக வழங்கப்பட வேண்டுமென்பதிலே நமக்கு எந்த விதமான கருத்து வேறுபாடும் இல்லை. ' Liberalisation of industrial licences ' என்ற அடிப்படையிலே தான் காரியங்கள் நடைபெற்று வருகின்றன.

மத்திய அரசில் இந்தத் துறையின் பொறுப்பை ஏற்று இருக்கக் கூடிய அமைச்சர் திரு. பாய் அவர்கள் இதிலே தீவிரமான கவனம் செலுத் திக்கொண்டிருக்கிறுர்கள். அவர்கள் முற்போக்கான எண்ணத்தோடு

காரியங்களை ஆற்றுகிறார்கள். அவர்களுடைய நல்ல முயற்சியின் காரணமாக இன்றைக்குப் பிரச்னைகள், சிக்கல்கள் குறைக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய மாநிலத்திலே தொழில் துறையிலே நல்ல முன்னேற்றம் ஏற்பட வேண்டுமென்றால் எங்கு எங்கெல்லாம் எந்த எந்தத் தொழில்களை ஆரம்பிக்கலாம் என்ற விவரங்கள் கொடுக்கப்படுமானால், கிடைக்கக்கூடிய மூலப்பொருட்களைப் பற்றிய விவரங்கள் இருக்குமானால் அதை மனதிலே வைத்துக்கொண்டு தொழில்களை ஆரம்பிக்கலாம் என்று திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் அவர்கள் சொன்னார்கள். நம்முடைய மாநிலத்திலே இப்போது ஒரு சர்வே நடத்துகிறோம். டாடா கன்சல்டன்ட்ஸ் மூலமாக தமிழ் நாட்டிலே உள்ள மூலப்பொருட்கள் பற்றியும், எங்கெங்கு எந்த எந்தத் தொழில்கள் ஆரம்பிக்கலாம் என்பது பற்றியும் விரிவான அறிக்கை தயாரித்துக் கொடுக்கும்படி அவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். விரைவிலே அந்த அறிக்கை வரும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய நோக்கமெல்லாம் தொழில் துறை முன்னேற வேண்டும் என்பது. ஒரு நாட்டிலே விவசாயத் துறை முன்னேறியிருந்தாலும் தொழில் துறையிலே முன்னேற்றம் எந்த அளவுக்கு இருக்கிறதோ அந்த அளவிற்குத்தான் முன்னேற்றம் இருக்கும் என்று பொருளாதார நிபுணர்கள் சொல்கிறார்கள்.

சில மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது குறிப்பிட்ட சில மாவட்டங்களுக்குத்தான் தொழிற் சாலைகள் போய்விட்டன, தங்கள் மாவட்டங்களுக்கு வரவில்லை என்று சொன்னார்கள். தொழில் துறையிலே சில மாவட்டங்கள் பின் தங்கிய மாவட்டங்கள் என்று அறிவிக்கப்பட்டு, அங்கே சில சலுகைகள் கொடுக்கப்படுகின்றன. அந்தச் சலுகைகளின் காரணமாகவும் அங்கங்கே கிடைக்கிற மூலப்பொருட்களின் காரணமாகவும்தான் அங்கே தொழிற்சாலைகள் ஏற்பட்டிருக்கின்றன.

தொழில் துறையின் மூலமாக கேஷ் சப்ஸிடி 15 சத வீதம், இன்னும் பல வசதிகள் எல்லாம் கொடுக்கப் படுவதன் மூலம் பல்வேறு மாவட்டங்களில் தொழில்கள் தோன்றுகின்றன. அந்தச் சலுகைகள் மூலமாக இராமநாதபுரம் மாவட்டத்திலும், தர்மபுரி மாவட்டத்தில் ஒசூரிலும், வட ஆர்காடு மாவட்டத்தில் இராணிப்பேட்டையிலும் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. ஆங்காங்கு கிடைக்கிற மூலப்பொருட்களும் அதற்குக் காரணமாக இருக்கின்றன.

திருச்சி மாவட்டம் அரியலூரில் ஒரு சிமிண்ட் தொழிற்சாலை வர இருக்கிறது. புதுக்கோட்டை மாவட்டத்திலே ரயான் பல்ப் தொழிற்சாலை ஏற்படுத்துவதற்கான குறிப்பு இருக்கிறது. ஆகவே மொத்தமாகப் பார்க்கும்போது ஏதோ குறிப்பிட்ட சில மாவட்டங்களுக்குத் தொழில்கள் போய் விட்டன என்று சொல்வது சரியல்ல.



இராமநாதபுரம், தர்மபுரி, வட ஆர்காடு, மதுரை ஆகிய மாவட்டங்களிலும் தொழிற்சாலைகள் அமைப்பதற்கான காரியங்கள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எந்த மாவட்டமும் புறக்கணிக்கப் படவில்லை. வட ஆர்காடு, தர்மபுரி, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, புதுக்கோட்டையிலே ரயான் பல்ப் தொழிற்சாலை, திருச்சி மாவட்டத்திலே அரியலூரில் சிமெண்ட் தொழிற்சாலை, செங்கற்பட்டு மாவட்டம், சென்னை, கன்னியாகுமரி மாவட்டத்திலே சைக்கிள் டயர் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை அமைப்பதற்கும் குறிப்பு இருக்கிறது. நம்முடைய அளவிற்கு நடவடிக்கை எடுத்தது போக அங்கே இருக்கிற ரப்பர் குரோயர்ஸ் கோவாப்-ரேடிவ் சொஸைடி மூலமாக அனுமதி தரவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதுவும் பரிசீலனையில் இருக்கிறது. டைட்டானியம், டையாக்ஸைடு தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கான குறிப்பு இருக்கிறது. அதற்கு நிறைய மூலதனம் தேவைப்படுகிறது.

தஞ்சை மாவட்டத்தில் சர்க்கரை ஆலை, உப்புத் தொழிற்சாலை ஏற்படுத்துவதற்குக் குறிப்புக்கள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தென் ஆர்காடு மாவட்டத்திலே மாண்புமிகு உறுப்பினர் பேசியது போல் செகண்ட் பெர்டிலைசர் பிளாண்ட் போடலாமா என்ற குறிப்பும் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. எம். இராஜா அவர்கள் பேசும்போது சொன்னார்கள், இங்கிருந்து டெல்லிக்குச் சென்று லைசென்ஸ் வாங்குவது எல்லாம் மிகுந்த கஷ்டமாக இருக்கிறது, ஆகவே அங்கே ஒரு லையஸன் ஆபீசர் ஏற்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள். டிட்கோ இதைப் பற்றி பரிசீலித்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருததும் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பின்தங்கிய பகுதிகள் என்று வரும்போது திரு. துரைசாமி அவர்களும் திரு. ஏ. எம். ராஜா அவர்களும் சொன்னார்கள், சில மாவட்டங்களில் சில பகுதிகள் ஒதுக்கப்பட்டு விட்டன, அந்தப் பகுதிகளும் சேர்க்கப்பட வேண்டுமென்று. நம்முடைய மாநிலத்திலே வட்டத்தை ஒரு யூனிட் ஆக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று மத்திய அரசாங்கத்திற்குத் தெரிவிக்கப்பட்டது. அந்தக் கருத்தை அவர்கள் ஏற்றுக்கொண்டால் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள பின்தங்கிய பகுதிகளை முன்னேற்றுவதற்கு வாய்ப்பு இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. நா. வீராசாமி :</u> தலைவர் அவர்களே, ஏற்கெனவே வாலாஜா தாலூகாவை இண்டஸ்ட்ரியலி பேக்வர்ட் என்று டிக்ளேர் செய்வதற்கு முயற்சி எடுக்கப்பட்டது. அப்போது வாலாஜா தாலூகாவோடு ஆர்காடு சேர்ந்திருந்தது. இப்போது ஆர்காடு தாலூகா தனியாகப் பிரிந்ததால் இப்போது வாலாஜாவிற்குத்தான் வரும், ஆர்காட்டுக்கு வராது என்று சொல்கிறார்கள். மாண்புமிகு தொழில் அமைச்சர் திரு. மாதவன் அவர்கள் கொள்கையளவிலே இது நியாயம் என்று சொன்னார்கள். இதை அரசாங்கம் பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : தமிழ் நாட்டிற்காக டெல்லியிலே லையஸன் ஆபிஸர் இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். எலக்ரிட்சிடி போர்டு சேர்மனாக இருக்கும் திரு. இரஜாராம் அங்கே இருந்தார். இப்போது அந்த போஸ்ட் காலியாக இருக்கிறதா ? இது வரையில் யாரையும் போடவில்லையா ? இடைக்காலத்தில் ஏன் யாரையும் போடாமல் இருந்தீர்கள்?

(பிற்பகல் 1–00)

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், பலயிடங்களிலேயும் என்னென்ன தொழிற்சாலைகளையெல்லாம் ஆரம்பிக்கப் போகிறோம் என்று சொன்னார்கள். கிழக்கு இராமநாதபுரத்திலே ஒரு இரப்பர் தொழிற்சாலை ஆரம்பிக்கப் போவதாகச் சொல்லி, மூன்று நான்கு ஆண்டுகளாக இந்த இடத்தில் இரப்பர் தொழிற்சாலை என்ற ஒரு போர்டையும் போட்டு, அது இன்னும் ஆரம்பிக்கப்படாமல் இருக்கிறதே, அதை ஆரம்பிக்கும் நோக்கம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் பேசி முடித்ததற்குப் பிறகு கேளுங்கள். ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு தொழிற்சாலையைப் பற்றிக் கேட்டால் எப்படி. அவர் முடித்து விடட்டும்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : லையஸன் ஆபீசரைப் பொறுத்த வரையில் ஏற்கெனவே நம்முடைய இராஜாராம் எல்லா அரசாங்க அலுவல்களையும் கவனித்துக் கொள்ள நியமிக்கப்பட்டிருந்தார்கள். அந்த போஸ்ட் காலியாக இருக்கிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் இராஜா அவர்கள் சொல்வது, தொழில் சம்பந்தமாக அரசுத் தரப்பில் எழும் பிரச்னைகளானாலும், சரி, தனிப்பட்ட தொழிற்சாலைகளில் எழும்பிரச்னைகளானாலும், சரி, டெல்லியிலுள்ள லையசன்ஆபீசர், அதைத் துரிதப்படுத்த லையசன் ஆபீசரை நியமிக்க வேண்டுமென்ற கருத்தில் கூறினார்கள். இது பற்றி பரிசீலிக்கப்பட்டு வருகிறது. அப்பொழுது மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன கருத்தும் கவனத்தில்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வீராசாமி அவர்கள் ஆற்காட்டைப்பற்றிச் சொன்னார்கள். அவர்களுக்கு ஆற்காட்டைப்பற்றியே எப்பொழுதும் சிந்தனை. தமிழகத்தில் பல பகுதிகள் இருக்கின்றன. அவர்கள் ஆற்காட்டைப் பற்றிச் சொன்னதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினரவர்கள் ஏற்கனவே நம்முடைய அமைச்சர் மாதவன் அவர்கள் வாக்குறுதி அளித்திருப்பதாகச் கூறினார்கள். கொடுத்த வாக்குறுதி காப்பாற்றப்படும் என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, வேலைவாய்ப்புகளுக்காக இந்தத் தொழில்கள் அதிகமாக ஏற்பட வேண்டுமென்ற கருத்துச் சொல்லப்பட்டது. நம்முடைய அரசைப் பொறுத்தவரையில் இந்த செரி-கல்சர் திட்டத்தை விரிவுபடுத்தி வளர்ச்சி செய்ய, சுமார் 50,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க 4 கோடி ரூபாயில் திட்டம் போடப்பட்டு மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இந்த செரி-கல்சருக்கு விசேஷமாகக் கவனம் செலுத்தப்பட வேண்டுமென்பதை அரசு ஏற்றிருக்கிறது. இப்பொழுது



விவசாயத் துறை மூலமாகவும், தொழில் துறை மூலமாகவும் இந்த செரி-கல்சருக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.

திரு. வெங்கடசாமி அவர்கள் சொன்னார்கள், தங்கள் மாவட்டத்தைத் தனியாகக் கவனிக்க வேண்டுமென்று. எப்பொழுதுமே தர்மபுரி மாவட்டத்தைத் தனியாகத்தான் கவனிக்கிறோம். அதிலும் மாண்புமிகு உறுப்பினர் வெங்கடசாமி அவர்கள் சொன்னதற்குப் பிறகும் அதைப் புறக்கணிக்க முடியாது என்பதால் இந்த சில்கைப் பொறுத்தவரையில், டிஸ்டிரிக்ட் டெவலெப்மெண்ட் கார்ப்பரேஷன் அமைப்பதற்கான குறிப்பு இருக்கிறது. அப்படியொரு டிஸ்டிரிக்ட் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன் தர்மபுரி மாவட்டத்தில் அமைக்கப்படும் பொழுது இந்த சில்க் தொழிலுக்கு நல்ல முன்னேற்றம் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் பேசி முடித்ததும் கேளுங்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி : அப்பொழுதைக்கப்பொழுதே கேட்டால்தான ஞாபகம் வரும். இந்த சிரி-கல்சர் சம்பந்தமாக அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்படுவது பற்றிச் சொன்னார்கள். ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்ட பட்டுப் பூச்சி பண்ணை நஷ்டத்திலே நடக்கிறது. முதலில் அது சீரமைக்கப்படுமா? இல்லையென்றால் மேலும் 4 கோடி ரூபாயில் திட்டம் போட்டு இதுவும் சீரழிந்து அதுவும் சீரழிந்து கொண்டிருக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அவர்களே கொடுக்க முன் வரும்பொழுது இவர்கள் தடையாக ஏன் இருக்கிறார்கள் என்று தெரியவில்லை. அவர்களே, நம்முடைய மாநிலத்தில் வாய்ப்பிருக்கிறது, தர்மபுரி மாவட்டம், கோவை மாவட்டம், மற்ற மாவட்டங்களில் வாய்ப்பு இருக்கிறது, உதவிகளைச் செய்யலாம் என்று மத்திய அரசாங்கமே சொல்லியிருக்கிறார்கள். இங்கே இருப்பதைச் சரியாகச் செய்வதோடு, இந்த உதவி வரும் பொழுது நமக்குள்ள நோக்கம் நிறைவேறும் என்று தான் நம் அரசின் மூலமாக இந்தத் திட்டம் அனுப்பப்பட்டிருக்கிறது.

தர்மபுரி மாவட்டம் ஓசூர் பகுதியில் பல தொழிற்சாலைகள் வருவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. இன்டஸ்ட்ரியல் காம்ப்ளக்ஸ் ஏற்படுவதற்கான வாய்ப்பிருக்கிறது. ஆனால் இருக்கின்ற முக்கியமான பிரச்னை என்னவென்றால், போதுமான அளவு தண்ணீர் கிடைக்காதிருக்கின்ற பிரச்னைதான். இர்ரிகேஷன் டிபார்ட்மெண்ட் மூலம் நாள் ஒன்றுக்கு இரண்டு மில்லியன் தண்ணீர் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, அங்கே தொழிற்சாலைகளுக்கு அதிகத் தண்ணீர் கிடைக்கும் என்று எதிர்பார்க்கலாம். ஆகவே, அங்கே தொழிற்சாலைகளுக்கு அதிகம் தண்ணீர் தேவைப்படாத, எலக்ட்ரானிக்ஸ், எஞ்சினியரிங் தொழிற்சாலைகள் போன்றவை ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பையா முதலியார் அவர்கள் பேசும்பொழுது 'எல்லாமே ஐ.ஏ.எஸ். ஆபீசர்கள்' என்ற பிரச்னையைச் சொன்னார்கள். ஆனால் விவரங்களைப் பார்க்கும்பொழுது 'நான் ஐ.ஏ.எஸ்., டெக்னிகல் பீப்பிள், டைரக்டர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அது பற்றி நிறைய விவரங்கள் இருக்கின்றன, அவைகளையெல்லாம் படிப்பது என்றால் நேரம் போதாது. ஆகவே, அவைகளில் ஒன்றிரண்டை மட்டும் கூறலாம் என்று நினைக்கிறேன்.

1. Tamil Nadu Sugarcane Farm Corporation Ltd.
   Thiru T. S. Kannan, Superintending Engineer.

2. State Industrial Promotion Corporation of Tamil Nadu.
   Thiru S. N. Pai, Managing Director, Tamil Nadu Industrial Investment Corporation.
   Tamil Nadu Ceramics Ltd., Chief Engineer, Tamil Nadu Housing Board.

4. Messrs. W. S. Insulators Ltd. Thiru M. B. Srinivasan, Deputy Secretary, Industries Department.

5. Tamil Nadu Industrial Development Corporation.
   Chief Engineer, P.W.D.

இப்படி நிறைய 'நான்' ஐ.ஏ.எஸ்.—அதிகாரிகளும், மற்றும் தனி நபர்களும் டைரக்டர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இன்னும் பல தொழிற்சாலைகளிலே டெக்னிகல் பீப்பிள் எக்சிகியூட்டிவ் ஆபீசர்களாக இருக்கிறார்கள். 'நான்'—ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் பலர் பல கரும்பு ஆலைகளிலே பணியாற்றி வருகிறார்கள். எனவே, இதுபோன்ற ஐ.ஏ.எஸ்., அதிகாரிகளைத்தான் போட வேண்டுமென்ற எந்தவிதமான கட்டாயமும் இல்லை. நம்முடைய அரசைப் பொறுத்தவரையில் தனி மேனேஜ்மெண்ட் கேடர் என்று உருவாக்க முயற்சித்து வருகிறது. இங்கே அப்படி உருவாக்கும் பொழுது டெக்னிகல் பீப்பிளைப் போட வாய்ப்பு உண்டு என்று நம்புகிறேன்.

அதிகாரிகளையெல்லாம் அடிக்கடி மாற்றிவிடுவதாகச் சொன்னார்கள். அடிக்கடி மாற்றுவது, ஏதாவது அத்தியாவசியமான காரணங்கள், அட்மினிஸ்ட்ரேடிவ் ரீசன்களுக்குச்சாகவே தவிர, அதுகூட அடிக்கடி மாற்றும் நிலை ஏற்படவில்லை, வேறொன்றும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதிகாரிகள் மாறினாலும் கொள்கை மாறாது. கொள்கை அடிப்படையில் அதிகாரிகள் பணியாற்றுவார்கள். இப்படிப்பட்ட காரியங்கள் முறையாக நடைபெற்றுக் கொண்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒட்டப்பிடாரத்தைப்பற்றி நண்பர் அவர்கள் கூறும்பொழுது, அங்கே தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட வேண்டாமா என்று கேட்டார்கள். அங்கே இப்பொழுதுள்ள நிலைமை, ஜிப்சம் தான் கிடைப்பதாகக் கூறுகிறார்கள். எனவே, ஜிப்சத்தைப் பயன்படுத்தி ஒரு தொழிற்சாலையை ஆரம்பிக்க அங்கே வாய்ப்பு இல்லை என்ற அளவில் இப்பொழுது தெரிந்திருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.



அடுத்தபடியாக, டான்சி தொழிலாளர்களின் ஊதியப் பிரச்னைபற்றி எடுத்துக்கொண்டால், டான்சி தொழிலாளர்களுக்கு ஏற்கெனவே மொத்தமாக அவர்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்த ஊதியம் 90 இலட்சம் ரூபாய் என்று இருந்தது. இப்பொழுது சுமார் 149 இலட்சத்திற்கு உயர்ந்திருக்கிறது. இந்தத் தொழிலின் வருமானத்தைப் பொறுத்து அவ்வப்பொழுது இந்த ஊதிய உயர்வு பிரச்னையை அரசு கவனித்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. கோவை செழியன்: பேரவைத் தலைவரவர்களே, டெக்னிகல் நோ-ஹௌ பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமென்று அதிகாரிகளை வெளிநாட்டுக்கு அனுப்புகிறோம் அரசின் செலவிலே. அவர்கள் அதைத் தெரிந்து கொண்டு இங்கே வந்தபிறகு இந்த டிபார்ட்மெண்டிலிருந்து வேறொரு டிபார்ட்மெண்டுக்கு அவர்களைத் தூக்கிப்போடுகிறார்கள். இதனால் பணமும் வீணாகிறது, அவர்களுடைய திறமையும் வீணாகிறது. எதற்காக இப்படிச் செய்கிறீர்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஒரு அதிகாரியை வெளிநாட்டிற்கு அனுப்பினால் அந்த அதிகாரி வெளிநாட்டிற்குச் சென்று அவர்கள் பார்த்துப் புரிந்துகொண்ட விஷயங்களைப்பற்றி அறிக்கை கொடுக்கிறார்கள். அந்த அறிக்கையை வைத்துக்கொண்டு மேற்கொண்டு வேலைகள் நடக்கின்றன. அப்படியும் அதிகாரிகளை அதிகமாக மாற்றுவதில்லை. அதைத்தான் சொன்னேன், அதிகாரிகளை மாற்றும் பிரச்னை ஒரு பக்கத்தில் இருந்தாலும், அரசாங்கத்தின் திட்டங்கள் என்று வரைமுறைகள் இருக்கின்றன, கொள்கை இருக்கிறது, அந்தக் கொள்கையின்படி திட்டங்களை அதிகாரிகள் நிறைவேற்றுகிறார்கள். அதிகாரிகளை மாற்றுவதால் திட்டங்கள் கைவிடப்பட்டுவிடும் என்று கருதவேண்டாம். நம்முடைய அதிகாரிகளை அதிகமாக மாற்றாமல் இருப்பதற்கான காரியங்களை செய்து வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. லத்தீப் அவர்களும், அம்மையார் அவர்களும் வேகமாகப் பேசினார்கள், தோல் தொழிற்சாலையைப்பற்றி. இப்பொழுது நம்முடைய அரசைப் பொறுத்தவரையில் ஒரு லெதர் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன் நிறுவி அதன்மூலமாக சிறிய தொழிற்சாலைகளுக்கு எந்த வகையிலேயெல்லாம் உதவலாம் என்று கவனித்து அதற்கான வாய்ப்பை அரசாங்கத்தின் மூலம் உருவாக்கியிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்டஸ்ட்ரியல் கோவாப்பரேட்டிவைப்பற்றிப் பேசும்பொழுது அதிகமாக நஷ்டத்தில்...............

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவரவர்களே, நாங்கள் எழுப்பிய பிரச்னை இன்றைக்கு இந்த அரசு—மாநில அரசு—தோல் தொழிற்சாலை முன்னேற என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதைப்பற்றி அல்ல. இந்த அரசு அதில் போதிய கவனம் செலுத்துகிறது என்பதை நாங்களும் அறிவோம், நாடும் அறியும். ஆனால் புதிதாகக் கோட்டா முறை என்று வரும்பொழுது இந்தத் தொழிலுக்கு உதவுவதில் பல சிக்கல்கள் இருப்ப

தால் பல தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றனவே, அதைத் தடுப்பதற்காக இந்த அரசு முடிவெடுத்திருக்கிறார்கள், அமைச்சரும் முடிவெடுத்திருக்கிறார்கள், மத்திய அரசும் முடிவெடுத்திருக்கிறது. ஆனால் இந்த ஆட்சியின்கீழ் துறையிலே இருக்கின்ற செயலாளரும், மற்றவர்களும் மாறான கருத்துக்களைச் சொல்லி, மத்திய அரசின் மூலம் வருகின்ற அலுவலாளர்களிடத்திலே மாறான கருத்தைச் சொல்லி, அமைச்சரின் கருத்துக்கு மாறான கருத்துக்களைச் சொல்லி இன்றைக்கு வாணியம்பாடியிலே மட்டும் 30 தொழிற்சாலைகள் மூடப்பட்டு சுமார் 10,000 ஹரிஜனங்கள் வேலையிழந்து இருக்கிறார்கள். அதைத் தடுப்பதற்கு அரசு என்ன செய்தது என்பதுதான் என்னுடைய கேள்வி.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்த அரசு எல்லா முயற்சிகளையும் எடுத்துக் கொண்டிருக்கிறது என்று சொன்னதற்கு நன்றி. பிரச்னையை நமது அரசு உணர்ந்திருக்கிறது. முடிவு எடுப்பது அரசே தவிர, அதிகாரிகள் அல்ல. நம்முடைய அமைச்சரவைதான் முடிவு எடுக்கும். கொள்கையை முடிவு செய்வது அரசு. அதிகாரிகள் பல்வேறு கருத்துக்களைச் சொல்லலாம். முடிவெடுக்கும் உரிமை நமக்குத்தான் இருக்கிறது. ஆகவே, இதிலே எந்தவிதமான ஆட்சேபணைக்கும் இடம் இல்லை. எல்லோரும் சேர்ந்து டில்லிக்குப் போகலாம் என்று சொன்னார்கள். டில்லி தூரமாக இருக்கிறது. போக முன் வந்தால் ஆட்சேபணை இல்லை. மாண்புமிகு அம்மையார் அவர்கள் தலைமை தாங்கி நடத்தட்டும். அங்கு அம்மையார் சர்க்கார்தான் நடக்கிறது. இந்த அம்மையார் போய் அந்த அம்மையாரிடம் சொன்னால் காரியம் முடிந்தாலும் முடிந்துவிடும். நான் கூட வரவேற்கிறேன். அம்மையார் அவர்கள் அந்தப் பணியிலே ஈடுபடலாம் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இண்டஸ்ட்ரியல் கோவாப்பரேட்டிவ்ஸ் நஷ்டத்தில் ஓடுகின்றன என்று கூறினார்கள். அண்மையில் பார்க்கும்போது 50 சதவிகிதத்திற்கு மேற்பட்ட இண்டஸ்ட்ரியல் கோவாப்பரேட்டிவ்ஸ் லாபத்தில் ஓடிக்கொண்டிருக்கின்றன. அவ்வப்போது நஷ்டமா, லாபமா என்று பார்த்து நஷ்டம் ஏற்படும்போது அரசாங்கம் உதவி செய்து வருகிறது என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கெமிகல் இண்டஸ்ட்ரிஸ்பற்றி மாண்புமிகு உறுப்பினர் வீராசாமி அவர்கள் சொன்னார்கள். கொஞ்சம் கடுமையாகக்கூடச் சொன்னார்கள். அதே சமயத்தில் அரசாங்கம் செய்த நல்ல காரியங்களுக்கு நன்றி தெரிவித்தார்கள். நன்றி சொன்னதற்காக பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். கெமிகல் இண்டஸ்ட்ரிசைக் கவனிக்காமல் விட்டு விட்டார்கள், எந்தவிதமான சரியான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னார்கள். புள்ளி விவரங்களைப் பார்க்கும்போது கெமிகல் இண்டஸ்ட்ரிஸ் மீது அதிகக் கவனம் செலுத்தியிருப்பது புரியும். கெமிகல் பிராஜக்ட்ஸ் என்னென்ன என்ற விவரங்களைச் சொல்லுவது அவசியம் என்று கருதுகிறேன்.

Pottassium chloride, Sodium sulphate, Pharmaceuticals, Ammonium sulphate, Urea, nickel. etc.



இவ்வளவு தொழிற்சாலைகளுக்கான திட்டங்கள் இருக்கின்றன. கெமிகல் இண்டஸ்ட்ரிஸ் புறக்கணிக்கப்பட்டதாக மாண்புமிகு உறுப்பினர்கள் கருதக்கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொரு முக்கியமான பிரச்னையைச் சொன்னார்கள். செங்கல் விலையைத் திருத்தியமைக்க வேண்டும், அப்படித் திருத்தியமைத்தால் விற்பனை வரி அரசாங்கத்துக்குக் கிடைக்கும். இது ஏற்கெனவே தெரிவித்த கருத்துதான். இது பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பிளாக் கிரானைட் பற்றி மாண்புமிகு வெங்கடசாமி அவர்கள் சொன்னார்கள். அவர்கள் மாவட்டத்தில் சரியான முறையில் நடைபெறவில்லை என்றுசொன்னார்கள். அது பற்றி பூர்வாங்கமாக ஒரு அபிஷியல் ரிப்போர்ட்வேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கிறது. சில மாவட்டங்களில் அது பற்றிய ஆராய்ச்சி நடைபெற்றிருக்கிறது. முழு விவரமும் வந்த பிறகு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் "இந்தியா மீட்டர்ஸ்" பற்றிச் சொன்னார்கள். அதுபற்றி ஒரு பெரிய விவரமே இருக்கிறது. முடிவாகப் பரிசீலிக்கப்பட்டபோது அரசு இந்தியா மீட்டர்ஸை எடுத்துக் கொண்டால் நஷ்டம் ஏற்படும் என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். இந்தியா மீட்டர்ஸை தனிப்பட்டவர்களே இம்ப்ரூவ் பண்ண அரசு ஒத்துழைக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : "இந்தியா மீட்டர்ஸ்" சம்பந்தமாக ஏற்கனவே அமைச்சர் அவர்கள் கூட கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். இந்தியா மீட்டர்ஸில் நல்ல மெஷினரிஸ் இருக்கின்றன ; உற்பத்தியாகக் கூடிய மீட்டர்களுக்கு நல்ல மார்க்கெட் இருந்து வருகிறது. "இந்தியா மீட்டர்ஸ்" பிர்லாவின் நிறுவனத்திற்கு (சிம்கோ) போட்டியாக இருக்கிறது. குறிப்பிட்ட நபர் தன்னுடைய பணத்தை ஒழுங்காகச் செலவழிக்காமல் வேறு எங்கோ கடன்பட்டு அதன் காரணமாகத்தான் இந்தத் தொழில் இன்று நின்றிருக்கிறது. இது நஷ்டத்தில் ஓடும் என்று எப்படித்தான் அரசுக்கு விவரம் கிடைத்ததோ தெரியவில்லை. நாம் எடுத்து நடத்தக் கூடிய முக்கியமான தொழில் இது என்ற முறையிலே இதைப் பார்க்க வேண்டும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : பொதுவாக எல்லா மீட்டர் தயாரிக்கும் தொழில்களும் லாபத்தில் ஓடும்போது இந்தியா மீட்டர்ஸ் நஷ்டம் தரும் என்று எப்படி கன்ஸல்டன்ட்ஸ் ஒப்பினியன் கொடுத்தார்கள் ? மீட்டர்சுக்கு நல்ல மார்க்கெட் இருக்கிறது. இந்த நிறுவனத்தில் முதல் தரமான இயந்திரங்கள் இருக்கின்றன. உடனடியாக அதைத் திறந்து அந்தத் தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்க இந்த அரசு முன்வந்தால் என்ன ? நஷ்டம் ஏற்பட்டு வந்த சக்தி மைப்சுக்கு பல கோடி ரூபாய் செலவழிக்கின்ற இந்த அரசு இந்தியா மீட்டர்ஸை எடுத்து நடத்த முன் வந்தால் என்ன?

திரு. கோவை செழியன் : இந்தியா மீட்டர்ஸ் நஷ்டமடைய இன்னொரு காரணம் உண்டு. பொதுவாக, பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில் ஒரு உத்தரவைப் போட்டார்கள், தமிழ்நாட்டில் உற்பத்தியாகிற பொருள்களை அவசியம் நம்முடைய தமிழ் நாட்டு அரசாங்கமும், நிறுவனங்களும் வாங்க வேண்டும். பதினைந்து சதவிகிதம் அதிக விலை கொடுத்துக்கூட வாங்கலாம் என்று சொன்னார்கள். அதனால் சேல்ஸ்டாக்ஸ் கிடைப்பதோடு அந்தத் தொழில்களை ஊக்குவிக்க வாய்ப்புக் கிடைக்கிறது. அடிப்படையில் பார்த்தால் பிர்லா போன்றவர்கள் எல்லாம் போட்டி போட்டு சிறிய கம்பெனிகளை நசுக்க வேண்டுமென்று விலையைக் குறைக்கிறார்கள். அந்தத் தொழிற்சாலை அழிந்த பிறகு தங்களுடைய விலையை ஏற்றிக் கொள்ளுகிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்களுடைய உத்தரவை மறுபடியும் அமலுக்குக் கொண்டு வந்து, விலை அதிகமாகப் போனாலும் பரவாயில்லை, தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் பொருள்களை விலை அதிகமானாலும் அரசு வாங்க முன் வந்து இந்தியா மீட்டர்ஸ் போன்ற நிறுவனங்களுக்கு நஷ்டம் ஏற்படாமல் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்கும் ?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : The Government have issued orders to the Tamil Nadu Electricity Board as follows :—

1. The Electricity Board will purchase 50 per cent of its annual requirements of meters from open market on the basis of open tenders.

2. Out of the balance of 50 per cent, the quantity of singlephase and poly-phase meters available with India Meters may be purchased from them and for the balance requirements, orders may be placed with other Companies.

Regarding additional meters required for 60,000 pumpsets envisaged to be energised, the Electricity Board may place orders on the two local firms, the number to be ordered may be decided by the Board with reference to its requirements.

With a view to starting production of meters and other products by the India Meters Ltd.,and helping the Company to overcome financial difficulties faced by it and for the purpose of continued running of the Company, as a measure of providing relief against unemployment the Company has been declared as a Relief Undertaking for a period of 12 months with effect from 21st September 1973. This period has been further extended upto 20th September 1975.

The Company has requested this Government to sanction a loan of Rs. 30 to 50 lakhs for continuing production and maintaining labour. The request was examined in detail. The matter was discussed with the Management of the Company. Now, there is no Government representative in the Board of Management of the Company. Therefore, the Company



has been requested to consider this point of giving place for Government nominee in the Board first, before financial assistance. No final reply from the Company has been received so far on this point.

In this connection, further discussion on the matter was held in the meeting convened at Bombay, by the Chairman,Industrial Development Bank of India. It was brought to notice that there was heavy accumulated loss amounting to Rs. 2·5 crores. In this connection, it is also submitted that Messrs. Dastur and Company who have studied the working of the plant has given a bleak picture about the future profitability of the Company.Various possibilities of reviving the unit were examined. In this connection, it is submitted that in view of the present position of the Company and in view of the fact that chances of diversification of products are not bright, and in view of the commitments made in regard to other relief undertakings, it has not been found possible to take over the unit by the Government. It is considered that it may be better to encourage private parties to take up the responsibilty of the unit. In fact this aspect is being considered by the financial institutions at present.

Also, their design is expensive and the cost of their meterials is more than the selling price of other Companies.

இதைப்பற்றி நான் ஏற்கெனவே சொன்ன கருத்துக்கள்தான் இருக்கின்றன என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன கருத்துக்கள் மீண்டும் பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

சர்க்கரை ஆலைப் பிரச்சினை பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்தார்கள். சர்க்கரை ஆலைகளை அரசுடைமையாக்க வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்தார்கள். இந்தக் கருத்து எப்படியெல்லாம் வந்தது என்று உங்களுக்குத் தெரியும். மாண்புமிகு உறுப்பினர்கள் கேள்வி நேரத்தில் கூடக் கேட்டார்கள். நம்முடைய சர்க்கார் ஏற்கனவே இதுபற்றிய கருத்தை மத்திய சர்க்காருக்குத் தெரிவித்திருக்கிறது. ஒருவேளை மத்திய சர்க்காரால் சர்க்கரை ஆலைகள் நாட்டுடைமையாக்கப்படாத நிலைமை இருக்குமானால் மாநில அரசு அந்தக் காரியத்தைச் செய்ய அனுமதிக்க வேண்டுமென்று கருத்தைத் தெரிவித்தோம்.

24-ம் தேதி மத்திய அமைச்சர் திரு. ஷா நவாஸ் கான் அவர்கள் லோக் சபாவில் ஒரு கேள்விக்குப் பதில் சொல்கிற நேரத்தில் சொல்லியிருக்கிறார்கள் :

As for the question of nationalisation, Mr. Shaw Nawaz Khan said, "it is a very major subject. Government has to give very careful consideration. At present, Government felt it was very important to export sugar and earn foreign exchange and did not wish to do anything that should hamper the effort.

At the same time, Government was fully alive to the need to ensure remunerative prices to farmers and had instructed banks to make prices for the cane the first charge in advance they made to the sugar mills.

He said that the centre had informed the Tamil Nadu Government. அதிகாரபூர்வமாக எங்களுக்கு இன்னும் வரவில்லை. that its suggestions for nationalisation of private sugar-mills in the State would be kept in view while arriving at a decision on the recommendations of the Sugar Industry Enquiry Commission.

இந்த விவரம் வந்துவிட்டது.

Tamil Nadu Government's suggestions will be considered

முடிவு எடுக்கும்போது தமிழ்நாடு அரசின் கருத்தும் கவனத்தில் கொள்ளப்படும் என்று பதில் வந்தது. 24-ம் தேதி இதைச் சொல்லியிருக்கிறார்கள். 26-ம் தேதி ராஜ்ய சபாவில் சொல்கிறார்.

The Centre has given the States a free hand in nationalising sugar mills, if they so desired.

This was stated in the Rajya Sabha by the Minister of State for Agriculture and Irrigation, Mr. Shah Nawaz Khan while replying to a calling attention notice of Mr. J. P. Mathur and five other members.

The Minister said Government was giving careful consideration to the complex question of nationalisation of sugar mills.

24-ம் தேதி பரிசீலிக்கப்படுகிறது என்று சொன்னார். 26-ம் தேதி நான் மேலே குறிப்பிட்டபடி சொல்லிவிட்டார்கள். அதிகாரபூர்வமாக நமக்கு வரவில்லை.

ஆனால், நம் அரசு ஏன் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றக்கூடாது என்று கேட்டார்கள். நம்மைப் பொறுத்தவரையில் இது ஒரு உடன்பாடான கொள்கை. மத்திய அரசு கன்கரன்ஸ் கொடுத்தால் தான் சட்டமாக வரும். மாஸ்கோ நிலை நமக்குத் தெரியும். மத்திய அரசைப் பொறுத்தவரையில் நாஷனலைசேஷனை "நாங்கள் ஒரு கொள்கையாக ஏற்றுக்கொண்டிருக்கிறோம்" என்று சொல்லவில்லை. மாநில அரசுகளுக்கு விட்டுவிடுகிறோம் என்று சொல்கிறார்கள். ப்ரீ ஹாண்ட் கொடுத்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள். நாம் ஒரு சட்டத்தை நிறைவேற்றி அனுப்பினாலும் உடனடியாக அது ஏற்றுக்கொள்ளப்படுமா அல்லது காலதாமதமாகுமா என்று சொல்ல முடியாது. ஆனால் நமக்கு இது உடன்பாடான கொள்கை.

கரும்பு விலையைப் பொறுத்தவரையில் 1974–75-ல், காவேரி சர்க்கரை ஆலையில் ரூ. 87, டெக்கான் ரூ. 96, ஸ்வுத் இண்டியா ரூ. 86, அருணா ரூ. 89, சக்தி ரூ. 94, மஜுரா ரூ. 86, கொத்தாரி ரூ. 92, ஆரூரான்



ரூ. 86 என்று விலை நிர்ணயிக்கப்பட்டு கொடுக்கப்படுகிறது. நாம் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளைப் பொறுத்தவரையில் மத்திய சர்க்கார் நிர்ணயித்திருக்கும் விலையைவிட அதிகமாக கொடுத்திருக்கிறோம். ஒரு கேள்வி இங்கு கேட்கப்பட்டது. கூட்டுறவு ஆலைகளில் அதிகம் கொடுக்கப்படுகிறதே, ஏன் தனியார் ஆலைகளில் அப்படி கொடுக்கப்படவில்லை என்று ஒரு கேள்வியை எழுப்பினார்கள். தனியார் ஆலைகளில் டிவிடண்ட் கொடுக்கிறார்கள். கூட்டுறவு ஆலைகளில் அது குறைந்து விடுகிறது.

பின்னர், ஸ்பிக் பற்றிச் சொன்னார்கள்.

திரு. எ. எம். இராஜா : சர்க்கரை ஆலைகளைப் பொறுத்தவரையில் ரெக்கவரியில் எந்தவிதமான செக்கிங்கும் கிடையாது. அவர்கள் சொல்வதைத் தான் சர்க்கார் ஏற்றுக் கொள்கிறது.

There is no fool-proof method.

கம்ப்யூட்டர் எல்லாம் வந்திருக்கிறது ரெக்கவரியைக் கண்டு பிடிக்க. அதை இன்ஸ்டால் செய்து விடலாமே. பத்து, இருபது லட்சம் ரூபாயாகும் என்று சொல்லப்படுகிறது. ஒவ்வொரு பாக்டரியிலும் ஒரு கம்ப்யூட்டர் இன்ஸ்டால் செய்ய வேண்டும் என்று நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா ?

திருமதி த. ந. அனந்தநாயகி : கூட்டுறவு ஷுகர் மில்லில் டிவிடண்ட் கொடுப்பதில்லையா ? தனியார் சர்க்கரை ஆலைகளில் மட்டுந்தான் கொடுக்கிறார்களா ? கூட்டுறவு ஆலைகளில் கொடுப்பதைப் போல் ஏன் தனியார் ஆலைகளிலும் கொடுக்கக்கூடாது ?

If they don't give, you compel them or ask them to surrender the mills to you.

திரு. கே. டி. கே. தங்கமணி : மத்திய சர்க்கார் விவரத்தைப் பார்த்தால், The per acre recovery is highest here 50 percent more than national average. தமிழ்நாட்டில் ரெக்கவரி இல்லை என்ற கருத்து சரியல்ல. நல்ல ரெக்கவரி இருக்கிறது. இருந்தும் மற்ற மாநிலங்களில் கிடைக்கக்கூடிய அளவிற்கு கரும்புக்கு விலை கொடுக்கப்படவில்லை என்பதுதான் உறுப்பினர்கள் கருத்து.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் அதிக விலை கொடுக்கக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. தனியார் அந்த அளவிற்கு கொடுப்பதில்லை. அந்தந்த ஆண்டு அழைத்துப் பேசி அதற்கான முடிவுகள் செய்யப்படுகின்றன. கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் எவ்வளவு, அதிகமாகக் கொடுக்கலாமோ அதைக் கொடுக்க முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : மத்திய சர்க்கார் பார்கவா கமிஷன் நியமனம் செய்து இது சம்பந்தமாக அவர்கள் முடிவுகளைத் தந்தார்கள். அதன் அடிப்படையில் நம் அரசுக்கு ஏதாவது முடிவுகள் தெரிவித்தார்களா ? அதன்படி ஏதாவது உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றனவா? மஹாராஷ்ட்ரா, உத்தரப் பிரதேசம் போன்றயிடங்களில் ரூ. 130 வரை கொடுப்பதாகக் கேள்விப்படுகிறோம். இம்மாதிரி அவர்கள் கொடுக்கும்போது நாம் ஏன் குறைத்துக் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பார்கவா பார்முலா இந்த ஆண்டு அமுலுக்கு வரும். போன ஆண்டு அந்த பார்முலாவைப் போலவே நாம் வாங்கிக் கொடுத்திருக்கிறோம். கரும்பு விவசாயிகளுக்கு எந்த அளவிற்கு முடியுமோ அந்த அளவிற்கு அதிகமாக வாங்கித் தர முயற்சிகள் எடுத்து வரப்பட்டிருக்கின்றன. விவசாய அமைச்சர் அவர்கள் ஒரு கூட்டத்தைக் கூட்ட இருக்கிறார்கள். கரும்பு ஆலைச் சொந்தக்காரர்களை அழைத்திருக்கிறார்கள். அதில் நல்லதொரு விலை நிர்ணயிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, ஸ்பிக்பற்றி பேசினார்கள். அது கொள்கை அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது என்று திரு. மாதவன் அவர்கள் அன்று சொன்னார்கள். அண்ணா அவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட கொள்கை அடிப்படையில் இந்த ஸ்பிக் அமைக்கப்பட்டு காரியங்கள் நடந்துவருகின்றன. உர விற்பனையில் தவறு ஏற்பட்டுவிடுமோ என்று சொன்னார்கள். உர விநியோகம் பொறுத்து, அரசாங்கத்தோடு கலந்து எடுத்திருக்கிற முடிவு 70, 75 சதவிகிதம் வரையில் கூட்டுறவு சொஸைட்டிகள் மூலமாகவும், பாக்கியுள்ளது. அந்த நிறுவனமே தன்னுடைய டெப்போக்கள் மூலம் விநியோகிக்கப்பட இருக்கிறது என்று முடிவுக்கு வந்திருக்கிறோம். ஸ்பிக்கில் வேலை பிரச்னை ஒரு பெரிய பிரச்னை. கிடைக்காவிட்டால் குற்றச்சாட்டு சொல்கிற அளவிற்கு சொல்கிறார்கள். திருநெல்வேலி மாவட்டம் அதிக அளவிற்கு வேலை வாய்ப்பு பெற்றிருக்கிறது. தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், முன்னேறிய மக்கள் எல்லோருக்கும் அதில் வாய்ப்பு கிடைத்திருக்கிறது.

| | |
|---|---|
| Total staff including temporary, and township .. .. | 998 |
| Out of this number of employees from Tamil Nadu .. .. | 908 |
| Others from other States including staff in SPIC offices outside Tamil Nadu | 90 |

Out of 908 the classwise break-up is as follows :—

| | | |
|---|---|---|
| Scheduled Tribe | 3 | 0.3% |
| Scheduled Caste | 34 | 3.5% |
| Backward Class | 376 | 41.0% |
| Non-Forward | 360 | 40.5% |
| **Forward** | 138 | 15.0% |



The percentage of BC/SC/ST works out to about 45%. Community wise break-up of employees is as per list enclosed. District-wise break-up of employees is as follows :—

| District. | No. | %approx. |
|---|---|---|
| Tirunelveli | 328 | 35·8 |
| Kanyakumari | 25 | 2·8 |
| Ramanathapuram | 59 | [illegible] |
| Madurai | 63 | [illegible] |
| Salem | [illegible] | 1·9 |
| Thanjavure | 43 | 4·9 |
| Dharmapuri | 2 | 0·2 |
| South Arcot | [illegible] | 4·4 |
| North Arcot | 36 | 2·4 |
| Tiruchirappalli | [illegible] | 6·7 |
| Coimbatore | [illegible] | [illegible] |
| Chinglepet | 12 | [illegible] |
| Nilgiris | 1 | 0·1 |
| Madras City | 202 | 22·4 |
| Total: | 908 | |
| Other States: | 90 | |
| | 998 | |

61702
V211,31 N75
31N75-6851

இதில் எந்தவிதமான தவறும் இல்லை என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. செ. அரங்கநாயகம்: ஸ்பிக் தொழிற்சாலையில் இருக்கிற பதவிகளில் பெரிய பதவிகளில் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-30)

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அந்த விவரங்களெல்லாம் என்னிடத்தில் இருக்கின்றன. அதற்கு முறையிருக்கிறது. நிறுவனத்தில் எந்த முறையில் எடுத்துக்கொள்ளவேண்டுமென்பதற்கு விதிமுறை இருக்கிறது. நான் சொன்னதுபோல் எல்லாப் பிரிவினருக்கும் வேலை வாய்ப்பு கிடைத்து இருக்கிறது. எல்லா மாவட்டத்தினருக்கும் வேலை வாய்ப்பு கிடைத்து இருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: 1·30 ஆகிவிட்டது. அவையின் அலுவல்களை சிறிது நேரத்திற்கு நீட்டித்துக்கொள்ளலாம்.

<u>மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா</u> மின்சாரப் பற்றாக்குறை இருக்கிற நிலையில், தொழில் துறையில் முன்னேற்றம் காணமுடியுமா என்ற அச்சத்தைத் தெரிவித்தார்கள். நம்முடைய அரசைப் பொறுத்த வரையில் மின்சாரப் பற்றாக்குறையைத் தவிர்ப்பதற்கு என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க முடியுமோ அதை எடுத்து வருகிறோம். பாரத் ஹெவி எலக்டிரிகல்ஸ் நிறுவனம் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் வந்தபோது, நம்முடைய மாநிலத்திற்கு எந்த வகையில் உதவிசெய்ய முடியுமோ அந்த அளவில் உதவி செய்வதாகத் தெரிவித்து இருக்கிறார்கள்.

சமீபத்தில், தொழிற்சாலை நிர்வாகத்தினர், மின்சாரத் துறை அதிகாரிகள் ஆகியோர் கலந்து பேசினார்கள். ஏற்கனவே, மின்சாரம் கொடுப்பதாக ஒப்புக்கொண்ட தொழிற்சாலைகளுக்கு—கமிட்டெட் நிறுவனங்களுக்கு—மின்சாரம் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப்பட்டு இருக்கிறார்கள். மின்சாரப் பற்றாக்குறை காரணமாகத் தொழிற்சாலைகள் வேறு மாநிலத்திற்குச் சென்று விடும் என்று எண்ணத் தேவையில்லை.

பத்திரிகைகளில் செய்திகளைப் பார்க்கிறபோது, கருநாடக மாநில தொழில் அமைச்சர் அவர்கள், கருநாடகத்திலிருந்து தமிழ் நாட்டிற்குத் தொழில்கள் போவதாகச் சொல்லி இருக்கிறார்கள். எனவே, தமிழ் நாட்டிற்குத் தொழில் வரும் வாய்ப்பு இருக்கிறது. மின்சாரப் பற்றாக்குறை காரணமாக மின்சாரம் கொடுப்பதில் சில விதிமுறைகள் வைத்து இருக்கிறோம். டெக்ஸ்டைல்ஸ் இன்டஸ்டிரீஸ் ஜெனரேட்டர்கள் வைத்து இருக்கிறார்கள். இந்த ஸ்மால் ஸ்கேல் இன்டஸ்ட்ரீஸ்களுக்கு மின்சாரம் கொடுப்பதற்கு சில விதிமுறைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. அதிலே சில கஷ்டம் இருப்பதாகச் சொல்கிறார்கள். அதைத் தவிர்க்கவேண்டுமென்று கோரிக்கை கொடுத்து இருக்கிறார்கள். எந்த அளவுக்கு அவர்களுடைய கஷ்டத்தைத் தவிர்க்கலாம் என்று அதிகாரிகள் யோசனை செய்து கொண்டு இருக்கிறார்கள். விரைவில் அது தீரக்கூடும் என்று நினைக்கிறேன்.

<u>திருமதி த. ந. அனந்தநாயகி</u>: சிறு தொழில்களையும் அதிகம் டிபாசிட் கட்டவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். பீனல் சார்ஜஸ்ஸை சேர்த்து கட்டவேண்டுமென்று சொல்கிறார்கள். ஏற்கனவே மின்சார வெட்டு இருந்ததன் காரணமாக அவர்கள் பீனல் சார்ஜஸ் கட்டி வருகிறார்கள். அதையும் சேர்த்து, அந்த அடிப்படையில் டிபாசிட் கட்டவேண்டுமென்று சொல்வதால், சிறு தொழில் அதிபர்கள் வெகுவாக பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள், அமைச்சர் அவர்கள், அவர்களுக்கு இதிலிருந்து விதி விலக்கு அளிப்பார்களா ?

<u>மாண்புமிகு திரு. எஸ். ஜே.</u> சாதிக் பாட்சா: அந்தத் தொழிற்சாலைகளிலிருந்து வாங்கும் டிபாசிட்டைப் பொறுத்தவரையில், ஏற்கனவே அறிவித்து இருக்கிறோம். ஆண்டுதோறும் ஆகும் மின்சாரக்



கணக்கை எடுத்து, அதன் அடிப்படையில் 4 மாதங்களுக்கு வாங்க வேண்டுமென்று சொல்லப்பட்டு இருக்கிறது. பீனல் சார்ஜஸ் சேர்க்கக் கூடாது என்று சொல்லியிருக்கலாம். பீனல் சார்ஜஸ் வாங்கவேண்டாம் என்று சொல்லிவிடலாம். தொழிற்சாலையைப் பொறுத்தவரையில் 4 மாத டிபாசிட் கொடுக்க வேண்டுமென்று சொன்னபோது, அவர்களால் கொடுக்க முடியாது என்று சொன்னதன் பேரில் "டிஸ்கனெக்ட்" செய்ய வேண்டாம், இன்ஸ்டால்மென்டில் வாங்கிக்கொள்ளலாம் என்று தெரிவித்து இருக்கிறோம். அதைத் தவிர வேறு எந்த விதமான அறிவிப்பும் தொழிற்சாலைக்குக் கொடுக்கவில்லை என்று நினைக்கிறேன். (குறுக்கீடு) பீனல் சார்ஜஸ் வாங்கவேண்டாம் என்று சொல்கிறேன்.

I will instruct the Electricity Board not to collect on the basis of penal charges.

இங்கே பல்வேறு கருத்துக்களை உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அரங்கநாயகம் அவர்கள் லைசென்ஸ் கொடுப்பதில் காலதாமதம் ஆவதாகச் சொன்னார்கள். ஏற்கனவே, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் ஒரு கமிட்டி போட்டு இருக்கிறோம். அந்தக் கமிட்டியில் நம்முடைய அதிகாரிகள் பலர் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் அந்த லைசென்ஸ் வழங்குவதில் காலதாமதம் ஆகாமல் இருக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். எந்த ஒரு இடத்திலாவது கால தாமதம் ஆகிறது என்று குறிப்பிட்டுச் சொன்னால், என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால் நடவடிக்கை எடுக்கிறேன்.

<u>திரு. ஆர். பொன்னப்ப நாடார்</u>: நான் ஒரு வெட்டுத் தீர்மானம் கொடுத்து இருந்தேன். எனக்குப் பேச சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. கன்னியாகுமரி மாவட்டத்தில் கேஷ்யூ கட்டை கிடைப்பது இல்லை. கேரள மாநிலத்திற்கு அதிக முன்னுரிமை கொடுக்கிறார்கள். தொழிற்சாலைகள் முடங்கிக்கிடக்கின்றன. இது 1½ லட்சம் தொழிலாளர்களுடைய பிரச்னை. நாமே தனியாக ஒரு காஷ்யூ கார்ப்பரேஷன் ஆரம்பித்து அதற்கு வேண்டிய ஏற்பாடு செய்தால், அங்கே முடங்கிக் கிடக்கும் ஆலைகளை நடத்துவதற்கு ஏதுவாக இருக்கும். அது சம்பந்தமாக அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா</u>: காஷ்யூ கார்ப்பரேஷன் என்பது இந்தியாவில் கொச்சியில் செயல்பட்டு வருகிறது. அது மத்திய அரசாங்கத்தின் நிறுவனமாக வந்து கொண்டு இருக்கிறது. மாண்புமிகு பொன்னப்ப நாடார் அவர்கள் குறிப்பிட்ட மாதிரி அந்தப் பிரச்னை அங்கே கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏற்பட்டு இருக்கிறது. அதனால் அங்கே தொழில்கள் முடங்கியிருக்கின்றன. கேரளாவிலிருந்து கூட இங்கே அனுப்பக்கூடாது என்று சொல்லப்பட்டு இருக்கிறது. கேஷ்யூ அதிபர்கள் சென்னைக்கு வந்து எங்களைச் சந்தித்த பிறகு, மத்திய அரசுக்கு தெரிவித்து இருக்கிறோம். அப்படி அங்கே இருந்து காஷ்யூ வருவதைத் தடைசெய்யக் கூடாது என்று சொல்லியிருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் சொல்லியதுபோல் காஷு கார்ப்பரேஷன் அமைக்க மத்திய அரசுக்கு தெரிவித்து இருக்கிறோம். அதை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளும் நிலையில் இல்லை என்று அறிகிறேன். கன்னியாகுமரியில் எந்த அளவுக்கு உற்பத்தி செய்யலாம் என்று விவசாயத் துறை மூலமாக பரிசீலிக்கப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது.

கேஷுக்கு ஏற்பட்டதுபோல், சேலம் மாவட்டத்தில் கயறு தொழிலுக்கும் சிக்கல் ஏற்பட்டு இருக்கிறது. அந்தச் சிக்கலைத் தீர்ப்பதற்கு மத்திய அரசுக்குத் தெரிவித்து இருக்கிறோம் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : காஷு கார்ப்பரேஷன் மத்திய அரசு அனுமதி கொடுத்தால்தான் ஆரம்பிக்கவேண்டுமா ? நீங்கள் தான் எத்தனையோ கார்ப்பரேஷனை ஆரம்பிக்கிறீர்களே, இதற்காக ஆரம்பித்தால் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நமக்குத் தேவையான கேஷு, அந்த கார்ப்பரேஷன் மூலமாகக் கேட்கிறோம். அவர்கள் போதுமான அளவுக்குக் கொடுக்கவில்லை. இங்கே கேஷுவே இல்லையே ? இல்லாததற்கு நாம் எப்படி ஒரு கார்ப்பரேஷன் அமைப்பது என்பது தான் பிரச்னை. தென்னாற்காடு மாவட்டத்தில் காஷு டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன் என்று வைத்து இருக்கிறோம். அது தனியாக இருக்கிறது.

தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், மாண்புமிகு சுப்பையா அவர்கள் சொன்னார்கள், தஞ்சை மாவட்டம் தொழில்துறையில் முன்னேறும் வாய்ப்பு இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருக்கின்றன என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடைசியாக மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, இப்போது இருக்கும் நிலைமை என்னவென்றால்.

All is not well with the Indian economy—there is inflation, credit-squeeze, stagnation and apparent demand recession. Agricultural and industrial production continue to be stagnant. The prices of all conceivable commodities have gone up and there is general unrest in the country. Unless the challenge of production is efficiently met, the situation is likely to deteriorate with grave results not merely on political stability but also on harmonious industrial relations.





எனவே, அந்தச் சோதனைகளை நாம் சந்தித்தாக வேண்டும். அந்தச் சோதனைகளைச் சந்திப்பதற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லா விதமான உதவிகளையும் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது இருக்கும் பிரச்னை கடந்த ஆண்டுகளில் ஏற்பட்டு இருக்கும் தொழில் முன்னேற்றத்தின்—டெம்போ—அப்படியே நிலை நிறுத்த வேண்டும் என்பதாகும். இங்கே அதிகமான தொழில்களை வளர்ப்பதற்கான பணிகளை நாம் செய்தாக வேண்டும். அந்தப் பணிகளைச் செய்வதற்கு நீங்கள் அத்தனைபேரும் ஒத்துழைப்புத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு, அதிகாரிகளும் மிகுந்த சிரத்தையோடு காரியங்கள் ஆற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்தத் தொழில் துறை மானியத்தை நிறைவேற்றித்தர ஒத்துழைத்த அத்தனை பேருக்கும் பாராட்டைத் தெரிவித்து, இந்த மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் ஏற்கனவே சொன்னேன், 500 கோடி ரூபாய் பட்ஜெட்டில் நான் கேட்டிருப்பது 7 கோடி—கிட்டத்தட்ட 8 கோடி, அதை வாங்கி பல மடங்கு அதிகப்படுத்தப் போகிறோம். ஆகவே, இந்த வெட்டுத் தீர்மானங்களை நீங்கள் வற்புறுத்தாமல், திரும்பப் பெற்று ஏகமனதாக இதை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : பொதுவாக, பெரிய பட்டியல் கொடுக்கப்பட்டிருக்கிறது. பல இடங்களில் தொழிற்சாலைகள் ஆரம்பிப்பதாகச் சொல்லி, அதற்கான நிலங்கள் எல்லாம் வாங்கி, போர்டெல்லாம் கூட கிழக்கு இராமநாதபுரம் ஜில்லாவில் போட்டார்கள், ஆனால் பாக்டரி வரவில்லை, அதை ஆரம்பிப்பதற்கான நோக்கம் உண்டா? சம்பந்தப்பட்ட திட்டங்கள் இருக்கின்றனவா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அதை ஆரம்பிப்பதற்கான கருத்தும் நோக்கமும் இருந்து வருகின்றன. அதிலே ஓரளவிற்கு வேலைகள் நடைபெற்று இருக்கின்றன. நேரம் இல்லாததால் அதுபற்றிச் சொல்லவில்லை. கூட்டுறவுத்துறை மூலமாக வேலைகள் நடைபெற்று வருகின்றன.

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, சிறு தொழில் ஆரம்பிப்பதற்காக சிட்கோ மூலமாக உதவி பெற்று தொழில்களை ஆரம்பிக்கிறார்கள். ஆனால் அவற்றிற்கு மின் இணைப்பு கிடைப்பதில் காலதாமதம் ஆகிறது. அதனால் அவர்கள் வாங்கிய பணம் அதில் முடங்கி, தொழில் நடத்த முடியாமல் போய்விடுகிறது. ஆகவே, சிறு தொழிற்சாலைகள் ஆரம்பிப்பதற்கு உடனடியாக மின்சார இணைப்பு கொடுக்க அரசு முன்வருமா?

திரு. நா. வீராசாமி: தொழிற்சாலைகள் நம்முடைய தமிழ்நாட்டில் பெருகி இருக்கின்றன என்பதை யாரும் மறுக்க முடியாது. நாம் தொழிற்சாலைகள் பெருகவேண்டுமென்று சொல்வது, தமிழ் நாட்டில் இருக்கும் தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கவேண்டும். குஜராத்,

மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களில் செய்துள்ளதுபோல் 'சன்ஸ் ஆப் தி சாயில்' என்ற முறையை நாமும் ஏன் அமல் படுத்தக்கூடாது என்பதற்காகத்தான். ஆகவே, உடனடியாக நம்முடைய அரசாங்கம் எல்லாத் தொழிற்சாலைகளிலும், இப்படிப்பட்ட திட்டம் கொண்டு வந்தால், நல்லமுறையில் நம் நாட்டுத் தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கும். அதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தொழில்களுக்கு மின்சார இணைப்பு கொடுப்பதைப் பொறுத்தவரையில் நான் ஏற்கனவே சொன்னது போல், ஏற்கனவே அனுமதிக்கப்பட்டு 'கமிட்டட்' ஆக இருந்தால் மின்சாரம் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னேன். இன்றுள்ள மின்சாரப் பற்றுக்குறை காரணமாக நஷ்டம் ஏற்பட்டிருப்பதை நாம் மறுக்க முடியாது. நம்முடைய உறுப்பினர் வீராசாமி அவர்கள் 'சன்ஸ் ஆப் தி சாயில்' என்று சொல்லி அங்கே வாய்ப்புத் தரவேண்டுமென்று சொன்னார்கள். இருக்கின்ற தொழிற்சாலைகளுக்கு அப்படித் தெரிவிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவர் அவர்களே, தொழில் துறையில் பரவலாக்கப்படும் முறை சரியாக கடைப்பிடிக்கப்பட்டு வருவதாக அமைச்சர் அவர்கள் விளக்கம் சொன்னார்கள். நன்றி. நான் ஒரு வெட்டுத் தீர்மானம் கொடுத்திருந்தேன். என்னுடைய பேச்சிலும் சொன்னேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் வாக்குறுதி தந்தார்கள். வாணியம்பாடியில் பொதுத் துறையில் ஒரு தொழிற்சாலை கொடுக்கப்படும் என்ற வாக்குறுதி தந்தார்கள். அதைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒன்றும் சொல்லவில்லை. என்ன முடிவு அரசாங்கம் எடுத்திருக்கிறது என்பதற்கு அமைச்சர் அவர்கள் விளக்கம் தரவேண்டும்.

THIRUMATHI T.N. ANANDANAYAKI : On behalf of small Industry owners, I would llke to thank the Hon. Minister for showing the concession regarding penal electricity chargos.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு உறுப்பினர் வாணியம்பாடியில் என்ன தொழிற்சாலை வேண்டுமென்று சொல்லவில்லை. தோல் தொழிற்சாலை தான் ஆரம்பிக்க முடியுமா?

திரு எம். ஏ. லத்தீப்: குறிப்பாக சந்தனத் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்த முடியும் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இது பற்றி அரசாங்கம் என்ன முடிவு எடுத்திருக்கிறது என்பதை விளக்கவும்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: சந்தனத் தொழிற்சாலை வேண்டுமென்று கேட்டவர் முருகையன். மாண்புமிகு உறுப்பினர் கேட்கவில்லை. ஏற்கனவே, கிராமக் கைத்தொழில் அமைச்சரான மாண்பு





மிகு கண்ணப்பன் இதற்கான முயற்சியை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவரையும் கலந்து ஆலோசித்து வட ஆற்காடு மாவட்டத்தில் எங்கே சாத்தியம் என்று பார்த்து முடிவு செய்யப்படும். சந்தனத் தொழிற்சாலை வேண்டுமென்று கேட்டவரே முருகையன் தான், கனம் உறுப்பினரல்ல.

திரு. எம். ஏ. லத்தீப்: கனம் முதலமைச்சர் அவர்கள் அதற்கு வாக்குறுதி தந்திருக்கிறார்கள்.

திரு.ஏ. எம். இராஜா: தலைவர் அவர்களே, காட்பாடி ஏரியாவில் "எலிஜிபிள் பார் சப்சிடி" 27 தாலுக்காக்கள் இருக்கின்றன.

திரு.எம். ஏ. லத்தீப்: "ஏ பாயின்ட் ஆப் ஆர்டர்". I won't allow other things.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன சொல்லுங்கள்.

திரு. எம். ஏ. லத்தீப்: முக்கியமான விஷயங்களைக் குறிப்பிட்டு சொல்லியிருக்கிறேன். அதற்கான விளக்கங்களைக் கொடுங்கள்என்று கேட்கும் பொழுது தாங்கள் தடுத்து விடுகிறீர்கள். நாங்கள் பேசுவது பதிவேட்டில் குறிப்பிடப்படுவதில்லை. இந்த நிலைமையில் எங்கள் உரிமைகள் பாதிக்கப்படும்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எப்போது தடுத்தோம்? உங்கள் இஷ்டத்திற்கு கேட்கிறீர்கள், அவ்வளவும் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. மறுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லுவது சரியாகாது.

திரு. எம். ஏ. லத்தீப்: தாங்கள் சொல்லுவதை ஆட்சேபிக்கிறேன். நல்ல முறையில் எங்கள் உரிமைகள் பாதுகாக்கப்படுகின்ற வகையில் அவைத் தலைவர் அவர்கள் நடந்து கொள்ளவில்லை என்ற குற்றச் சாட்டைச் சொல்லுகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பகல் 12 மணிக்கு சூரியன் இல்லையென்று சொல்கிறது போல் இருக்கிறது உறுப்பினர் லத்திப்பின் குற்றச்சாட்டு. எத்தனையோ முறை கேட்கப்பட்டு அத்தனை முறையும் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அனுமதி தராமல் இல்லை.

திரு. ஏ. எம் இராஜா: 27 தாலுக்காக்கள் நம் தமிழ் நாட்டில் "டிக்ளேர்" செய்திருக்கிறார்கள். 27 தாலுக்காக்கள் போக இன்னும் சில தாலுக்காக்களை அதே முறையில் டிக்ளேர் செய்ய வேண்டுமென்று மத்திய சர்க்காரை நம் அரசு கேட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இப்போதுள்ள 27 தாலுக்காக்கள் ஐந்து மாவட்டங்களில் இருக்கின்றன. மறுபடியும் "ரீ டிஸ்ட்ரிபியூட்" செய்து ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இரண்டு தாலுக்கா "பேக்வார்டு எரியாஸ் எலிஜிபிள் பார் சப்சிடி" என்று மாற்றினால் என்ன கஷ்டம்? இதற்கான முயற்சிகளை அமைச்சர் அவர்கள் மேற்கொள்வாரா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஏற்கனவே உறுப்பினர் சொன்னார்கள். நான் விளக்கமும் தந்தேன். உறுப்பினருடைய கருத்தின் அடிப்படையில் மாநில சர்க்கார் மத்திய சர்க்காரை வலியுறுத்தும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது.

திருவாளர்கள் எம். சுரேந்திரன், என். கே. பழனிசாமி, செ. அரங்கநாயகம், என். டென்னிஸ், பி. வெங்கடசாமி ஆகியோர்ரின் வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பட்டன.

திரு. எம். ஏ. லத்தீப் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையில் முடிவுக்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் முன்னுள்ள கேள்வி. "நிதிக்கோரிக்கை எண் 24– –தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ.3,94,46,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

திருவாளர்கள் எம். ஏ. லத்தீப், என். டென்னிஸ் ஆகியோரின் வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி. "நிதிக் கோரிக்கை எண். 50 – – தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,64,73,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்"

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் ;** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று 31-3-75 திங்கட்கிழமை காலை 9 மணியளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-45 மணியளவில் ஒத்தி வைக்கப்பட்டது.

## 6. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்

### A. Statutory Rules and Orders

152. Notification isseud in G.O. Ms. No. 2230, Rural Development and Local Administration, dated the 16th October 1974 in regard to approval of the list of play-



fields in the area within the jurisdiction of Thanjavur Municipality. (Laid on the table of the House under section 14(3) of the Tamil Nadu Parks, play-fields and Open Spaces (Preservation and Regulation) Act, 1959 (Tamil Nadu Act 26 of 1959) ).

153. Notification issued in G O.Ms.No.2084, Rural Development and Local Administration, dated the 24th September 1974 in regard to amendment to the Tamil Nadu Bhoodan Yagna Rules, 1959. (Laid on the table of the House under Section 28(4) of the Tamil Nadu Bhoodan Yagna Act 1958 (Tamil Nadu Act XV of 1958).

### B. Reports, Notifications and Other Papers.

@ 113. A Review on Industrial Growth in Tamil Nadu- Major Industries, 1974-75 (English)

@ 114. A Review on Industrial Growth in Tamil Nadu- Small Scale Industries, 1974–75 (English and Tamil).

@ 115. A Review on Industrial Growth in Tamil Nadu- Mineral Development, 1974-75 (English and Tamil.).

@ 116. A Review on the Industrial Growth in Tamil Nadu- Industrial Finance, 1974-75 (English and Tamil).

@ 117. A Review on Industrial Growth in Tamil Nadu— Tamil Nadu Small Industries Corporation Limited (TANSI), 1974-75 (English and Tamil).

@ 118. A Review on Industrial Growth in Tamil Nadu— Tamil Nadu Small Industries Development Corporation Limited (SIDCO), 1974-75 (English and Tamil).

@ 119. A Review on Industrial Growth in Tamil Nadu— Tamil Nadu Industrial Development Corporation Limited (TIDCO), 1974-75 (English and Tamil).

@ 120. A Review on Industrial Growth in Tamil Nadu— State Industries, Promotion Corporation of Tamil Nadu Limited (SIPCOT), 1974-75 (English and Tamil).

@ 121. A Review on Industrial Growth in Tamil Nadu— Tamil Nadu Ceramics Limited (TACEL) 1974-75 (English and Tamil).

@ 122. A Review on the Tamil Nadu Handicrafts Development Corporation Limited (Poompuhar) 1974–75 (English and Tamil).

@ 123. The Tamil Nadu Cultivating Tenants Protection and Payment of Fair Rent (Amendment) Bill, 1975 (L. A Bill No. 9 of 1975).

@ 124. The Tamil Nadu Appropriation Bill, 1975 (L.A. Bill No. 11 of 1975).

---

@ Despatched to members on 25th March 1975.

## தமிழ் நாடு சட்ட மன்றப் பேரவை.

திங்கட்கிழமை, 1975 மார்ச் 31.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

*School Savings Bank Scheme.*

*491 *Q.*—Thiru N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state the progress made in the implementation of the school savings bank schemes introduced by the Government during 1972–73 ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சட்டப் பேரவை முன் ஒரு அறிக்கை @ வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி : தலைவர் அவர்களே, இந்த சேவிங்ஸ் பாங்க் திட்டத்தில் ஆசிரியர்கள், குறிப்பாக சென்னை மாநகராட்சிப் பள்ளி ஆசிரியர்கள் பலவந்தப்படுத்தப்படுகிறார்கள். இதனால் மாணவர்களுடைய படிப்பு கெடுகிறது. ஆகவே, இந்தத் திட்டம் மாற்றியமைக்கப்படுமா ? யார் யாருக்கு வசதி இருக்கிறதோ அவர்கள் பூராவும் சம்பளம் கொடுக்கக்கூடிய முறையிலும் இந்தத் திட்டத்தை மாற்றியமைக்க சர்க்கார் முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் மாணவர்களிடத்திலே வங்கிகளில் சேமிக்கும் ஒரு சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகவும், சேமிப்பு உணர்வை ஏற்படுத்த வேண்டுமென்பதற்காகவும் மத்திய அரசு வகுத்துத் தந்திருப்பதாகும். அதை ஏற்று மாநிலம் முழுவதும் நாம் இதைப் பரப்புகிறோம். இதில் பலவந்தம் ஏதும் கிடையாது. பட்டியலில் குறிப்பிட்டிருப்பதைப் பார்த்தால் ஓராண்டில் ஒரு கல்வி மாவட்டத்தில் உள்ள பள்ளிகளில் வசூலிக்கப்பட்டிருக்கும் தொகை ரூ. 2,000 ஆகவும், ரூ. 120 ஆகவும் இருப்பதைப் பார்க்கலாம். சில கல்வி மாவட்டங்களில் "இல்லை" என்ற கணக்கு இருக்கிறது. மாவட்டம் முழுவதும் உள்ள கணக்கு இதில் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு கல்வி மாவட்டத்தில் 50, 60 பள்ளிகள் சேர்ந்திருக்கும். அத்தனை பள்ளிகளிலும் வசூலாகியிருப்பது 120 ரூபாய் என்று இருக்கும். சில இடங்களில் "இல்லை" என்றே கணக்கு இருக்கும். ஆகவே, இதில் கட்டாயப்படுத்தவில்லை என்பதைக்

---

@ 212-214ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

காணலாம். விரும்புகிற அளவுக்குச் செய்யவேண்டுமென்பது தான் திட்டத்தின் நோக்கம். சிறந்த நோக்கம் என்ற முறையில் பலவந்தம் இல்லாத அளவில் செயல்படுகிறது. எங்காவது பலவந்தம் இருக்குமானால் அதைத் தடுத்து நிறுத்த அரசு முயலும்.

திரு. வெ. ந. முத்தமிழ்ச் செல்வன் : தலைவர் அவர்களே, சேமிப்புத் திட்டத்தை எல்லாப் பள்ளிகளிலும் கட்டாயமாகக் கொண்டுவர அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் முதலில் குறிப்பிட்டபடி இதில் வற்புறுத்துதலோ கட்டாயமோ இல்லை. ஆனால், சேமிப்புப் பழக்கத்தை சிறு வயதில் உண்டாக்கினால் எதிர்காலத்தில் பயன்படும் என்று இந்திய அரசு திட்டத்தை வகுத்துத் தந்தது. அந்தத் திட்டம் சிலபல மாவட்டங்களில்—கல்வி மாவட்டங்களில்—நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது. சில கல்வி மாவட்டங்களில் அவ்வளவாக வசூலாகவில்லை. ஆனால், ஆசிரியர்களும் மாணவர்களும் சேர்ந்து ஒத்துழைக்கும் தன்மையின் அடிப்படையில் நிறைவேறினால் நல்லது.

திரு. முனு ஆதி : தலைவர் அவர்களே, மாணவர்கள் சேமிக்கும் நிதிக்கு வட்டி மட்டுந்தான் கிடைக்குமா ? அல்லது, அந்தத் தொகையோடு மாநில அரசும் ஏதாவது தொகை சேர்த்து, எதிர்காலத்தில் கொடுக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதற்கென்று விதிக்கப்பட்டிருக்கிற வட்டி கிடைக்கும்.

திரு. என். கே. பழனிசாமி : தலைவர் அவர்களே, இப்பொழுது இம்மாதிரி வசதி செய்வதற்குப் பதிலாக ஏற்கெனவே இலவசக் கல்வி இருப்பதற்குப் பதிலாக, வசதியுள்ளவர்களுக்கும் பொது ஜனங்களுடைய பணத்தைக் கொடுக்க வேண்டியிருப்பதால், வசதியுள்ளவர்கள் தங்கள் பிள்ளைகளுக்குச் சம்பளம் கொடுக்கவேண்டுமென்று மாற்றியமைக்க சர்க்கார் முன்வருமா ? அப்படிப்பட்ட திட்டம் குறித்து அமைச்சர்களுக்குள் கருத்து வேற்றுமை உண்டா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இதிலே கருத்து வேறுபாடு இல்லை. கல்வி மானியக் கோரிக்கையின்போதே தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. ஏழை எளியவர்களுக்கு இலவசக் கல்வி தரவேண்டும் என்ற தன்மையிலிருந்து மாறுபாடு இல்லை. அந்த நிலைமை இருக்க வேண்டும். வசதி படைத்தவரிடத்தில் சம்பளம் வசூல் செய்யலாமா என்ற கருத்தைச் சிலர் எடுத்துச் சொல்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் கூட அதைச் சொல்கிறார். அந்தக் கருத்தின் காரணமாக ஏற்படுகிற விளைவுகளை நாம் ஆராய வேண்டும். ஆராயும்படியாகக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். ஆனால், சிறு சேமிப்புத் திட்டத்திற்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை..



திரு. என். டென்னிஸ் : கொடுக்கப்பட்டிருக்கும் பட்டியலில் முக்கியமான நகரங்களான மதுரை, நாகர்கோவில் போன்ற இடங்களில் ஒரு மாணவரும் சேர்ந்ததாகக் குறிப்பு இல்லை. அந்த நகரங்களிலும் இவ்விதமான திட்டத்தை அமல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ? கொடுக்கப்பட்டிருக்கிற பட்டியலில் ஆசிரியர்கள்—ஆசிரியைகள், மாணவர்கள்—மாணவிகள் சேமித்த மொத்தத் தொகை ஒன்றாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆசிரியர்—ஆசிரியை சேமித்ததும், மாணவ—மாணவியர் சேமித்ததும் குறித்து பிரத்தியேகமாகப் பட்டியல் கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தனித் தனியாகப் பட்டியல் தரவேண்டும் என்றால் தனியாகக் கேள்வி போட்டால் தனியாக விவரம் பிரித்துத் தரலாம். இப்பொழுது சேர்த்துத்தான் தரப்பட்டிருக்கிறது. ஆனால், சில கல்வி மாவட்டங்களில் மேலும் விளம்பரப்படுத்தி மாணவர்களையும் ஆசிரியர்களையும் ஊக்குவிப்பதன் மூலமாக இந்தத் திட்டத்திற்கு நல்ல ஆதரவு கிடைக்கும்படியாகச் செய்யலாம்.

திரு. கே. ஏ. வகாப் : தலைவர் அவர்களே, மாணவர்கள் சேமிக்கும் திட்டம் மிக நல்ல திட்டமாகும். மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில், அவர்கள் சேமிக்கும் தொகையோடு சிறு தொகையை ஈட்டுத் தொகையாக அரசு சேர்த்துக் கொடுக்கும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதற்குப் பெரும் செலவாகும். கூடுதல் செலவு செய்யவேண்டிய அவசியம் ஏற்படும். அப்படிப்பட்ட உத்தேசம் அரசுக்கு இல்லை.

*Nursery and Montessori trained teachers.*

* 492 *Q.*—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state whether Nursery Training and Montessori trained teachers training would be made equivalent to Secondary Grade teachers training ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. என். டென்னிஸ் : நர்சரி பயிற்சி பெற்றவர்களும், மாண்டிசோரி பயிற்சி பெற்றவர்களும் எஸ்.எஸ்.எல்.சி. படித்தபின் இரண்டு ஆண்டுகள் பாடத் திட்டத்தின் அடிப்படையில் மேற்படி பயிற்சி பெற்றுத் தேறுகிறார்கள். அவர்களுக்கு இப்பொழுது அரசாங்கம் உத்தியோகம் பிரைமரி ஸ்கூலில் கொடுக்க மறுப்பதாகத் தெரிகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் அவர்களுக்கு ப்ரைமரி ஸ்கூல்களிலும், எலிமெண்டரி ஸ்கூல்களிலும் ஆசிரியர் வேலை கொடுக்க அரசு உத்தரவிடுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பள்ளி புகாத சிறுவர்களுக்குக் கல்வி தரும் பயிற்சி முறை வேறாகவும், பள்ளி புகுந்த பிறகு 1 முதல் 8 வகுப்புகள் வரையில் துவக்கப் பள்ளியில் கல்வி தருவதற்கான பயிற்சி வேறாகவும் இருக்கிறது.

ஆகவேதான் பள்ளி புகாத சிறுவர்களுக்குக் கல்வி தரும் பயிற்சி பெற்றவர்களை வைத்துக்கொண்டு துவக்கப் பள்ளிகளில் பிள்ளைகளுக்குக் கல்வி தரும் வழிவகை ஏற்பட இயலாது. ஆனால், அவர்கள் எஸ்.எஸ்.எல்.சி. தேறி, பயிற்சியும் பெற்றிருப்பார்களானால், 1–2 வகுப்புகள் வரையில் துவக்கப் பள்ளிகளில் நியமிக்கலாம் என்ற கருத்து இருக்கிறது. ஆனால், 8–வது வகுப்பு வரையில் இருக்கும் பிள்ளைகளுக்குக் கல்வி தரவேண்டு மானால், அதற்குத் தக்க பயிற்சி பெற்றவர்களைக் கொண்டுதான் பயிற்று விக்கின்ற சூழ்நிலை பெறமுடியும்.

திரு. தி . பொன்னுமலை : தலைவரவர்களே, கிராமப் பகுதிகளில் பாலர் பள்ளிகளில் சாதாரணமாக 4—5 வகுப்பு வரை பயிற்சி அற்ற ஆசிரியர்களை பஞ்சாயத்து தலைவர்களே நியமித்து விடுகிறார்கள். அப்படி இல்லாமல் பயிற்சி பெற்ற ஆசிரியர்களை நியமித்து நல்ல முறையில் பாடம் கற்பிக்க அரசு யோசிக்குமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பயிற்சி பெற்ற ஆசிரியர் களைத்தான் நியமிக்க வேண்டும் என்று ஆங்காங்கே வற்புறுத்தப்பட்டு வருகிறது. அப்படி நியமிப்பதற்கு பட்டியலும் இருக்கிறது. பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் பல பேர் இருக்கிறார்கள். எங்கேயாவது பயிற்சி இல்லா தவர்கள் இருந்தால் அப்படிப்பட்ட இடங்களில் பயிற்சி பெற்றவர்களை நியமித்து தகுதி இல்லாதவர்களை நீக்க வேண்டும் என்றும் அரசு பணித்திருக்கிறது.

புலவர் சி. பழனிச்சாமி : இந்தப் பயிற்சிப் பள்ளிகள் எங்கெங்கே இருக்கின்றன. ? அப்படிப்பட்ட பயிற்சி நிலையங்களை எல்லா மாவட்டங் களிலும் ஏற்படுத்த அரசு திட்டம் ஏதாவது இருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அது பற்றி விவர குறிப்புகள் ஒன்றும் இல்லை.

திரு. கே. எ. வகாப் : இந்த பாலர் பள்ளிகளில் போதிக்கப்படுகிறதே —இளமையிற் கல்வி சிலை எழுத்து என்று சொல்லுவார்கள்—அந்த வகையில் குழந்தைகளின் மனோதத்துவத்தைப் புரிந்து அதில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்களா, அப்படிக் குழந்தை மனோ தத்துவத்தை உணர்ந்த ஆசிரியர்களை நியமிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இந்த பாலர் பள்ளி, மாண்டிசோரி, நர்சரி ஆகியவற்றில் வருகின்ற குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுப்பதற்கென்று வருகின்ற ஆசிரியர்களுக்கு அவர்களுடைய ஆசிரிய பயிற்சியிலேயே

School administration, child psychology, health hygiene and diatetics and Nursery or Montessory methods

ஆகியவை எல்லாம் சேர்க்கப்பட்டு இருக்கின்றன. ஆகவே, இவைகளில் எல்லாம் பயிற்சி பெறுகிறவர்கள் தான் இந்த பாலர் பள்ளிகளில் ஆசிரியர்களாக நியமிக்கப்படுகிறார்கள். குழந்தைகள் மனோதத்துவம் இதில் சேர்க்கப்பட்டு இருக்கிறது.





திரு. எஸ். முருகையன் : தலைவரவர்களே, நர்சரி பள்ளிகளுக்காக பயிற்சி பெறுகிறவர்கள் எஸ்.எஸ்.எல்.சி. முடிந்து இரண்டு ஆண்டுகள் பயிற்சி வேறு பெற்ற பிறகு நர்சரி ஆசிரியர்களாக வருகிறார்கள். ஆரம்பப் பள்ளிகளில் 1-வது, 2-வது வகுப்புகள் வரை அவர்கள் சேர்த்துக்கொள்ளப் படலாம் என்று அனுமதிக்கப்பட்டிருந்தும் பல பேர் இப்பயிற்சியை பெற்ற வர்களாக இருந்தும் அவர்களைப் பள்ளிகளில் நியமிப்பது கிடையாது. ஆகவே, கிராமப் பகுதிகளில் துவக்கப்பள்ளிகளில் இப்படிப் பயிற்சி பெற்ற வர்களைக் கண்டிப்பாக வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று அரசாங்கம் உத்தரவிடுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கண்டிப்பாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்ல இயலாது. ஏனென்றால்

Nursery and Montessory trained teachers are permitted to be employed in ordinary elementary schools also in higher grade vacancies to handle standards, I and II.

என்று போட்டிருக்கிறோம். இப்படிப்பட்டவர்களுக்கு செகண்டரி கிரேட் ஆசிரியர் பயிற்சி பெற்றாக வேண்டும் என்ற கட்டாயம் இல்லை.

பரமன்பச்சேரி ஆரம்பப்பள்ளி.

*493 வினா—திரு. எம். முத்தையா : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா :—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ஒட்டப்பிடாரம் யூனியன், சிப்பாய்க் குளம் கிராமம், பரமன்பச்சேரி ஆரம்பப்பள்ளிக் கட்டிடம் மிகவும் பழுதடைந்த நிலையிலுள்ளது குறித்துப் புகார் ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) and (இ) : பரமன்பச் சேரி ஆரம்பப்பள்ளிக் கட்டிடம் பழுதடைந்துள்ளதாகப் புகார் எதுவும் கல்வித் துறையில் பெறப்படவில்லை. எனினும், பள்ளிக் கல்வி இயக்குநர் இதுகுறித்து மாவட்டக் கல்வி அலுவலரிடம் ஒரு குறிப்புரை அனுப்பு மாறு கோரியுள்ளார். தவிரவும், திருநெல்வேலி மாவட்ட ஆட்சியாளர் இதுபற்றிய புகார் ஒன்று தனது அலுவலகத்தில் கிடைத்துள்ளதாகவும், ஒட்டப்பிடாரம் ஒன்றிய ஆணையாளர், பள்ளிக் கட்டிடத்தை பழுது பார்க்க உரிய நடவடிக்கை எடுத்து வருவதாகவும், தற்போது பள்ளி ஒரு வாடகைக் கட்டிடத்தில் நடைபெற்று வருவதாகவும் கூறியுள்ளார்.

திரு. எம். முத்தையா : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விடையளித்திருப்பதற்கும் நான் கேட்டதற்கும் சம்பந்தம் இல்லை. நான் சில்லான்குளத்தைப் பற்றி கேட்டிருந்தேன். இங்கே சிப்பாய்க்குளம் பற்றி, பதில் கொடுக்கப்பட்டு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் எழுதிக்கொடுத்திருப்பதில் சிப்பாய்க்குளம் என்று தான் இருக்கிறது. அப்படித்தான் கேள்வி வந்திருக்கிறது. நீங்களே பாருங்கள் கேள்வி அப்படித்தான் இருக்கிறது.

திரு. எம். முத்தையா : திருநெல்வேலி மாவட்டம், ஒட்டப்பிடாரம் யூனியன் சில்லான்குளம் கிராமம், பரமன்பச்சேரி ஆரம்பப்பள்ளிக் கட்டிடம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது குறித்து ஏதேனும் புகார் வந்துள்ளதா, அதன் மீது நடவடிக்கை என்ன எடுக்கப்பட்டு இருக்கிறது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட பள்ளிக் கட்டிடம் பழுது அடைந்த நிலையில் இருப்பதாகவும் தற்போது வாடகைக் கட்டிடத்தில் பள்ளி நடைபெற்று வருவதாகவும் மேலும் பழைய கட்டிடத்தைப் பழுது பார்க்க 3,000 ரூபாய் செலவில் செய்ய ஒப்பந்தக்காரரிடம் வேலையை கொடுத்தும் குறித்த நேரத்தில் செய்யவில்லையாதலால் வேறு ஒரு ஒப்பந்தக்காரரிடம் தற்போது அந்த வேலையை ஒப்படைத்து இருப்பதாகவும் தகவல் கிடைத்திருக்கிறது. விரைவில் இந்தப் பள்ளி பழுதுபார்க்கின்ற வேலை நிறைவேற்றப்படும்.

### திற்பரப்பு அருவிப் பகுதியைச் சுற்றுலா 'மையமாக்கல்.

* 494 வினா—திரு. வீ. கே. இராஜாப்பிள்ளை : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா —

குமரி மாவட்டத்திலுள்ள "திற்பரப்பு" அருவிப் பகுதியை சுற்றுலா கேந்திரமாக ஆக்குவதற்குரிய செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. வீ. கே. இராஜாப்பிள்ளை : தலைவரவர்களே, இந்த திற்பரப்பு பகுதி இயற்கை எழில் மிகுந்த இடம். இந்த அருவிப் பகுதியில் பல காட்டாறுகளும் சேருவதால் அது சிறந்த ஒரு சுற்றுலாக் கேந்திரமாக விளங்கும். அப்படிப்பட்ட ஒரு இடமாக அமைக்கின்ற முயற்சிஎடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்த திற்பரப்பு அருவிப் பகுதிக்கு மக்கள் சென்று வரத்தக்க பயன்படுகின்ற சூழ்நிலை ஏற்பட வேண்டும் என்றால் சாலை செப்பனிடப்பட வேண்டும். ஓய்வு இல்லங்கள் ஒரு சில அமைக்கப்பட வேண்டும். குளிக்க வசதிகள்





செய்து தரப்பட வேண்டும். இவைகளைச் செய்து தந்தால் மக்கள் ஓரளவு செல்லக் கூடும். எழில் நிறைந்த இடம் என்று தான் குறிப்பு கிடைத்து இருக்கிறது. நிதிப் பற்றாக்குறை காரணமாக இந்தப் பகுதியை நல்ல முறையில் மாற்ற வேண்டும் என்ற செயல்குறிப்பு கைவிடப்பட்டு இருக்கிறது. ஆனால் சாலை போடுவதில், ஓய்வு இல்லம் அமைப்பதில் நாம் கவனம் செலுத்திய பிறகு ஓரளவு மக்கள் அந்தப் பகுதிக்குப் போக வரமுன்வரக்கூடும். நிதி வளம் ஏற்பட்ட நிலையில் இது கவனிக்கப்படும்.

### ராங்கியன் கண்மாய்.

* 495 வினா—திரு. த. சோணையா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை-மண்டபம் நெடுஞ்சாலையிலிருந்து புல்வாய்க்கரை செல்லும் சாலையில் மழைக் காலங்களில் ராங்கியன் கண்மாய் கரைப்பிரளி (சகதி) ரோட்டை மறைத்துக்கொள்வதால் அக்கண்மாயில் கரைகளுக்கு சிமெண்ட் revetment கட்டும் உத்தேசம் உண்டா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. த. சோணையா : மதுரை-மண்டபம் நெடுஞ்சாலையிலிருந்து புல்வாய்க்கரை செல்லும் சாலையில் மழைக்காலங்களில் ராங்கியன் கண்மாய் கரைப்பிரளி அதாவது சகதி ரோட்டை மறைத்துக் கொள்வதால் சில நேரங்களில் போக்குவரத்து கூட ஸ்தம்பித்து விடுகிறது. ஒரு தடுப்புச் சுவர் அல்லது கரைகளுக்கு சிமெண்ட் ரிவெட்மெண்ட் கட்ட வேண்டும். அதற்கு அரசு குறிப்பும் இருக்கிறது. இனியாவது அப்படி ஒரு ஏற்பாட்டை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, உறுப்பினர் சொல்லுவது எல்லாம் உண்மைதான். உறுப்பினர் குறிப்பிட்ட கண்மாய்க்குக் கரை கட்ட 50 ஆயிரம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பீடு போடப்பட்டு இருப்பதாக ஆராய்ச்சியில் தெரிகிறது. நிதிநிலை இப்போது வளமாக இல்லையாதலால் இதைக் கவனிப்பதற்கு இல்லை. நிதிநிலை சரியான பிறகு கவனிக்கப்படும்.

### உலகமடையில் பாலம்.

* 496 வினா—திரு. த. சோணையா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஒன்றியம், தஞ்சாக்கூர் பில்வாய்க்கரை சாலையில் மாரைநாடு கண்மாய் உலகமடையில் பாலம் கட்டும் உத்தேசம் அரசிடம் உண்டா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஆம்.

திரு. த. சோனையா: இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஒன்றியம், பில்வாய்க்கரை சாலையில் உள்ள மாரைநாடு கண்மாய் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள இரண்டாவது பெரிய கண்மாய். இந்த மடையில் சில நேரங்களில் போக்குவரத்தே துண்டிக்கப்படுகிற நிலை ஏற்படுகிறது. ஒரு பாலம் இந்த இடத்தில் கட்ட வேண்டியது மிக அவசியமாகும். இந்தப் பாலத்தை அமைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, இந்தப் பாலத்தைக் கட்ட 7,500 ரூபாய் ஆகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. குத்தகை ஒப்பந்தக்காரரிடம் வேலை ஒப்படைக்கப்பட்டு இருக்கிறது. வேலை மிக விரைவில் முடிவடையும் என்ற தகவல் தான் வந்திருக்கிறது.

*Irenipuram–Kappucaud road.*

* 497 *Q*.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is a proposal to repair the Irenipuram-Kappucaud road in Vilavancode taluk, Kanyakumari district?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஆம்.

திரு. என். டென்னிஸ்: இது ஒரு பஸ் ரூட் உள்ள ஹைவேஸ் ரோடு. இந்த கேள்வி கேட்கப்பட்ட நேரத்தில் பழுதடைந்து இருந்தது. ஆனால், இப்போது பஸ் போக வரக் கூடிய நிலை இருக்கிறது. ஆனால் இந்த ரோட்டிற்கு முழுமையாக தார் போட்டதாக தெரியவில்லை. அந்த ரோடு பூராவிற்கும் தார் போட அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: முழு பாதையில் தார் போட வேண்டும் என்றால் அரசு நிதி நிலை வளமாக இருக்க வேண்டும். இது பற்றிப் பின்னர் பரிசீலிக்கப்படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, இந்த ரோடு இரு தொகுதிகளை இணைக்கின்ற ஒரு ரோடாக இருக்கிறது. அது மட்டுமல்லாமல் கல்லூரிகளுக்கும் ஆஸ்பத்திரிக்கும் செல்லக்கூடிய ஒரு முக்கியமான சாலையாகவும் இருக்கிறது. ஆகையால்தான் பஸ்ரூட் ஏற்பட்டிருக்கிறது. அதனால் பணம் கொஞ்சம் அதிகம் செலவானாலும், அதை செலவு செய்து அந்தச் சாலையை பழுது பார்த்து சீர் செய்ய அரசாங்கம் துரித நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, இப்போதே அந்தச் சாலை "நீரிற்று மெக்கடம் சாலை"யாகவும், தார் சாலையாகவும் இருக்கிறது. எல்லாவற்றையும் தார் சாலையாக்க வேண்டுமென்று



எண்ணம் இருக்கிறது. நிதிநிலை இடம் தராததால் அந்த எண்ணம் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது; நிதி வசதி ஏற்படும்போது நிறைவேற்றப்படும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் குடிநீர் வழங்கு திட்டங்கள்.

*498 வினா—திரு. எ. சுவாமிதாஸ்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளச்சல், தக்கலை ஆகிய நகரங்களுக்கும் இரணியல், நுள்ளிவிளை வில்லுக்கிரி, மாடதட்டுவிளை ஆகிய கிராமங்களுக்கும் குடிநீர் வழங்குவதற்காக கன்னியாகுமரி மாவட்டத்தில், கல்குளம் தாலுக்காவில் மாம்பழத்துறை என்னுமிடத்தில் அணைகட்டி நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி:

(அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, இந்த முக்கிய நகரங்களுக்கும் இரணியல், நுள்ளிவிளை, வில்லுக்கிரி, மாடதட்டுவிளை ஆகிய கிராமங்களுக்கும் சுத்தமான பாதுகாக்கப்பட்ட தண்ணீர் இல்லாத குறை நீண்ட நாட்களாக இருந்துகொண்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக மாம்பழத் துறையிலிருந்து தண்ணீர் கொடுக்க வேண்டுமென்று ஒரு திட்டத்தை தீட்டினார்கள். அதற்கு ஊராட்சி ஒன்றியங்களும், நகராட்சிகளும் உரிய பணம் கூடக் கட்டி இருக்கிறார்கள். ஆகவே, இந்தத் திட்டத்தைப் பரிசீலனை செய்து, விரைவில் தண்ணீர் வழங்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, 1965–லே ஒரு திட்டம் தயாரித்து, அதற்கு 15,850 ரூபாய் இன்வெஸ்டிகேஷன் சார்ஜ் கட்டவேண்டுமென்று கேட்கப்பட்டது; இதுவரையில் அவர்கள் கட்டவில்லை. 1973–ல் பத்மனாபபுரத்தை மட்டும் தனியாகப் பிரித்து, ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டது. அதற்கு 19,000 ரூபாய் ஆய்வுக் கட்டணம் கட்டவேண்டுமென்று சொல்லப்பட்டது; இதுவரையில் கட்டவில்லை. அவர்கள் இந்தக் கட்டணத்தைச் சர்க்காரே கட்டவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். மற்ற நுள்ளிவிளை, வில்லுக்கிரி, மாடதட்டுவிளை ஆகிய பகுதிகளும் பத்மனாபபுரத்திலிருந்து தண்ணீர் எடுத்துக் கொள்வதாக இருந்தால், உரிய ஆய்வுக் கட்டணத்தைக் கட்டினால், மேற்கொண்டு முடிவு செய்யலாம்.

திரு. வீ.கே. இராஜாப்பிள்ளை : தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் தோவாளை ஊராட்சி ஒன்றியம் ஆய்வுக் கட்டணமாக 26,000 ரூபாய் கட்டி, உலக்கருவி குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் ஆய்வு முடிந்தவுடன் இந்தத் திட்டம் உடனடியாக நிறைவேற்றப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். இதுவரையில் நிறைவேற்றுவதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. விரைவில் இத்திட்டத்தை முடிக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அதற்குத் தனிக் கேள்வி போடவும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, இந்தக் கேள்விக்குப் பதில் தயார் செய்து வந்த பிறகு பத்மனாபபுரம் நகராட்சி இன்வெஸ்டிகேஷன் சார்ஜ் கட்டிவிட்டார்கள். ஆகவே, இனிமேலாவது உடனடியாகக் குடிநீர் திட்டத்தைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இன்வெஸ்டிகேஷன் சார்ஜ் கட்டிவிட்டால் துரிதமான நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, இந்தத் திட்டம் கவர் செய்யக்கூடிய இடங்கள் மிகவும் வறட்சியான பகுதிகள். தண்ணீருக்குக் கஷ்டமான இடங்கள், அங்கே இருக்கிற பஞ்சாயத்துக்களுக்கு நிதிநிலை மிகவும் மோசமாக இருக்கிறது. ஆகையால் இன்வெஸ்டிகேஷன் சார்ஜுக்கு எக்சம்ஷன் கொடுத்து இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசாங்கம் பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : நான் சொன்னது சர்க்காருடைய பொதுக் கொள்கை. உறுப்பினர் அவர்கள் கேட்டதுபற்றி இப்போது முடிவு செய்ய முடியாது.

* 499 Q.—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether there is any proposal under the consideration of the Government to provide protected water supply to Ponneri Village in Palappallam town Panchayat, Vilavancode taluk ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இல்லை.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, இந்தப் பகுதி மிகவும் வறட்சியான பகுதியாக இருக்கிறது. அங்கே அரிசனங்கள் அதிகமாக இருக்கிறார்கள். நீண்ட காலமாக இந்தத் திட்டம் ஆலோசனையில் இருந்து கொண்டிருக்கிறது. ஆகையால் இந்த நேரத்திலாவது அங்கே இருக்கிற அரிசன மக்களுக்கும் விவசாய மக்களுக்கும் தண்ணீர்ப் பஞ்சத்தைப் போக்க, இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசாங்கம் முன்வருமா ?



மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, அந்த பொன்னேரி கிராமத்திற்கு என்று கேட்கவில்லை. பாலப்பள்ளம் பேரூராட்சி அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்குரிய ஆய்வுக் கட்டணத்தைக் கட்டினால் இந்தக் குடிநீர்த் திட்டத்தை எடுத்துக் கொள்ளலாம்.

*Cattle nuisance in Madras City.*

* 500 Q.—Thiru K. M. SUBRAMANIAM : Will the Hon. Minister for Local Administration be pleased to state the steps taken to prevent the cattle nuisance in the City of Madras ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :

ஓர் விரிவான அறிக்கை @ இந்த அவையின் முன் வைக்கப்பெற்றுள்ளது.

Thiru K. M. SUBRAMANIAM : Sir, we are concerned more about the stray cattle that are going about in the City and a lot of accidents are happening on account of that also are the Government aware that there are two lorries owned by the Corporation for this purpose and those lorries are not doing any work. So, will the Government seriously think of stopping the stray cattle going about in the city and that is causing considerable inconvenience to the school-going children and motor transport vehicles, etc. ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, அதற்கான ஒரு திட்டத்தைத் தீட்டி, நம்முடைய மாநகராட்சியும், காவல்துறையும் சேர்ந்து இந்தக் கஷ்டத்தைப் போக்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். தற்போது பால் பண்ணை மூலமாக ஒரு பொது இடத்தை அமைத்து, அங்கே மாடுகளைக் கட்டி, வைத்து, அதற்கு நிர்வாகச் செலவாக மாதந்தோறும் ஒரு சிறு தொகை வசூலிக்கலாம் என்ற ஒரு யோசனை இருக்கிறது.

அறிக்கையில் சொல்லியிருப்பதுபோல, மாநகராட்சி காவல்துறைக்கு 4 இழுவைகளையும் (டிராக்டர்களையும்) கொடுத்திருக்கிறது. மேலும், தேவைப்பட்டால் கொடுக்க முடிவு செய்திருக்கிறது. சட்டப்படி மாநகராட்சி இதற்கான நடவடிக்கை எடுக்க வழியில்லை. ஆனால், 1888-ம் ஆண்டு நகர காவல் சட்டத்தின்படி போலீசார் நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்கள் முடிந்த வரையில், அவர்களிடம் இருக்கின்ற மாடுகளைக் கட்டிவைக்கின்ற இடவசதியைப் பொறுத்து, மாடுகளைப் பிடித்து வைத்து, அதற்கான கட்டணமும் வசூல் செய்கிறார்கள். இந்தத் தண்டனை தான் இப்போது இருக்கிறது. அதிகத் தண்டனை அளிப்பது பற்றி ஆராயப்பட்டு வருகிறது.

---

@ 215ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

திரு. த. சோனையா : தலைவரவர்களே, சில நகரங்களில் பொலி காளை மாதிரி சில மாடுகள் யாரும் கேட்பாரற்றுத் திரிகின்றன. அது எங்கு வேண்டுமானாலும் போகும். அது யாருக்கும் சொந்தமில்லை. அப்படித் திரிகின்ற மாடுகளைப் பிடித்து ஏலம் போடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அது கோயில் மாடாக இருக்கும். அதுபற்றி என்ன நடவடிக்கை எடுப்பது என்பதற்கான தகவல் இல்லை.

## கண்ணம்பாளையம்—கலங்கல் சாலை.

*501 வினா.—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறைஅமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்ட கண்ணம்பாளையம்—கலங்கல் சாலைப்பணி இன்னும் பூர்த்தியாகாமல் இருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா ?

(இ) பொதுமக்களிடம் இருந்து விண்ணப்பம் வந்ததா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :

(அ) சூலூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கண்ணம்பாளையம்—கலங்கல் சாலை, கிராமப்புற வேலை வாய்ப்பு விரைவுத் திட்டத்தின் கீழ்தான் போடப்பட்டதேயொழிய வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் அல்ல. இச் சாலைப்பணி இப்பொழுது பூர்த்தி செய்யப்பட்டு விட்டது.

(இ) இல்லை.

## *House-sites for Harijans in Tiruttani taluk.*

* 502 Q.—Thiru A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state whether there is any proposal under the consideration of the Government to provide house-sites for Harijans in N. N. Kandigai Colony, Tiruttani taluk.

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம் : ஆம். ஏற்கெனவே, 9-2-1975-ந் தேதி அன்று, 45 வீடு மனையற்ற அரிசனங்களுக்குப் பட்டாக்கள் வழங்கப்பட்டுவிட்டன.





* 503 Q.—Thiru A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state whether there is any proposal under the consideration of the Government to provide house-sites for Harijans in Rajapadmapuram Colony in Tiruttani taluk ?

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம் : வீடு மனையற்ற 69 அரிசனங்களுக்கு, ராசபத்மபுரத்திலுள்ள, ச. எண். 44/1ல் உள்ள புறம்போக்கு நிலத்தில், 10-12-1974 அன்று பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆகவே, இது குறித்து நில ஆர்ஜிதம் செய்ய வேண்டிய தேவை இல்லை.

## தொழுப்பேடு அரிசனக் குடியிருப்பு.

*504 வினா—திரு. வை. பாலசுந்தரம் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அச்சிறுபாக்கம் தொகுதியில் தொழுப்பேடு அரிசன குடியிருப்பு பகுதியில் அரிசன வீடு கட்டும் வாரியத்தின் மூலம் வீடு கட்டும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம் :

(அ) ஆம்.

(இ) தொழுப்பேடு அரிசனக் குடியிருப்பு பகுதியில் அரிசனங்களுக்காக 100 வீடுகள் கட்டும் பணியைத் தமிழ் நாடு அரிசன வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகம் மேற்கொண்டுள்ளது.

## அச்சிறுபாக்கத்தில் அரிசன மாணவர் விடுதி.

*505 வினா—திரு. வை. பாலசுந்தரம் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அச்சிறுபாக்கத்தில் அரிசன மாணவர்கள் விடுதிக் கட்டடம் கட்டும் செயற் குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம் :— (அ) ஆம்.

[1975 மார்ச் 31

(இ) தமிழ் நாடு அரிசன வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகம் கட்டிட வேலையை மேற்கொண்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் துவக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

திரு. ஆலடி அருணா : தலைவர் அவர்களே, ஒரு விளக்கம். மாண்புமிகு உறுப்பினர் வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள் தன்னுடைய சட்டப்பேரவை உறுப்பினர் பதவியை ராஜிநாமா செய்துவிட்டதாக சட்டமன்ற விடுதியில் பேசப்படுகிறது. அது சரியான தகவலா ? அதுபற்றித் தங்களுக்கு ஏதாவது அறிக்கை வந்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

## 2. அறிவிப்புகள்.

### (அ) உறுப்பினர் வீரபாண்டி திரு. எஸ். ஆறுமுகம் ராசிநாமா குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சேலம் மாவட்டம் வீரபாண்டி தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட இம்மன்ற உறுப்பினர் திரு. எஸ். ஆறுமுகம் அவர்கள் தனது உறுப்பினர் பதவியை இராஜிநாமா செய்து, எனக்கு 26—3—75 அன்று கடிதம் எழுதியுள்ளார். அக்கடிதம் 29—3—75 அன்று எனக்குக் கிடைத்தது. அன்னாரின் பதவி விலகல் கோரிக்கையினை இந்திய அரசியல் சட்டம் 190 (3) (பி) பிரிவின்படி, இந்தக் கடிதம் எழுதியது அவர்தானா இல்லையா என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டிய நிலைமை எனக்கு இருப்பதால் தொலைபேசிமூலம் தொடர்புகொண்டு பேசியதில், அது உண்மைதான் என்று தெரிய வந்ததால், அவருடைய இராஜிநாமாவை நான் ஏற்றுக்கொண்டேன் என்பதை இம் மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : சட்டப்படி தந்த தகவலாக இருப்பதால் கேட்கிறேன், என்ன காரணத்தால் இராஜிநாமா செய்ய நேரிட்டது, ஏதாவது ஸ்டேட்மென்ட் தந்திருக்கிறார்களா, அதன் விபரத்தை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டப்படி அவர்கள் ஏதாவது காரணம் கொடுத்திருந்தாலும் அந்தக் காரணத்தை அவையிலே தெரிவிக்க வேண்டுமென்ற நிலைமை இல்லை.



1975 மார்ச் 31]

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, தொலைபேசியில் தொடர்பு கொண்டு, வந்த கடிதம் உண்மை என்று தெரிந்து, ஏற்றுக் கொண்டதாகச் சொன்னீர்கள். சட்டமன்ற விதிப்படி தொலைபேசியில் தொடர்புகொள்ளும் ஏற்பாடு இருக்கிறதா ? அதை விட................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கொடுத்த கடிதம் உண்மையா இல்லையா என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டிய பொறுப்பு எனக்கு இருக்கிறது. அதனால் தொடர்பு கொண்டு, தெரிந்துகொள்ளப் பட்டது.

திரு. நா. வீராசாமி : தொலைபேசியில் சில சமயங்களில் வேறு யாராவதுகூட அவர்மாதிரியே பேசலாம். சமீபத்தில் இந்திராகாந்தி நகர்வாலா விவகாரத்தில்கூட, இந்திராகாந்தி போலவே (மணி அடிக்கப்பட்டது).

[முற்பகல் 9-30]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது அவையுரிமைக் குழுவின் தலைவர் மாண்புமிகு திரு. நா. கணபதி அவர்கள் அக் குழுவின் அறிக்கையை அளிப்பார்கள்.

## 4. அறிக்கை அளித்தல்

### திரு. அப்துல் சலாம் "மக்கள் குரல்" பத்திரிகை ஆசிரியர் ஆகியோர் மீது எழுப்பப்பட்ட உரிமை மீறல் வழக்கு மீதான அவையுரிமைக் குழுவின் அறிக்கை.

மாண்புமிகு திரு. நா. கணபதி : அரகண்டநல்லூரைச் சேர்ந்த திரு. அப்துல் சலாம், "மக்கள்குரல்" பத்திரிகை ஆசிரியருக்கு விடுத்த வழக்குரைஞர் அறிக்கையிச் பேரவைமதிப்பீட்டுக் குழுவின் தலைவர் மீதும், உறுப்பினர்கள் மீதும் களங்கம் கற்பிக்கும் வகையில் குறிப்பிட்டிருப்பது பற்றிய அவையுரிமைமீறல் வழக்கு மீதான அவையுரிமைக் குழுவின் அறிக்கையை அளிக்கிறேன்.

திரு. க. உரொ. எட்மண்ட் : நம்முடைய பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் கொடுத்திருக்கிற அவையுரிமைக் குழுவின் அறிக்கையை இந்த அவை ஏற்றுக்கொள்வதற்கு முன்னால்..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பிரசென்டேஷன்தான். அதன் மீது விவாதிக்க வேண்டுமென்று சொன்னால் பின்னர் நாள் குறித்து விவாதிக்கலாம்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : சார் எங்கள் கட்சியின் சார்பில் இரண்டு அட்ஜர்ன்மெண்டு மோஷன்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தத் துறை அமைச்சர் வரவில்லை. வந்திருந்தால் எடுத்துக்கொண்டிருக்கலாம்.

திரு. க. உரொ. எட்மண்ட் : நானும் கூடக் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதையெல்லாம் என் அறையில் வந்து கேட்க வேண்டும்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: இரண்டு அட்ஜர்மெண்டு மோஷன்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஒன்று உணவுத் துறை பற்றியது. மற்றொன்று மருத்துவத் துறை. உணவுத்துறை அமைச்சர் இங்கே இருக்கிறார்கள். இது என்ன ஆயிற்று என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கொடுத்த இரண்டில் ஒன்றுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தகவல் உங்களுக்கு வந்து சேரும். மக்கள் நல் வாழ்வுத்துறையைச் சேர்ந்த மற்றொன்று, அந்த அமைச்சர் அவையில் இல்லாததால், எடுத்துக் கொள்ளப்படவில்லை.

## 5. 1975–76 ஆம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

### (அ) நிதிக் கோரிக்கை எண் 4—பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன்:

"நிதிக் கோரிக்கை எண் 4 — பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும், தீர்வைகளும் — நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 3,98,10,000 க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".



துறையைப் பார்க்கலாம் என்கிற பொறுமை உணர்ச்சி இல்லாது பலரும் நடந்துகொள்கிற நிலையில்—இந்தச் சபையை நடத்திப் போவதற்கு அசாத்திய பொறுமை இருந்தால்தான் முடியும்.

இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்துள்ளவர்களைக் கேட்கிறேன்—பாராளுமன்றத்திலோ அல்லது வேறு மாநில சட்ட மன்றங்களிலோ எவ்வளவு அவசரத் தீர்மானங்களை அனுமதித்திருக்கிறார்கள்? பார்க்க வேண்டும். அதுபற்றி சில தகவல்களை அவர்கள் சொன்னால் நன்றாக இருக்கும். மெஜாரிட்டி அரசாங்கம் நடந்துகொண்டிருக்கிறபோது அவசரத் தீர்மானம் எதையும் எங்கும் அனுமதிக்கப்படுவதில்லை. அதேபோன்று இங்கே எப்படி அவசர முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை சுருக்கமா விளக்கச் சொல்லி தலைவர் அனுமதித்தால்கூட உடனே ஆரம்பித்துவிடுகிறார்கள். அதை உடனே

(பிற்பகல் 12-30)

தடுப்பதற்கு நீங்கள் அவ்வளவு நாழி பேசக்கூடாது என்று சொன்னால், பேசக் கூட விடமாட்டேன் என்கிறீர்களே என்று கோபித்துக்கொள்கிறார்கள். இப்படித் தான் சபையின் நடவடிக்கைகள் இருக்கின்றன. அதே மாதிரி ஒழுங்குப் பிரச்னைகளை எடுத்துக்கொண்டால், ஒழுங்குக்கும் அதற்கும் சம்பந்தமேயில்லையென்ற விதத்தில், சபையில் ஒழுங்குப் பிரச்னைகள் கிளப்பப் படுகின்றனவே தவிர, ஒழுங்குப் பிரச்னைகளை ஒழுங்காகக் கிளப்பியதை நான் பார்ப்பதில்லை.

யார் ஆண்டாலும் சில காரியங்கள் நடைபெற வேண்டும், சட்டங்கள் இயற்றப்பட வேண்டும். இயற்றப்பட்ட சட்டங்களிலே, சோடைகள் இருக்கின்றனவா என்பதைப் பரிசீலிக்க வேண்டுமானால், நடவடிக்கைகள் எப்படி இருக்க வேண்டுமென்பதை அங்கத்தினர்கள் கொஞ்சம் பரிசீலித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எந்த அளவுக்கு நாம் சபையின் விதிகளுக்குக் கட்டுப்பட்டு நடக்கிறோமோ, அந்த அளவுக்குத்தான் சபாநாயகர் சபையின் நடவடிக்கைகளை அமுல்படுத்த முடியும் என்ற அடிப்படையிலே, இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் பொருத்தமற்றது என்பது மட்டுமல்ல, தேவையில்லாததுமாகும். கொள்கைகள் இல்லாமல் கட்சிகள் இருக்கின்றன.

பல்வேறு கட்சிகள், கொள்கைகளைக் காற்றுவாக்கில் விடுகின்றன. இன்றைக்கு அவர்களுடைய ஒரே கொள்கை, கலைஞர் ஆட்சி போக வேண்டுமென்ற அடிப்படையில்தான்—கொள்கைகள் விமர்சிக்கப்படுகின்றன, சாடப் படுகின்றன, விமர்சனங்கள் நடத்தப்படுகின்றன. இந்த நேரத்தில் யார் சபாநாயகராக இருந்தாலும் சபையை எப்படி நடத்துவது என்பதுதான் பிரச்னையாக இருக்கிறது.

இன்றைக்குச் சபாநாயகர், மிகத் திறமையோடு, பொறுமையோடு, நல்ல முறையில் அவையை நடத்தி வெற்றி பெற்றுக்கொண்டிருக்கிறார். எதிர்க்கட்சிகளுக்கும் வாய்ப்பு கொடுத்து, அவர்களுக்கும் சலுகைகளைக் கொடுத்திருக்கிறார் என்றுதான் என்னுடைய கருத்தைத் தெரிவிக்கிறேன். இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் சபைக்கு நல்ல மரபை ஏற்படுத்துகிற தீர்மானம் என்று நான் கருதவில்லை. துவேஷத்தின் அடிப்படையில், அரசாங்கத்தைக் காட்டிவிட, கொள்கையில்லாத எதிர்க்கட்சிகள் கொண்டு வந்திருக்கிறது என்றே கருதுகிறேன். சபை நடைபெறவில்லையென்றால், எப்படி நடைபெறும்? அவசரப்பட்டுத்தான் இந்தப் பிரேரணையைக் கொண்டு வந்தார்கள் என்று தெரிவித்து, இந்தத் தீர்மானத்தை எதிர்த்து, அதே நோத்தில் அவருக்கு என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்து நான் அமர்கிறேன்.

**திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்பொழுது அவைமுன் பேரவைத் தலைவர் கோவிந்தன் அவர்கள் மீது வந்திருக்கக்கூடிய இந்த நம்பிக்கையின்மையென்றப் பிரேரணையின் மீது, என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை நான் சொல்ல விழைகின்றேன்.

சாதாரணமாக, இந்தச் சபையிலே இருக்கக்கூடியவர்கள் வேறு எந்தப் பிரேரணையைப்பற்றி பேசுவதைவிட, இத்தகைய ஒரு பிரேரணையைக் கொண்டு வரும்போது, அதற்கு முன்பாக இந்தச் சபைக்கு அதைக் கொண்டு வருபவர்கள் பலமுறை சிந்தித்துச் செய்ய வேண்டிய ஒரு விஷயமாகும் என்பதை இந்த நேரத்திலே நான் நினைவுபடுத்திக் கூறவிரும்புகிறேன். ஏனென்று கேட்டால், நாமெல்லோரும் சேர்ந்து எந்த முறையிலே இந்த அவையை நடத்திச் செல்கிறோம் அல்லது நடத்திக் காட்டுகிறோம் என்பதை—நாம் நம்முடைய இந்த அவைக்குத் தலைவராக இருக்கக்கூடிய ஒருவர்—அவருடைய தீர்ப்பை எந்த முறையிலே பார்க்கிறோம் என்பதைப் பொருத்துத்தான் இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லாமலிருக்க முடியவில்லை.

(திரு. கு. காமாட்சி தலைமை)

நம்முடைய ஜனநாயக மரபிலே மூன்று அங்கங்களாக இருக்கக் கூடிய சர்க்கார், சட்ட சபை, நீதிமன்றம் இவைகளுக்கும் மேலாக இந்த அவையிலே தலைவராக இருக்கக்கூடியவர் நீதிமானாக, அவருடைய தீர்ப்பாலே விளங்குகிறார்கள் என்ற பெயரை, நம்முடைய சபை அத்தகைய பாரம்பரியம் கொண்ட ஒருவரை இங்கே எப்பொழுதும் வைத்திருக்கிறது என்ற எண்ணத்தை இந்தத் தமிழகத்திலே இருக்கக்கூடிய நாம் எல்லோரும் உணரும்படியாக, இந்த அவைத் தலைவர் நடந்துகொள்ள வேண்டுமென்பதிலே யாருக்கும் எந்தவிதமான கருத்து வேறுபாடும் இருக்க முடியாது.





இரண்டாம் முறையாக, இந்த அவையின் முன்பாக வந்திருக்கக் கூடிய இந்தத் தீர்மானம் இருக்கிறதே, இதிலே பேசியவர்கள் எல்லாம் சொன்ன கருத்துக்களையெல்லாம் நான் மொத்தமாகக் கூர்ந்து பார்த்தேன். அந்தக் கருத்துக்களிலே முக்கியமாக இருக்கக்கூடிய விஷயங்களெல்லாம் ஒத்திவைப்புப் பிரேரணைகள் இந்த அவையின்முன் கொடுக்கப்படும்போது அவைகள் இந்த அவைக்கு வாராமலே, அங்கே, அறையிலேயே தள்ளப்பட்டு விடுகின்றன என்பது ஒரு குற்றச்சாட்டு.

அதே போல், இந்த அவையிலே பேசக்கூடிய விஷயங்களிலே பல விஷயங்களை இந்த அவைக் குறிப்பிலே இருந்து நம்முடைய தலைவர் அவர்கள் நீக்கி விடுகிறார்கள் என்பது இரண்டாவது குற்றச்சாட்டு.

அதே போல், தலைவர் அவர்கள் சொல்லக்கூடிய தீர்ப்பு, அந்த இடத்திலேயிருந்து கொடுக்கக்கூடிய அந்தத் தீர்ப்பு இருக்கிறதே அது நடு நாயகமான முறையிலே இல்லை—அது ஆளுங் கட்சிக்குச் சாதகமாக இருக்கிறது என்பது சொல்லப்பட்ட குற்றச்சாட்டுக்களிலே முக்கியமான மூன்றாவது குற்றச்சாட்டாகும். அத்தகையக் குற்றச்சாட்டுக்களையெல்லாம் மனதிலே வைத்துக் கொண்டு எதிர்த் தரப்பினைச் சேர்ந்தவர்கள் இந்த நம்பிக்கையின்மைப் பிரேரணையை இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள்.

இந்தப் பிரேரணையைப்பற்றி பேசும்பொழுது ஒரே ஒரு விஷயம் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதும், பேசப்பட்டதுமான அந்த விஷயம்பற்றி ஒரு கருத்தைச் சுட்டியதைப்பற்றி நானும் திருப்பி சொல்ல ஆசைப்படுகிறேன். இங்கே இருக்கக்கூடிய மாண்புமிகு அம்மையார் அவர்கள் இங்கே இந்த அவையிலே தலைவராக இருந்து ஒரு குறிப்பிட்ட விஷயத்தைப் பற்றி பேசும்பொழுது அவர் கொடுத்த ஒரு தீர்ப்பு ஆளுங் கட்சிக்குச் சாதகமாக இருந்தது என்ற ஒரு கருத்தை எதிர்க்கட்சியிலே உள்ளவர்களுடைய மனதிலே ஏற்படுத்தியுள்ளது என்பதை அவர்கள் எல்லாம் சொன்னார்கள். அதற்கு, அவர்கள் அந்த ஸ்தானத்திருந்து கொடுக்கும்போது, என்னுடைய மனதிலே இது ஒரு நியாயமான கருத்து, நியாயமான ஒரு முடிவு—நான் தெரிந்து உருவாக்கிய, ஆராய்ந்து என் மனசாட்சிப் பிரகாரம் அந்தத் தீர்ப்பை வழங்கினேன் என்று சொன்னார்கள். அவர்கள் சொல்லியதை நான் அப்படியே ஏற்றுக்கொள்கிறேன். அந்த ஸ்தானத்திலிருந்து அவர்கள் சொல்லும்போது அவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் கூட, அவர்கள் சொன்ன தீர்ப்பு ஆளுங் கட்சிக்குச் சாதகமாக இருந்தது என்பதை நாம் ஒப்புக்கொள்கிறோம். ஆனால், மனசாட்சிப் பிரகாரம் நான்

சொன்னேன் என்ற தீர்ப்பு இருக்கிற ஆளும் கட்சிக்குச் சாதகமாக இருக்க வேண்டுமென்று எண்ணத்துடன் இல்லையென்பதை இந்த அவை ஏற்றுக்கொள்ள வேண்டும். அதிலே யாரும் மறுப்பு சொல்ல முடியாது.

நம்முடைய புலவர் மீது சொல்லப்பட்ட பல குற்றச்சாட்டுக்களிலே முக்கியமாக இருக்கக்கூடிய குற்றச்சாட்டுக்களிலே அவர்கள் தன்னுடைய கடமையை நிறைவேற்றக் கூடிய நேரத்திலே அவர்கள் தன்னுடைய தீர்ப்பை எல்லாம் ஆளும் கட்சிக்குச் சாதகமாகச் சொல்லியிருக்கிறார்கள் என்பது ஒன்றாகும். அந்தக் குற்றச்சாட்டைப்பற்றி, நான் பலமுறை அந்தக் குற்றச்சாட்டு சரிதானா, அவர்கள் சொன்ன குற்றச்சாட்டில் உண்மையில் நியாயபூர்வமாக தன்னுடைய கடமையைச் செயல்படுத்தியதன் காரணமாக, அவர்கள் சொன்ன அந்தத் தீர்ப்புகள் எல்லாம் ஆளும் கட்சிக்குச் சாதகமாக அமைய வேண்டுமென்று அவர்கள் நடந்திருந்தால், நானும் எதிர்க் கட்சிகளுடன் சேர்ந்து சுட்டிக்காட்டியிருப்பேன்—நீங்கள் வேண்டுமென்றே ஆளும் கட்சிக்குச் சாதகமாக, இன்டன்ஷனலாக சில தீர்ப்புகள் கொடுத்திருக்கிறீர்கள், உங்கள் கடமைகளிலிருந்து நீங்கள் மீறியிருக்கிறீர்கள், மாறியிருக்கிறீர்கள் என்று நான் சொல்லி இருப்பேன். எப்படியிருந்தாலும், இங்கே இருக்கக்கூடியவர்களுடைய மனதிலே நீங்கள் அளித்தத் தீர்ப்புகள் இவைகள் எல்லாம் அந்த ஸ்தானத்திலேயிருந்து கொண்டு மனசாட்சிப்படி எதிர்க் கட்சிகளுக்கு விரோதமாக அந்தத் தீர்ப்புகள் எல்லாம் இருக்கின்றன—ஆளும் கட்சிக்குச் சாதகமாக ஒரு எண்ணத்தை அவர்கள் மனதிலே ஏற்படுத்தியிருந்தாலும், நாம் அதற்கு மேற்கொண்டு, அந்தத் தீர்ப்புகளை வேண்டுமென்றே நீங்கள் கொடுத்திருப்பீர்களா என்று பார்க்கும்போது, நிச்சயமாக இல்லையென்றே நாம் சொல்லவேண்டும்.

நாம் அதைத்தான் சிந்திக்க வேண்டும். ஏன் என்று கேட்டால் அந்த ஸ்தானத்திலிருந்து சொல்லக்கூடிய தீர்ப்புகள் எல்லாம் நமக்குச் சாதகமாக இருக்கும் அல்லது இன்னொருவருக்கு சாதகமாக இருக்கும் என்றெல்லாம் நாம் நினைத்துப் பார்க்க முடியாது. யாராவது ஒருவருக்குச் சாதகமாக இருக்கும்; யாராவது ஒருவருக்கு பாதகமாக இருக்கும். ஆகவே, ஒவ்வொரு முறையும் தீர்ப்புக் கொடுக்கும்போது உங்கள் மனதிலே அந்தரங்கமாக ஏதாவது நோக்கத்தை வைத்துக்கொண்டு தீர்ப்புக் கொடுக்கப்பட்டதா என்று மறுமுறையும் மறுமுறையும் சிந்தித்துப் பார்த்தால் அப்படி ஒன்றும் இல்லை. புலவராக இருக்கக்கூடிய ஒருவர், நக்கீரர் போன்றவர்கள் இறைவனை எதிர்த்து நியாயத்தைச் சொல்லியிருக்கக்கூடிய நிலைமையில் அந்த வழியில் வந்தவர்கள் தங்கள் கட்சிக்குச் சாதகமாக தீர்ப்புக் கொடுக்க வேண்டுமென்ற எண்ணம் அவர்களுக்கு இருக்காது என்று நினைக்கிறேன்.





(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இந்தச் சபையிலே இருக்கக்கூடியவர்கள் ஒரு சாராருக்குச் சாதகமாக அல்லது பாதகமாக தீர்ப்பு வந்தாலும்கூட நிச்சயமாக அந்த எண்ணத்தில் அது கொடுக்கப்படவில்லை என்பதை நினைப்பதற்கு இது ஒரு சந்தர்ப்பமாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

பேசப்பட்ட பல விஷயங்களை எல்லாம் மொத்தமாக எக்ஸ்பஞ்ச் செய்து விட்டார்கள் என்ற குற்றச்சாட்டுச் சொல்லப்பட்டது. இவையெல்லாம் நம்முடைய விதிமுறைகளிலே இன்னும் சில திருத்தங்களை நாம் செய்ய வேண்டிய அவசியத்திலே இருக்கிறோம் என்பதைத்தான் காட்டுகிறது. சபாநாயகராக இருக்கக்கூடிய ஒருவர் அவர் செயல்படக்கூடிய விதத்தை கட்டுப்படுத்தக்கூடியவர்கள் இந்த அவையிலே இருக்கக்கூடியவர்களாகிய நாம்தான். நாமேதான் எப்படி இந்த அவையை நடத்த வேண்டுமென்று நமக்கே சில விதிமுறைகளை வகுத்துக்கொண்டு கொடுத்து வைத்திருக்கிறோம். அந்த விதிமுறைகளிலே அறையிலே தள்ளலாமா அவையிலே தள்ளலாமா என்பதைப் பற்றித் தெளிவாக இல்லை, அதனால் பல சர்ச்சைகள் வருகின்றன, இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு இனிமேலாவது நம்முடைய விதிமுறைகளிலே எல்லாம் என்ன என்ன மாறுதல்களைச் செய்ய வேண்டுமோ அவற்றைச் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம். அதற்கு இது ஒரு வாய்ப்பாக இருக்கிறது என்று சொல்லி இந்தப் பிரேரணைக்கு எந்தவிதமான அவசியமும் இல்லை என்று சொல்லி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* <u>திரு. நா. வீராசாமி</u>: தலைவர் அவர்களே, மாண்புமிகு புலவர் அவர்கள் மீது எதிர்க் கட்சியினர் கொண்டுவந்திருக்கின்ற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்த்துச் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். புலவர் அவர்களே, உங்களைப் பார்க்கும்போது . . .

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u>: என்னைப் பார்த்துப் பேசுங்கள்.

<u>திரு. நா. வீராசாமி</u>: மாண்புமிகு புலவர் அவர்களைப் பார்க்கும்போது எனக்குப் பரிதாபமாக இருக்கிறது. ஒரு பழமொழி சொல்வார்கள், பாத்திரம் அறிந்து பிச்சையெடு என்று. உங்களை ஆதரிப்பதற்கு நாங்கள் இருநூறு பேர்கள் இருக்கிறபோது உங்களை எதிர்க்கிற 35 பேர்களுக்கு நீங்கள் எவ்வளவோ சலுகைகளையெல்லாம் கொடுத்துப் பார்த்தீர்கள், அப்படி நீங்கள் கொடுத்தும் இப்படி ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்திருக்கிறதே என்று வேதனைப்படுகிறேன். நம்முடைய சட்டப் பேரவை விதிமுறைகளை வைத்துக்

கொண்டு ஏதாவது விரோதமாக நடந்துவிட்டீர்களோ என்று நான்கூடப் பார்த்தேன், ஆனால் சட்ட மன்றத்திற்கு வெளியே நடந்த நிகழ்ச்சியை எடுத்துக்கொண்டு, ஆகவே நம்பிக்கையில்லை என்று சொன்னார்கள்.

அப்படியே வைத்துக்கொண்டாலும், அவர்கள் சொன்னார்கள் பட்டா வாங்கினார்கள் என்று. இந்த நாட்டிலே பட்டா வாங்குவது என்ன பாவமா? பட்டா வாங்கியது உண்மைதான், ஆனால், எங்களுடைய தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்ன சொன்னார்கள், யார் பட்டா வாங்கியிருந்தாலும் திருப்பிக் கொடுத்துவிட வேண்டுமென்று சொன்னார்கள், அதற்குப் பிறகு அவர்கள் திருப்பிக் கொடுத்துவிட்டார்கள். ஆனால், இப்போது டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னார்கள், திருமதி சத்தியவாணி முத்து அம்மையார் அவர்களும் சொன்னார்கள். நம்முடைய புலவர் அவர்கள் திருப்பிக் கொடுத்து விட்டார்கள். அதேபோல் டாக்டர் ஹாண்டே அவர்களுடைய தலைவர் திரு. எம்.ஜி.ஆர். அவர்களிடம் திருப்பிக் கொடுத்து விடுங்கள் என்று சொல்வாரா என்று கேட்க விரும்புகிறேன் . . .

**திரு. க. உரா. எட்மண்ட்:** ஒரு தவறான செய்தியை திரு. வீராசாமி அவர்கள் கூறுகிறார்கள். பட்டா கொடுப்பது என்பது வேறு, குத்தகைக்குக் கொடுப்பது என்பது வேறு.

**திரு. கோவை செழியன்:** சத்தியா ஸ்டுடியோவை . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சொல்லாததை நீங்கள் ஏன் சொல்கிறீர்கள்?

**திரு. நா. வீராசாமி:** திருமதி சத்தியவாணி முத்து அம்மையார் அவர்கள் குழந்தைகள் காப்பகம் என்று வைத்து அதற்கு நிலம் வேண்டுமென்று கேட்டார்கள். நான்கு நாட்களுக்கு முன்பு நான் போய்ப் பார்த்தேன். அங்கே காப்பகமும் இல்லை குழந்தைகளும் இல்லை. அந்த நிலத்தை, அங்கே குழந்தைகள் இல்லாத காரணத்தினாலே, திருப்பிக் கொடுப்பார்களா?

**திருமதி சத்தியவாணி முத்து:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் வழக்கமாகப் பேசுவார், அப்படிப் பேசுகிறார் என்று எடுத்துக்கொள்கிறேன், நான் அதற்காக வருத்தப்படவில்லை. அரிசனங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிலத்தை அவர்கள் ஆக்கிரமித்துக்கொண்டு வந்திருக்கிறார்கள். நான் அண்ணாவின் பெயரால் அனாதை இல்லம் நடத்துவதற்காக கேட்டேன். அதை யார் வேண்டுமானாலும் வந்து பார்த்துக்கொள்ளலாம். அங்கே அனாதை இல்லம் இருக்கிறதா, பிள்ளைகள் இருக்கிறார்களா, முறைப்படி நடக்கிறதா என்று பார்க்கலாம். நான் முறைப்படி அரசாங்கத்தைக் கேட்டு முதலமைச்சர் அவர்களையும் வருவாய்த் துறை அமைச்சரையும் கேட்டு சில விதிமுறைகளுக்கு உட்பட்டு கொடுக்கப்பட்ட நிலம்தான் அது. அதை நான் ஏன் திருப்பித் தர வேண்டும்? போடப்பட்டிருக்கிற விதிமுறைகளுக்கு மீறியிருந்தால் அதைத் திருப்பி எடுத்துக்கொள்கிற உரிமை அரசுக்கு இருக்கிறது. ஆனால் புலவர் அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்காகக் கொடுத்த நிலத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு இந்த அரசு பட்டா கொடுத்திருக்கிறது. அண்ணா தி.மு.க. கட்சித் தலைவர் . . .



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்கள் வரையிலும் சொல்லுங்கள். அந்தத் தலைவர்பற்றிப் பேச வேண்டாம்.

**திரு. நா. வீராசாமி:** நான் சொல்வது புலவர் அவர்கள் திருப்பிக் கொடுத்து விட்டார்கள். அப்படித் திருப்பிக் கொடுக்கவில்லையென்றால் அவரோடு சேர்ந்து நானும் எந்தத் தண்டனைக்கும் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மன்றத்திலே புலவர் மீது 35 பேர்கள் நம்பிக்கையில்லை என்று சொல்கிறார்கள். ஆனால் செய்யாறு தொகுதி மக்கள் உங்களை மூன்று முறைகள் நம்பிக்கை வைத்துத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அவருடைய குடும்பம் பெரிய குடும்பம். அவருக்கு 12 ஏக்கர் நிலம் இருந்தது, அதிலே 10 ஏக்கர் நிலத்தை விற்றார்கள், 2 ஏக்கர் நிலம் இருந்தது, அதற்குப் பின்னால் நிலம் கேட்டார்கள், வாங்கிய நிலத்தைத் திருப்பிக் கொடுத்து விட்டார்கள்.

திருமதி சத்தியவாணிமுத்து அம்மையார் அவர்கள் பதவி கொடுத்தால்தான் சட்ட மன்றத்திற்கு வருவேன், பதவி கொடுக்கிறார்களா என்று அவர்கள் கேட்டதாக சொன்னார்கள். அது உண்மையா இல்லையா என்பது வேறு விஷயம். பதவி இல்லையென்று சொன்னவுடனே புதிய கட்சி ஆரம்பித்து தி.மு.க.-வை ஒழித்துவிடுகிறேன் என்று சவால் விடுகிறவர்கள் இப்படிப் பேசுவது எனக்கு வேடிக்கையாக இருக்கிறது.

**திருமதி சத்தியவாணிமுத்து:** விவாதம் எங்கேயோ போகிறது. தலைமையின் சர்வாதிகாரத்தை எதிர்த்துதான் நான் விலகி கட்சி ஆரம்பித்தேன். பதவி கொடுத்தால்தான் சபைக்கு வருவேன், இல்லாவிட்டால் வரமாட்டேன் என்று நான் சண்டித்தனம் செய்யவில்லை.

***மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :*** தலைவர் அவர்களே, தலைமையின் சர்வாதிகாரத்தைக் கண்டித்து வெளியே வந்து கட்சி ஆரம்பித்தேன் என்று சொல்கிறார்கள். அமைச்சராக இருக்கும்போதே கண்டித்து வெளியே வந்து இருந்தால் நாடு புகழ்ந்து இருக்கும், பாராட்டியிருக்கும், உலகமே மாலை போட்டிருக்கும்.

***திருமதி சத்தியவாணிமுத்து :*** நான் அன்றைக்குச் சொன்னபோது முஸ்லீம் லீக் உறுப்பினர் லத்தீப் கூட கொஞ்சம் வேகமாகப் பேசினார்கள். ஒரு அரசு போடுகிற உத்திரவை ....

***மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :*** நான் அதைச் சொல்லவில்லை. சர்வாதிகாரத்தை எதிர்த்து வெளியேறி புதிய கட்சி ஆரம்பித்தேன் என்றார்கள். சர்வாதிகாரத்தை அமைச்சராக இருக்கிறபோதே சுட்டிக்காட்டி வெளியேறி இருந்தால் நாடு பாராட்டியிருக்கும், அமைச்சர் பதவியிலிருந்து விலக்கப்பட்டதற்குப் பிறகு சர்வாதிகாரத்தை எதிர்த்து வெளியேறினேன் என்று சொல்வது வேடிக்கையாக இருக்கிறது.

***திருமதி சத்தியவாணிமுத்து :*** கடந்த ஆண்டு பட்ஜெட்டின்போதே நான் அரிசன நல மானியத்திலே பேசும்போது அமைச்சராக இருக்கும்போது நான் பேசினேன். குடும்பக் கட்டுப்பாடு பற்றி ...

MR. DEPUTY SPEAKER : That is not relevant now.

***திரு. நா. வீராசாமி :*** அதேமாதிரி இங்கே அனந்தநாயகி அம்மையார் அவர்கள் சொன்னார்கள். இது என்ன பள்ளிக்கூடமா என்று. பள்ளிக்கூடம் என்றால் பாவம் செய்யக்கூடிய இடமா ?

***திருமதி த. ந. அனந்தநாயகி :*** பாயின்ட் ஆப் ஆர்டர் சார் ...

***திருமதி சத்தியவாணிமுத்து :*** பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் என்னைப்பற்றிச் சிலவற்றைச் சொன்னார்கள். அதற்குப் பதிலைச் சொல்கிறேன். முதலமைச்சரவர்கள் வேறு திசை திருப்பும் வகையில் விவாதத்தை வைத்திருக்கிறார்கள். அதற்கு நான் பதில் சொல்ல வேண்டாமா ?

***மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :*** நீங்கள் சொல்லிவிட்டீர்கள்.

***திருமதி சத்தியவாணிமுத்து :*** இன்னும் சொல்லவில்லையே. நான் பேசிக்கொண்டே இருக்கிறேன், இன்னும் முடிக்கவில்லையே.



***மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :*** இப்பொழுதிருக்கிற பிரச்னையை விட்டுவிட்டுப் பழைய பிரச்னையைப் பேசினால் நேரம் போதாது என்பதற்காகத்தான் கூறுகிறேன்.

***திருமதி சத்தியவாணிமுத்து :*** முதலமைச்சரவர்கள் பழைய பிரச்னையைக் கிளப்பினார்களே, அமைச்சராக இருக்கும்பொழுது ஏன் பேசவில்லை என்று . . .

***மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :*** தலைவரவர்களே, நான் சொல்லாததைக் கற்பனை செய்து பேசக் கூடாது. வீராசாமி அவர்கள் பேசும்பொழுது நீங்கள் ஏன் புதுக் கட்சி ஆரம்பித்தீர்கள் என்று கேட்டார்கள். புலவருக்குப் பதவி தரவில்லை, அதற்காகக் கோபித்துக்கொண்டிருந்தார்கள் என்று சொன்னீர்களே, ஆனால் நீங்கள் புதுக் கட்சி ஆரம்பித்தது ஏனென்று கேட்டார்கள். அப்பொழுது நான் குறுக்கிடு செய்யவில்லை. அம்மையார் அவர்கள், தலைமையின் சர்வாதிகாரத்தை எதிர்த்து நான் புதுக் கட்சி ஆரம்பித்தேன் என்று சொன்னார்கள். அதற்கு நான் சொன்ன பதில், தலைமையின் சர்வாதிகாரத்தை எதிர்த்துப் புதுக் கட்சி ஆரம்பிப்பதாக இருந்தால் அமைச்சராக இருக்கும்பொழுதே புதுக் கட்சியை ஆரம்பித்திருக்கலாமே என்று—அவ்வளவுதான் நான் சொன்னேன்.

***திருமதி சத்தியவாணிமுத்து :*** புலவர் கோவிந்தன் அவர்களுக்குப் பதவி தராமல் இருந்ததற்குக் காரணம் வேறாக இருக்கலாம். என்னைப் பதவி நீக்கம் செய்ததற்கான காரணம் வேறு. நான் அமைச்சராக இருந்தபொழுது ஏதேனும் குற்றமிருந்தால் நீக்கியிருக்கலாம். நான் ஜனநாயக முறைப்படி பேசினேன். லத்தீப் அவர்கள்கூடக் கேட்டார்கள், யார் அந்த அதிகாரி என்று. நான் அதிகாரியைச் சொன்னேன். ஜனநாயகப்படி இந்த ஆட்சி இருக்க வேண்டுமென்று லத்தீப் அவர்கள் கருதியிருந்தால், யார் அந்த அதிகாரி என்று கேட்ட லத்தீப் அவர்கள், அதற்கு நான் விளக்கம் கொடுத்தபிறகு, யார் அந்த அதிகாரி என்று சொன்னதற்குப் பிறகு, அந்த அதிகாரியின்மீது நடவடிக்கை எடுங்கள் என்று எதிர்க் கட்சியிலேயிருந்தால்கூட கேட்டிருக்க வேண்டும். ஆனால் அவர்கள் அப்படிக் கேட்கவில்லை. ஜனநாயக முறைப்படி நான் போராடினேன். ஆனால் அதை ஏற்றுக் கொள்ளாமல் என்னை வெளியேற்றம் செய்தார்கள். நான் வெளியே வந்து கட்சியை ஆரம்பித்தேன். ஆனால் புலவர் கோவிந்தன் அவர்கள் அப்படி ஜனநாயக முறைப்படி கட்சியில் போராடினாரா ? மக்கள் ஓட்டுப் போட்டார்கள் என்றால் . . . (மணியடிக்கப்பட்டது)

[1975 ஏப்ரல் 2

**திரு. நா. வீராசாமி:** இப்படி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் பேசும் பொழுது கூறினார்கள். எதிர்க் கட்சி உறுப்பினர்களையெல்லாம் சார்ஜண்டை விட்டு வெளியே கொண்டு போய்த் தள்ளுகிறீர்கள் என்று கேட்கிறார்கள், புலவரே வந்தா தள்ள முடியும்? விதிமுறைகளை வைத்திருக்கிறோம். யாரை வெளியே போங்கள் என்று தலைமை சொல்லிவிட்டால் வெளியே போய்விட வேண்டியதுதான். இதற்கு ஒரு உதாரணத்தைச் சொல்ல முடியும். நல்லசாமி என்பவர் இங்கு உறுப்பினராக இருந்தபொழுது, முதலமைச்சரவர்கள் பதில் சொல்ல வேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறார்கள். முதலமைச்சரை வற்புறுத்தக் கூடாது என்று அப்போதிருந்த தலைவர் தீர்ப்பு கூறினார். அவர் தொடாநது வறபுறுத்தியதால் உடனடியாக வெளியேற்றினார்கள், உடனே கண்ணியம் மிக்கவரான அந்த உறுப்பினர் உடனே வெளியேறினார். நான் கேட்க விரும்புவதெல்லாம், இந்த மன்றத்திலே எதிர்க் கட்சியிலே இருப்பவர்கள் இன்றைக்கு ஒரு நாளாவது தங்கள் மனச்சாட்சியைத் தொட்டுப் பார்க்க வேண்டும். அப்படித் தொட்டுப் பார்த்தால் தலைவரவர்களே [redacted]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எந்தப் பேரவைத் தலைவர் அப்படி வெளியேற்றினார் என்று சொன்னால் தேவலாம்.

**திரு. நா. வீராசாமி:** தலைவரவர்களே, நான் சொல்வது, 2-8-1966-இல் மாண்புமிகு திரு. செல்லபாண்டியன் அவர்கள் இந்த மன்றத்தில் அவைத் தலைவராக இருந்தார். அந்த நேரத்திலே இப்படிப்பட்ட சம்பவம் நடந்தது. நான் இதைச் சொல்வதற்குக் காரணம் இன்று ஒரு நாளாவது மனச்சாட்சியை அவர்கள் தொட்டுப் பார்க்க வேண்டும். வயதான காலத்திலே புலவர் கோவிந்தன் அவர்களை உட்கார வைத்துவிட்டு, * பேசுகிற பேச்சுக்கள் . . .

**திரு. க. உரொ. எட்மண்ட்:** * என்று சொல்வது . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** * என்று சொல்வது வேண்டாம். I expunge those words. என்பதை எக்ஸ்பஞ்ச் செய்துவிட்டேன்.

**திரு. நா. வீராசாமி:** நான் சொல்வதற்குக் காரணம், எதிர்க்கட்சியிலே இங்கே இருக்கின்ற உறுப்பினர்கள் தர்ணா என்ற பெயரிலே இதே சட்டமன்ற லாபியிலே உள்ளபடியே அவர்கள் பேசிய பேச்சுக்கள், போட்ட கூச்சல்கள் யாரையுமே . . .

**திரு. எஸ். வடிவேல்:** சட்டசபையின் நேரமும், காலமும் வீணாகிறதே.

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.



[1975 ஏப்ரல் 2

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார். *

* * *

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** * இந்த பாயிண்ட் ஆஃப் ஆர்டரையே எக்ஸ்பஞ்ச் செய்கிறேன்.

**திரு. நா. வீராசாமி:** தலைவரவர்களே, அப்படித் தர்ணா செய்தார்கள அந்த நேரத்தில் இங்கே எழுப்பப்பட்ட . . .

MR. DEPUTY SPEAKER : I have expunged the point of order and other consequent proceedings.

**திரு. நா. வீராசாமி:** அந்த நேரத்திலே இந்த மன்றத்திலே போடப்பட்ட கூச்சல்களெல்லாம் உள்ளபடியே இந்த மன்றத்தின் மாண்பைப்பற்றி கருதுப வர்களுக்கு வருத்தத்தைத் தராமலிருக்காது. அதைப்பற்றி எதிர்க்கட்சியிலே இருப்பவர்களிடம் தனித் தனியாகக் கேட்டால் சொல்வார்கள். அந்தச் சம்பவத்தைப்பற்றி வருத்தப்பட்டிருக்கிறார்கள். இந்த நாட்டிலே ஜனநாய கத்தைக் காப்பாற்ற, இந்த மன்றத்தின் மாண்பைக் காப்பாற்ற இம்மாதிரி உறுப்பினர்களும் முறையாக நடந்திருக்கிறார்களா என்று எண்ணிப் பார்க்க வேண்டும். நான் யாருடைய பெயரையும் குறிப்பிடவில்லை. பல நேரங்களில் தீர்ப்பு வழங்கும்பொழுது பாதிக்கப்பட்டிருக்கலாம், அதனால் கோபம் வருகிறது. ஆனால் அந்த நாற்காலியிலே உட்கார்ந்திருப்பவர்களைப் பற்றிப் பேசப்பட்ட பேச்சுக்கள் . . .

**திரு. க. உரொ. எட்மண்ட்:** தலைவரவர்களே, அவர்கள் உண்மைக்குப் புறம்பான சில நிகழ்ச்சிகளைக் கூறுகிறார்கள். எதிர்க்கட்சிக்காரர்கள் . . .

MR. DEPUTY SPEAKER : The hon. Member is a making a general statement.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** எதிர்க்கட்சிக்காரர்கள் தர்ணா நடத்தினோம், அதற்காக வருத்தம் தெரிவித்ததாகச் சொன்னார்கள். என்றைக்கும் நாங்கள் வருத்தம் தெரிவிக்கவும் இல்லை, வருத்தம் தெரிவிக்க வேண்டிய அவசியமுமில்லை.

**திரு. நா. வீராசாமி:** அவர்களுடைய ஒவ்வொரு தலைவரும் தனிப்பட்ட முறையிலே வருந்தியிருக்கிறார்கள்.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.

*திரு. க. உரொ. எட்மண்ட்:* மறுபடியும் மறுபடியும் அதையே சொல்கிறார்கள்.

THIRU R. PONNAPPA NADAR : I deny that.

THIRU K. T. K. TANGAMANI : I am moving a privilege motion. ஒரு குறிப்பிட்ட சம்பவம் இந்த மன்றத்திலே நடந்தது—இந்த மன்றத்திலே நடைபெற்று, ஒவ்வொரு கட்சித் தலைவரும், நாங்கள் பேசிவிட்டு, வெளியே சென்றோம். அதற்குப் பிறகு சில விஷயங்கள் முடிந்தன. அப்படியிருக்கும் பொழுது உண்மைக்கு மாறாக நாங்களெல்லாம் வருத்தம் தெரிவித்ததாக உறுப்பினரவர்கள் சொல்கிறார்கள். ஆகவே, இந்தப் பிரச்னையை பிரிவிலெஜ் கமிட்டிக்கு விடவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

MR. DEPUTY SPEAKER : I will consider it and give my ruling tomorrow.

*திரு. நா. வீராசாமி:* தலைவரவர்களே, அந்தப் பிரச்னைக்குள்ளே போக நான் விரும்பவில்லை. இங்கே உள்ள உறுப்பினர்கள் எல்லோருக்கும் தெரியும். எப்படி நடந்து கொண்டிருக்கிறோம் என்று மாண்புமிகு தலைவரவர்களும் அறிவார்கள். ஆனால் நான் சொல்ல விரும்புவது, ஒருவரை இந்த மன்றத்திலே உட்கார வைத்து, விதிமுறைகளைக் கொடுத்துவிட்டு, அதற்கு மாறாக இப்படி நடந்து கொண்டால் எப்படி நடத்த முடியும்? நேற்று கோவை செழியன் அவர்கள் அழகான ஒரு பொன் மொழியைச் சொன்னார்கள். ஆளுங்கட்சிக்குப் பாதகமாக இருந்தால் எதிர்க்கட்சியிலே உள்ளவர்கள் அந்த நாற்காலியின் ரூலிங்கை எப்படி வேதவாக்காக எடுத்துக்கொள்கிறார்கள். எங்கள் கட்சியைச் சார்ந்த திரு. ஆறுமுகம் அவர்களின் இராஜிநாமாவை அவைத் தலைவர் முறைப்படி ஏற்றுக்கொண்டார்கள். எங்கே அதை ரீ-கன்சிடர் செய்வார்களோ என்று கோவை செழியன் அவர்கள், அவசர அவசரமாக அந்த இடம் எப்படிப் பட்ட இடம் தெரியுமா, அந்த இடத்திலிருந்து வருகின்ற ஒவ்வொரு வார்த்தையும் எப்படிப்பட்ட வார்த்தை தெரியுமா, அதை அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற பொன்னான கருத்தை நேற்று கூறினார்கள். நேற்று சொல்லிய மாதிரியே அதை அன்றாடம் சொல்லுங்கள். நேற்று ஏற்றுக்கொண்ட அந்தப் பொன்மொழியை அன்றாடம் ஏற்றுக்கொள்ளுங்கள்.





*திரு. கோவை செழியன்:* பேரவைத் துணைத் தலைவரவர்களே, நேற்று நடந்த மாதிரியே அவர் என்றைக்கும் நடந்துகொள்ள வேண்டுமென்பதுதான் எங்கள் ஆசை. அப்படி நடந்து கொண்டிருந்தால் இந்த நம்பிக்கையில்லா தீர்மானமே வந்திருக்காது.

*திரு. நா. வீராசாமி:* அவர் ஒரேமாதிரிதான் நடக்கிறார், ஆனால் அதைப் பார்க்கின்றவர்கள் கண்ணோட்டம் வேறுமாதிரியாக இருக்கிறது. ஆகவேதான் சொல்கிறேன். நிறைய ஆதாரம் இருக்கிறது. இந்த மன்றத்திலே புதிய பழக்கங்களை உண்டாக்கியிருக்கிறார்கள். இதற்கு முன்னால் இருந்த சட்டப் பேரவைத் தலைவர்கள் எவ்வளவு கண்டிப்பாக இருந்திருக்கிறார்கள். ஆனால் இன்று நீங்கள் விதிமுறைகளைத் தளர்த்தி, அதற்கு மேலேயும் சென்று, ஒரு பக்கத்திலே பாயிண்ட் ஆஃப் ஆர்டரானாலும், பாயின்ட் ஆஃப் எக்ஸ்ப்ளனேஷனாக இருந்தாலும் கூடியவரையில் அனுமதிக்கின்றீர்கள்.

இன்னும், 1958-59 ஆம் ஆண்டில் மாண்புமிகு உறுப்பினர்கள் கேள்வி கேட்டால் அதற்கு விவரமான பதிலிருந்தால் வீட்டிற்கு அனுப்புங்கள் என்று சொன்ன நேரத்தில் முடியாது, சட்டப்படி கொடுக்க முடியாது என்று அப்பொழுதிருந்த அவைத் தலைவர் கூறியிருக்கிறார்கள். எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அதைப் புரிந்துகொள்ள வேண்டும், இன்றைய தலைவர் உறுப்பினர்கள் துணைக்கேள்வி கேட்க வேண்டும் என்று கருதி வீட்டிற்கு விவரமான பதில்களை அனுப்புகிறார்கள். இறுதியாக ஒன்றே ஒன்றைச் சொல்கிறேன்.

(பிற்பகல் 1-00)

எதிர்க்கட்சிக்காரர்கள் எந்த அளவிற்கு இன்றையதினம் ஆளும் கட்சியைக் குறை சொன்னாலும் அந்த இடத்தில் உட்கார்ந்து கொண்டு ஆளும் கட்சிக்கு எவ்வளவு எதிராகத் தீர்ப்புகள் கொடுத்திருக்கிறீர்கள்? தீர்ப்புகள் என்றால், நேரத்தை ஒதுக்கியிருக்கிறீர்கள்?

சமீபத்தில் கவர்னர் உரைமீது விவாதம் ஏறத்தாழ 944 நிமிடங்கள் நடந்திருக்கின்றது. 46 பேர் விவாதித்திருக்கின்றார்கள். ஆளும் கட்சிக்காரர்கள் 167 பேர் இருக்கிறார்கள்; அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட நேரம் 160 நிமிஷந்தான்.

*திரு. எஸ். வடிவேல்:* நான் 1952-லேயே உறுப்பினராக இருந்திருக்கிறேன். அப்போது அப்படி ஒன்றும் சபாநாயகர் கூறவில்லை. அதையெல்லாம் விவாதிப்பதற்காகத்தான் நாம் இங்கே வந்திருக்கிறோம். திரு. சிவஷண்முகம்பிள்ளை என்றைக்கும் அந்த மாதிரி தீர்ப்பு வழங்கியதில்லை. வீட்டுக்கு அனுப்ப முடியாது என்று சொன்னதில்லை.

**திரு. நா. வீராசாமி**: 1958-ஆம் ஆண்டு நிகழ்ச்சிக் குறிப்புகளை வைத்திருக்கிறேன். அனுமதி கொடுத்தால் படிக்கத் தயாராக இருக்கிறேன். தலைவர் அவர்களே, 19-3-1958ல்—

Yesterday Mr. T. S. Ramaswami said that he would not put a question because it was mutilated.

என்று ஆரம்பித்து விவாதம் தொடங்குகிறது. மூன்று பக்கங்கள் இருக்கின்றன. "வீட்டுக்கு அனுப்ப முடியாது; அது அகைன்ஸ்ட் தி ரூல்ஸ்" என்று முன்னாலே இருந்த சபாநாயகர் தீர்ப்புக் கொடுத்திருக்கிறார். இன்று நீங்கள் எங்கள் வீட்டுக்கு அவைகளை எல்லாம் அனுப்புகிறீர்கள். பதிலை அனுப்புகிறீகள். உறுப்பினர்களுக்கு சவுகரியம் செய்து கொடுக்க வேண்டுமென்ற வகையில் செய்து கொடுக்கிறீர்கள்.

நான் சொல்ல வந்ததை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தடுத்து விட்டார்கள்.

கவர்னர் உரைமீது விவாதம் 944 நிமிஷம் நடந்தது; ஆளும் கட்சிக்குக் கொடுத்தது 160 நிமிஷந்தான். ஏறக்குறைய 46 பேர் பேசியிருக்கிறார்கள்; அதிலே நாங்கள் 18 பேர்தான். 167 பேருக்கு முறைப்படி ஒதுக்க வேண்டிய நேரம் 750 நிமிஷம். ஆறில் ஒரு பங்குகூட அனுமதிப்பதில்லை. எங்களைப் புறக்கணிக்கிறீர்கள். பல பேர் கொறடாவிடம் சென்று பேச வாய்ப்புக் கிடைக்கவில்லை என்று கூறுகிறார்கள். பேச வாய்ப்புக் கிடைக்கவில்லை என்ற காரணத்தால் வேறு கட்சிக்குப் போய்விடலாமா என்று கூட எண்ணுகிறார்கள்.

கிராமங்களுக்குச் சென்றால் நீங்கள் எல்லாம் சட்டமன்றத்தில் பிரச்னைகளை எடுத்துச் சொல்லுவதில்லையா என்று எங்களைப் பார்த்துக் கேட்கிறார்கள். எப்போதும் எதிர்க்கட்சிக்காரர்கள் பேச்சுத்தான் பத்திரிகையில் வந்து கொண்டிருக்கிறது. ஊருக்குப் போனால் "நீங்கள் எல்லாம் சட்டமன்றத்தில் தூங்குகிறீர்களா, பேசுவதே இல்லையா?" என்றெல்லாம் ஆளும் கட்சிக்காரர்களை கேலி செய்யும் அளவுக்கு நிலைமை இருந்து வருகிறது.

பட்ஜெட் விவாதத்திலே 1,215 நிமிஷம் விவாதிக்கப்பட்டது. அதிலே ஆளும் கட்சிக்காரர்களுக்கு 341 நிமிஷந்தான் ஒதுக்கியிருக்கிறீர்கள். விவாதத்திலே 68 பேர்கள் கலந்து கொண்டிருக்கிறார்கள்; அதிலே ஆளும் கட்சிக்காரர்கள் மிகக் குறைவான எண்ணிக்கையில்தான் இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: இந்த விவாதத்திலும் உங்களுக்கு நேரம் அப்படித்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. சீக்கிரமாக முடியுங்கள்.



**திரு. நா. வீராசாமி**: ஆளும் கட்சிக்காரர்களுக்கு அதிகமான பலம் இருக்கும் ஒரே காரணத்தால் புறக்கணிக்கிறீர்கள். கேள்வி நேரத்தில் கையைத் தூக்கித் தூக்கி உயர்த்தினாலும் கவனிப்பதில்லை. சில பேருக்குத்தான் 'கோட்டா' வைத்திருக்கிறீர்கள். எங்களைப் போன்றவர்களை நீங்கள் கவனிப்பதேயில்லை. இரண்டு கேள்வி கேட்கக் கூட அனுமதி கிடைப்பதில்லை. உங்கள் கண்கள் எங்கள்மீது படுவதே இல்லை.

எதிர்க்கட்சிக்காரர்கள் என்ன சொல்லுகிறார்கள்? "எப்போது பார்த்தாலும் நீங்கள் முதலமைச்சரைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள், அவர் சொல்லுவதைக் கேட்கிறீர்கள்" என்று சொல்லுகிறார்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி**: திரு. வீராசாமி அவர்கள் தீர்மானத்தை ஆதரித்துப் பேசுகிறாரா, எதிர்த்துப் பேசுகிறாரா?

**திரு. நா. வீராசாமி**: கடைசியாகத் தெரிந்து கொள்வீர்கள். அந்த இடத்தில் உட்கார்ந்தால் நேராகத்தான் பார்க்க முடியும். முதலமைச்சர் தலைவருக்கு நேராக உட்கார்ந்திருக்கும் காரணத்தால் தலைவர் தன் தலையை பின்னாலே திருப்பிக் கொள்ள முடியுமா? இதையெல்லாம் நம்பிக்கையில்லை என்று சொல்லுவதற்குக் காரணமாகச் சொல்லுவதைப் பார்க்கும்போது உண்மையிலேயே வேதனையாக இருக்கிறது.

இன்றைக்கு ஜனநாயகத்தைக் காப்பாற்ற, கொடுத்திருக்கும் விதிமுறைகளை வைத்துக்கொண்டு புலவர் அவர்கள் எந்த அளவிற்கு நியாயமாக நேர்மையாக நடக்க முடியுமோ அந்த அளவுக்கு நடந்து கொண்டிருக்கிறார்கள். உறுப்பினர்கள் பொறுப்பை உணர்ந்து நடப்பார்களேயானால் தலைவர் அவர்கள் கடமையை நல்ல முறையில் ஆற்ற முடியும். புலவர் அவர்கள் அருள்கூர்ந்து ஆளும் கட்சிக்கு இருக்கின்ற எண்ணிக்கையைப் பார்த்து ஆளும் கட்சி உறுப்பினர்களுக்குத் தகுந்த வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி புலவர் அவர்களுக்கு நான் கூறிக்கொள்வது—

35 பேர் நம்பிக்கையில்லை என்று சொல்லலாம். ஆனால் 200 பேருக்கு உங்கள் மேல் மெத்த நம்பிக்கை இருக்கிறது. 35 பேர் நம்பிக்கை இல்லை என்று இங்கே சொல்லலாம். ஆனால் செய்யாறு தொகுதியில் 3 முறை நீங்கள் வெற்றி பெற்றிருக்கிறீர்கள். அதிலே பட்டா விவகாரம் வந்ததற்குப் பின்னாலே, 15,000 வாக்குகள் அதிகமாகப் பெற்று வெற்றி பெற்றிருக்கிறீர்கள். ஏன்? புலவர் அவர்கள் சாகும் வரையில் செய்யாறு தொகுதியில் வெற்றி பெறத்தான்

போகிறார். தமிழ்நாட்டு மக்கள் எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்லுவதைப்பற்றிக் கவலைப்படவே இல்லை. எதிர்க்கட்சிக்கு அஞ்சி அஞ்சி நீங்கள் இருப்பதைவிட உங்களுடைய அதிகாரத்தை முறையாகத் தொடர்ந்து செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இருக்கின்ற உரிமைகளை ஆளும் கட்சிக்கும் முறையாக கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்த்து உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. கோவை செழியன்: பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு திரு. தங்கமணி அவர்கள் ஒரு பிரிவிலேஜ் கொடுத்தார்கள். தீர்ப்பை நாளைக்குத் தருவதாகச் சொன்னீர்கள். தீர்ப்பு வருகிற வரையில் செய்தி வெளியில் வராமல் இருக்க வேண்டுமென்று உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நாளைக்கு உரிமைப் பிரச்சினை மீது தீர்ப்புச் சொல்லும் வரையில் அந்தச் செய்தி பத்திரிகையில் வெளியிடக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: நான் பேசும்போது பள்ளிக்கூடத்தை மதிப்புக் குறைவாகச் சொல்லவில்லை. சிறிய பிள்ளைகளைப் பள்ளியில் கட்டுப்படுத்த எல்லா வித பயமுறுத்தல்களையும் கையாள்வார்கள். ஆனால் நாங்கள் இங்கு ஒரு லட்சம் மக்களின் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிறோம். நமக்கென்று பொறுப்புகள் உண்டு. சட்டசபையில் பொறுப்பு இல்லாமல் 'நீ வெளியே போ' என்று சொன்னால் அது எப்படி மரியாதைக் குரியதாக இருக்குமென்றுதான் கேட்டேன். இது தெரியாமல் ஏதையாவது பேசிக் கொண்டிருக்க வேண்டாம்.

திரு. நா. வீராசாமி: உறுப்பினர்கள் பொறுப்போடு நடந்து கொண்டால் தலைவர் அந்த நிலைமைக்குச் செல்ல வேண்டியநிலை வராது.

(மணி அடிக்கப்பட்டு திரு. பொன்னப்ப நாடார் பேச அழைக்கப்பட்டார்.)

THIRU R. PONNAPPA NADAR: Sir, I rise to support the motion which is under discussion. It is my painful duty to point out certain things before this House.

Sir, so far as the motion expressing want of confidence in the Hon. Speaker is concerned, it is an extraordinay remedy that has been given to us as per the Constitution. It has been admitted by the hon. Member Thiru N. Veerasami that only 35 members of this House have no confidence in the Hon. Speaker. The



Speaker is a member of this House. He is the Chairman of the House and his rights flow from the House. I am sorry to say that he has flouted the rules. He has not followed the rules which he is bound to support. He is the defender of the Constitution. He is the protector of the rights of this House. Has he performed that duty impartially and scrupulously? That is the question which will have to be answered. According to me, Sir, he has not discharged his duties fearlessly. On the other hand, suffice it for me to say that he has been partial towards the Ruling Party. The question arose regarding a particular matter, drought relief. That has been in the minds of many people, the question of drought. A particular Minister in the Centre, Mr. C. Subramaniam made a speech at Madras. That has been taken exception to by the Hon. Chief Minister before this House. I do not want to apportion the blame on any of the Ministers. But suffice it for me to say that the attitude taken by both parties, both Central Minister and Chief Minister here is not happy because all these things were controversial.

So far as drought is concerned, we feel that politics should not be there and that for the people of Tamil Nadu suffering from drought, relief should be rushed both by Centre and State Government. In that controversy certain announcements have been made by the Chief Minister. A privilege motion has been tabled by the hon. Member Thiru K. T. K. Tangamani stating that the Chief Minister has committed breach of privilege and he has sent a notice. What is the procedure that has been adopted by the Hon. Speaker, is the question that we will have to consider. He has rejected that in his Chamber. Now whether he has not such extraordinary powers is a matter which is well in dispute and doubt. I say that the Hon. Speaker might even now say that the previous Speakers have decided that the Speaker can decide in his Chamber that there is no *prima facie* case. Now, in this important thing, I would once again reiterate and affirm that the rules have since been changed. But the rules as they existed previously have been whittled down and the rules are entirely different now. So far as this particular aspect is concerned, I would even now urge that he has acted arbitrarily and against the rules; in the matter of interpreting the rules, he should exercise his discretion and he should give an opportunity to the mover of the resolution. The rules are quite clear that when

there is a *prima facie* breach of privilege, he can refer it to the Committee of Privileges. But in this case, with great haste, with indecent haste he has decided the matter. That is the charge. He could have summoned Mr. Tangamani to his Chamber and explained the details or he could have allowed him to move his motion and ascertained his views and then decided. On the other hand, he has taken a decision, a categorical decision, a pre-conceived decision, dismissing the motion ***in limine*.** **That is** illegal, that is against the rules and that is my contention and that is the reason why, Sir, we emphatically say that he has not protected the rights of the Members of this House.

Sir, the Chief Minister is the head of the administration and he has made a statement on the floor of the House. It has been asked ' why did you not protest on that day itself ', ' why did you not raise a privilege matter on that day?'. That was one of the points raised. It may be said that we did not raise it on that day. But what prevents us from raising it the next day? Well, when the House met, on the spur of the moment, on the heat of the moment we did not just give the privilege motion. Does it speak well of the Speaker, is it right on the part of the Speaker to say ' I am disallowing the motion on the ground that there is no *prima facie* case? ' If there was no *prima facie* case, if he felt that there was no *prima facie* case, he should have asked for the views of all persons; I do not say that he is bound to hear all the Leaders of Opposition Parties or other Members of the House. We feel that the rights of the House have been given the go-by by the Hon. Speaker. That is the reason why we once again say that he has not acted fairly.

Sir, so far as drought relief is concerned we in the Congress (O) Party have to make a decision. In a section of the press it has been stated that we are opposing it and that has been commented upon by the Chief Minister himself. Sir, one Press representative asked me ' what is the matter ' and I had occasion to say that we have an open mind and we have to consult our Leader Kamaraj before announcing a final decision. That has been given another interpretation as though we are opposing it tooth and nail and some are crying from the house tops to condemn us that we are opposed to this drought relief fund. I say with all the responsibility and all the humility at my command that we are not. I would say



that the Hon. Minister at the Centre has given one month's salary to your fund. He has come down, he has climbed down and I think he has respected public opinion; that is a matter which requires clarification. That is incidental.

Sir, another point to which I wish to refer regarding the Speaker is this. Several things have happened inside the House. We only recall all that happened on 2nd December when the Hon. Member, Mr. Mathialagan while he was the Speaker, was removed. We do not want to repeat all those things here. We have got a responsibility. We have got a duty and as such we feel as responsible Members of the Opposition, that our rights and rights of this House should be well protected. It is with that good faith and conviction that we have brought forward this motion on that day. The hon. Member who is now sitting in the ADMK staged the whole drama and I do not want to re-introduce all the things and attack him collaterally for all those things. Suffice it for me to say that we, sitting here, have got a duty to the public as well as to this House. Our duty is to protect the interests of the Members of the House as well as the House and the public and I think, Sir, that our rights were not properly protected.

Another point which I want to refer to is regarding the resignation of the hon. Member, Mr. Arumugam. Sir, the constitutional provision has been given the go-by. Whether it is voluntary resignation, whether there was any coercion or interested hands in it or whether the resignation letter was genuine all these things will have to be just gone into. Whether that has been done has not been said to the Members of the House. The House is in session and so we are entitled to know why one hon. Member has tendered his resignation, what are the contents of his letter, the contents could have been read or at least it should have been shown to some Members so that we can satisfy ourselves regarding the genuineness of the letter.

Sir, there have been some doubts and even now some doubts are lurking in our minds whether the resignation letter has not been properly sent. Probably that may even go to the Court and I do not want to say anything regarding that now. Have the constitutional provisions been strictly enforced; have they been complied with? I say, Sir, it has not been done and that is the charge, the second charge that we level.

Another point which I want to refer to is this. So far as the Congress (O) is concerned, it has been said by the hon. Member Mr. Veerasami that the opposition has been given too much of time and all that. We have got a grievance that we have not been given due time. Verification of the timings given would clearly show that our Members have not been given proper hearing and time as has to be given to us.

Another point is this. We have tabled several adjournment motion and call attention notices. All these things were rejected *in Limine* without assigning any valid and proper reasons. I say that he has exceeded his rights as Speaker. One pertinent thing I want to emphasise before this House and that is regarding one notice given by me regarding the drought conditions prevailing in our district. I had sent a call attention notice to the Speaker and the Speaker rejected it stating that a statement has been made by the Revenue Minister previously and he has covered all the points. Sir, that was not correct, that was not true that he had covered all the points which I had referred to. Incidentally one sentence had been mentioned and that does not mean our rights should be negatived and my call attention notice should be rejected. I think, Sir, more latitude and fairness ought to have been shown. Small things and trivial things are just brought before the House; but important things which affect the welfare of the people are just given the go-by.

Another point which I want to stress before this House is this. I just gave notice about a lock-up death and a short notice question was also given notice of and that had been admitted. But till this day—it is nearly six months or even one year since that question was given—that has not been answered and it has not been included in the list of questions for the day. It may be irksome to the ruling party. But death had occurred inside the lock-up and I think that will have to be given priority; even if priority is not given, at least it should come before the House within the normal time. Such a thing has not happened.

Yet another point I want to bring before the House is that so far as protection that has to be afforded to the Members of this House is concerned, that has not been strictly enforced. Sir, one instance which I want to stress is regarding the matter raised by



the hon. Member, Mr. Tangamani regarding the Sergeant who is functioning in this House. The matter was raised in the House. It seems that one police officer has not behaved properly inside the precincts of the House and that has been objected to and reported to the Secretary. Now what is the action that is being taken? Now he is being shunted from this department to his parent department.

Does it speak well of us? Does it speak well of the high office you are holding? Now, Sir, that officer has behaved in a manner which is not befitting a police officer. When that matter was bruoght to your office, the Sergeant was being punished and he was being transferred. You may think that the Sergeant has come and reported to us. I have not met him and I have not talked to him. But these things should not happen. Not only justice should be done but justice should appear to be done.

Sir, so far as the attitude of the Hon. Speaker is concerned, he is always partial to the ruling party and that he just corrects himself when certain suggestions have been made at the behest of the Hon. Chief Minister or the Ministers. That is the reason why we say that the Hon. Speaker should be impartial. He should have tendered his resignation from the ruling party. It may be stated that he has got some leaning towards the ruling party but that leaning should be cut away.

So far as the Speakers of the British Parliament are concerned, they exhibit a sense of impartiality in their high office. They are held in high esteem by all Members, and they consider that Opposition is also a part of the House. That is the reason why it is stated that the Opposition is 'Her Majesty's Opposition' and a Shadow Cabinet is functioning there. Those high parliamentary practices may not be obtaining in our parliamentary system. But the Speaker has failed to defend the Constitution. He has failed to protect the interests of the Members.

Even the privilege motion which has been given notice of by the hon. Member, Thiru Tangamani, has been given the go-by and has been treated with scant respect. He has transgressed his limits and he has given arbitrary decisions.

[Thiru R. Ponnappa Nadar] 1975 ஏப்ரல் 2]

So far as we, sitting in the Opposition, are concerned, we have behaved with the utmost fairness to the best of our ability. But some Members wanted to cast aspersion on the hon. Member, Thirumathi Jothi Vencatachellum with regard to her ruling. What has that to do with the discussion before the House? Has it got any relevance? They want to sling mud on her and that aspect of the matter has to be considered. Sir, all these tactics would not pay.

I once again reiterate that the conduct of the Hon. Speaker is not fair, and it is partial and tainted. I do not want to use a stronger expression because if I use it, that may not speak well. Sir, you may think that you have got the steam-roller majority but your conscience will speak.

When we speak, we speak with responsibility. If there is anything wrong in our speech, it is your duty to correct us then and there. We, sitting in the Opposition, always feel that a grievous wrong has been done and the Hon. Speaker is responsible for it and so, he should be removed and that is the argument which I am making. With these words, let me conclude my speech.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, பேரவையின் அவைத் தலைவர் மாண்புமிகு புலவர் கா. கோவிந்தன் அவர்கள் மீது எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள் கொண்டு வந்து இருக்கிற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்த்து சில கருத்துக்களை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்துச் சொல்லிய கருத்துக்களில் இருந்து, அவைத் தலைவருடைய பொறுப்புகளை நாம் நன்கு உணர்வோம். உள்ளபடியே மாண்புமிகு பேரவையின் அவைத் தலைவர் புலவர் கோவிந்தன் அவர்களை மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எல்லாம் பாராட்ட வேண்டும். ஏன் என்றால், பெருமதிப்பிற்குரிய சிவசண்முகம் பிள்ளை அவர்கள் இந்தப் பேரவையின் தலைவராக இருந்து இருக்கிறார்கள். பெருமதிப்பிற்குரிய யு. கிருஷ்ணராவ் அவர்கள் இந்தப் பேரவையின் தலைவராக இருந்து இருக்கிறார்கள். அதற்குப் பிறகு திரு. செல்லப்பாண்டியன் அவர்கள் தலைவராக இருந்து இருக்கிறார்கள். அப்போது எதிர்க்கட்சிகள் என்னென்ன சலுகைகளைப் பெற்று இருந்தன என்பதை அவைக் குறிப்பேட்டில் இருந்து நாம் அவைகளைப் புரட்டிப் பார்த்து, அதே நேரத்தில், இப்போது என்னென்ன சலுகைகளை இப்போது இருக்கின்ற எதிர்க்கட்சிகள் பெற்று வருகின்றன



1975 ஏப்ரல் 2] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

என்பதை ஒப்பிட்டுப் பார்க்கிறபோது தெரியும். அந்த நேரத்தில் பெறாத பல சலுகைகளை இப்போது எதிர்க்கட்சிகள் பெறுகிறார்கள் என்பதை அந்தக் குறிப்பேடுகளில் இருந்து நாம் நன்றாக அறியலாம்.

1962-லிருந்து 1967 வரையில் மதிப்பிற்குரிய செல்லப்பாண்டியன் அவர்கள் பேரவைத் தலைவராக இருந்தபோது, இந்த அவையில் இருக்கும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. அதற்கு முன்னாலே அவை நிகழ்ச்சிகளையெல்லாம் கூர்ந்து கவனிக்கும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டு இருந்தது. ஒரு சிலர் அப்போதும் இந்த அவையில் இருந்து இருக்கிறார்கள். அப்போது, இப்போது ஒழுங்குப்பிரச்னை எழுப்பப்படுகின்ற அளவுக்கு எழுப்பப்பட்டனவா, அப்போது இருந்த அவைத் தலைவர்கள் அனுமதித்து இருக்கிறார்களா என்று கூர்ந்து கவனிக்கிறபோது, இப்போது எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கோவிந்தன் அவர்கள் அளித்து வருகிற சலுகையும், வாய்ப்பும், பேசுவதற்கு, தங்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்குக் கொடுக்கப்பட்டு இருக்கிறதா என்றால், எப்போதும் எந்தக் காலத்திலும் கொடுக்கப்படவில்லை என்பதை அவைக் குறிப்பு நிகழ்ச்சிகளில் இருந்து நாம் தெளிவாக அறியலாம்.

அது மட்டுமல்லாமல், ஏற்கனவே ஒத்தி வைப்புத் தீர்மானம் என்றால், எப்படி இருந்து இருக்கிறது என்பதையும் நாம் எடுத்துக் கொள்ளலாம். 1952-க்கும், 1957-க்கும் இடையே, 1957-க்கும் 1962-க்கும் இடையே, 1962-க்கும், 1967-க்கும் இடையே எடுத்துக்கொண்டால், ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டுவரப்பட்டவை எத்தனை என்பதையும், அப்படி ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் 6-7 பேர் கொடுத்து இருந்தாலும், ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டு வந்தவர்கள் சார்பாக ஒருவர்தான் பேசலாம் என்று சொல்லி, அதோடு அந்த ஒத்தி வைப்புத் தீர்மானம் அனுமதிக்க வேண்டியதற்கான காரணத்தை சொல்லலாமே தவிர, அதற்கான காரணங்களுக்குள் செல்ல முடியாது, அந்த வகையில்தான் திரு. செல்லப்பாண்டியன் அவர்கள் அனுமதித்து வந்தார்கள்.

ஆனால், இப்போது ஒத்தி வைப்புத் தீர்மானம் என்று சொன்னால், ஒத்தி வைத்து விவாதித்தால் நாம் என்னென்ன விவரங்களைச் சொல்வோமா அவ்வளவும் பேசுகிற அளவுக்கு புலவர் கோவிந்தன் அவர்கள் வாய்ப்பு அளித்து, அந்த முறையில் எதிர்க்கட்சிகளுக்கு தங்கள் கருத்துக்களைச் சொல்வதற்கு முழு வாய்ப்பையும் அளித்து இருக்கிறார்கள். அதோடு ஒரு குறிப்பிட்ட கருத்து பற்றி பல உறுப்பினர்கள் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்து இருந்தால்,

ஒவ்வொரு கட்சியில் இருப்பவர்களுக்கும் கருத்து சொல்வதற்கு மாண்புமிகு பேரவைத் தலைவர், புலவர் கோவிந்தன் அவர்கள் அனுமதி அளித்து வந்திருக்கிறார்கள்.

வெட்டுப் பிரேரணைகளைப் பொறுத்தவரையில் கூட ஒரு குறிப்பிட்ட மானியக்கோரிக்கை மீது பல பேர் பல பிரேரணைகளைக் கொடுத்தாலும், ஏதாவது ஒரு கட்சியின் சார்பாக ஒரு வெட்டுப் பிரேரணையை எடுத்துக்கொள்வதுதான் வழக்கம். ஆனால் இப்போது ஒரு மானியக்கோரிக்கை வருகிறபோது எதிர்க் கட்சிகள் எந்தெந்த எதிர்க்கட்சியின் சார்பாக வெட்டுப் பிரேரணைகள் கொடுத்து இருக்கிறார்களோ. அவர்களை ஒவ்வொரு வெட்டுப் பிரேரணை முன்மொழிய அனுமதி அளித்து வந்திருக்கிறார்கள்.

நான் எதற்காக இதைச் சொல்ல வருகிறேன் என்றால், எதிர்க்கட்சிகள் பேரவைத் தலைவர் புலவர் கோவிந்தன் அவர்கள் தலைமையில் மிக அதிகமாக வாய்ப்புகளை பெற்று வருகிறார்கள், இது வரையில் அனுபவிக்காத பல சலுகைகளை அனுபவித்து வருகிறார்கள், தங்கள் கருத்துக்களை எடுத்துச்சொல்ல அதிகமான வாய்ப்புகளை பெறுகிறார்கள் என்ற அளவில் புலவர் கோவிந்தன் அவர்கள் இருந்து வருகிறார்கள் என்று எடுத்துச் சொல்லிக்கொள்கிறேன்.

புலவர் கோவிந்தன் அவர்களுடைய இயற்கை பண்புகள் பலர் அறிவர். துடிப்பு இல்லாதவர், படபடப்பு இல்லாதவர், படாடோபம் இல்லாதவர், ஆரவாரம் இல்லாதவர், ஆடம்பரம் இல்லாதவர், அமைதியானவர், ஆன்று ஆய்ந்து, பழக சிறந்தவர் என்ற அளவுக்கு எல்லோராலும் பாராட்டப்பட்டவர். நண்பர் ஹாண்டே அவர்கள் கூட பாராட்டாமல் இருக்க முடியாது என்ற அளவில் பாராட்டுதல்களைத் தெரிவித்தாலும் கூட, கண்டிக்காமல் இருக்க முடியாது என்று சொல்லி சிலவற்றை எடுத்துச் சொன்னார்கள். அப்படிப்பட்டவர்கள் இந்த மன்றத்தை எப்படி நடத்திக்கொண்டு வருகிறார்கள் என்பதை, மற்ற சட்டமன்றத் தலைவர்களின் தீர்ப்புகளை ஒப்பிட்டுப் பார்க்கிறபோது நல்ல வகையில் காணலாம்.

அந்த வகையில் புலவர் கோவிந்தன் அவர்கள் மாண்புமிகு பெரியவர் மணலி அவர்கள் எடுத்துக் தெரிவித்த மாதிரி, அளவுக்கு மீறிய பொறுமையோடும், அளவுக்கு மீறிய பெருந்தன்மையோடும் இந்த அவையை நடத்தி வருகிறார்கள். யார் அந்த இடத்தில் இருந்தாலும், இந்த அவையைக் கட்டுப்படுத்தி நடத்திச்செல்வது சிரமமான காரியம் என்பதை அறிவார்கள். எங்கே எடுத்துப் பார்த்தாலும், எல்லா மாநிலங்களிலும் ஆகட்டும், பாராளுமன்றத்தில் ஆகட்டும், எங்கே பார்த்தாலும்கூட எந்த அளவுக்கு நிலைமைகள் மாறி வருகின்றன என்பதும், எந்த அளவுக்கு ஒரு அவையை தலைமை வகித்து,



சட்டப்படி, விதிப்படி, ஒழுங்குபடுத்தி நடத்திச்செல்வது என்பது எவ்வளவு சிரமமான காரியமாக இருக்கிறது என்பதையும் நாம் நன்றாக உணர்வோம். ஆனால் இங்கே இந்த அவையைப் பொறுத்தவரையில் புலவர் கோவிந்தன் அவர்கள் தலைமை தாங்கி எந்த அளவுக்கு பெருமைப்படத்தக்க அளவில் இந்த அவையை நடத்தி வருகிறார்கள், எந்த அளவில் ஆரவாரம், படாடோபம், படபடப்பு இல்லாமல் எல்லோருக்கும் ஊக்கம் தந்து, பேசுவதற்கு இடம் கொடுத்து வந்து இருக்கிறார்கள் என்பதை நாம் நன்றாக உணருகிறோம்.

அரசியல் அமைப்புச் சட்டம் வகுத்துத்தந்த விதிகளை வைத்துக்கொண்டு, அதன் அடிப்படையில் இந்த அவையின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தி, ஒழுங்குபடுத்தி, நடத்துவதற்காக நாம் இந்த அவைக்கென ஒரு விதி வைத்து இருக்கிறோம். அந்த விதியின் அடிப்படையில் அவர்கள் இந்த அவையை நடத்தி வருகிறார்கள். அதற்காக ‘விதிக் குழு’ என்று ஒன்று வைத்து இருக்கிறோம். அந்த விதிக்குழு கூட இன்னின்ன விதிப்படி இந்த அவை நடத்தப்படவேண்டுமென்று முடிவு செய்து இருக்கிறது. அவ்வப்போது அந்த முடிவுகளுக்கு நாம் திருத்தங்கள் கொண்டு வந்து இருக்கிறோம். அந்த வகையில் அந்த விதிகளை செம்மைப்படுத்தி இருக்கிறோம்.

(பிற்பகல் 1-30)

இதிலே ஏதாவது மாற்றம் செய்யவேண்டுமென்றால் விதிக் குழுவினர் கூடி மாற்றங்கள் செய்வதற்கு வாய்ப்புகளும், வசதிகளும் இருக்கின்றன. விதிகளை உருவாக்கித் தந்து, அந்த விதிகளின் அடிப்படையில் இந்த மன்றம் இயங்க வேண்டுமென்ற கொள்கையின் அடிப்படையில்தான் இந்த மன்றத்திலிருக்கிற 234 உறுப்பினர்களும் சேர்ந்து அவைத் தலைவரவர்களிடத்திலே விதி முறைகளை ஒப்படைத்து இந்த விதி முறைப்படி நடக்கவேண்டுமென்று குறிப்பிடுகிறோம். ஆகவே பேரவைத் தலைவரவர்கள் அந்த விதியின் கீழே நின்று பணியாற்ற வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கோவிந்தன் அவர்கள் இங்கே சொல்லப்பட்டிருக்கிற விதிகளுக்கு உட்பட்டுத்தான் நடக்கவேண்டியிருக்கிறது. “வகுத்துத் தந்த விதிகளின் அடிப்படையில் தீர்ப்பு வழங்குகிறேன். வேறு வகையில் நடக்கவேண்டுமென்று எதிர்பார்த்தால் விதிகளை மாற்றித் தாருங்கள்” என்று பல தடவை அவர்கள் சொல்லியிருப்பதைக் காணலாம். ஆகவே, அவர்கள் விதிகளின் அடிப்படையில் தீர்ப்பு வழங்கவேண்டியவர்களாக இருக்கிறார்கள். அப்படி வழங்கப்படுகிற தீர்ப்பு பிடிக்காமல் இருக்கலாம், பிடித்திருக்கலாம். கோர்ட்டில் வழங்கப்படுகிற தீர்ப்பு வாதிக்குச் சாதகமாகவோ,

பிரதிவாதிக்குச் சாதகமாகவோ அமையக்கூடும். நீதிபதி வழங்குகிற தீர்ப்பு சட்டப்படி வழங்கப்படும். ஆனால் வாதிக்குச் சாதகமாகப் போய்விட்டது என்று வாதிக்கு சாதகமானால் பிரதிவாதி சொல்வார். பிரதிவாதிக்கு சாதகமாக தீர்ப்பு அமையுமானால் வாதி, பிரதிவாதிக்குச் சாதகமாகப் போய்விட்டது என்று சொல்வார். ஆனால் தீர்ப்பை வழங்குகின்ற நீதிபதி இருக்கிற சட்ட திட்டத்தின் அடிப்படையில் வழங்குகிறேன் என்று சொல்வார். விருப்பங்கள் நிறைவேறுகின்றனவா இல்லையா என்பது வேறு.

கொண்டு வந்த ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் நிறைவேற்றப்படவில்லை, பல பிரச்சனைகள் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்ற வருத்தம் இருக்கலாம். வகுத்துத் தந்த விதிகளுக்கு உட்பட்டு பேரவைத் தலைவர் புலவர் கோவிந்தன் அவர்கள் தீர்ப்பு வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இதற்கு முன்னால் நடைபெற்ற நிகழ்ச்சிகளைப் பார்த்தால் கூட தெரிந்து கொள்ளலாம். ஒழுங்குப் பிரச்னை என்ற பெயரில் வராத பிரச்னைகள் இங்கே எடுத்துச் சொல்லப்பட்டு, அவைக் குறிப்பில் ஏற்றப்பட்டு, அறிவிக்கப்படுகிற நிகழ்ச்சிகளை சுட்டிக் காட்டவேண்டுமானால் அது முடியும். ஏற்கெனவே நடந்த சட்டசபை நிகழ்ச்சிகளை ஒப்பிட்டுப் பார்த்தால் இப்போது எவ்வளவு பிரச்சனைகள் வந்திருக்கின்றன என்று தெரியும். ஏற்கெனவே இதற்கு முன்பு இன்னொரு கட்சி ஆளும் கட்சியாக இருந்த காலத்திலும் கூட, பேரவைத் தலைவராக இருந்தவர்கள் எந்த அளவிற்கு இவைகளை அனுமதித்தார்கள் என்று பார்த்தால் கூட தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.

திரு. வீராசாமி அவர்கள் குறிப்பிட்டுக் காட்டினார்கள். திரு. செல்லபாண்டியன் அவர்கள் காலத்திலே, திரு. சிவஷண்முகம் பிள்ளை அவர்கள் காலத்திலே, டாக்டர் யு. கிருஷ்ண ராவ் அவர்கள் காலத்திலே, எதிர்க்கட்சியினர் அப்போதிருந்த எண்ணிக்கை என்ன? அவர்களுக்கு எவ்வளவு நேரம் தந்தார்கள், ஆளும் கட்சியினருக்கு அப்போது எவ்வளவு நேரம் தந்தார்கள் என்று இப்போதைக்கு ஒப்பிட்டுப் பார்த்தால், ஆளும் கட்சியினருக்குக் கொடுத்திருக்கிற நேரத்தை 1952-லிருந்து தொடர்ந்து பார்த்தாலும் இப்போதுதான் குறைவாக இருக்கிறது. விகிதாசாரம் இப்போதுதான் குறைவாக இருக்கிறது. ஏடுகளைப் புரட்டினால், அதிகமான நேரம் பேசியவர்கள் என்ற பரிசை யாருக்குத் தரவேண்டுமென்றால் டாக்டர் ஹாண்டே அவர்களுக்குத்தான் தரவேண்டும். ஆக, அவர் அவ்வளவு பேசியிருக்கிறார். ஏடுகளைப் புரட்டிப் பார்த்தால் ஏடுகள் சொல்லும். இந்த 4, 5 ஆண்டு காலமாக குறுக்கிட்டுப் பேசியது, சாதாரணமாகப் பேசியது என்று எல்லாவற்றையும் பார்த்தால் அந்த வாய்ப்பு டாக்டர் ஹாண்டே அவர்களுக்



குத்தான் கிடைத்திருக்கும். மற்றவர்களை விட்டு விட்டாலும், டாக்டர் ஹாண்டே அவர்களாவது புலவர் கோவிந்தன் அவர்களைப் பாராட்டியிருக்க வேண்டும். அவருக்கு அவ்வளவு நேரம் தந்திருக்கிறார்கள்.

இந்த அளவிற்கு நிலைமை உள்ளபோது, வாய்ப்புகளை குறைத்து விட்டார்கள், பல நேரங்களில் சட்ட திட்டத்திற்கு உட்பட்டு ஒத்தி வைப்பு தீர்மானத்தை மறுக்கிறார்கள் என்பதற்காக அவைத் தலைவர் அவர்கள் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வரவேண்டுமென்றால், யாரும் தலைவராக இருக்க முடியாது. அவ்வளவு பேர்களுடைய விருப்பத்தையும் நிறைவேற்றுவது என்பது இயலாது. சட்ட திட்டத்திற்குட்பட்டு மாண்புமிகு புலவர் கோவிந்தன் அவர்கள் தீர்ப்புகளை வழங்கியிருக்கிறார்கள். அதில் எந்த குறைபாடும் சொல்ல முடியாது. மற்றவர்களை விட பொறுமையோடு, அன்போடு, கூடுமான வரையில் நிலைமைகளை அனுசரித்து தீர்ப்புகளைச் சொல்கிற அளவிற்கு அவர்கள் இருந்திருக்கிறார்கள். வேறு ஒருவர் அவ்வளவு பொறுமையாக இருக்க முடியுமா என்பது சந்தேகம். சாதாரணமாக மேல் நாடுகளில் உட்காருகிற நீதிபதிக்கு அவர் தலை நரைக்காவிட்டாலும் ஒரு நரைத்த தன்மை வேண்டுமென்பதற்காக, அப்படி தலையை வைத்துக் கொண்டு ஆசனத்தில் உட்காருவார்கள். அந்த அய்விற்கு அவசியம் இல்லாதநிலையில், புலவர் கோவிந்தன் அவர்கள் தலை நரைத்திருக்கிறது.

**திரு. கோவை செழியன் :** தலைவரவர்களே, நம்முடைய புலவர் கோவிந்தன் அவர்களைப் பற்றி அவை முன்னவர் சொல்லும்போது அவர் ரொம்பவும் அமைதியானவர், சாதுவானவர் என்று சொன்னார்கள். அவரை எதிர்த்துத் தீர்மானம் கொடுத்தவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்றால், எங்கள் கட்சித் தலைவர் அவர்களுக்கும், மற்றவர்களுக்கும் இப்படி பெயர்கள் உண்டு. அது என்னவென்றால், எங்கள் கட்சித் தலைவரை ரெவரண்ட் ஃபாதர் எட்மண்ட் என்றும், ஸ்ரீல ஸ்ரீ தம்பிரான் பொன்னப்ப நாடார் என்றும், தவத்திரு மாரியப்ப சுவாமிகள் என்றும், திரு. தங்கமணி அவர்களை சாது தங்கமணி என்றும் சொல்கிற நிலையில் அந்த அளவிற்கு நல்லவர்களான அவர்களும் எதிர்க்கிறார்களே, அதையும் கவனத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். (சிரிப்பு)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, நான் முடித்துவிட்டேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, திரு. கோவை செழியன் அவர்கள் எங்களுக்கு இப்படி பட்டங்கள் சூட்டியிருக்கிறார்கள். அவர் பட்டம் சூட்டுவதில் கெட்டிக்காரர். கிஸ்ஸிங்கர் என்ற பெயரை வீராசாமி அவர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். எந்த நோக்கங்களோடு இந்தப் பட்டங்களைக் கொடுத்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை. (சிரிப்பு)

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, திரு. கோவை செழியன் அவர்கள் இன்றைக்கு அவையில் சொன்னார்கள். ஆனால், நீண்ட நாட்களாகவே இப்படி பட்டங்கள் சூட்டப்பட்டு வெளியே உறுப்பினர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். இப்படி அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பட்டம் சூட்டியிருப்பதாகக் கேள்வி.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, நான் இதைத்தான் குறிப்பிட்டேன். ஏற்கெனவே நடைபெற்ற நிகழ்ச்சிகளையெல்லாம், 15, 20 ஆண்டு கால நிகழ்ச்சிகளையெல்லாம் பார்த்தால் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எப்படி ஒழுங்குப் பிரச்சினைகளைக் கிளப்புகிறார்கள், ஒத்தி வைப்புப் பிரேரணைகளில் எப்படிப் பேசுகிறார்கள், இப்போது எப்படிப் பேசுகிறார்கள் என்று ஒப்பிட்டுப் பார்த்தால் நிலைமை தெரியும். உறுப்பினர் திரு. கோவை செழியன் எப்படிப்பட்ட பட்டங்களைக் கொடுக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். பின்னாலே இருக்கிறவர்கள் அப்படி இருக்க விரும்புகிறார்களாவென்று தெரியவேண்டி இருக்கிறது. இதுவே இந்த அளவிற்கு இருக்குமானால் எதிர்ப் பார்க்கிற நிலைமை பின்னால் எங்கே போய்விடும் என்று அஞ்சவேண்டியவர்களாக இருக்கிறோம்.

சாதாரணமாக, ஒரு பழமொழி சொல்வார்கள். நல்ல பையன் யார் என்று கேட்டால் சாதாரணமான நிலைமையில் உதாரணத்திற்கு, கூரை மேலே இருப்பவன் என்று சொன்னால் மற்றவர்கள் எப்படி என்று நினைப்போமோ அப்படி, இதுவே தவறு என்று சொல்லும்போது இன்னும் எந்த நிலைக்கு மற்றவர்கள் போகவேண்டுமென்று விரும்புகிறார்கள் என்று தெரியவில்லை.

உறுப்பினர்கள் எல்லோரும் சேர்ந்து இந்த அவையினுடைய உரிமையைக் காப்பாற்றியிருக்கவேண்டும். நான் பெருமையோடு கூறிக் கொள்கிறேன். வேறு எந்த சட்டமன்றத்தையும் விட, இங்கே அமைதியையும், ஒழுங்கையும் காப்பாற்ற வேண்டிய உணர்வு பல பேர்களுக்கு இருக்கிறது. அவை முன்னவர் என்ற முறையில் திரும்பவும் கூறிக் கொள்கிறேன். எல்லோருடைய ஒத்துழைப்பையும் காட்டுவதன் மூலம் நல்ல நிலைமை ஏற்பட முடியும். அந்த வேண்டுகோளின் அடிப்படையில் தான் திரும்பத் திரும்ப எடுத்துக் கூறிக்கொண்டு



இருக்கிறோம். அந்த வகையில் தான் புலவர் கோவிந்தன் அவர்கள் சட்டதிட்டத்திற்கு உட்பட்டு நடக்கிறார், இத்தகைய சூழ்நிலையில் யார் வந்தாலும் இந்த நிலைமை ஏற்படக் கூடும், இது அவை உரிமைப் பிரச்சினையைப் பொறுத்து வந்திருக்கிறது.

திரு. தங்கமணி அவர்கள் குறிப்பிட்டுக் காட்டினார்கள். பாராளுமன்றம் நடந்து கொண்டிருக்கும்போது பொறுப்பு வாய்ந்த மத்திய நிதி அமைச்சர் ஒரு பொதுக் கூட்டத்தில் ஒரு கருத்தைச் சொன்னார்கள். அதற்கு மறுப்புரை தரவேண்டிய அவசியம் முதலமைச்சரவர்களுக்கு ஏற்பட்டது. இதைப் பற்றிய விளக்கங்கள் பல தடவை பேசப்பட்டது. நான் அவைகளுக்குள்ளே போக விரும்பவில்லை. இது பற்றி அடிக்கடி அவை உரிமைப் பிரச்சனை என்று கிளப்பப்பட்டு, அதற்கான காரணங்கள் எடுத்து வைக்கப்பட்டன. நான் காரணங்களை எடுத்துச் சொன்னேன். புலவர் கோவிந்தன் அவர்கள் காரணங்களை எடுத்துச் சொன்னார்கள். ஆனாலும் அவை உரிமைப் பிரச்சினை என்று கொண்டு வந்து உடனே ஏற்றுக் கொள்ளவேண்டும், மறுப்பதற்கு இடமில்லை என்றார்கள். the consent of the Speaker for raising a matter is necessary. ஒரு பிரச்சினையை எழுப்புவதற்கே தலைவர் அனுமதி வேண்டும். அதற்குப் பிறகு கொண்டு வந்து விவாதித்து நிறைவேற்றலாமா என்பதற்கு அடுத்து அனுமதி வேண்டும். சந்தேகம் ஏற்படாமல் இருந்தால் அவரே தீர்ப்பளிக்கலாம், இல்லையென்றால் பேச வைத்து விட்டு, காரண காரியங்களைக் கேட்டு அதற்குப் பிறகு அனுமதி தரவும் செய்யலாம், தராமலும் இருக்கலாம். தந்து தீரவேண்டுமென்று இல்லை.

The consent of the Speaker for raising a matter is needed.
பிரச்சனையை எழுப்புவதற்கே முன் அனுமதி வேண்டும்.

The member may, with the consent of the speaker, raise a question
என்று சொல்லும்போது, கன்செண்ட் என்று சொல்லும்போது, கன்செண்ட் தராமலும் இருக்கலாம், அல்லது தரலாம், கன்செண்ட்டை தந்து தீரவேண்டுமென்று அளவிற்கு இல்லை. ஒரு விஷயத்தைக் கொண்டு வருவதற்கே அனுமதி வேண்டும். அதற்குப் பிறகு, அதை ஏற்றுக் கொள்ளலாமா, பிரச்சனையில் பிரைமா பேசி கேஸ் இருக்கிறதாவென்று பார்க்கலாம். இல்லையென்று தீர்ப்பளிக்க அவைத் தலைவருக்கு உரிமை இருக்கிறது. அந்த அடிப்படையில்தான் அன்றைக்கே விளக்கியிருக்கிறோம். அவைத் தலைவர் புலவர் கோவிந்தன் அவர்கள் மரபுப்படி நடந்தார் என்பதை மீண்டும் வலியுறுத்திக் கூற விரும்பு

கிறேன். ஆகவே, இப்படிப்பட்ட காரணங்களை வைத்து அவைத் தலைவர் அவர்கள் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்திருப்பது பொருத்த முடையதல்ல, இந்த அவையை சிறப்பாக நடத்திச் செல்வதில் புலவர் கோவிந்தன் அவர்கள் அரும்பாடு பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

மேலும் இந்த மன்றத்திலே இருக்கின்ற 234 உறுப்பினர்களும் சேர்ந்து தருகின்ற ஒத்துழைப்பு மூலமும், இந்த மன்ற உறுப்பினர்கள் தீட்டித் தந்திருக்கின்ற விதிமுறைகளுக்கு நாமே மதிப்பளித்து, அவரிடத்தில் நம்பிக்கை வைத்து, இந்த அவையின் பெருமையை காப்பாற்ற வேண்டு மானால், அத்தனை பேருடைய ஒத்துழைப்பையும் பெற்று அவர்களுடைய உணர்வுகளை நிறைவேற்றிட வேண்டும். அந்த வகையில் அவர்கள் கூடுமான வரையில் நிறைவேற்றி வருகிறார்கள். அவைகளை நிறைவேற்ற பெரும் ஒத்துழைப்பு தர வேண்டும். அந்த வகையில் அவர்களைப் பாராட்டி, இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்த்து அமருகிறேன்.

(3) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) பேரவை அலுவல்குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் தீர்மானித்தபடி பேரவையின் அலுவல் கீழ்க்கண்டபடி நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

2-4-1975 (புதன்கிழமை)—பேரவைத் தலைவர் பதவி நீக்கம் செய்யக் கோரும் தீர்மானத்தின் மீது விவாதமும், முடிவும்.

3-4-1975 (வியாழக்கிழமை)—காவல்துறை, தீயணைப்புப் பணிகள் ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது மேலும் விவாதம்.

4-4-1975 (வெள்ளிக்கிழமை)—முற்பகல் அரிசனங்கள், பழங்குடி மக்கள் நலன்.

பிற்பகல்:—தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர் வீட்டுவசதி.



4-4-1975 அன்று கேள்வி நேரம் இல்லை. மற்ற மானியக் கோரிக்கைகள் ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி எடுத்துக்கொள்ளப்படும்.

4. பேரவைத் தலைவரை பதவி நீக்கம் செய்யக் கோரும் தீர்மானம்—தொடர்ச்சி.

**மாண்புமிகு புலவர் கா. கோவிந்தன் (பேரவைத் தலைவர்):** பேரவைத் துணைத் தலைவரவர்களே, என்னுடைய பதவிக் காலத்தில் இரண்டாவது முறையாக என்னைப் பதவி நீக்கக் கோரும் இந்தத் தீர்மானம் வந்திருக்கிறது. சென்ற மார்ச் மாதத்தில் அது கொண்டு வரப்பட்ட சூழ்நிலையும், இப்பொழுது கொண்டு வரப்பட்டிருக்கின்ற சூழ்நிலையும், இந்த மன்றத்திலே இருக்கின்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் தெரியும்.

"அரியகற்று ஆசற்றார் கண்ணும் தெரியுங்கால்
இன்மை அரிதே வெளிறு"

என்று வள்ளுவர் கூறியிருக்கிறார்கள். எவ்வளவுதான் படித்து, பயிற்சி பெற்றிருந்தாலும், அவனிடத்தில் சில அறியாமை இருக்கத்தான் செய்யு மென்ற திருவள்ளுவர் நெறியை உணர்ந்தவன் நான். அந்த நிலையிலே நானும் தவறு செய்யக் கூடியவன்தான் என்று உணர்ந்து அந்தத் தவறுகளை சுட்டிக்காட்டக் கூடிய ஒரு நிலைமை ஏற்படுமானால் அதைத் திருத்திக் கொள்ள வேண்டுமென்ற நல்ல உணர்வோடுதான் இப்படிப்பட்ட ஓர்மானங்களை நான் வரவேற்கின்றேன். ஆனால் வரவேற்ற எனக்கு பயன் கிடைத்ததா என்று சொன்னால், இல்லை என்றுதான் கூற வேண்டும் நான் சென்ற முறை கூறியதைப் போல நமது கே. டி. கே. அவர்கள் தொடக்கத்திலேயே அவர்கள் ஆரம்பித்த விதம் எனக்கு ஏமாற்றத்தை அளித்தது என்ற கருத்தைச் சொன்னேன். இப்பொழுதும் அதைத்தான் சொல்ல விரும்புகிறேன்..

நான் பதவி வகித்த நேரத்தில் செய்த தவறுகளைச் சுட்டிக் காட்டி, இந்தத் தவறுகளெல்லாம் நடைபெறாமல் இந்த அவையை நல்ல முறையில் நடத்த வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்திருப்பார்களானால் அவருக்கு மிகவும் கடமைப்பட்டவனாக இருப்பேன். இடித்துக் கூறுகின்ற நண்பர்கள் நல்ல நண்பர்கள். அப்படிப்பட்டவர்கள் இல்லையென்று சொன்னால் எவ்வளவு சிறந்த நிலையிலிருப்பவர்களும் அழிந்துபடுவார்கள் என்ற நிலையை உணர்ந்தவன். அப்படி இங்கு கூறுகின்ற கருத்துக்களை எனக்கு அறிவுரை வழங்குகின்ற, எனக்கு வழி காட்டுகின்ற முறைகளை, ஏற்றுக்கொள்ள வேண்டு மென்ற உணர்விலே நான் ஏற்றுக் கொண்டிருக்கிறேன்.

[புலவர் கா. கோவிந்தன்] [1975 ஏப்ரல் 2

ஆனால் கொடுக்கப்பட்ட காரணமென்ன? சென்ற மார்ச் திங்களிலே நம்முடைய மாண்புமிகு அனந்தநாயகி அம்மையார் அவர்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பினார்கள். அவர்களை எனக்கு நீண்ட நாட்களாகத் தெரியும். 1952-லே என்னுடைய தொகுதியிலே திரு. செங்கல்வராயன் அவர்கள் நாடாளுமன்றத்திற்கு போட்டியிட்டபோது, அவருடைய தேர்தல் பிரச்சாரம் நடத்துகின்றவர்களிலே நம் அனந்தநாயகி அம்மையார் அவர்கள் ஒருவராவர். அந்த நாளிலிருந்து அவர்கள் எவ்வளவு விறுவிறுப்பான அரசியல்வாதி என்பதை உணர்ந்திருக்கிறேன். தான் நினைத்த கருத்துக்களை நினைத்த நேரத்திலே சொல்லி விடவேண்டுமென்ற துடிப்பான உணர்வுடையவர்கள். அதைப் பாராட்ட வேண்டும். ஆனால் சொல்லுவதற்கு ஏற்ற முறையைக் கற்று கொண்டு சொல்ல வேண்டும். அவர்கள் தூக்கத்திலே இருந்து எழுந்தால்கூட அவர்கள் வாயிலிருந்து பாயின்ட் ஆப் ஆர்டர் என்றுதான் வரும். இப்படி பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொன்னால் தான், பேசுகின்றவர்கள் உட்காருவார்கள். நாம் சொல்ல வேண்டிய கருத்துக்களை சொல்லி விடலாம் என்ற கருத்தில் சொல்லுவார்கள். அதை இங்கே இப்பொழுது பார்த்ததில்லாமல், 1962-லிருந்து 1967-வரையிலும் இந்தச் சட்ட மன்றத்திலே நாங்கள் எதிர்க்கட்சியாக இருந்த நேரத்தில், அவர்கள் ஆளும் கட்சியாக இருந்தபோது, பாயின்ட் ஆப் ஆர்டர் பற்றி அப்போதைய பேரவைத் தலைவர் என்ன கூறியிருக்கிறார்கள் என்றால் உங்களுக்கு பாயின்ட் ஆப் ஆர்டர் என்பது என்னவென்று தெரியவில்லை என்று சொல்லியிருக்கிறார். அதைக் குறையாகச் சொல்லவில்லை. அந்தத் துடிப்பான உணர்வுகள்தான் காரணம்.

நீங்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று எழுந்து நீங்கள் சொல்ல வேண்டிய கருத்துக்களை சொல்கிறீர்களே அல்லாது எது பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லுவதில்லை என்று குறிப்பிட்டுச் சொன்னேன். அந்தக் கட்டத்திலே தான் தலைவர் பதவி விலக வேண்டுமென்ற தீர்மானம் வந்தது.

இப்பொழுது நம்முடைய திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். இந்த வறட்சி நிவாரணம் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மத்திய அமைச்சர் திரு. சி. எஸ். அவர்களுக்கும் கருத்து வேறுபாடு உண்டாகி, அதைப் பற்றி நாங்கள் இங்கே உரிமைப் பிரச்னை கொடுத்தோம். அது அனுமதிக்கப்படவில்லை. அது அறையிலே தள்ளப்பட்டது. அதன் காரணமாக இங்கே இப்போது இந்தப் பதவி விலகல் தீர்மானம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் பதவி விலகல் தீர்மானம் கொடுக்கப்படுகின்ற நேரத்தில் இந்தச் சிறு காரணங்களுக்கு கொடுத்து விடலாமா என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.



1975 ஏப்ரல் 2] [புலவர் கா. கோவிந்தன்]

நம்முடைய பாராளுமன்றத்தில் பேரவைத் தலைவராக இருந்த திரு. சஞ்சீவி ரெட்டி அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அதை நான் இங்கே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

We have to remember that the office of the Speaker is an august one. He is one who should be shown all respect by every section of the House. In fact, he cannot discharge his onerous responsibilities effectively if he is denied such respect. It follows that motions or resolutions for the removal of the Speaker should not be brought forward in a light-hearted manner . . . .

என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, பேரவைத் தலைவர் மீது ஒரு சிறு காரணத்திற்காக வெறுப்பு வந்தவுடனே, பதவி விலகல் தீர்மானம் கொடுத்து விடுவது என்பது அவ்வளவு நல்ல மரபாக இருக்காது. பாயின்ட் ஆப் ஆர்டர் காரணமாக அப்போது வந்தது. அப்போது நான் அதற்கான காரணங்களையெல்லாம் சொல்லலாம் என்று இருந்தேன். ஆனால் அதற்குள் அந்தத் தீர்மானம் கொடுத்த எதிர்க்கட்சி உறுப்பினர்களெல்லாம் ஏதோ காரணத்தைக் காட்டி, வெளியேறிய காரணத்தால் அதை அப்போது சொல்வதற்கு முடியவில்லை.

இங்கே பாயின்ட் ஆப் ஆர்டர் எப்படி எழுப்பப்படுகிறது என்பதை இங்கே இருக்கின்ற உறுப்பினர்களெல்லாம் உணருவார்கள். இன்று ஒரு நாள் எத்தனை உறுப்பினர்கள் எத்தனை விதமான பாயின்ட் ஆப் ஆர்டர்கள் எழுப்பினார்கள், அதை நம்முடைய பேரவைத் துணைத்தலைவரவர்கள் எந்த அளவுக்கு அனுமதித்தார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். முன்பு இந்த மன்றத்திலே பாயின்ட் ஆப் ஆர்டர் நிலைமைகள் எந்தெந்த அளவில் கையாளப்பட்டன என்பதைச் சொல்கிறேன்.

" 5—8—1966 Motion expressing want of Confidence in the Ministry (Vol. XXXIX page 505.) என்ற பகுதியில்—

" THIRU K. A. MATHIALAGAN : On a point of order, Sir.

MR. SPEAKER : No point of order. Let the hon. Member resume his seat.

(Many hon. Members belonging to the opposition rose in their seats on points of order).

MR. SPEAKER : So many hon. Members getting up and shouting is not a point of order. Let them please resume their seats.

THIRU S. MADHAVAN : Sir, on a point of order.

MR. SPEAKER : Let the hon. Member please sit down. என்று இருக்கிறது. என்னுடைய வாயிலிருந்து எப்படிப்பட்ட வார்த்தைகள் வந்தது என்பதை நீங்கள் பார்க்க வேண்டும். மேலும் அதில் —

" MR. SPEAKER : So many hon. Members getting up and shouting is not a point of order. Therefore, there does not arise any point of order.

THIRU K. A. MATHIALAGAN : On a point of order, Sir.

MR. SPEAKER : Let the hon. Member please resume his seat. Let there be order first and then the hon. Member can raise the point of order." என்றும். அதற்குப் பிறகு—

" THIRU K. A. MATHIALAGAN : Sir, I am raising another point of order. Can I raise a point of order or not? Have I got the right to raise it or not?

MR. SPEAKER : But I am not allowing the hon. Member to raise the point of order.

THIRU S. MADHAVAN : According to the rules, I am entitled to raise the point of order.

MR. SPEAKER : I am not allowing any hon. Member to disturb the House.

* * *

THIRU S. MADHAVAN : On a point of order, Sir.

THIRU K. A. MATHIALAGAN : On a point of order, Sir.

THIRU K. S. MANI : On a point of order, Sir.

MR. SPEAKER : Only with the permission of the Speaker, an hon. Member can raise a point of order.

THIRU S. MADHAVAN : Sir, I want your permission. The hon. Member (Sri R. Krishnaswami Naidu) has mentioned my name. I have not put that question.





MR. SPEAKER : சரி. ஒரு பெயரைச் சொன்ன உடனேயே 'பாயிண்ட் ஆப் ஆர்டரை ரெய்ஸ் பண்ண முடியாது.

If the hon. Members are really sincere in their desire to raise a point of order, first there should be perfect silence in the House according to the rules. That is the first point of order which every one, any democract, any sincere MLA must keep up, then get the permission of the Speaker and then put the question.

THIRU P. U. SHANMUGAM : Sir, how are we to get your permission?

MR. SPEAKER : Some of you must shout? Is that the way to get the permission of the Speaker?

* * *

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, ஒழுங்குப் பிரச்சினை எழுப்பும் உரிமை அங்கத்தினர்களுக்கு உண்டு; அவற்றின் மேல் தீர்ப்புக் கொடுக்கும் உரிமை சபாநாயகர் அவர்களுக்கு இருக்கிறது. ஆகவே, யாராவது ஒரு அங்கத்தினருக்கு அனுமதி கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

MR. SPEAKER : There are also precedents that if any hon. Member raises a point of order unnecessarily, the speaker can stop it."

இது இந்த மன்றத்திலே பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்பும்போது பேரவைத் தலைவர்கள் எவ்வளவு கண்டிப்பாக நடந்து கொண்டார்கள் என்பதற்குச் சான்று.

என்னுடைய அறையிலே, நான் உட்கார்ந்திருக்கும் இடத்திற்கு எதிரே முன்னாள் பேரவைத் தலைவர்களுடைய படங்களை எல்லாம் பார்க்கிறேன். 'நாங்கள் எல்லாம் பேரவைத் தலைவராக இருக்கும்போது எவ்வளவு கட்டுப்பாடாக இந்தச் சபையை நடத்தி வந்தோம்; இந்த அவையை நீங்கள் கட்டவிழ்த்து விட்டிருக்கிறீர்களே' என்று அவர்கள் எல்லாம் என்னைப் பார்த்து கேட்பதுபோல் இருக்கிறது.

இப்போது நம்முடைய அவையிலே நடைபெறும் விவாதங்களில் உறுப்பினர்கள் பாயிண்ட் ஆப் ஆர்டர் கேட்பது எந்த முறையிலே இருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். நியாயமான பாயிண்ட் ஆப் ஆர்டர்களில்

[புலவர் கா. கோவிந்தன்] [1975 ஏப்ரல் 2

எதை நான் மறுத்திருக்கிறேன்? 'உரிமைப் பிரச்சினை கொடுத்தோம்; தள்ளிவிட்டார்கள், ஆளும் கட்சிக்கு, அரசாங்கத்திற்கு ஆதரவாக இருந்தார்கள்; அரசாங்கத்தினுடைய போக்கைக் கண்டிப்பதாக இருந்ததால் அதைக் கொடுப்பதற்கு உரிமை இல்லை என்று தள்ளிவிட்டார்கள்' என்று என்மீது குற்றஞ்சாட்டியிருக்கிறீர்கள். அப்படி உரிமைப் பிரச்சனையை வேண்டுமென்றே நான் தள்ளிவிடுவதாக இருந்தால் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி கொடுத்திருக்கக்கூடாது.

1975 ஆம் ஆண்டு மார்ச் 18ம் தேதி அன்று திரு. தங்கமணி அவர்களும், திரு. செழியன் அவர்களும் ஒரு பிரிவிலேஜ் மோஷன் கொடுத்தார்கள். அது உரிமை மீறிய பிரச்சனை அல்ல என்று அனுமதி கொடுக்க மறுத்தேன். அப்படி மறுக்கலாமா கூடாதா என்பதற்கான காரணங்களைச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். உரிமைப் பிரச்சனை மறுக்கப்பட்டது குறித்து பாயின்ட் ஆப் ஆர்டர் என்ற முறையில் 50 நிமிடங்கள் விவாதம் நடைபெற்றது.

அன்றைக்கே திரு. தங்கமணி அவர்களிடம், நாளை ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்கிறேன் என்றேன். ஆனால், அடுத்த இரண்டு நாட்கள் நான் வரவில்லை. ஆகவே, இன்று உரிமைப் பிரச்னையை எடுத்துக் கொள்ளுங்கள் என்று திரு. ஆலடி அருணா, திரு. கே. டி. கே., திரு. ஜே. ஜேம்ஸ் ஆகியோர் அட்ஜர்ன்மென்ட் மோஷன் கொடுத்தார்கள். அது அவையில் எடுத்துக்கொள்ளப்பட்டு, அதன்மீது திரு. ஆலடி அருணா, திரு. ஏ. ஆர். மாரிமுத்து, திரு. செழியன் ஆகியோர் 40 நிமிடம் பேசினார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் மத்திய நிதியமைச்சர் திரு. சுப்பிரமணியம் அவர்களுக்கும் ஏற்பட்ட கருத்து மோதலின் காரணமாக கொடுக்கப்பட்ட ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி கொடுத்து, 40 நிமிடம் பேசியிருக்கிறார்கள். மறுநாள் அதே பொருள்பற்றி திரு. கே. டி. கே. டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. அப்துல் ஜப்பார் ஆகியோர் 54 நிமிடங்கள் பேசியிருக்கிறார்கள். ஒரே பொருள் பற்றி 40 நிமிடம் ஒரு நாளும், 54 நிமிடங்கள் ஒரு நாளும் பேசுவதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அப்படி இருக்கும்போது 18-ந் தேதி எழுப்பிய உரிமைப் பிரச்சனைக்கு அனுமதி மறுக்கப்பட்டது இந்த ஆட்சியை காப்பதற்காக என்று சொன்னால் அது எந்த அளவுக்கு பொருத்தமாக இருக்கும் என்று எண்ணிப்பார்க்க வேண்டும். ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கும். பாயின்ட் ஆப் ஆர்டருக்கும் அனுமதி அளித்துவிட்டு, உரிமைப் பிரச்சனைக்கு ஏன் அனுமதி அளிக்கவில்லை என்றால் அது உரிமை மீறல் அல்ல என்பதுதான். வேண்டுமென்றே அனுமதி



1975 ஏப்ரல் 2] [புலவர் கா. கோவிந்தன்]

அளிக்கவில்லை என்றால், அதற்குப் பின்னால் நடைபெற்ற 54 நிமிட 40 நிமிட விவாதமும் நடைபெற்றிருக்க முடியாது. உரிமைப் பிரச்னை கொண்டு வருவது முறையல்ல என்பதால் இந்த அவையில் அது எடுத்துக் கொள்ளப்படவில்லை. ஆகவே, நான் ஆளுங் கட்சிக்கு சாதகமாக நடந்து கொண்டேன் என்று எண்ணத் தேவையில்லை.

இதிலே விதிமுறைகளை எல்லாம் சொன்னார்கள். லோக்சபை விதி தெளிவாக இருக்கிறது; நம்முடைய விதிமுறைகள் தெளிவாக இருக்கின்றன என்றெல்லாம் சொன்னார்கள். விதிமுறைகளைப்பற்றிச் சொல்லும்போது அடிக்கடி நம்முடைய கே. டி. கே. அவர்கள் கவுல், ஷக்தர் ஆகியோர் இந்த உரிமைப்பிரச்சனை பற்றி சொல்லியிருக்கிற கருத்துக்களைச் சொல்வார்கள் அதையும் இங்கே குறிப்பிடுகிறேன்.

"A question of privilege may be raised in the House, only after obtaining the consent of the Speaker; this has been made obligatory so that the time of the House is not taken by raising a matter which on the face of it is not admissible. அதற்காக

"On receipt of the notice, the matter is considered by the Speaker who may either give or withhold his consent to the raising of the question of privilege in the House. The member concerned is then informed of the Speaker's decision. அடுத்து

"The Speaker, in giving his consent to the raising of a matter in the House as a question of privilege, considers only whether the matter is fit for further inquiry and whether it should be brought before the House . என்பதற்காக

"After the Speaker has given his consent to the raising of a matter in the House as a question of privilege, the member who tabled the notice has, when called by the Speaker, to ask for leave of the House to raise the question of privilege.

ரெய்ஸ் பண்ணுவதற்கு கூட அல்ல; ஹௌஸின் அனுமதியை பெறுவதற்காக.

"......to ask for leave of the House to raise the question of privilege. While asking for such leave, the member concerned is permitted to make only a short statement relevant to the question of privilege. அடுத்து

"After leave is granted by the House for raising a question of privilege, the matter may either be considered and decided by the House itself, or it may be referred by the House, on a motion made by any member, to the Committee of Privileges for examination, investigation and report."

இதுதான் இருக்கிறது. இந்த முறையிலே அறையிலே வைத்துப் பார்த்து, மேலெழுந்தவாரியாகப் பார்த்து, உரிமை மீறலா இல்லையா என்று தெரிந்து, மறுக்கலாம். இந்த அவையில் கொண்டுவருவது எதற்காக என்றால் அவையில் கன்செண்ட்' கேட்கிறோம். அவையின் அனுமதியைப் பெறுவதற்காகத்தான் கன்செண்ட் கேட்கிறோம். அப்போது சுருக்கமாகப் பேசலாம். இதுதான் விதிமுறை. நாங்கள் கொடுத்த பொருள் கடுமையானது, நாட்டைப் பாதிக்கக் கூடியது என்று சொன்னார்கள். அதை நான் ஒப்புக்கொள்கிறேன். உரிமை மீறல் எப்போது வரும் என்றால் இந்த அவையின் மரபை புறக்கணிக்கும்போது, உறுப்பினர்களின் உரிமையை பறிக்கும்போது உரிமை மீறல் என்று வரும். இந்தப் பிரச்சனையில் அப்படி இல்லை. அந்தத் தீர்ப்பை நான் வழங்கினேன். அது ஆளும் கட்சியைக் காக்க வேண்டும் என்பதற்காக அல்ல.

ஒத்திவைப்புத் தீர்மானங்கள் எல்லாம் மறுக்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். ஒத்திவைப்புத் தீர்மானங்கள் மறுக்கப்படும்போது எந்த முறையில் மறுக்கப்பட்டிருக்கின்றன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுக்கும்போது சில நேரங்களில் அறையிலேயே மறுக்கப்பட்டிருக்கிறது. இந்த அவையில் வரும்போது ஒரு நிலைமை இருக்கிறது. ஒத்திவைப்புத் தீர்மானம் பேரவைத் தலைவரால் எடுத்துக் கொள்ளப்பட்டு, ஆளும் தரப்பில் அதற்கு என்ன பதில் சொல்கிறார்கள் என்று கேட்டு, அதன் பிறகு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்தவர்களுடைய கருத்தைக் கேட்காமலேயே மறுக்கப்படுவது ஒருமுறை. இது ஒரு நிலைமை. அதன்பிறகு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்தவர்களுடைய கருத்தைக் கேட்டு, தள்ளிவிடுவது. இது மூன்றாம் நிலை.

ஒரு பொருள் பற்றி பலர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தாலும் யார் முதலில் கொடுக்கிறார்களோ அவர்களை மட்டும் பேசச் சொல்வது முறையாக இருக்கிறது. 7-ந் தேதி ஒரு பொருள் பற்றி ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுக்கிறார்கள். இன்று இதற்கு அனுமதி கொடுக்கவில்லை; நாளை அல்லது மறுநாள் எடுத்துக்கொள்ளப்படும் என்று தெரிவித்துவிட்ட பிறகு, அன்றைக்கு அவையில் பல உறுப்பினர்கள் அதே பொருள்பற்றி ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுக்கின்ற நிலைமை கூட இருக்கிறது இப்போது. தொடங்கும்போது ஒருவர் கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானம் பற்றிய அதே





பொருள் பற்றி நானும் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன் என்று சொல்வதற்காக ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுக்கிறார்கள். அதையும் கூட அவையில் எடுத்துக்கொண்டு, ஒரு மணி நேரத்திற்கு மேலாகக் கூட விவாதித்திருக்கிறோம்.

ஒத்திவைப்புத் தீர்மானம் அவையில் மறுக்கப்படுவது பற்றி சொன்னார்கள். அது சம்பந்தமாக ஒன்றை மட்டும் படிக்க விரும்புகிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** நீங்கள் படிப்பது 'எக்ஸ்பஞ்ச்ட்' போர்ஷனாக இருந்தால் படிக்க வேண்டாம். முந்தின தடவை அப்படிப் படித்து விட்டீர்கள்.

**மாண்புமிகு புலவர் கா. கோவிந்தன் (பேரவைத் தலைவர்):** கேட்கின்ற கேள்வியில் ஏதாவது பொருள் இருக்க வேண்டும். உள்நோக்கம் கற்பிப்பதாக இருக்கக் கூடாது.

DR. H. V. HANDE: No, no, I am not trying to tease the Speaker; my only point is to put him in a corner, for, the role of the opposition is to put you in a tight corner.

**மாண்புமிகு புலவர் கா. கோவிந்தன் (பேரவைத் தலைவர்):** எதையும் செய்யும்போது முறையாகத்தான் நான் செய்வேன். அப்போது தலைவராக இருந்த அம்மையாரிடம் "குறிப்பிலிருந்து நீக்கப்பட்ட பேச்சைத்தான் படிக்கிறேன். நீங்களும் இதை நீக்கி விடுங்கள்" என்று தெரிவித்து, அவர்களுடைய அனுமதியைப்பெற்றுத்தான் படித்தேன். நான் படித்தது ஒரு முறை நீக்கப்பட்டது. அப்போது பொன்னப்ப நாடார் அவர்கள் இந்த அவையிலே நடந்ததா என்று கேட்டார்கள். நடந்தது என்று காட்டுவதற்காகப் படித்தேன். பிறகு நீங்களே நீக்கிவிடுங்கள் என்று சொல்லிவிட்டுத் தான் படித்தேன். ஆகையால் பேரவைத் தலைவராகிய நானே தவறு செய்கிறேன் என்று நினைக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 2-00)

திரு. கிருஷ்ணராவ் அவர்களே சொல்லியிருக்கிறார்கள்—அறையில் வந்து நான் தள்ளியது ஒன்றுதான்—ஆனால் நான் என் அறையிலேயே தள்ளிய தீர்மானங்கள் எவ்வளவு என்பது இந்த மன்றத்திலுள்ள உறுப்பினர்களுக்குத் தெரியாது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இது ஒன்றும் புதிய காரியம் அல்ல.

பொதுவாக, நடைமுறைக் கேள்விகள் என்றோ, தன்னிலை விளக்கம் என்றோ உறுப்பினர்கள் எழுப்புகின்ற நேரத்தில் எல்லாம் எவ்வளவு சலுகைகள் அவர்களுக்கு வழங்க முடியுமோ அவ்வளவு சலுகைகளும் வழங்கப்படுகின்றன. உறுப்பினர்களுடைய உரிமை பாதிக்கின்ற வகையில் நடந்து கொள்ளவில்லை.

அடுத்து, பொதுவாக இந்த மன்றத்தில் சொல்லப்பட்ட குற்றச்சாட்டு—அதற்கு நீண்ட விளக்கம் தேவையில்லை—டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒரு பத்திரிகையின் மீது தாம் கொண்டுவந்த உரிமைப் பிரச்சினை பற்றியது—அவர் சொன்னார்—நான் பயந்தேன் என்று. அப்போதே என் நிலைமையை நான் தெளிவாக விளக்கியிருக்கிறேன். அவர்கள் எனது வாழ்க்கையில் நடைபெற்றதைச் சுட்டிக்காட்டி உரிமைப்பிரச்சினை கொண்டுவந்தார்கள். பேரவைத் தலைவர் மீது கொண்டுவரவில்லை என்றார்கள். என்றாலும் பத்திரிகையில் என்னைப் பற்றி வெளியான குற்றச்சாட்டை யொட்டி—அவர் பத்திரிகையின் மீது உரிமைப்பிரச்சினை என்று கொடுத்தார்கள். அவர் என்ன கருத்தோடு கொண்டுவந்தார்கள் என்பதும் எனக்குத் தெரியும். அப்போது எனக்குப் பேச வாய்ப்பு இல்லை—என்னுடைய வாயைக் கட்டிப் போட்டுவிட்டு—எனக்கு பதில் அளிக்க வாய்ப்பு இல்லாத வகையில்—அவர் பத்திரிகையின் மீது உரிமைப்பிரச்சினை என்று என் மீதே குற்றச்சாட்டுகளைச் சுமத்துகிற போது—எனக்கு விடை அளிக்க வாய்ப்பு இல்லை என்ற காரணத்தினால்—எனக்கும் விடை அளிக்க வாய்ப்பு இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் மறுக்கப்பட்டது.

அம்மையார் அவர்கள் கூடச் சொன்னார்கள். ஏதோ ஆதித்திராவிடர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிலம் என்று சொன்னார்கள். அது நூறாண்டு காலமாக காம்பாக இருக்கிற இரண்டாயிரம் ஏக்கரா நிலம்—அதை யாரும் அனுபவிக்கவில்லை. திரு. வீராசாமி சொன்னதைப்போல—எனக்கென்று 12 ஏக்கர் நிலம் இருந்தது என்றாலும் பொதுவாழ்வில் ஈடுபட்ட காரணத்தினால் இன்றைக்கு இருப்பது 2 ஏக்கரா நிலம் தான். நான் நிலம் அற்ற ஏழை—எனக்கும் பிள்ளைகள் இருக்கிறார்கள். இந்த இரண்டாயிரம் ஏக்கரா நிலத்தை (குறுக்கீடு) இதை எல்லோருக்கும் பிரித்துக்கொடுத்தபோது அந்த நிலத்தைப் பெறுவதற்குரிய தகுதி எனக்கும் இருந்ததனால் அதைப் பெற்றேனே தவிர அதை முறையற்ற முறையில் பெறவில்லை. சட்டமன்ற உறுப்பினர் என்ற காரணத்தினால் அதைப் பெறக்கூடாது என்பது அல்ல. அதைப் பெறுவதற்கு எனக்குத் தகுதி இருந்தாலும்—சட்டமன்ற அங்கத்தினர்கள் பெற்றிருக்கக்கூடிய நிலத்தை திருப்பிக்கொடுத்துவிடவேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்ட உடனே என்னிடம் இருந்த நிலமும் திருப்பிக்கொடுக்கப்பட்டுவிட்டது. அது அரசாங்கத்தாலும்



ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டது. அண்மையில் ஓர் உத்தரவு போய் இருக்கிறது. பொது ஏலத்தில் விட்டு, அந்த நிலத்தை விற்றுவிட வேண்டுமென்று உத்தரவு போய் இருக்கிறது. இதுதான் தெளிவான நிலைமை.

டாக்டர் ஹாண்டே அவர்களை எனது தொகுதிக்கே வரவேற்கிறேன். இந்தக் குற்றச்சாட்டையே சொல்லி வரட்டும்.—ஐந்தாண்டு காலம் சொல்லியாகி விட்டது—சொல்வதைக் கேட்டுவிட்டுத்தான் மக்கள் தீர்ப்பு அளித்திருக்கிறார்கள். பொது வாழ்க்கையில் நான் தூய்மையுடன் தான் இருக்கிறேன். நினைத்திருந்தால் எனக்கு நம்பிக்கையான வேறு 3 பேர்கள் மீது அந்த நிலத்தைப் போடச்சொல்லிவிட்டு நானே அனுபவித்துக்கொண்டிருக்க முடியும். அது முடியாத காரியம் அல்ல. அதை நான் செய்ய விரும்பவில்லை. எனக்கு இருந்த தகுதி அடிப்படையில்தான் அந்த நிலம் என் குடும்பத்திற்கு அளிக்கப்பட்டது.

* * *

இதை வைத்தே தேர்தல் நேரத்தில் பிரச்சாரம் செய்யப்பட்டது. அதை எல்லாம் கேட்டுக்கொண்டுதான் எனக்கு என் தொகுதி மக்கள் 15 ஆயிரம் வாக்குகளை அதிகம் கொடுத்திருக்கிறார்கள். இன்னும் தேர்தலுக்கு ஆறுமாதம் இருக்கிறது—ஒரு வருஷம் இருக்கிறது. நீங்கள் இதையே சொல்லிக்கொண்டிருங்கள். இன்னும் எத்தனைமுறை இதையே சொன்னாலும் உண்மை என்ன என்பது என் தொகுதி மக்களுக்குத் தெரியும்.

ஒரு நல்ல குடும்பத்தில் ஒரு கட்டுப்பாட்டு நிலையிலேயே நான் வளர்ந்தவன். அதுவும் என் தாயார் கட்டுப்பாட்டில்—இரவு எத்தனை மணி நேரம் ஆனாலும் வீட்டில் வந்து படுக்க வேண்டுமென்ற அளவில் வளர்ந்தேன், ஆசிரியரிடத்தில் அடிபட்டு பாடம் கற்று வளர்ந்தவன். பேரறிஞர் அண்ணா அவர்களது கட்டுப்பாட்டில் அவரை அண்டி வளர்ந்தவன் நான். அதனால்தான் யாராக இருந்தாலும் கட்டுப்பாட்டை மீறுகிற நேரத்தில் எனக்குக் கோபம் வரும். எனக்கு கோபம் வராத வகையில்—ஆத்திரம் வராத வகையில் நமக்கு வகுத்துக்கொடுக்கப்பட்டிருக்கிற விதிமுறைகளுக்கு உட்பட்டு எல்லோரும் நடந்து கொள்வார்களானால்—அவர்களது உரிமையைக் காப்பதில் என்னைவிட வேறு யாரும் இருக்க முடியாது.

மாண்புமிகு உறுப்பினர்களுடைய உரிமைகளைக் காப்பதோடு இந்த மன்றத்தின் பெருமையைக் காப்பதும் என் கடமை. சில நேரத்தில் அங்கத்தினருடைய உரிமை பாதிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் அது இந்த மன்றத்தின் பெருமையை நல்ல மரபுகளை காப்பதற்காக வேண்டி இருக்கலாமே தவிர வேறு இல்லை.

---

* . மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* புலவர் அவர்கள் பேசும்போது, என்று சொன்ன வார்த்தைகள் பாராளுமன்ற நடைமுறைக்கு சரியில்லாத

* * *

**காரணத்தினால் அவற்றை அவைக்குறிப்பில் இருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன். அடுத்து திரு. கே. டி. கே.

DR. H. V. HANDE : Point of order, Sir.

MR. DEPUTY SPEAKER : There is no point of order. I am not allowing any point of order. Thiru K. T. K. Tangamani is replying. Do you want any clarification?

*டாக்டர் எச். வி. ஹாண்டே :* Just a clarification மாண்புமிகு பேரவை தலைவர் நல்ல அரசியல்வாதி—பழுத்த அரசியல்வாதி—நல்ல அனுபவசாலி என்று இங்கே தெரியும். அவர் தாம் பேசுகின்ற நேரத்தில் அவைக்குறிப்பில் இருந்து நீக்கக் கூடிய அளவுக்கு அன்-பார்லிமெண்டரி வார்த்தைகளை உபயோகப்படுத்துவாரா? Because he is the Speaker. . .

MR. DEPUTY SPEAKER : I want to make a general statement. It has become a fashion for the members now to question the ruling of the Chair. That is not proper. That is my ruling.

*திரு. கே. டி. கே. தங்கமணி :* டெபுடி ஸ்பீக்கர் சார், நான் திரும்ப பதில் சொல்வதற்கு பத்து நிமிடங்கள் வேண்டுமென்று கேட்டேன். தீர்மானத்தின் மீது நடந்த விவாதத்தைக் கேட்ட பிறகு 20 நிமிடங்கள் வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு) நானும் சாப்பிடவில்லை. தண்ணீர் கூட குடிக்கவில்லை.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* 15 நிமிடம் எடுத்துக்கொள்ளுங்கள்.

*திரு. கே. டி. கே. தங்கமணி :* பல விஷயங்கள் எழுப்பப்பட்டிருப்பதால் முக்கியமான விஷயம்பற்றி பேசவேண்டும். பத்து வருஷங்களுக்குப் பின்னால் இதை யாராவது திருப்பிப் படித்துப்பார்க்கிறபோது—திரும்பச் சொல்வதற்கு விஷயம் ஒன்றுமில்லையோ என்ற நிலைமை ஏற்பட்டுவிடும். அதற்காகவே சில விஷயங்களைக் குறிப்பிட்டுச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



இந்த விவாதத்தில் 13 பேர்கள் பங்கெடுத்துக் கொண்டார்கள். இதில் சபையின் முதல்வர்—அரசின் கருத்தை எடுத்துச் சொன்னார். நேரிடையாக சபாநாயகர் என்ற முறையில் தம் மீது சாட்டப்பட்ட குற்றச் சாட்டுக்கு அவர் பதில் சொன்னார். இந்த இரண்டையும் எடுத்துவிட்டால் 11 பேர்களில் 6 பேர்கள் இந்தத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசியிருக்கிறார்கள். நான்கு பேர் எதிர்த்துப் பேசியிருக்கிறார்கள். ஒருவர் பொதுவான நடுநிலை எடுத்து இருக்கிறார்கள்.

இதில் பேசியவர்கள் எல்லோருக்கும் தீர்மானத்தை முன்மொழிந்தவன் என்ற முறையில் நன்றி சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறவன். நான் எடுத்துச் சொல்ல வேண்டிய பல விஷயங்களை அவர்கள் விவாதத்தில் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். எதிர்த்துப் பேசியவர்களும் கூட இந்த விவாதத்தை நல்லமுறையில் கொண்டுவருவதற்கு உதவி செய்து இருக்கிறார்கள்.

நான் முதலில், கடைசியில் சபாநாயகர் அவர்கள் சொன்ன பதிலுக்கு சொல்லிவிட்டு, மற்ற விஷயங்களைத் தொடலாம் என்று நினைக்கிறேன்.

அவரைப்பற்றி—இலக்கியச் சுவையோடு—இன்றைக்கு அவரைப் பார்த்தாலே பெரியவர் என்று தெரிகிற அளவுக்குப் பேசினார்கள்.

இளமை நாணி முதுமை எய்தியதாக ஒரு அரசனைப் பற்றிச் சொல்வார்கள். ஒரு அரசன் இளமைக் கோலத்தில் வந்து உட்கார்ந்ததை பார்த்து வழக்குரைக்க வந்தவர்கள் இவன் நடுநிலையில் நீதி வழங்குவானா என்று ஐயப்பட—அந்த அரசன் உள்ளே சென்று முதுமைக் கோலத்தில் வந்து உட்கார்ந்து நீதி வழங்கியதாகச் சொல்வார்கள்—பேரவைத் தலைவருக்கு அந்தப் பண்பு இருக்கிறது—அது நல்ல விஷயம் தான்.

ஆனால் அந்த இடத்தில் உட்கார்ந்து இருக்கிறவர்களுக்கு 'கோடி கொடுப்பினும் நாக் கோடாமை கோடியுறும்' என்று இலக்கியத்தில் சொல்லப் பட்டிருக்கிறதே—இது ரொம்ப அழுத்தமான விஷயம்—இது மிகவும் தேவை.

அந்த இடத்தில் உட்கார்ந்திருப்பவருக்கு—எதிர்க்கட்சியில் இங்கே உட்கார்ந்திருக்கிறவர்கள் யாரும் குறைந்தவர்கள் அல்ல—ஆளுங்கட்சியில் இருப்பவர்களும் குறைந்தவர்கள் அல்ல—தனிப்பட்ட பண்பு என்ற முறையில்—ஆளும் கட்சியில் இருப்பவர்களும் பண்பு இல்லாதவர்கள் என்று சொல்வதற்கில்லை.

ஒரு கருத்தை—எல்லோரும் குறிப்பிட்ட ஒரு கருத்தை வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அதை நமது சபாநாயகர் ஒரு இன்சு கூட உணரவில்லை—விவாதத்திற்குப் பதில் அளிக்கிறபோது அந்தக் கருத்து அவரிடத்தில் எந்தப் பலனையும் ஏற்படுத்தவில்லை என்று சொல்லலாம். உரிமை மீறல் என்பது பற்றி நாங்கள் எல்லோரும் வலியுறுத்தினோம். அந்த வலியுறுத்தலினுடைய தன்மையை உண்மையிலே அதிகமாகப் புரிந்து கொண்டிருக்க வேண்டியவர் சபாநாயகர். ஆனால் சபாநாயகராக இருக்கின்றவர் அந்த அளவுக்குப் புரிந்துகொள்ளாமல் இருக்கின்றாரே என்று நினைக்கும்போதுதான் அந்தப் பதவிக்கு அவர் சரியாகப் பொருத்தமாக இல்லை. அவரைப் பதவியிலிருந்து விலக்க வேண்டுமென்று கேட்பது நியாயமானதுதான் என்று எனக்குப் படுகிறது. மற்ற விஷயங்களிலே அவர் தவறானவர் என்று சொல்ல விரும்பவில்லை. அவரது தனிப்பட்ட, குடும்ப வாழ்க்கையை நான் எடுக்கத் தயாராக இல்லை.

குறிப்பிட்ட விஷயத்திலே உண்மையிலே சபாநாயகரை வெளியேற்றுவது, பதவியிலிருந்து நீக்குவது—நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்று சில பேர் சொல்கிறார்கள். அது நம்பிக்கையில்லாத் தீர்மானமே அல்ல.

It is a motion for the removal of the Speaker.

பல உறுப்பினர்கள் அதை நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்று சொல்லிக் கொண்டு ஜாலக்கு வேலையையெல்லாம் பண்ணினார்கள். ஆனால் இது அவர் அந்தப் பதவியிலிருந்து விலக வேண்டுமென்று கேட்கக்கூடிய தீர்மானம். அப்படிக் கேட்கும்போது சில சமயத்திலே

There might have been some extraneous considerations or there might have been things which were not particularly relevant to the issue mentioned here.

அப்படியிருந்தாலும், அறுதியிட்டுப் பார்க்கின்றபொழுது குறிப்பிட்ட ஒரு விஷயத்தை அழுத்தந்திருத்தமாக எல்லோரும் சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கும் எங்களுடைய இன்டர்பிரிட்டேஷன், என்னுடைய வாதத்தை உறுதிப்படுத்துவதற்காக இந்த நேரத்திலே ஒரு குறிப்பிட்ட விஷயத்தில் எந்த விதமான நோட்டீஸும் கொடுக்காமல், சொன்ன விஷயம் நடந்தற்கு மாறாக இருக்கிறது. ஆகவே 'I move the privilege motion' என்று சொன்னேன். நீங்கள், நாளைக்குப் பதில் சொல்கிறேன் என்று சொன்னீர்கள். அந்த அளவுக்கு விதிமுறைகளிலே இடம் இருக்கிறது. ஆனால் அவர் கன்சிடர் பண்ணவேண்டுமென்று, இன்று நடந்த விஷயத்தை நாளைக்கு



எழுப்ப வேண்டுமென்று எழுத்து மூலமாகக் கொடுக்கிறோம். கொடுத்தவுடனே. There is no prior consent necessary பிரிவிலெஜ் மோஷன்ஸ் அடிக்கடி வராது. சில சமயத்திலேதான் வரும். அப்படி வரும்போது பிரையர் கன்சென்ட் வேண்டுமென்ற நிலையெடுப்பதும், பிரையர் கன்சென்ட் என்ற நிலையை வைத்து, எங்களால் எழுப்பப்படுவதை எல்லாம் தடுப்பதும் சரியல்ல என்று நான் மீண்டும் சொல்ல ஆசைப்படுகிறேன்.

அதில் வரக்கூடிய கஷ்டம் என்னவென்று எனக்குப் புரிகிறது. 'என்ன இருந்தாலும் எக்சிக்யூடிவ். இந்த லெஜிஸ்லேச்சரை நடத்தினால்தான் அது லெஜிஸ்லேச்சராக இருக்க முடியும் என்றார். இல்லாமல் போனால், அதிகாரமில்லாமல் யார் யாரோ பேசி முடிவு எடுக்க முடியாமல் போகும், எக்சிக்யுடிவ் நடவடிக்கையை உரசிப் பார்க்க சரியான மன்றம் இது. எக்சிக்யூடிவ்காக சில விஷயங்களிலே அவர் காரியங்களைச் செய்ய வேண்டியிருக்கிறது. ஆனால், அதே நேரத்திலே எக்சிக்யூடிவ் தவறாகப் போகக்கூடிய நேரத்திலே அதைச் சுட்டிக் காட்ட எங்களுக்கு வாய்ப்பிருக்கிறது. அந்த வாய்ப்பு—விதிகளின் அடிப்படையிலேதான் சொல்ல முடியுமே தவிர, எக்சிக்யூடிவ் செய்வது தவறு என்றால், கண்டனத் தீர்மானம் கொண்டுவர வேண்டும், அல்லது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரவேண்டும், அல்லது இந்தமாதிரி கொண்டு வரவேண்டும். அந்த முறையில்தான் கொண்டு வருகிறேன். அதைத்தான் பல உறுப்பினர்கள் சொன்னார்கள்; அரசாங்கத்தின் பேரிலே, குறிப்பிட்ட அமைச்சரின் பேரிலே, ஏதாவது உரிமை மீறல் தீர்மானம் வரும் போதெல்லாம் தடங்கல் வருகிறது. அந்த நேரத்திலேதான் துணிச்சலாக நின்று செய்யவேண்டும்.

திரு. சிவசண்முகம் பற்றி எடுத்துச் சொன்னார்கள். எனக்கு ரொம்பக் கஷ்டம். அவருடைய கேள்விக்குப் பதில் கொடுக்கக்கூடிய ஸ்டேட்மென்ட்டை உங்களுக்குக் கொடுக்கமாட்டேன் என்று சொன்னார் என்று திரு. வீராசாமி சொன்னார்; 1955-ம் வருஷம் என்று திரு. வீராசாமி சொன்னவுடனே. (திரு. வீராசாமி குறுக்கிடு) I am not yielding. அவர் பதில் சொல்ல வேண்டியதில்லை.

திரு. நா. வீராசாமி: அவர் தவறான தகவல் கொடுத்தால்? நான் பேசியதையே மாற்றிச் சொல்கிறாரே . . .

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், அவர் பேசுகிறபொழுது, அவர் விவாதிக்கிறபொழுது நான் தலையிட்டதே கிடையாது. 1955-ம் வருஷம் என்று சொன்னார். அந்த நேரத்திலே உறுப்பினராக இருந்த திரு. வடிவேல் கூட எழுந்தார். சபாநாயகர் சிவசண்முகம் பிள்ளையை நாமெல்லாம் இந்திய

வுக்கே பெரிய வழிகாட்டியாக நினைக்கிறோம். மௌலங்கர், சிவசண்முகம் பிள்ளை ஆகியோரது தீர்ப்புகளை இன்றைக்கும் நாம் கண்களிலே ஒத்திக்கொள்ள வேண்டும். வீராசாமி சொன்னவுடனே, வடிவேல் எழுந்து சொன்னார், சிவ சண்முகம்பிள்ளை சொல்லவேயில்லையென்று. பிறகு வீராசாமி 1958 என்றார். 1958-லே சிவசண்முகம் என்று சொல்வது. . . .

**திரு. நா. வீராசாமி:** நான் சிவசண்முகம்பிள்ளை என்று சொல்லவேயில்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** 1955 என்று சொன்னார். இப்பொழுது அவர் மாற்றிக்கொள்ளட்டும். 1955 என்று சொன்னதனால் தான் வடிவேல் எழுந்தாரே தவிர, இல்லாவிட்டால் எழுந்திருக்கமாட்டார். பரவாயில்லை. திரு. சிவ சண்முகம் பிள்ளையவர்களது ஆனருக்குக் குறைவு வரக் கூடாது என்று தான் சொன்னேன்.

அதற்குப்பிறகு பல உதாரணங்களை யெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். அது சரி.

பிரிவிலெஜ் சம்பந்தமாக, I still hold, as most of the supporters of this motion have held, that rejecting that privilege motion was wrong. அதற்கு இருக்கக்கூடிய நிலை இன்றைக்கும் நாங்கள் கருதுகிறோம். அது பொலிட்டிகல் ஓரியன்டேஷன்; அது பொலிட்டிக்கல் ஓவர்டோன். அதுதான் அந்த மாதிரி வந்தது. வேறு பத்திரிகையின் பேரிலோ, தனிப்பட்டவர்கள் பேரிலோ, உறுப்பினர்கள் பேரிலோ, பிரிவிலெஜ் மோஷன் நாங்கள் கொடுக்கிறோம். எத்தனை முறை பிரிவிலெஜ் மோஷனை திடீரென்று வீராசாமி அவர்கள் எழுப்பி யிருக்கிறார்கள். அவை எப்படி அனுமதிக்கப்பட்டிருக்கின்றன என்று இன்றை வரைக்கும் எங்களுக்குத் தெரியாது. அவர் எழுந்து சொல்லப் போகிறார் என்று சபாநாயகர் சொன்னதுகூடக் கிடையாது. வீராசாமி திடீரென்று எழுந்து நான் ஒரு பிரிவிலெஜ் மோஷன் கொடுக்கிறேன் என்று சொல்லி பேசி இருக்கிறார். அது தவறு என்று நான் சொல்லவில்லை. ஆகவே, சில சிரமங் களிருக்கின்றன சபாநாயகருக்கு. அதைப் புரிந்துகொள்கிறேன். ஆகவே, இன்றைக்கும் நான் கருதுகிறேன், பிரிவிலெஜ் மோஷன் சம்பந்தமாக, சபா நாயகர் நிலை தவறு என்றுதான்.

இப்பொழுது, கட் மோஷன்கள் சம்பந்தமாக மற்றவர்கள் சொன்னார்கள். முன்பெல்லாம், எல்லா கட்சிகளுக்கும் சேர்ந்து ஒரே ஒரு கட் மோஷன்தான் என்றார்கள். லோக் சபா பிராக்டிஸை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். எத்தனை கட் மோஷன்ஸ் கொடுக்கிறோமோ, அத்தனையையும் மூவ் பண்ணு வார்கள். எழுந்து சொல்வது கிடையாது.



I move the following cut motions Nos. . . . என்போம். All the cut motions will find a place in the record.

இங்கே எங்களுக்கு ஹாண்டிகேப். நாங்கள் கட் மோஷன்ஸ் கொடுக் கிறோம். ஒருவர் பேரிலே 30, 20 கட் மோஷன்ஸ் இருக்கின்றன, கடைசியிலே ஒரு கட்மோஷன்தான் மூவ் பண்ண வேண்டும். அந்த ஒரு கட் மோஷன்தான் இடம் பெறுகிறது. அதற்குப் பிறகு எதையாவது வற்புறுத்துகிறோம், அல்லது வற்புறுத்தாமல் போகிறோம். நாங்கள் சிரமப்பட்டு பல விவரங்களைச் சேகரித்து, இந்த கட்மோஷன்ஸ் மூலமாக அரசுக்குத் தெரிவிக்க வேண்டும், அந்த இலாகாவை அலெர்ட் பண்ண வேண்டுமென்ற முறையிருக்கிறதே, அந்த முறை பாதிக்கப்பட்டிருக்கிறது. அந்த லோக் சபா முறையைக் கொண்டுவர வேண்டும். இப்பொழுது செய்வது ரொம்பப் பெரிய விஷயம் என்று அவர்கள் சொல்லக் கூடாது என்றுதான் நான் சொல்ல விரும்புகிறேன்.

அதே மாதிரி, பாயின்ட் ஆஃப் ஆர்டர் சம்பந்தமாக, அநேகமாக எல்லா மன்றத்திலும் அதே நிலைமைதான். இன்றைக்கு அவர்கள் சொன்னார்கள். மதியழகன் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று கேட்கிறபொழுது நீங்கள் உட்காருங்கள் என்று சொன்னார்கள் என்றார்கள். அதே மாதிரி, நம்முடைய நிகழ்ச்சியிலே வருகிறது, பல சமயங்களிலே வருகிறது. ஒரு நேரத்திலே பாயின்ட் ஆஃப் ஆர்டர் வருகிறது, அதற்கு கன்சிடர்ட் டெசிஷன் கொடுக்க வேண்டிய அவசியமிருக்கிறது. சில சமயங்களிலே பாய்ன்ட் ஆஃப் ஆர்டர் இல்லை, நீங்கள் டைம் வேஸ்ட் பண்ணக் கூடாது என்று யாரும் சொல்வதை ஆட்சேபிக்கவில்லை. அந்த மாதிரி இதற்கு முன்னால் நடந்திருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அட்ஜேர்ன்மென்ட் மோஷன் சம்பந்தமாக, தவறான கருத்தை மாற்ற வேண்டுமென்று நினைக்கிறேன். அட்ஜேர்ன்மென்ட் மோஷன்ஸை அலவ் பண்ணவில்லை. நம் மாநிலத்தில் பல விஷயங்கள் நடக்கின்றன. சட்டமன்றம் நடக்கின்றபொழுது, இங்கு அவற்றைக் கொண்டு வருவதற்கு அது ஒரு முறையாக இருக்கிறது நம்முடைய விதிமுறைகளிலே. இங்கே ரிஜெக்ட் பண்ணிவிடலாம். அல்லது இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக் கிறார்கள் என்று வாசித்து அதோடு நிறுத்திவிடலாம். மூன்றாவது அப்படி வாசித்து, எப்படி அது ஒத்திவைப்புத் தீர்மானமாக இருக்கமுடியும் என்று விளக்கம் கேட்கலாம். இப்படி மூன்று முறைகளிலிருக்கின்றன. விளக்கம் கேட்ட பிறகு அனுமதிக்கலாம் அல்லது நிராகரிக்கலாம். பொதுவாக, நான் இன்றைக்குச் சொல்வது, 1971-லே சட்டமன்றம் ஆரம்பித்ததிலிருந்து ஒரு ஒத்திவைப்புத் தீர்மானமாவது அனுமதிக்கப்பட்டிருக்கிறதா? ஏனென்றால்.

பேசச் சொல்கிற நேரத்திலே, யார் யார் ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்களோ, அல்லது எந்தக் கட்சியிலே கொடுத்திருக்கிறார்களோ, அதில் ஒருவர் பேசுகிறோம். ஆனால் கட்சிக்குச் சந்தர்ப்பம் கிடையாது. அந்தப் பகுதியிலேயிருக்கிற உறுப்பினர்கள் எழுந்து இன்ன நடந்தது என்று சொல்ல சந்தர்ப்பம் கிடையாது. கடைசியில் உறுப்பினர்கள் சொன்னதைக் கேட்டு அரசின் சார்பிலே சொல்ல சந்தர்ப்பம் கிடையாது. அந்தச் சந்தர்ப்பம் வேண்டுமென்றால் ஒத்திவைப்புத் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டு அன்றைக்குப் பிற்பகலிலே 2 மணிநேரம் விவாதம் நடத்துவோமானால் சில சமயம் விவாதம் நடந்த பிறகு ஓட்டெடுப்பு நடக்கலாம், அல்லது ஓட்டெடுப்பு இல்லாமலே போகலாம். அப்படி எடுப்பது என்பது it will be Censure motion. ஒத்திவைப்புத் தீர்மானத்தை ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் கொடுக்க முடியாது. ரூல் 42-ன் கீழ் தீர்மானத்தை ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் கொடுக்க முடியாது. ஒத்திவைப்புத் தீர்மானம் என்ற அளவிற்கு இல்லாமல், கவன ஈர்ப்பு என்ற வகையில் ரூல் 41-இல் அவர்களுக்கு வாய்ப்புக் கொடுக்கப் பட்டிருக்கிறது. இன்றைக்கு ஆளுங்கட்சியிலே இருக்கக்கூடியவர்கள் ரூல் 41-ஐ பயன்படுத்திக் கொள்ளவில்லை யென்றால் அது எங்களுடைய தவறா? நாடாளு மன்றத்திலே ரூல் 41 என்று வருகிறபோது கால் அட்டென்ஷன் எல்லாம் பெரும்பகுதி ஆளுங்கட்சியிலிருந்து தான் வரும். ஆகவே, எங்களுக்கு அதிகமாகக் கொடுத்துவிட்டதாக சொல்வது சரியல்ல. திரு. வீராசாமி அவர்கள் விவரங்கள் கொடுத்தார்கள், இன்னும் விவரங்களை யெல்லாம் கொடுக்கட்டும், நல்லதுதானே, பங்கி காலனி அரிசனங்கள் காலனியிலே துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது, உடனடியாக நாடாளு மன்றத்திலே சபையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று தீர்மானம் கொண்டு வந்தார்கள். அதற்குப் பதில் கொடுத்தார்கள். இன்றைக்கு விவாதிப்போம் இது முக்கியமான விஷயம்; காந்தியடிகள் எந்த இடத்தில் பிரச்சாரம் செய்தாரோ அந்த இடத்திலே துப்பாக்கிப் பிரயோகம் நடந்து ஒரு அரிசன் இறந்துவிட்டார், 2, 3 பேர்களுக்குக் காயம் என்று சொல்லி இப்போதே சபையில் உள்ளவர்கள் எல்லாம் அந்த இடத்திற்குச் செல்வோம், பிற்பகலில் விவாதிப்போம் என்று சொல்லப் பட்டது. Adjournment motion was allowed

இப்படி நாடாளுமன்றத்திலே இரண்டு முறைகள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. ஒரு முறை 50 பேர்கள் வேண்டுமென்றால் 48 பேர்கள்தான் இருந்தார்கள், அதனால் லீவ் கிடைக்கவில்லை, அதனால் கொண்டுவரப்படவில்லை. இப்படி ஒத்திவைப்புத் தீர்மானம் என்று வந்து சென்ஷ்யூர் மோஷன் ஆகிவிட்டது. அரசாங்கம் செய்கிற தவறைச் சுட்டிக்காட்டுவதற்காக அட்ஜேர்ன்மென்ட் மோஷன் கொண்டு வரக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. அதற்கு மாறாக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரக்கூடிய நிலைமை ஏற்படுகிறது.





எக்ஸ்பஞ்ச் சம்பந்தமாக விவாதத்திற்கு எடுத்துக் கொண்டால் மற்ற இடங்களிலேயும் செய்கிறார்கள். எக்ஸ்பஞ்ச் மென்டாலிட்டி இருக்கிறது, அது கூடாது. ரெலவன்ஸி என்பதை எடுத்துக் கொண்டு பார்த்தால் பல விஷயங்கள் இருக்கலாம். நேற்றைய தினம் திரு. வீராசாமி அவர்கள் எழுந்து திடீரென்று சீன கப்பல்கள் இரண்டு வந்திருக்கின்றன என்று சொன்னார்கள். இதிலே என்ன பாயின்ட் ஆப் ஆர்டர்? சபைக்கு ஒரு இன்பர்மேஷன் கொடுப்பதாக அது இருந்தது. அதைத் தவறு என்று நான் ஏற்றுக்கொள்ளவில்லை. உறுப்பினர்கள் சுறு சுறுப்பாக இருக்கிறார்கள், ஆளுங்கட்சியிலேயும் மற்றக் கட்சிகளிலேயும் உறுப்பினர்கள் சுறுசுறுப்பாக இருக்கிறார்கள், அது நல்லது தானே, சபையினுடைய முழு விவாதத்திற்கு அது உதவியாக இருக்கும்.

நம்முடைய சட்டமன்றத்திலே சபாநாயகருக்கு இருக்கக்கூடிய அதிகாரத்தையெல்லாம் குறைத்துக் கொண்டே வந்திருக்கிறோம். ஒவ்வொரு சபாநாயகராகப் பெயர் சொல்லலாம். முதலில் சிவசண்முகம்பிள்ளை அவர்கள் இருந்தார்கள், பிறகு டாக்டர் யு. கிருஷ்ணாராவ், எங்கள் காலத்திலே மதியழகன் இருந்தார்கள், எங்களுக்கு சில விஷயங்கள் கிடைத்தன, பின்னாலே அவர்கள் ஆளுங்கட்சிக்கு வந்தார்கள், பல தகராறுகள் ஏற்பட்டு இருக்கலாம். அதற்குப் பின்னாலே சபாநாயகர் இப்போதுள்ள நிலையில் சபையை I adjourn the House sine-die என்று செய்யமுடியாது.

எல்லா நாடுகளிலும் இருக்கக்கூடிய உரிமை இங்கே மட்டும் பிடுங்கப் பட்டிருக்கிறது. விதிகளைத் திருத்தக்கூடிய காலத்திலே the residuary powers of the Speaker என்பதை எடுக்க வேண்டுமென்றுகூடச் சொன்னார்கள்; நாங்கள் சண்டை போட்டோம். அது கூடாது என்று சொன்னோம், சபையை எப்படி நடத்த வேண்டுமென்ற உரிமை சபாநாயகருக்கு இருக்க வேண்டும் என்று சொன்னோம். எதிர்க்கட்சியினரும் ஆளுங்கட்சியினரும் எழுப்பக்கூடிய பிரச்னைகளை விவாதிப்பதற்கு அப்போது தான் உதவியாக இருக்கும்.

எக்ஸ்பஞ்ச் பற்றி சொல்லிவிட்டேன், அட்ஜேர்ன்மென்ட் மோஷன் பற்றிச் சொல்லிவிட்டேன். மனச்சாட்சிபற்றிப் பேசுவது அநேகமாகப் புராணப் பிரசங்கத்திலே வைத்துக்கொள்ளலாம் அல்லது மாதாகோயிலில் வைத்துக் கொள்ளலாம். அரசியலிலே மனச்சாட்சி, சத்தியம் என்று பேசுவது எல்லாம் தனிப்பட்டதாக வைத்துக்கொள்ளலாம்.

திரு. செ. கந்தப்பன்: திருமதி இந்திராகாந்தி தான் அரசியலில் முதன் முதலில் மனச்சாட்சியைப் புகுத்தினார்கள் . . .

[1975 ஏப்ரல் 2

திரு. கே. டி. கே. தங்கமணி : அவர்கள் சொன்னதால் நாங்கள் ஏற்றுக் கொள்ளவேண்டுமென்பதல்ல. பாலிசி பைட், அதிலே இருக்கக்கூடிய நிலைமையைப் பார்க்க வேண்டும். மனச்சாட்சியைத் தொட்டுச் சொல்லுங்கள் மனச்சாட்சியைத் தொட்டுச் சொல்லுங்கள் என்று சொல்வது எல்லாம், பாதிரியார் தான் சொல்லவேண்டும். இங்கே ஒரு பிரச்சனை வந்துவிட்டது என்றால் எங்கள் மனச்சாட்சிபடி செய்யலாமா இல்லையா என்பது வேறு விஷயம், இன்னும் சில விஷயங்கள் எல்லாம் இருக்கின்றன, இருந்தாலும்
I find the House is restive
நானும் சில கூட்டங்களிலே பேசிப் பழக்கமுள்ளவன். ஆகவே, இவ்வளவு விவாதத்திற்குப் பின்னால் அவை முன்னவர் விளக்கியதற்குப் பிறகும் சபாநாயகர் பதிலுக்குப் பிறகும் இந்தத் தீர்மானம் சரியான தீர்மானம்தான் என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :
' That this House resolves to remove the Hon. Speaker from his Office for his various acts commission and omission in respect of admitting Privilege Motions protecting the Ruling Party at all costs in various matters etc. '

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இந்த அளவோடு முடிவுற்று, நாளைக் காலை 9 மணியளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-26 மணியளவில் ஒத்திவைக்கப்பட்டது.

5. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory rules and orders.*

159. Notification issued in G.O. Ms. No. 2456, Rural Development and Local Administration, dated the 20th November, 1974 in regard to certain amendments to the Tamil Nadu Municipal Medical Service Rules, 1970. [Laid on the table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municiplities Act, 1920 (Tamil Nadu Act V of 1920)].

B. *Reports, Notifications and Other Papers.*

@ 139. Policy Note on Demand No. 31 — Welfare of Scheduled Tribes and Castes, etc. (Tamil).

@ Despatched to Members on 31-3-1975.



1975 ஏப்ரல் 2]

இணைப்பு.

[398-ம் பக்கத்தில் 522-ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க]

1. அரசு, உயர்நிலைப்பள்ளி, தோவாளை

கட்டிட வேலை பொதுப்பணித் துறையினரால் 1974-ம் ஆண்டு மார்ச் மாதம் துவக்கப்பட்டுள்ளது.

2. அரசு உயர்நிலைப்பள்ளி, கொட்டாரம்

கட்டிடத்திற்கு கடைகால் காங்கிரீட் போடப்பட்டு மேல் சுவர் கட்டிட வேலை துவங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

3. அரசு உயர்நிலைப்பள்ளி, பூதப்பாண்டி

கட்டிட பணியைத் துவக்கி விரைவில் முடிக்க நாகர்கோவில் பொதுப்பணித் துறை நிர்வாகப் பொறியாளருக்குத் தேவையான அனுமதியை அளிக்குமாறு சென்னை பொதுப்பணித்துறை கட்டிடப் பிரிவு தலைமைப் பொறியாளருக்கு, பள்ளிக் கல்வி இயக்குநரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. இப்பணிகள் தற்போதைய நிலை பற்றிய விவரம் இன்னும் கிடைக்கப் பெறவில்லை.

4. அரசு உயர்நிலைப்பள்ளி, தாழக்குடி

கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டுவிட்டது.

5. அரசு நடுநிலைப்பள்ளி, திருப்பதிசாரம்.

கட்டிடம் கட்டுவதற்கு விரைவில் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

6. அரசு துவக்கப்பள்ளி, திட்டுவிளை

அரசு நடுநிலைப்பள்ளி, திட்டுவிளை.

கட்டிடம் கட்டுவதற்குத் தேவையான துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

7. அரசு துவக்கப்பள்ளி, ரத்தினபுரம்

பள்ளியின் கட்டிடப் பணியின் முன்னேற்றம் பற்றிய விவரங்கள் இன்னும் கிடைக்கப் பெறவில்லை.

8. அரசுப் பள்ளி, அழகப்பபுரம்.

9. அரசு துவக்கப்பள்ளி, வழுக்கம்பாறை

கட்டிடத்திற்கான வரைபடம் மற்றும் மதிப்பீடுகள் பெற்ற பின் பரிசீலனை—செய்யப்படும்.

10. அரசு துவக்கப்பள்ளி, ஒற்றையால்விளை

இக்கட்டிடம் கட்டுவதற்குத் தேவையான தற்போதைய மதிப்பீடு ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட தொகைக்கு மிகவும் அதிகமாக உள்ளதால் வேறு திருத்திய மதிப்பீடு பெறத் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதற்கு ஒப்புதலளித்தபின் வேலை துவங்கப்படும்.

11. அரசு இளநிலை ஆதாரப் பள்ளி, கனகப்பபுரம்.

கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு விட்டது.



# தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை.

---

## வியாழக்கிழமை, 1975 ஏப்ரல் 3.

---

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

### *Pay of teachers.*

* 541 *Q.*—Thiru N. K. PALANISAMY: Will the Hon the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether the Government have received the copy of the resolution passed by the General Council of the Tamil Nadu Graduate Teachers' Association during November 1973 requesting the Government to disburse the teachers' salary through treasuries, by way of cheques; and

(*b*) if so, the action taken thereon ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, இந்தத் தனியார் பள்ளிகளில் இருக்கும் ஆசிரியர்களுக்காவது இவ்வாறு செய்ய முன்வருமா? ஏற்கனவே அவர்களுக்கு ஒழுங்காக அவர்கள் கையெழுத்துப் போடும் அளவிற்கு பணம் கொடுக்கப்படுவதில்லை என்ற புகார் பரவலாக இருக்கிறது. எனவே அந்தப் பள்ளிகளுக்கு காசோலை வடிவிலே சம்பளம் கொடுக்க வேண்டுமென்று,—பட்டதாரி ஆசிரியர்களுக்கு மட்டுமல்ல, இருக்கின்ற அத்தனை ஆசிரியர்களுக்கும் காசோலை வடிவில் கொடுக்க வேண்டுமென்று—ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[1975 ஏப்ரல் 3

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, எந்த ஒரு குறிப்பிட்ட பள்ளிக் கூடத்திலேயாவது ஒழுங்கீனமாக நடந்தாலோ அல்லது அந்தப் பள்ளியின் தாளாளரோ மற்றவர்களோ முறை தவறி நடக்கிறார்கள் என்று தெரிந்தாலோ இப்பொழுது வகுத்துள்ள சட்ட விதிகளின் அடிப்படையிலே அரசாங்கமே நேரடியாக, மாவட்டக் கல்வி அதிகாரி நேரடியாகத் தரலாம் என்று வைத்திருக்கிறோம். அப்படிச் சிலபல ஒழுங்கீனங்கள் நடந்து, யார் தாளாளர் என்று நிர்ணயிப்பதில் தகராறுகள் வந்தால் அந்த நேரத்தில் தருகிறோம். அப்படிப்பட்ட முறையில் எங்கேயாவது ஒழுங்கீனங்கள் இருக்கின்றன என்று எப்பொழுது அரசின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டாலும் அது விசாரிக்கப்பட்டு, கொடுப்பதற்கான வழிவகை இருப்பதால் எல்லாப் பள்ளிகளுக்கும் அப்படிச் செய்ய வேண்டிய அவசியமில்லை. அந்த எண்ணத்தின் அடிப்படையிலேதான் இப்பொழுது பள்ளிப் பணிப் பாதுகாப்புச் சட்டம்கூட நிறைவேற்றப் பட்டிருக்கிறது.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறும்பொழுது ஒழுங்கீனமாக நடக்கும் நிர்வாகிகளைப் பொறுத்தவரையில் அந்தப் பள்ளிகளுக்கு நேரடியாக செக் மூலமாக ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுப்பதாகக் கூறினார்கள். ஆனால் ஒழுங்கீனங்களை எடுத்துச் சொல்ல வேண்டிய அந்த ஆசிரியர்கள் அதைச் சொன்னாலே அவர்களது ஊதியத்திற்கு ஆபத்து ஏற்படக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே, இப்படிப் பட்ட சிரமங்களையெல்லாம் தவிர்ப்பதற்காக தனியார் கல்லூரி களிலுள்ள எல்லா ஆசிரியர்களுக்கும் அரசாங்கமே நேரடியாக செக் மூலம் சம்பளத்தைத் தருகின்ற முறையில் ஆவன செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, எல்லாக் கல்லூரிகளிலும், எல்லாப் பள்ளிகளிலும் இப்படிப்பட்ட நிலைமை வருகிறது என்று சொல்ல முடியாது. அந்த உரிமையைப் பறிக்கும்பொழுது அவர்கள் பல்வேறு ரிட்டுகள் போடுகின்ற தன்மைகள் ஏற்படுகின்றன. ஆகவே, தாளாளராக இருந்து, அந்த உரிமைகூட எங்களுக்கு இல்லையா என்று கேட்கும் சூழ்நிலை ஏற்படுகிறது. அந்த அடிப்படையிலே, இப்பொழுது ஒழுங்கீனங்கள் நடைபெற்றால் அதை அவர்களே கொண்டு வர வேண்டிய அவசியமில்லை, பொதுமக்களிலே யார் அதைக் கொண்டு வந்தாலும் அதை



1975 ஏப்ரல் 3]

விசாரித்து நடவடிக்கை எடுக்கும் கட்டம் இருக்கிறது. அந்த அடிப்படையிலே வருவதால் எங்கே பாதுகாப்பு இல்லாமல் இருந்தாலும் பாதுகாப்பு தரும் முழுத் தன்மை ஏற்பட்டிருக்கிறது. ஏற்கனவே உள்ள சட்டத்திலேயிருந்த சில பல குறைபாடுகளைக் கூட இந்தப் புதுச் சட்ட விதிமுறைகளிலே நாம் மாற்றியிருக் கிறோம்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவரவர்களே, தற்பொழுது ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் சம்பள முறையினால் சில சமயங்களில் குறைபாடுகளும் காலதாமதமும் இருப்பதாக பரவலான கருத்து இருக்கிறதே, இது அரசாங்கத்தின் கவனத் திற்குக் கொண்டு வரப்பட்டதா? அந்தக் குறைபாட்டைப் போக்குவதற்கு அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுத்திருக் கிறதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, குறைபாடு என்று எங்கே சுட்டிக்காட்டப்பட்டாலும் அதைப் போக்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

**திரு. ந. சோமசுந்தரம் :** தலைவரவர்களே, சில ஒழுங்கீனங்களைத் தவிர்க்கவேனும் அரசு காசோலை மூலமாகவே ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்குவதில் அரசுக்கு என்ன சிரமம் இருக்கும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, நான் முதலிலேயே குறிப்பிட்டேன், ஒரு பள்ளிக்கு என்று ஏராளமான அறக் கட்டளைகளை ஏற்படுத்தி, ஒழுங்கு முறையாக நடக்கிறோம் என்று கூறும்பொழுது அதற்காகச் சிலபல முறைகளை வகுத்துத் தர வேண்டியவர்களாக இருக்கிறோம். அவைகளிலே தலையிடும்பொழுது நாம் உரிமையைப் பறித்ததாக நினைக்கின்ற நிலைமை ஏற்படுகிறது. பல்வேறு பள்ளிகள் முறையாகத்தான் நடக்கின்றன, சிலபல பள்ளிகளில் குறைபாடுகள் ஏற்படுகின்றன. அப்படிக் குறைபாடுகள் ஏற்படும்பொழுது அதைத் தடுப்பதற்கு ஏற்கனவே உள்ள சட்ட விதிகளில் இடம் இருந்தது. அதை மேலும் விரிவுபடுத்தி இப்பொழுது புதிய சட்ட விதிகள் நிறை வேற்றப்பட்டிருக்கின்றன. மிக அதிகமாக ஒழுங்கீனங்கள் ஏற்பட்டாலும்கூட ஏற்கனவே பள்ளிகளை ஏற்று நடத்த

வாய்ப்பில்லாமல் இருந்தது. ஆனல் புதிய சட்டத்தின்படி, பள்ளியை சில ஆண்டுகள், 5 ஆண்டுக்காலம் வரை நடத்தி, பிறகு அவர்களிடத்தில் ஒப்படைக்கின்ற வாய்ப்பு இருக்கிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, இப்பொழுது இயற்றப்பட்டிருக்கும் தனியார் பாடசாலைகளையும் கட்டுப்படுத்தும் சட்டம் அவர்களுடைய சம்பளத்தைப் பாதுகாக்கப் போதிய அளவிலே அவர்களுக்கு உகந்ததாக இல்லை என்ற கருத்தை ஆசிரியர்கள் கூறுகிருர்கள். அதிலும் குறிப்பாக, நான்-டீச்சிங் ஸ்டாஃபும் இதோடு சேர்ந்து சொல்கிருர்கள். எனவே, இதற்கு மாற்று நடவடிக்கை எடுக்க அரசாங்கம் ஏதாவது வழி வைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அதுபற்றிப் புகார்கள் எதுவும் அரசுக்கு வரவில்லை. நான் குறிப்பிட்டபடி, புகார்கள் ஏதாவது வருமேயாஞல் அதுபற்றி நடவடிக்கை எடுக்க விதிமுறைகளில் இடம் இருக்கிறது. இப்பொழுதே இந்தச் சட்டத்தை எதிர்த்து, இதை நடைமுறைப் படுத்தக் கூடாது என்று சுமார் 400-க்கு மேற்பட்டவர்கள் ரிட்டுக்குப் போய் இருக்கிருர்கள். இது தீர்ந்தபிறகு, குறைபாடு ஏதேனும் ஏற்பட்டால் எப்பொழுதும் திருத்தம் செய்து கொள்ள நமக்கு வழிமுறைகள் இருக்கின்றன.

**திரு. வை. பாலசுந்தரம் :** தியாகராயநகரில் ஒரு தனியார் பள்ளி—கமலக்கண்ணன் பாடசாலை என்று பெயர். அதை நடத்துகிற தனியார் அரசிடம் கிருன்ட் வாங்கிக்கொண்டு பள்ளிக் கட்டடத்திற்கு கூரை இல்லாமலும் ஆசிரியர்கள் நிறுத்தப் பட்டுமிருக்கிருர்கள் என்று கூறப்படுகிறது. அவர் சென்னை நகரத்திலேயே ஒன்பது பள்ளிக்கூடங்கள் நடத்துகிருர் என்று சொல்லப்படுகிறது. எவ்வளவோ பெட்டிஷன்ஸ் அவர் மீது போடப்பட்டிருக்கின்றன என்றும் கூறப்படுகிறது. இதுவரையில் அரசு அவர்மீது என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** முறைப்படி அப்படிப்பட்ட புகார்கள் கொடுப்பதற்கு இப்போது புதிய விதி முறைகள், யார் யாரிடத்தில் முறையிடுவது, மேல்முறையீடு யாரிடம் செய்யவேண்டும் என்றெல்லாம் இருக்கிறது. அந்த முறைப்படி விண்ணப்பிக்கலாம். தக்க நடவடிக்கைகள் எடுக்க அரசு ஆயத்தமாக இருக்கிறது.



**திரு. பெ. சீனிவாசன் :** இப்போது குறைபாடுகள் ஒருவேளை இல்லை என்று அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொண்டாலும் செக் டிரான்ஸாக்ஷன்ஸ் இருந்தால் அரசின் சேமிப்புக் கொள்கைக்கும் அதுவகை செய்யும். ஆசிரியர்கள் உடனடியாக பணத்தை வாங்கிச் செலவு செய்துவிடாமல் பாங்கில் போட்டு வைத்து சேமிக்கவும் அது உதவிகரமாக இருக்கும். எனவே எல்லா ஆசிரியர்களுக்கும் செக் மூலம் சம்பளம் கொடுப்பதற்கான ஏற்பாட்டினை அரசு செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பள்ளிக் கூடங்களைப் பொறுத்த அளவிற்கு அந்த முடிவுக்கு வரவில்லை. கல்லூரிகளைப் பொறுத்து செக் மூலம் தரலாம் என்று சிலபல இடங்களில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. நாளடைவில் அதற்கு ஆக்கம் ஏற்பட்டால் அதற்கான முயற்சியில் ஈடுபடலாம் என்றிருக்கிருேம். கல்லூரி அளவில் செயல்படலாமா என்றளவில்தான் நிலைமை இருக்கிறது.

**திரு. அ. ஆறுமுகம் :** நகராட்சிகளில் பணிபுரியும் ஆசிரியர் களுக்கு உடனடியாக சம்பளம் வழங்குவதில்லை. உதாரணமாக, எனது இடப்பாடி நகராட்சியில் ஆசிரியர்களுக்கு இரண்டு மூன்று மாதங்களாக சம்பளம் வழங்கப்படவில்லையென்று, ஆசிரியர்கள் குழு என்னிடம் முறையீடு செய்தார்கள். அந்த ஆணையாளரைச் சந்தித்துக் கேட்டபோது போதுமான நிதி இல்லை என்று இரண்டு மூன்று மாத காலம் தாமதமாகும் என்று சொல்லி அனுப்பி விட்டார்கள். எனவே அப்பேர்ப்பட்ட நகராட்சிகளில் அரசே ஆசிரியர்களுக்கு சம்பளம் கொடுக்க முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அந்தந்த நகராட்சிகளின் நிலைமையைப் பொறுத்து அவர்கள்தான் முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும். எந்த வகையில் அரசாங்கத்தை அணுகவேண்டுமென்று விரும்புகிருர்களோ அந்த வகையில் அணுகிஞல் அரசாங்கம் அதற்கான நிலைமைகளை ஆராய முடியும். அந்தந்த நகராட்சிகள்தான் முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிருர்கள்.

**திரு. கே. எ. வகாப் :** காசோலை வழங்குவதால் தாளாளரின் உரிமை பறிக்கப்படும் என்ற முறையில் சொன்ஞர்கள். பணத்திற்குப் பதிலாக காசோலை தருவதில் என்ன கஷ்டம்?

[1975 ஏப்ரல் 3

ஆசிரியர்கள் பெயரில் ஆங்காங்குள்ள வங்கிகளில் அக்கவுண்ட்ஸ் ஏற்படுத்தி அதில் பணத்தை அட்ஜஸ்ட் செய்வதுபோல் செய்தால் நல்லது. அதன்மூலம் அவர்கள் சம்பளத்தை பூர்ணமாகப் பெற தனியார் பாடசாலைகளிலும் வழிவகை செய்யப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இத்தகைய கருத்துக்களை எல்லாம் குழுவில் இருந்தவர்கள் பலவகைகளில் ஆராய்ந்து நீண்ட நாட்கள் விவாதித்ததற்குப் பிறகு அந்தப் பொறுக்குக் குழுவில் உள்ளவர்கள் கலந்து ஒரு முடிவுக்கு வந்தார்கள். அந்த முடிவின் அடிப்படையில்தான் விதிமுறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. இதில் மேலும் குறைபாடுகள் ஏற்பட்டால் தக்க நடவடிக்கைகளை எதிர்காலத்தில் ஆராய்ந்து நாம் மேற்கொள்ளலாம்.

### தொடக்கநிலை ஆசிரியர்கள்.

*542 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

பத்து வருடம் பணி செய்துள்ள எல்லா ஹையர் கிரேடு ஆசிரியர்களுக்கும் மறு பயிற்சி அளித்து செகண்டரி கிரேடு ஆசிரியர்களாக உயர்த்தக் கோரி தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள் மன்றத்தின் கோயம்புத்தூர் கிளை அண்மையில் கோரிக்கை ஏதேனும் அரசுக்கு அனுப்பியுள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இல்லை.

**திரு. என். கிட்டப்பா :** ஹையர் கிரேடு ஆசிரியர்களாக இருந்து பிரைவேட்டாக எஸ்.எஸ்.எல்.ஸி. பாஸ் செய்த ஆசிரியர்கள் அனைவரையும் உடனடியாக செகண்டரி கிரேடு ஆசிரியர்களாக நியமிப்பது பற்றி அரசு ஆலோசிக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** செகண்டரி கிரேடு ஆசிரியர்களாவதற்கு உள்ள கல்வித் தகுதியை அவர்கள் பெற்றிருந்தால் ஹையர் கிரேடு பதவிகள் முறைப்படி செகண்டரி கிரேடாக உயர்த்தப்படுகிற சூழ்நிலையில் அவர்கள் ஏற்றுக் கொள்ளப்படுவார்கள். அந்த முறையில் பலர் ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கிறார்கள்.



1975 ஏப்ரல் 3]

**திரு. பெ. சீனிவாசன் :** ஹையர் கிரேடு டீச்சேர்ஸ் என்பது காரணமாக உண்மையில் எங்கள் பஞ்சாயத்து யூனியன் நிர்வாகத்தில் உள்ள பள்ளிகளில் நிர்வாகச் சிக்கல் ஏற்படுகிறது. அப்பாயின்ட்மென்ட்—எவ்வளவு ஹையர் கிரேடு ஆசிரியர்களைப் போடுவது, எவ்வளவு செகண்டரி கிரேடு ஆசிரியர்களைப் போடுவது என்ற விஷயங்களில். ஹையர் கிரேடு ஆசிரியர்கள் வாழ்க்கை முழுவதும் அப்படியே இருப்பதும் நல்லதல்ல. பக்கத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளிக்கூடங்களில் வேகன்ஸி ஏதாவது ஏற்பட்டால் அதை அப்கிரேட் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அவர்கள் இப்போது எஸ்.எஸ்.எல்.ஸி. தேர்வு எழுதலாம் என்ற உரிமை வழங்கப்படுகிறது. அவர்கள் அத்தகைய தேர்வு எழுதி தகுதியை உயர்த்திக்கொண்டால், செகண்டரி கிரேடு தகுதி ஏற்படும்போது, ஹையர் கிரேடு செகண்டரி கிரேடாக மாற்றப்படுகிறது. எதிர் காலத்தில் ஹையர் கிரேடு புதிதாக உருவாக்குவதில்லை. செகண்டரி கிரேடுதான் உருவாக்குவது என்றிருக்கிறோம். இப்போதுள்ள ஹையர் கிரேடு பாஸ் செய்துவிட்டு இருக்கிறவர்களுக்கு முன் உரிமை தரவேண்டும் என்று வைத்திருக்கிறோம்.

**திரு. த. சோணையா :** ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் ஹையர் கிரேடு ஆசிரியர்கள் தேவை என்று கேட்டால் இல்லை என்று வருகிறது. ஆகவே ஹையர் கிரேடு ஆசிரியர்களைப் போடவேண்டிய பலயிடங்கள் காலியாக இருக்கின்றன. அந்தயிடங்களில் செகண்டரி கிரேடு பாஸ் செய்தவர்கள் வந்தால் ஹையர் கிரேடு போஸ்டில் வேலை செய்ய உத்தரவாதம் கொடுத்தால் அவர்களைப் போடுவார்களா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** எங்கெங்கு ஹையர் கிரேடு ஆசிரியர்கள் கிடைக்கவில்லையோ அங்கு அதிகாரிகள் அனுமதி பெற்று செகண்டரி கிரேடுகளை நியமிக்கலாம் என்று விதி இருக்கிறது. அந்த ஊராட்சி ஒன்றியத்தின் சூழ்நிலையைப் பொறுத்து அந்த நிலையை மேற்கொள்ளவேண்டி யிருக்கிறது.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** செகண்டரி கிரேடு ஆசிரியர்களாக இருந்து பி.ஏ., எம்.ஏ., பி.ஈ.டி., பட்டம் பெற்ற பிறகும் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களாக தொடர்ந்து வேலை செய்யவேண்டிய நிர்ப்பந்தம்

இருக்கிறது. ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கு அரசாங்கப் பள்ளிகளாக இருந்தாலும் சரி, அல்லது தனியார் பள்ளிக் கூடங்களாக இருந்தாலும் சரி, உயர்நிலைப் பள்ளிகளில் வருகிற வேகன்ஸிகளில் இந்தப் பட்டதாரிகளுக்கு இடம் அளிக்கப் படுவதில்லை. எனவே இம்மாதிரி பட்டம் பெற்ற ஆசிரியர்களுக்கு உயர்நிலைப் பள்ளிகளில் காலி இடங்கள் வந்தால் அதில் அவர்களை நியமிக்க வேண்டும் என்று அரசாங்கம் ஆணை பிறப்பிக்குமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** செகண்டரி கிரேடில் இருப்பவர்கள் பி.ஏ., பி. ஈ.டி. பட்டம் பெற்று தகுதி இருந்தால் அந்தப் பள்ளிக்கூடத்தில் அதே பாடத்திற்குரிய வேலை காலி ஏற்படும்போது அதில்தான் நியமிக்க வேண்டும் என்று அரசுப் பள்ளிகள், ஒன்றியப் பள்ளிகளை வலியுறுத்தி வருகிறோம். தனியார் பள்ளிகளும் வலியுறுத்தப்பட்டு வருகிறார்கள். சிலபல இடங்களில் போடவில்லை என்ற குறைபாடும் வருகிறது. எந்த வகையில் வற்புறுத்தலாம் என்பதுபற்றி கல்வித் துறை ஆலோசித்துக் கொண்டிருக்கிறது. அவர்களுக்கு கொடுத்திருக்கிற சுற்றறிக்கையில் காலி ஏற்படும்போது அந்தப் பள்ளியில் பணியாற்றுகிறவர்கள் தகுதி பெற்றிருந்தால் அவர்களுக்கு முன் உரிமை தரவேண்டும் என்று சொல்லப்படுகிறது. அதைக் கட்டாயப்படுத்த வழி இருக்கிறதா என்பதை ஆராய்ந்து வருகிறோம்.

**திரு. என். கிட்டப்பா:** பத்தாண்டுகளாக தொடர்ந்து பணி புரிகிற எல்லா ஹையர் கிரேடு ஆசிரியர்களையும் செகண்டரி கிரேடு ஆசிரியர்களாக ஆக்குவதற்கு அரசு வழிவகை காண முயற்சிக்குமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அப்படி ஆக்க இயலாது. அவர்கள் பெரும்பாலும் எட்டாவது வகுப்பு வரை படித்தவர்களாக இருக்கிறார்கள். இப்போது கணிதம், அறிவியல் இவற்றில் செகண்டரி கிரேடு படித்தவர்களுக்கே மறுபயிற்சி அளித்துச் செல்லவேண்டியிருக்கிறது. கல்வித் தகுதி குறைவாக வைத்து செகண்டரி கிரேடு பதவி தர முடியாது. தகுதியைப் பெருக்கிக் கொள்ள அவர்களுக்கு வாய்ப்பு வசதி இருக்கிறது.



தனியார் கல்லூரிகளுக்கு மானியம்.

***543 வினா—திரு. கே. எ. வகாப்:** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள தனியார் கல்லூரிகளுக்கு அளிக்கப்பட்டு வந்த மானியத் தொகைகள் 1973-74-ம் ஆண்டிற்கு பெரிய அளவில் குறைக்கப்பட்டிருப்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அப்படி எந்தெந்த கல்லூரிகளுக்கு, எவ்வளவு குறைக்கப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. கே. எ. வகாப்:** 1973-74-ல் இல்லை என்றாலும் 1974-75-ல் எல்லா தனியார் கல்லூரிகளிலும் ஆடிட் முறை ஏற்படுத்தி கணிசமான தொகை இரண்டு, இரண்டரை லட்சம் ரூபாய் என்று மானியம் கொடுப்பதில் குறைவு ஏற்பட்டிருக்கிறது. அதைப் போக்க அந்த மானியத்தை சரியான முறையில் கொடுக்க வழிவகை செய்யப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** ஏற்கனவே ஒரு கணக்கு நோஷனல் என்ற முறையில் குறிப்பிட்ட கணக்கு வைத்திருந்தார்கள். அதற்கும் செலவிற்கும் சம்பந்தம் இல்லாமல் இருந்தது. அண்மையில் ஒரு ஏற்பாட்டின்படி எவ்வளவு வரவு என்பதையும் காட்டவேண்டும், எவ்வளவு செலவு என்பதையும் காட்ட வேண்டும். டெபிஸிட்டில் 80 சதவிகிதம் அரசு ஏற்றுக் கொள்ளும், 20 சதவிகிதம் அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று இருந்தது. அதனால் சிலபல கல்லூரிகளில் சங்கடங்கள் ஏற்படுகின்றன என்பதற்காக விதிமுறைகள் சில வகுத்து செலவழிப்பதில் சிலவற்றிற்கு முழுவதும் ஏற்றுக்கொள்கிற அளவில் முன்மானியமாக 26—3—1974-ல் ரூ. 30 லட்சம் ஒதுக்கி பல்வேறு கல்லூரிகளுக்கு தந்தோம். அதற்குப் பிறகும் சிலபல வகைகளில் தாங்கமுடியாத அளவிற்கு சில செலவுகள் இருக்கின்றன என்று கேட்டதற்குப் பிறகு மறுபடியும் ஆராயப்பட்டது. ஆசிரியர்களின் எண்ணிக்கையை குறைக்காமல் பாதுகாத்தும் அவர்களுக்கு தற்போது நிர்வாகத்தினால் வழங்கப்படும் ஊதியம் குறையாத நிலையில் பாதுகாத்தும் 1—4—1973-க்குப் பிறகு அளிக்கப்பட்ட அகவிலைப்படிக்கான மானியத்தை நூறு சதவிகிதம்

மானியமாக அளித்தும், தளர்த்திய முறையில் 1973-74 ஆண்டிற்கான மானியம் கணக்கிடப்பட்டுள்ளது. இதனால் அரசுக்கு மேற்கொண்டு கூடுதல் ரூ. 46,32,000 ஆகிறது. இந்த வகையில் ஓரளவு தனியாரின் சுமையைக் குறைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. நா. வீராசாமி:** தலைவரவர்களே, அந்த மானியம் கொடுக்கின்ற நேரத்தில்—அன்-குவாலிபைடாக இருந்தாலும், பி.எஸ்ஸி., அல்லது பி.காம். பஸ்ட் கிளாசில் தேறியிருந்தால், அவர்களை துணைப் பேராசிரியர்களாக சில கல்லூரிகளில் வைத்து இருக்கிறார்கள்—அந்தமாதிரி வைத்திருக்கிற கல்லூரிகளுக்கு கிராண்ட் கிடையாது என்று இப்போது அரசாங்கம் உத்தரவு போட்டு இருக்கிறது. ஆனால் 10 ஆண்டு காலத்திற்கு முன்னாலே பல்கலைக்கழகத்தின் எக்சம்ஷன் பெற்று அவர்களை அப்பாயின்ட் செய்து இருக்கிற காரணத்தால், தனியார் கல்லூரிகளில் அப்படிப் பட்டவர்களை பேராசிரியர்கள், துணைப் பேராசிரியர்கள் என்று வைத்து இருக்கிறார்கள். உதாரணத்திற்கு, பச்சையப்பன் கல்லூரி, காஞ்சீபுரத்தில் பிரின்சிபாலாக இருப்பவரே பி.எஸ்ஸி. தான். அப்படிப்பட்ட நிலைமையைப் போக்குவதற்கு, அரசாங்கம் அதில் கண்டிப்பாக இல்லாமல், இப்படி எக்சம்ஷன் வாங்கியிருந்தாலும் கிடையாது என்று இல்லாமல், அப்படிப்பட்ட தனியார் கல்லூரிகளுக்கும் கிராண்ட் கொடுப்பதற்கு அரசு அனுமதி வழங்குமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** எதையும் திட்டவட்டமாகச் செய்யமுடியாது. பத்து ஆண்டுகளுக்கு முன்பு எக்சம்ஷன் பெற்று அப்படி இருக்கிறார்கள் என்று சொன்னால், அது குறித்து தனியாகத்தான் ஆராயவேண்டும். அப்படிப்பட்ட நிலைமைகள் இருக்குமானால், நியாயத்தின் அடிப்படையில் தீர்ப்பு வழங்கலாம். பொதுப்படையாக சட்டத்தைப் போட்டு விட்டு, மறுபடியும் அதில் இடற்பாடுகள் இருக்கின்றன என்ற காரணத்திற்காக அதை மாற்றிக்கொள்ள முடியாது.

**திரு. கே. ஏ. வகாப்:** தலைவரவர்களே, இன்றையதினம் தனியார் கல்லூரிகளிலே ஆசிரியர்களாக, பேராசிரியர்களாக இருப்பவர்களுக்கு தகுதியின் அடிப்படையில் ஊதியம் அதிகமாகக் கொடுக்க வேண்டியிருக்கிறது. அவர்கள் கல்லூரிகளை நல்வகையில் நிர்வகிக்கின்ற காரணத்தால் அவர்களுக்கு அளிக்கப்படுகிறது. மானியம் போதவில்லை என்ற காரணத்தால் அவர்களுக்கு கொடுக்க வேண்டிய அளவுக்குக் கொடுக்க முடியவில்லை என்று சொல்கிறார்கள். நாம் அளிப்பதுபோல் அளிப்பது என்றால் மாதம்





30 லட்சம் ஆகும், ஆனால் அவர்கள் அளிப்பதுபோல் கொடுக்க 50 லட்சம் ஆகும் என்று சொல்கிறார்கள். கல்விக்காக ரூ. 150 கோடி செலவழிக்கும் இந்த அரசு, அவர்களுக்கு அவர்கள் கேட்கின்ற பூரண மானியத்தைக் கொடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** ஆசிரியர்கள், பேராசிரியர்கள் என்று சம்பள விகிதம் நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறது. அந்த அளவில் தரப்படவேண்டும். சில பல கல்லூரிகளில் அதிகப்படியாக தரவேண்டுமென்ற அடிப்படையில் கணக்குப் போட்டு வாங்குகிற அளவுக்கு இருக்கிறார்கள். நாம் நியாயத்தின் அடிப்படையில் கொடுத்துக்கொண்டு வருகிறோம். ஏற்கனவே விதிப்படி கொடுக்கப்பட வேண்டிய ஊதியம் குறையாமல் இருப்பதற்கான வகையில் கணக்குப் போட்டு தருகிறோம். அகவிலைப்படி 100 சதவிகிதம் கொடுக்கவேண்டுமென்பதற்காக 46,32,000 ரூபாய் இப்போது தந்து இருக்கிறோம். இதிலே ஒரு அறக்கட்டளையும் இல்லாமல், ஒரு என்டோமென்டும் இல்லாமல், வெல்லப்பிள்ளையாரைக் கிள்ளி வைப்பதுபோல இதிலேயேயிருந்து இதற்கு வைப்பது போல் இருக்கும் நிலைமை கூடாது. அந்த நிலைமை இருக்குமானால், அதைச் சரிவர நிர்வகிக்க முடியாது.

**திரு. ஆலடி அருணா:** தலைவரவர்களே, தனியார் நடத்தும் கல்லூரிகளின் பற்றுக்குறையை ஈடுகட்டுகிற முறையில் அரசாங்கம் மானியம் அவற்றிற்கு வழங்குகிறது. ஆனால் தனியார் கல்லூரிக்கும், அரசாங்கத்திற்கும் சம்பந்தம் இல்லாமல் இருக்கிறது. தனியார் கல்லூரிகளுக்கு அரசாங்கம் மானியம் அளிக்கிற காரணத்தால், அந்தக் கல்லூரி நிர்வாகத்தில் அரசாங்க சார்புள்ள ஒருவரை அங்கம் வகிக்கச் செய்ய அரசு வழி வகுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, அப்படிப்பட்ட முறை இல்லை. ஆனால் பெரும்பாலும் கல்லூரிகளைப் பொறுத்தவரையில், அவர்களின் அகடமிக் முறை, ஆசிரியர்கள் நியமனம், மற்றவற்றிற்கெல்லாம் பல்கலைக்கழகத்தின் அனுமதி பெற்றுத்தான் செய்யப்படுகிறது. அதற்கு நிதி உதவி செய்து, கண்காணிப்பது ஆகிய பொறுப்புகளை அரசு கவனிக்கிறது. நிதி போன்றவற்றில் ஏதாவது குறைபாடு இருக்குமானால், அதைக் கவனிப்பதற்கு, அதை ஆய்வு செய்வதற்கு—ஏற்கனவே அவர்களே

சொந்த ஆடிட்டர்கள் மூலமாக ஆடிட் செய்து வந்தாலும்— இப்போது அரசாங்கம் தணிக்கை செய்யவேண்டுமென்று வைத்திருக்கிறோம். அவர்கள் வேண்டுமானுலும் தனியாக ஆடிட்டர்கள் வைத்துக் கொள்ளலாம். அதற்கும் வேண்டுமானுலும் மானியம் சேர்த்துத் தரலாம் என்று நாம் ஒப்புக்கொண்டாலும், அரசின் தணிக்கையும் கண்டிப்பாக இருக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அதற்குமேலும் சிலபல இடங்களில் தேவைப் படுமானுல், மாண்புமிகு உறுப்பினர் கூறும் யோசனையை அமல் படுத்த முயற்சிக்கலாம்.

### கன்னியாகுமரியிலுள்ள கேரளா விடுதி

*544 வினு—திரு. வி. கே. இராஜாப்பிள்ளை: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

குமரி மாவட்டத்தில், கன்னியாகுமரி நகரிய எல்லைக்குள் கேரளா விடுதி (Kerala House) கட்டி இருக்கும் இடமும், பத்மனுபபுரத்தில் பழைய திருவிதாங்கூர் மன்னர் அரண்மனையும் எந்த நிபந்தனை அல்லது ஒப்பந்தத்தின் மீது கேரளா அரசிற்கு விட்டுக்கொடுக்கப்பட்டிருக்கிறது ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாநிலங்களை மொழி வாரியாக அமைக்கும்போது செயலிலிருந்த சென்னை-கேரள அரசு அமைச்சர்கள் குழுவின் ஒப்பந்தத்தின்படி கன்னியா குமரியில் அரசினர் மாளிகைக்கும், ஓய்வு விடுதிக்கும் இடைப்பட்ட இடத்தை கேரள அரசு ஒரு ஓய்வு விடுதி கட்டுவதற்காக அனுமதி அளிக்கப்பட்டது. ஆனுல் இவ்விடுதிகளுக்கிடையே கேரள அரசு மதிற்சுவர் கட்டக்கூடாது என நிபந்தனையும் விதிக்கப்பட்டது. மேலும் பத்மனுபபுரம் அரண்மனை மற்றும் அருங்காட்சியகமும், கேரள அரசாங்கமே வைத்துக் கொள்ளும். அரண்மனை, அருங் காட்சியகங்களுக்கான மராமத்து செலவினங்களை இரு அரசுகளும் பகிர்ந்து கொள்ளும். மேலும் இவ்விரு இடங்களில் உள்ள யாதொரு பொருளையும் தமிழ்நாடு அரசு ஒப்புதல் அன்றி கேரள அரசு அப்புறப்படுத்தாது.

**திரு. வீ. கே. இராஜாப்பிள்ளை:** தலைவரவர்களே, நமது தமிழ் நாட்டு எல்லையில் இருக்கும் கண்ணகி கோவிலை நமக்குத் தந்து விடும்படி பல முறை கேட்டும் கேரள அரசு விட்டுத் தர இணங்க



வில்லை. அப்படியிருக்கும்போது, சுமார் 5 லட்சம் ரூபாய் அளவுக்கு கன்னியாகுமரியில் இருக்கும் அந்த அரசினர் மாளிகைக்கு வாடகையாக கேரள அரசுக்கு கொடுத்து வருகிறது. அங்கே மதில் கட்டக்கூடாது என்ற நிபந்தனையில் கொடுத்து இருக்கிறோம் என்று சொன்னுர்கள். ஆனுல் மதில் சுவர் கட்டப் பட்டு இருக்கிறது. அதேபோல் பத்மனுபபுரம் அரண்மனைக்கும் ரூ. 25 லட்சம் அளவுக்குக் கொடுத்து வருகிறோம். நமது உணர்வுகளை அவர்கள் மதிக்காமல் இருக்கிற காரணத்தால், அவற்றைத் திரும்பப் பெறுவதற்கு இந்த அரசு ஏதாவது முயற்சி எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, தமிழ்நாடு இல்லத்திற்கும், கேரள அரசு ஓய்வு விடுதிக்கும் இடையே மதில் சுவர் கட்டப்பட்டு இருப்பதாகச் சொல்கிறுர்கள். அது பற்றிய தகவல் இல்லை. அரசு அதைப் பற்றி பரிசிலிக்கத் தயாராக இருக்கிறது. இந்த ஒப்பந்தம் ஏற்கனவே 1956-ல் ஏற்பட்டதாகும். அந்த ஒப்பந்தத்தை அமல் படுத்துவதற்கும், கண்ணகி கோவிலை நமக்குத் தரவேண்டுமென்று கேட்பதற்கும் தொடர்பு இல்லை. நாம் அவ்வாறு கேட்பதால் அதிலே தவறு இல்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவரவர்களே, பத்மனுபபுரம் அரண்மனை தொல்பொருள் ஆராய்ச்சிக்கு முக்கியமாக இருக்கிறது. ஆகவே, அதற்காக நாம் ஏன் செலவை ஏற்றுக்கொள்ளவேண்டும் ? மேலும், அதற்காக நாம் செலவை பகிர்ந்து கொள்ளவேண்டுமா ? அது என்ன நியாயம் ? அதை மாற்றுவதற்கு அரசாங்கம் ஏதாவது நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, இந்த ஒப்பந்தம் 7—9—1956-ல் ஏற்பட்டது. இரு அரசாங்கங்களும் அந்தச் செலவை ஏற்றுக்கொள்வது என்று ஒப்புக்கொள்ளப்பட்டு இருக்கிறது. அதிலே நாம் ஒன்றும் இப்போது செய்வதற்கு இல்லை. ஏற்கனவே செய்து கொண்ட ஒப்பந்தம் என்கிற காரணத்தால் அதை நாம் கடைப்பிடித்தாக வேண்டும்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவரவர்களே, பத்மனுபபுரத்தில் இருக்கிற மன்னர் அரண்மனை 1956-ம் ஆண்டு ஏற்பட்ட ஒப்பந்தத்தின் பேரில் கேரளா அரசாங்கத்திற்கு கொடுக்கவேண்டிய சூழ்நிலை என்ன வென்றுல், கன்னியாகுமரி கேரளாவோடு சேர்ந்து இருந்தது,

அவர்கள் பிரிந்து செல்ல விரும்பாத காரணத்தால், ஏதோ ஒரு பங்கு இங்கே அவர்களுக்கு இருக்கவேண்டுமென்ற அடிப்படையில் அதைக் கேட்டார்கள். ஆனால் இன்றையதினம் இருக்கும் கேரள அரசாங்கத்திற்கும் மக்களுக்கும், அந்த அரண்மனைக்கும் எந்த விதமான சம்பந்தமும் கிடையாது. ஆகவே, அந்த ஒப்பந்தத்தை மறு பரிசீலனை செய்து நமது மாநிலத்திற்கு அந்த அரண்மனையைத் திருப்பித் தரவேண்டுமென்று இந்த அரசு மத்திய அரசை வற்புறுத்துமா? அப்படிச் செய்தால் நிச்சயம் திரும்பப் பெற்றுக்கொள்ள வாய்ப்பு இருக்கும். அதை அரசாங்கம் செய்யுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, 1956-ம் ஆண்டு செய்து கொண்ட ஒப்பந்தம். அந்த அடிப்படையில் செலவைப் பகிர்ந்து கொள்கிறோம். நாம் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்றால், அதற்குக் கேரள அரசாங்கம் ஒப்புக்கொள்ளுமா என்று எனக்குத் தெரியவில்லை. மத்திய அரசு தலையிடு செய்து கேட்டாலும், கொடுக்க மாட்டார்கள். மத்திய அரசாங்கம் தலையிடு செய்வார்கள் என்று நான் நினைக்கவில்லை.

## குளங்களில் படர்ந்துள்ள "குழி தாமரை"

*545 வினா—திரு. வீ. கே. இராஜாப்பிள்ளை: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குமரி மாவட்டத்திலுள்ள குளங்களில் படர்ந்திருக்கும் "குழி தாமரை", "பட்டுப்பாசி" போன்றவைகளை அறவே அகற்றுவதற்குரிய திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** இல்லை.

**திரு. வீ. கே. இராஜாப்பிள்ளை:** தலைவரவர்களே, அந்தக் குளங்களில் வளர்ந்து இருக்கும் பாசியை அகற்ற முடியவில்லை. பயிர் வளர்வதற்குக் கெடுதி தருகிற பாசியாக இருக்கிறது. ஆகையால் அதை அகற்றுவதற்கு ஒரு தீவிர திட்டத்தை வகுத்து, விஞ்ஞான ரீதியில் அதை அகற்றுவதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, ஆங்காங்கு இருக்கும் ஊராட்சி ஒன்றியங்கள் குளங்களில் இருக்கும் பாசிகளை



அகற்ற வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, ஊராட்சி ஒன்றியத்தை அணுகி அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று, அவற்றை நீக்குவதற்கான காரியங்களை மேற்கொள்ளலாம்.

## *Cultivation of onion*

* 546 *Q.*—Thiru G. R. EDMUND: Will the Hon. the Minister for Agriculture be pleased to state:

(*a*) whether any research into onion cultivation has been undertaken in this State; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** (அ) & (இ) விவர அறிக்கை @ ஒன்று பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவரவர்களே, தமிழகத்தில் உற்பத்தியாகும் வெங்காயத்திற்கு வெளி நாட்டில் நல்ல கிராக்கி இருக்கிறது. ஆகவே, விவசாயிகளுக்கு வெங்காய உற்பத்தியைப் பெருக்குவதற்கான தனி திட்டத்தை அரசாங்கம் வைத்து இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தலைவரவர்களே, இப்போது நல்ல, அதிகமாகப் பலன் தரக்கூடிய வெங்காய வகைகளை நாம் கண்டுபிடித்து அதை அந்த விவசாயிகள் மத்தியில் பரப்பி வருகிறோம். அதைத் தவிர தனியாக இதற்கு ஊக்கமோ, சப்சிடியோ தேவையில்லை என்று கருதுகிறேன்.

**திரு. ஏ. எம். இராஜா:** தலைவரவர்களே, இந்தப் புள்ளி விவர அறிக்கையிலே புதிதாக மூன்று தினுசான வெங்காய வகைகளை பரிட்சார்த்தமாக ஆங்காங்கு பயிரிட்டு வருவதாகக் குறிப்பிடப் பட்டு இருக்கிறது. இது எந்த நிலையில் இருக்கிறது என்பதைப் பற்றி விளக்கமாக இல்லை. சி.எஸ். 911 ரகம் எல்லாப் பிரதேசங் களிலும் விளையும் நிலை இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இது அந்த விவசாயிகளுக்கு பயிரிடுவதற்குக் கிடைக்கக்கூடிய நிலை ஏற்பட்டால் அதிகம் பயிராகும். ஏன் இதுநாள் வரையில் இந்த அக்ரிகல்சுரல் டிபார்ட்மெண்ட் இந்த வெங்காயத்தில் கான்சன்டிரேட் செய்யவில்லை? அப்படி இப்போது கான்சன்டிரேட்

---

@ 73 ம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப் பட்டுள்ளது.

செய்து பார்க்கிற நேரத்தில், பலன்தரும் வேறு வெரைடி கண்டு பிடித்து இருக்கிறார்களா? பெல்லாரி வெங்காயத்தைப் பற்றி எந்த விதமான நடவடிக்கையும் எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. இங்கே கொடுத்து இருக்கும் விவா அறிக்கையில், அதுபற்றி விளக்கம் இல்லை. பெரிய பெரிய டவுன்களில் பெல்லாரி வெங்காயம் அதிகமாகச் செலவாகிறது. ஆகவே, உடனடியாக அதற்கு ஏதுவாகிற வகையில் பெரிய வெரைடி வெங்காயத்தைக் கண்டு பிடித்து, விவசாயிகள் பயிர் செய்ய கொடுப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

(முற்பகல் 9-30)

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** பெல்லாரி வெங்காயத்தைப் பற்றிய பரிட்சை இன்னும் முடிவு அடையவில்லை. நல்ல பலன் தரக்கூடியது என்பது உறுதியாகவில்லை. சி.எஸ். 911 என்ற வெங்காயத்தை இப்போது கொஞ்சம் கொஞ்சமாக மக்கள் மத்தியில் பரப்பி வருகிறோம். இதில் சுளைகள் சிறிதாக இருக்கின்றன. மக்கள் இதை விரும்புகிறார்கள் என்பது மட்டுமல்லாமல், நல்ல சிவப்பு நிறமாக இருக்கிறது என்பது மட்டுமல்லாமல், ஏக்கருக்கு ஏறத்தாழ 60 நாட்களில் 5 டன்—5,000 கிலோ பயிராகிறது. இது மிகுதியான பலன் தருவதால் மக்கள் மத்தியில் கொஞ்சம் கொஞ்சமாகப் பரப்பப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர்களுக்கு விதைகள் தேவைப்படுமானால் துறை மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

**திரு. என். மருதாசலம்:** வெங்காயத்திலே கறி வெங்காயத்தைக் காட்டிலும் ஈர வெங்காயம் அதிகச் சத்துள்ளது என்று சொல்லப் படுகிறது. அதை அதிகமாக உற்பத்தி செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெங்காயம் ஈரமாகத்தான் இருக்கும்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** ஈர வெங்காயம் என்பது சின்ன வெங்காயம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விளக்குகிறார்கள். இது சின்ன வெங்காயந்தான். இதன் சுளை சிறிதாக இருக்கும் காரணத்தால் மக்களால் விரும்பப்படுகிறது. விளைச்சல் அதிகமாக இருக்கும் காரணத்தால் வேளாண்மையில் ஈடுபட்டிருக்கிற உறுப்பினர்களும், மற்றவர்களும் மிகுதியான அளவில் இதைப் பயிரிட முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.



**திரு. கோவை செழியன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தந்துள்ள விளக்கக் குறிப்பில் நாட்டு வெங்காயம், பெல்லாரி வெங்காயம், புதுரக வெங்காயங்களைப் பற்றியெல்லாம் குறிப்பிட்டிருக்கிறார்கள். என்னைப் போன்ற விவசாயிகளுக்கு சிலோன் மார்க்கட் விழும்போது வெங்காயத்தை வாங்க ஆள் இல்லை. அதை ஸ்டாக் செய்யவும் முடியாது. காய்ந்து விடும்.

"வெங்காயம் சுக்கானால் வெந்தயத்தால் ஆவதென்ன
இங்கார் சுமந்திருப்பார் இச் சரக்கை
மங்காத சீரகத்தைத் தந்திடேல் தேடேன் பெருங்காயத்தை
ஏரகத்துச் செட்டியாரே"

என்பார்கள். ஆகவே, வெங்காயத்தின் விற்பனைக்கு அரசு ஏற்பாடு செய்யுமா? அல்லது பதப்படுத்தவாவது ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** இலங்கைக்கு அதிகமாக ஏற்றுமதி செய்வது, பதப்படுத்தி வைப்பது என்பதற்குத் தனியாகக் கேள்வி போட்டால் விவரங்களைக் கூற முடியும். இப்போது இந்தப் புது ரக வெங்காயத்தைப் பயிரிடுவது பற்றிய விவரங்கள்தான் இருக்கின்றன. இதை ஊடு பயிராக சில சில இடங்களில் பயிரிட்டு 60 நாட்களில் நல்ல பலன் கிடைக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்களும், விவசாய மக்களும் இதைப் பயிரிட முன்வந்தால் நல்ல பலன் கிடைக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி எண் 547 . . .

(உறுப்பினர்கள் திரு. நா. வீராசாமி, திரு. கு. காமாட்சி மற்றும் சிலர் எழுந்து நின்றனர்)

அரை மணி நேரத்தில் ஆறு கேள்விகளுக்குத்தான் விடை அளிக்கப்பட்டிருக்கின்றன.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** ஏதாவது இதைப் பற்றி விளக்கம் வேண்டுமென்றால் என்னிடம் தனியாகக் கூடக் கேட்கலாம்.

### *Production of green manure*

* 547 Q.—THIRU N. KITTAPPA: Will the Hon. the Minister for Agriculture be pleased to state the steps taken by the

Government to produce green manure on a large scale in the State ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** விவர அறிக்கை @ ஒன்று சட்டமன்றப் பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. என். கிட்டப்பா:** தலைவர் அவர்களே, ரசாயன உரத்தின் விலை ஒன்றிலிருந்து மூன்று மடங்காக உயர்ந்துள்ளது. அதன் விலை உயர்வைக் குறைக்க வேண்டுமென்ற கோரிக்கையை மத்திய அரசு ஏற்றுக் கொள்ளாத நிலையில் தமிழ்நாட்டில் தழை உரத்தை ஏராளமாகத் தயாரித்து விவசாயிகளை ஊக்குவிக்க அரசு ஏதேனும் சிறப்புத் திட்டம் வைத்திருக்கிறதா? தழை உரம் தயாரிக்கக்கூடியவர்களுக்கு ஊக்க போனஸ் கொடுக்கவும் மற்ற முறைகளில் ஊக்குவிக்கவும் அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தழை உரத்திற்கான விதைகளுக்காக 20 லட்சம் ரூபாய் அளவுக்கு செலவு செய்து விதைகளை லாபமும் இல்லாமல் நட்டமும் இல்லாமல் விவசாயிகளுக்கு விநியோகம் செய்கிறோம். ஏரிக்கரை, கால்வாய்க் கரை போன்ற இடங்களில் பூவரச மரம்—புங்கமரம் என்று சொல்லுவார்கள்—வளர்ப்பதற்கு ஊராட்சிகளுக்கு ஊக்கம் கொடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. கே. என். குமாரசாமி:** தழை உர விதைகள் இலவசமாகக் கொடுப்பது பற்றிப் பரிசீலனையில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. தழை உரம், கம்போஸ்ட் உரம் போதுமான அளவு கிடைக்க வாய்ப்பு இல்லாத பகுதியில் அரசாங்கமே அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய முடியுமா? ஏரிக்கரை போன்ற பொதுவான இடங்களில் வளர்க்க அரசாங்கமே பஞ்சாயத்து யூனியன்கள் மூலமாக ஏற்பாடு செய்யப்படுமானால் அதிக அளவில் தழை உரங்களை வளர்க்க வாய்ப்பு ஏற்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்விக்கு அமைச்சர் அளித்த பதிலிலிருந்து மேற்கொண்டு தகவல் ஏதும் கேட்கலாமே தவிர, பொதுவான யோசனைகளைச் சொல்லுவதற்கு இந்த நேரத்தைப் பயன்படுத்தக்கூடாது. விவசாய மானியத்தில் ஒவ்வொருவரும் ஐந்து நிமிஷம், 10 நிமிஷம் என்று பேசும்போது இப்படிப்பட்ட கருத்துக்களை எல்லாம் சொல்லலாம்.

---

@ 157-158-ம் பக்கங்களில் இணைப்பு 689–691 ஆக அச்சிடப்பட்டுள்ளது.



**திரு. கே. என். குமாரசாமி:** ஆகவே, இந்த மாதிரி தழை உரங்கள் வளர்க்கப்படுவது பஞ்சாயத்து மூலமாகச் செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** ஏற்கனவே பதில் சொல்லியிருக்கிறேன்.

**திரு. கு. இராசமாணிக்கம்:** ரசாயன உரம் பற்றாக்குறையாக இருக்கும் நேரத்தில் வயல்களில் சஸ்பேனியா, டேஞ்சா, அவரி போன்றவற்றைப் போட்டால் ஐந்தாறு அடி வருவதற்குள்ளாக பூக்கின்ற நேரத்தில் வயல்களில் சாகுபடி அழித்துவிடப்படுகிறது. வேளாண்மைத் துறை அதிகாரிகள் வயல்களில் விதைக்க இதைச் சிபாரிசு செய்கிறார்கள் என்றாலும் தேவையான அளவுக்கு விதைகள் கிடைக்கவில்லை. விதைகள் அதிகம் கிடைக்கவும் வேளாண்மை செய்கின்ற நேரத்தில் அழித்து விடுகின்ற காரணத்தால் தனியாக விதை நாற்றங்கால்களுக்காக மானியம் கொடுத்து விதைகளை உற்பத்தி செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** ஏற்கனவே, அச்சிட்டுக் கொடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் ஏறத்தாழ 2,350 டன் அளவுக்கு விதைகள் கொடுக்கப்படுகின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது. விதைகள் கிடைக்கவில்லை என்று இதுவரை புகார் வரவில்லை. மேலும் தேவையானால் அருகாமையில் இருக்கும் வேளாண்மை டெப்போவில் கேட்டுப் பெறலாம். கூடியவரையில் கம்போஸ்ட் நல்ல உரமாக இருக்கிறது என்பதால் அர்பன் கம்போஸ்ட் நகராட்சிகளில் கிடைக்கின்ற கம்போஸ்டை எடுத்து நைட்ரஜன் சேர்த்து விவசாய மக்களுக்கு விநியோகிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

**திரு. தி. பொன்னுமலை:** தற்போது யூரியா, அம்மோனியா போன்ற ரசாயன உரங்களைப் போட்டால் நிலத்தின் சத்து குறைந்து விடுகிறது என்று விவசாயிகள் சொல்லுகிறார்கள். பஞ்சாயத்து யூனியன்கள், ஊராட்சிகளின் ரெவின்யூ நிலங்கள், மற்ற புறம்போக்கு நிலங்களில் செஸ்பேனியா போன்ற செடிகளை வைக்க அரசு ஏற்பாடு செய்யுமா? அரசாங்கச் செலவிலேயே அதை வளர்த்து விவசாயிகளுக்குக் கொடுக்க முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தழை உரங்களை அரசாங்கமே உற்பத்தி செய்து விவசாயிகளுக்குக் கொடுக்கும் திட்டம் இல்லை. தழை உரங்களுக்கான விதைகள் கொடுக்கும்

திட்டத்தைப் பற்றி ஏற்கனவே அச்சடித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. யூரியா, அம்மோனியா உரங்களை மட்டும் போட்டால் நிலத்தின் தரம் கெட்டு விடுகிறது என்பது ஒப்புக்கொள்ளப் படத்தான் வேண்டும். அர்பன் கம்போஸ்டுகளை மக்களுக்கு விநியோகிக்க வேண்டிய ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. அர்பன் கம்போஸ்டில் நைட்ரஜன் குறைவாக இருக்கிறது. என்.பி.கே., எல்லாம் இருக்கிறது. கம்போஸ்ட் உரத்தில் நைட்ரஜன் சத்தை 10, 12 சதவிகிதம் சேர்த்து உரத்தைத் தயாரிப்பதற்கான தொழிற்சாலை கட்டி முடியக்கூடிய பருவத்தில் இருக்கிறது

**திரு. கோவை செழியன் :** தலைவரவர்களே, இந்தக் கேள்வியைப் பொறுத்தவரை இங்கே விவர அறிக்கை ஒன்று இருக்கிறது. இந்த விவர அறிக்கையில் புறம்போக்கு நிலங்கள், ஏரி போன்ற இடங்களில் தழைகளைப் பயிரிடலாம் என்று சொல்கிறார்கள். ஆனால் இதிலுள்ள சங்கடம் என்னவென்றால் ' பாஸ்பஸ் ' என்ற ஒரு முள் செடி பரவி விட்ட காரணத்தினால் புறம்போக்கு இடங்களில் தழைகளைப் பயிர் செய்ய முடியவில்லை. ஆகவே இந்த ' பாஸ்பஸ் ' என்கிற முள் செடியை ஒழிக்க முயற்சி செய்யப்படுமாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, இந்தப் புறம்போக்கு நிலங்களில் வளரக் கூடிய பூவாச மரம், புங்க மரம் போன்றவைகளுக்கு ஊக்கம் கொடுத்து வருவதாகச் சொன்னேன். ஏற்கெனவே முள் செடிகளை அப்புறப்படுத்தவேண்டிய பொறுப்பு ஊராட்சி ஒன்றியங்களுக்கு இருக்கிறது. முள் செடிகளை அப்புறப் படுத்தி அந்த இடத்தில் தழைகளை உடனே விளைவிக்க முடியாது. இந்த நேரத்தில் தழை உரத்தை நம்பாமல், கெமிகல் பர்டிலைசர்களை நம்பாமல், அர்பன் கம்போஸ்ட், தமிழ் நாட்டில் 5 லட்சம் டன் கிடைக்கிறது, அதையும், கிராமப்புறத்தில் உள்ள கம்போஸ்ட், அது 75 லட்சம் டன் கிடைக்கிறது, அதையும் பெரிய அளவிலே பயன்படுத்தினால் நல்ல பலன் கிடைக்கும்.

*Pond Schemes in Tirunelveli*

* 548 *Q.*—THIRU T. GANAPATHY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state :

(*a*) whether pond schemes have been taken up for implementation in Tirunelveli district; and

(*b*) if so, the taluks selected for the same ?





**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, ஏற்கெனவே நீர்க் குட்டைகள் பொறுத்தவரை நெல்லை மாவட்டத்தில் 6 குட்டைகள் கட்டப்பட்டு உள்ளன. புதிதாக அமைக்கும் திட்டமில்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, இப்போது திருநெல்வேலி மாவட்டத்தில் குறிப்பாக இராதாபுரம், சங்கரன் கோயில், கோயில்பட்டி போன்ற இடங்களில் வறட்சி ஏற்பட்டிருக்கிறது. இந்தக் குட்டை ஸ்கீமை விரிவுபடுத்துவதற்கு இந்த இலாகாவிலிருந்து வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வார்களா வென்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, நீர்க் குட்டைகள் என்றால் வறண்ட பகுதிகளில் வெறும் குட்டைகளை வெட்டினால் தண்ணீர் நிரம்பிவிடும் என்று சொல்ல முடியாது. ஆகையினாலே நம்பியாறு போகிற பகுதிகளாக பிரிக்கப்படுமானால் அவைகளே குட்டைகளாக இருக்கும். இராதாபுரம் பகுதியில் அப்படிப்பட்ட திட்டம் இருக்கிறது.

*Fruit Garden at Kanyakumari*

* 549 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Agriculture be pleased to state whether there is any proposal under the consideration of the Government to transfer the Government Fruit Garden at Cape Comorin to the administrative control of the Coimbatore Agricultural University ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** இல்லை.

**திரு. என். டென்னிஸ் :** தலைவரவர்களே, கன்னியாகுமரியில் பழத் தோட்டத்தில் வருஷத்தில் எல்லா பருவ காலத்திலும் பழம் தரக் கூடிய மாமரங்கள் இருக்கின்றன. வேறு பழ வகைகள் இருக்கின்றன. அதை ஒரு ரிஸர்ச் சென்டராக ஆக்கி, அதை கோவை அக்ரிகல்சுரல் யூனிவர்சிடியோடு சேர்த்து அபிவிருத்தி செய்ய அரசு முன்வருமாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள இந்த அரசு பழத் தோட்டத்தில் மாம்பழங்கள் ஆண்டு பூராவும் உற்பத்தியாகிறது. மற்ற பகுதிகளில் கோடை காலத்தில் மட்டும் மாம்பழம் உற்பத்தி

யாகும். ஆனால் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள இந்த பழத் தோட்டத்தில் 12 மாதங்களும் வருஷம் பூராவும் மாம்பழம் கிடைக்கிறது. இதை அரசு நன்றாக உணர்ந்து இது போன்ற மரங்களை மற்ற மாவட்டங்களிலும் விரிவுபடுத்த ஆராய்ச்சி இருக்கிறது. இதைப் பல்கலைக்கழகத்திற்கு மாற்றினால் ஏதோ சிறப்பாக நடக்குமென்று எண்ணவில்லை. அரசுத் தரப்பிலேயே எக்ஸ்பெரிமெண்டல் ஸ்டேஷன்கள் இருக்கின்றன. அரசே இதைப் பார்த்துக்கொண்டிருக்கிறது.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள பழத் தோட்டம் காலம் முழுவதும் பழம் தருகிற வகையில் இருக்கிறதென்பது அரசுக்குத் தெரியும் என்று அமைச்சரவர்கள் கூறினார்கள். ஆகவேதான் அந்தப் பழத் தோட்டத்தை இன்னும் அதிகமாக விரிவுபடுத்துவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தலைவரவர்களே, ஏற்கெனவே திருவிதாங்கூர் ஸ்டேட்டிலிருந்து 17.4 ஏக்கர் என்று இருந்ததை நாம் விரிவுபடுத்தி மேலும் 14.22 ஏக்கர் எடுத்து அதோடு புதிதாகச் சேர்த்து, ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

### காரை கிராமத்திலுள்ள புறம்போக்கு நிலங்கள்

*550 வினா—டாக்டர் எச். வி. ஹாண்டே: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டம், ராணிப்பேட்டை, காரை கிராமம், கக்கன் காலனி, அரசாங்கப் புறம்போக்கு நிலத்தில் கடந்த 15 ஆண்டுகளாகக் குடியிருக்கும் ஏழை அரிசன மக்களை தற்சமயம் அப்பகுதிகளில் இருந்து காலி செய்யும்படி அரசு ஆணையிட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் காரணங்கள் யாவை?

(உ) இவர்களுக்கு மாற்று இடத்தில் அரசு வீட்டுவசதி ஏற்பாடு செய்துள்ளதா?





**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** (அ), (இ) & (உ) வடார்க்காடு மாவட்டம், வாலாஜா வட்டத்தைச் சேர்ந்த காரை கிராமத்தில் கக்கன் காலனி என்று சொல்லப்படும் இடத்தில் நில அளவை எண்கள் 639/2 மற்றும் 596 ஆகியவற்றில் உள்ள நிலங்களை சுமார் 19 பேர்கள் ஆக்கிரமித்துக் குடிசைகள் அமைத்துள்ளார்கள். அதில் நில அளவை எண் 639/2-ல் உள்ளவர்களைத் தற்சமயம் காலி செய்யும்படி கேட்கப்படவில்லை. நில அளவை எண் 596 என்பது ஏரிப் புறம்போக்கு ஏரி நிலங்களின்மீதான ஆக்கிரமிப்பினை எதிர்த்து பொதுமக்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் முறையிடுவதாலும், ஆயக்கட்டுதாரர்களின் நலன்கள் பாதிக்கப்படுவதாலும், நில அளவை எண் 596 ஏரியில் உள்ள ஆக்கிரமிப்பாளர்களைக் காலி செய்வதற்காக அறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளது. இந்த ஆக்கிரமிப்பாளர்களுக்கு அருகாமையில் உள்ள நில அளவை எண் 641 இராணுவ முகாம் நிலத்தைத் தருவதாக இராணுவ அதிகாரி, சம்மதம் தெரிவித்துள்ளார். ஆகையால் நில அளவை எண் 596-ல் உள்ள ஆக்கிரமிப்பாளர்களுக்கு நில அளவை எண் 641-ல் மாற்று இடவசதிகள் அளிக்கப்படும் என்று மாவட்ட வருவாய் அதிகாரி தெரிவித்துள்ளார்.

**திரு. கே. எ. வகாப்:** தலைவரவர்களே, ராணிப்பேட்டையில் உள்ள இந்தக் காரை கிராமத்தில் உள்ள ஏழை மக்கள் குடிசை போட்டுக் கொண்டு வாழ்கிறார்கள். அதற்கு சட்ட மன்ற உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்தார்கள் என்று பதில் சொல்லப் பட்டது. சட்ட மன்ற உறுப்பினராகிய நான் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. வேறு சட்ட மன்ற உறுப்பினர்கள் இருந்திருக்கலாம். அது என்னுடைய தொகுதி. எனக்குத் தெரியும். இந்த ஏழை மக்களுக்கு அந்த இடங்களிலிருந்து அவர்களை வெளியே போகச் சொல்வதற்கு முன் மாற்று இடங்களை உடனடியாக அவர்களுக்குத் தரவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சரவர்கள்தான் தன் பதிலில் ஏற்பாடு செய்து தரப்படும் என்று சொல்லிவிட்டாரே.

**திரு. கே. எ. வகாப்:** தலைவரவர்களே, அப்படிப்பட்ட எந்தவிதமான தகவலும் அங்கேயிருக்கிற குடிசைவாழ் மக்களுக்கு அனுப்பப்படவில்லை. இதை உடனடியாக அமுல்

செய்ய வேண்டும். அதற்கு ஏற்பாடு செய்வார்களாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவரவர்களே, இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு அவர்கள் யாரையும் காலி செய்ய வேண்டாமென்று உத்திரவு இட்டது மாத்திரமல்ல, உடனடியாக அவர்களுக்கு மாற்று இடங்களைத் தரவேண்டுமென்று ராணிப்பேட்டை கோட்டாட்சித் தலைவருக்கு அறிவுரை வழங்கப் பட்டிருக்கிறது.

**திரு. நா. வீராசாமி :** தலைவரவர்களே, திரு. வகாப் அவர்கள் சுட்டிக்காட்டியது போல என்னிடத்திலும் முறையிட்டார்கள். நாங்கள் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை அவர்களுக்குப் பட்டா வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். மாண்புமிகு அமைச்சரவர்கள் மாற்று இடம் தருகிறேன் என்று சொல்கிறார்கள். ஆனால் அதற்குள்ளாக அவர்களை உடனடியாகக் காலி செய்யுங்கள் என்று நோட்டீஸ் போய்க் கொண்டிருக்கின்றன. அவர்களை காலி செய்யுங்கள் என்று வற்புறுத்துகிறார்கள். ஆகவே, அவர்களை வற்புறுத்தாமல், அவர்களுக்கு மாற்று இடங்களைக் கொடுத்ததற்குப் பின்னால் அவர்களைக் காலி செய்வார்களாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவரவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் உடனடியாக அந்த இடத்தைப் பார்வையிட்டு உத்திரவு வழங்கப்படுகிற வரையில் அவர்களைக் காலி செய்ய வேண்டாமென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## *Lands in Ekambarapuram village.*

*551 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Revenue be pleased to state:

(*a*) whether a large number of Kisans have applied for patta for the lands at Ekambarapuram in Ambasamudram area in Tirunelveli district in recent times; and

(*b*) if so, the action taken by the Government in this respect?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** (அ) பட்டா வேண்டி 15 உழவர்கள் விண்ணப்பித்துள்ளனர்.

(இ) இது பரிசீலனையில் உள்ளது.



**திரு. ச. சங்குமுத்து தேவர் :** தலைவரவர்களே, இந்த நிலங்கள் சம்பந்தமாக பல ஆண்டுகளாக பட்டா விசாரணை நடைபெற்று முடிவு பெறாமல் இருந்து கொண்டிருக்கிறது. 20—3—74-ல் உயர் நீதிமன்றத்தில் இந்த நிலங்கள் இனாம் நிலங்கள் இல்லை, ரயத்து நிலங்கள் என்று குறிப்பிடப்பட்டதாகத் தெரிய வருகிறது. இதை மறு பரிசீலனை செய்து அப்பீல் செய்வதற்கு அரசுக்கு உத்தேசம் இருக்கிறதா? இந்த தீர்ப்பின் பிரகாரம் பட்டா கொடுப்பதற்கு அரசுக்கு வசதி இருக்கிறதா? விரைவில் பட்டா கொடுப்பதற்கு அரசு என்ன ஏற்பாடு செய்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவரவர்களே, சென்னை உயர் நீதிமன்றம் 20—3—74 நாளிட்ட தனது தீர்ப்பில் கூறியுள்ளது. எனவே, திருவாவடுதுறை ஆதீனத்திற்கு 1963-ம் ஆண்டு 30-வது சட்டத்தின் பிரிவின் கீழ் பட்டா வழங்கிய ஆணைகளை உயர் நீதிமன்றம் தள்ளி விட்டது. எனினும், திருவாவடுதுறை ஆதீனம் அல்லது குத்தகைக்காரர்கள் நிலங்கள் மீது பட்டா உரிமை பெற்றது குறித்து உயர் நீதிமன்றம் விளக்கம் ஏதும் தரவில்லை. எனவே, திருவாவடுதுறை ஆதீனத்தின் குத்தகைதாரர்கள் நிலத்தின் மீது தங்களுக்குள்ள உரிமையை நிலைநாட்ட சிவில் நீதி மன்றத்திலோ அல்லது வருவாய் நீதி மன்றத்திலோ தங்கள் கோரிக்கை குறித்து போராடுவது திருவாவடுதுறை ஆதீனக் குத்தகைக்காரர்களின் விருப்பம் என்று வருவாய் வாரியம் தெரிவித்துள்ளது. இது குறித்து சட்டத் துறையுடன் கலந்தாலோசித்து அரசு தனியே பரிசீலித்து வருகிறது.

## சேரணித் தொண்டர்கள்.

*552 வினா—திரு. வை. பாலசுந்தரம் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேரணியில் தொண்டாற்றும் சேரணி தொண்டர்களின் எண்ணிக்கையை உயர்த்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** இல்லை.

**திரு. வை. பாலசுந்தரம்** : தலைவரவர்களே, சீரணி அமைக்கப்பட்டு இதுவரையில் விலை மதிக்க முடியாத பணிகள் அந்த சீரணி ஆற்றி வருகிறது. அப்படி இருக்கையில் மேலும் இந்த சீரணியை விரிவடையச் செய்ய, இப்படிப்பட்ட நல்ல பணிகளுக்குப் பயன்படுத்திக்கொள்ள அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்** : தலைவரவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட இந்தச் சீரணி மிகச் சிறப்பான முறையில் பணியாற்றி வருகிறது என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்று. முதலாவது ஒரு மாவட்டத்திற்கு ஆயிரம் பேர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று இருந்து, இன்றையதினம் அதிலே 40 ஆயிரம் பேர்கள்வரை அந்தச் சீரணியில் சேர்ந்திருக்கிறார்கள். மேலும், அவர்கள் ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி அவர்கள் ஊதியம் கருதாது உழைப்பவர்கள் என்று கருதுவதாலே அவர்கள் வந்து சேருவார்களானால், அவர்களுக்கு வேண்டிய ஊக்கம் அளிக்கப்படும். எனவே, இப்பொழுது அந்த நிலைமை ஒன்றும் இல்லை.

## சூணாம்பேடு, இடைக்கழி நாடு ஊராட்சிகளைப் பிரித்தமைத்தல்..

* 553 வினா—**திரு. வை. பாலசுந்தரம்** : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு மாவட்டம், அச்சிறுப்பாக்கம் தொகுதியிலுள்ள சூணாம்பேடு, இடைக்கழி நாடு பஞ்சாயத்துக்களைப் பிரித்து அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி** : இடைக்கழி நாடு, சூணாம்பேடு ஆகிய ஊராட்சிகளைப் பிரிப்பதற்கான செயற்குறிப்புகள் செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிசீலனையில் உள்ளன.

**திரு. வை. பாலசுந்தரம்** : தலைவரவர்களே, இது கடந்த 25 ஆண்டுகளாக இப்படியே சொல்லப்பட்டு வருகிறது. இந்த இடைக்கழி நாடு பஞ்சாயத்தில் 32 ஆயிரம் வாக்காளர்கள்



இருக்கிறார்கள். சூணாம்பேடு பஞ்சாயத்தில் 22 ஆயிரம் வாக்காளர்கள் இருக்கிறார்கள். தமிழ் நாட்டிலே இந்த பஞ்சாயத்துக்கள்தான் அதிகமான ஜனத்தொகை கொண்டவை என்று கருதப்படுகிறது. இவற்றை உடனடியாகப் பிரிப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி** : தலைவரவர்களே, இடைக்கழி நாடு பஞ்சாயத்தை ஏழாகப் பிரிப்பதற்கான திட்டம், அடுத்தது சூணாம்பேடு பஞ்சாயத்தை நான்காகப் பிரிப்பதற்கான திட்டம் நம்முடைய கலெக்டர் அவர்களிடம் பரிசீலனையில் இருக்கிறது. ஆகவே, வாக்காளர் பட்டியல் தயாரித்து முடிந்த பிறகுதான், இதை முடிவு செய்வார்கள்.

## *Social Education Centres.*

* 554 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

whether there is any proposal under the consideration of the Government to accord sanction for grants for the opening of one Social Education Centre in each Panchayat?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி** : ஒவ்வொரு ஊராட்சியிலும் ஒரு சமூகக் கல்வி நிலையம் அமைப்பதற்கு அரசு 1964-ம் ஆண்டிலேயே தக்க உத்தரவு பிறப்பித்துள்ளது.

**திரு. என். டென்னிஸ்** : தலைவரவர்களே, உத்தரவிருந்தாலும் இன்று பல பஞ்சாயத்து யூனியன்களில் ஒரு பஞ்சாயத்தில் ஒரு சோஷியல் எஜுகேஷன் சென்டர் இல்லா நிலைமை இருக்கிறது. அதோடு, இன்று ஒரு பஞ்சாயத்து யூனியனுக்கு ஒரு சோஷியல் எஜுகேஷன் விஸ்தரிப்பு அதிகாரி இருக்கிறார். ஆனால் அவருக்கு வேறு வேலையில்லாமல் இருக்கிறது. சோஷியல் எஜுகேஷனுக்குக் கொடுக்கப்படுகின்ற தொகையானது மிகவும் குறைவாக இருக்கிறது. ஒரு தினசரி (நியூஸ் பேப்பர்) வாங்குவதற்குக் கூட அந்தத் தொகை போதுமானதாக இல்லை. அரசு பிறப்பித்த உத்திரவை நடைமுறைப்படுத்துவதற்கும், சோஷியல் எஜுகேஷனுக்குக் கொடுக்கின்ற தொகையை அதிகரிப்பதற்கும் அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தமிழ் நாட்டில் 12,632 ஊராட்சிகளும், 591 பேரூராட்சிகளும் இருக்கின்றன. இவற்றில் 13,362 சமூகக் கல்வி நிலையங்கள் இருக்கின்றன. அதிகமாகவே இருக்கின்றன. ஒரு சில இடங்களில் இல்லை என்று சொன்னார்கள். கவனத்திற்குக் கொண்டு வரப்படுமானால் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். ஒவ்வொரு கூட்டு மன்றத்திற்கும் ரூபாய் 800 இதற்கான செலவுக்குச் சன்மானமாக சர்க்கார் கொடுக்கின்றது. இதுவே போதுமானது.

**திரு. ஆ. கு. சுப்பையா :** தலைவரவர்களே, பஞ்சாயத்துக் கூட்டு மன்றங்களில் சமூக நல ஊழியர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய தரத்தை கிராம நல ஊழியர்களுடைய தரத்திற்குச் சமமாக உயர்த்துவதற்கு அரசு ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** அதைப் பற்றி பிறகு ஆலோசிக்கலாம்.

### வில்லியர் காலனி கிராமத்தில் தெரு விளக்குகள்

*555 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்முடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியம், ரெட்டம்பேடு ஊராட்சியில் உள்ள வில்லியர் காலனி கிராமத்தில் தெரு மின்விளக்குகள் அமைப்பதில் காலதாமதம் ஏன் ?

(இ) இது எப்போது முடிவடையும் ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** (அ) & (இ) ரெட்டம்பேடு ஊராட்சி மன்றத்தின் வேறு பகுதிகளில் அமைக்கப் பட்டு எரியும் மின்விளக்குகளுக்கான எரி கட்டணம் நிலுவையில் இருப்பதால், மேலும் அதிகப்படியான மின்விளக்குகள் அமைப்பதற்கு மின்சார வாரியத்தின் விதிமுறைகள் இடம் தரவில்லையென்று மின்வாரியத்தின் கண்காணிப்புப் பொறியாளர் கூறியுள்ளார். மின்சார வாரியத்திற்கு சேர வேண்டிய எரிகட்டண தொகையை உடனே செலுத்தி, அதற்கான ரசீதை பொன்னேரியிலிருக்கும் மின்சார வாரிய உதவிப் பொறியாளரிடம் தாக்கல் செய்து, ரெட்டம்பேடு ஊராட்சி மன்றத்தைச் சேர்ந்த



வில்லியர் காலனிக்கு தெரு மின்விளக்குகளுக்கு மின் இணைப்பு அளிக்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றிய ஆணையர் மாவட்ட ஆட்சித் தலைவரால் பணிக்கப்பட்டுள்ளார்.

**திரு. கா. வேழவேந்தன் :** தலைவரவர்களே, மேற்கண்ட காலனியில் இருளர் என்ற பிற்பட்ட ஜாதியினர் வசிக்கிறார்கள். ஆகவே, அந்த ஒரு காலனி மட்டும் இருட்டாக இருப்பது அவ்வளவு சரியாக இல்லை. தனியாக ஒரு சிறப்பு ஆணை பிறப்பித்து, அந்தக் காலனி முழுவதும் தெரு விளக்கு ஏற்படுத்துவதற்கு அரசு தனி ஆணை பிறப்பிக்குமா ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** அதற்கான நடவடிக்கையை மாவட்ட ஆட்சியாளர் எடுத்திருக்கிறார். அந்த ஊராட்சி விதிகள்படி கட்ட வேண்டிய தொகையை கட்டவில்லை. கட்டிவிட்டால் உடனடியாக அந்தத் தெருவுக்கு விளக்கு போடப்படும். சட்ட மன்ற உறுப்பினர் அவர்கள் அதில் கவனம் எடுத்துக்கொள்ள வேண்டும்.

### படமாத்தூர்—திருப்பாச்சேத்தி சாலையில் தரைப் பாலம்.

*556 வினா—திரு. த. சோனையா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், படமாத்தூர்—திருப்பாச்சேத்திச் சாலையில் குறுக்கே கானூருக்கு அருகில் வைகையின் குறுக்கே ஒரு தரைப் பாலம் கட்டும் திட்டம் தற்பொழுது எந்த நிலையிலுள்ளது ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிட்டுள்ள பாலத்துக்கான அஸ்திவார வேலை நடைபெற்று வருகிறது.

### *Low Cost Houses*

*557 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether it is a fact that the Government propose to give priority to low cost housing; and

(b) if so, the details thereof?

[1975 ஏப்ரல் 3

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** (அ) & (இ) ஆம். மலிவு விலை வீட்டு வசதி திட்டத்தின்கீழ் வீட்டு வசதி வாரியம் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் 4,543 மலிவு விலை வீடுகளை 484.94 லட்சம் ரூபாய் செலவில் கட்ட செயற்குறிப்புகளை தயாரித்துள்ளது. எந்த அளவிற்கு புதிய வீடுகளைக் கட்ட வேண்டுமென்பது கிடைக்கும் நிதியின் நிலைமையினைப் பொறுத்ததாகும். ரூ. 199.19 லட்சம் செலவில், 1,822 மலிவு விலை வீடுகளை கட்டுவதற்கான திட்டங்களை வீட்டு வசதி வாரியம் எடுத்துக்கொண்டு 444 வீடுகளை கட்டி முடித்திருக்கின்றன. 1,060 வீடுகளை கட்டத் தொடங்கி வேலை நடந்து கொண்டிருக்கிறது. எஞ்சியுள்ள 318 வீடுகளை 1975–76 நிதி ஆண்டில் கட்ட எடுக்கப் படும்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** தலைவரவர்களே, இந்த மலிவு வீடுகளை எந்தெந்த மாவட்டத்தில் கட்டுவதற்கு அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது, எவ்வாறு கட்டிக் கொண்டிருக்கிறார்கள் ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, இந்த மலிவு வீடுகள் ரூபாய் 13,000-க்கு உள்ளாக இருக்கிற வீடுகள். அவைகளை சில மாவட்டங்களில், தேவைப்படுகிற இடங்களில் கட்டிக் கொண்டு இருக்கிறோம். பல மாவட்டங்களில் அதிகமாக வேலைகள் எடுத்துக்கொள்ளக்கூடிய சூழ்நிலையில் இருக்கிறோம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இந்த மலிவு வீடுகளை அதிகமாக விரும்பக்கூடிய சூழ்நிலையில், எல்.ஐ.சி. போதுமான அளவுக்கு நிதி கொடுக்க தயாராக இருக்கின்றபோது, வருகின்ற ஆண்டில் இன்னும் அதிகமாக மலிவு வீடுகள் கட்டுவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** அதிகமாக வீடுகளை கட்டுவதற்கு வீட்டு வசதி வாரியம் விரும்புகிறது. சிமெண்ட் கிடைப்பதில்லை. எல்.ஐ.சி.-யில் அக்டோபரில் அதற்கான பணத்தை வாங்குகிறார்கள். வாங்குகிற பணத்தை எவ்வளவு வேகமாக செலவழிக்க வேண்டுமோ, அதைச் செய்து கட்டுகிறோம். கட்டடம் கட்டுவதில் சில சங்கடங்கள்



1975 ஏப்ரல் 3]

இருக்கின்றன. சிமெண்ட் பற்றுக்குறை, செங்கல் பற்றுக்குறை இருக்கிறது. அவைகள் இருந்தாலும் இந்த வீடுகளை அதிகமாக கட்டிக் கொண்டிருக்கிறோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் ச. மு. பழனியப்பன் :** கட்டுகின்ற நேரத்தில் சிறு நகரங்கள், கிராமங்களில் கட்டுவதில்லை. அங்கே கட்டுவதற்கு அரசு முயற்சி எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** சிறு நகரங்களுக்கு கூட இதில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது. தாலுக்கா தலைநகரங்களில் பல இடங்களில் இப்படிப்பட்ட வீடுகள்—நாமக்கல்லில் இப்போது வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. தர்மபுரியில், தஞ்சாவூரில், சில மாவட்டங்களில் நெசவாளர்களுக்கு இப்படிப்பட்ட வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன—கட்டப்படுகின்றன. ஆகவே பல ஊர்களில் இப்படிப்பட்ட வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** இந்த மலிவு வீடுகள் கட்டுவதில் பின்தங்கியவர்களுக்கு ஏதாவது முன் உரிமை உண்டா ? அப்படியானால் எந்தெந்த பின்தங்கிய சமூகத்தினருக்கு இந்த வீடுகள் கட்டி முடிக்க திட்டமிடப்பட்டிருக்கிறது ? இதற்கான முறை என்ன ? எந்த அடிப்படையில் அவர்களுக்கு கட்டிக் கொடுக்கப்படுகிறது ? எவ்வளவு பணம் கட்ட வேண்டும், அரசாங்கம் எவ்வளவு மானியம், எவ்வளவு கடன் தருகிறது என்ற விவரம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** வீட்டு வசதி வாரியத்தைப் பொறுத்தவரையில் வீடு என்பது சொத்து. மானியத்திற்கு இதில் இடம் கிடையாது. 13,000-க்கு வீடு கட்டிக் கொடுக்கப் படுகிறது. இதில் முக்கிய அம்சம் என்னவென்றால் 10 சதவிகிதம் முன் பணம் செலுத்தி விட்டால் போதும். 13 ஆயிரம் என்றால் 1,300 முன்பணம் செலுத்த வேண்டும். மற்ற வீடுகளுக்கு 13 ஆயிரத்திற்கு மேல் இருக்கிற வீடுகளுக்கு 12½ சதவிகிதம் சென்டேஜ் சார்ஜ் வீட்டு வசதி வாரியம் வசூலிக்கிறது. இது குறைந்த வருவாய் உள்ளவர்களாக இருந்தால் 6¼ சதவிகிதம் சென்டேஜ் வசூலிக்கிறது. இந்த வீடுகள் குறைந்த வருமானம் ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 4,200 வருமானம் உள்ளவர்களுக்குத்

தான். இந்த வருமானம் உள்ளவர்கள் பின்தங்கிய சமுதாயத்தை சேர்ந்தவர்களாகத் தான் இருப்பார்கள். எந்த பின்தங்கிய வகுப்பு என்று தனியாகச் சொல்லுவதற்கு ஒன்றுமில்லை.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** அமைச்சர் அவர்கள் இந்த மலிவு வீடுகள் எந்தெந்த இடத்தில் கட்டப்படுகின்றன என்ற விவரத்தைக் கொடுக்கவில்லை. ஆனால் தமிழ்நாட்டில் பெரும்பாலும் கிராமப் புறங்கள், சிறு நகரங்களில் கட்டப்படவில்லை என்று தெரிகிறது. ஆகவே, இந்த மாதிரி ஒரு சில இடங்களில் கட்டாமல், மாநிலம் முழுவதும் இந்த மாதிரி வீடுகளை பேஸ்டு புரொக்கிராம் முறையில் கட்டிக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10.00)

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, ஒரு பெரிய பட்டியலாக இருப்பதால் அதுபற்றி சொல்லாமல் இருந்தேன். மதுரை, பாளையங்கோட்டை, நாகர்கோவில், தென்காசி, கோயம்புத்தூர், பேரூர், கோயம்புத்தூர் மாவட்டத்தில் சில இடங்கள், திருச்சி, கடலூர், விருதாசலம், தஞ்சை, காஞ்சிபுரம் , செங்கற்பட்டு. . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பெரிய பட்டியலாக இருந்தால் வேண்டாம்; குறிப்பாகச் சொல்லிவிட்டால் போதும்; அல்லது ஸ்டேட்மென்டாகக் கொடுத்து விடுங்கள்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** இப்படி பல்வேறு இடங்களில் கட்டப்பட்டு வருகிறது. பட்டியல் பெரிதாக இருப்பதால் முழுவதும் படிக்கவில்லை.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவரவர்களே, அரசாங்கம் இப்போது ஒதுக்கிக் கொடுக்கின்ற பணத்தில் பெரும் பகுதி 'மீடியம் இன்கம் குரூப், ஹையர் இன்கம் குரூப்' பிரிவினர்தான் 50,000, ஒரு லட்சம் என்று பெற்று வீடுகளைக் கட்டிக் கொள்கிறார்கள். சமுதாயத்தில் மிகவும் பாதிக்கப்பட்டவர்கள் ஏழை எளிய மக்கள்தான். அவர்களுக்கு இதனால் பயன் ஏதும் இல்லாமல் இருக்கிறது. காரணம் அவர்களுக்கு 'ரீபேயிங் கப்பாசிட்டி' இல்லை என்பதால் அரசாங்கம் வீடு கட்ட அவர்களுக்கு 'லோன்' கொடுப்பதில்லை.



அதனால் வசதி உள்ளவர்கள் மேலும் மேலும் வசதிகளைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள்; வசதி இல்லாதவர்கள் என்றும் ஏழையாகவே இருக்கிறார்கள். இதைக் கருத்தில் கொண்டு, வசதி படைத்தவர்களுக்கு கடன் கொடுப்பதை நிறுத்திவிட்டு, எந்த முறையிலாவது ஏழைகளுக்கு கடன் உதவிகளும் மற்ற உதவிகளும் செய்து, வீடு கட்டும் திட்டத்தைச் செயல்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, இந்த அரசைப் பொறுத்தவரையில், இந்தியாவிலேயே ஏழைகளுக்கு வீடு கட்டிக்கொடுப்பதிலோ மற்ற காரியங்களிலோ இந்த அரசை விட வேறு எந்த அரசும் இல்லை என்பதை உறுதியாகச் சொல்ல முடியும். 85 சதவிகிதம் இன்றைக்கு பொருளாதாரத்தில் குறைந்த வருமானம் உள்ளவர்களுக்குத்தான் வீடு கட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். நேற்றுதான் இதுபற்றிய புள்ளிவிபரங்களை எல்லாம் சேகரித்தேன். நல்லவேளையாக உறுப்பினர் அவர்கள் அது சம்பந்தமாக ஒரு கேள்வியையும் கேட்டுவிட்டார்கள்; அவர்களுக்கு நன்றி.

**திரு. முனு ஆதி:** தலைவரவர்களே, வீடு கட்டும் திட்டத்தின் கீழ் எல்லோரும் பயனடைகிறார்களா என்ற ஐயப்பாடு பொது மக்களிடம் இருக்கிறது. ஆண்டு ஒன்றுக்கு 3,000 வீடுகள் கட்டுகிறார்கள். யார் யாருக்கு வீடுகள் கட்டுகிறார்கள் என்ற பட்டியல் தந்தால் உங்கள்மீது இருக்கிற களங்கம் போய்விடும். அதற்கு. . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கேள்வியைக் கேளுங்கள். களங்கம் போகும். அது, இது என்று கேள்வி நேரத்தில் சொல்லாதீர்கள்.

**திரு. முனு ஆதி:** நான் கேட்கின்ற கேள்வி உங்களுக்குத்தான் உதவியாக இருக்கும். வீடு கட்டிக்கொடுப்பதற்கான லிஸ்ட் கொடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, இதுவரை அவர்கள் வந்து வீடு கேட்கவில்லை; அதனால் என்னைக் குறை சொல்லி பயனில்லை.

## வீடுகளுக்கான கட்டுமானப் பொருட்கள்

*558 வினா—திரு. என். கிட்டப்பா :

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்குத் தேவைப்படும் கட்டுமானப் பொருட்களை தயாரித்திடும் தொழிற்சாலை ஒன்று அமைத்திடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விபரம் என்ன?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவரவர்களே, தற்போது கட்டுமானப் பொருட்கள் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. அதை கிடைக்கச் செய்வதற்கு அரசாங்கம் தனி முயற்சி எடுத்திருக்கிறதா? கிராமப்புறங்களிலே செங்கற் சூளைகள் வைக்க ஏதாவது முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தற்போது வீட்டுவசதி வாரியத்தில் மரங்கள் அடிப்படையிலான வேலைகளை ஆரம்பிப்பதற்கு 'உட் ஒர்க் யூனிட்' ஒன்றை உருவாக்கிக்கொண்டிருக்கிறோம். அதற்கு அட்கோவில் 7.22 லட்சம் ரூபாய் கடன் பெற்று தொழில் நிறுவனம் ஒன்றை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். ஜன்னல், கதவு, வாசக்கால் போன்றவை அங்கு செய்யப்படும். செங்கல் சூளை ஒன்றைச் சென்னையிலே போடுவதற்கும் திட்டம் தயாரித்துக்கொண்டிருக்கிறோம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** சார், ஏற்கெனவே சென்னையில் இருக்கிற 'செராமிக் தொழிற்சாலையில் நஷ்டம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த செராமிக் தொழிற்சாலையில் இரண்டு செங்கல் சூளைகள் இருக்கின்றன. அவைகளும் நஷ்டத்தில்தான் ஓடுகின்றன. அவைகளை எடுத்து நடத்த ஏற்பாடு செய்யலாமே. அதை விட்டுவிட்டு வேறு செங்கல் சூளை போட்டால் இங்கே மேலும் நஷ்டம்தான்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அதையெல்லாம் அந்த டிமாண்டில் நாளை பேசுங்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** பில்டிங் பற்றி கேள்வி வந்ததால் சொல்கிறேன். தக்கைக் கல் எல்லாம் உற்பத்தி செய்தார்கள், அந்தத் தொழிற்சாலையாவது லாபத்தில் ஓடுகிறதா? இல்லையா? அதுபற்றிய விபரத்தைக் கொடுக்க இயலுமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தக்கைக் கல் தொழிற்சாலை அண்மையில்தான் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. போலந்து நாட்டுடன் ஒரு ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டு, தொழில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஆரம்பத்தில் எல்லாத் தொழிலும் கொஞ்சம் நஷ்டத்தில் தான் ஓடும். அதேமாதிரி இந்தத் தொழிற்சாலையும் ஆரம்பக் காலத்தில் நஷ்டத்தில் தான் இயங்குகிறது.

**திரு. கு. அ. பொம்மன் :** தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்களின் பதிலிலிருந்து மரச் சாமான்கள் சம்பந்தப்பட்ட தொழிற்சாலை ஒன்றை உருவாக்கப் போவதாகத் தெரிகிறது. நீலகிரி மாவட்டத்தில் நல்ல மரங்கள் ஏராளமாக இருப்பதால், அங்கு இந்தத் தொழிற்சாலையை ஏற்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** சென்னையில் அதிகமாக வீடுகள் கட்ட வேண்டியிருப்பதால் அந்த யூனிட்டை சென்னையில் நிறுவுவது நல்லது என்று கருதி, சென்னையில் உருவாக்கிக் கொண்டிருக்கிறோம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சார், வீடு கட்டுவதற்குத் தேவையான செங்கல் பற்றியும், சிமெண்ட் பற்றுக்குறை பற்றியும் அமைச்சரவர்கள் சொன்னார்கள். நைஸ் சிமெண்ட் ஓப்பன் மார்க்கெட்டில் கிடைக்கிறது. அதேமாதிரி மற்ற சிமெண்ட் வகைகளும் அரசாங்கம் கட்டக்கூடிய கட்டடங்களுக்கு கொடுக்கப்பட வேண்டுமென்று மத்திய அரசை இந்த அரசு கேட்டதுண்டா? கேட்டிருந்தால் எந்தமாதிரியான பதில் வந்திருக்கிறது?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: வீட்டுவசதி வாரியத்திற்குத் தேவையான சிமெண்டை மாநில அரசு மத்திய அரசிடமிருந்து பெற்று அல்லது தொழிற்சாலைகளிலிருந்து பெறும் அனுமதியைப் பெற்று வாங்கிக் கொடுக்கிறது. அந்த வகையில் மத்திய அரசை அணுகி இருக்கிறோம். இருந்தபோதிலும் சிமெண்ட் பற்றாக்குறை அதிகமாக இருப்பதால் இப்போது சுண்ணாம்பு கொண்டு கட்ட ஆரம்பித்திருக்கிறோம்.

### குருவராஜபாளையம் வீடு அடமான சங்கம்

* 559 வினா—திரு. தோப்பூர் திருவேங்கடம்: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டத்திலுள்ள குருவராஜபாளையம் கூட்டுறவு வீடு அடமான சங்கம் எந்த ஆண்டு துவங்கப்பட்டது?

(இ) அதில் எந்தெந்த கிராமங்களுக்கு கடன் வசதி வழங்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) குருவராஜபாளையத்தில் கூட்டுறவு வீடு அடமான சங்கம் ஏதும் ஆரம்பிக்கப்படவில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. தோப்பூர் திருவேங்கடம்: தலைவரவர்களே, குருவராஜபாளையம் கிராமப்புற வீட்டுவசதி சங்கம் என்ற அமைப்பின்கீழ் பல ஆண்டு காலம் இயங்கி, 5 பேர்களுக்கு மேல் கடன் வழங்கவில்லை என்பதை அரசு அறியுமா? ஆகவே குருவராஜபாளையத்தில் ஒடுகத்தூர் பேரூராட்சியில் வீடு கட்டும் கூட்டுறவு சங்கம் ஒன்றை அமைக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதை விரைவில் தொடங்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: அங்கே கிராமப்புற வீட்டுவசதி கூட்டுறவுச் சங்கம் இருந்தது உண்மை. ஐந்து பேருக்கு கடன் வழங்கி இருக்கிறார்கள். புதிதாக இப்போது ஒரு கூட்டுறவு சங்கம் தேவை என்று கேட்டிருக்கிறார்கள். அரசாங்கம் விரைவில் அதை அனுமதிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





### *Notices for Strikes*

* 560. Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Labour be pleased to state whether it is a fact that there is a rule that taxi drivers and autorickshaw drivers in the City of Madras should go on strike only after prior notice to the Government?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: வாடகை வண்டிகள், ஆட்டோரிக்ஷாக்கள், மோட்டார் போக்குவரத்து பணிகளாகும். எனவே, அவை பொதுமக்களுக்குப் பயன்படும் பணிகளின் கீழ் வருகின்றன. தொழில் தகராறுகள் சட்டத்தின் 22-வது பிரிவையொட்டியும், தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் விதிகளைச் சேர்ந்த 59 (1) விதியையொட்டியும், வாடகை வண்டி ஓட்டுநர்கள், ஆட்டோரிக்ஷா ஓட்டுநர்கள், மேற்படி வண்டிகளின் உரிமையாளர்கள், சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகள் ஆகியோருக்கு மேற்சொன்ன விதிகளில் வரையறுக்கப்பட்ட 'O' படிவத்தில் 14 நாட்களுக்கு முன்னதாக வேலைநிறுத்த அறிவிப்பை அனுப்ப வேண்டும். ஆனால், உரிமையாளர்களே வாடகை வண்டிகளையும், ஆட்டோரிக்ஷாக்களையும் தொழிலாளர்களின்றி ஓட்டுகின்ற பட்சத்தில் தொழில் தகராறுகள் சட்டத்தின் கீழ் அவ்வுரிமையாளர்கள் வேலைநிறுத்த அறிவிப்பைக் கொடுக்க வேண்டிய அவசியமில்லை. ஏனெனில், மேற்படி சட்டத்தின்கீழ் அவர்கள் 'தொழிலாளர்கள்' அல்லர். மோட்டார் வண்டிகள் சட்டத்தின் கீழ் டாக்சி, ஆட்டோரிக்ஷா உரிமையாளர்கள்/வலவர்கள் வேலைநிறுத்த அறிவிப்பு எதையும் கொடுக்க வேண்டுமெனச் சொல்லப்பட்டிருக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

### (2) அவையுரிமை மீறல் பிரச்சனை.

### எதிர்க்கட்சி தலைவர்கள் கூறாததை அவர்கள் கூறியதாக திரு. ந. வீராசாமி கூறியதுகுறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2—4—1975-ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவையின் பேரவைத் தலைவர் அவர்களைப் பதவி நீக்கம் செய்யக்கோரும் தீர்மானத்தின் மீது விவாதம் நடைபெறும்

பொழுது மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமியின் பேச்சில் குறுக்கிட்டு மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கமணி அவர்கள் கீழ்க்கண்ட உரிமை மீறல் பிரச்சனையை எழுப்பினார் :—

"ஒரு குறிப்பிட்ட சம்பவம் இந்த மன்றத்திலே நடந்தது, இந்த மன்றத்திலே நடைபெற்று, ஒவ்வொரு கட்சித் தலைவரும், நாங்கள் பேசிவிட்டு வெளியே சென்றோம். அதற்குப் பிறகு, சில விஷயங்கள் முடிந்தது. அப்படியிருக்கும் பொழுது உண்மைக்கு மாறாக நாங்களெல்லாம் வருத்தம் தெரிவித்ததாக உறுப்பினரவர்கள் சொல்கிறார்கள். ஆகவே, இந்தப் பிரச்சனையை பிரிவிலேஜ் கமிட்டிக்கு விட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்."

திரு. தங்கமணி அவர்களால் ஆட்சேபிக்கப்பட்ட திரு. வீராசாமி அவர்களின் பேச்சின் பகுதி கீழே தரப்பட்டுள்ளது :—

"அப்படித்தான் செய்தார்கள் . . .

அதைப்பற்றி எதிர்க் கட்சியிலே இருப்பவர்களிடம் தனித்தனியாகக் கேட்டால் சொல்வார்கள். . .

அந்தச் சம்பவத்தைப் பற்றி வருத்தப்பட்டிருக்கிறார்கள். . . . .

அவர்களுடைய ஒவ்வொரு தலைவரும் தனிப்பட்ட முறையிலே வருந்தியிருக்கிறார்கள்."

எந்த ஒரு கூற்றும் சட்டமன்றப் பேரவைக்கு வேண்டுமென்றே தவறான தகவலை தரவேண்டுமென்ற உள்நோக்கத்துடன் கூறப்பட்டிருந்தால் அது அவையுரிமை மீறிய செயலாகும். அவையில் நடந்த நிகழ்ச்சியை மாற்றியோ, திரித்தோ கூறினாலும் அவையுரிமையை மீறிய செயலாகும்.

திரு. வீராசாமி அவர்கள் பேச்சில் எதிர்க்கட்சி தலைவர்கள் எங்கு, யாரிடம் வருத்தம் தெரிவித்தார்கள் என்று குறிப்பிடப் படவில்லை. ஒவ்வொரு தலைவரும் வருத்தம் தெரிவித்ததாகப் பொதுவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறதே அல்லாமல், அவையில் வருத்தம் தெரிவித்தார்கள் என்று கூறவில்லை.

எனவே, மேற்படி நிகழ்ச்சி குறித்து அவையுரிமை மீறிய செயல் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.



**(3) 27—3—1975 அன்று திரு. வி. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் பேச்சிலிருந்து நீக்கப்பட்ட சில பகுதிகள் மீண்டும் நடவடிக்கைக் குறிப்பில் சேர்த்துக் கொள்வது பற்றிய பேரவைத் தலைவரின் தீர்ப்பு.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, 27—3—1975 அன்று சட்டக் கல்லூரி மாணவர் விடுதி சம்பந்தமாக மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள்—

கே. டி. கே. தங்கமணி,
கோவை செழியன்,
டாக்டர் ஹாண்டே,
ஜே. ஜேம்ஸ்,
என். கே. பழனிசாமி,
எஸ். அழகர்சாமி,
எம். சுரேந்திரன்.

ஆகியோர் கொண்டுவந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தானும் கருத்துத் தெரிவிக்க முயன்ற போது, ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான நோட்டீஸ் கொடுத்த உறுப்பினர்கள் தவிர்த்த வேறு உறுப்பினர்கள் கருத்தறிவிக்க விதிகளில் இடமில்லை என மறுத்தும், அதன் பின்னர், திரு. கிருஷ்ணமூர்த்தி "Point of order" என்று கூறி எழுந்து பாயின்ட் ஆப் ஆர்டர் பற்றி எதுவும் கூறாமல், மாணவர் விடுதியில் நடைபெற்ற நிகழ்ச்சிகளைக் கூறியதும், அது பாயின்ட் ஆப் ஆர்டர் ஆகாது, ஆகவே, அவர் பேசியதை நிகழ்ச்சிக் குறிப்பில் இருந்து நீக்குகிறேன் என்றும் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தீர்ப்பு வழங்கியது, நம்முடைய விதி :

83 (3) "The Speaker may order the expunction of any portion of proceedings of the House relating to any point of order by the members when in his opinion it is an abuse of the right of raising a point of order ".

எனத் தெளிவாகக் கூறுவதால், முற்றிலும் முறையான தீர்ப்பே ஆகும்.

எனினும் விதிகள் தெளிவாக இருப்பினும், சிற்சில சமயங்களில் ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது அறிக்கை கொடுக்காத உறுப்பினர்களும் கருத்துக்கள் வழங்கிய நிகழ்ச்சிகள் நடைபெற்றுள்ளன.

16—8—68 அன்று, உடையார்பாளையத்தில் நடைபெற்ற துப்பாக்கி சூடு பற்றி திரு. கருத்திருமன் அவர்கள் கொண்டுவந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் போதும் 6—12—1972 அன்று திருச்சி கிளைவ் விடுதி மாணவர்கள் தாக்கப்பட்டது குறித்து திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் கொண்டு வந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் போதும், ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கான அறிக்கை கொடுக்காத உறுப்பினர்கள் சிலரும் பாயின்ட் ஆப் ஆர்டர் என்ற போர்வையில் கருத்துக்கள் வழங்கிய நிகழ்ச்சிகள் இடம் பெற்றுள்ளன. அது நாம் வகுத்துக் கொண்டிருக்கிற விதி முறைகளுக்கு முற்றிலும் மாறானது என்றாலும் சூழ்நிலையை நோக்கி அனுமதிக்கப்பட்டுள்ளது. அதையொட்டியே திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அன்று கூறியவற்றையும் அப்பேச்சில் சாதி குறித்துக் கூறிய சில தொடர்களை நீக்கிவிட்டு நிகழ்ச்சிக் குறிப்பில் இடம் பெற அனுமதிக்கிறேன்.

இவ்வாறு ஒத்திவைப்புத் தீர்மானங்கள் குறித்து ஆய்வு மேற்கொள்ளும் போது அதற்கான அறிக்கை கொடுக்காத உறுப்பினர்கள் இடையில் எழுந்து கருத்துக்களை வழங்குவது இதுவே கடைசி நிகழ்ச்சியாக அமையட்டும். இனி அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் அனுமதிக்கப்படமாட்டா. பேரவைத் தலைவர் அனுமதியின்றி பேசப்படும் பேச்சுக்கள் நிகழ்ச்சிக் குறிப்பில் கண்டிப்பாக அனுமதிக்கப்படமாட்டாது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

## (4) நடைமுறைக் கேள்விகள்.

### (அ) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரால் நீக்கப்பட்ட சில பகுதிகளை மீண்டும் நடவடிக்கைக் குறிப்பில் சேர்த்துக் கொள்ளலாம் என மாண்புமிகு பேரவைத் தலைவர் ஒரு வாரத்திற்குப் பிறகு ஆணையிடலாமா என்பது குறித்து.

DR. H. V. HANDE : I am on a very valid point of order. I am not going into the question of whatever you have stated about the matter. My point of order is this. I am given to understand that hereafter it may be possible for us to come before the Speaker and persuade him to de-expunge whatever has been expunged. Particularly, what I am referring to is. . . .



மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயின்ட் ஆப் ஆர்டர் என்பது சபையில் நடந்த நிகழ்ச்சியைப் பற்றிய விதிமுறைகள் ஏதேனும் மீறப்பட்டிருந்தால், அவைபற்றி இருக்கவேண்டும். நீங்கள் எதையொட்டி பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்புகிறீர்கள் என்று சொல்லுங்கள்.

DR. H. V. HANDE : In this particular context the hon. Member Thiru Krishnamurthy gave a notice of no-confidence motion against the Deputy Speaker in the morning ...........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாம் வகுத்துக் கொண்டிருக்கிற விதிமுறைகள் மீறப்படுகிற நேரத்தில், நாம் சட்ட மன்றத்தில் கடைபிடித்து வருகிற மரபுகள் மீறப்படுகிற நேரத்தில் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பலாம். வெளியில் நடக்கிற நிகழ்ச்சிகளையொட்டி பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்ப முடியாது.

DR. H. V. HANDE : It is a very valid point. You can also ask Mr. Krishnamurthy. About a couple of hours later he withdrew the motion on the specific understanding that this will be de-expunged. If this is going to be the practice—that if a member who gives a no-confidence motion is given an assurance like this, it is a very, very serious matter. Every one of us. . .

இதுபோல ஒரு தீர்மானத்தைக் கொடுத்து சபாநாயகரை மிரட்டலாம். நமது சட்ட மன்ற நிகழ்ச்சிகள் எப்படி நடைபெற வேண்டும் என்பதற்கு விதிமுறைகளே இருக்கின்றன. இந்த ரூல்ஸ் புத்தகத்தில் எந்தவிதியின் கீழும் டீ-எக்ஸ்பன்ஜ் பண்ண வாய்ப்பே கிடையாது. ஆளுங்கட்சிக்காரர் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொடுத்துவிட்டார், அவர் அதை வாபஸ் பெறும்படி இதுபோல டீ-எக்ஸ்பன்ஜ் பண்ணுவதாக நெகோஷியேஷன் மூலம் செய்வது பின்னால் மிகப் பயங்கர விளைவுகளை ஏற்படுத்தும்.

Under what Rule you are de–exponging an expunged matter? I want the number of the rule.

திரு. ஆலடி அருணா : மாண்புமிகு திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அவையில் பேசியதை துணைச் சபாநாயகர் அவர்கள் அவைக் குறிப்பில் இருந்து நீக்கினார். அவர் நீக்கியது தவறு என்று —அதை நீக்கியதற்கு ஐந்தாறு தினங்களுக்குப் பிறகு இப்போது மீண்டும் அவற்றை சபை நடவடிக்கைக் குறிப்பில் ஏற்றுகிறீர்கள்.

[திரு. ஆலடி அருணா] [1975 ஏப்ரல் 3

இப்படி ஏற்ற வேண்டிய அவசியம் என் ஏற்பட்டது? அன்றைக்கே உடனடியாக எடுத்துச் சொல்லாததற்கு காரணம் என்ன. ஆளுங்கட்சி உறுப்பினருடைய மிரட்டலுக்குப் பயந்து—அவர் கொண்டு வந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்குப் பணிந்து—இதுபோல செய்யப்படுகிறதோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது. இதை அவைக்குறிப்பில் ஏற்ற சம்மதித்தால்தான் தாம் கொடுத்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை திரும்ப பெற்றுக் கொள்ள முடியும் என்று உங்களை நிர்பந்தப்படுத்தினாரா? அவர் அந்தத் தீர்மானத்தை திரும்பப் பெற்றதே—இதுபோல சபை நடவடிக்கைக் குறிப்பில் அவர் பேசியது ஏற்றப்படும் என்கிற உறுதி அளிக்கப்பட்டதால்தான்—ஆளுங்கட்சி நிர்பந்தம் காரணமாகத்தான் இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது என்பது எங்களுக்குக் கிடைத்த தகவல். தாம் தவருக முறைகேடாக அன்றைக்கு திரு. கிருஷ்ணமூர்த்தி பேச்சை அவை நிகழ்ச்சிக் குறிப்பில் இருந்து நீக்கியதற்கு துணைச் சபாநாயகர் வருத்தம் தெரிவித்துக்கொண்டிருக்கிறாரா? அவர் ஒரு தவறு செய்திருக்கிறார் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது எப்படி பாயின்ட் ஆப்

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** விதி 235, 236.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** விதி 235, 236.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதைப் படியுங்களேன்.

DR. H. V. HANDE : Rule 235 reads thus—

"If the Speaker is of opinion that a word or words has or have been used in debate which is or are defamatory or indecent or unparliamentary or undignified, or grossly irregular he may in his discretion, order that such word or words be expunged from the official report of the proceedings of the House, and all consequential alterations made in such report and make an announcement in the Assembly of the fact of his having made such order."

Rule 236 reads—

"The portion of the proceedings of the House so expunged shall be marked by asterisks and an explanatory foot-note shall be inserted in the proceedings as follows :—

"Expunged as ordered by the Chair."



1975 ஏப்ரல் 3] [Dr. H. V. Hande]

Where is the rule for de-expunging an expunged matter? What is the security for the Speaker? நாளையதினம் நாங்கள் எல்லோருமே வந்து மிரட்டினால் சபாநாயகருடைய நிலைமை என்ன ஆகும்?

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இந்த மன்றத்திலே தாங்கள் ஏதாவது ஒரு குறிப்பிட்ட வார்த்தையை—அல்லது ஒரு அங்கத்தினருடைய பேச்சின் ஒரு பகுதியை நீங்கள் எக்ஸ்பஞ்சு பண்ணுவதையே நாங்கள் வரவேற்பதில்லை. அதை திரும்ப டீ-எக்ஸ்பன்ஜ் பண்ணுவது வரவேற்கத்தக்க விஷயம் தான். ஆனால் ஒரு விஷயம் சிந்திக்கப்படவேண்டும். எக்ஸ்பன்ஜ் பண்ணியது மார்ச் 27 ஆம் தேதி. இன்று ஏப்ரல் 3 தேதியாகிறது. ஏழு தினங்களுக்குப் பிறகு இதுபோல டீ-எக்ஸ்பன்ஜ் பண்ணுவது—இதனால் முன்னால் இருக்கிற ரெக்கார்ட்கள் எல்லாம் பாதிக்கப்படுகின்றன அல்லவா? ஏழு தினங்களுக்குப் பிறகு இன்றைக்கு இதுபோல செய்ய வேண்டிய அவசியம் என்ன என்று கேட்க விரும்புகிறேன். நேற்றைக்கே நான் சொன்னேன், உங்களுக்கு அப்படிச் செய்ய தனி அதிகாரம் கொடுத்திருக்கிறோம் என்று . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** டாக்டர் ஹாண்டே அவர்கள் இதுபோல ஏற்கனவே செய்யப்பட்டிருக்கிறதா என்று கேட்டார்கள். முன்பு இதே அவையில் திரு. சுப்பு அவர்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று எழுப்பி அதை நானே எக்ஸ்பன்ஜ் பண்ணினேன். திரும்பவும் அது அவைக்குறிப்பில் ஏறும் என்று தெரிவித்திருக்கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** இது ஆளுங்கட்சி உறுப்பினர்கள் உங்களை மிரட்டுகிறபோதுதான் செய்திருக்கிறீர்கள். அதைத்தான் நான் சொல்கிறேன்.

**திரு. முனு ஆதி :** எதிர்க்கட்சிக்கு ஏதாவது செய்திருக்கிறீர்களா? சொல்லுங்களேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. சுப்பு அவர்களுடைய பாயின்ட் ஆப் ஆர்டரை அவைக் குறிப்பில் ஏற்றவேண்டுமென்று கேட்டது ஆளுங்கட்சிக்காரர்கள் அல்ல. எதிர்க்கட்சிக்காரர்கள் எல்லாம் சேர்ந்து அதற்காக ஒரு தர்ணா செய்து மிரட்டிய

காரணத்தினால்தான்—அவர்களது மனம் புண்படக் கூடாது என்பதற்காக அது டீ-எக்ஸ்பன்ஜ் செய்யப்பட்டதே தவிர—ஆளுங் கட்சிக்காரர்களிடம் இருந்து எந்தவிதமான மிரட்டலும் இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) :** ஆன் எ பாயின்ட் ஆப் பெர்சனல் எக்ஸ்பிளனேஷன் சார். எதிர்க்கட்சியிலேயிருக்கக்கூடிய நண்பர்கள் அன்றையதினம் ரிமூவல் நோட்டீஸ் கொடுத்துவிட்டு உடனே வாபஸ் வாங்கிய சமயத்திலே கஷ்டப் பட்டார்கள். இன்றைய தினம் அதை ரெஸ்டோர் பண்ணுகிற சமயத்திலும் கஷ்டப்படுகிறார்கள்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** நீங்கள் மிரட்டுகிறீர்கள்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) :** எங்கள் கட்சிக்குள்ளே நாங்களெல்லாம் சகோதர பாவத்தோடு இருக்கிறோம். நாங்கள் எல்லாம் மிரட்ட வேண்டிய அவசியத்திலே இல்லை. எந்த விதமான வற்புறுத்தலோ அல்லது எந்தவிதமான ஒரு வேண்டுகோளோ என்னிடத்திலே இருந்து இல்லாமலே நீங்கள் ரெஸ்டோர் செய்வது கண்டு நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். அது நம்முடைய எதிர்க்கட்சியிலே இருக்கிறவர்களுக்கு பிடிக்கவில்லை. காரணம், இதை ரெஸ்டோர் செய்வதை அவர்கள் எதிர்பார்க்க வில்லை, ஆகவே, காரணம் கற்பிக்கிறார்கள்.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** I am raising a point of order, Sir. நான் கேட்டுக்கொள்வது, தாங்கள் முன்னால் சொன்னீர்கள்—சுப்பு அவர்கள் பேசியதை எக்ஸ்பஞ்ச் செய்தபிறகு, அவர்கள் மனம் புண்படுகிற காரணத்தாலே, டீ-எக்ஸ்பன்ஜ் செய்தேன் என்று சொன்னீர்கள். இந்தத் தரப்பிலே இருக்கக்கூடிய பலருடைய பேச்சுக்கள்—நேற்றுகூட நான் பேசியது எக்ஸ்பஞ்ச் செய்யப் பட்டது. சிறைத் துறை மானியத்திலே பேசப்பட்டது எக்ஸ்பஞ்ச் செய்யப்பட்டது. எக்ஸ்பஞ்ச் செய்யும்போது, எங்களுக் கெல்லாம் மனம் புண்படுகிறது. நாங்களும் எக்ஸ்பங்ஷன் கூடாது என்று சொல்லியிருக்கிறோம். தாங்கள் இப்பொழுது வழி காட்டியிருக்கிறீர்கள். எக்ஸ்பஞ்ச் செய்ததை டீ-எக்ஸ்பஞ்ச்



செய்து வழிகாட்டியிருக்கிறீர்கள். அதற்காகத் தங்களை நான் பாராட்டுகிறேன். முன்னால் எக்ஸ்பஞ்ச் செய்ததை, ஏழு நாள் கழித்து டீ-எக்ஸ்பஞ்ச் செய்கிறீர்கள். ஆகவே, தாங்கள் ஏற்கனவே எக்ஸ்பஞ்ச் செய்ததையெல்லாம் பார்த்து, அவற்றிலே எக்ஸ்பஞ்ச் செய்யவேண்டிய வார்த்தைகளை மட்டும் விட்டுவிட்டு, மற்ற வற்றை டீ-எக்ஸ்பஞ்ச் செய்கின்ற நல்ல காரியத்தைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, நீங்கள் நேற்றையதினம் இரு தரப்பினருக்கும் ஒரே மாதிரி நடந்துகொள்கிறேன் என்று சொன்னீர்களே, அதைக் கடைப்பிடிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதைப்போல் நிகழ்ச்சி முன்னால் இருக்கிறது. 17—10—1964-லே, இப்பொழுது முதலமைச் சராக இருக்கிற மாண்புமிகு மு. கருணாநிதி அவர்கள் அன்றைய பேரவைத் தலைவரைப் பார்த்துக் கேட்டது. "தலைவர் அவர்களே, நேற்றையதினம் கனம் அங்கத்தினர் திரு. புலவர் கோவிந்தன் அவர்கள் பேசும்போது தாங்கள் குறுக்கிட்டு அவருடைய பேச்சு நடவடிக்கைப் புத்தகங்களில் ஏறக்கூடாது என்று கூறியதாக இன்று சில பத்திரிகைகளில் செய்தி வெளியாகியிருக்கிறது. ஆனால் தாங்கள் என்னிடத்தில் கூறியது சில குறிப்பிட்ட பகுதிகள் மட்டும்தான் நடவடிக்கையிலிருந்து நீக்கப்படுவதாக குறிப் பிட்டீர்கள். ஆனால் செய்தி இவ்வாறு இருக்கிறது . . .

"MR. SPEAKER : Because I was not able to pick out the portion to be expunged in the course of the delivery of the speech, I had to order that the whole speech be expunged. After perusing the official report of the speech, I have marked out some portions of the speech which alone will be expunged." இது ஒரு முறை.

**திரு. ஆலடி அருணா :** அது அடுத்த நாளே நடந்தது. இப்பொழுது இடைவெளி ஏழு நாள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எக்ஸ்பஞ்ச் பண்ணலாமா என்பது தான் கேள்வி. (திரு. ஆலடி அருணா நின்று கொண்டிருந்தார்). பேரவைத் தலைவர் எழுந்திருக்கும்போது உறுப்பினர்கள் உட்காரவேண்டும். அந்த மரபையாவது

கடைப்பிடியுங்கள். டாக்டர் ஹாண்டே கேட்டது, எக்ஸ்பஞ்ச் செய்ததைத் திரும்பவும் குறிப்பில் ஏற்றுவதற்கு அதிகாரம் உண்டா, என்பது. அதைத்தான் சொல்கிறேன்.

அடுத்து, 22—1—1974 அன்று நடைபெற்றது.

"MR. SPEAKER: The hon. Member, Sri M. Karunanidhi has brought to my notice that the hon. Member Sri T. Karcha Gowder made some objectionable statements in his speech in the Assembly on 20th January 1964, when he compared the leaders who were not present in the House. I also learn that immediately the hon. Member Sri P. U. Shanmugam retorted. I do not like to repeat the statements here. I find that the comparison made by Sir Karcha Gowder is very undignified and against parliamentary conventions and so also is the retort. These are disparaging statements affecting the standard of debate in the House. I therefore expunge the objectionable portions in their speeches from the official report of the proceedings. I request hon. Members to keep up the standard of debate in the House."

ஆக, பின்னால் நீக்குவதற்கும் நீக்கியதை ரெஸ்டோர் பண்ணுவதற்கும் பேரவைத் தலைவருக்கு அதிகாரமிருக்கிறது.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தாங்கள் இப்பொழுது மேற்கோள் படித்தீர்கள் . . .

திரு. கோவை செழியன்: இப்பொழுது இங்கே சட்டசபை நடந்துகொண்டிருக்கிறது. அங்கே கௌன்சில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அவர்கள் * * இங்கு கேட்கிறது. அவர்கள் பேசுகிறபொழுது, அங்கே கவனம் போகிறது. இரண்டையும் தனித்தனியாக நடத்தினால் நல்லது. அவர்கள் * * அங்குதான் கவனம் செல்கிறது, உங்களைப் பார்க்க முடியவில்லை. கதவுகள் திறந்திருப்பதால், நேராக அவர்களைத் திரும்பிப் பார்க்கவேண்டியிருக்கிறது.

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர்கள் * * என்று சொன்ன அந்தப் பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. கோவை செழியன்: * * என்றது 'உயர்ந்த ஒலி'.

திரு. பெ. சீனிவாசன்: இவ்வளவு பேரை அலவ் பண்ணுகிறீர்கள். என்னைப் பேச அலவ் பண்ணக் கூடாதா?

திரு. ஏ. சுப்பிரமணியம்: தாங்கள் இப்பொழுது ஒரு மேற்கோள் காட்டினீர்கள். முன்னேயிருந்த சபாநாயகர் அளித்த தீர்ப்பை . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நானே கொடுத்தது என்று . . .

THIRU A. SUBRAMANIAM: Undignified unparliamentary, derogatory . . .

எதை நீக்குவது என்பது பேரவைத் தலைவர் முடிவு செய்ய வேண்டியது.

திரு. பெ. சீனிவாசன்: இப்பொழுது, நீங்கள் சொன்ன தீர்ப்பிலே எனக்குச் சந்தேகம். நேற்றையதினம் டெபுட்டி ஸ்பீக்கர் அவர்கள் ஒரு ஆப்சர்வேஷன் செய்யும்போது
'Deputy Speaker is subordinate to the Speaker'
என்று சொல்லக்கூடாது என்று சொன்னார்கள். எல்லோருக்குமே ஈக்குவல் ராங்க்—பானல் ஆஃப் சேர்மனிலேயிருக்கிற ஒருவர் அந்த இடத்திலே உட்காரும்போது அவருக்கும் தலைவருக்குமுள்ள அதிகாரமிருக்கிறது என்று சொன்னார்கள். நீங்கள் எடுத்துக் காட்டிய முன் உதாரணங்களில் எந்த ஸ்பீக்கர் எக்ஸ்பஞ்ச் செய்தாரோ, அவரே டீ-எக்ஸ்பஞ்ச் செய்தார். டெபுட்டி ஸ்பீக்கரோ, அல்லது பானல் ஆஃப் சேர்மனிலே ஒருவரோ எக்ஸ்பஞ்ச் செய்து, அதை ஸ்பீக்கர் டீ எக்ஸ்பஞ்ச் செய்த மாதிரி இல்லை. நமது டெபுட்டி ஸ்பீக்கர் எக்ஸ்பஞ்ச் செய்து ரூலிங் கொடுத்தார்கள், 7 நாளைக்கு முன்பு. இன்றைக்கு நீங்கள் அதை மாற்றி ரூலிங் கொடுக்கிறீர்கள். ஏற்கனவே, அவர் கொடுத்த

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

ரூலிங்கை எப்படி மாற்றமுடியும்? கொடுத்த ரூலிங்கை மாற்றுவது என்ன நியாயம்? நீதிமன்றத்தை எடுத்துக்கொண்டாலும், சட்டமன்றத்தை எடுத்துக்கொண்டாலும் அந்தத் தீர்ப்பை மாற்றுவதற்கு முடியாது. டெபுட்டி ஸ்பீக்கர் கொடுத்த ரூலிங்கை மாற்றுவதற்குப் பேரவைத் தலைவராகிய உங்களுக்கு உரிமை கிடையாது. அதேபோல் வேறு சம்பவம் வந்தால், அப்பொழுது வேண்டுமானல் நீங்கள் புது ரூலிங் கொடுக்கலாம். (சட்டப் பேரவைத் துறைச் செயலாளர் மாண்புமிகு பேரவைத் தலைவருடன் பேசிக்கொண்டிருந்தார்.)

Sir, I object to it.

செக்கரட்டரி அந்தப் பக்கம் பேசுகிருர், நீங்கள் எப்படி என்னைக் கவனிக்க முடியும்? நீங்கள் கொடுத்தத் தீர்ப்பை வேண்டுமானல் மாற்றிக்கொள்ளலாம் அந்த இடத்திலே யார் உட்கார்ந்தாலும், அவர்களுக்கு ஈக்குவல் ராங்க் தான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதற்கு முன் யார் உட்கார்ந்து தீர்ப்புக் கொடுத்தாலும் அந்தத் தீர்ப்பைப் பின்னல் மாற்றுவதற்கு உரிமை இருக்கிறது. பேரவைத் தலைவர் ஒருவர் கொடுத்தத் தீர்ப்பை இன்னொருவர் மாற்றலாம். ஆகவே, இதில் எந்தவிதமான பாயின்ட் ஆஃப் ஆர்டரும் இல்லை.

**திரு. பெ. சீனிவாசன்:** சட்டசபையிலே மரபே கிடையாதா? நாங்கள் பேசினல் மரபைக் காட்டுகிறீர்கள். யார் தீர்ப்பை நாங்கள் நம்புவது? டெபுட்டி ஸ்பீக்கர் ரூலிங் தந்தால் நாங்கள் நம்ப வேண்டாமா? எந்தப் பாராளுமன்றத்திலும் இந்த முறை கிடையாது. டெபுட்டி ஸ்பீக்கர் கொடுத்த தீர்ப்பு உங்களுக்குப் பிடிக்கவில்லையென்ருல் வேறு ஒரு சந்தர்ப்பத்தில், அதே மாதிரி நிகழ்ச்சியில் நீங்கள் வேறு ஒரு தீர்ப்பு கொடுக்கலாமே தவிர, அன்றைக்கு அவர் கொடுத்தத் தீர்ப்பை நீங்கள் மாற்றுவது சரியல்ல. அவரையே வந்து மாற்றச் சொல்லுங்கள். டெப்புட்டி ஸ்பீக்கர் கொடுக்கிற ரூலிங்கை நம்ப வேண்டாமென்று சொல்கிறீர்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைத் தலைவர் கொடுக்கிற தீர்ப்பை அதே பேரவைத் தலைவரே மாற்றுகிருர். அதே நிலைமை தான்.



**திரு. பெ. சீனிவாசன்:** அப்படியென்ருல், Deputy Speaker is only subordinate to the Hon. Speaker.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதற்கு முன்னே பேரவைத் தலைவர் தீர்ப்பு கொடுத்திருந்தால் அவரேகூட மாற்றலாம். (திருவாளர்கள் மூனு ஆதி, பெ. சீனிவாசன், கோவை செழியன், நா. வீராசாமி, டி. பொன்னுமலை ஆகியோர் நின்றுகொண்டிருந்தார்கள். இப்படி 5 பேர் நின்று கொண்டிருந்தால் எப்படி? ஒவ்வொருவராகச் சொன்னல்தான் . . .

**திரு. பெ. சீனிவாசன்:** நான் கேட்டதற்கு நீங்கள் பதில் சொல்லுங்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் பதில் கொடுத்து விட்டேன்.

**திரு. பெ. சீனிவாசன்:** அப்படியென்ருல் do you mean to say that Deputy Speaker and members of Panel of Chairman are subordinate to the Speaker?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முன் கொடுத்த தீர்ப்பைப் பின்னல் வந்து மாற்றலாம் என்ற தீர்ப்பு கொடுத்திருக்கிறேன்.

(திரு. பெ. சீனிவாசன் நின்று கொண்டிருந்தார்)

**திருமதி த. ந. அனந்தநாயகி:** சார் ஆன் எ பாய்ன்ட் ஆஃப் ஆர்டர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உங்கள் பாய்ன்ட் ஆஃப் ஆர்டரை ரெய்ஸ் பண்ணுகிறீர்களா, இல்லையா?

**திருமதி த. ந. அனந்தநாயகி:** அவரை உட்காரச் சொல்லுங்கள். அவர் உட்கார்ந்தால்தானே நான் பேசமுடியும்.

(முற்பகல் 10-30)

**திரு. பெ. சீனிவாசன்:** பேரவைத் தலைவராகிய தாங்கள் மரபு மரபு என்று சொல்கிறீர்கள், அந்த மரபு என்ன ஆயிற்று? நான் கேட்டதற்கு விளக்கம் என்ன?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைத் தலைவருடைய தீர்ப்புகளை ஏற்றுக்கொள்ளமுடியாமல் உறுப்பினர்கள் இருக்கலாம், நான் ஏற்கனவே கொடுத்த தீர்ப்புதான் சரி. மாற்றலாம், மாற்றலாம், அதுதான் என்னுடைய தீர்ப்பு.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** பாயின்ட் ஆப் ஆர்டர் சார், சட்டப் பேரவை விதிகள் என்று கிட்டத்தட்ட 250 விதிகள் போட்டிருக்கிறார்கள், அதிலே 235 ஆவது விதிதான் எக்ஸ்பங்ஷன் பற்றியது, ஆனால் டீ-எக்ஸ்பங்ஷன் என்பதற்கு இந்த விதிகளிலே எந்த விதியும் கிடையாது, ஏதோ பழைய கன்வென்ஷனாக இருக்கலாம், விதி கிடையாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ரூலைவிட கன்வென்ஷனுக்குத்தான் வலு அதிகம். ஆகவே எந்த பாயின்ட். ஆப் ஆர்டரும் இல்லை, ஏற்கனவே தீர்ப்பு அளித்தாகிவிட்டது. அடுத்து விதி 41-ன் கீழ் ....

**திரு. முனு ஆதி :** பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் சொன்னபோது எதிர்க்கட்சிக்காரர்கள் மிரட்டியதால் மிரட்டியதற்குப் பின்னாலேதான் டீ-எக்ஸ்பஞ்ச் பண்ணியிருக்கிறேன் என்று சொல்லியிருக்கிறீர்கள். இதுபோன்று எதிர்க்கட்சிக்காரர்கள் மிரட்டினால்தான் டீ-எக்ஸ்பஞ்ச் செய்வீர்களா? மிரட்டியதால் டீ-எக்ஸ்பஞ்ச் செய்தேன் என்று சொல்வது அவ்வளவு நல்லதாக இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. அ. சின்னசாமி :** திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அன்றைக்கு இங்கே பேசிய நேரத்திலே உதவி சபாநாயகரைப் பார்த்து நீங்கள் உங்கள் அதிகாரத்தைக் காட்டினால் நானும் என்னுடைய அதிகாரத்தைக் காட்டுவேன் என்று சொன்னாரே அது அவைக் குறிப்பிலே இருக்கிறதா அல்லது நீக்கப்பட்டுவிட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. தி. பொன்னுமலை :** தலைவர் அவர்களே, இங்கே பேசும்போது திரு. கோவை செழியன் அவர்கள் * * *

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



என்று அவர் சொன்ன அந்த சொற்களை நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீக்கியாகிவிட்டது.

**திரு. செ. கந்தப்பன்:** தலைவர் அவர்களே, தெளிவாக எல்லோரும் உணரத்தக்க முறையிலே இந்த மன்றத்திலே எழுப்பப்பட்ட பிரச்னையில் எல்லோரும் ஏற்கக்கூடிய தீர்ப்பை அளித்திருக்கிறீர்கள். இந்த மன்றத்தினுடைய நடைமுறை விதிகளிலே அந்த விதிகளைத் தயாரிக்கிறபோது எல்லா கண்டின்ஜன்சிகளையும் எதிர்பார்த்து எல்லா விதிமுறைகளையும் வகுத்துவிடமுடியாது. ஆங்கில நாடாளுமன்ற முறைகளிலேயும் மற்ற எல்லா நாடாளுமன்ற முறைகளிலேயும் நாம் அந்த நிலையைப் பார்க்கிறோம். நான் இங்கே பொதுவான ஒரு ஒழுங்குப் பிரச்னையை எழுப்ப விரும்புகிறேன். இங்கே டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசுகின்றபோது திரு. சீனிவாசன் அவர்கள் பேசுகின்றபோது மற்ற நண்பர்கள் எல்லாம் பேசுகின்றபோது அடிக்கடி அவர்கள் சொல்வது நீங்கள் இருங்கள், பின்னாலே பேசுங்கள் என்று சொல்கிறார்கள், அப்படிச் சொல்வது எங்களைப் போன்றவர்களைப் புண்படுத்துவதாக அமைகிறது. இப்போது இந்த மன்றத்திலே யார் சொல்வதை யார் கேட்க வேண்டும்? சபாநாயகர் சொல்வதை உறுப்பினர்கள் கேட்டுவிட்டுப் பேச வேண்டுமா அல்லது. . .

**திரு. பெ. சீனிவாசன் :** இதற்கு இவ்வளவு பெரிய பிரசங்கமா ?

**திரு. முனு ஆதி:** தலைவர் அவர்களே, நாங்கள் பேசுகிறபோது மணி அடிக்கிறீர்கள் உட்காரச் சொல்கிறீர்கள். ஆனால் இவர் லெக்சர் அடித்துக் கொண்டிருக்கிறார் இங்கே. என்ன என்ன வெல்லாமோ பேசிக்கொண்டிருக்கிறார். அவரை ஒன்றும் சொல்வதில்லை. ஆனால் நாங்கள் பேச எழுந்தால் போதும் மணியடிக்கிறீர்கள், பேசவிடமாட்டேன் என்கிறீர்கள். உட்காரச் சொல்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர்கள் பாயின்ட் ஆப் ஆர்டரை எழுப்பினார்கள், ஏதாவது தவறு இருந்தால் பின்னாலே

நீங்கள் எழலாம், அதை விட்டுவிட்டு இப்படி ஒரே நேரத்திலே ஒன்பது பேர்கள் எழுந்து கேட்டால் எப்படி? எப்படித் தீர்ப்புக் கொடுக்கமுடியும்?

திரு. செ. கந்தப்பன்: யாரையும் புண்படுத்தவேண்டுமென்ற எண்ணத்தோடு நான் பேசவில்லை. மற்ற கட்சி உறுப்பினர்களுக்கு இருக்கிற உரிமை ஆளுங்கட்சியைச் சேர்ந்த எங்களுக்கும் இருக்கிறது என்று நினைக்கிறேன். அந்த உரிமையைப் பயன்படுத்தித்தான் பேசுகிறேன். நாங்கள் எல்லோரும் சேர்ந்து இரு தரப்பாரும் சேர்ந்து நீங்கள் எங்களையெல்லாம் கட்டுப்படுத்தக் கூடிய முறையிலே கட்டுப்படுத்துகின்றீர்கள், நாங்கள் கட்டுப்பட்டு நடக்கிறோம். ஆனால் அவர்கள் திரும்பத் திரும்ப நீங்கள் பேசாமல் இருங்கள் என்று சொல்வதும் பின்னாலே பேசுங்கள் என்று சொல்வதும் முறைதானா? இரண்டு பேர்கள் விவாதிக்கிற போது அதைக் கட்டுப்படுத்துகிற அதிகாரம், இறுதி அதிகாரம் யாரிடத்திலே இருக்கிறது? இப்படி 234 உறுப்பினர்களும் நான்தான் பேசுவேன், நான்தான் பேசுவேன் என்று எழுந்து கொண்டு பேசினால் அதைக் கட்டுப்படுத்துகின்ற அதிகாரம் யாரிடத்திலே இருக்கிறது? இந்த மன்றத்திலே அந்த அதிகாரம் பயன்படுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நண்பர் முனு ஆதி அவர்கள் மெத்த வருத்தப்படுகிறார்கள் பேச நேரம் கொடுக்க வில்லையென்று. யாராவது ஒருவர் எழுந்து பேசினால் நேரம் கொடுக்கலாம். அண்ணா தி.மு.க.வில் உள்ள திரு. முனு ஆதி எழுந்தால் கோவை செழியன் வரையில் உள்ள அத்தனை பேர்களும் எழுந்து நின்றால் என்ன செய்ய முடியும்?

**திரு. ஜே. ஜேம்ஸ்:** பாயின்ட் ஆப் ஆர்டர் சார். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலிலே இந்தப் பேரவையிலே ஒரு அமைதி உண்டாகட்டும்.



**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** நாங்கள் மிகவும் பொறுமையோடு இருக்கிறோம். இந்த மன்றத்தை நடத்திச் செல்வதற்கான பொறுப்பு உங்களிடத்திலே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பொறுப்பை உணர்ந்து நாங்கள் எல்லாம் மௌனமாக இருக்கிறோம். எந்த உறுப்பினராக இருந்தாலும் முதலிலே தங்களுடைய உணர்ச்சியை அடக்கவேண்டும். முதலிலே அந்த விதியை அவர்கள் கற்றுக்கொண்டு விதிமுறைகளின்படி செயல்படுவது பொருத்தமாக இருக்கும். யாரையும் புண்படுத்த வேண்டுமென்ற முறையிலே அல்லாமல் ஆணித்தரமாகச் கூறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அந்த முறையை கையாள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு மேலும் மேலும் இந்த அவையிலே அமளி ஏற்படாமல் இருக்க எல்லோரும் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. முனு ஆதி:** திரு. பொன்னப்ப நாடார் சொன்ன அறிவுரை இங்கே இருக்கிற எல்லோருக்கும் தெரிந்த அறிவுரை தான். யார் யாருக்கு வாய்ப்புக் கொடுக்கவில்லை என்பதைச் சொல்லவில்லை, நாங்கள் கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்புக் கொடுக்கப்படவில்லை. எதிர்க்கட்சி தலைவராக இருப்பவர் எல்லோருக்கும் சம வாய்ப்புச் தாருங்கள் என்று திரு. பொன்னப்ப நாடார் சொல்லியிருந்தால் பாராட்டலாம். என்னமோ இங்கே இருக்கிற எல்லோரும் பொறுப்பு இல்லாமல் இருக்கிறமாதிரி அவர்கள்தான் பொறுப்பாக இருப்பதுமாதிரி மற்றவர்களுக்குக் கற்றுக்கொடுப்பது என்பது அவ்வளவு சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** யாருக்கும் கற்றுக்கொடுக்க வில்லை. ஆளுங்கட்சியில் உள்ளவர்களும் எதிர்க்கட்சியில் உள்ளவர்களும் சேர்ந்து எல்லோரும் ஒன்றாகக் கத்தினால் மன்றத்தை நடத்தமுடியாது. அதைத்தான் நான் சொன்னேன். அவர்களைப் பேசவிடக்கூடாது என்று சொல்லவில்லை. மற்றவர்களுக்கு ஒரு நியாயம் எனக்கு ஒரு நியாயம் என்ற முறையிலே சொல்லவில்லை. அந்த மாதிரிக் சுற்றுக்கொடுப்பவன் நான் அல்ல என்பதை திரு. முனு ஆதி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** ஏறத்தாழ 40 நிமிடங்களை, விவாதத்திற்குரிய நேரத்தை, எடுத்துக்கொண்டு இதை விவாதித்துக் கொண்டிருக்கிறோம். எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் இதிலே ஒரு நிமிடம் கூட எடுத்துக்கொள்ளவில்லை. சாதாரணமாக நேரம் இவ்வளவு இருக்கிறது என்று வைத்துக்கொண்டு அதிலேதான் பங்கிட்டுக்கொடுக்கிறீர்கள். நாற்பது நிமிடங்களில் ஒரு நிமிடம் கூட கொடுக்கப்படவில்லை. தி.மு.க.வைச் சேர்ந்தவர்களுக்கு அண்ணா தி.மு.க.வைச் சேர்ந்தவர்களுக்கு பெரும்பான்மையான நேரம், நேரம் அதிகமாகக் கிடைக்கிறது. அவர்கள்தான் அதிகமான நேரத்தை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே எங்கள் கட்சிக்கும் நீதி வழங்கப்படுகிற முறையிலே இந்த விவாதத்திலே நாங்கள் பங்கெடுத்துக் கொள்ளவில்லை. ஆகவே மற்ற விவாதங்களிலே எங்களுக்கு உரிய நேரத்தை வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்:** தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். சட்ட மன்ற விடுதியிலிருந்து வெளியில் வருகிற கேட்டுக்கு பக்கத்தில் உள்ள கூவம் நதியில் ஒரு பிணம் மிதந்து கொண்டிருக்கிறது. அதைப் பார்த்தால் அச்சமாக இருக்கிறது, அதை உடனடியாக அகற்றுவதற்கு ஆணை பிறப்பிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1972 ஆம் ஆண்டு மார்ச் 6 ஆம் தேதி இப்படி ஒரு பேரவைத் தலைவர் நீக்கிய ஒன்றை பேரவைத் தலைவரவர்கள் நிகழ்ச்சிக் குறிப்பின் ஏற்றிய நிகழ்ச்சி இந்த மன்றத்தில் அறிவிக்கப்பட்டு இருக்கிறது. (குறுக்கீடு) பேரவைத் தலைவராக இருந்தவர் மாண்புமிகு திரு. மதியழகன் அவர்கள், பேரவைத் துணைத் தலைவராக இருந்தவர் மாண்புமிகு திரு. சீனிவாசன் அவர்கள். பேரவைத் துணைத் தலைவர் நீக்கியதை பேரவைத் தலைவர் வந்து நிகழ்ச்சிக் குறிப்பிலே ஏறச் செய்த நிகழ்ச்சி நடந்திருக்கிறது. இப்பொழுது பாயின்ட் ஆஃப் ஆர்டரோடு நின்றிருக்கிறது. ஆனால் அப்பொழுது வாக் அவுட் கூட நடந்தது. மீண்டும் அதை ஏற்றியது ஏற்றியதுதான் என்று சொல்லி,



One Speaker's ruling is not binding on the other.

என்ற ஒரு தீர்ப்பையும் கொடுத்த நிகழ்ச்சி இந்த அவையிலே நடைபெற்றிருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, இதற்குமேல் இதில் நேரத்தை வீணாக்க வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

## (5) கவன ஈர்ப்பு

### ஒட்டப்பிடாரம் துணைத் தாலுக்காவில் சில பஞ்சாயத்துக்களில் லாரி மூலம் குடி தண்ணீர் வினியோகம் செய்வது குறித்து.

**திரு. எம். முத்தையா:** பேரவைத் தலைவரவர்களே, ஒட்டப்பிடாரம் துணைத் தாலுக்காவைச் சேர்ந்த குறுக்குசாலை குமாரபுரம், ராஜாவீர்கோவில், சாமிநத்தம் வேலாயுதபுரம், வீரபாண்டியபுரம், தளவாய்புரம், சில்லாநத்தம் இன்னும் சில பஞ்சாயத்துக்களில் மழையில்லாத காரணத்தால், தினந்தோறும் லாரி மூலம் குடிதண்ணீர் விநியோகம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி:** தலைவரவர்களே, கவன ஈர்ப்புப் பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லா கிராமங்களிலும் தற்போது கிணறுகளிலோ அல்லது ஊரணிகளிலோ தண்ணீர் உள்ளது என்று மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். இக்கிராமங்களுக்கு குடிதண்ணீர் வசதி செய்ய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பின்வருமாறு:—

(1) **குறுக்குசாலை:** ஒரு ஆழ்துளைக் கிணறு போடப்பட்டுள்ளது. இதில் தண்ணீர் உள்ளது. இரண்டு கைப்பம்புகள் போடும் பணி முடிவடையும் தறுவாயில் இருக்கிறது.

(2) **சாமிநத்தம்:** ஆழ்துளைக் கிணறுகள் போடப்பட்டு அதில் கைப்பம்புகள் பொருத்தப்பட்டுள்ளன. ஏற்கனவே உள்ள குடிநீர் கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் ஐக்கிய நாட்டு உதவியுடன் ஆழ்துளை போடுவதற்கு தமிழ்நாடு அரசு

*[திரு. மன்னை ப. நாராயணசாமி] [1975 ஏப்ரல் 3*

*ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையினரின் 11—9—1970-ம் நாளிட்ட ஆணை எண். 1827-ன்படி சாமிநத்தம் கிராமத்திற்கு 6 ஆழ்துளைத் கிணறுகள் அமைப்பதற்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது. மேற்கண்ட 6 குழாய் கிணறுகள் அமைக்கும் வேலைகள் ஆழ்துளைக் கருவிகளை இந்த ஒன்றியத்திற்கு அனுப்புகையில் நிறைவேற்றி வைக்கப்படும்.*

*(3) **ராஜவீர்கோவில் :** ஆழ்துளைக் கிணறுகள் போடப்பட்டு அதில் கைப்பம்புகள் பொருத்தப்பட்டுள்ளன. குடிநீர் கிணறுகள் ஆழப்படுத்தப் பட்டுள்ளன.*

*(4) **டி. குமரகிரி:** ஏற்கனவே உள்ள குடிநீர் கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டுள்ளன.*

*(5) **சில்லாநத்தம்:** ஏற்கனவே உள்ள குடிநீர் கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டுள்ளன.*

*(6) **வீரபாண்டியபுரம்:** ஒரு குழாய் கிணறு போடப்பட்டுள்ளது.*

*(7) **வேலாயுதபுரம் :** இங்குள்ள குடிநீர் ஊரனி மேம்படுத்தப் பட்டுள்ளது.*

*(8) **தளவாய்புரம் :** இங்கு மட்டும் கிடைக்கப்பெறும் தண்ணீர் உப்புத் தண்ணீராக உள்ளது. இக்கிராமத்தைச் சேர்ந்த மக்கள் பக்கத்துக் கிராமத்திலிருந்து குடிதண்ணீர் எடுத்து வருகின்றனர்.*

*இந்தப் பகுதியில் குடிதண்ணீர் கிணறுகளையும், ஊரணிகளையும் ஆழப்படுத்துவதற்கும், புதிய கிணறுகளை அமைப்பதற்கும், வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் ரூ. 1,75,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒரு ஆழ்துளைக் கிணறுக்கு ரூ. 9,300 வீதம் 31 ஆழ்துளைக் கிணறுகள் போட அனுமதிக்கப்பட்டுள்ளன. இதுவரையில் 19 ஆழ்துளைக் கிணறுகள் முடிக்கப்பட்டுவிட்டன. மீதம் உள்ள ஆழ்துளைக் கிணறுகள் 30—4—1975-க்குள் போடப்பட்டுவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஒட்டப்பிடாரத்தில் 8—3—1975 வார முடிவில் 46.00 மீ. மீ. மழை பெய்துள்ளது. தற்சமயம் எல்லாக் கிராமங்களிலும் போதிய தண்ணீர் வசதி உள்ளது.*



*1975 ஏப்ரல் 3] [திரு. மன்னை ப. நாராயணசாமி]*

*தண்ணீர் பற்றுக்குறைக் கிராமங்களுக்கு குடிநீர் திட்டங்கள் அமுல்படுத்த ஊர்ப்பணித் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு ஆண்டும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஊராட்சி ஒன்றியங்களுக்கும் அளிக்கப்படுகிறது. ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியத்திற்கு 1974-75-ல் ஆண்டிற்கு ரூ. 46,920 ஊர்ப்பணித் திட்டத்தின் கீழ் அளிக்கப்பட்டுள்ளன. ஊர்ப்பணித் திட்டத்தில் கீழே குறிப்பிட்டுள்ள வேலைகள் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது :—*

*(1) அந்தந்தப் பகுதிகளின் நிலைமைக்கேற்ப விரிவான வழங்குதல் இல்லாத தரைமட்ட நீர்தேக்கத் தொட்டிகளும், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளும் கட்டுதல்.*

*(2) குழாய்கிணறுகள், ஆழ்துளைக் கிணறுகள் தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டுதல்.*

*ஒட்டப்பிடாரம் துணைத்தாலுக்காவில் உள்ள மக்களுக்கு குடிநீர் வழங்க எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. ஆகவே, அப்பகுதி மக்களுக்கு லாரி மூலம் தண்ணீர் வசதி செய்து தருவது இப்போது தேவையற்றதாகும்.*

***திரு. எம். முத்தையா:*** *தலைவரவர்களே, எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைப் பற்றிச் சொல்வதையெல்லாம் நான் ஒத்துக் கொள்கிறேன். அது வாஸ்தவம்தான். ஆனால் அந்த ஏரியாவிலே மழையில்லாத காரணத்தால் 4 நாள், 3 நாள் கழிந்தவுடன் உப்புத் தண்ணீராக ஆகிவிடுகிறது. அந்தத் தண்ணீரைக் கூடக் கொண்டு வந்திருக்கிறேன். பேரவைத் தலைவரின் அனுமதியிருந்தால் அதைக் கொண்டுவந்து அறையிலே காட்டுகிறேன். அந்தத் தண்ணீரை குடித்தால் அந்த வட்டாரத்து மக்களுக்கு வியாதிகள் உண்டாகும். அந்தத் தண்ணீரை டெஸ்ட்டுக்கு வேண்டுமானால் அனுப்பலாம். நீங்கள் அதற்கு ஒன்றும் செய்யவில்லை என்றால் சொல்லிவிடுங்கள். ஆனால் அங்கே நல்ல தண்ணீர் கிடைக்காத சூழ்நிலை இருக்கிறது. இந்த அரசு அந்த வட்டாரத்திற்கு எவ்வளவோ நன்மைகள் செய்கிறது என்று சொல்வேன். எனவே, இந்தத் தண்ணீர் விஷயத்தில், ஒட்டப்பிடாரத்தில் நல்ல தண்ணீர் இருக்கிறது. இதற்கு அந்தச் செலவுகூட ஆகாது, எனவே ஒரு லாரியை*

வைத்து ஒவ்வொரு கிராமத்திற்கும் தண்ணீர் சப்ளை செய்தால் ஒன்றும் கெட்டுவிடாது. அந்த வட்டார மக்கள் உங்களைப் பாராட்டுவார்கள். ஆகவே, அந்தப் பகுதி மக்கள் குடிக்கத் தண்ணீர் வசதி செய்து தர வேண்டுமென்று பணிவன்போடு நான் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி:** தலைவரவர்களே, ஒட்டப்பிடாரம் பகுதியில் 106 வேலைகளுக்கு, குடிதண்ணீர் வேலைகளுக்கு 2.79 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த ஒட்டப்பிடாரம் பஞ்சாயத்து யூனியன் பகுதியில் 31 ஆழ்துளைக் கிணறுகளுக்கு, ஒவ்வொன்றுக்கும் சுமார் 9,000 ரூபாய்க்கு மேல் செலவு செய்து போடப்படுகிறது. தளவாய்புரம் என்ற ஒரேயொரு இடத்தில்தான் உப்புத் தண்ணீர் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அங்குள்ளவர்கள் பக்கத்துக் கிராமத்திலிருந்து குடி தண்ணீர் எடுத்து வருகிறார்கள்.

**திரு. எம். முத்தையா:** தலைவரவர்களே, அந்தப் பகுதி மக்களுக்குக் கஷ்டமாக இருக்கிறது. அந்தத் தண்ணீரைக் குடித்தால் வியாதி பரவும் நிலை இருக்கிறது. இதற்காக நடவடிக்கை எடுக்கப்படுமா? எடுக்கப்படாது என்றால் விட்டு விடுங்கள். இதோ பெட்டிஷன் எல்லாம்கூட இருக்கிறது.

**மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி:** தலைவரவர்களே, நடவடிக்கை எடுக்கப்பட்டு தண்ணீர் கொடுக்க வறட்சி நிவாரணத்தில் பல வேலைகள் துரிதமாக நடந்து கொண்டிருக்கின்றன.

## (6) அறிக்கை அளித்தல்.

### வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை குறித்து மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளை குறித்த அறிக்கை.

THIRU THOPPUR THIRUVENGADAM: Sir, I rise to present the report of the Committee on the action taken by the Government on the recommendations of the Committee contained in the Report on Employment and Training.



## (7) அரசினர் சட்ட முன்வடிவு.

### தமிழ்நாடு 1975-ஆம் ஆண்டு, உணவகங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு, உணவகங்கள் (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச்சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

## (8) தகவல் கோரல்.

### அறிவிக்கை கொடுக்கப்பட்ட தீர்மானங்கள் எடுத்துக்கொள்ளப் படுவது குறித்து.

**திரு. பெ. சீனிவாசன்:** தலைவரவர்களே, ஒரு பிரச்னை. சட்டமன்றத்தில் விதிமுறைகளுக்கு உரிய மரியாதை கொடுத்து ஒரு பிரச்னை சம்பந்தமாகத் தங்கள் அறையிலே தனியாகக் கேட்கிறேன். 42-வது விதியின்கீழ் கொடுத்த ஒரு தீர்மானம் தள்ளப்பட்டது. இன்னொரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விஷயத்தைப்பற்றியும் கொடுத்திருக்கிறேன். அதற்கு உரிய அமைச்சரவர்களும் பேரவையில் இருக்கிறார்கள். ஆனால் அது எடுக்கப்படவில்லை. தொகுதி மக்களால் ஓட்டு போடப் பட்டு, எம்.எல்.ஏ. என்ற முறையில் படியும் வாங்குகிறோம். இந்தப் பேரவையிலே உட்கார்ந்து கொண்டு. .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதையும் அறையிலேதான் கேட்க வேண்டும். இதே கருத்தை சீனிவாசன் அவர்கள் இந்த இடத்திலே உட்கார்ந்திருந்தாலும், இவற்றையெல்லாம் இங்கே கேட்கக் கூடாது, அறையிலேதான் கேட்க வேண்டுமென்று சொல்லியிருப்பார்கள்.

**திரு. பெ. சீனிவாசன்:** ஏதாவது ஒரு காரணம். . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எவ்வளவு விரைவில் கொடுக்க முடியுமோ அவ்வளவு விரைவில் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்கிறேன்.

**திரு. பெ. சீனிவாசன்:** தொழிலாளர்கள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது சரி, எவ்வளவு விரைவில் கொடுக்க முடியுமோ அவ்வளவு விரைவில் கொடுக்க ஏற்பாடு செய்கிறேன்.

### (9) 1975-76-ஆம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

**(அ) நிதிக்கோரிக்கை எண். 15—காவல் துறை.**

**(ஆ) நிதிக்கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள்—**தொடர்ச்சி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலிலேயே ஒன்றைச் சொல்லி விடுகிறேன். இப்பொழுது இரண்டே முக்கால் மணி நேரத்திற்கும் குறைவாகத்தான் நமக்கு நேரமிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சரவர்களுக்கு ஒரு மணி நேரம் கொடுக்க வேண்டும். மீதியிருப்பது ஒன்றேமுக்கால் மணி நேரம்தான். 15 உறுப்பினர்கள் பெயர் கொடுத்திருக்கிறார்கள். ஒன்று, ஐந்து நிமிடங்களில் உறுப்பினர்கள் பேச்சை முடித்துக்கொள்ள வேண்டும். இல்லையென்றால் நேற்று பேசிய கட்சிகளைத் தவிர்த்து நேற்று பேசாத கட்சிகள் மட்டும் இன்றைக்குப் பேச வேண்டும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவரவர்களே, நேரம் ஒதுக்குவதிலே எங்கள் கட்சிக்கு எவ்வளவு நேரம் ஒதுக்கப் பட்டிருக்கிறது என்று தாங்கள் தயவுசெய்து சொல்ல வேண்டும். நாங்கள் இரண்டாவது கட்சியாக இருக்கின்றோம், எங்கள் கட்சியின் சார்பாக திரு. கோபால் அவர்கள்தான் கொஞ்சநேரம் பேசியிருக்கிறார்கள். நானும் பேசவேண்டும். 5 நிமிடங்களில் பேசுவது என்றால் எங்களைப் போன்றவர்களால் 5 நிமிடங்களில் பேசுவது கஷ்டமாக இருக்கும். ஆகவே, 5 நிமிடங்களில் பேச விரும்பவில்லை என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்கு வழி என்ன?



**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** ஒரேயொரு அங்கத்தினர்தான் எங்கள் கட்சியின் சார்பாகப் பேசியிருக்கிறார்கள். எங்கள் கட்சியின் சார்பாக எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு கொடுக்க வேண்டும். மற்ற கட்சித் தலைவர்களுக்கும் எப்படிப் பகிர்ந்து சமமாகக் கொடுக்க முடியுமோ அந்த வகையில் பகிர்ந்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 15 உறுப்பினர்கள் பேர் கொடுத்திருக்கிறார்கள். ஐந்து அல்லது ஆறு நிமிஷந்தான் ஒரு உறுப்பினர் பேச முடியும். அதற்கு மேல் ஒன்றும் செய்ய முடியாது.

THIRU B. VENKATASWAMY: Sir, I request that time may be allotted to party strength . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 'அக்கார்டிங் டு பார்ட்டி' என்று வந்தால் உங்கள் பார்ட்டிக்கு நேரமே வராது. நீங்கள் ஏன் எழுந்து அதைக் கேட்கிறீர்கள்?

**திரு. கே. எ. வகாப்:** பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை மானியத்தில் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்பு கிறேன்.

பயிருக்கு வரப்பு காவல், செம்பழத் தோட்டத்திற்கு வேலி காவல், மக்கள் சமுதாயத்திற்குப் போலீஸ் காவல்; அந்தப் போலீஸ் காவலுக்கு ஆதாரமான போலீஸ் துறைக்கு கலைஞர் காவலர்; கலைஞருக்கு நாம் காவலராக இருக்க வேண்டுமென்ற ஆவலை நான் சொல்ல விரும்புகிறேன்.

இரண்டு நாட்களுக்கு முன்பு நடைபெற்ற காவல் துறை விவாதத்தில் சூடும் இல்லை, சுவையும் இல்லை என்று சிலர் பேசிக் கொண்டார்கள்; சூடு இல்லை என்று ஒப்புக் கொள்கிறேன். சபை யில் மட்டும் சூடு இல்லை என்பதல்ல, வெளியிலும் துப்பாக்கி சூடு இல்லை. ஆகவே, இங்கு சூடு இல்லை. சுவை இல்லையென்று சொன்னார்கள். அதை ஒப்புக் கொள்ளத் தயாராக இல்லை. அவலச் சுவை, நகைச் சுவை, வீரச் சுவை என்று எல்லாச் சுவை களிலும் பல அங்கத்தினர்கள் பேசிய நிகழ்ச்சிகள் நிறைய இருக்கின்றன.

அதுமட்டுமல்ல. நாங்கள் பேசுகிறபோது ஆளும் கட்சியைப் பாராட்டுகின்ற நேரத்தில் பாராட்டுகிறோம். அப்படி நாங்கள் பாராட்டிப் பேசிவருவது மாற்றுக் கட்சிக்காரர்களுக்கு, குறிப்பாக, எதிர்க்கட்சிக்காரர்களுக்கு எவ்வளவு மன வேதனை கொடுத்திருக்கிறது என்பது தெரிகிறது. அதன் காரணமாக எங்களுடைய முஸ்லிம் லீக் கட்சியை, கட்சி அங்கத்தினரை வேதனைப் படுத்தும் அளவுக்குச் சில சொற்களைச் சொல்லியிருக்கிறார்கள். மிகவும் பழம் பெரும் தலைவர்கள் எல்லாம் அப்படிப்பட்ட சொற்களை உபயோகப்படுத்தினார்கள் என்பதை எண்ணும்போது மிகவும் வேதனையாக இருக்கிறது.

எங்கள் கட்சிக்கு என்று ஒரு கொள்கையை வைத்திருக்கிறோம். பாராட்ட வேண்டியதைப் பாராட்டுகிறோம், கண்டிக்க வேண்டியதை நிச்சயமாகக் கண்டிக்கிறோம். இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் இனிமேலாவது நடக்காமல் இருக்கவேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன்.

குறிப்பாக, டாக்டர் ஹாண்டே அவர்கள் எங்கள் கட்சிக் கொறடாவை 'ஆளும் கட்சியின் கருவியாக இருக்கிறார்' என்று சொன்னார்கள். ஆளும் கட்சியின் கருவி என்று சொன்னதற்காக நாங்கள் சந்தோஷப்படுகிறோம். அவர் எங்கள் கட்சியின் கொறடா. அந்தக் கொறடாவை டாக்டர் கலைஞரிடத்தில் நாங்கள் கொடுத்து எதிர்க்கட்சியின் விஷப் பல்லைப் பிடுங்க உபயோகப் படுத்துவதைக் காணச் சந்தோஷப்படுகிறோம். கட்சிகளைத் தாக்கும்போது உள்நோக்கம் கற்பித்துப் பேசுவது வேதனைப் படக்கூடியது என்று சொல்லிக் கொள்கிறேன்.

இன்றையதினம் காவல் துறையானது உலகத்திலேயே சிறப்பாக இயங்கி வருகிற ஸ்காட்லண்ட் யார்டு, ரஷ்யாவிலுள்ள காவல் துறை போன்ற காவல் துறைகளுக்கு ஈடாக, அவர்களைப் போல் விஞ்ஞான வசதிகளே இல்லாமல், தமிழகக் காவல் துறை சிறப்பான முறையில் செயல்படுகிறது என்பதை எல்லோரும் ஒருமனதாக ஒப்புக்கொள்கிறார்கள். ஆளும் கட்சிக்காரர்களை விட எதிர்க்கட்சிக்காரர்கள் மிக முக்கியமாக ஒப்புக் கொள்ளுகிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இருந்தாலும் கூட, அதிலே இருக்கின்ற, ஏற்படுகின்ற குறைகளையும் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.





கொடுத்திருக்கும் பட்டியலைப் பார்க்கும்போது பெரிய குற்றங்கள் ஐயாயிரத்துக்கும் அதிகமாக உயர்ந்திருக்கிறது. சிறிய குற்றங்கள் சிறிய அளவிலே குறைந்திருக்கிறது என்பதைப் பார்க்க முடிகிறது. இவ்வளவு கட்டுப்பாடும், பாதுகாப்பும் இருந்தும் பெரிய குற்றங்கள் எப்படி நடக்கின்றன என்று பார்க்க வேண்டும். (மணி அடிக்கப்பட்டது) தயவு செய்து 10 நிமிஷங்கள் கொடுக்க வேண்டும். எங்கள் கட்சியில் யாருமே பேசவில்லை. அப்படி நேரம் கொடுக்கவில்லை என்றால் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் கூறியதுபோல் பேசாமலே இருந்து விடலாம். பத்து நிமிஷம் கூட இல்லை என்றால் எப்படிப் பேசுவது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எனக்கும் புரிகிறது. நான் என்ன பண்ண முடியும்?

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** நேற்று மாதிரி கடைசியில் கொஞ்சம் நேரம் நீட்டித்துக் கொண்டு இப்போது கொஞ்சம் பேச நேரம் கொடுங்கள். இல்லாவிட்டால் டிமாண்டை நேரடியாக ஓட்டுக்குப் போட்டு விடலாமே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதற்காகத்தான் இரண்டு நாட்கள் இந்த மானியத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. கே. எ. வகாப்:** இரண்டு நாட்களில் முதல் நாள் பல பிரச்னைகள் பேசப்பட்டு விட்டன. இரண்டாவது நாளான இன்றும் வேறு விவாதங்கள் எல்லாம் நடந்தன. தாங்கள் கண்டிப்பாக நடந்து கொண்டிருந்தால் எங்களுக்குக் கொஞ்சம் நேரம் கிடைத்திருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்ல வேண்டிய கருத்துக்களை வேகமாக, மோதலுக்கு இடம் இல்லாமல் சொல்லி விட்டுப் போங்கள்.

**திரு. கே. எ. வகாப்:** குறிப்பாக போலீஸ் துறையில் சில குறைபாடுகள் இருக்கின்றன. அதைச் சுட்டிக்காட்டிப் பேசுவது என்னுடைய கடமை. ஒரு முக்கியமான பிரச்சினை—சீட்டுக் கம்பெனிகளை நடத்தி மக்களை மோசடி செய்கிறார்கள். இதை ஏற்கனவே பெரிய அதிகாரிகளுடைய கவனத்திற்குக் கொண்டு போயிருக்கிறோம். போலி சீட்டுக் கம்பெனிகள் மீது எந்தவித

மான நடவடிக்கையும் எடுக்க சட்டத்தில் இடம் இல்லை. 20 ஆண்டுகள், 30 ஆண்டுக்ளாக லட்சக் கணக்கான ரூபாய்களை மோசடி செய்திருக்கிறார்கள். அந்தச் செக்குகளை எல்லாம் கூட போலீஸ் அதிகாரிகளிடத்தில் நேரில் கொடுத்திருக்கிறோம். நான்கு மாதங்கள் ஆகிறது. அந்த சீட்டுக் கம்பெனிக்காரர், முனார் சீட்டுக்கம்பெனி ஹைதாரபாத்தில் சீட்டுக் கம்பெனி நடத்து கிறார் என்று சொல்லுகிறார்கள். கிராமப்புறங்களில் அண்டா சீட்டு, புடவைச் சீட்டு, ரேடியோ சீட்டு என்று கூறி மக்களை ஏமாற்றி வருகிறார்கள். இந்தச் சீட்டுக் கம்பெனிகளை ஒழிக்க சட்டம் கொண்டு வந்தால் நல்மாக இருக்கும்.

கள்ளச் சாராயம் காய்ச்சுவதைத் தடுக்க கெடுபிடிகளை அதிகப் படுத்தி ஓரளவு கட்டுப்படுத்தியிருக்கிறார்கள். 'காவல்' என்று சொல்லும்போது இன்னொரு மூன்றெழுத்து அதோடு இணைந்து வருகிறது. அதுதான் 'மாமூல்'. 'மாமூல்' காவல் துறையோடு இணைத்துப் பேசப்படுகிற நிலைமை இருக்கிறது. அப்படிப்பட்ட தன்மைகளைப் போக்க போலீஸ் துறை முன்வரவேண்டும். அப்படி முன்வந்தால் நிச்சயமாக அவர்கள் மேல் இருக்கும் களங்கம் நீங்கும்.

அவர்கள் சமுதாயத்திற்குச் செய்து வருகிற நன்மைகளை மறந்து விட முடியாது. எவ்வளவோ துன்பங்களுக்கிடையே அவர்கள் வேலை செய்கிறார்கள். அவர்கள் குறைந்த சம்பளத்தில் வேலை செய்கிறார்கள். கான்ஸ்டபிள்களுக்காகக் கட்டப்பட்ட வீடுகள் எலிப் பொந்துகள், பறவைக் கூடுகள் போன்று இருக் கின்றன என்றெல்லாம் பேசப்பட்டது. இந்த நிலையை மாற்ற வேண்டும். அவர்களுடைய சம்பளத்தை உயர்த்த வேண்டும். அப்போதுதான் அவர்கள் மற்றவர்களிடம் கையூட்டுப் பெறு வதைத் தவிர்க்க முடியும்.

போலீஸ்காரர்கள் தங்களுடைய பென்ஷனைப் பெறுவதில் நீண்ட கால தாமதமாகிறது. பொள்ளாச்சியில் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் 1970-ம் ஆண்டு ரிடையர் ஆனார். ஆனால் இதுவரை அவருக்கு பென்ஷன், கிராச்சுவிடி போன்றவை கொடுக்கப்படவில்லை. சில காரணங்களைச் சொல்லுகிறார்கள். அவர் பெண்ணுக்குக் கல் யாணம் வைத்திருக்கிறார். ஐ.ஜி. அவர்களிடத்திலும் அப்பீல் செய்திருக்கிறார். அரசாங்கத்திற்கும் அப்பீல் செய்திருக்கிறார்.



அந்த ரிடையர்டு இன்ஸ்பெக்டர் சௌகன் என்பவர் ஒன்றும் செய்ய முடியாத நிலையில் இருக்கிறார். போலீசார் ஓய்வு பெற்றால் அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய ஓய்வூதியம் மற்றவற்றை கொடுக்க வேண்டிய நேரத்தில் கொடுக்க வேண்டும்.

தீயணைப்பு பற்றி ஒரே ஒரு வார்த்தை. முதல்வர் அவர் களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். வந்தவாசிக்கு தீ அணைப்பு நிலையம் கொடுத்தார்கள். அதற்கு வேண்டிய நிலத்தை நாங்கள் கொடுத்து விட்டோம். கட்டிடம் கட்ட வேண்டுமென்று சொன்னால் பண வசதி இல்லை, இரண்டு ஆண்டுகள் ஆகும் என்று சொல்லிவிட்டார்கள். நாங்கள் பணத்தையும் கொடுக்கிறோம் என்று சொல்லி பஞ்சாயத்து நிதியிலிருந்து 20,000 ரூபாய் நிதி ஒதுக்கி டெம்பரரி ஷெட் கட்ட முயற்சி எடுத்தோம். அது மாவட்ட அளவில் இலாகாவுக்குப் போய், பிறகு பினன்ஸ் டிப்பார்ட்மெண்டுக்குப் போய், ஆர்.டி.எல்.ஏ. ஹோம் டிப்பார்ட் மெண்ட் என்று இப்படியே சுற்றிக்கொண்டிருக்கிறது. தீயணைப்பு நிலையத்தை அமைப்பதில் இவ்வளவு காலதாமதம் ஆகக் கூடாது. உடனடியாக இதுபற்றி ஆராய்ந்து விரைவில் ஏற்படுத்துவதற்கு வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-00)

திரு. கோ. செபமாலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் காவல் துறை மானியத்தை இந்த அவையில் சமர்ப்பித்திருக்கிறார்கள். அந்த மானியக் கோரிக்கையை நான் முழுமனதோடு வரவேற்று ஒருசில வார்த்தைகள்கூற விரும்புகிறேன். தமிழக காவல் துறை; அதிலும் குறிப்பாக காவல் துறை தலைவராக இருக்கிற நம் ஐ.ஜி. அவர்களும், சென்னை மாநகர கமிஷனர் அவர்களும், ஏனைய காவல் துறை அதிகாரிகள் அத்தனை பேர்களும் தமிழ் நாட்டில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடந்தாலும் அவைகளை உடனுக்குடன் சென்று கவனித்து மக்களின் குறைகளை நீக்கி வருகிறார்கள். மக்களுக்கு வேண்டிய நல்ல பாதுகாப்பும், வழிப்பறிக் கொள்ளை, கொலைகள் இவைகள் நடந்தால் அவற்றை உடனுக்குடன் கண்டு பிடித்து மக்களுக்கு பாதுகாப்பு அளித்து வருகிறது காவல் துறை.

நம் மாநிலத்தில் பல்வேறு இடங்களில் தீண்டாமை இருந்து கொண்டிருக்கிறது. ஹரிஜனங்கள் வாழ்கிற இடங்களில் தீண்டாமையும், ஜாதி மதக் கொடுமையும் சில நேரங்களில்

[திரு. கோ. செபமாலை]　　[1975 ஏப்ரல் 3

இயற்கையாகவே உண்டாகிவிடுகிறது. அவற்றைக் கவனித்து தக்க நடவடிக்கை எடுக்க நமது டாக்டர் கலைஞர் அவர்கள் தீண்டாமை ஒழிப்புக்கு என்றே ஒரு திட்டம் வகுத்து போலீஸில் அதற்கு என்று ஒரு பிரிவு ஏற்படுத்தி அவை மாவட்டங்களில் இயங்கிக்கொண்டு வருகின்றன. மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடக்கும்போது சில நேரங்களில் அவர்கள் பல்வேறு இடங்களுக்குச் சென்றுவிடுகிறார்கள். எனவே சிலயிடங்களில் வந்து கவனிப்பதில் கஷ்டம் ஏற்படுகிறது. எனவே மாவட்ட வாரியாக இந்தப் பிரிவு இருப்பதை மாற்றியமைத்து அதை இரண்டாகப் பிரித்து நான்கு அல்லது ஐந்து தாலுக்காக்களுக்கு ஒரு சென்டர் அல்லது பிரிவு என்று ஏற்படுத்தி செயல்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் மங்கலூர் யூனியன் இருக்கிறது. அங்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கிறது, ஒரு ஹையர் எலிமென்டரி ஸ்கூல் இருக்கிறது, ரெஜிஸ்டர் ஆபீஸ் இருக்கிறது, அது ஒரு பெரிய ஊர். அங்கு ஒரு காவல் நிலையம் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று அங்குள்ள மக்கள் நீண்ட நாட்களாக கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அங்கு ஒரு போலீஸ் ஸ்டேஷன் அமைத்துத் தரவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனது தொகுதியில் சென்ற மாதம் ஒரு நிகழ்ச்சி நடந்தது, அதைப்பற்றி பலர் பலவிதமாகச் சொல்கிறார்கள். நடந்தது என்ன. பொறக்கப்பாடி என்ற கிராமத்தில் அங்காளம்மன் கோவில் என்ற ஒரு கோவில் இருக்கிறது. அந்த ஊர் ஒரு சிற்றூர். அந்தக் கோவில் திருவிழாவின்போது மக்கள் கூடுகிறார்கள். அந்த ஊரில் உள்ள அந்த அங்காளம்மன் கோவில் திருவிழா எந்தத் தேதியில் நடக்கிறது என்பதுபற்றி அதிகாரிகளோ அல்லது அந்தக் கோவில் பூசாரியோ காவல் துறையினருக்கு தெரிவிக்கவில்லை. திரு. தங்கமணி அவர்கள் குறிப்பிட்டார்கள். காவல் துறையினரின் கவனக் குறைவு என்று. விழா நிகழ்ச்சி பற்றி காவல் துறையினருக்கு தெரிவிக்கப்படவில்லை. அந்த ஊர் சின்ன ஊர். மக்கள் அதிகமாகக் கூடியிருக்கிறார்கள். அந்தக் கோவில் மிகப் பழைமையான கோவில். அந்த கோவில் மதில் சுவரின் மீது பலர் ஏறி நின்றதால் அது இடிந்து விழுந்தது இயற்கையாக நடந்த ஒரு சம்பவம். அது எந்தவிதமான தூண்டு



1975 ஏப்ரல் 3]　　[திரு. கோ. செபமாலை]

தலினாலும் நடைபெறவில்லை. தமிழக முதல் அமைச்சர் அவர்கள் ஒரு லட்சம் ரூபாய் வழங்கி பாதிக்கப்பட்ட மக்களுக்கு கொடுத்திருக்கிறார்கள். அதற்கு நான் அவர்களுக்கு எனது தொகுதி மக்கள் சார்பாக நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த நிகழ்ச்சி நடந்து, தக்க நேரத்தில் போலீஸ் அதிகாரிகள் சென்று கவனித்திருக்கிறார்கள். அதற்காக காவல் துறை அதிகாரி ஐ.ஜி. அவர்களை நான் பாராட்டுகிறேன்.

மேலும் விருத்தாசலத்தில் ஒரு தீயணைப்பு நிலையத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். நீண்ட நாட்களாக அந்தத் தொகுதி மக்கள் கேட்டுக்கொண்டு வந்ததற்கு இணங்க சென்ற ஆண்டு அங்கு ஒரு காவல் நிலையத்தை ஏற்படுத்திக் கொடுத்ததற்காக முதல்வர் அவர்களுக்கு நன்றி செலுத்திக்கொள்கிறேன். தங்களது கடமைகளை அல்லும் பகலுமாக நிறைவேற்றி வருவதற்காக காவல் துறை தலைவர் அவர்களையும் மற்ற அதிகாரிகளையும் பாராட்டி எனக்கு இந்த சந்தர்ப்பத்தை அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

## 4. நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

### (ஆ) பேரவைத் துணைத் தலைவர் கொடுத்த தீர்ப்பை பேரவைத் தலைவர் மாற்றுவது முறைதானா என்பது குறித்து.

திரு. பெ. சீனிவாசன்: ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். நீங்கள் வந்ததால் பாயின்ட் ஆப் ஆர்டர். பேரவைத் தலைவர் அவர்கள் நீங்கள் கொடுத்த ஒரு தீர்ப்பை மாற்றி தீர்ப்பு கொடுத்திருக்கிறார்கள். இதே பேரவையில் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் உச்சரித்த வார்த்தைகள் நடவடிக்கைக் குறிப்பில் ஏறும் என்று அறிவித்திருக்கிறார்கள். திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசும்போது உங்களுடைய அதிகாரத்தை நீங்கள் காட்டுகிறீர்கள். ஆனால் என் அதிகாரத்தை நான் காட்டினால் என்ன கதியாகும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த வார்த்தைகள் எடுக்கப்படுமா அல்லது அந்த வார்த்தைகளும் குறிப்பேட்டில் இருக்குமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

[திரு. பெ. சீனிவாசன்] [1975 ஏப்ரல் 3

நேற்று நான் சொன்னேன். நான் சொன்ன பாயின்ட் ஆப் ஆர்டரை சபாநாயகர் அவர்கள் கவனிக்கவில்லை.

I am not subordinate to the Speaker.

என்ற வார்த்தைகளை நீங்கள் சொன்னீர்கள். அது முறையான வார்த்தை, சரியான எண்ணம் என்று நான் கருதுகிறேன். அப்படியிருக்கும்போது நீங்கள் கொடுத்த தீர்ப்பை மாற்றிக் கொடுக்க ஏதாவது முன்மாதிரி இருக்கிறதா? அப்படிச் செய்வது சரிதானா என்று தெரிந்துகொள்ளவிரும்புகிறேன். இதே முறை நீடிக்குமானால் நீங்கள் ஒரு தீர்ப்பு வழங்கினால் அதை நம்பிக்கை யோடு கேட்டுக்கொண்டு இருக்கமுடியாது. இதை ஒருவேளை மாற்றக்கூடும் என்ற சந்தேகம் ஏற்பட்டு விடும். இது சரிதானா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இம்மாதிரி 1972-ல் மாண்புமிகு மதியழகன் அவர்களும் நீங்களும் இருந்தபோது நடந்த ஒரு நிகழ்ச்சியைக் கூறி பேரவைத் தலைவர் அவர்கள் ஒரு தீர்ப்பு கூறி முடித்துவிட்டார்கள். அவர்கள் என்னென்ன வார்த்தைகள் குறிப்பேட்டில் இருக்கும் என்று சொன்னார்களோ அந்த வார்த்தைகள் எல்லாம் இருக்கும். அதில் மாறுதல் இல்லை.

**திரு. பெ. சீனிவாசன் :** ஒரு உறுப்பினர் நீங்கள் உங்கள் அதிகாரத்தைக் காட்டினால் என்னுடைய அதிகாரத்தை நான் காட்டுவேன் என்று உங்களைப் பார்த்து கூறி ஒரு ரிமூவல் மோஷன் கொடுத்தார்கள். இது பேரவைக் குறிப்பேட்டில் இருப்பது நியாயமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அன்று பேசியபோது என் உரிமையை நான் பயன் படுத்துவேன் என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். அதிகாரத்தைக் காட்டுவேன், உங்கள் கதி என்னவாகும் என்று சொன்னதாக இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அதோடு விட்டு விடுங்கள்.

**திரு. பெ. சீனிவாசன் :** விடமுடியாது. மதி அவர்கள் தீர்ப்பு சொல்லியிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அப்போதே ஆட்சேபணை தெரிவித்திருக்கிறேன்.



[திரு. பெ. சீனிவாசன்]

It is not a healthy tradition

நான் தெரிந்து கொள்ள விரும்புவது பேரவையில் யாருடைய தீர்ப்பு இறுதியானது? அப்பலேட் அத்தாரட்டி ஸ்பீக்கரா என்று தெரியவேண்டும். பாராளுமன்ற நடவடிக்கைகளைப் பார்த்திருக்கிறீர்கள், தயவு செய்து நல்ல ஒரு ரூலிங் கொடுக்க வேண்டும். சபாநாயகர் அவர்கள் கொடுக்கிற தீர்ப்புதான் முடிவானது என்றால் நீங்கள் கொடுக்கிற தீர்ப்புகள் அந்தந்த நிமிடத்திற்குத்தான் உத்தரவாதமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கான்ஸ்டிட்யூஷன்படி இந்த ஸீட்டில் யார் உட்காருகிறார்களோ—அவர் ஸ்பீக்கராக இருந்தாலும் சரி அல்லது டெபுடி ஸ்பீக்கராக இருந்தாலும் சரி அல்லது சேர்மனாக இருந்தாலும் சரி அவர்களுக்கு தீர்ப்பு கொடுக்க முழு அதிகாரம் இருக்கிறது.

In the absence of the Speaker, all the facilities afforded to him are equally afforded to the Presiding Officer whoever he may be

அப்படி இருக்கிறபோது ஸ்பீக்கர் நான் கொடுத்த தீர்ப்பை மாடிபை செய்து கொடுத்திருக்கிறார்கள். என் கொலீகிற்கும் எனக்கும் உள்ள அண்டர்ஸ்டான்டிங்கில் பல காரியங்கள் செய்தோம். அதைப் பெரிதுபடுத்த வேண்டாம்.

THIRU P. SEENIVASAN : I want only a clarification. We may be ignorant.

ஒரு நீதிமன்றத்தில் ஒரு வழக்கில் ஒரு நீதிபதி தீர்ப்பு கொடுத்தால் இன்னொரு நீதிபதி அதே வழக்கில் தீர்ப்பு சொல்ல முடியுமா ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** முடியும். பவர் ஆப் ரெவ்யூ என்பது ஜுடீஷியரிக்கும் இருக்கிறது, நமக்கும் இருக்கிறது.

To review our own judgment.

நமக்கு பவர் இருக்கிறது: அவர்கள் ரெவ்யூ செய்திருக்கிறார்கள். அதில் அப்ஜக்ஷனோ அல்லது இல்லீகாலிட்டியோ ஒன்றும் இல்லை.

[1975 ஏப்ரல் 3

## (9) 1975-76-ஆம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

* திரு. அ. சின்னசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1975-76-ம் ஆண்டிற்கான காவல்துறை மானியக் கோரிக்கைமீது தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றக் கழகத்தின் சார்பாக எனது கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

ஏறத்தாழ 537 கோடி ரூபாய் வரவு செலவு செய்கிற இந்த அரசு காவல் துறைக்கு கிட்டத்தட்ட 27 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. இதில் பணியாற்றுகிற 45,868 அதிகாரிகளுக்கு 869 ஸ்டேஷன்ஸ் என்று பிரித்து பயிற்சி அளித்திருக்கிறீர்கள். உள்ளபடியே பாராட்டுகிறேன். நம் காவல்துறையைப் பற்றி

A strong and efficient police is necessary to maintain Law and Order. The Tamil Nadu Police has maintained its reputation of being an effective organisation in the country.

என்று அறிக்கை கொடுத்திருக்கிறீர்கள். நமது தமிழ்நாட்டு காவல் துறையைப்பற்றி நான் மிக்க நல்லெண்ணம் வைத்திருக்கிறேன். அவர்களைப்பற்றி நான் குறை சொல்ல வரவில்லை.

அவர்களுடைய திறமையை, ஆற்றலை எதில் பயன்படுத்த வேண்டும்? லா ஆன்ட் ஆர்டரை எபிஷியன்டாக இம்ப்ளிமென்ட் செய்வதில் பயன்படுத்த வேண்டும். ஆனால் இன்றையதினம் காவல் துறை பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிற அமைச்சர் அவர்கள் எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்களையும் அதிலும் ஏழை ஹரிஜனங்களை, எதிர்கட்சிக்காரர்களை நசுக்க வேண்டும் என்றும், மாணவர்களை ஒடுக்கவேண்டும் என்றும், இரத்த வேட்டையாட வேண்டும் என்றும், பேயாட்டம் ஆட வேண்டும் என்பதற்காகத்தான் இன்றையதினம் இத்துறையை அவர்கள் கையில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். அண்ணாவின் பெயரைச் சொல்லிக் கொண்டே அரசியலுக்கு வந்தோம். அவர்கள் போட்ட கோட்டை தாண்டி நாங்கள் போகவில்லை. அங்கேயே சுற்றிச் சுற்றி வருகிறோம். அப்படியிருக்க நண்பர் வீராசாமி அவர்கள் சொல்கிறார்கள், அம்மையாரைப் பார்க்கிறேன் என்று. சத்தியவாணிமுத்து அம்மையார் அவர்கள் வீராசாமியை விட தியாகம் செய்யவில்லையா?



1975 ஏப்ரல் 3] [திரு. அ. சின்னசாமி]

திரு. கிருஷ்ணமூர்த்தி பேசினால் ஒப்புக் கொள்ளலாம். அவர் அம்மையாரோடு ஜெயிலில் இருந்தவர்கள். போராட்டம் நடத்தியவர்கள். ஆனால் வீராசாமி அவர்கள் பரிதாபத்தோடு பேசியது, நாங்கள் என்ன அவ்வளவு கேவலமாகப் போய் விட்டோமா, நாங்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சில உரிமைகள் வேண்டுமென்று கேட்டோம். நீங்களும் ஒத்துக் கொள்கிறீர்கள், கான்ஸ்டிட்யூஷன் ஷெட்டியூலில் போட்டிருக்கிற உரிமைகள் வேண்டுமென்று கேட்டோம். இதற்காக வேண்டுமென்றே என் மீது கேஸ் போட்டு இருக்கிறார்கள்.

நான் ஒரு உண்மையைச் சொல்கிறேன். ஒரு சட்டமன்ற உறுப்பினர் தொகுதியில் மக்களிடம் ஓட் பெற்று இங்கே வருகிறார்கள். எங்கள் மீது வழக்கு போடுகிறார்கள் என்று சொன்னால்,—நான் என் வழக்கைப் பற்றி சொல்ல வரவில்லை—அது எப்படி இருக்க வேண்டும்? எல்லாவற்றையும் ஆராய்ந்து பிறகு செய்யவேண்டும். ஆனால் என் வழக்கில் முதலில் என்ன செய்தார்கள், ஒரு எப்.ஐ.ஆர். போட்டார்கள். அதிலே எம்.எல்.ஏ. என்று அழைக்கப்படுகின்ற அனந்தன் என்று இருந்தது. அந்த எப்.ஐ.ஆர். இன்டக்ஸையும் சேர்த்து வைத்து கொளுத்தினார்கள். எம்.எல்.ஏ. என்ற வார்த்தையை வைத்துக் கொண்டு என்மேல் கேஸ் போட்டு விட்டார்கள். ஒரு சட்டமன்ற உறுப்பினர் மீது கேஸ் போடுகிற போது கொஞ்சம் யோசிக்க வேண்டாமா?

நான் ஒரு உதாரணத்திற்குச் சொல்கிறேன், ஆந்திராவில் ஒரு சீப் மினிஸ்டர் ஒரு ஸ்டேட்மென்ட் கொடுத்து இருக்கிறார். அங்கேயுள்ள காங்கிரஸ் உறுப்பினர் மீது கொலை குற்றம் சாட்டி வழக்கு தொடரப்பட்டு இருக்கிறது. 4-5 எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எழுந்து நின்று கேட்டார்கள். உடனடியாக அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள்.

because there was not sufficient evidence to sustain the charges levelled against him.

என்று

பெருந்தன்மையோடு, வழக்கு தொடரப்பட்டவுடன், சார்ஜ்-ஷீட் போடப்பட்டவுடன், அந்த சார்ஜுக்கு போதுமான சாட்சியில்லை, ஆதாரம் இல்லை என்ற காரணத்தால் அங்கேயிருக்கும்

முதலமைச்சர் எதிர்க்கட்சி உறுப்பினர்மீது தொடுக்கப்பட்ட வழக்கை வித்டிரா செய்கிறார். இங்கே நம்முடைய சீப் மினிஸ்டர் இங்கே என்னைக் காட்டிக் கொடுத்து, என்னைச் சம்பந்தப்படுத்தி, எங்கேயிருக்கிறான், ஆளை தேடிக்கொண்டு வாருங்கள் என்று சொல்லி, முதலிலே எழுதப்பட்ட எப்.ஐ.ஆரை கிழித்து விட்டு, எம்.எல்.ஏ. என்ற வார்த்தையை மட்டும் வைத்துக்கொண்டு, 3 மாதம் கழித்து, பிடிக்கிறார்கள். இன்ஸ்பெக்டர் வேலுசாமி கேட்கிறார், நீங்கள் ஏன் இன்னும் தி.மு.க.வில் சேரவில்லை என்று கேட்கிறார். என்னை ஆண்மையோடு நேருக்கு நேர் சந்திக்க வேண்டும். அதை விட்டுவிட்டு, காவல் துறையை வைத்து, ஆட்சியின் பலத்தை வைத்து என்னை மிரட்டுவது. . .

**திரு. கு. காமாட்சி:** சார், பாயின்ட் ஆப் ஆர்டர் . . .

**திரு. அ. சின்னசாமி:** நீங்கள் உட்காருங்கள். இது என்னுடைய பர்சனல் மேட்டர். நான் சொல்ல விரும்புவது எல்லாம், ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கு பாதுகாப்பு இல்லை என்றால் எதிர்காலத்தில் என்ன நடக்கும்? 1976-ல் என்ன நடக்கும்? கோயம்புத்தூரில் சென்டிரல் கோவாபரேடிவ் பாங்க் எலெக்ஷன். அங்கே என்ன நடந்தது? எம்.எல்.ஏ. தாக்கப் பட்டார், ஓட்டுப்பெட்டிகள் நொறுக்கப்பட்டன, அங்கே போலீஸ் இருக்கிறதா இல்லையா? அந்த போலீஸ் போர்ஸ் தன்னுடைய திறமையை அங்கே அல்லவா காட்ட வேண்டும்? என்னைப் போன்றவர்களிடத்தில் காட்டுகிறார்கள். எதிர்க்கட்சிக்காரர் களிடத்தில், 8 மாதம் கழித்து, அதுவும் சட்டமன்ற உறுப்பினரை அதில் இணைத்து விடுகிறார்கள். சீப் மினிஸ்டர் சொல்கிறார், அவர்கள் வேளாங்கண்ணிக்குப் போனார்கள், என்று, ஏதோ இவர் சென்ட்-ஆப் கொடுத்த மாதிரி பேசுகிறார். ஆனால் அந்தப் பெண்ணே சொல்கிறாள், பஸ் ஸ்டான்டில் தான் இருந்தோம், ரூம் எடுக்கவில்லை என்று ஸ்டேட்மென்ட் கொடுத்து இருக்கிறாள். முதலமைச்சரை சந்தித்துக் கேட்டேன் என்று சொன்னார்கள். நான் மூன்றாண்டு காலம் தி.மு.க. சட்டமன்ற உறுப்பினனாக இருந்து இருக்கிறேன். இதுவரை ஒரு முறைகூட முதலமைச்சரிடம் ஒரு ஆப்ளிகேஷனுக்குச் செல்லவில்லை. மூன்று முறை அவர் வீட்டிற்குச் சென்று இருக்கிறேன். அவர் பிறந்த நாள் அன்று மாலை போட்டு, பணம் கொடுத்து விட்டு





வருவதற்காக. ஏதாவது தேவைப்பட்டால் அதிகாரிகளிடத்தில் கேட்பேன். முகம் சுளிக்காமல் பதில் சொல்கிற அமைச்சர் களிடத்தில் பேசுவேன்.

இப்படிப்பட்ட நிலையில், காவல்துறையை வைத்துக்கொண்டு இப்படி எங்கள் பேரில் கேஸ் போட்டால், 1976ல் எப்படி நடந்து கொள்வீர்கள் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும், எங்களை இப்படி விட்டு விடுவார்களா, ஏதாவது ஒன்றில் சம்பந்தப்படுத்தி கேஸ் போட்டு விடமாட்டார்களா?

ஹரிஜனங்களுக்கு எல்லாம் செய்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால் ஒரு ஹரிஜன எம்.எல்.ஏ. மீது கேஸ் போட்டு இருக் கிறார்கள்.

மற்றும் ஒரு உதாரணம் சொல்கிறேன், திருச்சி பாலக்கரையில் ஒரு பேராசிரியர், எம்.ஏ.பி.எல். படித்தவர். வெள்ளைமுத்து என்று பெயர், அவரை இரவு 12 மணிக்கு கைது செய்து, ஸ்டேஷனில் கட்டி வைத்து அடித்து உதைத்து இருக்கிறார்கள். அவர் பேரில் சாராயக் கேஸ் போட்டு இருக்கிறார்கள். அவர்கள் இப்போது கீழ்ப்பாக்கம் ஹாஸ்பிடலில் மென்டல் கேஸாக ஆகியிருக்கிறார்கள், அந்தப் பேராசிரியர், டாக்டர் வாழ்க, கலைஞர் வாழ்க என்று சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். நான் கூறுவது பொய் என்றால், இங்கே இருக்கும் அரிசன தி.மு.க. எம்.எல்.ஏ.-க்கள் யாராவது அங்கேயிருக்கும் அவரைப் போய்ப் பார்த்துவிட்டு வரலாம். போய்ப் பாருங்கள். எம்.ஏ.பி.எல். கல்லூரி பேராசிரியர், பணியில் இருந்தவர், அவர் பேரில் இப்படி ஒரு வழக்கு தொடர்ந்து இருக்கிறார்கள். எதற்காக இப்படிச் செய்தார்கள் என்றால், அவர் கல்லூரியில் அம்பேத்கார் படத்தையும், பெரியார் படத்தையும் மாட்டி வைத்தார் என்று. நாம் எவ்வளவோ பெரியாருக்காகச் செய்கிறோம். கலைஞர் அவர்கள் நான் தான் அம்பேத்கார் வாரிசு என்று சொல்லி படத்தை மாட்டிக்கொண்டு இருக்கிறார்கள். அப்படியிருக்கிறபோது, அந்தப் படங்களை மாட்டி வைத்தார் என்பதற்காக அவர் பேரில் இப்படி கேஸ் போடவேண்டுமா? அவர்கள் இப்போது கலைஞர் வாழ்க, டாக்டர் வாழ்க என்று பாட்டு பாடிக்கொண்டு கீழ்ப்பாக்கம் மருத்துவ மனையில் இருந்து கொண்டு இருக்கிறார்,

அதேபோல் மருதை பி.ஏ. அவரை கே.டி. லிஸ்டில் சேர்த்து இருக்கிறார்கள். அவர் என்ன செய்தார்? தாழ்த்தப்பட்ட முன்னேற்றக் கழகத்திற்காக கூட்டம் போட்டார், மைக் அமைத்தார், அதற்காக அவர் பேரில் கேஸ்.

அங்கே ஒரு கலெக்டர் இருக்கிறார். அவர் சி.எம். சுண்டு விரல் அசைத்தால் போதும், உடனே ஆடுகிறார். அந்த மாதிரி கலெக்டரை வைத்துக்கொண்டு, அந்த மருதை என்பவர் மேல் 110 கேஸ் போட்டு இருக்கிறார்கள். அவர் இப்போது தி.மு.க.வில் சேர்ந்து மேடை ஏறிப் பேசிக்கொண்டு இருக்கிறார்கள். இப்படி அரிசன மக்கள் மேல் பழி வாங்கிக்கொண்டு இருக்கிறார்கள்.

போலீஸ்காரர்களை நான் ஒன்றும் சொல்லவில்லை. வேணுசாமி இதுவரை ஒரு எப்.ஐ.ஆர். கூட தன் கைப்பட போட்டது கிடையாது. அவர் ரிடையர்டு ஏ.பி.பி. வைத்துக்கொண்டு சமாளித்துக்கொண்டு இருக்கிறார். முதலிலே எம்.எல்.ஏ. என்று அழைக்கப்படுகிற அனந்தன் என்கிற பெயரில் போட்டார்கள். அந்த அனந்தன் என்ற வார்த்தையை விட்டு விட்டு இப்போது என் பெயரைச் சேர்த்து விட்டார்கள். அதற்குத்தான் நான் சொன்னேன். நீதிபதி அவர்கள் கூட இது விசித்திரமான வழக்காக இருக்கிறது என்று சொன்னார்கள். போலீஸ் இலாகாவை கண்டம் செய்து இருக்கிறார். இது ஒரு ரெச்சர்ட் வழக்கு என்று சொல்லி இருக்கிறார். இப்படி வேண்டுமென்றே கேஸ் போடுகிற காரணத்தால், அரிசன மக்களுக்கு இந்த ஆட்சியின் மீது, கலைஞர் மீது நம்பிக்கையில்லை என்று கூறி என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* DR. H. V. HANDE: Hon. Mr. Deputy Speaker, Sir, on behalf of the A.D.M.K, we have given something like 38 cut motions and I have myself given about 28 motions pin-pointing the omissions and commissions of the Police Department, the Chief Minister and the Government. I hope and trust that suitable action would be taken at least on the matters which have been raised in the cut motions. Therefore, in support of the cut motions, I would like to offer a few remarks.

I am constrained to make a scathing attack on the manner in which our Hon. Chief Minister and his D.M.K. party have utterly ruined, damaged and demolished the police force of our





State during the last few years. In the hands of our Chief Minister and his party henchmen, the police force has become their handmaid, catering to the whims and fancies of the ruling party. I can say with sufficient evidence that a number of first degree murders have been committed in quite a few police stations. I have got recorded evidence and I can prove them. Gruesome murders are committed in police lock-ups and later on deliberate attempts are made to destroy the evidence. A number of structures, have been passed in the district courts that there have been inordinate delays between the time of filing the F.I.R. and the filing of the case, in the Courts . A long time is taken between these two events.

Police force is regularly utilised by the ruling party to intimidate, especially the workers of our party the rank and file of the A.D.M.K. and also other opposition party members, as mentioned by the Hon. Member, Mr. Chinnasami. This has become a regular practice. The police force has been completely demoralised. Wherever an A.D.M.K. leader or worker is the victim, the Government is either not serious in launching a prosecution or totally refuses to launch a prosecution. For instance, Thiru Nanjil Manoharan, M.P. was attacked in broad day light in the air port at Madras. The Hon. Chief Minister had the temerity to tell in this House that no complaint was given. Supposing he had died, would it have been possible for him to give a complaint then ? The situation was such that he would have lost his life. Actually the matter was raised in the Lok Sabha and the Hon. Speaker there gave an assurance that the Government of Tamil Nadu was seized of the matter and that necessary steps would be taken to find out the culprits. Nanjil Manoharan's torn shirt was shown and the Hon. Speaker, Mr. Dhillon gave the assurance that the Government was at it, that the Tamil Nadu Government was on the job. **What has been** done for tracing the culprits? It is not an ordinary matter. He is the Deputy General Secretary of our party a very important opposition party. And this is the treatment meted out to him.

Then again, when the ex-Ministers of Pondicherry Mr. Ramachandran and Mr. Ramaswamy were in Dasaprakash what happened? They were victimised. They were about to be demolished. They fortunately escaped. What is the action taken by this Government?

[Dr. H. V. Hande] [1975 ஏப்ரல் 3

Then take the Poolavari murder case in which two persons died. The father is the Congress (0) leader and the son is an Anna D.M.K. worker. Both the Congress (0) Leader and the Anna D.M.K. worker were shot and then a stone was taken and they were completely butchered and smashed. What has the Police done about it? What is that high force that is preventing the police from taking the necessary action?

What has the police done in Mr. Venga's case? The taxi number is known. The persons are known. Everything is known to the Commissioner of Police. Who prevented the Commissioner of Police from taking action? Is it not a dereliction of duty on the part of the Commissioner of Police or dereliction of duty on the part of the Hon. Chief Minister? I would like to know these things.

Then again, I wish to refer to compulsory deduction for drought relief fund. The other day the Hon-Chief Minister was speaking about drought relief fund. I will give the file number-49818/75—Assistant Inspector-General of Police Mr. Krishnamurthy and Assistant Inspector-General of Police Mr. Durai. They have passed orders forcing compulsorily money to be given to the drought relief fund by the employees of the Police Department. This is only a demonstration to show the inefficiency of the department, and that the Chief Minister's assurance has no value.

In the whole of Tamil Nadu you will find that there is a complete failure of law and order. Take for instance, Ramanathapuram district—Tirupathur, the constituency of the Hon. Minister Thiru Madhavan or some other area; the situation is the same.

In Madurai jurisdiction there is a place called Keezhvalavu and the Sub-Inspector there is Mr. Dennis. He went and completely demolished the village Jayangondam in Tirupathur constituency on 11-1-1975. What was the fault committed by the people there? The fault was a shepherd boy was just playing there and that boy was shot. The people belonging to that place saved the boy and salvaged him and gave him first aid This is all the crime committed by the people there. The whole village was destroyed. The Police Department, the Inspector-General of Police is responsible directly. It is a dereliction of



1975 ஏப்ரல் 3] [Dr. H. V. Hande]

duty on the part of the Inspector-General of Police. Otherwise it is dereliction of duty on the part of the Hon. Chief Minister. The whole village was erased. I have sent a letter to the Inspector-General of Police. I can even read the contents. I have sent a letter to the District Collector. What is the action they have taken? The whole police force was let loose and 200 people came in a lorry and they beat the people black and blue. Mr. Madhavan was helpless. Let him refute it. The matter was brought to his attention. . . .

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவரவர்களே, டாக்டர் ஹாண்டே இப்போது பேசினார்கள். நான் பொறுமையோடு இருக்க வேண்டுமென்று இருந்தேன். அவர் தவறான கருத்துக்களைச் சொல்வதைப்பற்றி ஆட்சேபனை இல்லை. நானே பதில் சொல்ல வேண்டுமென்று கேட்ட காரணத்தினால் சொல்கிறேன். அது என் தொகுதி தான். இப்படித் தவறான தகவல்களைக் கொடுப்பவர்களை நம்பி அவர் பேசக் கூடாது. அந்தக் கடிதங்கள் நான் பார்த்த கடிதங்கள் தான். அதைப் பார்த்து ஏமாந்து விடவும் கூடாது. அங்கே என்ன நடந்தது என்பதை மறைத்து விட்டுப் பேசக் கூடாது. அதிலே எங்கள் கட்சிக்காரர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் கட்சி மட்டும் என்று சொல்லவில்லை. கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களை வாலந்தூரில் பிடிக்கப் போன போது மதுரை மாவட்ட போலீஸ்காரர்கள் தாக்கப்பட்டார்கள், வெட்டப்பட்டார்கள். ஆகவே துப்பாக்கிப் பிரயோகம் நடந்திருக்கிறது. இது தவறு என்று சொல்லக் கூடாது. போலீஸ்காரர்கள் கைது செய்யப்பட்டவர்களிடத்தில் பொறுமையாக நடந்து கொள்ளவேண்டும், ஆத்திரப்படாமல் இருக்க வேண்டுமென்று கூறுவது தவறு என்று கூறுவதற்குத் தயாராக இல்லை. கள்ளச் சாராயத்தைப் பிடித்த போலீஸ்காரர்களை வெட்டலாம், என்று வாதிட ஆரம்பித்தால் அதற்கு முடிவே கிடையாது.

Dr. H. V. HANDE : He has swallowed the cock and bull story fed to him by the police department or was pretending to swallow it. I deny, and refute his explanation. Let a judicial enquiry be set up because a number of people were ruthlessly beaten. 200 persons were beaten ruthlessly; don't forget.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவரவர்களே, ஜூடிஷியல் என்குயரி வேண்டாம். டாக்டர் ஹாண்டே அவர்களே வரட்டும், நானே அழைத்துச் செல்கிறேன். அவர் கட்சியை ஆதரிக்

[திரு. செ. மாதவன்] [1975 ஏப்ரல் 3

கிறவர்களை, எங்கள் கட்சியை ஆதரிக்கிறவர்களை வரவழைக்கிறேன். அங்கே அவரை அழைத்துச் செல்கிறேன். அவர்களைக் கேட்டவுடன், ஐயோ பாவம், தெரியாமல் பேசி விட்டோமே என்று அவர் நினைப்பார் என்று கூறிக் கொள்கிறேன்.

DR. H. V. HANDE : I have checked up the facts. I had a thorough discussion with the *Mavatta Amaippalar* Mr. Anbazhagan. I have got the whole thing thrashed out and I don't make the statement without facts and figures. Whenever they are cornered they will say
சாராயம் காய்ச்சுகிறார்கள் என்றோ அல்லது வேறு ஏதாவது செய்தார்கள் என்றோ சொல்வார்கள்.

When a person is killed, they will say, the person had committed suicide. Do not swallow the matter that they give as it is. Do not swallow snook and lion all the matter that is fed by them to you. I demand that a judicial enquiry be immediately instituted to find out the truth of the whole matter and find out the police excesses done there. It is something like the Mudhukalathoor riot. The whole Ramanathapuram district is seized of the matter. This is a matter which I would like the Hon. Chief Minister to deal with immediately.

The Government is always talking about landlord and tenant and claims it on the side of the tenant. I want to refer to the police force which were used to smash the tenants to pieces in an incident in Dharmapuri district. In Posinayakana Halli there is one Narasimhan. He was a tenant. The land belonging to the tenant was taken by the landlord and the landlord had the full support of the D.M.K. persons there. I can quote the names of the persons. One of them is a member of the House also. That is why I would not like to mention the names. I have got facts and figures with me. That land was robbed from him by the landlord and it was passed on to somebody else. He refused to part with the land. The result was, this man was tied to a tree and beaten in the presence of the police. Police were on-lookers. He gave a complaint. But the powerful D.M.K. persons—one Mr. Chinnaswamy, M.C., Vadivelu, all these people—Panchayat Chairman—all of them were there. They were all watching. This man was helpless. Afterwards what happened? He went and slept in the house. The whole house was set fire so. If the previous one was like muthukalathoor incident this is like a Keezhavenmani incident. . . .





MR. DEPUTY SPEAKER : Please finish in three minutes. Already you have taken 9 minutes.

DR. H. V. HANDE : I was allotted 20 minutes on behalf of my party. We are 16 members. I would not take more time. If you strike the bell, afterwards I will just take one or two minutes. . .

I have got the photo also. I have shown it to the Hon. Speaker day before yesterday and I have taken his permission to show this to the Assembly. The whole house was burnt. He escaped. His wife died. His children died. Mr. Narasimhan also escaped. He met me. He met our leader and General Secretary. He requested our General Secretary saying that this was a serious matter. My leader wanted me to bring this matter to the attention of the police. I have done that also. But nothing has taken place so far.

Then I come to a very important matter, namely, Anna D.M.K. workers are being regularly beaten in the police station by the police people at the instigation and behest of the D.M.K. partymen. This is another matter I want to stress and I have evidence to show. Here is a letter from an Anna D.M.K. worker Mr. Elango. There is a police Sub-Inspector Swamikannan in Annamangalam jurisdiction in Valathi Police Station. Elango came and met me and Thiru Kovai Chezhian was also there. He was himself shocked. Elango was ruthlessly beaten. There were marks of lathi all over his body. It was because he was an active member and worker of the party, he was beaten. Actually they put the pencil in between his fingers and twisted. What sort of ruthless and heartless people these police are, I do not know. At whose instigation they are doing all this? I do not undrstand. He was hoever ruthlessly beaten. What is the reason given by them? They finally said it was because he had stolen some goods. That is the accusation. But surprisingly what had happened? He did not steal at all though the Police claim that he stole. The finger prints of this person and other Anna D.M.K. persons were sent to Cuddalore. The allegation was that he stole the goods of a big shot of D.M.K. The finger prints did not tally with that of the alleged culprit. The finger prints were certified to belong to a known district K.D. Subbupandithan. This man was later arrested and some stolen money also was recovered. Now these Anna D.M.K. workers—

Mr. Ilango and Mr. C. Krishnan are not allowed to go into the jurisdiction of Annamangalam area at all. If they go, they will be beaten and they are residing at Choolai. The police are still saying "if you come here, we will break your bones". All this, mind you, after our people have been proved innocent.

(முற்பகல் 11-30)

Even in G2 Police Station, Anna D.M.K. workers were beaten. I have received a complaint from one, Thiru Pugazhendhi. I have got full particulars and I am prepared to give it to the Hon. Chief Minister. The job of the Sub-Inspector of that Police Station is to beat ruthlessly almost every Anna D.M.K. worker. That Sub-Inspector Mr. Manoharan is probably a sadist—I do not know. He goes on saying—

இந்தக் கட்சியை ஒழித்துக் கட்டுகிறேன். பாருங்கள்.

Then I come to a very important matter and I want a specific answer from the Hon. Chief Minister. This is a complaint which has been brought to my notice by no less a person than the Member of Parliament representing Dindigul Constituency, Thiru Maya Thevar. It is a shocking incident. The complaint refers to the death of a person in the police custody due to ruthless beating by the police. There is circumstantial evidence to show that he was ruthlessly beaten and killed. His name is Kuttaiyan alias Masanam. He was living in the Dindigul Parliamentary Constituency. He was killed on 20th January 1974 in the Ambathurai Police Station. Mr. Kuttaiyan along with 9 others namely, Periakaruppa Thevar, Thangamalai, Parvathi, Nagathevar, Sangan alias Ayyar Thevar, Muthukanni, Rakkammal, Thayammal and Sevannammal were arrested and beaten on the false charge that they had stolen something. But, who were the real culprits? They were different and I know their names. The body of Thiru Kuttaiyan was caused to disappear and the police refused to hand over the body. Then the matter was taken by Thiru Maya Thevar with the I.G. of Police. Then a court of enquiry was conducted by the R.D.O. who has given the verdict that the witnesses gave very strong evidence that there was assault by the police. The R.D.O. submitted the report on 31st December 1974. Immediately the members belonging to the ruling partly including Assembly and Panchayat Members prevailed upon the Government not to take any action in the matter. So, in



spite of the clear verdict of the R.D.O. no action has been taken in the matter. I would like to know why there is delay in taking action in the matter. Why the Government have not suspended the concerned police officials and also at whose behest they had done all these things. I want the Hon. Chief Minister to look into the matter.

Then I come to the Ottapidaram Constituency. One Sesiah, a Harijan of Kavanagiri village and a Anna D.M.K. worker was severely beaten by the police and he died in February 1975. Then false cases were foisted by the police on Anna D.M.K. workers. False cases were foisted on the persons who are related to the deceased and who are actually aggrieved. A false case was foisted by the A.S.I., Tuticorin against Thiru Thangaraj, Anna D.M.K. Joint Organiser and a few others. They have sent a telegram to which I have replied. I will briefly read a portion of my reply. It is as follows :—

"I am herewith forwarding a copy of the telegram received by the General Secretary, Anna D.M.K. for necessary and urgent action. It is indeed a tragedy of the highest magnitude that the police have also, along with the ruling partymen began to beat and kill Anna D.M.K. workers. It is needless for us to point out that this brutal action of the police calls for a probe at the highest level".

This is the letter I sent to the I.G. of Police after receiving that telegram.

Then I want to refer to a tragic case of a person who was killed in Neyveli on 2nd May 1974 by persons belonging to the ruling party, namely, Thiruvalargal Kasim, Mariyappan, Mohan, Susai and Ethiraj. The victim's name is Jamimulla. He was a 14 year old student. He was a very active Anna D.M.K. worker. Again on 18th July 1974 the deceased person's brother, Amanullah was beaten. They have stated that "even after killing your brother, you are still with the Anna D.M.K.". I have got here the photo of Amanullah. He has lost an eye. His father has written a letter to me. Now I will read some portions from that letter. கண்ணீர் கடிதம்.

"என் மகன் பேச்சுப் போட்டியிலும். எல்லா விஷயங்களிலும் பரிசுகளை வாங்கியவன். அண்ணா தி.மு.கழகத்தைப் பற்றியும், உங்களைப் பற்றியும் (நம்முடைய வீட்டருக்கு எழுதிய கடிதத்

திலுள்ள வார்த்தைகள்) இழித்து, பழித்துப் பேசக் கூடிய நண்பர்கள் வந்து என் மகனை அடித்தார்கள்" என்று சொல்லு கிறார்கள்.

lastly,

இப்படி நான் தங்களை வேண்டிக் கொள்வதற்குக் காரணம் தாங்கள் என் மகனை (ரத்தக் கண்ணீரில் எழுதியிருக்கிறான் தகப்பன்) கொலை செய்தவர்களை கண்டு பிடிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காகத்தான். தாங்கள் தற்சமயம் (எம்.ஜி.ஆருக்கு எழுதியிருக்கிறார்) நடவடிக்கை எடுக்க முடியா விட்டால், எதிர்காலத்தில் தங்கள் கீழ் நிர்வாகம் வரும் போதாவது எங்களுக்கு நீதி கிடைக்க வழி செய்வீர்கள் என்ற திடமான நம்பிக்கையுடன் எழுதுகின்றேன்.

இப்படிக்கு
சி. காசிம்.

இப்படி ரத்தக் கண்ணீருடன் கடிதம் எழுதுகிறார்கள். நூற்றுக் கணக்கான கடிதங்கள் நம் தலைமைக் கழகத்திற்கு வந்திருக் கின்றன.

அதே நேரத்தில் அன்று கோவைச் செழியன் திட்டவட்ட மாகக் கேட்டார். இந்த போலீஸ் இலாக்காவிலே பல ஊழல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதையே முன்வைத்து தற்போது காலியாகவுள்ள வீரபாண்டி தொகுதியில் நீங்கள் போட்டி போடத் தயாராக இருக்கிறீர்களா என்று கேட்டார். அப்பொழுது நம்முடைய முதலமைச்சர் என்ன சொன்னார் என்றால் எம்.ஜி.ஆர். ராஜினுமா செய்து விட்டு போட்டி போடு வாரா என்றார். எங்கள் பொதுச் செயலாளருடைய, எங்கள் கட்சியின் தலைவருடைய, ஒப்புதலுடன் ஒரு சவாலை உங்களுக்கு நான் தருகிறேன். அவர் கேட்டு இருக்கக்கூடிய சவால். எப்படி ஆட்சியில் ஊழல் இருக்கிறது என்று சொன்னார்களோ, அதே போல போலீஸ் இலாக்காவில் ஊழல் இருக்கிறது என்று சொல்லு கிறார்கள். இதை ஒரு அறிக்கையாக வைத்துக்கொண்டு, "போலீஸ் இலாக்காவிலே ஊழல் இருக்கிறது--எம்.ஜி.ஆர்; ஊழல் இல்லை—கருணாநிதி" என்று இப்படி தமிழகத்திலே ஒரு ரெபரெண்டம் எடுப்பதற்கு தயாராக இருக்கிறார்களா என்ற சவால்.





**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நல்ல சவால் ஹாண்டே வாயிலிருந்து வருவதற்குப் பதிலாக நண்பர் எம்.ஜி.ஆர். ஒரு நாள் இங்கே வந்து, அவர் வாயால் இந்த சவாலை விட வேண்டும் என்று மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன். அவர் பேச்சைக் கேட்டு ரொம்ப நாளாகிறது. இந்த சவாலை அவர் விட்டால் நான் பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன். உங்கள் தலைவரை வற்புறுத்தியாவது, கையைப் பிடித்தாவது அழைத்து வந்து உட்கார்த்துமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** இப்படி நீங்கள் அவர் மீது வைத்திருக்கக்கூடிய மரியாதைக்கும் அன்பிற்கும் நன்றி. you all agree that he is right. நான் கேட்கக் கூடிய கேள்வி யெல்லாம் திண்டுக்கல் தேர்தலில் தோல்வி அடைந்தீர்கள். என்ன சொன்னீர்கள்? ஒரு தொகுதியை வைத்துக் கொண்டு கணக்குப் போட முடியாது என்று. கோயம்புத்தூரில் அரங்கநாயகம் வெற்றி பெற்றார். நான் கேட்பதெல்லாம், தமிழகத்தில் இந்த ஒரு பிரச்னையை வைத்துக் கொண்டு ஒரு சவாலாக, இது ஊழல் நிறைந்த ஆட்சி—எம்.ஜி.ஆர்.; ஊழல் நிறைந்த ஆட்சி அல்ல— கருணாநிதி; என்று தமிழகம் முழுமைக்கும் போட்டி போடுவதற்கு ரெபரெண்டம் வைப்பதற்கு தயாராக இருக்கிறீர்களா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, ரெபரண்டத்திற்கு தயாராக இருக்கிறோமா, இல்லையா என்று சொல்லுகின்ற பதிலைப் பிறகு வைத்துக் கொள்ளலாம். ரெப ரண்டம் வைப்பதற்கு என்ன அதிகாரம் இருக்கிறது? ஒரு மாநிலம் எந்த வகையில் ஒரு ரெபரண்டத்தை வைப்பது? முதலில் இந்த மாநில சுயாட்சி பெறுவதற்கு ஹாண்டே அவர்கள் ஒத்துழைத்தால், இந்த சுயாட்சி பெற்ற பிறகு, நாமே நம் மாநிலத்தில் ரெபரண்டம் வைக்கலாம்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** பொதுமக்களுடைய தீர்ப்புக்கு நீங்கள் தலை வணங்கத் தயாராக இருக்கிறீர்களா? அப்படியானால் 'ரெபரண்டம்' வையுங்கள் என்று நான் சொல்லுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நீங்கள் கேட்பது ரெபரண்டம் என்று. ரெபரெண்டம் என்றால் வாக்கெடுப்பு. எல்லா மக்களும் சேர்ந்து, அகில இந்திய அடிப்படையில்

வாக்கெடுப்பு நடத்த வேண்டும். அப்படியானால் அதை கவனிப்பது யார்? ரெபரண்டம் நடத்த நமக்கு என்ன அதிகாரம் இருக்கிறது? அகில இந்திய அடிப்படையில் நமக்கு என்ன அதிகாரம் இருக்கிறது? நாம் மட்டும் தனியாக ரெபரண்டம் நடத்த அரசியல் சட்டம் இடம் தருகிறதா?

டாக்டர் எச். வி. ஹாண்டே: முதலமைச்சருக்கு இருக்கிற அதிகாரத்தை வைத்து வாக்கெடுப்பு நடத்தலாம். முதலமைச்சருக்கு அந்த அதிகாரம் இருக்கிறது. பொதுமக்கள் தீர்ப்பு என்ன என்பது உங்களுக்குத் தெரியும். திண்டுக்கல்லில் தோற்றீர்கள். . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நீங்கள் சொல்லுகிறபடி ரெபரண்டம் தமிழ்நாடு முழுவதற்கும் வேண்டாம். பீச்சில் ஒரு கூட்டம் போடுவோம். ஒரே மேடையில் நானும் பேசுகிறேன்; எம்.ஜி.ஆரும் பேசட்டும். அப்புறம் பார்ப்போம்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: மதுரையிலே ஒரே கூட்டத்தில் பேசும்போது என்ன நிலைமை ஏற்பட்டது என்பது உங்களுக்கே தெரியும். ஏதோ மயக்கம் வந்துவிட்டது என்று பாதியிலே. . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தயவுசெய்து ஹாண்டே போன்ற நல்ல பார்லிமென்டரியன்கள் இப்படி பேசக்கூடாது. நான் ஹாண்டே மீது ரொம்ப மதிப்பு வைத்திருக்கிறேன். நாங்கள் இரண்டு பேரும் மதுரையில் மட்டும் ஒரே மேடையில் பேசவில்லை. செங்கற்பட்டு மாநாடு காஞ்சிபுரத்தில் நடை பெற்றது; அங்கே ஒரே மேடையில் பேசியிருக்கிறோம். இராஜ பாளையத்தில் நடைபெற்ற மாநாட்டில் ஒரே மேடையில் பேசியிருக்கிறோம். இப்படி எத்தனையோ மாநாடுகளில் எம்.ஜி.ஆர். பேசிய பிறகு நான் பேசியிருக்கிறேன். அன்றையதினம் எனக்கு தொண்டை வலி ஏற்பட்டு, அதற்கு டாக்டர்கள் மருந்து கொடுத்தார்கள். அது அலர்ஜியாகி, பேச முடியாமல் போய் விட்டது. அப்போது எம்.ஜி.ஆர். ஒரு மணி நேரம் என்னோடு இருந்துவிட்டு, அப்புறம் தான் போயிருக்கிறார். அதனால் இப்படி ஒரு அபாண்டம் சுமத்த வேண்டாம்.





டாக்டர் எச். வி. ஹாண்டே: ஒரே மேடையில் உங்களோடு மட்டுமல்ல, யாரோடு வேண்டுமானாலும் பலப்பரிட்சை நடத்த தயார். நீங்கள் அதற்குத் தயாரா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பொது மேடையாக இருந்தால் அமளி துமளி ஏற்படக்கூடும். இது மக்கள் கூட்டம் இல்லாத இடம்; அமைதியான இடம். நாட்டு மக்கள் இங்கே என்ன நடக்கிறது என்பதைத் தெரிந்துகொள்கின்ற இடம். இந்த மன்றத்திலே வந்து பேசட்டும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: முதலிலே பொது மேடையில் என்று சொன்னீர்கள். We accept the challenge இந்த மன்றத்தைப் பொறுத்தவரையில், இங்கே என்ன நடக் கிறது என்று தெரியாத வண்ணம் கடுமையான விவாதங்களை எல்லாம் எக்ஸ்பஞ்ச் செய்து விடுகிறீர்கள். அதனால் இங்கே என்ன நடந்தது என்று பொதுமக்களுக்குத் தெரியாமல் போய் விடக் கூடிய நிலைமையை உருவாக்கிக்கொண்டிருக்கிறீர்கள். அதனால் பொது மேடையில். . .

MR. DEPUTY SPEAKER: That is a charge you are levelling against the Chair. I am not permitting that. You are taking as if we are expunging everything. I won't allow that.

DR. H. V. HANDE: What? You hear me.

MR. DEPUTY SPEAKER: Don't involve the Chair in your arguments.

DR. H. V. HANDE: The whole Assembly is involved. We are part of the Assembly. You are also part of the Assembly. If you say you are not part of the Assembly, it is up to you to say so. I am not concerned with it. Is it not a fact that the 1½ hours speech of our leader was not recorded? (interruption) Yes, the mike was switched off. If you do not want any speech, the mike will be off. Can you say 'No'.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, இங்கு ஒலிபெருக்கியில் பேசுவதுதான் ரிக்கார்டு ஆகும். ஒலிபெருக்கியில் பேசாதது ரிக்கார்டு ஆகாது. இங்கே எம்.ஜி. ஆரும் நானும் தனியாக ஏதேதோ பேசினோம். அதையெல்லாம் சொல்லட்டுமா?

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** ஒலிபெருக்கியை ஆஃப் செய்தீர்கள். இந்த மன்றத்தில் அவரை பேசவிடாமல் ஒலிபெருக்கியை ஆஃப் செய்தீர்கள். இது ஒரு பெரிய மக்கள் மன்றம். 4½ கோடி தமிழ் மக்களின் பிரதிநிதிகள் இருக்கிற மன்றம். இங்கே எம்.ஜி. ஆரை பேசவிடாமல் செய்தீர்கள். அதை எல்லாம் மக்கள் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நாங்கள் பொது மேடையில் பேச ஹாண்டே தயார் என்றார். எம்.ஜி.ஆர். தேதி தரட்டும். நானும் அவரும் ஒரே மேடையில் பேசுகிறோம்; அல்லது இந்த மன்றத்தில் வந்து பேசலாம்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** பொது மேடையில் பேசலாம். அதை நான் ஒப்புக்கொள்கிறேன். இந்த மன்றத்திலே எப்படி நடந்துகொள்வீர்கள் என்பது தெரியும். அவர் இங்கே பேசினால் ஒலிபெருக்கியை ஆஃப் செய்து விடுவீர்கள்.

**திரு. பெ. சீனிவாசன் :** தலைவரவர்களே, எம்.ஜி.ஆர் தான் இங்கே வந்து சொல்ல வேண்டுமென்று சொல்கிறார்கள். இதில் ஏதாவது இரகசியம் இருக்கிறதா? அவர் என்ன சொல்ல வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள்? ஏதாவது விபரத்தைச் சொன்னால் நாங்களே பதில் சொல்கிறோம். எம்.ஜி.ஆர். தான் வந்து சொல்ல வேண்டுமென்ற பெரிய இரகசியம் என்ன இருக்கிறது?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** ஹாண்டே அவர்கள் ஒரு பிரச்சனையைக் கிளப்பினார்கள். ரெபரண்டம் வைக்க வேண்டுமென்று சொன்னார்கள். எம்.ஜி.ஆரா அல்லது கருணாநிதியா என்று பார்க்கலாம் என்றார்கள். எம்.ஜி.ஆர்., கருணாநிதி—இந்த இரண்டு பேர் தானா இருக்கிறோம்? வேறு நாட்டில் கட்சியே கிடையாதா? காமராஜர் கட்சி அவர் கண்ணில் படவில்லையா? ஆளும் காங்கிரஸ் கட்சி இருப்பது தெரியவில்லையா? கம்யூனிஸ்ட் கட்சியை மறந்துவிட்டாரா? தமிழ்நாடு என்று சொன்னால் எம்.ஜி.ஆர். கருணாநிதி இந்த இரண்டு பேரும் தானா? இவர்கள்தான் தமிழ்நாட்டின் தலைவர்களா? நாங்கள் தான் தலைவர்கள் என்ற ஆணவம் வரக்கூடாது.

ரெபரண்டம் வைக்க மாநில சர்க்கார் அதிகாரம் படைத்திருக்கிறதா? அதைப்பற்றிச் சொன்னேன். இங்கே வந்து விவாதிக்க தயாரா? பேசுவோம். அல்லது பொது மேடையில் பேசுவோம்.



அல்லது 'ஹால் மீட்டிங்' போட்டு அதில் பேசுவோம். இந்த அரசின்மீது என்னென்ன ஊழல் இருக்கிறது, என்னென்ன குற்றச்சாட்டு இருக்கிறது என்பதைச் சொல்லட்டும். யார் யார் ஊழல் செய்கிறார்கள், எங்கெங்கே போகிறார்கள், என்னென்ன செய்கிறார்கள் என்று நான் சொல்கிறேன். விவாதம் நடக்கட்டும்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** முதலமைச்சரவர்கள் முதலிலே ஒப்புக் கொண்டார்கள். பிறகு திடீரென்று ஞானோதயம் வந்து விட்டது; அதை பாராட்டுகிறேன். அவருக்குத் துணையாக மற்றக் கட்சிகளையும் அழைத்துக்கொண்டார். அவர்களையும் துணையாக அழைத்துக்கொண்டால்தான் அவரால் அரசியலில் நிற்க முடியும் என்ற நிலைமை இன்று அவருக்கு ஏற்பட்டு இருக்கிறது. அந்த நிலைமைக்கு வந்து விட்டார்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நாம் இரண்டுபேரும் ரெபரண்டம் வைத்தால் மற்ற கட்சிகள் எல்லாம் பார்த்துக் கொண்டிருப்பார்களா என்று கேட்கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** மாநில சர்க்காருக்கு ரெபரண்டம் வைக்க அதிகாரம் கிடையாது என்று சொன்னீர்கள். அந்த எல்லையில் இருந்திருக்க வேண்டும். அந்த விவாதம் நியாயமானதாக இருக்கலாம். அதற்குப் பின்னால் நான் சில குற்றச்சாட்டுக்களை. . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** ரெபரண்டம் எங்கெங்கே வைப்பது? எங்கெங்கே வாக்குச் சாவடி வைப்பது? என்னென்ன முறையிலே வைப்பது என்பதை சற்று விளக்கினால் நல்லது.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** பொதுமக்கள் கருத்தை அறிவதில் மாநில அரசுக்கு அதிகாரம் இருக்கிறது. அந்த அதிகாரத்தின்படி. . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** ரெபரண்டம் எப்படி வைப்பது, வாக்குச் சாவடி எங்கெங்கே வைப்பது என்று கேட்கிறேன். அதற்கு உங்களுடைய விளக்கத்தைச் சொல்லுங்கள்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** அரசாங்க மெஷினரி உங்களிடம் இருக்கிறது. அதனால் உங்களுக்கு கஷ்டம் இல்லை. அந்த மெஷினரியை எங்களிடம் கொடுத்தால், எப்படி எப்படி செய்யலாம் என்பதைப்பற்றி பூராவும் எழுதிக் கொடுக்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இப்போதே இந்த சபை தங்களிடமிருந்து எதிர்பார்க்கிறது. ரெபரண்டம் எப்படி வைப்பது? அரசியல் சட்டத்தில் இடம் இருக்கிறதா? எதிர்க் கட்சிக்காரர்களுடைய நிலை என்ன? இதற்கு விளக்கம் சொல்லுங்கள்.

DR. H. V. HANDE: It is not an unconstitutional thing. You can do it. You have got the machinery.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** ரெபரண்டம் வைக்கவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் ஹாண்டே அவர்கள் சொன்னதை ஒப்புக் கொள்கிறோம். ஆனால் எப்படி வைக்க வேண்டும் என்பதை சொல்லுங்கள் என்று முதலமைச்சர் கேட்டுக் கொண்டேயிருக்கிறார். இரண்டு பேரும் தனியாகப் பேசி, முடிவு செய்துகொண்டால் இந்த சபையின் நேரம் மிச்சமாகும். ஆகவே, டாக்டர் ஹாண்டே அவர்களும், முதலமைச்சர் அவர்களும் தனியாக அது பற்றி பேசிக் கொள்ளுங்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** ரெபரண்டம் எப்படி வைப்பது என்று சொன்னால் ஏற்றுக்கொள்ளலாம். அதைத் தான் கேட்கிறேன். ஆளும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சுப்பிரமணியம் அவர்கள் அரசியல் சட்டம் படித்தவர்கள். எப்படி ரெபரண்டம் வைப்பது, எந்த வகையில் வாக்குச் சாவடி வைப்பது, மற்றக் கட்சிக்காரர்களுக்கு ரெபரண்டம் தேவைப்படாதா என்பதை கேட்கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** மாகாண சர்க்காரைப் பொறுத்த வரையில் உரிமை இருக்கிறதா இல்லையா என்றால் இருக்கிறது. அதில் கஷ்டம் இல்லை. பொதுமக்களை சந்தித்து கருத்தறிவதில் மாகாண சர்க்காருக்கு உரிமை இருக்கிறது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** எம். ஜி. ஆரா., கருணாநிதியா என்ற கேள்வியின் அடிப்படையில் ஒரு ரெபரண்டத்தை தமிழ்நாட்டில் வைத்துக்கொள்ள எல்லாக் கட்சிகளும் தயாரா?

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** இது ஊழல் சர்க்கார் என்று பொதுமக்கள் கருதுகிறார்கள். நீங்கள் ஊழல் இல்லை என்று சொல்கிறீர்கள். உங்களுடைய ஆட்சியில் ஊழல் இருக்கிறதா இல்லையா என்பதை. . .



**திருமதி த. ந. அனந்தநாயகி:** பெரிய ரெபரண்டம் ஒன்றும் வேண்டாம். அதற்கு முன்னால் தமிழ்நாட்டில் ஊழல் இருக்கிறதா இல்லையா என்று ஒரு சின்ன ரெபரண்டம் வைத்து பார்த்து விடலாம். இப்போது ஒரு மெம்பர் இராஜிநாமா செய்திருக்கிறார். அந்த இடத்தில் வைத்துப் பார்க்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ரெபரண்டம் வைக்க இடம் இருக்கிறதா இல்லையா என்று கேட்டார்கள். அதற்கு பதில் சொல்வதை விட்டு, வேறு எதையோ சொல்கிறீர்கள்.

அடுத்து திரு. ஏ. சுப்பிரமணியம் அவர்கள் பேசுவார்கள்.

* **திரு. ஏ. சுப்பிரமணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த போலீஸ் மானியத்தைக் குறித்து எங்களுடைய கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுத் தீர்மானங்களை வலியுறுத்தி, எனக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற குறைந்த நேரத்தில் ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இங்கே வைக்கப்பட்டிருக்கிற ரிவியூவில் கடைசியாக முதலமைச்சர் சொல்லியிருக்கிறார்கள்

The discipline and morale of the police force continued to be high. Despite the continuous strain on the police throughout the year due to law and order problems, they discharged their duties creditably. All ranks continued to work with zeal and interest.

என்று சொல்லியிருக்கிறார்கள். இதனைவிட உண்மைக்கு அப்பாற்பட்ட கூற்று இருக்கமுடியாது என்பதனை நான் இங்கே சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இங்கே கமிஷனர் அவர்கள் அலுவலகத்தில் ஒரு கண்காட்சியினை நான் பார்த்தேன். சென்ற ஆண்டும் பார்த்தேன். எப்படி குற்றங்களைக் கண்டுபிடிக்கிறார்கள். காவல்துறை எவ்வாறு செயல்படுகிறது என்று காட்டினார்கள்.

It is one side of the coin. There is another side of the coin.

அது என்ன? இந்த அளவுக்கு திறமை இருக்கிறது. இது இந்தக் காவல்துறையினிடத்தில் பரம்பரையாக வந்த திறமை.

Traditionally it has been efficient. It has been improving upon the efficiency.

அதில் ஒன்றும் சந்தேகம் கிடையாது. ஆனால் இன்றைக்கு இருக்கிற நிலைமை என்ன? இவ்வளவு திறமைபெற்ற காவல்துறையானது

[திரு. ஏ. சுப்பிரமணியம்] [1975 ஏப்ரல் 3

It has been made subservient to the ruling party. It has been made subservient to the dictates of the ruling party and ministers. இது தான் இன்றைக்கு இருக்கிற நிலை. இந்தக் காரணத்தினால்தான் அவர்கள் தங்களுடைய பணிகளை ஒழுங்குற ஆற்ற முடியவில்லை என்பதை கடந்த 1½ நாட்களாக இங்கே பல சம்பவங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. நான் ஒரு சிலவற்றை எனக்கு இருக்கிற குறைந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப் படுகிறேன்.

முன்னால் பேசிய திரு. தேவேந்திரன் அவர்கள் சொன்னார்கள்— மேலவை உறுப்பினர் வெங்கா தாக்கப்பட்டது குறித்து முதல்வர் அவர்கள் மெத்த வருத்தப்பட்டார்கள் என்று. அந்த வருத்தத்தின் அளவு என்ன என்பதற்கு ஒன்று போதும்—முரசொலிப் பத்திரிகையில் அந்தச் செய்தி வெளியிடப்படவேயில்லை. அந்த அளவுக்குத்தான் இருந்திருக்கிறது.

இப்படி மேலவை உறுப்பினர் திரு. வெங்கா அவர்கள் தாக்கப் பட்டது பிப்ரவரி மாதம் 26 ஆம் தேதி.

திரு. தோப்பூர் திருவேங்கடம்: ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது போலீஸ் இலாக்கா ஆளுங்கட்சிக்குத் துணைபோகிறது என்று பேசினார்கள். மத்தியில் ஸி.பி.ஐ. இருக்கிறதே அந்த ஸி.பி.ஐ. எப்படி இயங்கிக்கொண்டிருக் கிறது என்பதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் இங்கே தெளிவாக விளக்கினால் நன்றாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: இந்த மாநிலத்தின் முதலமைச்சர் அவர்கள் இந்த மாநில போலீஸ்துறைக்காக கோரியுள்ள மானி யத்தின் மீதுதான் இங்கே விவாதம் நடந்துகொண்டிருக்கிறது. நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதைப்பற்றி அங்கே பேசட்டும். ஆராய்ச்சியை நடத்தட்டும்.

பிப்ரவரி மாதம் 26-ஆம் தேதி மேலவை உறுப்பினர் வெங்கா தாக்கப்பட்டார். இன்னும் என்ன ஆயிற்று? அதைப்பற்றி எதையும் கண்டுபிடிக்க முடியவில்லை.

மிகுந்த திறமைபெற்ற போலீஸ் இலாக்கா இந்த நிலையில் இருந்து கொண்டிருக்கிறது.

இன்னும் பூலாவரியில் நடைபெற்ற கொலை—சார்ஜ்ஷீட்டே போடப்படவில்லை.



1975 ஏப்ரல் 3] [திரு. ஏ. சுப்பிரமணியம்]

சென்னையில் பல கொலைகள் நடந்திருக்கின்றன. சினிமா நடிகை ஒருவர் இறந்துபோனார். இதுபோல பல கொலைகள் நடக்கின்றன. சில பெரிய மனிதர்களுடைய காரணத்தினால் பெண்கள் கொலை செய்யப்பட்டிருக்கின்றனர். இதுபோன்ற பல கொலைகள் மாதக் கணக்காக—ஆண்டுக்கணக்காக துப்புத் துலக்கப் படாமல் இருந்து வருகின்றன.

திருப்பூரில் 1974 ஆம் ஆண்டு 14 திருட்டுகள், 2 கொலைகள் நடந்திருக்கின்றன.

திருப்பூரையடுத்த நல்லூர் விஜயபுரத்தில் நான்கு மாதங்களில் 13 திருட்டுகள் நடந்திருக்கின்றன. ஒரு கொலை நடந்திருக்கிறது.

இந்தக் கொலை சம்பந்தமாக 2 பேர் கைது செய்யப்பட்டார்கள். எப்படியெல்லாம் பொருளை எடுத்தோம். எப்படி அந்தக் குற்றத்தைச் செய்தோம் என்பதை அவர்களே காட்டியிருக் கிறார்கள். ஏராளமான மக்கள் அங்கே இருந்து இதனைப் பார்த் தார்கள். பட்டப் பகலில்—என்ன ஆயிற்று? மேலேயிருந்து ஏதோ தலையீடு—புலன் ஆய்வு தேங்கிவிட்டது. அந்தக் கொலைக் குற்றத்தை மாற்றி—வெறும் திருட்டுக் குற்றமாக அதை ஆக்க முயற்சி நடந்து கொண்டிருக்கிறது.

இப்படி பலச் சம்பவங்கள்—பல இடங்களில்—கொலை செய் கிறவர்களுக்கு—குற்றம் புரிகிறவர்களுக்கு—ரௌடிகளுக்கு ஆளுங் கட்சியில் உள்ளவர்கள் உறுதுணையாக இருக்கிற காரணத்தினால் போலீஸ் துறையும் உள்ளாக இருக்கிறது. பட்டப் பகலில் கொலை நடக்கிறது, காவல்துறையினர் கொலைகாரர்களைப் பிடிக்க மாட்டேன் என்கிறார்கள். தொடர்ந்து இதுபோல நடைபெற்றுக் கொண்டுவருவது—பல ஆண்டுகளாக திறமைக்குப் பெயர்பெற்று வந்திருக்கிற காவல்துறைக்கு இது பேரிழுக்காகும் என்று குற்றஞ் சாட்டுகிறேன்.

தொழில்துறையில் என்ன ஏற்படுகிறது? போலீஸ்காரர்கள் தலையிடுகிறார்கள். லேபர் அட்வைசரி போர்டு கூட்டத்திலும் இது எழுப்பப்பட்டது. ஐ.ஜி. அவர்களே வந்திருந்தார்கள். பதில் சொன்னார்கள். அந்தத் துறையிலும் இரண்டுவகையான கொள்கையைப் பார்க்கிறேன்.

ஆளுங்கட்சியைச் சேர்ந்த தொழிற்சங்கமாக இருந்தால் சஸ் பெண்டு செய்யப்பட்ட தொழிலாளர்களாக இருந்தாலும் போலீஸ் துறையினர் தலையிடமாட்டார்கள்.

[திரு. ஏ. சுப்பிரமணியம்] [1975 ஏப்ரல் 3

மற்ற கட்சி தொழிற்சங்கமாக இருந்தால் உடனே போலீஸ் தலையிடு—உள்ளே வந்து தொழிலாளர்களைக் கைது செய்துகொண்டு போவது—இப்படி தொழில்துறையிலும் இரண்டுவிதமான கொள்கை.

காண்காட்சியில் ஒன்றைப் பார்த்தேன். கமிஷனரே சுட்டிக் காட்டினார்கள். ஆசிரியர்களது கிளர்ச்சியின்போது எவ்வளவு கண்ணியமாக தாங்கள் நடந்து கொண்டோம் என்பதற்குக் காட்டினார்கள். பட்டதாரி ஆசிரியர்களின் கிளர்ச்சியின்போது அவர்களைக் கைது செய்து கரி ஏற்றிய லாரியில் ஏற்றிப்போனதாகச் சொல்லப்பட்டது. கோவை விவசாயிகளின் போராட்டத்தின்போது—கைதுசெய்யப்பட்டவர்களை லாரியில் ஏற்றி வேலூர் கொண்டுவந்தார்கள்—நடுவில் மலஜலம் கழிக்கக்கூட அனுமதிக்கவில்லை.

இவை எல்லாம் இந்த இலாக்காவுக்கோ—சர்க்காருக்கோ கௌரவமான காரியம் அல்ல. இன்னொரு விஷயத்தையும் சொல்ல ஆசைப்படுகிறேன்.

சைக்கிள் திருட்டு நடக்கிறது. கண்காட்சியில் நிறைய சைக்கிள்களைக் காட்டினார்கள்—கண்டுபிடிக்கப்பட்டவை. எனக்குப் பல புகார்கள் வருகின்றன. திருடப்பட்ட சைக்கிள்களை ஸ்டேஷனில் கொண்டுபோய் வைத்தால்—முன்பு லைட் இருந்தால் இப்போது லைட் இருக்காது. புது டயர்கள் மாற்றப்பட்டுவிடுகின்றன—டைனமோ காணாமற்போய்விடுகிறது. திருட்டு சைக்கிளைக் கண்டுபிடித்தவுடனே சைக்கிளை அதன் சொந்தக்காரரிடத்தில் கொடுத்துவிட்டு வழக்கை நடத்தலாம். உடைமையாளரிடத்தில் அதைக் கொடுத்துவிட்டு நடத்தலாம். இல்லையென்றால் ஸ்டேஷனில் கொண்டுபோய் வைத்துக் கொண்டவுடன் அந்த சைக்கிள்—600 ரூபாய் வண்டி—ரூ. 100-க்குக் கூட பொறுமானமற்றதாக காயலான் கடைக்குப் போகிற அளவுக்கு ஆகிறது. என்னிடத்தில் நிறையப் புகார்கள் வந்திருக்கின்றன.

சென்னை நகரத்தில் இந்திரகேசவலு புகார் கொடுத்திருக்கிறார். 22—3—75 அன்று 10½ மணிக்கு தி. நகர் காவல் நிலையத்திற்குச் சென்று சைக்கிளை வெளியில் வைத்து பூட்டிவிட்டு உள்ளே போய் வருகிறார். வெளியில் வருவதற்குள் சைக்கிளைக் காணோம். புகார் கொடுத்திருக்கிறார். ஒன்றும் நடக்கவில்லை—காரணம்—



1975 ஏப்ரல் 3] [திரு. ஏ. சுப்பிரமணியம்]

இங்கே வேலியிலேயே கோளாறு இருக்கிறது—வேலியே பயிரை மேய்கிற நிலைமை இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நேற்றையதினம் பத்திரிகையிலேயே செய்திகள் வந்தன. காவல்துறையைச் சேர்ந்தவர்களே மதுவிலக்குக் குற்றம் செய்கிறார்கள். மேலும் பல குற்றங்களைச் செய்கிறார்கள் என்ற நிலைமை வந்திருக்கிறது. மற்றவர்கள் தங்களைக் குறை கூறாத அளவுக்கு காவல் துறையினர் முதற்படியாக நடந்துகொள்ள வேண்டும்.

இன்னொரு சம்பவம் நடந்திருக்கிறது. ஜோலார்ப்பேட்டையில் கே. சி. அப்பாசாமி—வெகு நாட்களாக எனக்குத் தெரிந்தவர்—சிறந்த அரசியல் ஊழியர்—ஒரு ரெக்ரியேஷன் க்ளப் வராண்டாவில் பத்திரிகை படித்துக்கொண்டிருந்தார்—புதியதாக வந்த சப்-இன்ஸ்பெக்டர் உள்ளே போனவர் வெளியில் வருகிறபோது இவரையும் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துப் போயிருக்கிறார். பல பேர்கள் தலையிட்டதன்காரணமாக ஜாமீன்பேரில் விட்டிருக்கிறார்.

குற்றங்களைக் கண்டுபிடிக்கும்போது குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க வேண்டும். சகட்டுமேனிக்கு எல்லோரையும் பிடிப்பது—இது வெகுநாட்களாக இருந்து கொண்டிருக்கிறது—இன்றைக்கு எல்லோரையும் சகட்டு மேனிக்கு பிடிக்கிற காரணத்தினால் உண்மையான குற்றவாளி தப்பித்துக்கொள்ளக்கூடிய ஆபத்துதான் இருக்கிறது. இந்த நிலைமை மாறவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

(நண்பகல் 12-00)

*திரு. ஆ. கு. சுப்பையா: மதிப்பிற்குரிய துணைத் தலைவரவர்களே, இன்றையதினம் மாண்புமிகு முதல்வர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற போலீஸ் துறை மானியத்தின்மீதும், தீயணைப்புத் துறை மானியத்தின்மீதும் எனது கருத்துக்களைச் சொல்ல முன் வருகிறேன்.

மற்ற மாநிலங்களை விட தமிழகத்திலேயிருக்கிற போலீஸ் துறை சிறப்பாகப் பணியாற்றுகிறது என்ற ஒரு பெயர் இருந்தாலும் இன்றையதினம் முதலமைச்சரவர்கள் கொடுத்திருக்கிற அறிக்கை பிரகாரம் பார்த்தோமானால் ஒவ்வொரு

ஆண்டும் குற்றங்கள் அதிகரித்து வருகின்றன என்பதைப் பார்க்க வேண்டும். இந்த ஆண்டு 5,000 குற்றங்கள் அதிகமாகியிருக்கின்றன. இம்மாதிரி குற்றங்கள் அதிகரிப்பதற்கு என்ன காரணம்? அதை அரசாங்கம் ஆராய்ந்து, தவிர்க்க வழிவகை காணவேண்டும்.

குற்றங்கள் அதிகரித்து வருகின்றன என்று சொன்னால், நாட்டிலே ஏற்பட்டிருக்கக்கூடிய வறுமையின் காரணமாக, நாட்டிலே பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருப்பதன் காரணமாக குற்றங்களுக்கு மனிதர்களே ஆளாகியிருக்கிற போக்கு இன்றையதினம் அதிகரித்து வருகிறது என்பதைப் பார்க்க வேண்டும். அதன் காரணமாகத்தான் விரைவிலே பணக்காரர்களாக வேண்டும், பணம் படைத்தவர்களாக வேண்டுமென்பதற்காக, கள்ள நோட்டு அடித்துக்கொண்டிருக்கிறார்கள். அதுபோல் கள்ள நாணயம் தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

மற்றொன்று, சிலைகளைத் திருடி, அதன்மூலமாக, இலட்சக் கணக்கான ரூபாய்களைப் பெற முடியும் என்ற அளவில் ஒரு தொழிலையே மேற்கொண்டிருக்கிறார்கள். சிலைகளைத் திருடி, அமெரிக்கா போன்ற தேசங்களுக்குக் கொண்டு போகிறார்கள். எவ்வாறு சிலைகளை அமெரிக்காவுக்குக் கொண்டு போகமுடியும்? சாதாரணமாக, அயல்நாடுகளுக்குப் போக வேண்டுமென்று சொன்னால், அதற்குப் பாஸ்போர்ட் வாங்கி ஏரோப்ளேனிலே போகிறார்கள். போகும்போது பரிசோதனை எல்லாம் செய்கிறார்கள். இந்தச் சிலைகள் மாத்திரம் எப்படி பரிசோதனையிலிருந்து தப்புகின்றன? அல்லது எப்படி சிலைகளுடன் பறந்து செல்கிறார்கள்? இம்மாதிரி, திருடர்கள் தனி விமானமெல்லாம் வைத்திருக்கிறார்களா? என்பதையெல்லாம் நம்முடைய போலீஸ் துறை கவனிக்க வேண்டுமென்று நான் சொல்ல விரும்புகிறேன். இது ஒரு கேவலத்தைத் தமிழகத்தில் ஏற்படுத்துகிறது. சிலை திருடுவது, கள்ள நோட்டு அடிப்பது, கள்ளக் கடத்தல் செய்வது இவற்றையெல்லாம் ஒரு தொழிலாகக் கொண்டிருக்கிறார்கள். இதைத் தடுக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

மற்றொன்று, தொழிலாளர்கள், விவசாயிகள் தங்கள் பிரச்னைகளுக்காகக் கிளர்ச்சிகள் செய்கிறார்கள். தங்கள் நியாயமான கோரிக்கையை வலியுறுத்திக் கேட்பதற்காகத் தொழிலாளர்கள், விவசாயிகள், ஒன்றுசேர்ந்து கிளர்ச்சியிலே ஈடுபடுகிறார்கள். அதுபோல் கிளர்ச்சியிலே ஈடுபடும்போது போலீஸ்காரர்கள் நிலப்பிரபுக்கள் அல்லது முதலாளிகளுக்குச் சாதகமாகத் தான்



ஈடுபடுகிறார்கள். அந்தக் கொள்கையை அறவே மாற்றிக்கொள்ள வேண்டும். தொழில்ாளர்கள், விவசாயிகள் தங்கள் கோரிக்கைகளுக்காகப் போராடுகிறார்கள், அல்லது கிளர்ச்சி செய்கிறார்கள் என்று சொன்னால் போலீஸ்காரர்கள் நடுநிலைமையாளர்களாக இருக்கவேண்டுமேயொழிய சில இடங்களிலே அவர்களே நீதிபதிகளாக இருந்து, தொழிலாளர்கள்மீது குற்றம் சொல்லக் கூடிய ஒரு நிலைமையும் ஏற்படுகிறது. அந்த நிலைமை உருவாகாமலிருக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று நான் சொல்ல விரும்புகிறேன். விவசாயிகள், தொழிலாளர்கள் வாயில்லாப் பூச்சிகளாக இருக்கிறார்கள். அவர்களுக்கென்று பேச யாரும் ஆள் இல்லையென்று சொல்லும்போது அரசாங்கம்தான் அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டும். இம்மாதிரிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிற காவல்துறை ஒருதலைப் பட்சமாக நடந்து கொள்ளக்கூடாது என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்ல ஆசைப்படுகிறேன்.

அடுத்தது, கள்ளச் சாராயம் காய்ச்சுவது அதிகரித்திருக்கிறது. பல கிராமங்களிலே கூட்டாகச் சேர்ந்து காய்ச்சுகிறார்கள். அதற்குப் போலீசாரே உடந்தையாக இருக்கிறார்களென்று நாங்கள் கேள்விப்படுகிறோம். ஆகவே, கள்ளச் சாராயம் காய்ச்சாமலிருக்க தனிப் போலீஸ் துறையை ஏற்படுத்தவேண்டும். அப்படி ஏற்படுத்துவதன் மூலமாகக், கள்ளச் சாராயம் காய்ச்சுவதைக் கட்டுப்படுத்த முடியும் என்பது என்னுடைய ஆலோசனையாகும். ஆகவே, அதையும் கட்டுப்படுத்த வேண்டுமென்று நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

தீண்டாமை ஒழிப்பிற்காகத் தனிப் பிரிவு ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. உண்மையிலே தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தில் அப்பிரிவினர் வழக்குகளைச் சரியாகத் தொடர்வதில்லை. அவ்வாறு தொடர்கின்ற வழக்குகள் கூட, கோர்ட்டுகளுக்குப் போனால் தள்ளுபடியாகின்றன. காரணம், போலீஸ்காரர்கள் திறமையாக அந்த வழக்குகளை சோதிப்பதில்லை. அதுபோல் தாழ்த்தப் பட்டவர்கள் வழக்கு கொடுத்தார்களானால் அந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொள்வதிலும் சரியில்லை. அந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டாலும் கோர்ட்டுகளிலே தள்ளுபடி செய்யப்படுகிறது. ஆகவே, திறமையாக நடத்த மனமில்லாத காரணத்தாலே தாழ்த்தப்பட்ட மக்கள் அந்த வழக்குகளிலே பாதிக்கப்படுகிறார்கள். தாழ்த்தப்பட்டவர்கள்மீது வழக்குகள் நடத்தப்பட்டால் அரசாங்கமே அரசாங்க வக்கீல்களை வைத்து

[திரு. ஆ. கு. சுப்பையா] [1975 ஏப்ரல் 3

வாதாட வேண்டும். வழக்கறிஞர்கள்மீது கூட எனக்கு நம்பிக்கை யில்லை. சில வழக்கறிஞர்கள் நியாயமாக வாதாடி பாதுகாக்க நடவடிக்கை எடுத்துக்கொள்வதற்குப் பதிலாக . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வழக்கறிஞர்கள் திறமையிலே நம்பிக்கையில்லையென்று சொல்லுங்கள், வழக்கறிஞர்கள்மீது என்று சொல்லாதீர்கள்.

**திரு. ஆ. கு. சுப்பையா:** உதாரணமாக, அரசாங்க வக்கீல்தான் வெண்மணி கேஸை நடத்தினர். வெண்மணி கேஸ் தள்ளுபடி செய்யப்படுகிறது. உலகமே அறியும், வெண்மணி சம்பவம் பற்றி. வீடுகளுக்குத் தீ வைத்தது, உயிரோடு எரிக்கப்பட்டது, யார் எரித்தது என்பது ஊரே அறிந்த விஷயம். நீதிமன்றத்திலே திறமையாக வழக்கை நடத்தாத காரணத்தால்தான் வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** ஆன் எ பாய்ன்ட் ஆஃப் ஆர்டர், சார். அதற்குக் காரணம் என்ன? அரசாங்கம் திறமையற்றவர் களாகப் பார்த்துத் தனக்கு வழக்கறிஞர்களாக வைத்துக்கொள் கிறது. அதனுடைய விளைவாக இவ்வாறு நடக்கிறதேயொழிய, மொத்தமாக வழக்கறிஞர்களைச் சேர்த்து, நம்பிக்கையில்லையென்று சொல்வது சரியல்ல.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதில் என்ன பாய்ன்ட் ஆஃப் ஆர்டர்?

**திரு. பெ. சீனிவாசன்:** வெண்மணியிலே அப்படி ஒரு சம்பவம் நடக்கவில்லையென்று நீதிமன்றம் சொன்னதா?

**திரு. ஆ. கு. சுப்பையா:** அரசாங்கம் தனக்கு வேண்டியவர் களைத்தான் வைத்துக்கொள்ளும்.

அடுத்து, தீயணைப்புத் துறையிலே பணியாற்றக்கூடியவர் களுடைய வேலைகள் அல்லது நடைமுறை விதிகள் எல்லாம், காவல்துறையைப் போன்றவைதான். அவர்கள்தான் நெருப்போடு போராடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு எந்தவிதமான வசதியும் செய்யப்படவில்லை. அதேபோல், 1973-வது ஆண்டு தமிழக அரசு மதிப்பீட்டுக் குழு சிபாரிசு செய்திருக்கிறது. அவர்களுக்குப் பதவி உயர்வு கிடையாது; சீருடைப் படி, வீட்டு வாடகைப் படி, ஓய்வு நேரப் படி இவைகளெல்லாம் கொடுக்கவேண்டுமென்று



1975 ஏப்ரல் 3] [திரு. ஆ. கு. சுப்பையா]

சிபாரிசு செய்திருக்கிறது. அவற்றைச் செய்ய வேண்டிய நடவடிக்கைகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுத்துக் கொள்ளவேண்டும். அவர்கள்தான் உயிரைப் பணயம் வைத்துப் போராடுகிறார்கள். எப்படி காவல்துறையினர் திருடர்களோடு, கொள்ளைக் கூட்டத்தோடு போராடுகிறார்களோ, அதைப்போல் இவர்கள் நெருப்போடு போராடுகிறார்கள். ஆகவே, விபத்திலே யிருந்து காப்பாற்றக்கூடிய காரியங்களிலே ஈடுபடக்கூடிய தீய ணைப்பு படையினருக்குத் தகுந்த சலுகைகள் வழங்க வேண்டு மென்று இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. கே. கந்தசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று தமிழக அரசின் சார்பாக, அவைமுன் வைக்கப்பட்டிருக்கிற போலீஸ் மானியக் கோரிக்கையை மனமார வரவேற்று சில கருத்துக்களைக் கூற முற்படுகிறேன்.

போலீஸ் நிர்வாகம் தமிழகத்தைப் பொறுத்த அளவுக்கு அகில இந்தியாவிலும் புகழ் பெற்றிருக்கிறது. தன்னுடைய—திறமையாக, விரைவாகக் கண்டுபிடிக்கும் தன்மைக்குப் புகழ் பெற்றுத் தனி யிடத்தை உண்டாக்கியிருப்பதை நான் மனமாரப் பாராட்டு கிறேன். இன்று தமிழகத்தின் போலீஸ் நிர்வாகம் மிகச் சிறந்த முறையில் நல்ல நவீன ரகக் கருவிகளையெல்லாம் 'ஃபார் இன்வெஸ்டிகேஷன் பர்பசஸ்" என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள், தப்பு துலக்குகிற முறைகள், விரைவாகப் புலனுப்வுத் துறைக்கு உறுதுணையாக இருக்கக்கூடிய ஃபிங்கர் பிரின்ட் போன்ற கருவிகள். ஒயர்லெஸ் மற்றவைகளையெல்லாம், கிராமப்புறங்களுக்குக் கூட, விரைவாக, விரிவாகப் பரவச் செய்து, அதன்மூலமாக போலீஸ் அதிகாரிகளுக்கு உறுதுணையாக இருக்கவேண்டுமென்று சென்ற மானியத்தில் கூட கோரிக்கை விடுத்தோம். அதை இன்று விரிவாக, விரைவாகப் பரப்பி இருப்பதை நான் மனமார பாராட்டுகிறேன்.

இதேபோல், டெலிஃபோன் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் இன்னும் வேண்டிய அளவு விஸ்தரிக்கப்படவில்லை யென்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். உதாரணமாக, உசிலம்பட்டி, செக்கானூரணி பகுதிகளுக்கு டெலிஃபோன் வேண்டுமென்று கேட்டேன். சில பகுதிகளுக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது. உசிலம்பட்டி தாலுகா சென்டராக இருக்கிறது. உசிலம்பட்டி இன்ஸ்பெக்டருக்கு டெலிஃபோன் இல்லை, சில

[திரு. கே. கந்தசாமி] [1975 ஏப்ரல் 3

நேரங்களில், தேர்தல் நேரங்களில் மாத்திரம் டெலிஃபோன் வைக்கிறார்கள், அவசரமாகப் பேச. மற்ற நேரங்களில், வைத்திருந்ததை எடுத்துவிடுவதாக நான் அறிகிறேன். அப்படிப் பட்ட சென்டர்களுக்கு அதுவும் தாலுக்கா ஹெட்குவாட்டர்ஸாக இருக்கிறபோது அவர்களுடைய ரெஸிடன்ஸுக்கே போன் வசதி கொடுத்தால் உதவியாக இருக்கும்.

உள்நாட்டிலே கோயில்களில் உள்ள சிலைகளை சிலர் வணங்கு கிறார்கள், தெய்வ வழிபாடு தவறு என்பது ஒரு சிலருடைய கருத்தாக இருந்தாலும் நாட்டிலே உள்ள மக்களில் பெரும்பாலானவர்கள் தெய்வ பக்தியுள்ளவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் தெரிந்தோ தெரியாமலோ கோயில்களை ஏற்படுத்தி விக்ரக ஆராதனை செய்து வருகிறார்கள். விலைஉயர்ந்த ஆபரணங்களை அங்கே வைத்திருக்கிறார்கள். அந்த ஆபரணங்கள் திருட்டுப் போகின்றன, விலையுயர்ந்த ஐம்பொன்னால் செய்யப்பட்ட—இந்தக் காலத்திலே செய்யமுடியாத, செய்யத் தெரியாத—சிலைகள் எல்லாம் திடீர் திடீரென்று காணாமல் போவதும் அவைகளைக் கண்டு பிடிப்பதில் தாமதம் ஏற்படுவதும் —delay in investigation இருக்கிறது. அதை விரைவுபடுத்தவேண்டும். இப்போது இருக்கிற சட்டத்தின் மூலமாக அதைத் தடுக்கமுடியாத நிலை இருக்கிறது. 'This is an offence against religion' அதற்கு மிகக் கடூரமான கடுமையான தண்டனை கொடுப்பதன் மூலமாகவும் புலனாய்வுகளை விரைவாகச் செய்வதன் மூலமாகவும் இப்படிப்பட்ட தவறுகள் எதிர்காலத்தில் நடக்காமல் இருக்கச் செய்யமுடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்று நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் பெண் போலீஸார் படையை உருவாக்கியிருப்பதை நான் வரவேற்கிறேன். அவர்களுக்கும் இந்தத் துறையிலே திறமையிருக்கிறது, என்ற நிலைமையை உருவாக்குகிற நிலைமையிலே பெண்மணிகளையும் நியமித்திருக்கிறார்கள் என்பதை நாம் அறிவோம். அவர்களுக்கு பிஸிக்கல் பிட்னஸ் என்பதை ஸ்ட்ரிக்ட்டாக இம்போஸ் பண்ணக் கூடாது என்பது என்னுடைய கருத்தாகும். பெண் போலீஸாக, போலீஸ் சப்-இன்ஸ்பெக்டராக நியமிக்கப்படுகிறபோது அவர்கள் கைதிகளை ஓடிப்பிடிக்க அவர்களால் . . . .



1975 ஏப்ரல் 3]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எனக்கு ஒரு சிறிய சந்தேகம். திருமணத்திற்கே பெண்களுக்கு பிஸிக்கல் பிட்னஸ் பார்க்கிறபோது போலீஸ்துறைக்கு வருகிறபோது பிஸிக்கல் பிட்னஸ் வேண்டாம் என்று சொல்கிறீர்களே, விளக்கமென்ன?

**திரு. கே. கந்தசாமி:** நான் விளக்கம் சொல்கிறேன். பெண் போலீஸ் படை என்பது புலனாய்வுக்கு உதவியாக இருப்பதற் காகவும் பெண் கைதிகளைக் கூட்டிக்கொண்டு போவதற்காகவும் ஏற்படுத்தப்பட்டதாக உயர்மட்டத்திலிருந்து அந்தக் கருத்தைப் பிரதிபலித்திருக்கிறார்கள். நான் அந்த நோக்கத்தைப் பாராட்டு கிறேன். ஹெல்தி பாடி என்ற முறையில் சுகாதாரமான உடல் கட்டு இருந்தால் போதும், ஹைட், வெயிட் தேவையில்லை என்று கருதுகிறேன்.

Physical fitness need not be strictly enforced

For investigation purposes and for early detection of certain crimes appointment of these persons is essential.

ஆகவே புத்திக்கூர்மையுடைய பெண்மணிகளை சுகாதார உடம்போடு உள்ளவர்களாக அனுமதிக்கவேண்டும். ஆகவே, அவர் களுக்கு ஓரளவிற்கு மார்ஜினல் எக்ஸம்ப்ஷன் இன் பிஸிக்கல் பிட்னஸ் கொடுத்தால் நல்லதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுரையிலே மாவட்ட அதிகாரிகளைப் போடுகிறபோது ஒரே சமுதாயத்தைச் சேர்ந்தவர்களை 3 ஆண்டுகளுக்குப் பிறகு அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு, அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு என்று போடுகிறபோது—உயர்மட்டத்திலே இருக்கிற அதிகாரிகள் கம்யூனல் பயஸாக நடக்கவில்லையென்றாலும்—லோயர் மட்டத்திலே இருக்கிற அதிகாரிகள், இன்ன இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால் உயர் மட்டத்திலே உள்ள அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க மாட்டார்களோ என்ற ஐயத்திலே, 'some psychological climate is influencing investigation' என்ற நிலைமை எல்லாம் வருகிறது.

ஆகவே, நீண்ட நாட்களாக ஒரே சமுதாயத்தைச் சேர்ந்தவர்களை ஒரே குறிப்பிட்ட மாவட்டத்திலே தொடர்ந்து போடுவது நல்லதல்ல என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

மதுரை சௌத்தைப் பொறுத்தவரையில்—இதைப்பற்றி சட்ட மன்ற உறுப்பினர்கள் பலருக்குத் தெரியும் என்று கருதுகிறேன்—இது ரொம்ப யூஸ்புல் பாயின்ட்—நாம் தெரிந்தோ தெரியாமலோ சூழ்நிலையின் காரணமாக இன்றைய ஜனநாயக மரபுகளை ஏற்று பல கட்சிகளின் சார்பிலே தேர்ந்தெடுக்கப்படுகின்ற முறையிலே கட்சிப் பிரச்சாரம் செய்கிறோம். எல்லா இடங்களிலும் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்களே பாராளுமன்ற—சட்டமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வருவதில்லை. பல கட்சிகளைச் சேர்ந்தவர்களும் வருகிறோம். நான் உசிலம்பட்டி சட்ட மன்ற உறுப்பினர் என்றால் என்னைக் கேட்டுத்தான் எந்தக் காரியத்தையும் அங்கே செய்யவேண்டுமென்றோ நான் நியாயத்திற்குப் புறம்பான காரியத்தைச் செய்யச்சொல்கிறேன் என்றாலும்கூட அதிகாரிகள் அப்படிச் செய்யக்கூடாது. என்னுடைய தொகுதியிலே நடந்த காரியத்தைத்தான் நான் சொல்லவேண்டுமென்பதல்ல.

தேவதானப்பட்டி கிராமம் தனி டிவிஷனைச் சேர்ந்தது, அங்கே ஏ.எஸ்.பி. ஐ.பி.எஸ், அதிகாரியாக இருக்கிறார் என்று சொல்கிறார்கள், அவர் லாக்கப்பிலே—அண்ணன் தம்பி தகராறை பெரிதாக்கி கட்சிக் குரோதமாக வைத்து

' very brutal and inhuman treatment was reported to have been given to the accused "

என்ற நிலைமை இருக்குமானால் அது மிகவும் துர்ப்பாக்கியமான நிலைமையாகும். அதுவும் நம்முடைய கலைஞர் அவர்கள் எந்தப் பிரச்னையையும் நல்ல மனிதாபிமானத்தோடு அணுகக்கூடியவர்கள். அவர்களுடைய துறையிலே—அவர்களுடைய கவனத்திற்கு இது கொண்டுவரப்பட்டதோ இல்லையோ எனக்குத் தெரியாது—இருக்கக்கூடிய இப்படிப்பட்ட துர்ப்பாக்கியமான நிலைமை மாற்றப் படவேண்டும்.

அப்படிப்பட்டவர்களை சிடியில் போட்டால், இங்கே ஐ.ஜி. இருப்பார்கள், கமிஷனர் இருப்பார்கள், உயர் மட்ட அதிகாரிகளின் கண்காணிப்பு இருக்கும், ஆகவே, அவருடைய அத்துமீறல் செயல்களை மாற்றக்கூடிய வகையில் ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

நான் உசிலம்பட்டித் தொகுதியிலே இருக்கிறேன் என்றால் அங்கேயே என் வரம்பை அதிகாரிகள் அடக்கப் பார்க்கிறார்கள். நான் பார்வர்ட் பிளாக் கட்சியிலிருந்து வந்திருக்கிறேன், நான்



கோவை மாவட்டத்திலே உள்ள ஒருவர்பற்றிச் சொன்னாலும் அதற்கு ஏன் மதிப்புக் கொடுக்கக்கூடாது? சட்ட மன்ற உறுப்பினர்கள் என்றால் லோக்கல் பிராப்ளம்ஸ்தான் சொல்ல வேண்டுமா? நான் தேவதானப்பட்டியைப்பற்றிச் சொன்னால் அது உங்களுடைய தொகுதியா என்று கேட்கக்கூடிய முறையிலே இருக்கக்கூடாது. நான் ஒரு கட்சியின் அகில இந்திய செயலாளராக இருக்கிறேன், இதற்குப் பிறகு வழக்கறிஞராகவும் இருக்கிறேன், டபிள் குவாலிபிகேஷன் இருக்கிறது, நியாயத்தைச் செய்யுங்கள் என்று சொன்னேன், கேட்கவில்லை.

அம்பாத்துரையிலே திருட்டு என்று சொல்லி ஒருவரைப் பிடித்து அடித்திருக்கிறார்கள். உயிர்ச் சேதம் ஏற்பட்டதாகச் சொல்கிறார்கள். அங்கேயிருக்கிற எஸ்.பி. நான் சொன்னால் ஆத்தூர் எம்.எல்.ஏ. நாச்சியப்பனைக் கேட்டீர்களா என்று கேட்கிறார்கள். அவர் எனக்கு நண்பர்தான், தோழமைக் கட்சிதான் என்றாலுங்கூட எனக்கு அவரைத் தொடர்பு கொள்ள முடியவில்லை என்ன செய்யமுடியும், அந்த ஆளையே அடித்துக் கொன்றிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். ஒரே இனத்தைச் சேர்ந்தவர்களை ஒரே மாவட்டத்திலே அதிகாரிகளாக நீண்ட நாட்களுக்குப் போடாமல் பீரியாடிக்கல் சேஞ்சஸ் இருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் இப்படிப்பட்ட தவறுகள் நடக்காமல் தடுக்க முடியும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே சுட்டிக்காட்டி முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று போதிய நேரம் இல்லை என்று சொல்லியபோது ஆளுங்கட்சி கொறடா அவர்கள் தங்களுடைய கட்சியில் பேசவிருந்த 5 உறுப்பினர்களை விலக்கிக்கொண்டு மற்ற உறுப்பினர்களுக்குப் பேசுவதற்கு நேரம் கொடுத்திருக்கிறார்கள், அதற்காக நான் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவர் அவர்களே, இந்த மானியத்திலே எங்கள் கட்சியின் சார்பாக ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்ல முற்படுகிறேன். இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற ஆய்வுரையில் 7 தடவைகள் துப்பாக்கிப் பிரயோகமும் 13 தட்டைகள் டியர்கியாஸும் நடந்ததாகக் கொடுக்கப்பட்டுள்ளது. குறிப்பாகக் குற்றங்கள் எல்லாம் உயர்ந்தவண்ணம் இருக்கிறது என்பதும் இந்த ஆய்வுரையிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. 1974-இல் 58 சதவிகிதம்தான் டிடக்ஷன் ஏற்பட்டிருக்கிறது என்ற விவரங்களை

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1975 ஏப்ரல் 3

யெல்லாம் கொடுத்திருக்கிறார்கள். பொதுவாகத் தமிழ்நாட்டிலே போலீஸ் நிர்வாகத்திலே பல்வேறு குறைகள் இருப்பதைப்பற்றிப் பல்வேறு உறுப்பினர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். முதலில் நான் பொதுவான சில குறைகளைச் சொல்லிவிட்டு பிரதேச வாரியாக ஒரு சில பிரச்னைகளைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

அண்மையிலே சென்னையிலே நம்முடைய காவலர்கள் நடத்தியிருக்கிற அரிய பணியைப் பார்ப்பதற்கு எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. நல்ல வேலை செய்திருக்கிறார்கள். இல்லையென்று சொல்லவில்லை. அம்மாதிரி மாவட்டங்களிலேயும் சீரான செம்மையான முறையிலே கேஸ்களைக் கண்டுபிடிப்பார்களானால் இந்த இலாகாவிற்குப் பெரும் புகழும் வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் இங்கேயிருக்கின்ற பிரச்னையெல்லாம், இதிலே பல்வேறு இடங்களிலே சில சிக்கல்கள் ஏற்படுகின்றன. அது யாருடைய தலையீட்டின் காரணமாக ஏற்படுகின்றன என்பதை நாம் நடுநிலைமையோடு பரிசீலிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

உதாரணமாக, சட்டக் கல்லூரி விடுதியில் ஏற்பட்ட நிகழ்ச்சி விரும்பத் தக்கதல்ல. அந்த நிகழ்ச்சியின் விரிவான விவரங்களுக்கு உள்ளே போக நான் விரும்பவில்லை. இரு சாராரிடையே ஏற்பட்ட சிறு சச்சரவுகள் மோதலாக ஏற்பட்டு கடைசியிலே சாதிச் சண்டையாக வரும் நிலையிலே வளர்ந்து விட்டது என்றால் நிச்சயமாக அது விரும்பத்தக்க காரியம் அல்ல.

அதேபோன்று அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலேயும் இந்த மாதிரியான நிகழ்ச்சிகள் ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் அறிகிறோம். இதை யார் தூண்டிவிட்டாலும் அல்லது எந்த அரசியல்வாதிகள் இதன் பின்னாலேயிருந்தாலும் இது தேசத்திற்கு நல்லதல்ல என்ற கருத்தை இந்தச் சந்தர்ப்பத்திலே சுட்டிக் காட்டக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

பொதுவாக, இன்றைக்குப் போலீஸ் நிர்வாகத்திலே சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும் சரி அல்லது ஏனையவர்களானாலும் சரி தலையிடாமல் இருந்தால் நிச்சயமாக அது நியாயமாக நடக்கும். ஆனால் நேர்மாறாக பல்வேறு அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் வேண்டுமென்றே போலீஸ் அதிகாரிகளை மிரட்டும் தன்மையினால் பல்வேறு இடங்களில் தவறுகள் நடக்கின்றன



1975 ஏப்ரல் 3] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

என்று கூறினால் அது மிகையாகாது. யார் தவறு செய்தாலும் தவறு தவறுதான் என்று சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனக்கு முன்னால் பேசிய உயர்திரு. கந்தசாமி அவர்கள் ஒரு சில நிகழ்ச்சிகளைப் பற்றிக் கூறினார்கள். இந்தமாதிரியான நிகழ்ச்சிகள் பரவலாக நாட்டிலே பல்வேறு இடங்களிலே நடக்கின்றன என்பதைக் காணும்பொழுது நமக்கெல்லாம் வேதனையாக இருக்கிறது. ஆகவே, அதையெல்லாம் நாம் எல்லோரும் ஒரு முகமாகக் கண்டிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்குப் போலீஸ் இலாக்காவில் மிக முக்கியமாக இருப்பது மதுவிலக்கை அமல் நடத்தும் பிரச்னை என்பதை நாம் அனைவரும் நன்றாக உணர்வோம். மதுவிலக்கை மறுபடியும் எடுத்துவிடுவார்கள் என்று இன்றையதினம் பல்வேறு நபர்களும் கூறிக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு அவர்கள் என்ன காரணம் சொல்கிறார்கள் என்றால், கள்ளச்சாராயம் காய்ச்சுவது அதிகமாக இருக்கிறது, மதுவிலக்கைச் சரியாக அமல் நடத்துவது கஷ்டமாக இருக்கிறது என்ற கூற்றையெல்லாம் கூறுகிறார்கள்.

ஓட்டேரி என்ற இடத்தில் 10,000 ரூபாய் மதிப்புள்ளவற்றைக் கைப்பற்றியதாகவும், 500 பாட்டில் கள்ளச் சாராயம் கைப்பற்றப் பட்டிருப்பதாகவும் பத்திரிகைகளில் செய்திகளைப் பார்க்கிறோம்.

செங்கற்பட்டு மாவட்டத்தில் இந்தக் கள்ளச் சாராயம் அதிகமாக இருக்கிறது என்று எங்களைப் போன்றவர்களுக்குப் புகார்கள் வந்துகொண்டேயிருக்கின்றன.

இந்தச் சாராயம் காய்ச்சும் ஆலைகளை நாம் சரியாகக் கண்காணிக்க வேண்டும்.

பாலாற்றின் கரையில் ஒரு ஆலை இருக்கிறது. அதிலிருந்து பல்வேறு இடங்களுக்கும் சாராயம் எடுத்துச் செல்லப்படுவதாகப் புகார்கள் வந்திருக்கின்றன. அதற்கு யார் உடந்தையாக இருந்தாலும் அதைக் கண்டுபிடிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

குறிப்பாக, இந்த மொலாசலை வாங்கிக்கொண்டு யார் வேண்டுமானாலும் கள்ளச்சாராயம் காய்ச்சிக்கொண்டிருக்கிறார்கள். இந்த மாதிரி நிலைமை நீடிப்பது பொருத்தமாக இருக்காது என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எங்கள் பகுதியிலே, கோளாவிலேயிருந்து தமிழ்நாட்டிற்குச் சாராயம் எடுத்துச் சென்றதாகவும், போலீஸ் வேனில் ஒரு கான்ஸ்டபிள் கடத்தி வந்ததாகவும் ஒரு செய்தி வந்தது. பிறகு அந்த நபர் விஷம் குடித்து இறந்திருக்கிறார். அதில் யார் யாரெல்லாம் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள்? எப்படி அந்த வேனை 42 மைல்களுக்கு அப்பால் கொண்டு சென்றார்கள் என்ற விவரங்களெல்லாம் புரியாத புதிராக, மர்மமாக இருக்கிறது. அதில் வேறு அதிகாரிகளும் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்று பல்வேறு சான்றுகள், முகாந்திரங்களெல்லாம் இருக்கின்றன. இது சம்பந்தமாக தயவு செய்து சரியான முறையில் ஆய்வு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

வடசேரியில் போலீஸ் வேனில் அரிசி கடத்திக் கொண்டு வந்தார்கள் என்றும், அந்தப் போலீஸ் வேன் தற்செயலாக நிறுத்தப்பட்டு, அதில் அரிஷ்டம் இருப்பது தெரிய வந்து பிடிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டதாகத் தெரிகிறது. இந்த மாதிரிக் குற்றங்களையெல்லாம் போலீஸ் இலாக்காவில் இருப்பவர்களே செய்து கொண்டிருக்கிறார்கள் என்று நினைக்கும்பொழுது அது வருந்தத்தக்கதாக இருக்கிறது.

தாம்பரத்தில் உன்னத அதிகாரியின் டிரைவராக இருந்தவர் சாராயம் கடத்துவதற்கு உடந்தையாக இருந்திருக்கிறார், அந்த உன்னத அதிகாரியும் சாராயம் கடத்துவதில் உடந்தையாக இருந்தார்கள் என்ற புகார்கள் என்னிடம் இருக்கிறது. எனவே, இம்மாதிரி மதுவிலக்குச் சட்டத்தை மீறுபவர்கள்மீது கட்டாயமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக இந்த டிஸ்ஸிபிளினை மீறுகின்ற போலீஸ்காரர்கள்மீது தீவிரமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேமாதிரியாக இந்த மதுக் கஷாயம் அல்லது அரிஷ்டம் என்று சொல்வதை நாட்டில் பரவலாக பல்வேறு இடங்களிலேயும் வியாபார முறையிலே நடத்துகிறார்கள். லைசென்ஸ் வழங்குவதைக் கலெக்டர் போன்றவர்களுக்குக் கொடுத்திருக்கிறோம், ஒரு நபரே பல்வேறு இடங்களிலேயும் லைசென்ஸ் பெற்று சில்லறையாக, மதுவாகத் தயாரித்து மக்களுக்கு விநியோகம் செய்கிறார்கள். அதற்குச் சட்டம் செய்து நாமே வேண்டிய



நடவடிக்கையை எடுக்க வேண்டும். இம்மாதிரி மத்திய அரசாங்கத்திற்கு அதிகாரம் இருந்தாலும்கூட நமது மாநில அரசாங்கம் நிச்சயமாக அதைக் கேட்டுக்கொள்ள வேண்டும்.

பல்வேறு இடங்களிலே, எங்கள் ஜில்லாவிலே இதனால் பெரிய துன்பங்களுக்கும், துயரத்திற்கும் ஆளாகக் கூடிய நிலைமையிருக்கிறது. யாராவது தப்பித் தவறி கொஞ்சம் அரிஷ்டம் சாப்பிட்டிருந்தாலும் திருட்டுச் சாராயம் குடித்திருக்கிறான் என்ற அளவில் அவ்வப்பொழுது ஜோடனை செய்யும் நிலைமை உருவாகியிருக்கிறது. ஆகவே, இதைக் கண்காணிப்பதற்கு மத்திய அரசாங்கத்திடம் சொல்லி சட்டம் கொண்டு வர அரசாங்கம் முன் வர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, போலீஸ் இலாக்காவிலே இருக்கின்ற ஒரு சிலர் செய்த தவறுகளைக் கூற விரும்புகிறேன். கோட்டாரில் கிரைம் நம்பர் 1737/74 என்ற குற்றம் ரிப்போர்ட்டாகியிருக்கிறது. என்ன குற்றம் என்று சொன்னால், ராஜக்கமங்கலம் போலீஸ் ஸ்டேஷனில் உள்ள எழுத்தரும், கோட்டார் போலீஸ் ஸ்டேஷனிலுள்ள பி.சி.-யும் சேர்ந்து மதுரையிலிருந்து வந்த தம்பதிகளையும், வேலைக்காரியையும் மிரட்டி கணவனை விரட்டிவிட்டு, ரகு விலாஸ் என்ற ஹோட்டலில் அந்தப் பெண்மணியை கற்பழித்ததாகப் புகார் வந்திருக்கிறது. அது சம்பந்தமாக கேஸ் எடுத்திருக்கிறார்கள். இப்படி நாட்டைக் காக்க வேண்டியவர்களே, ஒழுங்காக நடக்க வேண்டியவர்களே இம்மாதிரியான தவறுகளைச் செய்திருக்கிறார்கள் என்றால் அவர்கள்மீது கடுமையான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். கற்பழிப்பு போன்ற பயங்கரமான குற்றங்களுக்கு என்ன தண்டனை கொடுக்க வேண்டுமென்று இந்த மன்றத்திலே சொல்ல வேண்டிய தேவையில்லை. இம்மாதிரி நிகழ்ச்சிகள் மேலும் நடக்காமல் இருக்க, வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நமது உணவு இலாக்காவிலே உள்ள போலீஸ்காரர்களைப்பற்றி ஒருசில கருத்துக்களைக் கூற நான் கடமைப்பட்டிருக்கிறேன். உணவு இலாக்காவில் இப்பொழுது கொள்முதல் செய்வதற்காக அவர்கள் பல்வேறு இடங்களுக்கும் சென்று கொண்டிருக்கிறார்கள். அப்படிப் போகும் நேரத்தில் இவர்

களெல்லாம் விவசாயிகளுடைய வீட்டிலே செல்லும் நேரத்தில் கடுமையாக நடப்பதாகப் புகார்கள் வந்தவண்ணமாக இருக்கின்றன.

பேராவூரணி என்ற இடத்தில் போலீஸ்காரர்களும், ஏனைய அதிகாரிகளும் அத்துமீறி நடந்திருக்கிறார்கள் என்று புகார்கள் வந்திருக்கின்றன. அவைகளெல்லாம் தவிர்க்கப்பட வேண்டும்.

ஒருவேளை இன்றைக்கு நாட்டிலே உணவுப் பிரச்னையைத் தீர்ப்பதற்காகக் கட்டாய கொள்முதல் தேவைதான். ஆனால் விளையாத இடத்திலேயும் அத்துமீறி நடக்கிறார்கள், இதற்கு போலீஸ் அதிகாரிகளும் உடந்தையாக இருக்கிறார்களே என்று காணும் பொழுதுதான் மிகவும் வேதனையடைகிறோம். இம்மாதிரி பல்வேறு இடங்க்ளிலும் நடந்திருக்கிறது.

பொன்னேரியிலும், இன்னும் எல்லா ஜில்லாக்களிலும் நாங்கள் பொதுக்கூட்டங்களுக்குச் செல்லும் நேரத்தில் போலீசார் கடுமையாக நடக்கிறார்கள் என்ற குற்றச் சாட்டுக்கள் வந்தவண்ணமாகவே இருக்கிறது. இதையும் இலாக்கா மேலதிகாரிகள் கண்காணிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எங்கள் பகுதியில் இந்தப் போலீசார் என்ன செய்கிறார்கள் என்றால், சந்தைமேட்டிலே ஏறி சில காரியங்களைச் செய்கிறார்கள். எங்கள் பகுதியில் பல்வேறு இடங்களில் சந்தைகளிலேயிருந்து பெண்கள் சாமான்கள் வாங்கிச் செல்லும் நேரத்தில் பெட்டியிலே அரிசி வாங்கிக்கொண்டு செல்வார்கள். அரிசி விற்கக் கூடாது, வாங்கக் கூடாது என்று எந்தத் தடையும் இல்லை. சட்டபூர்வமாக எடுத்துச் செல்ல உரிமையிருக்கிறது. அரசு வாணிபம் இல்லாத காரணத்தால், 'ஸ்டேசுடரி ரேஷன்' இல்லாத காரணத்தால் யாரும் எடுத்துச் செல்லக்கூடாது என்ற நிலை இல்லை. தொடுவெட்டி, சாமியார்மடம் போன்ற இடங்களில் உள்ள சந்தைகளில் இப்படி போலீஸ்காரர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். இதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். ஏனென்றால் சட்டத்திற்கு உட்பட்டு நடக்க வேண்டியவர்களே சட்டத்தை மீறினால் என்ன பாதுகாப்பு இருக்கிறது என்று எங்களைப் போன்றவர்களுக்குத் தெரியவில்லை. நிச்சயமாகப் பல்வேறு கூட்டங்களிலேயெல்லாம் இதையெல்லாம் பேசியிருக்கிறோம்,



கண்டித்திருக்கிறோம். இம்மாதிரி விரும்பத்தகாத, வெறுக்கக் கூடிய நிகழ்ச்சிகள் நிகழாமல் இருப்பதற்கு என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போகிறார்கள் என்று தெரியவில்லை.

இந்த எல்லையோரப் பகுதியை நல்லமுறையில் பாதுகாக்கட்டும், அதை வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால் போலீஸ்காரர்களே அரிசி கடத்தியிருக்கிறார்கள். நான் கவர்னர் பெருமான் உரையிலே பேசும்பொழுது குறிப்பிட்டிருக்கிறேன், அதங்கோடு என்ற இடத்தில் ஸ்பெஷல் ஆர்ம்ட் போலீசில் இருப்பவர்களே அரிசி கடத்திச் சென்று, பஞ்சாயத்துத் தலைவராக இருப்பவர் பிடித்துக் கொடுத்ததாகவும் புகார் கொடுத்திருக்கிறார்கள்.

(பிற்பகல் 12.30)

இந்த மாதிரி அவர்கள் குற்றம் புரிகிற நேரத்தில் ஒரு நீதி; மற்றவர்களை வேண்டுமென்றே தாக்குகிற நிலைமை எல்லாம் இருக்கிறது. ஜேம்ஸ் அவர்களுடைய தொகுதியில் பல்வேறு இடங்களில் இந்த மாதிரி நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூற விரும்புகிறேன். சந்தையில் ஏறி போலீஸ்காரர்கள் இப்படி நடக்கக்கூடாது என்று சர்க்குலராவது இந்த இலாகாவிலிருந்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஜேம்ஸ் அவர்கள் தொகுதியில் வேர்கிளம்பி பகுதிக்கு 11—12—1974-ல் ஃபுட்செல் அதிகாரிகள் ஜீப்பில் வந்தார்கள். அவர்கள் வருவதற்கு முன்னால் யாரோ அரிசி கடத்திச் சென்றிருக்கிறார்கள். இவர்கள் வந்து கடையில் நின்றவர்களை எல்லாம் தாறுமாறாக அடித்திருக்கிறார்கள். நாங்கள் இதற்காகக் கண்டனக் கூட்டம் போட்டோம். மறுநாள் அந்தக் கடைக்குப் பக்கத்தில் வந்து அங்கு தொங்கிக் கொண்டிருந்த சீப்பில் இருந்த பழத்தை வெட்டி, இந்தப் பழத்தைப் போல் உங்களையும் வெட்டி விடுவோம் என்று சொல்லக்கூடிய அளவில் இறுமாப்பான அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்கள் மேல் என் நடவடிக்கை எடுக்க நீங்கள் தவறியிருக்கிறீர்கள்? பி.ஏ. பட்டதாரி கடையில் உட்கார்ந்திருந்தான். அவனைத் தாறுமாறாகத் தாக்கியிருக்கிறார்கள். இதெல்லாம் உணவு இலாகாவின் அரிய சேவை! இந்த மாதிரி காரியங்களைத்தான் அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள்.

சிறுபாணூர் என்ற இடத்தில் வழிப் பாதைக்குத் தகராறு. என்ன செய்தார்கள்? போலீஸ்காரர்கள் ஒருசில சமூக விரோதிகளை அவர்களுக்கு வேண்டியவர்களை உடந்தையாக வைத்துக் கொண்டு பள்ளிக்கூடத்தில் ஆசிரியர்களாக இருப்பவர்களை எதிரியாக வழக்கில் சம்பந்தப்படுத்தியிருக்கிறார்கள். இந்த மாதிரி பல்வேறு குற்றங்களைப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். இந்த இலாகாவுக்கு இதெல்லாம் நல்லதல்ல என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த மாதிரி நிகழ்ச்சிகள் திருவெட்டாறு போலீஸ் ஸ்டேஷன் எல்லையில் நடந்திருக்கின்றன. இன்று அது ரவுடிகளின் கூடாரமாக இருக்கிறது. சமூக விரோதிகளின் கூடாரமாகச் செயல்படுகிறது. அண்மையில் ஒரு பஞ்சாயத்துத் தேர்தல் நடந்தது. அந்த இடத்தில் எங்கள் கட்சியின் சார்பாகக் கட்டப்பட்டிருந்த கொடியை மாற்றுக் கட்சி நண்பர்கள் அறுத்துக் கொண்டு போய் விட்டார்கள். அது சம்பந்தமாக ஜேம்ஸ் அவர்கள் புகார் கொடுத்திருக்கிறார்கள். அங்கு வேண்டுமென்றே அந்த ஒருசில ஆட்கள் ஆளும் கட்சிக்கு வேண்டப்பட்டவர்கள் என்ற காரணத்தால் எந்தவிதமான நடவடிக்கையும் இதுகாறும் எடுக்கவில்லை. இத்தகைய நிலைமைகள் வளர்ந்தோங்கி வருமானால் அராஜகம் ஏற்பட்டு விடும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு இந்த மாதிரி காரியங்கள் எல்லாம் நடக்கக்கூடாது என்பதற்காகத்தான் கூறுகிறேன்.

திரு. பாலன் அவர்கள் எம்.பி. ஆக இருக்கின்றார். அந்த ஜில்லாவை அவர் பராமரித்துக் கொண்டு வந்தார். இப்போது பல்வேறு பாலன்கள் அந்த ஜில்லாவிலே இருக்கிறார்கள். குறிப்பாக, போலீஸ் நிலையங்களிலே வேண்டுமென்றே அடிக்கடி சென்று அவர்களுடைய நிர்வாகந்தான் நடந்து கொண்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மணி அடிக்கப்பட்டது)

இன்னும் 15 நிமிடத்தில் முடித்து விடுகிறேன்.

இன்னொரு விஷயம். டெனன்சி சட்டத்தைப் பொறுத்த அளவில் போலீஸ்காரர்கள் ஒருதலைப் பட்சமாக நடந்து கொண்டிருக்கிறார்கள். டெனன்சி சட்டப்படி தாசில்தார் அவார்டு கொடுக்கிறார்கள். ஆர்.டி.ஓ. அப்பீல் அனுமதிக்கிறார். ஜில்லா கலெக்டர் தீர்ப்புக் கொடுக்கிறார். மூன்று அதிகாரிகளும் தீர்ப்புக் கூறிய பிறகும் போலீஸ்காரர்கள் நியாயம் அல்ல என்று சொல்லி





நிலச் சொந்தக்காரர்களுக்காக குத்தகைதாரர்களுக்கு வேண்டுமென்றே துரோகம் விளைவிக்கும் அளவுக்கு ஒருதலைப் பட்சமாக நடந்து கொண்டிருக்கிறார்கள். சிவில் தர்க்கங்களைக்கூட—செக்ஷன் 145 படி வேண்டுமானால் நடவடிக்கை எடுக்கட்டும்.—ஆனால் அதற்கு மாறாக கிரிமினல் சட்டத்தின் அடிப்படையில் கேஸ்களை ரிஜிஸ்டர் செய்கிற காரணத்தால் பல்வேறு இடங்களில் இந்தச் சட்டத்தின்படி பாதுகாப்புக் கொடுக்க முடியாத நிலை இருக்கிறது. இதெல்லாம் விரும்பத்தக்கதல்ல.

விளவங்கோட்டில் ஒரு சர்க்கிள் இன்ஸ்பெக்டர் இருக்கிறார். அந்த தாலுகாவைச் சேர்ந்தவர். அவரவர்கள் எந்தெந்தப் பகுதியைச் சேர்ந்தவர்களோ அவர்கள் அந்த இடத்தில் வேலை செய்யக்கூடாது, வேறு சரகத்தில்தான் போட வேண்டுமென்று போலீஸ் நடைமுறை இருக்கிறது. ஆனால் அந்தப் பகுதியைச் சேர்ந்தவரே அந்தச் சரகத்தில் சர்க்கிள் இன்ஸ்பெக்டராக இருக்கிறார். அவருடைய தம்பி வழக்கறிஞராக இருக்கிறார். பஞ்சாயத்துத் தலைவராக இருக்கிறார். இவர்கள் அதிகார துஷ்பிரயோகம் செய்கிறார்கள். தனிப்பட்ட முறையில் இவர்கள் மேல் எனக்கு எந்தவிதமான காழ்ப்புணர்ச்சியும் கிடையாது.

அந்தப் பகுதி இருமொழிக் கொள்கை இருக்கும் பகுதி. மலையாளி-தமிழன் என்ற போர்வையில் பல்வேறு தவறுகள் நடக்கின்றன. அந்த மாதிரி நபர்களை வேறு இடத்திற்கு மாற்றுவது தான் பொருத்தமாக இருக்கும். இந்த மாதிரிக் காரியங்களில் நடுநிலைமையோடு நடக்க வேண்டுமென்ற காரணத்தால் இந்தக் கருத்துக்களைக் கூறியிருக்கிறேன்.

சேலம் ஜில்லாவில் நடந்த ஒரு நிகழ்ச்சியை இங்கே கோடிட்டுக் காட்டுவது என்னுடைய கடமை. எங்கள் கட்சியைச் சேர்ந்த சித்தா கவுண்டர் என்ற பெரியாருடைய வீட்டை 15—12—1974-ல் ஒருசில அரசியல் கட்சிகளின் தூண்டுதலின் பேரில் தாக்கியிருக்கிறார்கள். எந்தக் கட்சி என்று கூற விரும்பவில்லை. பிரதான எதிர்க்கட்சியாக இருக்கின்றவர்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று மனுவில் கூறியிருக்கிறார்கள். அது உண்மையா இல்லையா என்ற விவகாரத்தில் புக விரும்பவில்லை. அவருடைய வீட்டிற்குச் சென்று அவருடைய காரை அடித்து நொறுக்கியிருக்கிறார்கள். ரொக்கமாக இருந்த பணத்தை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவருடைய மகனைத் தாக்கியிருக்

கிறார்கள். போலீஸ் அதிகாரிகள் இதற்கு உடந்தையாக இருந்திருக்கிறார்கள். இந்த மாதிரிக் குற்றங்கள் புரிகிறவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும்.

THIRU S. KANDAPPAN: Sir, just a piece of information I want the number of the rule.

அவர் சொல்லுவது தாரமங்கலம் சித்த கவுண்டர் சம்பந்தப்பட்டது என்று கருதுகிறேன். அவருடைய மகன் கிருஷ்ணன் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கிறார். இந்த வழக்கில் எங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த யாரும் அவருக்குப் பரிந்து பேச மறுத்துவிட்டோம். அந்தக் குடும்பம் அவ்வளவு கொடுமையாக நடந்து கொண்டிருக்கிறது. தாரமங்கலம் போலீசுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று அறிகிறேன்.

This information I am just passing on to the hon. Member.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: உயர்திரு கந்தப்பன் அவர்கள் கொடுத்த விளக்கத்திற்கு எப்போதும் நன்றியுடையவனாக இருக்கிறேன். அன்னாரைப் போன்றவர்கள் பொறுப்புணர்ச்சியோடு நல்ல தகவல்களைத் தருவார்கள் என்ற எண்ணத்தில் ஏற்றுக் கொள்கிறேன்.

இந்த மாதிரிப் பல்வேறு புகார்கள் வந்திருக்கின்றன. நியாயங்கள் எப்படி இருக்கின்றன? இந்த மாதிரியான காரியங்கள் நடப்பது சரியல்ல என்ற காரணத்தால்தான் இதைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

போலீஸ் அதிகாரிகள் நிதானமாக நடந்து கொள்ள வேண்டும். யார் தவறு புரிந்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதில் எங்களுக்கு, குறிப்பாக என்னைப் போன்றவர்களுக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இருக்காது. தவறு புரிந்தவர்களுக்கு அதிகாரிகள் துணையாக இருக்கக்கூடாது என்பதைச் சுட்டிக் காட்டத்தான் இவற்றைக் குறிப்பிட்டேன்.

திருநெல்வேலியில் உடன்குடி பஞ்சாயத்திலே பஞ்சாயத்துக்குச் சொந்தமான பல்வேறு தையல் மெஷின்கள் திருடப்பட்டிருக்கின்றன. போலீசுக்கு மனுக்கள் எல்லாம் கொடுத்தார்கள். அது சம்பந்தமாக எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். இதையும் விசாரிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



இன்னொரு விஷயத்தையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். போலீஸ் வான் குழந்தையின் மீது ஏறியிருக்கிறது. அந்த மனுவின் நகல் என் கையில் இருக்கிறது. 9—12—1974-ல் இந்தச் சம்பவம் திருநின்றவூர் என்ற இடத்தில் நடந்திருக்கிறது. அந்த வண்டியின் எண் எம்.டி.எச். 3188. அதை 'எல்' போர்டு போட்டு ஓட்டியதாக மனுவில் கூறியிருக்கிறார்கள். எட்டு வயது சிறுமி, ஸ்டேஷன் மாஸ்டர் மகளைத் தட்டி அவள் இறந்து விட்டாள். அந்த வானில் அரிசி கடத்தப்பட்டிருக்கிறது. ஆகவே நிற்காமல் போய் விட்டார்கள் என்றெல்லாம் புகாரில் கூறியிருக்கிறார்கள். இம்மாதிரி சம்பவங்கள் நடக்கின்றன என்று சொன்னால் அது நல்லதில்ல என்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேன். அதிலும் குறிப்பாக போலீஸ் வானில் இம்மாதிரியான காரியங்கள் நடப்பது, ஒருவரை தட்டிவிட்டு ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லக் கூட அவர்களுக்கு நேரமில்லை என்றால் எவ்வளவு மனிதாபிமானத்தோடு அவர்கள் நடந்துகொள்கிறார்கள் என்பதை நாம் உணர வேண்டியவர்களாக இருக்கிறோம். பொதுவாக இன்று பல்வேறு இடங்களில் பல்வேறு காரியங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

எங்கள் பகுதியில் இரட்டைக் கொலை தலக்குளத்தில் நடந்தது. இதுவரையில் கண்டுபிடிக்கப்படவில்லை. மெடிக்கல் கல்லூரி மாணவனையும் அவன் தந்தையையும் சுட்டுக்கொன்ற கேஸ் இப்போது சார்ஜ் ஷீட் செய்திருக்கிறார்கள். அதன் விவரங்களில் நான் புக விரும்பவில்லை. இம்மாதிரி பல்வேறு வழக்குகள் கண்டுபிடிக்கப்படாமல் இருந்துகொண்டிருக்கின்றன.

விஷ ஊசி வழக்கில் எல்லாம் கண்டுபிடித்தார்கள். அது மாதிரிக் காரியங்களில் முனைந்து ஈடுபட்டிருக்கிற போலீஸ் நிர்வாகம் இம்மாதிரி வழக்குகளை ஏன் கண்டுபிடிக்கவில்லை என்று கேட்கிறேன்.

கடைசியாக, ஒரே ஒரு கருத்தைக் கூறி என்னுடைய வார்த்தைகளை முடிக்கலாம் என்று நினைக்கிறேன். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும் டாக்டர் ஹாண்டே அவர்களும் சுவையான வாதங்களை எல்லாம் கூறினார்கள். நாங்கள் எல்லாம் அம்மாதிரி எம்.ஜி.ஆர். அவர்கள் நேரடியாக முதல் அமைச்சர் அவர்களுடன் எந்த மேடையில் ஒன்றாகப் பேசப் போகிறார்கள் என்பதை ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். அம்மாதிரி மோதல்களை பார்த்து ரசிக்கக் காத்துக்கொண்டிருக்கிறோம்.

கருத்து மோதலாக இருக்கவேண்டும். ரெபாராண்டம் வேண்டுமா வேண்டாமா என்ற விஷயங்களில் போகாமல் வேண்டுமென்றால் எம்.ஜீ.ஆர். அவர்கள் இந்த மன்றத்தில் வந்து முதல் அமைச்சர் அவர்களும் அவர்களும் வாதிட்டால் நாங்கள் எல்லோரும் மிகவும் சந்தோஷப்படுவோம். நாங்கள் எல்லாம் எதிர்கட்சிகளில் இருந்தாலும் இத்தகைய சுவையான வாதங்களை ரசித்துக்கொண்டிருக்கிறோம். நீங்கள் இருவரும் ஒரே கட்சியில் இருந்தவர்கள். மறுபடியும் நீங்கள் இருவரும் ஒரே மேடையில் பேசுகிறீர்கள் என்றால் தமிழ்நாட்டிலுள்ள பொதுமக்கள் எல்லோரும் என்னென்ன காரியங்கள் எல்லாம் நடக்கின்றன என்று ஆவலோடு பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த நல்லதொரு காரியத்தை அதிவிரைவில் அவர்கள் செய்யவேண்டும் என்று தங்கள் மூலம் முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை இதோடு முடிக்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, காவல் துறை மானியத்தின் மீது ஆளும் கட்சியின் சார்பிலும், எதிர் கட்சிகளின் சார்பிலும் பல்வேறு கருத்துக்கள் இரண்டு நாட்களாக எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன. பேசியவர்களின் மிகச் சிலர், சொல்லப் போனால் ஓரிருவர்தான், காவல் துறையில் இருக்கிறவர்கள் இன்னும் பல சலுகைகளைப் பெறவேண்டும், அவர்களுக்கு இன்னும் பல உதவிகள் அரசின் சார்பில் செய்து கொடுக்கப்படவேண்டும், காவல் துறை இன்னும் நல்லமுறையில் செயல்படுவதற்கு நவீன யுக்திகளை எல்லாம் கையாளுகிற முயற்சிகளை செய்ய அரசு முன்வரவேண்டும், என்கின்ற கருத்தை எடுத்துச் சொன்னார்கள்.

பெரும்பாலானோர் இந்த முறை காவல் துறை மீது மிகக் கடுமையான விமர்சனங்களைச் செய்திருக்கின்றார்கள். குறிப்பாக அவரவர்களுடைய தொகுதிகளில் நடைபெற்ற ஓரிரு சம்பவங்களை இங்கே எடுத்துக்காட்டி, காவல் துறையினர் மிகக் கடுமையாக நடந்துகொண்டார்கள் என்ற குற்றச்சாட்டுகளைச் சொல்லி அந்தக் கருத்துக்களை மிக வேகத்தோடு எடுத்துரைத்து இவைகளுக்கெல்லாம் தக்க நிவாரணங்களைக் காண வேண்டும் என்ற அளவில் தங்களுடைய பேச்சுக்களை முடித்திருக்கிறார்கள்.

நம்முடைய பழைய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் பேசுகிற நேரத்தில் பல சம்பவங்களைக் குறிப்பிட்டுக் காட்டி அது சம்பந்தமாக காவல் துறையினர்,



வழக்குகள் பதிவு செய்திருப்பதையும் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். மற்றும் சிலர் வேறு சில சம்பவங்களில் வழக்குகள் பதிவு செய்யப்படவில்லை என்பதை எடுத்துச் சொன்னார்கள். பதிவு செய்யப்படவில்லை என்பதாலேயே பதிவு செய்யப்படாமலேயே போய் விடும் என்பது பொருள் அல்ல. திட்டவட்டமான புலன் விசாரணைகளுக்குப் பிறகு உரிய வழக்குகள் தொடர்புடைய நிகழ்ச்சிகளின் மீது நிச்சயமாகத் தொடுக்கப்படும் என்பதை நான் இங்கு தெரிவித்துக் கொள்வேன்.

ஒவ்வொரு மானியக் கோரிக்கையை விவாதிக்கிற நேரத்திலும் சொல்லப்பட்டுள்ள எல்லாக் கருத்துக்களுக்கும் பதில் அளிக்க எனக்கு நேரமில்லாவிட்டாலும் அந்தந்தத் துறையினுடைய அமைச்சர்கள்,அந்தந்த துறையினுடைய அதிகாரிகள் இந்த விவாதத்தைக் கவனிக்கிற வாய்ப்பைப் பெற்றிருக்கின்ற காரணத்தால் அதற்கான வழிவகைகளை ஆராய்ந்து சொல்லப்பட்ட குற்றச்சாட்டுகளில் உண்மை இருக்குமானால் உடனடியாக நடவடிக்கை எடுக்க அனைவரும் கடமைப்பட்டிருக்கிறார்கள், அதிகாரிகள் உள்ளிட்டு என்பதையும் நான் இந்த அவையில் கூறிக்கொள்வேன்.

நம்முடைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர் திரு. கே. டி.. கே. தங்கமணி அவர்கள் பிரிட்டிஷார் காலத்திலிருந்தே காவல் துறை நிர்வாகம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது, நாங்கள் என்ன புதிதாக இதிலே செய்துவிட்டோம் என்றெல்லாம் கேட்டார். நான் சில புள்ளிவிவரங்களை அந்த அடிப்படையிலே அளிக்க வேண்டியது அவசியமாகும்.

1969-1970-ம் ஆண்டு வரையில் காவல் துறைக்காகச் செலவழிக்கப்பட்ட தொகை ரூ. 13,66,42,500 என்றிருந்தது. இந்த ஆட்சி அமைந்த பிறகு காவல் துறையினுடைய பொறுப்பை நான் எடுத்துக்கொண்ட பிறகு ஆண்டுதோறும் இரண்டு கோடி ரூபாய், மூன்று கோடி ரூபாய் என்றளவிற்கு உயர்ந்து 1969-1970-ல் ஏறத்தாழ 13½ கோடி ரூபாயாக இருந்த செலவு இன்று 1974-75-ல் ரூ. 25,99,65,000 என்கின்ற அளவிற்கு அந்தச் செலவு வளர்ந்திருக்கிறது.

எப்படி இந்த அளவிற்கு அந்தத் தொகை உயர்ந்திருக்கிறது என்று பார்த்தால், காவல் துறையில் இருக்கிற அலுவலாளர்களுக்கு அவர்களுடைய உழைப்புக்கு ஏற்ற ஊதியமும் அகவிலைப்

படி உயர்வும் தரவேண்டுமென்று இந்த அரசு விரும்பியதன் காரணமாக, அவர்கள் தங்களுடைய உயிரையும் பணயமாக வைத்து ஈடுபடுகிற பணியில் இன்றைக்கு இருக்கிறவர்கள் என்ற காரணத்தால் அவர்களுடைய சம்பளத்தில் பல மாறுதல்களை நாம் செய்திருக்கிறோம்.

1970-ம் ஆண்டு வரையில் கான்ஸ்டபிள் என்று சொல்லப்படுகிற இரண்டாவது நிலை காவலாளருடைய அடிப்படைச் சம்பளம் 76 ரூபாயிலிருந்து 95 ரூபாய் என்கின்ற அளவிற்குதான் இருந்தது. 1970-க்குப் பிறகு அந்த அடிப்படைச் சம்பளத்தை உயர்த்தி 150 ரூபாயிலிருந்து 225 ரூபாய் வரை என்கின்ற அளவிற்கு அதை நாம் மாறுதல் செய்திருக்கிறோம்.

முதல் நிலை காவலாளர் என்ற பதவியே இல்லாமல் இருந்தது. அந்தப் பதவியை உருவாக்கி எஸ்.எஸ்.எல்.ஸி. படித்தவர்களுக்கு, வேலையற்றிருப்பவர்களுக்கு இத்தகைய வேலைவாய்ப்பைத் தரலாம் என்ற நல்லநோக்கத்தோடு முதல் நிலைக் காவலாளர்கள் என்ற பதவியை அமைத்து அவர்களுடைய அடிப்படைச் சம்பளம் ரூ. 200-ல் இருந்து ரூ. 300 வரை என்று நிர்ணயித்தோம்.

தலைமைக் காவலாளர்களுடைய ஊதியம் 1970-ம் ஆண்டு வரையில் ரூ. 90-ல் இருந்து ரூ. 110 வரை இருந்ததை ரூ. 210-ல் இருந்து 325 ரூபாய் வரை என்று மாற்றினோம்.

துணை உதவி ஆய்வாளர்களுக்கு ரூ. 110-140 என்றிருந்தது 1970-ல். இப்போது ரூ. 250-ல் இருந்து ரூ. 400 வரையில் என்று மாற்றியிருக்கிறோம்.

உதவி ஆய்வாளர்களுக்கு ரூ. 140-ல் இருந்து ரூ. 220 வரை என்று இருந்ததை இப்போது ரூ. 300-500 என்ற அளவிற்கு உயர்த்தியிருக்கிறோம்.

துணை ஆய்வாளர்கள் என்ற பதவி ஏற்கனவே இல்லை. அந்தத் துணை ஆய்வாளர் டெப்டி இன்ஸ்பெக்டர் என்ற பதவியை உருவாக்கி ரூ. 350-ல் இருந்து ரூ. 600 வரையில் அவர்களுக்கு ஊதியம் வழங்குகிறோம்.

இன்ஸ்பெக்டர்களுக்கு ரூ. 225-375 என்றிருந்தது. அதை ரூ. 425-ல் இருந்து ரூ. 700 என்ற அளவிற்கு இன்றைக்கு மாறுதல் செய்திருக்கிறோம்.



இதைப் போலவே இன்றைக்கு அவர்களுடைய அகவிலைப்படியும் எந்த அளவுக்கு உயர்த்தப்பட்டு இருக்கிறது என்றால், மற்ற அரசு அலுவலாளர்களுக்கு எல்லாம் உயர்த்தப்படுகிற நேரத்தில், அதோடு இணைத்து உயர்த்தப்படுகிறது என்பதையும் அவையில் இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் நன்றாக அறிவார்கள்.

நவீன கருவிகள் காவல் துறைக்கு வழங்கப்படுவதன் மூலம் இன்னும் இந்தத் துறை செம்மையாகச் செயல்படக் கூடும் என்ற வகையில் 1971-72-ம் ஆண்டில் கம்பியில்லாத் தந்திக் கருவிகள், குற்றம் சார்ந்த அறிவியல் ஆய்வுக்கூடக் கருவிகள், நிழற்படக் கருவிகள், இவைகளுக்கு மாத்திரம் இந்த அரசு செலவு செய்த தொகை ரூ. 24,87,228.

1972-73-ல் பிராட்மா இயந்திரங்கள், நுண் திரைப்படக் கருவிகள், ரசாயன ஆய்வுக்கூடக் கருவிகள் ஆகிய இவைகளுக்காக செலவிட்ட தொகை ரூ. 35,29,786.

1973-74-ல் மேலும் செலவிட்டது இதற்காக 43 லட்ச ரூபாய்.

1974-75-ல் நுண் மின் அலைத் திட்டம் என்கிற நவீன முறையைப் புகுத்துவதற்காக ஏறத்தாழ செலவு 25½ லட்ச ரூபாய்; ஆக, இந்த வகையில், 1 கோடியே 29 லட்சம் ரூபாய் வரையில் நவீன கருவிகளைக் காவல் துறையில் பயன்படுத்த அரசின் சார்பில் நாம் செலவிட்டு இருக்கின்றோம்.

1971-ம் ஆண்டு தான் முதன்முதலாக 100 கிராம காவல் நிலையங்களுக்கு—ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் ஒரு மோட்டார் சைக்கிள் வேண்டும் என்ற கோரிக்கை இந்த மாமன்றத்தில் எழுப்பப்பட்டு, அதை நாம் ஏற்றுக்கொண்டு—100 மோட்டார் சைக்கிள்களை அனுமதித்து, நாம் வழங்கினோம். அந்த அறிவிப்பைத் தொடர்ந்து இது வரையில் 440 மோட்டார் சைகிள்கள் போலீஸ் ஸ்டேஷன்களுக்கு வழங்கப்பட்டு இருக்கின்றன. மொத்தமுள்ள 863 காவல் நிலையங்களில் 440 நிலையங்களுக்கு இப்போது வழங்கப்பட்டு இருக்கின்றன. 1975-76-ல் மேலும் புதிதாக 50 மோட்டார் சைக்கிள்கள் போலீஸ் ஸ்டேஷன்களுக்காக வழங்கப்பட இருக்கின்றன. இதையும் சேர்த்து, 490 மோட்டார் சைக்கிள்கள் நாம் வழங்குவது காவல் துறையினர் சம்பவங்கள் நடைபெற்று விடுகின்ற இடங்களுக்குச் செல்லுகின்ற நேரத்தில் விரைவாகத் தங்களுடைய பணியைச் செய்ய உதவும்.

இதைப் போலவே, காவல் துறையினருக்கு சைக்கிள்கள் வேண்டும். அதை இந்த அரசு ஒப்புக்கொண்டு, அவர்களுக்கு வழங்க வேண்டும் என்கிற ஒரு கோரிக்கை இந்த மாமன்றத்தில் உறுப்பினர்களால் எடுத்து வைக்கப்பட்டபோது அதையும் 1973-ம் ஆண்டு இந்த அரசு ஏற்றுக்கொண்டு, 5,000 சைக்கிள்களுக்கு முதல் கட்டமாக நாம் ஒப்புதல் அளித்து, அந்த சைக்கிள்களுடைய விலையில் 40 சதவிகிதத்தை அரசு உதவித் தொகையாகத் தருவது என்றும், மீதித் தொகையை கடனாகத் தவணை முறையில் செலுத்துவது என்றும் நாம் ஆணை பிறப்பித்தோம். அந்த 5,000 மிதி வண்டிகளில் ஏறத்தாழ 2,500 மிதி வண்டிகளைத் தான் காவல் துறையினர் இதுவரையில் பெற்று இருக்கிறார்கள். மற்றவர்கள் இன்னும் அதை வாங்க முன்வரவில்லை என்பதையும் நான் இங்கே கூறிக்கொள்வேன்.

1967-ம் ஆண்டு வரையில் காவல் துறைக்கு இருந்த வாகனங்களுடைய எண்ணிக்கை 742 என்கிற அளவில் தான் இருந்தது. 1967-க்குப் பிறகு 1974-வரையில் கூடுதலாக 906 வாகனங்கள், காவல் துறைக்கு வழங்கப்பட்டு இருக்கின்றன. ஆக மொத்தம் இன்றைக்கு—742 வாகனங்களாக இருந்தவை 1,648 வாகனங்கள் என்கிற அளவில் காவல் துறைக்கு அமைந்து இருக்கின்றன.

இவைகளை நான் சொல்லக் காரணம் காவல் துறை என்பது அதிலே இருக்கிற 45,000 காவலர்கள் மாத்திரம் இருந்து நடத்துவது என்பது அல்லாமல் அவர்களுக்கு உரிய வசதி வாய்ப்புகளை அளிப்பதன் மூலம்தான் அந்தத் துறை நல்ல முறையில் விரைந்து செயல்பட முடியும் என்பதற்காக நாம் செய்துள்ள ஏற்பாடுகளைக் குறிப்பிட்டேன்.

863 காவல் நிலையங்களிலும் தொலை பேசி வைக்கப்படவேண்டும் என்ற இந்தக் கோரிக்கை இதே மன்றத்தில் ஆளும் கட்சி உறுப்பினர்களாலும், எதிர்க்கட்சி உறுப்பினர்களாலும் பலமுறை எடுத்துச்சொல்லப்பட்டு, இன்று 722 காவல் நிலையங்களில் தொலை பேசி வசதிகளை நாம் அரசின் சார்பில் வழங்கி இருக்கிறோம்.

அது மட்டுமல்ல, பதவிகளில் கூட எந்த அளவுக்குப் பதவிகளின் எண்ணிக்கைகள் உயர்ந்து இருக்கின்றன என்பதையும் நாம் பார்ப்பது அவசியம்.



எஸ்.பி. பதவி 1966-67-ல் 29-ஆக இருந்தது. இன்று 63 பதவிகளாக ஆக்கப்பட்டு இருக்கிறது.

டி.எஸ்.பி. 146-ஆக இருந்தது. இன்று 174-ஆக உயர்ந்து இருக்கிறது.

இன்ஸ்பெக்டர்கள் 369 என்று இருந்தது, இன்று 597 என்கிற அளவுக்கு உயர்ந்து இருக்கிறது.

எஸ்.ஐ. 1,545 ஆக இருந்தது. இன்று 1,904 ஆக உயர்ந்து இருக்கிறது.

ஏ.எஸ்.ஐ. 118 ஆக இருந்தவர்கள், 527 பேராக இன்றைக்கு, அந்த அளவுக்குப் பதவிகள் உயர்ந்து இருக்கின்றன.

போலீஸ் கான்ஸ்டேபிள்கள் 23,891 பேர் இருந்தார்கள், இன்று 36,642 பேர்.

ஆகவே, இந்தத் துறையிலே டெக்னிகல் லைன் என்ற அளவில் பணியாற்றும் 3,000 பேர் நீங்கலாக 1966-67-ல் 35,617 பேராக இருந்த இந்தத் துறை, இன்றைக்கு 1974-ல் 45,691 பேர் என்கிற அளவுக்கு வளர்ந்து இருக்கிறது.

இந்த அரசின் சார்பில் நாம் தொடங்கிய குடும்பப் பாதுகாப்புத் திட்டத்தின் மூலமாக இந்தத் துறையிலே உள்ளவர்கள் எந்த அளவுக்குப் பயன் அடைந்து இருக்கிறார்கள் என்பதையும் மன்ற உறுப்பினர்கள் மறந்து விடக் கூடாது. அரசு அலுவலாளர்கள் பணியில் இருக்கும்போது மறைந்து விடுவார்களானால் இயற்கை எய்திவிடுவார்களானால், அவர்களுடைய குடும்பங்களுக்கு அரசின் சார்பில் 10,000 ரூபாய் நிதி உதவி அளிப்பது என்று அறிவிக்கப்பட்ட திட்டத்தின் கீழ் சென்ற ஆண்டு கிட்டத்தட்ட 1,000 அரசு அலுவலாளர்கள் ஒவ்வொரு குடும்பத்திற்கும் 10,000 ரூபாய் நாம் நிதி உதவி செய்து இருக்கிறோம். அந்த குடும்பங்களின் பாதுகாப்பிற்காக, அந்த 1,000 பேரில் காவல் துறையினர் 208 பேர் என்பதை தான் இங்கே தெரிவிப்பேன். இந்தச் திட்டம் அறிவிக்கப்படுவதற்கு முன்பு, அவர்களில் ஒவ்வொரு ஆண்டும் 200 பேர் 300 பேர் இறந்து விட்டிருக்கிறார்கள் என்றாலும் அப்போதெல்லாம் அந்தக் குடும்பங்கள் திக்குத் தெரியாமல்தான் நின்று கொண்டு இருந்தன. ஆனால், இந்தத் திட்டத்தின்கீழ் காவல் துறையிலே உள்ள குடும்பத்தினர் மட்டுமே 203 குடும்பத்தினர் சென்ற ஆண்டு

பயனடைந்திருக்கிறார்கள் அந்த ஊழியர்கள் மறைவிற்குப் பிறகு என்ற செய்தியை இந்த அவைக்குத் தெரிவிப்பதும் என்னுடைய கடமையாகும். நான் இந்தத்துறை பொறுப்பேற்றுக் கொண்டதும் போலீசாரின் நலன்கள், போலீசார் மேலும் தீவிரமான பணியாற்றுவதற்காக இந்தத் துறைக்கென தனியாக ஒரு 'போலீஸ் கமிஷன்' அமைக்கப்பட்டு, அது 133 சிபார்சுகளை அரசுக்கு செய்தது. அந்த 133 சிபார்சுகளில் 116 சிபார்சுகளை அரசு ஏற்றுக்கொண்டது. அவற்றில் இப்போது 41 சிபார்சுகள் நிறைவேற்றப்பட்டு விட்டன. மற்ற சிபார்சுகளும் படிப்படியாக நிறைவேற்றப்படும் என்பதை நான் அறிவிக்கிறேன்.

எல்லா சிபார்சுகளுக்கும் ஆகும் தொடர் செலவு ரூ. 2 கோடியே 81 லட்சம். தொடரா செலவு 6 கோடி என்கிற அளவுக்கு இருக்கும். இப்போது ஏற்றுக்கொண்டு இருக்கிற 41 சிபார்சுகளுக்கும் ஆகிற தொடர் செலவு 93 லட்சத்து 67 ஆயிரம் ரூபாய். தொடராச் செலவு ரூ. 18 லட்சத்து 5 ஆயிரம் என்பதையும் நான் இங்கே கூறிக்கொள்கிறேன்.

காவலர்களுக்கு தினப்படி, அவர்களின் உணவுப்படி இவைகளெல்லாம் ஏதோ ஹைதர் காலத்தில் இருந்ததைப் போல் இருக்கிறது என்று நண்பர் செழியனோ யாரோ சொன்னதாக நினைவு. அப்படி ஒன்றும் இல்லை. அவர்களுக்கு அந்தப்படிகள் எல்லாம் உயர்த்திக் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. தினப்படி காவலர்களுக்கு 1.75 ஆக இருந்தது. இப்போது 3 ரூபாயாக உயர்த்தப்பட்டு இருக்கிறது. அதைப்போலவே பாதுகாப்பிற்காக செல்கிற இடங்களில் உணவு செலவிற்காக அவர்களுக்கு 2 ரூ. 2.25 என்று முன்பு வழங்கப்பட்டது இப்போது ரூ. 4.50 காசு என்கிற அளவுக்கு உயர்த்தப்பட்டு இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

வீட்டு வாடகைப் படியைப் பொறுத்தவரையில் கூட அவர்களுக்கு போதுமானதாக இல்லை என்ற குறைபாட்டை ஆளும் கட்சி சார்பில் பேசிய ஒரு நண்பர் இங்கே குறிப்பிட்டார்கள். வீட்டு வாடகைப்படி நகர்புறத்தில் இருக்கிறபோது, இன்ஸ்பெக்டருக்கு 80 ரூ. என்றும், வெளியூர் சென்றால் இல்லை. இது 1970-க்கு முன்பு இருந்த நிலைமை. இப்போது ஒரு இன்ஸ்பெக்டர் நகர்ப்புறத்தில் இருந்தால் வீட்டு வாடகைப்படி 1970-ல் 80 ரூ.க்கு பதிலாக 150 ரூ. வெளியூரில் இருந்தால் 100 ரூபாய் என்றும் உயர்த்தியிருக்கிறோம்.





எஸ்.ஐ.-க்கு நகர் புறத்தில் இருந்தால் முன்பு 60 ரூ. இப்போது நகர் புறத்தில் வீட்டு வாடகைப்படி 100 ரூ. வெளியூரில் இருந்தால் முன்பு எஸ்.ஐ.-க்கு 50 ரூ. இப்போது 80 ரூபாய் என்று உயர்த்தியிருக்கிறோம்.

தலைமைக் காவலர்களுக்கு நகர் புறத்தில் இருந்தால் முன்பு 20 ரூபாய். இப்போது 40 ரூபாய். வெளியூரில் இருந்தால் முன்பு 20 ரூபாய் இப்போது 30 ரூபாய் என்றும் மாற்றியிருக்கிறோம்.

(பிற்பகல் 1-00)

புதிதாக ஏற்படுத்திய முதல் நிலை காவலர்களுக்கு வீட்டு வாடகைப்படி நகர் புறத்தில் இருந்தால் 40 ரூபாய் என்றும் வெளியூர்களில் இருந்தால் 30 ரூபாய் என்றும் அளித்து, இரண்டாம் நிலை காவலர்களுக்கு நகர் புறமாக இருந்தால் 14 ரூபாய், வெளியூரில் இருந்தாலும் 14 ரூபாய் என்று இருந்தது. அதை இப்போது நாம் நகர் புறத்தில் இருந்தால் 30 ரூபாய் என்றும், வெளியூர்களில் இருந்தால் 25 ரூபாய் என்றும் மாற்றியமைத்திருக்கிறோம்.

ஆக, இந்த வகையிலேயெல்லாம் அவர்களுடைய கஷ்டங்களுக்கேற்ற வகையில் நம்முடைய அரசு நிதி ஆதாரத்தையும் மனதில் வைத்துக்கொண்டு முடிந்த அளவிற்கு உதவிகளைச் செய்த காரணத்தினாலும், நவீன கருவிகளை அவர்களுக்கு வாங்கித் தருகிற காரணத்தினாலும் காவல் துறைக்கு 13 கோடி ரூபாயாக இருந்த செலவு இன்றைக்கு 25 கோடியைத் தாண்டியிருக்கிறது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஆண்டுதோறும் காவலர்களை ஊக்கப்படுத்த, உற்சாகப்படுத்த, அவர்களுடைய வீரச் செயல்களைப் பாராட்ட அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15-ம் நாள் அன்று முதலமைச்சர் வழங்குகிற பதக்கங்கள் என்ற வகையில் விழா ஏற்பாடு செய்யப்பட்டு, வெறும் பதக்கங்கள் வழங்குவது மாத்திரமல்லாமல், சிறப்புப் பணி புரிந்த காவலர்களாக இருந்தால் அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஆயிரம் ரூபாயும், சப்-இன்ஸ்பெக்டர்கள், இன்ஸ்பெக்டர்களுக்கு இரண்டாயிரம் ரூபாயும், காவல் துறை டெபுடி சூப்பிரண்டுகளுக்கு 3 ஆயிரம் ரூபாயும், வீரச் செயல்கள் புரிந்தவர்களாக இருந்தால் அவர்கள் எந்தப் பதவியில் இருந்தாலும் 3 ஆயிரம் ரூபாயும் அண்ணா பிறந்த நாளன்று, செப்டம்பர் 15-ம் தேதியன்று பதக்கத்தோடு அவர்களுக்கு வழங்கப்படுகிறது.

இந்த வகையில் 1969-லிருந்து 1974 வரையில் 23 பேர் வீரப் பதக்கம் பெற்றிருக்கிறார்கள். 129 பேர் சிறப்புப் பதக்கம் பெற்றிருக்கிறார்கள். டி.எஸ்.பி.யோடு நின்று விடுகிறது இந்தப் பதக்கங்கள்.

எஸ்.பி.- களுக்கும் இது வேண்டுமென்ற முறையீடும் இருந்து வருகிறது. எஸ்.பி.- களுக்குப் பதக்கம் மாத்திரம் அளிக்கப்படும் பண முடிப்பு அளிக்கப்பட மாட்டாது என்பதையும் வருகிற ஆண்டிலிருந்து எஸ்.பி.- களுக்கும் வீரப் பதக்கம் அல்லது சிறப்புப் பதக்கம்—இவைகள் அளிக்கப்படும் என்பதை நான் இந்த அவையில் அறிவிக்கிறேன்.

நம்முடைய நண்பர் திரு. செழியன் பேசும்போதும் வேறு சில நண்பர்கள் பேசுகிற நேரத்திலும், இந்த போலீசார் எந்த வழக்கையும் கண்டுபிடிக்கவில்லை, எந்த குற்றத்தையும் கண்டு பிடிக்கவில்லை, என்ன செய்கிறது இந்தப் போலீஸ் ? என்றெல்லாம் மிகுந்த ஆத்திரத்தோடு கேட்டார்கள். நான் சில விவரங்களைச் சொல்ல விரும்புகிறேன். மத்திய அரசு வெளியிடுகிற கவர்ன்மெண்ட் ஆஃப் இந்தியா தரப்பில் வெளியிடுகிற 'கிரைம்ஸ்' இன் இண்டியா' புத்தகம் 1970 ஆம் ஆண்டு வரையில் வெளியிடப்பட்டதில் இருந்து சில குறிப்புக்களை சென்ற ஆண்டு இந்த அவையில் எடுத்துக் காட்டினேன்.

அதற்கடுத்து அவர்கள் வெளியிட்டிருக்கிற புத்தகம் 'கிரைம்ஸ் இன் இண்டியா' என்பது 1971 ஆம் ஆண்டு புள்ளி விவரங்கள் ஆகும். அதுதான் இதுவரையில் நம் கைக்குக் கிடைத்திருக்கிறது. மற்ற ஆண்டுகளுக்கான அந்தப் புத்தகம் இன்னும் வரவில்லை. கடைசியாக அவர்கள் வெளியிட்ட புத்தகத்திலிருக்கிற ஆதாரங்களை வைத்துப் பார்த்தால் உண்மை தெரியும்.

உத்திரப் பிரதேசத்தில் பதிவான குற்றங்கள் 2,36,328. விசாரணையில் தண்டிக்கப்பட்ட சதவீதம் 55.38.

மராட்டியத்தில் 99,125 குற்றங்கள் பதிவானவை, தண்டிக்கப்பட்ட சதவீதம் 66.04.

பீஹாரில் 83,270 குற்றங்கள் பதிவானவை, இதில் தண்டிக்கப்பட்ட சதவீதம் 40.04.





மேற்கு வங்கத்தில் 78,546 குற்றங்கள் பதிவானவை, இதிலே தண்டிக்கப்பட்ட சதவீதம் 56.63 சதவீதம்.

இராஜஸ்தானிலே 36,743 குற்றங்கள் பதிவானவை, தண்டிக்கப்பட்ட சதவீதம் 52.93.

குஜராத்திலே 32,747 குற்றங்கள் பதிவானவை, இதிலே தண்டிக்கப்பட்ட சதவீதம் 52.81.

பஞ்சாபிலே 11,433 குற்றங்கள் பதிவானவை, தண்டிக்கப்பட்ட சதவீதம் 54.03.

மைசூரிலே 36,557 குற்றங்கள் பதிவானவை, தண்டிக்கப்பட்ட சதவீதம் 54.03.

கேரளாவிலே 29,712 குற்றங்கள் பதிவானவை, தண்டிக்கப்பட்ட சதவீதம் 37.15 ஆகும்.

ஆந்திராவில் மொத்த குற்றங்கள் பதிவானவை 46,390, தண்டிக்கப்பட்ட சதவீதம் 82.08.

தமிழ்நாட்டில் 59,616 குற்றங்கள் பதிவானவை. இதிலே தண்டிக்கப்பட்ட சதவீதம் 82.08.

ஆக, இந்த இரண்டு மாநிலங்களில்தான் தமிழ்நாட்டிலும், ஆந்திராவிலும்தான் குற்றங்கள் விசாரணைக்குப் பிறகு அதிக சதவிகிதம் தண்டிக்கப்பட்டிருக்கின்றனர். என்ன செய்கிறார்கள் போலீசார் என்று திரு. செழியன் அவர்கள் கேட்டார்களே; இதைத்தான் அவர்கள் செய்கிறார்கள் என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்வேன்.

திரு. கோவை செழியன்: தலைவரவர்களே, நான் நம்முடைய தமிழகப் போலீசின் திறமையை என்றைக்கும் குறை சொல்லவில்லை. இங்கே அரசியல் சம்பந்தமாக, என் மாதிரி அரசியல் வாதிகள் சொல்கிற குற்றச்சாட்டுகள் இன்னமும் இந்த மாதிரியான குற்றங்கள் கண்டு பிடிக்கப்படவில்லை என்பதுதான். உதாரணத்திற்குச் சொல்கிறேன். என் வீட்டில் 4 ஆயிரம் ரூபாய் பெறுமான பொருள் திருடு போய் விட்டது. அது இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை. வெங்கா விவகாரம், சுகுமாரன் கொலை போன்றவைகளில் குற்றவாளிகளை ஏன் கண்டு பிடிக்கவில்லையென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

[1975 ஏப்ரல் 3

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): தலைவரவர்களே, அவர் வீட்டுக்கு யார் யார் வந்தார்கள் என்று யோசனை செய்து பார்த்துச் சொல்லட்டும்.

திரு. கோவை செழியன்: திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களும் போன வாரம் வந்தார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, நான் மற்ற மாநிலங்களோடு ஒப்பிடுகிற நேரத்தில் மத்திய அரசினுடைய அந்த ஆண்டு அறிக்கையைத்தான் படித்தேன். நம்முடைய மாநிலத்தில் எவ்வளவு குற்றங்கள் பதிவாகியிருக்கின்றன, எந்த அளவிற்குத் தண்டிக்கப்பட்டார்கள் என்ற இந்த எண்ணிக்கை விவரங்கள் மத்திய அரசின் தகவல்தான். அதைத்தான் நான் படித்தேன். திரு. செழியன் கூறிய விவகாரங்களைப் பற்றி நான் பிறகுச் சொல்கிறேன். அவர்கள் 60 சதவீதம் வழக்குகளில் 51 சதவீதம் வழக்குகள் அரசியல் வழக்குகள் என்று எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் என்ன கணக்குப் போட்டுச் சொன்னார்கள் என்று தெரியாது. அவர் சொன்னதை விளக்குவதற்கு அவருக்கு நேரம் இருக்காது. அவர் தனியாக ஒரு நாள் சந்தித்து விளக்கினால் நானும் புரிந்துகொள்ள ஏதுவாக இருக்கும்.

இதைப் போலவே கொலை வழக்குகள் என்று எடுத்துக் கொண்டால்கூட பெரிய மாநிலமான உத்திரப் பிரதேசத்தில் 41 சதவீதம் தான் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். நான் ஏற்கெனவே சொன்ன மாநிலங்களின் பட்டியலைப் பார்த்தால், அவைகளைத் திரும்ப நான் படிக்க விரும்பவில்லை—தமிழ்நாட்டில் தான் 61 சதவீதம் கொலைக் குற்றங்களில் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற புள்ளி விவரத்தை இந்தப் புத்தகத்தில் நாம் காண முடியும்.

இதைப் போலவே கொள்ளை என்று எடுத்துக் கொண்டால், பெரிய மாநிலமான உத்திரப் பிரதேசத்தில் 1971 ஆம் ஆண்டு பதிவான குற்றங்கள் 6,004. இதிலே 34 சதவீதம் தான் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள்.

பீஹாரில் 2,015 கொள்ளை குற்றங்கள் பதிவானவை. இதிலே தண்டிக்கப்பட்டவர்கள் 44 சதவீதம்.



1975 ஏப்ரல் 3] [டாக்டர் மு. கருணாநிதி]

ஆனால் தமிழ்நாட்டில் கொள்ளை என்ற வகையில் பதிவான குற்றங்கள் 22. இதிலே 57 சதவீதம் பேர்கள் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள்.

வழிப்பறி என்று எடுத்துக் கொண்டால், உத்திரப் பிரதேசத்தில் பதிவான குற்றங்கள் 10,049, இதிலே 48 சதவீதம் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் பதிவான குற்றங்கள் 124, இதிலே 68.54 சதவீதம் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள்.

தீண்டாமை ஒழிப்புச் சட்ட குற்றங்களைப் பற்றி இங்கு சில உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். திரு. கே. டி. கே. அவர்களும் இதுபற்றி எடுத்துச் சொன்னார்கள். தீண்டாமை ஒழிப்புக் குற்றங்கள் எவ்வளவு கடுமையாகப் பாவிக்க வேண்டும் என்பதில் இந்த அரசு எப்போதும் பின் வாங்காது என்பதை நான் அடிக்கடி எடுத்துக் காட்டியிருக்கிறேன்.

1967 ஆம் ஆண்டு 134 குற்றங்கள் பதிவாகி அதிலே கோர்ட்டில் 129 குற்றங்கள் தாக்கல் செய்யப்பட்டு 94 குற்றங்கள் தான் தண்டிக்கப்பட்டிருக்கின்றன.

1968-ல் 37 குற்றங்கள் பதிவாகி, 37 கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டு, 19 குற்றங்கள் தான் தண்டிக்கப்பட்டன.

1972, 1973, 1974 ஆகிய இந்த 3 ஆண்டுகளை கணக்குப் பார்த்தால் 1972 இல் பதிவான குற்றங்கள் 882, இதிலே கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டது 872, இதிலே தண்டிக்கப்பட்டது 590.

1973 இல் 1,633 குற்றங்கள் பதிவாகி, 1,628 குற்றங்கள் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டு, 1,117 குற்றங்கள் தண்டிக்கப்பட்டன.

1974 இல் 954 பதிவாகி, 911 கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டு, 516 இதிலே தண்டிக்கப்பட்டிருக்கின்றன.

மேலும் கடுமையாக இதிலே இருக்க வேண்டுமென்று போலீசார் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். ஆணையிடப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் நான் இந்த அவைக்குத் தெரிவிப்பேன்.

சில முக்கிய வழக்குகளில் நம்முடைய காவலர்கள் எவ்வளவு திறமையைக் காட்டியிருக்கிறார்கள் என்பதையெல்லாம் திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் நம் நண்பர் சுப்பிரமணியம் அவர்களும் இங்கே பேசிய வேறு சிலரும் அவர்களே சென்று போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கிற கண் காட்சியைப் பார்வையிட்டோம், அது ஒரு கோணம், இன்னொரு கோணம் இருக்கிறது என்று வாதிட்டார்கள். அவர்களுடைய வாதத்தை நான் மறுக்கவில்லை. பொதுவாகவே போலீஸ் அதிகாரிகள் 45 ஆயிரம் பேரில் அத்தனை பேருமே நல்லவர்கள் என்று வாதிடுவதற்கு நான் எழுந்து நிற்கவில்லை. ஆங்காங்கு சில குறைபாடுகள் இருக்கின்றன.

ஆளும் கட்சியின் சார்பில் பேசியவர்களும் எடுத்துச் சொன்னார்கள். தோழமைக் கட்சியின் சார்பில் பேசியவர்களும் எடுத்துச் சொன்னார்கள். எதிர்க்கட்சியின் சார்பில் பேசியவர்களும் எடுத்துச் சொன்னார்கள். ஆகவே போலீசார் ஒரு தலைப் பட்சமாக இருக்கிறார்கள் என்பதற்கு இடமில்லாத வகையில் இந்த மன்றத்திலே இருக்கின்ற ஆளும் கட்சி, எதிர்க் கட்சி, தோழமைக் கட்சி அத்தனை பேருமே அவரவருக்குள்ள குறைபாடுகளை, அவர்களுடையப் பகுதியில் நடைபெற்ற சம்பவங்களை எடுத்துக் கூறியதிலிருந்து, போலீசார் ஆளும் கட்சிக்குத் தான் சார்புடையவர்களாக இருக்கிறார்கள் என்ற அந்த வாதம் அடிபட்டுப் போகிறது என்பதை மாத்திரம் நான் குறிப்பிடாமல் இருக்க முடியாது.

இதையெல்லாம் மீறி, காவல் துறையில் இருக்கிற நல்ல திறமையாளர்கள், விஷ ஊசிக் கொலை வழக்கு போன்ற வழக்குகளை எந்த அளவுக்குக் கண்டு பிடித்தார்கள் என்பதையும், அதை இன்றைக்கு அனைத்து இந்தியாவில் இருக்கின்ற அனைவரும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும், ஏன் உடனடியாக ஒவ்வொரு வழக்கையும் கண்டுபிடிக்கவில்லை என்று வாதிடுகின்றவர்களுக்கு பதிலாக சொல்ல விரும்புகிறேன். 19—12—1970-ல் ஒருவர் இறந்தார், இந்த விஷ ஊசி சம்பந்தமாக, அதற்குப் பிறகு மார்ச் 1971-ல் இன்னொருவர் இறந்தார். பிறகு 1971 ஜூன் மாதத்தில் இன்னொருவர் இறந்தார். பிறகு 9—10—1971-ல் இன்னொருவர் இறந்தார். பிறகு 7—1—1972-ல்



இன்னொருவர் இறந்தார். 24—6—1972-ல் இன்னொருவர் இறந்தார். கடைசியாக 26—10—1972-லே இறந்து போன கீழக்கரையைச் சேர்ந்த தைக்கா தம்பியின் மாமனார், சென்னை ஏழுகிணறு காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் தான் புலன் விசாரணையே ஆரம்பமாகியது. ஆக, 1970-ல் நடைபெற்ற கொலை சம்பவங்கள், 1972 வரையில் புலன் விசாரணைக்கு ஆளாகாமல் அவ்வளவு மர்மமாக நடைபெற்றது. ஆயினும், நம் திறமை மிக்க காவல் துறையினர் இந்தக் கொலையைக் கண்டுபிடித்து, கொலையில் ஈடுபட்டவர்களுக்கெல்லாம் தண்டனையை வாங்கித் தந்திருப்பதை நான் மீண்டும் மீண்டும் இந்த அவைக்கு ஞாபகப்படுத்த வேண்டிய அவசியமில்லை. இதை எதிர்க்கட்சி உறுப்பினர்கள்கூடப் பாராட்டியிருக்கிறார்கள். ஆகவே நான் அதை மீண்டும் இங்கே விளக்க விரும்பவில்லை.

அதைப்போலவே நீங்கள் கமிஷனர் அலுவலகத்திற்குச் சென்ற போது டெலிவிஷனில் ஒன்றைப் பார்த்திருக்கலாம். அதிலே ஒரு தனவந்தரை எப்படிக் கொன்று எந்தப் பொருளும் இல்லாமல் ஏமாந்தார்கள் அந்தத் திருடர்கள் என்பதையும் அவர்கள் எவ்வளவு இளம் வயது படைத்தவர்கள் என்பதையெல்லாம் பார்க்கும்போது, இந்தச் சமுதாயத்தில் அப்படிப்பட்டவர்களையெல்லாம் திருத்துவதற்கு எவ்வளவு பெரிய பிரச்சாரம் தேவைப்படுகிறது என்பதைத் தான் நாமெல்லாம் மிகுந்த வேதனையோடு எண்ணிப் பார்க்க வேண்டியிருக்கிறது.

சமுதாயத்திலிருக்கிற பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் தான் இப்படிப்பட்டக் காரியங்களுக்குக் காரணமாக ஆகின்றன என்பதை நான் மறக்கவில்லை. ஆனால், அதே நேரத்தில் அவைகளுக்கு இது தான் மார்க்கமா என்கின்ற அந்தக் கேள்விக்கும் நாம் விடை கண்டாக வேண்டும். மிகச் சாதாரண வாலிபர்கள், சின்னஞ் சிறியவர்கள், அவர்கள் எப்படி அந்தக் கொலையைச் செய்தார்கள் என்பதைக் கமிஷனர் அலுவலகத்தில் மறுபடியும் காட்சியாக ஆக்கிக் காட்டியிருக்கிறார்கள். அதை டெலிவிஷனில் கமிஷனர் அலுவலகத்தில் நான் சென்று பார்த்தேன், எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் பார்த்திருப்பார்கள் என்று நம்புகிறேன். அந்த வழக்கை மிகத் திறமையாக நம் காவல்துறையினர் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

[டாக்டர் மு. கருணாநிதி] [1975 ஏப்ரல் 3

அதைப் போலவே ஒரு அகில உலக ஏமாற்றுக்காரன்—பாஸ்போர்ட்டை வைத்துக்கொண்டு ஏமாற்றியவன் ஜெர்ரி லாய்டு என்பவன் சென்னையில் உள்ள ஒரு ஓட்டலில் தங்கி, தொடர்ந்து இந்த ஏமாற்று வேலையைச் செய்து கொண்டிருந்தான். நம்முடைய காவல்துறையினரால் பிடிக்கப்பட்டு, அவன்மீது வழக்கு தொடரப்பட்டிருப்பதை அனைவரும் அறிவோம்.

முத்திரைத் தாள் வழக்கு என்ற வழக்கில் திறமையாக முத்திரைத் தாளை அச்சிட்டு, விற்பனை செய்து கொண்டிருந்தவர்களை நம் காவல்துறையினர் அவர்களுக்குக் கிடைத்த தகவலின் பேரில் சென்னை நகரிலுள்ள அண்ணா நகரில் உள்ள ஒரு பங்களாவை சோதனை செய்ததில் இந்தக் கள்ள வில்லைகளெல்லாம் கண்டுபிடிக்கப்பட்டு, 15 பேருக்கு மேல் கைது செய்யப்பட்டு, ரூபாய் 1,17,165 மதிப்புள்ள நீதிமன்ற 5 ரூபாய் கள்ள வில்லைகளும், 1 ரூபாய் கள்ள வில்லைகளும் கைப்பற்றப் பட்டிருக்கின்றன. வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இது நம்முடைய காவல்துறை திறமைக்கு ஒரு சான்றாகும்.

அதைப் போலவே இன்னொரு கொள்ளை. கடந்த 4, 5 ஆண்டு காலத்தில் சென்னை மாநகரத்தில் 5-ஆயிரம் ரூபாய் களவு போய் விட்டது, 10-ஆயிரம் ரூபாய் காணாமல் போய்விட்டது என்றெல்லாம் செய்தி வந்து கொண்டிருந்தது. இப்பொழுது செழியன் கூட 4-ஆயிரம் ரூபாய் வீட்டிலே காணாமல் போய் விட்டது என்று சொன்னார். அதைப் பற்றி விசாரிக்க வேண்டும்.

**திரு. கோவை செழியன்:** 4-ஆயிரம் ரூபாய் பெறுமான பாத்திரங்கள் திருட்டுப் போய் விட்டது என்று ஏற்கனவே நான் போலீசுக்கு ரிப்போர்ட் செய்திருக்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** செழியன் போலீசுக்கு ரிப்போர்ட் செய்கின்ற நேரத்தில் எல்லாம் அது கவனிக்கப் படுகிறது. ஒரு முறை அவர் ஏதோ பயங்கரமான டெலிபோன்கள் எல்லாம் வருவதாகச் சொன்னவுடன் அவருடைய வீட்டைச் சுற்றி போலீஸ் காவலே போடப்பட்டிருந்தது. அவருக்கே தெரியும். ஒரு மணி நேரத்திற்கு ஒரு முறை அவர் வீட்டைச் சுற்றி போலீஸ் ஜீப் ரோந்து போய் கொண்டிருந்தது. ஆகவே செழியன் அல்ல, யார் தனக்கு ஆபத்து என்று எந்த எதிர்க்கட்சி உறுப்பினராக இருந்தாலும், ஆளும் கட்சி, தோழமைக் கட்சி உறுப்பினர் யாராக இருந்தாலும் சரி, அப்படிப்பட்ட அறிவிப்பு



1975 ஏப்ரல் 3] [டாக்டர் மு. கருணாநிதி]

கள் வருமானால் உடனடியாக அது கவனிக்கப்படுகிறது. செழியன் அவர்கள் தனக்கு டெலிபோன் மூலம் ஆபத்து என்ற அறிவிப்பு வருகிறது என்ற சொன்னவுடன், 2 காவலர்கள் போடப்பட்டார்கள். 2, 3 நாள் வரையில் அவர் வீட்டிற்கு முன்னால் காவல் இருந்தது. அவர் வீட்டைச் சுற்றி ஒரு மணி நேரத்திற்கு ஒரு முறை ஒரு ஜீப் ரோந்து சுற்றிக் கொண்டிருந்தது. ஆகவே, தகுந்தப் பாதுகாப்பு அனைவருக்கும் அளிக்கப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனந்தநாயகி அம்மையாருக்குக் கூட.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** அனந்தநாயகி அம்மையாருக்கு . . . இப்படி தொடர்கதை தான்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** பழைய கதை; அப்போதே முடிந்துவிட்டது. புதிய தொடர்கதை என்று நீங்கள் ஆரம்பிக்கப் போகிறீர்கள் . . .

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** அனந்தநாயகி, செழியன் இப்படி எல்லோருக்கும் நடந்தது. தொடர் கதை என்று சொன்னேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இப்படி ரூ. 5 ஆயிரம் காணாமல் போய்விட்டது, ரூ. 10 ஆயிரம் காணாமல் போய்விட்டது என்ற தகவல் வந்தது. நான்கைந்து ஆண்டு காலமாக சென்னை நகரில் திருட்டைப் பற்றி தகவல் வந்துகொண்டே இருந்தது. அதை நம்முடைய காவல் துறையினர் ஒரு அறைகூவலாக ஏற்றுக் கொண்டார்கள். இறுதியாக நகரத்திலுள்ள கிரீன்வேஸ் சாலைக்கு அருகாமையில் உள்ள ஒரு இல்லத்தில் நடைபெற்ற ஒரு களவின் தொடர்பாக நம்முடைய போலீசார் 2 பேரை சென்னையிலுள்ள ஒரு விடுதியில் கைது செய்தார்கள். அந்த 2 பேரும் கல்கத்தாவைச் சேர்ந்த வாலிபர்கள். அவர்களிடத்தில் 75 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள பொருள்களும் அதற்கு முன்பு களவாடப்பட்ட நகைகளும் இருந்தன. அவைகள் மீட்கப் பட்டன. அந்தக் கொள்ளைக் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் எல்லாம் பிடிபட்டதன் மூலம் இதுவரையில் 2½ லட்சம் மதிப் புள்ள பொருள்கள் கைப்பற்றப் பட்டிருக்கின்றன. இங்கிருந்து நம் காவல் துறையினர் கல்கத்தா சென்று, அங்கே நம்

அதிகாரிகள் மாறு வேடத்தில் அலைந்து திரிந்து, அந்தக் குற்ற வாளிகளை யெல்லாம் கண்டுபிடித்து மிகத் திறமையோடு இந்தப் பணியைச் செய்து முடித்திருக்கிறார்கள்.

இன்னொன்று, நண்பர் செழியன் குறிப்பிட்டார். சிலை காணாமல் போன விஷயம், தஞ்சையில். அது சிவபுரம் சிலையா என்று கேட்டேன். அவர் விவரம் தரவில்லை. நான் விவரத்தை தெரிந்து கொண்டேன். சிவபுரம் சிலை காணாமல் போனது நீண்ட நாளைக்கு முன்பு. அதனுடைய விவரங்கள் வேண்டுமானால் மறுபடியும் வருகிற நேரத்தில் சொல்லுகிறேன். இந்தச் சிலையைப் பொறுத்த வரையில் தாமஸ் நாடார் . . .

**திரு. கே. டி. கே. தங்கமணி:** கல்கத்தா சென்று கண்டு பிடித்ததாகச் சொன்னார்கள். அப்படிக் கண்டுபிடிப்பதற்கு முதலில் யாரோ--எஸ்.ஐ.-யோ யாரோ—ஒரு அதிகாரி கண்டு பிடித்திருக்க வேண்டும். அதற்கு முக்கியமான பொறுப்பாக இருந்தவர், முதலில் கண்டு பிடித்தவர் அந்த அதிகாரி யார் என்று தெரியுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அந்த அதிகாரியின் பெயர் எனக்குத் தெரியவில்லை. ஆனால் அந்த அதிகாரியின் பெயரை அண்ணா பதக்கம் வழங்கப்படுகின்ற நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் கே. டி. கே. தங்கமணி கூறியதை நினைவில் வைத்துக் கொள்வோம் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

தாமஸ் நாடார் என்பவரைப் பற்றிச் சொன்னார். இந்த சிலை வழக்கில் 2, 3 முறை அவர் ஈடுபடுத்தப்பட்டு, விடுதலையும் ஆகி யிருக்கிறார். இப்பொழுது தஞ்சைப் பெரிய கோவிலில் இருந்து பிரதோஷ நாயகர் சிலைத் திருட்டுச் சம்பந்தமாகக் குற்ற எண். 766/73-ல் தஞ்சாவூரில் பதிவு செய்யப்பட்டு, தஞ்சை காவல் துறையினரின் விசாரணையில் அது இருந்தது. அந்த விசாரணையில் புலன் ஏதும் கிடைக்கவில்லை. பிறகு அரசு இந்த வழக்கை சி.ஐ.டி. போலீசார் மூலம் விசாரிக்க வேண்டுமென்று கேட்டு, ஐ.ஜி. அவர்களுடைய உத்திரவின் பேரில் தமிழ் நாடு குற்றப் புலனாய்வுத் துறையினர், பெரிய கோவிலில் நடந்த பிரதோஷ நாயகர் சிலைத் திருட்டு வழக்கு விசாரணையை 3—1—1975 நாள் அன்று மேற்கொண்டார்கள். விசாரணையை சிறப்பாகச் செய்த குற்றப் புலனாய்வுத் துறையினர் துரைசாமி



என்கின்ற சப்போய்மாஸ்டர்-ஐ 24—2—1975 அன்றும், அவருக்குத் துணையாக இருந்த சேலத்தைச் சேர்ந்த ராமகிருஷ்ணன் என்பவரை 20—3—1975 அன்றும் கைது செய்தார்கள். துரைசாமி, மற்றும் ராமகிருஷ்ணன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் பேரில் அம்மாப்பேட்டை காவல் நிலைய குற்ற எண். 70/75-ஆக 25—2—1975 அன்று பதிவு செய்து, அது சம்பந்தப்பட்ட கம்பயா நத்தம் பெருமாள்கோவில் செல்வர் சிலையைக் கைப்பற்றினார்கள் மேலத் தஞ்சை காவல் நிலைய குற்ற எண். 459/73-ஐ 30—3—1975 அன்று பதிவு செய்து, அது சம்பந்தப்பட்ட தீபநாச்சியார் சிலையை —சுமார் 10 ஆயிரம் மதிப்புள்ளது—அதனைக் கைப்பற்றினார்கள். இவ்விருவர் வாக்குமூலத்தின் பேரில் கூகூர் சிவன் கோவிலில் இருந்த ஒரு சிலை களவாடியதாகக் கிடைத்த புலன் பேரில் நாச்சி யார்கோவில் காவல் நிலைய குற்ற எண். 89/75 ஆக 8—3—1975-ம் தேதி பதிவுச் செய்யப்பட்டு, அதில் சம்பந்தப்பட்ட சில எதிரிகள் தாமஸ் நாடாருக்கு விற்றதாக தகவல் கூற, அதன் பேரில் தாமஸ் நாடார் 8—3—1975-லிருந்து தேடப்பட்டு வருகிறார். அவர் தலைமறைவாக இருக்கிறார். அவரைக் கண்டுபிடித்து சிலையைக் கைப்பற்ற மேல் நடவடிக்கை எடுக்க முயற்சி நடைபெறுகிறது. மேற்கொண்டு தகவல்கள் இருக்குமானால்—நம்முடைய செழியன் தவறாக எடுத்துக்கொள்ளாமல்—அவர் எங்கேயிருக்கிறார் என்ற தகவலைச் சொல்லுவார்களானால் உதவியாக இருக்கும்---தாமஸ் நாடாரை நான் கூடப் பார்த்திருக்கிறேன். பார்த்தவுடனே அடையாளம் தெரிந்து விடும்—ஆகவே செழியன் மாத்திரமல்ல, யார் வேண்டுமானாலும் அவரைப் பார்த்தவுடன் அவர் இன்ன இடத்தில் இருக்கிறார் என்று போலீசுக்குத் தகவல் தந்து உதவி செய்வார்களானால், நன்றாக இருக்கும்.

**திரு. கோவை செழியன்:** தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்வதைப் பார்த்தால், தாமஸ் நாடாரைப் பற்றிய விவரங்களை எல்லாம் நான் தெரிந்து வைத்திருப்பதைப்போலவும், அவர் எங்கே இருக்கிறார் என்பதை நான் தெரிந்து வைத்திருப்பதைப் போலவும் சொல்கிறார்கள். என்னைப் போன்ற எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசும்போது பல கருத்துக்களை ஆதாரமாகக் காட்டுகிறோம். எங்களுக்குப் பல ஆதாரங்களைக் கொடுக்கிறார்கள். அதை வைத்துப் பேசுகிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவரைப் பார்த்திருக் கிறார்கள். நான் பார்த்தது கூடக் கிடையாது. மைலாப்பூர்

ஓட்டலில் அவரும் மற்றும் சில பெரிய மனிதர்களும் தங்கியிருந்தார்கள். அவர்கள் தங்கியிருந்த அறைக்குப் பக்கத்தில் டெல்லியிலிருந்து வந்த சி.பி.ஐ. டிப்பார்ட்மெண்டைச் சேர்ந்தவர்கள் 46 நாள் தங்கியிருந்து, இது சம்பந்தப்பட்ட விபரங்களைச் சேகரித்து இருக்கிறார்கள். அந்த டெல்லி அதிகாரிகள் தான் இந்தச் செய்தியை என்னிடம் சொன்னார்கள். யார், யார் தங்கினார்கள் என்று கேட்டால் அந்த விபரத்தைத் தர நான் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அதனால்தான் சொல்கிறேன் செழியனுக்கு இவ்வளவு விபரம் தெரிந்திருக்கிறது. தன்னுடைய வீட்டுக்குப் போன் செய்கிறார்கள் என்று உடனடியாகப் போலீசுக்கு சொன்னச் செழியன் அவர்கள், இப்படி ஒரு சிலையைத் திருடிய ஆசாமி தலைமறைவாக இருக்கிறார் என்பது தெரிந்திருக்கும்போது அதைச் செழியன் கடமை உணர்வுடன் காவல் துறைக்கு போன் செய்திருந்தால் உதவிகரமாக இருந்திருக்கும் என்பதற்காகத்தான் நான் சொன்னேன்.

**திரு. கோவை செழியன் :** தயவுசெய்து இன்னும் அப்படிச் சொல்ல வேண்டாம். அது வேறு பக்கம் திருப்பி விட்டுவிடும். இது எப்போதோ நடந்தது. பல மாதங்களுக்கு முன்னால் நடைபெற்றது. அப்போது எனக்குத் தெரியாது. இந்த மானியத்தின் மீது பேசுவதற்காக 2, 3 நாட்களுக்கு முன்னால் செய்திச் சொன்னார்கள். அப்போதே தெரிந்திருந்தால், ஐ.ஜி. என்ன, கமிஷனர் என்ன, முதலமைச்சரிடமே சொல்லியிருப்பேன். அவர் முதலமைச்சர் மட்டுமல்ல ; என்னுடைய நண்பரும் கூட. அவரிடம் சொல்லி, இதைச் செய்யுங்கள் என்று கூடச் சொல்லியிருப்பேன். ஆனால் இந்தச் செய்தி 2, 3 நாட்களுக்கு முன்னால்தான் தெரிய வந்தது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இன்னும் அவர் என்னை நண்பராக வைத்துக் கொண்டிருப்பதற்காக நன்றி கூறிக் கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** பொதுவாக இந்த இரண்டு வருஷகாலமாக இந்த மன்றத்திலே பல சிலைகள் திருட்டுச் சம்பந்தமாகக் கேள்விகள் போடப்பட்டிருக்கின்றன. சில திருட்டைப் பார்க்கும்போது, சிலைகளைத் திருடி யாரோ கையில் வைத்துக் கொண்டிருப்பது மாதிரி செய்தி வருகிறது. அவர்கள்





தான் சிலைத் திருட்டுக்கு ஏற்பாடு செய்கிறவர்கள். அப்படியானால் அந்தத் திருட்டுக்கு உடந்தையாக இருந்தார்கள் என்பதோடு, " not only receivers of the property but also abettors ".

என்ற முறையில் வந்தால் திருட்டுக் குறையும். அந்த மாதிரிப் போலீசார் செய்ய வேண்டுமென்று ஏதாவது தாக்கீது அனுப்பப் பட்டிருக்கிறதா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** சூழ்நிலையைப் பொறுத்து, சம்பவங்களைப் பார்த்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்னும் தீவிரமாக இதிலே போலீசார் இருக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. சிலைகள் வெளிநாடுகளுக்குச் செல்வதைத் தடுக்கின்ற வகையில் வெளிநாடுகளுக்கு நம்முடைய தலைமை காவல்துறை அதிகாரி ஐ.ஜி. அவர்கள் இந்தியாவின் சார்பில் சென்றிருக்கிறார்கள். அவர்கள் இன்டர்போலில் அதன் துணைத் தலைவர்களில் ஒருவராகவும் இருக்கிறார்கள். இதுபற்றி அங்கே எடுத்துச் சொல்லப் பட்டிருக்கிறது. வெளிநாடுகளுக்கு இப்படிப்பட்ட சிலைகள் அதிகமாக ஏற்றுமதியாவதற்குக் காரணம், அங்கே கிராக்கி அதிகமாக இருக்கிறது. இந்தியாவில் இருந்தால் 5,000, 10,000 ரூபாய்தான் தரப்படும். ஆனால் வெளிநாடுகளுக்குச் செல்லும்போது லட்சக்கணக்கில், இதுபோன்ற தொன்மை வாய்ந்த சிலைகளுக்கு லட்சக்கணக்கில் மதிப்புண்டாகிறது. அதனால் இந்த அளவில் நடைபெறுகிறது. இன்டர்போலில் நம்முடைய ஐ.ஜி. அவர்கள் மிக விரிவாக எடுத்துச் சொல்லி வெளிநாடுகளுக்குக் கடத்தப்படுவதைத் தடுக்க நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறார்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சாதாரணமாகப் பல சாமான்களைத் திருடுகிறார்கள். திருடிக் கொண்டு போய் ஒரு இடத்தில் விற்கிறார்கள். திருட்டுச் சாமான்களை வாங்கியவர்கள், திருட்டுச் சாமான்கள் என்று தெரியாமல் வாங்கிவிட்டோம் என்று சொல்லி தப்பித்துக் கொள்கிறார்கள். அல்லது திருட்டுச் சாமான்கள் என்று சொல்லி கேஸ் போடலாம். இது இரண்டாவது முறை. திருடுகின்றவர்களுக்குச் சிலையின் மதிப்புத் தெரியாது. ஆனால் திருடுவதற்கு என்று ஒரு 'காங்க்' ஏற்பாடு செய்கிறார்கள். அதைக்கொண்டு, இப்படி ஏற்பாடு செய்பவர்கள் திருட்டுக்கு 'அபட்டராகிறார்' என்ற அந்த முறையில் அணுகினால் அவர்களைத்

தடுப்பதாக அமையுமே. அந்த முறையில் நடவடிக்கை எடுக்க போலீசாருக்கு ஏதாவது தாக்கீது அனுப்பப்பட்டிருக்கிறதா? போலீஸ் நடவடிக்கை எடுத்திருக்கிறதா?

**திருமதி த. ந. அனந்தநாயகி:** சிலைகளை, தொன்மை வாய்ந்தது என்பதற்காகத் திருடுகிறார்களா? இல்லை என்றால் கலை நுணுக்கம் அதிகம் உள்ளதால் திருடுகிறார்களா? இந்த இரண்டையும் பார்த்தால், கலை நுணுக்கம் அதிகம் என்பதால் திருடுகிறார்கள் என்றால், இப்படிப்பட்டச் சிலைகளை நம்முடைய சிற்பக் கூடங்களில் தயார் செய்து விற்கலாமே. அதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** கலை உணர்வுக்காகத் திருடவில்லை; விலை உயர்வுக்காகத் திருடுகிறார்கள். நாமே செய்து விற்கலாம் என்றால் வெளிநாட்டார் புதிய சிலைகளை வாங்கத் தயாராக இல்லை. இதைவிட அழகாக புதிய சிலைகளைச் செய்து கொடுத்தாலும் வாங்கத் தயாராக இல்லை. (திருமதி த. ந. அனந்த நாயகி—குறுக்கீடு). என்ன? எண்ணெய் தடவி விற்கலாமா? (சிரிப்பு). ஒரு வழக்கறிஞர் இப்படி யோசனை சொல்வது சரியல்ல. புதிய சிலைக்கு எண்ணெய் தடவி, கறுப்பாக்கி விற்கச் சொல்கிறார்கள். இது நல்ல யோசனை அல்ல. திருடி விற்கிறவர்களுக்கு வேண்டுமானால் இது பயன்படும் யோசனையாக இருக்கலாம்.

திரு. கே. டி. கே. அவர்கள் கேட்டபடி வேறு யாராவது அப்படித் திருடச் சொன்னாலும், அது நிரூபிக்கப்படுமானால் அவர்கள் மீதும் வழக்கு போடப்படுகிறது. அதிலும் போலீசார் தீவிரமாக இருக்கிறார்கள். இன்னும் தீவிரமாக இருக்க வேண்டுமென்ற அடிப்படையில் நான் போலீசாரை அழைத்துப் பேசியிருக்கிறேன்.

திரு. கே. டி. கே. அவர்கள் நடன ஆசிரியர் மலேஷிய மகாலிங்கம் மரணம் குறித்துச் சொன்னார்கள். போலீஸ் அறிக்கையில், போலீஸ் கமிஷனர் தவறான அறிக்கை கொடுத்தார்; பின் மாற்று அறிக்கை கொடுத்தார் என்று சொன்னார்கள். நான் பத்திரிகைகளை தேடச் சொன்னேன். மலேஷிய மகாலிங்கம் பற்றிய செய்தியை எடுத்துவா என்று சொன்னால் என் வீட்டிலிருந்த பையன் மலேஷிய சாம்பசிவம் கொல்லப்பட்டது



பற்றி எடுத்து வந்தான். உள்ளபடியே கே. டி. கே. அவர்கள் மலேசிய சாம்பசிவத்தப் பற்றி பேசியிருந்தால் நான் ரொம்ப மகிழ்ச்சியடைந்திருப்பேன். ஏனென்றால் மலேசியா சாம்பசிவம் மலேஷிய கணபதியோடு அங்கு உரிமைப் போராட்டத்தில் ஈடுபட்டு, கணபதி தூக்குக்குப் போன பிறகு, இந்திய அரசின் கருணை காரணமாக விடுவிக்கப்பட்டு, தமிழ்நாட்டுக்கு வந்தார். அவர் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்—அந்த எண்ணங்கள் கொண்டவர். ரொம்ப கஷ்டத்தில் இருந்தார். கஷ்டப்படும் போது எனக்குக் கடிதம் எழுதினார். நான் உடனே முதலமைச்சர் அலுர் நிதியிலிருந்து ஓரளவிற்கு உதவி செய்தேன். அதுகுறித்து திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் என்னிடம் அதைப் பாராட்டிக் கூடச் சொல்லியிருக்கிறார்கள். அவரைத் திடீரென்று ஒருநாள் வட ஆற்காடு மாவட்டத்தில் எதிரிகள் சிலபேர் கொன்று விட்டார்கள் என்று சொல்லப்பட்டது. அதைக் கேள்விப்பட்டு நான் மெத்த வருத்தப்பட்டேன். இது மலேஷிய சாம்பசிவம் விவகாரம்.

ஆனால் திரு. கே. டி. கே. சொன்னது, மலேஷிய மகாலிங்கம் விவகாரம்; இந்த விவகாரத்தில் கமிஷனர் இரண்டு முரண்பட்ட அறிக்கைகள் கொடுத்ததாகச் சொல்வது தவறாகத்தான்படுகிறது. நான் எல்லாப் பத்திரிகைகளையும் தேடிப் பார்த்தேன். அவர் 6-ந் தேதி இரவு கீழே விழுந்து இறந்தார் என்ற செய்தி பத்திரிகையில் வரும்போது, பத்திரிகைகளில் "மகாலிங்கம் கொலை" என்றுதான் தலைப்புப் போட்டார்கள். வந்த செய்தி பத்திரிகைக்குக் கமிஷனர் அப்படிச் சொன்னார் என்று வரவில்லை. பத்திரிகை செய்தி, மலேஷிய மகாலிங்கம் கொலை என்று வந்ததே தவிர கமிஷனர் சொல்லவில்லை. மகாலிங்கம் கொலை செய்யப் பட்டது பற்றி போலீஸ் கமிஷனர் ஷெணாயிடம் நிருபர்கள் கேட்டார்கள். அதற்கு கமிஷனர் சொன்னது, "பிரேதப் பரிசோதனை அறிக்கை கிடைத்த பிறகுதான் இதுபற்றி எதுவும் கூற முடியும்; அவர் உடலில் வெளிக் காயங்கள் இல்லை என்றாலும் உள் காயங்கள் இருக்கிறதா என்பது பிரேத பரிசோதனையின் போது தெரியும்" என்று கமிஷனர் கூறியிருக்கிறார்.

அதற்குப் பிறகு பிரேத பரிசோதனை நடந்தது. பிரேத பரிசோதனையில் பஞ்சாயத்தார் மேலே இருந்து கீழே விழுந்து இறந்தார் என்று—பஞ்சாயத்தில் 5 பேர் இருந்தார்கள்—சொல்லி, அந்த பிரதேப் பரிசோதனை சர்டிபிகேட்டை வைத்து முடிவு

செய்தார்கள். அந்த முடிவைத்தான் மறுபடியும் போலீஸ் கமிஷனர், மலேஷிய மகாலிங்கம் செத்தது எப்படி என்று நிருபர்கள் கேட்க, அவர்களுக்குப் பதில் அளித்திருக்கிறார்களே அல்லாமல், கொலை என்று அறிவித்துவிட்டு மறுபடியும் தற்கொலை என்று அறிவித்தார் என்று கூறுவது பொருத்தமுடையது அல்ல என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்றும் திரு. தங்கமணி அவர்கள் சொன்னார்கள். "மலேஷிய மகாலிங்கம் கொலை செய்யப்படுகிறார்; கமிஷனர் அறிவிக்கிறார் கொலை என்று. மறுநாள் தற்கொலை என்று கமிஷனர் அறிவிக்கிறார், அதற்கு மறுநாள் அவர் அடிஷனல் ஐ.ஜி. ஆகிறார்". என்று கே. டி. கே. அவர்கள் பேசியிருக்கிறார்கள். கே. டி. கே. தங்கமணி போன்றவர்கள் இப்படிப் பேசுவதுதான் எனக்கு ரொம்ப ஆச்சரியமாக இருக்கிறது. ஏனென்றால் அதற்கும் இதற்கும் எந்த சம்பந்தமும் கிடையாது. அடிஷனல் ஐ.ஜி. பதவிக்கு, ஐ.ஜி. அவர்களிடமிருந்து "பிரபோசல்" வந்து அதற்கு அரசாங்கத்தின் சார்பில் நான் கையெழுத்து போட்ட தேதி 5—8—1974. மகாலிங்கம் மாடியிலிருந்து விழுந்து இறந்தது 6—8—1974—அந்த போஸ்டுக்கு ஒப்புதல் அளிக்கப் பட்டது 5—8—1974. ஆகவே இந்த இரண்டையும் இணைத்துப் பேசுவது முறையாகாது.

(பிற்பகல் 1-30)

"இவர் எப்படி அடிஷனல் ஐ.ஜி. ஆகலாம்", செழியன் கூட வேண்டுமென்றே இதைச் செய்தீர்கள் என்றார்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** தானாகவே விழுந்து இறந்திருக்கலாம். நான்கு பேர்கள் தள்ளியும் விட்டு இறந்திருக் கலாம். தானாகவே விழுந்தார் என்றால் சூயிசைட்—நான்கு பேர்கள் தள்ளி விட்டிருப்பார்களானால் மர்டர். அந்தச் செய்தி கிடைத்தவுடன் அது பற்றி புலன் விசாரணை நடத்திக் கொண்டி ருக்கிறோம் என்று சொன்னார்கள். இப்போது அந்த கேசே டிராப் செய்யப்பட்டிருக்கிறது. எனக்கு நேரிடையாகத் தெரியாது! எனக்குக் கிடைத்த விவரங்களைச் சொன்னேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** முதலில் கொலை என்று கமிஷனர் அறிக்கை விட்டார்; பிறகு தற்கொலை என்று அறிக்கை விட்டார் என்று சொன்னதற்குத்தான் விளக்கம் தந்தேன். கொலை



என்று அறிக்கை விட்ட கமிஷனர் மறுநாள் தற்கொலை என்று அறிக்கை விட்டதும் அவருக்குப் பதவி கொடுக்கப்படுகிறதென்றால் என்ன காரணம் என்று மர்மமாகப் பேசியதற்குத் தான் நான் பதில் சொல்ல விரும்புகிறேன்.

அடிஷனல் ஐ.ஜி. பதவி நம்முடைய மாநிலத்தில் மாத்திரம் அல்ல; எல்லா மாநிலங்களிலும் இருக்கிறது. மத்திய அரசு அடிஷனல் ஐ.ஜி. பதவி ஒன்றை தமிழகத்திற்குத் தந்தது. அதை யாருக்குத் தருவது என்கிற நேரத்தில் எந்த முறைப்படி செய்யப் பட்டிருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

திரு. அருள் அவர்கள் ஐ.ஜி. யாக இருக்கிறார். அவருக்கு அடுத்ததாக இருக்கிற ஸ்டிரேசி ஐ.ஜி. (ஃபுட்செல்) என்ற பதவியில் இருக்கிறார். அதற்கடுத்த, சங்கரன் நாயர் டெல்லியில் ஐ.ஜி. பதவிக்குச் சமமான பதவியில் இருக்கிறார். அதற்கடுத்த சிங்காரவேலுவும், குப்புசாமியும் ஓய்வுபெற்று விட்டார்கள். ஆறாவதாக இருக்கிற ஆர். என். மாணிக்கம் டெல்லியில் ஐ.ஜி. பதவிக்குச் சமமான பதவியில் இருக்கிறார். ஏழாவதாக இருப்பவர் தான் ஷெனாய். ஆகவே, எல்லா வகையிலும் அந்தப் பதவிக்குத் தகுதியானவருக்குத்தான் அடிஷனல் ஐ.ஜி. என்கிற அந்தப் பதவி தரப்பட்டிருக்கிறதே அல்லாமல் எந்த முறைகேடும் இதில் நடைபெறவில்லை.

விசாரணைகளின் அறிவிப்புகள் எல்லாம் இங்கே வைக்கப் படவில்லை, வைக்கப்பட்ட அறிவிப்புகளின் மீதும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று திருமதி அனந்தநாயகி அம்மையார் இங்கே குறிப்பிட்டார். பெரியகுப்பம் நிகழ்ச்சி பற்றி ஏன் அறிக்கை வைக்கவில்லை என்று கேட்டார்கள்.

ஒரு புதிய மாறுதல் முன்பிருந்த அரசுகளுக்கும் இப்போதுள்ள அரசுக்கும் உண்டு. அதாவது முன்பெல்லாம் விசாரணையே கிடையாது. விசாரணை நடந்தால் தானே, ஏன் அறிக்கையை சபையில் வைக்கவில்லை என்று கேட்க முடியும். இப்போதுள்ள தொல்லை எல்லாம் நாங்கள் விசாரணை வைத்து விடுகிறோம். அதனால் அறிக்கை எங்கே, எங்கே என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதிலும் இது ஒரு 'ஜுடிஷியல் என்கொயரி' கூட அல்ல. 'ஜுடிஷியல் என்கொயரி'-இன் அறிக்கைகள் எல்லாம் வைக்கப்படுகின்றன. ஒரு அதிகாரி

யினுடைய விசாரணை அறிக்கை வைக்கப்பட வேண்டுமென்று உறுப்பினர்கள் விரும்புவார்களானால் அதையும் வைக்கத் தயாராக இருக்கிறோம்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** இந்தப் பெரியகுப்பம் சம்பந்தமாக பலதரப்பட்ட கருத்துக்கள் இருப்பதால் அந்த அறிக்கையை இந்த மன்றத்தில் வைப்பதன்மூலம் தவறான கருத்துகள் அகற்றப்படுவதற்கு உதவியாக இருக்கும். ஆகவே, அந்த அறிக்கையை இந்த அவைமுன் வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அது அச்சாகிக் கொண்டிருக்கிறது. முடிந்ததும் இந்த அவையில் வைக்கப்படும். ஆனால் அதிலே தரப்பட்டிருக்கிற குறிப்புகளை மாத்திரம் இங்கே படிக்க விரும்புகிறேன்.

1. இரண்டு தனிப்பட்ட நபர்களிடையே எழுந்த ஒரு சாதாரண பூசல் அரசியல் காரணமாக அசாதாரணமாக மிகைப் படுத்தப்பட்டு அரசியல் லாபம் கருதி தேவையற்ற முறையில் காவல் துறையினர் மீதும், ஏதுமறியாத மற்றவர்கள் மீதும் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது.

2. 12—5—1973 அன்று காவல் துறையினர் பெரியகுப்பம் கிராம மக்களைத் துன்புறுத்தியதாகவும், சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்ததாகவும், அக்கிராமத்துப் பெண்களை மான பங்கம் செய்ததாகவும், கற்பழித்ததாகவும் கூறப்பட்ட புகார்கள் தகுந்த ஆதாரமற்றவையாதலால் அவைகள் நிராகரிக்கப்பட வேண்டியவையாகும்.

3. 13, 14 மே 1973 ஆகிய நாட்களில் போலீசார் பெரிய குப்பத்தில் தங்கியிருந்தனர் என்ற குற்றச்சாட்டு ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்படவில்லை. ஆதலால் அக்குற்றச்சாட்டு ஏற்றுக்கொள்ள இயலாததாகும்.

4. திரு. மதுராந்தகம் ஆறுமுகம், எம்.எல்.ஏ., திரு. செய்யூர் பாலகிருஷ்ணன் ஆகிய தி.மு.க. பிரமுகர்களை இச்சம்பவங்களில் சம்பந்தப்படுத்தியது தேவையற்றதும், நியாயமற்றதும், அரசியல் நோக்கமுடைய செயலாகும்.





5. கிராம மக்களுடைய உடைமைகளுக்குச் சேதம் விளைவித்ததற்கு காவல் துறையினர் பொறுப்பாளிகள் என்று கூற முடியாது. அச் செயல்களை விஷமிகளும், சமூக விரோதிகளும் செய்திருக்கக்கூடும்.

மேலும் இக்குழு கீழ்க்கண்ட பரிந்துரைகளை அரசுக்குக் கூறி யுள்ளது:—

1. பெரியகுப்பம் கிராமம் ஒரு ஒதுக்குப்புறமான இடத்தில் அமைந்துள்ளது. அதற்குச் சரியான போக்குவரத்து வழிகள் அமையாததால் இத்தகைய சம்பவங்கள் நிகழ ஏதுவாகிறது. எனவே அவ்விடத்திற்கு அருகில் பக்கிங்ஹாம் கால்வாயைக் கடப்பதற்கு வசதியாக தேவையான இடங்களில் பாலங்கள் அமைக்க வேண்டும்.

2. கடற்கரையோரப் பகுதிகளாகிய இவ்விடங்களில் கிராமங் களின் பாதுகாப்பிற்காக ஒன்று அல்லது இரண்டு காவல் நிலையங்களை (அவுட் போஸ்டுகளை) அமைக்க வேண்டும்.

3. இந்நிகழ்ச்சியில் கிராம முன்சீப் யாதொரு அக்கறையும் காட்டிக் கொண்டதாகத் தெரியவில்லை.

4. இம்மாதிரி நிகழ்ச்சிகளின்போது சட்டம் ஒழுங்கை பராமரிக்கும் உயர்மட்ட அதிகாரிகள் நிகழ்விடங்களுக்கு உடனடி யாகச் செல்வது நிலைமையைக் கட்டுப்படுத்த உதவுவதோடு மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தவும் உண்மையான செய்தியை வெளிப்படுத்தவும் உதவும்.

விசாரணை ஆணைக் குழுவின் தீர்ப்புகளை அரசு ஏற்றுக்கொண்டு அரசு ஆணை வெளியிட்டுள்ளது. இவைகள் இந்த அவையில் வைக்கப்படும்.

பாளையங்கோட்டை சம்பவம் பற்றி வைக்கப்பட்ட அறிக்கைக்கு நடவடிக்கை என்ன எடுக்கப்பட்டது என்று திருமதி அனந்தநாயகி அம்மையார் கேட்டார்கள். அங்கே ஒன்பது நபர்கள் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப் பட்டது. சம்பந்தப்பட்ட இன்ஸ்பெக்டர் ராஜசேகரன் 17—3—1973 அன்று மாரடைப்பால் மரணமடைந்து விட்டார். குற்றம் சாட்டப்பட்ட மற்ற 8 பேர்கள் மீது திருநெல்வேலி

தலைமை மாஜிஸ்ட்ரேட் முன்பாக தொடர்ந்து வழக்கு நடத்தப்பட்டது. திருநெல்வேலி தலைமை மாஜிஸ்ட்ரேட் 27—12—1974 அன்று இன்ஸ்பெக்டருடைய மகன்கள் மோகன்குமார், வசந்தகுமார் மற்றும் நான்கு காவலர்கள் ஆகியோரை குற்றவாளிகள் என்று தீர்ப்பளித்தார். மோகன்குமாரும், வசந்தகுமாரும் குற்றவாளிகள் நன்நடத்தை சட்டத்தின் 4(1) விதியின் கீழ் விடுவிக்கப்பட்டனர். நான்கு காவலர்களுக்கு மூன்று மாத கால அளவுக்கு கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. இரண்டு தலைமைக் காவலர்கள் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர். அவர்களை விடுதலை செய்ததை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் மேல் முறையீடு தாக்கல் செய்யலாம் என நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவர் அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளார். அதை அரசு பரிசீலித்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

க்ளைவ் ஹாஸ்டல் சம்பந்தமாக அவைகளை விசாரித்து நடவடிக்கை எடுக்க திரு. கார்த்திகேயன் ஐ.ஏ.எஸ். அவர்களிடம் அந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அதிலே ஐ.ஏ.எஸ். ஐ.பி.எஸ். அலுவலாளர்கள் இருக்கின்ற காரணத்தால் யூனியன் பப்ளிக் சர்விஸ் கமிஷனையும் கலந்து ஆலோசித்து நடவடிக்கை எடுக்க வேண்டியிருப்பதால் அவைகளைப் பற்றி திரு. கார்த்திகேயன் பரிசீலித்துக் கொண்டிருக்கிறார்.

அரசியல் கிளர்ச்சிகளைப் பற்றி எல்லாம் சொன்னார்கள். தமிழகத்தில் நடைபெற்ற பல்வேறு அரசியல் கிளர்ச்சிகளில் இந்த அரசு நான் அடிக்கடி சொல்வதைப்போல்

"கடிதோச்சி மெல்ல எறிக"

என்ற குறள்மொழிக்கேற்ப நடந்து வந்திருக்கிறது.

7—8—1970-இல் வலது கம்யூனிஸ்டுக் கட்சி நடத்திய நிலப்பறிப் போர்ாட்டத்தில் 12,757 பேர் கைது செய்யப்பட்டார்கள். அவர்கள் எல்லாம் 30—8—1970 அன்று விடுதலை செய்யப்பட்டார்கள்.

தண்டனைக் காலம் முடிகின்ற வரை இருந்துதான் தீரவேண்டுமென்று யாரையும் வைக்கவில்லை. முன்பு நாங்கள் எதிர்க்கட்சியாக இருந்த போதெல்லாம் அப்படி இல்லை. நாங்கள் எல்லாம் 3 மாத காலம் என்று தண்டிக்கப்பட்டால் அதிலே ஒரு மணி





நேரம் கூடக் குறைவாக யாரும் எங்களை விடுதலை செய்தது கிடையாது. இன்றைக்குத்தான் இந்த அரசு தண்டனைக் காலம் முடிவதற்குள்ளாக அரசியல் கைதிகளை விடுதலை செய்கிற அந்த முறையை ஏற்படுத்தியிருக்கிறது.

உள்நாட்டு ஒத்துழையாமை இயக்கம் என்ற பெயரால் சம்யுக்த சோஷலிஸ்டுக் கட்சியின் முன்னாள் தலைவர் திரு. நல்லசிவம் அவர்களும் மற்றும் ஐவரும் கைது செய்யப்பட்டு அன்று மாலையே விடுதலை செய்யப்பட்டார்கள்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** அந்தப் போராட்டத்தில் நாங்கள் எல்லாம் கைது செய்யப்பட்டோம். ஆனால் தண்டிக்கப்படாமல் விடுதலை பெற்றோம். ஆகவே தண்டிக்கப்பட்டு, விடுதலை பெற்றோம் என்று சொல்வது உண்மையல்ல.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மொத்தம் கைது செய்யப்பட்ட 12,757 பேர்களில் 30-ஆம் தேதி விடுதலை செய்யப்பட்டவர்கள் 11,651. மன்னிப்புக் கடிதம் கொடுத்து விடுதலை பெற்றவர்கள் 1,048. தண்டனை பெற்றபின் அரசின் ஆணையின் பேரில் விடுதலை செய்யப்பட்டவர்கள் 58. நான் இந்த விவரங்களைச் சொல்ல வேண்டாமென்று கருதினேன். திரு. தங்கமணி கேட்டதால் சொன்னேன்.

உணவு—வேலையில்லாமை ஒழிப்புப் போராட்டம் என்ற பெயரால் நடைபெற்ற போராட்டத்தில் 3—10—1972 முதல் 5—10—1972 வரை இந்திய கம்யூனிஸ்டுகள் 3,505 பேர் கைது செய்யப்பட்டு அன்று மாலையே விடுவிக்கப்பட்டார்கள். 18—10—1972 முதல் 20—10—1972 வரை மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டுகள் நடத்திய போராட்டத்தில் 8,159 பேரும் அன்றையதினமே விடுதலை செய்யப்பட்டார்கள்.

ஆசிரியர்கள் போராட்டத்தில் 30—4—1972 முதல் 16—5—1972 வரை ஆயிரம் பேருக்கு மேல் கைது செய்யப்பட்டு அவர்கள் 16—5—1972-இல் விடுதலை செய்யப்பட்டார்கள்.

3—10—1973 முதல் 12—10—1973 வரை பழைய காங்கிரஸ் கட்சியினர் நடத்திய மதுவிலக்குப் போராட்டத்தில் 32,838 பேர் கைது செய்யப்பட்டு, போராட்டம் முடிந்த 12—10—1973 அன்றே விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். அதிலே இன்னொன்றும் சொல்ல விரும்புகிறேன். அந்தக் கிளர்ச்சியின்போது, திருச்சிச் சிறைச்சாலையில் இருந்த காங்கிரஸ்காரர்கள் அங்கே ஏற்பட்ட ஒரு

கலவரத்தில் அங்கே பறந்து கொண்டிருந்த தேசியக் கொடியை இறக்கிவிட்டு, கட்சியின் கொடியை ஏற்றினார்கள். அவர்கள் மீது வழக்கு போடப்பட்டது. ஆனால், அந்த வழக்குக் கூடத் திரும்பப் பெறப்பட்டது என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1974-ம் ஆண்டு சென்னையில் மட்டும் 50-க்கு மேற்பட்ட கிளர்ச்சிகள் நடைபெற்று, அந்தக் கிளர்ச்சியிலே ஈடுபட்ட அத்தனை பேரும் கைது செய்யப்பட்டு, அவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்பட்ட நிகழ்ச்சிகள்தான் நடைபெற்றிருக்கின்றன. 1975-ம் ஆண்டு, இந்த மூன்று மாதத்தில் மாத்திரம் 22 கிளர்ச்சிகள் நடைபெற்று, அதிலே கைது செய்யப்பட்டவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

இதைப் போலவே, மாணவர்கள், தொழிலாளர்கள் கலந்து கொண்ட வழக்குகள் 50-க்கு மேல் கைவிடப்பட்டிருக்கின்றன. தொழிலாளர்கள் மீது கனிவு கொண்ட பல தலைவர்கள் இங்கே இருக்கிறார்கள், எதிர்க் கட்சியிலும் சரி, ஆளுங்கட்சியிலும் சரி. அந்த வகையிலேகூட தொழிலாளர்கள் மீது போடப்பட்ட வழக்குகள் அனைத்தும்—நான் தேதி வாரியாக வைத்திருக்கிறேன்—50-க்கு மேற்பட்ட வழக்குகள் அனைத்தும் வாபஸ் பெறப்பட்டன என்று நான் கூறிக்கொள்வேன்.

சட்டக் கல்லூரி மாணவர்கள் விடுதி—போராட்டம் பற்றி பொன்னப்ப நாடார் அவர்களும் ஹாண்டே அவர்களும் இங்கே பேசினார்கள். வகுப்பு வெறி இன்றைக்குக் கல்லூரிகளிலே நுழைந்திருப்பது உள்ளபடியே, மிகமிக வேதனை தரக்கூடிய ஒன்றாகும். பெரியார் அவர்களும், அண்ணா அவர்களும், ஏன் காந்தியடிகள் போன்றவர்களும் அவர்கள் வழி வந்தவர்களும், மற்றக் கட்சித் தலைவர்களும் இன்றைக்குச் சாதி பேதம், சாதி வெறி கூடாது என்பதற்காக உழைத்து வருகிறோம். ஆனால் நம்மையும் அறியாமல் இன்றைக்கு இப்படிப்பட்ட வகுப்புவாத குரோத எண்ணங்கள் நம்முடைய சமுதாயத்திலே ஊடுருவுவது இந்தச் சமுதாயத்திற்கு ஏற்படுகிற ஒரு பயங்கரமான புற்று நோய் என்றுதான் நான் கூற விரும்புகிறேன்.

இந்த அரசைப் பொறுத்தவரையில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக, தாழ்த்தப்பட்ட மக்களுக்காகப் பாடுபடுகிற அரசு என்று நான் பலமுறை அழுத்தந்திருத்தமாக எடுத்துச் சொல்லி



யிருக்கிறேன். இதிலே வேடிக்கை என்னவென்றால், எந்தப் பின் தங்கிய மக்களுக்காகப் பாடுபடுகிறோமோ, அந்தப் பின்தங்கிய மக்களே இரண்டு கூறுகளாக, மூன்று கூறுகளாகப் பிரிந்து கொண்டு ஒருவரையொருவர் தாக்கிக் கொள்வதும், எந்தத் தாழ்த்தப்பட்ட மக்களுக்காகப் பாடுபடுகிறோமோ, அந்தத் தாழ்த்தப்பட்ட மக்களே அவர்களுக்குள் இரண்டு கூறுகளாக, மூன்று கூறுகளாகப் பிரிந்து கொண்டு, அவர்களுக்குள் சச்சரவுகளை வளர்த்துக் கொள்வதும் விரும்பத்தக்கக் காரியமல்ல.

ஆகவே, சாதி ஒழிய வேண்டுமென்பதை நாம் உதட்டளவிலே உச்சரிக்கின்ற வார்த்தையாக வைத்துக் கொள்ளாமல், உள்ளத்திலே பதிய வைத்துக்கொள்ள வேண்டுமென்று ஆளுங் கட்சியிலே இருக்கிறவர்களையும் கேட்டுக்கொள்வேன், எதிர்க் கட்சியிலே உள்ளவர்களையும் கேட்டுக்கொள்வேன், தோழமைக் கட்சியிலே இருக்கிறவர்களையும் கேட்டுக் கொள்வேன், சமுதாயத்திலே இருக்கிற அத்தனை பேரையும் கேட்டுக் கொள்வேன். அதன் காரணமாக, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஏற்பட்ட கலவரங்களானாலும், சட்டக் கல்லூரி மாணவர் விடுதியில் ஏற்பட்ட கலவரமானாலும், உள்ளபடியே சகித்துக் கொள்ளத் தக்கதல்ல. அவைகளைப் பற்றி மேலவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. இராசாராம் நாயுடு அவர்கள் கூட மேலவையில் அதற்காக ஒரு அதிகாரியை வைத்து விசாரணை வைக்கக் கூடாதா என்று கேட்டார்கள். அதையெல்லாம் மனதிலே கொண்டு, இங்கே பேசிய உறுப்பினர்களின் கருத்துக்களை மனதில் கொண்டு, அந்தச் சம்பவங்களைப் பற்றி விசாரிப்பதற்காக ஐ.ஜி. அவர்களை அதற்காக நியமித்து, அவரை அதற்காக ஒரு அறிக்கை அனுப்ப வேண்டுமென்று இந்த அரசு கேட்டுக் கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கீழ் வெண்மணிச் சம்பவம், பற்றிச் சொன்னார்கள். அந்தத் தீர்ப்பினால் கீழ்க்கோர்ட்டில் தண்டிக்கப்பட்டவர்கள், உயர்நீதி மன்றத்தில், எல்லா எதிரிகளும் விடுதலை செய்யப்பட்டு விட்டார்கள். கே. டி. கே. அவர்கள் வருத்தம் தெரிவித்தார்கள், இப்படி விடுதலை செய்தார்களே என்று. தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. ஏ. கே. சுப்பையா அவர்கள் இப்பொழுது பேசும்பொழுது கூடக் குறிப்பிட்டார்கள். பலரும் அதற்காக வருத்தம் தெரிவித்தார்கள். சம்பவம் நடந்தது

உண்மை. ஆனால் அந்தச் சம்பவத்திலே குற்றஞ் சாட்டப் பட்டவர்கள் விடுதலை அடைந்திருக்கிறார்கள். அப்படி விடுதலை அடைந்ததை எதிர்த்து, உச்ச நீதிமன்றத்திலே அப்பீல் செய் வதற்கு, Certificate of leave to appeal உயர் நீதிமன்றத்தில் அரசின் தரப்பிலே கேட்கப்பட்டது. உயர் நீதிமன்றம் அதை மறுத்துவிட்டது. அப்படி மறுத்துவிட்ட காரணத்தால், உச்ச நீதிமன்றத்திலே special leave petition 22—3—1975-லே பதிவு செய்துள்ளோம் என்பதை மாத்திரம் நான் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்வேன்.

அதிகாரிகளை மாற்றுவதைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். நல்ல அதிகாரிகளை மாற்றிவிடுகிறீர்கள்; தீய அதிகாரிகளை மாற்றாமல் விட்டு விடுகிறீர்கள் என்ற கருத்தை கே. டி. கே. தங்கமணி அவர்கள் சொன்னார்கள். செழியன் அவர்கள் இஷ்டப்படி ஆளுங்கட்சி சொல்கிற நேரத்தில் எல்லாம் அதிகாரிகளை மாற்றுகிறார்கள் என்று சொன்னார்கள். ஆகவே, மாற்றுவது என்ற கொள்கையை நாம் அனைவரும் ஒத்துக் கொண்டிருக் கிறோம். இதிலே நல்லவர்கள் யார், தீயவர்கள் யார், என்பதிலே தான்—தீர்மானிக்கும் நேரத்தில்தான் நமக்குள்ளே அபிப்பிராய பேதம் வருகிறதே தவிர, நல்லவர்களாக இருந்தால் இருக்கலாம், தீயவர்களாக இருந்தால் மாற்றலாம் என்கிற அந்தக் கொள்கையை ஏதோ ஒரு வகையில் எதிர்க்கட்சியின் சார்பாக பேசியவர்கள் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஏதோ ஆளுங் கட்சியின் சார்பில் ஆயிரக்கணக்கில் சிபாரிசுகள் தருகிறார்கள் என்று சொன்னார்கள். செழியன் அவர்கள் கூட ஆளுங் கட்சியிலே இருந்தபோது சிபாரிசுகளைக் கொடுக்க வில்லையா? எவ்வளவோ கொடுத்தார்கள். கேட்டால் தரலாம் என்று என்னிடத்திலே கூட வைத்திருக்கிறேன். இவ்வளவு கடிதங்களை (அவையில் காண்பித்து) செழியன் அவர்கள் இப்படிப்பட்ட காரியங்களுக்காகக் கொடுத்தவைதான்.

**திரு. கோவை செழியன்:** பேரவைத் தலைவாவர்களே, நான் ஆளுங் கட்சியிலே இருந்தபொழுது கொடுத்திருக்கிறேன். எப்பொழுது கொடுத்திருக்கிறேன் என்றால், என்னுடைய தொகுதி யிலே இருக்கிற அதிகாரிகளை வேறு யாராவது தலையிட்டு மாற்றுகின்றபொழுது அல்லது தலையிடுகின்றபொழுது, நான்





சொல்லியிருக்கிறேன். ஆனால், நானாக அவைகளைத் தடுக்கச் அவரை மாற்று, இவரை மாற்று, எனக்குப் பிடிக்கவில்லை என்று சொன்னது கிடையாது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நீங்கள் நிறையக் கொடுத்தீர்கள். கொடுத்த எல்லாவற்றையும் நான் செய்தேனா என்று கேட்கிறேன்.

**திரு. கோவை செழியன்:** நான் நியாயமானதைத்தான் சொன்னேன். நியாயமானதைச் செய்தீர்களென்று நம்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நியாயமானதைச் செய்தீர்கள் என்று நம்புகிறேன் என்று சொல்கிறார். ஆக, ஆளுங் கட்சியில் இருப்பவர்கள் கொடுத்தாலும், நியாயமாக இருந்தால் தான் செய்வேன்; அநியாயமாக இருந்தால் செய்யமாட்டேன் என்று அவரே ஒத்துக் கொண்டதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சாதாரணமாக, ஒரு அதிகாரி ஓரிடத்திலே 3 வருடகாலம் இருக்க வேண்டுமென்ற நியதி யிருக்கிறது. அப்படியிருக்கும்போது ஒரு அதிகாரி 3 வருடத் திற்குள்ளாக மாற்றப்படுகிறார். சில அதிகாரிகளுக்கு இன்னும் 6 மாத காலம் இருக்கிறது ரிட்டையர் ஆக. அதற்குள்ளே—ரிட்டையர் ஆக 1 வருடம் இருந்தால் சாதாரண மாக மாற்றுவது கிடையாது—மாற்றுகிறார்கள். இப்படி மாற்று கிறார்கள் என்பதற்காகத்தான் சொன்னேனே தவிர, நல்லவர் கெட்டவர் என்ற பிரச்னைக்கு நான் வரவில்லை. ஆனால், சில குறிப்பிட்ட அதிகாரிகளை 1 வருடம், 2 வருடம் ஆன உடனே மாற்றுவதும், சில அதிகாரிகளை 3 வருடம் ஆன பிறகும் மாற்றப் படாமல் இருக்கிற அந்த முறைகள் பல இடங்களிலே இருக்கின்றன.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள், மற்ற கட்சிகளைச் சேர்ந்தவர்கள் கொலை செய்யப்படுகிறார்கள், தாக்கப்படுகிறார்கள் என்றெல்லாம் இங்கே எடுத்துச் சொல்லப்பட்டது. ஆளுங் கட்சியிலே உள்ளவர்களும் கொலையுண்டிருக்கிறார்கள். உடுமலைப் பேட்டையில் அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர் கொல்லப்பட்டதைப்

பற்றிச் சொன்னார்கள். பொள்ளாச்சியிலே லத்தீப் என்கிற தி.மு.க. வாலிபர் ஒருவர் கொல்லப்பட்டார். அதிலே, அ.தி.மு.க.-வினர் மீது வழக்குத் தொடரப்பட்டு, அவர்கள் விடுதலை அடைந்தார்கள். அரசாங்கம் நீதிமன்றத்தினை தன்னுடைய கையிலே வைத்திருக்கவில்லை. எது நீதியோ அது நடக்கட்டும் என்கிற வகையிலேதான் அரசாங்கம் நடந்து கொண்டிருக்கிறது, எதிலும் தலையிடுவதில்லை என்பதற்கு இவைகள் எல்லாம் உதாரணம்.

பிரதாப்சந்திரன் கொலை வழக்கிலே கூட, குசேலரும் மற்றும் நான்கு பேரும் விடுதலையாகியிருக்கிறார்கள். இரண்டு பேர் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள்.

30—7—1972 அன்று முகவை மாவட்டம் குமாரப்பட்டியில் அண்ணா மன்றத்தில் தி.மு.கழகத்தினர் கம்யூனிஸ்ட்களால் தாக்குண்டு, முத்து என்பவர் கொலையுண்டார் என்ற வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சியினர் விடுதலை ஆனார்கள். ஆனால் கொலையுண்டது உண்மை. விடுதலையாகிவிட்ட காரணத்தாலேயே சம்பவம் இல்லையென்று ஆகிவிடுமா? கே.டி.கே. கூட சொன்னார்கள், சிலர் விடுதலையாகிவிடுகிற காரணத்தாலேயே சம்பவம் நடந்தது இல்லையென்று ஆகிவிடுமா என்று கேட்டார். கொலையுண்டது நடந்த சம்பவம்தான்.

அதைப் போலவே, கோவை மாவட்டத்தில் குறிச்சி கிராமத்தில் ஸ்தாபன காங்கிரஸ் விவசாயச் சங்கத்தைச் சேர்ந்தவர்களால், தி.மு.க. வைச் சேர்ந்த ராசு கொலை செய்யப்பட்டார். குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் விடுதலை பெற்றிருக்கிறார்கள்.

தென்னார்காடு மாவட்டம், தேனாம்பட்டு கிராமத்தில் மலையாளத்தான் என்பவர் அ.தி.மு.க. விலிருந்து மீண்டும் தி.மு கழகத்திற்குத் திரும்பினார். 5—7—1974 அன்று கொலையுண்டார். அவ்வூர் ஊராட்சித் தலைவர் ரகுபதி உட்பட 12 பேர் குற்றஞ்சாட்டப்பட்டார்கள். மூன்றாவது குற்றவாளி கோதண்டபாணிக்கு மட்டும் ஐந்தாண்டுக் கடுங்காவல் தண்டனை அளிக்கப்பட்டது. மற்றவர்கள் விடுதலை அடைந்தார்கள்.

ஆகவே, இந்த அரசியல் கொலைகள் எல்லா கட்சிகளிலும் நடைபெறுகின்றன. அதற்காக நாம் அனைவருமே சேர்ந்து நம்முடைய வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்ள வேண்டியவர்களாக



இருக்கிறோமே அல்லாமல், வன்முறைகள் அரசியலில் தலையெடுக்கக் கூடாது என்பதில் நான் இரண்டுவிதமான கருத்துக்களைக் கொண்டிருப்பவன் அல்ல.

காங்கிரஸ்காரர்களும் கொலைக்கு ஆளாகிறார்கள்; அ.தி.மு.க. வைச் சேர்ந்தவர்களும் கொலைக்கு ஆளாகிறார்கள்; ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்களும் கொலைக்கு ஆளாகிறார்கள்; முஸ்லிம் லீக்கைச் சேர்ந்தவர்களும் கொலைக்கு ஆளாகிறார்கள்; கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களும் கொலைக்கு ஆளாகிறார்கள். எப்படி யிருந்தாலும்கூட நான் எடுத்துச் சொல்கின்ற பொதுவான கருத்து, பிரச்னைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு வன்முறையை ஒரு கருவியாகப் பயன்படுத்துவதை இந்த அரசோ அல்லது ஆளுங் கட்சியாக இருக்கிற தி.மு. கழகமோ அனுமதிக்கவில்லை, ஆதரிக்க வில்லை என்பதை மாத்திரம் நான் இங்கே எடுத்துக் கூற பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன். இருந்தாலும் இதை நீண்டகாலமாக எல்லாத் தலைவர்களும் எடுத்துச் சொன்னாலும் கூட, இடையிலே சில காரியங்கள் நடைபெற்று விடுகின்றன.

வெங்கா தாக்கப்பட்டது பற்றிச் சொன்னார்கள். இன்னும் என்ன செய்கிறது அரசு என்று கேட்டார்கள். அரசு புலன் விசாரித்துக் கொண்டிருக்கிறது. அந்தக் கார் டிரைவர் கைது செய்யப்பட்டார். கமிஷனர் அலுவலகத்தில் தவறான நம்பர்கள் பொறிக்கப்பட்ட 20, 30 கார்கள் நின்று கொண்டிருப்பதைப் பார்த்திருக்கலாம். அந்தக் கார்கள் எல்லாம் கள்ளக் கடத்தல் கார்கள்; கொள்ளை அடிக்கப் பயன்பட்ட கார்கள். ஆனால், அதிலே இருக்கிற நம்பருக்கும் அந்தக் காருக்கும் எந்தவிதமான சம்பந்தமுமில்லை. இப்படி அந்த டிரைவர் கைது செய்யப்பட்டபோது கூட, 'நான் அந்தப் பக்கமே வரவில்லை' என்று சொன்னதாகவும். இருந்தாலும், மேலும் புலன் விசாரணை தொடர்ந்து நடைபெறுவதாகவும், போலீஸ் அதிகாரிகள், கமிஷனர் அவர்கள் எனக்கு எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே அதை அப்படியே விட்டு விட்டோம் என்று நினைக்கத் தேவையில்லை.

சேலத்தில் நடைபெற்ற கொலைபற்றி எடுத்துச் சொல்லப் பட்டது. அதுபற்றியும் புலன் விசாரணை நடைபெற்றுக் கொண் டிருக்கிறது. இரண்டு பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அதற்குள் வழக்கு தாக்கல் செய்யப்படாததற்குக் காரணம் இன்னும் புலன் விசாரணை முடிவடையவில்லை.

குசேலர் கேசில் 'பொலிடிகல் மோடிவேஷன்' (அரசியல் தூண்டுதல்) என்று சொல்லப்பட்டிருக்கிறது என்று கே. டி. கே. சொன்னார்கள். நான் பிறகு அந்த ஜட்ஜ்மெண்டை வாங்கிப் படித்துப் பார்த்தபோது அப்படிப்பட்ட வார்த்தையே அதிலே இல்லை. தங்கமணி அவர்கள் மீது போடப்பட்ட கேசிலே கூட, செஷன்ஸ் ஜட்ஜ் 'மோடிவ்' அரசியலாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார் என்று தங்கமணி இங்கே குறிப்பிட்டார். தங்கமணி போன்ற பெரியவர்கள், அனுபவம் வாய்ந்தவர்கள் வயதைச் சொன்னால் கோபித்துக் கொள்வார்களே என்னவோ பத்து ஆண்டுகள் என்னைவிட அதிகம், 61 வயது என்று ஆனந்தவிகடன் வெளியிட்டு இருக்கிறது, அப்படிப்பட்ட பெரியவர்கள் எல்லாம் இப்படிப்பட்ட தகவலை அவைக்குத் தருவது வேதனைக்குரியதாகும். அப்படி தங்கமணி அவர்கள் வழக்கில் நீதிபதி 'மோடிவ்' அரசியல் என்று எந்த இடத்திலும் குறிப்பிடவில்லை. அவர் ஆர். எஸ். மங்கலத்தில் பேசிய பேச்சு குறித்த வழக்காகும் அது. ஜட்ஜ் என்ன சொல்லியிருக்கிறார் என்றால்,

" The next point that arises for consideration is whether the words complained of bring home an offence under Section 115 read with Section 302 I.P.C. as alleged by the prosecution. If the speech complained of is translated into English, according to me, will run as follows :—

" What is the way for the Chief Minister to escape from the enquiry? One way would be to commit suicide like Hitler or he should be beaten to death like Musolini by you all. Except these two courses I do not see any other way to put an end to the Chief Minister "

இது தங்கமணி அவர்கள் பேசிய பேச்சாகும். தங்கமணியைப் போன்றவர்கள்—ஒரு காலத்தில் என்னைப் பாராட்டிப் புகழ்ந்து பேசிய தங்கமணி போன்றவர்கள், என்னுடைய முடிவு இப்படி அமைய வேண்டுமென்று கருதுவார்களேயானால், அந்த முடிவை தங்கமணியைப் போன்றவர்கள் தங்களுடைய கையால் செய்வார்களேயானால், நான் உள்ளபடியே ஒரு தியாகியின் கையால் சாகிறேன் என்ற அளவில்கூட மகிழ்ச்சியடைவேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தீர்ப்பில், அப்படிப் பேசியிருந்தாலும் அது குற்றமாக ஆகாது என்றுதான் இருக்கிறது.





**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நான் நீங்கள் பேசியதைத்தான் சொன்னேன். நீங்கள் எல்லாம் பெரியவர்கள் ; நீங்கள் இப்படிப் பேசலாமா ? சின்னப் பிள்ளைகள், சில தலைவெட்டிகள் எல்லாம் இருக்கிறார்கள். செழியன் யார் யாருக்கோ ஸ்ரீலஸ்ரீ, மகாசந்நிதானம், என்றெல்லாம் பெயர் வைத்திருக்கிறார். அவரே யாருக்கோ 'தலைவெட்டி' என்று பெயர் வைத்திருப்பதாகக் கேள்விப்பட்டேன். ஆகவே, சில தலைவெட்டிகள் எல்லாம் இருக்கிறார்கள். செழியனுக்கு ஒரு இளகிய இதயம் உண்டு. அதுவும் என்பால் அன்பு உண்டு. என்னுடைய தலையை வெட்டுவேன் என்று சொன்னால் செழியனைப் போன்றவர்கள் கேட்டுக் கொண்டிருக்க மாட்டார்கள், ஆகவே தலைவெட்டி என்று யாருக்கோ அவர் பெயர் வைத்து அழைப்பதாக எனக்குக் கேள்வி. ஆனால் அவர் ஒத்துக் கொள்வாரா என்பது வேறு.

**திரு. கோவை செழியன் :** நான் யாரையோ தலைவெட்டி என்று சொன்னதாகவும் யாருக்கோ தலைவெட்டி என்று பெயர் வைத்ததாகவும் ஒரு தவறான கருத்தைச் சொன்னார்கள். நான் யாரையும் தலைவெட்டி என்று சொல்லவில்லை. வரலாற்றிலே வேண்டுமானால் சார்லஸ் மன்னன் தலையை வெட்டுவதாக வரலாம், நான் யாரையும் தலைவெட்டி என்று பெயர் வைத்து அழைக்கவில்லை, அப்படிக் கூப்பிட்டதே கிடையாது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** கூப்பிட்டால் தெரிந்து விடும். சிலரிடம் சொன்னதாகக் கேள்வி. தங்கமணி, அவர் பேசியதை, ஜட்ஜ் குற்றமாக ஒத்துக்கொண்டாரா என்று கேட்டார். ஜட்ஜ் அதைப்பற்றிச் சொல்கிறார்.

" I find such words have been freely used mainly to attain cheap popularity and to get an applause from the audience rather than with an intention of inciting the audience to murder the Chief Minister. If it were the intention of the accused to incite the audience to murder the Chief Minister, he would have used words like " Go and kill him or kill him when he comes here etc. etc. ".

The words uttered by the accused are not capable of inciting the audience to commit the offence of murder nor could they be understood in the manner in which the prosecution has understood. ".

இந்தத் தீர்ப்பை என்னைப் படிக்க வைக்கும் அளவிற்கு தங்கமணி என்னை ஆளாக்கிவிட்டாரே என்பதற்காக மிகுந்த வருத்தப்படுகிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** எந்தமாதிரியான கேஸ்கள் போடப்பட்டிருக்கின்றன? ஜட்ஜ்மெண்ட் எப்படியிருக்கிறது என்பது இந்த ரெக்கார்டில் இருப்பது பொருத்தமானதுதான்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தங்கமணியைப் போன்ற பெரிய தலைவர்கள் எந்தமாதிரியாகப் பேசுகிறார்கள் என்பதும் இங்கே பதிவாக வேண்டியது மிகுந்த அவசியமாகும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** எதிர்க்கட்சிக்காரர்கள் மீது எப்படிப்பட்ட கேஸ்கள் போடப்பட்டன என்பது ரெக்கார்டில் இருப்பதும் நல்லதுதான்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** எங்களுக்கெல்லாம் அண்ணா அப்படிச் சொல்லிக் கொடுக்கவில்லை. ஹிட்லரைப் போல சாக வேண்டும்; முசோலினியைப் போல அடித்துக் கொல்ல வேண்டும் என்று கற்றுக் கொடுக்கவில்லை, அப்படிப்பட்ட பண்பை நாங்கள் என்றைக்கும் பெற்றதும் கிடையாது. எதிர்க் கட்சித் தலைவர்கள் எல்லாம் நீண்ட காலம் வாழ வேண்டுமென்று தான் நாங்கள் கருதுவோம். அப்போதுதான் ஒருவருக்கொருவர் நம்முடைய அறைகூவலை ஏற்றுக்கொண்டு வாழ்ந்து, அதைப் பார்க்க வேண்டும். "அவனைக் கொன்றுவிட வேண்டும், விசாரணையிலிருந்து தப்புவதற்கு அவன் ஹிட்லரைப் போல தற்கொலை செய்துகொள்ள வேண்டும்" என்று பேசியிருக்கிறார். ஆனால், ஜட்ஜ் கைதட்டலுக்காக (அப்ளாஸ்) அப்படிச் சொல்லியிருக்கிறார் என்று சொல்லியிருக்கிறார். இதே தங்கமணி அவர்கள் வாணி மகாலில் ஒரு முறை என்னைப் பாராட்டிப் பேசியதை நான் மறந்துவிடவில்லை. அப்படிப் பேசிய தங்கமணிதான், இப்படிப் பேசியிருக்கிறார். தங்கமணி போன்றவர்களே இப்படிப் பேசினால், அரசியலில் இளவெட்டுக்களாக இருப்பவர்கள் எந்த அளவிற்குப் பேச ஆரம்பித்து விடுவார்கள் என்பதற்காகத்தான் சொல்கிறேன். உருக்கத்தோடு ஒவ்வொரு அரசியல் தலைவர்களும் மனதில் பதிய வைத்துக்கொள்ள வேண்டிய ஒன்று என்பதற்காகச் சொல்கிறேன்.



ஹாண்டே அவர்கள் காவல் துறையில் வறட்சி நிவாரண நிதி கட்டாயமாக வசூலிக்க வேண்டுமென்று ஒரு ஆர்டர் போயிருப்பதாகச் சொன்னார்கள். அதில் நான் உன்னிப்பாக கவனித்தேன், அதிலே

" I appeal to all members of the Police Department, executive and ministerial including last grade servants to contribute *voluntorily* one day's salary. ".

என்றுதான் இருக்கிறது. அதிலே 'வாலண்டிரி' அதாவது அவர்களாக முன்வந்து தரவேண்டுமென்று இருக்கிறதே தவிர, 'கம்பல்சரி' என்று இல்லை. இவ்வளவு சூட்டிற்குப் பிறகு தீயணைப்பு இல்லாவிட்டால் நன்றாக இருக்காது.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** திண்டுக்கல் ஆர்.டி.ஓ. என்குயரி கேஸ் பற்றிச் சொல்ல வேண்டும். உங்களுக்கு உதவிகரமாக இருக்கும் என்ற முறையிலேதான் நான் அதைப்பற்றி கட்மோஷன் ஏற்கனவே கொடுத்திருக்கிறேன். இந்நேரம் உங்களுக்கு பர்டிகுலர்ஸ் வந்திருக்குமென நினைக்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தனித்தனியாகச் சொல்லப்பட்ட புகார்கள் எல்லாம் குறித்து வைக்கப்படுகின்றன. அவைகளைப் பற்றியெல்லாம் தகவலறிந்து வேண்டுமானால் ஹாண்டே அவர்களுக்குத் தனியாகத் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன் என்று சொல்லி, தீ அணைக்கும் படை இந்த ஆண்டு 26 இடங்களில் அமைக்க வேண்டுமென்று அறிவிக்கப் பட்டிருக்கிறது. அதற்கான இடங்கள் எல்லாம் பார்க்கப்பட்டு, இன்னும் ஆறு மாதக் காலத்தில் மேலும் 26 இடங்களில் வைக்கப்பட வேண்டும் என்ற அரசின் அறிவிப்பு செயல்படுத்தப் படும் என்றும் தெரிவித்துக் கொண்டு இந்த மானியத்திலே நல்ல பல கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இந்தத் துறையிலே உள்ள அதிகாரிகள் நல்ல முறையிலே செயல்பட அவை ஏதுவாக உள்ள கருத்துக்களாக அமைந்து இருக்கின்றன என்று சொல்லி இந்த அளவிலே அமைகிறேன். வணக்கம்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** எஸ்டிமேட்ஸ் கமிட்டி ரிப்போர்ட்டிலே தீயணைப்புப் படை சம்பந்தமாக பரிந்துரை இருக்கிறதே, அதைக் கவனிப்பார்களா?

திருமதி த. ந. அனந்தநாயகி : கராத்தே பயிற்சியை போலீஸாருக்குக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். இப்போது அந்தப் பயிற்சி நிறுத்தப்பட்டு உள்ளது. அதை மீண்டும் கொடுக்க இந்த அரசு முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கராத்தே பயிற்சியை நான்தான் முதல் முதல் பார்த்துவிட்டு, காவலர்களுக்குச் சிபாரிசு செய்து அந்தப் பயிற்சியைக் கொடுக்கச் சொன்னேன். இடையில் நிறுத்தப்பட்டு விட்டதாகச் சொல்கிறார்கள். எங்கே அதை எதிர்ப்பார்களோ என்று எண்ணியிருந்தேன். அவர்களே சொல்லிவிட்ட காரணத்தினால் அது தொடர்ந்து நடைபெறும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது.

திரு. பி. வெங்கடசாமி அவர்கள் இருக்கையில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்பட்டது.

திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் வெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றதாக அறிவிக்கப்பட்டது.

திருவாளர்கள் என். டென்னிஸ், க. உரொ. எட்மண்ட், எம். சுரேந்திரன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள், பேரவையின் அனுமதியோடு, திரும்பப் பெறப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண். 15—காவல் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 26,47,68,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

திரு. பி. வெங்கடசாமி அவர்கள் இருக்கையில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்பட்டது.



திருவாளர்கள் பெ. சௌந்தரபாண்டியன், கே. என். குமாரசாமி, கே. டி. கே. தங்கமணி, ஜே. ஜேம்ஸ் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள், பேரவையின் அனுமதியோடு, திரும்பப் பெறப் பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி :

"நிதிக் கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,14,90,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று நாளை காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.00 மணியளவில் ஒத்தி வைக்கப்பட்டது.

## 10. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

160. Notification issued in G.O. Ms. No. 1765, Agriculture, dated the 31st July 1973, in regard to amendments to Notification under section 5(4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 relating to inclusion of paddy. [Laid on the table of the House under section 29(4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959)].

B. *Reports, Notifications and Other Papers.*

@ 140. The Performance Budget on Harijan Welfare, 1975–76.

@ 141. Pamphlet on Slum Clearance in Tamil Nadu 1974–75 (English and Tamil).

@ 142. Pamphlet on Housing in Tamil Nadu 1974–75 (English and Tamil).

143. Report of the Committee on Estimates on the action taken by the Government on the recommendations of the Committee contained in the Report on Employment and Training.

@ Despatched to members on 1–4–75.



## இணைப்பு

[549 ம் பக்கத்தில் 546 ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

விடை—(அ) & (இ) ஆம். நாட்டு வெங்காயம் (சிறிய ரகம்) பெல்லாரி வெங்காயம் ஆகியவற்றின் மேம்பாடு குறித்த ஆராய்ச்சிப் பணி கோவையிலுள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்று வருகிறது.

**நாட்டு வெங்காயம் (சிறிய ரகம்) :**

பல்வேறு வெங்காய இரகங்கள் மதிப்பீடு செய்யப்பட்டதில் கோடை காலத்தில் சுமார் 60-லிருந்து 65 நாட்களுக்குள் அறுவடைக்கு வரக்கூடிய 11 குறுகிய கால இரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றுள், நீண்ட கால இரகமான ஏற்கனவே கோவை ஆராய்ச்சி நிறுவனத்திலிருந்து வெளியிடப் பட்ட கோ. 1 என்ற வெங்காயத்திற்குச் சமமாக விளைச்சல் கொடுக்கக் கூடிய சி. எஸ். 911 (தேவனும்பட்டணம், தென் ஆர்க்காடு மாவட்டம்) என்ற குறுகிய கால வெங்காய இரகம் தேர்ந்தெடுக்கப்பட்டது. இது ஹெக்டேருக்கு சுமார் 12,000 கிலோ (ஏக்கருக்கு 5,000 கிலோ) வெங்காயம் கொடுக்கக் கூடியது. தவிர, இந்த சி. எஸ். 911 நடுத்தர பருமனை வெங்காயத்தையும், கவர்ச்சியான சிவப்பு நிறத்தையும் பூவிடாத தன்மையையும் கொண்டதாகும். இந்த வகை வெங்காயம் தோட்டக்கால் சாகுபடிக்கு பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த பயிராகும். இந்த வெங்காயம் பல இடங்களிலும், பருவங்களிலும் வளரும் தன்மை குறித்து மதிப்பீடு செய்யப்பட்டு வருகிறது.

சுமார் 85 நாட்களிலிருந்து 100 நாட்களில் அறுவடைக்கு வரக்கூடிய ஐந்து நீண்ட கால வெங்காய இரகங்கள் சிறந்ததெனத் தெரிந்து எடுக்கப்பட்டு முதல் நிலை ஆய்வில் உள்ளன. இவற்றுள் 949/2, 450/2 ஆகிய இரண்டு இரகங்கள் நல்ல விளைச்சல் கொடுத்துள்ளன. இவைகள் சராசரியாக 90 நாட்களில் அறுவடைக்கு வரக்கூடியவை. இவற்றின் வெங்காயம் சற்றுப் பருமனாக இருக்கும். இவை, தனிப் பயிராக சுழல் முறையில் பயிரிடுவதற்குத் தகுந்தவையாகும். இவை பல இடங்களில் வளரும் தன்மை, பல இடப் பரிசோதனைகளில் இருந்து கண்டுபிடிக்கப்பட வேண்டியிருக்கிறது.

'திரிப்ஸ்' போன்ற இலைப்பேன்களால் பாதிக்கப்படுவதைத் தாங்கும் சக்தியும், இலைப்புள்ளி, இலைக்கருகல் போன்ற நோய்களை ஓரளவுக்குத் தாங்கிக் கொள்ளும் திறனையும் கொண்ட வீரிய ஒட்டு வெங்காய வகைகளை உருவாக்கும் பொருட்டு, ஆராய்ச்சிகள் நடந்தேறி வருகின்றன.

**பெல்லாரி வெங்காயம் :**

தமிழ்நாட்டின் பெரும்பகுதிகளில் பெல்லாரி வெங்காயம் பயிரிடப்படுகிறது. இதற்குத் தேவையான விதை தற்பொழுது கர்நாடக மாநிலத்தில் உள்ள பெல்லாரியில் இருந்து தருவிக்கப்படுகிறது. இந்த விதைகள் முளைப்புத் திறன் குறைந்த தரம் கொண்டவையாகும். இவற்றிலிருந்து வளர்க்கப்பட்ட வெங்காயத்திலிருந்து சுமார் 60 சதவீதம் மட்டும் விற்பனைக்கு பயன்படும் வெங்காயம் கிடைக்கிறது. இந்த நிலைமையைப் போக்கிடவும், உயர்ந்த ரக விதை வெங்காயம் உற்பத்தி செய்வதற்கும் ஆய்வு நடைபெற்று வருகிறது.

மேற்குறிப்பிட்டவைகளைத் தவிர நாட்டு, பெல்லாரி வெங்காயங்களைக் கொண்டு வீரிய ஒட்டு வெங்காயம் உற்பத்தி செய்யும் பணி நடைபெற்று வருகிறது. அண்மையில் தனிப்படுத்தப்பட்ட ஆண் மலட்டுத் தன்மை கொண்ட செடிகளைப் பயன்படுத்தி வீரிய ஒட்டு வெங்காய விதைகள் உற்பத்தி செய்வதற்கும் முயற்சி செய்யப்பட்டு வருகின்றது.

(*a*) and (*b*) Yes. The research work on the improvement of onion both country onion (small type) as well as Bellary Onion is in progress in Tamil Nadu Agricultural University, Coimbatore.

## COUNTRY ONION (SMALL TYPE).

Evaluation of various Clonal materials done so far for yield and quality characters has yielded 11 clones maturing in about 60–65 days during summer season. Of these selection C.S. 911 from a variety from Devanampatnam (South Arcot District) has been found to give an yield of 5,000 kg./acre (12,000 kg./ha.) yield comparable to that of long duration (90 days) previously released from the Agricultural Research Institute, Coimbatore. The selection possesses medium sized, bulbs with attractive



red colour and is non-flowering which is to be regarded as an economic significance to garden land forming. The adaptability of this type to different regions and seasons is being assessed.

Five promising types with long duration ranging from 85–100 days have also been selected and are being tried in the preliminary yield trial. Of these selections clones 949/2 and 450-2 have been found to be high yielding types. These types mature in about 90 days on an average and the bulbs are large in size. These are suitable for growing as pure crop in rotation. These will be tried under multi-location trials to determine the regions for their suitability.

Hybridization between different types maintained is in progress for evolving better types tolerant to pest like thrips and diseases like leaf spot and tip drying.

## BELLARY ONION.

Bellary onion is cultivated in Tamil Nadu with the seed material obtained largely from Bellary (Karnataka State). These seeds are of poor quality with low germination. The farmers are able to realise only 60 per cent of marketable produce from the crops raised from these seeds. With a view to avoiding this situation, work on quality seed production is in progress.

In addition to the above, work on production of hybrid onions with country and Bellary onions is also in progress. Attempt is being made for production of hybrid seeds by making use of the recently isolated male sterile lines.

### இணைப்பு II

[552ம் பக்கத்தில் 547 ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

The Government have decided to procure 2,350 tonnes of Green Manure seeds at an estimated cost of Rs. 20.12 lakhs and to distribute the seeds to the ryots at cost price through Agriculture Department without incurring any loss to Government. Another proposal was also under consideration of the Government for distribution of Green Manure seeds free of cost, with 100 per cent

Central assistance from the Government of India to encourage more farmers to take up the cultivation of Green Manure. The Government of India have not agreed to the above proposal.

2. The Panchayats are also encouraged to raise Green Manure crops on poramboke lands. The Chief Engineers, Public Works Department, Highways and Rural Works and the Collectors have issued instructions to their field staff to raise Green Manure plants and green leaf yielding plants on the tank bunds, channel bunds, road margins and poramboke lands. The Forest Department also is growing Green Manure trees on the bunds of rivers and channels.

3. The local bodies which are implementing the Urban Compost Scheme and Night Soil Compost Scheme are encouraged to grow Green Manure crops like Ipomea, Gylicidia, etc., and also green leaf yielding plants in the vacant space in the compost yards. The Compost Development Inspectors working in each block have been assigned this duty.

ரூ. 20.12 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் 2,350 டன் தழை உர விதைகளை வாங்கி, வேளாண்மைத் துறை மூலம் உழவர்களுக்கு அடக்க விலையில் இழப்பின்றி வழங்குவது என்று அரசு முடிவு செய்துள்ளது. தழை உரச் செடிகளை வளர்ப்பதற்கு அதிகமான உழவர்களுக்கு ஊக்கமளிப்பதற்காக இந்திய அரசிடமிருந்து 100 சதவீத உதவியுடன் தழை உர விதைகளை இலவசமாக வழங்குவதற்கான மற்றொரு செயற்குறிப்பும் பரிசீலனையில் இருந்தது. மேற்கண்ட செயற்குறிப்பிற்கு மத்திய அரசு இணங்கவில்லை.

2. புறம்போக்கு நிலங்களில் தழை உரச் செடிகளை வளர்க்குமாறு ஊராட்சிகளுக்கு ஆதரவளிக்கப்படுகிறது. பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலை கிராமப் பணிகள் துறை தலைமைப் பொறியாளர்களும், மாவட்ட ஆட்சித் தலைவர்களும் அவர்களது களப்பணியாளர்களுக்கு ஏரிக் கரைகள், கால்வாய்க் கரைகள், சாலையோரங்கள், புறம்போக்கு நிலங்கள் ஆகியவற்றில் தழை உரச் செடிகளையும் தழைச் செடிகளையும் வளர்க்குமாறு கட்டளைகள் பிறப்பித்துள்ளனர். ஆறுகள், கால்வாய்கள், ஆகியவற்றின் கரைகளில் தழை உர மரங்களை வனத் துறையும் வளர்த்து வருகிறது.



3. நகர்ப்புறக் கலவை உரத் திட்டம், மலக் கலவை உரத் திட்டம் ஆகியவற்றைச் செயல்படுத்தி வரும் உள்ளாட்சி மன்றங்கள், பூவரசு, புங்கம் போன்ற தழை உரப் பயிர்களையும், தழைச் செடிகளையும் கலவை உரம் தயாரிக்கும் இடத்திலுள்ள காலியிடங்களில் வளர்க்குமாறு ஊக்குவிக்கப்படுகின்றன. ஒவ்வொரு வளர்ச்சி வட்டாரத்திலும் பணி புரியும் கலவை உர வளர்ச்சி ஆய்வாளர்களுக்கு இப்பணி ஒதுக்கப்பட்டுள்ளது.

## *How to use the Index.*

The Index is arranged alphabetically. The Main Headings are printed from the margin and the sub-headings are indented from the main headings.

Under every Main Heading including various names, entries pertaining to proceedings other than Questions are indicated by printing immediately after the subject matter within brackets, e.g., (M) for Motion, (C.A.) for Calling Attention, (R) for Resolution, (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question, except in the case of Bills and Financial Business, the entry in which cases will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the Main Heading 'Bill(s)'.

Various bodies like Committees, Councils, Boards, Corporations, etc., are consolidated under the said Main Headings, i.e., 'Committee(s)', 'Council(s)', 'Corporation(s)', etc.

Various subjects like Schools, Colleges, Conferences, Ports, Temples and similar other broad subjects are shown in alphabetical order under these very Main Headings.

All the Papers laid on the Table of the House are indexed only under the Main Heading "Papers Laid on the Table."

Rulings and Observations from the Chair are indexed under the Main Heading "Chair".

A list of abbreviations used in the Index is given below:—

A.M.|Ad. Motion—Adjournment Motion.

Ann.—Announcement.

B.O.H.—Business of the House.

C.A.—Calling Attention to a matter of urgent public importance.

C.A. St.—Calling Attention Statement.

Consid.—Consideration stage of a Bill.

This stage includes—

(i) Motion to refer to Select|Joint Select Committee.

(ii) Amendment to refer to Select|Joint Select Committee.

(iii) Amendment to circulate.

(iv) Motion to consider as reported by Select|Joint Select Committee.

(v) Amendment to recommit to Select|Joint Select Committee, etc.

Consid. Cl.—Consideration of clauses of a Bill.

D.E.E.—Demands for Excess Expenditure.

Dis. S.D. or D.S.D.—Discussion for Short Duration on an urgent matter of administration.

D.S.G.—Demands for Supplementary Grants.

G.A.—Governor's Address.

G.D.—General Discussion.

H.A.H. Dis.|H.H.D.—Half-hour Discussion.

Int.—Introduction stage of a Bill.

L.A.—Legislative Assembly.

L.C.—Legislative Council.

M.—Motion.

P.M.—Privilege Motion.

R|Res.—Resolution.

St.—Statement.

# Index to Tamil Nadu Legislative Assembly Debates.

---

Thirteenth Session of the Fifth Legislative Assembly under the Constitution of India.

---

*29th and 31st March and 1st to 3rd April* 1975.

---

VOLUME LXVIII (Nos. 1—5)

PAGES

## A


ABDUL JABBAR, THIRU V. M.—

Budget, 1975—76, Voting:

General Sales Tax and Other Taxes and Duties Administration, Animal Husbandry, Cinchona, Forest Department, Capital Outlay on Forests .. 161—167

AGRICULTURE—

Onion cultivation, research ... ... ... 549—551

ALAGARSAMY, THIRU S.—

Budget, 1975-76, Voting:

General Sales Tax and Other Taxes and Duties Administration .. .. .. ..

Animal Husbandry .. .. .. ..

Cinchona .. .. .. .. ..

Forest Department .. .. .. ..

Capital Outlay on Forests .. .. .. 169—176

Hunger-strike by House Surgeons (A.M.) .. .. 261

PAGES

A—*cont*.

ANANDANAYAKI, THIRUMATHI T. N.—
Budget, 1975—76, Voting :
Police, Fire Services .. .. .. 334—339
Hunger-strike by House Surgeons (A.M.) .. .. 264—266
Removal of Speaker (R) ... ... ... 456—461, 463,468, 469,498
Restoration of expunged portions (Point of Order) .. 584

ANBAZHAGAN, THIRU K.—
Hunger-strike by House Surgeons (A.M.) .. .. 270—280

ANIMAL HUSBANDRY—
Polutry Development Scheme, Thanjavur district .. 16—19

ARANGANAYAKAM, THIRU S.—
Budget, 1975—76, Voting:
Industries, Capital Outlay on Industrial Development ... ... ... ... ... ... 32,34—39, 101

ARUMUGAM, THIRU C.—
Budget, 1975—76, Voting:
Police, Fire Services .. .. .. .. 302—305

ARUNA, Thiru Aladi—
Budget, 1975-76, Voting :
General Sales Tax and Other Taxes and Duties Administration ..
Animal Husbandry ..
Cinchona .. .. ..
Forest Department .. ..
Capital Outlay on Forests .. .. .. 143—150
Restoration of expunged portions of Proceedings (Point of order) .. .. .. .. 575—576 579



PAGES

B

BALASUNDARAM, THIRU V.—
Hostel for Harijan students at Acharapakkam 123—124
Prosperity brigade volunteers, strength increase ... 559—560
Soonampedu, Idaikazhinadu Panchayats, bifurcation.. 560—561
Thozuppedu Harijan colony, construction of houses. 123

BANKS—
School Savings Bank Scheme, progress .. .. 111—113

BILL(S)—
Appropriation Bill, 1975:
Consid., Consid. Cl. Motion to pass, Passed ... 31
Catering Establishments (Amendment) Bill, 1975 : Int., .. .. .. .. .. .. 593

BRIDGES AND CULVERTS—
Bridge across Marai Nadu kanmoi at Ulagamanadi .. 177—118
Causeway across Araniyaru ... ... ... 417

BUILDINGS—
Kerala House, Kanniyakumari ... ... ... 546—548
Panagal Buildings, Thanjavur ... ... ... 236—237

C

CALLING ATTENTION—
Drinking water supply, Ottapidaram sub-taluk ... 589—592

CATTLE—
Nuisance in City .. .. .. .. .. 121—122

CHAIR—
Announcements:
B.O.H. ... ... ... ... ... ... 512—513
Resolution for removal of Speaker ... ... 419—421
Resolution for removal of Speaker .. .. 419—421 124

CHAIR—*cont.*

Rulings and Observations—

Adjournment motions.

*Hunger-strike by House Surgeons and the consequent hardships to the patients.*

Consent was withheld on the ground that there was no need for the motion in the light of the long statement made by the concerned Minister. 280

*Situation arising out of Thanjavur District Farmers' fast in protest against the coercive measures adopted by procurement officials.*

Consent was withheld on the ground that there was no need to adjourn the other business of the House after the explanation given by the Minister ... ... ... ... 29

Debate.

No new suggestion or opinion can be given after the Minister's reply to a discussion. Clarifications, if any, can be sought only on the points raised during the discussion and there should be no separate speech with new ideas. It is not possible to expect the Ministers to reply to all the points raised and it is not to be treated as a question hour .. .. .. .. .. 204, 205, 206, 207

With reference to a request made by a Member that the Resolution for the removal of Speaker might be taken up for discussion on some other day, the Deputy Speaker observed that under the rules, the Chair had powers to decide about the time and duration of the discussion ... ... ... 426—427

Decorum.

It is not in order for a member to go to the Secretary and converse with him in the House .. .. 22

Members should address the Chair ... ... 487



CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

Members.

*Publication of a news item in the Press about the denial of resignation by a Member.*

On 1st April 1975, a Member sought clarification from the Chair whether his announcement in the House that a Member (Thiru S. Arumugam) had resigned his membership of the House and that he had accepted his resignation letter was correct in view of the publication of news in the Press that the Member had not sent in his resignation letter to the Chair and that the Speaker had not contacted him. He wanted to know the action proposed to be taken by the Speaker in the matter in the light of the news item.

After some discussion, the Chair observed that it was not in order to raise any matter in the House based on newspaper reports. He added that he had nothing to add to what he had already announced in the House with regard to the letter written to him by the Member. He was satisfied with the genuineness of the letter and so the matter ended there ... ... 249—258

*Resignation.*

There is no statutory provision that if any reason is given for the resignation by a Member, the House should be informed of the same .. 124

*Members' seat.*

At least during Question Hour members should be in their seats ... ... ... ... 411

CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

Point of Information.

When a Member wanted to elicit information about the motion under Rule 42 disallowed by the Hon. Speaker, the Chair observed that all those matters should not be raised in the House but should be asked in his Chamber ... ... ... ... 593

Points of Order.

After leave for moving a Resolution for the removal of the Speaker was granted by the House, an Opposition Member, rising on a point of order, wanted to know whether leave of the House was necessary, as, after the lapse of 14 days, the Chair should take up the motion for consideration; and he also wanted to know how for granting leave, the minimum number of members was fixed as 15 per cent of the Members or 35.

The Deputy Speaker obserbed that according to Article 179 (*c*) of the Constitution, 14 days' notice should be given for the moving of the resolution for the removal of the Speaker. Also, under Rule 54 (1), 35 members were required for supporting the grant of leave for the motion and if the Members wanted any change in the number of Members to support a notice for granting leave, it had to be discussed in the Rules Committee and a new Rule framed. Also, according to Rule 54 (2), if leave of the House was granted, discussion on the resolution might follow immediately or the House might fix for its discussion a date not being more than seven days from the day on which leave was granted. Since leave had been granted for the moving of the motion, he called upon the Member concerned to move the motion ... ... ... ... 424—425



CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

Points of Order—*cont.*

When many Members wanted to raise points of order, the Chair observed that only with his permission, they can raise points of order and if they were really sincere in their desire to raise them, first there should be perfect silence in the House. He added that there were also precedents that if any Member raised a point of order unnecessarily, the Speaker could stop it ... 516—517

*Election of a person to preside when a motion for removal of Speaker was taken up for discussion.*

With reference to a point of order raised by a Member about the election of a person to preside over the House when the Resolution regarding the removal of the Speaker was under consideration, the Deputy Speaker observed that according to Article 180 of the Constitution, in the absence of the Speaker, the Deputy Speaker would preside, and in the absence of the Deputy Speaker, a Member in the Panel of Chairmen would preside and that was also in accordance with their Rules. He added that since the Motion was against the Speaker, the Deputy Speaker was presiding and there was nothing wrong in it ... ... ... 428

*Proposed Press Conference by Health Minister to explain about the strike of House Surgeons.*

Rising on a point of order, a member enquired whether it was in order for the Public Health Minister to arrange for a Press Conference to explain the details about the strike of House Surgeons without doing it first in the House, especially when Members had given notices of adjournment motion on the same subject. The Deputy Speaker observed that he learnt that the Health Minister had informed the Speaker that the adjournment motion could be taken up the next day. Whether the Health Minister would give the proposed interview to the Press Reporters on the subject that day or not, was a hypothetical question about which it was not proper to give any ruling. 193

CHAIR—*cont.*
Rulings and Observations—*cont.*
Point of Order—*cont.*

*Withdrawal of notice of a motion for removal of Deputy Speaker from office.*

On 29th March 1975, a point of order was raised on the ground that a Motion for removal of the Deputy Speaker was withdrawn a few hours after it had been given notice of. It was contended that the proper procedure would have been to inform the House about the withdrawal only when the Motion matured and came up before the House after the expiry of 14 days' notice required under the rules. It was also alleged that the Member who had given notice of the Motion had withdrawn it almost on account of compulsion. Further, the Member enquired whether it would be possible for the Speaker to give protection to Members whenever they brought No-Confidence Motion against Speaker or Deputy Speaker.

The Speaker observed that even though he could have waited for the expiry of fourteen days, he wanted to inform the Members about the withdrawal as early as possible. There was nothing wrong in doing so, as it was done on the basis that it would be better to inform the House then and there about the withdrawal of the notice and that there was no need to wait for 14 days to lapse. He added that it was not the Speaker's job to give protection to Members .. .. .. .. .. 30—31

Privilege Matters—

*Alleged wrong statement by a Member.*

On 2nd April 1975, a Member raised a matter of privilege regarding the observation of a ruling party Member that the opposition leaders had expressed regret for staging dharna and as it was not true the Member requested that the matter be referred to the Committee of Privileges.







CHAIR—*cont.*
Rulings and Observations—*cont.*
Privilege Matters—*cont.*
Alleged wrong statement by a Member—*cont.*

The Deputy Speaker observed that he would consider it and give his ruling the next day. 494

On 3rd April 1975, the Speaker observed that wilful furnishing of wrong information and distortion of what happened in the House would constitute a breach of privilege. The Member had not stated where and to whom the opposition Members had expressed regret. He had only made a general statement that each Member had expressed regret and had not stated that they expressed regret in the House. Hence there was no breach of privilege of the House ... ... ... ... ... 571—572

Proceedings—

*De-expunction of expunged portions.*

On 3rd April 1975, the Speaker referred to the ruling given by the Deputy Speaker on 27th March 1975 expunging a point of order raised by a Member when the Deputy Speaker did not allow him to take part in a discussion on an adjournment motion as he had not given notice of a motion on the subject and observed that that ruling was quite in order and was in accordance with the relevant rule. However, the Speaker added that in the past, there had been occasions in which even Members who had not given notice of an adjournment motion on a particular subject had been allowed to take part in the discussion. In keeping with that practice, he allowed the restoration of the portions except those which refer to caste earlier ordered to be expunged by the Deputy Speaker. That should be the last occasion in which those who had not given notice of an adjournment motion took part in the discussion. Such a practice would

C—*cont.*

CHAIR—*cont.*
Rulings and Observations—*cont.*
Proceedings—*cont.*
De-expunction of expunged portions—*cont.*

not be allowed to continue in future. Speeches made without the permission of the Speaker would not be recorded in the official report.

With reference to a point of order raised by a Member whether the Speaker was empowered under the rules to de-expunge portions ordered to be expunged by the Deputy Speaker and the short discussion that ensued thereon, the Speaker quoting precedents observed that the decision given by one Presiding Officer could be changed by another, a presiding officer could change his own ruling given earlier and one Speaker's ruling was not binding on the other ... ... ... ... ... 573—589

A little later when the Deputy Speaker occupied the Chair a Member rose on a point of order and enquired whether the Speaker could revise the ruling given by the Deputy Speaker and order the de-expunction of the portions ordered to be expunged, by the Deputy Speaker. The Deputy Speaker observed that whoever occupied the Chair, Speaker, Deputy Speaker or a Member from the Panel of Chairmen, was entitled to give a ruling and in the absence of the Speaker all the facilities afforded to him were equally afforded to the Presiding Officer, whoever he might be. The Speaker had in the instant case modified his (Deputy Speaker's) ruling. Just as the judiciary had power to review its own judgment, they in the Legislative Assembly too had power to review their own judgment. In that way, the earlier decision had been reviewed and there was no objection to or illegality in it. 601—603



C—*cont.*

CHAIR—*cont.*
Rulings and Observations—*cont.*
Questions and Answers—
Clarifications regarding main answer to a question can be had in the Speaker's Chamber and not in the House ... ... ... 10—11
Question hour should be utilised only for putting questions and not for expression of views .. 223
Question hour should be utilised to elicit further information, if any, arising out of the answer given by the Minister to the main question and should not be utilised for offering suggestions of a general nature ... ... ... 552
It is not in order to put hypothetical questions. 25
Only one supplementary question should be put at a time ... ... ... ... ... 392

Quotation—
Permission of the Chair was not necessary for quotations ... ... ... ... ... 144

Ruling—
It is not proper to question the ruling of the Chair ... ... ... ... ... 524

CHEZHIYAN, THIRU KOVAI—
Budget, 1975-76, Voting:
Industries ... ... ... ... ...
Capital Outlay on Industrial Development ... 96

Police ... ... ... ... ... ...
Fire Services ... ... ... ... ... 285—297, 343, 663—664, 676—677, 681

India meters, lay-off compensation to workers ... 242—249

PAGES

C—*cont.*

Resignation of Thiru S. Arumugam, M.L.A (Point of clarification) ... ... ... 252—253

Restoration of expunged portions of Proceedings (Point of order) ... ... ... ... 580

CHINNASAMY, THIRU A.—
Budget, 1975-76, Voting:
Police ... ... ... ... ...
Fire Services ... ... ... ... ... 289, 290, 604—608

COLLEGE(S)—
Engineering, new courses ... ... ... ... 217—220
Private—, grants ... ... ... ... ... 543—546

COMMITTEE(S)—
Estimates:
Report on Employment and Training, presentation. 592
Privileges:
Report on privilege matter against Thiru Abdul Salam and the Editor, 'Makkal Kural', presentation ... ... ... ... ... 125—126

CO-OPERATIVES—
Crimes, constitution of Special Police wing ... ... 410—413
Kuruvarajapalayam House Mortgage Society, working. 570
Spare parts for buses, sale through Co-operatives ... 14—15

D

DENNIS, THIRU N.—
Blue films, seizure in city ... ... ... ... 4—5
Budget, 1975-76, Voting :
General Sales Tax and Other Taxes and Duties—Administration .. .. .. ..
Animal Husbandry ... ... ... ...
Cinchona ... ... ... ... ...
Forest Department ... ... ... ...
Capital Outlay on Forests ... ... ... ... 127, 128



PAGES

D—*cont.*

DENNIS THIRU N.—*cont.*
Industries ... ... ... ... ...
Capital Outlay on Industrial Development ... 32, 33
Police ... ... ... ... ... ... 282
Fire Services ... ... ... ... ...
Family cards in Kanniyakumari district, issue of ... 231—232
Fruit garden at Kanniyakumari, transfer of control ... 555—556
Irenipuram-Kappucaud road, repairs ... ... 118—119
Madras city—Meenambakkam, plying of luxury buses. 19—20
Nursery and Monessori trained teachers, equivalance to secondary grade ... ... ... ... ... 113—115
Social education centres, opening ... ... ... 561—562
Water-supply to Ponneri village ... ... ... 120—121

DEVENDIRAN, Thiru A.—
Budget, 1975-76, Voting:
Police ... ... ... ... ... ...
Fire Services ... ... ... ... ... 326—330

DORAISAMY, THIRU S.—
Budget, 1975-76, Voting :
General Sales Tax and Other Taxes and Duties—Administration ... ... ... ...
Animal Husbandry ... ... ... ...
Cinchona ... ... ... ... ...
Forest Department ... ... ... ... ...
Capital Outlay on Forests ... ... ... ... 150—156
Industries ... ... ... ...
Capital Outlay on Industrial Development ... 51—55

E

EDMUND, THIRU G. R.—
Budget, 1975-76, Voting :
Police ... ... ... ... ... ...
Fire Services ... ... ... ... ... 283

PAGES

E—*cont.*

Hunger-strike by House Surgeons (A.M.) ... ... 261
Onion, cultivation, research ... ... ... ... 549—551
Resignation of Thiru S. Arumugam, M.L.A. (Point of clarification) ... ... ... ... ... 249, 257—258

EDUCATION—
Polytechnics, separate section for women ... ... 9—10
Social education centres, opening ... ... ... 561—562

EXPUNCTION(S)—
Removal of Speaker (R) ... ... ... ... 466, 467, 470, 473, 492, 493, 523, 524
Restoration of portions of Proceedings expunged by Deputy Speaker (Point of order) ... ... ... 580, 581, 584

F

FACTORIES—
Building materials, manufacture ... ... ... 568—570

FERTILIZERS—
Green manure, production ... ... ... ...551—554

FILMS—
Blue films, seizure in city ... ... ... ... 4—5

FINANCIAL BUSINESS—
Budget, 1975-76, Voting:
General Sales Tax and Other Taxes and Duties—
Administration .. .. .. .. ..
Animal Husbandry
Cinchona
Forest Department
Capital Outlay on Forest
126—209



PAGES

F—*cont.*

Industries ... ... ... ... ...
Capital outlay on Industrial Development ... ...
31—108
Police
Fire Services ... ... ... ...
282—347
594—601
604—685

FOOD—
Consumers' Council of Tamil Nadu, requests ... 12—14

FOODGRAINS—
Family cards in Kanniyakumari district, issue of ... 231—232
Retail distribution ... ... ... ... 233

G

GANAPATHY, Thiru N.—
Privileges Committee, Report on Privilege Matter against Thiru Abdul Salam and the Editor, 'Makkal Kural', presentation ... ... ... 125—126

GANAPATHY, Thiru T.—
Pond Scheme, implementation in Tirunelveli district 554—555

GANESAN, Thiru S.—
Dispensaries, Sembanarkoil Union, taking over ... 399—400

GOPAL, Thiru K. P.—
Budget, 1975-76, Voting:
General Sales Tax and Other Taxes and Duties—
Administration ... ... ... ...
Animal Husbandry .. .. .. ..
Cinchona .. .. .. .. ..
Forest Department .. .. .. ..
Capital Outlay on Forests .. .. ..
156—161
Police .. .. .. .. ..
Fire Services .. .. .. .. .. 320—326
320—326

PAGES

GOVINDAN, Pulavar, K.—
Removal of Speaker (R) ... ... ... ... 513—523

GURUSAMI, Thiru N. V.—
Kanmoi at Palakombai, formation ... ... 229

H.

HANDE, Dr. H. V.—
Budget, 1975-76, Voting:
Police
Fire Services ... ... ... ... ... 608—623, 683

Five day fast by farmers of Thanjavur district (A.M.) 26—27, 29

Hunger-strike by House Surgeons (A.M.) ... ... 261—262

No-Confidence Motion against Deputy Speaker, withdrawal within hours of giving notice (Point of Order) ... ... ... ... ... 30

Poramboke lands, Karai village, eviction of Harijans 556—558

Removal of Speaker (R) ... ... ... ... 439—448, 461, 464, 471, 472, 521, 524

Resignation of Thiru S. Arumugam, M.L.A. (Point of clarification) ... ... ... ... ... 250, 253—254, 255—256

Resolution for removal of Speaker, procedural (Point of Order) ... ... ... ... ... ... 423—424

Restoration of expunged portions of proceedings (Point of Order) ... ... ... ... ... 574, 575, 576—577

Spurious drugs, seizure ... ... ... ... 400—409

HARIJAN WELFARE—
Hostel for Harijan students at Acharappakkam ... 123—124
House-sites for Harijans in Tiruttani taluk, provision 122—123
Poramboke lands, Karai village, eviction of Harijans 556—558





PAGES

H—*cont.*

HORTICULTURE—
Fruit garden at Kanniyakumari, transfer of control. 555—556

HOSPITALS AND DISPENSARIES—
E.S.I. Hospital, Peelamedu, theft of medicines ... 238—241
Sembanarkoil Union Dispensaries, taking over ... 399—400

HOUSING—
House sites to freedom fighters at Ennamangalam ... 414—416
Low cost housing, priority ... ... ... ... 563—567
Mulappakkam Housing Scheme, particulars .. 418—419
Pattas, Gummudipoondi ... ... ... ... 414
Thozuppedu Harijan Colony, construction of houses 123

I

INDUSTRIES—
Oil, supply ... ... .. ... ... 234—236
Raw materials for small industries, availability ... 233—234
Rice Bran Oil Plant for Sembanarkoil ... .. 414

IRRIGATION—
Araniaru, strengthening of banks ... ... ... 11—12
Pond Scheme, implementation in Tirunelveli district 554—555
Supply channel to Nallanayakapuram ayacut tank, construction .. .. .. .. .. 229—230

J

JABAMALAI, Thiru G.—
Budget, 1975—76, Voting:
Police
Fire Services ... ... ... ... ... 599—601

PAGES

J—*cont.*

JAMES, THIRU J.—
Budget, 1975-76, Voting:
General Sales Tax and Other Taxes and Duties—Administration .. .. .. ..
Animal Husbandry .. .. .. ..
Cinchona .. .. .. .. ..
Forest Department .. .. .. ..
Capital Outlay on Forests .. .. .. 128, 129 179—182
Police .. .. .. .. .. ..
Fire Services ... ... ... ... ... 284
Five day fast by farmers of Thanjavur district (A.M.) 25
Resolution for removal of Speaker, election of member to preside (Point of Order) ... ... 428

JOTHI VENCATACHELLUM, THIRUMATHI—
Hunger-strike by House Surgeons (A.M.) ... ... 262—264
Removal of Speaker (R) ... ... ... ... 464, 468, 469—470

K.

KANDAPPAN, THIRU S.—
Removal of Speaker (R) ... ... ... ... 448—456
Restoration of expunged portions of Proceedings (Point of Order) ... ... ... ... 585—586

KANDASAMY, THIRU MANALI C.—
Removal of Speaker (R) ... ... ... ... 482—484



PAGES

K.—*cont*

KANDASAMY, THIRU K.—
Budget, 1975-76, Voting:
Police .. .. .. .. .. ..
Fire Services ... ... ... ... ... 631—635

KANNAN, THIRU M. R.—
Budget, 1976, Voting:
Police ... ... ... ... ... ...
Fire Services ... ... ... ... ... 297—302

KARUNANIDHI, DR. M.—
Appropriation Bill, 1975 ... ... ... ... 31
Arrival of two Chinese ships off Tamil Nadu shores (Point of Order) .. .. .. .. 259
Budget, 1976, Voting:
Police ... ... ... ... ... ...
Fire Services ... ... ... ... ... 282, 283, 284, 289, 290, 297, 617, 618, 619, 620—621, 622, 646—684
Removal of Speaker (R) ... ... ... ... 490, 491

KITTAPPA, THIRU N.—
Building materials, manufacture ... ... ... 568—570
Engineering Colleges, new course ... ... ... 217—220
Green manure, production ... ... ... ... 551—554

K.—*cont.*

KITTAPPA, THIRU N.—*Cont.*

Higher grade teachers, reorientation training ... 540—542

High Schools, autonomous powers ... ... 390—397

Mulappakkam Housing Scheme, particulars ... ... 418—419

Panagal buildings, Thanjavur ... ... ... 236—237

Polytechnics, introduction of Tamil as medium of instruction ... ... ... ... ... 6

Polytechnics, separate section for women ... ... 9—10

Poultry Development Scheme, Thanjavur district ... 16—19

Revolving hotel, construction ... ... ... 220—228

KRISHNAMOORTHI, THIRU V. (NELLIKUPPAM)—

Resignation of Thiru S. Arumugam, M.L.A. (Point of Clarification) ... ... ... 250—251, 252, 260

Restoration of expunged portions of Proceedings (Point of Order) .. .. .. .. 578

KUMARASAMI, THIRU K. N.—

Budget, 1975-76, Voting:

Police ... ... ... ... ... ...

Fire Services ... ... ... ... ... 283

Kannampalayam-Kalangal road works, completion ... 122



L

LABOUR—

India meters, lay-off compensation to workers ... 242—249

LANDS—

Ekambarapuram village, issue of pattas ... ... 558—559

LANGUAGE—

Polytechnics, introduction of Tamil as medium of instruction .. .. .. .. .. 6

Thuvakudi Government Polytechnic, introduction of Tamil medium ... ... ... 6—9

LATHEEF, THIRU M. A.—

Budget, 1975-76, Voting:

Industries ... ... ... ... ... 32, 33,

Capital Outlay on Industrial Development ... 62—68, 93—94

Removal of Speaker (R) ... ... ... ... 461—474

M

MADHAVAN, THIRU S.—

Budget, 1975-76, Voting:

Police ... ... ... ... ... ...

Fire Services ... ... ... ... ... 611—612

Five day fast by farmers of Thanjavur district (A.M.) 27—29

MARIMUTHU, THIRU M.—

Tanks (New), Salem district .. .. 410

MEDICINES—

Spurious drugs, seizure ... ... ... ... 400—409

PAGES

M—*cont.*

MEENAKSHISUNDARAM, THIRU M.—
Budget, 1975-76, Voting:
General Sales Tax and Other Taxes and Duties—
Administration ... ... ... ...
Animal Husbandry ... ... ... ...
Cinchona ... ... ... ... ... 167—169
Forest Department ... ... ... ... ...
Capital Outlay on Forests ... ... ...

MOTION(S)—
Ad. Motions—
Five day fast by farmers of Thanjavur district ... 25—29
Hunger-strike by House Surgeons ... ... ... 261—280

MUNU ADHI, THIRU—
Restoration of expunged portions of Proceedings (Point of Order) .. .. .. .. 584, 585, 587

MURUGAIYAN, THIRU S.—
Budget, 1975-76, Voting:
Industries ... ... ... ... ...
Capital Outlay on Industrial Development ... 81—84

MUTHAMILSELVAN, THIRU V. N.—
Budget, 1975-76, Voting:
Industries ... ... ... ... ...
Capital Outlay on Industrial Development ... 59—62

MUTHIAH, THIRU M.—
Budget, 1975-76, Voting:
Industries ... ... ... ... ...
Capital Outlay on Industrial Development ... 49—51



PAGES

M.—*cont.*

MUTHIAH, Thiru M.—*cont.*
Budget, 1975-76, Voting—*cont.*
Police ... ... ... ... ... ...
Fire Services ... ... ... ... ... 330—334
Drinking water-supply, Ottapidaram sub-taluk (C.A.). 589, 591—592
Pramanpachari Elementary School building ... ... 115—116

MUTHU, THIRU V.—
Kottappalayam-Ramapuram road, inclusion in Rural Road Development Scheme ... ... ... 238

N.

NARAYANASWAMY, THIRU MANNAI P.—
Drinking water-supply, Ottapidaram sub-taluk (C.A. St.) ... ... ... ... 589—591, 592

NATARAJAN, THIRU E. M.—
House sites to freedom fighters at Ennamangalam ... 414—416

NEDUNCHEZHIYAN, DR. V. R.—
Correction to an answer (St.) ... ... ... 281—282
Removal of Speaker (R) ... ... ... ... 504—512

P

PALANISWAMY, Pulavar C.—
Periakulam-Kanmaikarai road, improvements ... 10—11

PALANISAMY, THIRU N. K.—
Budget, 1975-76, Voting:
Industries ... ... ... ... ...
Capital Outlay on Industrial Development— 32, 78—81

PALANISAMY, Thiru N. K.—*cont.*
- Consumers' Council of Tamil Nadu, requests ... 12—17
- Engineering Colleges, new course ... ... ... 217
- E.S.I. Hospital, Peelamedu, theft of medicines ... 238—241
- Foodgrains, retail distribution ... ... ... 233
- Gurukkals, retirement age ... ... ... ... 20—24
- Hunger-strike by House Surgeons (A.M.) ... ... 261
- Industries, supply of oil ... ... ... ... 234—236
- Key Village Scheme, revival .. .. .. 15—16
- Low cost housing, priority ... ... ... ... 563—567
- Rice Bran Oil Plant for Sembanarkoil ... ... 414
- Schools Savings Bank Scheme, progress ... ... 111—113
- Senthangudi Sankara Mutt, theft of idols ... ... 24—25
- Spare parts for buses, sale through co-operatives ... 14—15
- Spurious drugs, seizure ... ... ... ... 400—409
- Star hotels, construction ... ... ... ... 220
- Taxi and Autorickshaw drivers, notices for strikes .. 571
- Teachers, payment of salary through cheques ... 535—540
- Thuvakudi polytechnic, introduction of Tamil medium. 6—9
- Vyasarpadi Housing Scheme, road works ... ... 417—418

PANCHAYAT(S)—
- Soonampedu, Idaikazhinadu panchayats, bifurcation. 560—561
- Villiyar colony, provision of street lights ... ... 562—563

PAPERS LAID ON THE TABLE—
- Agricultural Produce Market Act, 1959, notification. 685
- Animal Husbandry, 1975-76, policy note (English and Tamil) ... ... ... ... ... 348



PAPERS LAID ON THE TABLE—*cont.*
- Appropriation Bill, 1975 ... ... ... ... 110
- Bhoodan-Yagna Act, 1958, notification ... ... 109
- Cinchona department, policy note 1975 (English and Tamil) ... ... ... ... ... ... 211
- Commercial Budget on Cinchona department, 1975-76 ... ... ... ... ... ... 348
- Committee of Privileges on matter of privilege against Thiru Abdul Salam, Arakandanallur, for casting aspersions on Chairman and Members of Estimates Committee in his lawyer's notice issued to Editor of "Makkal Kural", report ... ... ... ... 348
- Cultivating Tenants Protection and Payment of Fair Rent (Amendment) Bill, 1975 ... ... ... 110
- Demand—
  - General Sales Tax and other Taxes and Duties—Administration, note (English and Tamil) ... 348
- District Municipalities Act, 1920, notification ... 532
- Estimates Committee's report on taken on Committee's report on Employment and Training .. 686
- Fire Service, 1974-75, review (English and Tamil) ... 348
- Forest department, policy note, 1975-76 (English and Tamil) ... ... ... ... ... 211
- Handicrafts Development Corporation, 1974-75, review (English and Tamil) ... ... ... 110
- Housing, 1974-75, pamphlet (English and Tamil) ... 686
- Indian Stamp Act, 1899, notification ... ... 211
- Industrial growth—
  - Industrial Finance, 1974-75, review (English and Tamil) ... ... ... ... ... 109
  - Major industries, 1974-75, review (English and Tamil) ... ... ... ... 109, 211

PAGES

**P.—cont.**


PAPERS LAID ON THE TABLE—*cont.*

Industrial growth—*cont.*

Mineral development, 1974-75, review (English and Tamil) ... ... ... ... ... 109

SIDCO, 1974-75, review (English and Tamil) ... 109

SIPCOT, 1974-75, review (English and Tamil) ... 109

Small Scale Industries, 1974-75, review (English and Tamil) ... ... ... ... ... 109

Sugar industry, 1974-75, review (English and Tamil) ... ... ... ... ... 211

TACEL, 1974-75, review (English and Tamil) ... 109

TANSI, 1974-75, review (English and Tamil) ... 109

TIDCO, 1974-75, review (English and Tamil) ... 109

Motor Vehicles Act, 1939, notification ... ... 210

Panchayats Act, 1958, notification ... ... ... 210

Parks, play-fields and open spaces (Preservation and Regulation) Act, 1959, notification ... ... 109

Performance Budget on Harijan Welfare, 1975-76 ... 686

Performance Budget on Industries, 1975-76 ... ... 211

Police, 1974-75, review (English and Tamil) ... 348

Slum Clearance, 1974-75, Pamphlet (English and Tamil) ... ... ... ... ... 686

Water Supply and Drainage Board Act, 1970, administration reports (1971-72, 1972-73 and 1973-74) ... ... ... ... ... 210

Welfare of Scheduled Tribes and Castes, etc., policy note (Tamil) ... ... ... ... ... 532

PARANDHAMAN, THIRU A.—

House sites for Harijans in Tiruttani taluk ... ... 122—123




Pages

**P—cont.**


PAULIAH, THIRU A.—

Budget, 1975-76, Voting:

Industries ... ... ... ... ...
Capital Outlay on Industrial Development ... 43—46

POLICE—

Training College, Vellore, personnel trained in 1973-74 ... ... ... ... ... ... 1—3

PONNAPPA NADAR, THIRU R.—

Budget, 1975-76, Voting :

General Sales Tax and other Taxes and Duties—Administration ... ... ... ...

Animal Husbandry ... ... ... ...

Cinchona ... ... ... ... ...

Forest Department ... ... ... ... ...

Capital Outlay on Forests ... ... ... ... 128

Police ... ... ... ... ... ...

Fire Services ... ... ... ... ... 635—646

Removal of Speaker (R) ... ... ... ... 472—473, 498—504

Resignation of Thiru S. Arumugam M.L.A., (Point of Clarification) ... ... ... ... 254—255

Resolution for removal of Speaker, procedure (Point of Order) ... ... ... 422

Restoration of expunged portions of Proceedings (Point of Order) ... ... ... ... 587

Pages

R

RAJA, THIRU A. M.—

Budget, 1975-76, Voting:

General Sales Tax and other Taxes and Duties—Administration—

Animal Husbandry ... ... ... ...

Cinchona ... ... ... ... ...

Forest Department ... ... ... ... ...

Capital Outlay on Forests ... ... ... 137—143

Industries ... ... ... ... ...

Capital Outlay on Industrial Development ... 39—43

RAJAH PILLAY, THIRU V. K.—

Kerala House, Kanniyakumari ... ... ... 546—548

School buildings, Kanniyakumari district ... ... 397—309

Thirparappu falls, development as tourist centre ... 116—117

Water lettuce in tanks, Kanniyakumari district, weeding out ... ... ... ... 548—549

RAJARAM, THIRU K.—

Catering Establishments (Amendment) Bill, 1975 ... 593

RAMAN, THIRU O. P.—

Budget, 1975-76, Voting:

General Sales Tax and other Taxes and Duties—

Administration ... ... ... ...

Animal Husbandry ... ... ... ...

Cinchona ... ... ... ... ...

Forest Department ... ... ... ... ...

Capital Outlay on Forests ... ... ... 126, 127, 128, 129, 150—151, 194—207





PAGES

R—*cont.*

RANGANATHAN, THIRU K.—

Budget, 1975-76, Voting:

Industries ... ... ... ... ...

Capital Outlay on Industrial Development ... 69—71

Small industries, availability of raw materials ... 233—234

RESOLUTION—

Removal of Speaker ... ... ... ... ... 425—427, 429—532

ROADS—

Irenipuram-Kappucaud road, repairs ... ... 118—119

Kannampalayam-Kalangal road works, completion ... 122

Kottappalayam-Ramapuram road, inclusion in Rural Road Development Scheme ... ... ... 238

Periakulam-Kanmaikarai road, improvements ... 10—11

Periapalayam-Melmaligaippattu road ... ... 417

Thirukkadayur-Tranquebar link road ... ... 416

Padamathur-Thiruppachetti road, causeway on ... 563

Tranquebar-Aduthurai road, black-topping ... ... 409

Vyasarpadi Housing Scheme, road works ... ... 417—418

RURAL DEVELOPMENT—

Key Village Scheme, revival ... ... ... ... 15—16

S

SADASIVAM, THIRU S.—

General Sales Tax and other Taxes and Duties—

Administration ... ... ... ...

Animal Husbandry ... ... ... ...

Cinchona ... ... ... ... ...

Forest Department ... ... ... ... ...

Capital Outlay on Forests ... ... ... 176—179

PAGES

S—*cont.*

SADASIVAM, Thiru S.—*cont.*

Supply channel to Nallanayakapuram ayacut tank, construction ... ... ... ... ... 229—230

SADIQ PASHA, Thiru S. J.—

Budget, 1975-76, Voting:

Industries ... ... ... ... ...

Capital Outlay on Industrial Development ... 31—32, 33, 33—34, 38, 67, 87—108

SAMPATH, THIRU T. V.—

Thirukkadayur-Tranquebar, link road ... ... 416

Tranquebar-Aduthurai road, black-topping ... ... 409

SANGAMUTHU THEVAR, THIRU S.—

Lands in Ekambarapuram village, issue of pattas ... 558—559

SATHIYAVANIMUTHU, THIRUMATHI—

Hunger-strike by House Surgeons (A.M.) ... ... 269—270

Removal of Speaker (R) ... ... ... ... 477—482, 488—489

SCHOOL(S)—

Government High School (Kannigaiper), building ... 399

High School, autonomous powers ... ... ... 390—397

Paramanpacheri Elementary School building ... 115—116

School buildings, kanniyakumari district ... ... 397—399

SEENIVASAN, THIRU P.—

Notices of motions, disposal (Point of Information) 593

Propriety of Speaker's revising Deputy Speaker's ruling (Point of Order) ... ... ... 501—502, 503.



Pages

S—*cont.*

SEENIVASAN, THIRU, P.—*cont.*

Resolution for removal of Speaker, procedure (Point of order) ... ... ... ... ... ... 425

Restoration of expunged portions of Proceedings (Point of order) ... ... ... ... 581—582

SIRAIMEETTAN, THIRU T. K.—

Parthipanur kanmoi, repairs ... ... ... 230—231

SIVAPRAKASAM, THIRU D. S. A.—

Crimes in co-operative societies, constitution of special police wing ... ... ... ... ... 410—413

SOCIAL WELFARE—

Prosperity brigade, strength increase ... ... ... 559—560

SONIAH, THIRU T.—

Bridge across Maraimedu kanmoi at Ulagamadai ... 117—118

Padamathur-Thiruppachethi road, cause-way on ... 563

Rangian kanmoi, revetments to ... ... ... 117

SOUNDARAPANDIAN, THIRU P.—

Budget, 1975-76, Voting:

General Sales Tax and other Taxes and Duties—

Administration ... ... ... ...

Animal Husbandry ... ... ... ...

Cinchona ... ... ... ... ...

Forest Department ... ... ... ... ...

Capital Outlay on Forests ... ... ... 128, 129

Police ... ... ... ... ... ...

Fire Services ... ... ... ... ... 283

Building materials, manufacture ... ... ... 568—570

PAGES

S—*cont.*


SRINIVASAN, THIRU T. P.

Budget, 1975-76, Voting:
- Police ... ... ... ... ... ...
- Fire Services ... ... ... ... ... 339—343

SUBBIAH, THIRU A. K.—

Budget, 1975-76, Voting:
- General Sales Tax and other Taxes and Duties—Administration ... ... ... ...
- Animal Husbandry ... ... ... ...
- Cinchona ... ... ... ... ...
- Forest Department ... ... ... ... ...
- Capital Outlay on Forests ... ... ... 133—137
- Industries ... ... ... ... ... ...
- Capital Outlay on Industrial Development ... ... ... ... 84—87
- Police ... ... ... ... ... ...
- Fire Services ... ... ... ... ... 627—631

SUBBIAH, THIRU A. R.—

Budget, 1975-76, Voting:
- Industries ... ... ... ... ...
- Capital Outlay on Industries ... ... ... 46—49

SUBRAMANIAM, THIRU A.—

Budget, 1975-76, Voting:
- Police ... ... ... ... ... ...
- Fire Services ... ... ... ... ... 623—627

Hunger-strike of House Surgeons (A.M.) ... ... 261




PAGES

S—*cont.*


SUBRAMANIAN, Thiru A.—*cont.*

Proposed press interview by Health Minister on House Surgeons' strike before furnishing the information to the House though an adjournment motion on the subject has been tabled (Point of Order) ... 193

Questions list, supply to Members in advance (Point of order) ... ... ... ... ... ... 389

Restoration of expunged portions of Proceedings (Point of Order) ... ... ... ... 578—579

SUBRAMANIAM, THIRU K. M.—

Budget, 1975-76, Voting:
- General Sales Tax and other Taxes and Duties—Administration ... ... ... ...
- Animal Husbandry ... ... ... ...
- Cinchona ... ... ... ... ...
- Forest Department ... ... ... ... ...
- Capital Outlay on Forests ... ... ... 129—133, 193—194

Cattle nuisance in Madras City ... ... ... 121—122

SUNDARA BHARATHI, THIRU SOWDI S.—

Removal of Speaker (R) ... ... ... ... 484—487

SURENDRAN, THIRU M.—

Budget, 1975-76, Voting:
- General Sales Tax and other Taxes and Duties—Administration ... ... ... ...
- Animal Husbandry ... ... ... ...
- Cinchona ... ... ... ... ...
- Forest Department ... ... ... ... ...
- Capital Outlay on Forests ... ... ... 127, 186—192

PAGES

S—*cont.*

SURENDRAN, Thiru M.—*cont.*
Budget, 1975-76, Voting—*cont.*
Industries ... ... ... ... ...
Capital Outlay on Industrial Development ... 32, 55—59
Police ... ... ... ... ... ...
Fire Services ... ... ... ... ... 283
Hunger-strike by House Surgeons (A.M.) ... ... 261
Resignation of Thiru S. Arumugham M.L.A., (Point of Clarification) ... ... ... ... 253

SWAMIDHAS, Thiru A.—
Drinking water supply scheme in kanniyakumari district ... ... ... ... ... ... 119—121

T

TANGAMANI, Thiru K. T. K.—
Budget, 1975-76, Voting:
Police ... ... ... ... ... ...
Fire Services ... ... ... ... ... 282, 284, 305—320, 664—665, 666, 668, 677
Hunger-strike by House Surgeons (A.M.) ... ... 266—268
No-confidence motion against Deputy Speaker, withdrawal within hours of giving notice (Point of Order) ... ... ... ... ... 30
Removal of Speaker (R) ... ... ... ... 425, 429—438, 465, 469, 494 524—532
Resignation of Thiru S. Arumugam, M.L.A., (Point of clarification) ... ... ... 256—257



PAGES

T—*cont.*

TANGAMANI, Thiru K. T. K.—*cont.*
Resolution for removal of Speaker, procedure (Point of order) ... ... ... ... ... ... 421—422, 425
Restoration of expunged portions of Proceedings, (Point of order) ... ... ... ... 577

TANK(S)—
Kanmoi at Palakombai, formation ... ... ... 229
New tanks in Salem district ... ... ... ... 410
Parthipanur kanmoi, repairs ... ... ... ... 230—231
Rongian kanmoi, rivetments to ... ... ... 117
Water lettuce, Kanniyakumari district, weeding out ... 548—549

TEACHERS—
Higher grade, reorientation training ... ... ... 540—542
Nursery trained and Montessori teachers, equivalance to secondary grade ... ... ... ... ... 113—115
Payment of salary through cheques ... ... ... 535—540

TEMPLE(S)—
Gurukkals, retirement age ... ... ... ... 20—24
Senthangudi Sankara Mutt, theft of idols ... ... 24—25

THIRUVENGADAM, Thiru Thoppur—
Estimates Committee, report on Employment and Training, presentation ... ... ... ... 592
Guruvarajapalayam House Mortgage Society, working. 570

TOURISM—
Revolving hotel, construction ... ... ... 220—228
Star hotels, construction ... ... ... ... 220
Thirparappu falls, development as tourist centre ... 116—117

PAGES

T—*cont.*


TRANSPORT AND COMMUNICATIONS—
Madras city-Meenambakkam, plying of luxury buses. 19—20
Madras-Sathyavedu bus route ... ... ... 19
Taxi and Autorickshaw drivers, notice for strike ... 571


V.


VEERASAMI, THIRU N.—
Arrival of two Chinese ships off Tamil Nadu shores (Point of order) ... ... ... ... ... 259
Budget, 1975-76, Voting:
Industries ... ... ... ... ...
Capital Outlay on Industrial Development ... 73—78
Removal of Speaker (R) ... ... ... ... 487—498

VENKATASWAMY, THIRU B.—
Budget, 1975-76, Voting:
General Sales Tax and other Taxes and Duties—Administration ... ... ... ...
Animal Husbandry ... ... ... ...
Cinchona ... ... ... ... ...
Forest Department ... ... ... ... ...
Capital Outlay on Forests ... ... ... 182—186
Industries ... ... ... ... ...
Capital Outlay on Industrial Development ... 32, 71—73
Police ... ... ... ... ... ...
Fire Services ... ... ... ... ... ... 282, 284, 344—347
Removal of Speaker (R) ... ... ... ... 474—477




PAGES

V—*cont.*


VEZHAVENDAN, THIRU K.—
Araniyaru, strengthening of banks ... ... ... 11—12
Causeway across Araniyaru ... ... ... ... 417
Government High School (Kannigaiper), buildings ... 399
House-site pattas, Gummudipoondi ... ... ... 414
Madras-Sathyavedu bus route ... ... ... 19
Periapalayam-Melmaligaippattu road ... ... 417
Villiyar colony, provision of street lights ... ... 562—563


W.


WAHAB, THIRU K. A.—
Budget, 1975-76, Voting:
General Sales Tax and other Taxes and Duties—Administration ... ... ... ...
Animal Husbandry ... ... ... ...
Cinchona ... ... ... ... ...
Forest Department ... ... ... ... ...
Capital Outlay on Forests ... ... ... 127
Police ... ... ... ... ... ...
Fire Services ... ... ... ... ... 595—599
Police training college, Vellore, personnel trained in 1973-74 ... ... ... ... ... 1—3
Private colleges, grants ... ... ... ... 543—546

PAGES

W—*cont.*

WATER-SUPPLY—

Drinking water supply scheme in Kanniyakumari district ... ... ... ... ... ... 119—120

Drinking water supply, Ottapidaram sub-taluk (C.A.) 589—592

Ponneri village, protected water supply ... ... 120—121

V2:1,31'N75
31N75.6831
61702

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

Messrs. Account Test Institute, Egmore, Madras-8.
The City Book Co., Mylapore, Madras-4.
Messrs. Higginbothams (Private) Limited, Madras-2.
Messrs. New Century Book House (Private) Limited, Madras-2.
Messrs. P. Varadachari & Co., Madras-1.
Messrs. C. Subbiah Chetty & Sons, Madras-5.
Sri S. S. Srinivasaraghavan, Royapettah, Madras-14.
The Educational Agencies, Book-sellers, Madras-1.
The Universal Book House, Moore Market, Madras-3.
Messrs. C. Sitaraman & Co., Madras-14.
Messrs. Mohan Pathipagam and Book Depot, Madras-5.

### IN MUFASSAL OF TAMIL NADU.

Sri E. M. Gopalakrishna Kone, Madurai, Madurai district.
Sri A. Venkatasubban, Vellore, North Arcot district.
Messrs. Bharatha Matha Book Depot, Thanjavur, Thanjavur district.
Messrs. P. V. Nathan & Co., Kumbakonam, Thanjavur district.
Messrs. Appar Book Stall, Thanjavur.
Messrs. P. N. Swaminathasivam & Co., Pudukkottai, Tiruchirappal district.
Messrs. S. Krishnaswami & Co., Tiruchirappalli district.
Messrs. Palaniappa Brothers, Tiruchirappalli district.
Sri S. R. Subramania Pillai, Tirunelveli, Tirunelveli district.
Messrs. Nellai Puthaga Nilayam, Book-sellers, 19, Thana Muna Building, Tirunelveli Junction.
Sri B. Aruldoss, Villupuram Town, South Arcot district.
Sri V. B. Ganesan, Villupuram, South Arcot district.
Messrs. Vasantham Stores, Book-sellers, Cross Cut Road, Coimbatore.
Messrs. Mercury Book Company, 223, Raja Street, Coimbatore.
Sri S. M. Jagannathan, Book-sellers and Publishers, Nagercoil, Kanyakumari.
Messrs. A. K. Chandriah Chettiar and Sons, Salem-1.
Messrs. Meenakshi Pathippagam, Pudukkottai.
Messrs. K. V. Narayana Iyer and Sons, Dindigul, Madurai district.
Messrs. Balaji Book House, Vellore, North Arcot district.
Messrs. Jayakumari Stores, Nagercoil, Kanyakumari district.
Messrs. Baby Stores, Book-sellers, Villupuram, South Arcot district.
Messrs. Dinamani Stores, Coimbatore-18.
Messrs. Bharathi Puthaga Nilayam, Publishers and Book-sellers, Town Hall Road, Madurai-1.

### IN OTHER STATES.

Messrs. Jain Book Agencies, New Delhi-1.
Messrs. International Book House, Trivandrum.
Messrs. Firma K. L. Mukhopadhyay, Calcutta-12.
Messrs. Book Links Corporation, Narayanaguda, Hyderabad-29.
Messrs. The Book Syndicate, Hyderabad-1.
Messrs. Labour Law Publications, Hyderabad.

---

PUBLISHED UNDER RULES 234 AND 237 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS.